இருபதாவது இல்லத்தரசி

– காதல் சரித்திரம் –

இந்து சுந்தரேசன்

தமிழாக்கம்:
மதுரம் சுந்தரேசன்

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை – 17.

முதற் பதிப்பு : டிசம்பர், 2010

© உரிமை : மூலம் – இந்து சுந்தரேசன்
© உரிமை : தமிழாக்கம் – மதுரம் சுந்தரேசன்

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 250-00

- Title : **IRUPATHAAVATHU ILLATHARASI**
- Author : Indu Sundaresan
- Translated by : Madhuram Sundaresan
- Language : Tamil
- Subject : Historical Novel
- Edition : First Edition, December, 2010
- Pages : xii + 596 = 608
- Published by : **VANATHI PATHIPPAKAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai–600017.
  ✆ 24342810 / 24310769
  E-Mail : vanathipathippakam@vsnl.net
  Website: www.vanathi.in

- Price : **Rs. 250.00**

Laser at: PageDesigns, Chennai-17. Cell: 9445258275

Printed at: NOVENA OFFSET PRINTING CO., Chennai - 5 ✆ 28445166, 28445531

என்னை
உருவாக்கிய
என் பெற்றோர்கள்
குரூப் கேப்டன்
ஆர். சுந்தரேசன் -
மதுரம் சுந்தரேசன்
ஆகியோருக்கு இந்நூல்
சமர்ப்பணம்.

- இந்து சுந்தரேசன்

பதிப்புரிமை !

சகல உரிமைகளும் பிரத்தியேகமானவை. புத்தக மதிப்பாய்வுரைக்காகச் சுருக்கமான மேற்கோள்களைத் தவிர, இப்புத்தகத்தில் காணப்படும் எந்தப் பாகமும் மின்னணு சார்ந்த, இயந்திர அல்லது வேறு எதன் மூலமாகவோ, புகைப்பட நகல் பதித்தல், அல்லது எந்தச் செய்தியையும் சேமித்துத் திரும்பி எடுக்கக் கூடிய எம்முறையும் உட்பட, எந்த விதத்திலும் பிரதி களை எடுத்தலோ அல்லது எந்த வழியிலும் மாற்றப் படுதலோ வானதி பதிப்பகத்தாரிடமிருந்தோ ஆசிரியரிடமிருந்தோ எழுத்து மூலமான அனுமதி யின்றிச் செய்யக் கூடாது.

No Part of this book may be reproduced or transmitted in any form or by any means eletronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieval system without permission in writting from VANATHI PATHIPPAKAM, Chennai - 17 or from Author.

நன்றி !

இந்தப் புத்தகம் உருவாகும் பொழுது, அவ்வப்போது படித்துத் தங்கள் கருத்துகளை வெளிப்படையாகக் கூறிய என் நெருங்கிய நண்பர்களுக்கும்,


இதைப் புத்தகமாக வெளிக் கொண்டுவரத் துணையிருந்த என் இலக்கியப் பிரதிநிதி 'ஸாண்ட்ரா' மற்றும் இதை வெளியிட்ட 'பாக்கெட் புக்ஸ்' அலுவலகத்தின் தலைவி அவர்களுக்கும்,

என் 'எழுத்தில்' முழு நம்பிக்கை வைத்து என்னைப் பல விதங்களில் ஊக்குவித்து ஆதரவு தந்த என் கணவர் 'உதய்'க்கும்,

என் மேல் அன்பும், பாசமும், முழு நம்பிக்கையும் வைத்து என்னை உற்சாகப்படுத்திய என் சகோதரிகள் 'அனு' மற்றும் 'ஜயா' விற்கும்,

என் மனமார்ந்த நன்றி.

– இந்து சுந்தரேசன்.



மரியம் மகானி × ஹுமாயூன் ஹிண்டால் குல்ருக்

ருக்கையா சுல்தான் × அக்பர் × ஸலீமா சுல்தான் × பைரம் கான்

(இரண்டாவது கணவன்) (முதல் கணவன்)

அஸ்மத் பேகம் × கியாஸ் பெக் (இதிமதுத்தெளலா)

முகம்மது ஷரீஃப்

மரியம் முஸ்ஸாமணி × அக்பர் ஹகிம்

அப்துல் ஹஸன்

அலிகுலி × மெஹ்ருன்னிஸ்ஸா × சலீம் × ஜகத் கோஸினி × மான் பாய் முராது தானியல்

ஷேர் ஆஃப்கான் நூர்ஜஹான் ஜஹாங்கீர்

(முதல் கணவன்) (இரண்டாவது கணவன்)

தஹமூராஸ்

பயாஸங்கர்

ஹோஷங்

குஸ்ரு பர்விஸ் ஜுவர்தர்

புராக்கி கர்ஷப்

லாட்லி பேகம் × ஷஹர்யார்

அர்ஜுமன்த் பானு பேகம் (மும்தாஜ் மஹல்) × குர்ரம் (ஷாஜஹான்)

இந்த புத்தகம் இதுவரை...

ஆங்கிலத்தில் எழுதி அமெரிக்காவில் வெளியிடப் பட்ட இந்தப் புத்தகம், கீழ்க்கண்ட 19 உலக மொழி களில் மொழி பெயர்க்கப்பட்டு, அந்த நாடுகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

- ஜெர்மனி
- கிரீஸ்
- மாஸிடோனியா
- லிதூனியா
- இஸ்ரேல் (ஹீப்ரு)
- டர்கி
- ஸ்பெயின்
- இந்தோனேஷியா
- பிரான்ஸ்
- இத்தாலி
- செர்பியா
- க்ரோசியா
- போலந்து
- போர்சுகல்
- ஹங்கேரி
- சீனா (இரண்டுவித மொழிகளில்)
- இந்தியா ஆங்கிலம் மற்றும் தமிழில்.

முக்கியக் கதாபாத்திரங்கள்

அப்துர் ரஹீம்	முகலாயப் படையின் தலைமை அதிகாரி
அபுல் ஹாசன்	மெஹ்ருன்னிஸாவின் மூத்த சகோதரன்
அக்பர்	மூன்றாவது முகலாயச் சக்ரவர்த்தி
அலிகுலி இஸ்தாஜ்லு	மெஹ்ருன்னிஸாவின் முதல் கணவன்
அஸ்மத்	மெஹ்ருன்னிஸாவின் தாயார், கியாஸ் பெக்கின் மனைவி.
கியாஸ் பெக்	மெஹ்ருன்னிஸாவின் தந்தை
கோஷியார்கான்	ஸலீமின் அந்தப்புரத்தின் தலைமை அலி
ஜகத் கோஸினி	ஸலீமின் இரண்டாவது மனைவி
ஜஹாங்கீர்	நான்காவது முகலாயச் சக்ரவர்த்தியாக, ஸலீம் முடிசூடிக் கொள்கையில் எடுத்துக் கொண்ட பட்டப்பெயர்
குர்ரம்	ஸலீமின் மூன்றாவது மகன், ஜகத் கோஸினிக்குப் பிறந்தவன்.
குஸ்ரு	ஸலீமின் மூத்த மகன், முதல் மனைவி மான்பாயிற்குப் பிறந்தவன்.
லாட்லி	மெஹ்ருன்னிஸாவின் மகள், அலிகுலிக்குப் பிறந்தவள்.
மஹபத்கான்	ஸலீமின் இளம் வயதுத் தோழன்
மெஹ்ருன்னிஸா	கியாஸ் பெக்கின் மகள், ஸலீமை மணந்தபின் நூர்ஜஹான் என்ற பட்டப்பெயரைப் பெற்றவள்.
மிர்ஸா அஸிஸ் கோக்கா	குஸ்ருவின் மாமனார்

முஸாத் ஷரீப்	ஸலீமின் பால்யவயதுத் தோழன், ஸலீம் ஆட்சியில், சாம்ராஜ்ஜியத்தின் முக்கிய மந்திரியாக இருந்தவன்.
முஸாத் ஷரீப்	மெஹ்ருன்னிஸாவின் மூத்த சகோதரன். முக்கிய மந்திரியான முஹம்மத் ஷரீப் அல்ல
இந்தியன் மான் கோக்கா	ஸலீமின் பால்யத் தோழன், பிற்காலத்தில் வங்காளத்தின் கவர்னராக இருந்தவன்
ராஜா மான்சிங்	குல்ருவின் தாய் மாமன்
அக்பரின் கடைசி மகன்	அக்பரின் முக்கிய மனைவி, பாதுஷா பேகம்.
சலீம்	அக்பரின் மூத்த மகன், பிற்காலத்தில் நான்காவது முகலாயச் சக்ரவர்த்தியாக, ஜஹாங்கீர் என்ற பெயரில் ஆட்சி செலுத்தியவன்.

இருபதாவது இல்லத்தரசி

– காதல் சரித்திரம் –

இருபதாவது இல்லத்தரசி

– ஒரு சரித்திரக் காதல் கதை –



முன்னோட்டம்

காற்று ஊளையிடுவதுபோல் பயங்கரமாக வீசிக் கொண்டிருந்தது. அந்தக் கூடாரத்தின் துழை வாயிலில் உள்ள படுதாக்கள் காற்றின் வேகத்தில் கிழித்து போகும் அளவிற்குப் படபடத்துக் கொண்டிருந்தன. மெலிந்த மெத்தையில் படுத்திருந்த அந்தப் பெண்மணி சிலிர்த்தாள். தன் பெரிய வயிற்றைச் சுற்றித் தன் இரு கைகளால் அணைத்துக் கொண்டு முணுமுணுத்தாள். "ஆயா"

தனது முழங்கால்கள் சத்தம் செய்யக் குத்தியிட்டு உட்கார்ந்திருந்த வயதான அந்த மருத்துவச்சி மெதுவாக துழை வாயிலுக்குச் சென்றாள். படுதாக்களை நன்றாக இழுத்துக் கட்டிவிட்டு, அந்தப் பெண்மணியிடம் வந்து, அவள்மேல் இருந்த போர்வையை விலக்கி, அவள் கால்களுக்கிடையே நோக்கினாள். அவளின் அழுக்கடைந்த விரல்கள் தன்னுள்ளே குடைவதை உணர்ந்து அந்தப் பெண் முகம் சுளுக்கினாள்.

ஆயாவின் பருமனை முகம் திருப்தியால் நிறைந்தது. "அதிக நேரம் எடுக்காது."

மூலையில் இருந்த தணல் அடுப்பை மருத்துவச்சி இளறி விட, அது கொழுந்துவிட்டு எரிந்தது. வியர்வை நெற்றியைக் குளிரவைக்க வலியினால் வாடிய முகத்துடன் அந்தப் பெண் சாய்ந்து படுத்துக் கொண்டாள். சில நிமிடங்களில் இன்னொரு முறை வலி வர, வெளியே வீசும் பேய்க்காற்று எந்தச் சத்தத்தையும் அடக்கிவிடும் என்று அறியாமல், அங்கே இருப்பவர்களைக் கவலைக்கு ஆளாக்கக் கூடாதென்று சத்தம் வராமலிருக்கத் தன் உதட்டைக் கடித்து, அழுகையை அடக்கிக்கொண்டாள்.

வெளியே அந்த முகாமை இருள் சூழ ஆரம்பித்தது. அங்கிருந்த ஆண்கள் காற்றின் வேகத்தால் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பைச் சுற்றி அமர்ந்திருந்தனர். பேய்க் காற்றின் போரிரைச்சல் அவர்கள் காதுகளைத் துளைக்க மணல் பறந்து அவர்கள் கண்களிலும் உடைகளிலும் பரவியது.

காந்தஹாரின் (Qandahar) எல்லையில் உள்ள அந்தப் பாலைவனத்தின் ஓரத்தில், பழையதும், நைந்து போனதுமான சில கூடாரங்கள் ஒரு வட்டமாக அமைக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைச் சுற்றி, ஒட்டகங்கள், குதிரைகள், ஆடுகள் முதலியன காற்றின் உக்கிரத்தைத் தவிர்க்கக் கூடாரத்தை ஒட்டி நின்றிருந்தன.

நெருப்பைச்சுற்றி அமர்ந்திருக்கும் கூட்டத்தினரிடமிருந்து பிரிந்து, கியாஸ் பெக் (Ghias Beg) மிருகங்களைக் கடந்து, மெதுவாகத் தன் மனைவி இருக்கும் கூடாரத்திற்குச் சென்றான். மூன்று குழந்தைகள், மணல் வாரி அடிக்கும் காற்றின் வேகத்தைத் தவிர்க்கக் கண்களை மூடிக்கொண்டு, ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது மந்தமாகத் தெரிந்தது. தன் பெரிய மகனின் தோளைத் தொட்டு, முகமது பேய்க் காற்றின் இரைச்சலுக்கு மேல் உரக்க கூவினான். "உன் தாயார் நலமாக இருக்கிறளா?"

கண்களில் நீர் மல்க, அந்தப் பையன் தன் தந்தையை ஏறிட்டுப் பார்த்தான். "எனக்குத் தெரியாதே, அப்பா" மெல்லியதாக ஒலித்த அவன் குரலைக் கியாஸ் குனிந்து கேட்க வேண்டியிருந்தது. முகமது தந்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டு "ஓ அப்பா, இப்பொழுது என்ன ஆகும்?"

கியாஸ் குனிந்து தன் மகனை இறுக அணைத்துக்கொண்டு அவன் தாடி முகமதின் தலையில் உள்ள மணலைத் தட்டி, அவன் நெற்றியில் முத்தமிட்டான். இத்தனை நாட்களில், முதன் முறையாக இப்பொழுதுதான் அவனே சிறிது பயத்தை உணர்ந்தான்.

மகனின் தலைக்கு மேல் பார்த்து அங்கிருந்த தன் மகளை நோக்கி "ஸலீஹா, அம்மாவின் உடல் நலம் பற்றி விசாரித்து வா."

அந்தச் சிறு பெண் எழுந்திருந்து, மௌனத்துடன், கூடாரத்திற்குள் நுழைந்தாள்.

அவள் வருவதைப்பார்த்த அந்தப் பெண்மணி நிமிர்ந்து நோக்கினாள். ஸலீஹாவைப் பார்த்து ஒரு கையை நீட்ட, ஸலீஹா உடனே அவளருகில் சென்றாள்.

"நீ உடல் நலத்துடன் இருக்கிறாயா என்று அப்பா கேட்டு வரச் சொன்னார், அம்மா."

அஸ்மத் பேகம் (Asmat Begam) புன்னகைக்க முயன்றாள். "ஆம் மகளே! அதிக நேரம் ஆகாது என்று அப்பாவிடம் சொல். அப்பா கவலைப்படவேண்டாம் என்றும் சொல். நீயும் கவலைப்படாதே, சரியா?"

ஸலீஹா தலையை ஆட்டிக்கொண்டே எழுந்தாள். ஓர் உத்வேகத்தில் குனிந்து, தன் தாயை இறுக அணைத்துக்கொண்டு, அவள் தோளில் தலையைப் பதித்தாள்.

மூலையில் அமர்ந்திருந்த மருத்துவச்சி இதைப் பார்த்து, முகம் சுளித்து. "இல்லை இல்லை; குழந்தை பிறக்கப் போகும் சமயத்தில் உன் தாயாரைத் தொடாதே. நீ பெண்ணாக இருப்பதால், பிறக்கும் குழந்தையும் பெண்ணாகவே பிறக்கும். ஓடிப்போ. உன் கொள்ளிக் கண்களை எடுத்துக் கொண்டு ஓடிப்போ."

"பரவாயில்லை. விட்டுவிடு" தன் பெண்ணை வெளியே துரத்தும் மருத்துவச்சியைப் பார்த்து அஸ்மத் மெதுவாகச் சொன்னாள். அவளுடன் மேலும் வாதாட விரும்பாமல் பேசாமல் இருந்தாள்.

கியாஸ் நிமிர்ந்து ஸலீஹாவைப் பார்த்து புருவத்தை உயர்த்தினான்.

"சீக்கிரம் முடிந்து விடும், அப்பா."

தலையை அசைத்து விட்டு கியாஸ் திரும்பினான். தலைப் பாகையைச் சரிசெய்து கொண்டு கைகளை மார்பில் கட்டிக் கொண்டு, வேகமாக வீசும் காற்றைத் தவிர்க்கத் தலையைக் குனிந்தவாறு அந்த முகாமை விட்டு வெளியேறினான். ஒரு பெரிய மலைப்பாறைக்கு அருகில் சென்று அமர்ந்து கைகளில் முகத்தைப் பதித்துக் கொண்டான். நிலைமை இவ்வளவு மோசமாகும் வரை அவன் எப்படி விட்டு வைத்தான்?

கியாஸின் தந்தை, முகமது ஷரீப் (Muhammad Sharif) கபர்ஷியாவின் மன்னரான ஷா தகமாஸ்ப் ஸஃபாவி (Shah Tahmasp Safavi)யின் அரசாங்கத்தில் ஒரு பிரபுவாக இருந்தார். சிறு வயதிலிருந்தே கியாஸும் அவர் மூத்த சகோதரன் முகமது தஹீர்(Muhammad Tahir)ரும் நன்கு கல்வி பயின்றனர். நல்ல வசதியான சூழ்நிலையில் சந்தோஷமாக வாழ்ந்தனர். தந்தை யுடன் பல நகரங்களுக்குச் சென்றனர். முதலில் குராஸன், (Khurasan) பிறகு யஸ்த் (Yazd), கடைசியாக இஸ்ஃபாஹான் (Isfahan). 1576ல் அங்கு முகமத் ஷரீஃப், இஸ்பஹானின் வசீர் (wazir) ஆக இருக்கையில் இறந்தார். நிலைமை அப்படியே இருந்திருந்தால் கியாஸும் ஒரு பிரபுவாகக் கவலையில்லாமல், தனக்கு வேலை செய்பவர்கள், மதுவிற்பனை செய்பவர்களுக்கு இரண்டு, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பணம் கொடுத்தும், தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவி செய்து கொண்டும் ஒரு நல்ல வாழ்க்கையில் இருந்திருக்கலாம். ஆனால் நிலமை அப்படி இருக்கவில்லை.

ஷா தகமாஸ்ப் இறந்து போக, ஷா இரண்டாம் இஸ்மாயில் (Shah Ismail II) கபர்ஷியாவின் அரசரானர். புது அரசாங்கம் முகமது ஷரீஃப்ஃபின் பிள்ளைகளிடம் அன்புடன் நடந்து கொள்ளவில்லை. கடனுக்குப் பொருள் கொடுத்தவர்களும் நெருக்கத் தொடங்கினர். முகம் சிவக்கக் கியாஸ் நடந்தவற்றை நினைத்துப் பார்த்தான். நாய்கள் மோப்பம் பிடித்து வருவது போல் எப்படிக் கடன் கொடுத்தவர்கள் இவரிடமிருந்த விலை யுயர்ந்த மரச் சாமான்கள், விரிப்புகள் முதலியவற்றைச் சுரண்ட வந்தனர்? வீட்டுச் செலவுகளுக்கான ரசிதுகள் மேலும் மேலும் வந்து குவிந்த வண்ணம் இருக்கவே அவரும், அல்மதும்

செய்வதறியாது நிகைத்தனர். அவர் தந்தை காலத்தில் கணக்கர் கள். இந்த வரவு செலவுக் கணக்கை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்களும் போய் விட்டார்கள். கியாஸின் பங்கிற்கு வரவேண்டிய அவர் தந்தையின் சொத்தை யும், அவர் தந்தை இறந்த பிறகு அரசாங்கமே எடுத்துக் கொண்டு விட்டதால், கடன் கொடுத்தவர்களுக்கு திருப்பித் தர இவர்களிடம் வேறு சொத்து எதுவும் இல்லை.

மன்னரின் அரச சபையில் உறுப்பினராக இருந்த அவர் தந்தையின் பழைய நண்பர் ஒருவர் கியாஸிற்கு அவன் நிலை யைமை விளக்கினார். கடனை அடைக்க முடியாததால் அவனுக்கு மரணமோ அல்லது ஆயுட்காலச் சிறைத்தண்ட னையோ கிடைக்கக் கூடும். பாரசீகத்தில் இனிமேல் நல்ல பெயருடன் தன்னால் வாழமுடியாது என்பதை கியாஸ் உணர்ந்தார். சிப்பாய்கள் அவரைக் கைது செய்ய வருவதற்குள் இரவோடிரவாக அவர்கள் தப்பித்துக் கொண்டு அவசரமாக வெளியேறிய நிலைமையை, மேலும் தன் முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டு கியாஸ் எண்ணிப்பார்த்தார். வழிச் செலவுக்கு உதவுமே என்று, அல்மதின் நகைகளையும், கொஞ் சம் தங்கம், வெள்ளிப் பாத்திரங்களையும், சில விலையுயர்ந்த சாமான்களையும் கட்டி எடுத்துக் கொண்டு வந்தனர்.

கியாஸிற்கு முதலில் எங்கு சென்று அடைக்கலம் தேடுவது என்று தெரியவில்லை. தெற்கு நோக்கிச் செல்லும் சில வியாபாரிகளின் கூட்டத்துடன் இவர்களும் கலந்து கொள்ளக் கியா இந்தியா செல்லலாம் என அபிப்பிராயம் தெரிவித்தனர். ஏன் கூடாது என்று கியாஸுக்கும் தோன்றிற்று. அப்பொழுது முகலாயச் சக்ரவர்த்தி அக்பர் இந்தியாவை ஆண்டு வந்தார். அவர் மிகவும் நியாயமானவராகவும், அன்புள்ளவராகவும், நன்கு படித்த கனவான்களுக்கு மரியாதை கொடுப்பவராகவும் இருந்தார். ஒரு வேளை, கியாஸிற்கு அரச சபையில் ஒரு நல்ல வேலை கிடைக்கலாம், அவர்களும் ஒரு புது வாழ்க்கையைத் தொடங்கலாம்.

பேரிரைச்சலுடன் வீசும் புயற்காற்றின் சத்தம் சிறிது ஓய்ந்து, அப்பொழுதே பிறந்த குழந்தையின் மெலிந்த சப்தம்

கேட்டுக் கியாஸ் தலையைத் தூக்கிப்பார்த்தான். உடனே அந்தக் கடினமான தரையில் மண்டியிட்டு அமர்ந்து, மேற்கே இருக்கும் மெக்காவை நோக்கிக் கைகளை உயர்த்திப் பிரார்த்தித்தான். 'அல்லா! குழந்தை ஆரோக்கியமாகவும் தாயார் உடல் நலத்துடனும் இருக்க அருள் செய்' என மௌனமாக வேண்டினான். அவள் நிலைமை மோசமாக இருக்கும் இந்த வேளையில் இன்னொரு குழந்தை! அவன் முகாமைத் திரும்பி பார்த்தான். புழுதிக்காற்றினால் கூடாரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. அவன் இப்பொழுது அஸ்மதிடம் போக வேண்டும். ஆனால் அவன் கால்கள் அவனுடைய அன்பான மனைவியிடம் செல்லத் தயங்கின.

கியாஸ் அந்தப் பாறையின் மேல் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டான். இஸ்பஹானின் ஒரு பெரிய அதிகாரி (வசீர்)யின் மருமகள் தனது நான்காவது குழந்தையை இப்படிப்பட்ட சூழ்நிலையில் பெற்றெடுப்பாள் அல்லது அவரது மகன் தண்டனைக்குப் பயந்து, தாய்நாட்டை விட்டு இப்படி ஓட வேண்டியிருக்குமென்றோ யார் தான் நினைத்திருப்பார்கள்? அவர் குடும்ப கௌரவத்திற்கு இப்படி பங்கம் வந்ததே அதிகம். ஆனால் அதற்கு மேலும் வரும் வழியில் அவர்களுக்கு ஏற்பட்ட பெரிய துன்பம் அதைவிட அதிகம்.

காந்தஹாரை நோக்கித் தெற்கே செல்லுகையில், இவர்கள் கூட்டம் பாரசீகத்தின் மிகப்பெரிய பாலைவனமான தஷத்-ஈ-லவ்த் (Dashat-e-lvt) என்ற பாலைவனத்தைக் கடந்து சென்றது. அந்தப் பாலைவனத்திற்கும் ஓர் அழகு இருந்தது. பலமைல் தூரம் புற்பூண்டுகளே இல்லாத வரண்ட நிலம். எங்கிருந்தோ வந்து முளைத்தாற்போல் ஆங்காங்கே சிறிய மணல் குன்றுகள். ஆனால் அந்தக் குன்றுகள் தான் எப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டன. அந்தக் குன்றுகளின் பின்னால் பயங்கரமான பாலைவனக் கொள்ளையர்கள் மறைந்திருந்தது அதன் அருகில் வந்தபின்தான் இவர்களுக்குத் தெரிந்தது.

கியாஸ் நடுக்கத்துடன் தன் முரமுரப்பான கம்பளிப் போர்வையை இழுத்துத் தோள்களைச் சுற்றிப் போர்த்திக்

கொண்டான். கொள்ளையர்கள் பயங்கர சத்தத்துடனும், ஆரோஷத்துடனும் இவர்களைச் சூழ்ந்து கொண்டனர். துளியுமே மிஞ்சவில்லை. நகைகள் போயின. தங்கம் வெள்ளிப் பாத்திரங்கள் போயின. பெண்கள் அங்கேயே கற்பழிக்கப் பட்டனர். நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்ததால் அஸ்மத்தை அவர்கள் தொடவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பின் கூட வந்தவர்கள் ஆங்காங்கே சிதறி ஓட, அங்கிருந்த இரண்டு ஒட்டகங்களின்மேல் மாற்றி மாற்றிப் பயணம் செய்தவாறு வழியில் சந்தித்த மற்ற கூட்டத்தினரிடம் உதவி கோரியபடி இவர்கள் காந்தஹாரை நோக்கிச் சென்றனர்.

மிகவும் களைத்துப் போய், அழுக்கான கிழிந்த உடை களுடன் இந்தக் குடும்பம் காந்தஹாரில் நுழைய, அங்கிருந்த ஆப்கானிஸ்தானின் 'குச்சி' என்ற இனத்தைச் சேர்ந்த நாடோடிகள் சிலர் இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துத் தங்களிடமிருந்த கொஞ்சம் உணவையும் கொடுத்தனர். ஆனால் இவர்களிடம் பணமும் இல்லை. இந்தியாவிற்குப் போய்ச் சேர்வது சாத்தியமாகும் என்றும் தோன்றவில்லை. மேலும் இப்பொழுது இன்னொரு குழந்தை.

சில நிமிடங்களுக்குப் பிறகு, கியாஸ் சுதாரித்துக் கொண்டு எழுந்திருந்து, கூடாரத்தை நோக்கிச் சென்றான்.

அஸ்மத் படுக்கையிலிருந்து நிமிர்ந்தான். கண்களின் ஓரத்தில் கருவட்டத்துடன் தன்னைபார்த்துப் புன்னகைக்க முயலும் தன் மனைவியைக் கியாஸ் களத்த மனத்துடன் பார்த்தான். முகம் மெலிந்து மிகவும் இளைத்துப் போயி ருந்தாள். கையை நீட்டி அவள் நெற்றியில் விழுந்த மயிரைக் கோதிவிட்டாள். அவள் கையில், பழைய துணியால் சுற்றப்பட்ட ஒரு அழகான சிறு குழந்தை.

"தம் பெண்" அஸ்மத் கியாஸிடம் குழந்தையைக் கொடுத்தாள்.

குழந்தையை ஏந்தியபடி அவள் தன் இயலாமையை நினைத்துப் பார்த்தான். சுத்தம் செய்யப்பட்ட ஒரு அழகான சிறு குழந்தை தன் வாழ்விற்கும், பராமரிப்பிற்கும் அவளைச்

சர்ந்ததாய் அவன் கையில் படுத்திருந்தது. அவள் மிக அழகானவளாக, திடமான கை கால்களுடன், தலை நிறையக் கருத்த பளபளப்பான முடியுடன் அழகிய சுன்னங்களில் படரும் நீண்ட கருத்த கண் இமை மயிர்களுடன் கூடிய ஒரு அழகான குழந்தை.

"இவளுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்திருக்கிறாயா?" கியாஸ் மனைவியிடம் கேட்டான்.

"ஆமாம்..." தயங்கியபடி அஸ்மத் பதிலளித்தாள். "மெஹ்ருன்னிஸா."

"மெஹ்ருன்னிஸா" கியாஸ் மெதுவாகச் சொன்னான். 'பெண்களின் சூரியன்.' இந்த அழகான குழந்தைக்குப் பொருத்தமான பெயர்தான். முகவாயில் தன் சிறிய கைகளைப் பதித்துத் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையின் மூடிய கையைத் தொட்டான். பிறகு மெஹ்ருன்னிஸாவை அஸ்மத்திடம் திருப்பிக் கொடுத்தான். நிச்சயம் அஸ்மத்தினால் தாய்ப்பால் கொடுக்க இயலாது. பல மாதங்களாகச் சரியான உணவு இல்லாததால் அவளிடம் அதிகம் தாய்ப்பால் இருக்காது. செவிலித் தாயை அமர்த்திக் குழந்தைக்குப் பாலூட்டச் செய்யப் பணத்திற்கு எங்கே போவார்கள்?

தன்னை யாரோ தொடுவதை உணர்ந்து கியாஸ் திரும்பிப் பார்க்கையில், கையை நீட்டியவாறு ஆயா நின்றிருந்தான். அவன் இல்லை என்பதுபோல் தலையை அசைத்தான். "மன்னிக்கவும். உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றும் இல்லை."

வாயிலிருந்த புகையிலைச் சாற்றை ஆக்ரோஷத்துடன் துப்பிவிட்டு "ஒன்றுமில்லை." முணுமுணுத்துக் கொண்டு அவன் கூடாரத்தை விட்டுச் செல்லுகையில் கூறிக்கொண்டே செல்லுவதை அவர் கேட்டார். "பெண் குழந்தையானாலும் கொஞ்சமாவது கொடுக்க தகுதியானது தானே!"

கியாஸ் ஒரு மூலையில் நகர்ந்து, ஆயாசத்துடன் நெற்றியைத் தடவியபடித் தன் மூன்று குழந்தைகளும் முகமது ஷரீப்

அப்துல்லாசன், லலீஹா தங்கள் தாயாரையும் புதிய குழந்தையையும் சுற்றி நிற்பதைப் பார்த்தான்.

இந்தக் குழந்தையை அவர்களால் பராமரிக்க முடியாது. அதை யாரிடமாவது கொடுத்துவிட வேண்டியதுதான்.

•••

திடீரென்று தொடங்கியது போலவே காற்று இரவில் அடங்கி விட்டது. பளீரென்று நட்சத்திரங்கள் ஆகாயத்தில் ஒளிவிட்டன. மறுநாள் காலை இருள் விலகுவதற்கு முன் எழுந்திருந்து கியாஸ் கூடாரத்தின் வெளியில் வந்து அமர்ந்தான். தேய்வைத் தூள்களைவிடத் தண்ணீர்ப் பாலே அதிகம் உள்ள கூடான தேநீர் அவனது கைகளையும் குளிர்ந்த உடலையும் உஷ்ணப்படுத்தியது. சில நிமிடங்களில் இழக்கு வானம், கண்ணைக் கவரும் சிவப்பு, தங்க நிறம் மற்றும் ஒளிரும் பழுப்பு நிறங்களால் அழகு பெறப் பலத்த சூறாவளிக் காற்றின் ஆகாயம் பல நிறங்களில் ஒளிர் விட்டது.

அவன் தன் போர்வைக்குள் கையை விட்டு, இடுப்பில் செருகி வைத்திருந்த நான்கு விலையுயர்ந்த தங்கக் காசுகளை எடுத்தான். அவனது அழுக்கடைந்த கைகளில் அந்தக் காசுகள் காலை இளஞ் சூரியன் ஒளியில் நெருப்பைப் போல் பளபளத்தன. இதுவே அவர்களிடம் கடைசியாக இருப்பது. அஸ்மத் தன் சோலிக்குள் மறைத்து வைத்திருந்த இந்தக் காசுகளைக் கொள்ளையர்கள் பார்க்கவில்லை. இந்தியாவிற்குப் போவதற்கான வழிச்செலவுக்காக இதை உபயோகிக்க எண்ணினாள். அதற்கு மட்டுமே இந்தக் காசுகள் உதவும். மற்றச் செலவுகளுக்கு இன்னும் பணம் தேவைப்படும்.

காலை இளஞ்சிவப்பு நிறவானத்தில் கரை கட்டியது போல் தூரத்தில் வெளிர்நீலத்தில் ஒளிரும், மாடங்களையும், மினாரேக்களையும் கியாஸ் திரும்பிப் பார்த்தான். காந்தஹாரில் அவனுக்கு ஏதாவதொரு வேலை கிடைக்கலாம். இந்த இருபத்தாறாவது வயது வரை ஒரு நாள் கூட வேலை எதுவும் செய்ததில்லை. ஆனால் அஸ்மத் உடல் வலிமை பெற ஆட்டிறைச்சியும் பாலும் அவசியம். குளிர் காலம் நெருங்குவதால்

குழந்தைகளுக்குக் கம்பளி உடைகள் அவசியம். மேலும் இந்தக் குழந்தை... கியாஸ் அவனைப்பற்றி நினைக்கவே மறுத்தான். அவன் பெயரைக் கூட. அதனால் என்ன பயன், வேறு யாரோ அவளைப் பராமரிக்கப் போகையில்? சூரியன் தொடுவானத்தை விட்டு மேலே எழும்பத் தொடங்கித் தன் பொற்கதிர்களால் அந்த முகாமை அரவணைக்கத் தொடங்கக் கியாஸ் எழுந்தான். அவன் முகம் இறுகிக் கண்களில் ஒரு புதிய திடமான முடிவுடன் காணப்பட்டான்.

அன்று பிற்பகலில், கியாஸ் தோள்கள் தொங்க, அங்கிருந்த ஒரு கடைத்தெருவின் ஒரு சந்தில் ஒரு பெட்டிக் கடைமுன் நின்றிருந்தான். அவனது நீண்ட மேல் அங்கி, சுற்சனாலான அந்தத் தெருவில் புரண்டு கொண்டிருந்தது. ஜனங்கள் தெரிந்தவர்களுடன் குசலம் விசாரித்தும், சினேகிதர்களுடன் பேசிக் கொண்டும், சுற்றிலும் நடமாடிக் கொண்டிருந்தனர்.

எந்த நோக்கமுமில்லாமல் கியாஸ் தூரத்தில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். முதலில் அந்த நகரத்திலுள்ள பணக்காரச் சீமான்களின் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும் வேலைக்கு முயற்சி செய்தான். ஆனால், அவனுடைய கிழிந்த உடைகளையும் அழுக்கடைந்த முகத்தையும் பார்த்து வாசற் படியிலிருந்தே திருப்பி அனுப்பிவிட்டனர். பின்பு, கூலி வேலைக்கு முயற்சி செய்தபோது, அவனது அறிவு பூர்வமான பேச்சும், செய்கைகளும் அவன் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வன் என்று காட்டிக் கொடுத்துவிட்டன.

அந்தப் பெட்டிக் கடையிலிருந்து புதிதாகச் சுட்ட தந்தூரிச் சப்பாத்தியின் மணம் அவனைத் திடீரென்று தாக்கியது. காலையில் அருந்திய ஒரு கோப்பை தேநீருக்குப் பின் ஒன்றுமே சாப்பிடவில்லை என்று அவன் வயிறு சத்தமிட்டு உணர்த்தியது. அவன் திரும்பி, அந்தக் கடைக்காரன் தன் கைகளால் மாவை நன்கு பிசைந்து தட்டிப் பின் ஒரு மரக்கரண்டியால் அதை லாவகமாக எடுத்துத் தரையில் இருந்த ஒரு நெருப்புக் குழியின் சூடான சுவர்களில் பதிப்பதைப் பார்த்தான். பதினைந்து நிமிடங்கள் கழித்து ஒரு இரும்புக் கிடுக்கியால் புதிதாகச் சுட்ட சப்பாத்திகளை அவன் உரித்து எடுத்தான். அந்தப் பொன்

நிறமான தந்தூரிச் சப்பாத்திகளைக் கடையின் முன்னால் அடுக்கி வைத்தான்.

அந்தப் புதிய சப்பாத்தியின் மணம் கியாஸைக் கிறு கிறுக்கச் செய்தது. தன்னிடமிருந்த ஒரு தங்கக் காசை எடுத்துப் பார்த்தான். தன் மனம் மாறுவதற்கு முன் பத்து சப்பாத்திகளும், பக்கத்திலிருந்த கடையிலிருந்து எலுமிச்சையும், பூண்டும் கலந்த ஆட்டிறைச்சிக் கறியும் வாங்கிக் கொண்டான்.

அந்தச் சப்பாத்திகளின் சூடு அவன் மார்பைக் கதகதப்பாக்க, உணவின் நறுமணம் அவன் வாயில் உமிழ் நீரைச் சுரக்க வைக்க, அந்த உணவுப் பொருட்களைத் தன்மேல் அங்கிக்குள் வைத்துக் கொண்டு, கடைத்தெருவிலிருந்து வேகமாக நடந்தான். அஸ்மதிற்கும், குழந்தைகளுக்கும் சில நாட்களுக்கு இந்த உணவு போதுமானதாக இருக்கும். குளிர் நாட்களானதால ஆட்டிறைச்சி கறியும் கெடாமல் இருக்கும். ஒரு வேளை அவர்கள் நிலைமையும் மாறலாம்...

"ஹேய், வழிப்போக்கனே பார்த்துச் செல்"

கியாஸ் திடுக்கிட, ரொட்டிகளும் கறியும் கீழே விழுந்தன. தான் அவசரமாகக் குனிந்து கைகளைப்பரப்பி மற்றவர்கள் அந்த உணவின் மேல் கால் பதிக்கும் முன் எடுக்க முயன்றான்.

"என்னை மன்னியுங்கள், ஸாஹேப்" குனிந்தவாறே கியாஸ் கூறினான்.

பின்னாலிருந்து எந்தச் சத்தமும் இல்லை. உணவுப் பொருட்களைத் திரட்டிக் கொண்டிருந்த கியாஸ், அந்த வியாபாரி நின்று, தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதை உணரவில்லை. அவன் நிமிர்ந்து அன்புடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த வயது முதிர்ந்த முகத்தைப் பார்த்து, "மன்னிக்கவும்" என்று மறுபடியும் கூறினான். "உங்களுக்கு நான் ஒருவிதத் தீங்கும் செய்யவில்லை என்று நினைக்கிறேன்."

"இல்லவே இல்லை" கியாஸை உற்று நோக்கிக் கொண்டிருந்த அந்த வியாபாரி பதிலளித்தார். நீ யார்?"

"கியாஸ்பெக், இஸ்பாஹானின் வசீராக இருந்த முகமது ஷரீஃபின் மகள்." கியாஸ் பதிலளித்தான். அந்த மனிதரின் முகத்தில் வியப்பைப் பார்த்துத் தன்னுடைய கிழிந்த மேல் அங்கியையும், அழுக்கடைந்த பைஜாமாவையும் கட்டிக் காட்டியபடி, "ஒரு காலத்தில் இவை அழகாக, விலை மதிப்புள்ளனவாக இருந்தவைதான். ஆனால் இப்பொழுது..."

மரியாதையுடன் அந்த வியாபாரி வினவினார். "என்ன ஆயிற்று ஸாஹேப்?"

கியாஸ், அவரது அழுத்தமான கைகளையும், இடுப்பில் செருகியிருந்த குத்துவாளையும், வலுவான தோல் செருப்பு களையும் பார்த்தவாறு, "நாங்கள் காந்தஹாருக்குப் போய்க் கொண்டிருந்த பொழுது வழிப்பறிக் கொள்ளைக்காரர்களால் தாக்கப்பட்டோம்" பசிமயக்கத்துடன் நாக்குழறப் பதிலளித் தான்.

"நீங்கள் உங்கள் தாய்நாட்டை விட்டு மிகுந்த தூரம் வந்து விட்டிருக்கிறீர்கள் போலுள்ளதே!"

கியாஸ் தலையசைத்தான். "அது ஒரு பெரிய கதை. நிலைமை மாறியது. அதனால் நான் தாய் நாட்டைவிட்டு ஓடவேண்டி வந்தது. நான் யாருடன் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று அறியலாமா?"

"மலிக் மசூத் (Malik Masud)" வியாபாரி பதிலளித்தார். "உங்கள் கதையைச் சொல்லுங்கள், ஸாஹேப். எனக்கு நேரம் இருக்கிறது. அருகிலுள்ள தேநீர்க் கடைக்குச் செல்லலாமா?"

கியாஸ், தெருவின் எதிர்பக்கத்திலுள்ள கடையிலிருந்து கொதிக்கும் பாலின் மணமும், மசாலாவின் மணமும் கலந்து வீசுவதைப் பார்த்தான். "நீங்கள் அன்பானவர், மசூத் அவர்களே! ஆனால், உங்கள் உபசரணையை என்னால் ஏற்க இயலாது. என் குடும்பம் எனக்காகக் காத்துக் கொண்டி ருக்கும்."

மசூத், கியாஸை அணைத்தவாறு தேநீர்க் கடைப்பக்கம் அழைத்துச் சென்றார். "சொல்லுங்கள், ஹாஹேப்! உங்கள் கதையைக் கேட்க மிக்க ஆவலுட ன் இருக்கிறேன். என் ஆவலைப் பூர்த்தி செய்வீர்களா?"

மீண்டும் தயங்கிக் கொண்டே, கியாஸ் அவருடன் நடந்தான். அங்கு தன்னிடமுள்ள உணவுப் பொருட்களைப் பத்திரமாக மடியில் வைத்துக்கொண்டு மற்ற எல்லோருடன் சரிசமமாக அமர்ந்தபடி, நடந்தவற்றை எல்லாம் மெஹ்ருன்னி ஸாவின் பிறப்பு உள்பட மசூத்திடம் கூறினாள்.

"அல்லா உங்களை வாழ்த்தியுள்ளார், ஸாஹேப்" கோப்பையைக் கீழே வைத்தவாறு மசூத் கூறினார்.

"ஆமாம்!" கியாஸ் பதிலளித்தான். இப்பொழுது நிலைமை சரியில்லாவிடினும், அல்லா அவனிடம் கருணையாக உள்ளார். அனைத்தும் குழந்தைகளும் அல்லாவின் கருணை தான். இந்தக் குழந்தை கூட....

கியாஸ் எழுந்தான். "நான் போக வேண்டும். குழந்தைகள் பசியுடன் இருப்பார்கள். தேநீர் கொடுத்ததற்கு நன்றி."

கியாஸ் தனம்ப எத்தனிக்கையில், மசூத் கூறினார். "நான் இந்தியா போய்க் கொண்டிருக்கிறேன். எங்கள் கூட்டத் தினருடன் சேர்ந்துகொள்ள விருப்பமா, மிர்ஜா பெக்? என்னால் அதிகம் தரமுடியாவிட்டாலும் ஒரு கூடாரமும் உங்கள் சாமான்களைத் தூக்கி வர ஒரு ஒட்டகமும் தருகிறேன். எங்கள் கூட்டம் பாதுகாப்பானது. உங்கள் பிரயாணம் பாதுகாப்புடன் இருக்கும்"

கியாஸ் சட்டென்று திரும்பித் தன் முகத்தின் அதிர்ச்சி தெரிய உட்கார்ந்தான். "ஏன்?"

மசூத் அவன் கேள்வியை ஒதுக்கி விட்டு, "சக்ரவர்த்தி அக்பருக்கு என் மரியாதையைச் செலுத்தப் பதேபூர்சிக்ரி வரை தான் போய்க்கொண்டிருக்கிறேன். உங்களால் அவ்வளவு தூரம் என்னுடன் வர முடியுமானால், உங்களைப் பேரரசின் சந்திதானத்தில் அறிமுகப்படுத்துவேன்."

அவர் கூறியதை நம்பமுடியாமல், கியாஸ் அவரை வெறித்துப் பார்த்தான். ஒன்று மாற்றி ஒன்றாக வந்து

கொண்டிருக்கின்ற இவ்வளவு கஷ்டங்களுக்குப்பிறகு இது அல்லாவின் வெகுமதியோ? ஆனால், அவளால் இந்த உதவியை ஏற்றுக் கொள்ளமுடியாது. ஒரு பிரபுவின் மகனும், தானே ஒரு பிரபுவாகவும் இருந்தவன், இன்னொருவருடைய அன்புக்கு கடனாளியாக இருக்கலாமா? அவருக்குத் திருப்பிச் செலுத்துவதற்கு இவனிடம் ஒன்றும் இல்லை. மசூத் ஏன் இவற்றைச் செய்கிறார்?

"நான்..." அவன் தடுமாறினான். "என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. என்னால் முடியாதென்று..."

மசூத் மேசையின் முன்னே குனிந்து, "சரி என்று சொல் ஸாஹிப்! ஒருவேளை எதிர்காலத்தில் என் நிலைமை மோசமானால் நீங்கள் எனக்கு உதவி செய்யலாம்."

"நிச்சியம் செய்வேன் மசூத், தயங்காமல் செய்வேன், நீங்கள் இப்பொழுது எனக்கு இந்த உதவி செய்யாவிடினும். ஆனால், இது மிகவும் அதிகம். உங்கள் யோசனைக்கு மிக்க நன்றி. ஆனால் என்னால் ஏற்கமுடியாது."

மசூத் மறுபடியும் வற்புறுத்தினார். "இது எனக்கு ஒன்றுமே இல்லை, மிர்ஜா பெக். தயவு செய்து ஒத்துக் கொள்ளுங்கள். பிரயாணத்தின் போது உங்கள் தோழமையின் சந்தோஷம் எனக்குக் கிடைக்கும். என் பெரிய மகள் என்னுடன் பிரயாணம் செய்வதை நிறுத்திய பின் நான் தனிமையை உணர்கிறேன்."

"நிச்சியம் வருகிறேன்." கியாஸ் பதிலளித்தான். அந்த வியாபாரியின் வற்புறுத்தலை நினைத்துப் புன்னகைத்தவாறு "நான் எப்படி நன்றி சொன்னாலும் உங்கள் உதவிக்கு ஈடாகாது."

தன் கூட்டத்தினருடன் வந்து சேருவதற்கான விவரங்களை மசூத் கியாஸிடம் கூற, இருவரும் பிரிந்தனர். அடுத்த சில மணி நேரங்களில் அஸ்மத்தும் குழந்தைகளும் தங்களிடமிருந்த சொற்ப உடைமைகளைச் சேகரிக்கத் துவங்க, கியாஸ் கூடாரத்தின் வெளியில் அமர்ந்து, தான் மசூத்தைச் சந்திக்க நேர்ந்த சந்தர்ப்பம் பற்றி நினைவு கூர்ந்தான். வெகு காலத்திற்கு

முன்னால், கியாஸின் தந்தை ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த சீமான். தான் எப்படி மற்றவர்களுக்குப் பணிவுடன் உதவுகிறோமோ, அப்படியே தனக்கு யாராகிலும் உதவ முன்வந்தால் அதை ஏற்க வேண்டும் என்று அவனிடம் கூறியிருந்தார். தான் மசூத்தின் உதவியை இப்பொழுது ஏற்றுக்கொண்டு பின்னால் மாறாக செய்துவிட வேண்டும் என்று கியாஸ் முடிவு செய்து கொண்டான்.

கியாஸும் அவர் குடும்பத்தினரும் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த நாடோடிகளிடம் விடைபெற்றுக் கொண்டனர். திடீரென்று மனதில் தோன்றிய இனிய எண்ணத்தினால் தன்னிடம் மீதமிருந்த மூன்று தங்கக்காசுகளை அந்த அன்பான ஏழை நாடோடிகளுக்குக் கொடுத்தான். வேறு ஒருவரும் உதவ முன்வராத சமயத்தில் அவர்கள் அவன் குடும்பத்திற்கு அடைக்கலம் கொடுத்தனர். இந்தியா போவதற்கான வழிச் செலவிற்காக அந்தக் காசுகளை வைத்திருந்தான். இப்பொழுது அதற்கு அவசியமில்லை. அவர்கள் மசூத்தின் முகாமிற்குச் சென்று அடைந்தனர். அங்கு அவர்களுக்கு ஒரு கூடாரமும், அஸ்மத் உடல்நலம் தேறி உணவு தயாரிக்க தொடங்கும் வரை, பொதுச் சமையலிலிருந்து உணவும் கிடைக்க வசதி செய்து தரப்பட்டது.

இவர்கள் கூட்டம் முதலிலிருந்து கடைசிவரை ஒரு மிலோ மீட்டர் நீளத்திற்குக் காபூலை நோக்கிப் பயணம் தொடங்கினர். மூன்று வாரங்கள் செல்ல... முகம் நன்கு தெளிவு பெற்றுத் தலைமுடி பளபளக்க, அஸ்மத் உடல் நலம் தேறி வந்தாள். மூன்று குழந்தைகளும் நன்கு உணவு அருந்தி மிகச் சந்தோஷமாகச் சில சமயம் கூட்டத்தினருடன் நடந்து வந்தும், சில சமயம் ஒட்டகங்களின் மேல் பயணித்தும் வந்தனர். ஆனால் நிலைமை முழுவதும் சீராக ஆகவில்லை. மூன்றாவதாய் அமர்த்தி மெஹ்ருன்னிஸாவிற்குப் பால் புகட்ட முடியவில்லை. மெஹ்ருன்னிஸா சிறிது ஆட்டுப்பால் குடித்து வந்தாலும் நாளுக்கு நாள் இளைத்து வந்தாள். சிறிது யோசனையுடன் அந்த மூன்று தங்கக் காசுகளைக் கியாஸ் எண்ணி கூர்ந்தான். அவை இருந்தால் இப்பொழுது

உபயோகமாக இருந்திருக்கும். ஆனால் அந்த நாடோடிகள், வறுமை நிலையில் இருந்த போதிலும் இவர்களுக்கு மிகுந்த உதவி செய்தவர்கள்... இல்லை... அவர்களுக்குக் கொடுத்தது நல்ல முடிவுதான். அஸ்மத் இதைப்பற்றிப் பேச முற்பட்ட பொழுது, இயாஸ் தான் செய்தது சரியென்று அழுத்திக் கூறினான், தன் சிறுகுழந்தையைப் பார்ப்பதைத் தவிர்த்தபடி..

மெஹ்ருன்னிஸா பிறந்த ஒரு மாதத்திற்குப் பின், காபூலி லிருந்து கிழக்கு நோக்கிப் பயணம் செய்கையில், கைபர் மலைச் சாரலில் உள்ள ஹிந்துகுஷ் மலையின் தெற்குப் பகுதியி லிருக்கும் ஜம்ருத் (Jamrud) என்ற இடத்தில் அவர்கள் முகாமிட்டனர். பொழுது சாயும் நேரம். ஆகாயம் இளஞ் சிவப்பு, மஞ்சள் நிறத்தில் ஒளிவிட்டது. கற்றிலும் ஒளிமங்கலாக இருந்தது. கற்களிலும், பறைகளிலும், காய்ந்த புல்வெளிகளிலும் மந்தமான வெள்ளைப் பனி சூழ்ந்திருந்தது. பனிக்காலத்திற்கே உரித்தான கடும்குளிர் கம்பளி உடைகள் உள்ளேயும் புகுந்து உடலைச் சிலிர்க்கவைத்தது. அந்த மலைகுன்றுக்கு அருகில் ஒரு சிறு கிராமம். அவர்கள் பயணத்தில் இன்னும் சில வாரங் களுக்கு வேறு ஒரு கிராமமும் தென்படாது. அந்தச் சிறிய கிராமத்திலிருந்து சிறு விளக்குகள் கண்ண சிமிட்டுவதுபோல் ஒளி விட்டுக் கொண்டிருந்தன. இன்னும் சிறிது தூரத்தில் கைபர் கணவாயின் வழியாக இவர்கள் மலை மேல் செல்லவேண்டிய பாதை எழும்பி நின்றது.

அடுப்புப் பற்றவைக்கக் குச்சிகளையும் காய்ந்த இலை களையும் பொறுக்குவதற்கு அஸ்மத்திற்கு இயாஸ் உதவினான். பிறகு அருகில் அமர்ந்து, வாடிய முட்டைக்கோஸ் இலைகளை யும், கொஞ்சம் கேரட், மற்றும் ஆட்டிறைச்சி இவற்றைக் குருமா தயாரிப்பதற்காக அவள் நறுக்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கைகள் குளிரில் விரைத்துப் போய், கை முட்டிகள் வெளிர்த்துக் காணப்பட்டன. கூடாரத்திற்குள் மெஹ்ருன்னிஸா ஒரு துணியில் சுருட்டிப் படுக்க வைக்கப் பட்டிருந்தாள். அஸ்தமன வெளிச்சத்தில் முகமது, அபுல், ஸலீஹா மூவரும் மற்றக் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தனர். தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து,

குழந்தைகள் ஒருவர் மேல் ஒருவர் பனிக்கட்டிகளை வீசிச் சந்தோஷத்துடன் விளையாடும் சத்தத்தைக் இயாஸினால் கேட்க முடிந்தது.

அஸ்மத் தலையைத் தூக்கி, "அவர்கள் மிகவும் குளிரும் சரமமாக ஆகிவிடுவார்கள்" என்றாள். மூன்று கற்களாலான, நடுவில் குச்சிகளால் எரியும் நெருப்புடன் இருந்த அந்தத் தாற்காலிகமான அடுப்பில் அவள் ஒரு இரும்பு வாணலியை வைத்தாள்.

"பரவாயில்லை, அவர்கள் விளையாடட்டும்". அவளைப் பார்த்தபடியே இயாஸ் மெதுவாகக் கூறினான். அஸ்மத் வாணலியில் கொஞ்சம் எண்ணெய் ஊற்றி, அது காய்ந்தபின், கொஞ்சம் ஏலக்காய், கிராம்புத் துகள்கள், கொஞ்சம் பிரிஞ்சி இலை இவற்றைப் போட்டாள். அதற்குபின் ஆட்டிறைச்சியைப் போட்டு, லாவகமாக ஒரு மரக்கரண்டியால் வறுத்தாள்.

"எப்பொழுது சமையல் செய்யக் கற்றுக்கொண்டாய்?" இயாஸ் வினவினான்.

காதுக்குப் பின் தலைமுடியைத் தள்ளி விட்டவாறு அஸ்மத் புன்னகைத்தாள். நெருப்பின் உஷ்ணத்தினால் சிவந்து பளபளக்கும் முகத்துடன், அஸ்மத் வாணலியில் இருந்த குருமாவைத் தீவிரமாகப் பார்த்தாள். "நான் சமையல் கற்றதில்லை. இயாஸ், உனக்குத்தான் தெரியுமே! மந்திரம் போட்டது போல், உணவுப் பதார்த்தங்கள் எங்கிருந்தோ எனக்கு எப்பொழுதும் கொண்டு வரப்பட்டன. ஆனால் பக்கத்துக் கூடாரத்திலிருக்கும் பெண்மணி எனக்கு இந்தக் குருமா செய்யக் கற்றுக்கொடுத்தாள்." அவள் ஆவலுடன் அவனைத் திரும்பிப் பார்த்து, "உனக்கு அலுத்துவிட்டதா? வேறு ஏதாவது செய்யக் கற்றுக் கொள்கிறேன்."

இயாஸ் தலையசைத்தான். "இல்லை, அலுக்கவில்லை" விஷமத்துடன் புன்னகைத்து, "ஒரு மாதமாக இதைதான் தினமும் சாப்பிட்டு வருகிறோம்."

"இருபத்து இரண்டு நாட்கள்," காய்கறிகளை மாமிசத்துடன் போட்டு வாணலியில் சிறிது நீர் ஊற்றியவாறு அஸ்மத்

பதிலளித்தான். பக்கத்திலிருந்த கோணியிலிருந்து சிறிது கல் உப்பு, மற்றும் சிறிது ஏலக்காய், மிளகாய், கிராம்புப் பொடி களைத் தூவி, வாணலியை மூடி, நிமிர்ந்து உட்கார்ந்தாள். இயாஸை ஏறிட்டு நோக்கி, "குறைந்த பட்சம், இப்பொழு தெல்லாம் நான் குருமாவைக் கருக வைப்பதில்லை."

"அஸ்மத், நாம் பேசவேண்டும்."

அஸ்மத் அவனிடமிருந்து ஒரு பாத்திரத்தைத் திரும்ப எடுத்தாள். மற்றொரு கோணியிலிருந்து ஐந்து கைப்பிடிக் கோதுமை மாவைப் பாத்திரத்தில் போட்டுச் சிறிது எண்ணெய், தண்ணீர் விட்டுச் சப்பாத்தி செய்வதற்காக மாவைப் பிசைய ஆரம்பித்தான். "எனக்குச் சமையல் செய்து முடிக்க வேண்டும் இயாஸ்."

"அஸ்மத்" இயாஸ் மெதுவாகச் சொன்னான். ஆனால் அவள் அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள், அவள் முதுகு விறைப்பாக... அவள் செய்கை நடுக்கத்துடன்...

கூடாரத்திற்குள் மெஹ்ருன்னிஸா அழுதாள். இருவரும் சத்தம் கேட்டுத் திரும்பினர். அவள் மீண்டும் சக்தியில்லாமல் தீனமாக அழுதாள். பிறகு இந்த முயற்சியால் களைத்துப் போனது போல் சத்தம் நின்றது. அஸ்மத் குனிந்து மாவைத் தீவிரமாகப் பிசைய ஆரம்பித்தாள். அவள் தலைமுடி முகத்தில் விழுந்து, அவள் கணவரிடமிருந்து அவள் முகத்தை மறைத்தது. ஒரு கண்ணீர்த்துளி, இன்னும் ஒன்று, மாவில் விழ, அதையும் சேர்த்துப் பிசைந்தாள். இயாஸ் எழுந்து அவள் அருகில் வந்தான். அவள் அவனை அணைத்துக்கொள்ள, அவன் மார்பில் தஞ்சம் புகுந்தாள். அவள் கைகள் மாவிலேயே இருக்க, அவள் அவன்மேல் சாய்ந்து கொண்டிருக்க இவ்வாறே சில நிமிடங்கள் கழிந்தன.

"அஸ்மத்" இயாஸ் மெதுவாகச் சொன்னான். "நம்மால் மெஹ்ருன்னிஸாவைப் பராமரிக்க முடியாது."

"இயாஸ், தயவுசெய்..." அஸ்மத் தலையைத் தூக்கி அவனைப் பார்த்தாள். "நான் அவளுக்குப் பாலூட்ட முயற்சிக் கிறேன். இல்லாவிடில் ஆட்டுப்பாலைக் கொடுக்கலாம்;

அல்லது ஒரு செவிலித்தாயை ஏற்பாடு செய்யலாம். சமீபத்தில் தான் ஒரு குடியானவப்பெண் பிரசவித்ததாக இங்குள்ள பெண்கள் பேசிக்கொண்டார்கள். அவளைக் கேட்கலாம்."

இயாஸ் தூரத்தில் வெறித்தபடி, "அவளுக்கு நம்மால் என்ன கொடுக்கமுடியும்? மல்லிக்கிடம் பணம் கேட்க என்னால் முடியாது." தன்னைச் சுற்றிக் கை அசைத்துக் காட்டி, "ஏற்கெனவே நமக்கு இவ்வளவு கொடுத்திருக்கிறார்" மீண்டும் மனத்தில் வலியுடன் தொடர்ந்தான். "அவளைத் தெரு ஓரத்தில் விட்டு வைத்தால் வசதி படைத்த மனிதர் யாராவது அவளைக் கண்டெடுத்துச் சென்று பராமரிப்பார்கள். நம்மால் அவளை இனிமேல் வளர்க்க முடியாது."

"நீ வைத்துக் கொண்டிருக்கவேண்டும்." அஸ்மத் அவனிடமிருந்து விலகி விம்மத் தொடங்கினாள். ஆனால் இயாஸ் செய்தது சரிதான். அவள் செய்வது எப்பொழுதும் சரியாகத்தான் இருக்கும். அந்த நாடோடிகள் வறுமையால் வாடுகிறார்கள். அவர்களுக்குக் கொடுத்தது சரிதான். ஆனால் தற்சமயம் இவர்களால் குழந்தையை வளர்க்க முடியாது. அஸ்மத்தின் கண்ணீரும் நிற்கவில்லை.

இயாஸ் மனைவியை விட்டு எழுந்திருந்து கூடாரத்தின் உள்ளே சென்றாள். இதுபற்றிப் பல தினங்களாகவே யோசித்து வருகிறாள். அவளுக்குப் பால் வற்றி விட்டதால், அஸ்மத்தி னால் குழந்தைக்குப் பாலூட்ட முடியவில்லை. ஒவ்வொரு முறையும் குழந்தை பசியினால் அழும்பொழுது அவள் இதயம் உடைந்தது. அவர்கள் மெஹ்ருன்னிஸாவிற்குச் சர்க்கரைத் தண்ணீரில் ஒரு சுத்தமான துணியை நனைத்துச் சப்புவதற்காகக் கொடுத்து வருகின்றனர். ஆனால் அது போதவில்லை. அவள் மீதும் மெலிந்து, பிறந்த சமயம் இருந்ததை விடவும் பலவீனப்பாகத் தெரிகிறாள். தன் குடும்பத்தை இப்படிப்பட்ட சிரமத்திற்குத் தான் கொண்டு வந்துவிட்டதை நினைத்து அவள் அவமானத்தால் குறுகினாள். அவள் முடிவு அவளுக்கே பிரச்சினையைக் கொடுத்தது. ஆனால் அவள் மனதில் இதைச் செய்ய வேண்டியதுதான் என்ற தீர்மானம் எழுந்தது. அவளுக்கு நான் மெஹ்ருன்னிசா இளைத்துக் வருகிறாள். வேறு

யாராவது இவளை கண்டெடுத்தால் நன்கு பராமரிப்பார்கள். சிலர் இது மாதிரிச் செய்திருக்கின்றனர். சில நல்ல மனிதர்கள் வழியில் கிடந்த குழந்தைகளைத் தங்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று தங்கள் சொந்தக் குழந்தைகள்போல் நன்கு வளர்த்திருக்கின்றனர். கியாஸ் குழந்தையையும் மற்றொரு கையில் ஒரு எண்ணெய் விளக்கையும் எடுத்துக்கொண்டான். அவள் பரி மயக்கத்தில் திரும்பவும் உறங்கி விட்டாள். அவன் கூடாரத்தின் வெளியே வந்து அஸ்மத்திடம், "அவள் தூங்கும்போது இப்பொழுதே எடுத்துப்போகிறேன்."

மௌனமாகக் கண்ணீர் வழியும் முகத்துடன் அமர்ந்திருக்கும் அஸ்மத்தை விட்டு, முகாமிலிருந்து அவன் வெளியே வந்தான். கிராமத்தின் எல்லை அருகே வந்தவுடன் தன்னுடைய சால்வையால் குழந்தையை நன்கு போர்த்தி, அந்த முக்கிய சாலையில் உள்ள ஒரு மரத்தினடியில் குழந்தையை வைத்தான். பின் விளக்கை நன்றாகத் தூண்டிவிட்டு அவளருகே வைத்தான். இந்த சாலையில் நல்ல ஜனநடமாட்டம் இருப்பதாலும், இன்னும் இருள் சூழவில்லையாதலாலும், நிச்சயம் யாராவது சீக்கிரம் குழந்தையைப் பார்ப்பார்கள். அல்லாவைப் பிரார்த்தித்துக் கொண்டே அந்த மலையடிவாரக் கிராமத்தைத் திரும்பிப் பார்த்தான். திடீரென்று காற்று வீச, அந்த கிராமத்து வீடுகளின் புகைக் கூண்டிலிருந்து எழும் மரத்தை எரிக்கும் மணம் பரவியது. 'அல்லாவே! தயவுசெய்து யாராவது ஒரு இளகிய மனதுடையவர்!' கியாஸ் மறுபடியும் குழந்தையைத் திரும்பிப் பார்த்தான். போர்வைக்குள் அந்தச் சின்னக் குழந்தை சன்னமாக மூச்சு விட்டுக் கொண்டிருந்தான்.

கியாஸ் போவதற்குத் திரும்பினான். ஒரு சிறிய சப்தம் அந்தப் போர்வைக்குள்ளிருந்து கேட்டது. அவன் குழந்தையிடம் மெதுவாகச் சென்று அதன் கன்னத்தைத் தடவியபடி, "தூங்கு, என் விலைமதிப்பில்லாத பொக்கிஷமே." என்று பாரசீகத்தில் முணுமுணுத்தான். அவன் குரலினாலும் ஸ்பரிசத்தினாலும் அமைதி அடைந்த அக்குழந்தை மீண்டும் தூங்கலானான்.

கியாஸ், மெஹ்ருன்னிஸாவை ஒரு முறை பார்த்துவிட்டு வேகமாக நடந்தான். ஒரே ஒருமுறை குளிரில் நடுங்கியவாறு,

அந்தத் தெரு வளைவிலிருந்து திரும்பிப் பார்த்தான். சூழ்ந்து வரும் இருளில் பனிக்காலத்தின் வெறுமையில், பெரிய இலைகளைப் பரப்பியவாறு படர்ந்து இருந்த அந்த மரத்தினடியில் அந்த விளக்கிலிருந்து வெளிச்சம் மினுமினுத்தது. சால்வையால் சுற்றப்பட்ட மெஹ்ருன்னிஸா அவனுக்குச் சரியாகத் தெரியக்கூட இல்லை.

●●●

LUலை மங்க... இரவின் வருகையைக் குறிக்கும் வகையில் அந்த மலைத்தொடர்கள் சிவப்புக் கலந்த நீலநிறமாகத் தெரிய ஆயின. பனியின் வெண்மை நிறம் சிறிது சிறிதாக மங்கி வர... அந்த முகாமைச் சுற்றிலும் அமைதி பரவத் தொடங்கியது. ஆங்காங்கே களைத்த குரல்கள் கேட்டன. முகாமைச் சுற்றி யுள்ள நெருப்புக் குழிகளிலிருந்து மரத்துண்டுகளும் சாம்பலும் தெறித்து விழுத்தன. காய்ந்த மரங்களிடையே காற்றின் இரைச்சல் ஊடுருவி வந்தது. பறவைகளின் சப்தம் மலைகளில் மோதி எதிரொலித்தது. அந்தச் சப்தம் அடங்கும் சமயத்தில் ஒரு குழந்தையின் அழுகைச் சப்தம் காற்றில் பரவி ஒலித்தது.

வேட்டைக்கு வந்த அந்தக் கூட்டம் ஆச்சரியத்தில் நிற்க, மல்லிக் மசூத் கைகளை உயர்த்திச் சப்தமிடாமல் இருக்கச் சைகை செய்தார். அவர்கள் முகாமிற்கு அருகில் வந்து கொண்டிருந்தனர். சிறிது நேரம் முகாமைச் சுற்றியிருந்த நெருப்பிலிருந்து வரும் சப்தத்தைத் தவிர வேறு ஒலி ஏதும் கேட்கவில்லை. மறுபடியும் அவர்களுக்கு அந்த அழுகைக்குரல் கேட்டது.

மல்லிக், கூட இருந்த ஒரு பணியாளைப் பார்த்து, "போய் அந்த சப்தம் என்னவென்று பார்த்து விட்டு வா."

அந்த வேலையாள் தன் குதிரையை வேகமாகச் செலுத்திக் குரல் வந்த திசையில் சென்றான். சிறிது நேரத்தில் மெஹ்ருன் னிஸாவைக் கையில் ஏந்தியபடித் திரும்பி வந்தான். "இதோ, இந்தக் குழந்தையைக் கண்டேன், ஸாஹீப்."

மல்லிக் அழும் குழந்தையின் முகத்தை உற்று நோக்கினார். சிறிது யோசனைக்குப் பின் அவருக்கு நிச்சயமாகத் தெரிந்தது.

அந்தக் குழந்தையைச் சுற்றியிருந்த சால்வை, அவர் கியாஸ் பெக்கிற்குப் பரிசாகக் கொடுத்ததுதான்.

அவர் சிறிது யோசித்தார். எப்படி இவ்வளவு அழகான குழந்தையை இழக்கக் கியாஸிற்கு மனம் வந்தது? வேட்டைக்குச் சென்றவர்கள் முகாமுக்குத் திரும்பி வருகையில் அவர் யோசித்தவாறே வந்தார். கியாஸுடன் தனக்கு நிகழ்ந்த முதல் சந்திப்பை நினைத்துப் பார்த்தார். மனிதர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர்களைப் பற்றிச் சரியாக எடை போடக் கூடியவராகையால், கியாஸைப் பற்றி அவர் கணித்ததும் சரியே! அந்த இளைஞனின் கிழிந்த உடைக்கும் அழுக்கடைந்த முகத்திற்கும் மேல், அவன் நன்கு படித்த, புத்திசாலியானவன் இரண்டு குணங்கள் சக்ரவர்த்தி அக்பர் மிகவும் விரும்பி மெச்சுவது– என்று தெரிந்தது. பார்த்தவுடன் பிரியம் ஏற்படுத்தக் கூடியவன் என்று தெளிவாகத் தெரிந்தது. கடந்த ஒரு மாதத்தில், தினமும் இரவில் பல மணிநேரங்கள் ஒன்றாகக் கழித்திருக்கின்றனர். தற்போது குராஸானில் குடியேறியிருக்கும் தன் பெரிய மகன் தன்னுடன் இருப்பது போலவே மசூத் உணர்ந்தார். அவர்கள் முகாமிற்குத் திரும்பியவுடன், மசூத் ஒரு வேலையாளை ஏவிக் கியாஸை அழைத்து வரும்படிப் பணித்தார்.

சில நிமிடங்கள் கழித்து, மல்லிக்கின் கூடாரத்திற்குள் கியாஸ் நுழைந்தான்.

"அன்புள்ள நண்பனே! அமர்ந்துகொள்." கியாஸ் அமர்ந்த வுடன் மசூத் தொடர்ந்தார். "அருகில் யாரோ விட்டு விட்டுப் போன ஒரு குழந்தையைக் கண்டெடுக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. உன்மனைவிக்குச் சமீபத்தில் ஒரு குழந்தை பிறந்ததல்லவா?"

"ஆமாம், மசூத்."

"அப்படியானால் எனக்காக இந்தக் குழந்தையையும் பாலூட்டி வளர்க்க அவளிடம் சொல்ல முடியுமா?" மசூத் மெஹ்ருன்னிஸாவை அவனிடம் காட்டினார். கியாஸ் ஆச்சரியத்துடன் தன் மகளைப் பார்த்து விட்டுப் பின் மசூதை

[illegible] நோக்கினான். அந்த வயது முதிர்ந்த மனிதர் [illegible]ஸைப் பார்த்து முறுவலித்தார்.

"இவள் இப்பொழுது என் மகள் போல்" என்று கூறிய [illegible] மசூத், பூ வேலைப்பாடு செய்த ஒரு அழகான பையைத் [illegible]ந்து, சில தங்கக் காசுகளை எடுத்தார். இந்தத் தங்கக் [illegible]களை அவள் பராமரிப்புக்காக வைத்துக்கொள்"

"ஆனால்..." கியாஸ் தடுமாறியவாறு மெஹ்ருன்னிஸாவை [illegible]துக்கொள்ளக் கையை நீட்டினான். அவன் ஸ்பரிசம் [illegible]டன் அவன் கண்களைத் திருப்பி அவளைப் [illegible]த்தான்.

மசூத் அவன் மறுப்பதை ஒதுக்கி விட்டு, "நான் வற்புறுத்து [illegible]தேன். உன்னிடம் இன்னொரு குழந்தையைக் கொடுத்து, [illegible] பராமரிக்க உதவி செய்யாமல், உன் குடும்பச் சுமையை [illegible] அதிகரிக்க விரும்பவில்லை."

கியாஸ் தலை வணங்கினான். இதோ, அவனால் திரும்பக் [illegible]று செய்யமுடியாதவாறு இன்னொரு உதவி...

மெஹ்ருன்னிஸாவுடன் கியாஸ் நுழையும் போது அஸ்மத் [illegible]ரத்திற்குள் இருந்தாள். தன் குழந்தைதான் என்பதை [illegible]ர்ந்து கொண்டு அவன் கையில் இருந்த மூட்டையை [illegible]ரித்துப் பார்த்தாள், தன்னை அறியாமல் கையை நீட்டிய [illegible]. "அவளை நீ திரும்பக் கொண்டு வந்து விட்டாயா?"

"மசூத் கொண்டு வந்தார்."

அஸ்மத் மெஹ்ருன்னிஸாவை மார்புடன் அணைத்துக் [illegible]ள்ளாள். "அல்லா இந்தக் குழந்தை நம்மிடம் தான் இருக்க [illegible]ண்டும் என்று விரும்புகிறார். நாம் அவரால் ஆசீர்வதிக்கப் [illegible]ட்டவர்கள்." அந்தச் சிரிக்கும் குழந்தையை அன்புடன் [illegible]த்தாள். "ஆனால் எப்படி..."

கியாஸ் மௌனமாகத் தங்கக் காசுகளை வெளியில் [illegible]த்தான். காசுகள் விளக்கின் ஒளியில் பளபளத்தன. "அல்லா [illegible]க் குழந்தையை நாம் வளர்க்க வேண்டும் என்று தான் [illegible]கிறார், அஸ்மத்" கியாஸ் மெதுவாகச் சொன்னான்.

அடுத்த நாள், அந்தக் கூட்டத்துடன் பயணம் செய்து கொண்டிருக்கும் தாய் திலாராம் (Dai Dilaram) என்ற பெண்மணி தன் குழந்தையுடன் கூட இந்தக் குழந்தைக்கும் பாலூட்ட முன் வந்தாள். அவர்கள் கூட்டம் இடையூறு ஏதுமின்றிச் சௌகரிய மாகக் கைபர் கணவாயைக் கடந்து லாகூர் வந்தடைந்தது. பேரரசர் அக்பர் தங்கியிருக்கும் பதேபூர் சிக்ரிக்கு மலிக்மசூத் தன் உடன் வந்தவர்களை அழைத்துச் சென்றார். மெஹ்ருன்னிஸா பிறந்த ஆறுமாதங்கள் கழித்து அந்தப் பயணிகள் 1578ல் பதேபூர் சிக்ரி வந்து சேர்ந்தனர்.

சில வாரங்கள் கழித்துச் சக்ரவர்த்தி அக்பருக்கு மரியாதை செலுத்துவதற்காக அவரது தர்பாருக்கு மலிக் மசூத் செல்லுகையில் தியாஸையும் உடன் அழைத்துச் சென்றார். மற்ற குழந்தைகள் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கத் தன் ஆறுமாதக் குழந்தை மெஹ்ருன்னிஸாவைக் கையில் ஏந்தியபடித் தன் கணவரின் வருகைக்காக அஸ்மத் உள் முற்றத்தில் காத்திருந்தாள். தன் தாயாரின் சாந்தமான முகத்தைப்பார்த்துக் குழந்தை மெஹ்ருன்னிஸா சிரித்துச் சப்தமிட்டபடி அவளைக் கவரமுயன்றாள். தீவிரமான எண்ணத்தில் மூழ்கி இருந்த அஸ்மத் அதைக் கவனிக்கவில்லை. தங்களின் நீண்ட, அலுப்பான பயணத்திற்கு ஒரு முடிவு வருமா... இந்த வெளி நாட்டில் அவர்கள் காலூன்றி வாழ முடியுமா... இந்தியா அவர்களுக்கு ஒரு வீடாக ஆக முடியுமா? என்ற பலதரப்பட்ட சிந்தனைகளில் அவள் மூழ்கியிருந்தாள்.

●●●

அத்தியாயம் ஒன்று

என் தாயாரின் பிரசவ நேரம் நெருங்கியபொழுது, அவர் (அக்பர்) அவளை ஹைக்கின் வீட்டிற்கு அனுப்பினார். ஏனென்றால் நான் அங்கே பிறப்பேன். நான் பிறந்த பிறகு எனக்குச் சுல்தான் ஸலீம் என்ற பெயரைச் சூட்டினார். ஆனால் என் தந்தை என்னை முகாத்ஸலீம் அல்லது கல்தான் ஸலீம் என்று அழைப்பதை நான் கேட்டதில்லை. எப்பொழுதும் ஸைக்கு பாபா என்றுதான்.

- **A. Rogers**, trans, and **H. Beveridge**, ed,
The Tuzuk -i-Jahangiri

நடுப்பகல் சூரிய ஒளி லாகூர் நகரத்தை வெட்ட வெளிச்சமாக ஆக்கிக் கொண்டிருந்தது. சாதாரணமாக இந்த நேரத்தில் தெருக்கள் காலியாக இருக்கும். ஆனால் இன்று பேரரசி பஜார், நிதானமாக நடந்துகொண்டிருக்கும் ஜனக் கூட்டத்தில் நெரிந்து கொண்டிருந்தது. ஒரு குறுகிய தெருவின் நடுவில் உட்கார்ந்து கொண்டு, அன்று காலை உண்ட உணவான புல்லையும் வைக்கோலையும் அசை போட்ட வாறிருந்த அந்தப் பசுவைத் தவிர்த்து, ஜனங்கள் அதைத் தாண்டி நடந்து கொண்டிருந்தனர்.

செங்கற்களால் அமைந்த அந்தத் தெருவின் ஓரத்தில் இருந்த சதுர வடிவமான கடைகளின் முன்புறம் சௌகரிய மாக அமர்ந்து கொண்டு, கடைக்காரர்கள் அங்கு நடமாடிக் கொண்டிருக்கும் ஜனங்களைக் கூவி அழைத்துக் கொண்டி ருந்தனர். வீடுகளின் வெளி வாயிலில் உள்ள மரவேலைப்பாடு செய்த சாளரங்களில் நின்று, தங்கள் முகத்தை மெல்லிய துணியிலான திரையால் மூடியவாறு, சில பெண்கள் குனிந்து கீழே பார்த்துக் கொண்டிருந்தனர். குரங்கு ஒன்றைக் கயிற்றில் கட்டி அழைத்துப் போய்கொண்டிருந்த ஒரு மனிதன் அவர்கள் குரலைக் கேட்டு நிமிர்ந்தான். "அதை ஆடச்சொல்!"

அவன் வணங்கி விட்டுத் தன் இசைப் பெட்டியைக் கீழே வைத்தான். நீலநிறத்தில் இடுப்பளவு ஒரு கோட்டும், தலையில் தொப்பியும் அணிந்திருந்த அந்தக் குரங்கு பாட்டு துவங்கியதும், மேலும் கீழும் குதித்து ஆடத் தொடங்கியது. அது ஆடி முடித்தவுடன், அந்தப் பெண்கள் கைகளைப் பலமாகத் தட்டிய பின், சில வெள்ளி நாணயங்களை அந்த மனிதனிடம் எறிந்தனர். நாணயங்களைப் பொறுக்கிக் கொண்டு, அந்த மனிதனும், குரங்கும் அவர்களை வணங்கி விட்டுத் தங்கள் வழியே சென்றனர். தெருக்கோடியில் சிலர் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டும் மத்தளம் அடித்துக் கொண்டும் இருந்தனர். சிலர் நண்பர்களுடன் தெருவின் சப்தத்திற்கு மேல் இரைந்து, சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தனர். சில்லறை வியாபாரிகள் வெளிர்ப் பச்சை — மஞ்சள் நிறங்களில் எலுமிச்சை சர்பத்துகளைப் பித்தளைக் குவளைகளில் விற்றுக் கொண்டிருந்தனர். பெண்கள் உரத்த குரலில் பேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்தக் கடைத்தெருவின் முக்கிய வீதியின் இருபுறமும் நிரம்பி இருந்த வீடுகளையும், கடைகளுக்கு நடுவில், தூரத்தில், பேரரசின் மாளிகைகளையும், அழகிய தோட்டங்களையும் தன்னுள் மறைத்தவாறு, லாகூர் கோட்டையின் சிவந்த செங் கற்களாலான மதிற்சுவர்கள் வானத்தில் எழும்பி நின்றன.

நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. அக்பரின் பெரிய மகனும், அரியணைக்கு வாரிசுமான இளவரசர் ஸலீமிற்கு இன்னும் மூன்று நாட்களில், 13ஆம் தேதி பிப்ரவரி மாதம் 1585ஆம் ஆண்டில், திருமணம் நடக்கவிருந்தது. மூன்று இளவரசர்களில் ஸலீமிற்கு முதலாவதாகத் திருமணம் நடக்க விருப்பதால், எப்படிப்பட்ட வெய்யிலோ, புழுதியோ, சத்தமோ, லாகூர் குடிமக்களை அந்தக் கடைத் தெருவிலிருந்து அகற்ற முடியாது.

கியாஸ் பெக்கின் இல்வத்தில் உள் முற்றத்தில் நிலவிய அமைதியைத் தூரத்தில் கடைத்தெருவிலிருந்து வரும் ஷெனாய் வாத்தியத்தின் இசை அவ்வப்போது கலைத்தது. மண் தொட்டிகளில் வைத்திருந்த ரோஜா, மல்லிகைச் செடிகளில்

மலர்ந்திருந்த மலர்களின் நறுமணம் காற்றில் பரவி இருந்தது. ஒரு மூலையில இருந்த நீருற்று, பக்கத்தில் இருந்த ஓடான நடைபாதையில், மெல்லிய சப்தத்துடன் தண்ணீர்த் துளிகளைத் தெறித்துக் கொண்டிருந்தது. அந்தப் பெரிய முற்றத்தின் நடுவில், ஒரு பெரிய அரசமரம் முக்கோண வடிவ இலைகள் நிரம்பிய கிளைகளோடு படர்ந்திருந்தது.

அந்த மரத்தின் குளிர்ந்த நிழலில், பாய்களில் தங்கள் கால்களை மடித்து அமர்ந்து கொண்டு, ஐந்து குழந்தைகள் தலை குனிந்து தீவிரமாகத் தங்கள் கைகளிலிருந்த சுண்ணாம்புக் கட்டிகளால், கரும்பலகையில் எழுதிக் கொண்டிருந்தனர். ஆனால், அவ்வப்போது யாராவது ஒருவர் தூரத்திலிருந்து வரும் இசையைக்கேட்கத் தலையைத் தூக்கிப் பார்த்தனர். ஆனால், ஒரே ஒரு குழந்தை மட்டும் அசையாமல் தன் முன்னே இருந்த பாரசீகப் புத்தகத்தைப் பார்த்து எழுதிக் கொண்டிருந்தான்.

தன் பற்களுக்கிடையே நாக்கின் நுனியைக் கடித்தவாறு, மெஹ்ருன்னிஸா, முகத்தில் தீவிரத்துடன் முனைந்து கோடு களையும், வளைவுகளையும் பார்த்து எழுதிக்கொண் டிருந்தாள்.

அவள் அருகில் அவள் சகோதரர்கள் முகமதுவும், அபுலும், சகோதரிகள் ஸலீஹாவும் கதிஜாவும் அமர்ந் திருந்தனர்.

மௌனமான அந்த முற்றத்தில் ஒரு மணியின் சப்தம் ஒலித்தது.

இரண்டு சிறுவர்களும் உடனே குதித்து எழுந்து விட்டனர்னே ஓடினர். உடனே ஸலீஹாவும் கதீஜாவும் தொடர்ந்தனர். மெஹ்ருன்னிஸா மாத்திரம் தன் வேலையே குறியாக இருந்தாள். அவர்களது ஆசிரியரான, மசூதியின் முல்லா, புத்தகத்தை மூடிவிட்டுக் கையைக் கட்டியவாறு அந்தக் குழந்தையைப் பார்த்த வண்ணம் இருந்தார்.

அல்மத் முற்றத்திற்கு வந்து புன்னகைத்தாள். இது நல்ல அறிகுறிதான். நிச்சயமாகச் சில வருடங்களாக, "நான் ஏன் படிக்க வேண்டும்?" என்றோ, "எனக்குப் படிப்பதற்கு

அலுப்பாக இருக்கிறது, அம்மா" என்றோ பல முணுமுணுப்பு களுக்கும் அழுகைகளுக்கும் பிறகு, மெஹ்ருன்னிஸா படிப் பதில் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது. முன்பெல்லாம் மதிய உணவிற்கான மணி அடித்தவுடன் அவள்தான் முதலில் எழுந்திருப்பாள்.

"மெஹ்ருன்னிஸா, மதிய உணவிற்கு நேரமாகி விட்டது மகளே...!" அஸ்மத் கூறினாள்.

தாயாரின் குரலைக் கேட்டவுடன் மெஹ்ருன்னிஸா தலை நிமிர்ந்தாள். ஆகாய நீலநிறமான கண்கள் அஸ்மத்தை நோக்க, முகத்தில் புன்னகையுடன் கன்னத்தில் குழிவிழ, முன்பற்களில், நிரந்திரப் பல் முளைக்க வேண்டி ஒரு இடை வெளியோடு கூடிய சரிசமமான அழகிய வெள்ளைப் பற்கள் ஒளிர, நிமிர்ந்தாள். பாயிலிருந்து எழுந்து, முல்லாவிற்கு வணக்கம் செலுத்தி விட்டு, அவள் பாவாடை சலசலக்கத் தாயிடம் சென்றாள்.

தாயார் அருகில் வந்தவுடன் மெஹ்ருன்னிஸா அவளை ஏறிட்டுப் பார்த்தாள். தாயார் எப்பொழுதும் சுத்தமாக இருப்பவள். வாசனை எண்ணெய் தடவி நன்கு வாரித் தலை மயிரைப் பின்னல் கொண்டையிட்டு இருப்பவள்.

"இன்று உன் பாடங்களைச் சந்தோஷத்துடன் படித்தாயா, மகளே?" மெஹ்ருன்னிஸா அவள் அருகில் வந்து கையைப் பிடித்துக்கொண்ட பொழுது, அஸ்மத் வினவினாள்.

மெஹ்ருன்னியா முகத்தைச் சுளித்தாள், "எனக்கு ஏற்கனவே தெரியாதது எதையும் முல்லா சொல்லித் தரவில்லை. அவருக்கு ஒன்றுமே தெரியவில்லை." அஸ்மத் நெற்றியைச் சுருக்கி பார்ப்பதைக் கண்டவுடன், அவள் அவசரமாகக் கேட்டாள். "நாம் எப்பொழுது அரச மாளிகைக்குப் போகப் போகிறோம், அம்மா?"

"உன் தந்தையும், நானும் அடுத்த வாரம் திருமணவிழாவில் கலந்து கொள்வோம் என்று நினைக்கிறேன். அழைப்பு வந்துள்ளது. உன் தந்தை மற்ற ஆண்களுடன் அரச சபையில் இருப்பார். நான் அரச குடும்பத்தினரின் அந்தப்புரத்தில் இருப்பேன்."

இருவரும் வீட்டிற்குள் சென்றனர். தன் தாயாருடன் நடப்பதற்காக மெஹ்ருன்னிஸா தன் நடை வேகத்தைக் குறைத்துக் கொண்டாள். எட்டு வயதில், அவள் அஸ்மத்தின் தோள் உயரத்திற்கு வந்து, மேலும் வேகமாக வளர்ந்து வருகிறாள். அவருடைய வெறுமையான பாதங்கள், அந்தக் குளிர்ந்த கல் தரையில் வழுக்கிச் செல்வதுபோல், அவர்கள் சப்தமில்லாமல் வராந்தாவைக் கடந்து சென்றனர்.

"இளவரசர் பார்ப்பதற்கு எப்படி இருப்பார், அம்மா?" அவள் குரலில் ஆவலை வெளிப்படுத்தாவண்ணம் மெஹ்ருன்னிஸா கேட்டாள்.

அஸ்மத் சிறிது யோசித்தாள். "அவர் அழகானவர், கம்பீரமானவர்." சிறிது தயங்கிச் சிரித்துக் கொண்டே, மேலும் கூறினாள். "கொஞ்சம் எளிதில் கோபம் வரக்கூடியவர் கூட."

"அவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்குமா?"

அஸ்மத் புருவத்தை உயர்த்தினாள். "திடீரென்று இளவரசர் ஸலீம் பற்றி ஏன் இவ்வளவு அக்கறை?"

"காரணம் ஒன்றுமில்லை." மெஹ்ருன்னிஸா அவசரமாகப் பதிலளித்தாள். "அரசகுடும்பத் திருமணம் நாமும் அரச சபையில் இருப்போம். அவர் யாரைத் திருமணம் செய்து கொள்கிறார்?"

"நீ பாடங்களை படித்து முடித்தால்தான் திருமண விழாவில் கலந்து கொள்ளலாம். உன் படிப்பின் வளர்ச்சியைப் பற்றி முல்லாவிடம் கேட்கப் போகிறேன்." அஸ்மத் தன் பெண்ணைப் பார்த்துப் புன்னகைத்தாள். "ஒருவேளை கதிஜாவும் வருவதற்குப் பிரியப்படலாம்." அவர்கள் இந்தியா வந்து சேர்ந்தபிறகு கதிஜாவும் மனீஜாவும் பிறந்தனர். மனீஜா இன்னும் குழந்தையானதால் வெளியில் அழைத்துப்போக இயலாது.

"ஒருவேளை பிரியப்படலாம்." அவள் பச்சை வளையல் உள் முழங்கை வரை கலகலவென்று சத்தமிட்டவாறு ஏறி இறங்கக் கையை அசைத்து மெஹ்ருன்னிஸா பதிலளித்தாள். "ஆனால், கதிஜாவிற்கு அரச சபையில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற முறை சரியாகத் தெரியாது."

தன் நன்கு வாரி கொண்டையிடப்பட்ட தலையைப் பின்னுக்குச் சாய்த்துச் சிரித்தவாறு அஸ்மத் "உனக்கு எல்லாம் தெரியுமா?" என்று கேட்டாள்.

"நிச்சயமாக." மெஹ்ருன்னிஸா அழுத்தமாகச் சொன்னாள். கதிஜா சிறியவள். இருபது நிமிடம்கூட வகுப்பில் சேர்ந்தாற்போல் உட்கார மாட்டாள். சின்னச் சின்ன விஷயங்கள்— மரத்திலிருக்கும் பறவைகள், பருப்புகளைப் பொறுக்க வரும் அணில்கள், அரச மர இலைகளிடையே வரும் சூரியனின் கதிர்கள், ஆகியவை அவள் கவனத்தைச் சிதற அடிக்கும். இது இப்பொழுது முக்கியமான விஷயம் இல்லை. "இளவரசர் ஸலீம் யாரைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் அம்மா?"

"இளவரசி மான்பாய் (Man Bai), ஆம்பரின் ராஜா பகவன்தாஸ் அவர்களின் புதல்வி."

"இளவரசர்கள் எப்பொழுதும் இளவரசிகளைத்தான் மணந்து கொள்வார்களா?"

"அப்படி அவசியமில்லை. ஆனால், அரச குடும்பத் திருமணங்கள் அரசியல் காரணங்களுக்காகவே முடிவு செய்யப்படுகின்றன. சக்ரவர்த்தி அக்பர், ராஜாவுடன் இனேக பாவத்துடன் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். ராஜா பகவன்தாஸும் இந்த சாம்ராஜ்ஜியத்துடன் ஒரு நல்லுறவு வேண்டும் எனப் பிரியப்படுகிறார். இப்பொழுது அவர் இந்த சாம்ராஜியத்திற்கு ஒரு வலிமை மிக்க தோழர் போல்."

"இளவரசரை மணந்து கொள்வது என்பது எப்படி இருக்கும்?" மெஹ்ருன்னிஸா, கண்கள் கனவுகளில் பளிச்சிட, "ஒரு இளவரசியாக இருக்க..."

"அல்லது, ஒரு சக்ரவர்த்தினியாக, மகளே! இளவரசர் ஸலீம் அடுத்து சிம்மாசனத்திற்கு வரவேண்டிய வாரிசு. உனக்குத் தெரியுமா? அவர் மனைவி அல்லது மனைவிகள், சக்ரவர்த்தினி ஆவார்கள்." தன் மகளின் பரவசமான முகத்தைப் பார்த்து அஸ்மத் சிரித்தாள். "போதும் அரச குடும்பத் திருமண விஷயம்." மெஹ்ருன்னிஸாவின் தலை

முடியைக் கோதியபடிச் சாந்தமான முகத்துடன் அஸ்மத் சிரித்தாள். "இன்னும் சில வருடங்களில் நீ எங்களை விட்டு விட்டு உன் கணவர் வீட்டிற்குச் செல்வாய். அப்பொழுது உன் திருமணம் பற்றி நாம் பேசலாம்."

மெஹ்ருன்னிஸா தன் தாயாரைச் சட்டென்று ஒரு பார்வை பார்த்தாள். ஹிந்துஸ்தானின் சக்ரவர்த்தினி! தந்தை வீட்டிற்கு வந்தவுடன் அன்று அரச சபையில் நடந்த சிறு சிறு சம்பவங்கள் பற்றியும், பேரரசர் அக்பரின் அரசாட்சி பற்றியும், திரைச்சீலைக்குப் பின் அமர்ந்து அந்தப்புரத்துப் பெண்கள் அரசர் அவையில் நடப்பதைக் கவனிப்பது பற்றியும், சிலசமயம் தங்களது இனிமையான குரலில் வேடிக்கை பாகப் பேசி வியாக்கியானம் செய்வது பற்றியும், கதைகள் சொல்லுவதுண்டு. சக்ரவர்த்தி எப்பொழுதும் அவர்கள் கூறுவதைக் கவனிப்பார். தடுப்புச் சீலை பக்கம் திரும்பிப் பார்த்து அவர்கள் சொல்வதைக் கேட்பார். அரசர் அந்தப்புரத்தில் இருப்பதும் அரசசபையில் நடப்பதைக் கவனிப்பதும் எவ்வளவு முக்கியமானது. தானும் ஒரு இளவரசியாக இருக்க வேண்டும் என்று அவளுக்கு எவ்வளவு ஆசை! அப்பொழுது ஒரு இளவரசரை மணந்து கொள்ளலாம். அது இளவரசர் ஸலீம் ஆக்கூட இருக்கலாம். அப்படி என்றால் அஸ்மத்தும் ஷாவும் பெற்றோர்களாக இருக்கமுடியாதே! இதை நினைத்தவுடன் அவள் இதயம் ஒருமுறை துடிக்க மறந்தது. அவள் தன் தாயாரின் கைகளை இறுகப் பிடித்துக் கொள்ள, அவர்கள் சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தனர்.

அவர்கள் அறையை நெருங்கு கையில் அவள் தாயாரின் கையை இழுத்து மறுபடியும் கேட்டாள். "நானும் உன்னுடன் திருமணத்திற்கு வரலாமா, அம்மா? தயவுசெய்து..?"

"உன் தந்தை என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்."

அவர்கள் நுழைந்தவுடன் அபுல் நிமிர்ந்து பார்த்து, தன் கையில் தன் பக்கத்தில் தட்டி, மெஹ்ருன்னிஸாவிடம் சொன்னான். "வா, இங்கே வந்து உட்கார்."

அவனைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டே மெஹ்ருன்னிஸா அமர்ந்தாள். அபுல் அவளுடன் அன்று பிற்பகல்

சிம்மாசனத்திற்கு முன் இரண்டாவது சுற்றில் வியாபாரிகளும் சிறிய பிரபுக்களும். அங்கே தான்— பெரிய பிரபுக்களுக்கும் அதிகாரிகளுக்கும் பின்னால், கியாஸும் மஞ்சும் அமர்ந்திருந்தனர்.

சக்ரவர்த்தியின் வருகை அறிவிக்கப்பட்டவுடன், எல்லோரும் எழுந்திருந்து இடுப்பு வரை குனிந்து வணங்கினர். கியாஸ், ஓரக் கண்ணால், தன் பின்னால், யானைகள் தங்கள் மேலிருந்த பாகர்கள் முன்பக்கம் சாயும்படித் தங்கள் கால்களை மடக்கி மண்டியிட்டு வணங்குவதையும், குதிரைகளும், அதன் மேலிருந்த வீரர்களும் நன்கு தலை குனிந்து வணங்குவதையும் பார்த்தார். அவர் தலை நிமிர்ந்த போது, அலங்கரிக்கப்பட்ட தலைப்பாகைகளின் கூட்டத்திற்கு இடையே, தூரத்தில் அரியணையில் கம்பீரமாக அமர்ந்திருக்கும் அந்த மனிதரை, பேராச்சரியத்துடன் வியந்து பார்த்தார்.

அவையில் நடக்க வேண்டிய வேலைகளைக் கண்காணிக்கும் பொறுப்பிலிருந்த மிர் அர்ஸ் (Mir Arz) அன்று நடக்கவேண்டிய காரியங்களுக்கான பட்டியலைப் படிக்க தொடங்குகையில், எல்லோரும் மௌனமாக நின்றிருந்தனர். கியாஸ் ஒருவித மயக்கநிலையில் அங்கு நடப்பதைப் பார்த்தும் கேட்டுக் கொண்டும் இருந்தார். சந்தனமரத் தூபங்களிலிருந்து வரும் நறுமணம், மஞ்சள் நிற ஜாஸ்பர் கற்கள் பதித்துத் தங்கத்தினாலான தூண்களுடன், சிகப்பு வெல்வெட் குஷன்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த கண்ணைக்கவரும் சக்ரவர்த்தியின் சிங்காதனம், அதற்கு முன்னே இருந்த சாம்பல் நிற சலவைக்கல் தரை, இவை யாவும் அவரைத் திக்குமுக்காடச் செய்தன. முடிவாக மஞ்சு அழைக்கப்பட்டார். கியாஸ் அவர் உடன் சென்றார். இருவரும் இணைந்து வலது கையை நெற்றியில் வைத்து, இடுப்பு வரை குனித்து, 'தஸ்லிம்' என்ற முறைப்படி வணங்கினர்.

"மீண்டும் வருக, மிர்ஜா மஞ்சு". அக்பர் கூறினார்.

"வந்தனம், மாட்சிமை பொருந்தியவரே" நிமிர்ந்தவாறே மஞ்சு பதிலளித்தார்.

"உன் பயணம் நன்றாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன்."

"அல்லாவின் கருணையாலும் உங்கள் தயவாலும்" மஞ்சு கூறினார்.

"இவை எல்லாம் உன் பயணத்தில் நீ எனக்காகக் கொண்டு வந்த பரிசுப் பொருட்களா?" பக்கத்திலிருந்த குதிரைகளையும், தட்டுகளில் குவித்து வைத்திருந்த பட்டுத் துணிகளையும், பலவகைப் பழங்களையும் சுட்டிக்காட்டியவாறு சக்ரவர்த்தி அக்பர் வினவினார்.

"இன்னும் ஒரு பரிசு, மாட்சிமை பொருந்தியவரே!" கியாஸ் பெக்கைப் பார்த்துத் தலையசைத்தவாறு, "கியாஸ் பெக் என்ற இவரை உங்கள் சந்நிதானத்தில் அறிமுகப்படுத்த அனுமதி கோரி வேண்டுகிறேன்."

"முன்னே வா, மிர்ஜா பெக், முன்போல் என் கண்கள் தெளிவாகத் தெரிவதில்லை. முன்னே வாருங்கள். நான் உங்களை நன்கு பார்க்கமுடியும்."

வணங்கியபடி இருந்த கியாஸ்பெக் தலை நிமிர்ந்து இரண்டு அடிகள் முன்னே வந்து, கண்களை உயர்த்திச் சக்ரவர்த்தியை நோக்கினார். மேலுதட்டில் மச்சத்துடன், சிறிது பருத்த உடலும், மிக கம்பீரமான அன்பான முகத்துடன் கூடிய மனிதரைப் பார்த்தார். "நீ எங்கிருந்து வருகிறாய், மிர்ஜா பெக்? உன் தகப்பனார் யார்?"

வார்த்தைகள் தடுமாறியவாறு, கியாஸ் அவரிடம் கூறினார். அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அவர் காதிலேயே எதிரொலித்தது. தொண்டை காய்ந்து போயிற்று, உள்ளங்கைகள் வியர்வையால் குளிர்ந்தன. சொல்லி முடித்த பின் ஆவலுடன் சக்ரவர்த்தியை நோக்கினார். அவரைச் சந்தோஷப்படுத்தினோமா?

"ஒரு நல்ல குடும்பம்." அக்பர் கூறியபடித் தனது வலது புறம் திரும்பிக்கேட்டார். "நீ என்ன நினைக்கிறாய், ஷைக்கு பாபா?"

சக்ரவர்த்தியின் அருகில் அமர்ந்திருந்த குழந்தையை கியாஸ் பார்த்தார். தலைமுடி நன்கு வாரி விடப்பட்டுச் சிறிய பெஷாவர் கோட்டும், தங்க நிறப் பட்டினாலான பைஜாமாவும் அணிந்த ஒரு எட்டு அல்லது ஒன்பது வயதுச் சிறுவன், இளவரசர் ஸலீம், அரசின் அடுத்த வாரிசு. தலைப் பாகையின் மேல் இருந்த சிறகு ஆட, ஸலீம் தலையசைத்தான். தந்தையின் குரலைப் போலவே கம்பீரமாகத் தன்னுடைய குழந்தைக் குரலில் கூறினான். "எமக்கு அவரைப் பிடித்திருக்கிறது, மாட்சிமைப்பொருந்தியவரே."

அக்பர் புன்னகைத்தார். "ஆமாம்... நமக்கும் பிடித்திருக்கிறது. மறுபடியும் எங்களை வந்து சந்தியுங்கள், மிர்ஜா பெக்."

கியாஸ் வணங்கினார். "மாட்சிமை பொருந்திய தாங்கள் மிகவும் அன்பானவர். இது எனக்குப் பெரிய பாக்கியம் ஆகும்."

அக்பர் மீர் அர்ஸைத் திரும்பிப் பார்க்க, அவர் தன் பட்டியலிலிருந்து அடுத்து வரும் நபரின் பெயரைப் படித்தார். மலிக் மஸூத் கியாஸிற்குச் சைகை செய்ய, இருவரும் மறுபடியும் வணங்கிவிட்டுப் பின்புறமாகவே நகர்ந்து தங்கள் இருக்கையை அடைந்தனர். மேற்கொண்டு அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. தர்பார் கலைந்தபின், பேரரசின் வார்த்தைகள் காதில் ஒலிக்க, ஒருவித மயக்கத்திலேயே, கியாஸ் அந்தச் சபையை விட்டு வெளியே வந்தார். அடுத்த நாள் கியாஸ் சபைக்குச் சென்றார். பலமணி நேரம் காத்திருந்தபின், சக்ரவர்த்திக்குச் சிறிது ஓய்வு இடைத்தபொழுது, ஐந்து நிமிடங்கள் பேச முடிந்தது. இவ்வாறு சில நாட்கள் பேரரசரைச் சந்தித்த பிறகு, அக்பர் மிகுந்த கருணையுடன் கியாஸிற்கு முன்னூறு குதிரைகள் பராமரிப்புக்கான மான்யம் "மான்ஸாப்" வழங்கி ராஜசபையில் ஒரு உறுப்பினராகவும் நியமித்தார்.

'மான்ஸாப்' முறை என்பது முகலாய மன்னர்கள் காலத்தில், தனிபட்டோருக்கு மன்னர்கள் நிலங்கள் வழங்கி, அதைப் பராமரிக்கும் பொறுப்பைக் கொடுத்துக் கௌரவிப்பது. இப்படி மான்ஸாப் முறையில் வழங்கப்பட்ட

நிலங்களிலிருந்து வரும் வருமானம் இராணுவத்தின் காலாட் படை, குதிரைப் படை, இவைகளைப் பராமரிக்கச் செலவிடப்படும். கியாஸிற்கு அளித்த 'மான்ஸாப்'பிலிருந்து வரும் வருமானம், அரசின் குதிரைப் படையின் முன்னூறு குதிரைகள் அடங்கிய ஒரு பகுதிக்காகச் செலவிடப்படும். இவை எல்லாம் கியாஸ் புதிதாகத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. முகலாய மன்னர்கள் அரசாங்கத்தில் நடப்பவை, பாரசீக மன்னர்கள் அரசசபையில் நடப்பதை விட மாறுபட்டது.

சில வருடங்கள் செல்ல, கியாஸ் அரசருக்குத் தன்னை ஒரு இன்றியமையாத துணைவராக ஆக்கிக்கொண்டார். சக்ரவர்த்தி வேட்டைக்குச் செல்கையில் உடன் செல்வது, படையெடுப்புக்குப் போகையில் உடன் இருப்பது, பாரசீக அரச சபைகளில் நடக்கும் முறைகள் பற்றி விவரங்கள் கூறுவது எனப் பலவிதங்களில், அவருடன் கூட இருந்தார். அக்பரும் கியாஸின் தோழமையை விரும்பி, அங்கீகரித்து, அவருக்கு ஆக்ராவிலும், பதேபூர் சிக்ரியிலுமாக இரண்டு வீடுகள் கட்டிக் கொள்வதற்கான நிலமும், கட்டிடப் பொருட்களும் வழங்கினார்.

இன்று, அவர்கள் லாகூரில் ஒரு வாடகை வீட்டில் மதிய உணவு அருந்த அமர்ந்து கொண்டிருக்கின்றனர். சில மாதங்களுக்கு முன்னால், சாம்ராஜ்ஜியத்தின் வடமேற்கு எல்லை பகுதியிலிருந்து ஒரு அச்சுறுத்தல் தலை தூக்கியது. சாம்ராஜ்யத்தின் உளவாளிகள் மூலம், உஸ்பெகிஸ்தான் மன்னர் அப்துல்லா கான் இந்தியா மீது முற்றுகையிட ஏற்பாடுகள் செய்வதாக ஒரு செய்தி வந்தது. பதேபூர் சிக்ரி சாம்ராஜ்ஜியத்தின் தலைநகராக இருந்தபோதிலும் அது தென் கிழக்கில் இருந்ததால், அங்கிருப்பது அக்பருக்கு அவ்வளவு திருப்தி தரவில்லை. அவர் உஸ்பெக் அரசரை எதிர்த்துப் போரிடும் இடத்திற்கு அருகில் இருக்க வேண்டும் என்று விரும்பியதால், தானும் லாகூருக்குக் குடியேற உத்தரவிட்டார். அரச சபை உறுப்பினர்கள் உள்பட எல்லோரும் பதேபூர் சிக்ரியைக் காலி செய்து விட்டு லாகூருக்குக் குடியேறினர்.

தாடியுடன் கூடிய முகவாயைத் தடவியபடி, இயாஸ், கடவுள் அவர் குடும்பத்திற்கு மிகவும் கருணை காட்டி யுள்ளதை நினைவு கூர்ந்தார். அவர்கள் இந்தியாவிற்குள் நுழைந்த சமயத்தில் இருந்த ஆதரவற்ற, வறுமையான சூழ்நிலை மாறி, இப்பொழுது செல்வ வளமை எங்கும் தெரிந்தது. வீட்டில் கல் தரைகளில் பருமனான பாரசீக மற்றும் காஷ்மீர் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. மஞ்சள் நிறம் பூசப்பட்ட சுவர்களில் ஓவியங்களும், பித்தளைச் சட்ட மிட்ட சிறு பொருட்களும் மாட்டப்பட்டிருந்தன. தேக்கு, சந்தன மரங்களாலான அழகிய மேஜைகளில், சீனப் பீங்கான் பொம்மைகளும் பாரசீகத்திலிருந்து வந்த வெள்ளி, தங்கத் தினாலான பெட்டிகளும், ஆப்பிரிக்காவிலிருந்து வந்த தந்தத் தினாலான பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. குழந்தை கள் உயர்ந்த ரக மஸ்லின், பட்டுத் துணிகளாலான உடைகள் அணிந்திருந்தனர். ஒரு ஏழைக்குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு உணவுக்கு ஆகும் செலவிற்கு ஈடான மதிப்புள்ள நகைகளை அஸ்மத் அணிந்திருந்தாள்.

தனக்கு வந்த இவ்வளவு வசதிகளையும், அவர்கள் இந்தச் சில வருடங்களில் அடைந்த முன்னேற்றத்தையும் அவரால் இன்னும் நம்பமுடியவில்லை. குழந்தைகள் ஆரோக்கியமாகவும், துடிப்பானவர்களாகவும், செழிப்பாக வளர்ந்து இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் தங்க ளுடையதாகவே எண்ணத் தொடங்கி விட்டனர். அபுல், முகமத்து, ஸலீஹா மூவரும், புதிய மொழியையும், பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வதிலும், பக்கத்தில் உள்ள பிரபுக்கள், சீமான்கள், வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடு வதிலும் தயக்கம் காட்டினர். குழந்தைகளானதால் அவர் களுக்கு பாரசீகத்திலிருந்து வந்த, நீண்ட, பீதி நிறைந்த பயணம் நினைவிலிருந்தது. ஆனால், மெஹ்ருன்னிஸாவிற்கு எல்லாமே புதிதாகவும், அழகாகவும் தெரிந்தன. அவளுக்கு ஆக்ராவில் பேசும் மொழி வெகு சுலபமாக வந்தது. சிந்து கங்கைச் சமவெளியில் வீசும் சூடான உஷ்ணக் காற்று அவளைச் சங்கடபடுத்தவில்லை. ஐந்து வயது வரை மெல்லிய நூல் ஆடை அணிந்து திரிந்து கொண்டிருந்தாள். பண்டிகை

[illegible] போன்ற நாட்களில் நல்ல உடை உடுத்த வேண்டி [illegible] அவளுக்கு அது இடையூறாக இருந்தது. இயாஸிற்கு [illegible] மேலும் பதவி உயர்வு வர, அவர்கள் அவ்வப்போது [illegible] வீட்டிலிருந்து, பெரிய வீடுகளுக்கு மாறிக் கடைசியில் [illegible] உதவியுடன் சொந்தமாகவே வீடு வாங்கியது [illegible], எல்லாவற்றையும் அவள் இயற்கையாகவே எடுத்துக் [illegible]டாள். இந்த விதமான வாழ்க்கையைத்தான் அவள் [illegible]வாள். அவள் சொந்த நாட்டிலிருந்து மற்றொரு புது [illegible] அழைத்து வருவது குறித்து, அஸ்மத் பற்றித்தான் [illegible] மிகவும் கவலைப்பட்டார். அவள் தந்தை அவளை [illegible] ஒப்படைக்கும்பொழுது, இவ்வாறு குடும்பத்தை [illegible] பிரித்து வேறு நாட்டிற்கு அழைத்துச் செல்வார் [illegible] நினைத்துப் பார்த்திருக்கக் கூட மாட்டார்.

இயாஸ் பெருமையுடனும், காதலுடனும் அவளை [illegible]கினார். அவள் வயிறு சிறிது பெருத்திருப்பதிலிருந்து, [illegible] இன்னொரு முறை தாயாகும் ஆரம்பக் கட்டத்தில் [illegible]து தெரிந்தது. கடந்த வருடங்கள் அவள் அழகைக் [illegible]கவில்லை. தலைமுடி சிறிது நரைத்து, முகத்தில் சில [illegible] வந்துள்ளன. அதே அன்பான முகம். அதே [illegible] பூட்டும் கண்கள். அவளும் தைரியமாக இருந்து, [illegible] இருள் அவர்களைச் சூழும் பொழுது, மௌனமாக [illegible] அருகருகே படுத்திருக்கையிலும் பகல் நேரங்களில் [illegible] வீட்டில் வேலை செய்து கொண்டும், படித்துக் [illegible]ண்டும் இருக்கையில், அவள் தன் கால் கொலுசுகள் [illegible]க்கப் பாவாடை சலசலக்க வளைய வருகையிலும், [illegible] மேலும் நம்பிக்கையையும், தைரியத்தையும் [illegible]த்தாள். இஸ்லாம் மதத்தில் நான்கு பெண்களை [illegible] அனுமதி இருந்தாலும், அவர் அஸ்மத்திடம் ஒரு [illegible] அமைதியைக் கண்டார். இன்னொரு பெண்ணை [illegible]த்தும் பார்க்கவோ, மணத்து கொள்ளவேண்டிய [illegible]மா இருந்ததில்லை. அவள்தான் அவருக்கு சகலமும்.

[illegible]என்று ஒரு அசைவு அவரைக் கவர்ந்தது. கண்களில் [illegible] மிளிரத் தன் பாவாடையின் மடிப்புகளைத் தன் [illegible]யில்லாத விரல்களால் சரி செய்தவாறு தன்

இருக்கையின் நுனியில் மெஹ்ருன்னிஸா அமர்ந்திருந்தாள். அவள் ஏதோ சொல்ல விரும்புவதால், அசையாமல் உட்கார்ந்திருக்க இயலவில்லை என்பதை அவர் உணர்ந்தார். அவளைப்பார்த்ததும், மறுபடியும் கடந்த எட்டு ஆண்டுகளை நினைத்துப்பார்த்தார். அவள் மாத்திரம் இல்லை என்றால் அவர்கள் வாழ்க்கையே திசை மாறியிருக்கும். எவ்வளவு குழந்தைகள் பிறந்தாலும், ஒரு பொழுதும் சரி செய்ய முடியாதபடியான ஒரு இடைவெளி ஏற்பட்டிருக்கும். அவர் வீடு திரும்பும் பொழுது, அவள் தனது இசை கலந்த குரலில் "அப்பா" என்று அழைப்பதையும், அவர் மேல் விழுந்து அணைத்துக் கொண்டு, "என்னை முதலில் முத்தமிடுங்கள். எல்லோருக்கும் முதலில், நான் முதலில், நான் முதலில்" என்று கூறுவதையும் கேட்கும் பாக்கியம் இருந்திருக்காது.

கியாஸ் தலை வணங்கினார். 'அல்லாவே, உனக்கு வந்தனம்.'

பிறகு அவர் கையிலிருந்த கோப்பையைக் கீழே வைத்தவாறு, "மாட்சிமை பொருந்திய பேரரசர் இன்று காலை தர்பாரில் நன்கு சுமுகமாக இருந்தார். இளவரசர் ஸலீம் திருமணம் குறித்து அவர் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார்."

"அப்பா—" உணவு அருந்தும் பொழுது கடைபிடிக்க வேண்டிய மௌனம் கலைந்தது குறித்து மகிழ்ந்தவாறு அபுலும், மெஹ்ருன்னிஸாவும் ஒரே சமயத்தில் பேசினர். உணவு உண்ணும்பொழுது பேசக்கூடாது என்பதில் அஸ்மத்தும், கியாஸும் கண்டிப்பாக இருந்தனர். இது ஒரு நல்ல ஒழுக்கத்திற்கு அடையாளம். மேலும் கியாஸ் பேச ஆரம்பித்த பிறகுதான் மற்றவர்கள் கலந்து கொள்வார்கள்.

"என்ன மெஹ்ருன்னிஸா?" அபுலை ஒரு கையால் தடுத்தவாறு கியாஸ் வினவினார்.

"பேரரசர் மாளிகைக்குத் திருமணத்திற்குப் போக நான் விரும்புகிறேன்." மெஹ்ருன்னிஸா கூறினாள். உடனே அவசரமாகத் "தயவு செய்து அப்பா" என்று சேர்த்துக் கொண்டாள்.

கியாஸ் அஸ்மத்தைப் பார்த்துப் புருவத்தை உயர்த்தினார்.

அவள் தலையசைத்தாள். "நீங்கள் பின்னைகளை அழைத்துச் செல்லுங்கள். மெஹ்ருன்னிஸாவும் ஸலீஹாவும் என்னுடன் இருப்பார்கள்."

•••

மெஹ்ருன்னிஸா தன் சகோதரியின் முகத்திரையை இழுத்தாள். "உனக்கு ஏதாவது தெரிகிறதா?"

"இல்லை" குரலில் ஏமாற்றம் தெரிய உரக்க கூறினாள் ஸலீஹா. அதேசமயத்தில், ஒரு பெண்மணி, அந்தப்புரத்தின் சாளரத்தின் முன் உள்ள துவாரங்களுடன் கூடிய சலவைக் கல் ஜன்னல் தட்டியின் அருகே இருந்த இவர்களைத் தள்ளி விட்டு, மற்றப் பெண்களை முன்னே வரச் செய்தாள்.

கால் வலிக்கும் வரை நுனி விரல்களில் நின்று கழுத்தை வளைத்து மெஹ்ருன்னிஸா பார்க்க முயற்சித்தாள். ஆனால் ஒரு பயனும் இல்லை. கீழே திவான்-ஈ-ஆம் என்ற பொது மக்கள் தர்பார் கூடத்தில், நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்து உரக்க ஆச்சரியத்துடன் பேசிக் கொண்டிருக்கும் அக்பரின் அந்தப்புரத்துப் பெண்களின் முதுகுகளைத்தான் இவளால் பார்க்க முடிந்தது.

பொறுமையில்லாமல் கால்களால் தரையில் தட்டிக் கொண்டே அவள் நிமிர்ந்தாள். கடைசியில் திருமண நாளும் வந்தது. ஆனால் அவளால், திருமண நிகழ்ச்சிகளையோ, அல்லது இளவரசர் ஸலீமையோ ஒரு கண நேரம் கூடப் பார்க்க முடியவில்லை. அவள் சகோதரர்கள் கீழே ராஜதர்பாரில் அமர்ந்திருக்க, அவள் முகத்தை மறைத்தவாறு பேரரசர் அந்தப்புரத்துப் பெண்களுடன் இருக்க வேண்டிய நிலை நியாயமானதில்லை. ஆனால், அதைவிட அநியாயம் என்னவென்றால், ஏதோ ஒரு காரணத்திற்காக அவள் தாயார், அவளையும் அவ்வாறு அந்தப்புர சாளரத்தில் இருக்கச் சொன்னது தான்.

மெஹ்ருன்னிஸா மேலும் கீழும் குதித்து, அந்தப்புரப் பெண்களின் தலைக்கு மேலாகப் பார்க்க முயற்சித்தாள். அந்தச் சமயத்தில் தான் அரசர் மாளிகையில் இருப்பது அவளுக்குத் தோன்றவில்லை. அவள் கவனம் எல்லாம் ஸலீமைச் சுற்றியே இருந்தது. கதவுகள் திறந்த உடன், பெண் பாதுகாவலர்கள் இவர்களைச் சந்தேகக் கண்களுடன் பார்த்தவாறு, உள்ளே நுழைய அனுமதித்த பொழுது, ஸலீஹா ஒருவித பயபக்தியுடன் வணங்கினாள். மெஹ்ருன்னிஸா, அவர்களைக் கண்டுகொள்ளவே இல்லை. அவள் கண்கள் பல வண்ணங்களினாலான பட்டாடைகளையோ, கவர்ச்சிமிகுந்த நகைகளையோ, அழகுபடுத்தப்பட்ட முகங்களையோ பார்க்காமல் சுற்றும் முற்றும் தேடின. பின்னல் தட்டியின் அருகே ஒரு நல்ல இடத்திலிருந்து இளவரசரைப் பார்க்க வேண்டுவதே அவள் குறியாக இருந்தது. ஆனால் இப்பொழுது அவர்கள் வயதிலும், உயரத்திலும் சிறியவர்களாக இருப்பதால் பின்னுக்குத் தள்ளப் பட்டு விட்டனர்.

"நான் அவர்களைத் தள்ளி விட்டுவிட்டு, எட்டிப் பார்க்கப் போகிறேன்."

"நீ அப்படிச் செய்யக்கூடாது. இது சக்ரவர்த்தியின் அந்தப்புரம். அவர்கள் எல்லாம் அந்தப்புரத்தில் இருக்கும் மரியாதைக்குரிய பெண்கள்." மெஹ்ருன்னிஸாவின் கையை இறுகப்பற்றியவாறு பயத்துடன் ஸலீஹா முணுமுணுத்தாள்.

"ஆனால், கெட்ட பாங்குள்ளவர்கள்" மெஹ்ருன்னிஸா துடுக்குடன் கூறினாள். "நான்கு முறை நான் பின்னால் தள்ளப்பட்டுவிட்டேன். இளவரசர் ஸலீமை நாம் எப்படிப் பார்ப்பது? அவர்களைத் துளைத்துக்கொண்டு நாம் பார்ப்பதற்கு அவர்கள் தண்ணீரினால் ஆனவர்கள் இல்லை."

அவள் ஸலீஹாவின் பிடியிலிருந்து தன் கைகளை ஆக்ரோஷத்துடன் விலக்கிக்கொண்டு, சாளரத்தின் முன்புறம் ஓடினாள். அவள் ஒரு பெண்மணியின் தோளில் தட்ட, அந்தப் பெண் திரும்புப்போது ஏற்பட்ட இடைவெளியில் புகுந்து முன்னே சென்று, முகத்தை ஜன்னல் தட்டியில் பதிய

வைத்துக்கொண்டு, விரல்களால் சலவைகல் துவாரங்களை இறுக பற்றிக் கொண்டாள்.

கீழே கண் கூசும் சூரிய ஒளியுடன் கூடிய தர்பார் கூடத்தில், கண்களை இடுக்கிப் பார்த்தவாறு, தூரத்தில் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தவரை உற்றுப் பார்த்தாள். தன் மந்திரிகளுடன் தலையை அசைத்துப் பேசுகையில் பளீரென்று ஒளிவீசும் விலை மதிப்பற்ற கற்களால் அலங்கரிக்கப் பட்ட தலைப்பாகை அணிந்து, அரசர்க்குரிய கம்பீரமான பட்டாடைகள் அணிந்து அக்பர் வீற்றிருந்தார். சக்ரவர்த்தியின் கண்கள் அவர் மகனைப் பார்க்கும் போதெல்லாம் மேலும் சந்தோஷத்தில் ஒளிர்ந்தன.

மெஹ்ருன்னிஸா, ஆவலில் தன் மூச்சை அடக்கித் தன் பார்வையை இளரவசர் பக்கம் திருப்பினாள். இங்கிருந்து அவர் முகத்தின் பக்கத் தோற்றம் மட்டுமே அவளால் பார்க்க முடிந்தது. அவர் தோள்களை நிமிர்த்தி, கால்களை அகட்டி நன்கு ஊன்றி வைத்துக்கொண்டு லாவகமாக வலது கையால் தன் இடுப்புப் பட்டியில் இருக்கும் அழகிய வேலைப்பாடுடைய கத்தியைப் பிடித்தவாறு அமர்ந்திருந்தார். இளவரசி மான்பாய், தங்க ஜரிகைகளால் வேலைப்பாடு செய்த சிவப்புநிற மஸ்லின் துணியினால் முகத்தை மூடியவாறு அவருருகே நின்றிருந்தாள். இளவரசி சிறிது நகர்ந்தால், ஸலீமை இன்னும் நன்றகப் பார்க்க முடியுமே என்று, ஜன்னல் திரையில் மேலும் முகத்தைப் பதித்தவாறு, மெஹ்ருன்னிஸா நினைத்தாள். ஒருவேளை அவள் கொஞ்சம் வலது புறம் சாய்ந்தால்... திருமணத்தை நடத்தி வைக்கும் மதகுரு, இளவரசர் ஸலீம்மிடம், இளவரசி மான்பாயை மனைவியாக ஏற்றுக்கொள்ளச் சம்மதமா என்று கேட்டு முடித்து விட்டுப் பின் இளவரசி பக்கம் திரும்பினார்.

சபையில் அமர்ந்திருந்த மற்றவர்களுடன் கூட மெஹ்ருன்னிஸாவும், மௌனத்துடன் மான்பாயின் பதிலுக்காகக் காத்திருந்தாள். திடீரென்று ஒரு பெண் ஆவேசமாக அவள் தோள்களைப் பிடித்து இழுத்தாள். அவள் தோளைத்தட்டிக் கூண்டி வந்த அந்தப் பெண்மணி தன்னைக் கோபத்துடன்

முறைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதை மெஹ்ருன்னிஸா கண்டாள்.

அவள் பதில் சொல்ல வாயைத் திறப்பதற்குள், அந்தப் பெண்மணி, கைநீட்டித் தன் விரல்களில் இருந்த கற்கள் பதித்த மோதிரங்கள் மெஹ்ருன்னிஸாவின் கன்னத்தில் கீறும் அளவிற்கு ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தாள்.

நடுங்கும் கையை முகத்தை நோக்கித் தூக்கியவாறு வெளிறிப்போன முகத்தில் கண்கள் பெரிதாகப் பிரிய மெஹ்ருன்னிஸா அந்தப் பெண்மணியை முறைத்துப் பார்த்தாள். ஒருவர் கூட —இதுவரை அவளை அடித்ததில்லை — அவள் பெற்றோர்கள் உள்பட.

அந்தப் பெண்ணை அவள் முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கையில், அவள் தடுக்க முயற்சிக்கும் முன்பே அவள் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி, கன்னத்தில் வழிந்தது. தன் புறங்கையால் மெஹ்ருன்னிஸா அதைத் துடைத்துவிட்டுக் கொண்டாள். இடுப்பில் கை வைத்தவாறு அந்தப் பெண் மெஹ்ருன்னிஸாவைக் குனிந்து பார்த்தாள். அவளும் இமைகளைக் கொட்டாமல் முறைத்தாள். அவள் அடித்த அடி இன்னும் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்க மெஹ்ருன்னிஸா மறு பேச்சுப் பேசமாலிருக்க, உதட்டைக் கடித்துக்கொண்டாள். திடீரென்று அவள் தனிமையை உணர்ந்தாள். பின்னால் எங்கேயோ ஸலீஹா வெளிறிப்போன முகத்துடன் நிற்பது லேசாகத் தெரிந்தது. ஆனால் அவள் அம்மா எங்கே?

"மன்னிக்கவும்." அஸ்மத் பின்புறத்திலிருந்து வந்து, கோபத்துடன் விழித்துக் கொண்டிருக்கும் அந்தப் பெண்மணியிடமிருந்து மெஹ்ருன்னிஸாவை இழுத்து, அணைத்துக் கொண்டாள். "அவள் ஒரு குழந்தைதானே—"

"அவள் இருக்கட்டும்." ஒரு கம்பீரமான அதிகாரத்துடன் கூடிய குரல் கேட்டது.

அதிகாரத்துடன் பேசியவரை — ருக்கையா சுல்தான் பேகம் (Ruqayya Sultan Begam) அக்பரின் முக்கியத் தலைமை ராணி, அதாவது பாதுஷாபேகம்— தாயும் மகளும் திரும்பிப்

பார்த்தனர். ஏதோ சச்சரவு நடப்பது உணர்ந்து கற்றிலுமிருந்த மற்றப் பெண்கள், கீழே சபையிலிருந்து தங்கள் பார்வையைத் திருப்பி அந்தப்புர மாடத்தில் நடக்கும் வேடிக்கையை நோக்கினர். அந்தப்புரப் பெண்களிடையே ஏற்படும் சச்சரவுகளில் ருக்கையா பேகம் மிகவும் அரிதாகவே தலையிடுவாளாகையால், இந்தச் சிறு பெண் மிகவும் முக்கியமானவளாக இருக்கவேண்டும் என்று எண்ணினர். மெஹ்ருன்னிஸாவிற்கும் பாதுஷாபேகத்திற்கும் இடையில் உள்ளோர் விலகிக் கொள்ள எல்லோர் கண்களும் அக்பரின் முக்கிய மனைவியை நோக்கித் திரும்பின.

அவள் அழகானவளில்லை. பார்க்கப் போனால், மிகவும் சாதாரணத் தோற்றம் உடையவள் தான். தலைமுடி நிறைய நரைக்கத் தொடங்கி இருக்க அதை மறைக்க அவள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. உருண்டையான பருத்த முகத்திலிருந்து இரண்டு கருத்த கண்கள் ஒளிவிட்டன.

அக்பரின் உடல் ரீதியான தேவைகளுக்குத் திருப்தி அளிக்கும் இந்தப் பெண்மணிகளை விட, ருக்கையாவிற்கு அக்பரிடம் அதிக முக்கியத்துவம் இருந்தது. அவளுடைய சிந்திக்கும் திறன், சமயோசிதப்புத்தி, ஆறுதலான தோழமை இவற்றை அக்பர் பெரிதும் மதித்தார். அந்தப்புரத்தில் அவள் இடம் மிகவும் பத்திரமானதாகையால், அரசரை வேறு விதங்களில் கவர ருக்கையா முயற்சிக்கவில்லை. அது வீணான வேலைதான் — தினமும் ஒரு புதிய அழகான இளம் முகம்தான் அந்தப்புரத்தில் கிடைக்கிறதே! அதனால், அரசரின் உடல் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொறுப்பை இளம் பெண்களிடம் விட்டு விட்டு, மீதி எல்லாவற்றிற்கும் தன்னிடம் வருமாறு பார்த்துக்கொண்டாள். இந்தப் பாதுகாப்பான உணர்வுதான் அவளுக்கு ஒரு அமைதியான தோற்றத்தையும் தன்னம்பிக்கையையும், இறுமாப்பையும் கொடுத்தது. அவள்தான் பாதுஷா பேகம்.

ருக்கையா, தன் விலையுயர்ந்த கற்கள் பதித்த நகைகள் அணிந்த கையை நீட்டி, மெஹ்ருன்னிஸாவை அருகே வருமாறு அழைத்தாள். "இங்கே வா", கோபத்துடன் அந்தப் பெண்மணியிடம் திரும்பி "ஒரு குழந்தையை அடிக்கக் கூடாதென்று உனக்குத் தெரியவேண்டாம்?"

அவள் மை தீட்டிய கண்கள் படபடக்க, அந்தப் பெண்மணி ஒரு மூலைக்கு நகர்ந்து சென்றாள்.

திடீரென்று அவள் தொண்டை வரண்டுபோக, மெஹ்ருன்னிஸா மெதுவாக நடந்து பாதுஷாபேகம் அருகில் சென்றாள். இந்தச் சமயத்தில் தான் வேறு எங்காவது இருந்திருக்கக் கூடாதா என்று எண்ணியவாறு தன் கசகசத்த கைகளைப் பாவாடையில் துடைத்துக் கொண்டாள்.

சக்ரவர்த்தினி ஒரு விரலை அவள் முகவாயில் பதித்து, முகத்தை நிமிர்த்தியபோது, தாழம்பூவின் நறுமணம் மெஹ்ருன்னிஸாவின் நாசியில் பரவியது. "உனக்குத் திருமண விழாவைப் பார்க்க ஆவலாக இருக்கிறதா?" ருக்கையாவின் குரல் ஆச்சரியமாக மிருதுவாக ஒலித்தது.

"ஆமாம், மாட்சிமை பொருந்திய அரசியே!" தன் பற்களில் இடையே உள்ள இடைவெளி தெரியாவண்ணம், தலைகுனிந்தவாறு, சிறிய குரலில், மெஹ்ருன்னிஸா பதிலளித்தாள்.

"இளவரசர் ஸலீமை உனக்குப் பிடிக்குமா?"

"ஆமாம், மாட்சிமை பொருந்திய அரசி!" மெஹ்ருன்னிஸா சிறிது தயங்கிவிட்டுத் தன் பற்களினிடையே உள்ள இடைவெளியை மறந்தவளாகத் தலையைத் தூக்கிப் புன்னகைத்தாள். "அவர்... அவர் என் சகோதரர்களைவிட மிகவும் அழகாக இருக்கிறார்." சிரிப்புச் சப்தம் கீழே சபையில் கேட்கும்படிச் சுற்றிலுமிருந்த பெண்கள் உரத்துச் சிரிக்கத் தொடங்கினர்.

ருக்கையா அதிகாரத்துடன் ஒரு கையை உயர்த்தினாள். "இந்தக் குழந்தை ஸலீம் மிகவும் அழகானவன் என்று நினைக்கிறாள்." அவள் மற்றப் பெண்களை பார்த்தவாறு தொடர்ந்தாள். "அவன் வசீகரமானவன் என்று எப்பொழுது உணர்ந்து கொள்வாள் என்று யோசிக்கிறேன்." சிரிப்பு அலைகள் மீண்டும் எழுந்தன.

மெஹ்ருன்னிஸா, யோசித்தவாறு சுற்றிலும் பார்த்தாள்.

திருமண விழா அந்தச் சமயத்தில் முடிந்திருக்க, மதகுரு, தன் புத்தகத்தில், அந்தத் திருமணத்தைப் பதிவு செய்து

கொண்டிருந்தார். பெண்கள் தங்கள் கவனத்தை கீழே நிலவான—ச—ஆம் நோக்கித் திருப்ப, மெஹ்ருன்னிஸா தன் தாயின் கைகளில் புகுந்தாள். ஸலீஹாவைத் தொடரும்படிச் சைகை காட்டியவாறு அஸ்மத் தன் பெண்ணை அழைத்துக் கொண்டு வெளியே செல்லும் கதவை நோக்கிச் சென்றாள்.

அவர்கள் வெளியேறும் சமயத்தில் அவர்களைப் பார்க்காமலேயே ருக்கையா கூறினாள். "இந்தக்குழந்தை என்னைச் சந்தோஷப் படுத்துகிறாள். சீக்கிரத்தில் அவளை என்னுடன் இருக்க அழைத்து வா."

மெஹ்ருன்னிஸாவும் அஸ்மத்தும் நன்கு குனிந்து பேரரசியை வணங்கிவிட்டு வெளியேறினர்.

நிருமணக் கொண்டாட்டங்கள் ஒரு வாரத்திற்குத் தொடர்ந்து நடந்தன. ஆனால், ருக்கையாவின் சந்திப்பினால் பயந்திருந்த மெஹ்ருன்னிஸா அந்தக் கேளிக்கைகளில் கலந்து கொள்ள மறுத்துவிட்டாள். அவளை அடித்த பெண்மணி அவள் கோபத்தைத்தான் தூண்டினாள். ஆனால், சக்ரவர்த்தினியோ தன் தீர்க்கமான பார்வையாலும், அதிகாரச் செய்கைகளாலும், மெஹ்ருன்னிஸாவை அச்சுறுத்தினாள். அஸ்மத் பேகமும், கியாஸ் பெக்கும், அக்பருக்கும் அவரது ராணிகளுக்கும் மரியாதை செலுத்தவும், கேளிக்கைகளில் கலந்துகொள்ளவும் நினமும் சென்று வந்தனர்.

சில நினங்களுக்குப் பிறகு, ருக்கையாவிடமிருந்து மெஹ்ருன்னிஸாவைப் பேரரசின் அந்தப்புரத்திற்கு வரச் சொல்லிப் பணித்து, அரசாங்கக் கட்டளை ஒன்று வந்தது.

அத்தியாயம் இரண்டு



பெரிய இராணிக்கு மெஹர்உன்நிஸாவிடம் அளவற்ற பிரியம் உண்டாயிற்று. மற்றவர்கள் யாவரையும் விட அவளை மிகவும் நேசித்தாள். அவளைத் தன்னுடனேயே எப்பொழுதும் வைத்துக் கொண்டாள்.

B. Narain, trans; and **S. Sharma**, ed.,
A Dutch Chronicle of Mughal India.

தொங்கும் மீசையுடன் கூடிய ஒரு உயரமான அலி மெஹ்ருன்னிஸாவையும் அஸ்மத்தையும் பேரரசி ருக்கையாவின் மாளிகை வாயிலில் சந்தித்தான்.

"குழந்தை மட்டுமே," அவன் கூறினான். உடனே அஸ்மத்தின் கண்களில் தோன்றிய பயத்தைப் பார்த்துச் சிறிது மனம் இரங்கி, மேலும் கூறினான், "அவள் வீட்டிற்குப் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்படுவாள். ஆனால், குழந்தை மாத்திரம்தான் உள்ளே வரவேண்டும்."

அஸ்மத் தலையசைத்தான். தர்க்கம் செய்வதில் எப்படியும் பலனிருக்கப் போவதில்லை. அவள் குனிந்து மெல்லிய குரலில் முணுமுணுத்தான். "சமர்த்தாக இரு, குழந்தாய் நல்லவிதமாக இருப்பாய். கவலைப்படாதே." உடனே அவள் சென்றுவிட்டாள். அவளை அங்கேயே இருக்கும்படி வேண்டிக்கொள்ள நினைத்தபடியே மெஹ்ருன்னிஸா அவள் தாயார் திரும்பிப் போவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். இந்தக் கோமாளி போன்ற மனிதனுடன் தன்னை விட்டுவிட்டு அவள் எப்படிப் போகலாம்?

அவள் திரும்பியபொழுது, அந்த அலி அவளையே உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

"நீதான் அவளுக்குப் பிடித்த குழந்தையா." உறுமியபடிக் கூறினான். பின் சிறிது நகர்ந்து, ஒரு இருண்ட பக்கத்து அறைக்குள் அவள் நுழைய அனுமதித்தான். தூரத்தில் ஒரு திறந்த வெளிமுற்றத்தில் சூரிய ஒளி பரவியிருந்தது. மெஹ்ருன்னிஸா, மேலும் செல்வதைக் கையை நீட்டி அவன் தடுத்தான். "திரும்பு".

அழகிய பூ வேலை செய்யப்பட்டிருந்த அவள் பாவாடை சுழலும்போது, அதன் கனத்தை உணர்த்தவாறு மெஹ்ருன்னிஸா மெதுவாகத் திரும்பினாள். அவள் இரவிக்கை தொளதொளவென்றிருந்தது. பின்னல் இறுகக் கட்டியிருந்த போதிலும் அவள் தோள்களிலிருந்து தொங்கியது. வீட்டில் அவள் மெல்லிய பருத்தித் துணியிலான பாவாடையோ, ஸல்வாரோ தான் அணிந்திருப்பாள். பேரரசிக்காக, இது பகல் நேரமாக இருந்த போதிலும், ஏதும் பண்டிகை நாளாக இல்லாத போதிலும், அவளுடைய உயர்தரமான ஆடையை அஸ்மத் அவளுக்கு அணிவித்திருந்தாள். அந்த அலி அவள் கூழத்தின் பின்புறம் விரல்களை வைத்து அவள் முகத்தைத் தன் பக்கம் திரும்பினான்.

மெஹ்ருன்னிஸாவின் பின்னலை அவள் முன்புறம் போட்டு அவள் அதன் நீளத்தை அளந்தான், அவள் கன்னங்களைத் தொட்டுப் பார்த்தான். பிறகு, அவள் தோலைக் கிள்ளினான். அவள் பற்களிடையே உற்றுப் பார்த்தான். அவன் தலை அவள் முகத்திற்கு மிக அருகில் இருப்பதைப் பார்த்து முகம் சிவந்து, அவள் சிறிது பின் நகர்ந்தாள். அவள் என்ன விற்பனைக்கு வந்த ஒரு குதிரையா?

தன் வெற்றிலைக் கரைபடிந்த பற்களைக் காட்டியவாறு அந்த அலி சிரித்தான். "இவ்வளவு இளைப்பாக... இவ்வளவு ஒல்லியாக" அவன் விலாவில் குத்தினான். "எலும்புகள் இங்கே துருத்திக் கொண்டிருப்பதைப் பார். என்ன உன் பெற்றோர்கள் உனக்குச் சரியாக உணவு கொடுக்க மாட்டார்களா? அந்தப் பெண்மணி உன் தாயாரா? அவள் அழகாக இருக்கிறாள். ஆனால் நீ— உன் பற்களிடையே கூட இடைவெளி இருக்கிறது. உன்னிடம் அவள் (அரசி) என்ன

கண்டாள் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. சீக்கிரம் உன்னிடம் அவள் அலுத்துப் போய் விடுவாள்... வா", என்று கூறியவாறு அவன் விரல் நகங்கள் அவள் சதையில் பதியும் வண்ணம் அழுத்தி அவள் கையைப் பிடித்து இழுத்தான். "நான் இப்பொழுது சொன்னதை யாரிடமும் திருப்பிச் சொல்லக்கூடாது. ஞாபகம் வைத்துக்கொள். இதுவே இங்கு உனக்கு முதல் பாடமாகவும் இருக்கலாம். அந்தப்புரத்தில் காதில் விழுவதைப் பற்றி திரும்பப் பேசக்கூடாது."

சிரித்துக்கொண்டே மெஹ்ருன்னிஸாவை இழுத்துச் சென்றவாறு, ஒரு இடைவழி வழியாக, அவளை ஒரு குளியல் அறைக்கு அழைத்துச் சென்றான். அவர்கள் போகும் வழியில், அடிமைப் பெண்கள் அவனை வணங்கினர். இதயம் பட படக்க மெஹ்ருன்னிஸா இதைக் கவனித்தாள். அவனிட மிருந்து விலக அவள் முயற்சிக்கவில்லை. அம்மா இங்கு இல்லை. இந்த அதிசயமான, பசை போன்ற முகமும், தொங்கு மீசையும் உள்ள மனிதனுடன் அவள் தனியாக இருக்கிறாள். யார் இவன்? இந்தப் பெண்களின் அந்தப்புரத் தில் இவனுக்கு எப்படி இவ்வளவு அதிகாரம் இருக்கிறது?

மெஹ்ருன்னிஸா குளியல் அறையில் நுழைந்த பொழுது சக்ரவர்த்தினி குளிப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தான். இதற்குள் அவளுக்கு நெற்றியில் வியர்வை படர்ந்திருந்தது. இந்த மனிதனே இவ்வளவு அதிசயமானவனாக இருந்தால்... பேரரசி எப்படியிருப்பாள்? அன்றைக்கு அரசி மிகவும் பயங் கரமானவளாகத்தான் தெரிந்தாள். அலி மெஹ்ருன்னிஸாவின் கையை விட்டுவிட்டு, நன்கு குனிந்து ருக்கையாவை வணங்கினான்.

"மாட்சிமை பொருந்திய அரசி! குழந்தை இங்கு வந்தி ருக்கிறாள்..." ருக்கையாவின் பதிலுக்குக் காத்திராமல் அவன் உடனே பின்புறமாகவே நகர்ந்து, அந்த அறையை விட்டு வெளியேறினான்.

மெஹ்ருன்னிஸா தனியாக இருந்தாள். மேலே சாளரத்தி லிருந்து, பின்னல் போன்ற வடிவங்களைத் தரையில் தெரித்த வாறு வரும் சூரிய ஒளியில் கண்களைச் சிமிட்டியபடி

அவள் அசையாமல் நின்றிருந்தாள். தங்க வளையல்களின் சப்தம் அவளை அந்த அறையின் ஒரு மூலைக்குத் திரும்ப வைத்தது. பேரரசி ஒரு முக்காலியில் அமர்ந்திருக்கக் கருத்த மென்மையான உடலுடன் கூடிய அடிமைப் பெண்கள் அவள் நகைகளைக் கழட்டிக்கொண்டிருந்தனர். அந்த நகை கள் வைக்கப்பட்ட ஒரு வெள்ளித் தட்டை ஏந்தியபடி ஒரு அலி அருகில் நின்றிருந்தான். அந்த அறையின் நடுவில் எட்டுப் பக்கங்களைக்கொண்ட ஒரு குளம் வடிவமைக்கப் பட்டிருந்தது. குளத்தின் நடுவில், அதன் நீளத்திற்கு ஒரு இருக்கையிருந்தது.

"இங்கே வா, குழந்தாய்."

அரசியின் குரலைக் கேட்டவுடன், தங்க ஜரிகைகளினால் வேலைப்பாடு செய்த மயில் கழுத்து நீல நிறப்பட்டு அங்கியை அணிந்து அமர்ந்திருக்கும் ருக்கையா இருந்த அந்த மூலையை நோக்கி மெஹ்ருன்னிஸா நகர்ந்தாள். அலியின் விரல் நகங்கள் குத்திய இடம் இன்னும் வலித்தபோதிலும் அவளாவது கூட இருக்கவேண்டித் திடீரென்று அவள் விரும்பினாள். மேலிருந்து வரும் சிறு சூரிய ஒளியுடன் கூடிய அந்த அரையிருட்டு அறையில், அடிமைப் பெண் களும் அலிகளும் அவளை ஆவலுடன் நோக்குகையில், அவள் தனியாக இருக்க விரும்பவில்லை.

"அல்—ஸலாம்—ஆலேகும், மாட்சிமை பொருந்தியவரே!"

"மெஹ்ருன்னிஸா," ஒரு தூணில் சாய்ந்து நின்றவாறு ருக்கையா கூறினான். "ஒரு அழகிய பெயர், உட்கார்."

மெஹ்ருன்னிஸா அவள் அருகில் வந்து அமர்ந்தாள். ருக்கையா கையை நீட்டி அவள் கருத்த, அடர்ந்த கூந்தலைத் தொட்டான்.

"அழகான கண்கள். நீ பாரசீகத்தைச் சேர்ந்தவளா?"

"ஆமாம், மாண்பு மிக்கவரே."

ருக்கையாவின் உருண்டை முகத்தில் புன்னகை தோன்றியது. "உன் தகப்பனார் யார்?"

"மிர்ஸா கியாஸ் பெக், மாட்சிமை பொருந்தியவரே!"

"உன் தாத்தா யார்?"

இவ்வாறு அவர்கள் ஐந்து நிமிடங்கள் பேசினார்கள். பெரும்பாலும் அரசி கேள்விகள் கேட்டாள். மெஹ்ருன்னிஸா வைப் பற்றி, அஸ்மத், கியாஸ், அவள் சகோதரர்கள் பற்றி, அவர்கள் என்ன செய்கிறார்கள், எந்த முல்லா (ஆசிரியர்) விடம் பாடம் பயில்கிறார்கள்; சமீபத்தில் அவள் என்ன படித்தாள் என்பது போல்.. இந்தப் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு பேரரசி அவ்வளவு பயங்கரமானவராகத் தெரிய வில்லை. அடிமைப்பெண்கள் அவள் உடைகளைக் களைந்து விட்டு மல்லிகை எண்ணெய்யைத் தடவி அவள் உடலை உருவிவிடத் தொடங்கியவுடன், அவள் குரல் தூக்க மயக்கத்திலிருப்பது போல் மெல்லியதாகக் குறைந்தது. அடிமைப் பெண்களின் எண்ணெய்யில் பளபளக்கும் பழுப்பு நிற விரல்கள் ருக்கையாவின் பெரிய உடலில் மேலும் கீழும் நகர்வதை மெஹ்ருன்னிஸா பார்த்த வண்ணம் இருந்தாள். ஒரு அடிமைப் பெண் அவள் தோள் சதைகளைப் பிடித்து விட அரசியின் தலை பெருமூச்சுடன் முன்னே விழுந்தது. அடிமைப் பெண்களின் தேர்ந்தக் கைகள் அவள் மார்பகங்களிலும், வயிற்றைச் சுற்றியும், துடைகளிலும், வேகமாக நகர்ந்தன.

பிறகு, அரசி எழுந்து, குளத்தில் மெதுவாக இறங்கினாள். அவள் தலைமுடி, கொண்டையிலிருந்து விடுபட்டு அவளைச் சுற்றிலும் படர்ந்தது. அடிமைப் பெண்கள், பைஜாமா, சோலி அணிந்தவாறே சக்ரவர்த்தினியுடன் நீரில் இறங்கு வதை மெஹ்ருன்னிஸா பார்த்தாள். அரசி நீரில் படுத்திருக்க அவர்கள் அவளுக்கு நன்கு சோப்புத் தடவிக் குளிப்பாட்டி விட்டனர். உள்ளங்கைகளில் சோப்பு நுரை எடுத்து அவள் தலைமுடியைத் தேய்த்து அலசி விட்டனர்.

நடுவில் அரசி எழுந்து உட்கார்ந்து கொண்டு, ஒரு அடிமையைப் பார்த்து, "நீ இன்று குளித்தாயா?" என்று காரமாக வினவினான்.

அந்த இளம் பெண் பயத்தில் திக்கியவாறு கூறினாள். "ஆமாம், மாட்சிமை பொருந்தியவரே!"

"எங்கே பார்க்கலாம்." ருக்கையா அதிகாரத்துடன் பணித்தாள். அந்தப் பெண்ணின் கைகள், தலைமுடி, அக்குள் இவற்றை முகர்ந்து பார்த்தாள். திரும்பி கோபத்தொனியுடன் கூறினாள். "வெளியே போ. நீ முதலில் குளிக்காமல் ஒரு பொழுதும் என் குளியல் குளத்திற்குள் வராதே!"

அந்தப் பெண் அவசர அவசரமாகக் குளத்திலிருந்து வெளியேறி, நீர் தரையில் சொட்ட சொட்ட, ஈரமாகக் காலடிகள் பதித்தவாறு, அந்த அறையிலிருந்து ஓடினாள்.

ருக்கையாவின் குரலிலிருந்த கோபத்தைப் பார்த்து மெஹ்ருன்னிஸா நடுங்கினாள். அவள் முதுகில் மயிர் கூச்செ றிந்தது. அரசி தன்னை பார்க்க முடியாதபடி அந்த அறை யின் நிழலில் பதுங்கிக் கொண்டாள். தனக்குப் பிடிக்காத உடைகளை அலிகளின் மேல் திருப்பி எறிந்து பல உடை களைப் பார்த்தபின் முடிவாகத் தனக்குப் பிடித்த உடையைத் தேர்ந்தெடுத்து ருக்கையா அணிந்து முடிக்கும் வரை, சுமார் இரண்டு மணி நேரம் போல, அந்த முழையிலேயே மெஹ் ருன்னிஸா மௌனமாக உட்கார்ந்திருந்தாள். சக்ரவர்த்தினி அறையை விட்டுச் செல்லுகையில், மெஹ்ருன்னிஸா பக்கம் திரும்பி "இப்பொழுது வீட்டிற்குப் போ. நாளைக்கு மறுபடியும் வா" என்று கூறிச் சென்றாள்.

அவ்வளவுதான்!

அடுத்த சில மாதங்கள், ருக்கையா கூப்பிட்டனுப்பும் பொழுதெல்லாம் மெஹ்ருன்னிஸா அங்கு சென்று, அவள் பேச விரும்பும் பொழுதெல்லாம் அவளுடன் பேசிக் கொண்டும், அவள் பேச விரும்பாவிடில் அவளருகே மௌனமாகவும் அமர்ந்தும் இருந்தாள். ருக்கையாவின் கோபக் கூச்சல்கள் வெறும் பாசாங்குதான் என்று அவள் புரிந்து கொண்டாள். ஒரு முறை ருக்கையா அவளிடம் ஒரு அடிமைப் பெண் துடுக்கான பார்வையுடையவள் என்று கூறினாள். ஆனால், அது அப்படியில்லை. அந்த அடிமைப் பெண் சக்ரவர்த்தினியை அப்படித் துடுக்கான பார்வையால் பார்க்கக் கூடிய தைரியமும் அனுபவமும் இல்லாதவள். சில சமயங்களில் ருக்கையாவிற்கு உண்மையாகவே கோபம்

வந்தாலும், பல சமயங்களில் தனக்கு அதிகாரம் இருக்கிறது என்பதற்காகவே அவள் குரலை உயர்த்திப் பேசினாள். பாதுஷாபேகம் என்ற பட்டம் சாதாரணமாகக் கொடுக்கப் படுவதும் இல்லை, மற்றவர்கள் அதை சாதாரணமானதாக எடுத்துக் கொள்ளவும் மாட்டார்கள். அந்தப்புரச் சுவர்களுக் குள் நடக்கும் எல்லா விஷயங்களும், மற்றும் வெளியில் நடக்கும் பெரும்பாலான விஷயங்களும், ஒற்றர்கள் மூலம் அரசியின் காதிற்கு எட்டிவிடும். அரசியின் கவனத்திற்கு வரக்கூடாதபடி எந்த விஷயமும் மிகப் பெரியதோ அல்லது மிகச் சிறியதோ அல்ல. உடல் நலமின்மை, கருவுற்ற பெண் கள், மாதவிடாய் தவறியவர்கள் என்பது போலும், அரச சபையில் நடக்கும் விவாதங்கள், மற்றும் மனைவிகளுக்கும், வைப்பாட்டிகள், அடிமைப்பெண்களுக்கும் இடையே ஏற்படும் சின்னச் சின்னச் சச்சரவுகள் என எல்லா விஷயங் களும் அவள் மாளிகையைத் தேடி வந்துவிடும்.

அக்பரின் பேரன்புக்குரிய மனைவியுடன் ஏற்படும் இந்தச் சந்திப்புகளை மெஹ்ருன்னிஸா எதிர்நோக்க ஆரம்பித் தாள். சில சமயம் அமைதியான பேச்சு, சில சமயம் கோபக் கூச்சல்கள் என அடிக்கடி மாறும் ருக்கையாவின் இந்த மனநிலை அவளைப் பிரமிக்க வைத்தது. அவள் இவ்வளவு முக்கியமானவளா என்ற எண்ணம் மெஹ்ருன்னிஸாவைக் நிகைக்க வைத்தது. அதே சமயம் அவள் தன்னிடம் காட்டும் ஈடுபாடு, மிக்க மகிழ்ச்சியை அவளுக்குக் கொடுத்தது.

ஆனால், அவள் பார்க்க விரும்பியது ஸலீமைதான். ஒருநாள் அரசியுடன் பொழுதை கழித்து விட்டுத் திரும்பிச் செல்லும்போது, தவறாகப் பக்கத்திலுள்ள மாளிகையின் தோட்டத்திற்குள் நுழைந்து விட்டாள். பல வராந்தாக்களைக் கடந்து, மேலும் மேலும் அந்த மாளிகையின் உள்ளே, தான் போய் கொண்டிருப்பதை அறிந்த பின்னர் தான், வழி தவறி விட்டதை உணர்ந்து கொண்டாள். மநிய வேளையாகையால் மாளிகை நிச்சப்தமாக இருந்தது. எல்லா இடத்திலும் நடமாடிக் கொண்டிருக்கும் வேலைக்காரர்கள், அடிமைப் பெண்கள், அலிகள் எல்லோரும், வெய்யில் குறைவதற்காக

வேண்டி, மாளிகையின் இருண்ட பகுதியில் காத்திருந்தனர். மெஹ்ருன்னிஸா சுற்றிலும் பார்த்துவிட்டுத் தான் வந்த வழியே திரும்பிச் செல்லயத்தனித்தான். அவள் கடந்து வந்த பூங்காக்கள் நன்றாக பராமரிக்கப்பட்டிருந்தன. அந்தக் கோடைக்காலத்திலும் புல்வெளிகள் பசுமையாகவும், போகன் வில்லா கொடிகள் சிவந்த பூக்களை சுமந்தவாறு தொங்கியும் காணப்பட்டன. மேலே நீண்ட சதுர வடிவத்தில் நீல நிற ஆகாயம் தெரியப் பளிங்குக் கற்கள் பதித்த ஒரு உள்ளடங்கிய முற்றத்திற்கு அவள் வந்தாள். அந்த முற்றத்தின் நான்கு புறங்களிலும் தூண்களுடன் கூடிய வராந்தாக்கள் இருந்தன. அந்தச் சலவைக் கற்களாலான தூண்கள் முற்றத்தின் கடுமை யான சூட்டிலும், வெண்மை நிறத்துடன் குளிர்ச்சியுடன், பளபளத்தன. ஒரு பெரியதூணைத் தன் கைகளால் முற்றிலும் அணைத்துப் பிடிக்க முடியாதவாறு அணைத்தபடி, மெஹ்ருன்னிஸா வியர்வை படிந்த தன் நெற்றியை அந்த குளிர்ந்த தூணில் பதித்தாள். ஒருவேளை இன்னும் ஒரு மணி நேரத்தில் யாராவது அவளைப் பார்த்து, வெளியே செல்ல வழி காண்பிக்கலாம். மேலும் அலைந்து வழி தேடுவதற்கு அவளுக்குக் களைப்பாக இருந்தது.

அவ்வாறு அவள் நின்றிருக்கையில், கையில் ஒரு வெள்ளிப் பெட்டியைச் சுமந்தவாறு ஒருவன் அந்த முற்றத் திற்குள் வந்தான். அவன் சாதாரண வெள்ளை உடை அணிந்திருந்தான். ஒரு குர்தாவும், பைஜாமாவும், காலில் தோல் செருப்புடனும். மெஹ்ருன்னிஸா தூணிலிருந்து விலகி அவனைக் கூப்பிட எத்தனித்தாள். சட்டென்று தன்னை அடக்கிக் கொண்டாள். அது இளவரசர் ஸலீம்! அவள் தூணின் பின் மறைந்து நின்று கொண்டு எட்டிப் பார்த்தாள். பாதுகாப்பாளர்கள் இல்லாமல் ஏன் அவர் தனியாக இருக்கிறார்?

ஸலீம் அந்த முற்றத்தின் எதிர்கோடிக்குச் சென்று, திராட்சைப் பழம் போன்ற மஞ்சள், நிறப்பழங்களைச் சுமந்த அடர்ந்த இலைகளுடன் கூடிய ஒரு வேப்பமரத்தின் அடியில் இருந்த ஒரு கல் இருக்கையில் அமர்ந்தான். தன் நாக்கினால்

அவன் ஒரு சப்தத்தை எழுப்பினான். அங்கிருந்த கூரை வினிம்புகளிலிருந்த கூடுகளிலிருந்து நூற்றுக் கணக்கான மாடப்புறாக்கள் சிறகுகளை அடித்துக்கொண்டு பறந்து இளவரசன் அருகில் வருவதைக் கண்ட ஆச்சரியத்தில் மெஹ்ருன்னிஸா தடுமாறி விழ இருந்தாள். பல வண்ண மயமான இறகுகள் இடையே உள்ள தொண்டையிலிருந்து ஒரு வித சப்தம் எழுப்பியபடி அந்தப் புறாக்கள் அவன் காலடியில் வட்டமிட்டன. ஸலீம் பெட்டியைத் திறந்து கையை உள்ளே விட்டு ஒரு பிடிக் கோதுமைத் தானியங்களை எடுத்துக் காற்றில் வீசி எறிந்தான். பொன்னிறச் சூரிய ஒளியில் பளபளத்தவாறு அந்தத் தானியங்கள் சலவைக்கல் தரையில் விழுந்தன. அந்தப் பறவைகள், தலையை மேலும் கீழும் அசைத்தவாறு தானியங்களைக் கொத்த தொடங்கின. சில புறாக்கள் எதிர்பார்ப்புடன் இளவரசனை நோக்கின.

அவன் சிரித்தான். அந்த ஒலி அமைதி நிரம்பிய அந்த முற்றத்தில் மெல்லியதாக எதிரொலித்தது. "நீங்கள் மிகவும் கெட்டுப்போய் விட்டீர்கள். இன்னும் வேண்டுமென்றால் இங்கே வந்து எடுத்துக் கொள்ளுங்கள்."

அவன் அடுத்த கைப்பிடித் தானியத்தை உள்ளங்கையில வைத்து நீட்டினான். தயங்கியபடி அந்தப் புறாக்கள் அவனருகே சுற்றிச் சுற்றி வருவதைத் தூணுக்குபின் மறைந்து நின்றவாறு மெஹ்ருன்னிஸா பார்த்துக் கொண்டிருந்தாள். துணிச்சலுடன் ஒரு புறா பறந்து வந்து ஸலீமின் தோளில் அமர்ந்தது. அவன் அசையாமல் உட்கார்ந்திருந்தான். சீக்கிரமே மற்ற புறாக்களும் அவனைச் சூழ்ந்து கொள்ளச் சாம்பல் நிறமும், கருமை நிறமும் கொண்ட புறாக்கள் அவனை முற்றிலும் மறைத்தன.

"நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" ஒரு கை மெஹ்ருன்னிஸாவின் தோளைப் பிடித்துத் தூக்கித் திருப்பியது. அவள் எழுந்திருந்து பாவாடையிலிருந்த தூசியைத் தட்டியவாறு நிமிர்ந்து அந்த அலி முறைப்பதைப் பார்த்தாள்.

"நான் வழி தவறி வந்துவிட்டேன்."

"முட்டாள் பெண்ணே." அவளை முற்றத்திலிருந்து தள்ளிச் சென்றவாறு அவன் மெல்லிய குரலில் கூறினான். "நீ அரண்மனையின் ஆண்கள் பகுதியில் இருக்கிறாய். ஆண்கள் பகுதிக்கு வரக் கூடாதென்று உனக்குத் தெரியாதா? இளவரசர் ஸலீம் உன்னைப் பார்ப்பதற்கு முன் உடனே போய்விடு. அவர் புறாக்களுக்கு உணவு கொடுக்கும்பொழுது அருகில் எவரும் இருப்பது அவருக்குப் பிடிக்காது."

"அப்படியானால் நீ இங்கே என்ன செய்கிறாய்?"

அந்த அலி புருவத்தை உயர்த்தினான். நான் உண்டு ஹோஷியார்கான்."

மெஹ்ருன்னிஸாவும் பதிலுக்குப் புருவங்களை உயர்த்தியவாறு கூறினாள். "நான் மெஹ்ருன்னிஸா, ஆனால் நீ யார்?"

அவன் நாக்கினால் சப்தமிட்டபடி. "நான்... அது இப்பொழுது முக்கியமில்லை. நீ உடனே திரும்பிப் போய் விடு, பெண்ணே!"

மெஹ்ருன்னிஸா வெளியேறும் முன், கடைசி முறையாக ஒருதரம் ஸலீமைத் திரும்பிப்பார்த்தாள். அவன் இருக்கையில் அமர்ந்தபடி மெல்லியகுரலில் இசைத்தவாறு புறாக்களுடன் கொஞ்சிக் கொண்டிருந்தான். ஒரு புறா அவன் தலையில் வந்து அமர, அவன் தலையைச் சாய்க்காமல் அதைப் பார்க்க முயன்றான்.

"வா, வா" அந்த அலி பொறுமையில்லாமல் கூறினான். "ஆண்கள் மாளிகையில் பெண்கள் வர அனுமதியில்லை. அது உனக்குத் தெரியும். சக்ரவர்த்திக்குத் தெரியவந்தால் உன் தலையைச் சீவி விடுவார்."

"அவர் அப்படிச் செய்யமாட்டார்." மெஹ்ருன்னிஸா கூறினாள். "நான் வழி தவறி வந்து விட்டேன். வேண்டும் என்றே நான் இங்கு வரவில்லை."

"அப்பப்பா" பெருமூச்சு விட்டவாறு ஹோஷியார்கான் அவளைத் தன் முன் வைத்துத் தள்ளிக்கொண்டு போகமுயல, அவள் பாவாடை தடுக்கிக் கீழே விழ இருந்தாள். "அப்பப்பா,

என்ன வாதாடுகிறான்? இளவரசர் ஸலீமை அவள் திருட்டுத் தனமாகப் பார்ப்பதை நான் கவனித்தேன். ஆனால், அவள் வழிதவறி வந்துவிட்டேன் என்கிறாள்." ஹோஷியார் முனு முனுத்துக் கொண்டான்.

அவளை மாளிகைக்கு வெளியே அழைத்து வந்து வாயிற்கதவுகளைக் காண்பித்து, "போ... நான் உன்னை மறுபடியும் இங்கு பார்க்கக் கூடாது. இல்லையேல்... உன் தலையைச் சீவி விடுவேன்."

மெஹ்ருன்னிஸா அவனைப் பார்த்து நாக்கை நீட்டி அழகு காண்பித்தவாறு வெளிக்கதவுகளை நோக்கி ஓடினாள். தோள் பக்கம் சற்று திரும்பிப் பின்புறம் பார்த்தாள். ஹோஷியார் தொடர்ந்து வரவில்லை. அங்கேயே நின்றிருந்தான். அவள் திரும்பி முன்னே செல்லத் தொடங்க, அவன் தன் நாக்கை நீட்டி அவளுக்கு அழகு காண்பித்தான்.

•••

"சக்கரவர்த்தினியைப் பார்க்கப் போகிறாயா?"

மெஹ்ருன்னிஸா வேகமாகத் திரும்ப அவளது கொண்டை ஊசிகள் சிறிய சப்தத்துடன் தரையில் விழுந்தன. சில ஊசிகள் அந்த பாஷியன் தரை விரிப்பின் அழகிய வடிவங்களிடையே கலந்து மறைந்தன.

"பார், நீ என்ன செய்திருக்கிறாய்?" அவள் எரிந்து விழுந்தவாறு. குனிந்து கொண்டை ஊசிகளைத் திரட்டத் தொடங்கினாள். ஆனால், செருப்புப் போடாமல் யாராவது பிற்பாடு அங்கு வந்தால் அவர்கள் காலில் குத்துவதற்காகவே போல் சில ஊசிகள் தொலைந்து போயின. அவள் நிமிர்ந்து கண்ணாடியில் பார்த்தாள்.

இரு கைகளையும் மார்பில் கட்டியபடி அபுல் அறை வாசலில் நின்றிருந்தான். அவனுக்கு இப்பொழுது பதினைந்து வயதாகி விட்டது. அவளைப் பரிகாசம் செய்யும் வயதைத் தாண்டியாகிவிட்டது. ஆனால், அன்று மத்தியானம் அவனுக்கு வேறு வேலை இல்லையாதலால் இவன் தான் அவனுக்குத்

தூரி என்று அவளுக்குத் தெரியும். ஸலீஹா அவனைச் சட்டை செய்வதில்லை. கதிஜாவும் மனீஜாவும் அவன் அருகில் வந்தாலே அழுத்தொடங்கி விடுவார்கள். அவன் அவர்கள் தலைமுடியைப் பிடித்து இழுத்தோ அல்லது அவர்களது பாவாடையால் அவர்கள் முகத்தை மறைத்துப் பார்க்க முடியாமல் செய்தோ, கலாட்டா செய்வான். தாயோ தந்தையோ கோபிக்க வருவதற்குள் வேகமாகப்போய்விடு வான். அவனது ஆண் நண்பர்கள் வேட்டைக்குச் செல் லவோ அல்லது தந்தைக்குத் தெரியாமல் சாராயக் கடைக்கு அழைத்துச் செல்லவோ இன்று வரவில்லையாதலால், இவளைத் தேடி வந்திருக்கிறான். ஒரு பெண் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தாயார் சொன்ன புத்திமதிகளை எல்லாம் மறந்து கண்ணாடியில் தெரியும் தன் சகோதரனின் நிழலைப் பார்த்துச் சிடுசிடுப்புடன் முறைத்தாள்.

அபுல் மௌனமாகத் தலையை ஆட்டினான். "உன் முகம் அப்படியே உறைந்து விடும். பிறகு யாரும் உன்னை மணந்து கொள்ளமாட்டார்கள். நீ இன்னும் என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை."

"நான் சொல்லப்போவதில்லை அபுல்" முகத்தைச் சரி யாகச் செய்து கொண்டு மெஹ்ருன்னிஸா கூறினாள். அபுல் சொன்னதுபோல் ஆக அல்லா விடமாட்டார். "இது உனக்கு சம்பந்தமில்லாத விஷயம். நீ இங்கிருந்து போ. எனக்குத் தலை வாரிக்கொள்ள வேண்டும்."

"என்னுடன் வா, நிலா. தோட்டத்தில் மரக்கோல் எடுத்துப் போலோ விளையாடலாம்— குதிரைகள் இல்லாமல் தான்."

அவள் தலையாட்டி மறுத்தாள். "என்னால் முடியாது. நான் அரண்மனைக்குப் போகப் போகிறேன். என்னைத் தொந்தரவு செய்யாதே, அபுல். இல்லாவிடில் நேற்று இரவு நீ பாது விடுதிக்குச் சென்று வந்ததைத் தந்தையிடம் சொல்லிவிடுவேன்."

"மூன்று இரவுகளுக்கு முன் நீ என்னுடன் வந்தது பற்றி நானும் அப்பாவிடம் கூறுவேன். ஆண் மாதிரி உடை

அணிந்து கொண்டு, மையினால் மீசை தீட்டிக்கொண்டு, சிறிது சாராயம் சாப்பிட்டவுடன் எப்படிப் போதை ஏறியது உனக்கு. நான் உன்னைச் சீக்கிரமாகவே வீட்டிற்குத் தூக்கிக் கொண்டு வரவேண்டியதாயிற்று. குழந்தைகள் கூட வெட்கப் படும்படிச் சிறிது சாராயம் கூட அருந்த முடியாத அந்த வெளிர் முகத்தை உடைய இளைஞன் எங்கே என்று என் சினேகிதர்கள் இன்னும் கேட்கிறார்கள்."

மெஹ்ருன்னிஸா அபுலிடம் ஓடி அவனை அறையின் உள்ளே இழுத்தாள். வெளியே எட்டிப் பார்த்தாள். ஒருவரும் நடமாடவில்லை. தான் பிடித்திருந்த அவன் கையைக் கிள்ளிக் கொண்டே "உனக்கு என்ன பைத்தியமா? நான் உன்னுடன் சாராயக்கடைக்கு வந்தது பற்றி ஒருவருக்கும் தெரியவே கூடாது. நீ என்னைக் கட்டாயப்படுத்தினாய் அபுல்."

அபுல் இளித்தான். "உன்னை அதிகம் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. உனக்கு வரவிருப்பம்... நல்லவேளை...! கதிஜா திடீரென்று விழித்துக்கொண்டு பக்கத்தில் நீ இல்லாததை அறியவில்லை. அப்பா கண்டு கொண்டு விட்டாரென்றால் உன்னை நன்கு அடித்தி ருப்பார்."

மெஹ்ருன்னிஸா நடுங்கினாள். என்ன முட்டாள்தனம் அது. ஆசையாகவும் இருந்தது. ஆனால் முட்டாள் தனமானது. "நீ யாரிடமும் சொல்லவே கூடாது. எனக்குச் சத்தியம் செய்... சத்தியம் செய்." அவன் கையை மேலும் கிள்ளினாள்.

அபுல் கையை இழுத்துத் தடவிக் கொடுத்தவாறு, "சரி சரி, சொல்ல மாட்டேன். நீ என்னுடன் இன்று இரவு வா... அதே மாதிரி உடை அணிந்து கொண்டு, போன தடவை மாதிரிச் சுவர் ஏறி குதித்துப் போகலாம்."

மெஹ்ருன்னிஸா தலையை ஆட்டி மறுத்தவாறு கண்ணாடி அருகே சென்றாள். "ஒரு தரமே போதும். அது எப்படி இருக்கும் என்று பார்க்க விரும்பினேன். நீ எதற்கு அந்த இடத்திற்குப் போகிறாய்? எல்லா ஆண்களும் போதை

ஏறி மெத்தைகளில் விழுந்து கிடப்பதும், மிகக் குறைவாக ஆடை அணிந்து பணிப்பெண்கள், அவர்கள் மேல் புரள் வதும்..." அவள் நடுங்கினாள். "சகிக்கவில்லை. மறுபடியும் அங்கு போகாதே, அபுல்! அது சரியில்லை."

அபுல் ஒரு விரலில் அவள் தலைமுடியைச் சுற்றி இழுத்தான். "இது உனக்கு வேண்டாத வேலை. நீ போக வேண்டாம் என்று விரும்பினாய். நான் அழைத்துப் போனேன். இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குச் சொல்லாதே. நீ உன் புத்திமதி சொல்லும் வாயை அடக்கி வைத்துக் கொள்ளும் வரைதான் நான் உனக்குக் கொடுத்த சத்தியமும் இருக்கும். புரிகிறதா?"

மெஹ்ருன்னிஸா கோபத்துடன் அவனை முறைத்துப் பார்த்து விட்டுச் சீப்பை எடுக்கக் கையை நீட்டினாள். அவள் கையைத் தட்டிவிட, மைத்தான் வைத்திருந்த சிமிழ் சாய்ந்து பளபளக்கும் கருப்புத் துகள்கள் வெள்ளித் தட்டில் கொட்டிச்சிதறின.

"நிச்சயம் ஏதோ பதற்றத்தில் நீ இன்றைக்கு இருக் கிறாய்." அபுல் விஷமத்தனமாகச் சிரித்தான். "அதற்கும் அரண்மனையில் நடக்கவிருக்கும் திருமணத்திற்கும் ஏதாவது தொடர்பு உண்டா?"

"எந்தத் திருமணம்?" மெஹ்ருன்னிஸா முகத்தைத் தாக்கியவாறு கேட்டான். "ஓ...! இளவரசர் ஸலீமின் திருமணம்.

அபுல் அவள் அருகில் அமர்ந்தான்.

"ஆமாம், அந்தத் திருமணம்தான். இளவரசர் இரண்டாம் திருமணம் செய்து கொள்கிறார். ஜோத்பூர் இளவரசி, ராஜா உதய் சிங்கின் மகள். அவருக்குக் குண்டு ராஜா என்ற பெயரும் உண்டு. நான் அவரைப் பார்த்திருக்கிறேன். பொருத்தமான பெயர்தான்." அபுல் துல்லியமாக வடிவமைக் கப்பட்ட ஒரு அழகிய கண்ணாடி குடுவையை எடுத்துத் திறக்க அதிலிருந்து சுகந்தமான நறுமணம் அறை முழுவதும் பரவியது. "இளவரசி ஜகத்கோஸினியும் பருமனாக இருப்பாளோ என்று யோசிக்கிறேன்."

மெஹ்ருன்னிஸா அவன் கையை மெதுவாகத் தட்டி விட்டாள். "நீ அந்தக் குப்பியை உடைக்கப் போகிறாய்." அவள் தன் நீண்ட அடர்த்த முடியை அழுத்தமாக வாரினாள். சிடுக்குகள் அகல, அவள் நீண்ட முடி பட்டு போல் பளபளப்புடன் அவள் தோள்களில் புரள, அதை மூன்று பாகமாகப் பிரித்துப் பின்ன ஆரம்பித்தாள்.

அபுல் புருவத்தை உயர்த்தினான். "நீ ஏன் படபடப்பாக இருக்கிறாய், என் அருமை சகோதரி?"

"நான் அப்படி ஒன்றும் இல்லை. அவருக்குப் பிடித்த யாரை வேண்டுமானாலும் மணக்க இளவரசருக்கு உரிமை உண்டு."

"உண்மைதான்." அபுல் தலையசைத்தான். அவர் தனக் கென்று தனி அந்தப்புரம் அமைத்துக் கொள்ளத் துவங்கி விட்டார். இரண்டு வருடத்திற்குள் இரண்டு திருமணங்கள். அவருக்கு வயது பதினேழுதான். அவருக்கு முதல் மனைவி மூலம் ஒரு பெண் குழந்தை இருக்கிறது. இந்த வேகத்தில் போனால், சீக்கிரமே சாம்ராஜ்ஜியத்திற்கு ஆண் வாரிசு களைப் பெற்று விடுவார்."

"அதற்கு என்ன?" மெஹ்ருன்னிஸாவின் கைகள் வேகமாக முடியைப் பின்னச் சிறிது பின்னியதும் தோளுக்கு முன்னே எடுத்துப் போட்டுக் கொண்டு மேலும் பின்ன ஆரம்பித்தான். "அது என்னை ஏன் சங்கடப்படுத்த வேண்டும்?"

அபுல் தலையைப் பின்புறம் சாய்த்துச் சிரித்தான். "நீ சக்ரவர்த்தினியைப் பார்க்கப் போவதே இளவரசரைப் பார்க்கமுடியும் என்பதற்குதான் என்று எல்லோருக்குமே தெரியும். நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? அடுத்த தாக நீ அவரை மணந்து கொள்ளலாம் என்றா? இளவரசர் உன்னை ஒரு பொழுதும் திருமணம் செய்து கொள்ள மாட்டார்."

மெஹ்ருன்னிஸாவின் முகமும் கழுத்தும் வெட்கத்தால் சிவந்தன.

"ஏன் கூடாது?" சவால் விடும் கண்களுடன் அவள் திரும்பி அவனைப் பார்த்தாள். "அது... நான் சொல்வது என்னவென்றால்... நான் அவரை மணக்க விரும்பினால் எது என்னைத் தடுக்கமுடியும்?"

அபுல் பலமாகச் சிரிக்க... உட்கார்ந்திருந்த பலகையி லிருந்து விழ இருந்தான்.. அவன் கையை உயர்த்திக் காரணம் கேள் என்ன ஆரம்பித்தான். "முதலில் நீ மிகச் சிறியவள். நீ ஒரு குழந்தை, மெஹ்ருன்னிஸா. ஒன்பது வயதுக்காரர்கள் அரசகுமாரரை மணக்க இயலாது. இரண்டாவது, அவர்கள் அரசியலுக்குச் சாதகமான திருமணங்களே செய்து கொள் வார்கள்... அரசகுமாரிகளைத்தான் மணந்து கொள்வார்கள். அவர் ஏன் உன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்?"

"இப்பொழுது நான் சிறியவளாக இருக்கலாம், ஆனால் நான் வளர்ந்துவிடுவேன். எல்லா அரச குடும்பத் திருமணங் களும் அரசியல் தொடர்பானது அல்ல என்று அம்மா கூறி இருக்கிறார்கள்."

"ஆனால், இளவரசர் ஸலீமின் திருமணங்கள் அப்படித் தான் இருக்கும், குறைந்த பட்சம் அவர் இளவரசனாக இருக்கும் வரையிலாவது. சக்ரவர்த்தியின் அந்தப்புரத்தில் இருக்கும் பெண்கள் அனைவருமே அரசாங்க ரீதியில் அவருடன் தொடர்புடைய மன்னர்களைச் சேர்ந்தவர்களே! அப்படித்தான் அக்பர் இந்தச் சாம்ராஜ்ஜியத்தை இணைந்து நடத்திக்க வைத்திருக்கிறார். உனக்கு ஒருபொழுதும் வாய்ப் பில்லை." அபுல் பல்லைக் காட்டியபடி சிரித்தான். "மேலும், நீ வளர்வதற்குள் இளவரசர் ஒரு ஒழுக்கம் இல்லாதவராக ஆகி விடுவார். அவரைப் பற்றிக் கடைசியாக வந்த செய்தியை கேட்டிருக்கிறாயா?"

"என்ன அது?" தன் சகோதரனுடன் இளவரசர் ஸலீ மைப் பற்றிப் பேசத் தயக்கமாக இருந்தாலும், ஆவல் மிகுதியில் மெஹ்ருன்னிஸா கேட்டாள்.

"அவர் மது அருந்த ஆரம்பித்திருக்கிறார்." அபுல் தன் குரலைத் தாழ்த்திக்கொண்டு இரகசியமாக, "அவர் ஒரு

நாளைக்கு இருபது கோப்பை மது அருந்துகிறார் என்று சொல்கிறார்கள்."

"அவ்வளவா!" கண்கள் பெரியதாக விரிய மெஹ்ருன்னிஸா தினறினாள். லலீம் மது அருந்துவது பற்றி ஏற்கெனவே அவளுக்குத் தெரியும். ஏனெனில், ருக்கையா அதுபற்றி இடைவிடாமல் குறை சொல்லிக் கொண்டிருக்கிறாள். இளவரசர் மிதமாகக் குடிப்பவர்தான். ஆனால் சில மாதங்களுக்குமுன் ஆப்கானிஸ்தான் கலகக்காரர்களை அடக்குவதற்காக, அட்டாக் என்ற இடத்தில் முகாமிட்டிருந்த பொழுது மிர்ஜா முகமது ஹகீம், மது அருந்துவது அவர்களைப்பைப் போக்க உதவும் என்று எடுத்துக் கூறினார். ருக்கையாவின் அபிப்பிராயத்தில் அவர் இப்பொழுது மதுவிற்கு அடிமை ஆகிவிட்டார். ருக்கையா கவலையுடன் இருக்கும் பொழுது கூறும் விஷயங்களை முற்றிலும் நம்ப முடியாது. ஆனால் இப்பொழுது அபுலும் அவ்வாறே கூறுகிறான்

மெஹ்ருன்னிஸா சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். அவள் விரல்கள் வெள்ளி நகைப்பெட்டியின் மேலிருந்த கோடுகளைத் தடவிக் கொண்டிருந்தன.

"அதனால் எனக்கு என்ன வந்தது?" அவள் முடிவில் கூறினாள்.

"என் அருமை நிஸா" மறுபடியும் அபுலின் குரல் பரிகாசத்துடன் ஒலித்தது. "இளவரசர் உன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமானால் இன்னும் சில வருடங்கள் காத்திருக்க வேண்டும். யாருக்குத் தெரியும் — இன்னும் சில வருடங்களில் குடித்துக் குடித்தே அவர் இறந்து போகலாம். பிறகு நீ சக்ரவர்த்தினி ஆக வேண்டுமானால் முராத் (Murad) அல்லது தனியால் (Daniyal)ஐ நீ மணந்து கொள்ளவேண்டும். சக்ரவர்த்திக்கு இன்னும் இரண்டு மகன்கள் — உனக்குக் கிடைக்கக் கூடியவர்களாக இருப்பதும் நல்லதுதான்."

மெஹ்ருன்னிஸா முகவாயை உயர்த்தி அவனைக் கூர்ந்து பார்த்தாள். "என்னுடைய வாழ்க்கையைப் பற்றி நாம் பேசிக்

கொண்டிருக்கவில்லை." பெருந்தன்மையுடன் பதிலளித்தாள். "இப்பொழுது இங்கிருந்து போ. நான் தயாராக வேண்டும். சக்ரவர்த்தினி என்னை வரும்படி ஆணையிட்டிருக்கிறாள்."

"அப்படியே ஆகட்டும், மாட்சிமை பொருந்தியவரே" அபுல் குனிந்து அவளை வணங்கிச் சிரித்துக் கொண்டே அரச சபையில் செய்வது போல் பின்புறமாகவே நகர்ந்து அந்த அறையை விட்டு வெளியேறினான். மெஹ்ருன்னிஸா ஒரு தந்தத்தினாலான சீப்பை எடுத்து அவனை நோக்கி வீசினாள். அது குறி தவறிக் கதவின் மேல் மோதித் தரையில் விழுந்தது. அபுல் இளித்தவாறு, அவளைப் பார்த்து மூக்கின் மேல் கட்டை விரலை வைத்து மற்ற விரல்களை ஆட்டினான். அவள் மற்றொரு உலோகச் சிமிழை அவன் மேல் வீசுவதற்காக எடுக்க எத்தனிக்கையில் அவன் ஓடி மறைந்து விட்டான்.

நிவிரமாகச் சிந்தித்தவாறு மெஹ்ருன்னிஸா கண்ணாடியை நோக்கித் திரும்பினாள். இளவரசரை அவள் திருமணம் செய்து கொள்ளலாம் என்பது ஏன் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத விஷயமாக இருக்கவேண்டும்? அவள் தந்தையே அரச சபையில் ஒரு மரியாதைக்குரிய பிரபு. சக்ரவர்த்தி அவர் அறிவுரைகளை மதிக்கிறார். மேலும் முகலாய அரச குடும்பத்தினர் தங்களுக்குப் பிடித்தமானவர்களைத் திருமணம் செய்து கொள்வதும் உண்டு.

கண்ணாடியில் சரியாகப் பார்க்காமலே அவள் அவசரமாக உடைகளை மாற்றிக்கொண்டாள். அவரைக் காக்க வைப்பது சக்கரவர்த்தினிக்குப் பிடிக்காத விஷயம். புதிதாக வரப்போகும் இளவரசி, அவள் தகப்பனார், அவள் கொண்டு வரும் சீதனம், மேலும் லலீம் அவளைப்பற்றி என்ன நினைக்கிறான், அல்லது என்ன நினைக்கவில்லை என்பது பற்றி எல்லாம் அந்தப்புரத்தில் வம்புப் பேச்சு நடந்து கொண்டிருக்கும். சின்னச் சின்ன விஷயங்களை எல்லாம் கூட எடுத்து, அலசிப் பெரிது படுத்திப் பேசி மகிழ்வார்கள். பெண்கள் பகுதியில் இந்தப் புதிய இளவரசிக்கு வரவேற்பு எப்படியிருக்கும் என்று மெஹ்ருன்னிஸா யோசித்தாள்.

முதல் மனைவி ஒரு எலி மாதிரி— அவ்வப்போது சிறிது சலசலப்புச் செய்து கொண்டு மற்றபடிப் பேரரசரின் அந்தப்புரத்துப் பெண்களுடன் மிகுந்த சச்சரவு இல்லாமல் இருந்து வருகிறாள். ஆனால், இவளோ மிகவும் தைரியமானவள் என்று பேசிக் கொள்கிறார்கள். அவள் ருக்கையாவிடம் எப்படி நடந்து கொள்கிறாள் என்று பார்ப்பது மிகவும் ருசிகரமானதாக இருக்கும். மேலும், ஒருவேளை ஏன் ஒருவேளை — எப்பொழுது மெஹ்ருன்னிஸா ஸலீமிற்கு மனைவியாக ஆகிறானோ அப்பொழுது இந்த இளவரசியை நன்கு கவனித்துக் கொள்ளவேண்டும்.

மெஹ்ருன்னிஸாவிற்கு எவ்வாறு இந்தக் கனவுகள் உண்மையாகும் என்று தெரியவில்லை. ஆனால் எப்படியும் உண்மையாகத்தான் வேண்டும். வேறு எந்தக் காரணத்திற்காக இல்லாவிடினும், அபுல் அவளைப் பரிகாசம் செய்ததிற்காக வாவது...

அவள் தன் முகத்திரையை எடுத்துத் தலையைச் சுற்றி அணிந்து கொண்டு, தனக்கு முன்பு செவிலித்தாயாக இருந்த தாய் (Dai) என்ற பெண்மணியை உடன் அழைத்துக்கொண்டு வெளியே சென்றாள். சில மாதங்களுக்கு முன்பு பிறந்திருந்த அவள் தம்பி ஷாபூர் (Shahpur) உடன் அவள் தாய் வேலையில் இருந்தாள். வெளிமுற்றத்தில் அவளை அரண்மனைக்கு அழைத்துச் செல்லக் காத்திருந்த பல்லக்கில் ஏறி அமர்ந்து, ருக்கையாவிற்கு அவளது புதிய மருமகளின் வருகை குறித்துப் பாராட்டுத் தெரிவிக்க மெஹ்ருன்னிஸா விரைந்தாள்.

அதே வருடம் ஸலீம், க்வாஜா ஹாசன் (Khwaja Hasan) என்பவரின் புதல்வி ஸாஹிப் ஜமால் (Sahib Jamal) என்பவளை மணந்தார். அதற்கு அடுத்த வருடம், லாகூரில், ஸலீமின் முதல் மனைவி மான்பாய் குஸ்ரு (Khusrau) எனப் பெயரிடப்பட்ட ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். அரியணைக்கு ஒரு வாரிசு பிறந்ததில் சக்ரவர்த்தி பெரும் மகிழ்ச்சி அடைந்தார். பலவிதமான வேடிக்கை விளையாட்டுகள், கொண்டாட்டங்கள், விழாக்களுமாக அத்தக் குழந்தை [illegible] விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

1588ஆம் வருடம் சரத்ருது காலத்தில் பேரரசரின் அரச சபை லாகூரிலிருந்து காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகருக்கு முதன் முறையாக நகர்ந்தது. காஷ்மீர் பலகாலம் முகலாயர்களின் ஆக்ரமிப்பை எதிர்த்து வந்த போதிலும், அதற்கு முன் வருடம்தான் அந்த சாம்ராஜ்ஜியத்தின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. அரச குடும்பத்தினர் அனைவருக்கும் ஸ்ரீநகர், மிகுந்த உற்சாகத்தைக்கொடுத்தது. இமயமலைத் தொடரிலுள்ள ஒரு பள்ளத்தாக்கில் அந்த நகரம் அமைந்திருந்தது. அங்கு வீசும் காற்று, மிகச் சுத்தமானதாகவும், கடவுளின் பானமான அமிர்தம் போல் மயக்கத்தை உண்டு பண்ணுவதாகவும் இருந்தது. தாழ்ந்த மலைக்குன்றுகள், இலையுதிர் காலத்தின் அடர்ந்த சிவப்பு மற்றும் பழுப்பு நிறங்களால் மூடப்பட்ட போது, அங்கிருந்த பொன்னிறமான முதிர்ந்த கோதுமை வயல்களுக்கிடையே காட்சியளித்தது. வெள்ளி போல் பளபளக்கும் நீருடன் ஜீலம் நதி அவற்றினிடையே வளைந்து நெளிந்து பாய்ந்து கொண்டிருந்தது. பின்னால், பனியால் மூடப்பட்ட மலைச் சிகரங்கள் நீலவானத்தை நோக்கிக் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நின்றிருந்தன.

அதற்கு அடுத்த வருடம் இராஜசபை லாகூருக்குத் திரும்பிய பிறகு, அக்பர், கியாஸ் பெக்கிற்கு காபூலின் திவானாகப் (பொக்கிஷதார்) பதவி உயர்வு அளித்தார். இந்த பொக்கிஷதார் பதவி மிகவும் மதிப்பிற்குரியது. ஏனெனில் காபூல் ஒரு சிறிய நகரமாயினும், வடக்குப் பகுதியில் முகலாய சாம்ராஜ்ஜியத்தின் வர்த்தகத்திற்கும், பாது காப்பிற்கும் ஏற்ற புறக்காவல் நகரமாக இருந்தது. செங்குத்தான அஸ்மை (Asmai) மற்றும் ஷெர்டவ்ஜா (Sherdawza) மலைகளின் இடையே அமைந்திருந்த ஒரு முக்கோண வடிவக் குறுகிய பள்ளத்தாக்கில் காபூல் அமைந் திருந்தது. அதைச்சுற்றி இருந்த சிறிய மலைத்தொடர்களுக்குக் கீரிடம் வைத்தது போல் நீண்ட, வளைந்த மண்சுவர் இடைஇடையே கோபுரங்களுடன் காணப்பட்டது.

கியாஸ் குடும்பத்துடன் காபூலுக்குக் குடி பெயர்ந்தார். கஜானாவின் கணக்குகளைச் சரிபார்ப்பது முதல், பல புதிய கடமைகள் அவரை இரவில் வெகு நேரும் விழித்திருக்க

வைத்தன. அவருடைய தினசரி வேலை, எப்படிப்பட்ட ஜனங்களை சந்தித்தார், அவர்களுடன் என்ன பேசினார் போன்ற பல விவரங்களைக் கேட்டறிய மெஹ்ருன்னிஸா அவரிடம் வருவாள். சில சமயம் ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு அவர் அருகே மௌனமாக அமர்ந்திருப்பாள். சில சமயம் அவர் அவளிடம் சில கணக்குகளைப் பார்க்கச் சொல்வதோ அல்லது கணக்கர்களால் ஏற்படும் தொல்லை பற்றியோ, அல்லது காவற்படையின் கணக்கர்கள் சரியாகப் பணம் வசூலிக்காதது பற்றியோ பேசுவார். குளிர்காலத்தில் ஒருநாள் இரவு வீட்டின் கற்சுவர்களில் குளிர் ஊடுருவிப் படர்ந்திருக்க, கதகதப்பிற்காக வேண்டி, இருவரும் அருகருகே அமர்ந்தவாறு இருந்தனர். மெஹ்ருன்னிஸா கியாளின் முதுகின் மேல் சாய்ந்து கொண்டு தன் கால்களைத் தனல் அடுப்பின் பக்கம் நீட்டி அமர்ந்திருக்கத் திடீரென்று கியாஸ் கூறினார். "ஒரு புதிய இந்துமதக்குரு இந்த நகரத்திற்கு வந்திருக்கிறார். நான் வரும் வழியில் அவர் ஒரு ஆலமரத்தினடியில் அமர்ந்து அங்குள்ளோருக்கு 'இராமாயணம்' கூறிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். வால்மீகியின் படைப்புகள் அனைத்தும் அவருக்கு மனப்பாடமாகத் தெரியும் என்று சொல்கிறார்கள்."

மெஹ்ருன்னிஸா சட்டென்று திரும்பிக் கண்களில் ஆவல் ஒளிர, "அப்பா நாம் போய் கேட்கலாமா? அது ஸம்ஸ்கிருதத்திலா இருக்கும்?"

கியாஸ் புன்னகைத்தார். "நீ வெளியே போவது தெரிந்தால் உன் தாயார் உயிரையே விட்டு விடுவாள். வேண்டுமானால் அவரை நம் வீட்டிற்கு அழைக்கலாம்."

மெஹ்ருன்னிஸா அவர் கைகளைப் பற்றி, "ஓ அப்பா, தயவுசெய்து செய்யுங்கள்."

"நான் உன் தாயாருடன் பேசுகிறேன்."

அடுத்த நாள் கியாஸ் அஸ்மத்திடம் பேசினார். ஆனால் அவளுக்குக் கவலையாக இருந்தது. அந்த மதகுருவிற்கு என்ன வயதிருக்கும் என்று கேட்டாள். இளம் பெண்கள் இருக்கும் இடத்திற்கு அவரை அழைத்து வரலாமா? மற்றவர்கள் என்ன சொல்வார்கள்?

"ஆனால் அஸ்மத், குழந்தைகள் படிப்பதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இதைத் தவற விடக் கூடாது."

அஸ்மத் தன் தலைமுடியைச் சுருட்டியவாறு தீவிரமாக யோசித்தாள். "கியாஸ், பெண் குழந்தைகளை அதிகம் படிக்க வைப்பதில் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும். அவர்கள் அதிகம் படித்து விட்டால் அவர்களுக்குத் தகுந்த கணவர்கள் எப்படி கிடைப்பார்கள்? அவர்கள் சிறிதே படித்திருந்தால் வெளியுலகிலிருந்து அதிகம் எதிர்பார்க்க மாட்டார்கள். மெஹ்ருன்னிஸா இப்பொழுதே உங்களுடன் வெளியில் செல்லவேண்டும் என்று பிடிவாதம் செய்கிறாள்."

கியாஸ் மெல்லியதாகப் புன்னகைத்தார். "ஆமாம், எனக்குத் தெரியும். ஆண் மகன் வெளியே இஷ்டம் போல் போய் வரலாம். ஆனால் பெண்கள் மாத்திரம் ஏன் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்கவேண்டும் என்று கேட்கிறான்."

அஸ்மத்தின் முகத்தில் கவலை ரேகை படர்ந்தது. "அவளைத் தூண்டி விடாதீர்கள், கியாஸ். நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நம் புதல்விகள் கர்வம் பிடித்தவர்கள், நல்ல மனைவிகளாக இருக்க தகுதியற்றவர்கள் என்று மற்றவர்கள் எண்ணிவிடக் கூடாது."

"சத்தியமாக அவ்வாறு நடக்கவிடமாட்டேன். ஆனால், ஒரு குழந்தையாவது என் வேலையில் ஆர்வம் காட்டுவது எனக்குச் சந்தோஷத்தை அளிக்கிறது." அஸ்மத்தின் நெற்றியில் படர்ந்திருந்த கவலைக் கோடுகளில் கியாஸ் முத்தமிட்டார். "கூடிய சீக்கிரத்தில் முகத் திரைக்குப் பின்னால் அவர்களது மீதி வாழ்நாட்களைக் கழிக்க வேண்டிவரும், அஸ்மத் அவர்களுக்குச் சிறிதளவாவது உண்மையை நம்மால் கொடுக்கமுடிந்தால், கட்டாயம் கொடுக்கவேண்டும்."

அஸ்மத் கணவனை நிமிர்ந்து பார்த்தாள். "நான் கூட மதகுரு பேசுவதைக் கேட்க ஆவலாக இருக்கிறேன். கேட்கலாமா, கியாஸ்?"

"நிச்சியமாக.... நாம் அனைவரும் சேர்ந்து அமர்ந்து கேட்கலாம்."

அந்தப் பிராமண ஆசாரியர் வாரத்தில் நான்கு இரவுகள் அவர்கள் வீட்டிற்கு வரத் தொடங்கினார். அவர் மிகவும் மெலிந்தவராக, மார்பு எலும்புகள் துருத்திக் கொண்டிருக்க, முற்றிலும் வழுக்கையான தலையின் பின்னே, ஒரு குடுமியுடன் இருந்தார். இந்தக் குளிரிலும், அவர் ஒரு தூய வெள்ளை வேட்டி மாத்திரம் அணிந்து காணப்பட்டார். அவர் முகம் சோர்வடைந்ததுபோல் இருந்தாலும் இராமாயணத்தை இசையோடு அவர் கூற ஆரம்பித்தவுடன் ஒரு புத்துணர்வு வந்துவிடும். நேரம் கிடைத்த பொழுதெல்லாம், ஆண்கள் அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து சிறிது தள்ளி, ஒரு மெல்லிய பட்டுத் திரைக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் தன் பெண்களுடன் அஸ்மத்தும் சேர்ந்து கொள்வாள். பெரும்பாலும் மெஹ்ருன்னிஸா திரையை ஒட்டி உட்கார்ந்திருப்பாள். மரியாதை குறித்து அவள் திரைக்குப் பின் இருபடவு அவசியமானாலும், மெஹ்ருன்னிஸா ஆசாரியரை அடிக்கடிக் கேள்விகள் கேட்பாள். அவளையும் முக்கிய நபராகக் கருதி அவரும் அவள் பக்கம் திரும்பிப் பதிலளிக்கையில் மிகுந்த கவனத்துடன் கேட்டுக் கொண்டிருப்பாள்.

நாட்கள் இவ்வாறு கடந்தன. குழந்தைகள் அனைவரும் இலக்கியம், கணிதம், பூகோளம், வானசாஸ்திரம், ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றனர். அந்தப் பாடங்கள் முடிந்தவுடன் தன் பெண்களுக்கு ஓவியம், தையல் வேலை, பூ வேலை, மற்றும் பணியாட்களை எப்படி நடத்திச் செல்வது போன்ற விஷயங்களை அஸ்மத் கற்றுக் கொள்ளச்செய்தாள். அவர்கள் காபூலில் இருக்கையில் இளவரசர் ஸலீமின் மூன்றாவது மனைவி அவரது இரண்டாவது மகன்— பர்விஸ் (Parviz)ஐப் பெற்றெடுத்தாள். ஒருநாள் மாலை, வேலை முடிந்து கியாஸ் வீட்டிற்குத் திரும்புகையில், அவர் மனைவியும் பெண்களும் தின்டுகளில் அமர்ந்து கைவேலை செய்து கொண்டிருப்பதைப் பார்த்தார்.

"தூதுவர்கள் இராஜ சபையிலிருந்து ஒரு செய்திகொண்டு வந்திருக்கிறார்கள்." ஒரு கடிதத்தை அவர் காட்டினார்.

முகலாய அரசாங்கத்தின் அதிகார பூர்வமான மொழியான துருக்கிய மொழியில் விரிவாக எழுதப்பட்ட அந்தக் கடிதத்தை அஸ்மத் பார்த்தாள். அக்பரின் பாட்டனாரும், முகலாய சாம்ராஜ்ஜியத்தின் முதல் பேரரசருமான பாபர், தைமூரின் வழி வந்த தன் மூதாதையர்களின் தொடர்பு இருக்கவேண்டித் தன் தாய்மொழியான துருக்கி மொழியை அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான மொழியாகச் செய்திருந்தார். இதே பழக்கம் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்தது. இந்தியாவிற்கு வந்த புதிதில் கியாஸுக்கும் அஸ்மத்திற்கும் துருக்கிமொழி பரிச்சயமில்லை. ஆனால் மிகுந்த முயற்சி எடுத்து அந்த மொழியைக் கற்றுக்கொண்டனர். பேரரசர் அவையில் பிரபுக்கள், அரபுமொழியும், ஸம்ஸ்க்ருதத்தை மூலமாகவும் நிறைய பாரசீகச் சொற்களும் கலந்திருக்கும் ஹிந்தி மொழியிலும் பேசினர். அஸ்மத்தும் கியாஸும் இப்பொழுது இந்த எல்லா மொழிகளிலும் சரளமாகப் பேசினர். வீட்டில் அவர்கள் பாரசீகம், ஹிந்தி, அரபு மூன்றும் கலந்து உபயோகிப்பதால், குழந்தைகளுக்கு, அஸ்மத்—கியாஸின் சொந்த மொழியான பாரசீகத்தை விட ஹிந்துஸ்தானத்தில் வழக்கத்தில் இருக்கும் மொழிகளிலேயே நாட்டம் அதிகம் இருந்தது.

"எங்கே நான் பார்க்கிறேன், அம்மா." மெஹ்ருன்னிஸா கூறினாள்.

அஸ்மத் கடிதத்தை அவளிடம் கொடுத்தாள். மெஹ்ருன்னிஸா வேகமாக அதைப் படித்துவிட்டு, மீண்டும் தையல் வேலையைத் தொடங்கினாள். இளவரசர் ஸலீமிற்கு இன்னொரு மகன் — அரியணைக்கு இரண்டு வாரிசுகள் வந்தாகிவிட்டது. காபூலுக்கு வந்த பின் மெஹ்ருன்னிஸாவிற்குச் சக்ரவர்த்தினியிடமிருந்து எந்தச் செய்தியும் இல்லை. நட்பைக்கூட தொடர்பு வைத்துக் கொள்ளுவதில் அதிகம் காலம் செலுத்தாதவன். மேலும் மற்றவர்களிடம் சொல்லி எழுதச் சொல்வதற்கும் பொறுமை இல்லாதவள். எப்படியும் சக்ரவர்த்தினி எழுதுவாள் என்று எதிர்பார்க்க முடியாது. மெஹ்ருன்னிஸாவே அவளுக்கு அவ்வப்போது கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். மற்ற அரசகுடும்பப் பெண்களிடமிருந்து அஸ்மதிற்கு அவ்வப்போது செய்திகள் வந்து கொண்டிருந்தன. ஸலீமின் இரண்டாவது மனைவி ஜகத்கோஸினி, அழுக்கமான

முகவாயும், நிமிர்ந்த நடையும், யாருக்கும் தலை வணங்காத துணிச்சலான பெண் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால், இதுவரை குழந்தை பிறப்பதற்கான அறிகுறியே இல்லை. அது அவளை ஒரு மாதிரி அடக்கி வைத்திருந்தது.

மெஹ்ருன்னிஸா துணியில் ஊசியைக் குத்தி கீழே வைத்துவிட்டு ஜன்னல் வழியே தெரிந்த பனியால் மூடிய மலைகளை வெறித்துப் பார்த்தாள். அரச சபை நடவடிக்கைகளிலிருந்து தள்ளி இருப்பது கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் சில வருடங்களுக்குத் தான் என்று தந்தை கூறியிருந்தார். இங்கு புதிய புதிய நிகழ்ச்சிகள், புதிய சினேகிதர்கள், பார்ப்பதற்குப் புதிய இடங்கள். இங்குதான் மிர்ஜா மல்லிக் மசூதை முதன்முறையாக அவள் சந்தித்தாள். அவர் அவருடைய வளர்ப்புத் தந்தை. சிறு குழந்தையாக அவளை ஒரு மரத்தினடியில் கண்டெடுத்து அவள் தாய் தந்தையிடமே திருப்பிக் கொடுத்தவர். அவருடைய காலத்தினால் முதிர்ந்த, அலைச்சலினால் ஏற்பட்ட, சூரிய வெப்பத்தினால் சிவந்த முகத்தை முதலில் பார்த்த பொழுது மெஹ்ருன்னிஸாவிற்குச் சிறிது தயக்கமாகத்தான் இருந்தது. ஆனால் அவர் அவளை உடனே கவர்ந்து விட்டார். "நான் உன் தந்தை மாதிரி, குழந்தாய்." அவர் கூறினார். "என்னிடம் நீ வெட்கப்படக் கூடாது." அவளுக்காக ஒரு பரிசும் கொண்டு வந்திருந்தார். மிகவும் அழகான, மிக மெல்லியதான ஒரு மோதிரத்திற்குள் புகுத்தி இழுக்கும் அளவிற்கு மெல்லியதான, பொன்னிறமான முகத்தை மூட உபயோகிக்கும் முகத்திரை. முதல் சந்திப்பிலிருந்த சிறு தயக்கத்திற்குப் பிறகு, மெஹ்ருன்னிஸா பல மணிநேரம் அவர் கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் பற்றி, ஆவி, பேய் வந்த மாதிரி முற்றிலும் நகர மறுக்கும் ஒட்டகங்கள் பற்றி, மனிதர்களையும், மிருகங்களையும் இரவில் கடும்குளிரில் நடுக்கவைங்கமாறு பலத்த காற்றில் பறந்து போன கூடாரங்கள் பற்றி, இப்படிப் பல கதைகள். அவருடன் இருப்பது அவளுக்குப் பழகிப் போய்விட அவர் திரும்பிப் போகையில் மிகவும் வருந்தினாள். கட்டாயம் மாதத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதவேண்டும் என்ற சத்தியமும் செய்யச்செய்தான்.

காபூலில் அவள் தந்தைக்கு மிகுந்த கௌரவம் இருந்தது. வெகு தொலைவிலிருந்து கூட ஜனங்கள் அவரைச் சந்திக்க வந்தனர். அவரிடம் ஆலோசனை கேட்டனர். அவர் கூறுவதை மரியாதையுடன் கேட்டனர். அவர்கள் எப்பொழுதும் சிறிய பரிசுப் பொருள்களை விட்டுச் சென்றனர். பூவேலைகள் செய்த அழகிய பை — அடியில் கனத்துடன். பருவகாலமாயின், மஞ்சள் நிறத்தில் தேனைப் போல் இனிக்கும் மாம்பழங்கள், ஒரு பெரிய மனிதர் வாசலில் ஒரு குதிரையைக் கூட விட்டுச் சென்றார். திவான் பதவிக்கு நிறைய உரிமைகள் இருந்தன. அவர்கள் அந்த உரிமைகளை நன்கு அனுபவித்தனர். மெஹ்ருன்னிஸா மெதுவாகப் பெருமூச்சு விட்டாள். ஆனால், இவை எல்லாம் அழகிய பெண்களும், அவர்களுக்கிடையே இருக்கும் போட்டி, பொறாமை, சச்சரவுகளும் உள்ள பேரரசரின் அந்தப்புரச் சூழ்நிலைக்கு ஈடாகாது. அவள் ருக்கையாவின் கூடு பறக்கும் நாக்கு, சமயோசிதப் பேச்சு இவை எல்லாம் இல்லாத குறையைப் பெரிய இழப்பாக எண்ணினாள். இளவரசர் ஸலீமின் கர்வமான இரண்டாவது மனைவியுடன் சக்ரவர்த்தினி எப்படிப் பழகிக் கொண்டிருப்பாள்?

"லாகூருக்கு எப்பொழுது திரும்பிப் போகப் போகிறோம், தந்தையே?" அவள் திடீரென்று கேட்டாள்.

கையிலிருந்த அலுவலக ஆவணங்களிலிருந்து இயாஸ் நிமிர்ந்து பார்த்தார். "சக்ரவர்த்தி எப்பொழுது விருப்பப் படுகிறாரோ, அப்பொழுது. இதில் நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. நீ ஏன் கேட்கிறாய்?"

"காரணம் ஒன்றுமில்லை." மெஹ்ருன்னிஸா துணியை எடுத்துப் பூ வேலை செய்யத் தொடங்கினாள். கடலில் அலைகள் வீசுவது போல் இருப்புக் கொள்ளாமை அவளை அலைக்கழித்தது. அவளுக்கு வயது ஏற ஏற — இப்பொழுது அவளுக்கு வயது பதினான்கு — தாயும் தந்தையும் நிறையக் கட்டளைகள் விதித்தனர். வெளியில் அதிகம் போகாதே, உன் முகத்தை தாழ்த்திக் கொள், நம் வீட்டைச் சேர்ந்தவர் அல்லாத வேறு மனிதர் யாராவது வந்தால் முகத்திரையால் நன்றாக

மூடிக்கொள்— என்பதுபோல். அவன் பெண்ணாக இருப்பதால், இந்தத் தடைகள் எல்லாம் அவள் வாழ்வின் ஒரு பகுதியாக ஆகிவிடும். ஒரே இடத்தில் இருக்க வேண்டி இருந்தாலும், சக்ரவர்த்தியின் அந்தப்புரத்துப் பெண்கள் வெளியே சென்று வருகிறார்கள். கோவிலுக்குப் போகிறார்கள், பூங்காக்களுக்குச் செல்கிறார்கள். ஊர் சுற்றிப் பார்க்க போகிறார்கள். அவர்களுக்குச் சொந்தமாக நிலங்கள் உள்ளதால் அதைப் பராமரிப்பவர்களிடம் நேரிடையாகப் பேசுகிறார்கள். மற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்குவது பற்றியோ, நில உரிமம் வழங்குவது பற்றியோ, அல்லது படை ஆக்கிரமிப்புகள் பற்றியோ ருக்கையா அக்பருக்கு ஆலோசனைகள் கூறுகிறாள். அவள் பர்தாவிற்குப் பின் இருந்தாலும் அவள் வார்த்தைகளுக்கு மதிப்பு உள்ளது. இந்த சாம்ராஜ்ஜியத்தில் வேறு எங்கிலும் பெண்களுக்கு இப்படிப் பட்ட சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. ஒரு உயர் குடிமகன் மனைவிகூட இந்த அளவு சுதந்திரமாகச் செயல்படமுடியாது. பேரரசின் அந்தப்புரப் பெண்களுக்கு, அவர்கள் அரசரைச் சார்ந்தவர்கள் என்பதால் ஒரு சாதாரணப் பெண் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவிற்கும் அதிகமான சுதந்திரம் கிடைக்கிறது.

அவள் செய்து கொண்டிருக்கும் தையல் வேலை தவறாகப் போயிருப்பதைக்கண்டு மெஹ்ருன்னிஸா அலுப்புடன் நாக்கைக் கொட்டிக் கொண்டாள். ஊசியிலிருந்த அந்த வெளிர்சிவப்பு நூலை உருவி விட்டு, ஊசியின் முனையால் தானே போட்ட தையல்களை ஒவ்வொன்றாகப் பிரிக்க ஆரம்பித்தாள். இது வேடிக்கை ஆனது; சக்ரவர்த்தியின் அந்தப்புரம். அவரது அபரிமிதமான சொத்துக்கும் அதிகாரத்திற்கும் அறிகுறி — அவரது மிக முக்கியமான உடைமை. சில சமயங்களில் அவரது பொக்கிஷத்தைவிடவும், படை பலத்தைவிடவும் அதிகம் முக்கியமானது. வெளியுலகத்திலிருந்து அது தனிப்பட்டதாக இருந்தாலும் அந்த அந்தப்புரத்தின் முக்கியத்துவம் சாம்ராஜ்ஜியத்தின் பலவித செய்கைகளில் பங்கு பெற்றது.

அவளுக்கு வயது ஏறிக் கொண்டு வருவதாலும், அதிகம் வெளியில் செல்லத் தடை இருப்பதாலும், அந்தப்புரத்திலிருந்து தள்ளி இருப்பதாலும், இது போன்ற விஷயங்களை இப்பொழுது அவளால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. பதினான்கு வயதில் அவள் திருமணம் செய்துகொள்ளத் தகுதி பெற்ற ஒரு பெண்ணாகக் கருதப்பட்டாள்.

ஒருவேளை அவர்கள் இப்படித் தள்ளி இருப்பதும் நல்லதிற்குதான். தூரத்தில் இருந்தால் ஆசை அதிகமாகும். ஆனால், தந்தை கட்டாயம் அரச சபைக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அப்பொழுதான், ருக்கையா — ஒரு பெண்மணி — அவளது கட்டளைக்கு வளைந்து கொடுத்து வரும் அவனைச் சார்ந்த மற்ற பெண்களிடம் எப்படி அதிகாரம் செலுத்துகிறாள் என்று கவனித்து அறிந்து கொள்ளமுடியும். மேலும் ஸலீமின் மனைவிகளையும் நேரில் சந்திக்கலாம். மேலும் ஸலீம்? அவர் அவளை நிச்சயம் கவனிக்கவேண்டும். இல்லையேல் அவள் எப்படிச் சக்ரவர்த்தினி ஆவது?



அத்தியாயம் மூன்று



ஷேக்குஜிடாபாவே! இந்த சாம்ராஜ்ஜியம் முழுவதும் உங்களுக்கே உரிதாகப் போகிறது. அப்படியிருக்கையில் ஏன் என்னை அழிக்க எண்ணுகிறீர்கள்? அநியாயமாக என் உயிரை எடுக்கவேண்டிய அவசியமில்லை. நீங்கள் கேட்டால் நானே கொடுத்து விடுவேன்.

W.H. Lowe, trans., Munktakbab-UT-Tawarikb

லாகூர் கோட்டையின் அந்த வரவேற்பு அறையின் சாளரத்தின் வழியாகச் சிதாரின், மென்மையான இசை தவழ்ந்து வந்தது. வெளி முற்றத்திலிருந்து வீசும் காற்று அங்கு கட்டட வளைவுகளில் தொங்க விடப்பட்டிருந்த மெல்லிய மஸ்லின் படுதாக்களை அசைந்தாட வைத்தது. கஸ்தூரி மற்றும் பாரிஜாதம் மணம்கொண்ட அகர்பத்திகளின் வெளிர் நீல, சாம்பல் நிறப் புகை அந்த அறையில் சுகந்தத்தைப் பரப்பியது. மங்கிய விளக்கின் ஒளியில், வெள்ளைச் சலவைக் கல் தரை மந்தமாக ஒளிர்ந்தது. மரச் சாமான்கள் ஏதுமில்லாமல், ஒரு மூலையில் பட்டுத் துணியால் செய்யப்பட்ட மெத்தையும் அதைச் சுற்றி பாரசீகத் தரை விரிப்புகளும் இருந்தன.

வெல்வெட்டினால் ஆன நீள உருண்டைத் தலையணையில் தலையைச் சாய்த்தவாறு இளவரசர் ஸலீம் அந்த மெத்தையில் அமர்ந்திருந்தான். மெல்லிய மஸ்லின் உடை அணிந்த அடிமைப்பெண்கள், கால்களில் சதங்கை ஒலிக்க, அந்தச் சிதாரின் இசைக்கு ஏற்ப இடையை அசைத்து நடனமாடிக் கொண்டிருந்தனர். தபலாவின் இடைவிடாத மெல்லிய தாளம் சிதார் இசையுடன் சேர்ந்து ஒலித்தது. மேலே சுற்றிலும் மூடப்பட்டிருக்கும் சாளரத்தில் அமர்ந்திருந்த வாத்திய கோஷ்டியை இளவரசர் ஸலீம் தலை நிருப்பிப் பார்த்தான். பின் அவன் பார்வை தன்னை சுற்றிலுமுள்ள அழகிய முகங்களை நோக்கித் திரும்பியது.

அழகாகவும், ஆடம்பரமாகவும் உடையணிந்து, நுண்மையான மணத்துடன் கூடிய வாசனைத் திரவியம் பூசித் தலை முடி சிறிதும் கலையாதவாறு சிகை அலங்காரம் செய்து கொண்டு, அவனது அந்தப்புரத்துப் பெண்கள் அவனைச் சுற்றி அமர்ந்திருந்தனர். அவர்கள் அங்கு இருப்பதால் தான் வாத்தியக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் மூடிய சாளரத்தில் தனிமையாக அமர்த்தப்பட்டிருந்தனர். அந்தப்புரத்துப் பெண்கள், முகத்திரையிடாமல் அவர்கள் கணவனுடன் இருக்கையில், மற்ற ஆண்கள் அங்கே இருக்கக் கூடாது. ஸலீமைச் சுற்றி அவனது அந்தப்புரத்துப் பெண்கள் மட்டுமே இருந்தனர். அவனது மனைவிகள், மற்றும் வைப்பாட்டிகள் தவிர அடிமைப் பெண்களும், அலிகளும் தான்.

குடிபோதையில் அந்த அறை மங்கலாகத் தெரிந்தது. ஸலீம் ஒரு தளர்ந்த விரலைத் தூக்கி, ஒரு அடிமைப் பெண்ணை அழைத்தான். வேகமாக அவள் அருகே வந்து குனிந்து வணங்கி விட்டு, பச்சை நிறக் கண்ணாடிக் கல்லினால் செய்யப்பட்ட அவனது கோப்பையில் மேலும் மதுவை ஊற்றினாள். அந்த மதுவின் நெடி மூக்கில் ஏற, அவன் பேராசையுடன் அதைப் பருகினான். அந்த அவசரத்தில் அந்த மஞ்சள்நிறத் நிரவம் அவன் மேலாடையில் சிந்தியது.

ஸலீமின் இரண்டாவது மனைவி ஜகத்கோஸினி அவனை மெதுவாகத் தொட்டாள்.

அவன் முறைத்தான், "என்ன, இப்பொழுது?" "மதிப்பிற் குரியவரே!" அவன் மெதுவாக அழைத்தாள். "நீங்கள் இந்தத் திராட்சைப் பழங்களைச் சிறிது ருசி பார்க்கலாமே!"

அவளுடைய அமைதியான முகத்தைப் பார்த்ததும், அவன் கோபம் சிறிது தணிந்தது. சிறு குழந்தைக்குப் புகட்டுவதுபோல் அவனுக்கும் ஊட்ட வேண்டி, அவன் வாயைத் திறந்தான். ஆனால் அந்த பருத்த ஊதாநிற திராட்சைப் பழங்கள் அவன் நாவில் மணல் போல்தான் தோன்றியது. ஐந்து வருடங்களாக அவன் தொடர்ந்து மது அருந்தி வருவதால் அவனுக்குச் சரியாகப் பசி எடுப்பதில்லை. பொறுமையிழந்து அவள் கையைத் தள்ளிவிட்டான்.

ஷா பேகம் என்று அவனால் பட்டம் கொடுக்கப்பட்ட அவனது அந்தப்புரத்தின் முக்கிய இளவரசி மான்பாய் அவனது வலதுபுறம் அமர்ந்திருந்தாள். அவள்தான் அவனது முதல் மகன், குஸ்ருவை அவனுக்குப் பெற்றுக் கொடுத்தவள். ஜகத்கோஸினி மான்பாயைப் பார்த்துச் சைகை செய்தாள். ஸலீம் மான்பாய் பக்கம் திரும்பியதும், அவள் அவனுக்குச் சிறிது இனிப்புப் பண்டங்கள் கொடுக்க முயன்றாள்.

ஸலீம் முகத்தில் ஒரு கடுகடுப்புத் தோன்றியது. இசைக்கு ஏற்ற தாளத்துடன் காலியான தன் பச்சைக்கல் கோப்பையைத் தரையில் தட்டியவாறு அவன் தூரத்தில் வெறித்துப் பார்த்தான். திடீரென்று கோப்பையை ஒரு கல்தூணை நோக்கி வீசினான். அது தூணில் தெறித்து இன்னும் மது சொட்டிக் கொண்டிருக்கும் பச்சை நிறக் கண்ணாடித் துண்டுகளாக உடைந்து சிதறியது. திடுக்கிட்டுப் பாடகர்கள் இசையை நிறுத்தினர். இளவரசிகள் இருந்த இடத்திலேயே உறைந்து போயினர்.

"மாட்சிமை பொருந்தியவரே!" — ஜகத்கோஸினி மெதுவாக அவன் தோளின் மேல் கையை வைத்தாள். ஸலீம் அவளை உதறிவிட்டுத் தள்ளாடியபடி எழுந்து நின்றான்.

"அந்தக்கிழவன் இன்னும் ஏன் இறக்கவில்லை?" அவன் கத்தினான். "மூப்பந்தைந்து வருடங்களுக்கு அவன் அரசாட்சி செய்துவிட்டான். அடுத்த தலைமுறை ஹிந்துஸ்தானின் அரியணையில் அமருவதற்கான வேளை வந்துவிட்டது."

அங்கு மௌனம் நிலவியது.

முஷ்டிகளை மடக்கி முகம் சிவக்க ஸலீம் அந்த விரிப்பின்மீது தள்ளாடியபடி மேலும் கீழும் நடந்தான். அரியணையின் வாரிசாக இருப்பதில் இதுவரையில் திருப்தியுடன் தான் இருந்தான். ஆனால் இளவரசர் ஸலீம் அரியணை ஏறி அரசாட்சி செய்யக்கூடிய வயது வந்த பின்பும், அக்பர் இன்னும் விடாப்பிடியாக உயிருடன் இருந்து கொண்டு அரசாள்வது நியாயமல்ல என்று சில அரச சபை உறுப்பினர்கள் சில மாதங்களுக்கு முன் சுட்டிக் காட்டியது சரிதான்.

அவன் கால்கள் தளர, ஸலீம் தரையில் விழுந்தான். பாதுகாவலர்கள் சிலர் உதவ ஓடி வந்தனர். குடிபோதை நிறைந்த கண்களுடன் அவர்களைக் கையை அசைத்து அனுப்பிவிட்டுத் தங்க நிறத்தில் விளிம்புகளுடன் கூடிய தாமரைப் பூக்கள் போல் வேலைப்பாடு செய்திருந்த அந்த அறையின் கூரையை வெறித்துப் பார்த்தவாறு அங்கேயே படுத்திருந்தான்.

அவனுக்கு வேண்டிய எல்லாமே அவனிடம் இருந்தது. அழகிய உருவம், ஆண்மைத்தனம், அதற்குச் சாட்சியாக இரண்டு மகன்கள், நிறைய மனைவிகள், மேலும் அதே அளவு வைப்பாட்டிகள்... இருந்தாலும் அரச கிரீடம் இல்லை எனில் இவை எல்லாம் ஒன்றுமே இல்லை. மஹபத் கானும், மற்றவர்களும் கூறியபடி, அவன் எதிர்த்துக் கலகம் செய்ய வேண்டும். அது அக்பருக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கும்.

இந்த எண்ணம் எழுந்தவுடன் ஸலீம் முனகினான். அக்பர் ஒரு வலிமை மிகுந்த சக்ரவர்த்தி. சண்டை சச்சரவு இல்லாமல் அரியணையை அவர் விட்டுக் கொடுப்பது என்பது நடக்கக் கூடியதல்ல. ஆனால், ஏன் கூடாது? சாம்ராஜ்ஜியத்தின் அரியணைக்கு இளம் பதின்மூன்று வயதி லேயே அவர் வந்து விட்டார். அவன் ஸலீம், இப்பொழுது இருபத்தி இரண்டு வயது. நிச்சயம் அரசாட்சி செய்யத் தகுதி உள்ளவன்தான்.

ஸலீம் விரக்தியுடன் தரையில் குத்தினான். அக்பர் இன்னும் பல வருடங்கள் உயிர் வாழலாம். அவர் இறப்பதற்குள் காலம் ஓடிவிடும். ஸலீம் ஒரு கிழவனாகத்தான் அரியணை ஏறமுடியும். அதனால் என்ன உபயோகம்? முகத்தில் சூடான கண்ணீர்வழிய அவன் விரிப்பில் சுருண்டு படுத்தான்.

ஜகத்கோஸினி சைகையால் எல்லோரையும் வெளியேறு மாறு பணித்தாள். வாத்ய கோஷ்டிக்காரர்களும் மற்ற வேலையாட்களும் வணங்கி விட்டு மௌனமாக வெளியேறி னார். அவன் கணவனுக்கு அருகில் சென்று "உறங்குங்கள், என் பிரபுவே," என்று தடவிக் கொடுப்பது போல் மெல்லிய குரலில் கூறினான். "நீங்கள் சோர்ந்திருக்கிறீர்கள்."

ஸலீம் கண்ணீர் நிறைந்த முகத்தை உயர்த்தினான் "நான் எப்பொழுது சக்ரவர்த்தி ஆவேன்?"

"வெகு சீக்கிரம், என் அன்புக்குரியவரே, இப்பொழுது இளைப்பாருங்கள்."

ஸலீமை மெதுவாக மெத்தைக்கு அழைத்துச் சென்றான். இன்னும் மூக்கை உரிஞ்சிக் கொண்டு கனத்த மனத்துடன் அவன் மெத்தையில் அமர்ந்தான். விளக்குகள் அணைக்கப் பட, அந்த அறை இருளில் மூழ்கியது. தன் மனைவியின் ம்ருதுவான ஸ்பரிசத்தில் அழுதுகொண்டே உறங்கிப் போனான்.

ஸலீம் கண்களைத்திறந்து பரிச்சயமில்லாத அந்த அறையை சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் ஏன் இந்த வரவேற்பு அறையிலேயே தூங்கினான்? சிறிது நகர்ந்துவிட்டு மறுபடியும் முனகியபடி மெத்தையில் விழுந்தான். சுத்திய வால் அடிப்பது போல் தலை கனத்தது. அவன் தொண்டை வரண்டு, பழைய சாராய வாடை வீசியது. அவன் உதட்டைச் சப்பிக்கொண்டே கத்தினான், "தண்ணீர்!"

முன் இரவு நிகழ்ச்சிகள் அவன் நினைவிற்கு வந்தன. நிச்சயம் ஏதாவது செய்யவேண்டும். ஸலீம் எழுந்திருந்து தள்ளாடியபடித் தன் அறைக்குச் சென்றான். இடுப்பளவு ஜூடான நீர் நிறைந்த தொட்டியில் அமர்ந்து நீவிரமாக ஆலோசித்தான். நீராவியின் சூடு, அவன் உடல் நோவையும் வலியையும் குறைக்கவும், முன்னிரவு குடித்த மதுவின் நீவிரத்தை உடலிலிருந்து அகற்றவும் உதவியது. மஹபத் கானும் மற்றவர்களும் கூறிய ஆலோசனைப்படி — இல்லை, சாடையாக குறிப்பிட்டபடிச் செய்யலாமா? ஆனால் எப்படி. அவன் சொந்தத் தந்தைக்கே அவ்வாறு செய்யமுடியும்? அவளை மிகவும் நேசித்த, அவனிடம் மிகவும் அன்பு செலுத்திய, அவனைக் கண்டவுடனேயே கண்களில் ஒளிவீசப் பார்க்கும் ஒரு தந்தைக்கு? ஆனாலும் அரியணை இல்லாமல் ஸலீமிற்கு என்ன பயன்?

தன்னுடைய சூடான முகத்தில் நீரை வாரி ஸலீம் அடித்துக் கொண்டான். இல்லை அப்படிச் செய்யவேண்டியது தான். ஹுமாம் (Humam) மிகவும் நம்பிக்கையானவன். அக்பர் மிகவும் துன்பத்திற்கு ஆளாகாதபடி ஏற்பாடு செய்வான் — வேலை ஒன்றும் செய்யத் தகுதியற்றவராக மட்டுமே என்று மஹபத் கூறுகிறான். அதற்குப் பின் ஸலீம் சக்ரவர்த்தியாக..

சில மணி நேரம் கழித்து, அக்பரின் தனிப்பட்ட மருத்துவர் ஹுமாம் இளவரசர் மாளிகைக்கு வந்தான். ஸலீம் தன் பணியாட்களை எல்லாம் வெளியேறச்செய்து விட்டு மருத்துவருடன் ஒரு மணிநேரம் போல் தனிமையில் இருந்தான். பின் உள்ளே சுனத்துடன், தங்கக் காசுகளை வைக்க உபயோகிக்கும் பூ வேலைபாடு செய்த ஒரு அழகிய பையுடன், ஹுமாம் திரும்பிச் சென்றான்.

ஸலீம் கதவருகே நின்று கொண்டு ஹுமாம் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான். சுடைசி நிமிடத்தில் அவனைத் திரும்பக் கூப்பிட்டுக் காரியத்தை நிறுத்திவிடலாமா என்றுகூட யோசித்து விட்டுப் பின்பு மனதை மாற்றிக் கொண்டான். காலையில் அருந்திய மதுவின் விளைவினால் இன்னும் மனம் குழம்பியபடி இருந்தான். வாசற்படியில் சாய்ந்தவாறு சலவைக்கல் தரையில் அமர்ந்தபடி குழம்பிய மனத்துடன் யோசித்தான்— ஒன்றுமே நடக்காமலும் போகலாம். அக்பரின் வேலையாள் ஒருவன் வெளிமுற்றத்தில் ஒரு தூணில் சாய்ந்தவாறு இங்கு நடந்ததைப் பார்த்துக் கொண்டிருந்ததை ஸலீமோ, அந்த வைத்தியரோ சுவனிக்க வில்லை.

சில தினங்கள் கழித்து அரசர் மாளிகைகளில் சிறுசிறு பேச்சுக்கள் துவங்கின. சக்ரவர்த்தி வயிற்று வலியால் பாதிக்கப்பட்டிருகிறார்; சீக்கிரம் குணமாகும்போல் தோன்ற வில்லை; அரச மருத்துவர்களால் அவர் வலியைக் குறைக்க ஒன்றும் செய்ய முடியவில்லையென்பது போல்.

அரச மாளிகையின் உள் முற்றத்தில் ஒருநாள் பிற்பகல் ஸலீம் புறாக்களுக்கு உணவு கொடுத்துக் கொண்டிருக்கும்

பொழுது, அக்பரின் உடல் நிலை பற்றிய விவரம் அவனுக்குத் தெரியவந்தது. இந்த விவரத்தைக் கொண்டு வந்த அலி முதலில் ஸலீமின் கவனத்தைக் கவர்வதற்காகச் சிறிது கனைத்தான். ஸலீம் அவனைத் திரும்பிப் பார்க்காமலே அவன் சொல்ல வந்த விஷயத்தை மாத்திரம் கேட்டுவிட்டுத் தலையசைத்து அவனை வெளியேறப் பணித்தான். ஒரு புறா அவன் கையைக் கொத்தமுயல, அவன் கையை விரித்துத் தானியங்களைக் கீழே இறைத்தான். புறாக்கள் போட்டி போட்டுக்கொண்டு தானியங்களைக் கொத்தத் துவங்கின. சக்ரவர்த்தியின் உடல்நிலை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது என்பது உண்மையா? அல்லது பேரரசர் மாளிகை களில் எப்பொழுதும் விஷயங்கள் மிகைப்படுத்திப் பேசப் படுவது போல், இதுவும் மிகை படுத்தப்பட்ட செய்தியா? அக்பர் இறந்து போனால் என்ன ஆகும்?

ஸலீம் நிமிர்ந்து கூப்பிட்டான். "ஹோஷியார்".

ஒரு தூணின் பின்னிருந்து ஒரு அலி முன் வந்தான். ஸலீமின் அந்தப்புரத்தில் ஹோஷியார் கான் ஒரு முக்கியமான தலைமை அலி. ஸலீமிற்கு அடுத்தபடி மிக முக்கியமானவ னாகக் கருதப்பட்டான். அந்தப்புரத்தைச் சார்ந்த விஷயங்களை மிகவும் சாமர்த்தியமாகச் செயல்படுத்தி வருபவன். மனைவிகள், வைப்பாட்டிகள், மற்றும் அடிமைப் பெண்கள், வேலைக்காரிகள், சமையல்காரர்கள் இவர் களிடையே ஏற்படும் சின்னச்சின்னச் சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது, மேலும் அவரவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணத்தைச் சரி பார்த்துக் கொடுப்பது, அவர்கள் பணத்தைச் சரியான முறையில் சேமித்து வைக்க ஆலோசனைகள் கூறுவது போன்ற பல விஷயங்களைச் சமாளித்து வந்தான்.

மற்ற எல்லோரையும் போல், எஜமானரை மதியவேளை களில் தொந்திரவு செய்யக் கூடாதென்ற உத்தரவு அவனுக் கும் உண்டு. ஆனால் இளவரசரை விட்டு அவன் ஒரு பொழுதும் அதிக தூரம் விலகியிருக்க மாட்டான். இப்பொழுது ஸலீம் கூறுவதைக் கேட்டுவிட்டுத் தலை வணங்கி முற்றத்திலிருந்து சென்றான். அவன் போவதை

ஸலீம் பார்த்துக் கொண்டிருந்தான். நடந்தது நடந்தாகி விட்டது. அக்பரின் உயிருக்கு ஆபத்து வராதென்று ஹகீமும் உறுதி கூறி இருக்கிறான். ஸலீம் இப்பொழுது மேற்கொண்டு மற்ற விஷயங்களை கவனிக்கவேண்டும்.

ஹோஷியார் மூலம் தன் சகோதரன் இளவரசன் முராத் (Murad) மாளிகைக்கு ஸலீம் ஒற்றர்களை அனுப்பி அவன் நடவடிக்கைகளைக் கண்காணிக்கச் சொன்னான். இருபத்தி ஒன்று வயதான முராதும், அடுத்த இளவரசன் தனியால், (Daniyal) இருவருக்கும் கூட அரியணை ஏறுவதற்கு உரிமை உண்டு. ஐரோப்பாவில் இருப்பது போல் மூத்த மகனுக்குதான் முதல் உரிமை என்ற சட்டம் முகலாய இந்தியாவில் கிடை யாது. அக்பரின் மூன்று புதல்வர்களுக்குமே அரியணைக்கு வரச் சமமான. உரிமை உண்டு.

அரியணைக்குப் போட்டியாக வரக் கூடிய நிலையில் முராத் இல்லை என்று ஒற்றர்கள் கூறினர். அவன் ஒரு பெரிய குடிகாரனாக இருக்கிறான். ஒரு நாளில் சில மணி நேரம் கூடத் தெளிந்த மனநிலையில் இருப்பவனாகத் தெரிய வில்லை. அவனுக்குப் பெரிய ஆசைகள் ஒன்றுமில்லை. மதுவும் அவனது அந்தபுரத்துப் பெண்களின் தோழமையும் அவனை வேறு ஒன்றிலும் ஈடுபாடு இல்லாதவனாகச் செய்துவிட்டது. தனியாலுக்கு இன்னும் வயதாகவில்லை. ஆகையால் அவனிடமிருந்து ஒரு அச்சுறுத்தலும் வராது. அரசசபை உறுப்பினர்களுக்கு அந்த இரண்டு இளவரசர்கள் மேலும் நம்பிக்கை ஏற்படாது. அவர்களது முழு ஒத்துழைப்பும் ஸலீமிற்கே கிடைக்கும்.

தன் படுக்கை அறையில், அக்பர் தனது பயத்தை வெளியே சொல்லத் தைரியமில்லாமல், மௌனமாகத் தன் துன்பத்தைச் சகித்துக் கொண்டிருந்தார். வியர்வை முகத்தில் ஆறாகபெருக, வலி அவரை ஆட்டிப்படைத்தது. ஒரு பெரிய வஸ்துவை மார்பில் வைத்து அழுத்துவது போன்ற அளவு அவருக்குக்கு இதயத்தில் ஏற்பட்ட வலிக்கு முன் அவர் உடலில் இருக்கும் உபாதை ஒன்றுமே இல்லை. முன்னெம் அவரது நம்பிக்கை உரிய ஒரு பணியாள், ஸலீம்

மாளிகையில் வேலை செய்பவன், அவரைச் சந்திக்க அனுமதி வேண்டினான். அவன் கூறிய செய்தி அவரை மிகுந்த துயரத்தில் ஆழ்த்தியது.

நிம்மதியின்றி அவர் படுக்கையில் நெளிந்தார். அவரது அன்பு மகனைப் பற்றிய இப்படிப்பட்ட ஒரு பழிச்சொல்லை அவரால் எப்படி நம்பமுடியும்? ஆனால், நடப்பவை அதையே சுட்டிக்காட்டுகின்றன. அவரது உடல்நிலை சிறிது சிறிதாக நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருகிறது. நாற்பத்தி ஒன்பது வயதில் அவர் நல்ல திடகாத்திரமாக, நல்ல பழக்கவழக்கங்கள் உடையவராக, நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தார். ஆனால், இந்த வயிற்று வலி தொடர்ந்து இருக்கிறது. நாளுக்கு நாள் அதிகமாகிறது. அவருடைய பழைய ஆரோக்கியமான உருவத்தின் நிழல்போல் இப்பொழுது அவர் படுக்கையில் விழுந்து கிடக்கிறார்.

அந்த அறையின் ஒரு புறத்தில் அமர்ந்திருந்த குக்கையா, அவர் முணுமுணுப்புடன் அசைவதைப் பார்த்து எழுந்திருந்து, அவரைக் கவனித்த வரும் பணியாட்களை போகச் சொல்லி விட்டு, மீண்டும் அமர்ந்தாள். தன் கணவரை இந்த நிலையில் பார்ப்பதற்கு மனது வராமல் கனத்த இதயத்துடன், அவரிடமிருந்து முகத்தைத் திருப்பியவாறு அமர்ந்திருந்தான். ஸலீம் அவளுடைய மகன் இல்லை. அவளுக்குப் பிறக்க வில்லை. ஆனாலும் குழந்தைப் பருவத்திலிருந்தே அவனை மிகவும் நேசித்து வந்தாள். அவன் நடத்தை எல்லா நம்பிக்கைகளையும், எல்லாவித காரணங்களையும் பொய்த்துவிட்டது.

ஆனால் அக்பர் படும் துயரம் அதைவிட மோசமானது. வயிற்றுவலி அவரைக் கொல்லாவிட்டாலும் இந்தத் துயரம் அவரைக் கொன்று விடும். சக்ரவர்த்தியும், அந்தப்புரத்தில் இருந்தோர் அனைவரும் ஆண் வாரிசு வேண்டி ஏங்கியிருந்த அந்த நாட்களில், ஸலீமின் பிறப்பு அவர்களுக்குக் கொடுத்த ஆனந்தத்திற்கு இப்பொழுது அர்த்தமே இல்லை. அவனை ஒரு நல்ல மனிதனாக வளர்க்க வேண்டிய கடமையிலிருந்து அவர்கள் தவறி விட்டார்கள்.

இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே மற்றொரு எண்ணம் அவளுக்குத் தோன்றியது— ஸலீமின் இந்த

அதிகமான குடிப்பழக்கத்திற்கும், ஊக்கம் குன்றிய மந்தமான நிலைக்கும் ஒருவேளை அக்பரே கூடக் காரணமாக இருக்கலாம். ஸலீமிற்குப் பொறுப்புணர்ச்சி வரவேண்டும். வீரர்களுடனும், படித்தவர்களுடனும் செலவிடும் நேரத்தைவிட அதிக நேரம் அந்தப்புரத்தில் செலவிடுகிறான் என்று குக்கையாவே பலமுறை அக்பரிடம் கூறியிருக்கிறாள். ஆனால் அக்பர் அவள் கூறுவதைப் பொருட்படுத்தியதில்லை. போர் முனைக்கு ஸலீமை அனுப்பினாலோ அல்லது முல்லாவிடம் கல்வி கற்க அனுப்பினாலோ அவர் அதிக நேரம் அவனை விட்டுப் பிரிந்திருக்கநேரிடும். அப்பொழுது ஸலீம், அக்பர் அவனிடம் வைத்திருக்கும் அன்பைத் திருப்பி எப்படிக் காட்ட முடியும்?

ஒரு வேலையாள் சத்தமில்லாமல் அரசியின் அருகில் வந்து அவள் காதில் மெதுவாக ஏதோ கூறினான். அதைக் கேட்டுவிட்டு அவள் எழுந்திருந்து சக்ரவர்த்தி அருகில் சென்றாள்.

"மாட்சிமை பொருந்தியவரே, வைத்தியர் ஹுமாம் வெளியில் இருக்கிறார்."

"உள்ளே வரச் சொல்."

குக்கையா வாயிற்படியில் காவல் இருக்கும் அலியிடம் வைத்தியரை உள்ளே அனுப்பும்படிச் சைகை செய்தாள். அவள் முகத்திரையை இழுத்து முகத்தை மூடிக் கொண்டிருக்கையில் சக்ரவர்த்தி மிகுந்த சிரமத்துடன் கூறினார், "தண்ணீர்".

கண்களில் கண்ணீர் நிறைந்து அவளது பருத்த கன்னங்களில் வழிந்தது. அவருடைய மெலிந்த வெளிறிய கையைத் தன் ஈரமான கரங்களால் பற்றி, "நூறு முறை உங்கள் ஆணையை நிறைவேற்றுவேன், என் பிரபுவே!" என்றாள்.

ஹுமாம் அறையில் நுழைந்து வணங்கினான். தளர்ந்த கையைத் தூக்கி அவனை அருகே வருமாறு அக்பர் அழைத்தார். ஹுமாம் அவர் படுக்கை அருகே வந்து மண்டியிட்டான்.

"உன்னுடைய கவனிப்பு இனிமேல் எங்களுக்கு அவசியம் இல்லை."

ஹுமாம் ஆச்சரியத்துடன் தலை நிமிர்ந்தான். அக்பர் அவனைச் சீற்றத்துடன் வெறித்தார்.

"ஆனால் மாட்சிமை பெருந்தியவரே! இதுவரை நான் உங்களுக்காகவே உழைத்திருக்கிறேன். இன்னும் அவசியமா யின் என் உயிரைக் கொடுத்துக்கூட உங்களுக்குப் பணிவிடை செய்வேன்." ஹுமாம் நடுங்கியவாறு பதிலளித்தான். இந்த மாதிரி மனநிலையில் சக்ரவர்த்தியை அவன் இதுவரையில் பார்த்ததில்லை. அக்பர் எப்பொழுதும் கோபமில்லாமல் சாந்தமாகவும் அமைதியாகவுமே இருப்பார். இப்பொழுது ஹுமாம் மிகுந்த அச்சம் அடைந்தான்.

"போதும்!" கோபத்தினால் அதிகரித்த சக்தியினால் அக்பர் ஆக்ரோஷத்துடன் கத்தினார். "என் கண் முன்னால் நிற்காமல் போய்விடு. உன் வெட்கமற்ற முகத்தை இனி எம்மிடம் காட்டாதே."

இரண்டு பணியாட்கள் வேகமாக வந்து அக்பரின் படுக்கை அருகிலிருந்து ஹுமாமை இழுத்துச் சென்றனர். ஹுமாம் தலையைத்தொங்க விட்டுக்கொண்டு சக்ரவர்த்தியை வணங்கிவிட்டுப் பின்புறமாகவே நகர்ந்து அறையைவிட்டு வெளியேறினான்.

அவன் தலை இன்னும் கழுத்தில் இருப்பதற்கு அவள் எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்று எண்ணியவாறு பேரரசி ருக்கையா அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் முடிவு எடுப்பதாக இருந்திருந்தால், ஹுமாம் அடுத்த முறை சூரியன் உதிப்ப தைப் பார்த்திருக்க முடியாது. ஆனால், அந்த வைத்தியரைத் தண்டிக்கக் கூடாது என்பதில் சக்ரவர்த்தி உறுதியாக இருந்தார். ஹுமாமைச் சிரச்சேதம் செய்வது ஸலீமின் குற்றத்தை ஒத்துக்கொள்வது போலாகும் என்று ருக்கையா நினைத்தாள்.

அடுத்த சில நிமங்கள் அக்பரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. வைத்தியர்களின் தீவிர முயற்சியாலும், அவரது அன்பு மனைவிகளின் கவனிப்பாலும் அவர் உடல்

நலம் மெதுவாகத் தேறியது. ஆனால், சக்ரவர்த்தி பழைய மாதிரி இல்லை. மேலும் அமைதியானவராக, தனிமையை விரும்புவராக இருந்தார். சீக்கிரத்திலேயே அவரது அரச சபை உறுப்பினர்கள் அவருக்கும், அரியணை வாரிசான ஸலீமிற்கும் இடையே உள்ள உறவு சிறது சிறிதாக குறைத்துக் கொண்டிருப்பதைக் கண்டனர்.

ஒரு சூரியன் மற்றும் ஒருநாள் முடியப் போவதைக் குறிக்க, மெதுவாக மறையத் தொடங்கப் பறவைச் சிறகுகளினாலான எழுதுகோலை மைச் சிமிழில் பத்திர மாக வைத்துவிட்டுத் தான் எழுதியவற்றின் மீது சூரியனின் பொன் கிரணங்கள் ஒளிவீசி விளையாடுவதைப் பார்த்தவாறு அபுல் பெக் முழங்கைகளை மேஜை மேல் ஊன்றி ஓய் வெடுத்தார். படர்ந்து கொண்டிருக்கும் இருள் மலைச் சாரல் களின் மேலிருக்கும் வெளிச்சத்தைத் துரத்தி அடிக்க, அந்த மலைத் தொடர்கள் ஒவ்வொன்றாக அவர் பார்வையிலிருந்து மறையும் வரை அவர் பார்த்துக் கொண்டிருந்தார். அதற்குப் பிறகுதான் ஜன்னலிலிருந்து பார்வையைத் திருப்பினார்.

அவர் முன்னே, சக்ரவர்த்தி கைப்பட வந்த அரசாங்க அறிக்கை இருந்தது. காபூலில் நான்கு வருடங்கள் திவானாக இருந்து அவர் செய்த பணிகளைப் பாராட்டிவிட்டு, லாகூரில் அரசர் பேரவைக்கு வந்து சேருமாறு அவருக்கு அக்பர் கட்டளை அனுப்பியிருந்தார்.

நான்கு வருடங்கள், மகிழ்ச்சியுடன் அபுல் நினைத்துப் பார்த்தார். நான்கு நீண்ட வருடங்களின் கடுமையான உழைப்பு. அவர் தந்தை நிச்சயம் அவரை நினைத்துப் பெருமைப்படுவார். முதலில் அங்கு வருவதற்குக் அபுலிற்கு விருப்பமில்லையானாலும் அதை வெளியே காட்டுவதற்கோ அல்லது அதுபற்றிக் கேள்வி கேட்பதற்கோ எவரும் துணிய மாட்டார்கள். திவான் பதவி மிகவும் முக்கியமானதானாலும், அரசரின் அருகாமையை விட்டு காபூலுக்குச் செல்வதில் அபுலிற்கு விருப்பம் இல்லை. அவருக்கு அக்பரிடம் பரியாதை கலந்த அன்பு இருந்தது. மேலும் அரசப் பேரவையிலிருந்து வெகு தூரம் தள்ளி இருந்தால், அவர்

பதவி முன்னேற்றத்திற்கு அது ஒரு தடையாக இருக்கும் என்று எண்ணினார்.

ஆனால் விஷயம் அப்படியில்லை. கருப்புமையினால் துருக்கி மொழியில் எழுதப்பட்டு ஒரு ஓரத்தில் அரச முத்திரையுடன் கூடிய அந்த அறிக்கையை மறுபடியும் கியாஸ் தன் கைகளில் எடுத்துப் பார்த்தார். அவரை மறந்து விடுவதற்கு பதிலாக, ஒற்றர்கள் மூலமாகவும், காபூலிருந்து வழக்கமாக அரசருக்கு அனுப்பப்படும் செய்திகள் மூலமும் சக்ரவர்த்தி இவரை கவனமாகக் கண்காணித்து வந்திருக் கிறார் போலும்! இந்த விஷயம் அவருக்கு ஒரு மகிழ்ச்சியான ஆறுதலைக் கொடுத்தது. அவர் மிகுந்த கடுமையாகவும், கவனத்துடனும் ஈடுபாட்டுடனும் காபூலில் தன் வேலையைச் செய்தமையால், அது அவருக்கு அக்பரின் பாராட்டுகளுடன் கூடக் காபூல் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுத் தந்திருக்கிறது.

கதவருகே கால் கொலுசுகளின் ஒலி கேட்க, கியாஸ் புன்னகைத்தார். இந்த நான்கு வருடங்களில் எவ்வளவு நடந்துவிட்டன! அபுலுக்கும் முகமதிற்கும் திருமணம் ஆகி விட்டது. முகமதிற்கு இது கொஞ்சம் சீக்கிரம்தான். ஆனால் அவனது கட்டுக்கடங்காத நடவடிக்கைகளைத் திருமணம் கொஞ்சம் குறைக்கும் என்று அவர் நம்பினார். தூரதிஷ்ட வசமாக அப்படி ஆகவில்லை. மாறாக, அவன் மேலும் தனிமையாகவும் மற்றவர்களிடமிருந்து விலகியும் இருக்கத் தொடங்கிவிட்டான். கியாஸ் பெருமூச்சுவிட்டார். ஒரு வேளை ஒரு குழந்தை பிறந்திருந்தால்... தகப்பனார் ஆனபின் அவனுக்குக் கொஞ்சம் பொறுப்பு வந்திருக்கலாம். முகமதிற்குத் திருமணம் ஆனவுடன், அபுலுக்கும் ஒரு நல்ல இடத்திலிருந்து சம்பந்தம் வர, அவனுக்கும் திருமணம் ஆகிவிட்டது. இதற்கு முன்பே ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஸாதிக் கான் (Sadiq Khan) என்பவனுடன் ஸலீஹாவிற்கு திருமணம் நடந்து விட்டது. வயதிற்கு வந்த பெண் வீட்டில் இருக்கையில் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்விப்பது சரியானதாகாது. ஸலீஹாவின் புதிய குடும்பத்தினர், மிகவும் நல்ல குடும்பத்தி னராக இருப்பதால் தன் பெண்ணை அவர்களுடன் இங்கு

விட்டுவிட்டு லாகூர் செல்வதில் கியாஸிற்கு மனவருத்தம் இல்லை.

மற்றப் பெண்கள்— மெஹ்ருன்னிஸா, மனீஜா, கதிஜாவும் பெரிய சகோதரன் ஷாபூருடன் தொடர்ந்து கல்வி பயின்று வந்தனர்.

மெஹ்ருன்னிஸா— ஆ... இப்பொழுது பதினாறு வயது. தன் பெயருக்கு ஏற்றமாதிரி இருக்கிறாள். கியாஸ் நினைத்துப் பார்த்தார்... பெண்களின் சூரியன். அவள் மிகவும் அழகான பெண். உடல் ஆரோக்கியமும் மன ஆரோக்கியமும் மிருந்தவள். இத்தனை வருட மணவாழ்க்கையில் அஸ்மத்தும் கியாஸும் குழந்தைகளிடம் பாரபட்சம் பார்த்ததில்லை. ஆனால், மெஹ்ருன்னிஸாவை நினைக்கையில் அவ்வாறு இருக்க முடியவில்லை. அவளது புன்னகை, அவளது கலகல வென்ற சிரிப்பு. அவளது நீலக்கண்களில் ஒளிரும் விஷமத் தனமான பார்வை— கியாஸிற்கு ஒரு தந்தைக்கே உரிய மகிழ்ச்சியையும் திருப்தியையும் கொடுத்தது. ஒரு பெண்ணை வீட்டிலேயே வைத்திருக்கலாம் என்பது நடைமுறைக்கு ஒத்து வந்தால் கியாஸ் தயங்காமல் மெஹ்ருன்னிஸாவைத் தன் கூடனேயே வைத்துக் கொண்டு விடுவார்.

கியாஸ் திடீரென்று அந்த எண்ணத்திலிருந்து தெளிந்தார். மெஹ்ருன்னிஸாவிற்குப் பதினாறு வயது. காலம் எப்படி ஓடிவிட்டது? அவள் இப்பொழுது திருமண வயதிற்கு வந்து விட்டாள்.

அன்று இரவு விளக்குகளை எல்லாம் அணைத்துவிட்டுப் பணியாட்கள் அவர்களை வணங்கிவிட்டு அவர்கள் அறையைவிட்டு அகன்றவுடன் அஸ்மத்தும் கியாஸும் சகஜமான மௌனத்தில் அருகருகே படுத்திருந்தனர்.

அஸ்மத் முதலில் பேசினாள். "மெஹ்ருன்னிஸாவின் திருமணம் பற்றிச் சிந்திக்க வேளை வந்துவிட்டது."

நிழலாகத் தெரியும் தன் மனைவியின் முகத்தைப் பார்த்தவாறு கியாஸ் பதிலளித்தார். "ஆமாம், அவளுக்குப் பதினாறு வயதாகி விட்டது."

"அவளில்லாமல் வெறுமையாக நாம் உணர்வோம்." அஸ்மத் மெதுவாகச் சொன்னார்.

கியாஸ் அவள் கையைத் தடவி எடுத்து, அழுத்தமாகப் பிடித்துக்கொண்டு, வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினார். அவள் வார்த்தைகளினால் தான் உணரும் வெறுமையை அவள் அறிந்துகொள்ளாமலிருக்க விரும்பினார். "அவள் நமக்கும் தன் வருங்கால கணவனுக்கும் ஒரு பெரிய சொத்தாக இருப்பாள். அவளை நாம் நன்கு வளர்த்திருக்கிறோம்."

"இது ஒரு மிகச் சிறப்பான சம்பந்தமாக இருக்கவேண்டும், கியாஸ். யாராவது ஒருவர், அவளது தேவைகளையும் உணர்ச்சிகளையும் புரிந்தவனாக இருக்கவேண்டும். அவள் நிச்சயம் ஒரு நல்ல மனைவியாக இருப்பாள் என்று எனக்குத் தெரியும்."

"அப்படியே தேர்ந்தெடுப்போம், என் அன்பே! அவளுக்கு ஒரு நல்ல கணவனுக்காக என் நண்பர்களை எல்லாம் விசாரிக்கிறேன். அப்படி ஒருவர் கிடைத்தவுடன் சக்ரவர்த்தியிடமிருந்து அனுமதி பெறுவோம்." பேரவையைச் சார்ந்த உறுப்பினர்கள் வீட்டில் நடக்கும் நிருமணங்கள் போல், கியாஸும், மரபிற்காகவாவது, அக்பரிடம் அனுமதி கேட்க வேண்டும்.

முற்றத்தின் எதிர்ப்புறத்தில் தன் அறையில் மெஹ்ருன்னிஸா கண் விழித்தவாறு படுத்திருந்தாள். தூரத்தில் எங்கோ வழிப்போக்கன் ஒருவனைப் பார்த்து ஒரு நாய் குரைக்க, உடனே கல்லால் அடிபட்டதனால் ஏற்பட்ட வலியால் அது கூச்சலிடுவதும் கேட்டது. அவள் மனம் ஏதோ யோசனைகளில் மூழ்கியிருக்க வயிற்றின் மேல் கைகளைக் கட்டியவாறு மெஹ்ருன்னிஸா அசையாமல் படுத்திருந்தாள். கடைசியாகத் திரும்பவும் லாகூருக்கு, மறுபடியும் அரச சபைக்கு, அரசரின் அந்தப்புரத்திற்கு, கூப்பது போன்று எகத்தானமும், வேகமாகவும் பேசும் சுபாவம் கொண்ட சக்ரவர்த்தினியின் அருகாமைக்கு, எல்லாவற்றிற்கும் மேல் மறுபடியும் லலீமின் அருகில்.. மெஹ்ருன்னிஸா ஒரு புறமாக நிரும்பிக் கைமேல் தலையைச் சாய்த்தவாறு, கண்களை மூடி,

முகத்தில் சிறிய புன்னகையுடன் இருக்க, உறக்கம் அவளை ஆட்கொண்டது.

சக்ரவர்த்தியின் பேரவை இருக்கும் லாகூருக்கு அவர்களது நீண்ட பயணத்தை அவர்கள் தொடங்கினர். கியாஸ் தன் திடகாத்திரமான குதிரையின் மீது பயணம் செய்ய, அதன் குளம்புகளின் சீரான ஒலி, பல வருடங்களுக்கு முன்னால் அவர்கள் கைபர் கனவாயைக் கடந்து ஹிந்துஸ்தான் போவதற்கு எடுத்த முதல் பயணத்தைப் பற்றிய நினைவுகளைத் தூண்டிவிட்டது. அப்பொழுது வாழ்க்கையில் ஒரு நிச்சயமில்லை. ஒவ்வொரு நாளும் உத்தரவாதம் இல்லாமல் இருந்தது. குளிர்காலத்தின் கடுமையான குளிர் அவர்களது களைத்த உடல்களைத் துன்புறுத்தியது. இப்பொழுது அவர்கள் சக்ரவர்த்தியின் அழைப்பின் பேரில் சென்று கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு நாள் முடிவிலும் ஒரு தேர்ந்த கூடாரத்தில் தங்கிச் சிறகுகளால் தயாரிக்கப்பட்ட சுகமான மெத்தைகளில், பட்டுத் தலையணையின் மேல் தலை வைத்து உறங்கினர். அவர் புதல்வர்கள் — நன்றாக வளர்ந்து விட்டவர்கள், குழந்தைகள் அல்ல — அவருடன் குதிரைகளில் பயணம் செய்ய, வீட்டுப் பெண்கள் ஒட்டகங்களின் மேலுள்ள மூடிய பல்லக்குகளில் பயணம் செய்தனர்.

லாகூரை அடைந்தவுடன் அக்பருக்குத் தன் மரியாதையைச் செலுத்த கியாஸ் விரைந்தார். அவர் அக்பரை வணங்கிவிட்டு நிமிர்ந்து பார்க்கையில் அவருக்கு மிக்க அதிர்ச்சி ஏற்பட்டது. அக்பரின் தலைமுடி முழுவதும் நரைத்துப்போயிருக்க அவரது முகம் முன்மாதிரியே அமைதி யுடனும், அன்புடனும் தெரிந்தாலும் அவர் கண்களில் ஒரு சோகம் தெரிந்தது. கியாஸ் உடனே சிம்மாசனத்திற்கு அருகில் அமர்ந்திருந்த இளவரசர் லலீமை நோக்கினார். அவர் முகத்திலும் ஒரு வருத்தம் தெரிந்தது. அப்படியானால் அவர் கேள்விப்பட்டது உண்மைதான், கியாஸ் நினைத்துக் கொண்டார். அக்பரின் உடல் நலக்குறைவு பற்றியும், சலீமின் ஹுமாம் பற்றியும் பல வதந்திகள் அவர் காதுக்கு எட்டியிருந்தது. இந்த மாதிரிச் செய்திகள் சுகமாக இருப்பதில்லை.

"காபூலில் நீ சாம்ராஜ்ஜியத்திற்கு நல்ல சேவை செய்திருக்கிறாய்" அக்பர் கூறினார்.

கியாஸ் அவரை நோக்கி, "மாட்சிமை பொருந்தியவரே, நீங்கள் அன்புள்ளம் கொண்டவர். நான் என் கடமையைத் தான் செய்தேன்."

"இருந்தாலும்," அக்பர் தொடர்ந்தார். "உன் வேலைகளில் யாம் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தோம்."

அவர் சைகை செய்ய ஒரு பணியாள் கையில் ஒரு தங்கத்தட்டில் இரத்தினக் கற்கள் பதித்த ஒரு அழகிய நீண்ட வாளும், கௌரவிக்க ஒரு அங்கியும் எடுத்து வந்தான். கியாஸ் மண்டியிட்டு வணங்கினார். அக்பர் அந்த அழகிய வாளையும் அங்கியையும் எடுத்து அவருக்குப் பரிசாக வழங்கினார்.

மேலே நிரையினால் மூடி மறைந்திருந்த ஒரு சாளரத்தில் சக்ரவர்த்தியின் அந்தப்புரத்தைச் சேர்ந்த பெண்கள் அவையில் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். கீழே நடவடிக்கைகள் முடிந்தவுடன் சக்ரவர்த்தினி ருக்கையா சுல்தான் பேகம் திரையின் பின்னாலிருந்து பேசினாள். "மாட்சிமை பொருந்தியவரே, மிர்ஜா கியாஸ் பெக்கிடம், அவர் மனைவியையும், மகள் மெஹ்ருன்னிஸாவையும், என் பணிவிடைக்கு அனுப்பச் சொல்லிக் கூறுங்கள்."

அக்பர் கியாஸைப் பார்த்தார்.

"அப்படியே ஆகட்டும், மாண்பு மிக்கவரே!" கியாஸ் சாளரத்தின் பக்கம் திரும்பினார். "அவர்களுக்கு நீங்கள் அழைப்பு விடுத்தீர்கள் என்பது, அவர்களை நீங்கள் கௌரவித்ததாக ஆகும்."

லாகூருக்குத் திரும்பி வந்தது குறித்து மகிழ்ச்சியுற்றவாறு அவர் தர்பாரில் தன் இருக்கைக்குச் சென்று அமர்ந்தார். அவையில் காலை நடவடிக்கைகள் முடியும் தருவாயில் சக்ரவர்த்தியின் முகம் திடீரென்று சோர்வால் களைத்துப் போயிற்று. இளவரசர் ஸலீம் தன் தந்தைக்கு ஆறுதலாக அவர் பக்கம் கையை நீட்ட, அக்பர் தலையைத் திருப்பிக் கொண்டதால், திரும்பவும் அவர் தன் கையை மடக்கிக்

கொள்வதை கியாஸ் கண்டார். இந்த நிகழ்ச்சி தூரிதமாக நிகழ்ந்ததால், அவையில் வெகு சிலரே அதைக் கண்டனர். அரச சபையில் எல்லோரும் எழுந்து குனிந்து வணங்க, இளவரசர் ஸலீம் பின்தொடர, சக்ரவர்த்தி வெளியேறினார். தர்பாரில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிச் சிந்தித்தவாறே கியாஸ் வீடு திரும்பினார். அடுத்த சில தினங்களில், அவை உறுப்பினர்களுடன் பேசி, ஹுமாம் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து கொள்ளவேண்டும். இது உண்மையா? இளவரசர் ஸலீமைப் பிடிக்காத சிலர் கூறும் கட்டுக்கதையா? அரச கீர்டம் என்பது எவ்வளவு பெரிய கௌரவ அரசர்கள் எப்பொழுதும் அதற்காகச் சொந்தச் சகோதரர்களுடனும், தந்தைகளுடனும், புதல்வர்களுடனும் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அடுத்த நாள் காலை மெஹ்ருன்னிஸா ருக்கையாவின் அரண்மனைக்குச் சென்ற பொழுது அக்பரின் இரண்டு வைப்பாட்டிகளிடையே சதுரங்கம் ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. சில பெண்கள் அவர்களை சுற்றி அமர்ந்து விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தனர். தங்கம் மற்றும் வெள்ளிச் சிமிழ்களில் தூபங்கள் எரிந்து கொண்டிருக்க, அவற்றிலிருந்து வரும் நீலப்புகை அந்த அறையில் சந்தனமர வாசத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. அடிமைப் பெண்களும் அலிகளும் பெண்களிடையே மண்டியிட்டு அமர்ந்தோ அல்லது நின்று கொண்டோ அவர்களுக்கு மதுவும் பழச் சாறும் வழங்கிக் கொண்டிருந்தனர். சிலர் மயிலிறகு விசிறிகளால் விசிறிக் கொண்டிருந்தனர். ஒரு பறவை சன்னமாக குரல் எழுப்ப, மெஹ்ருன்னிஸா சத்தம் வந்த திசையில் திரும்பினாள். சக்ரவர்த்தியின் வைப்பாட்டி ஒருத்தி வெல்வெட் தலையணையில் கை வைத்தவாறு ஒரு மெத்தையில் சாய்ந்திருந்திருக்க, அவள் விரல்களில் மஞ்சளும் சிகப்புமான ஒரு காதல் பறவை இருந்தது. அவள் அந்தப் பறவைக்கு முத்தம் இடுவது போல் சத்தம் செய்ய அதுவும் முத்தத்தைப் பெறத் தன் அலகை நீட்டியது. அதற்குப் பரிசாக ஒரு பாதாம் பருப்பு. அந்தப் பறவை சந்தோஷமாகக் கூவியவாறு தன்

வெட்டிவிடப்பட்ட சிறகுகளை அடித்துக்கொண்டது சக்ரவர்த்தினியின் கவனத்தைக் கவரலாமா என்று யோசித்த வாறு மெஹ்ருன்னிஸா திரும்பினான்.

அதே சமயத்தில் ஹீக்கா பிடித்தவாறு ஒரு மெத்தையில் சாய்ந்திருந்த சக்ரவர்த்தினி ருக்கையாவும் அவளைப் பார்த்து விட்டுத் தன்னருகில் வருமாறு அழைத்தாள். திடீரென்று வெட்கம் மேலிட, மெஹ்ருன்னிஸா அரசியை நோக்கி மெல்ல நடந்தாள். நான்கு வருடங்களாக அவள் ருக்கையா வைப் பார்க்கவில்லை. அது நீண்ட காலமாகத் தோன்றியது. ருக்கையாவின் தலைமுடி மேலும் நரைத்திருக்க, அவள் உருண்டை முகத்தில் மேலும் சுருக்கங்கள் தெரிந்தன. ஆனால் கண்கள் பழையமாதிரியே — கடுமையாக, சுறுசுறுப் பாக, நாலாபுறமும் கண்காணித்தபடி.

"நீ திரும்பி விட்டாய் போலிருக்கிறது." அவளை வரவேற்பது போல் ருக்கையா கூறினாள்.

"ஆமாம், மாட்சிமை பொருந்தியவரே! நாங்கள் நேற்று வந்தோம்." நீண்ட இடைவெளி இல்லாதது போல் பழைய தோழமையுடன் மெஹ்ருன்னிஸா பதிலளித்தாள். ஒரு சாதாரண முக்கியமில்லாத பணியாள் முதல் அக்பர் வரை சகஜமாகப் பேச வைக்கத் தூண்டும் திறமை ருக்கையாவிற்கு உண்டு. நாமும் அந்தத் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மெஹ்ருன்னிஸா மனதில் தீர்மானித்துக் கொண்டாள். அதற்காகவே ஒரு நாள் ஸலீம் அவளைப் பற்றி உயர்வாக எண்ணுவார்.

"காபூல் எப்படி இருக்கிறது? உன் தந்தை அங்கு நல்ல பெயர் எடுத்தார் என்று கேள்விப்பட்டேன்."

மெஹ்ருன்னிஸா பதிலளிக்க வாயை திறக்கும்முன், சுருட்டை மயிருடன் கூடிய ஒரு சிறு பையன் தளர் நடை யுடன் அந்த அறைக்குள் வந்து ருக்கையாவின் மடியில் விழுந்தான்.

"அம்மா, இனிப்பு தாருங்கள்," கையை நீட்டியவாறே அவன் கேட்டான்.

மெஹ்ருன்னிஸா ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தாள். ருக்கையாவிற்குக் குழந்தைகள் கிடையாது. ஆகையால் யார் இந்தப் பையன்? அந்தப்புரத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் பல பெண்கள் அம்மா போல் நடந்து கொள்வார்கள். ஆனால் இந்தக் குழந்தை போல் எந்த ஒரு குழந்தையும் அதிகாரம் மிக்க பட்டத்தரசியைத் தன் சுண்டு விரலில் சுற்றி வைத்திருந்ததை மெஹ்ருன்னிஸா இதுவரைப் பார்த்ததில்லை.

ருக்கையாவின் முகம் பூரிப்பால் மலர்ந்தது. அவள் தன் பக்கத்திலுள்ள வெள்ளித் தட்டின் பக்கம் குனிந்து ஒரு இனிப்பை எடுத்து அந்தக் குழந்தைக்குப் புகட்டி விட்டாள். குழந்தையின் பிசுபிசுப்பான விரல்கள் தன் ரவிக்கையைப் பிடித்திருப்பதையோ, அவன் விரல்கள் அவன் உடையிலும் நிறைந்திருந்த இடுப்பிலும் நெய்யைத் தேய்ப்பதையோ அவள் சிறிதும் சட்டை செய்யவில்லை.

"மெஹ்ருன்னிஸா, என் மகனைப் பார்." குழந்தையின் தலைக்கு மேலாக அவளைப் பார்த்துப் புன்னகைத்தவாறு, "இவன் குர்ரம் (Khurram)".

"உங்கள் மகன்?" தன்னையறியாமல் மெஹ்ருன்னிஸா உளறிக் கொட்டினாள்.

"ஆமாம். இவன் என்னுடையவன். முற்றிலும் என்னுடை யவன்தான்" ருக்கையா தன் கைகளால் அவனை இறுக அணைத்துக் கொண்டாள். அவன் அவள் மடியில் நெளிந்தான்.

அவனது மிருதுவான சுருண்ட தலைமுடியில் அவள் முத்தமிட்டு அவனைப் போக விட்டாள். பணியாட்கள் பின் தொடர அவன் அறையை விட்டு ஓடிச் செல்கையில் ருக்கையா மெஹ்ருன்னிஸா பக்கம் திரும்பிப் பெருமையுடன் கூறினாள். "நான் அவனைப் பெற்றெடுக்காமல் இருக்கலாம். இருந்தாலும் அவன் என் புதல்வன்தான்."

"நிச்சயமாக, மாட்சிமை பொருந்திய அரசி!" மெஹ் ருன்னிஸா முணுமுணுப்பாகச் சொன்னாள்.

"காபூலிலிருந்த உங்கள் நாட்களைப் பற்றிக் கூறு." ருக்கையா மெத்தையில் சாய்ந்து கொண்டு ஹுக்காவைக் கையிலெடுத்தாள்.

சதுரங்கம் விளையாடிக் கொண்டிருப்பவர்களின் கவனம் குலையா வண்ணம், அவ்வப்போது இடையில் சக்ர வர்த்தினி கேட்ட கேள்விகளுக்கு விடையளித்தவாறு மெஹ்ருன்னிஸா அடுத்த ஒரு மணிநேரம் மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தாள். அவள் வீடு திரும்பும் முன், ருக்கையா பழைய மாதிரி கலகலப்புடன் தோழமையுடனும் காணப் பட்டாள். கையை நீட்டி மெஹ்ருன்னிஸாவின் கன்னத்தை மெதுவாகத் தொட்டவாறு, "நீ அழகிய பெண்ணாக வளர்ந்து விட்டாய். உனக்கு என்ன வயது இப்பொழுது?"

மெஹ்ருன்னிஸா கூறினாள்.

"நல்லது. உன் திருமணத்திற்கு வேளை வந்துவிட்டது. சீக்கிரமே வயது முதிர்ந்தவளாகி விடுவாய்." சக்ரவர்த்தினி கையை அசைத்து அவளைப் போகச் சொல்லியபடி "இதே நேரம், நாளைக்கு வா." என்றாள்.

வீட்டிற்குச் சென்றவுடன் குர்ரம் பற்றித் தன் தாயிட மிருந்து மெஹ்ருன்னிஸா தெரிந்து கொண்டாள். அவன் ஸலீமின் மனைவி ஜகத்கோஸினி மூலம் ஸலீமிற்குப் பிறந்த மூன்றாவது புதல்வன். கடந்த இரண்டு வருடங்களாக ருக்கையாவையே தன் தாயாராக நினைத்தவாறு, அவள் மாளிகையிலேயே வசித்து வருகிறான். அவன் பிறப்பு அரசசபை உறுப்பினர்களுக்கும் வயதாகி வரும் சக்ரவர்த்திக் கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்ததால், அப்பர் அவனுக்கு குர்ரம் — "மகிழ்ச்சி" எனப் பெயரிட்டிருக்கிறார்.

அவன் பிறந்தவுடன், ருக்கையா சுல்தான் பேகம் அவன் தன் பொறுப்பில் இருக்கவேண்டும் என்று உரிமையுடன் வற்புறுத்தினாள். தன் மனைவி வேண்டிய எதையும் மறுக்க இயலாத அக்பர், அந்தக் குழந்தையைத் தாயிடமிருந்து பிரித்துத் தன் பாதுஷா பேகம் ருக்கையாவின் பொறுப்பில் கொடுக்கச் சொல்லி உத்திரவிட்டார். ஆனால் ஏன் இந்தக்

குழந்தை? மெஹ்ருன்னிஸா ஆச்சரியப்பட்டாள். ஸலீமிற்கு இதற்கு முன் இரண்டு மகன்கள் பிறந்துள்ளனர். ஆனால், இரும்பைப்போல் மன உறுதி கொண்டவளும், ருக்கையாவின் அதிகாரத்தை அவ்வப்போது எதிர்த்து வந்தவளுமான, ஸலீமின் இரண்டாவது மனைவி இளவரசி ஜகத்கோஸினிக் குப் பிறந்த இந்தக் குழந்தையே தனக்கு வேண்டும் என்று ருக்கையா விரும்பினாள். அவள் தாயார் பேசிக் கொண்டி ருக்க மெஹ்ருன்னிஸா தனக்குள் புன்னகைத்துக்கொண்டாள். ருக்கையா கொடுரமானவள், இரக்கமில்லாதவள், மேலும் பயங்கரமானவளும் கூட. ஸலீமின் மனைவியாக அவள் அந்தப்புரத்திற்கு வந்த புதிதிலேயே, இளவரசி ஜகதகோஸினி ருக்கையாவிடம் நல்ல உறவுடன் இருந்திருக்க முயன்றிருக்க வேண்டும். இப்பொழுது அவளது அகந்தையால் அவள் குழந்தை அவளிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டது.

சில மாதங்கள் கழிந்தன. தன்படிப்பு முடிந்தவுடன் புத்தகங்களை வைத்துவிட்டு, ஆவலுடன் தினந்தோறும் மெஹ்ருன்னிஸா பேரரசின் அந்தபுரத்திற்குச் சென்றாள். சிறிது சிறிதாகச் சக்ரவர்த்தினி அவளுடன் பழகும் முறையில் மாற்றம் தெரிந்தது. ருக்கையா அவளைக் குழந்தை போல் இப்பொழுதெல்லாம் நடத்துவதில்லை. அந்த சாம்ராஜ்ஜி யத்தில் சக்ரவர்த்தினிக்குச் சொந்தமான நிலங்கள் பற்றிய கணக்குகளுடன், கணக்கர்கள் அவளைப் பார்க்க வரும் போதும் மெஹ்ருன்னிஸாவை அந்த அறையில் இருக்க அனுமதித்தாள் "கவனமாகப் பார்த்து நீயும் கற்றுக்கொள்" என்று அவளிடம் கூறுவாள். "ஒரு பெண் முற்றிலும் ஒரு ஆணைச் சார்ந்தே இருக்கக் கூடாது. பணத்திற்காகவும் சரி, அன்பிற்காகவும் சரி."

இளவரசர் குர்ரம் பற்றிய விஷயங்களில் மெஹ்ருன்னிஸா வின் உதவியை ருக்கையா அடிக்கடி நாடத்தொடங்கினாள். சக்ரவர்த்தினி அந்த சிறிய பையனைப் பொறாமையுடன் பாதுகாத்து வந்தாள். எங்கே அவன் அன்பைப் பெற்றுவிடு வார்களோ என்று அவனருகே எவரையும் அண்டவிடுவ தில்லை. ஒரு நல்லகுடியில் பிறந்த ஒருவரின் மனைவியை

அவனுக்கு நான் முழுவதும் பணிவிடை செய்ய நியமித்தாள். அவள் நினமும் காலைச் சூரியோதயத்திலேயே அந்தப்புரத்திற்கு வந்து தன் கடமைகளைத் துவக்கி, இரவு குழந்தை குர்ரம் படுத்துறங்கிய பின்னரே திரும்பிச் செல்வாள். ஆனால் சில நினங்கள் வீட்டில் வேலை இருந்ததால் அவள் வர முடியாவிட்டால் சக்ரவர்த்தினி வேண்டா வெறுப்பாக, மெஹ்ருன்னிஸாவைக் குழந்தையைப் பார்த்துக் கொள்ளச் செய்வாள். நாளாக ஆக, அரசி மெஹ்ருன்னிஸாவை முழுமையாக நம்பத் தொடங்கினாள்.

சாதாரணமாகச் சிரான மனத்துடன் இருக்கும் ருக்கையா குழந்தையிடம் அவளுக்கிருந்த அளவற்ற ஈடுபாட்டால், அவனது தாயார் இளவரசி ஜகத்சேரஸினியையே வாரத்தில் சில நாட்களுக்குச் சிறிது நேரத்திற்கு மட்டுமே குழந்தையைப் பார்க்க அனுமதித்தாள். ருக்கையாவின் நிவிரமான கண்காணிப்பில் ஜகத்கோஸினி தன் மகனைப் பார்க்க வரும் பொழுதெல்லாம் மெஹ்ருன்னிஸா ஒரு ஓரம் நின்று பார்த்துக் கொண்டிருப்பாள். பணிவிடை செய்ய அங்கிருக்கும் மற்றப் பெண்களைப் போல் மெஹ்ருன்னிஸாவையும் பாவித்து, ஜகத்கோஸினின் அலட்சியம் செய்வாள். ஆனால் கடைசியில் ஒருநாள் ஸலீமின் மிகுந்த செல்வாக்குடைய இந்த மனைவியை மெஹ்ருன்னிஸா நேருக்குநேர் சந்திக்க வேண்டி வந்தது.

ஒருநாள் பிற்பகல், குர்ரம் யாருக்கும் அடங்காமல் பிடிவாதம் பிடித்துத் தூங்க மறுத்து விளையாடிக் கொண்டிருக்க வேண்டும் என்று அடம் செய்தான். அவனது தொடர்ந்த பேச்சுகளால் சக்ரவர்த்தினிக்குச் சோர்வு ஏற்படவே, மெஹ்ருன்னிஸாவைக் குர்ரமை அழைத்துக்கொண்டு அந்த மாளிகையைச் சார்ந்த பூங்காவில் நிழலில் அமர்ந்து விளையாடும்படி அனுப்பி வைத்தாள்.

அவர்கள் வராந்தாவில் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு அந்தத் தோட்டத்தின் ஒரு மூலையில் உள்ள நீருற்றில் சூரிய ஒளி பட்டு வானவில்போல் ஒளிர்வதைப் பார்த்த வண்ணம்

இருந்தனர். இன்னொரு மூலையில் அடர்ந்த கிளைகளுடன் கூடிய ஒரு அரசமரம். சில அந்தப்புரத்துப் பெண்கள் தங்கள் பாவாடையை முழங்கால் வரை மடித்து விட்டவாறு அந்த மரத்தினடியில் அமர்ந்திருந்தனர். அவர்கள் மருதாணியினால் தங்கள் கால்களிலும் பாதங்களிலும் விதவிதமாக அழகிய வடிவங்களை வரைந்து கொண்டிருந்தனர். ஒரு பெண் மற்றொரு பெண்ணின் சோலியை இறக்கி அவள் தோள்கள் தெரியும்படிச் செய்வதை மெஹ்ருன்னிஸா பார்த்தாள். பின் அரைத்த மருதாணி விழுதை ஒரு கூம்பிய இலையினாலான குப்பியில் வைத்து, அவள் தோள்களில் அழகிய வடிவங்கள் வரைந்தவாறு தொடர்ந்து அவள் மார்பிலும் இறக்கி வரைந்துவிட்டுப் பின் மற்றொரு தோளிலும் விதவிதமாக அழகு செய்தாள். மருதாணி காய்ந்தபின் அதை அலம்பி விட்ட பிறகு அந்தப் பெண்மணியின் தோள்களிலும் மார்பிலும் சிவந்த பூக்கள் கூட்டம் போல் காணப்படும். அவள் சக்ரவர்த்தியின் அடிமைப்பெண். குறைந்த உடைகளே அணிந்து மருதாணிப் பூச்சு நன்கு தெரிய, சக்ரவர்த்தியின் முன்னிலையில் அன்றிரவு நடனமாட இருக்கிறாள். சக்ரவர்த்தி அரசாங்க அலுவல்களில் அதிக நேரம் செலவிட்டாலும் இவ்வாறு அடிமைப் பெண்களின் நடனத்தைப் பார்த்து ரசிக்கவும் நேரம் ஒதுக்கி விடுவார்.

அந்தச் சில நிமிடங்களுக்காக, அந்தப் பெண்களுக்கு வாழ்க்கை முழுவதும் சுகமாக வாழ வேண்டிய அளவிற்கு நிலபுலன்களும், நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு அழகான விலைமதிப்புள்ள ஆபரணங்களும் பரிசாகக் கிடைக்கும். சக்ரவர்த்தினி ருக்கையாவிற்கு இருப்பது போன்ற அனுகூலமான சூழ்நிலை வேறு ஒருவருக்கும் இல்லை. ருக்கையா அக்பரைச் சிறு வயதிலிருந்தே அறிவாள். மேலனில், அவர்கள் இருவரும் நெருங்கிய உறவினர்கள். அவர்களுக்கிடையே ஒருநாள் திருமணம் நடக்கும் என்று தெரிந்தே ஒன்றாக வளர்ந்தனர். தனது திருமணமான புதிதில் இந்த நாட்கள் பற்றிச் சக்ரவர்த்தினி பேசுவதே இல்லை. அக்பர் அவளை அப்பொழுது நிவிரக் காதலுடன் பார்த்திருப்பாரா? மற்றப் பெண்களிடம் கிடைக்காத

சுகத்தை அவளிடம் பெற்றிருப்பாரா? அல்லது அவர்கள் உறவு எப்பொழுதும் இப்படியே, சுகமானதாக, தொடர்ச்சியாக, உறுதியானதாக அவர்கள் உறவை எதுவும் அசைக்க முடியாது என்ற நம்பிக்கையுடன் இருந்ததா?

ருக்கையாவிடம் அக்பர் வைத்திருக்கும் பேரன்பிற்கு இணையாக அந்தப்புரத்தில் இன்னும் ஒரே ஒரு பெண்மணிடம் தான் வைத்திருந்தார். ருக்கையாவிற்கும் நெருங்கிய உறவான ஸலீமா சுல்தான் பேகம், அக்பரின் மாமா குல்ருக் (Gulrukh)ன் மகள். அக்பர் ஸலிமாவின் இரண்டாவது கணவர். ருக்கையாவின் சம்மதத்துடனேயே அவர்கள் திருமணம் நடந்தது என்று அந்தப்புரத்தில் உலவும் வதந்திகளின் மூலம் மெஹ்ருன்னிஸா அறிவாள். அந்த இரண்டு பெண்களிடையே மிகுந்த நட்புடனும் மரியாதையுடனும் கூடிய உறவு இருந்தது. அவர்கள் சிறுவயதிலிருந்தே ஒருவரை ஒருவர் நன்கு அறிவார்கள். அவர்களுக்கிடையே பொறாமையோ வெறுப்போ கிடையாது. அக்பரின் அன்பை அவர்கள் பகிர்ந்து கொண்டனர். வெளியே சொல்லாமலும், தெரியாமலும் இருந்தாலும் அக்பரின் அன்பின் பெரிய பகுதி பல காலமாக அவர் மனைவியாக இருக்கும் ருக்கையாவிற்கே. ஆனால் ருக்கையா போல், எவ்வளவுதான் மற்றொரு பெண் அவளுக்குத் தெரிந்தவளாகவும் அவன் அன்பிற்குரியவனாகவும் இருந்தாலும், ஸலீமின் அன்பை மற்றொரு பெண்ணுடன் பகிர்ந்து கொள்ளத் தன்னால் இயலாது என்றுதான் மெஹ்ருன்னிஸா நினைத்தாள்.

குர்ரம் எழுந்து ஒரு பூக்கள் நிறைந்த பகுதிக்கு ஓடுவதை மெஹ்ருன்னிஸா பார்த்தாள். ஒரு குச்சியை எடுத்து பூச்செடிகளின் அருகே தோண்டி, மண்கட்டிகளை வீசி எறிந்தான். தனது மருதாணியிடப்படாமல் இருக்கும் கரங்களை மெஹ்ருன்னிஸா பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது திருமணநாளன்று அவள் கைகளிலும் சிவந்த மருதாணிப் பூச்சு இருக்கும். ஒருநாள் ஸலீமிற்காக தன் உடல் முழுவதும் மருதாணியால் அழகு செய்து கொள்வாள். அப்படி எண்ணம் எழவே, அவள் வெட்கித்துத் தன் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டாள்.

மணல் கட்டிகள் தன் மேல் விழுவது உணர்ந்து அவள் நிமிர்ந்து பார்த்தாள். இளவரசன் குர்ரம் இன்னும் தீவிரமாக மண்ணைத் தோண்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவனருகே சென்று அவனைத் தூக்க முயற்சித்தபொழுது அவன் பொறாமையாகக் கத்தினான்.

"என்னை விடு, நிஸா, என்னை விடு, நான் உனக்கு கட்டளையிடுகிறேன்."

"மதிப்பிற்குரியவரே, தயவு செய்யுங்கள். நீங்கள் இவ்வாறு மண்ணில் விளையாடக்கூடாது. அது தடை செய்யப்பட்டுள்ளது என்று உங்களுக்கே தெரியும். தயவு செய்து, வராந்தாவிற்குத் திரும்பி வாருங்கள்."

"இல்லை" அவன் முகத்தைச் சுளித்து அழுவதற்குத் தயாராவது போல் மீண்டும் கத்தினான்.

மெஹ்ருன்னிஸா அவனை அவசரமாகத் தரையில் இறக்கினாள். அவன் அழுகை அந்தப்புரம் முழுவதையும் எழுப்பி விட்டு விடும். "சரி, நாம் வேறு ஏதாவது செய்யலாம். நீங்கள் என்ன செய்ய விருப்பப்படுகிறீர்கள்?"

"என்னுடன் விளையாடு, நிஸா."

அவன் அழாமல் இருப்பதற்கு எதையும் செய்யத் தயாரான நிலையில் அவள் வினவினாள். "நாம் என்ன விளையாடலாம், மதிப்பிற்குரியவரே?"

"கண்ணாம்மூச்சி விளையாடலாம்." குர்ரம் உடனே பதிலளித்தான். "நான் போய் ஒளிந்து கொள்கிறேன்."

மெஹ்ருன்னிஸா முனகினாள். குர்ரமின் கண்ணாம்மூச்சி விளையாட்டு என்பது கற்கள் பதித்த பாதைகளின் ஓரங்களில் வளர்ந்திருக்கும் சின்னப் புதர்களின் பின்னால் மறைந்து கொள்வது அல்லது முற்றத்திலுள்ள 'செனார்' மரத்தின்மீது ஏறுவது. எதுவானாலும் அவன் உடைகள் அழுக்கடைந்து விடும். தன்னுடைய சுத்தமாக துவைத்து இஸ்திரி இடப்பட்ட பாவாடையையும் சோலியையும் பார்த்து, இவையும் அசுத்தமாகி விடும் என்று மெஹ்ருன்னிஸா

வருத்தத்துடன் நினைத்துக் கொண்டாள். ஆனால் அவன் சொல்வதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும். ஏனெனில் அவன் இளவரசன்.

"நான் ஐம்பது வரை எண்ணுகிறேன். நீங்கள் ஒளிந்து கொள்ளுங்கள், மதிப்புக்குரியவரே "மெஹ்ருன்னிஸா ஒரு தூணின் பக்கம் திரும்பி, அந்தக் குளிர்ந்த சலவைக் கல்லின் மேல் முகத்தை பதித்துக் கண்களை மூடிக் கொண்டு எண்ணத் தொடங்கினாள்.

"..... நாற்பத்து எட்டு... நாற்பத்து ஒன்பது... ஐம்பது... தயாரா?"

"ஆமாம்," ஒரு சிறிய குரல் ஒலித்தது.

தனது வலப்பக்கத்தூப் புதருக்கு மேல் குர்ரமின் தலைப் பாகையில் இருக்கும் நாரையின் சிறகைக் கண்ட மெஹ்ருன்னிஸா, தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள். அதற்கு எதிர்ப்புறமாகத் தன் கைகளாலும் முட்டியாலும் தவழ்ந்தவாறே நகர்ந்து கூப்பிட்டுக் கொண்டே சென்றாள். "நீங்கள் எங்கு இருக்கிறீர்கள், மதிப்பிற்குரியவரே?"

சில நிமிடங்களில் அவள் சூடாகவும், அழுக்காகவும் உணர்ந்தாள். அவள் பாவாடையில் புல் ஒட்டிக்கொண்டிருக்க, தலைமுடி, கொண்டையிலிருந்து பிரிந்து நெற்றியில் ஒட்டிக் கொண்டிருந்தது. வியர்வை படிந்த தன் முகத்தை அவள் துடைத்துக் கொள்ள முயல, முகத்தில் மண் கரை படிந்தது. அந்த ஈரமான புல்தரையில் தவழ்ந்தவாறு இன்னும் சிறிது நேரமாவது அவனைத் தேடுவதுபோல் நடிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

குர்ரம் கலகலவென்று சிரிக்க, மெஹ்ருன்னிஸா, புதரின் இடையே, அவனைப் பார்க்கத் திரும்பினாள். அவன் மீண்டும் தலை திருப்பிய பொழுது தன் எதிரே அழகிய வேலைப்பாடு செய்த செருப்புகளை முதலில் பார்த்தாள். அவன் பார்வை மெதுவாக மேலே ஏற, முத்துக்கள் வைத்து தைத்த வெளிர் நீலநிறப் பாவாடை, அதன்மேல் நகைகள் அணிந்த கைகள் படர்ந்திருக்க மெல்லிய மஸ்லின் முகத்தினை காற்றில் படபடத்தது. அந்தப் பெண்மணியின் முகம் ஒரு தனிப்பட்ட முறையில் மிகவும் அழகாக இருந்தது. அவள்

உடல் நிறம் நல்ல பழுப்பு நிறமாகவும், வில்போல் வளைந்த புருவங்களுக்குக் கீழே அழகிய கருமைநிற கண்கள் ஒளி வீச, அழகிய உதடுகளுடன் கூடிய வாய் அவள் அழகை மேலும் கூட்டியது. அவளது மொத்த அழகையும் எடுத்துக் காட்டுவது போல் அவள் உயர்ந்த முகவாய் அமைந்திருந்தது.

மெஹ்ருன்னிஸா பாவாடை தடுக்க, அவசரமாக எழுந்து நின்றாள். "மாண்புக்குரியவரே, நீங்கள் வருவதை நான் பார்க்கவில்லை."

"நிச்சயமாகத் தெரிகிறது." ஜகத்கோஸினி கூறினாள் "நீ யார்?"

"நீ யார்?"

தன்னுடைய கொழுத்த கைகளை இடுப்பில் வைத்து நிமிர்ந்து நின்று கொண்டிருக்கும் குர்ரமை இருவரும் திரும்பிப் பார்த்தனர். மெஹ்ருன்னிஸா தன்னையறியாமல் புன்னகைத்தாள். எரிச்சல் ஏற்படும் போதெல்லாம் குக்கையா இப்படித்தான் நின்று கொண்டிருப்பாள். அவன் திரும்பி ஜகத்கோஸினியைப் பார்த்தான்.

ஜகத்கோஸினியின் மனதிலிருந்த வலி ஒரு கணம் முகத்தில் தெரிந்தது. பிறகு அவள் சமாளித்துக் கொண்டு கூறினாள். "நான் இளவரசி ஜகத்கோஸினி."

உன் தாயார் என்றில்லாமல் இளவரசி ஜகத்கோஸினி என்று அவள் கூறியதை மெஹ்ருன்னிஸா வருத்தத்துடன் கவனித்தாள். இருந்தாலும் இவள் இங்கு என்ன செய்கிறாள்? முன்னறிப்பின்றி வந்தால் குக்கையாவிற்கு அளவற்றக் கோபம் வரும்.

எதையும் பொருட்படுத்தாமல், தோட்டத்தின் வளைவு ஒன்றுடன் கூடிய வாயிற்புறத்தை நோக்கிக் குர்ரம் கையை நீட்டி, "நீ போய் விடு. நான் நிஸாவுடன் விளையாடிக் கொண்டிருக்கிறேன்."

"உன்னைப் பார்க்க வந்திருக்கிறேன், குர்ரம்." ஜகத் கோஸினி பாவாடையைச் சிறிது தூக்கி அந்தச்சிறிய புதரைத் தாண்டி அவனருகில் வந்தாள். கற்பாதைகளைக் கடந்து ஒரு கையை நீட்டினாள்.

குர்ரம் அவள் நீட்டிய கையைத் தட்டி விட்டு, மெஹ்ருன்னிஸாவிடம் ஓடினான். மெஹ்ருன்னிஸாவின் பாவாடையைப் பிடித்து கொண்டு கூறினான். "நீ போய் விடு, இல்லாவிடில் அம்மாவிடம் சொல்வேன்."

"தயவுசெய்து, வேண்டாம்... நான் போய்விடுகிறேன்." அவள் கண்களைத் தூக்கி மெஹ்ருன்னிஸாவை குரூரமாகப் பார்த்தாள். "இங்கு நடந்தது பற்றிச் சக்ரவர்த்தினியிடம் நீ எதுவும் சொல்லக் கூடாது, தெரிந்ததா?"

"சரி மாட்சிமை பொருந்தியவரே" மெஹ்ருன்னிஸா முணுமுணுத்தாள்.

"நீ யார்? குர்ரமின் தாதி எங்கே?"

"மிர்ஸா கியாஸ் பெக் என் தந்தை, மதிப்பிற்குரியவரே!"

"ஓ?" அவளது அழகிய புருவங்கள் உயர்ந்தன. "உன் தந்தையைப் பற்றி நான் கேள்விப்பட்டதில்லை. உடனே குர்ரமின் தாதியை வரச்சொல்."

மெஹ்ருன்னிஸாவின் முகம் சிவந்தது. அவள் ஒரு பெரிய மூச்சு எடுத்துத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினாள். "மதிப்பிற்குரிய வரே, சக்ரவர்த்தினி இளைப்பாறி எழுந்தவுடன் எங்களை அழைப்பார். இப்பொழுது நாங்கள் உள்ளே செல்ல வேண்டும்."

ஜகத்கோஸினி தலையசைத்தாள். "ஞாபகம் இருக்கட்டும், ஒரு வார்த்தை கூடச் சக்ரவர்த்தினிக்குப் போகக் கூடாது." விரலை உயர்த்திக்கண்டிப்பது போல் ஆட்டி அவள் மேலும் கூறினாள். "நீ ஏதாவது சொன்னாயானால் உன் வாழ்க்கையையே துன்பமாக்கிவிடுவேன்."

"மதிப்பிற்குரிய தங்கள் வார்த்தைகளுக்கு நான் கட்டுப்பட்டுதான் நடக்க வேண்டும்." மெஹ்ருன்னிஸா கூறினாள். அவள் பின் கைகளைத் தாழ்த்திக், குர்ரமின் சுருண்ட முடிகளைக் கோதி விடுவதைப் பார்த்து ஜகத்கோஸினியின் முகம் வெறுப்புடனும், வருத்தத்துடனும் சுருங்குவதைப் பார்த்தான். ஜகத்கோஸினியிடம் அவளுக்கு ஏற்பட்ட

பச்சாதாபம்கூட அவருடைய கடுமையான வார்த்தைகளைக் கேட்டவுடன் மறைந்து விட்டது. இளவரசிக்கு அவள் தந்தையைப் பற்றி வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நிச்சயமாக மெஹ்ருன்னிஸாவை நினைவு வைத்திருப்பாள். குர்ரம் அவள் காலை மேலும் இறுகக் கட்டிக் கொள்ள அவள் குனிந்து அவனைத் தூக்கிக் கொண்டாள். அவள் தோள்களில் தலையைச் சாய்த்தவாறு அவன் தன் தாயாரை ஆர்வத்துடன் பார்த்தான்.

இளவரசி திரும்பி அந்தப் பூங்காவை விட்டு வெகு வேகமாக வெளியேறினாள். மெஹ்ருன்னிஸா ஒரு பெரிய வேப்பமரத்தின் நிழலில் குர்ரமை அழைத்துச் சென்று அமர்ந்து கொண்டாள். இளவரசன் அவள்மடியில் தலை வைத்துச் சீக்கிரத்தில் உறக்கத்தில் ஆழ்ந்தான். அழகிய மஞ்சள் நிறச் சூரிய காந்திப் பூக்களின் மேல் சூரியக் கிரணங்கள் நடனமாடுவதை அவள் வெறித்துப் பார்த்தவாறு அவள் இருந்தாள். முடிவில் ஸலீமின் இரண்டாவது மனைவியுடன் பேசி விட்டாள். ஸலீமின் அந்தப்புரத்தில் ஜகத்கோஸினிதான் மிகுந்த அதிகாரம் படைத்தவள். இளவரசரை அவள் தன் கட்டை விரலில் வைத்திருக்கிறாள் என்று அந்தப்புரத்தி னுள்ளோர் பேசுவதுண்டு. ஆனால் நிச்சயம் அவள் அடிப் படைப்பண்பு கூடத் தெரியாதவள், மிகுந்த கர்வம் கொண்ட வளும் போலும்.

ஒருவேளை அவளால் இதை எல்லாம் மாற்ற முடியும் என்று மெஹ்ருன்னிஸா மெதுவாக நினைத்துப் பார்த்தாள். அவர்கள் காபூலிலிருந்து திரும்பி வந்த பின், ஸலீம் அவளை இதுவரை பார்க்கவில்லை. அவள் அரண்மனையிலிருந்து மாலையில் வீட்டிற்குச் சென்றபின் மாதத்திற்கு ஒரு முறை மாலை வேளைகளில் ஸலீம் ருக்கையாவின் மாளிகைக்கு வருவான். மெஹ்ருன்னிஸாவும் ஸலீமை சந்திப்பதற்கு மிகுந்த அவசரம் காட்டவில்லை. கடந்த சில மாதங்களாக, அந்தப் புரத்துப் பெண்களிடமிருந்து, அங்கு தினசரி நடவடிக்கைகள் எப்படி நடக்கின்றன என்பது பற்றிக் கேட்டும், பார்த்தும் அவள் அறிந்துகொண்டு வந்தாள். அவள் தகப்பனாருடன், அவரது தினசரி வேலை முடிந்த பின், அரசியல் சம்பந்தப்

பட்ட விஷயங்கள் பற்றி அவருடன் உரையாடினாள். அவள் தாயார் பேரரசைச் சார்ந்த பெண்கள் பகுதியிலுள்ள மற்ற அரண்மனைகளுக்குப் போய் வருவதால், அவளிடமிருந்து அங்கு நடப்பவை பற்றி கேட்டு அறிந்து கொண்டாள் — அந்தப்புரத்து வாழ்க்கை, ஸலீமின் விருப்பு வெறுப்புகள், அரச சபையின் நிலைமை, எனப் பல விஷயங்கள் பற்றி. கியாஸ் சில சமயங்களில் உணர்ச்சி வசப்படுபவர் ஆனாலும் அவருக்கிருக்கும் பொறுமைக் குணத்தைத் தன் பெண்ணும் கிரகித்துக் கொள்ள வைத்தி ருந்ததால், அவள் அந்தக் குணத்தை முழுத் திறமையுடன் தன் நடவடிக்கைகளில் உபயோகித்தாள்.

ஜகத்கோஸினியின் கொடுரமான வார்த்தைகளால் தூண்டப்பட்டவளாய், இனவரசர் ஸலீமைக் கவரவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று மெஹ்ருன்னிஸா யோசிக்கத் துவங்கினாள். பக்கத்திலிருந்த நீர்த்தொட்டியில் தன் பிரதி பலிப்பைப் பார்த்தாள். அவள் மிகவும் அழகானவள் என்று பலர் அவளிடம் கூறியிருக்கிறார்கள். ஆனால், இது ஸலீமிற் குப் போதுமா? ஒரு புல்லைப் பிடுங்கி எடுத்து விரல்களால் அதைத் தடவியவாறு, புருவங்களை நெறித்து அவள் சிந்தித்தாள்.

அரச மரத்நினடியில் அமர்ந்திருக்கும் அத்தப் பெண் களைப் பார்த்தாள். அந்தப் பெண் இப்பொழுது தன் முதுகு முழுவதும், கால்களின் பின்புறமும் மருதாணி இட்டிருந்தாள். அவள் கைகளை விரித்து மருதாணி காய்வதற்காக குப்புறப் படுத்திருந்தாள். இந்தக் கவரும் சக்தி பற்றி இந்தப் பெண்கள் நன்கு அறிவார்கள். அதைப் பாதுகாத்தும் வந்தனர். நன்கு உரையாடுவதின் முக்கியத்துவம் பற்றியும், மற்றவர்கள் ஆறுத லாக உணரும்படி நடக்கும் விதம் பற்றியும், ருக்கையாவிட மிருந்து அவள் பார்த்து கற்றிருந்தாள். அந்தப்புரத்தின் இந்த மற்றப் பெண்கள் மூலம் சரீர சம்பந்தமான அழகு மட்டும் கொடுக்கக்கூடிய உத்தரவாதத்தையும் கண்டறிந்தாள்.

பத்து நிமிடங்கள் கழித்து, அவள் புன்னகைத்தவாறு தன் மடியில் இருக்கும் அந்தச் சுருண்ட முடியுடன் கூடிய தலையைப் பார்த்தாள். ஒருவேளை அவள் கணவனும்

மகனும் மெஹ்ருன்னிஸாவின் காலடியில் இருக்கும்பொழுது ஜகத்கோஸினி இன்னும் சிறிது அதிகக் கவனத்துடன் இருப்பாள்.

பேரரசைச் சார்ந்த பூங்காவில் அமர்ந்து மெஹ்ருன் னிஸா இவ்வாறு கனவு கண்டுகொண்டிருக்கும் வேளையில், திவான்—ஈ—ஆம் (மக்கள் சபை)யில் அலிகுலி கான் இஸ்தாஜ்லு (Aliquli Khan Istajalu) சக்ரவர்த்தியின் சந்நிதானத்திற்கு வருவது அறிவிக்கப்பட்டது. அவள் மக்கள் சபையில் மெதுவாக நுழைந்து அரியணையை நெருங்கு கையில் தனது வலது கையின் பின்புறம் தரையில் படுமாறு வைத்துக் குனிந்து வணங்கினான். பின் கையைத் தூக்கித் தன் நெற்றியில் வைத்தவாறு அக்பர் எதிரில் நன்கு நிமிர்ந்து நின்றான்.

சக்ரவர்த்தி தன் தலையைச் சிறிது சாய்க்கையில், அலிகுலி நிருட்டுத்தனமாகத் தன் ஆலோசகரும், வழி காட்டியும் அக்பரின் இராணுவத்தின் மிகப் பெரிய தலைமை அதிகாரி கான்-ஐ-கானன்—ஐத் திரும்பிப் பார்த்தான். அப்துர் ரஹீம் (Abdur Rahim) தலையசைத்து அவன் செய்ததை ஆமோதித்தார். அலிகுலி 'தஸ்லீம்' முறைப்படி வணங்குவதை மிகச் சரியாகச் செய்திருக்கிறான்.

அக்பரின் அவைக்கு அலிகுலி புதியவன். கியாஸ் பெக் மாதிரி இவனும் பாரசீகத்தை விட்டு இந்தியாவிற்கு ஓடி வந்தவன்தான். ஆனால் 1578ல் ஷா இரண்டாம் இஸ்மாயில் கொலை செய்யப்பட்டபிறகு ஓடி வந்தவன். அவன் ஷாவிற்கு ஒரு பணியாளனாக இருந்தான். ஆனால் அது தனக்கு ஏற்ற தொழில் இல்லை என்றும், ஒரு போர்வீரனாக ஆவதே தன் லட்சியம் என்பதையும், உணர்ந்திருந்தான். அவன் முல்தான் (Multan) என்ற இடத்தை அடைந்து, அங்கிருந்த அக்பரின் இராணுவத் தலைமை அதிகாரியின் படைகளில் சேர்ந்து கொண்டு, இந்து சமவெளியில் உள்ள தாட்டா (Thatta)வின் அரசரான மிர்ஸா ஜானி பெக் (Jani Beg) மீது, அவர்கள் தொடுத்த போரில் பங்கு கொண்டான். ஆறு மாதக் கடுமையான போருக்குப்பின் தாட்டா அக்பரின் இராணுவத்தின் கீழ் வந்தது. அலிகுலியும் இந்தப் போரில்

நல்ல பெயரெடுத்தான். அப்துர் ரஹீம் —இராணுவத் தலைமை அதிகாரி — அலிகுலியின் திறமையைப் பாராட்டி அக்பருடைய சபையில் அவனை அறிமுகப்படுத்துவதாக வாக்களித்தார். இப்பொழுது அந்தப் போர்வீரன் மதிப்பிற் குரிய சக்ரவர்த்தியின் முன்னிலையில் நிற்கிறான்.

"இந்தத் தைரியமான போர்வீரனைப் பற்றித்தான் என்னிடம் சிலாகித்துப் பேசினாயா, அப்துர் ரஹீம்?" அக்பர் வினவினார்.

"ஆமாம், மாட்சிமை பொருந்தியவரே!"

அக்பர் அலிகுலியைப் பார்த்தார். முப்பது, முப்பத்தி ஐந்து வயதுடையவனாக, உயரமாக, அகன்ற தோள்களுடன் திடகாத்திரமானவனாகச் சூரிய ஒளியால் கருத்த சரீரத்துடன் கண்களில் சிறிதும் அச்சமில்லாத பார்வையுடன் கூடியவனாக இருந்தான்.

"அரியணைக்கு நீ காட்டிய கடமையுணர்ச்சியையும் விசுவாசத்தையும் பார்த்து யாம் பெருமை அடைகிறோம்." அக்பர் கூறினார்.

அலிகுலிக்காக ஒரு அழகிய வேலைப்பாடு செய்த வாளையும், கௌரவிப்பதற்காக கொடுக்கும் அங்கியையும் ஒரு சேவகன் எடுத்து வந்தான். மேலும் அவனுக்கு இறுநூறு குதிரைகளும் காலாட்படைகளும் அடங்கிய 'மான்சாப்' மானியமும் அக்பர் வழங்கினார். பேரரசரின் இந்தப் பரிசுகளினால் பெரிதும் மகிழ்ச்சி அடைந்த அலிகுலி மண்டியிட்டுக் குனிந்து வணங்கிச் சக்ரவர்த்திக்கு வந்தனம் தெரிவித்தான்.

அக்பர் மகிழ்ச்சி அடைந்தார். "உனக்கு மேலும் மரியாதைகள் கிடைக்கவிருக்கிறது, அலிகுலி. இந்த சாம்ராஜ்யத்தின் இராணுவத்தில் பல வருடங்கள் நீ உழைப்பாய் என்று நம்புகிறேன்."

"நிச்சயமாக, மாட்சிமை பொருந்தியவரே!" மீண்டும் வணங்கி விட்டு, பின்புறமாகவே நடந்து மக்கள் சபையை விட்டு அலிகுலி வெளியேறினான்.

அக்பர் யோசித்தவாறு அவன் செல்வதைப் பார்த்தார். அந்தப் பாரசீக இளைஞனைப் போல் தைரியமான, நுணிச்சலான, ஆனால் அமைதியற்ற பலரை அவர் பார்த்திருக்கிறார். சாதாரணமாக அதீத உணர்ச்சி வசப்படாத அப்துர் ரஹீம் இந்த இளைஞனைப் பற்றி வெகுவாக சிலாகித்துப் பேசியிருக்கிறார். இன்னும் எத்தனைக் காலம் அலிகுலி அவர் ஆட்சியின் கீழ் வேலை செய்வான்?

ஒரு போர்வீரனுக்கு ஸ்திரத்தன்மை வேண்டும். முகலாய சாம்ராஜ்யத்தில் அவனை இருத்தி வைப்பதற்கு ஒரு பிடிப்பு வேண்டும். திருமணம் ஒரு நங்கூரமாக அமையும்.

மௌனமாக அக்பரின் கண்கள் அந்தச் சபையைச் சுற்றி வந்தது. இந்தப் பாரசீகப் போர்வீரனுக்கு ஏற்றவளாக அவர் சபையிலிருக்கும் பிரபுக்களில் யாருக்கு மகள் இருக்கிறாள்?

சக்ரவர்த்தியின் பார்வை சுற்றி வந்து திரும்பிக் கடைசியாக ஒருவர் மேல் பதிந்தது. அந்தப் பிரபுவின் குடும்பத்தின் விவரங்கள் பற்றித் தன் பரந்த ஞாபகசக்தியில் உள்ள விஷயங்களை யோசித்துப் பார்த்தார். தனக்குள்ளேயே மகிழ்ந்து சந்தோஷத்தில் தலையாட்டிக்கொண்டார். இது ஒரு நல்ல பொருத்தமாக இருக்கும். அன்று மதியத்திற்கு மேல் அவர் பாதுஷா பேகம் ருக்கையாவிடம் இதுபற்றிப் பேசவேண்டும். அவர் சரியான முடிவு எடுத்திருக்கிறாரா என்று அவள் கூறுவாள்.

சக்ரவர்த்தி கியாஸ் பெக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அத்தியாயம் நான்கு



அந்தப் புதல்வி, பாலைவனத்தில் பிறந்தவள்... மிகுந்த கவனத்துடனும் அக்கறையுடனும் கல்வியறிவு கொடுக்கப்பட்டவள். இசையில், நடனத்தில், கவிதை புனைவதில், ஓவியம் வரைவதில், அவள் இனத்திலேயே அவளுக்கு நிகராளவர் எவருமில்லை. நல்ல குணம் கொண்டவள், கலகலப்பாகப் பேசுவதில் தேர்ந்தவள், அவள் உள்ளம் விசாலமானது, மலர்ந்தது.

- Alexander Dow
The History Of Hindostan

"மிர்ஜா கியாஸ் பெக், பெரும் மதிப்பிற்குரிய சக்ரவர்த்தி அக்பர், அவர் சன்னிதானத்திற்கு உங்களை வரச்சொல்லி உத்தரவிடுகிறார்." மீர் தோஷக் — நிகழ்ச்சி அறிவிப்பாளர் உரத்த குரலில் அறிவித்தார்.

'திவான்-ஈ-காஸ்' — தனிப்பட்ட மேல்மட்டப் பிரபுக்கள் கூடும் சபையில் அரச சபை கூடியிருந்தது. கியாஸ் முன் வந்து, 'கோனிஷ்' முறைப்படித் தனது வலது உள்ளங் கையைத் தலைமேல் வைத்துக் குனிந்து சக்ரவர்த்தியை வணங்கினார். கோனிஷ் முறைப்படி வணக்கம் செலுத்துவதன் தாத்பரியம் என்னவெனில், அப்படி வணக்கம் செலுத்து பவர், தன் தலையை வினயத்துடன் அந்தப் பேரவைக்குச் சமர்ப்பிப்பது, அவரிடம் கோரப்படுகின்ற எந்தவித சேவை யையும் செய்யத் தயாராக இருப்பதாகத் தெரிவிப்பதாகும்.

கியாஸ் வணங்கி நிமிர்ந்தபின், நின்று கொண்டே யிருந்தார். சக்ரவர்த்தியின் எதிரில் உட்காருவதற்கு எவருக் கும் உரிமை கிடையாது. அப்படிச் செய்வது அந்தப் புனித மரபை மீறும் குற்றமாகும் என்று கியாஸ் நம்பினார்.

"மிர்ஜா பெக், ஒரு முக்கிய விஷயத்திற்காக உம்மை அழைத்தோம்."

"உங்கள் விருப்பம் எனக்கு கட்டளை, பேரரசே."

"திருமண வயதில் உனக்கு ஒரு பெண் இருக்கிறாளா?"

கியாஸ் ஆச்சரியத்துடன் அக்பரைப் பார்த்தார்.

"அவள் பெயர் மெஹ்ருன்னிஸா, மாட்சிமை பொருந்தி யவரே!" திரைக்குப் பின்னாலிருந்து குக்கையா கூறினாள்.

"ஆ... ஆமாம், மெஹ்ருன்னிஸா... மிக அழகான பெயர்." அக்பர் கூறினார். பின் கியாஸ் பக்கம் திரும்பினார்.

"இந்தச் சபையில் அலிகுலிகான் என்ற பெயருடைய மிகத் தைரியமான இளைஞன் ஒருவன் இருக்கிறான்."

"அந்தப் போர்வீரனை எனக்கு ஞாபகம் இருக்கிறது. மாட்சிமை பொருந்தியவரே!" ஜாக்கிரதையாக கியாஸ் பதிலளித்தார். ஆக இதற்காகத்தான் சக்ரவர்த்தி அவரை வரும்படி அழைத்திருக்கிறார்.

"யாம் அவனைக் கௌரவிக்க நிச்சயித்துள்ளோம், கியாஸ். உன் பெண்ணை அவனுக்குத் திருமணம் செய்வதை விட மேலான கௌரவம் என்ன இருக்கிறது? இது ஒரு நல்ல சம்பந்தம் ஆக இருக்கும். நீங்கள் இருவருமே பாரசீகத் தைச் சேர்ந்தவர்கள். ஒரே சரித்திரம் படைத்தவர்கள். ஒரே வழி மரபில் வந்தவர்கள். இந்தத் திருமணம் நடக்கவேண்டும் என்று யாம் விருப்பப்படுகிறோம்."

"அப்படியே, மாட்சிமை பொருந்தியவரே!"

சக்ரவர்த்தியின் விருப்பம், கட்டளைக்கு ஒப்பானது என்பது அவருக்குத் தெரியும். இதற்குச் சம்மதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அவர் அருமை மெஹ்ருன்னிஸா விற்குத் தகுந்த மணமகன் தேர்த்தெடுப்பது இப்பொழுது முடிந்துவிட்டது. அலிகுலியைச் சபையில் அறிமுகப்படுத்திய தினத்தன்றே அவனைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் அவருக்கு இருந்தது. ஆனால் திடீரென்று அவரை அறியாமல் அவருக்கு எழுந்த சந்தேகங்களை ஒதுக்கியவாறு கியாஸ் தலைவணங்கினார்.

"திருமணத்திற்கான ஏற்பாடுகளை உடனே துவங்கு கிறேன், மாட்சிமை பொருந்தியவரே!"

மாலை மங்கும் நேரத்தில், காலையில் சக்ரவர்த்தியுடன் நிகழ்ந்த சந்திப்பைப் பற்றிச் சிந்தித்தவாறே, கியாஸ் குதிரையை வீட்டை நோக்கிச் செலுத்தினார். குதிரை அந்த வழக்கமான பாதையில் மெதுவாகப் போய்க் கொண்டிருக்கக் காலையில் சக்ரவர்த்தியைச் சந்தித்ததிலிருந்து தன் மனதில் அலைபாயும் எண்ணங்களைக் கியாஸ் மீண்டும் நினைத்துப் பார்த்தார். பாதுஷா பேகம் ருக்கையாவிற்கும் இந்த விஷயத்தில் ஒரு பங்கு உண்டு என்பதில் அவருக்குச் சந்தேகமே இல்லை. அவளுக்கு இந்த விஷயத்தில் இருக்கும் ஆர்வத்தைச் சபையில் இடையில் பேசியதின் மூலம் அவள் தெரியப் படுத்தியிருக்கிறாள். நிச்சயம் எல்லாவற்றிலும் சிறந்ததைத் தான் சக்ரவர்த்தியும் விரும்புவார் அல்லவா? சமையல் அடுப்புகளிலிருந்து வரும் சாம்பல் நீல நிறம் கலந்த புகை, கியாஸைச் சுற்றிலும் அந்த அஸ்தமன ஒளியில் கலந்தது. அந்த எரியும் மரத்துண்டுகளின் காரமான புகையின் மணம், ஒரு மரத்தினடியில் மெஹ்ருன்னிஸாவை விட்டு விட்டு, அவளை மறுபடியும் பார்க்க மாட்டோமே என்று எண்ணிக் கலங்கியவாறு நின்று கொண்டிருந்த அந்த நாளின் ஞாபகத்தைக் கியாஸிற்கு இளறிவிட்டது. இப்பொழுது பல வருடங்கள் கழித்து, அவள் மறுபடியும் அவரை விட்டுப் போகப் போகிறாள்.

கியாஸ், வீட்டின் முன் முற்றத்தில் தூழையும் சமயத்தில் அந்த தினத்தின் நாலாவதும் மாலைத் தொழுகைக்குமான மணி, மசூதிகளிலிருந்து ஒலிப்பது கேட்டது. அஸ்மத்தும் குழந்தைகளும் முன்னதாகவே, மேற்கே மெக்காவை நோக்கி மண்டியிட்டு அமர்ந்து கொண்டிருந்தனர். கியாஸ் குதிரையை விட்டிறங்கிப் பணியாளிடம் கடிவாளங்களை வீசிவிட்டு அவர்களுடன் சேர்ந்து கொள்ள விரைந்தார்.

அவர்கள் கைகளை உயர்த்தி மௌனமாக மனதிற்குள் புனிதமான அந்த வாசகங்களைச் சொல்லிப் பிரார்த்தித்து விட்டுக் கடைசியில் தரையைத் தொட்டு வணங்கினர். மெஹ்ருன்னிஸா, கதிஜா, மனீஜா, ஷாபூர் நால்வரும் எழுந்திருந்து வீட்டிற்குள் செல்வதை அவர் பார்த்தபடி

இருந்தார். இருள் வேகமாகச் சூழ ஆரம்பிக்க, வேலையாட்கள் சத்தமில்லாமல் நடந்து, வீட்டின் உள்ளிலும், வெளியே முற்றத்திலும் எண்ணெய் விளக்குகளை ஏற்ற ஆரம்பித்தனர். அவர் அஸ்மத்தை அருகே அழைத்தார்.

கால்களில் கொலுசுகள் ஒலிக்க அவள் அவர் அருகில் வந்தாள் "இன்று ஏன் நேரமாகி விட்டது? தொழுகைகான மணிகூட அடித்தாகி விட்டது."

"சக்ரவர்த்தியுடன் வியப்பிற்குரிய சந்திப்பு ஏற்பட்டது எனக்கு இன்று."

அஸ்மத் அவரை என்ன என்று கேட்பது போல் புரிட்டுப் பார்த்தாள்.

"நம் பெண்ணை அலிகுலிக்குத் திருமணம் செய்விக்கச் சொல்லி அவர் உத்திரவிட்டுள்ளார்."

அஸ்மத் தோட்டத்திலிருந்த கல்மேடையில் அமர்ந்தாள். "யார் அவன்?"

"ஒரு சிப்பாய், மிகத்துணிச்சலான இராணுவ வீரன். தாட்டாரவைக் கைப்பற்றுவதில், கான்—ஐ—கானின் இராணுவத் தலைமைத் தளபதிக்கு மிகவும் உதவியாக இருந்தவன்" கியாஸ் தயங்கியவாறு மேலும் கூறினார். "நம்மைப் போலவே அலிகுலியும் பாரசீகத்திலிருந்து வந்தவன். இரண்டாம் ஷா இஸ்மாயில் இடம் வேலையாளாகப் பணிபுரிந்தவன்."

அஸ்மதின் புருவங்கள் கவலையில் சுருங்கின. அவள் சிறிது நேரம் மௌனமாக இருந்த பிறகு, மெதுவாகக் கூறினாள். "அப்படியானால் அவன் மெஹ்ருன்னிஸாவை விட வயதில் மிகவும் முதிர்ந்தவனாக இருப்பான்."

"அஸ்மத், சக்கரவர்த்தி நமக்கு உத்திரவிட்டுள்ளார்." கியாஸ் அவள் கைகளைப் பற்றியபடி, "அலிகுலியை அரசவையில் அறிமுகப்படுத்தும் பொழுது நான் பார்த்தேன். அவன் போரில் நல்ல பெயர் எடுத்துள்ளான். மேலும் இப்பொழுது அக்பரின் அன்புக்குப் பாத்திரமாகியுள்ளான். மெஹ்ருன்னிஸாவைக் கேட்பதின்மூலம் சக்ரவர்த்தி நம்மை

கௌரவிக்கிறார். அவர் இரண்டு பாரசீகக் குடும்பங்களும் இணையவேண்டும் என்று விருப்பப்படுகிறார்."

"ஆனால் ஒரு சாதாரணச் சிப்பாய், கியாஸ்." அஸ்மத் ஆட்சேபித்தாள். "அவனுக்குத் தேர்ந்த புத்தகங்கள் பற்றியோ, கவிதை, இசை பற்றியோ என்ன தெரியும்? நான் மிகுந்த கவனத்துடன் வளர்த்துக் கல்வியறிவு புகட்டிக் கலைகளில் தேர்ச்சி பெறச் செய்திருக்கிற நம் புதல்வி—மென்மையான குணத்தை உடைய நம் பெண்ணிற்கு அவன் பொருத்தமா?"

"அஸ்மத்" கியாஸ் அவன் பக்கம் திரும்பினார். "இது ஒரு நல்ல சம்பந்தமாக அமையும். எனக்கு நிச்சயம் தெரியும். அலிகுலி மெஹ்ருன்னிஸாவிடம் மிக அன்பாக இருப்பான். அவளை நன்கு பராமரிப்பான். திருமணச் சம்பந்தத்தில் இதற்கு மேல் நாம் என்ன எதிர்பார்க்கமுடியும்?"

அஸ்மத் தன் கையை அவரிடமிருந்து விடுவித்துக் கொண்டு கோபத்தில் முகம் சிவக்க "உன்னையே கேட்டுப் பார், கியாஸ், இதுதானா நாம் மெஹ்ருன்னிஸாவிற்காக விரும்பினோம்? இது மாதிரி என்றா நாம் பேசிக் கொண்டிருந்தோம்? இது உன் மகளின் விருப்பங்களுக்கு ஏற்ற நல்ல சம்பந்தம் இல்லை என்று உனக்குத் தெரியவில்லையா? அவள் சந்தோஷமாக இருக்கச் செய்ய வேண்டியது உன் பொறுப்பு."

"போதும்." கியாஸ் இரைந்தார். "மெஹ்ருன்னிஸாவை என்னிடம் அனுப்பு."

அஸ்மத் எழுந்து நின்று தன் கணவரை வெறித்துப் பார்த்தாள். அவள் குரல் அமைதியாக ஒலித்தது. "உன் குரலை உயர்த்தி என்னிடம் பேசாதே, கியாஸ். நமக்குத் திருமணமாகி இத்தனை வருடங்களில் உன் விருப்பத்திற்கு மாறாக நான் நடந்து கொண்டதில்லை. ஆனால், இப்படிப்பட்ட வீட்டிற்கு நம் பெண்ணை அனுப்புவது தான்.."

கியாஸ் அவளை நோக்கிக் கையை நீட்டித் தன்னிடம் இழுத்து அவள் மடியில் தலை வைத்தார். அவள் பூசியிருந்த வாசனைத் திரவியத்தின் மணம் அவரைச் சூழ்ந்தது.

"என்னை மன்னித்து விடு" அவர் குரல் தழுதழுத்தது. அவர் தலை நிமிர்ந்து அஸ்மத்தைப் பார்த்தார். ஆனால், அவள் கைகளை விரைப்பாகத் தன் பக்கத்தில் வைத்தவாறு வேறு திசையில் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் நினைத்துப் பார்க்கவே பயந்து கொண்டிருந்த விஷயத்தை அவள் எடுத்துக்கூறி, அவள் கவலையைத் தெரிவித்திருக்கிறாள். அதற்கு அவர் அவளிடம் கோபம் கொண்டு கத்தியிருக்கிறார். "சக்ரவர்த்தியின் வார்த்தைகளை என்னால் மீற முடியாதென்று உனக்குத் தெரியும். அலிகுலிதான் நமது மருமகன். அவனுக்குரிய மரியாதையை நாம் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். மெஹ்ருன்னிஸாவை என்னிடம் அனுப்பிவை."

அவர் கைகளிலிலிருந்து விடுபட்டுத் தலையசைத்தவாறு அஸ்மத் கூறினாள். "நீங்கள் கூறியபடியே ஆகட்டும், என் பிரபுவே!"

மனதிற்குள் பெருத்த கோபத்துடன் அவள் வீட்டினுள் சென்றாள். இதற்காகவா மெஹ்ருன்னிஸா அவர்களிடம் நிரும்ப வந்தாள்? இந்த எண்ணம் அவளுள் எழுகையிலேயே கியாஸ் கூறுவதிலிருக்கும் உண்மையும் புரிந்தது. மெஹ்ருன்னிஸாவும் அலிகுலியும் இணையவேண்டும் என்று அக்பர் தன் விருப்பத்தைத் தெரிவித்த கணத்திலேயே இந்த விஷயம் ஒரு முடிவிற்கு வந்து விட்டது. கியாஸ் செய்வதற்கு ஒன்றுமே இல்லை. இரு குடும்பங்களுமே சக்ரவர்த்தியின் விருப்பத்தை எதிர்க்கத் துணிய மாட்டார்கள். இருந்தாலும்... மெஹ்ருன்னிஸாவிற்கு ஒரு சாதாரண போர்வீரன்தானா?

மெஹ்ருன்னிஸா மெதுவாகத் தன் தகப்பனாரை நோக்கி நடந்தாள். அவர் முகம் நிழலில் இருக்க, ஒரு நிவிரச் சிந்தனையில மூழ்கி இருந்தார். அவர் தன்னை எதற்குக் கூப்பிட்டனுப்பினார் என்று அதிசயித்தவாறு சில அடிகள் தள்ளி நின்றாள். அவள் தந்தை அவளை வரச் சொன்னதை அவளிடம் கூறுகையில் அவள் தாயார் அவளை நிமிர்ந்து கூடப்பாராமல் மனம் கலங்கி இருப்பது தெரிந்தது. அழுத மாதிரி அவள் கண்கள் சிவந்திருந்தன.

மெஹ்ருன்னிஸா சிறிது முன்னால் வந்து தன் தந்தையின் தோள்களில் கையை வைத்தான். "அப்பா..."

"ஓ.. வந்துவிட்டாயா, மகளே?" கியாஸ் திரும்பி அவள் கைகளைப் பற்றிக் கொண்டார். மேடையில் தன் அருகே காண்பித்து, "வா, உட்கார்ந்து கொள். ஒரு முக்கியமான விஷயம் உனக்குக் கூறவேண்டும்."

மெஹ்ருன்னிஸா அமர்ந்து தந்தையை ஏறிட்டாள். அவர் புன்னகைத்தவாறு இருந்தாலும், அது இயற்கையாக இல்லை. அவர் கண்களில் மகிழ்ச்சி ஒளி இல்லை. ஒரு சிறிய பயம் அவளைச் சூழ, அவள் அதை ஒதுக்க முயற்சித்தாள்.

"மெஹ்ருன்னிஸா, உனக்கு ஒரு மாப்பிள்ளையைப் பார்த்திருக்கிறேன்." கியாஸ் சட்டென்று கூறினார்.

"ஓ..." அவள் கைகள் அவளையறியாமல் அந்த வழவழப்பான கல் மேடையின் விளிம்புகளைப் பிடித்துக்கொள்ள யத்தனிக்கையில் அவள் விரல்கள் கல்லிலிருந்து நழுவியது.

"அவன் ஒரு அழகான இளைஞன். தைரியமான இராணுவ வீரன். அரசகுமாரர்களிலேயே சிறந்தவன்."

மனதில் நம்பிக்கை பெருக்கெடுக்க, மெஹ்ருன்னிஸா உடனே நிமிர்ந்து பார்த்தாள். அரசகுமாரன்? நிச்சயமாக கியாஸ் கூறுவது ஒருவேளை...?

"அவன் பெயர் அலிகுலிகான் இஸ்தாஜ்லு. நம்மைப் போலவே அவனும் பாரசிகத்தைச் சேர்ந்தவன். சக்ரவர்த்தியே இந்தத் திருமணத்திற்குக் கட்டளையிட்டிருப்பது நம் அதிஷ்டமே! அவருக்குச் சேவை செய்ய இன்னும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது..." கியாஸ் மேற்கொண்டு ஏதோ சொல்லிக் கொண்டேயிருக்க, மெஹ்ருன்னிஸாவின் காதில் ஒன்றுமே விழவில்லை.

இருள் சூழ்ந்து வரும் அந்தத் தோட்டத்தை அவள் வெறித்துப் பார்த்தவாறு இருந்தான். ஒரு சாதாரணச் சிப்பாய்க்கு அவளை மணமுடிக்கப் போகிறார்கள். சக்ரவர்த்தியாக வேண்டும். இந்தப் பரந்த முகலாய சாம்ராஜ்ஜி

யத்தை ஆள வேண்டும் என்று அவள் கண்ட கனவுகள் எல்லாம் தரைமட்டமாயின. அவள் கனவுகள் எல்லாம் எவ்வளவு முட்டாள் தனமானவை. அவை குழந்தைப் பருவத்தின் கனவுகள், குழந்தை பருவத்துடனேயே விட்டுவிடுவது தான் நல்லது.

தூரத்தில், தெருவில், விளக்கேற்றி வைப்பவர்கள் பேசிக் கொள்வது அவளுக்குக்கேட்டது. ஒரு சமயம், அவளை முழுவதும் கவர்ந்த 'இரவின் இராணி' மரத்தின் மலர்களின் நறுமணம் இரவின் குளிர்ந்த காற்றில் கலந்து அவளை மூச்சுமுட்டவைத்தது. சில் வண்டுகளின் இடைவிடாத சப்தம் அந்த அமைதியான முற்றத்தில் இயற்கைக்கு மாறாக உரக்க ஒலித்தது. இவற்றினிடையே அவள் தகப்பனார் தெளிவில்லாமல் தென்பட்டார்.

"மெஹ்ருன்னிஸா?"

கியாஸ், பேசுவதை முடித்து விட்டு அவள் முகத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பது சட்டென்று அவளுக்குப் புலனாகியது. "நீ ஒன்றுமே சொல்லவில்லையே, என் செல்லமே."

"நான் வேண்டாம் என்று சொல்லமுடியுமா?"

கியாஸ் கடுப்பாகப் பார்த்தார். "உன் தாயுடன் பேசிக் கொண்டிருந்தாயா?"

"அம்மா இதில் செய்ய என்ன இருக்கிறது? நான்தான் ஒரு சிப்பாயை மணந்து கொள்ளப் போகிறேன்." மெஹ்ருன்னியா கசப்புடன் கூறினாள். ஏன்? ஏன்? அது ஸலீமாக இருந்திருக்கக்கூடாது.?

அவள் கண்களைத் தாழ்த்திக் கொள்ளும்வரை கியாஸ் அவளை வெறித்துப் பார்த்தார். "நான் உனக்கு அதிகச் சுதந்திரம் கொடுத்துவிட்டதாகத் தோன்றுகிறது. இந்த விஷயத்தில் வேறு பேச்சுக்கு இடமில்லை. நீ யாரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நீ தீர்மானிக்க முடியாது. நான் உனக்கு இந்த சம்பந்தம் பற்றிசொல்லிக் கொண்டிருக்கிறேன். பல தகப்பனார்கள் இது கூடச் செய்வ தில்லை."

அவரது ஒவ்வொரு வார்த்தையையும் கேட்க, மெஹ்ருன்னிஸாவிற்கு அவமானமாகவும், குற்ற உணர்ச்சியும் ஏற்பட்டது. அவள் தந்தையிடம் மரியாதையில்லாமல் பேசி விட்டாள். கியாஸ் இதற்கு முன் அவளிடம் இவ்வாறு பேசியதேயில்லை. கோபத்தை எப்பொழுதும் நன்கு அடக்கிக் கொள்வார்.

"உங்கள் விருப்பம் போலவே ஆகட்டும்."

"உனக்குக் கணவனாக வரப் போகிறவனைப் பற்றி இன்னும் அறிந்துகொள்ள உனக்கு ஆசையில்லையா, என் கண்ணே?"

அவள் தலையை அசைத்தாள். "இல்லை".

கியாஸின் முகத்தில் ஒரு வலி தெரிந்தது. உடனே மெஹ்ருன்னிஸா முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "எனக்குத் தெரிந்து கொள்ள ஆசைதான் தந்தையே! ஆனால் சில நாட்களுக்குப் பிறகு. இது எல்லாம்... ரொம்பவும் திடீரென்று.."

கியாஸ் குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டார். "ஆமாம்... இவ்வளவு அருமையான திருமணச் சம்பந்தம் எல்லாப் பெண்களுக்கும் கிடைத்து விடுவதில்லை. நாம் மிகவும் அதிஷ்டசாலிகள், மகளே," அவர் நிமிர்ந்து "போ.. போய் இரவு உணவு தயாராகிவிட்டதா என்று பார். எனக்குப் மிகவும் பசிக்கிறது."

தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவரிடம் இதுபற்றி மன்றாட வேண்டும் என்று அவள் விரும்பினாள். இது ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டு விட்டதா? இந்தச் சம்பந்தம் முடிவானதுதானா? இதிலிருந்து மாறவே முடியாதா? அவள் தந்தையைப் பார்க்கையில் அவர் பார்வை இவளை மேற்கொண்டு எதையும் பேச விடாமல் தடுத்தது. அவள் வேறு கேள்விகள் கேட்கலாம். வரப்போகிற கணவனைப்பற்றிய விவரங்கள்— ஆனால் இது பற்றியல்ல.

அவள் மேடையிலிருந்து ஆயாசத்துடன் எழுந்தாள். அவள் தகப்பனாரின் குரல் அவளை நிறுத்தியது. "நாளைக்கு

தஸ்தகீரை சந்தித்துத் திருமணம் பற்றிப் பேசப்போகிறேன் என்று உன் தாயாரிடம் சொல்."

"சரி, அப்பா"

மனதில் நம்பிக்கை இழந்து மனம் கலங்கித் தவித்தவாறு மெஹ்ருன்னிஸா தடுமாறியபடி அங்கிருந்து அகன்றாள்.

நாள்கள் தனை, அதிருப்தி நிறைந்த முகத்துடன் கியாஸ் தூங்காமல்லாமல் அந்த மேடையில் அமர்ந்திருந்தார்.

அடுத்த நாள், வழக்கம்போல் குக்கையா சுல்தான் பேகத்திற்கு மரியாதை செலுத்த வேண்டி மெஹ்ருன்னிஸா அரண்மனைக்குச் சென்றாள். அலிகுலிக்கு அவளை திருமணம் செய்திருப்பது பற்றி அங்குள்ளோர் எல்லோருக்கும் தெரிந்திருந்தது. அந்தப்புரத்தின் வாயிற்காப்பாளர்களாக இருக்கும் காஷ்மீர் பெண்கள் அவளைப்பார்த்துத் தெரிந்த முகமாகி புன்னகைத்தனர். அவள் முற்றத்தில் நடந்து செல்கையில் அலிகள் இளித்துக்கொண்டே அலிகுலியின் பெயரை உச்சரித்தனர். அடிமைப் பெண்கள் விஷமத்தனத்துடன் அவளைப்பார்த்துச் சிரித்தனர். நல்ல எண்ணத்துடன் அவர் தன் செய்த சேட்டைகளை மெஹ்ருன்னிஸா பொருட்படுத்தாமல் வேகமாகப் பாதுஷா பேகம் குக்கையாவின் அரண்மனைக்குச் சென்றாள். மூன்று அடிமைப் பெண்கள் நறுமணத்துடன் கூடிய எண்ணெய் தடவி குக்கையாவிற்கு உருவி விட்டுக் கொண்டிருந்தனர்.

முழங்கை ஊன்றி நிமிர்ந்து குக்கையா வினவினாள். "உனக்குக் கணவனாக வரப்போகிறவனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"அவனை நான் இன்னும் பார்க்கவில்லை, மதிப்புக் குரியவரே!"

"நிச்சியமாக முடியாது. தன்மானமுள்ள எந்தப் பெண்ணும் நிச்சியதார்த்தம் ஆவதற்கு முன்னால் தனக்குக் கணவனாக வரப்போகிறவனைப் பார்ப்பதில்லை. "ஆனால், நான் தேர்ந்தெடுத்தவனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"நீங்கள் தேர்ந்தெடுத்தவனா, மதிப்புக்குரியவரே? ஆச்சரியத்துடன் அவன் சக்ரவர்த்தினியைப் பார்த்தான்.

"ஆமாம்," ருக்கையாவின் உருண்டை முகம் சந்தோஷத்தில் மலர மெத்தனமாக அவன் கேட்டான். "என் தேர்வு மிக நன்றாக இருக்கிறதல்லவா?"

"ஆமாம், மதிப்பிற்குரியவரே!" சிறிய குரலில் மெஹ்ருன்னிஸா பதிலளித்தான். சக்ரவர்த்திதான் இந்த முடிவிற்கு முக்கியக் காரணம் போலும்... ஏன்?... ருக்கையா ஏன் இதைப்பற்றி முன்னாலேயே கூறவில்லை?"

"உனக்குத் திருமணம் செய்ய வேண்டிய வயது வந்து விட்டது. அலிகுலி உன்னை விட வயதில் கொஞ்சம் பெரியவன் தான். ஆனால் உன்னை ஒரு நல்ல மனைவியாக மாற்றி விடுவான். அவன் ஒரு போர்வீரன். அவன் படையெடுப்பிற்குப் போர்முனைக்குப் போகும் பொழுதெல்லாம் உன்னை என்னிடம் இங்கு அனுப்பி விடலாம்."

ருக்கையா ஏன் இந்தத் தேர்வைச் செய்தாள் என்பது இப்பொழுது மெஹ்ருன்னிஸாவிற்குப் புரிந்தது. அவள் நல்ல சுபாவம் உள்ளவன்தான் என்றாலும் தன்னலம் கருதித்தான் இருக்கும்.

"உங்கள் கட்டளைக்கு எப்பொழுதும் காத்திருப்பேன், மதிப்பிற்குரியவரே."

"ஆமாம்" ருக்கையா மறுபடியும் படுத்துக்கொண்டு கண்களை மூடிக் கொண்டான். மெஹ்ருன்னிஸாவின் கைகளைப் பற்றியவாறு "நீ இனிமேல் என்னுடன் எப்பொழுதும் இருப்பாய். இது ஒரு நல்ல சம்பந்தம், மெஹ்ருன்னிஸா. சக்ரவர்த்தியும் இதை விரும்புகிறார்."

"நீங்கள் தான்— என்று நினைத்தேன்..." மெஹ்ருன்னிஸா ஆரம்பித்தான்.

"சக்ரவர்த்திக்கு எது விருப்பமோ அதுவே என் விருப்பமும்." ருக்கையா அவளை ஊன்றி நோக்கினான்.

"உனக்குச் சந்தோஷமில்லையா? உன் மனதிற்குப் பிடித்தவன் வேறு யாராவது இருக்கிறார்களா?"

"இல்லை, மதிப்பிற்குரியவரே, நிச்சயமாக இல்லை." முகத்தைத் திருப்பியவாறு மெஹ்ருன்னிஸா அவசரமாகப் பதிலளித்தான்.

ருக்கையாவின் திட்சண்யமான பார்வை அவள் மனதைத் துளைத்தது. சக்ரவர்த்தினி மிகவும் சூட்சுமபுத்தி படைத்தவள்.

"மெஹ்ருன்னிஸா," ருக்கையா மென்மையான குரலில் கூறினாள். "இதுதான் மிகவும் சிலாக்கியமானது."

மெஹ்ருன்னிஸா மேற்கொண்டு எதுவும் பேசாமல் அருகில் இடந்த ஒரு முகத்திரையை எடுத்து மடிப்பதில்கவனம் செலுத்தினாள். சக்ரவர்த்தினியால் ஊகித்துப் பார்க்கக்கூட இயலாது. இளவரசர் ஸலீமை மெஹ்ருன்னிஸா விரும்புவாள் என்பது அவளால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத ஒரு விஷயம்.

சில நினங்கள் கழித்து, இராணுவத்தின் தலைமை அதிகாரி அப்துர்ரஹீமின் மனைவி மா பானு (Mah Banu) அலிகுலியின் தாயார் ஸ்தானத்தில், மணப்பெண்ணுக்கும் அவள் குடும்பத்தினருக்கும் பரிசுப்பொருட்கள் எடுத்துக் கொண்டு கியாஸ் பெக் வீட்டிற்கு வந்தாள். வேலையாட்கள் பெரிய பெரிய பித்தளைத் தட்டுகளில், பட்டு, ஸாடின் துணி வகைகள், உடைகள், விதவிதமான நகைகள் முதலிய வற்றை எடுத்து வந்தனர்.

தங்க சரிகையினால் வேலைப்பாடு செய்த, வெளிர் சிவப்பு நிற முகத்திரை அவள் முகத்தை மறைத்திருக்க, ஒரு வித உணர்விழந்த நிலையில், மெஹ்ருன்னிஸா அந்த நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் அமர்ந்திருந்தாள். அவள் வருங்காலக் கணவனை ஒருமுறை பார்த்ததே போதுமானதாக இருந்தது. போர்வீரன் உடையில் அலிகுலி அந்த அறையில் நுழைந்தான். அவன் நல்ல உயரம், அவன் தகப்பனாரைவிட உயரமானவன். ஆனால், அவர்களை அருகருகே பார்த்தால் இருவரும் சமவயதுடையவர்களாகத் தெரிந்தனர். அலிகுலி கியாஸை விட ஆறு வயதே இளையவன். அதற்குமேல் அவர்களிடையே எவ்வித ஒற்றுமையும் இல்லை. அலிகுலி எல்லாவிஷயங்களிலும்

ஒரு சிப்பாய் போல்.. சூரிய ஒளியால் கருத்த உடல், சரியாக கவனிக்கப்படாத தாடி, கட்டையாக ஒலிக்கும் சிரிப்பு, கவிதைப் புத்தகங்களைப் பிடிப்பதைவிடக் கத்தியையோ, ஈட்டியையோ பிடித்துப் பழகிய காய்த்து மரத்த கைகள்.

சிப்பாய் அலிகுலிகான் இஸ்தாஸ்ஜுலுவிற்குத் தன் மகளைத் திருமணம் செய்விப்பதாகக் கியாஸ் பெக் சம்மதம் அறிவிக்கையில், தன் கனவுகள் கலைந்து கை நழுவிப் போவதை மெஹ்ருன்னிஸா உணர்ந்தாள். அந்த நிகழ்ச்சி முடியும் வரையில் அவள் கண்களைச் சந்திப்பதை அவள் தகப்பனார் வேண்டும் என்றே தவிர்த்தார்.

இளவரசர் ஸலீம் தன்தலைப்பாகையை அகற்றி விட்டு, கற்பூர மணம் கமழும் கைகுட்டையால் தன் நெற்றியைத் துடைத்துவிட்டுக் கொண்டார். அங்கு சிறிதளவுகூடக் காற்றே இல்லை. கைகளைக் கண்கள் மேல் வைத்து மறைத்த வாறு சூரியனை நிமிர்ந்து பார்த்தார். இரண்டு மணி இருக்கும். சரியான நடுப்பகல். ஆயாசத்துடன் கண்களை மூடிக் கொண்டார். எப்படி இதற்குத் தான் ஒத்துக் கொள்ளும்படிச் செய்ய அனுமதித்தோம்?

"சீக்கிரமே அங்கு போய்ச் சேர்ந்துவிடுவோம், மாட்சிமை பொருந்தியவரே!"

ஸலீம் ஜகத்கோஸின் பக்கம் திரும்பினார். "மாலை வேளையை நீ ஏன் தேர்ந்தெடுத்திருக்கக் கூடாது? அப்பொழுது குளிர்ச்சியாக இருந்திருக்குமல்லவா?"

"இதுதான் நல்ல நேரம், என் அன்புக்குரியவரே! மதிப்பிற்குரிய ருக்கையா கல்தான் பேகம் இளைப்பாறிக் கொண்டிருப்பார். தனியாக நாம் இருவரும் நமது புதல்வனுடன் சிறிது நேரம் கழிக்கலாம்."

"சரி", ஸலீம் முணுமுணுத்தபடித் தளர்ச்சியுடன் நடந்தார். வழக்கம்போல் காலையில் அதிகமாக மது அருந்தியதால், இந்த வெய்யிலில் வயிற்றைக் குமட்டுவது போல் இருந்தது. தலையை வேறு வலித்தது. அரசத் தம்பதிகளைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த வேலையாட்கள் இரைந்து

பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் சிரிப்புச் சப்தம் ஸலீமிற்கு எரிச்சலைக் கொடுத்தது.

ஸலீம் ஒரு தகப்பனாருக்கான கடமைகளில் அசட்டையாக இருப்பதாக மறைமுகமாகச் சக்ரவர்த்தியே சுட்டிக் காட்டவில்லையெனில் தன்மனைவியின் இந்த யோசனைக்கு அவர் ஒத்துக்கொண்டிருக்கமாட்டார். அவர் வெறுப்புடன் முகத்தைச் சுளித்தார். அவருடைய மற்ற இரு புதல்வர்கள் குஸ்ரு, பர்வீஷ் இருவருக்கும் ஒரு தகப்பனாராக அவர் செய்ய வேண்டியதை அவ்வளவு சீக்கிரத்தில் சக்ரவர்த்தி சுட்டிக் காட்டுவதில்லை. குர்ரம் பற்றி மட்டும்தான், ஏனெனில் சக்ரவர்த்தி அதிக நேரம் ருக்கையாவின் மாளிகையில் கழிப்பதால், குர்ரம்மைத் தான் அதிகம் பார்த்து வருகிறார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னால், இறந்து போகக் கூடிய அளவிற்கு வயிற்று வலியால் கஷ்டப்பட்ட பிறகு, அக்பரால் எந்த விதச் சந்தேகமும் இல்லாமல் ஸலீமைப் பார்க்க முடியவில்லை. ஸலீமை மகிழ்விக்கவேண்டும் என்ற ஆவல் மிகுதியால் ஹுமாயூன் செய்த காரியத்தினால் அக்பர் இறந்திருக்கவும் கூடும் என்று நினைத்துப்பார்க்கையில் ஸலீமிற்குப் பச்சாதாபமும் குற்ற உணர்ச்சியும் இருந்தது. ஆனால், அதே சமயம் மனக்குறையும் இருந்தது. அரசக் கிரீடத்தின் சுமையைத் தன் தலையில் உணரவேண்டும் என்ற மறுக்கமுடியாத ஆழ்ந்த விருப்பம் இன்னும் இருக்கத் தான் செய்தது. ஸலீம் தந்தையுடன் இருந்து எல்லா விஷயங்களையும் கற்றுக்கொள்ள முயற்சித்தான். ஆனால், அவர்களது நெருங்கிய உறவு அறுந்த சிலந்திவலைபோல், மெல்லிய நூலிழையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. மேலும் அவர்கள் இடைவெளியை அதிகமாக்குவதுபோல், ஸலீமிற்கு விசுவாசமான அரச சபை உறுப்பினர்கள்—அவர் குழந்தைப் பருவத்திலிருந்து அறிந்தவர்கள்... தந்தையைவிட அதிகம் பரிச்சயமானவர்களான — மஹபத், குதுப்புதீன் மற்றும் ஸையத் ஆகியோர், அவர்களையோ அல்லது அவர்கள் தூண்டுதலையோ தவிர்ப்பது ஸலீமிற்கு மிக அரியதாக இருந்தது.

ருக்கையாவின் அரண்மனைக்கு வெளியே உள்ள முற்றத்தில் அவர்கள் யாவரும் நுழைகையில், ஸலீமின் நெஞ்சு தளர்ந்திருந்தது. ஒரு வெள்ளை மஸ்லின் துணி படபடப்பதை அவர் ஓரக் கண்ணால் காணச் சட்டென்று நின்று நன்றாகப் பார்ப்பதற்காக அவர் தலையைத் தூக்கினார்.

ஆ.. அல்லா! அவர் என்ன சொர்க்கத்தில் இருக்கிறாரா? புனிதக் குரானின் வாசகங்கள் அவர் அறியாமலே அவர் நினைவிற்கு வந்தது. "இதை நம்புபவர்கள், ஜரிகைகளால் பூ வேலை செய்த பட்டு மெத்தையில் சாய்ந்திருக்கப் பலவிதப் பழ வகைகள் அருகிலிருக்கக் கெம்பு, பவழம் போன்று அழகும் வசிகரமும் கூடிய... இதுவரை பிற மனிதனின் கைபடாத பெண்கள், அவர்கள் மேல் படரும் தங்கள் பார்வையைக் கட்டுபடுத்த முயற்சிப்பதை அனுபவிப்பார்கள்."

அவன் இவை எல்லாமும், இதற்கும் மேலும்... சுற்றி யிருப்பது எல்லாம் மறைந்து போக, அவர் நிலையான பார்வையுடன் அவளை உற்றுப் பார்த்தவாறு நின்றார். இடைவிடாது தங்களுக்குள் பேசிக் கொண்டு வந்த அவர் பணியாட்கள், மௌனமாகி, அவரை ஆர்வத்துடன் பார்த்தனர். ஜகத்தோஸினி அவரைத் தொடுவதற்குக் கையை உயர்த்த, அவளை அந்த நுழைவாயிலேயே விட்டு விட்டு, அவர் வேகமாக முன்னே செல்லத் தொடங்கினார்.

ஸலீம் மெதுவாக அந்த முற்றத்தில் நுழைந்தார். திடீரென்று ஏதாவது அசைவு ஏற்படுவது கண்டால், அவன் ஓடிச்சென்று விடலாம், பின் இவை எல்லாம் ஒரு கனவு போலாகி விடும் எனப் பயந்து மெல்ல நடந்தார்.

தங்க மீன்கள் இருக்கும் குளத்தில் கால்களைத் தண்ணீரில் அலைய விட்டவாறு அந்தப் பெண் அமர்ந்திருந்தாள். அன்று கடும் வெய்யில் கூடிய நாளானாலும் அந்த முற்றம் குளிர்ச்சியாக இருந்தது. தரைக்குக் கீழே ஓடிக் கொண்டிருக்கும் பாதைகள் வழியாக, ஆங்காங்கே அழகாக அமைக்கப் பட்டிருந்த சிறிய குளங்களில் வந்து விழும் நீரினால் அந்த முற்றத்தின் தரைகள் குளிர்ச்சியாக்கப்பட்டிருந்தன. அந்த நீர்த்தேக்கங்களில் சிவப்பும், வெண்மையுமான தாமரைப் பூக்களும், குவளைப் பூக்களும் மலர்ந்திருந்தன. பெரிய ஆல

மரங்கள் நிழல் பரப்பிக் கொண்டிருந்தன. வண்டுகளின் ரீங்காரமும், அந்தத் தடங்களில் ஓடும் நீரின் இசை கலந்த ஓசையும் அங்கிருந்த நிசப்தத்தை விரட்டி அடித்தன.

ஸலீம் அவள் அருகில் செல்லும் வரையில் மெதுவாக நடந்தார். பளபளக்கும் சுருத்த கூந்தலோடு கூடிய தலையையும், மீங்கான் போன்ற வழவழப்பான கன்னங்களில் உரசும் நீண்ட கண் இமை ரோமங்களையும் குனிந்து பார்த்தவாறு நின்றார். அவள் கழுத்தின் பின்புறத்தில், கூம்பு தலைமுடியில் மறைந்திருக்க, ஒரு இளஞ்சிவப்பு நிற ரோஜா காணப் பட்டது. அதன் மணம் அங்கிருந்த காற்றில் மிதந்து வந்தது.

"அழகிய பெண்ணே, நீ யார்?"

மெஹ்ருன்னிஸா நிமிர்ந்து பார்த்துத் திடுக்கிட்டாள்.

ஆச்சரியத்தில் மலர்ந்திருக்கும் அந்த நீல விழிகளைக் கண்டு ஸலீம் கண்மூடித்தனமான காதலில் விழுந்தார்.

ஸலீம் மீது தண்ணீர் துளிகள் தெறிக்க, மெஹ்ருன்னிஸா அவசரமாக எழுந்தாள். மெலிந்த உடலுடனும், தன்னம் பிக்கையுடனும், நிமிர்ந்த முதுகுடனும் அவர் முன்னே நிற்கையில், அவள் முகத்தில் வெட்கம் கலந்த மகிழ்ச்சி பரவியது.

உச்சந்தலையிலிருந்து, மருதாணியால் சிவந்த நகங் களுடன் கூடித் தண்ணீரினால் ஈரமாகி இருக்கும் அவள் பாதங்கள் வரை ஸலீம் உற்று நோக்கினார். அவர் பார்வை மெல்ல மெல்ல மேலே படர, ஒளிரும் வெள்ளை நட்சத்திரம் போல் வேலை செய்திருந்த பாவாடையும், மேலே மெல்லிய வெள்ளைத் துணியினால் மூடி மறைக்கப்பட்ட இடையும் கடந்து, அவளது தோள்களின் வளைவுகளில் வந்து நின்றது. சுருத்த கூந்தலினால் சிறிது மறைக்கப்பட்டிருந்த மெல்லிய தோள்மடையின் நரம்புகளின் துடிப்பைக்கண்டு, உணர்ச்சி வேகத்தில் அவர் காதுகளில் இரத்தம் பாய்வது போல் மிகுதான உணர்வு அவருக்கு உண்டாயிற்று.

"மன்னிக்க வேண்டும், மாட்சிமை பொருந்தியவரே." மெஹ்ருன்னிஸா மிகச் சிறிய குரலில் கூறினாள். அவளது இசை போன்ற குரல் அவரை மேலும் பரவசப்படுத்தியது.

அவள் கையைத் தொட அவர் முயற்சிக்க, அவள் பின் நகர்ந்து, அவரிடமிருந்து விலகி முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"நான் யாரென்று உனக்கு தெரியாதா?" அவர் அதிகாரத்துடன் வினவினார்.

"ஆமாம். மாட்சிமை பொருந்தியவரே!"

"மாட்சிமை பொருந்தியவரே," இறுக்கமான முகத்துடன் ஜகத்கோஸினி ஸலீம் அருகில் விரைந்து வந்தாள்.

"யார் இவள்?" இன்னும் மெஹ்ருன்னிஸாவைப் பார்த்த படியே ஸலீம் வினவினார். மெஹ்ருன்னிஸா அவரிடமிருந்து முற்றிலும் திரும்பி நின்றிருந்தான்.

"ஒரு கீழ் மட்டத்தைச் சேர்ந்த அரச சபை உறுப்பினரு டைய மகள் என்று நினைக்கிறேன்." ஜகத்கோஸினி பதிலுரைத்தாள். "பெண்ணே, உன் தகப்பனார் யார்?"

கண்களைக் கொட்டாமல் இரண்டு பெண்களும் ஒருவரை ஒருவர் உற்றுப்பார்த்தனர். உதட்டைச் சிறிது சுழித்து மெஹ்ருன்னிஸா புன்னகைத்தாள். "மதிப்பிற்குரிய இளவரசிக்கு நான் யாரென்று தெரியும். இந்தப் பூங்கா விலேயே நாம் ஒருமுறை சந்தித்திருக்கிறோம்."

"அப்படியா?" ஏளனமான குரலில் இளவரசி கூறினாள். "எனக்கு ஞாபகமில்லை."

"ஆ... உங்களுக்கு நிச்சயம் ஞாபகம் இருக்க வேண்டும். மதிப்பிற்குரியவரே!" உடைந்த குரலில் வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்து மெஹ்ருன்னிஸா கூறினாள். மறுபடியும் அவள் தந்தையை அவமதிப்பது போன்ற பேச்சு. ஜகத் கோஸினியிடம் ஆத்திரத்துடன் பேசக் கூடாது என்று மனதின் ஒரு கோடியில் அவளை ஜாக்கிரதைப்படுத்தும் எண்ணம் எழுந்தது. ஆனால், கோபம் அந்த அறிவுரையை மீற "நான் சக்ரவர்த்தினி ருக்கையாவின் புதல்வன், இளவரசன் குர்ரமைக் கவனித்துக்கொள்கிறேன்."

"என் மகன்!"

ஆலமரத்து நிழலில் தெரியும் ருக்கையாவின் மானிகை பெண்களைத் திரும்பிப் பார்த்தவாறு, மெஹ்ருன்னிஸா தொடர்ந்தாள். "ஆமாம், என்னை மன்னியுங்கள். உங்கள் மகன்தான். ஆனால் சக்ரவர்த்தினியைத்தான் அவன் 'அம்மா' என்று அழைக்கிறான்."

ஸலீம் இருவரையும் மாறி மாறிப் பார்த்தவாறு அவர்கள் பேசுவதைக் கேட்டார். இவ்வளவு சாமர்த்தியத்துடன் தன் மனைவியிடம் வாக்காடும் இந்த அழகிய பெண்ணைக் கண்டு அவருக்கு வியப்பு ஏற்பட்டது. அவளிடம் துணிச்சல் இருந்தது. ஒரு சிலரே அவரது இரண்டாவது மனைவியுடன் இப்படித் தைரியமாகப் பேசுவார்கள். யார் இவள்? இவளை இதுவரை அவர் ஏன் பார்த்ததில்லை?

அவர் ஜகத்கோஸினியிடம் மெதுவாகக் கூறினார்.

"எங்களைத் தனியாக விடு. நான் அவளுடன் பேச விருப்பப்படுகிறேன்."

ஜகத்கோஸினி முகம் சிவக்கச் சுதாரித்துக் கொண்டாள். "தம் குழந்தையைப் பார்க்க நாம் இப்பொழுது போக வேண்டும், மாட்சிமை பொருந்தியவரே."

"நீ போ. நான் உன்னைப் பிறகு சந்திக்கிறேன்."

ஆனால், இளவரசி அங்கேயே நின்றிருந்தாள். தான் அவளிடம் சொன்ன வார்த்தைகளின் அர்த்தத்தை உணர்ந்த வாறு, ஸலீம் பெருமூச்சுடன் தலையசைத்தார். மெஹ்ருன்னிஸா இருவரையும் வணங்கி விட்டுத் திரும்பிப் போக முயற்சிப்பதைக் கண்டு அவளிடம் கேட்டார். "உன் பெயர் என்ன?"

மெஹ்ருன்னிஸா தலையை அசைத்து விட்டு அங்கிருந்து நகர்ந்து சென்றாள்.

ஸலீம் அவளை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்துவிட்டுப் பின் அவளுக்கும் ஜகத்கோஸினிக்கும் இடையே செய்வதறி யாமல் சிறிது தயங்கி நின்றார். அவளை நிச்சயம் மறுபடியும் பார்க்க முடியும். அந்தப்புரத்திலுள்ள ஒவ்வொரு பெண் ணைப் பற்றியும் தெரிந்து கொள்ளமுடியும். அவள் யார்,

எங்கிருந்து வருகிறாள் என்பதெல்லாம் காவலர்களுக்குத் தெரிந்திருக்கும். அவளுடைய தலையில் இருந்த ரோஜாவின் ஒரு இதழ் கீழே விழுந்து கிடந்தது. ஸலீம் குனிந்து அதை எடுத்து, ஏதோ ஒரு விலை மதிப்பில்லாப் பொருள் போல அதைத் தன் உள்ளங்கையில் வைத்துத்தடவிக் கொடுத்தார்.

அந்த ரோஜா இதழ் ஸலீம் கையிலிருந்து குளத்தில் விழுந்தது. ஒரு தங்க மீன் வந்து அதை ஆவலுடன் கடித்ததை ஸலீம் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நாம் உள்ளே போக வேண்டும், மாட்சிமை பொருந்திய வரே," ஜகத்கோஸினியின் குரல் பின்னாலிருந்து மெதுவாகக் கேட்டது.

ஸலீம் அவள் பக்கம் திரும்பினார். "ஒரு தாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் மகளுடன் இவ்வாறு தர்க்கம் செய்வது விவேகமானதுதானா, ஜகத்? நீ ஒரு அரசகுமாரி, உனக்கு இது தெரிந்திருக்கவேண்டும்."

"அவளை ஏன் ஆதரித்துப் பேசுகிறீர்கள்? அவள் உங்களுக்கு என்னவேண்டும்? அவள் பெயர்கூட உங்களுக்குத் தெரியாது." கோபமேலீட்டால் கொந்தளிக்கும் குரலுடன் ஜகத்கோஸினி இரைந்து கூறினாள்.

உணர்ச்சி மிகுதியால் அலங்கோலமான தன் மனைவியின் முகத்தைப் பார்த்தவாறு ஸலீம் தன் முகவாயைத் தடவிக்கொண்டார். "இது ஒரு சுவாரசியமான விஷயம்தான். நீ சிறிதும் அறியாத ஒரு பெண்ணை நினைத்து நீ சஞ்சலப் படுகிறாய்? வா, நாம் போய் குர்ரமைப் பார்ப்போம்."

குர்ரமிற்குத் தன் பெற்றோர்களைப் பார்ப்பதில் அவ்வளவு ஒன்றும் பெரும் மகிழ்ச்சி இல்லை. மிகவும் பரிச்சயமில்லாத அந்நியர்கள் போன்ற அவர்களைச் சந்திப்பதற்காக, அவன் பிற்பகல் தூக்கத்திலிருந்து எழுப்பப் பட்டதால், எரிச்சலுடன் கூச்சலிட்டவாறும் இருந்தான். மெஹ்ருன்னிஸாவை நினைத்தவாறு ஒருவித மயங்கிய நிலையிலேயே ஸலீம் ருக்கையாவின் அரண்மனையில் அமர்ந்திருந்தார். தன் மனைவி ஏதோ யோசனையுடன்

அவரை அடிக்கடித் திரும்பிப் பார்ப்பதை அவர் கவனிக்க வில்லை.

முடிவில், மாலையில் அவர் தன் அரண்மனைக்குத் திரும்பினார். அங்கு ஹோஷியார் கானிடமிருந்து அவள் பெயரைத் தெரிந்து கொண்டார். அவள் பெயரிலுள்ள எழுத்துக்களைச் சுவைத்தவாறு உரக்கச் சொல்லிப்பார்த்தார். மெஹ்ருன்னிஸா. நிச்சயம் பெண்களுள் அவள் சூரியன் தான். அவள் அழகிற்கு மேலான அழகு எந்தப் பெண்ணிடம் உள்ளது?

அன்று மாலை தன் கணவரை உபசரிப்பதில் ஜகத் கோஸினி அதிக அக்கறை எடுத்துக் கொண்டாள். தேர்ந்த நாட்டியப் பெண்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் இடுப்பை அசைத்து, வளைத்து, மனதை மயக்கும் வகையில் மிகவும் பிரமாதமாக இளவரசர் முன் நாட்டியமாடினர். மெஹ்ருன்னிஸாவை ஒரே ஒரு தடவை பார்த்த மன மயக்கத்தில் அந்த ஒவ்வொரு பெண்ணையும், ஸலீம் தான் காலையில் பார்த்த தேவதை என்று எண்ணி, அவளை அரவணைத்து மகிழ்ந்தார். இவை எல்லாம் பார்த்தபடி, ஒரு நல்ல அக்கறை உள்ள மனைவி போல் ஜகத் கோஸினி அவர் கோப்பையை மதுவால் நிரப்பிய வண்ணம் இருந்தாள். அவரது ஹுக்காவில் வேண்டிய அளவு அபின் (ஓப்பியம்) இருக்கும்படியும் கவனித்துக் கொண்டாள். நடு இரவு வருவதற்குள் ஸலீம் முற்றிலும் தன்னை மறந்த நிலையில் இருக்க, மெஹ்ருன்னிஸாவின் முகத்தைக் கூட அவரால் நினைவுபடுத்திப்பார்க்க முடியவில்லை.

ஒரு மணி நேரத்திற்கு பின், அவர் இருக்கையிலிருந்து சாய்ந்து, கைகால் பரப்பியபடித் தரையில் விழுந்து ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தார். சங்கீதம் நின்றது. விளக்குகள் அணைக்கப்பட்டன. ஒரு குளிர்ந்த போர்வை தூங்கும் இளவரசர் மேல் போர்த்தப்பட்டது.

அந்தக் கேளிக்கை அறையின் வாசலருகே நின்று இளவரசி ஜகத்கோஸினி தன் கையிலிருந்த கூண்டுவினக்கைத் தூக்கிப்பிடித்தாள். இன்னும் மெஹ்ருன்னிஸாவிடம்

அவளுக்குக் கோபம் மிகுந்திருந்தது. அந்தப் பெண் அவளை அவமானப்படுத்திவிட்டாள். தன் தகுதிக்கு மீறி நடந்து கொண்டு விட்டாள். அவள் என்ன செய்ய முயற்சிக்கிறாள்? குர்ரமைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு அவளுக்குப் போதுமானதாக இல்லையா? அவளுக்கு ஸலீம் கூட வேண்டுமா? மெஹ்ருன்னிஸாவை எப்படி ஆர்வத்துடன் ஸலீம் பார்த்தார் என்பதை நினைக்கும் பொழுது பனிக்கால இரவில் குளிர் தேகத்தை ஊடுருவுவது போல் அவளை அச்சம் தாக்கியது. தன்னைச் சுற்றியுள்ள எதைப் பற்றிய உணர்வும் அப்பொழுது அவளுக்கு இல்லை. இளவரசி நடுங்கினாள். இன்று நடந்த சம்பவத்தினால் எதுவும் நேராது என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

அறையை இருளில் மூழ்கடித்து விட்டு அவள் திரும்பி வெளியே நடந்தாள்.

அத்தியாயம் ஐந்து

அவன் கண்கள் அவளை விழுங்குவது போல் பார்க்கையில், நற்செயலாக நடப்பது போல், அவள் முகத்திரையை விலகச் செய்தாள். தன் எல்லாவிதக் கவர்ச்சியையும் அவன்மேல் ஒளிரச் செய்தாள். அதனால் ஏற்படக் கூடிய குழப்பம் அவள் அறிந்ததே! இந்த சமயத்தில் அது அவள் முகத்தை மேலும் அழகூட்டிக் காட்டியது.

- Alexander Dow,
The History Of Hindustan

தூரமான தென்றல் காற்று மாமரங்களின் நீண்ட இலைகளை அசைத்தவாறு அந்தப் பூங்காவில் வீசிக்கொண்டிருந்தது. ஜன்னலிலிருந்த திரைச்சீலைகள் உள்நோக்கி மெதுவாக ஆடியபடிச் சந்திரனின் ஒளியை அறைக்குள் பாய்ச்சிக் கொண்டிருந்தது. நடு இரவு வானத்தில் ஒளிரும் அந்த வெள்ளைக் கோளத்தைப் பார்த்து எங்கோ தூரத்தில் ஒரு கழுதைப்புலி ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

சாம்பல் நிறக் கருமை நிற நிழல்கள் அந்த அறையின் தரையில் விழுவதை வெறித்துப் பார்த்தவாறு மெஹ்ருன்னிஸா தன் படுக்கையில் தூங்காமல் கண் விழித்திருந்தாள். அவளுக்கு எதிர்புறம் திரும்பியவாறு கதிஜா அவளருகில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் அருகில் இருந்தது மெஹ்ருன்னிஸாவிற்கு ஆறுதலாக இருந்தது. தோட்டத்திற்கு வெளியே இருந்த கற்களாலான தெருவில் குதிரையின் குளம்பு ஒலிகேட்டது. மாமரத்தின் பொந்தில் உட்கார்ந்து கொண்டு, தோட்டத்தில் எலிகளைத் தேடியபடி ஒரு ஆந்தை அலறியது.

அந்தக் கோடைகால இரவுக்கே உரிய சத்தங்களையும், யோசனைகளையும் மீறி, மெஹ்ருன்னிஸாவின் எண்ணங்கள் அவளை ஆக்ரமித்தன. முதன்முறையாக ஸலீமை நேருக்கு

நேர் சந்தித்திருக்கிறாள். அரசர்களுக்கே உரிய ஒரு கம்பீரம் அவரிடம் இருந்தது. கெம்புக் கற்கள் பதித்து அழகு, படுத்திய அவருடைய விலையுயர்ந்த பட்டு மேல் அங்கி, கழுத்தில் பெரும் மதிப்புள்ள பெரிய வெண் முத்துகளாலான மாலைகள், மரகதக் கல் பதித்த திருகு வில்லையுடன் கூடிய அவர் தலைப்பாகை, விரல்களில் ஒளிர்ந்த வைர மோதிரங்கள், வைரங்கள் பதித்த அழகிய காலணி... அந்த முற்றத்தில் கதிரவன் ஒளியில் இவைகள் பளபளத்தபொழுது அந்தக் கதிரவனுக்கே இணையாகப் போற்றத்தக்கவையாக இருந்தது. எல்லாவற்றிலுமே மேலாக இருந்தது, — ஸலீமின் ராஜ கம்பீரமான நடை, அவர் பேசியவிதம், மென்மையாகவும் நாகரீகமாகவும் அவர் நடந்து கொண்ட பண்பு— என்று மெஹ்ருன்னிஸா எண்ணினாள்.

அந்தச் சூழ்நிலை மிகவும் சரியாக அமைந்து விட்டது. அதைவிட மேலாக அவள் திட்டமிட்டுக்கூடச் செயல்படுத்தி யிருக்கமுடியாது. இப்படித்தான் ஸலீமும் அவளும் சந்திக்க வேண்டும் என்று அவள் கனவு கண்டு கொண்டிருந்தாள். அவள் இளவரசரை எப்படிக் கவர வேண்டும் என மனதில் உருவகித்திருந்தாளோ, அவ்வாறே அவரும் இவளைக் கண்ட வுடன் மிகுந்த வியப்புடனும் பிரம்மிப்புடனும் நோக்கினார்.

மெஹ்ருன்னிஸா பெருமூச்சு விட்டவாறு, திரும்பி சௌகரியமாகப் படுத்தாள். கடைசியாக அவள் ஸலீமின் கவனத்தைக் கவர்ந்து விட்டாள். ஆனால், ஏன் இப்பொழுது? அவள் இன்னொருவனுக்கு நிச்சயிக்கப்பட்டு விட்டபிறகு?

அவர்களுக்குள் எவ்வளவு வேற்றுமை? அவளது எட்டு வயதிலிருந்தே அவள் ஸலீமைப் பற்றிய பலவிதக் கற்பனை களை மனதில் தீட்டி வைத்திருந்தாள். அவன் அன்பானவன், சுந்தரமானவன், எளிதில் உணர்ச்சிவசப்படகூடிவன், அந்தச் சிறிய சந்திப்பிலேயே, அவள் கற்பனை செய்திருந்தபடியே அவர் இருப்பதாக அவளுக்குள்தோன்றியது. ஏனெனில், அவர் ஜகத்கோஸினியை அனுப்பிவிட்டு அவளுடன் தனிமையில் பேசவேண்டும் என விரும்பினார். அந்தத் கர்வம் பிடித்த இளவரசியை தன் ஒரு சொல்லால் அவர் அவமானப்படுத்தியது மெஹ்ருன்னிஸாவிற்குத் தான் வெற்றி

அடைந்தது போன்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவருக்கும் ஜகத்கோஸினியிடம் அதிகம் விருப்பம் இல்லை போலும் இது அவர்கள் இருவரிடையே உள்ள ஒரு ஒற்றுமை.

ஸலீம் அவளிருக்கும் இடத்திற்கு வந்த பொழுது அவள் அலிகுலியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவனு டன் சேர்ந்து வாழும் வாழ்க்கையை அவளால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. ஒரு சிப்பாயின் மனைவி, ஒரு வளை எப்பொழுதும் வீட்டில் தனியாக இருக்கவேண்டிய நிலைமை, அவர் யுத்தகளத்திற்குப் போகும்பொழுது திரும்பவும் வருவாரா... வர மாட்டாரா என்று தெரியாமல் காத்திருக்க வேண்டிய நிலை... பிறகு, ஒரு கணத்திற்கு எல்லாமே நின்று விட்டது போன்ற உணர்வு... அப்பொழுது அவள் ஸலீமை ஏறிட்டுப் பார்த்தாள்.

லாகூர் நகரின் மேல் காலைக் கதிரவன் தன் கிரணங் களைப் பரப்ப முனைகையில், ஸலீமைப் பற்றிய கனவு களோடு அவர் வசீகரப் புன்னகை, ராஜகம்பீர நடை, இவற்றில் கலந்து, மெஹ்ருன்னிஸா உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

வீட்டில் அலிகுலியுடன் அவள் திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. மேல் வகுப்பைச் சேர்ந்த பிரபுக்களின் வீட்டில் ஒரு விசேஷம் என்றால், எல்லாம் அவர்களைத் தேடி வரும். அவர்கள் எதையும் தேடி வெளியில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இவப்பு, பச்சை, நீலம் போன்ற பலவிதமான நிறங்களில், பட்டுத் துணிகள், மஸ்லின், மற்றும் ஜரிகை வேலைப்பாடு செய்த துணிகளை எடுத்துக்கொண்டு துணி வியாபாரிகள் வீட்டிற்கே வந்தனர். அடுத்த நாள் காலை, வீட்டு முன் அறையில் அஸ்மத்துடன் மெஹ்ருன்னிஸா அமர்ந்திருக்க, வியாபாரிகள் விதவிதமான துணிகளை மேகக் கூட்டம் போல் விரித்துப் போட்டுக்கொண்டிருந்தனர். "இதைப் பாருங்கள் சீமாட்டியே," அவர்கள் விரித்துப் போட்டபடி, "உங்கள் மகள், அவள் கண்களுக்கு இணையாக நீலநிற இளவரசிபோல் காட்சியளிப்பாள்." தங்கள் முகத்திரைக்குள் அஸ்மத்தும் மெஹ்ருன்னிஸாவும் புன்னகைத்துக் கொண்ட

னர். அவள் கண்களின் நிறம் பற்றி இவர்களுக்கு எப்படித் தெரியும்? வேலைக்காரர்களிடமிருந்தா?

அடுத்த சிலநாட்களில் நகை வியாபாரிகள் வந்தனர். வெள்ளைத் துணியால் சுற்றப்பட்டிருந்த வெல்வெட் பெட்டிகளில் தங்கம், வெள்ளி, நகைகளுடன், கழுத்திலணியும் மாலைகள், கால் கொலுசுகள், தலைச்சாமான்கள், காதணிகள், வளையல்கள், எனப் பல. "இந்த வடிவம் பிடித்திருக்கிறதா, சீமாட்டியே? அல்லது இது? எதுவாயிருந்தாலும் இரண்டு நாட்களில் தயாரித்துக் கொடுப்போம்." திருமணம் நடக்கும் மூன்று நாட்களுக்குச் சமையல் வேலைக்கு ஒப்பந்தம் செய்து கொள்வதற்காகச் சமையல்காரர்கள், தாங்கள் தயாரித்த உணவுப் பொருட்களை மாதிரி காட்டுவதற்காக எடுத்து வந்தனர். குங்குமப்பூ தூவிய பொன்னிறமான கோதுமை அல்வா, திராட்சை, முந்திரி தூவிய ஆட்டிறைச்சி, கோழி சேர்த்த புலவு சாத வகைகள், சக்கரைப் பாகில் மிதக்கும் சிவந்த நிற குலாப்ஜாமூன், ருசியான நேர்த்தியான ஆட்டிறைச்சிக் கறி, எலுமிச்சைச் சாறிலும், பூண்டிலும் ஊறவைத்து வறுத்த மீன் துண்டுகள் எனப் பல.

இவ்வாறு திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் பொழுது, அலிகுலியுடன் தன் திருமணம் நடந்துவிடும் என்பதை இன்னும் உறுதியாக நம்பாமல், ஸலீமிடமிருந்து தனக்கு அழைப்பு வரும் என்று மெஹ்ருன்னிஸா காத்திருந்தாள். அவரைச் சந்தித்து ஒருநாள் கடந்த பிறகு, தனக்குத் தானே, ஒருநாள் தானே ஆகியிருக்கிறது என்று சொல்லிக் கொண்டாள். எப்படியும் அவள் யார், யாருடைய மகள் என்று ஸலீம் அறிந்துகொள்ள வேண்டும். அடுத்த நாளிலிருந்து ஒவ்வொரு முறையும் வாசலில் வருபவர்களை எதிர் கொள்ளப் பணியாட்கள் போகையில், அரச மாளிகையிலிருந்துவரும் காவலாளியோ அல்லது அலியாகவோ இருக்கக் கூடும் என்று அவள் எதிர்பார்த்தாள். பிறகு சாதாரணமாகக் கூப்பிட்டு வரச்சொல்வது சரியல்ல என்பதை உணர்ந்தாள். வழிமுறையைப் பின்பற்ற வேண்டுமல்லவா? அவர் சக்கரவர்த்தி அக்பரிடம் தன் விருப்பத்தைக் கூறுவார். பின் சக்கரவர்த்தி அவள் தந்தையைக் கூப்பிட்டனுப்புவார். பிறகு

அவள் தந்தை அவளிடம் கேட்பார். தினமும் மாலை, அரசசபை வேலை முடிந்து அவள் தந்தை வீட்டிற்கு வருவதற்காக அவள் காத்திருந்தாள். தந்தை இதைப்பற்றி எப்படிப் பேச ஆரம்பிப்பார்? அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவாரா? நிச்சியம் அவர் மிகுந்த சந்தோஷம் அடைவார். அவர் புதல்வி இளவரசர் ஸலீமை மணந்து கொள்வாள். இது அவருக்கும், மற்ற எல்லோருக்கும், அவள் மூலம் கிடைக்கக் கூடிய பெரிய கௌரவம் ஆகும்.

அவ்வாறே சில நாட்கள் கழிந்தன, ஒவ்வொரு நிமிடமும் நீண்டு, முடிவே இல்லாதது போல்! மிகுந்த சந்தோஷத்துடன் அவள் தந்தை வீட்டிற்கு வரவில்லை. ஸலீமிடமிருந்து அழைப்பு ஏதுமில்லை. நாட்கள் செல்லச் செல்ல, அவள் நம்பிக்கை தளர்ந்தது. உடைந்து வாடியது. வழக்கம்போல் அவள் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. வருத்தத்தால் மனம் உடைந்து போனதால் சக்ரவர்த்தினியைச் சந்திப்பதற்குகூட அவள் அரண்மனைக்குப் போகவில்லை.

அவள் ஸலீமைச் சந்தித்த இரண்டு வாரங்கள் கழித்துப் பொறுமையிழந்த ருக்கையா சுல்தான் பேகம் மெஹ்ருன்னிஸாவை வரச் சொல்லிக் கட்டளை விடுத்தாள்.

மெஹ்ருன்னிஸா அரண்மனையை அடைந்தவுடன் பாதுஷா பேகம் அவளை மிகவும் கோபித்துக்கொண்டாள். "என்னைப் பார்க்க இத்தனை நாட்கள் ஏன் வரவில்லை?"

மெஹ்ருன்னிஸா தலை வணங்கியவாறு மௌனமாக நின்றாள்.

"ஸலீமைச் சந்தித்ததாலா?"

அவள் கண்களைத் தூக்கி சக்ரவர்த்தினியைப் பார்த்தாள். அவள் யாரிடமும் இதைப்பற்றிச் சொல்லவில்லை யானாலும், சந்தேகமில்லாமல், அவள் ஸலீமைச் சந்தித்த விவரம், அவர் கூட வந்த பணியாட்கள் மூலம் ருக்கையாவின் காதுகளுக்கு எட்டிவிட்டது.

"ஓ... ஆமாம், எனக்கு எல்லாம் தெரியும்." மெஹ்ருன்னிஸா கேட்காத அந்த கேள்விக்கு ருக்கையா கோபத்துடன்

பதிலளித்தாள். பிறகு அவள் குரல் மென்மையானது. "வா வந்து என் அருகே உட்கார்ந்து கொள்."

மெஹ்ருன்னிஸா சக்ரவர்த்தினியருகில் அமர்ந்தாள்.

"ஸலீம் உன்னைப் பார்த்து மயங்கியது இயற்கைதான். ஆனால், என்னை நம்பு, அதைப்பற்றி அவன் இப்பொழுது நினைப்பதுகூட இல்லை. சில விஷயங்களில் அவன் ஞாபக சக்தி மிகக் குறைவு. உன்னை மறுபடியும் பார்த்தாலும் அவனுக்கு இதுபற்றி ஞாபகம் வராது."

மெஹ்ருன்னிஸாவின் மனம் தளர்ந்தது. ருக்கையா கூறுவது உண்மையாக இருக்குமா? அப்படித்தான் இருக்க வேண்டும். அதனால்தான் ஸலீம் அவளுக்கு அழைப்பு அனுப்பவில்லை. மற்ற வேலைகளில் கவனம் செலுத்தியதால் அல்ல. அவருக்கு என்னைப் பற்றிய ஞாபகமே இல்லை போலும்.

"இதில் நீ செய்வதற்கு ஒன்றுமே இல்லை." ருக்கையா தொடர்ந்தாள். "உனக்கு இன்னொருவருடன் திருமணம் நடக்க இருப்பதை நினைவில் வைத்துக்கொள்." அவள் முகவாயில் ஒரு விரலை வைத்து, ருக்கையா அவள் முகத்தை உயர்த்தினாள். "சக்ரவர்த்தி உன் நிச்சயதார்த்தத்தை ரத்து செய்ய ஒரு பொழுதும் சம்மதிக்க மாட்டார். புரிந்ததா உனக்கு?"

"ஆமாம், மதிப்பிற்குரியவரே!" மெஹ்ருன்னிஸா மெதுவான குரலில் கூறினாள். பின் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். இந்த நயமான கண்டிப்பு வார்த்தைகளினால் என்ன பயன்? ஸலீம் அவளை விரும்பவில்லை என்பதுதான் இங்கு முக்கியமான விஷயம்.

சக்ரவர்த்தினி தீர்க்கமாக அவளைப் பார்த்தவாறே கூறினாள். "உனக்குப் புரிந்து விட்டதாக நான் நினைக்கவில்லை. கவனமாக இரு, மெஹ்ருன்னிஸா! உன் குடும்ப கௌரவம் உன்னிடம் தான் உள்ளது."

•••

அரச மாளிகையில் "மீனா பஜார்" என்ற சந்தை முழு மூச்சில் நடந்து கொண்டிருந்தது. வணிகர்களும், சிறு வியாபாரிகளும் விற்பனைச் சாவடிகளை அமைத்துப் பலவிதப் பொருட்களை விற்பனை செய்ய, ஒவ்வொரு மாதத்திலும் மூன்று நாட்கள் அரண்மனையில் அனுமதிக்கப் படுவார்கள். அந்தப்புரத்துப் பெண்கள் முகத்திரையில்லாமல் இந்தச் சந்தைக்கு வருவார்களாகையால், பெண்கள் மாத்திரமே பொருட்களை விற்க வரவேண்டும். வியாபாரிகள் தங்கள் மனைவிகள் மற்றும் பெண்களை அனுப்பிக் கடையில் வியாபாரத்தை நடத்துவார்கள்.

சக்ரவர்த்தியின் அந்தப்புரத்துப் பெண்கள் அனைவரும், மனதிற்குப் பிடித்த அளவிற்குப் பேரம் பேசியும், சிறு சிறு சச்சரவிட்டும் தங்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்குவர்கள். சக்ரவர்த்தியும் இந்தப் பெண்களுடன் சேர்ந்து இந்தச் கேளிக்கைகளில் பங்கேற்பார். இந்தச் சந்தைக்கு வருவது அந்தப்புரத்துப் பெண்களுக்கு ஒருவித சுதந்திரத்தையும் மகிழ்ச்சியையும் கொடுப்பதால் அக்பர் இந்த நிகழ்ச்சிக்கு 'குஷ்ரோஸ்'—மகிழ்வான நாட்கள்— எனப் பெயரிட்டிருந்தார்.

கண்களில் உணர்ச்சி இல்லாமல், மீனா பஜாரின் ஒரு பக்கத்தில், இளவரசர் ஸலீம் தள்ளாடிச் சென்று கொண்டிருந்தார். கைகளை நீட்டித் தோள்களை வளைத்துத் தன்னை அவர் ஆசுவாசப்படுத்திக் கொண்டார். ஒரு நகைக் கடையிலிருந்து பெரிதாகச் சிரிப்புச் சத்தம் வரவே, ஆர்வம் மிகுதியை விடத் தன்னிச்சையாக அந்தப்பக்கம் திரும்பினார்.

அங்கு இரு அழகிய வைப்பாட்டிகளின் தோளில் கை போட்டு அணைத்தவாறு சக்ரவர்த்தி நின்றிருந்தார். கடையிலிருந்த பெண்மணி இரண்டு மரகதக்கல் பதித்த வளையல்களுக்காக அவரிடம் பேரம் பேசுவதைக் கண்டு அந்த வைப்பாட்டிகள் உரக்கச் சிரித்தனர்.

ஸலீமின் மனைவிகள் அவர் பக்கத்தில் நின்றவாறு அங்கு நடக்கும் கேளிக்கைகளை ரசித்துக்கொண்டிருந்தனர்.

அவர்களை எரிச்சலுடன் பார்த்தவாறு இளவரசர் ஸலீம் தன் தலைமை அலியைக் கூப்பிட்டார். "ஹோஷியார்,

என் மனைவிகளுடன் சென்று அவர்கள் ஸாடின், மற்றும் ஜரிகைப் பட்டுத் துணிகளை வாங்க உதவி செய்."

"அப்படியே ஆகட்டும், மாண்பு மிக்கவரே!" ஹோஷியார் கான் அவரை வணங்கிவிட்டு ஸலீமின் மனைவிகளை வழி காட்டி அழைத்துச் செல்லத் துவங்கினான். சலிப்புடன் எந்த ஆர்வமும் இல்லாமல் ஸலீம் இருப்பதை யோசித்தவாறே அவன் பார்த்தான். இளவரசர் சில நாட்களாகவே பழைய மாதிரி உற்சாகமாக இல்லை. பேரரசி ருக்கையாவின் அரண்மனைத் தோட்டத்தில் அந்தப் பெண்ணைச் சந்தித்த நாளிலிருந்தே.

ஹோஷியார் எல்லா விஷயங்கள் பற்றியும் தெரிந்து வைத்துக் கொள்வான். இப்படி எல்லா விவரங்களையும் அறிந்திருப்பதன் மூலம் தனக்குப் போட்டியாக வருபவர்களைத் தந்திரத்தாலும் இரக்கமில்லாமலும் அப்புறப்படுத்தி இப்பொழுது அந்தப்புரத்தின் தலைமை அலியாக அவனால் ஆக முடிந்தது. அந்தப்புரத்தில் உள்ள எல்லாப் பெண்களுமே அவனிடத்தில் மரியாதையுடனும் சிறிது பயத்துடனேயே நடந்து கொண்டனர். ஏனெனில் அவர்களைப் பற்றிய எந்தச் சிறு தவறான செய்தியும் அவன் மூலம் ஜகத்கோஸினிக்கு எட்டிவிடும். ஹோஷியார் வணங்குவது ஒரே ஒரு பெண்ணை மட்டும் தான் ஸலீமின் அந்தப்புரத்தை ஆட்சி செய்யும் இளவரசி ஜகத்கோஸினி மட்டும்தான் அந்தப்புரத்துச் சுவர்களுக்கு வெளியில் அவளது கண்ணாகவும் காதாகவும், உட்புறத்தில் அவளது வலது கை போலும் அவன் இயங்கி வந்தான். அவன் புத்திசாலியானதால், ஜகத்கோஸினியின் அறிவையும், சாமர்த்தியத்தையும் நன்கு புரிந்து கொண்டவன். அவளை எந்தவிதத்திலும் எதிர்க்க முற்பட்டதில்லை. அவள் ஒரு வலிமை வாய்ந்த எதிரி ஆகக் கூடியவள். இப்பொழுது அவள் மெஹ்ருன்னிஸாவை நினைத்துக் கவலைப்படுகிறாள். ஏன்? ஸலீம் அவளை மறந்து விட்டார் போல் தோன்றுகிறது — ஆனால், முழுமையாக இல்லை. அவர் மிகவும் தடுமாறுகிறார்... ஏதோ ஒன்றை — தன்கைக்கு எட்டாததை அது என்ன என்று தெரியாமலே அதை அடைய முயற்சிக்கிறார்.

"ஓ...! மற்ற எல்லோரையும், கூட அழைத்துச்செல். நான் தனிமையாக இருக்க விரும்புகிறேன்." இளவரசர் கூறினார்.

அவருடன் இருந்த பணியாட்கள் சந்தோஷத்துடன் அங்கிருந்து நகர்ந்தனர். ஸலீம் மெதுவாகத் திரும்பிப் பூங்காவை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

வழியில் ஒரு கடையிலிருந்த பெண் அவரை உரைக்க அழைத்தாள்.

"மாட்சிமை பொருந்தியவரே! இந்த அழகான பறவையைப் பாருங்கள்."

பலவிதமான பித்தளைக் கூண்டுகளில் விதவிதமான பறவைகளுடன் அந்த இளம்பெண் அமர்ந்திருந்தாள். புன்னகையில் அவள் முகம் பளிச்சிட அவள் மொத்தத்தில் அழகானவளாகவே இருந்தாள். ஸலீம் அவளை ரசித்துப் பார்த்தார். அவர் நின்று தன்னை ரசித்துப் பார்ப்பதைக் கண்ட அந்தப் பெண் அழகிய மஞ்சள் அலகுடன் கூடிய ஒரு மைனாப் பறவையை எடுத்தாள்.

"இது மிக அழகாக இருக்கிறதல்லவா, மாட்சிமை பொருந்தியவரே?" அவர் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் தன்மையாறியவாறு கூறினாள்.

பேசத் தொடங்கியவுடன் அவள் தைரியம் குறைவது கண்டு இளவரசர் தனக்குத்தானே சிரித்துக் கொண்டார். முதலில் துணிச்சலுடன் அவரைக் கூப்பிட்டாள். ஆனால், தான் அவள் முன் நிற்கையில் அவளுக்கு வெட்கம் வந்து விட்டது. "எவ்வளவு?"

"உங்களுக்காக ஒரு விசேஷமான விலை, ஐயா" அவள் தன் இமைகளைக் கொட்டியவாறே "ஐந்து ரூபாய் மட்டும் தான்."

"மூன்று" ஸலீம் சிரித்தபடிக் கூறினார்.

"ஓ...! ஐயா" கூண்டைக் கீழே வைத்தவாறு அவள் ஆரம்பித்தாள். "உங்களுக்கு மூன்று ரூபாய்க்குக் கொடுக்க முடிந்தால் எனக்கும் சந்தோஷம்தான். ஆனால், விலைவாசி

இவ்வளவு உயர்ந்திருக்கிறதே...?" அவள் உடனே முகம் பளிச்சிட, "நான்கு ரூபாய் கொடுங்கள்."

"அந்த இரண்டு புறாக்களையும் கூடக் கொடுப்பதானால் தான்." பக்கத்திலிருந்த இரண்டு பாரசீகப் புறாக்களைச் சுட்டிக் காட்டியவாறு ஸலீம் கூறினார்.

"சரி"

தன் இடுப்புப் பட்டையிலிருந்து நான்கு வெள்ளி நாணயங்களை எடுத்து ஸலீம் அவளிடம் கொடுத்தார். அவளை மெச்சி அவளுக்குக் கொஞ்சம் கூடக் கொடுக்கவே விருப்பப்பட்டார். ஆனால், அது அவர்களிடையே நடந்த சின்ன விளையாட்டைக் கெடுத்துவிடும். அவர் ஹோஷியாரைத் தேடிச் சுற்றிலும் பார்த்தார். அவர் மனைவிகளுடன் போகச் சொல்லி உத்திரவிட்டிருந்த போதிலும் அவன் வழக்கம் போல் சிறிது தூரத்திலேயே நின்றிருந்தான்.

மைனாவை அவனிடம் கொடுத்து விட்டு, அவர் பாரசீகப் புறாக்களை மார்புடன் அணைத்துக் கொண்டார். அவர் கைகளில் அமர்ந்து அவை மெதுவாகக் கூவின. தன் கன்னத்தால் அவற்றின் சிறகுகளைத் தடவியவாறு படிகளில் இறங்கி ஸலீம் பூங்காவிற்குச் செல்லத் துவங்கினார். சந்தையிலிருந்து வரும் சப்தம் குறைந்து கொண்டே வந்தது. காலை பனித்துளிகளில் பளபளத்தவாறு அந்தப் பச்சைப் புல்வெளி அவர் எதிரே விரிந்து இருந்தது. சூரிய ஒளி பட்டு இறக்கைகள் பல நிறங்களில் பிரகாசிக்க, வண்டுகள் மலர்களைச் சுற்றி ரீங்காரம் செய்து கொண்டிருந்தன.

நடைபாதையின் ஓரத்தில் சிவப்பு ரோஜா மலர்கள் கூட்டமாய் மலர்ந்திருப்பதை அவர் பார்த்தார். அரச குடும்பத்தினரின் நலம் கருதி, அரண்மனைத் தோட்டக்காரர்கள் அதன் முட்களை ஒவ்வொன்றாக மிகுந்த கவனத்துடன் களைந்து விட்டிருந்தனர். ஸலீம் குனியச் சூரிய ஒளியில் பளபளக்கும் அந்த ரோஜாக்களிலிருந்து எழுந்த மணம் அவர் நாசியைத் தாக்கியது. அவர் நிமிர்ந்து ஹோஷியாரைத் தேடிச் சுற்று முற்றும் பார்த்தார். ஆனால் அவனை எங்கும்

காணவில்லை. முகத்திரையால் முகத்தை மூடியபடி 'செனார்' மரத்தடியில் ஒரு பெண் அமர்ந்திருப்பதை அவர் பார்த்தார்.

"ஹே... நீ!"

அவள் எழுந்து இளவரசர் அருகே சென்றாள்.

"எனக்காக இவைகளைக் கொஞ்சம் வைத்திரு." ஸலீம் புறாக்களை அவளிடம் கொடுத்துவிட்டு ரோஜாப் பூக்களைப் பறிக்கச் சென்றார். அவர் திரும்பி வந்தபொழுது ஒரு புறாவை மட்டும் கையில் ஏந்தியபடி அந்தப்பெண் தலை குனிந்தவாறு நின்றிருந்தாள்.

"இன்னொரு பறவை எங்கே?" அவர் கோபத்துடன் வினவினார்.

"மாட்சிமை பொருந்தியவரே, அது பறந்து விட்டது."

"எப்படி?"

"இப்படி!"

ஸலீம் ஆச்சரியப்படும் வகையில், தன் நீலக் கண்ணாடி வளையல்கள் சத்தத்துடன் கைகளில் நகர, அவள் தன் கையை உயர்த்தி, அந்தப் பறவையையும் பறக்க விட்டாள். அது வேகமாக வானில் பறந்து சென்றது. அவர் கோபத்துடன் திரும்பி அவளை நோக்கினார். அவள் பறந்து செல்லும் புறாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவருக்குச் சிறிது நேரம் எழுந்தது. இந்தக் குரலை இதற்கு முன் எங்கே கேட்டிருக்கிறோம்? அந்தப் பூங்காவில் மெல்லிய காற்று வீச, அவள் முகத்திரை,அவள் முகத்துடன் பதிந்தது.

"மெஹ்ருன்னிஸா!"

"மாட்சிமை பொருந்தியவரே, நான் மன்னிப்புக் கோருகிறேன்."

ஸலீம் பொறுமை இழந்து கையை அசைக்க ரோஜாமலர்கள் அவர் காலடியில் விழுந்தன. "புறாக்களைப் பற்றி கவலையில்லை. அன்றைய தினம் ஏன் என் எதிரிலிருந்து ஓடிச் சென்று விட்டாய்?"

"என்னால் அங்கு தங்கியிருக்க முடியாது."

"ஏன் முடியாது?" ஸலீம் கையை நீட்டி அவள் கைகளைப் பற்றிக் கொண்டார். அவள் விரல்கள் நீளமாகவும், மெல்லியதாகவும், நகங்கள் மருதாணியிட்டதால் சிவந்தும், அவள் தோல் முத்துக்களைப் போல் வழவழப்பாகவும் இருந்தன. அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த படியே நின்றிருந்தனர். அவர்களிடையே வார்த்தைகள் எதுவுமில்லை. அதீத மகிழ்ச்சியான ஒரு உணர்வுதான் எழுந்தது. ஸலீம் கையை நீட்டி அவள் முகத்திரையை விலக்கினார். அவளை ரசித்தபடி நீண்ட மூச்சு எடுத்து மெதுவாக அதை வெளிவிட்டார். சட்டென்று அவளை முழுவதும் தொட வேண்டும் என்ற துடிப்பு.. அவளது குரலை கேட்கவேண்டும், அவள் சிரிப்பை அனுபவிக்கவேண்டும் என்ற தவிப்பு அவருள் எழுந்தது!

"நான் பார்த்த பெண்களிலேயே நீதான் மிகவும் அழகானவள், மெஹ்ருன்னிஸா"

அவள் தலையைச் சாய்த்து அவரைப் பார்த்தாள். ஒரு துடிப்பான காற்று அவளது முன் தலைமுடியை பறக்கச் செய்து அவள் உதட்டின் மேல் விழ வைத்தது. "ஆனால் உங்கள் அந்தப்புரத்தில் பல வசீகரமான பெண்கள் இருப்பார்கள், மாட்சிமை பொருந்தியவரே! அவர்களில் ஒருவர் நிச்சயம் என்னைவிட அதிக அழகாக இருக்கக் கூடும் அல்லவா?"

ஸலீம் தலையை மற்றொருபுறம் சாய்த்து, அவளது இசை போன்ற குரலுக்கு இணையான குரலில் கூறினார். "அது நிச்சயம் சாத்தியமேயில்லை. இந்தப் பூங்காவில் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? ஏன் சந்தைக் கேளிக்கைகளில் கலந்து கொள்ளவில்லை?"

"அது எனக்கு அலுத்து விட்டது."

"எனக்கு ஏற்பட்டது போலவே." ஸலீம் அவள் கைகளைத் தன் உதட்டருகே எடுத்துச் சென்று, மெதுவாக விரல்களால் தடவிக்கொடுத்தார். கைகளைப் பிடித்தவாறு வளையல்களை வருடினார்.

"மாட்சிமை பொருந்தியவரே! மதிப்பிற்குரிய சக்ரவர்த்தி உங்களை அழைக்கிறார்." படிகளின் மேல் ஹோஷியார் வந்து நின்றிருந்தான்.

தன் மன ஓட்டத்தை வெளிக்காட்டாமல், எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கும் அந்த அலியை இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

"நான் வேலையாக இருப்பதாக அவரிடம் சொல். இன்னும் சில நிமிடங்களில் அங்கு வருகிறேன் என்றும் சொல்" ஸலீம் கூறினார்.

"உடனேயே, மாட்சிமை பொருந்தியவரே!" ஹோஷியார் உண்மையாக உரைத்தான் "மதிப்பிற்குரிய பேரரசரைக் காக்க வைப்பது அவருக்குப் பிடிக்காது."

ஸலீம் மெஹ்ருன்னிஸா பக்கம் திரும்பினார். "நீ எனக்காக காத்திருப்பாயா? சீக்கிரம் திரும்பிவந்து விடுவேன்."

"நான் எங்கே போவேன், மாட்சிமை பொருந்தியவரே? நீங்கள் உத்திரவிட்டால் நான் இணங்கத்தானே வேண்டும்."

அவர் கண்கள் பரவசத்துடன் ஒளிர, ஸலீம் அவள் பக்கம் குனிந்தார். "என் புறாக்களைப் பறக்கவிட்ட பெண்ணிடமிருந்து இந்த வார்த்தைகள் வருகின்றன. நான் உனக்கு உத்திரவிடவில்லை, மெஹ்ருன்னிஸா. வேண்டுகோள் விடுக்கிறேன். தயவுசெய்து காத்திரு, நான் உன்னிடம் திரும்பி வருவேன்."

அவர் போகையில், மெஹ்ருன்னிஸா மறுபக்கம் திரும்பிக் கொண்டதால், ஹோஷியார் கான் தீவிர யோசனையுடன் அவளைப் பார்ப்பதை அவள் கவனிக்கவில்லை. முகவாயைத் தடவியவாறு, ஹோஷியார் தன் எஜமானருடன் சக்ரவர்த்தி இருக்கும் இடம் சென்றான்.

மரத்தினடியில் இருந்த கல்மேடையில் அமர்ந்து கொண்டு மெஹ்ருன்னிஸா தன் முகத்திரையை இழுத்து மூடிக் கொண்டாள். ஆக, ஸலீம் அவளை மறக்கவில்லை.

ஒரு மெல்லிய புன்னகை அவள் முகத்தில் படர்ந்தது. அவர் அவளைப் பார்ப்பதற்கு முன்னமேயே அவர் பூங்காவிற்குள் வருவதை அவள் பார்த்து விட்டாள். அவர் சூரிய வெளிச்சத்தில் இருப்பதால் மரத்தினடியில் தன்னைப் பார்க்க முடியாது என்றெண்ணி, மரத்தின் நிழலில் அவள் பதுங்கிக் கொண்டாள். முழங்கால்களை மடக்கிக் கைகளால் கட்டிக் கொண்டு அமர்ந்து, ஸலீமைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் அவர் தன்னை மறந்து விட்டதையோ, தான் யார் என்று அறியாததையோ அவள் பொருட்படுத்தவில்லை. அவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்ததே அவளுக்குப் போதுமானதாக இருந்தது. ஸலீம் அவளைப் புறாக்களைப் பிடித்துக்கொள்ளக் கூப்பிட்ட பொழுது, அவள் திடுக்கிட்டு எழுந்து, எதையும் யோசிக்காமல் அவரருகில் சென்றுவிட்டாள். அவர் ரோஜாப் புஷ்பங்களைப் பறிக்கையில், என்ன செய்கிறார் என்று பார்க்கலாம் என வேண்டும் என்றே ஒரு புறாவைப் பறக்கவிட்டாள். இப்பொழுது, கல் மேடையில் அமர்ந்துகொண்டு, ஸலீமின் ஒவ்வொரு வார்த்தையையும், செய்கையையும் மனதில் நினைத்துப் பார்த்தாள்... அவர் கண்களின் பார்வை, அவள் கைகளில் அவர் உதட்டின் ஸ்பரிசம்...

அருகில் நெருங்கி வரும் காலடி ஓசை கேட்டு, முகத்தில் சிறு புன்னகை தவழ அவள் ஏறிட்டுப் பார்த்தவுடன், வேலையாட்கள் புடைசூழ ருக்கையா சுல்தான் பேகம் பூங்காவில் நுழைவதைக் கண்டு, அவள் புன்னகை மறையத் தொடங்கியது. 'அல்லாவே! தயவு செய். ஸலீம் திரும்பி வருவதற்குள் சக்ரவர்த்தினி திரும்பிச் சென்று விடவேண்டும்...' ருக்கையா வேலையாட்களை இருக்கச் சொல்லி விட்டு அவளருகே வந்தாள்.

மெஹ்ருன்னிஸா எழுந்து வணக்கம் தெரிவித்தாள். "நீ என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய் இப்பொழுது?" ருக்கையா மேடையில் அமர்ந்து கொண்டாள்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை—"

"ஆமாம், உனக்குப் புரிந்திருக்கும். நான் சொல்வதைக் கேள். ஸலீம் வெளிப்பார்வைக்கு ஒரு வளர்ந்து விட்ட ஆண் போல். ஆனாலும், மனதளவில் இன்னும் குழந்தைதான். தன் மனதிற்கு ஏற்ற ஒரு பெண்ணை எப்பொழுதும் தேடிக் கொண்டிருக்கிறான்." ருக்கையா பேசுவதைச் சிறிது நிறுத்தி விட்டு மெஹ்ருன்னிஸாவை உற்றுப் பார்த்தாள். "இளவரசர் இந்தக் குணத்தை நீ புரிந்து கொண்டு அதன் மூலம் நீ ஆதாயம் தேடப்பார்க்கிறாய் என்று எனக்குத் தெரியும்."

"மதிப்பிற்குரியவரே..." அவசரமாக மேஹ்ருன்னிஸா, ஆரம்பித்தாள். "இது சரியில்லை. நான் அப்படி ஏதும் செய்யவில்லை. இளவரசருக்கு என் மேல் ஈடுபாடு உள்ளது. அதன் ஏன் அதை... ஆதரிக்கக் கூடாது?"

"ஏனெனில், நீ திருமணமானவளுக்குச் சமம். அதனால் தான்," ருக்கையா அழுத்தமாகச் கூறினாள். "மதிப்பிற்குரிய சக்ரவர்த்தி உன் நிச்சியதார்த்தத்தை முறிக்க ஒரு பொழுதும் அனுமதிக்கமாட்டார்."

"ஏன் கூடாது?"

"அருமைப் பெண்ணே, இந்தச் சம்பவம் நடந்த பொழுது நீங்கள் இங்கு இல்லை. அரண்மனை வைத்தியர் ஒருவன் மூலம் சக்ரவர்த்திக்கு விஷம் கொடுக்க இளவரசர் ஸலீம் முயற்சி செய்தான்."

"அது உண்மை இல்லை — வெறும் வதந்திதான்".

ருக்கையா கடுமையாக நகைத்தாள். "நீ என் வார்த்தையைச் சந்தேகிக்கிறாயா?"

மெஹ்ருன்னிஸா தலையசைத்தாள்.

"அது உண்மைதான். அதனால்தான் கடந்த இரண்டு வருடங்களாகச் சக்ரவர்த்திக்கும் இளவரசருக்கும் இடையே சுமுகமான உறவு இல்லை." மெஹ்ருன்னிஸாவின் கைகளைக் தன் கையில் எடுத்துக்கொண்டு சக்ரவர்த்தினி மேலும் கூறினாள். "சக்ரவர்த்தி ஒருநாளும் தன் வாக்கில் பின் வாங்க மாட்டார். வேறு எதற்காக இல்லாவிடினும் ஸலீமின்

நடத்தை ஏமாற்றத்தை அளித்துவிட்ட காரணத்திற்காக வாவது."

"ஏன் இளவரசர் ஸலீம் சக்ரவர்த்திக்கு ஒரு ஏமாற்றம் என்று சொல்கிறீர்கள்? சக்ரவர்த்தி இளவரசரை மிகவும் நேசிக்கிறார் என்றவல்லவா நான் நினைத்தேன்." மெஹ்ருன்னிஸாவின் குரல் தாழ்ந்து ஒலித்தது.

ருக்கையா பெருமூச்சு விட்டவாறு நன்கு அமர்ந்தாள். "அவர் நேசிக்கிறார். மிகவும் நேசிக்கிறார். நாங்கள் எல்லோருமே ஸலீமிடம் அளவற்ற அன்பு வைத்திருக்கிறோம். அவன் வேண்டும் என்று மிக விரும்பினோம். மிகவும் பிரார்த்தனை செய்தோம். அவன் பிறந்த பொழுது அல்லா எங்களுக்குக் கருணை காட்டிவிட்டார் என்று மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால், வருடங்கள் செல்ல செல்ல... பல விஷயங்களில் சக்ரவர்த்திக்கும் ஸலீமிற்கும் ஒத்துப் போவதில்லை. அவருக்கு உரிமையான அரச கிரீடம் வேண்டும் என்ற ஆசை இளவரசருக்கு வந்துவிட்டது. ஆனால் அதற்காக காத்திருக்க அவன் தயாராயில்லை. அவன் உடன் இருக்கும் தோழர்களின் பேச்சை அதிகம் கேட்கிறான். எங்கள் சொல்லைக் கேட்பதில்லை. அவன் வாழ்க்கையில் திருப்தி இல்லை. அமைதியற்றவனாக இருக்கிறான்."

"ஒருவேளை மதிப்பிற்குரிய பேரரசர் இளவரசருக்கு இன்னும் அதிகச் சலுகைகள் கொடுக்கலாமோ?"

சக்ரவர்த்தினி மறுப்பது போல் தலையசைத்தாள். "ஒரு இளவரசர், அரியணையின் வாரிசு, இதற்கு மேல் தந்தையிடமிருந்து என்ன பெறமுடியும்? ஸலீமிற்கு அரச கிரீடம் தரிப்பதற்கான வயது வரவில்லை. தன்னிஷ்டம் போல் நடப்பதற்கு அவசரப்படுகிறான். விஷம் கொடுக்க முயற்சித்த சம்பவம் இன்னும் சக்ரவர்த்தி மனதில் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. அவரது மகன், அவர் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துப் பிறந்த மகன், தன்னை நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாக எண்ணுகிறார். இந்த விஷயங்களை என்னாலேயே முழுவதும் புரிந்து கொள்ளமுடியவில்லை, மெஹ்ருன்னிஸா, நீ புரிந்து கொள்வாய் என்று எதிர்பார்க்க

முடியாது. வேறு எதன் மேலும் ஆசை வைக்காமல், அலிகுலி கான் உனக்கு நடக்கவிருக்கும் திருமணத்தில் மட்டும் மனம் செலுத்து. உன் இந்த நடத்தை அரசர் பேரவையில் நல்ல பெயருடன் இருக்கும் உன் தந்தையின் கௌரவத்திற்குப் பங்கம் விளைவிக்கக்கூடும். அப்படி நடப்பதில் உனக்கு விருப்பம் இல்லையல்லவா?"

"நிச்சயம் அப்படி நடப்பதில் எனக்கு விருப்பம் இல்லை, மதிப்பிற்குரியவரே! ஆனால், இது எப்படி என் தந்தையைப் பாதிக்கும்?"

"மெஹ்ருன்னிஸா, அலிகுலிக்கு உன்னைத் திருமணம் செய்விப்பதாக உன் தந்தை நிச்சயம் செய்திருக்கிறார். சக்ரவர்த்தி தன் வார்த்தையில் பின் வாங்க மாட்டார். நீ ஸலீமை இவ்வாறு தூண்டி விடுவதால் அந்தப் பழி உன் தந்தைமேல்தான் விழும்."

மெஹ்ருன்னிஸாவின் முகத்தில் உணர்ச்சிகள் அலை பாய்ந்துகொண்டிருப்பதை மௌனமாகச் சக்ரவர்த்தினி பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்களிடையே ஆழ்ந்த மௌனம் நிலவியது.

"மதிப்பிற்குரியவரே, நான் என்ன செய்ய வேண்டும்?" முடிவில் மெஹ்ருன்னிஸா வினவினாள்.

"மதிப்பிற்குரியவரே, தற்சமயம் சக்ரவர்த்தினி மெஹ்ருன்னிஸாவுடன் பேசிக் கொண்டிருக்கிறார்." ஹோஷியார் கான் குனிந்து ஜகத்கோஸினியின் காதுகளில் ரகசியமாகக் கூறினான்.

"நல்லது, என்ன நடக்கிறது என்று பார்த்து வந்து எனக்குச் சொல்."

ஹோஷியார் கான் போவதற்காகத் திரும்ப, அவன் சட்டையைப் பிடித்து இழுத்து இளவரசி அவனை நிறுத்தினாள். "ஹோஷியார், இது பற்றி ஒருவரிடமும் ஒரு வார்த்தை கூடச் சொல்லக் கூடாது. புரிந்ததா?"

ஹோஷியார் வணங்கினான். "சரி, மதிப்பிற்குரியவரே நான் கவனத்துடன் இருப்பேன்."

ஜகத்கோஸினி தலையசைத்து அவனுக்கு விடை கொடுத்துவிட்டுத் தன் கணவர் பக்கம் திரும்பினாள். அந்தச் சந்தையின் கேளிக்கைகளின் நடுவில் அக்பருக்கு அருகில் இருப்புக் கொள்ளாமல் காலால் தரையில் தட்டியவாறு ஸலீம் அமர்ந்திருந்தார். ஆக, அவள் கணவர் பூங்காவிற்குத் திரும்பிச் சென்று தன் புதிய ஆசைநாயகியைப் பார்க்க மிகுந்த ஆவலாக இருக்கிறார். சக்ரவர்த்திக்கு எதிரில் இருக்கும் செப்பிடு வித்தைகாரனின் பக்கம் அவள் கவனம் சென்றது. அவன் மூன்று எரியும் தீவட்டிகளை மேலே வீசி, பின் லாவகமாக அவைகளைப் பிடித்து, தன் கால்களிடையே நுழைத்து எடுத்தான். அவன் வித்தைகாட்டி முடித்தவுடன் எல்லோரும் கைகளைப் பலமாகத் தட்டி ஆரவாரித்தனர். அவன் குனிந்து வணங்கிவிட்டு, அடுத்ததாகப் பாம்பாட்டி ஒருவன் தன் பாம்புகளுடனும், கயிற்றில் கட்டப்பட்ட ஒரு கீரிப்பிள்ளையுடனும் வருவதற்காக வழி விட்டு நகர்ந்தான்.

ஜகத்கோஸினி தன் நெற்றியைத் தேய்த்துக் கொண்டாள். மெஹ்ருன்னிஸாவைப்பற்றி ஏதோ ஒன்று அவளுக்குப் பிடிக்கவில்லை. அவளால் ஒப்புக்கொள்ள முடிந்தால் — ஏதோ ஒன்றை கண்டு அவள் பயப்பட்டாள் என்றே சொல்லலாம். வரண்ட புன்னகை அவள் முகத்தில் தோன்றியது. அரச வம்சத்தில் பிறந்தவள், இளவரசி என்ற வார்த்தைக்கு முழு அர்த்தமுமான ஜகத்கோஸினி, தான் ஒரு தனிப்பட்ட விதத்தில் மிகவும் முக்கியமானவர் என்று எண்ணும்படி வளர்க்கப்பட்டவள். பிறகு அவள் திருமணம் இளவரசர் ஸலீமுடன் நிச்சயிக்கப்பட்டவுடன் அவள் எதிர்பார்ப்புகள் எல்லாம் நிறைவடைந்தன. ஸலீம் சக்ரவர்த்தியாக அரியணை ஏறுவார், அவளும் சக்ரவர்த்தினியாக அவருடைய பாதுஷா பேகம் என்ற முறையில் அந்தபுரத்தில் ஆட்சி செலுத்துவாள். ஒருநாள் அவள் புதல்வன் குர்ரம் இந்த முகலாய சாம்ராஜ்யத்தின் அரியணை ஏறுவான். ஆனால், அவளுடைய

இந்த அபிலாஷைக்கு அடிவானத்தில் ஒரு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது போல் தோன்றுகிறது.

ஒருவேளை ஸலீமின் அந்தப்புரத்திற்கு மெஹ்ருன்னிஸா வாக் கூடுமாகில், அங்கு அதிகாரம் செலுத்துவதில் இருவருக்குள் நிச்சயம் முரண்பாடு ஏற்படும். இது நிச்சயம் அவளுக்குத் தெரியும். அந்தப் பெண்ணிடம் துடுக்கான நாக்கு உள்ளது. அரச குடும்பத்தினருடன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற வரைமுறை தெரியாது. ஆனால், ஸலீம் இப்படி அவள் மேல் தீராத ஆசையுடன் இருப்பானேயாகில், அவள் இத்தனை வருடங்களாகக் கட்டிக்காத்து வந்த உரிமைகளை இழக்க நேரிடும். ஏதும் சச்சரவில்லாமல் அவள் அதிகாரத்தை விட்டுக் கொடுக்க அவள் தயாரில்லை. குஸ்ரு மற்றும் பர்விஸின் தாயார்களைவிட அதிக முக்கியத்துவம் அடைவதற்கு இத்தனை வருடங்களாயிற்று. ஆனால், அதை அவள் சாதித்து விட்டாள். ஸலீம் சக்ரவர்த்தி ஆகையில் அவள்தான் பாதுஷாபேகமாக இருக்கவேண்டும்.

அவள் தோளை யாரோ தொட்டார்.

"தோட்டம் காலியாகிவிட்டது, மதிப்பிற்குரியவரே!"

"வந்தனம் ஹோஷியார்" சக்ரவர்த்தியைச் சுற்றியுள்ள கூட்டத்திலிருந்து எழுந்து கடுகடுப்பான முகத்துடன் ஜகத்கோஸினி வெளியேறினாள்.

ஒருவழியாகச் சக்ரவர்த்தியிடமிருந்து விடைபெற்றுச் செல்ல, ஸலீமிற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் வேகமாக பூங்காவிற்குச் சென்று அது காலியாக இருப்பதைக் கண்டார். ஹோஷியார் அவரைத் தொடர்ந்து அங்கு வந்தான்.

"அவள் எங்கே ஹோஷியார்?" ஸலீம் அலியின் பக்கம் திரும்பினார். "அவள் காத்திருப்பதாகக் கூறியிருந்தாள்."

"அவள் சென்று சிறிது நேரம் ஆகிவிட்டது, மாண்புமிக்கவரே!"

"அவளை நான் எங்கே பார்க்கலாம்?"

இதற்கு என்ன சரியான பதில் சொல்வதென்று யோசித்தவாறு ஹோஷியார் சிறிது தயங்கினான். இளவரசிக்குத் தெரிய வந்தால் மிகுந்த ஆத்திரம் அடைவாள். ஆனால் ஏன் இளவரசரிடம் சொல்லக்கூடாது...

"பதில் சொல், ஹோஷியார்! என் மனைவிகள் பொறாமைப்படுவார்கள் என்று தயங்குகிறாயா?" அவன் தயங்குவதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டார் என்பது அவர் கண்களில் தெரிந்தது.

"ருக்கையா சுல்தான் பேகமின் அரண்மனையில் சக்ரவர்த்தினியைச் சந்திக்க அவள் அங்கு வருகிறாள்."

ஸலீம் அலியைப் பார்த்துப் புன்னகைத்தார். "நல்லது நான்தான் உன் எஜமானன் என்பதை நீ உணர வேண்டும், என் மனைவிகள் அல்ல, புரிந்ததா?"

"நன்கு அறிந்து கொண்டேன், மாட்சிமை பொருந்தியவரே" முகத்தில் உணர்ச்சி எதுவும் காட்டாமல் அந்த அலி பதிலளித்தான்.

இந்த முறை ஸலீமின் ஞாபகத்திலிருந்து மெஹ்ருன்னிஸா மறைந்து போகவில்லை.

மிக உஷ்ணமான நீண்ட கோடைக்காலம் முடிந்து ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் இலையுதிர்க் காலத்திற்கு வழிவிட்டது. மாலையில் சூரியன் வேகமாக இறங்கத் தொடங்கினான். அதன் கதிர்களின் வீச்சம் குறைந்து பிற்பகலிலேயே மிதமான குளிர்ச்சியான காற்றுப் பரவியது. அரச மாளிகைகளில், வெளிக்காற்று வராதவாறு ஜன்னல்கள் மூடி வைக்கப்பட்டு, அறைகளில் கரி அடுப்புகள் சந்தோஷத்துடன் உஷ்ணத்தை வெளியேற்றின.

பூங்காவில் மெஹ்ருன்னிஸா இளவரசரைச் சந்தித்ததற்குப் பின், இரண்டு வாரங்கள் ஓடி விட்டன. ருக்கையாவைச் சந்திக்க அவள் இன்னும் பகல் வேளைகளில் வந்து கொண்டிருக்கிறாள். ஆனால், அவளைச் சந்திக்க முடியும் என்ற நம்பிக்கையில், ஸலீம் தன் மாற்றாந்தாயைச் சந்திக்க

மாலை வேளைகளில் வருகிறான் என்பது அவளுக்குத் தெரியாது. ஸலீம் பற்றியோ, அவளைச் சந்திக்கும் நம்பிக்கை பற்றியோ ஸலீம் மாலை வேளைகளில் அங்கு வருவது பற்றியோ, அல்லது அவர்களிடையே பூங்காவில் நிகழ்ந்த சந்திப்புப் பற்றியோ சக்ரவர்த்தினி, மெஹ்ருன்னிஸாவுடன் பேசுவது இல்லை. தன்னைச் சுற்றி நடப்பவை எல்லாவற்றையும் பார்த்துச் சக்ரவர்த்தினி இரகசியமாக மனதிற்குள் சந்தோஷித்துக் கொண்டிருந்தாள். பிறகு ஒருநாள் மெஹ்ருன்னிஸா வீட்டிற்குச் செல்லக் கிளம்புகையில், இன்னும் சிறிது நேரம் தங்கிவிட்டுச் செல்லும்படிச் சக்ரவர்த்தினி அவளை வற்புறுத்தினாள். அன்று மாலை ஸலீம் அவளைச் சந்திக்க வருவதாக இருக்கிறான் என்பதை அவள் வேலையாட்கள் மூலம் அறிந்திருந்தாள்.

"நான் சிறிது நேரம் வெளியில் உலாவி விட்டு வரலாமா, இதிப்பிற்குரியவரே?" மெஹ்ருன்னிஸா அவளிடம் வினவினாள். அறை மிகப் புழுக்கமாக இருந்தது. கரி அடுப்பிலிருந்து வரும் புகை, அறையில் நறுமணம் கமழவேண்டும் என ருக்கையா ஏற்றி வைக்கச் சொல்லும் சந்தனமரத் தூபங்களிலிருந்து வரும் புகையோடு கலந்து கூரையில் இடைவிடாத வட்டங்களை எழுப்பிக் கொண்டிருந்தது.

"போய் வா, குழந்தாய்" சாய்மான மெத்தையில் படுத்தவாறு ருக்கையா ஒரு கையை அலட்சியமாக அசைத்து அவளுக்கு உத்தரவு கொடுத்தாள். இன்று அவர்கள் இருவரும் ஸலீமும் மெஹ்ருன்னிஸாவும் சந்திக்க வேண்டும். அவள் எதிரில், அப்பொழுதுதான் அவர்கள் இருவருக்கும் கொஞ்சம் புத்திமதி சொல்ல முடியும். இவர்களது இந்த அறிவற்றமோகம், அந்தப் புரத்திலுள்ளோருக்கு ஆர்வத்தையும் பரபரப்பையும் கொடுத்தாலும் இது அர்த்தமில்லாதது. சக்ரவர்த்தி நிச்சயம் இதை அனுமதிக்க மாட்டார்.

மெஹ்ருன்னிஸா சக்ரவர்த்தினியை வணங்கிவிட்டு அறையைவிட்டு மெதுவாக வெளியேறினாள். அடிவானத்தில் சூரியன் இறங்கத் தொடங்கினான். கோட்டையில் மேல் தளங்களையும் மஸூதி ஸ்தூபிகளையும் ஒளிரச் செய்தவாறு

மேற்குத் திசையைச் சூரிய கிரணங்கள் பொன்னிறத்தில் மூழ்கடித்துக் கொண்டிருந்தன. மசூதிகளிலிருந்து மாலைத் தொழுகைக்காக அறிவித்து, அறிவிப்பாளரின் குரல் இசையோடு கலந்து ஒலித்தது. 'அல்லா-வு-அல்லா-வு-அக்பர்...'

தாழ்வாரத்தில் மெஹ்ருன்னிஸா மண்டியிட்டு அமர்ந்து பிரார்த்தித்தாள். பிறகு, அவள் எழுந்து ஒரு குளிர்ந்த கல்தூணை அணைத்து அதில் தலையை பதித்தவாறு கண்களை மூடிக் கொண்டாள். அவள் மிகவும் களைத்திருந்தாள். வீட்டிலும் சரி, இங்கு அந்தப்புரத்திலும் சரி, எதுவுமே நடக்காதது போல், அவள் நடிக்க வேண்டி இருந்தது. இடைவிடாமல் மெஹ்ருன்னிஸாவை உன்னிப்பாகச் சக்ரவர்த்தினி கவனித்துக் கொண்டிருந்தாலும், பூங்காவில் நடந்த சம்பவம் பற்றி ருக்கையா அவளிடம் எதுவுமே பேசவில்லை.

அவள் நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டு வராந்தாவிலிருந்து வெளியில் எட்டிப்பார்த்து மாலைக் காற்றின் குளிர்ச்சியை அனுபவித்துக் கொண்டிருந்தாள். அவள் தாய், தந்தைக்கு இதுபற்றி ஒன்றுமே தெரியாது. ஆனால், இவ்வாறு நடிப்பது அவளுக்கு மிகுந்த மன அழுத்தத்தைக் கொடுத்தது. அவள் சரியாகச் சாப்பிடவில்லை, தூங்கவில்லை. கண்களைச்சுற்றிக் கருவளையங்கள் விழச் சோர்வு அவள் முகத்தைக் களையிழக்கச் செய்தது.

இவை எல்லாவற்றிற்கும் இடையில் ஸலீம் பற்றிய நினைவுகள். மெஹ்ருன்னிஸா தன்னையறியாமலே புன்னகைத்துக்கொண்டாள். அந்தப்புரத்துத் தோட்டத்தில் ஏற்பட்ட முதல் சந்திப்பு, மிகத் துரிதமாக முடிந்து விட்டது. அவள் அதை எதிர்பார்க்கவில்லை. மீனா பஜாரில் ஏற்பட்ட இரண்டாவது சந்திப்பு, அவள் மிகவும் விரும்பி, ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது, சக்ரவர்த்தி ஸலீமை கூப்பிட்டனுப்பும் வரை! எனக்காகக் காத்திரு மெஹ்ருன்னிஸா என்று கூறிவிட்டு ஸலீம் சென்றிருந்தார். அவர் உதடுகளில் அவள் பெயர் எவ்வளவு மதுரமாக ஒலித்தது?

"மெஹ்ருன்னிஸா?"

வராந்தா கைப்பிடிச்சுவரில் அவள் உறைந்து போனாள். இது நிச்சயம் இருக்க முடியாது.. தன்னை யார் கூப்பிடுகிறார் என்பதை நன்கு உணர்ந்து கொண்டவளாக மெஹ்ருன்னிஸா திரும்பினாள்.

ஸலீம் அவள் எதிரே நின்றிருந்தார்.

அவர்கள் இருவரைத்தவிர அந்த வராந்தாவில் வேறு எவருமே இல்லை. குளிர்ச்சியான மாலைக்காற்று அங்கிருந்த இருவரைக் கூட உள்ளே கரி அடுப்பின் கதகதப்பிற்குத் தூண்டி விட்டுவிட்டது.

மௌனமாக இருவரும் பார்த்தவாறு நின்றிருந்தனர். ஸலீமும் சோர்வாகவே காணப்படுகிறார் என்று மெஹ்ருன்னிஸா எண்ணினாள். அவர் முன் நெற்றியில் விழும் முடிகளைத் தடவி அகற்ற வேண்டும் என்ற ஆவல் அவளுள் எழுந்தது. அவள் கையைத் தூக்கி முகத்திரையை விலக்கி முகத்தை மூடிக்கொள்ள யத்தனித்தாள்.

"வேண்டாம்." கையை நீட்டியவாறு ஸலீம் கூறிவிட்டு, அவளைத்தொட அஞ்சுவது போல் கையை மடக்கிக் கொண்டார். "தயவுசெய்து நான் உன்னை நன்றாக பார்க்கக் கிடைத்தற்பரம் கொடு."

அவள் சிறிது தயங்கி விட்டுக் கைகளை இறக்கிக் கொண்டாள். அவர் என்னைப் பார்க்கட்டும். முகத்திரையின் உதவி இல்லாமல் நானும் அவரைப் பார்க்கமுடியும். இதுவே கடைசி முறையாக இருக்கும். அவள் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, ஸலீம் துணிச்சலுடன் திடீரென்று அவர் முகத்தைத் தன் விரல்களால் நிமிர்த்திக் குனிந்து அவள் உதடுகளைத் தன் உதடுகளால் ஸ்பரிசித்தார்.

மெஹ்ருன்னிஸா தனக்குள் ஒரு தீப்பிழம்பு எரிந்தமாதிரி உணர்ந்தாள். ஒரு மனிதனும் இதுவரை அவளை முத்தமிட்டதில்லை. ஒரு மனிதனும் இதுவரை அவளை இவ்வளவு மிருதுவாக ஸ்பரிசித்ததுமில்லை. ஆனால், இன்று, இப்பொழுது, தன் கண்களில் அளவில்லாக் காதல் ஒளிர, அவர்கள் அன்பின் முடிவான எல்லையாக ஸலீம் தன் உதடுகளால் அவள் உதடுகளைச் சந்தித்திருக்கிறார்.

ஆனால் அவள் வேறு ஒருவருக்கு நிச்சயிக்கப்பட்டவள்.

மெஹ்ருன்னிஸா அவசரமாக விலகி, ஸலீமைத் தள்ளி விட்டாள். "என்னால் முடியாது, மாட்சிமை பொருந்தியவரே!"

"ஏன் முடியாது?" ஸலீம் கண்களில் சிரிப்புடன் கேட்டார்.

ஏன் கூடாது? தன்னை மீறிய உணர்வில் அவள் கையை நீட்டி, அவர் முகவாயைத் தொட்டு, விரலால் அவர் கன்னங்களில் கோல மிட்டாள். ஒரு பெருமூச்சுடன் அவர் முகத்தில் தன் இரு கைகளைப் பதித்து அவரைத் தன் பக்கம் இழுத்தாள். அவர் புருவங்களில்... மூடிய கண்களில்... கீழே கன்னங்களில்... அவள் மென்மையான முத்தங்களைப் பதித்தாள். தன் மூச்சுக் காற்றால், அவர் உதடுகளைச்சுற்றி அவருடைய சுத்தமான நறுமணத்தை அநுபவித்தவாறு, தன் முகத்தை அவர் முகத்துடன் இணைத்தாள்.

"எனக்குக் கிடைத்த இந்த அன்புப் பரிசுக்கு, நான் திரும்ப வெகுமதி கொடுக்க வேண்டுமே!" அவள் கைகளைத் தன் கைகளால் பிடித்தவாறு ஸலீம் கூறினார். மிகுந்த கனிவுடனும் பரிவுடனும் அவளது ஒரு கையை எடுத்துத் தன் உதட்டில் இட்டு முத்தமிட்டுப் பின் அடுத்த கையையும் முத்தமிட்டார். பிறகு அவள் கழுத்தின் கீழ்... அவள் மார்பகத்தின் அருகே குனிந்தார். சந்தோஷம் மிகுதியில் முனகியவாறு மெஹ்ருன்னிஸா தன் தலையைப் பின்னுக்குச் சாய்த்தாள். அவருடைய ஸ்பரிசத்தில் அவளது ஒவ்வொரு இரத்த நாளமும் உயிர் பெற்றது. அவர் நாக்கின் சுவையில் அவள் உடல் நடுங்கிற்று. அவரைக் கைகளால் அணைத்துக் கொண்டு அவர் தலைமுடியைத் தன் முகவாயினால் வருடினாள். இதற்குமுன் இப்படிப்பட்ட அனுபவம் ஏதும் இல்லை என்றாலும், இப்படி எல்லாம் செய்ய வேண்டும் என்று எப்படி அவளுக்குத் தோன்றியது?

ஸலீம்தான் அவர்களின் பரஸ்பர அணைப்பிலிருந்து முதலில் விலகிக் கொண்டார். மாலைக் கதிரவனின் ஒளி

அவர்களைச் சுற்றிப் பொன்னிறமாக ஒளிர, உணர்ச்சி நிலையில் ஏற்பட்ட மூச்சு முட்டலுடன், ஒருவரை ஒருவர் பார்த்தவாறே அவர்கள் நின்றிருந்தனர். "உன்னிடம் ரோஜாவின் நறுமணம் வீசுகிறது."

"என் தாயார்..." மெஹ்ருன்னிஸா தடுமாறினாள். அவர் என்ன சொன்னார்? நான் என்ன சொல்ல நினைக்கிறேன்? "என் தாயார் நாங்கள் குளிப்பதற்காக ரோஜா மணம் நிறைந்த தண்ணீரை உபயோகிக்கிறாள்."

ஸலீம் அவளைத் தீவிரத்துடன் பார்ப்பதைக் கண்டு அவள் சிறிது நடுங்கினாள். "நீ சீக்கிரம் என்னிடம் வருவாய், மெஹ்ருன்னிஸா உன் தகப்பனார் மிர்ஜா கியாஸ் பெக் என்பது எனக்குத் தெரியும். நாளைக்கு உன் வீட்டிற்கு ஒரு முறையான திருமணக் கோரிக்கை அனுப்பச்சொல்லிச் சக்ரவர்த்தியிடம் கூறுகிறேன். இல்லை, இன்றே கூறுகிறேன்." அவர் குறும்புத்தனமாகச் சிரித்தார். "திருமணப் பரிசாக உனக்கு என்ன வேண்டும்? பலவிதமான பறவைகள்... சுதந்திரமாக அவைகளை வெளியே பறக்க விட?"

ஆனால், அவள் இன்னொருவருக்குச் சொந்தமானவள். அவள் இப்படிச் செய்திருக்க கூடாது. இவ்வளவு ஆர்வத்துடன் அவரை முத்தமிட்டிருக்கக் கூடாது. ஆனால், கடந்த சில வாரங்களாக அவளது ஒவ்வொரு எண்ணமும் அவரைப் பற்றியதுதான். ஏன்? அல்லா! இதனால் ஒன்றும் நடக்கப்போவதில்லை என்றிருந்தும், அவர்கள் இவ்வாறு சந்திக்கும்படியான சூழ்நிலை எப்படி நேர்ந்தது? அவர் அவளுக்கு என்று இல்லாத பொழுது! அவள் அசதியுடன் பதிலளித்தாள்... "இன்னும் சில வாரங்களில் எனக்குத் திருமணம் நடக்கவிருக்கிறது, மாட்சிமை பொருந்தியவரே!"

ஸலீம் முகத்தைச் சுளித்தார். "யாரும் என்னிடம் இது பற்றி சொல்லவில்லையே." ஆனால், அவர் அவள் கையைப் பற்றிக் கொண்டார். "அதனால் ஒரு கஷ்டமும் இல்லை. நான் சக்ரவர்த்தியிடம் உன் நிச்சயதார்த்தத்தை ரத்து செய்துவிட வேண்டுகிறேன். சீக்கிரமே நீ என்னுடையவளாகி விடுவாய், மெஹ்ருன்னிஸா."

மெஹ்ருன்னிஸா அவர் கைப்பிடியிலிருந்து தன் கைகளை விடுவித்துக் கொண்டாள். "இல்லை, மாட்சிமை பொருந்தியவரே தயவு செய்து அப்படிச் செய்யாதீர்கள். என்னைத் திருமணம் செய்து கொடுப்பதாக என் தந்தை வாக்குறுதி அளித்திருக்கிறார். அதில் பின்வாங்கினால் அவர் நற்பெயருக்குப் பங்கம் ஏற்படும். தயவு செய்யுங்கள்..."

"அது அப்படிப்பட்ட மோசமான காரியம் அல்ல, மெஹ்ருன்னிஸா. சக்கரவர்த்தி நிறையத் திருமணங்களையே ரத்து செய்ய உத்தரவிட்டிருக்கிறார். இது ஒரு நிச்சயதார்த்தம் தானே? சக்ரவர்த்தியிடமிருந்து ஒரு வார்த்தை..."

"இல்லை, மாட்சிமை பொருந்தியவரே!" மெஹ்ருன்னிஸா அவசரமாகக் கூறினாள். ருக்கையாவின் எச்சரிக்கையான வார்த்தைகள் அவள் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டிருந்தன. அக்பரின் மரணத்திற்காக ஸலீம் சதி செய்தார் என்பதை இன்னும் அவள் நம்பவில்லை. அவள் எதிரில் நிற்கும் இந்த ஸலீம் நிச்சியமாக இதைச் செய்திருக்க முடியாது. அது ஒரு வதந்தி... கை, கால் முளைத்து ஒரு அசிங்கமான, பெரிய விவகாரமாக ஆக்கி விடப் பட்டுள்ளது. இருந்தாலும், தந்தைக்கும் மகனுக்கும் இடையே உறவில் விரிசல் விழுந்து விட்டதென்பது யாவரும் அறிந்ததே! இதற்கு ஒரு சுலபமானத் தீர்வு இல்லை. திடீரென்று அவள் கண்களில் நீர் பொங்கியது — ஸலீமை இழப்பது குறித்து... அவள் தந்தையின் நற்பெயரைப் பற்றிய பயம் குறித்து... அவளது எதிர்காலம் பற்றிய அச்சம் குறித்து எல்லாமே.

இளவரசர் கையை நீட்டி மெஹ்ருன்னிஸாவின் மிருதுவான கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்து விட்டார். "இப்பொழுது போ, என் அன்பே!" இளவரசர் மென்மையாகக் கூறினார். "நான் எல்லாவற்றையும் சரி செய்கிறேன். நீ கவலைப்படாதே!"

அவர் உத்தரவிட, மெஹ்ருன்னிஸா தன் பாவாடையைச் சிறிது தூக்கிப் பிடித்துக்கொண்டு, அவளுடைய வெறுமையான கால்கள் அந்த சலவைக் கற்கள் பதித்த வராந்தாவில் மிதப்பது போல், ஓடி மறைந்தாள். அவள் விட்டு வந்த

இடத்திலேயே ஸலீம் அவளைப் பார்த்தவாறே நின்று கொண்டிருப்பார் என்பது அவளுக்குத் தெரியும்! ஆனால், அவள் மறுபடியும் அவரைத் திரும்பிப் பார்க்கவில்லை.

ஒரு காலத்தில் அவளுக்குச் செவிலித் தாயாக இருந்தவள் தாதி, தாய் திலாரம் (Dai Dilaram) அவளைக் கூப்பிட்டவாறு மெஹ்ருன்னிஸா அந்த மாளிகைக்கு வெளியே ஓடினாள். வேலையாட்கள் தங்கும் இடத்தில் வம்பு பேசிக் கொண்டிருந்த தாதி வெளியே வந்து நிலைகுலைந்த நிலையில் படபடப்புடன் இருந்த மெஹ்ருன்னிஸாவைப் பார்த்து விட்டு வேகமாக அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

போகும் வழியில் மெஹ்ருன்னிஸா பல்லக்கில் அசையாமல் அமர்ந்திருந்தாள். அவளால் தனியாகச் சமாளிக்க முடியாத அளவிற்குச் சம்பவங்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ருக்கையாவிடம் பேசியபிறகு அவள் கடைசியில் வந்து சிந்திக்க ஆரம்பித்தாள். ருக்கையா கூறுவது உண்மைதான். அவள் நிச்சயதார்த்தம் ரத்து செய்யப்பட்டு விட்டால் அவள் தந்தைக்குப் பெரிய தலைகுனிவு ஏற்படும். கியாஸிற்கு அவமானம் உண்டாவதை அவள் ஒருபொழுதும் விரும்பவில்லை. தன்னைச் சுற்றி நடப்பவைகளைப் பற்றிச் சிந்திக்காமல், ஸலீமைக் கவருவதே ஒரே நோக்கமாகப் பின்னால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி எண்ணிப் பாராமல், அவள் ஸலீமுடன் எல்லை மீறிப் பழகிவிட்டாள். இப்பொழுது அது — அது ஆவல் மிகுதியால் தவிர்க்க முடியாததாகிவிட்டது, அவரைத் தொடவேண்டும் என்ற ஆர்வம்! இப்பொழுது ஸலீம் அவளை மறக்கத் தயாராக இல்லை. அவர் சக்ரவர்த்தியிடம் போய்ப் பேசினால் என்ன நடக்கும்? அவள் தந்தைதான் அவமானப்பட்டுக் கேலிக்குள்ளாவார். மெஹ்ருன்னிஸா இளவரசரை மயக்கிவிடலாம் என்பதற்காகவே அவர் தன் மகளை அந்தப்புரத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்றெல்லாம் ஜனங்கள் பேசுவார்கள். மேலும் கியாஸ் பெக் வாக்குத் தவறக் கூடியவர், அவரை நம்ப முடியாது என்றெல்லாம் வதந்திகள் பரவக்கூடும்.

இவ்வாறு எண்ணிப் பார்க்கையிலேயே அவள் மனம் தளர்ந்து விட்டது. ஒன்றே ஒன்றுதான் இதற்குத் தீர்வு. அவள் தாயாரிடம் சொல்லி விடவேண்டும். இந்த நிலைமையை எப்படிச் சமாளிப்பதென்று அஸ்மத்திற்குத் தெரியும். ஆனால் ஸலீம்... அவரது முத்தம்... இல்லை. அஸ்மத்துடம் நிச்சயம் தெரிவிக்க வேண்டும். முத்தத்தைப் பற்றி அல்ல... மற்ற எல்லா விஷயமும். அவள் பல்லக்கு கியாஸ் பெக்கின் வீட்டின் வெளிமுற்றத்தை நெருங்குகையிலேயே மெஹ்ருன்னிஸா அவள் தாயாருடன் நிகழப்போகும் சந்திப்பை நினைத்துப் பயந்தாள். ஏனெனில், அவள் தாயாருக்குத் தெரிந்தால் விரைவிலேயே அவள் தகப்பனாருக்கும் எல்லா விஷயங்களும் தெரியவரும். அன்று இரவு தன் பெண்ணின் கதையை அதிர்ச்சியான மௌனத்துடன் அஸ்மத் கேட்டாள். அவள் கியாஸிடம் பேசியபிறகு இருவரும் பாதுஷா பேகத்தை அணுகுவதே நல்லது என்று முடிவு செய்தனர். அடுத்த நாள் காலை அஸ்மத் ருக்கையாவிடம் சென்று இளவரசர் நடந்து கொண்ட விதம் பற்றி புகார் செய்தாள்.

விஷயம் இவ்வளவு தூரம் முன்னேறி விட்டது தெரிந்து, சக்ரவர்த்தினி கவலைப்பட்டாள். ஸலீமின் மனம் எப்படி எல்லாம் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும் என்று அவள் அறிந்தவளாதலால், முதலில் இது ஸலீமின் இளவயதுக்குரிய மோகம் என்றே அவள் நினைத்தாள். இப்பொழுது விஷயம் கைமீறிப் போகும் போல் ஆகிவிட்டது. அவள் சக்ரவர்த்திக்குச் செய்தி அனுப்பினாள்.

அன்று பிற்பகல் சக்ரவர்த்தி அவள் மாளிகைக்கு வந்த வுடனேயே நேரத்தை வீணடிக்காமல் ஸலீமின் தற்சமய மோகத்தைப் பற்றி ருக்கையா அவரிடம் கூறினாள். அவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருக்கையிலேயே முன்னறிவிப்பு இல்லாமல் இளவரசர் அங்கு வந்தார்.

"மாட்சிமை பொருந்தியவரே! உங்களிடம் ஒரு வேண்டுகோள்." இளவரசர் வேகமாகச் சென்று அக்பரின் காலடியில் அமர்ந்தார். அவருக்கிருந்த அவசரத்தில், முறைப் படிச் செய்ய வேண்டியதை ஸலீம் செய்யத் தவறிவிட்டார். சக்ரவர்த்தி முன்னிலையில் வந்தவுடன் யாராக இருந்தாலும்

அவரது வயது, பதவி, உறவு முறை கருதாது, சக்ரவர்த்திக்கு 'தஸ்லீம்' முறைப்படியோ 'கோனிஷ்' முறைப்படியோ வணங்கி மரியாதை செலுத்த வேண்டும்.

"நீ உன் பண்பாட்டை மறந்துவிட்டாய்." அக்பர் கோபத்துடன் கூறினார்.

ஸலீம் அரை மனதுடன் எழுந்து அவரை வணங்கினார்.

"சரி, என்ன விஷயம்?" சக்ரவர்த்தி அதிகாரத்துடன் வினவினார்.

"மிர்ஜா கியாஸ் பெக் என்பவரின் புதல்வியை நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். அவள் பெயர் மெஹ்ருன்னிஸா"

"அது நடக்காது." ஸலீம் மேற்கொண்டு பேசுவதை அக்பர் தடுத்தார். "அவளுக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டது. அதற்கு நான் உத்தரவும் கொடுத்தாகிவிட்டது. கொடுத்த உத்தரவை நான் மீற மாட்டேன்."

ஸலீம் தன் தந்தையை வெறித்து நோக்கினார். ஒரு அரச சபை உறுப்பினருடைய மகளை ஸலீம் திருமணம் செய்து கொள்வது பற்றி அவர் ஏன் கவலைப்படவேண்டும்? தந்தையுடன் மரியாதையாகப் பேசுவதற்குத் தன்னைத் தயார்ப் படுத்திக்கொண்டு ஸலீம் கூறினார். "ஆனால், மாட்சிமை பொருந்தியவரே! நீங்கள் உத்தரவிட்டால் அதைச் சுலபமாக ரத்து செய்து விடலாம்."

"இல்லை ஸலீம்! அந்த நிச்சயதார்த்தம் எமது கட்டளை யின் பேரில்தான் நடந்தது. யாம் எமது வார்த்தையை முறிக்க இயலாது." கூறியவாறே அக்பர் தன் மகனிடமிருந்து முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

தான் வெளியேறுவதற்கான அறிகுறி இது என்பதை ஸலீம் உணர்ந்து கொண்டார். அவர் மெதுவாக எழுந்திருந்து தந்தையை வணங்கி விட்டுக் கனத்த இதயத்துடன் அந்த அறையைவிட்டு வெளியேறினார். அவருக்கு மெஹ்ருன்னிஸா வேண்டும். எப்படியாகிலும் அடைய வேண்டும். முன்தினம் இரவு அவருக்குச் சரியான உறக்கமில்லை. ஒவ்வொரு எண் ணத்திலும் ஒவ்வொரு கனவிலும் —அவள் அழகிய முகம்,

அவள் கைகளின் ஸ்பரிசம், அவள் தோலின் மிருதுத்தன்மை அவரை அலைக்கழித்தது. அவள் அவரை முழுவதும் ஆக்ரமித்துக் கொண்டாள். ஆனால், அவளுக்காக ஸலீம் தந்தையிடம் கெஞ்ச மாட்டார். சில வருடங்களுக்கு முன் அவர் செய்த காரியம் தவறானது என்பதை அவர் அறிந்து கொண்டார். ஆனால், இப்பொழுதெல்லாம் அக்பர் அவரிடம் இரக்கம் காட்டுவதில்லை. தான் செய்த காரியத்தை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளாமல் ஸலீம் பலவிதங்களில் அதற்குப் பிராயச்சித்தம் செய்ய முயற்சித்தார். இந்த ஒரு விஷயத்திலாவது சக்ரவர்த்தி அவரிடம் பரிவாக நடந்து கொண்டிருந்தால்... இந்தச் சிறிது காலத்திலேயே அவரறிந்த மற்ற பெண்களை விட முக்கியமானவளாக மெஹ்ருன்னிஸா அவருக்கு ஆகிவிட்டாள். கதவிற்கு வெளியில் ஒரு குளிர்ந்த பளிங்குக் கல் தூணில், தலையைச் சாய்த்தவாறு ஸலீம் நின்றார்.

ஸலீம் அகன்றவுடன் சக்ரவர்த்தியின் முகம் துக்கத்தால் நொறுங்கிப் போவதை ருக்கையா பார்த்தாள். திடீரென்று அவர் பல வருடங்கள் வயது கூடியவராகத் தோன்றினார். அக்பர் பெருமூச்சு விட்டவாறு குனிந்தார். "நாம் மிர்ஜா பெக்கிடம் பேசுவோம்."

இது நடந்த ஒரு வாரத்திற்குள் தாரை, தப்பட்டைகளின் ஒலி கியாஸ் பெக் வீட்டிற்கு அலிகுலியின் வரவை அறிவித்தது. வீட்டின் ஆண்களான கியாஸ், முகமது, அபுல் மற்றும் ஷாபூர், மாப்பிள்ளையின் வரவை எதிர்நோக்கி முன் முற்றத்தில் காத்திருந்தனர். அலிகுலியின் குடும்பத்தினர் ஒருவரும் இந்தியாவில் இல்லையாதலால் கான்—ஈ—கானன்—இராணுவ தளபதி அப்துர் ரஹீம், அவனுடன் குதிரையில் தொடர, அவர் வீட்டுப் பெண்கள் பல்லக்கில் பின்னால் வந்தனர். தங்க ஜரிகை நூலினால் வேலைப்பாடு செய்த சிவப்பு முகத்திரையின் கனத்தினால் தலை குனிந்த வாறு மெஹ்ருன்னிஸா அவள் அறையில் அமர்ந்திருந்தாள். அவள் கைகள் மருதாணியினால் கோலமிடப்பட்டிருக்கச் சந்தனம் பூசியதால் உடல் தங்கம் போல் பளபளக்க, அவள் கண்களில் மை தீட்டி அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

அவளைச் சுற்றியிருந்த பெண்கள் — அடுத்த வீட்டுப் பெண்கள், தோழிகள், மற்றும் உறவினர்கள், அவ்வப்போது அவள் முகத்திரையை விலக்கி, அவள் அழகைப் பார்த்து மெச்சிக் கொண்டிருந்தனர். அவள் கண்களில் துளிரும் கண்ணீர்த் துளிகளைக் கண்டு அவர்கள் நகைத்தவாறு இருந்தனர். ஏனெனில், தன் பிறந்த வீட்டை விட்டு சீக்கிரம் போகப் போகிற மணப்பெண் அவ்வாறு இருப்பதுதான் சரியான மனப்பான்மை என்ற வழக்கத்தினால்தான். அஸ்மத் சந்தடி செய்தவாறு அங்கும் இங்கும் நடந்து கொண்டும், பணியாட்களை அவ்வப்போது சூடான தேநீரும், தட்டு நிறைய லட்டுவும், ஜிலேபியும் எடுத்து வரச்சொல்லி உத்தரவிட்டுக் கொண்டுமிருந்தாள். அவள்தன் மகளைத் திரும்பிப் பார்க்கவேயில்லை. கடந்த ஒரு வாரமாக, யாரும் மெஹ்ருன்னிஸாவுடன் அதிகம் பேசவில்லை. அவள் தாயும் தந்தையும் எவரிடமும் என்ன நடந்தது என்பது பற்றித் தெரிவிக்கவில்லை. சக்ரவர்த்தியின் ஆணையினால் திருமணம் இன்னும் சீக்கிரமாகவே நடக்கவிருக்கிறது என்று மட்டும் எல்லோரிடமும் கூறப்பட்டிருந்தது. காபூலிலிருந்து மெஹ்ருன்னிஸாவின் தமக்கை ஸலீஹா கூட இன்னும் திருமணத்திற்கு வரவில்லை. அவள் இப்பொழுதுதான் பாதி வழி வந்திருக்கிறாள்.

திருமண முகூர்த்தத்திற்கு முன், பலமணி நேரம் மெஹ்ருன்னிஸா இவ்வாறு அமர்ந்து காத்திருந்தாள். தன் மனதில் தோன்றும் பலவித எண்ணங்களை முற்றிலும் அகற்ற முயற்சித்துக் கொண்டிருந்தாள். எல்லா விவரங்களையும் அவள் பெற்றோரிடம் கூறியது சரியானதுதான் என்றாலும், இந்த நிகழ்ச்சிகளால் அவள் தந்தையின் கௌரவம் குறைந்து விட்டதாக அவளுக்குத் தோன்றியது. அவள் திருமணம் முடியும் வரை அரண்மனைக்கு வரவேண்டாம் என்றும், வீட்டிலேயே இருக்கும்படியும் சக்ரவர்த்தினி ருக்கையா உத்தரவு பிறப்பித்து விட்டாள். ஸலீமிடமிருந்தோ அல்லது ஸலீம் பற்றியோ எந்தவிதத் தகவலும் இல்லை.

திருமண நிகழ்ச்சி வெகு சீக்கிரத்தில் முடிந்து விட்டது. ஆனால், அதைச் சார்ந்த விருந்து இரவு முழுவதும் நடந்து

கொண்டிருந்தது. மேளதாளத்துடன், பாடகர்கள் இசைத்து வர, அலிகுலி அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். வெளி முற்றத்தில் பல்லக்கில் ஏறும் முன், அவரி அவளைத் தன்னிடமிருந்து விலக்கும் வரை மெஹ் ருன்னிஸா கியாஸ் பெக்கை அணைத்துக் கொண்டிருந்தாள். "அவள் எங்கள் எல்லோரிடமும் மிகுந்த அன்பு கொண்ட வள்." கியாஸ் பெக் அலிகுலியிடம் மெதுவாகக் கூறினார்.

பற்கள் தெரியம்படிப் பெரிதாக நகைத்தவாறு அலிகுலி கூறினான். "என்னிடமும் அதேபோல் சீக்கிரம் அன்பு செலுத்தத் துவங்குவாள், மிர்ஜா பெக்."

அஸ்மத்தும் கியாஸும் துணுக்குற்றுச் சிறிது பின் வாங்கினர். பிறகு திரும்பிப் பார்க்காமலே, மெஹ்ருன்னிஸா பல்லக்கில் ஏறினாள். பல்லக்குத் தூக்குபவர்கள் அதை எடுத்துத் தோளின் மேல் வைத்து அந்த முற்றத்தை விட்டு வெளியே செல்லும் வரை அவள் தன் குடும்பத்தினரைத் திரும்பிப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.

அவர்களது படுக்கை அறையில், அலிகுலி மெஹ் ருன்னிஸாவின் முகத்திரையை விலக்கி, முதன்முறையாக அவள் முகத்தைப் பார்த்தான். அவன் அறியாமலே, அவன் கை அவள் முகத்தைத் தடவிக்கொடுக்க விரைந்தது. அவள் அழகிய புருவங்கள் மேலிருந்து கன்னங்களின் வளைவு வரைத் திருமணத்திற்காக அலங்கரிக்கப்பட்டிருந்த வெள்ளைப் புள்ளிகளின் மேல் விரல்களால் கோடிட்டான். அவள் நடுங்கினாள். அலிகுலி அதைப் பொருட்படுத்தவில்லை. தன் அதிர்ஷ்டத்தை அவனால் நம்பமுடியவில்லை. இந்தத் திருமணம் கியாஸ் பெக்குடன் அவன் உறவைப் பலப் படுத்தும் என்று மட்டுமே எண்ணியிருந்தான். ஆனால், தன் மனைவி இவ்வளவு அழகாக இருப்பாள் என்று அவன் கற்பனை செய்தது கூட இல்லை.

அலிகுலி தன் அதிஷ்டத்தை எண்ணி மகிழ்ந்து, திருமண இரவை அனுபவித்துக் கொண்டிருக்கையில், இளவரசர் ஸலீம் எல்லா எண்ணங்களையும் மதுவில் மூழ்கடித்துக் கொண்டிருந்தார்.

அத்தியாயம் ஆறு

நன்னுடைய வசீகரத்தினாலும், சாதுரியத்தினாலும் திறமையாகச் செயல்பட்டு, இளவரசர் ஸலீமைத் தன்வசம் ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆசையில் அவள் வெற்றி பெற்றாள். ஆனால், மிகுந்த வீரமும், துணிவும் கொண்ட ஷேர் அப்குன் **(Sher afkun)** என்ற ஒரு உயர்குடிமனிதனுக்கு அவள் திருமணம் செய்விக்கப் பட்டாள்.

- Beni Prasad, History of Jahangir

டெல்லா வெளிச்சத்தையும் இழுத்து, லாகூர் கோட்டையைத் தாண்டித் தொடுவானத்தில் புதைத்தவாறு சில மணி நேரங்களுக்கு முன்னால், அந்தத் தினம் முடிவடைந்தது. பூமி சூரியனிடமிருந்து விலகி வர, வெளிச்சத்தைவிட அதிகமான நிழலுடன் கூடிய விளக்குகளால் தெருக்கள் மெல்லிய ஒளி பரப்பப்பட்டுக் கொண்டிருந்தன. கடைகள் மூடப்பட்டுக் கடைவீதிகள் காலியாக இருந்தன. ராவி நதியின் கரைகளை ஒட்டிப் பெரிய மதிற் சுவருக்கும், உயரமான புளிய மரங்களுக்கும் இடையில் கற்களாலான வீடுகள் இருளில் புதைந்திருந்தன. இரவில் வெகு சில மனிதர்களே தெருக்களில் நடமாடினர். சக்ரவர்த்தி அக்பரின் அரசாட்சி ஆனாலும், இரவில் தனியாகச் செல்வது பாதுகாப்பானதல்ல. ஏனெனில், இது கொள்ளையர்கள், கொலைக்காரர்கள், பேய், பிசாசுகள் நடமாடும் நேரம்.

அவர் குடும்பப் பெண்கள் தங்கும் உள்ளடங்கிய பகுதியின் முற்றத்தின் படியில், கியாஸ் பெக் அமர்ந்திருந்தார். அந்த முற்றம் சாம்பல் நிறமான வழவழப்பான கற்களால் தளம் அமைக்கப்பட்டிருந்தது. நான்கு புறத்திலும் நீண்ட நாழ்வாரங்களும், அதிலிருந்து பல அறைகளுக்குச் செல்லக் கதவுகளும் இருந்தன. அன்றைய தினத்துக் கவலைகளை மறக்க முயற்சித்தவாறு கியாஸ் மௌனமாக அமர்ந்திருந்தார்.

அவரது வெள்ளைப் பருத்தி மேல் அங்கியின் மேல் முந்தைச் சாய்த்தவாறு, அர்ஜுமன்ட் (Arjumand) அவர் தோளில் உறங்கிக் கொண்டிருந்தாள். அவரது மேல் அங்கியின் நூக்கலான பூ வேலைப்பாட்டின் தடம் அவள் முகத்தில் பதிந்திருந்தது. கியாஸ் அவளைக் குனிந்து பார்த்தார். கட்டைவிரல் வாயில் இருக்கக் கால்கள் அவர் மடியின் மீது ஊசலாட, மற்றொரு கை அவரது அங்கிக்குள். அவர் மார்பைப் பிடித்தவாறு அவள் உறங்குவதை ரசித்தார். அவள் பாவாடை முழங்கால் வரை ஏறியிருந்ததை அவர் நீட்டி விடுகையில், அவர் விரல்கள் அதிலுள்ள வெள்ளி ஜரிகையில் சிக்கிக் கொண்டன.

அவர் நினைத்துப் பார்த்தார். அவள் மெஹ்ருன்னிஸாவைப் போலவே இருக்கிறாள். அதே போன்ற அடர்ந்த கருமையான தலைமுடி. தற்சமயம் பின்னால் இழுத்து கட்டப்பட்டிருந்தாலும், அவிழ்ந்துவிட்டால், இடுப்பு வரை வந்தது. சாம்பல் நிறத்தில் மேகம் மூடிய வானம் போல் அதே விஷமத்தனமான கண்கள். அவள் சந்தோஷமாக இருக்கையில் அதே மகிழ்ச்சியுடன் கூடிய சிரிப்பு. அவளுக்குப் பிடித்த ஏதாவது ஒன்றைக் கொடுக்க மறுத்தால், அதேபோல் புருவங்களை நெரிப்பது — அப்படியே எல்லாம் மெஹ்ருன்னிஸாவைப் போல. ஆனால், அவள் மெஹ்ருன்னிஸாவினுடையவள் அல்ல.

கியாஸ் மெதுவாக அர்ஜுமன்ட் வாயிலிருந்து விரலை எடுத்தார். முதலில் எதிர்த்தாலும் தூக்கம் மிகுதியால் அவள் பேசாமல் இருந்து விட்டாள். ஆறு வயதுக் குழந்தைக்கு இது நல்ல பழக்கம் இல்லை. அபுலும் அவன் மனைவியும் எவ்வளவு முயற்சித்தாலும் அர்ஜுமன்டின் இந்த பழக்கத்தைத் தடுக்க முடியவில்லை. அர்ஜுமன்ட் அபுலின் மகள். தற்சமயம் தாத்தாவின் மடியில் உறங்கிக் கொண்டிருக்கிறாள். முற்றத்தில் மண்டியிட்டு அமர்ந்திருக்கும் அந்த இரண்டு பெண்களையும் கியாஸ் ஏறிட்டுப் பார்த்தார்.

பக்கத்திலிருந்த மண் தட்டுக்களில் இருக்கும் பல நிறங்களிலான கோலப் பொடிகளில் கைகள் இருக்க, மெஹ்ருன்னிஸாவும் அஸ்மத்தும் மௌனமாக வேலை

செய்து கொண்டிருந்தனர். முற்றத்தின் தூண்களில் சொருகி வைத்திருந்த தீ வட்டிகள், கியாஸ் அமர்ந்திருந்த நிழலான பகுதியைத் தவிர, மற்ற எல்லா இடங்களிலும் வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. இரண்டு மணி நேரத்திற்கு முன்பு, அவர்கள் பல வண்ணப் பொடிகளால் 'ரங்கோலி' வரையத் தொடங்கியிருந்தனர். இப்பொழுது முற்றத்தின் தரை, பலவித நிறங்களில் வடிவங்களாகவும், கோலங்களாகவும் மலர்ந்திருந்தது. நுண்மையான மூடிய மொட்டுகளுடனும், புதிதாக மலர்ந்த மலர்களுடனும், அரிசி மாவினால் வரையப்பட்ட மல்லிகை பூக்கள், பச்சை வர்ணப் பொடிகளில் நீண்ட மாவிலைகள், ஆழ்ந்த சிவப்பு நிறத்தில் செம்பருத்திப் பூக்கள், மஞ்சட்டுப் போன்ற இளஞ்சிவப்பு நிறத்தில் தாமரைப் பூக்கள், மஞ்சள் நிறத்தில் இடையில் ஓடும் நரம்புகளோடு முக்கோண வடிவத்தில் அரச இலைகள்...

கைகளில் மணிக்கட்டு வரைக் கலர் பொடிகளால் நிறைந்திருக்க மெஹ்ருன்னிஸா சிறிது நிமிர்ந்து முழங்காலை வளைத்து உட்கார்ந்து கொண்டாள். "எவரோ ஒருவரின் கட்டுபாடற்ற கனவு போல், இந்தக்கோலங்கள் ஒரு பெரிய வானந்திரம் போலிருக்கின்றன."

அவர்கள் முதலிலேயே வரைந்து வைத்திருந்த கோட்டுக்குள்ளே, துளியும் வெளியே சிதறாமல், அவள் விரல் இடையிலிருந்து பச்சைவர்ணப் பொடியை ஒரு மாவிலை மேல் தூவிய வண்ணம், அஸ்மத் புன்னகைத்தாள். "இந்தக் கோலங்களில் எவ்வளவு அதிக வர்ணங்களைச் சேர்த்து நாம் வரைகிறோமோ அவ்வளவு அதிகமாக நாம் மனீஜாவின் புதுக் குடும்பத்தினரை வரவேற்பதாகும். அரிசி மாவினால் தரையில் கோலமிடுவது ஹிந்துக்களின் வழக்கம். ஆனால், நம் மனீஜாவின் திருமணத்திற்கும் இது பொருத்தமானது தான்."

அவள் புருவத்தின் மேல் நீல நிறம் படிய, திடீரென்று வந்த வலியைக் குறைக்க, மெஹ்ருன்னிஸா தன் நெற்றியை தேய்த்து விட்டுக் கொண்டாள். "அவளுடைய கணவன் யார், அம்மா?"

அவன் பெயர் காஸிம் கான் ஜுவியானி (Qasim Khan Juviani). நிச்சயதார்த்தத்தின் பொழுது அவனைச் சிறிதுதான் பார்த்தேன். அவர்கள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று உன் தந்தை கூறுகிறார். அவன் ஒரு கவிஞன் என்று மனீஜா சொல்கிறாள்."

குனிந்து மண் தட்டுகளிலிருந்து மஞ்சள் நிறப்பொடிகளை அள்ளி எடுத்தவாறு மெஹ்ருன்னிஸா வினவினாள். "ஒரு கவிஞன், அவன் என்ன இயற்றுகிறான்?"

"காதல் கவிதைகள். நேற்று மனீஜாவிற்கு ஒரு கவிதை அனுப்பியிருந்தான்." அஸ்மத் குரல் இசைபோல் ஒலித்தது. "அவளைப் பார்க்க அவன் கண்கள் ஏங்கின, அவன் இதயம் அவளது நடை ஒலிக்கு ஏற்பத் துடித்தது. அவன் ஒவ்வொரு மூச்சும் அவள் பெயரை உச்சரித்தது."

மெஹ்ருன்னிஸா சிரித்தாள். அதன் ஒலி அந்த வெது வெதுப்பான இரவுக் காற்றில் அலை பாய்ந்தது. "இங்கே நாம் ஒரு வசீகரமான வனத்தை வரைந்து அவன் வீட்டுப் பெண்களை வரவேற்கிறோம். இந்தக் கோலங்களைப் பார்த்தால் அவன் என்ன சொல்வான்?"

"நிறையக் கூறுவான் என்று நினைக்கிறேன். ஆனால் அவன் இவ்வளவு தூரம் பெண்கள் பகுதி வரை வர மாட்டான். உனக்கு அது தெரியுமே!"

"மனீஜாவிற்குத் திருமணம்," சிறிது இடைவேளைக்குப் பிறகு மெஹ்ருன்னிஸா கூறினாள். "முதலில் கதீஜா, இப்பொழுது மனீஜா, நம்பவே முடியவில்லை."

"அபுலும் முகமதும் எங்களுடனேயே இருப்பது போல் உங்கள் எல்லோரையும் எங்களுடன் வைத்துக் கொள்ள உன் தந்தைக்கும் எனக்கும் விருப்பம்தான். பிறந்த தினத்தி லிருந்தே பெண்கள் இன்னொருவனுக்குச் சொந்தம். நாங்கள் தாற்காலிகப் பாதுகாப்புக் கொடுப்பவர் தாம், குழந்தாய்." அஸ்மத் கூறினாள். "அவர்கள் வளர்வார்கள். திருமணம் செய்து கொள்வார்கள். அவர்களுடைய சொந்த வீட்டிற்குச் செல்வார்கள். அவர்களுக்குச் சொந்தமாகக் குழந்தைகள் பிறக்கும்."

அவள் தாயார் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் மெஹ்ருன்னிஸா தன் தந்தை அமர்ந்திருக்கும் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அர்ஜுமன்ட்-ஐ மேலும் சௌகரிய மாகத் திருப்பித் தன் கைகளில் அவர் படுக்கவைத்துக் கொண்டிருந்தார். மெஹ்ருன்னிஸா தலையைக் குனிந்து கொண்டாள். அவள் எவ்வளவு முயன்றும் தடுக்க இயலாமல், ஒரு கண்ணீர்த் துளி கன்னத்தில் வழிந்து, மாவிலைமேல் இருக்கும் பனித்துளி போல், தரையில் கோலத்தில் தெரித்து, அதில் இருந்த பச்சைப் பொடியை ஆழ்ந்த பச்சை நிறமாக்கியது. அஸ்மத்தின் சொற்கள் அவள் மனதை எத்தனை சூன்யமாக ஆக்கியது என்பதை அவள் தாய் உணரக்கூடாது என நினைத்து, அஸ்மத் தன்னை கவனித்திருக்க மாட்டாள் என்ற நம்பிக்கையில் மெஹ்ருன் னிஸா முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். 'அவர்களுக்குச் சொந்தமாகக் குழந்தை பிறக்கும்!'

அலிகுலியுடன் அவள் திருமணம் நடந்து நான்கு வருடங்களாகி விட்டன. ஆனால், அவள் இல்லம் குழந்தை களின் சந்தோஷமான ஆரவாரம் இல்லாமல் நிசப்தமாக இருந்தது. அது ஒரு வீடு தான், குடும்பம் அல்ல. ஏனெனில் அலிகுலி அங்கு இருப்பது மிகவும் அரிதாக இருந்தது. அவர்கள் திருமணம் முடிந்த ஐந்து நாட்கள் கழித்து அலிகுலி ஈரானுவத் தளபதியுடன் ஒரு படையெடுப்பிற்குச் சென்று விட்டான். அதற்கு பின் எட்டு மாதங்களுக்கு அவனிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. அவனிடமிருந்து அவளுக்குக் கடிதம் ஒன்றும் வரவில்லை. அங்கிருந்து வருபவர்கள் மூலம் அறிந்து கொள்ளும் விவரங்கள்தான். அவன் திரும்பி வந்த பொழுது ஒரு அன்னியனாகத் தான் தெரிந்தான். ஐந்து நாட்களுக்கே பரிச்சயமான ஒருவன். மொத்தத்தில் அவன் கெட்டவனல்ல. அவன் அவளை அடிப்பதில்லை. மற்ற கணவன்மார்களைப் போல், மனைவி ஒரு நாய்க்குச் சமம், சுத்தமில்லாதவள், நாடத்தகுதி அற்றவள், வெறும் ஒரு போகப் பொருளே என்று வெளிப்படையாகக் கொடூரமாக நடந்து கொள்பவன் அல்ல. இந்த மாதிரியான நடத்தையால் வரும் மனவலியை அவன் அவளுக்குக் கொடுத்ததில்லை. ஆனால், அவன்

மௌனம் அவளுக்கு அதிக மனவலியைக் கொடுத்தது. அவனுக்கு அவளிடம் சிறிதும் அக்கறை இல்லாததுபோல் உணர வைத்தது.

அலிகுலி திரும்பி வந்த பிறகு, திருமணம் ஆன பிறகு அந்த முதல் வருடத்தில் மெஹ்ருன்னிஸாவின் மாதவிலக்கு நின்றது. இரத்தத்தைப் பார்த்தாலே வயிற்றைக் குமட்டியது. பூக்களின் நறுமணம் தலையைச் சுற்றியது. அடிக்கடி தாங்க முடியாத தலைவலி வந்தது. பகல் நேரங்களில் சரியான உறக்கம் இல்லை. பிறகு ஒருநாள், அவள் தண்ணீர்த் தொட்டியில் குளித்துக் கொண்டிருக்கையில், அவளைச் சுற்றி நீர் சிறிது சிறிதாகச் சிவப்பு நிறமாக மாறத் தொடங்கியது. அவளது கரு கலைந்ததினால் வந்த வலி. யானைகள் கட்டி அங்கம் அங்கமாக இழுப்பது போல் வலித்தது. கடைசியில் உணர்ச்சி ஏதுமில்லாமல் மரத்துப் போயிற்று.

கரு கலைந்ததினால் ஏற்பட்ட வெட்கம், அவமானம் பல நாட்கள் அவளுக்கு இருந்தது. நாட்கள் செல்லச் செல்ல அவள் மறுபடியும் கருத் தரிக்கவில்லை. ஒரு முறை அலிகுலி அவளிடம் கேட்டான். "நீ என்னிடம் உண்மையாக இல்லாததால்தான் இப்படி நடக்கிறது. வேறு யாராவது ஆண்மகனை மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறாயா?" அதிர்ச்சியில் மெஹ்ருன்னிஸா அவனை வெறித்துப்பார்த்தாள். இது உண்மையாக இருக்கக் கூடுமா? ஸலீம் பற்றிய அவளது நினைவுகள் இன்னொருவன் குழந்தையைச் சுமக்க அவள் உடலுக்குத் திறமையைக் கொடுக்கவில்லையா? ஆனால் ஸலீம் பற்றி அவள் நினைப்பதில்லை. குறைந்த பட்சம் எப்பொழுதும் நினைப்பதில்லை. அவ்வப்பொழுது, அவள் சோர்வாக இருக்கும் பொழுது, அவள் மூளை வேலை செய்ய மறுத்தபொழுது, அவரைப் பற்றிய நினைவுகள் வரும். சக்ரவர்த்தினி மாளிகைப் பூங்காவில் முதன்முறையாக அவரைச் சந்தித்தது... மீனா பஜார் சந்தையில் நடந்த இரண்டாவது சந்திப்பு... மூன்றாவது முறையாக அவரைச் சந்தித்த போது அவர் கொடுத்த அந்த முத்தங்கள்...

"குழந்தாய்," அஸ்மத் அவள் தோள்களில் கையை வைத்துத் தன் பக்கம் அவளைத் திருப்பினாள். அவள்

[illegible]னத்தில் கண்ணீர் துளிகளைக் கண்டதும், தன் முகத்திரை [illegible]ல் அதைத் துடைத்துவிட்டாள். "சீக்கிரம் நடக்கும் [illegible]ந்தாய்."

மெஹ்ருன்னிஸா சிரமத்துடன் புன்னகைத்தாள். மற்றவர் [illegible]டைய இரக்கம் அவளுக்குத் தேவையில்லை. அது [illegible]யாக இருந்தாலும் சரி. கடந்த நான்கு வருடங்களாக [illegible]வர்கள் எல்லோரும் அவளிடம் இரக்கம் காட்டி வந்தனர். [illegible]மது, அபுல், கதீஜா, மனீஜா. முகமதிற்கும் அபுலுக்கும் [illegible]ழந்தைகள் இருக்கின்றனர். ஆறு மாதத்திற்கு முன்புதான் [illegible]ருமணமாகிய கதீஜா கர்ப்பமாக இருக்கிறாள். குழந்தை [illegible]வை அறிவிப்பது போல் அவள் வயிறு சிறிது மேலிட்டி [illegible]க்கிறது. தாயாரின் பார்வையிலுள்ள அனுதாபத்தைத் [illegible]டைக்க விரும்பி மெஹ்ருன்னிஸா கூறினாள். "சீக்கிரம் [illegible]க்கும் என்றுதான் நானும் நினைக்கிறேன், அம்மா."

அஸ்மத் தன் மகளின் முகத்தை மென்மையாகத் [illegible]தாட்டுத்தடவினாள். "எவ்வளவு நாட்கள்?"

"இரண்டு மாதம்."

அஸ்மத் சந்தோஷத்துடன் மெஹ்ருன்னிஸாவை [illegible]ணைத்து முத்தமிட்டாள். "நீ என்னிடம் சொல்ல [illegible]ல்லையே? ஏன் என்னிடம் இத்தனை நாட்கள் சொல்ல [illegible]ல்லை? இதை நாம் கொண்டாட வேண்டும்."

"இல்லை, அம்மா தயவுசெய்." நெற்றியில் கவலைக் [illegible]கோடுகள் விழச் சிறிது பின் வாங்கியவாறு மெஹ்ருன்னிஸா [illegible]றினாள். "இப்பொழுது வேண்டாம். இவ்வளவு சீக்கிரம் [illegible]வேண்டாம்."

"ஏன்? இது பெரும் மகிழ்ச்சி கொடுக்கும் விஷயம். [illegible]ட்டிலே ஒரு திருமணம் இன்னொரு பேரக்குழந்தை. இதை [illegible]ட எனக்கு என்ன வேண்டும்? உன் தந்தையிடம் உடனே [illegible]றவேண்டும்."

கியாஸைக் கூப்பிடுவதற்காக அஸ்மத் கையை உயர்த்து [illegible]கையில் மெஹ்ருன்னிஸா அவளைத் தடுத்தாள்.

"இல்லை, அம்மா. இப்பொழுது யாரிடமும் சொல்ல [illegible]னக்கு விருப்பமில்லை. நாம் சிறிது பொறுக்க வேண்டும். [illegible]ன்னிடம் கூடச் சொல்லியிருக்க மாட்டேன்—"

அஸ்மத் கையைத் தணித்து விட்டு மெஹ்ருன்னிஸாவைப் பார்த்தாள். "என்னிடம் கூடவா, குழந்தாய்? எப்படி உன் தாயாரிடம்கூடச் சொல்லாமல் இருக்க முடியும்? அலிகுலிக்குத் தெரியுமா?"

"இல்லை."

"ஏன்?" அஸ்மத் கேட்டாள். "உன் கணவருக்குக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இது ஒன்றும் மறைக்கும் விஷயம் இல்லை. இது ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயம். உன் குடும்பத்தில் ஒரு குழந்தை, ஒரு வேளை ஆணாகக்கூட இருக்கலாம். உன் கணவருக்கு உடனே நிச்சயம் சொல்ல வேண்டும்."

தாயாரிடம் சொல்லியிருக்க வேண்டாமோ என்று எண்ணி மெஹ்ருன்னிஸா தலையை ஆட்டி மறுத்தாள். தினமும் குளிக்கும் பொழுது எங்கே இரத்தம் வருமோ, அவள் குளிக்கும் நீரில் கலந்து தெரியுமோ என்று பயந்தவாறு அவசரம் அவசரமாக அவள் குளித்து முடிப்பது பற்றி எப்படித் தாயாரிடம் சொல்ல முடியும்?"

"அவரிடம் சொல்ல முடியாது. இப்பொழுது சொல்ல முடியாது."

அஸ்மத் தன் மகளை விட்டுத் திரும்பிச் சிறிது நகர்ந்து சென்று மற்றொரு இலைக்கு வண்ணமிட ஆரம்பித்தாள். "மெஹ்ருன்னிஸா, அலிகுலிக்கு இந்தக் குழந்தையைப் பற்றிய விஷயம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். எங்களுக்கு முன்னால் இந்த விஷயம் அவனுக்குத்தான் நீ முதலில் சொல்லவேண்டும். நீ அவனுக்குச் சொந்தமானவள். எங்களுக்கல்ல. உன்னுடைய எல்லாச் சிந்தனையும் அவனைச் சுற்றியே இருக்கவேண்டும். நான் எப்பொழுதும் உன் தகப்பனாரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதுபோல்."

"ஆனால் உன்னையும் தந்தையும் மாதிரி நாங்கள் இல்லை அம்மா." மெஹ்ருன்னிஸாவின் குரல் நடுங்கிற்று. "எங்கள் திருமணம் வித்தியாசமானது."

"ஆமாம், நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், அதுவும் திருமணம் தான். அந்த பந்தத்திலிருந்து விடுபட முடியாது. ஒருவேளை முதலில் நானும் உன் தந்தையும் செய்தது தவறாக இருந்திருக்கலாம். உன்னை நன்றாகப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு மனிதனுக்கு உன்னைத் திருமணம் செய்வித்திருக்க வேண்டும். ஆனால், சக்ரவர்த்தியிடமிருந்து திடீரென்று முகமாக உத்தரவு வந்தபின் நாங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. குறைந்தது அலிகுலி இன்னொரு பெண்ணைத் தேடிப்போகவில்லை. இந்த விஷயத்தில் அவன் உன் தந்தையைப் போல்தான்."

அவளை அறியாமலேயே வரும் கண்ணீர்ப் பார்வையை மறைக்க மெஹ்ருன்னிஸா தன் தாயாரை உற்றுப் பார்த்தாள். "தந்தையாரின் உலகமே உன்னாலும் எங்களாலும் நிரம்பி இருந்ததால் அவர் இன்னொரு திருமணம் செய்து கொள்ள வில்லை. அலிகுலிக்கு என்னிடம் மிகுந்த ஈடுபாடு ஒன்றும் இல்லை. அவன் உலகில் எனக்கு ஒரு சிறிய இடம் தான். நீ ஏன் அலிகுலியை ஆதரித்துப் பேசுகிறாய்? நீ என்னைப்பற்றி அல்லவா கவலைப்பட வேண்டும். நீ என் தாயார். அவன் தாயார் இல்லை. நீ முற்றிலும் என்னை அவனிடம் துறந்து விட்டாயா? அதனால்தான் நான் எப்படி இருக்கிறேன் என்று நீ கவலைப்படுவதில்லையா?" இந்த வார்த்தைகள் அவள் வாயிலிலிருந்து வருகையிலேயே, தான் அவ்வாறு பேசியிருக்க கூடாது என்று மெஹ்ருன்னிஸா உணர்ந்தாள். அஸ்மத் அவளைப் பார்க்காதபடிக் குனிந்து தன் வேலையில் கவனமாக இருப்பது போலிருந்தாள். அவள் மனதில் ஏற்பட்ட வலியை உணருவதுபோல் அவள் கண்கள் மூடி இருந்தன. அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவள் வலியைத் துடைக்க வேண்டும் என்று மெஹ்ருன்னிஸா விரும்பினாள். அவள் பெற்றோர்கள் அவளைப் பற்றி மறந்து விட்டிருப்பார்கள் என்று அவள் எண்ணவில்லை. அவள் கணவன் அவளைப்பற்றி நினைப்பதை விட அதிகமாகவே அவள் பெற்றோர்கள் நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்று அவளுக்குத் தெரியும். அவளிடம் கூட அவர்கள் தங்கள் உணர்ச்சியை வெளிப்படக் காட்டிக்கொள்ளமுடியாது.

அலிகுலியைப் பற்றி அஸ்மத் இப்பொழுது பேசியது வழ
முறையை மீறிய செயலாகும் — அலிகுலி பற்றி பேசியது
எவ்வாறு கியாஸும் அஸ்மத்தும் அவளை அலிகுலிக்குத்
திருமணம் செய்வித்தது குறித்து வருந்துகிறார்கள் என்று
இந்த மாதிரி விஷயங்கள் வெளிப்படையாக விவாதிக்க
படுவதில்லை. விதிப்படித்தான் திருமணங்கள் நடக்கும்
அப்படிப்பட்ட திருமண வாழ்க்கையும் தொடரும், எது
நடந்தாலும் சரி.

"என் ஆசை" அஸ்மத் மெல்லிய குரலில் பேச ஆரம்பிக்க
மெஹ்ருன்னிஸா அவளருகில் குனிந்து கேட்டாள். "என்
ஆசை உனக்கு ஒரு குழந்தை பிறக்கவேண்டுமென்பதே
ஏனெனில், அது உனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும்
உனக்கு ஏன் இன்னும் குழந்தை பிறக்கவில்லை என்று
மற்றப்பெண்கள் அடிக்கடி உன்னிடம் கேட்பதை என்னால்
மட்டும் தடுக்க முடியுமானால் நிச்சயம் அவர்களை அப்படி
பேசவிடமாட்டேன். எப்படியாவது உன் மடியில் ஒரு
குழந்தை இருக்கச் செய்யமுடியுமானால், நிச்சயம் நான்
அதைச் செய்வேன்."

"அம்மா, நான் அவ்வாறு உன்னிடம் பேசி இருக்கக்
கூடாது."

"இல்லை," அஸ்மத் மெதுவாகத் தலையை அசைத்தாள்.
"பரவாயில்லை, குழந்தாய் ஆனால்—" அவள் தெளிவான
முகத்துடன் மெஹ்ருன்னிஸாவைப் பார்த்தாள். "நாளை
வீட்டிற்குச் சென்றவுடன் நீ அலிகுலியிடம் இதைப் பற்றிச்
சொல்லி விடவேண்டும். அவன் தான் இதுபற்றி முதலில்
அறிந்திருக்கவேண்டும். நீ செய்யும் எந்தக் காரியமும்
மரியாதை குன்றி இருக்கக் கூடாது, நிஸா. விரலை நீட்டி
ஒருவரும் நீ செய்தது தவறு என்று சுட்டிக்காட்டும் நிலைமை
வரக்கூடாது. என்னவாயினும் வெளிப்பார்வைக்கு எல்லாம்
முறைப்படி நடப்பதாகவே இருக்கவேண்டும்."

மெஹ்ருன்னிஸா பெருமூச்சு விட்டாள். சமுதாயத்தில்
எப்பொழுதும் சில வரைமுறைகள் உள்ளன. ஒருவன் எப்படி
வாழவேண்டும். என்ன சாப்பிடவேண்டும், என்ன பேச

வேண்டும், எந்தச் சமயத்தில் மௌனத்தைக் கடைப்பிடிக்க
வேண்டும் என்பது போல்! அவளது சிறிய வயதில் தாய்
தந்தையரின் பாதுகாப்பில் இருக்கையில் இவை எல்லாம்
எளிதாக இருந்தன. ஆனால், இப்பொழுது ஒரு திருமணமான
பெண்ணாகையால் மற்றவர்களின் உன்னிப்பான கண்
காணிப்பிற்கு ஆளாகிறாள். மெஹ்ருன்னிஸா இவ்வாறு
நினைத்துக் கொண்டிருக்கையில், மகிழ்ச்சியான முகத்துடன்
வார்த்தைகள் ஒளி வீச அஸ்மத் மேலும் பேசத் தொடங்கினாள்.
"ஆனால் நிச்சயம் உனக்குக் குழந்தை பிறக்கப் போகிறது.
இரண்டு வயதான பெண்கள் போல், கற்பனையான
விஷயத்தில், நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். தைரியமாக இரு.
கண்ணே! நீ எப்படிப்பட்ட விசாரத்தில் இருக்கிறாய் என்று
ஒருவேளை என்னாலேயே புரிந்து கொள்ளமுடியவில்
லையோ? ஏனெனில், இந்த மாதிரியான அநுபவம் எனக்கு
ஏற்பட்டதில்லை. உன் குழந்தையின் நலத்திற்காகவும், அது
உனக்குக் கொடுக்கப்போகும் மகிழ்ச்சிக்காகவும் நான்
அல்லாவிடம் பிரார்த்திக்கிறேன்."

"தந்தையிடம் சொல்லிவிடாதே, அம்மா" அவசரமாக
மெஹ்ருன்னிஸா கூறினாள்.

"அவர் புரிந்து கொள்வார், குழந்தாய்! நான் அவரிடம்
சொல்லவேண்டும் என நீ விரும்பினாலும் சரி, விரும்பா
விட்டாலும் சரி, அவர் புரிந்து கொள்வார். ஒருநாள்,
இன்றைக்கு அர்ஜுமண்ட்—ஐத் தோளில் அணைத்து
வைத்திருப்பது போல், உன் குழந்தையையும் அணைத்துப்
பாடித் தூங்க வைப்பார்."

அவர்கள் இருவரும் கியாஸ் உட்கார்ந்திருந்த பக்கம்
திரும்பிப் பார்த்தனர். அவர் பேத்தி மடியில் உறங்கிக்
கொண்டிருக்க, தூணில் சாய்ந்தவாறு அவரும் உறங்கிக்
கொண்டிருந்தார். பகல் முழுவதும் செய்த வேலையின்
களைப்பும் இரவின் அமைதியான சூழ்நிலையும் அவர்களை
சூழ்கொண்டிருந்தது. அவள் தாயார் அநாவசியமாக அவளி
டம் கரிசனம் காட்டாமல் இருந்தது குறித்து மெஹ்ருன்னிஸா
சந்தோஷமடைந்தாள். ஏனெனில், நடக்கக் கூடாதது நடந்து

விட்டால், இந்தக் கரிசனம் அவளுக்கு வெட்கத்தையும் அவமானத்தையும் கொடுக்கும். அவளை ரங்கோலி போடுவதை நிறுத்திவிட்டு உள்ளே சென்று ஓய்வு எடுக்கச் சொல்லி அஸ்மத் வற்புறுத்தாததற்கும் அவள் மகிழ்ச்சி அடைந்தாள். கைகளும் மனமும் வேலையில் ஈடுபட்டிருக்கையில் எனை நேர்ந்து விடுமோ என்ற அவசியமில்லாத எண்ணங்களுக்கு நேரமில்லை. தாயார் எப்பொழுதும் எந்த விஷயத்தையும் அவசியம் இல்லாமல் பெரிதுபடுத்தமாட்டாள். இப்படி நடந்தாலோ அல்லது அப்படி நடந்தாலோ, வாழ்க்கை எப்படி மாறிவிடும் என்பது போன்ற உபயோகமற்ற சிந்தனைகளில் நேரத்தைச் செலவிடுவதை விட முக்கியமாகச் செய்யக்கூடிய வேலைகள் அதிகம் இருக்கின்றன.

சில மணி நேரமே தூங்க முடிந்த மெஹ்ருன்னிஸாவிற்கு அடுத்த நாள் காலை வெகு சீக்கிரமே விடிந்து விட்டது. முதல் நாள் இரவில் அவளும் அஸ்மத்தும் மேலும் மூன்று மணி நேரம் வேலை செய்திருந்தனர். அஸ்மத் எழுந்து கியாஸை எழுப்பிவிட்டுக் குழந்தை அர்ஜுமன்ட்—ஐ அவர் மடியிலிருந்து எடுத்துக்கொண்டு இருவரையும் படுக்கை அறைக்குச் சென்று உறங்க வைத்தாள் அவள் திரும்பி வந்த பின் அவளும் மெஹ்ருன்னிஸாவும் மௌனமாக மீதியிருந்த கோலத்தை வண்ணப்பொடிகளால் அலங்கரித்து முடித்தனர். முதுகில் ஏற்படும் அசௌகரியத்தைக் குறைக்க மெஹ்ருன்னிஸா கையை ஊற்றி அவ்வப்போது இளைப்பாறுவதையும், சமையல் அறையிலிருந்து அஸ்மத் அவளுக்காக எடுத்து வந்த புளிப்பான மாங்காய்த் துண்டை அவள் உறிஞ்சு சுவைப்பதையும் அஸ்மத் மனச்சஞ்சலத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அவர்கள் கோலங்கள் போட்டு முடித்தவுடன் அந்த முற்றமே பல வர்ணங்களில் ஒளிர்ந்தது. "இப்பொழுது போய் தூங்கு, நிஸா. நீ மிகவும் களைத்திருப்பாய். உன்னுடன் உன் குழந்தையும் களைத்திருக்கும்." என்று கூறியவாறு அஸ்மத் மெஹ்ருன்னிஸாவைத் தன்னருகே இழுத்து அணைத்துக் கொண்டாள். அவ்வாறே, அவர்கள் சிறிது நேரம் நின்றிருந்தனர். அஸ்மத் தலையில் இருந்த வாடிய மல்லிகையின் மணத்தை மெஹ்ருன்னிஸா சுவாசித்தாள். அவளது சீரான இதயத் துடிப்பை

உணர்ந்தாள். பல நாட்களாக இல்லாத ஒரு வித அமைதி யான சுகத்தை அவள் அனுபவித்தாள்.

மெஹ்ருன்னிஸா அவள் தந்தை வீட்டைவிட்டுக் கிளம்பு கையில், பால்காரன் தன் பசுக்களுடன் வீட்டு வாசலில் நின்றான். அவன் பசுவின் நிரம்பிய மடியைத் தடவிக் கொடுத்தவாறு தன் கையிலிருந்த குவளையை அங்கு நின்றி ருந்த பணிப்பெண்ணிடம் காட்டிக் கொண்டிருப்பதைத் தன் முகத்திரையைச் சிறிது இழுத்து விட்டபடி, அவள் நின்று பார்த்தாள். பாலின் அளவை அதிகப்படுத்துவதற்காக அந்தக் குவளையின் அடியில் தண்ணீர் இருக்குமோ என்று சந்தேகக் கண்களுடன் அந்தப் பணிப்பெண் சோதனை செய்த பிறகு, அவன் குவளையைத் தன் முழங்காலுக்கு இடையில் வைத்து அந்தப் பசுவுடன் மென்மையாகப் பேசியபடித் தன்னுடைய நீண்ட கரங்களால் பசுவின் மடியிலிருந்து பால் கறக்க ஆரம்பித்தான். பால்காரனும் பணிப்பெண்ணும் பேசிக் கொண்டிருக்கையில் மெஹ்ருன்னிஸா மெதுவாக நகர்ந்து, தன்னுடைய ஆண் வேலையாட்கள் சிறிது தூரத்தில் பின் தொடரத் தன் கணவர் வீட்டிற்கு நடக்கத் தொடங்கினாள்.

அலிகுலியிடம் சொல்லி விடவேண்டும் என்று தாயார் கூறியிருப்பதால் அவள் அப்படியே செய்வாள். முன்தினம் இரவு செய்த வேலையால் சோர்வடைந்திருந்தபோதிலும்... முதுகு வலியால் அவதிப்பட்டபோதிலும்... நாக்கில் ஒருவிதக் கசப்பு இருந்த போதிலும்.... மெஹ்ருன்னிஸா உள்ளுக்குள் ஒருவிதமான சுகத்தை உணர்ந்தாள். தாயாருடன் பேசியது அவள் பயத்தைப் போக்கியிருந்தது. இப்பொழுது அவர்கள் சுற்றும்பச்சூழ்நிலை மாறுபட்டதாக இருக்கும். அலிகுலிக்கும் அவளுக்கும் ஒரு குழந்தை, இதோ அவள் வயிற்றில் வளரும் குழந்தை. அவளைப்பற்றி மற்றவர்கள் கேள்வி கேட்பது நின்றுவிடும். அலிகுலி அவளை நினைத்துப் பெருமைப் படுவான். இருவரும் சேர்ந்து ஒரு இனிய இல்லறம் அமைக்கலாம். அவள் தாய் தந்தையரதுபோல் இல்லா விட்டாலும் அதுவும், ஒரு இல்லறமாக இருக்கும். மற்றப் பெண்கள் குழந்தைகளுடன் இருப்பதைப் பார்த்து, அந்த மனவேதனையே தன்னை விழுங்கி விடுமோ என்று அவள்

இனிப் பதறவேண்டாம். அவளுக்கும் ஒரு குழந்தை இருக்கும் அவள் வயதான காலத்தில், சோர்வாக இருக்கும் நேரங்களில் அந்தக் குழந்தை அவளுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் ஆதரவாக இருக்கும். மெஹ்ருன்னிஸா சிரித்துக் கொண்டாள். அந்த ஒலி, ஒரு நதியில் நீர் பாய்வது போல் மகிழ்ச்சியான ஒலி.

அவள் தன் வீட்டை அடைந்தவுடன் முற்றத்தைக் கடந்து அலிகுலியின் அறைக்குச் சென்றாள். காஸீம், அவன் பணியாள், குறட்டை விட்டவாறு கதவருகில் தூங்கிக் கொண்டிருந்தான். மெஹ்ருன்னிஸா குனிந்து அவன் தோளை உலுக்கினாள்.

இன்னும் கனவுலகில் இருந்த அவன் பெரிதாகச் சத்தமிட்டவாறு கண்ணை விழித்து அவளை ஏறிட்டுப்பார்த்தான். "ஸாஹிபா, நீங்கள் எப்பொழுது திரும்பி வந்தீர்கள்? ஸாஹேப் உங்களை எதிர்பார்த்திருக்க மாட்டார். நான் போய் அவரிடம் சொல்கிறேன்."

"அவசியமில்லை." மெஹ்ருன்னிஸா கூறினாள்.

"ஆனால், ஸாஹிபா..." அடிபட்ட பூனை போல் குதித்துக் கொண்டு அவசரமாக எழுந்தான். "இதுதான் நல்லது. நான் அவரிடம்..."

அதற்குள் மெஹ்ருன்னிஸா அலிகுலியின் அறைக் கதவைத்திறந்துவிட்டாள். சட்டென்று அவள் திடுக்கிட்டு நின்றாள். ஒரு அடிமைப் பெண்ணின் மேல் தன் காலை வைத்தவாறு, ஒரு கை அவளை அணைத்திருக்க, அவளது வெறுமையான தோள்களுக்கிடையில் முகத்தைப் பதித்தவாறு அலிகுலி உறங்கிக் கொண்டிருந்தான்.

ஒரு அடிமைப் பெண்ணுடன் அவள் கணவனைப் பார்த்ததும், துப்பாக்கியால் சுடப்பட்டு அவள் உடலே சுக்குநூறாக வெடித்ததுபோல் மெஹ்ருன்னிஸா உணர்ந்தாள். அலிகுலி மெதுவாகக் கண் விழித்துக் கதவருகில் நிற்கும் தன் மனைவியைப் பார்த்தான். அடிமைப் பெண்ணின் பின் புறத்தில் அவளை ஓங்கி அடித்து எழுப்பி "வெளியே போ" என்றான்.

அந்தப் பெண் விழித்தெழுந்து, தன் எஜமானியைப் பார்த்ததும் அவசரமாகத் தன் ரவிக்கையை இழுத்து விட்டுக் கொண்டு, குனிந்தவாறு மெஹ்ருன்னிஸாவைக் கடந்து, அறைக்கு வெளியே ஓடினாள். அவள் போனவுடன், காஸிம் பலகத்தில் அறைவது போல், மெஹ்ருன்னிஸா படாரென்று கதவைச் சாத்தினாள்.

அலிகுலி முழங்கையை ஊன்றி உட்கார்ந்து கொண்டு "அவள் ஒரு அடிமைப் பெண், மெஹ்ருன்னிஸா. நான் இன்னொரு திருமணம் செய்து கொள்ளவில்லையே என்று தன்றியுடன் இரு" என்றான்.

"இன்னொரு மனைவிக்கு உங்களிடம் ஏது நேரம், என் பிரபுவே?" அவள் குரலில் கசப்பு தெரிந்தது. "அவளை எப் பொழுது பார்ப்பீர்கள்? எப்பொழுது அவளிடம் பேசுவீர் கள்? உங்கள் படையெடுப்புகளைக் குறைத்துக்கொண்டு அவளுடன் அதிக நேரம் நீங்கள் செலவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பாள். உங்களிடம் நிறைய எதிர்பார்ப்பாள். புதிய ஆடைகள், அணிகலன்கள் வேண்டும் என்பாள். அந்த ஆடைகளில் அவளைப் பார்த்து நீங்கள் மெச்ச வேண்டும் என்பாள்."

"நீ எதிர்பார்ப்பது போல்," அலிகுலி எழுந்து படுக்கை யில் உட்கார்ந்து கொண்டு நீலப் போர்வையை எடுத்து இடுப்பு வரை போர்த்திக் கொண்டான்.

மெஹ்ருன்னிஸா கதவில் சறுக்கியவாறு தரையில் உட்கார்ந்து கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள். "நான் உங்களிடமிருந்து மிகவும் குறைவாகத்தான் எதிர்பார்க்கிறேன். ஆனால் இது, என் வீட்டில் — இது மிக அதிகம். நீங்கள் மதுபானக் கடைகளுக்கு மது அருந்தச் செல்வதையோ நடனப் பெண்கள் விடுதிக்குச் செல்வதையோ நான் குறை சொன்னதில்லை. ஆனால் ஏன்... என் சொந்த வீட்டில்... நான் படுத்துறங்கும் படுக்கையில்?"

"பயன் ஏதுமில்லாத ஒரு படுக்கை" கோபத்தில் முகம் சிவக்க அலிகுலி கத்தினான். "என்னிடம் இப்படிப் பேச வதற்கு உனக்கு எங்கிருந்து தைரியம் வந்தது? என்

நடத்தையைப் பற்றிக் கேள்வி கேட்பதற்கு? சக்ரவர்த்தி அக்பர் கட்டளையிட்டதால் நான் உன்னை மணந்தேன். இப்பொழுது குழந்தை பெற்றுக் கொள்ளச் சொல்லி அவர் கட்டளையிட வேண்டுமா?"

அவன் வார்த்தைகளால் உணர்ச்சி மரத்துப் போய் மெஹ்ருன்னிஸா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஆனால் நான் உன் குழந்தையைச் சுமக்கிறேன். உன்னிடம் இதைச் சொல்வதற்காக வந்திருக்கிறேன். ஆனால், இன்னொரு பெண்ணுடன் உன்னை என் படுக்கையில் பார்க்கிறேன். இது ஏன் இவ்வளவு காயப்படுத்துகிறது? அவன் நடன விடுதியில் பெண்களுடன் களியாட்டம் ஆடுவதை அவள் அறிவாள். சில சமயம் வீட்டிலிருக்கும் அடிமைப் பெண்களுடன் உடல் உறவு கொள்வது பற்றியும் அறிவாள். ஆனால், இன்றுதான் முதல் முறையாக நேரில் பார்க்கிறாள். குழந்தை பற்றிய விஷயத்தை அவளிடம் தெரிவிக்கச் சொல்லி தாயார் கூறுகிறாள். ஆனால், அவள் கூட இந்த மாதிரியான சூழ்நிலையில் சொல்லவேண்டும் என விரும்பி மாட்டாள்.

"மன்னித்துக் கொள்ளுங்கள்." மெஹ்ருன்னிஸா மெது வாகக் கூறினாள். "ஒருவேளை... நீங்கள் இன்னொரு திருமணம் செய்து கொள்வதே நல்லது."

அலிகுலி தலையணையில் சாய்ந்து கொண்டு கைகளைத் தலைக்குப் பின் கட்டியபடிச் சிரித்தான். அவன் பின்னா லிருந்த ஜன்னலின் வேலைப்பாடு செய்த தட்டிகளின் துவா ரங்கள் மூலம், சூரிய ஒளி அறைக்குள் பரவியது. துக்கத்தால் கலங்கியிருந்த அவள் முகத்தைப் பாதி மூடியிருந்த கண்க ளால், அவன் பார்த்தான் "அநேகமாக செய்துகொள்வேன்."

சண்டைக்குத் தயாராகும் மனநிலை மெஹ்ருன்னிஸா விற்குள் ஏற்பட்டது. அவன் எளக்காரமாகப் பேசியது அவளால் பொறுக்க முடியவில்லை. இந்த நான்கு வருடங் களில் முதன்முறையாக அவர்களுக்குள் பேச்சு நடந்தி ருக்கிறது. முதன்முறையாக இவ்வளவு நேரம் சேர்ந்து பேசி யிருக்கிறார்கள். உடைந்த குரலில் அவள் கூறினாள்.

களுக்காக அவளை நான் தேடட்டுமா, என் பிரபுவே? படிப்பட்டவள் வேண்டும்? நீண்ட கூந்தல், ஒல்லியான தகம், கவிஞர்கள் மெச்சும் படியான கண்கள்? நல்ல பம்பம்? கூடுமாயின் அவள் தகப்பனர் அரச சபையில் பதவியில் இருப்பவராக? அந்த மாதிரியான சம்பந்தம் களுக்குப் பல நன்மைகள் கிடைக்க வழி வகுக்கும்."

போர்வையை இடுப்பில் கட்டியவாறு அலிகுலி படுக் கையிலிருந்து குதித்து எழுந்தான். நீண்ட அடிகள் எடுத்து வைத்து மெஹ்ருன்னிஸா அருகே வந்து அவள் முகத்தைத் தன் பெரிய கரங்களால் பிடித்தான். அவள் முகத்தருகில்தன் முகத்தை வைத்து, அவன் சுவாசம் அவர்களைச் சுற்றிலும் தர்மணம் வீசக் கட்டைக் குரலில் கூறினான். "ஒரு பெண் னாக இருந்து கொண்டு நீ மிகவும் அதிகம் பேசுகிறாய், மெஹ்ருன்னிஸா. ஏதோ நீ ஒரு ராணிபோல், ராணியாக ஆகப்போவதுபோல்! ஆனாலும், உன் இரத்தக் குழாய்களில் தங்கம் பாய்கிறதா? உன் மூதாதையர்கள் யார்? அவர்கள் எத்தெந்த இடங்களை வெற்றி கொண்டிருக்கிறார்கள்? அவர் கள் வாழ்க்கையின் ஞாபகச் சின்னங்கள் எங்கே? அவர்கள் கல்லறைகள் எங்கே? மேலும் உன் தந்தை யார்? ஒரு பாரசீக அகதி. தன்னுடைய நாட்டை விட்டு ஓடி வந்தவன். இந்தியா விற்கு வந்து சேர்வதற்குள் அவன் உடைகள் கூட கிழிந்து போய் விட்டன."

அவன் கைகளிலிருந்து தன் முகத்தை விடுவித்துக் கொள்ளப் பல்லைக் கடித்தவாறு மெஹ்ருன்னிஸா சிரமத் துடன் முயன்றாள். ஆனால், அவள் தாடைகள் வலிக்கும்படி அவன் அவள் முகத்தை இறுகப் பிடித்திருந்தான். அவளுக் குப் பேசுவது சிரமமாக இருந்தாலும், சில வார்த்தைகள் பேசினாள். "நீங்களும் பாரசீகர் தான் என் பிரபுவே! அதை மறந்து விடாதீர்கள். என் தந்தை இங்கு அடைக்கலம் தேடி வந்தவரென்றால் நீங்களும் அப்படித்தானே? அதே போன்ற சூழ்நிலையில் வந்தவர்தானே?"

"நான் ஒரு இராணுவவீரன், மெஹ்ருன்னிஸா. நான் போர்களத்தில் போரிடுகிறேன். எதிரிகளைக் கொலை

செய்கிறேன். என் இரத்தத்தில் இரும்பு இருக்கிறது. ஆனால் உன் தந்தை யார்? எண்களைக் கூட்டிக் கழிக்கும் ஒரு சாதாரணக் கணக்கரை விட ஒன்றும் மேலானவரில்லை."

தன் சக்தி எல்லாம் திரட்டி அலிகுலியைத் தள்ளிவி மெஹ்ருன்னிஸா முயன்றாள். ஆனால், அவன் அவளைவி வலிமை மிக்கவன். திடீரென்று படுக்கையிலிருந்து குதி எழுந்து வந்ததைப்போல், சட்டென்று அவள் முகத்தை விட்டு விட்டு, அலிகுலி உட்கார்ந்தான். அவர்கள் முட்டி இடித்தவாறு உட்கார்ந்திருந்தனர். அவன் விரல்களில் அடையாளம், அவள் கன்னத்தில் பதிந்திருக்கும் என்று அறிந்தவளாக, அவள் தன் கன்னங்களைத் தேய்த்துவிட்டுக் கொண்டாள். மனீஜாவின் திருமணத்திற்குப்போக முடியாது — பார்ப்பவர்கள் ஜாடைமாடையாகப் பேசிக்கொள்வார்கள் தாயும் தந்தையும் வருத்தப்படுவார்கள்.

"என் தந்தை திவான்—ஈ—பூயூதாத் பதவியில் இருக்கிறார். அரச மாளிகைகளையும் கட்டடங்களையும் பேர் பார்வை செய்யும், தலைமை அதிகாரி!" அவள் கூறினாள். "ஒரு சாதாரணக் கணக்கர் அல்ல, அது உனக்கே தெரியும். அரச சபையில் அவருடைய பதவியின் மதிப்பினால் தான் நீ இவ்வளவு சலுகைகள் அனுபவிக்கிறாய். அதிகரிக்கப்பட்ட மான்ஸாப் — நில உரிமை, ஒரு இராணுவப் பகுதியின் தலைமைப் பதவி— அவரால் தான் இவை எல்லாம் உனக்கு கிடைத்திருக்கிறது." அவள் அவனிடம் இவ்வாறு பேச கூடாது என்று அவளுக்குத் தெரியும். ஏனெனில், பெண்கள் கணவரிடம் இப்படிப் பேசுவது முறையல்ல. அம்மாவிற்குத் தந்தையிடம் இப்படிப் பேச வேண்டிய நிலை இல்லை — குறைந்தபட்சம் இவள் காதுபட அவர்கள் இப்படி பேசிக் கொண்டதில்லை. இந்தக் கணத்தில் அவள் அலிகுலியை முழுமையாக வெறுத்தாள். அவன் குழந்தையைத் தான் சுமப்பதை எண்ணி வெட்கித்தாள். இதனால் அவளுக்கு ஏற்படப்போகும் எதிர் விளைவுகள் எதுவாக இருந்தாலும் அவனை மறுமுறை திரும்பிப் பார்ப்பதைக்கூட அவள் விரும்பவில்லை. அவள் தந்தையைப் பழித்துரைக்க அவனுக்கு

எப்படித் தைரியம் வந்தது? அவள் தந்தையைப் பற்றிக் கேவலமாகப் பேசுவதற்கு அவன் யார்?

அலிகுலி திடீரென்று கையை உயர்த்த, மெஹ்ருன்னிஸா சட்டென்று தலை குனிந்தாள். அவ்வாறு செய்ததற்காக அவள் மிகவும் வெட்கப்பட்டாள். ஆனால், அவன் அவளை இதுவரை அடித்ததில்லை, இப்பொழுதும் அப்படிச் செய்ய வில்லை. "உன் தகுதிக்குக் குறைவாகத் திருமணம் செய்து கொண்டிருக்கிறாய் என்று நீ நினைப்பதை நான் அறிவேன்." அவன் கத்தினான். "உன் தாயும் தந்தையும் கூட அப்படித் தான் எண்ணுகிறார்கள். ஏனெனில் எனக்கு இங்கு உறவினர் என் ஒருவருமில்லை. இராணுவத் தலைமை அதிகாரியின் மனைவி என் தாயார் ஸ்தானத்தில் திருமணச் சடங்குகளில் வைத்து கொள்ள வேண்டியிருந்தது. ஏனெனில், ஷாவிற்கு நான் பணியாளாக இருந்தவன். நான்கு வருடங்களாக உன் குடும்பத்தினர் என்னை இவ்வாறு நடத்துவதை நான் பொறுத்துக் கொண்டிருக்கிறேன்."

"என் தாயும் தந்தையும் ஒரு பொழுதும் இப்படி நினைத்துப் பேசியதில்லை." மெஹ்ருன்னிஸா அழுத்தமாகக் கூறினாள்.

"அவர்கள் வெளிப்படையாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவர்கள் செய்கை, அவர்கள் பார்வை, அவர்கள் என்னை நடத்தும் விதம் எல்லாமே இப்படித்தான் சொல்கிறது. அது சரி, நீ யார், மெஹ்ருன்னிஸா? என்னவோ அரச குடும்பத்தில் பிறந்தவள் போல் நீ நடந்து கொள்கிறாய்? நீ பிறக்கும் சமயத்தில் எந்தவிதமான பட்டும், வெல்வெட் துணிகளும் உன் தாயாரின் படுக்கையில் விரிக்கப்பட்டி ருந்தன? உன் பிறப்பை அறிவித்து எத்தனை தாரை தப்பட்டைகள் முழங்கின? எத்தனை பீரங்கிகள் அதிர்ந்தன? உன் பிறப்பைப் பற்றி விசாரிக்க வந்த ஜனங்களுக்குத் தின்பண்டங்கள் கொடுக்க எத்தனை சமையல்காரர்கள் வியர்வை சிந்த வேலை செய்து இனிப்புகள் தயாரித்தனர்? நீ பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டாட, உன் தந்தை, எத்தனை ஏழைகளுக்கு உடைகளும் உணவும் கொடுத்தார்? இவை

எல்லாம் நடந்தது என்று உன்னால் சொல்ல முடியுமா? ஒரு சாதாரண கூடாரம், குளிர்காலச் சூறவளிக் காற்று, பிறக்கையில் மரணத்தின் வாசலுக்கே சென்று வந்த ஒரு தாயார், இன்னொருவரால் நீ வளர்க்கப்படுவதே மேலானது என்று எண்ணிய ஒரு தகப்பனார்."

அவன் பேசிய வார்த்தைகளைக் கேட்டு, அவள் உடலை கிழித்துத் தோலை மெதுவாக எரியவிட்டது போன்றவலியை மெஹ்ருன்னிஸா உணர்ந்தவாறு அவனையே வெகுநேரம் வெறித்துப் பார்த்தாள். அவன் மிகவும் கோபமாக இருக்கையில் அவனிடமிருந்து வரும் வார்த்தைகள் எப்படி ஒரு கவிதை போல் இருக்கிறது என்ற விசித்திரத்தை, அவளது அத்தனை மனவலிக்கும் இடையிலும் மெஹ்ருன்னிஸா எண்ணிப் பார்த்தாள். அவள் பதிலளிக்கையில் அவள் குரலில் எந்தவித உணர்ச்சியுமில்லை... சக்தியுமில்லை. "என்னை ஏன் நீங்கள் விவாகரத்து செய்து விடக்கூடாது என் கணவரே? இரண்டு சாட்சிகளுக்கு முன் தலாக் தலாக் தலாக் என்று சொல்லவேண்டியது மட்டும்தான் நீங்கள் செய்ய வேண்டியது."

அலிகுலி தலையை ஆட்டி மறுத்தான். "இல்லை. உன் தகப்பனாரை ஒரு சாதாரணக் கணக்கர்தான் என்று நான் கருதினாலும் அவரால் சிறிது உபயோகம் உண்டு. கியாஸின் மருமகன் என்பதில் கொஞ்சம் கௌரவம் இருக்கிறது என்று தோன்றுகிறது. அதனால்" அவள் முன் குனிந்து, இந்த முறை அவள் முகத்தை மென்மையாகத் தொட்டான். "நீ நினைப்பது போல் இது அவ்வளவு சுலபம் அல்ல. வாழ்க்கையில் எதுவுமே அப்படித்தான். என் அருமை மெஹ்ருன்னிஸா, நம் வாழ்க்கை முழுவதும் கடைசிவரை நாம் கணவன், மனைவியாகத்தான் இருப்போம். யோசித்துப் பார். உன்னுடைய மிகுதி வாழ்க்கை முழுவதும் நீ ஒரு சாதாரண இராணுவ வீரனுக்கு மனைவியாகத்தான் இருக்கப்போகிறாய். எனக்குப் பதவி உயர்வு கிடைக்க வேண்டி நீ அல்லாவிடம் பிரார்த்தனை செய். இல்லாவிடில் உன் சிறப்புமிக்க குடும்பத்தின் முன் நீ தலை நிமிர்ந்து நிற்க முடியாது."

அத்துடன் அவன் தரையிலிருந்து எழுந்திருந்து, குனிந்து மெஹ்ருன்னிஸாவை ஒருபுறம் ஒதுக்கி விட்டுக் கதவைத் திறந்துகொண்டு, வேலையாளைக் கூப்பிட்டவாறு அறையை விட்டு வெளியேறினான். "காசிம், தேனீர் தயார் செய்து வை."

தன் கைகளைப் பார்த்தவாறு மெஹ்ருன்னிஸா அசையாமல் உட்கார்ந்திருந்தாள். இவ்வளவு அதிகாலையில் அவன் அறைக்கு அவள் வந்ததன் காரணத்தை அவனிடம் சொல்லக்கூட அவளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவளைச் சுற்றிலும் வீட்டு வேலைகள் தொடங்கியிருக்கும் சத்தத்தை அவளால் கேட்க முடிந்தது. — பணிப்பெண்கள் முற்றத்திலிருந்த கிணற்றிலிருந்து நீர் இறைப்பது, வேலையாட்கள் தாழ்வாரத்தின் கல் தரையைப் பெருக்கிக் கொண்டிருப்பது எல்லாம் அவளுக்கு முற்றிலும் மரத்துவிட்டது. பரபரப்பு இல்லை, மனவலி இல்லை., வெறும் மந்தமான உணர்வு தான்.

அவள் அவ்வாறே உட்கார்ந்திருக்கையில் முதல் வலி வந்தது. முன்பு ஏற்பட்டதுபோல், ஒரு குறட்டால் இருக்கிப் பிடிப்பதுபோல் அந்த வலி அவள் அடி முதுகையும், வயிற்றையும் தாக்கியது. அந்த வலி அவளை மேலும் ஆக்ரமிக்கையில் மெஹ்ருன்னிஸா கண்களை இறுக மூடிக் கொண்டாள். மனீஜாவின் திருமணத்திற்குப் போகாமல் இருப்பதற்கு இப்பொழுது எந்தவித வேண்டாத விளக்கமும் சொல்லத் தேவையில்லை. அவள் ஏன் வரவில்லை என்று அவள் தாயார் கேட்கமாட்டார்கள். தன் வயிற்றைக் கைகளால் பிடித்துக்கொண்டு, குனிந்து முகத்தை அந்தக் குளிர்ந்த தரையில் பதித்தவாறு படுத்துக் கொண்டாள். இன்னொரு குழந்தை போய் விட்டது. உள்ளே உயிரோடு சில நாள் இருந்து இப்பொழுது போய் விட்டது. இப்படி நடந்திருக்கக் கூடாது. குழந்தை இல்லாத ஒரு வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை, அலிகுலி அவளுக்கு ஏற்படுக்கப்போகும் ஒரு வரண்ட குழந்தை இல்லாத, ஒரு சாதாரண இராணுவ வீரனின் மனைவியாக, ஒரு சூன்யமான வாழ்க்கை.

கண்களில் வழியும் கண்ணீர் பார்வையை மறைக்க மார்பில் மூச்சு முட்ட, அவள் உதடுகள் அசைந்து பிரார்த்தனை செய்தன. "அல்லா, தயவு செய்யுங்கள், மறுபடியும் கூடாது, எனக்கு இந்தக் குழந்தையைத் தக்கவையுங்கள், தயவு செய்யுங்கள்."

ஆனால் அவள் கால்களுக்கிடையே வெதுவெதுப்பான இரத்தம் பரவுவதை அவள் உணர்ந்தாள்.

இந்தச் சமயத்தில், 1599ல் ஹிந்துஸ்தானின் மிகப் பரந்த நிலப்பரப்பை முகலாய சாம்ராஜ்ஜியம் ஆக்ரமித்திருந்தது, வடமேற்கில் காந்தஹார், காபூல் வரை, வடக்கில் காஷ்மீர் வரை, கிழக்கில் வங்காளம் வரை, தெற்கில் பெரார் (Berar) வரை வியாபித்திருந்தது. இந்த அகண்ட சாம்ராஜ்ஜியத்தில் எல்லா மசூதிகளிலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் தொழுகைக்குமுன், தொழுகை இசைப்பவர்களின் இனிய குரலில் குத்பா (Khutba) - அதிகார பூர்வமான அரசுரிமை அறிவிப்பு—வாசிக்கப்பட்டது. 'எல்லோரும் அக்பர் பாதுஷாவை வாழ்த்துங்கள்! மிக அதிகப்பலம் பொருந்திய தலைவர்! மத்திய இந்தியாவில், மிகத் துணிவு மிக்கவர்களும் தங்கள் பரம்பரையின் பெருமை கொண்டவர்களுமான ராஜபுத்திர அரசர்களைக் கூடச் சக்ரவர்த்தி அக்பர் அடக்கி வைத்திருந்தார். ஒவ்வொரு நாட்டையும் வெற்றி கொள்ளும்பொழுது அந்த நாட்டின் அரசரின் புதல்விகள், சகோதரிகள் மற்றும் நெருங்கிய உறவில் உள்ள பெண்களை முகலாய சாம்ராஜ்யத்தின் அரசைச் சார்ந்த குடும்பத்தினருக்குத் திருமணம் செய்விக்கப்பட்டது. இதன் மூலம் அந்த நாடுகளுடன் ஒரு நல்ல சுமூகமான உறவு ஏற்படவும், மேலும் அவர்கள் மீண்டும் தலைதூக்கி அரசிற்கு எதிராகச் செயல்படுவதைத் தடுக்கவும் இத்தகைய திருமணங்கள் உதவின.

ஆனால், ஒரு நாடுமட்டும் இன்னும் எதிர்த்து நின்றது. ராஜபுத்திரர் நிலப்பரப்பில் அதன் தென்மேற்கில் இருக்கும் உதய்பூர்— ஒரு முரட்டுத்தனமான, கரடுமுரடான, சிறு

மலைகள் அடங்கிய பகுதி. முற்றிலும் வரண்ட தரிசு நிலங்களைக் கொண்ட நாடு. தண்ணீரோ, மழையோ நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்று. தார்ப் பாலைவனம் அதற்கு வடக்கில் உள்ளது. கொடூரமாகக் காயும் சூரிய வெப்பத்தின் கீழ், உதய்பூர் நகரம், பிச்சோலா ஏரிக் கரையில் அமைந்திருந்தது. ஏரியின் தண்ணீர்த் தேக்கத்தினால் அந்த நகரில் நிலங்கள் பசுமையாகவும் நல்ல விளைச்சலுடனும் எப்பொழுதும் வரண்ட சிறு சிறு குன்றுகளால் சூழப்பட்டும் இருந்தன. இராஜபுத்திரர் குலத்தைச் சேர்ந்தவராக இருப்பதில் மிகவும் பெருமை கொண்டவரும், யாராக இருந்தாலும், முன் சக்ரவர்த்தியாக இருந்தாலும் கூடத் தன் நாட்டை முகலாய சாம்ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக எப்படிக் கருத முடியும் என்று எண்ணி மிகவும் கோபம் கொண்டவரும், ராஜபுத்திரர்களுகே உரிய பிடிவாத குணமும், இறுமாப்பும் உடையவருமான ராணா பிரதாப் சிங் என்ற அரசர் அங்கு ஆட்சி செலுத்தி வந்தார்.

அந்த ஏரிக் கரையில் ஒரு குடிசையில்தான் கடைசியில் ராணா பிரதாப் சிங் இறந்தார். இவருக்கு முன் ஆட்சி செய்த ராணா கட்டத் துவங்கி இருந்த மாளிகையின் சுவர்களை அந்தக் குடிசையின், ஜன்னல்கள் மூலம் அவரால் பார்க்க முடிந்தது. அவர் ஆட்சிக் காலத்தில் நாட்டில் அமைதி இல்லையாகையால் அந்த மாளிகையை அவரால் கட்டி முடிக்க இயலவில்லை. அவர் வைக்கோல் நிரப்பிய படுக்கையில் படுத்திருக்கத் தந்தை, அக்பருக்கே எதிராக நடத்தி வந்த போரைத் தொடர்ந்து நடத்துவோம், விசாலமாக பரந்து கிடக்கும் முகலாய சாம்ராஜ்ஜியம் தங்கள் நாட்டை அபகரிக்க அவர்கள் கடைசி மூச்சு இருக்கும்வரை அனுமதிக்க மாட்டோம் என்று சபதம் செய்தவாறு! அவரது புதல்வர்கள் அவரைச் சுற்றி நின்றிருந்தனர். அவரது பதினேழு புதல்வர்களும், அரியணைக்கு வாரிசான மூத்த புதல்வர் அமர் சிங்கும், ராணா பிரதாப் சிங்கிற்குக் கடைசி மரியாதை செலுத்த, அந்த குடிசையில் நுழையும் சமயத்தில், அமர்சிங்கின் தலைப்பாகை கூரையில் நீட்டிக் கொண்டிருந்த ஒரு மரத்துண்டில் மாட்டி, தலையிலிருந்து நழுவிக் கீழே

விழுந்தது. முகலாய சாம்ராஜ்ஜியத்தின் ஆக்ரமிப்பைக் கடைசிவரை எதிர்த்துப் போராடி வந்த பலம் பொருந்திய அரசர் ராணா பிரதாப் சிங், தன் வாரிசு தலைப்பாகை இல்லாமல் இருக்கும் காட்சியைப் பார்த்தவாறு, அவன் பல காலம் அரசாட்சி செய்ய மாட்டான், அவருடைய இந்த அன்புக்குரிய நாட்டை சீக்கிரம் இழக்க நேரிடும் என்ற நினைவுகளோடு உயிரை விட்டார்.

தங்கத்தினால் செதுக்கிய எழுத்துக்களுடன் கூடியதும், தோலினால் உறையிடப்பட்டதுமான **அக்பர் நாமா** என்ற புத்தகத்தை மடியில் வைத்தவாறு சக்ரவர்த்தி அக்பர், ருக்கையா சுல்தான் பேகத்தின் மாளிகையில் ஒரு ஜன்னலருகில் அமர்ந்திருந்தார். மேல் அட்டையில் செதுக்கியிருந்த எழுத்துக்களை அவர் தடவிப் பார்த்தார். மூன்று பகுதிகளான அந்தப் புத்தகம் — முதல் இரண்டு பகுதிகள் அவரது அரசாட்சியைப் பற்றியது; மூன்றாவது பகுதி அயன்-ஈ-அக்பரி (Ain-i-Akbari) அவரது தினசரி வாழ்க்கையைப் பற்றியது என்று அபுல் பாசல் (Abul Fazil) கூறியிருக்கிறார். முதல் பக்கத்திலிருந்த அவருக்குப் பரிச்சயமில்லாத எழுத்துக்களை அவர் தடவிக் கொடுத்தார். அக்பரின் தாத்தா பாபர்நாமா (Baburnama)வை எழுதவைத்தார். அவரது தந்தையின் அரசாட்சியைப் பற்றி அவரது அத்தை குல்பதன் பேகம் (Gulbadan Begam) ஹுமாயுன்நாமா (Humayunama) என்ற புத்தகத்தை எழுதுவித்தார். பின் வரும் தலைமுறையினர்கள் அறிந்துகொள்வதற்காக அவரது அரசாட்சியைப் பற்றி நேரில் கண்டு எழுதப்பட்ட புத்தகம் இது. பலவாறு புகழ்ந்து, பகட்டான வார்த்தைகளுடன், அக்பரை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்பதற்காக வெகு உயர்வாக எழுதியிருந்தாலும், அக்பரின் வாழ்க்கையின் சாராம்சத்தை அபுல் பாசல் நன்கு அதில் வடித்திருந்தார்.

ஜன்னலுக்கு வெளியே, அரண்மனைக் காவலாளர் தன் இனிய குரலில் 'இரண்டு மணி, எல்லாம் நலம்' என அறிவித்தவாறு, அந்த இரவில் நடந்து கொண்டிருந்தான்.

அக்பர் நாமாவைத்தன் பக்கத்தில் இருக்கையில் வைத்து விட்டுச் சக்ரவர்த்தி தன் தலைப்பாகையைக் கழற்றிப் பூ வேலைப்பாடு செய்யப்பட்டிருந்த அந்தப் பட்டுத் துணியை மெதுவாகச் சுற்றிப் பந்து போல் கட்டினார். அவர் தூங்க வேண்டிய நேரம் வந்து விட்டது. தன் மேல் அங்கியையும் கழற்றி பைஜாமாவையும் அகற்றி விட்டு, ஒரு பருத்தி மெலிதான பைஜாமாவும் வெள்ளை குர்தாவும் அணிந்து கொண்டிருக்கையில் சோர்வு அவரை ஆட்கொண்டது.

ஜன்னலருகே இருந்த எண்ணெய் விளக்கை அவர் ஊதி அணைத்தார். கண்கள் இருளுக்குப் பழகிய பிறகு, மெது வாகப் படுக்கை அருகே சென்று, அதில் உறங்கிக் கொண்டி ருக்கும் இரண்டு உருவங்களையும் பார்த்தார். சக்ரவர்த்தினி ருக்கையா ஒரு பக்கம் திரும்பிப் படுத்திருக்க இளவரசன் சலீம் அவள் கழுத்தை இறுகக் கட்டியவாறு படுத்திருந்தான். அவர்கள் மேல் போர்த்தியிருந்த பருத்திப் போர்வை விலகி இருப்பதைக் கண்டு சக்ரவர்த்தி குனிந்து அதை இழுத்து இருவரையும் மென்மையாகப் போர்த்திவிட்டார்.

முராத்! அவருடைய புதல்வன் பெயர் மனதில் பளிச் சிட்டது. சக்ரவர்த்தி உட்கார்ந்து கொண்டார். அந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட பின் முதன்முறையாக அவர் கண்ணீர்விட்டார். பல வருடங்கள் ஆண் குழந்தை வேண்டும் என எதிர்பார்த்திருந்து பின் அல்லாவின் அனுக்கிரகத்தால் மூன்று புதல்வர்கள் பிறந்தனர். ஆனால் இப்பொழுது இருவர்தான் முராத் இறந்து விட்டான்.

தெற்கே நடந்து வரும் ஆக்ரமிப்பைக் கண்காணிக்க அக்பர் சில மாதங்களுக்கு முன்பு முராதை அனுப்பி வைத்திருந்தார். இராணுவத்தின் தலைமைப் பதவி. அவனுக்கு மது மற்றும் போதைப் பொருள்கள் மேல் இருந்த ஈடுபாட்டை மறக்க அடிக்கும் என்று அவர் நம்பினார். ஆனால், அப்படி நடக்கவில்லை. அவனுக்கு முன் சென்ற அவன் சகோதரன் தனியால் போல், இவனும் ஒரு பலமற்ற தலைவன். தன் கீழ் உள்ளவர்களை அடக்கி ஆளத் தெரியாதவன். மற்ற இராணுவ தளபதிகளிடையே சின்னச் சின்ன சச்சரவுகள்

தோன்ற ஆரம்பித்தன. அதே நேரம் அதிகமாக மது அருந்
வதால் முராத் உடல் நலம் மிகவும் கெட்டு, இறக்கும் நி
யில் உள்ளான் என்று அக்பருக்குச் செய்தி வந்தது. அவனை
கவனித்துக் கொள்ள சாம்ராஜ்ஜியத்தில் ஒரு தலைமை
அதிகாரி பதவியில் இருக்கும் அபுல் பசல் என்பவரை
அனுப்பி வைத்தார். ஆனால், அபுல் பசல் அங்கு போய்
சேர்வதற்குள் முராதின் நிலைமை மேலும் மோசமாகி
விட்டது. முராத் சுயநினைவிழந்த நிலைக்குப் போய்விட்டான்.
அபுல் பாசல் அங்கு போய்ச் சேர்ந்த நான்காவது நாள்
மே மாதம் 2—ம் தேதி 1599—ல் முராத் இறந்து விட்டான்.

சாம்ராஜ்த்தின் இராணுவம் சிதறி, அதன் வீரர்கள்
மனம் தளர்ந்து, இருப்பதை பசல் கண்டார். முராத் இறந்த
துக்கம் பற்றி நினைக்கக் கூடநேரம் இல்லாமல், அக்பர்
அபுல் பாசலை இராணுவத்தை நடத்திச் செல்லும் தலை
மைப் பொறுப்பை எடுத்துக்கொள்ள உத்திரவிட வேண்டி
யிருந்தது. ஆனால், இப்பொழுது அக்பர் தக்ஷிணத்திற்கு
உடனே அவசியம் வருகை தரவேண்டும் என்று அபுல்
பாசல் அவருக்குச் செய்தி அனுப்பி இருக்கிறார்.

அக்பர் களைப்புடன் தலையைக் குனிந்து கொண்டார்.
எப்பொழுதும் செய்யவேண்டிய வேலைகள் அதிகம்.
ஆனால், அதைப் பற்றி நினைத்துப் பார்ப்பதற்குச் சிறிது
நேரம் கூட கிடைப்பதில்லை. இரவு வேளைகளில் மட்டுமே
இந்த மாதிரி விஷயங்களை நினைத்துப் பார்ப்பதற்குத்
தனிமையும், நிசப்தமான சூழ்நிலையும் கிடைக்கிறது. ஸலீம்
போல் அல்லாமல் முராத் பற்றியோ, தனியால் பற்றியோ
அவர் நன்கு அறிந்து கொள்ளவில்லை. அவர்கள் குழந்தைப்
பருவத்தில் தாதிகளாலும் செவிலித்தாய்களாலும் வளர்க்கப்
பட்டவர்கள். விசேஷமான நாட்களில் சிறிது நேரத்திற்கு
அவர் முன் வந்து போவார்கள். ஆனால், அவர்கள் நல்ல
முறையில் வளரவேண்டும் என்பதில் அக்பர் மிகுந்த கவனம்
செலுத்தியிருந்தார். ஒரு அரசிளங்குமரனுக்குத் தகுந்தாற்
போல் கிடைக்கவேண்டிய மிகவும் மேம்பட்ட எல்லா வசதி
களையும், கல்வியறிவு பெற மிகச் சிறந்த ஆசிரியர்கள், அவர்
களைக் கவனித்துக்கொள்ள நன்கு பயிற்சிபெற்ற தாதிமார்

[illegible], என எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருந்தார்.
[illegible]ந்தாலும் முராதும் தன்யாலும் மதுவிலும், அவர்கள்
[illegible]ப்புரத்து பெண்கள் மேலும் தான், அதிகம் நாட்டம்
[illegible]லுத்தினர். இப்பொழுது முராத் இறந்து விட்டான்.
[illegible]யால் மிகவும் அதிகமாக மது அருந்துகிறான்.

மூன்று வாரிசுகள் உள்ள மிகப் பெரியச் சக்ரவர்த்தி
[illegible]ர். ஆனால் இப்பொழுது இரண்டு பேர்தான் மிகுந்திருக்
[illegible]ார்கள். ஆனால், இருவரிடமும் அவருக்கு முழு நம்பிக்
[illegible]கையில்லை.

அவர் அவ்வாறு உட்கார்ந்திருக்கையில், ஒரு மிருதுவான
[illegible]ம் நீண்டு அவர் பின் கழுத்தை மென்மையாக வருடியது.

"வந்து படுத்துக்கொள்ளுங்கள்." ருக்கையா மென்மை
[illegible]கக் கூறினாள்.

அக்பர் அவள் கைகளில் சாய்ந்து கொண்டு அவள்
[illegible]வியிருக்கும் 'ஸன்துக்' என்ற புனுகு, ரோஜா நீர் கலந்த
[illegible]சனைத் திரவியத்தின் நறுமணத்தை முகர்ந்தார். மகனை
[illegible]னைத்து, முகத்தில் இன்னும் கண்ணீரோடு அவள் பக்கம்
[illegible]நம்பினார். அவள் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள்.

"வாருங்கள்" கைகளை விரித்து அவரை அழைத்தாள்.

சக்ரவர்த்தி எழுந்து அவள் அணைப்பில் புகுந்தார்.
அவர் கண்களில் நீர் வழிய அவள் மார்பில் தலை வைத்த
[illegible]று இருக்க இருவரும் வெகுநேரம் அவ்வாறு அமர்ந்தி
[illegible]த்தனர். அவள் அவரை மெதுவாக ஆட்டினாள். முன்
[illegible]நெற்றியில் விழும் மயிரை கோதி விட்டாள். அவர்
[illegible]ண்ணீரைத் துடைத்து விட்டாள். பின் அவர்கள் இருவரும்
[illegible]கைகளைக் கோர்த்தவாறு குர்ரமின் இருபுறமும் படுத்துக்
[illegible]கொண்டனர். இடையில் இளவரசன் குர்ரம் அவர்களது
[illegible]வெதுவெதுப்பான அணைப்பில் அமைதியாக உறங்கிக்
[illegible]கொண்டிருந்தான்.

வழக்கம்போல், அவளுடைய தோழமையால் ஆறுதல்
[illegible]பெற்றவராக, அக்பர் கூறினார். "நாம் தக்காணம் செல்ல
[illegible]வேண்டும் ருக்கையா." ருக்கையாவை அவர் சிறு வயதி

லிருந்தே அறிவார். இருவரும் நெருங்கிய உறவினர்கள். அவ
டைய மாமா ஹிந்தாலின் (Hindal) மகள். இருவரும் திருமண
செய்துகொள்வோம் என்று தெரிந்தே ஒன்றாக வளர்ந்தார்க
அவளிடம் அவருக்கு எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்ல
அவளுக்குக் குழந்தை பிறக்காதபோதிலும் அதில் அவருக்
வருத்தம் ஒன்றுமில்லை. அவர் விரும்பியது ருக்கையாவைதான்
அவள் பெற்றுக் கொடுக்கும் குழந்தையை அல்ல. ஆகையால்
அவள் ஸலீமின் மூன்றாவது மகனைக் கேட்டபொழுது
அக்பர் சிறிதும் தயங்காமல், ஜகத்கோஸினியிடமிருந்
குர்ரமைப் பிரித்து அவளிடம் வளர்க்க கொடுத்துவிட்டார்.
ஏன் இந்தக்குழந்தை? ஏன் வேறொரு குழந்தைகூடாது?
அதுவும் ஏன் இவ்வளவு வருடங்கள் கழித்து? என்றெல்லாம்
கேட்கவில்லை. ருக்கையா அவரிடம் எதை விரும்பி
கேட்டாலும் அது அவளுக்குக் கிடைத்து விடும். விஷயம்
அப்படிச் சாதரணமானது. குர்ரமிற்கு இப்பொழுது ஏழ
வயதாகிறது. ருக்கையாவுடன் படுக்கையில் படுப்பதற்கான
வயதை தாண்டியவன்தான். ஆனால், அவன் விரும்பினான்,
அவளும் அவன் கூடப் படுத்துறங்க வேண்டும் என்று
விரும்பினாள். ஆகையால் அக்பர் அவளுடன் இரவைக்
கழிக்க வரும் நாட்களில், மூன்று பேரும் ஒரே படுக்கையில்
படுத்துறங்குவார்கள்.

குர்ரம் அவர்கள் அணைப்பில் சிறிது அசைந்தவாறு
ஒரு கையால் தாத்தாவின் குர்தாவை பிடித்தவாறும்,
மற்றொரு கையால் தன் பெரிய பாட்டியின் நரைத்தமுடியில்
கொஞ்சம் பிடித்துத் தன் அருகே இழுத்தவாறும், மேலும்
சௌகரியமாகப் படுத்துக் கொண்டான்.

குர்ரமின் தலைக்கு மேல் குனிந்து, ருக்கையா சக்ரவர்த்தி
யின் கன்னத்தில் முத்தமிட்டாள். "மாட்சிமை பொருந்திய
வரே, மிர்ஜா அபுல் பாசல் தாங்கள் தக்காணத்துக்கு வருகை
தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டால், நீங்கள் போகத்
தான் வேண்டும். மிகவும் அவசியம் இல்லை என்றால் அவர்
உங்களைக் கூப்பிடமாட்டார். பீஜபூரையும் கோல்
கொண்டாவையும் வெற்றி கொண்டீர்களானால், நம் சாம்
ராஜ்ஜியத்திற்கு அவை விலைமதிப்புள்ள சேர்க்கை ஆகும்."

"ஆமாம், " குர்ரமை எழுப்பாமலிருக்க வேண்டி அக்பர்
மெல்லிய குரலில் கூறினார். "ஐந்து வருடமாக நாம் அங்கு
போர்புரிந்து வருகிறோம். ஆனால், இதுவரை வெற்றி கிட்ட
வில்லை."

"நிச்சயம் வெற்றி கிடைக்கும், மாட்சிமை பொருந்தி
யவரே! அரசர் அப்துல்லா கான் இறந்த பிறகு, நம்மை
போருக்கு வரும்படிச் செய்த உஸ்பெக் இனத்தவர்களின்
விஷமத்தனங்கள் அடங்கிவிட்டன. சாம்ராஜ்ஜியத்தின்
மேற்குப் பகுதியில் இப்பொழுது கவனம் செலுத்த
வேண்டிய பொறுப்புகள் இல்லை."

அக்பர் மல்லாந்து படுத்தவாறு மேல் கூரையை
வெறித்தார். "உதய்பூர் பற்றி என்ன நினைக்கிறாய்? ராணா
பிரதாப் சிங் இறந்துவிட்டார். அவர் மகன் அமர்சிங்
இப்பொழுது ராணாவாக இருக்கிறான். அவன் இன்னும்
தன் புதிய அரசாட்சியைப் பற்றிக் கற்றுக்கொள்ள முயன்று
கொண்டிருக்கிறான். இப்பொழுது நாம் உதய்பூர் மீது போர்
தொடுத்தோமானால் சீக்கிரம் அது நம் வசமாகிவிடும்."

"உதய்பூர்மீது படையெடுப்பதற்கு இன்னும் நல்ல
தருணத்திற்காகக் காத்திருக்க வேண்டும் என்று நினைக்
கிறேன், மாட்சிமை பொருந்தியவரே!" ருக்கையா கூறினாள்.

இருட்டில் அவள் கண்களைத் தேடியவாறு அக்பர்
அவள் பக்கம் பார்த்தார். "இன்னும் அதிக நாட்கள் காத்தி
ருக்கக் கூடாது, ருக்கையா. ராணா பிரதாப் சிங் இறந்து
இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் காத்திருந்தோ
மானால் அமர்சிங் தன்னை நன்றாக ஸ்திரப்படுத்திக்
கொண்டு விடுவான்."

"நீங்கள் ராணா பிரதாப் சிங்கிற்கு மிகவும் மரியாதை
செலுத்தினீர்கள்."

"அவன் மிகவும் தைரியமானவன். அரசன் என்ற
பட்டத்திற்குத் தகுதி பெற்றவன்." அக்பர் சாந்தத்துடன்
கூறினார்.

"ராஜபுத்ர நாடுகளில் உதயபூரை மட்டும்தான் நம்மால்
கைப்பற்ற முடியவில்லை. அதற்காக ராணா பிரதாப் சிங்கை

நான் வெகுவாக பாராட்டுகிறேன். பலமுறை நம் சாம்ராஜ்ய
யத்தின் இராணுவத்தை எதிர்த்து நின்றவன்... ராணா பிரதா
சிங்கின் தைரியத்தைப் பாராட்டி அவர் இறந்த பின்னும்
இதுவரை நாம் உதய்பூரை வென்று நம்முடன் சேர்த்துக்
கொள்வதைத் தவிர்த்து வந்தோம். அதற்கான வேளை
இப்பொழுது வந்துவிட்டது. இது அரசியல் சம்பந்தப்பட்ட
விஷயம் மட்டுமல்ல, ருக்கையா. அது உனக்கே தெரியும். நம்
வியாபாரிகள் வியாபாரப் பொருட்களை எடுத்துக்கொண்டு
கிழக்கிலிருந்து மேற்குத் துறைமுகங்களுக்குப் பயணம்
செய்யும் வழியில் அமர்சிங்கின் ஆட்கள் வழி மறித்துக்
கொள்ளை அடித்துத் துன்புறுத்துகின்றனர். இந்த சாம்
ராஜ்ஜியத்தில் நம் மக்கள் சிறிதும் பயமில்லாமல் பிரயாணம்
செய்ய வேண்டும். உதய்பூர் சுதந்திரமாக இருக்கு
மானால் அவ்வாறு நடக்க இயலாது."

"உதய்பூர் மீது போர்த் தொடுப்பதற்கு யாரைத் தலைவ
ராக நியமிப்பீர்கள், மாட்சிமை பொருந்தியவரே?"

"ராஜா மான்சிங். அவர்நன்கு தலைமைப் பொறுப்பை
வகிக்கக் கூடியவர்."

ருக்கையா அக்பரின் முகத்தை மென்மையாகத் தடவி
னாள். "ஸலீமை அனுப்புங்கள், மாட்சிமை பொருந்திய
வரே."

"ராஜா மான்சிங் இல்லாமலா?"

"இல்லை, அவருடன் கூட; ஸலீமிற்கு நம் இராணுவத்தின்
முதன்மைத் தலைமைப் பொறுப்பைக் கொடுங்கள்.
அவனுக்கு அந்தப் பொறுப்புணர்ச்சி வரவேண்டும்."

ஒரு நீண்ட மௌனம் அவர்களிடையே நிலவியது. பிறகு
அக்பர் மெதுவாகக் கூறினார். "ஸலீமிற்கு அதற்கான திறமை
உண்டா, ருக்கையா?"

"அதைத் தெரிந்து கொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு,
மாட்சிமை பொருந்தியவரே! உங்களுக்குப் பிறகு அவன்
சக்ரவர்த்தி ஆகவேண்டுமென்றால் — அது சீக்கிரம் நடக்காம
லிருக்க அல்லா துணை செய்யட்டும் — அவன் அதற்குத்
தயாராக வேண்டும். வைத்தியர் ஹுமாம் நிகழ்ச்சிக்குப்

பிறகு, அரசசபையில் உள்ள பெருங்குடி மக்கள் இடையில்,
அவன் மதிப்பு குறைந்து விட்டது. அவர்களுக்கு அவனிடம்
நம்பிக்கை வரவேண்டும். நம்பிக்கை இல்லாவிடில் அவன்
தோல்வியை ஏறுகையில் அவர்கள் அவனுக்குத் துணையாக
இருக்க மாட்டார்கள்."

அவள் வார்த்தைகளைக் கேட்டு அக்பர் மிகுந்த துக்கம்
அடைந்தார். கடந்த எட்டு வருடங்களாகத் தனக்கு விஷம்
கொடுக்க முயற்சித்த நிகழ்ச்சியை மறக்க, அவர் வெகுவாக
முயன்று கொண்டிருந்தார். ஒருவேளை ஸலீமின் தூண்டுதலே
வைத்தியர் அவ்வாறு செய்ததற்குக் காரணமாக இருக்குமோ
என்ற தன் பயத்தைப் பற்றி, ருக்கையாவிடம் கூட அவர்
கூறியதில்லை. முடிவாக இப்பொழுது வெளிப்படையாகக்
கேட்டார். "நாம் அந்த வைத்தியரை வெளியேற்றியது சரி
தானே!"

"ஆமாம், வைத்தியர் பற்றி நம் கணிப்பு சரிதான்.
ஆனால், ஸலீம் பற்றி நமக்குத் தெரிய வராது, மாட்சிமை
பொருந்தியவரே! இருந்தாலும் அவன் உங்களிடம் அன்பு
செலுத்தவில்லை, உங்களிடம் அவனுக்குப் பிரியம் இல்லை
என்று நீங்கள் எண்ணக் கூடாது. சில விஷயங்களில் அவன்
இன்னும் சிறு குழந்தையாகவே இருக்கிறான். எடுப்பார்
கைபிள்ளை போல், அவன் கூட இருப்பவர்கள் சொல்வதை,
அதனால் வரக்கூடிய பின் விளைவுகளைப் பற்றி சிந்திக்கா
மல் செய்து விடுகிறான். இந்தக் கடந்த வருடங்களில் அவன்
தன் செயலுக்கு வருந்துவது தெரிகிறது. ஆகையால், அவனை
உதய்பூருக்கு அனுப்புங்கள். அவன் மேல் உங்களுக்கு
நம்பிக்கை உண்டு என்பதை உணர்த்துங்கள். அதனால்
உங்கள் இருவரிடையே புதிய நெருக்கம் ஏற்பட வாய்ப்
புண்டு."

குர்ரமைத் தன் அருகே இழுத்து அணைத்துக்கொண்டு
அவன் உடலின் வெதுவெதுப்பை உணர்ந்தவாறு, அக்பர்
கூறினார். "ஸலீம் நமக்குக் குர்ரமைக் கொடுத்திருக்கிறான்.
இந்தச் சிறு குழந்தை நமக்கு எல்லையில்லா சந்தோஷத்தைக்
கொடுக்கிறான், ருக்கையா. ஸலீம் பிறந்த பொழுது நமக்கு
ஏற்பட்ட மகிழ்ச்சி போன்று!" அவர் தன் மனைவியைப்

பார்த்தார். "நீ எப்படி இவ்வளவு தெளிவுடன் அறிவுள்ள வளாக இருக்கிறாய்? இந்த விவேகம் உனக்கு எங்கிருந்து வந்தது?"

அவள் மெதுவாக சிரித்தவாறு போர்வையை இழுத்து எல்லோரையும் போர்த்தினாள் — சக்ரவர்த்தி, சக்ரவர்த்தியின் இளவரசன். "உங்களிடமிருந்துதான், உங்களால்தான். ஸலீம் நம் குழந்தை தான். அவனுக்கு நாம் தான் துணையாக இருக்க வேண்டும். அவனை நேசியுங்கள். அவன் தவறு செய்தால் மன்னித்து விடுங்கள். இப்பொழுது நீங்கள் தூங்க வேண்டும். மாட்சிமை பொருந்தியவரே".

ஒருவறோடொருவர் அணைத்துக் கொண்டு அவர்கள் உறக்கத்தில் ஆழ்ந்தனர். தன் கண்களை மூடும் முன் ருக்கையா கூறுவது உண்மையாக இருக்கவேண்டுமே என்று அக்பர் பிரார்த்தித்தார். முராதின் மரணம், மீதி இருக்கும் இரு மகன்களுடன் அவர் உறவு கூர்மிணித்து வருவது குறித்து வருத்தம், தன் சாம்ராஜ்ஜியத்தை ஒன்று சேர்த்துப் பத்திர மாக ஸலீம் கையில் ஒப்பப்படைப்பதற்கு தமக்குச் சிறிதே அவகாசம் இந்த உலகில் பாக்கி இருக்குமோ என்ற அச்சம், எல்லாவற்றையும் எண்ணி அவர் மனம் கலங்கினார்.

சில வாரங்கள் கழித்து அரசசபை உறுப்பினர்களும், அரசர் அந்தப்புரத்தைச் சேர்ந்தவர்களும், சக்ரவர்த்தியுடன் தக்காணத்துக்குப் பயணித்தனர். கியாஸ் பெக்கும், அஸ்மத் தும் அரச சபையினருடன் சென்றனர். கடைத் தெருக்கள் காலியாகின. சிறு வியாபாரிகளும் வர்த்தகர்களும் அக்பருடன் சென்றனர். தங்கள் வீடுகளைப் பூட்டிவிட்டு அரசசபை மேன்மக்கள் அக்பரைத் தொடர்ந்தனர்.

இளவரசர் ஸலீம் தலைமையில் உதய்பூருக்குப் படை யெடுக்கச் சென்ற இராணுவத்துடன் அலிகுலியும் சென்றான். மெஹ்ருன்னிஸாவை உடன் அழைத்துச்செல்ல அவள் விரும்பவில்லை. அவள் லாகூரில் தனியாக விடப்பட்டாள்.



அத்தியாயம் ஏழு



நல்ல வசதிகளுடனும், வளமையுடனும், அவர் (அக்பர்) டெக்கானுக்கு சென்ற சமயத்தில், ராணாவிற்கு எதிராகப் படையெடுக்க எனக்கு உத்திரவு வழங்கப்பட்டது. அந்தச் சமயத்தில், அவன் வந்தான், எனக்கு விசுவாசமான வேலையாளாக. அவனுக்கு ஷேர்- ஆப்கான் (புலி-விட்டெறிந்தவன்) என்ற பட்டத்தை நான் வழங்கினேன்.

-A Rogers, trans and H. Beveridge, ed.,
The Tuzuk-i-Jahangiri

படைவீரர்களுக்கு முன்னால் அந்த இரு மனிதர்களும் சேர்ந்து சவாரி செய்து கொண்டிருந்தனர். அவர்கள் நல்ல ஆரோக்கியமான அரபுக் குதிரைகள்மீது அமர்ந் திருந்தனர். ஒன்று நல்ல கருமையாக, தங்க நிறத்தில் குளம்பு களுடனும், மற்றொன்று கடும் சாம்பல் நிறத்தில் பளபளக்கும் வெள்ளை பிடரி மயிருடனும் இருந்தன. ஒரு கையால் கடிவாளத்தை இழுத்துத் தன் குதிரையைப் பணிய வைத்த பின்பு இளவரசர் ஸலீம் தன் தோழன் பக்கம் திரும்பினார்.

"அது ஒரு நல்ல குதிரை!"

அலிகுலி சேணத்தில் அமர்ந்தபடியே வணங்கினான். "ஒரு அரபு நாட்டு வியாபாரியிடமிருந்து இதை வாங்கினேன், மாட்சிமை பொருந்தியவரே! நல்ல இனத்தைச் சேர்ந்தது. உங்களுக்கு என் குதிரை விருப்பம் என்றால், அதை உங்களுக்குப் பரிசாகக் கொடுப்பதில் நான் கௌரவிக்கப் பட்டதாகக் கருதுவேன். உங்களுக்குப் பிடித்திருந்தால் தயவு செய்து எடுத்துக்கொள்ளுங்கள்."

அந்தப் போர்குதிரையின் உடம்பிலுள்ள திடமான தோடுகளையும், நல்ல சதைபிடிப்புடன் கூடிய உடலின் பக்கப் பகுதிகளையையும், பளபளக்கும் வெள்ளை பிடர்

மயிர்களையும் ஸலீம் பார்த்து ரசித்தார். நிச்சயம் இது அபூர்வமான குதிரை. மெஹ்ருன்னிஸாவின் கணவனுக்கு எப்படி இந்தக் குதிரை கிடைத்தது?

"என் சகோதரன் தனியால் இங்கிருந்தால் உடனே உன் குதிரையை எடுத்துக்கொண்டு விடுவான். அவனுக்கு குதிரைகள் என்றால் மிகவும் விருப்பம்."

"நீங்கள் சவாரி செய்யும் குதிரையும் மிகவும் அறிவு மானது, மாட்சிமை பொருந்தியவரே!" அலிகுலி கூறினான். "குதிரைகளைத் தேர்ந்தெடுப்பதில் உங்களுக்கு நல்ல திறமை இருக்கிறது."

அலிகுலியின் இந்த அதிகப்படியான புகழ்ச்சியைக் கண்டு வியந்தவாறு ஸலீம் தலையை ஆட்டினார். அவன் ஏன் இவ்வளவு அதிகமான பணிவுடன் நடந்துகொள்கிறான்? மெஹ்ருன்னிஸாவை மணந்து கொண்டவன் எப்படிப்பட்ட வனாக இருப்பான் என்று தெரிந்து கொள்வதற்காக அந்த இராணுவ வீரனைத் தன் படையில் சேர்க்குமாறு ஸலீம் கேட்டிருந்தார். அவர்கள் பிரயாணத்தின் கடைசிப் பகுதியில் அவருடன் பக்கத்தில் சவாரி செய்யப் படைகளின் அணி வகுப்பிலிருந்து அவனைப் பொறுக்கி இருந்தார். அழகிய விசேஷக் கற்கள் பதிக்கப்பட்ட தன் சாட்டையைத் தூக்கித் தூரத்தில் காண்பித்து "நாம் நெருங்கி விட்டோம்" என்று ஸலீம் கூறினார்.

"போரை எப்படி நடத்த வேண்டும் என்று தீர்மானித்தி ருக்கிறீர்களா, மாட்சிமை பொருந்தியவரே?" அலிகுலி கேட்டான்.

"நாம் தங்குவதற்கான ஏற்பாடுகள் முடிந்தபின் சில வீரர்கள் புறக் காவல் நிலயங்கள் அமைக்க அனுப்பப்படு வார்கள். அன்டாலா (Untala) மோஹி (Mohi) மற்றும் சித்தூர் ஆகிய மூன்று இடங்களையும் ஆரம்பப் பகுதிகளாக அமைக்க நிச்சயித்திருக்கிறேன். அங்கிருந்து நம் தளபதிகள் படைகளை அனுப்பித் திடீர்த் தாக்குதல் நடத்துவார்கள். தொடர்ந்து நாலாபுறத்திலிருந்தும் போர் தொடுத்தால், ராணா சோர்வடைந்து கடைசியில் நம்மிடம் சரணடைய வேண்டிவரும்."

"பேரரசைச் சேர்ந்த இராணுவத்தின் தாக்குதலை [illegible]வின் படைகளால் எதிர்கொள்ளமுடியாது, மாட்சிமை பொருந்தியவரே!" அந்த வீரன் சிறிது தயங்கி விட்டு, "புறக்காவல் நிலயங்களுக்குத் தலைமைப் பொறுப்பு வகிக்க வேண்டியவர்களைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களா?"

"இன்னும் இல்லை." அலிகுலி இவ்வாறு அதிகப்பட்ட [illegible]னிவுடன் பேசுவதற்கு இதுதான் காரணம்போலும். "நீ [illegible] விருப்பப்படுகிறாய் என்று நினைக்கிறேன்."

"ஆமாம், மாட்சிமை பொருந்தியவரே" — அலிகுலி [illegible]லுடன் கூறினான். "நீங்கள் பெருமைப் படும்படி நடந்து [illegible]வேன்."

"நிச்சியமாகச் செய்வாய்" ஸலீம் கூறினார். "உன் [illegible]ணுவ சாகசங்கள் எல்லாம் போற்றத் தக்கவை. ஆனால், [illegible] தோழமை எனக்கு பிடித்திருக்கிறது, அலிகுலி. நீ [illegible]கேயே இருப்பதை நான் விரும்புகிறேன். பேரரசு படை [illegible]க்கு வேறு தளபதிகளை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்."

"உங்கள் விருப்பம், மாட்சிமை பொருந்தியவரே!"

அவன் முகத்தில் ஏமாற்றத்தின் ரேகைகள் படர்வதை ஸலீம் கண்டார். இன்னொரு கேள்வி அவர் மனதில் எழுந்தது. ஆனால், அவர் அதைக் கட்டுப்படுத்திக்கொண்டார். [illegible] வருடங்கள் ஓடி விட்டன. ஆனால், மீனா பஜாரில் [illegible]வண்டுமென்றே புறாவை மெஹ்ருன்னிஸா பறக்கவிட்ட [illegible]பொழுது அவருக்குள் எழுந்த சிரிப்பு இன்னும் அவருக்கு [illegible]னைவில் இருக்கிறது. அவர் முன்னே வேறு எவருக்கும் [illegible]வ்வாறு செய்யத் துணிவு வராது. அவளது மெல்லிய [illegible]ரங்கள் காற்றில் இசைத்தவாறு, பறக்கும் அந்தப் புறாவை [illegible]தாடரப் புறாவை பறக்க விட்டதுமல்லாமல் அவரைப் [illegible]கசிப்பது போலும் பார்த்தாள். "இப்பொழுது என்ன, [illegible]ட்சிமை பொருந்தியவரே!"

ஸலீம் வேறுபுறம் திரும்பினார். கிழக்குத் திசையில் [illegible]துவாகக் காற்று வீசத் தொடங்கிப் பழுப்பு நிறத்தூசு அதன் வழியிலுள்ள புதர்களையும் மரங்களையும் சூழ்ந்து

கொண்டிருந்தது. தன் தலைப்பாகையின் நுனியை இழுத்து அவர் மூக்கையும் வாயையும் மூடிக் கொண்டார். 'மெஹ்ருன்னிஸா, அழகிய பெயர். அவளுக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமானது. அவர் சிறு சிறு நேரங்களுக்குத்தான் அவளுடன் இருந்திருக்கிறார். ஆனால், அது வாழ்க்கை முழுவதும் போல் தோன்றுகிறது. அவர் அவளைப் பற்றி எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பது கூட இல்லை. அவள் பெயர் மாத்திரம் அவர் நினைவில் பதிந்திருந்தது. கனவில் அவள் முகம் தோன்றும். ஆனால், விழிக்கும் முன் மறைந்துவிடும். அவர் அந்தப்புரத்தில் பல வகையான பெண்கள், பலவிதமான நாடுகளிலிருந்து வந்தவர்கள் உள்ளனர். ஆனால், இவளுக்கு ஈடாக எவரும் இல்லை. ஆனால், இந்த மனிதன், அவர் பக்கத்தில் சவாரி செய்பவன், அவள் கணவன், தினமும் மாலையில் வீட்டிற்கு அவளிடம் போகிறான். அவன் அவளை நன்கு பராமரிக்கிறானா? அவள் அவனை நேசிக்கிறாளா? இவ்வாறு நினைக்கையில் எதிர்பாராத வலி அவரைத் துளைத்தது.

"உனக்குக் குழந்தைகள் இருக்கிறார்களா, அலிகுலி?" திடீரென்று ஸலீம் கேட்டார்.

"இல்லை, மாட்சிமை பொருந்தியவரே! அல்லா என்னை இன்னும் வாழ்த்தவில்லை. என் மனைவி மலடி."

வெறுப்புடன் ஸலீம் வேறு பக்கம் திரும்பினார். பல மனிதர்கள் தங்கள் மனைவியைப் பற்றி இப்படித்தான் பேசுகிறார்கள். வெளி மனிதரிடம் தன் மனைவியைப் பற்றி இரக்கமற்று, இகழ்ச்சியாகப் பேசும் இப்படிப்பட்ட மனிதனைத்தான் அவள் மணந்திருக்கிறாளா? "அப்படி ஒன்றும் இதில் மோசமில்லை." ஸலீம் கூறினார். "அவளை நீ வைத்தியரிடம் அழைத்துப் போகலாமே. அவர்களால் முடியாதது ஒன்றுமில்லை."

அலிகுலி துடுக்காக அவரைப் பார்த்தான். "துரதிர்ஷ்ட வசமாக அவளுக்கு இது சரிவராது. அவள் மிகவும் அழகானவள். மாட்சிமை பொருந்தியவரே! மிகுந்த வனப்புள்ளவள். ஆனால், எனக்குக் குழந்தை பெற்றுக் கொடுக்கத் தகுதி

இல்லாதவள். உங்களால் மாத்திரம் அவளைப் பார்க்க முடிந்தால்... ஆனால், அது நடைமுறையில் சாத்திய மில்லாதது."

குதிரையை வெடுக்கென்று இழுத்தவாறு, ஸலீம் கடிவாளத்தை இறுக்கிப் பிடித்தார். அலிகுலியை முகத்தில் அறைந்து அவன் கண்களில் தெரியும் இகழ்ச்சிப் பார்வை யைத் துடைக்கத் துடித்தார். பல்லைக் கடித்தவாறு அவர் கூறினார். "உன் வீட்டை மேன்மைப் படுத்தும் பெண்ணைப் பற்றி நீ அவ்வாறு பேசக் கூடாது, அலிகுலி. அது நாகரீக மானதல்ல."

"ஆனால், ஒருவேளை..." யூகத்தினால் கண்களில் விஷமம் தெரிய அந்த வீரன் ஸலீம் பக்கம் பார்த்தான். "மாட்சிமை பொருந்திய தாங்கள் என் மனைவியை முன்பே பார்த்தி ருக்கக் கூடும்."

ஸலீம் சட்டென்று தலையைத் திருப்பி, "ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

அலிகுலி தோளை குலுக்கினான். "ஏதோ ஒரு எண்ணம், மாட்சிமை பொருந்தியவரே! சக்ரவர்த்தினி ருக்கையாவைச் சந்திக்கப் பேரரசின் அந்தப்புரத்திற்கு மெஹ்ருன்னிஸா செல்வதுண்டு."

"இல்லை"

அலிகுலி மறுபடியும் வணங்கினான். அவன் தலை நிமிர்ந்த பொழுது, தான் பேசிய விதத்தைக் குறித்து வருத்தப் படுபவன் போல் தோன்றினான். "நீங்கள் என் மனைவியைச் சந்தித்திருக்கக் கூடும்," என்றவாறு "சுட்டிக் காட்டியதற்கு என்னை மன்னியுங்கள், மாட்சிமை பொருந்தியவரே! பேரரசின் புறக்காவல் நிலையங்களுக்குத் தலைமைத் தளபதி களை நியமிக்கும் சமயத்தில் என்னைப்பற்றியும் சிந்தித்துப் பாருங்கள்."

இந்த இரண்டு விஷயங்களுக்கும் என்ன சம்பந்தம்? இன்னும் கோபத்துடன் ஸலீம் கையை உயர்த்தி சைகை

செய்ய, அலிகுலி பின் வாங்கினான். அந்தக் கரடுமுரடான வரண்ட பாதையில், மண் தூசுகள் பறந்து கண்களைத் தாக்கும் வகையில் ஸலீம் தன் குதிரையைத் தூண்டி மிக வேகமாகச் செலுத்தினார். குழந்தைகள் இல்லை. அதனால் என்ன? அவரைப் பொருத்த வரையில் மெஹ்ருன்னிஸா அவர் அந்தப்புரத்தில் இருப்பதும், ஒவ்வொரு இரவும் அவள் பக்கத்தில் படுத்து, அவள் உறங்குவதைப் பார்த்துக் கொண்டிருப்பதுமே போதுமானதாகத் தோன்றியது. மெஹ்ருன்னிஸாவைப் பற்றிய எண்ணங்களை நான்கு வருடங்களாக ஒதுக்கி வைத்திருந்தார். அவள் இன்னொருவனுடைய மனைவி. அவருக்கு ஒரு பொழுதும் சொந்தமாக முடியாது. நாட்கள் செல்லச் செல்ல, அவள் அவரை மறந்திருப்பாள் என்று ஸலீம் எண்ணினார். ஆனால் இப்பொழுது அலிகுலியைப் பார்த்தபின், அந்த பழைய மனவலி திரும்பவும் வந்தது. அந்த மன உளைச்சலின் தீவிரத்தைக் கண்டு அவரே அதிர்ந்து போனார். இந்த வீரனை போர் முனைக்கு அனுப்பிவிட வேண்டும். அவரருகில் வைத்திருக்கக் கூடாது. அதனால் என்ன நன்மை? அவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் மெஹ்ருன்னிஸாவின் நினைவுகள் தான் அதிகமாகும். அவரிடம் அவன் மரியாதை இல்லாமல் நடந்து கொண்டாலும்! அவனைச் சந்திக்கும் பொழுதெல்லாம் மெஹ்ருன்னிஸாவைப் பற்றிய ஏதாவது ஒரு விஷயம் தெரியவரும். அவளுக்குக் குழந்தை இல்லை என்று இப்பொழுது தெரிந்தது. பின்னால் எப்பொழுதாவது அவளைப்பற்றிய மற்றவிஷயங்கள் தெரியவரும் — சின்ன சின்ன விவரங்கள். அவளைத்தான் அடைய முடியாவிடினும், அவர் நினைவில் என்றும் வைத்திருக்கக் கூடிய விஷயங்கள் தெரிய வரும்.

ஸலீமிற்குக் கோபம் மறுபடியும் தலைதூக்கியது. ஏன் சக்ரவர்த்தி தன்னை மெஹ்ருன்னிஸாவை மணந்து கொள்ள அனுமதிக்கவில்லை? அக்பருக்கு இது வெகு சாதாரணமான விஷயம். இருந்தாலும் அவர் அதைச் செய்யவில்லை. ஸலீமிற்கு இந்த விஷயத்தில் தந்தையின் மேல் ஏற்பட்ட கோபம் தணியவில்லை. இது எல்லாவற்றிற்கும் மேல் இந்த பயனில்லாத மேவார்ப் படையெடுப்பு. லாகூரிலிருந்து ஸலீம்

[illegible]ம்பும் பொழுது ராணாவின் மேல் போர் தொடுப்[illegible]தற்குப் பலவிதத் திட்டங்களோடு இருந்தான். ஆனால், [illegible]ங்கு வந்து சேருவதற்குள் அந்தத் திட்டங்கள் எல்லாம் [illegible]தற்றோடு கரைந்து விட்டன. குறைந்த பட்ச வசதிகளும் [illegible]ல்லாமல், அந்தப்புரத்துப் பெண்களும் இல்லாமல், ஏதோ [illegible]ரு புறநகர்ப் பகுதியில் பல நீண்ட, களைப்பிற்குள்ளாக்கும் [illegible]தங்களைக் கழிக்க நேரும் என்று மஹபத்தும், கோக்காவும் [illegible]டிக் காட்டினர். பேரரசின் படைகளைத் திறமையான [illegible]தபதிகளின் தலைமையில் போர் முனைக்கு அனுப்பிவிட்டு, [illegible]வர் ஆஜ்மீரில் தங்கிப் போர் நடவடிக்கைகளைக் கண் [illegible]ணிப்பதே சிறந்தது என்றனர்.

சிறிது தயக்கத்துடனேயே ஸலீம் இதற்குச் சம்மதித்தார். [illegible]க்ரமிப்பை நல்ல முறையில் நடத்தி, அதன்மூலம் [illegible]ரியணையில் அமர ஸலீமிற்குத் திறமை உண்டு என்று [illegible]ருபிப்பதற்காகவே அக்பர் அவரை இங்கு அனுப்பியுள்ளார். [illegible]னாலும், மஹபத் கூறியது போல், அவருக்கு எப்பொழுது [illegible]ரசக் கிரீடம் கிடைக்கும்?

அந்தப் பரிவாரம் ஆஜ்மீரை அடைந்தவுடன், அரச [illegible]ளிகையில் எல்லாவித வசதிகளுடன் ஸலீம் தங்குவதற்கு [illegible]ற்பாடான பிறகு, போர் முறையிலிருந்து வரும் செய்திக்காக [illegible]வர் காத்திருந்தார். உள்ளூர்க் குடிமக்கள் தங்கள் [illegible]ளவரசரைத் தரிசிக்கத் திரளாக வந்தனர். ஸலீமும் தானே [illegible]ரசர் போல் அவர்கள் மரியாதை எல்லாம் ஏற்று கொள்ள, [illegible]ட்கள் அப்படியே சந்தோஷமாகக் கழிந்தன.

அவ்வாறு ஒன்றும் செய்யாமல் இருப்பது ஸலீமிற்கு சீக்கிரம் சுவையற்றுப் போயிற்று. ஆஜ்மீருக்கு வடக்கே உள்ள நாகூர் (Nagaur) என்ற இடத்திற்குச் செல்ல ஸலீம் தீர்மானித்தார். அதற்கும் வடக்கே இருப்பது தார்ப் பாலைவனம். நாகூருக்கு அருகில் தெற்கு பகுதியிலுள்ள அடர்ந்த காடுகளில் சிறுத்தைப் புலிகளுக்கு பேர் போன, பேரரசைச் சார்ந்தவர்கள் வேட்டையாடும் பகுதி உள்ளது. ஸலீம் அந்த நகரத்திற்கு அருகே பாசறை அமைக்க

உத்திரவிட்டார். பேரரசைச் சார்ந்தவர்கள் அங்கு தினமும் அதிகாலையில் தொடங்கி நாள் முழுவதும் காட்டில் வேட்டையாடுவதில் ஈடுபட்டனர்.

ஒருநாள், அந்தப் பரிவாரம் வெற்றிக் களிப்புடன், அந்த சமயம் மிகவும் களைத்தவர்களாக, அவர்கள் வேட்டையாடிய மிருகங்களின் உடல்களை இழுத்தவாறு அவர்கள் தங்கியிருக்கும் பாசறைக்கு வந்து சேர்ந்தனர். மாலைத் தொழுகைக்கான மணி ஓசை கேட்டு, அனைவரும் மேற்கு நோக்கி மண்டியிட்டு அமர்ந்தனர். தொழுகை முடிந்தவுடன் ஸலீம் எழுந்து கூடாரத்தின் வெளியே சென்றார்.

ஒரு பணியாள் அவரிடம் ஓடி வந்தான். "மாட்சிமை பொருந்தியவரே! ஒரு பெண் புலி தன் குட்டிகளுடன் வழி தவறி நம் பாசறைக்கு அருகே வந்து கொண்டிருக்கிறது. வேட்டைக்காக நாம் ஏற்படுத்திய மத்தள சப்தத்தினால் அவைகள் பயந்திருக்கக்கூடும்."

"என்னை அங்கே அழைத்துச் செல்." ஸலீம் ஆவல் மிகுதியால் தன் நீண்ட துப்பாக்கியை எடுத்துக்கொண்டு அவசரமாக அந்தப் பணியாளைப் பின் தொடர்ந்தார். அப்பக்கத்தில் ஒரு மரத்தினடியில் இளைப்பாறிக் கொண்டிருக்கும் அலிகுலியை அவர்கள் கடந்து சென்றனர்.

"மாட்சிமை பொருந்தியவரே! பாசறையைவிட்டுத் தனியே செல்வது விவேகமானதல்ல." அலிகுலி கூவினான்.

"அப்படியானால் நீயும் என் கூடவா, அலிகுலி" ஸலீம் கத்தியவாறு காட்டிற்குள் விரைந்து சென்று மறைந்தார்.

அலிகுலி அவசரமாகத் தன் குத்துவாளை இடுப்புப் பட்டையில் செருகிக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து ஓடினான். சில நிமிடங்களில் அவன் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். அந்த இருண்ட காட்டிற்குள் அவர்கள் எவ்வளவு சப்தமில்லாமல் செல்ல முடியுமோ அப்படிச் சென்றனர். அதற்குள் சூரியன் மேற்கில் இறங்கிக் கொண்டிருக்க, மரங்கள், மேலே பெரிய விதானம் போல் படர்ந்திருந்து வரும் கொஞ்சம் வெளிச்சத்தையும் மறைத்தன. அந்தப்

பகுதியிற்கில்லாத ஒரு இடியும் மழையும் இரண்டு நாட்கள் முன் அங்கு பெய்திருந்ததால் காலடியில் உள்ள செடி கொடிகளெல்லாம், ஈரமாகச் சொதசொதவென்றிருந்தது. அந்தப் பணியாள் தன் கையிலிருந்த தீவட்டியைக் கொளுத்தினான்.

"இங்கே பாருங்கள், மாட்சிமை பொருந்தியவரே," தலையாள் மெதுவாகக் கூறியவாறு, புதர்களை அகற்றி முன்னே செல்ல வழி செய்தான்.

ஒரு சிறிய திறந்த வெளிக்கு அவர்கள் வந்தனர். பணியாள் தன் தீவட்டியை உயர்த்திப் பிடிக்க இருள் சிறிது குறைந்தது. அந்த வெளியின் நடுவில் ஒரு மனிதனின் கையளவே உள்ள மூன்று புலிக்குட்டிகள் விளையாடிக் கொண்டிருந்தன. தலை திரும்பி, மிகுந்த ஆவலுடன், தங்கள் பளிச்சிடும் மஞ்சள்நிறக் கண்களால், வந்திருந்தோரை கண்கொட்டாமல் பார்த்தன. ஒரு குட்டி, சிறிதும் பயமில்லாமல் ஸலீம் அருகே ஓடி வந்து அவர் காலணியை முகர்ந்தது. ஸலீம் மகிழ்ச்சியுடன் சிரித்தவாறு அந்தக் குட்டியைத் தூக்கி மார்புடன் அணைத்துக் கொண்டார். அதன் தாயார் நக்கி முற்றிலும் சுத்தம் செய்யாமல் விட்டுவிட்ட ஏதோ ஒரு மிருகத்தின் இரத்தக் கறை அந்தக் குட்டியின் ஒரு காதில் இருந்தது. அதனிடமிருந்து ஒரு விதப்புளிப்பு வாசம் வந்தது. ஸலீம் அதன் கழுத்தில் வருடிக் கொடுக்க, அந்த குட்டியும் திருப்தியுடன் கண்களில் சாந்தத்துடன் மெல்லியதாக உறுமியது.

அலிகுலி சுற்றியிருந்த இருட்டைக் கவலையுடன் பார்த்தான். "மாட்சிமை பொருந்தியவரே, பெண்புலி பக்கத்தில் தான் இருக்கவேண்டும். ஜாக்கிரதையாக இருங்கள்."

ஸலீம் அவன் சொல்வதில் கவனம் செலுத்தாமல் புலிக் குட்டியின் முதுகிலிருந்த தங்கம், கருப்பு நிறக் கோடுகளைத் தடவியவாறு இருந்தார்.

திடீரென்று ஸலீமிற்கு நேர் எதிரே, புதர்களின் நடுவிலிருந்து ஜ்வலிக்கின்ற இரண்டு கண்கள் தெரிந்தன. ஒரு மெல்லிய உறுமும் சப்தமும் கேட்டது. ஸலீம் தலை தூக்கிப்

பார்த்து, மார்பு படபடக்கத் திடுக்கிட்டார். அவர் முன்னே கோபத்துடன் பாய்வதற்குத் தயாராக ஒரு பெரிய பெண் புலி உட்கார்ந்திருந்தது. சிறிதும் சப்தம் செய்யாமல், வந்த சுவடு தெரியாமல் எங்கிருந்தோ அது வந்திருந்தது. ஸலீம் பரபரப்பாகத் தன் துப்பாக்கியைத் தேடிச் சுற்றும் முற்றும் பார்த்தார். சிறிது தூரத்தில் தரையில் அது இருந்தது. அவர் அதை எடுக்க முயற்சிக்கும் நேரத்திற்குள் புலி அவர் மேல் பாய்ந்து விடும். தன் மரத்துப் போன விரல்களால் புலிக் குட்டியைப் பிடித்தவாறு அவர் பெண்புலியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தான் சொல்ல வந்த வார்த்தைகள் தொண்டையிலேயே சிக்கி கொள்ள அலிகுலி இளவரசரைப் பார்த்தான். நிலை மையின் நெருக்கடியை உணர்ந்த அந்தப் புலிக்குட்டி தன் தாயின் வாசனையைப் புரிந்து கொண்டு ஸலீமின் இறுக்கிப் பிடியிலிருந்து நெளிந்தவாறு மெல்லியதாக உறுமிற்று. பெண் புலி முழுமூச்சுடன் மேலும் சத்தமாக உறுமியது. அலிகுலி தொண்டையைச் சரி செய்து கொண்டு மெதுவாகக் கூறினான் "புலிகுட்டியைவிட்டு விடுங்கள், மாட்சிமை பொருந்தியவரே."

ஸலீமிற்கு அவன் சொன்னது கேட்கவில்லை. அந்தப் பெண் புலியின் பளபளக்கும் கண்கள் அவரை வசியம் செய்துவிட்டது போல் அசையாமல் நின்றிருந்தார்.

அருகில் பணியாள் பயத்தில் உறைந்திருக்க, அவன் கையிலிருந்த தீவட்டி, ஒரு அச்சமூட்டும் வெளிச்சத்தை அந்தத் திறந்த வெளியில் பாய்ச்சிக் கொண்டிருந்தது. அசை யாமல் நிற்கும் அந்த மூன்று மனிதர்களையும் சிறிது தூரத் தில் ஒரு மூலையில் இன்னும் பதுங்கி இருக்கும் புலியையும், தீவட்டி வெளிச்சம் போட்டுகாட்டியது.

அலிகுலி மெதுவாகத் தன் குத்துவாளைத் தொட்டான். அதன் கைப்பிடியை அவன் பற்றுகையில், புலி பெரிய கர்ஜனையுடன் பாய்ந்தது.

ஸலீமிற்குப் பயத்தில் உடல் குளிர்ந்தது. அவர் வேறு பக்கம் பார்வையைத் திருப்ப முயன்றாலும் முடியவில்லை. அவர் கால்கள் அசைந்து கொடுக்கவில்லை. எப்படியிருந்தா

புலியிடமிருந்து தன்னால் தப்பிக்க முடியாது என்று கணத்தில் உணர்ந்தார். பற்களை நெறித்து, வாயைப் பிளந்தாகத் திறந்து கர்ஜித்தவாறு அந்தப் பெண்புலி தன்னை தாக்கிப் பாய்வதற்கு எழுந்திருப்பதை ஸலீம் எவ்வித உணர்ச்சியும் இல்லாமல் பார்த்தபடியே நின்றிருந்தார். அந்த மிருகம் காற்றில் பாய்ந்தவாறு அவர் அருகில் வரவர, தன்னையே ஸ்தம்பித்துவிட்டதுபோல் அவருக்குத் தோன்றியது.

திடீரென்று இளவரசருக்குச் சிறிது தூரத்தில் ஒரு வெளிச்சம் தென்பட்டது. அந்தப் புலியின் மீது பாய்ந்தான். புலி தடாரென்று தரையில் விழ, அதன் மேலே அலிகுலி! ஸலீம் அசையாமல் புலியும் அலிகுலியும் கட்டிப்புரளுவதைப் பார்த்தார். சட்டென்று நிலைமையை உணர்ந்து புலிக்குட்டியைக் கீழே விட்டுவிட்டு ஓடிச்சென்று தன் துப்பாக்கியை எடுத்துத் தயாராக வைத்துக்கொண்டார். ஆனால், அந்த வீரன் மேல் பட்டுவிடுமோ என்ற பயத்தில், அவரால் துப்பாக்கியால் சுட முடியவில்லை.

தன் உறுதியான கைகளால், அந்தக் கோபவெறி பிடித்த மிருகம் அலிகுலியை அடித்து, அவன் தோள்களில் தன் கூரிய நகங்களைப் பதித்தது. அலிகுலி வலியினால் அலறியவாறு தன் மற்றொரு கையால் அவன் மேலிருந்த அந்த பெரிய உடம்பில் தன் குத்துவாளால் குத்தமுயன்றான். ஆனால், புலி அவனைத் தூக்கி எறிய, அந்த வீரன் ஒரு துணிப்பொம்மையைப் போல் கீழே விழுந்தான். வாயைத் திறந்து கூரிய வெள்ளைப் பற்களைக் காட்டியவாறு எதிரே அவன் பார்வையை மறைத்தபடி அந்தப் புலி மறுபடியும் அலிகுலி மேல் பாய வந்தபொழுது, அவன் தன் சக்தியை யெல்லாம் திரட்டிக் குத்துவாளை உயர்த்தி, வாளின் கைப் பிடிவரை போகும்படியாக அதன் இதயத்தில் குத்தினான். அந்தப் பெண் புலி பெரிய கர்ஜனையுடன் சாய்ந்து விழ, இரத்தம் பீறீட்டுஅடித்து அவன் கைகளிலும் துணிகளிலும் விழுந்தது.

அதற்குள் இங்கு நடக்கும் சந்தடியையும், பெரும் கூச்சலையும் கண்டு பரிவாரம் முழுவதும் அங்கே கூடி

விட்டது. கையில் துப்பாக்கியைப் பிடித்தவாறு ஸலீம் அலிகுலி அருகில் சென்றார். பாதி உடல் அந்த மிருகத்தின் உடம்பிற்கு அடியில் இருக்க, அலிகுலி அசையாமல் தரையில் கிடந்தான். ஸலீம் பக்கத்தில் நின்றிருந்த ஆட்களிடம் சைகை செய்ய, அவர்கள் ஓடிச்சென்று புலியை அகற்றி விட்டு அலிகுலியை மெதுவாகத் தூக்கி நிறுத்தினர்.

இளவரசர் அந்த வீரனை அணைத்துக்கொண்டபோது சதைநார்கள் இரத்தத்துடன் தொங்கிக் கொண்டிருக்கும் தன் தோளில் இளவரசர் கை பட்டவுடல், வலியால் அலிகுலி முகத்தைச் சுளித்தான்.

"என் உயிரே நீ கொடுத்ததுதான்." தொண்டை கரகரக்க இளவரசர் கூறினார்.

"என் உயிர் எப்பொழுதுமே உங்களுக்குச் சேவை செய்வதற்குத்தான், மாட்சிமை பொருந்தியவரே!" வலியினால் மயங்கியவாறு அலிகுலி பதிலளித்தான்.

"இவனை அழைத்துச் சென்று காயத்திற்கு மருந்திடுங்கள்."

பணியாட்கள் தற்காலிகமாக ஒரு பலகைப் படுக்கையைத் தயார் செய்து அலிகுலியை அதில் படுக்கவைத்துக் கூடாரத்திற்கு எடுத்துச் சென்றனர். ஸலீம் துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு அசையாமல் நின்றார். அவருக்கு வெகுவாக வியர்த்துவிட்டிருந்தது. அவரது பட்டு மேல் அங்கி அலிகுலியின் இரத்தத்திலும், புலியின் இரத்தத்திலும் நனைந்து அவர் மார்புடன் ஒட்டிக் கொண்டிருந்தது. அவர் கட்டுமீறி நடுங்கியபடித் தன் மேல் அங்கியைக் கழட்டி எறிந்தார். அவர் தூக்கி வைத்திருந்த புலிக்குட்டி திரும்பவும் அவர் அருகே வந்து அவர் தோல் காலணியைக் கடித்தது. சிறிது தூரத்தில் அதன் தாயார் இறந்து கிடக்கிறாள் என்பதை அது இன்னும் உணரவில்லை. ஸலீம் அந்தக் குட்டியைப் பார்த்து விட்டுப் பக்கத்தில் கிடந்த பெண்புலியின் உடலையும் பார்த்தார். அந்தக் குட்டியை எடுத்துத் தூக்கி வைத்துக் கொண்டது முட்டாள் தனம். பக்கத்திலேயே அதன் தாயார் இருக்கும் என்று அவருக்குத் தெரிந்திருக்க வேண்டுமல்லவா?

தளிர்ந்து பின் கழுத்தைப் பிடித்துப் புலிக்குட்டியைத் தூக்கியபடி. ஸலீம் யோசித்துப் பார்த்தார். நிலைமை என்ன என்றால் உதய்பூர் மீதான ஆக்ரமிப்பை ராஜா மான்சிங் தலைமைப்பேற்றுத் திறமையாக நடத்திச் செல்கிறார். வழக்கம் போல் ஸலீம் செய்வதற்கு அதில் ஒன்றும் இல்லை. தூரத்தில் இருக்கும் ராணுவத்தில் இருந்து கொண்டு சக்ரவர்த்தி போர் முனையில் நடப்பவை பற்றி விவரமாகத் தெரிந்து கொள்கிறார். அவருக்கும் ராஜா மான்சிங்கிற்கும் இடையில் கடிதங்கள் மட்டுமும், தகவல் எடுத்துச் செல்பவர்கள் மூலமும், தகவல் பரிவர்த்தனை நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் மிக நிதானமாகவே ஸலீமிடம் ஆலோசனை கேட்கின்றனர்.

புலிக்குட்டி அவர் கைப்பிடியில் வளைந்து நெளிந்தது. ஸலீம் அதை மார்புடன் அணைத்துக்கொள்ள, அது அவர் உடையிலுள்ள இரத்தத்தை நக்குவதை அவர் வெறுப்புடன் பார்த்தார். அவர் கூடாரத்திற்குத் திரும்பிச் சென்று, அந்த இரண்டு புலிக் குட்டிகளையும் எடுத்து வந்து, அவரிடமிருக்கும் மற்ற மிருகங்களின் கூட்டணியில் சேர்த்து விடுமாறு உத்தரவிட்டார்.

அடுத்த நாள், காலை எழுந்தவுடன் தன்னைக் காப்பாற்றிய அந்த வீரன் சீக்கிரம் உடல் நலம் தேற ஸலீம் பிரார்த்தனை செய்தார். பிறகு, அவர் ஒரு அரசப் பிரகடனம் வெளியிட்டார். அன்றிலிருந்து அலிகுலிகான் இஸ்தாஜிலு எனும் 'ஷேர்—ஆப்கான்'—புலியைக் கொன்றவன் என்றபட்டம் வழங்குவதாக அந்தப் பிரகடனம் அறிவித்தது. அவரால் செய்யக் கூடியது இது ஒன்றே! நேரம் செல்லச் செல்ல இந்த முடிவினால் தனிடம், தான் ஒரு கடனாளியாக இருப்பதில் அவருக்கு விருப்பமில்லை என்று ஸலீமிற்குத் தோன்றியது. இந்த மனிதன் — அவர் காதலித்த பெண்ணை மணந்து கொண்டவன், தன் மனைவியை மதிக்கத் தெரியாதவன்.

ஸலீம் அந்த அரசாங்கப் பிரகடனம் மீது தன் முத்திரையைப் பதித்து அந்த எழுத்துமை காய்வதற்காக அதன் மேல் ஊதினார். அலிகுலி அவர் உயிரைக் காப்பாற்றி இருக்கிறான். ஆனால், அவனுக்குக் கிடைக்கும் இந்த புதிய பட்டமும்,

அதனால் கிடைக்கப் போகும் கௌவரமும், வசதிகளும் மெஹ்ருன்னிஸாவிற்கு நல்லது செய்யும். அவர் அந்தக் காகிதத்தைத் தொட்டுப் பார்த்தார். ஒருநாள், பல மனிதர்களால் கையாளப்பட்ட பிறகு, ஒருநாள், மெஹ்ருன்னிஸா இந்தப் பிரகடனத்தைக் கையில் பிடித்துப் படித்துப் பார்ப்பாள். திடீரென்று அவர் மனதில் அவளுக்காக ஒரு வாக்கியம் இதில் எழுத வேண்டும் என்ற உந்துதல் வந்தது. அந்த வாக்கியம் அவரிடமிருந்து வந்தது என்பதை அவள் புரிந்து கொள்வாள். அவர் தன் எழுதுகோலை எடுத்து ஏற்கெனவே எழுதப்பட்டிருந்த வாக்கியங்களின் அடியில் எழுதினார். "நீ எப்பொழுதும் அமைதியுடன் இருக்க வேண்டும்." எழுத்துமை காய்ந்தவுடன் ஸலீம் ஒரு பணியாளைக் கூப்பிட்டு அந்த அரசப் பிரகடனத்தை அலிகுலியிடம் எடுத்துச்செல்லக் கட்டளையிட்டார். அத்துடன்கூட, அவரால் மறக்க முடியாத, அவர் மூன்றுமுறை மட்டுமே சந்தித்த பெண்ணிற்கு, அவர் அனுப்பிய செய்தியும் சென்றது.

"அரசாங்க கஜானா உங்கள் வசம் இருக்கையில் நீங்கள் இந்தச் சாம்ராஜ்ஜியத்தையே ஆட்சி செய்யலாம். மாட்சிமை பொருந்தியவரே!"

"ஸ்..." தன் முழங்கைக்கு அருகில் இருந்த வெள்ளித்தட்டில் தன் கோப்பையை இளவரசர் ஸலீம் சத்தத்துடன் வைத்தார். தன்னைச் சுற்றிலும் துரிதமாக ஒரு பார்வை பார்த்தார். அரசாங்கப் பணியாட்கள் சிறு தொலைவில் ஆங்காங்கே தூண்களின் அருகில் கால்களை அகட்டி வைத்துக்கொண்டு, கைகளைப் பின்னால் கட்டியவாறு நின்று கொண்டிருந்தனர். அவர்கள் முகம் சிலைபோல் அசையாமல், உணர்ச்சியை வெளிக்காட்டாமல் இருந்தது.

நிம்மதியுடன் பெருமூச்சு விட்டபடி ஸலீம் கோப்பையை மறுபடியும் கையிலெடுத்தார். தன் முன் தெரியும் ஆவலுதும்பும் மூன்று முகங்களையும் தன் கோப்பையின் விளிம்பிற்கு மேல் பார்த்தார். மஹபத் கான், குதுபுதீன் கான், கோக்கா, மற்றும் ஸையத் அப்துல்லா மூவரும் அவரை

தூண்டுவது போல் புன்னகைத்தனர். ஆஜ்மீரிலுள்ள அரசாங்க மாளிகையில், ஸலீம் தங்கியிருக்கும் பகுதியிலுள்ள திருந்தினர் அறையில் அந்த நால்வரும் ஒரு தாழ்வான மேத்தையினாலான இருக்கையில் அமர்ந்திருந்தனர். அந்த அறை மிகப் பெரியதாகக் கவிந்த கூரைகளுடனும், வெளியே தோட்டாவிற்குச் செல்லக் கற்களாலான வளைந்த வாயில்களுடனும் கூடியதாக இருந்தது. ஸலீமும் அவருடைய நம்பிக்கைக்கு முற்றிலும் பாத்திரமானவர்களும், அவரிடம் மிகுந்த விசுவாசம் உடையவர்களுமான அவருடைய மூன்று தோழர்களும் அறையின் நடுவில் சேர்ந்து அமர்ந்திருந்தனர். அந்த மூன்று மனிதர்கள் ஏறக்குறைய ஸலீம் வயதை ஒத்தவர்கள், சிறு வயதிலிருந்தே இளவரசருடன் கூடச் சேர்ந்து வளர்ந்த தோழர்கள்.

மஹபத் கான், ஒல்லியாக ஒடிந்த தேகத்துடன் கச்சித மானவனாக இருந்தான். சூரிய ஒளியால் நன்கு கருத்த, காய்ந்த உடல். நன்கு கூவரம் செய்த முகத்தில் அறிவு மிகுந்தும் கருத்த கண்கள். அவன் தலைமுடி நன்கு எண்ணெய் இட்டு, நுனியில் வளைந்ததாய் பின்தள்ளி வாரப்பட்டிருந்தது. அவன் குணத்திற்கேற்ப அவனிடம் அளவற்ற நளினமையும், தைரியமும் தெரிந்தன. மஹபத், இருக்கையின் நுனியில் நிமிர்ந்து எச்சரிக்கையுடன் அமர்ந்திருந்தான். அவனுக்குப் பத்து வயதாக இருக்கையில், ஸலீமிற்கு தோழனாக இருக்க வேண்டி, அரச மாளிகைக்கு அழைத்து வரப்பட்டான். சில வருடங்கள் கழித்து அவன் அஹாதி (Ahadis) எனப்படும்— 'பேரரசைச் சார்ந்த குடும்பத்தினருக்கு அவர்களது சொந்த மெய்காப்பாளர்கள்' படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

குதுபுதீன் கான் கோக்காவும் அரண்மனை அந்தப்புரத்தில் வளர்ந்தவன் தான். கோக்காவின் தாய் ஷேக் ஸலீம் சிஸ்தி (Shaikh Salim Chisti)யின் மகள். ஸலீமிற்குக் குழந்தைப் பருவத்தில் பாலூட்டிய செவிலித்தாயாக இருந்தவள். ஆகையால் ஸலீம், கோக்கா இருவருமே வளர்ப்புச் சகோதரர்கள் போல் ஒரே தாயின் பாலைக் குடித்து வளர்ந்தவர்கள்.

எப்பொழுதுமே சிறிது பூசினாற்போல் இருக்கும் கோக்கு வயதாக ஆக அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவன் இருக்கையில் நன்கு சௌகரியமாக அமர்ந்து கொண்டு தன் முகத்தில் தடையில்லாமல் வளர்ந்திருக்கும் மீசையைத் தடவியவாறு இருந்தான். அவனைப் பார்க்கும் பல மனிதர்கள் அவனது அமைதியான அலட்டிக் கொள்ளாத சுபாவத்தையும் வேடிக்கைப் பேச்சையும்தான், அவன் குணம் என எண்ணுவார்கள். ஆனால், வெளி உலகத்திற்கு அவ்வாறு தோற்றமளிக்க, அவன் எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்குப் பின் இருக்கும் அவனது புத்திக் கூர்மையை, அவர்கள் அறிய மாட்டார்கள்.

ஸையத் அப்துல்லா இளவசரின் முதல் திருமணத்திற்குப் பிறகு, அவரது மாளிகையில் வந்து சேர்ந்தவன். வெகு சீக்கிரமே முன்னுக்கு வந்து அவருடைய தனிப்பட்ட வட்டத்திற்குள் வந்து விட்டவன். முதலில் இளவரசர் அவனது கவர்ச்சி மிக்கத் தோற்றத்தாலும், சமத்காரத்தாலும் கவரப்பட்டார். அவன் மிகவும் வசீகரமானவன். அகன்ற தோள்களுடனும், நுனியில் சிறிது வளைந்த மூக்குடனும் நன்கு அமைந்த புருவத்துடனும், அழகிய வாயும் உடையவன். இயற்கை அவனுக்குக் கொடுத்திருக்கும் இந்த அழகிய தோற்றத்தை, மேலும் மேன்மையாக வைத்துக் கொள்வதில் அவன் கவனம் செலுத்தினான். ஆனால், அவன் ஸலீம் மீது வைத்திருக்கும் கண்மூடித்தனமான அன்புதான், அவனை மிகவும் கவர்ந்தது.

இந்த மூன்று மனிதர்களும், நாலாவதாக உடல் நலக் குறைவால் அன்று அங்கு வர முடியாமல் போன முகமது ஷரீபும் தான் தனது நெருங்கிய நண்பர்கள் என்று ஸலீம் நினைத்தார். உடல்வாகு என்று பார்த்தால், இந்த நான்கு மனிதர்களிடையே இதற்கு மேலும் அதிக வித்தியாசத்தைப் பார்க்க முடியாது. மற்ற மூன்று பேருக்கும் மாறாக, ஷரீப் குள்ளமானவன். ஆரோக்கியமான தடித்த கை கால்களுடன் முன் தலையில் வழுக்கையோடும், அழகாக வெட்டப்பட்ட மீசையுடனும் கவனமாகத் திட்டமிட்டுக் காரியங்கள் செய்யும்

[illegible]னும் உடையவன். ஆனால், ஸலீமிடம் அவர்களுக்கு [illegible]க்கும் மாறாத விசுவாசம்தான், அவர்கள் நால்வரையும் [illegible]ணத்தது — விசுவாசம், கடந்த பல வருடங்களில் [illegible]க்கப்பட்டு நிரூபிக்கப்பட்டது அவர்களது விசுவாசம். [illegible] சமயங்களில் இந்த விசுவாசம் அளவு கடந்து போனதும் [illegible]ண்டு. 1591—ல் அவரது தகப்பனருக்கு எதிராக ஸலீமைப் [illegible]ட்டி செய்யச் சொல்லித் தூண்டி விட்டதுபோல், [illegible]பொழுது ஆக்ராவிலுள்ள பொக்கிஷசாலையில் புகுந்து [illegible]ராஜ்ஜியத்தின் சொத்துகளை கைப்பற்ற ஸலீமிற்கு [illegible]ர்கள் யோசனை கூறிக் கொண்டிருக்கின்றனர்.

சிந்தித்தவாறு ஸலீம் அவர்களைப் பார்த்தார். ஒரு [illegible]ளை, அவர்கள் சொல்வதைக் கேட்பதினால் கெடுதல் [illegible]றும் நேரப் வாய்ப்பில்லை. வழக்கத்திற்கு மாறாக இன்று [illegible] மூளை, கசாப்புக் கடைக்காரன் கத்திபோல் கூர்மை [illegible] இருந்தது. அன்று காலை, அபின், மது அருந்தக் கூடாது [illegible]று அவரை வற்புறுத்தியது மட்டுமற்றி, ஒரு இரகசியச் [illegible]திப்பிற்கும் மஹபத்கான் அநுமதி கேட்டிருந்தான். மௌன [illegible] அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே [illegible]லீமின் மனதில் ஒரு திட்டம் உருவாகத் தொடங்கியது.

அவர் அஜ்மிருக்கு வந்து ஒரு வருடம் — ஒரு மிகவும் [illegible]த்தமான வருடம் — ஆகிவிட்டது. வந்த புதிதில் அஜ்மீர்க் [illegible]டிமக்கள் அடிக்கடி அவரை வந்து பார்த்து மரியாதை [illegible]செலுத்தி வந்தனர். ஆனால், நாளாக ஆக அதே மக்கள், [illegible]லீமைக் கண்டால், மரியாதை செலுத்துவதற்காகக் கூடத் [illegible]ங்கள் செய்யும் வேலையை நிறுத்துவதில்லை.

உதய்பூர் ராணாவின் மீது நடத்தி வரும் முற்றுகையும் [illegible]வர்களுக்குச் சாதகமாகச் செல்லவில்லை. எப்படியோ [illegible]ந்தக் கபடமான. அமர்சிங், அவன் நாட்டு எல்லையில் [illegible]த்தி வரும் தீவீர்த் தாக்குதல்களைச் சமாளித்து, பேரரசின் [illegible]ராணுவத்தைச் சிதற அடித்துக் கொண்டிருக்கிறான். [illegible]னால் கெடுதல் ஏதும் இல்லை என்றாலும், மறுபடியும் [illegible]டைகளைத் திரட்டி அவன் மேல் போர் தொடுக்க, அதிக [illegible]ரமும் செலவும் ஏற்பட்டது.

ஒரு மாதத்திற்கு முன்பு, இங்கு போரை நடத்தி
ஸலீமின் மனைவியின் சகோதரனான ராஜா மான்
திரும்பவும் வங்காளத்திற்குத் தலைமைப் பதவியை ஏற்றுக்
சக்ரவர்த்தியால் அனுப்பப்பட்டு விட்டார். இந்தியாவிலுள்ள
ஆப்கானிஸ்தான் கலகக்காரர்களின் தலைவன் உஸ்மான்
மறுபடியும் கலகம் விளைவிக்கத் தொடங்கியதால், அந்த
எதிர்ப்பைச் சமாளிக்க மேவாரிலிருந்து ராஜா மான்
அனுப்பப்பட்டார். இந்த ஆப்கான் கலகக்காரர்கள்
அச்சுறுத்தல் பல வருடங்களாக இவர்களைத் தொடர்ந்து
வருகிறது. அவர்கள் அக்பரின் தந்தையை ஒரு சமயம் ஹிந்து
ஸ்தானிலிருந்து விரட்டி அனுப்பியவர்கள். ஆகையால்
வங்காளத்திலிருந்து சிறிய தொந்திரவு வந்தாலும், அதை
சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

இந்த நிலைமை அவர் படைகளுக்கு ஒரு நல்ல தளபதி
இல்லாமல் செய்து விட்டதை ஸலீம் எரிச்சலுடன் எண்ணிப்
பார்த்தார். படைகளுக்குத் தலைமை தாங்க சக்ரவர்த்தி
அவரை முதலில் தேர்ந்தெடுக்கவில்லை. ஸலீமை அங்கு
அனுப்பியதே அவரிடம் சக்ரவர்த்திக்கு ஒரு நல்ல அபிப்
பிராயம் இருக்கிறது என்று காட்டுவது போல், ஒரு அறிகுறி
தான். இப்பொழுது போர் முனைக்குச் சென்று படைகளைத்
திரட்டி ஒன்று சேர்க்க, ஸலீமிற்கு விருப்பம் இல்லை.
அப்படியானால் அவர் மேவாரில் இருப்பது அவசியமில்லை
என்றாகிறது. ஆனால், வேறு எங்கு போவது? நிச்சயமாக
தக்காணத்துக்கு இல்லை. சக்ரவர்த்தி உடனே அவரை
மற்றொரு நீண்ட படையெடுப்பிற்குத் தலைமை தாங்க
உத்தரவிட்டு, அவர் கண் எதிரிலேயே இருக்கும்படிச் செய்து
விடுவார்.

இவ்வாறு, தன் பிரச்சனைகளைப் பற்றிய சிந்தனையில்
ஸலீம் மூழ்கியிருக்கையில் தான் அவரைத் தனியாகச் சந்திக்க
வேண்டும் என்ற வேண்டுகோளுடன் மஹபத் கான்
அவரிடம் வந்தான். இதுவரை ஸலீம் அரியணை தனக்கு
தான் என்பதை உறுதியாக நம்பியிருந்தார். முராத் இறந்து
விட்டான். தனியால் மாத்திரமே இப்பொழுது அவருக்குப்

டியாக இருக்கிறான். ஆனால், தற்சமயம் அக்பருடன்
ணத்தில் தனியால் இருப்பதாகக் கோக்கா உற்சாக
ட்டிக்காட்டுகிறான். அப்படியானால் மனதளவில்
எவ்வளவு நெருங்கியிருப்பார்கள் என்று எப்படித்

இந்த எண்ணம் தோன்றியவுடனேயே ஸலீம் மனதில்
மடுத்தது. ஒரு வேளை தந்தை தன்னை ஒதுக்கிவிட்டு,
ஜியத்தைத் தனியாலுக்குக் கொடுத்து விடுவாரா?
வாய்பைத் தவறவிட முடியுமா? இத்தனை வருடங்
அவர் விரும்பியது, இல்லை, பேராவலுடன் ஏங்கியது
ரியணையில் அமருவதற்குதான். இவ்வளவிற்கும் பிறகு,
படி. அவருக்குச் சமமான உரிமை உடைய தனியால்
வாழ்க்கையின் ஒரே அபிலாஷையைத் தட்டிப் பறித்து
போல் தோன்றுகிறது. இந்தச் சமயத்தில் தான்,
தன் நண்பர்கள் கூறுவதைக் கேட்கத்தொடங்கினார்.
ஷச்சாலையைக் கைப்பற்றி விட்டால், சந்தேகமே
மல் சாம்ராஜ்ஜியம் அவருடையதாகி விடும். ஏனெ
இந்த சாம்ராஜ்ஜியத்தின் உயிரே அதன் செழிப்பான
தான்.

முடிவாகக் கோப்பையிலிருந்த இளம் பழப்பு நிற மதுவி
ஸலீம் கண்களை உயர்த்தினார். "பொக்கிஷச்
யை நாம் எப்படிக் கைப்பற்ற முடியும்? அது நன்றாகப்
காக்கப்படுகிறது."

மஹபத், கோக்கா மற்றும் அப்துல்லா மூவரும் ஒருவரை
பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

"மிகக் குறைந்த இராணுவ வீரர்களே ஆக்ராவில்
னர்." கோக்கா மெதுவாகக் கூறினான். பேரரசின்
பகுதி இராணுவம் இங்கேயோ அல்லது சக்ரவர்த்தி
தக்காணத்திலோ உள்ளது."

ஸலீம் தலையை அசைத்தார். தந்தைக்கு எதிராக
டாவது முறையாகக் கிளர்ச்சி செய்யும்படி இவர்கள்
கிறார்கள். ஆனால், இந்த முறை காரியத்தில் இறங்கி

விட்டால் அதிலிருந்து பின்வாங்க முடியாது. விஷம் கொடுக்க முயற்சித்த நிகழ்ச்சியிலாவது அக்பருக்கு அவர் மேல் சந்தேகம்தான் இருந்தது. ஆதாரம் ஒன்றும் இல்லை. ஆனால் பொக்கிஷச்சாலையை கைபற்றுவதென்பது பேரரசுக்கு எதிராக தாக்குவதாகும்.

"இதுதான் சரியான நேரம், மாட்சிமை பொருந்தியவரே!" அப்துல்லா ஊக்குவித்தான். "நாம் உடனே செயல்பட வேண்டும். எவ்வளவு வருட காலம் சக்ரவர்த்தி உயிரோடு இருப்பார் என்று யாருக்குத் தெரியும்? சக்ரவர்த்தி இறந்த நீங்கள் சிம்மாசனம் ஏறுவதற்கு இன்னும் பல வருடங்கள் ஆகலாம்."

"ஏன் காத்திருக்க வேண்டும், மாட்சிமை பொருந்தியவரே!" மஹபத்கானும் உடன் சேர்ந்து கொண்டான். "மாட்சிமை பொருந்திய பேரரசர், நீங்கள்தான் அவர் வாரிசு என்று வெளிப்படையாகவே பறைசாற்றி இருக்கிறார். நீங்கள் அரசுப் பொக்கிஷச்சாலையைக் கைப்பற்றி விட்டால் அடுத்தப் பேரரசர் நீங்கள்தான் என்று ஒப்புக்கொண்டு சக்ரவர்த்தி அரசசபையிலிருந்து ஒதுங்கி விடுவார்."

ஸலீம் மறுபடியும் மறுப்பது போல் தலையசைத்தான். "இது சரியாக நடக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. இது நாம் செய்யப் போகும் மிகப் பெரிய கிளர்ச்சியாகும்."

"சரியான காரியம் தான், மாட்சிமை பொருந்தியவரே!" வெற்றி நெருங்கி வருவதைக் கண்டு கோக்கா முறுவலித்தான். "நீங்கள் பத்து வருடங்களுக்கு முன்பே வளர்ந்த மனிதனாகி விட்டீர்கள். ஆனால், சக்ரவர்த்தி அதை உணர்ந்து ஒப்புக் கொண்டாரா? இல்லையே! மாறாக, ஒரு குழந்தையைப் போல் உங்களை நடத்துகிறார். உங்களுக்கு ஒரு பொறுப்பும் கொடுப்பதில்லை."

"உதய்பூர் அரசரைப் போரிட்டுப் பணிய வைக்க அவர் என்னை அனுப்பி இருக்கிறாரே." ஸலீம் தடுமாறியவாறு கூறினார்.

"இழக்கக் கூடிய ஒரு காரியம் இது, மாட்சிமை பொருந்தியவரே! பேரரசர் உங்களை தக்காணித்துக்கு அனுப்பி

இருக்கவேண்டும். உங்கள் தலைமையில் நம்பிக்கை இல்லாமல் அவரே அங்கு சென்றிருக்கிறார்." மஹபத் பதிலளித்தான்.

ஸலீம் உதட்டைக் கடித்துக் கொண்டார். "என்னால் முடியாது" அவர் முனகினார். "நாம் ஆக்ராவை அடையும் முன் சக்ரவர்த்திக்கு இது தெரிய வந்தால் என்ன ஆகும்?"

"மிகவும் இரகசியமாக நாம் பயணம் மேற்கொள்வோம், மாட்சிமை பொருந்தியவரே!" கோக்கா கூறினான். "நீங்கள் டில்லி நலம் குன்றிப்படுக்கையில் இருப்பதாக வதந்தி பரப்பி விடுவோம். நீங்கள் இங்கு இல்லை என்பது ஒருவருக்கும் தெரிய வராது. அரசப் பொக்கிஷத்தின் மதிப்பை நினைத்துப் பாருங்கள்."

ஸலீமின் தலை சட்டென்று குலுங்கியவாறு கோப்பையிலிருந்து நிமிர்ந்தது. ஆக்ரா கோட்டைக்குள் இருக்கும் அந்த மிகப்பெரிய சேமக்காப்பறை ஸலீம் கண்முன் தோன்றியது. அன்னப் பறவையின், வெண்மை போன்ற பருமனான முத்துச்சரங்கள், ஒளி விடும் கெம்பு, சிவப்பு, வைரம் மற்றும் மரகதக் கற்கள் பதித்த ஆபரணங்கள், தேக்கு மரத்தினாலான பெரிய பெரிய பெட்டிகளில் நிரம்பி வழியும் தங்கம், வெள்ளிக்காசுகள் — இவை எல்லாம் தூசி படிந்தவாறு அறையில் வைக்கப்பட்டிருந்தன. கடைசியாக, எண்ணிப் பார்க்கும் பொழுது பொக்கிஷச்சாலைக் கணக்கீட்டாளர்கள் அதன் மொத்த மதிப்பு இருபது கோடி ரூபாய் என்று கணக்கிட்டிருந்தனர்.

ஆனால்... இது நிச்சயம் தப்பான காரியம். ஸலீமின் கிளர்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் சக்ரவர்த்தி முற்றிலும் மனம் உடைந்து போய்விடுவார். இளவரசர் தலையைக் குனிந்து கொண்டார். அதே சமயத்தில் சில இடங்களுக்கு மெஹ்ருன்னிஸாவை நினைத்துப் பார்த்தார். அவள் இப்பொழுது ஒரு அழகிய பெண்மணியாக இருக்கக் கூடும். அலிகுலி இப்பொழுதெல்லாம் சாதாரணமாகக் கூட அவளைப் பற்றிப் பேசுவதில்லை. சில சமயம், அவருக்கே கேட்க ஆவலாக இருந்தாலும், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வார். எப்படி இன்னொருவன் மனைவியைப் பற்றிப்

பேசமுடியும்? இருந்தாலும், நிலைமை மாத்திரம் வேறு விதமாக இருந்தால், மெஹ்ருன்னிஸா 'அவரது' மனைவியாக இருந்திருப்பாள். ஒரு எதிர்த்து நிற்கும் ஆக்ரோஷமான ஒளி, ஸலீமின் கண்களில் தோன்றியது.

"நீங்கள் சொல்வதுதான் சரி. இதுதான் சரியான தருணம். சக்ரவர்த்தி என்னைக் குழந்தையைப் போல் இனியும் நடத்த முடியாது." ஸலீம் அந்த மூன்று மனிதர்கள் பக்கம் திரும்பினார். "நாம் நாளைக்கு ஆக்ராவிற்குப் புறப் படுவோம். கிளம்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்."

"உங்கள் விருப்பப்படியே, மாட்சிமை பொருந்தியவரே!" மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்து விட்டுக் குனிந்து வணங்கி விட்டு, அறையிலிருந்து வெளியேறினர்.

அத்தியாயம் எட்டு

இளவரசன் தனக்குக் கிடைத்த இந்தச் சலுகையினால் பெருமை யுடன் பூரித்து நிச்சயித்தான்... போர்க்களத்தில் நேருக்கு நேர் சந்திக்காமல் சுமாதானத்திற்குப் போவதில்லை என்று நிச்சயித்துக் கொண்டு, தன் பயணத்தைத் துவங்கினான்... இளவரசனின் பகட்டும், பேராசையும் மக்கள் நன்கு அறிந்ததே... இருந்தாலும், சக்ரவர்த்தி அதைப் பொருட்படுத்தாமல் சகித்துக் கொண்டார்.

- **William Foster,** ed.,
The Embassy of Sir Thomas Roe to India.

ஓடக்குத் திசையிலிருந்தும், சுற்றிலுமிருந்த மலைகளிலிருந்தும் பனியை திரட்டிச் சுமந்து கொண்டு, கனமான விஷம் போன்ற, குளிர்காலம் லாகூரைச் சூழ்ந்திருந்தது. இது வரை கொளுத்தும் வெய்யிலில் அந்த நகரம் வெந்து கொண்டிருந்தது. மழைக்காலம் வருவதற்குத் தாமதித்துப் பின் மழை வரவேயில்லையாதலால், ராவி நதியில் அதிக நீர் ஓடவில்லை — மாறாக, அதன் கரைகள் வரண்டு போய், ஆழமில்லாமல் ஒரு பெரிய ராட்சத மலைப் பாம்பு போல் இருந்தது. படையெடுப்பை முன்னிட்டுச் சக்ரவர்த்தி தக்காணம் போய் ஆறுமாதங்களாகி விட்டது. அந்த நகரமே அவருடன் போய் விட்டது போல் தோன்றியது. இதுவரை மிருகத்தனமான வெயில் காலமாக இருந்தது. இப்பொழுது பூமி சூரியனிடமிருந்து விலகிச் செல்கையில், வரண்ட குளிர்காற்று ஜன நடமாட்டமில்லாத அந்த லாகூர்த் தெருக்களில் வீசிக் கொண்டிருந்தது.

லாகூர்க் கோட்டையின் மதிற்சுவரை ஒட்டி இருந்த ஒரு சிறிய கடைதெருவில், சில ஜனங்கள் மாத்திரமே குளிரையும், காற்றையும் சகித்தவாறு நடமாடிக் கொண்டிருந்தனர்.

பிச்சைக்காரர்கள் காய்ந்த இலை சருகுகள், குப்பைகளால் எரியவிடப்பட்ட நெருப்பைச் சுற்றி அமர்ந்து, தங்கள் கிழிந்த உடைகளை இழுத்து உடலை மேலும் போர்த்திக்கொண்டனர். ஒரு சிறு வியாபாரி சோளத்தண்டையைக் கரி அடுப்பில் சுட்டு, அதன் மேல் மிளகாய் — சீரகம் பொடியைத் தூவி குளிர்ந்த வயிற்றுக்குச் சூடு ஏற்றத் தயாரித்துக் கொண்டிருந்தான். குளிருக்கு அஞ்சாத சில ஆண்களும் பெண்களும் சால்வையால் தலையையும் தோள்களையும் மூடியபடி விரைவாகச் சென்று கொண்டிருந்தனர்.

ஒரு பெண் மட்டும், தன்னைக் கடந்து செல்லும் ஆண்களின் கவனத்தைக் கவராதபடித் தலை குனிந்தவாறு அந்தக் கடைத்தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தாள். அவளது நீல நிற உடைகள் சிறிதளவே தெரியும்படித் தன்னை நன்கு மூடியிருந்தாள். ஊடுறுவிப் பார்க்க முடியாத அவளது பருத்தியான முகத்திரை, பெரிய மடிப்புகளுடன் அவள் கால்வரை அவளை மறைத்திருந்தது. பாவாடையின் கொசுவங்கள் அந்தக் கற்களாலான தெருவில் உரசி, அவளது காலடி ஓசையை சத்தமிழக்கச் செய்தன. ஒரு விஷமக் காற்று வேகமாக வீசும் பொழுதுதான் உடைகள் அவள் உடலுடன் ஒட்டி உறவாடின. அந்த மாதிரிச் சமயத்தில் தான், தாபத்துடன் அலைபாயும் கண்களுடன் சில ஆண்கள் அவளது மார்பகத்தின் வளைவுகளையும், மெலிந்த இடையையும் இடுப்பின் அசைவுகளையும் ஆவலுடன் நோக்கினர். அவளை முற்றிலும் காணமுடியாவிட்டாலும் அவள் சாதாரணத் தாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண் அல்ல என்பதை அறிய முடிந்ததால் அவர்கள் அவளை நெருங்கவில்லை.

ஆனால், மெஹ்ருன்னிஸா அவர்களை எல்லாம் கண்டு கொள்ளவில்லை. கடைத்தெருவின் ஒரு ஓரத்தில் நின்று கொண்டு, அவளுக்கு மேலே பரந்து கிடந்த கருநீல நிற ஆகாயத்தைத் தொடுவதுபோல் உயர்ந்து நிற்கும் கோட்டையின் செங்கல் மதிற்சுவர்களை அவள் நிமிர்ந்து பார்த்தாள். அந்தச் சுவர்களின் மறுபக்கம் அவள் வீடு உள்ளது. துணியால் நன்கு மூடப்பட்ட தன் கைகளை நீட்டி, குழிகளுடன் இருந்த அந்தச் செங்கற் சுவரை அவள் தொட, அதன் குளிர்

தன் உள்ளங்கையில் பாய்வதை அவள் உணர்ந்தாள். ஆறு மாதங்களாக, சக்ரவர்த்தி போன பிறகு, இளவரசர் ஸலீம் போன பிறகு, அவள் கணவன் போனபிறகு, அவள் நகரத்தின் கடைத்தெருக்களில் வளைய வந்து கொண்டிருக்கிறாள். அலிகுலிக்கு இது தெரிய வந்தால் அவன் அதிர்ச்சியும் கொந்தளிப்பும் கொள்வான். அவள் தாய் தந்தையர் அறிந்தால் அவர்கள் கூடத் திடுக்கிடுவார்கள். அலிகுலியின் வாயிலிருந்து உதிர்க்கப்பட்ட வார்த்தைகள் வரும் — 'இரவில் நடமாடும் பெண்போல், பாதுகாப்பவர் இல்லாத பெண்போல், கணவன் இல்லாத பெண்போல்... மற்ற மனைவிகள் இப்படிச் சஞ்சரிக்கமாட்டார்கள்; அவர்கள் கணவர்கள் அவர்களை விட்டுச் சென்ற வீட்டிற்குள்ளேயே இருப்பார்கள். நீ ஏன் அப்படி இருக்கக் கூடாது?' தந்தையிடமிருந்து வரக் கூடிய வார்த்தைகள் 'குழந்தாய், நீ கவனமாக இருக்க வேண்டும், வெளி உலகம் மிகவும் பொல்லாதது.'

எப்படியானாலும், யாரையும் பார்க்காமல், யாரிடமும் பேசாமல், ஒன்றும் செய்வதற்கில்லாமல் மெஹ்ருன்னிஸா தனியாக வீட்டிலேயே அடைந்திருக்க முடியாது. பேரரசைச் சேர்ந்த பெண்களும் லாகூரிலிருந்து சென்று விட்டனர்; சிலர் சக்ரவர்த்தியுடன் தக்காணத்துக்கும் மற்றும் சிலர் ஆக்ராவிற்கும் சென்றுவிட்டனர். முதலில் பணியாட்கள் துணை இன்றி அவள் கடைத்தெருவிற்கு வந்து கொண்டிருந்தாள். தனியாக, அவர்கள் சத்தமாகப் பேசிக்கொண்டும், தங்களுடைய எஜமானரின் பெருமைகளைப் பற்றி அவர்களுடன் சண்டை போட்டுக்கொண்டும் இருந்ததால், அவர்களைச் சமாதானப்படுத்துவதிலேயே அவள் நேரம் செலவழிந்தது. அதன் பிறகு அவர்களை நிறுத்தி விட்டு, ஒன்றிரண்டு ஆண் பணியாட்களை மாத்திரம், அவளுக்கு சிறிது தூரத்தில் தொடர்ந்து வரச் சொல்லி, அவர்களுடன் வரத் தொடங்கினாள். அவர்கள் இவளுக்குத் துணையாக இருந்து அவளைப் பாதுகாப்பார்கள். கடைக்காரர்கள் அவளை ஆர்வத்துடன் பார்த்தாலும் ஒரு கேள்வியும் கேட்கமாட்டார்கள். அவள் கையில் இருந்த தங்கக் காசுகள் அவர்களை மிகவும் கனமாகவும் நன்றியுடனும் இருக்க வைத்தன. அரச

சபை அங்கு இல்லாத இந்த நேரத்தில் அந்த நகரமே அ
வழிந்த பொழுது, மெஹ்ருன்னிஸாவினால் இவ்வாறு
யில் செல்வதில்தான் பொழுதைக் கழிக்க முடிந்தது.

ஒரு வியாபாரி, சூடான வாணலியில், வேர்கடலை
யும், கொத்துக் கடலையையும் தன் இரும்புக் கரண்டி
வறுப்பதினால் வரும் மயக்கும் நறுமணம் காற்றில்
வர, அவள் திரும்பிப் பார்த்தாள். திடீரென்று குளி
உணர்ந்து, அந்த வியாபாரியிடம் சென்று சில காசு
நீட்டினாள். முகத்தில் பெரிதாக அசட்டு சிரிப்புப் ப
புகையிலைக் கரைபடிந்த மஞ்சள் நிறப் பற்களைக் காட்டி
வாறு அவசியத்திற்கும் மேலாகவே அவள் உள்ளங்கையைத்
தொட்டவாறு, அவள் கையிலிருந்து அவன் ஒரு கா
எடுத்துக்கொண்டான். மெஹ்ருன்னிஸா தன் முகத்திரைக்
அருவருப்பில் முகம் சுளித்தாள். உலகம் மிகவும் பொல்லாத
தான்; இந்த மனிதர்கள் பார்ப்பதுடன் நிறுத்திக் கொண்
அவளை நெருங்க முயற்சிக்காதவரை, அவளுக்குக் கிடைக்கு
சுதந்திரத்திற்கு அவள் கொடுக்கும் சிறிய விலை இது. கூம்
வடிவத்தில் காகிதத்தை மடித்துக் கடலையை அள்ளி எடுத்
நிரப்பி, மேலே மடித்து, மெஹ்ருன்னிஸாவிடம் அவன்
கொடுத்தான். அவன் கை தன் கைமேல் படாதபடி
ஜாக்கிரதையாக அவள் அதை எடுத்துக்கொண்டாள். அந்தக்
காகிதப் பொட்டலம் அவள் கையைச் சூடாக்க, தெருக்
கோடியில் இருக்கும் தேநீர்க் கடைக்கு அவள் சென்றாள்.

கடைத்தெருவில் மற்ற கடைகள் எல்லாம் மூடப்பட்டி
ருந்தன. கடைக்காரர்கள் கடையில் வியாபாரம் செய்வதற்கோ,
ஜனங்கள் வந்து பேரம் பேசிப் பொருட்களை வாங்குவதற்கோ
இடம் தராதவாறு, அவ்வளவு கடுமையான குளிராக
இருந்தது. எதுவும் செய்யாமல், சும்மா உட்கார்ந்து சூடான
தேநீர் அருந்தவும், பீடி புகைக்கவும்தான், அந்தக் குளிரில்
செய்ய முடிந்தது. மெஹ்ருன்னிஸா தேநீர்க் கடைக்குச்
சென்று, அங்கிருந்த விசுப் பலகையில் அமர்ந்தாள். கடையின்
சொந்தக்காரன், ஒரு பருமனான, சிரிக்கக்கூடத் தெரியாத
மனிதன். மெஹ்ருன்னிஸாவைப் பார்த்துத் தலையை ஆட்டி
விட்டுப் பின் உரக்கக் கத்தினான். "மோஹன்!"

கடையின் பின்புறத்திலிருந்து, கிழிந்த காற்சட்டையும்
லையிய குர்தாவும் மாத்திரமே அணிந்து, குளிரை விரட்டக்
கைகளை வீசி அடித்தவாறு, ஒரு சிறு பையன் ஓடி வந்தான்.
தன் எஜமானின் அருகில் சென்று, மண்கோப்பையில் அவன்
தேநீர் ஊற்றும் வரை காத்திருந்தான். பிறகு, அதை மெதுவாக,
மனத்துடன் மெஹ்ருன்னிஸாவிடம் எடுத்துச் சென்றான்.
அவன் அருகில் அவன் நெருங்குகையில், மற்றொரு
டிக்கையாளர் அவள் பக்கம் சிறிது குனியவே, கொதிக்கும்
தேநீர்த் துளிகள் சிறிது அவள் கைமேல் சிந்தியன. அவன்
சிறிய முகத்தில் கண்கள் பெரிதாக விரிய, அவன்
மெஹ்ருன்னிஸாவைப் பார்த்தான். மெஹ்ருன்னிஸா கையை
ட்டி, அவனிடமிருந்த கோப்பையை எடுத்துக் கொண்டாள்.
"தேநீர் சிந்திவிட்டது குறித்து நாம் பேசமாட்டோம்."
கடைகாரருக்குத் தெரிந்து விட்டால், அந்தச் சிறுவனுக்கு
தல அடி கிடைக்கும் என்று மெஹ்ருன்னிஸாவிற்குத்
தெரியும். ஏற்கனவே, அழுக்காக இருந்த தன் குர்தாவில்
கைகளைத் துடைத்துக்கொண்டு, அவளிடமிருந்து அவன்
ணத்தைப் பெற்றுக்கொண்டான். "வந்தனம், ஸாஹீபா."
னிப்பான, பட்டையும் இஞ்சியும் இட்டுத் தயாரித்த அந்தத்
தேநீரை உறிஞ்சியவாறு மெஹ்ருன்னிஸா, கடையில் இருந்த
ஆண்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்
டிருந்தாள். இவ்வளவு நாட்கள் கழித்து, முதல் முறையாக,
இரண்டு நாட்களுக்கு முன் அவள் கணவனிடமிருந்து
அவளுக்குக் கடிதம் வந்தது. அதில், இளவரசர் ஸலீமைப்
புலியிடமிருந்து தான் காப்பாற்றிய நிகழ்ச்சியைப் பற்றிக்
குறிப்பிட்டிருந்தான். இப்பொழுது எல்லோரும் அவனை
'ஷேர்—ஆப்கான்'. என்றே அழைக்கின்றனர். புலியைக்
கொன்றவன். அது மிகவும் பெருமைக்குரிய பட்டம். ஸலீம்
அவனை ஒரு பொழுதும் மறக்கமாட்டார். அவன் அவருக்குச்
செய்ததைக்கூட — அதற்கு அவன் பெயரே நினைவூட்டும்.
பக்கத்தில் மேஜைக்குப் பதிலாக உபயோகப்படுத்தும் ஒரு
மரப்பலகை மீது தேநீர்க் கோப்பையை வைத்துவிட்டு,
அதிலிருந்து வரும் ஆவி காற்றில் கலந்து போவதை, அவள்
பார்த்துக்கொண்டிருந்தாள். அலிகுலி தான் அவள் கணவன்

என்ற விஷயம் ஸலீமிற்குத் தெரியுமா என்பதை அறிய வேண்டும் என்று அவள் ஏங்கினாள்.

புகையினால் கருப்பாகி இருந்த அந்தத் தேநீர்க்கடைச் சுவற்றில், அவள் சாய்ந்து கொண்டாள். காட்டில் நடந்த அந்தச் சம்பவம் பற்றி வேறு எதுவும் அலிகுலி கூறவில்லையானலும், அவளால் அந்த நிகழ்ச்சியை மனதில் பட்டப் போல் நினைத்துப் பார்க்க முடிந்தது. எதைப்பற்றியும் சிந்திக்காமல் அவசரப் புத்தியுடனும், உணர்ச்சிச் வசப்பட்டும் செயலாற்றும் ஸலீம், பெண்புலி பக்கத்திலேயே எங்காவது இருக்கக் கூடும் என்று தெரிந்தே புலிகுட்டியைத் தூக்கி எடுப்பதை அவளால் நினைத்துப் பார்க்க முடிந்தது. ஒரு தாய் தன் குட்டிகளை எப்பொழுதும் பாதுகாக்கும் என்பது தெரிந்தும், அதேபோல் மறுபடியும் கூட அவர் செய்யக் கூடும்.

சட்டென்று ஒரு சிறிய வலி அவள் மார்பைத் துளைப்பது போல் உணர்ந்தாள். கண்களில் கண்ணீர் பொங்கி அவள் பார்வையை மறைத்தது. பின் மெல்ல அவள் கன்னத்தில் வழிந்தது. ஒரு தாய், அந்த வார்த்தையைக் கேட்க எவ்வளவு இனிப்பாக இருக்கிறது! மற்றவர்கள் அடிக்கடிக் துருவித் துருவிக் கேட்கும் கேள்விகளையும், கொடுக்கும் அறிவுரைகளையும் பொருட்படுத்தாமல் இருப்பதே அவளுக்குப் பெரிய கஷ்டமாக தெரிந்தது ஏன்? 'இந்தப் பொடியைப் பாலில் கலந்து தினமும் இரவில் குடி. பௌர்ணமி அன்று இரவில் உபவாசம் இரு. அடக்கத்துடன், பணிந்து செயல்படு. சில சமயம் அந்த மனவலியின் தீவிரம் உடலிலும் அவள் உணர்ந்தாள். அவள் குழந்தையை ஏந்திக் கொள்ள அவள் கைகள் ஏங்கிற்று.

"ஸாஹிபா!"

தோள்களில் பட்ட ஒரு திடமான கை, மெஹ்ருன்னிஸாவை அவள் நினைவுகளிலிருந்து குலுக்கி எழுப்பியது. அவள் சுற்றிலும் பார்க்கையில், அவளடைய பணிப்பெண் ஒருத்தி அவளருகே குனிந்து நின்று கொண்டிருந்தாள். அவள் இதயம் அடித்துக்கொண்டது. என்ன நடந்து விட்டது?

"லீலா, என்ன ஆயிற்று?" பேசிக் கொண்டே அவள் எழுந்தாள். சுற்றிலுமிருந்த எல்லா ஆண்களும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தனர். மெஹ்ருன்னிஸா அந்தப் பெண்ணை இழுத்துக்கொண்டு கடையின் வெளியே வந்தாள். அவள் தேநீர் விசுப் பலகையின் மேலேயே இருந்தது.

"ஸாஹிபா, யாஸ்மின் பற்றி... அவளுக்குப் பிரசவ நேரம் வந்துவிட்டது. ஆனால், அவள் நிலைமை சரியாக இல்லை."

மெஹ்ருன்னிஸா நடுங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்தாள். அவள் இன்னும் மிகச் சிறுவள். பத்து வயதுகூட இருக்காது. ஆனால், வேலை செய்பவர்கள் அவர்களது பிறந்த அல்லது இறந்த தினங்களைப் பற்றிக் குறிப்பு எதுவும் வைத்திருப்பது இல்லையாகையால், அவளது சரியான வயது பற்றித் தெரிய வாய்ப்பில்லை. லீலா இன்னும் ஒரு குழந்தைதான்,

"நிலைமை ஏன் சரியில்லை என்கிறாய்?" மெஹ்ருன்னிஸா வினவினாள்.

லீலா தலையை ஆட்டியவாறு மெஹ்ருன்னிஸாவின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு கோட்டைப் பக்கம் போக முயற்சித்தாள். "எனக்குத் தெரியவில்லை, ஸாஹிபா. மருத்துவச்சியைத் தவிர வேறு வேலையாக இருக்கிறார். மருத்துவச்சியைக் காணவில்லை. யாஸ்மினுக்குத் திருமணம் ஆகவில்லை என்பதால் அவர்கள் வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவளுக்கு உதவி தேவை, ஸாஹிபா."

குளிர் காலத்தின் சக்திகளால் அழுக்குப் படிந்திருந்த கற்களாலான அந்தத் தெருவை வெறித்துப் பார்த்தவாறு மெஹ்ருன்னிஸா அசையாமல் அந்தத் தேநீர்க் கடை வாசலிலேயே நின்றிருந்தாள். சில ரூபாய்களுக்கு வாங்கிய அவர்களது ஒரு அடிமைப் பெண் யாஸ்மின். அவளும் வயதில் சிறியவள். மிக அழகானவள். அவள் அழகு அலிகுலியைக் கவர்ந்துவிட்டது. முடிந்த மட்டும் இந்த நிலைமையைப் பொருட்படுத்தாமல் மெஹ்ருன்னிஸா இருந்தாள் — யாஸ்மினின் வயிறு பெரிதாக ஆகத்தொடங்கும் வரை. அதே சமயத்தில் தன் கணவனின் குழந்தை மற்றொரு பெண் வயிற்றில் வளர்வதைப் பார்த்துக்கொண்டு ஏதும் செய்ய

இயலாமல், அவள் லாகூரிலியே தனித்து இருக்கவி பட்டாள்.

"வாருங்கள், ஸாஹிபா!"

தன் கண்ணீருடன் கூடிய முகத்தை, அவள் கைமே பதித்து, மண்டியிட்டு, லீலா மெஹ்ருன்னிஸாவின் மு உட்கார்ந்திருந்தாள். அவள் வீட்டிலிருக்கும் மற்றொ அடிமைப் பெண்ணைப் பற்றி இந்தக் குழந்தைக்கு ஏ இவ்வளவு கவலை? அவர்கள் சகோதரிகள் அல்ல, உறவின கள் கூட அல்ல. கடந்த ஒரு வருடமாகத்தான் இருவருக்கு அறிமுகம். ஆனாலும், அவள் உயிருக்காக இவள் மன்றா கிறாள். மெஹ்ருன்னிஸா சற்றுத் திரும்பிக் கடைத்தெரு வெறித்தாள். பின் முகத்தில் எந்த உணர்ச்சியையு காட்டாமல் தன் முன் மண்டியிட்டிருக்கும் குழந்தையை பார்த்தாள்.

"வா" அவள் கையை நீட்டி அழைத்தாள். மெஹ்ருன்னி ஸாவின் முகத்திரை அவளைச் சுற்றி நீலமேகம் போ படர்ந்துவர, அவர்கள் இருவரும் கையைப் பிடித்தவா தெருவில் ஓடிச் செல்வதைக் கடையில் அமர்ந்திருந்த ஆ கள் தங்கள் கையிலிருந்த தேநீர் கோப்பையின் மேல்புறமா எட்டிப் பார்த்தனர். கடைக்கருகே பீடி புகைத்தவாறு இருந்த அவளது இரண்டு பணியாட்களும் அதைத் தெரு ஓரத்தில் வீசி விட்டு, அவர்கள் எஜமானியைத் தொடர்ந்து ஓடினர்.

அவர்கள் வீட்டை அடைந்த பொழுது, அவளது மற்ற வேலைக்காரர்கள் அனைவரும் முகத்தில் விரோதம் வெளி படையாகத் தெரிய, முன் முற்றத்தில் கூடியிருப்பதை மெஹ் ருன்னிஸா பார்த்தாள். அவர்களில் சில பெண்கள் தாயான வர்கள், குழந்தைப் பிறப்பைப் பற்றியோ, பிறக்கும் சமயத்தில் செய்ய வேண்டியவை பற்றியோ, இவளைவிட அவர்களுக்கு அதிகம் தெரிந்திருக்கும். ஏன் அவர்கள் யாஸ்மினுக்கு உதவ முன்வரவில்லை? இது தவறான அபிப்பிராயத்தினாலும், மந்தபுத்தியாலும் கொஞ்சம் அற்பப் புத்தியாலும்தான் யாஸ்மின் பாதுகாப்பவர் எவருமில்லாத ஒரு அனாதை கல்யாணமாகாமலே குழந்தையைச் சுமக்கிறாள். கடந்த ஆறு

தங்களாகவே அவர்கள் அவளை ஒதுக்கி வைத்திருந்தனர். சிலர் சில மாதங்களுக்கு மேல் கரு தங்காதபோது, தன் வரின் குழந்தையை இந்தப் பெண் சுமப்பதினால் டான அவள் உள்மனதின் வேதனை, அவளைக் கோப , மெஹ்ருன்னிஸாவும் அவர்கள் இவ்வாறு மினைப் புறக்கணிப்பதற்கு இடம் கொடுத்தாள்.

அவள் தன் முகத்திரையைக் கழட்டியவாறு கூடியிருந்த பெண்களைக் கோபத்துடன் வெறித்தாள். துப்பாக்கிக் டுகள் போல் அவளிடமிருந்து ஆணைகள் பறந்து ன. "வெந்நீர் எடுத்து வாருங்கள். ஒரு வைத்தியரையோ, த்துவச்சியையோ போய் அழைத்து வாருங்கள். அவர் டன் விவாதம் வேண்டாம். அவர்களை உடனே வரச் ல்லி நான் உத்திரவிட்டதாகச் சொல்லுங்கள். சில சுத்த துணிகள், போர்வைகள், துவாலைகள் எல்லாம் சீக்கிரம் வேண்டும். ஒரு வேளை தாய்பாலைக் குழந்தை குடிக்க யாமல் போனால் அதற்கு கொடுப்பதற்காக ஆட்டுப் லைக் கறந்து எடுத்து வாருங்கள். உடனே... சீக்கிரம்."

"இவை எல்லாம் இனிமேல் அவசியமில்லை, ஸாஹிபா" யதான பணிப்பெண் கூறத்தொடங்கினாள். "அவள் நேரமாகக் கதறிக் கொண்டிருக்கிறாள். குழந்தை நிச்சய உள்ளே இறந்து விட்டிருக்கும். மேலும், அவளும் அதிக ம் தாங்கமாட்டாள். நேரத்தை வீணக்குவதில் த்தமில்லை."

"எனக்கு ஏன் முன்னமேயே தெரிவிக்கவில்லை?"

அவர்கள் தோளை குலுக்கி விட்டு, மெஹ்ருன்னிஸாவின் களிலிருந்து வரும் நீல நெருப்பைச் சந்திக்க விருப்ப ல்லாமல், சிலர் சுவற்றை வெறித்துப் பார்த்தனர். சிலர் கத்துடன் கூடிய ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தனர். தரையை வெறித்தனர். அதே சமயத்தில் வேலையாட் தங்கும் விடுதியிலிருந்து யாஸ்மின் அலறும் ஒலி ட்டது. மெஹ்ருன்னிஸா நடுங்கினாள். அது ஒரு மான, உண்மையில்லாத, உயிருக்குப் போராடும் மிருகத் மான ஓலம்! அந்த ஒலி வீடு முழுவதும் எதிரொலித்துச் றி வந்து மெதுவாக அடங்கியது.

வேலைக்காரர்களை விரல் சொடுக்கி அழைத்தவாறு தன் பாவாடையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, மெஹ்ருன்னிஸா அவள் வீட்டின் பின்புறத்திலிருந்த பணியாட்களின் விடுதிக்கு ஓடினாள். யாஸ்மினுக்கு முதலில் வலி எடுத்தவுடன், அவளைக் கோழிகள் இருக்கும் கொட்டகையில் படுக்கவைக்கப்பட்டிருந்தது. மெஹ்ருன்னிஸா அந்தக் கொட்டகையின் உள்ளே நுழைகையிலேயே புதிய இரத்தத்தின் துர்வாசம் அவளைத் தாக்க, அவள் மூச்சு முட்டுவது போல் உணர்ந்தாள். அந்தப் பெண் படுத்திருந்த வைக்கோலுக்கு அடியில் இரத்தம் பரவி, மண் தரையில் இறங்கிக் கொண்டிருந்தது. பக்கத்தில் கோழிகள் சத்தமிட்டவாறு ஆவலுடன் கொத்திக் கொண்டிருந்தன. அடி வயிற்றிலிருந்து குமட்டிக் கொண்டு வர, மெஹ்ருன்னிஸா வெளியே ஓடி, அப்பொழுதுதான் அருந்திய தேநீரை வாந்தி எடுத்தாள். மேல் மூச்சு வாங்கத் தன் வாயைத் துடைத்து விட்டுக் கொண்டு, முகத்தைத் திரையினால் மூடிக்கொண்டு, மீண்டும் அவள் உள்ளே நுழைந்தாள்.

யாஸ்மின் அசையாமல் வைக்கோலின் மேல் படுத்திருந்தாள். அவள் இடுப்பிற்குக் கீழ் மூடாமல் திறந்திருக்க, அவள் வயிறு ஓலைக் கூரையை நோக்கி உயர்ந்திருந்தது. அவள் கைகள் பக்கத்தில் அடித்துக் கொண்டிருந்தன. தலையைத் திருப்பிப் பயத்தினால் விழிகள் பெரிதாக, அவள் மெஹ்ருன்னிஸாவைப் பார்த்தாள். வியர்வை வழிந்து அவள் தலை மயிரை நனைத்து, தலையணை அருகில் கருகிய வட்டமிட்டிருந்தது.

மெஹ்ருன்னிஸா அவள் நெற்றியில் கையை வைத்தாள். "எல்லாம் சரியாக ஆகிவிடும், யாஸ்மின்"

நிலைமையைப் புரிந்து கொண்ட அதிர்ச்சி, அந்தப் பெண்ணின் கண்களில் தெரிந்தது. "மன்னியுங்கள்..."

மெஹ்ருன்னிஸா தலையை அசைத்தாள். எதற்காக? அவளுக்கு வேறு வழியில்லை. அவர்கள் எல்லோருமே — இந்த அடிமைப்பெண் பணிப்பெண்கள், மெஹ்ருன்னிஸா

அவள் கணவனின் சொத்து. அவனிடம் இவளால் மறுக்க முடியும்?

"லீலா" தன்னைத் தொடர்ந்து வந்து கொட்டகையின் வாசலில் நின்று கொண்டிருக்கும், அந்தச் சிறு பெண்ணை நோக்கினாள். "கோழிகளை வெளியே எடுத்து விட்டு விட்டு, இந்த இடத்தை சுத்தம் செய். ஜன்னல் கதவுகளைத் திறந்து விடு. கொஞ்சம் காற்று வரட்டும்."

அந்தச் சமயத்தில், யாஸ்மினுக்கு மறுபடியும் வலி வர, அவள் தீனக்குரல் கொட்டகையை நிரப்பியது. அவள் வயிறு இறுகியது, துடித்தது, உள்ளே இருக்கும் குழந்தை வெளியே வரக் கஷ்டப்பட்டு முயற்சிக்க... அவள் உடல் அதை வெளித் தள்ளத் துடிக்க... இரண்டுமே வெற்றி பெறவில்லை. கோழிகளுக்காக வைத்திருந்த குளிர்ந்த நீரில் மெஹ்ருன்னிஸா தன் கைகளை நன்கு சுத்தம் செய்து கொண்டு, யாஸ்மினின் விரித்த கால்களுக்கு முன்னால் மண்டியிட்டு உட்கார்ந்தாள். ஏதோ சரியாக இல்லை. ஏன் குழந்தை வெளியே வரவில்லை? அது இறந்து விட்டிருந்தாலும் அதை வெளியே எடுக்க வேண்டும். இல்லாவிடில் யாஸ்மின் இறந்து விடுவாள். அவள் வீட்டிலும், பேரரசின் அந்தப்புரத்திலும் மெஹ்ருன்னிஸா நிறையக் குழந்தைப் பிறப்பைப் பார்த்திருப்பதால், என்ன என்ன நடக்கிறது என்று அவளுக்குத் தெரியும். மருத்துவச்சியர்களும் மருத்துவச்சிகளும் எவ்வளவு சிரமப்பட்டுக் குழந்தையின் உயிரையும் தாயாரின் உயிரையும் காப்பாற்றுகிறார்கள் என்பதையும் அவள் பார்த்திருக்கிறாள். ஒரு மருத்துவச்சியின் விரல்களால், யாஸ்மினின் தொடைகளுக்கு இடையே சோதித்துக் பார்த்தபடி அவள் முகத்தில் மறுபடியும் வலி வருவதற்கான அறிகுறி தெரிகிறதா என்று பார்த்தாள். ஆனால், யாஸ்மின் எவ்வித வலியையும் உணரும் நிலைக்கு மேல் போய் விட்டாள்.

ஒரு உருண்டையான பகுதியை அவள் விரல்கள்தொட, அவள் சட்டென்று விரல்களை வெளியில் எடுத்தாள். அவள் விரல்கள் முழுவதும் இரத்தம் பரவியிருந்தது. குழந்தை ஏற்கெனவே பாதி வெளியில் வந்துவிட்டது. ஆனால்,

கொட்டகையில் இருந்த பாதி இருளில் அவளால் அதை பார்க்க முடியவில்லை. என்ன பார்ப்போமோ என்ற பயத்துடன் மறுபடியும் கையை விட்டு தடவினாள். அவள் விரல்கள் மழமழப்பான பின் பகுதியைத் தடவிற்று. குனித்த வாறே மெஹ்ருன்னிஸா கண்களை மூடிக்கொண்டாள். கொட்டகையில் இருந்த குளிரையும் மீறி அவள் நெற்றியில் வியர்த்தது. குழந்தையின் பின் பகுதி முதலில் வந்து கொண்டிருக்கிறது. அவள் என்ன செய்ய முடியும்? குழந்தையை திருப்புவதற்கு ஏதாவது வழி உண்டா? 'அல்லா, எங்களுக்கு அருள் புரியுங்கள்'. இன்னொரு வலி வர, யாஸ்மின் கத்தினாள்.

குழந்தை வெளியே வர முயற்சித்தவாறு அவள் கைகளில் அழுத்துவதை மெஹ்ருன்னிஸா உணர்ந்தாள்.

"லீலா!" கோழிகளை விரட்டி விட்டு, விரிந்த கண்களுடன் பயந்தவாறு நின்று கொண்டிருக்கும் பெண்ணை அழைத்தாள். "போ யாஸ்மினைத் தூக்கிப் பிடித்துக்கொள். அவளை உட்கார்த்தி வை. தயங்காதே, நான் சொல்வதைச் செய்."

பிறகு மயங்கி விழும் நிலையில் அவளைப் பார்த்தவாறு யாஸ்மின் உட்கார, அவளிடம் மெஹ்ருன்னிஸா கூறினாள். "அடுத்த முறை வலி எடுக்கும் பொழுது நீ நன்றாக முக்கித் தள்ள வேண்டும். உன்னால் முடிந்தவரை கடுமையாக முக்க வேண்டும். தெரிகிறதா?"

யாஸ்மின் உணர்ச்சி ஏதுமின்றி அவளை வெறித்துப் பார்த்தவாறு இருக்க, லீலா கூறினாள். " நான் அவளுக்கு உதவுகிறேன், ஸாஹிபா."

மெஹ்ருன்னிஸா குழந்தை பக்கம் திரும்பினாள். யாஸ்மின் உடல் மறுபடியும் நடுங்க, அவள் வாயைத் திறந்து ஓல மிட தொடங்குகையில், லீலா குனிந்து அவசரமாகத் "தள்ளு, யாஸ்மின், தள்ளு" என்றாள்.

அந்தப் பெண் முழு பலத்தையும் உபயோகித்துத் தள்ள, மெஹ்ருன்னிஸா உள்ளே விரல்களை விட்டு வழுக்கும் ஒரு

தலைப் பிடித்து மெதுவாக வெளியே இழுத்தாள். மற்றொரு தலை அருகே மடிந்திருந்தது. யாஸ்மின் உடலுக்குள் விரல்களை விட்டு மெஹ்ருன்னிஸா அந்தக் காலையும் பிடித்து மெதுவாக இழுக்க, அதுவும் வெளியில் வந்தது. அது சுலபமாகவே நடந்து விட்டது — மெஹ்ருன்னிஸா நினைத்துக் கொண்டாள். ஆனால், இப்பொழுது தலை. பெரியதும் கனமானதுமான குழந்தையின் பாகம். அதையும் வெளியே எடுக்க வேண்டும். ஒரு பணிப்பெண் ஒரு தாமிரப் பாத்திரத்தில் சூடான நீரும் கொஞ்சம் துணியும் எடுத்து வந்தாள். கொஞ்சம் துண்டுகளை வெந்நீரில் நனைத்துப் பிழிந்து, குழந்தை சிறிய உடலைத்துடைத்தாள். அதன் உடல் குளிர்ச்சியாக நீலம் பாய்ந்திருந்தது. தொப்புள் கொடி சுருங்கியிருந்தது. மெஹ்ருன்னிஸா குழந்தையின் உடலை வெதுவெதுப்பான துவாலையால் மூடி வைத்துக்கொண்டு, குழந்தை நல்லபடியாக வெளியே வர பிரார்த்தனை செய்தபடி, யாஸ்மினுக்கு அடுத்தவலி வருவதற்காக காத்திருந்தாள். அவள் கஷ்டமான நிலைமைகளைத் தூரத்திலிருந்துதான் பார்த்திருந்தாளேயானாலும், அவளை அறியாமலே என்னென்ன செய்யவேண்டும் என்பது விளங்கியது. அப்படிச் செய்வதற்கு அவளுக்கு எங்கிருந்து அதற்கான வலிமையும் திறமையும் வந்ததென்று அவளுக்கே தெரியவில்லை.

மெஹ்ருன்னிஸாவின் களைத்துப் போன கரங்களில் குழந்தை வந்து சேர, மேலும் முப்பது நிமிடங்கள் ஆயிற்று. நாடித்துடிப்புக் குறைந்து, முகத்தில் இரத்தம் சுண்டி, முற்றிலும் சோர்ந்து போனவளாக யாஸ்மின் அந்த வைக்கோல் படுக்கையில் சாய்ந்தாள். அதிசயமாக அவளது இரத்தப் போக்கு நன்கு குறைந்து விட்டது.

தன் கையில் இரத்தத்தில் தோய்ந்து, பெரிய குரலில் அழும் குழந்தையை மெஹ்ருன்னிஸா குனிந்து பார்த்தாள். அது ஒரு ஆண் குழந்தை. அவள் கணவனின் வாரிசு...! இன்னொரு பெண் மூலம்! ஆனால், அவன் நிச்சயம் புறக்கணிக்க மாட்டாத ஒரு குழந்தை.

இதற்குள் மற்றப் பணிப்பெண்கள் கொட்டகைக்கு வெளியில் கூடி ஆவலுடன் உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு பணியாள் ஒரு மருத்துவச்சியை அழைத்து வந்திருந்தான். மெஹ்ருன்னிஸா யாஸ்மின் பக்கம் தலையசைத்தாள். "அவளையும் குழந்தையையும் சுத்தம் செய். உனக்கு சன்மானம் கிடைக்கும்."

பிறகு, மெஹ்ருன்னிஸா மெதுவாக நகர்ந்து கொட்டகையின் ஒரு மூலைக்குப் போய்ச் சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். மருத்துவச்சி யாஸ்மினை நன்கு துடைத்துச் சுத்தம் செய்து, அவளது கருப்பையை நன்கு அமுக்கிவிட்டுப் பழைய நிலைக்கு வரச்செய்து, பின் அவள் உடம்பில் புண் ஆறுவதற்காகப் 'பற்று'ப் போடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். குழந்தையும் நன்கு சுத்தம் செய்யப்பட்டு மெஹ்ருன்னிஸாவிடம் கொடுக்கப்பட்டது. அவள் தன் கையில் குழந்தையை ஏந்தியபடி, அது நன்கு உறங்குவதைப் பார்த்த வாறு இருந்தாள். அவள் கைகளில் இன்னும் காய்ந்த இரத்தம், அவன் இரத்தம், அவன் தாயாரின் இரத்தம் இருந்தது. அவள் அவன் தலைமயிரில் கோடிட்டவாறு அவன் சிறிய மூக்கைத் தட்டிக் கொடுத்து, அவனது மூடிய சிறிய கையைத் தன் உதட்டில் வைத்துக் கொண்டாள். அவள் அவ்வாறிருக்கையில் தாங்கமுடியாத மனவலி அவளைத் தாக்கியது. அவளுக்கே என்று ஒரு குழந்தை எப்பொழுது கிடைக்கும்?

மருத்துவச்சி சிறிது கோழி மற்றும் மாட்டிறச்சிச் சாறை யாஸ்மினுக்கு குடிக்க கொடுத்து விட்டுத் தன் சன்மானத்தைப் பெற்றுக்கொண்டு சென்றாள். இன்னும் குழந்தையை ஏந்தியவாறு மெஹ்ருன்னிஸா அப்படியே அமர்ந்திருந்தாள். யாஸ்மின் உயிர் பிழைப்பாளா?

குழந்தையின் சிறிய தலையருகே தன் தலையைச் சாய்த்து அவள் கண்களை மூடிக்கொண்டாள். கொட்டகையிலுள்ள அவ்வளவு அசுத்தத்திற்கும் இரத்தத்திற்கும் நடுவில், புதிதாக ஜனித்த அந்த உயிரின் மணம் அவளை சூழ்ந்தது. அந்தச் சிறிய குழந்தை, தன் தலைவிதியைப் பற்றி அறியாதவாறு திருப்தியுடன் அவள் முழங்கையின் மடிப்பில் அமைதியாக

உறங்கிக்கொண்டிருந்தது. அவளுக்குக் குழந்தையே பிறக்காவிட்டால் என்ன ஆகும்? அந்த எண்ணத்தைத் தொடர்ந்து மற்றொரு திட்டம் மெஹ்ருன்னிஸாவிற்குத் தோன்றியது. சக்ரவர்த்தினி ருக்கையா ஒரு அரசகுமாரியிடமிருந்து அவள் குழந்தையைத் தனதாக்கிக் கொள்ள முடியுமென்றால், அவள் ஏன் ஒரு அனாதைப் பணிப் பெண்ணிடமிருந்து அப்படியே செய்யக்கூடாது? யாஸ்மினுக்கு பணம் கொடுத்து, வெகு தூரத்தில் ஒரு கிராமத்திற்கு அவளை மெஹ்ருன்னிஸாவால் அனுப்பி விடமுடியும். யாஸ்மின் ஒருபொழுதும் வெளியில் எதுவும் சொல்லமாட்டாள். இந்தக் குழந்தையை இந்த உலகிற்குக் கொண்டு வந்தவளே மெஹ்ருன்னிஸாதான். அவன் இவளுக்குத்தான் சொந்தமாக இருக்கவேண்டும்.

இளவரசன் ஸலீம் கடிவாளத்தை இழுத்துக் குதிரையை நிறுத்தி விட்டுத் திரும்பிக் கையை உயர்த்தி, எல்லோரையும் நிச்சப்தமாக இருக்கப்பணித்தார். அவர் பின்னால் ஆக்ராவின் மாட மாளிகைகளின் உச்சிகளிலும் ஸ்தூபிகளின் மேலும் சூரியன் ஒளிவிட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

"இன்று இரவு இளைப்பாருவோம்." ஸலீம் குரலை உயர்த்திக் கூறினார். "நாளைக் கோட்டையை சூழ்ந்து கொள்வோம். இந்த இடத்தில் முகாமிடுங்கள்."

மெலிந்த பழுப்பு நிறமான அவரது முகம் கவலையினால் இறுக்கமாகத் தெரிய, மஹபத்கான் அருகில் வந்தான். "நாம் உடனே கோட்டையை நோக்கிச் செல்ல வேண்டும். மாட்சிமை பொருந்தியவரே! தாமதம் செய்யக்கூடாது."

"சிப்பாய்களைப் பார்" ஸலீம் சுட்டிக்காட்டினார். "அவர்கள் போருக்குச் செல்லும் நிலையில் இல்லை."

நீண்ட தூரக் கடினமான பயணத்தினால் முகங்கள் புழுதியால் கவரப்பட்டிருக்கக் கண்களுக்கு அடியில் கருவட்டங்கள் தெரிய இராணுவ வீரர்கள் இருப்பதை இருவரும் திரும்பிப் பார்த்தனர். குதிரைகள் வாயிலிருந்து நுரை தள்ளி வர, களைத்துக் காணப்பட்டன. கடந்த சில வாரங்களில் ஒருவருமே சரியாகத் தூங்கவில்லை. அவர்கள் உதய்பூரி

லிருந்து நள்ளிரவில் கிளம்பியிருந்தனர். ஸலீம் உடல் நலம் குன்றி இருக்கிறார் என்று இராணுவப் படைத்தலைவர் களுக்குத் தெரிவிக்கும்படி அவரது பணியாட்களுக்குக் கூறப் பட்டிருந்தாலும், அந்தச் செய்தி சில நாட்களுக்குத்தான் செல்லுபடியாகும். கூடிய சீக்கிரத்தில், படைத்தளபதிகள் இளவரசரை நேரில் சந்திக்க விருப்பம் தெரிவிக்கையில் எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடும். அவர்கள் இப்படிப் பயணித்துக் கொண்டிருக்கையில், தான் இப்படி உதய்பூரி லிருந்து ஆக்ராவிற்குச் சென்று கொண்டிருக்கும் செய்தி அவர் காரியம் முடியும் வரையில் சக்ரவர்த்திக்குத் தெரியா மல் இருக்கவேண்டும் என்று ஸலீம் பிரார்த்தித்துக் கொண்டி ருந்தார். அப்படிச் சக்ரவர்த்திக்குத் தெரிய வந்தால், அவர் களது இந்தப் பயணம் — சூரியனின் கடுமையான உஷ்ணம் உடலைத் தகிக்க, அவர்கள் உணவு அருந்தவும், குதிரை களுக்குச் சிறிது ஓய்வு கொடுத்து, உணவு கொடுக்கவும், வெகு சில மணிநேரங்களே அவர்கள் தூங்கி ஓய்வு எடுக்க வும் என்று இருந்த இந்த கடுமையான பயணம் — ஒன்றுக் கும் உதவாமல் போய்விடும்.

இன்றிரவு இங்கு தங்கி ஓய்வெடுத்தால் நாம் விரும்பிய படித் திடீரென்று ஆக்ரா கோட்டையை வளைத்து அதிர்ச்சி கொடுக்க நினைத்தது நடக்காமல் போய்விடும், மாட்சிமை பொருந்தியவரே! ஆக்ராவின் கவர்னர் குலிச்கான் (Qulich Khan) விஷயம் அறிந்து நம் முற்றுகையை எதிர்க்கத் தயாராகி விடுவார். நாம் தொடர்ந்து செல்லவேண்டும்." மஹபத்கான் உறுதியாகக் கூறினான்.

"நாம் படைகளுடன் கோட்டையை நெருங்கினால், குலிச் கானுக்கு நிச்சியம் சந்தேகம் உண்டாகும்." ஸலீம் தன் தலைமுடியைக் கைகளால் துளாவியவாறு கூறினார். அவர் தலைமுடி முற்றிலும் புழுதி படிந்திருந்தது. ஒரு வாரமாக அவர் குளிக்கவில்லை. அதற்கு நேரம் இல்லை. "நாம் எல்லோரும் இந்தப் பயணத்தினால் மிகவும் களைத்துப் போயிருக்கிறோம். குலிச்கான் நம்மை எதிர்த்தால், நம்மால் எப்படி திருப்பி தாக்க முடியும்?"

"அப்படியில்லை, மாட்சிமை பொருந்தியவரே!" மஹபத் கூறினான். "சாம்ராஜ்ஜியத்தின் இளவரசர் தன் படைவீரர் களுடன் ஆக்ரா கோட்டைக்கு வருவது சாதாரணமாக நடக்கக் கூடிய விஷயம் தான். குலிச்கான் ஒன்றும் சந்தேகப் படமாட்டார்."

என்ன முடிவு எடுப்பது என்று தடுமாறியவாறு படை வீரர்களையும் மஹபத்கானையும், ஸலீம் மாறிமாறிப் பார்த்தார். முடிவில் "நாம் தொடர்ந்து பயணம் செய்யலாம்." என உத்திரவிட்டார். படைவீரர்கள் மிகுந்த களைப்புடன் தங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, சோர்ந்திருந்த அவர்கள் குதிரைகள் மீது ஏறித்தொடர்ந்தனர்.

அவர்கள் ஆக்ரா கோட்டையை நெருங்குகையில் சூரியன் மேற்குத் திசையில் இறங்கிக் கொண்டிருந்தான். சிகப்புக் கற்களால் கட்டப்பட்டிருந்த ஆக்ரா கோட்டை மாலைச் சூரிய ஒளியில் தகதகத்தது. எங்கும் நிசப்தம் நிலவி யிருந்தது. புதியதாக ஏதும் நடப்பதற்கான அறிகுறி இல்லை. ஸலீம் தோள்களைத் தளர்த்தித் தன் குதிரை மேல் சிறிது இளைப்பாறினார். மஹபத் கூறியது சரிதான். குலிச் அவர்கள் வருகையைப் பற்றி கேள்விப்படவில்லை. அவர் நேராக கோட்டைக்குள் புகுந்து, பொக்கிஷச்சாலையைக் கைப்பற்ற வேண்டியது தான். இதைவிடச் சுலபமான காரியம் வேறொன்றுமில்லை.

கோட்டையின் மேற்குத் திசையில் இருக்கும் 'டெல்லி நுழைவாயில்' என்ற வாயிற்பகுதியை அவர்கள் நெருங்கினர். ஸலீமின் களைப்பு மறைந்து உற்சாகம் பிறந்தது. இந்த திமிடத்திலிருந்து பின்வாங்க முடியாதென்று அவருக்குத் தெரியும். ஒன்று அவர் பொக்கிஷச் சாலையைக் கைபற்று வார் அல்லது சாம்ராஜ்ஜியத்தை விட்டே ஓடி ஒளிய வேண்டி வரும். இவர்களது இந்தப் பயணம் மிகவும் இரகசியமாகச் செய்யப்பட்டிருந்தாலும், சக்ரவர்த்தி அறியாத இரகசியம் ஒன்றும் இல்லை என்று ஸலீமிற்குத் தெரியும். அக்பர் மிகவும் பலம் பொருந்திய சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கியிருந்தார். அதன் முக்கியமான பகுதி அவரது

ஒற்றர் படை. அக்பர் குலிச் கானுக்குத் தெரியப்படுத்தி உஷார் படுத்துவதற்கு முன், ஆக்ராவை அடைவதில் தான் அவர்கள் வெற்றி அடைய நம்பிக்கை கொடுக்கும்.

இப்பொழுது அவரது விருப்பம் நிறைவேறியுள்ளது போல் தோன்றுகிறது. எல்லாம் வழக்கம் போலும் நிசப்தமாகவும் தெரிந்தது. நுழைவாயிலின் பெரிய மரக்கதவுகள் மூடப்பட்டுப் பாலங்கள் உயர்த்தப்பட்டிருப்பது வழக்கமாக நடப்பது தான். அவர்கள் அகழியை நெருங்குகையில், அவர் கையை உயர்த்திச் சைகை செய்து கடிவாளத்தை இழுத்துத் தன் குதிரையை நிறுத்தினார்.

ஸலீம் மஹபத் பக்கம் திரும்பித் தலையசைத்தார். "கதவுகளைத் திறவுங்கள். மதிப்பிற்குரிய இளவரசர் ஸலீம் வந்திருக்கிறார்" மஹபத் கோட்டை காவலர்களிடம் உரக்கக் கூறினான்.

கோட்டை கதவுகள் மௌனமாக திறக்கப்பட்டன. நன்கு எண்ணெய் இடப்பட்டிருந்த சக்கரங்களில் பாலம் இறக்கப்பட்டது. ஸலீம் ஆவலுடன் தன் குதிரையைத் தூண்டினார்.

அதே சமயம் ஒரு சிறிய பரிவாரத்துடன் கோட்டையின் தலைமை அதிகாரி வெளியே வந்தான்.

"தங்கள் வரவு நல்வரவாகுக, மாட்சிமை பொருந்தியவரே!" குலிச்கான் இளவரசரை வணங்கினான். "இந்த நகரத்தின் சார்பாக இந்தப் பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்." வெள்ளித் தட்டுகளில் பட்டுத்துணிகளும், ஸாடின் துணிகளும் வைத்து தன் பின்னால் நின்று கொண்டிருக்கும் பணியாட்கள் பக்கம் அவன் சைகை செய்தான். "உங்கள் வரவு எங்களை மிகவும் கௌரவித்ததாகும்..."

திடீரென்று எழுந்த ஒரு சப்தம் ஸலீம் கவனத்தை திருப்பியது. அவர் நிமிர்ந்து பார்த்தார். கோட்டையின் பாதுகாப்பு அரண்களின் மேல் பீரங்கிகள் சத்தமில்லாமல் தோன்றின — மதிற் சுவர்கள் மேல் வரிசையாக அவற்றின் கருத்த குரூரமான குழல்கள் ஸலீமின் படைகளை நோக்கிய

படி! சில நிமிடங்களுக்கு முன் சாந்தமாக இருந்த கோட்டை யின் அரண்கள் இப்பொழுது ஆயுதம் தாங்கிய இராணுவ வீரர்களால் நிறைந்தது. குலிச்கானின் எண்ணம் தெளிவாகப் புரிந்தது.

"மாட்சிமை பொருந்தியவரே, நாம் சுலபமாகக் கோட்டையைக் கைபற்றி விடலாம். இராணுவ வீரர்கள் அதிகமில்லை" மஹபத்கான் தாழ்ந்த குரலில் கூறினான்.

ஸலீம் தலையசைத்து மறுத்தார். பேரரசின் படைகளுடன் மோதுவதற்கான நேரம் இதுவல்ல. அவருடைய வீரர்கள் குதிரைகள் மீது நிமிர்ந்து கூட உட்கார முடியாத படிக் களைத்திருக்கிறார்கள். மாறாக குலிசின் வீரர்கள் நன்கு ஓய்வு எடுத்தவர்களாகச் சண்டைக்குத் தயாராக இருக்கிறார்கள். மஹபத் கானின் வேண்டுகோளை ஆதரித்துப் பேசியவாறு கோக்காவும் அப்துல்லாவும் முன் வந்தனர். குலிச்கான் தான் சொல்லிக் கொண்டிருப்பதை முடிக்கும் முன்வாயில் அவனது கடைசி வார்த்தைகள் ஸலீமை நடுக்குறச் செய்தன.

"நீங்கள் சற்றுமுன் என்ன கூறினீர்கள்?" ஸலீம் வினவினார்.

"மேன்மை பொருந்திய பெரிய சக்ரவர்த்தினி மரியம் மகானி (Maryam Makani) உங்களை வரவேற்க விருப்பப்படுகிறார், மாட்சிமை பொருந்தியவரே!" குலிச்கான் மறுபடியும் கூறினார்.

அவருடைய பாட்டி! ஸலீமின் முகம் சிவந்தது. அவர் தந்தையை எதிர்க்கத் துணிந்திருக்கும் இந்த நிலையில் அவர் பாட்டியைச் சந்திக்க முடியாது. திடீரென்று அவர் ஒரு குழந்தை போல் உணர்ந்தார். அவர் ஏதாவது விஷமம் செய்தால், மரியம் மகானி அதிகாரத் தொனியுடன் அவரைக் கடிந்து கொள்ளும் காட்சி நினைவிற்கு வந்தது. அந்த நினைவே அவரை ஒரு முடிவிற்கு வரச் செய்தது. அவரது பாட்டி அவரை பார்க்க விரும்பினால், அவள் தன் அடக்கி ஆளும் பார்வையால் ஒரு முப்பத்தி ஒன்று வயதான ஆண்

மகனைக் குழந்தையாக உணரச் செய்யும் முன், அவர் திரும்பிப் போய் விடுவதே நல்லது. ஸலீம் அவசரமாக யோசித்தார். முடிந்த வரையில் நல்ல மரியாதையுடன் இந்த நிலமையிலிருந்து விடுபட்டுச் செல்லவேண்டும்.

"சாம்ராஜ்ஜியத்தின் பொக்கிஷச்சாலையை நீங்கள் நன்கு கண்காணித்து வருகிறீர்களா என்று கண்டறிய நான் இப்பொழுதுதான் ஆக்ரா வந்தடைந்திருக்கிறேன், குலிச்கான்."

"மேன்மை பொருந்திய இளவரசின் அக்கறை புரிந்து கொள்ளக் கூடியதுதான்."

அவன் குரலில் ஏளனம் தொனிக்கிறதா? ஸலீம் அந்த எண்ணத்தை உதறிவிட்டுத் தொடர்ந்தார். "ஆக்ராவை உன் வசத்தில் ஒப்புவிக்கிறேன். நீங்கள் அதைப் பொறுப்பாகப் பராமரிப்பீர்கள் என்று நம்புகிறேன். என் பாட்டியிடம் அவர்களைத் தற்சமயம் நான் சந்திக்க இயலாமைக்கு வருந்துகிறேன் என்று தெரிவியுங்கள்."

குலிச்கான் வணங்கினார். "நீங்கள் என்னை முற்றிலும் நம்பலாம், மாட்சிமை பொருந்தியவரே! அவசியமாயின் என் உயிரைக் கொடுத்தும்கூடச் சக்ரவர்த்திக்குச் சேவை செய்வேன்."

"நல்லது, நல்லது." ஸலீம் தன் வீரர்கள் பக்கம் திரும்பினார். "நாம் நம் பயணத்தை தொடரலாம்."

படைவீரர்கள் பின் வாங்கினர். திரும்பிச் செல்கையில் ஸலீம் கோட்டையைத் திரும்பிப் பார்த்தார். அவரது கனவுகளை நனவாக்கக் கூடிய, அளவிட முடியாத செல்வம் நிறைந்த சாம்ராஜ்ஜியத்தின் பொக்கிஷச்சாலை, அதன் சுவர்களுக்குள்ளே உள்ளது. கைகளை மார்பில் கட்டியவாறு குலிச்கான் அதன் கதவுகளுக்கருகே நின்றிருந்தான். அவன் மறுபடியும் இளவரசரை வணங்கினான். ஸலீம் தலையை அசைத்துவிட்டுத் திரும்பினார்.

ஏமாற்றத்துடனும் எலும்பை உருக்கும் அளவிற்கு சோர்வுடனும் ஸலீம் தன் படைவீரர்களுடன் ஆக்ராவின்

யமுனா நதிக்கரையை அடைந்தார். அவருடைய திட்டங்கள் தோல்வியுற்றன. அக்பருக்கு இது தெரியவரும். அவர் கோபத்தில் கொந்தளிப்பார். ஒரு வேளை தக்காணத்தில் இருந்து சக்ரவர்த்தி திரும்பி வந்து கொண்டு கூட இருக்கலாம்.

ஸலீம் தன் நெற்றிப் பொட்டுகளைத் தடவி விட்டுக் கொண்டார். அவர் செய்ய முயற்சிக்கும் எல்லாக் காரியங்களிலும் தோல்வியே வருவது போல், இப்பொழுதும் தோல்வி ஏற்பட்டு விட்டது. எப்படியோ ஆக்ராவின் தலைமை அதிகாரிக்கு அவர் வரப்போவது தெரிந்துவிட்டது. அவருக்குத் தெரியவந்திருக்குமானால் சக்ரவர்த்திக்கும் தெரிந்திருக்கும். தந்தையுடன் நேரடியாக மோதுவதை ஸலீம் விரும்பவில்லை. அவர் ஆக்ராவை விட்டு எங்காவது ஒரு பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல வேண்டும். யமுனா நதி வேகமாக பாய்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கையில் அவருக்கு ஒரு எண்ணம் உதித்தது. அலகாபத்திலிருக்கும் அவருக்குச் சொந்தமான இடத்திற்குச் சென்று, தான் எடுக்க வேண்டிய அடுத்தக் கட்ட நடவடிக்கை பற்றிச் சிந்திக்கலாம். தற்சமயம் அவரால் ஒன்றும் யோசித்துப் பார்க்கக் கூட முடியவில்லை. அவருக்கு ஓய்வு தேவை. யமுனா நதியைக் கடந்து அலகாபாத் செல்ல ஒரு படகு ஏற்பாடு செய்யும்படி அவர் உத்தரவிட்டார். அவர் படைவீரர்கள் தரை மார்க்கமாக அவரைத் தொடரலாம்.

இருள் சூழும் நேரத்தில் ஸலீமின் படகு யமுனா நதியில் சென்று இருளில் மறைவதை ஒரு மனிதன் யோசித்தவாறு பார்த்துக் கொண்டிருந்தான்.

அலிகுலி திரும்பி மெதுவாக நடந்தான்.

சாம்ராஜ்ஜியத்தின் இராணுவப் படைகளை ஆக்ராவில் நேருக்கு நேர் சந்தித்த பிறகுதான் சக்ரவர்த்திக்கு எதிராகத் தான் செய்யத் துணிந்த காரியத்தின் முட்டாள்தனத்தின் அளவை அவன் உணர்ந்தான். இளவரசரைத் தொடர்ந்து அலஹாபாதிற்குச் செல்ல அவனால் முடியாது. அவன் இளவரசர் ஸலீமை விட்டு விலகிச் செல்வது கோழைத் தனத்தினால் அல்ல, ஒரு ஜாக்கிரதையான நடவடிக்கைதான்.

சக்ரவர்த்திதான் எப்பொழுதும் இளவரசரை விடப் பல பொருந்தியவர். ஒரு சரியான தலைவர் பக்கம் இருப்பதுதான் சரியான காரியம். அதனால்தான் அவன் சக்ரவர்த்தியைத் தேர்ந்தெடுத்தான். அவசரப்பட்டு அஜாக்கிரதையான முடிவுகள் எடுக்கும் இளவரசருடன் தொடர்ந்து இருந்து தன் வாழ்நாளைக் கழிப்பதில் அவனுக்கு விருப்பமில்லை.

ஸலீமின் படைவீரர்கள் அலஹாபாதிற்குச் செல்ல ஏற்பாடு செய்து கொண்டிருக்கையில், அலிகுலி ஒருவருக்கும் அறியாமல் விலகி, நகரத்திற்குள் சென்று தன் மாமனார் வீட்டை அடைந்தான். ஒரு வாரம் கழித்து, மெஹ்ருன்னிஸாவை ஆக்ராவிற்கு வரும்படிப் பணித்து லாகூருக்கு ஓர் செய்தி அனுப்பினான்.

கைகளைப் பின்னால் கட்டியபடிக் கோபத்தால் முகம் சிவக்க, அக்பர் தன் அறையில் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தார். அவர் அறையின் ஒரு கோடி வரை சென்றுவிட்டுச் சட்டென்று திரும்புகையில் அவர் மேல் அங்கியின் இடுப்பிலிருந்த பட்டுக்கயிறு அவரைச் சுற்றி பறந்தது.

தன் எதிரே மௌனமாக நின்றிருந்த மனிதன் அருகில் அவர் சென்றார். "இளவரசரின் வேண்டுகோளுக்கு நாம் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை." கோபத்தில் அவர் குரல் நடுங்கியது.

க்வாஜா ஜஹன் (Khwaja Jahan) குறுகினான். "மாட்சிமை பொருந்தியவரே. இளவரசர் உண்மையிலேயே வருந்துகிறார். அவர் சமாதானமாகப் போக மிகவும் விரும்புகிறார்."

ஸலீமிடமிருந்து வந்த தூதுவனை அக்பர் முறைத்துப் பார்த்தார். "அவன் எம்மிடமிருந்து மன்னிப்பை விரும்பினால், எமது கருணையின் மீது நிபந்தனைகள் வைக்க மாட்டான். எமது மன்னிப்பைக் கோரி வருகையில் அவன் ஏன் பெரிய இராணுவப் படையுடன் வருகிறான்? தன் படைவீரர்களை அனுப்பி விட்டுச் சில பணியாட்களுடன் மாத்திரம் வர வேண்டும்..." அக்பர் சிறிது நிறுத்தி விட்டு

மீண்டும் தொடர்ந்தார். "இந்தச் செய்தியைக் எடுத்துச்செல். தன் கூடப் படை வீரர்கள் இல்லாமல் அவனை நாம் நேரிலாகச் சந்திப்போம். அவன் உடன் இருந்தவர்களுக்கு தண்டனையிலிருந்து விலக்கு அளிக்க நாம் தயாரில்லை."

"அப்படியே ஆகட்டும், மாட்சிமை பொருந்தியவரே!" க்வாஜா ஜஹன் தலைவணங்கி மெதுவாக பின்புறமாக நகரத் தொடங்கினான்.

அக்பர் மறுபடியும் பேசினார். "எமது ஆணைக்கு அடிபணிய வேண்டும் என்று இளவரசரிடம் சொல். அப்படிச் செய்ய முடியாவிட்டால், அவன் அலஹாபாதிற்குத் திரும்பிச் செல்லட்டும். எம்மைச் சந்திப்பதற்கு அவனுக்கு அனுமதி கொடுக்க மாட்டோம்."

க்வாஜா ஜஹன் மறுபடியும் வணங்கி விட்டு, அறையை விட்டு வெளியேறினான்.

அவன் சென்றபின் கதவை மூடியவுடன், அக்பர் கனத்த மனத்துடன் அமர்ந்து தன் தலைமுடியை விரல்களால் கலைத்துக் கொடுத்தார். அவருக்கு எதிராக ஸலீம் ஏன் கலகம் செய்கிறான்? ஆக்ராவில் உள்ள சாம்ராஜ்ஜியத்தின் பொக்கிஷச்சாலையைக் கைபற்ற முயற்சித்திருக்கிறான். அக்பரிடம் மாத்திரம் இவ்வளவு திறமை உள்ள ஒற்றர்கள் இல்லையெனில், அவன் தன் முயற்சியில் வெற்றி கண்டிருக்கக் கூடும். ஸலீம் அஜ்மீரிலிருந்து ஆக்ராவிற்குப் படை வீரருடன் செல்வதை அறிந்தவுடன், அக்பர் குலிச்கானிடம் எச்சரிக்கை செய்தார். தவறான காரியங்களே எப்பொழுதும் செய்யும் அவர் மகன், இப்பொழுது அலஹாபாதில் தங்கி உள்ளான். அங்கு அவனே பேரரசர் போல் நடித்துக் கொண்டு. தன் உடன் இருப்பவர்களுக்கு மான்யங்களும், தன்னிடம் விசுவாசமாக இருப்பவர்களுக்குப் பட்டங்களும் வழங்கிக் கொண்டிருப்பதாகச் செய்தி வருகிறது.

ஆஸிர் கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டுப் போர் நடந்துகொண்டிருக்கையில், சக்ரவர்த்தி தக்காணத்திலிருந்து அவசரமாகக் கிளம்பி வரவேண்டியிருந்தது. ஸலீமின்

எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றிய செய்தி வந்த சமயத்தில்தான் நல்ல வேளையாக, ஆஸீர் கோட்டை இவர்கள் வசம்வந்து வேகமாகச் செய்தி எடுத்துச் செல்லும் இரண்டு ஓடுனர்களை அக்பர் ஆக்ராவிற்கு அனுப்பி விட்டுத் தன் வேலைகளை அவசரமாக முடித்துக்கொண்டு, அபுல் பாஸலை (Abul மேற்கொண்டு முற்றுகையைக் கண்காணிக்க உத்திரவி விட்டு, உடனே தொடர்ந்து அங்கிருந்து கிளம்பினார்.

ஸலீமின் தூதுவனான க்வாஜா ஜஹனுடன் ஆறுமாத காலமாகப் பேச்சு வார்த்தை நடத்திய பிறகு, முடிவில் அக்பர் தன் மகனைச் சந்திக்க சம்மதித்தார். ஆனால் ஸலீமோ, சிறிதும் விவேகம் இல்லாமல், எதிரிகளை முற்றுகை யிடுவது போல் எழுபதாயிரம் குதிரைப்படை, காலாட் படையுடன் ஆக்ராவிற்கு வந்திருக்கிறான்.

அக்பர் எந்தவித இலக்குமில்லாமல் ஜன்னல் வெளியே வெறித்துப் பார்த்தார். இத்தனை வருடங்கள் அவர் மகனை அன்புடனும், ஆதரவுடனும் வளர்த்தபின், அவன் அவரையே எதிர்க்கத் துணிகிறான். இவை எல்லாம் எதற்காக... சாம்ராஜ்ஜியத்தின் அரியணைக்காக...!

சக்ரவர்த்தி மாளிகையில் அவருடைய அறையில் இன்னும் இருக்கையிலேயே, அவரது மகனின் மறுமொழி அவருக்கு தெரிவிக்கப்பட்டது. இளவரசர் அலஹாபாத் திரும்பிச் செல்ல முடிவெடுத்து விட்டார். தன் இராணுவப் படைகளைக் கலைக்க அவருக்கு விருப்பமில்லை.

தீவிர யோசனையுடன், இறுக்கமான மனதுடன், செய்தி கொண்டு வந்தவனை வெளியேற அக்பர் அனுமதித்தார். ஸலீம் நடத்தைக் குறித்து ஏதாவது செய்தே ஆகவேண்டும். அவனுக்கு நன்கு புத்திமதி சொல்லக் கூடியவன் யார்?

அவரது முகம் சிறிது இளகியது. நிச்சயம் அபுல் பாஸல் தான். அரசாங்கத்தில் பெரிய அதிகாரியாகப் பணியாற்று வதன் கூட, அவர் இளவரசர்களுக்கு ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். ஒருவேளை ஸலீமுடன் பேசி, எடுத்துச் சொல்லி, அவனைப் புரிந்து கொள்ளவைக்க அவரால்

கூடும். கடிதம் எழுதுபவர்களை வரச்சொல்லி உடனே உத்தரவிட்டார். சக்ரவர்த்தியின் சபைக்கு வரச்சொல்லி அபுல் பாஸலுக்கு அரசக் கட்டளை அனுப்பி வைக்கப்பட்டது.

சக்ரவர்த்தி அபுல் பாஸலை வரச்சொல்லி ஆணை யிட்டிருக்கிறார், மாட்சிமை பொருந்தியவரே!" மஹபத் கூறினான்.

ஸலீம் கலக்கத்துடன் அவனைப் பார்த்தார். "உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?"

மஹபத் தலையசைத்து உறுதி செய்தான். "செய்தி எடுத்துச்செல்லும் ஓடுனர், இரவு ஒரு சாராயக்கடையில் தங்கியிருக்கையில் கூறிக்கொண்டிருந்ததை, நம் பணியாள் ஒருவன் கேட்டிருக்கிறான்."

ஸலீம் தன் சிம்மாசனத்தின் மெத்தையில் தளர்வுடன் அமர்ந்தார். அவர் தந்தை, அவர் இராணுவப் படையைக் கலைத்துவிட்டுத் தனியாளாக அவரைச் சந்திக்க வரச் சொன்ன உத்தரவை அவர் மதிக்கவில்லை என்று காண்பிக் கும் வகையில், அலஹாபாத்தில் தனக்காகக் கருப்புக் கல்லில் ஒரு சிம்மாசனம் தயாரிக்க வைத்துத் தன்னைச் சுல்தான் ஸலீம் ஷா என்றும் பிரகடனப்படுத்திக் கொண்டிருந்தார்.

ஆக்ரா பொக்கிஷச்சாலையைக் கைபற்ற அவசரமாக திட்டிய நிகழ்ச்சி நடந்து பலமாதங்களாகி விட்டன. மேலும் சில மாதங்கள் அக்பருடன் சமாதானமாகப்போக எடுத்துக் கொண்ட முயற்சியில் கழிந்தன. இப்பொழுது சக்ரவர்த்தி அபுல் பாஸலைக் கூப்பிட்டனுப்பியிருக்கிறார். ஏன் அபுல் பாஸல்? அதனால் என்ன நன்மை? அபுல் பாஸல் சக்ர வர்த்தியின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர், அவரது மகன் தனக்குப் பாதுகாப்பாளராகச் சக்ரவர்த்தியால் நியமிக்கப் பட்டவர். அவருக்கு ஸலீமை ஒருபொழுதும் பிடித்ததில்லை. தன் மகன் முராத் உடல் நலமில்லாமல் இருக்கும்பொழுது, அவனைக் கண்காணிக்கச் சக்ரவர்த்தி பாஸலை அனுப்பி

வைத்தார். ஆனால், அபுல் பாஸல் போய்ச் சேர்ந்த [illegible] நாட்களுக்குள் முராத் இறந்து விட்டான். இப்பொழுது அவர், இன்னொரு மகனைக் கண்காணிக்க வேண்டி பாஸலுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அக்பருக்கு அபுல் பாஸலிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் உண்டு. அக்பர்நாமா என்ற அக்பரின் வாழ்க்கைச் சரிதத்தை அவர் எழுதி முடித்த பின் அக்பருக்கு அவர் மேல், மேலும் தோழமை அதிகரித்தது. அந்தப் புத்தகம் எழுதி முடித்ததற்காக அக்பர் அவரைப் பல விதமாகக் கௌரவித்திருந்தார். ஆனால், அக்பர் நாமாவின் மூன்று பகுதிகளையும் அக்பர் படித்தது இல்லை. மிகுந்த பயபக்தியுடனும், பாராட்டுணர்வுடனும் பலமுறை அந்தப் புத்தகத்தை அவர் பார்த்திருக்கிறார்.

இந்த மேன்மையான முகலாயச் சக்ரவர்த்தி கல்வியறிவில்லாதவர். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. மிகுந்த கல்வி அறிவு படைத்த ஆசான்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், கலைகளில் தேர்ச்சி பெற்ற வித்வான்கள், மற்றும் இசைக் கலைஞர்கள், கட்டிடக் கலைஞர்கள், இப்படிப் பலருடன் உரையாடும் பொழுது பேசப்படும் விஷயங்களை நன்கு ஞாபகம் வைத்திருக்கக்கூடிய அவரது திறமை அப்படிப்பட்டவர்களுடைய நட்பையும் அருகாமையையும் வளர்த்துக்கொள்ள அவருக்கு உதவியது. அவரது கல்வியறிவின்மை அவருக்கு ஒரு பொழுதும் இதற்குத் தடையாக இருந்ததில்லை.

ஸலீம் பெருமூச்சு விட்டார். இவ்வளவு வேலைகள்... சக்ரவர்த்தி தனக்குள்ள நேரத்தில் பல காரியங்களைச் செய்வார். ஒரு நாளில் சில மணி நேரமே அவர் உறங்கினார், இரவில் நான்கு மணி நேரங்கள் மட்டுமே! ஒவ்வொரு நாளும் அரசாங்கப் பணிகள், அரச சபைக் கூட்டம், அந்தப்புரத்தில் சில மணி நேரம், மற்றும் ஆஸ்தான இசைக் கலைஞர்கள், கவிஞர்கள் இப்படிப்பட்டவர்களுடன் செலவிடும் நேரம் என பல பணிகள் இருக்கும். ஆனால், ஸலீமிற்கோ, இந்த பெரிய சாம்ராஜ்ஜியத்தில் இருக்கும் அவருடைய சிறிய பகுதியை நடத்திச் செல்வதே மிகக் கடினமாகத் தோன்றிற்று.

"சக்ரவர்த்தி ஏன் பாஸலை அழைத்திருக்கிறார்?" ஸலீம் [illegible]னார்.

"சந்தேகமில்லாமல், உங்களுக்கும் சக்ரவர்த்திக்கும் [illegible]யில் உள்ள சச்சரவைச் சரி செய்யும் பொருட்டுத்தான்" [illegible]பத் பதிலளித்தான்.

"அபுல் பாஸல் இன்னும் நிலைமையை மோசமாகச் [illegible]து விடுவார். அவர் ஒருபொழுதும் என்னுடன் நட்புடன் [illegible]த்தில்லை. எனக்கு எதிராகவே எப்பொழுதும் சக்ர [illegible]த்தியிடம் பேசுபவர்." ஸலீம் கூறினார். "அவர் அரசரைச் [illegible]க்க அவைக்கு வருவாரேயாகில், நான் என் தந்தையை [illegible]யும் சந்திக்க முடியாமல் போய்விடும். நான் அவரைச் [illegible]க்கச் சக்ரவர்த்தி ஒரு பொழுதும் அனுமதி அளிக்க [illegible]டார்."

தொடர்ந்து அங்கு மௌனம் நிலவியது. மஹபத், [illegible]க்கா, அப்துல்லா மற்றும் ஷரீப் நால்வரும் அர்த்தத்துடன் [illegible]வரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அபுல் பாஸல் அரசர் சபைக்கு வருவது அவர்களுக்கும் மோசமான [illegible]ளைவைத் தரக்கூடியதுதான். அவர்கள்மீது ஏற்கனவே பல [illegible]சத் துரோகக் குற்றச் சாட்டுகள் உள்ளன. பேரரசின் [illegible]ணுவம் அவர்களைக் கைது செய்யத் துடித்துக்கொண்டி[illegible]கிறது. ஸலீமை மன்னித்து விடும்படி பாஸல் அக்பருக்கு [illegible]த்துரைக்கக் கூடும். ஆனால், அவர்களது தலை அவர்கள் [illegible]தோளில் இருப்பது நிச்சயமில்லை. துரதிஷ்டவசமாக, அவர் [illegible]ன் சக்ரவர்த்திக்கு உறவினர்கள் என்று பாராட்டித் தப்பிக்க [illegible]முடியாது.

"நான் என்ன செய்ய வேண்டும்?" ஸலீம் கேட்டார். "நாம் ஆக்ராவிற்குத் திரும்பிச் செல்லலாம். நான் சக்ரவர்த்தி[illegible]டம் மன்னிப்பு வேண்டிக் கோருகிறேன்."

"இல்லை, மாட்சிமை பொருந்தியவரே!" ஷரீப் அழுத்த[illegible]காகக் கூறினான். "நீங்கள் திரும்பிச் செல்வதைச் சிலகாலம் [illegible]ளிப்போடவேண்டும். இப்பொழுது..." அவன் சிறிது [illegible]ங்கியபின் கூறினான். "சக்ரவர்த்தி சிறிது மனக்குழப்பத்தில் [illegible]ப்பார். அதனால் நியாயமாக நடந்து கொள்ளமாட்டார்."

"ஆனால் பாஸல் போய்ச் சேருவதற்கு முன்னால் சக்ரவர்த்தியாகவே விட்டுக் கொடுப்பார் என்று தோன்ற வில்லை. பாஸல் வந்தால் நிலைமை இன்னும் மோசமாகக் கூடும்." ஸலீம் மறுபடியும் கூறினார். அக்பருடன் அவர் சமாதானமாகப் போவது அவருடன் இருப்பவர்களுக்கு ஏன் சரிபட்டு வராது என்று அவருக்குத் தெரியும். ஆனால் அக்பரின் கோபத்திலிருந்து அவர்களை ஸலீம் எப்படியும் காப்பாற்றுவார். தங்கள் வாழ்க்கையையே அவருக்காக அந்த நண்பர்கள் கொடுத்திருக்கின்றனர். அவரும் அதை உணர்ந்து செயல்பட வேண்டும். எப்படியிருந்தாலும் பாஸலினால் உபயோகம் ஒன்றும் இல்லை என்று ஸலீம் நம்பினார். அவர் வருகை ஒரு அழிவுக்கான தூண்டுதலே ஆகும். இதற்கு மாறாக வேறு என்ன செய்யலாம்?

"அப்படியானால் பாஸல் ஆக்ரா சென்றடையக்கூடாது" வழக்கம் போல் கோக்கா நிதானமாகக் கூறினான். அவன் முகம் சூழ்ச்சியில் மலர்ந்திருந்தது.

ஸலீம் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார். "நீ என்ன சொல்கிறாய்? சக்ரவர்த்தி அவரை வரச்சொல்லிக் கட்டளை இட்டிருக்கிறார். அவர் நிச்சயமாக தக்காணத்திலிருந்து ஆக்ரா செல்வார்."

"உண்மைதான். ஆனால், தக்காணத்திலிருந்து வரும் பயணம் மிகவும்..." கோக்கா மெல்லத் தயங்குவது போல் பாவனை செய்தவாறு மேலும் கூறினான். "என்ன சொல்ல லாம் — கடினமானது, ஆபத்தானது? யாருக்குத் தெரியும்." அவன் மேலே கூரையைப் பார்த்துக் கண்களை உருட்டியவாறு, "பாஸல் அந்தப் பயணத்தை முடிக்காமலும் போகலாம்."

தன் இதயம் படபடக்க, ஸலீம் அவனை விறைத்துப் பார்த்தார். கோக்கா கோடி காட்டுவதுபோல் கூறும் திட்டத்தைத் செய்ய அவருக்குத் துணிச்சல் உண்டா? இது மிகவும் ஆபத்தானது. அக்பருடன் ஏற்கெனவே பல சச்சரவுகள். ஆனால், இதை விட்டால வேறு வழியில்லை என்று தோன்றுகிறது. இதுதான் சாத்தியம். இல்லாவிடில் ஒன்றும் மில்லை. பாஸல் ஆக்ராவைச் சென்றடைந்து, அவர் தகப்பனரின் மனதை மேலும் விஷமாக்கி, ஒருவேளை அரியணை

தனியாலுக்குக் கொடுக்குமாறு தூண்டுவதற்கான ஆயுதமும் அதிகம் உள்ளது. ஸலீம் வேகமாகச் சுற்றுமுற்றும் பார்த்தார். அவர்களைத் தவிர அந்த அறையில் வேறு யாருமில்லை. பணியாட்களை எல்லாம் முன்பே வெளியேற்றியாகி விட்டது.

இருந்தாலும், அவர் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு அவர்கள் முன் குனிந்தார். "நீங்கள் சொல்வது சரிதான். இப்பொழுது நேரம் எங்கும் அபாயகரமாகத்தான் இருக்கிறது. கொள்ளையர்களும், திருடர்களும் வழிப்பயணத்தில் அதிகம் உள்ளனர். ஒரு சிறிய அபாயம், ஒரு விபத்து... யாருக்குத் தெரியும்?" அவர் கைகளை விரித்தவாறு கூறினார்.

அந்த ஐந்து மனிதர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

"சாமர்த்திசாலியான எந்த மனிதன்... ஆ... இந்த வேலையை...?"

"பீர்சிங் தியோ, (Birsingh Deo) மாட்சிமை பொருந்தியவரே" மஹபத் உடனே பதிலளித்தான்.

"ஓர்ச்சாவை (Orchha)ச் சேர்ந்த பண்டேலா ராஜபுத்திரர்களின் தலைவன்?" ஸலீம் யோசித்தார். "அவன் நம் சாம்ராஜ்ஜியத்தை எதிர்த்துப் புரட்சி செய்பவனல்லவா?"

"ஆமாம், ஆனால், அவன் பணத்திற்காக எதையும் செய்பவன். அவனுக்கு வேண்டிய பணம் கொடுத்தால், தனக்காக எந்தக் காரியமும் செய்வான். மேலும், உங்களுக்கும் சக்ரவர்த்திக்கும் இடையில் கசகசப்பு இருப்பது யாவரும் அறிந்ததே! சாம்ராஜ்ஜியத்திற்கு எதிராகக் காரியம் செய்வதில் பீர்சிங்கிற்கு எப்பொழுதும் விருப்பம் உண்டு."

"அவன் தான் சரியானவன் என்று நீங்கள் நினைத்தால்" ஸலீம் தயங்கியவாறு பேசத்தொடங்கினார்.

"அவன்தான் சரி, மாட்சிமை பொருந்தியவரே!" அப்துல்லா இடையில் கூறினான். "உங்கள் மேல் எந்த

விதமான சந்தேகமும் விழக்கூடாது. ஆகையால்... ஆ... கொலை செய்பவன் உங்கள் சமூகத்திற்கு அப்பாற் பட்டவனாக இருக்கவேண்டும்."

ஸலீம் முகவாயை தடவிக் கொண்டார். "நீ சொல்வது சரிதான். பாஸல் அரசாங்கத்தில் பெரிய அதிகாரி. சக்ரவர்த்தி அவர் மரணத்தைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள மாட்டார். நிச்சயம் கொலை செய்தவனைத் தேடிப் பிடித்து விடுவார்." அவர் நிமிர்ந்து பார்த்தார். "பீர்சிங்கை நம்பலாமா? அவன் நம்மைக் காட்டிக் கொடுத்து விட்டால்?"

மஹபத் புன்னகை செய்தான். அது களிப்பு கலந்த புன்னகை. "அவன் செய்யமாட்டான். இந்தத் செய்கைக்காக சக்ரவர்த்தி அவனை மன்னிக்க முற்பட்டாலும் அவன் மேல் வேறு பல குற்றங்கள் உள்ளன. தான் உயிர் பிழைக்க முடியாதென்று அவனுக்கு நிச்சயம் தெரியும். அவன் ஓர்ச்சாவிற்குச் சென்று மறைந்து விடுவான். மேலும், சக்ரவர்த்தியின் இராணுவப் படையிலிருந்து பல வருடங்களாக வெற்றிகரமாகத் தப்பித்துப் புண்டேலர்கள் அங்கே வாழ்ந்து வருகின்றனர்."

ஸலீம் தன் நண்பர்களை வெறித்துப் பார்த்தார். இந்த முடிவிலிருந்து திரும்பி வருவது என்பது இனிமேல் முடியாது. அவர் இதுவரை செய்த காரியங்களெல்லாம் இப்பொழுது அவர் கொடுக்கப்போகும் உத்திரவின் முன் வெகு சாதாரணமானவையாகத் தெரிந்தன. ஆனால், இது அவசியமானது.

"பீர்சிங்கை வரவழையுங்கள். தாமதிக்க நேரமில்லை."

அவரை கொல்வதற்கு நடக்கப் போகும் சூழ்ச்சி பற்றி அபுல் பாஸலுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. ஆனாலும், அவர் தன் பயணத்தின் மார்கத்தில் ஒரு மாற்றமும் செய்யவில்லை. அதன் காரணம் மிக எளிமையானது. உடனே வரச் சொல்லி அக்பர் கட்டளையிட்டிருக்கிறார். ஆகையால், இன்னும் அதிகமான மெய்காப்பாளர்களையும் அழைத்துக்கொண்டு அவர் புறப்பட்டு விட்டார். பாஸலும்

தன் உடன் வந்தவர்களும் மூன்று முறை வழியில் தாக்கப்பட்டனர். ஆனால், அவரைக் கொல்ல வந்தவர்களிடமிருந்து தப்பிவிட்டனர். நாலாவது முறையாக சூர் (Sur) என்ற கிராமத்தின் வழியாக அவர்கள் சென்று கொண்டிருக்கும் பொழுது புண்டேலர்கள் மீண்டும் தாக்கினர். பெரிய சண்டை நடந்தது. அவரைத் தாக்கியவர்களிடமிருந்து பாஸல் தப்பித்து விட்டாலும், மிகுந்த காயம் அடைந்தவராக அருகிலிருந்த சொட்ட ஒரு மரத்தினடியில் ஓய்வெடுக்க வேண்டியதாயிற்று. மிகுந்த வலியுடன் ஆனால், நல்ல நினைவுடன் இருந்த அவரை புண்டேலர்களின் தலைவன் பார்த்துக் கொண்டான். அவர் தலையை வெட்டி எறிந்தான்.

அத்தியாயம் ஒன்பது

என் எண்ணம்... தனது தவறான குணத்தின் காரணத்தினாலும், நல்ல நடத்தைக்கு ஒவ்வாத செய்கைகளாலும் எந்த ஒரு காரணமோ, தூண்டுதலோ இல்லாத பொழுது தன் தந்தையை மதிக்காமல் எதிர்த்துக் கிளர்ச்சி செய்வதை விடப் பெரிய கொடுமையான நிலைமை கிடையாதென்று கூட்டி காட்டுவதுதான்...

- **A ROGERS**, trans, and H. BEVERIDGE, ed.,
The Tuzuk-i-Jahangiri

பட்டுத் திரைச் சீலைகளால் ஜன்னல்கள் மூடியிருக்க இருள் சூழ்ந்த தன் அறையில் சக்ரவர்த்தி அமர்ந்திருந்தார். கண்ணீர் அவர் கன்னங்களில் வழிந்து அவரது பட்டு மேல் அங்கியின் கழுத்துப் பட்டையை நனைத்தது.

அக்பர் கண்களை மூடியவாறு வெல்வெட் தலையணையில் சாய்ந்தார். பாஸலின் வருகைக்காக அவர் எதிர் நோக்கியிருந்தார். மாறாக, இரண்டு செய்தி எடுத்து வரும் ஓடுனர்கள் அவரது மரணச் செய்தியைக் கொண்டு வந்தனர். அக்பர் அவரது அன்புக்கும் மதிப்பிற்கும் பாத்திரமான ஒரு நெருங்கிய தோழரை இழந்து விட்டார். அதற்கும் மேல், அவரது மகனுக்கு இந்தக் கொலையில் ஏதோ ஒரு சம்பந்தம் இருப்பது போல் தோன்றுகிறது. அப்படியும் இருக்குமா? பாஸலின் மரணத்திற்கு ஸலீம் காரணமாக இருப்பானா?

நடுங்கும் கரத்தை உயர்த்தி அக்பர் தன் கண்களைத் துடைத்துக் கொண்டார். தலை வெட்டப்பட்ட பாஸலின் உடலை அவருடைய வீரர்கள் ஒரு மரத்தினடியில் கண்டனர். அவரது அமைச்சர் கௌரவத்துடன் இறக்கவும் அனுமதிக்கப்படவில்லை. அவருடைய தலை ஸலீமிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக இப்பொழுது அவர் ஒற்றர்கள்

[illegible] நெஞ்சில் ஈரமின்றி எப்படி அவரது மகனே [illegible] தந்தையின் நெருங்கிய நண்பரைக் கொலை செய்வான்? [illegible] கிளர்ச்சி செய்வது என்பது ஒன்று... ஆனால் [illegible] செய்ய முற்படுவது...?

அக்பர் தன் கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டார். [illegible] மரணம் பற்றிய செய்தி வந்து மூன்று நாட்களாகி [illegible]. அக்பர் தன் அறையில் கதவை மூடிக்கொண்டு, [illegible] பார்க்காமலும், யாருடனும் பேசாமலும், ஏன்— [illegible] அந்தப்புரத்துப் பெண்களைக்கூடச் சந்திக்காமலும் [illegible] இருந்தார். இப்படிப்பட்ட புதல்வர்களைப் [illegible] அவர் என்ன பாவம் செய்தார்? முராத் இறந்து [illegible]. தனியால் மதுவிலும், அபினிலும் மூழ்கித் தன் [illegible] இழந்தவனாக இருக்கிறான். ஸலீமோ... அவனது [illegible] விட அதிகமாக அவன் தந்தையின் மனம் [illegible] படியான காரியங்களைச் செய்கிறான்.

அவர் மெதுவாகச் சாய்மான இருக்கையிலிருந்து [illegible] ஜன்னலருகே சென்றார். நடுங்கும் கரங்களால் [illegible] திறந்து ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டார். [illegible] நேரம். சூரியன் வானத்தின் உச்சியில், எல்லா [illegible] வெளீரென பிரகாசிக்க வைத்தவாறு காய்ந்து [illegible]. வெப்பம் முகத்தில் தாக்க, அக்பர் சிறிது [illegible] வாங்கினார். அதே சமயம், கடந்த மூன்று நாட்களாக [illegible] மரத்துப் போன துக்கத்திலிருந்து வெளிவர அந்த [illegible] தூண்டுகோலாக இருந்தது. சூரிய வெப்பம் [illegible] அவரது ஒவ்வொரு மூச்சும் அவரது களைத்துப் [illegible] நுரையீரல்களைக் காய்ச்சுவது போலிருந்தது. யமுனா [illegible] தாண்டிக் கடும் வெயிலினால் காய்ந்து கிடந்த [illegible] அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த சரியாக [illegible] மரங்களைத்தான் காணமுடிந்தது. வெகு தூரத்தில் [illegible] வரண்ட நிலபரப்புகளுக்கிடையே, அதன் [illegible] மாளிகைகள் பாழடைந்து போன [illegible], பதேபூர் சிக்ரி நகரம் இருந்தது. அவர் ஸலீமிற்காகக் [illegible] நகரம்.

ஸலீம் பிறந்த பொழுது அக்பருக்கு இருபத்தி ஏழு வயது அதற்கும் முன், பதினான்கு வருடங்களாக அவர் முகலாய சாம்ராஜ்ஜியத்தை அரசாட்சி செய்துவருகிறார். ஓர் அனுபவம் மிக்க அரசர். திருமணமாகிப் பல வருடங்கள் ஆகியிருந்த அரசர். மிகப் பெரிய சாம்ராஜ்ஜியத்தையும் பலவிதமான மக்களையும் ஆட்சி செய்யும் அரசர். ஆனால், இதை எல்லாம் கொடுக்க ஒரு ஆண் வாரிசு இல்லாதவர். இத்தனை வருடங்களில் அவரது பல மனைவிகளுக்கு ஆண் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. ஆனால், சில குழந்தைகள் இறந்தே பிறந்தன. அரண்மனை வைத்தியர் கூறியது போல் கை கால்கள் நன்கு வளர்ந்து தலை நிறைய முடியுடன் முழு வளர்ச்சி பெற்ற குழந்தைகள் — ஆனால், பிறக்கும் பொழுதே அவைகளின் சிறிய இதயத்தில் துடிப்பு இல்லை. சில குழந்தைகள், இவர் கைகளில் ஏந்தி மகிழ்ந்தவை. செவித்தாயிடம் தாய் பால் குடித்து வளர்ந்தவை. சில தினங்களிலேயே ஏதோ காரணத்தினால் இறந்து போயின.

சாம்ராஜ்ஜியத்தைப் பராமரிக்கும் பொறுப்பினால் இவ்வாறு இறந்து போன புதல்வர்களைப் பற்றி மறக்க முடிந்தது என்பதை அக்பர் நினைத்துப் பார்த்தார். பதிமூன்று வயதிலேயே அரியணைக்கு வந்து விட்டதால், அவரைச் சார்ந்துள்ள குடிமக்கள், அவரது அந்தப்புரத்துப் பெண்கள், இராணுவத்தின் படைவீரர்கள் மற்றும் அரச சபையைச் சேர்ந்த பிரபுக்கள் என இப்படி பலரது நலத்தையும் பேணிக் காக்க வேண்டிய ஒரு பொறுப்புணர்ச்சி அவருக்கு இயல்பாகவே வந்தது. ஒரு அரசர் தன் சொந்தத் துக்கத்தை அதிகம் பாராட்ட முடியாது. பாராட்டவும் கூடாது. இருந்தாலும் அவர் மனதில் ஒரு வலி இருந்தது. அக்பர் மன அமைதி வேண்டிப் பல மார்க்கங்களிலும் தேடினார். மத சம்பந்தமாக, ஆத்மீகமாக, உடல்ரீதியாகவும். பல முனிவர்களை, மத குருக்களை, வைத்தியர்களை நேரில் சென்று கண்டார். அவர்களில் யாராவது ஒருவர், இவ்வளவு பெரிய சாம்ராஜ்ஜியத்தை ஆளும் அவருக்கு, தனக்கு பின் விட்டு செல்ல ஏன் வாரிசு இல்லாமல் போயிற்று என்று கூறமாட்டார்களா என்ற நம்பிக்கையில், ஒரு மகனுக்காக

ஏங்கும் அவருக்கு, நிச்சியம் மகன் பிறப்பான் என்ற நம்பிக்கையூட்டுவார்களா என்ற எண்ணத்தில், மன அமைதி தேடி அலைந்தார்.

இவ்வாறு செல்கையில் தான் அக்பர் ஷேக் ஸலீம் சிஷ்தி (Shaikh Salim Chist)யை சந்தித்தார். ஆக்ராவிலிருந்து இருநூறு மைல் தூரத்தில், வெளியுலகத்திற்கு அதிகம் அறிமுகம் இல்லாத சிக்ரி என்ற கிராமத்தின் எல்லையில் இருந்த ஒரு குகையில் வசித்து வரும் ஸூபி (Sufi) இனத்தைச் சேர்ந்த ஒரு முனிவர் அவர். அக்பர், முகலாய சாம்ராஜ்ஜியத்தின் சக்ரவர்த்தி, தனது முத்துக்கள், வைரக்கற்கள் பதித்த தலைப்பாகையைக் களைந்துவிட்டு ஷேக்கின் அருகில் வெறும் தரையில் அமர்ந்தார். 'மாட்சிமை பொருந்திய அரசே, உமக்கு மூன்று புதல்வர்கள் பிறப்பார்கள்' என்று ஷேக் கூறியிருந்தார். 'மூன்று சிறப்பு வாய்ந்த புதல்வர்கள். உன் பெயர் நீடித்து நிற்கும். உன் சாம்ராஜ்ஜியம் மேலும் வளமுறத்தோங்கும். அல்லாவின் விருப்பம் இதுவே.'

இந்த சமயத்தில், அக்பரின் இந்து மனைவி ஹமீதா பானு கர்ப்பம் தரித்தாள். 1569—ம் வருடம் ஆகஸ்டு மாதம் 31—ம் தேதி, ஸலீம் உதைத்துக் கொண்டும் உரக்க கத்திக் கொண்டும் இந்த உலகிற்கு வந்தான்.—ஷேக் உறுதியாகக் கூறியபடியே!

சூரிய ஒளியை தடுக்க கைகளால் கண்களை மறைத்த வாறு ஜன்னலில் சாய்ந்து கொண்டு அக்பர் நினைத்துப் பார்த்தார். — சிக்ரியில் அவர் ஒரு பெரிய நகரத்தையே நிர்மாணித்தார். — குஜராத் மாநிலத்தை வெற்றி கொண்ட பின் அந்த நகரத்திற்கு பதேபூர்—வெற்றி—சிக்ரி என்று பெயரிட்டார்.

அவர் அறையில் அவர் நிற்கும் இடத்திலிருந்து அவரால் அந்த நகரைப் பார்க்கமுடியவில்லை. தொடுவானம் தெரியாத படிச் சூரியன் ஒளி வீசிக்கொண்டிருந்தது. — பதேபூர் சிக்ரி வெகு தூரத்தில் இருந்தது. ஆனால், அதை அமைக்க அவர் செய்த ஒவ்வொரு திட்டமும் அவர் நினைவில் பசுமையாக இருந்தது. அக்பரது திட்டங்களை நிறைவேற்ற அவரது

கட்டடக் கலைஞர்களும், பொறியாளர்களும் தயங்கினர். அந்த இடம் சாம்ராஜ்ஜியத்தின் தலைநகரான ஆக்ராவிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. ஆனால், பதேபூர் சிக்ரிதான் சாம்ராஜ்ஜியத்தின் தலைநகரமாகும் என அக்பர் பதிலளித்தார். புகழ் வாய்ந்தவர் எவரும் அங்கு வசிப்பதில்லை. சக்ரவர்த்தியே அங்கு குடி போகும் பட்சத்தில், அவர்களும் வருவார்கள். தண்ணீருக்கான வசதி சுத்தமாக இல்லை. மாட்சிமை பொருந்திய அரசே. அவர்கள் தொடர்ந்து தயங்கினர். ஒரு பெரிய ஏரியை வெட்டுங்கள் அக்பர் ஆணையிட்டார். முடிவில் அக்பர் ஆணை செயல்படுத்தப்பட்டது. ஒரு பெரிய ஏரி தோண்டப்பட்டு தண்ணீரால் நிரப்பப்பட்டது. ஸலீம் பிறந்த இரண்டு ஆண்டுகள் கழித்து 1571—ல் சிக்ரியில் ஒரு மசூதி அமைக்கவும், சக்ரவர்த்திக்காக அரண்மனை கட்டவும் அடிக்கல் நாட்டப்பட்டது.

பேரரசரின் சபை, பதினான்கு வருடங்கள் பதேபூர் சிக்ரியிலிருந்து ஆட்சி செய்தது. வருடம் ஒவ்வொன்றாகக் கழிய, ஏரியில் தண்ணீர் மட்டம் குறைந்துவர, மனம் பெய்வதும் அடிக்கடி குறைந்து போக, வெப்பக் காற்றில் புழுதி, சிவப்பு கற்களாலான அந்த நகரத்தின் கட்டிடங்களில் படர்ந்து எல்லாவற்றையும் மங்கிய பழுப்பு நிறமாக ஆக்க, அந்த நகரத்தைக் கைவிட வேண்டிய நேரம் வந்து விட்டதை அக்பர் உணர்ந்தார். வடமேற்கு எல்லையில் உஸ்பெகிஸ்தான் மன்னரிடமிருந்து வரும் எதிர்ப்புகளைச் சமாளிக்க அக்பர் அரச சபையை லாகூருக்கு மாற்றினார்.

அவர் மகனுக்காக அவர் கட்டிய நகரம் முற்றிலும் கைவிடப்பட்டது. அவர் மறுபடியும் அங்கு செல்லவேயில்லை.

ஸலீம் குழந்தையாக இருக்கையில் நடந்த பல நிகழ்ச்சிகள், இப்பொழுது நினைத்துப் பார்க்கையில் அவர் மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கக்கூடிய, அவர் மனதை கவர்ந்த பல நிகழ்ச்சிகள் இன்னமும் அவர் நினைவில் இருந்தன. ஸலீம் நான்கு வயதாக இருக்கையில்

அக்பர் அவனுக்கு ஏரியில் நீந்தக் கற்றுக் கொடுத்தார். தண்ணீருக்குள் ஒரு சிறிய பகுதியை வேலையாட்கள் வெல்வெட் கயிறுகளால் வளைத்து கட்டியிருந்தனர். ஒருநாள் காலை, சூரியன் உதிக்கும் நேரம், அவர்களைச் சுற்றி ஆகாயம் பொன்னிற ஒளியில் பளபளத்துக் கொண்டிருந்தது. இரண்டு நாட்களுக்கு ஸலீம் கத்தித் தீர்த்து விட்டான்.

"இல்லை, அப்பா எனக்கு நீந்த விருப்பமில்லை நான் தண்ணீரை வெறுக்கிறேன். எனக்குத் தண்ணிரைக் கண்டால் பயமாக இருக்கிறது."

"ஆனால், அரசர்கள் பயப்படக் கூடாது, ஷைக்கு பாபா". அக்பர் சிரித்தவாறு கூறினர். அவர் அவனை அப்படித்தான் அழைத்தார். ஷைக்கு பாபா. அவனுக்கு இட்ட பெயர் ஸலீம். முனிவர் ஷைக் ஸலீம் சிஸ்தியின் நினைவில் ஷைக்கு பாபா என்பது செல்லப்பெயர், மறுபடியும் முனிவரின் நினைவில்தான்.

"இல்லை, நான் போகமாட்டேன். நீ என்னை வற்புறுத்தக் கூடாது. எனக்கு விருப்பமில்லை."

"நாளைக்கு, ஸலீம்," அக்பர் கண்டிப்பாக கூறினார். உத்தரவிற்கு அடிபணிய அவன் கற்றுக்கொள்ள வேண்டும்.

"நான் வரமாட்டேன்."

ஆனால், அடுத்த நாள் கடுகடுப்புடனும், நடுங்கியபடியும், தூக்கம் இன்னும் கண்களைச் சுழற்றக் குளிரில் உதடுகள் நீலமாக ஆக, அதிகாலையில் அவன் ஏரிக்கரையில் நின்றிருந்தான். ஏனெனில், அரசர்கள் குறித்த நேரத்தில் சில காரியங்களைச் செய்யவேண்டும், உத்தரவிற்குக் கட்டுபட வேண்டும் என அவர் கற்றுக்கொடுத்திருந்தார். உத்தரவுகளை மதிக்கத் தெரியாதவன் உத்தரவிடவும் சரியாக அறியமாட்டான்.

காலையின் குளிர்காற்றுக் கைகளிலும் மார்பிலும் மயிர்க்கூச்செரிய, அவரைச் சுற்றி வேஷ்டி பலூன் போல் பரவிக்கிடக்க, அக்பர் ஏற்கெனவே தண்ணீரில் நின்றிருந்தார். "குதி, குதிக்கு பாபா!" அவர் கூவினார்.

முகங்களைத் திரையால் மூடியவாறு ஸலீமின் தாதிகள் அவனைச் சுற்றி நின்று கொண்டிருந்தனர். முகத்தை மூடியிருந்த மெல்லிய மஸ்லின் துணியின் வழியாக அவர்கள் அவரை முறைத்துப் பார்ப்பதிலிருந்தே அவர்களது அதிருப்தி அக்பருக்கு புரிந்தது.

"குதி மகனே!"

ஒரு தாதி ஸலீமின் உடைகளைக் களைந்தாள். ஸலீம் கையைக் கட்டிக்கொண்டு தந்தை முன் நிர்வாணமாக நின்றான். அவன் மார்பு எலும்புகள் துருத்திக்கொண்டிருந்தன. கால்கள் நீளமாக, ஒல்லியாக இருந்தன. தோள் வரை அவன் தலைமுடி அடர்த்தியாக படர்ந்திருந்தது. தன்னை மூடிக் கொள்ளாமல் தந்தையை எதிர்ப்பது போல் வெறித்துப் பார்த்தவாறு அவன் நின்றிருந்தான்.

அவன் கண்களில் தெரிந்த பயம் அவனுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உறுதியைத் தளர்த்தி விட்டது. அவனை அரண்மனைக்குத் திரும்ப அனுப்பிவிடக் கூட அக்பருக்கு எண்ணம் வந்தது. ஆனால், அதிக அன்பும் சில சமயங்களில் நல்லதில்லை. ஸலீம் நிச்சயம் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகையால் அவர் "நீ பெரிய அரசனாக ஆக விரும்புகிறாய் அல்லவா?" என்று அவனைக் கேட்டார்.

ஸலீம் கைகளை இறுகக் கட்டிக்கொண்டு தந்தையின் முகத்திலிருந்து கண்களை எடுக்காமல் தலையசைத்தான்.

"அப்படியானால் தண்ணீரைப் போன்ற ஒரு சாதாரண பொருளுக்கு நீ ஏன் பயப்படவேண்டும்?"

மூன்று அடிகள் முன் வைத்துக் கரைக்கு அருகே வந்து ஸலீம் தண்ணீரைக் கடந்து தந்தையின் கைகளில் குதித்தான்.

இப்பொழுது அவரது ஒற்றர்கள் அந்தச் சிறிய பையன் தான் அபுல் பாஸலின் மரணத்திற்கு காரணம் என்று கூறுகின்றனர். சக்ரவர்த்தி கனத்த இதயத்துடன் தரையில் அமர்ந்தார். மேலே திறந்திருந்த ஜன்னல் வழியாகச் சூரிய

வெப்பம் வீசிக் கொண்டிருந்தது. தண்ணீரைத் தொட்டவுடன் தைரியம் குறைந்து ஸலீம் தந்தையின் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டிருந்தான். அந்த சிறிய கைகள் அவர் கழுத்தைச் சுற்றிக் கட்டியிருந்தை, அவன் கால்கள் அவர் இடுப்பை சுற்றி வளைத்திருந்ததை, அவன் கண்ணீர் வடிந்த முகம் அவர் தோள்களில் பதிந்திருந்ததை அவரால் இன்றும் உணர முடிந்தது. குழந்தையாக இருந்தபொழுது ஸலீம் அவர் கோர்த்தைகளுக்குக் கட்டுப்பட்டிருந்தான். ஆனால் இப்பொழு தெல்லாம் கட்டுப்படுவதில்லை. பதேபூர் சிக்ரி நகரம் போல், அவர்களது பந்தம் சூரிய வெப்பத்தில் வாடி அழுக்காலும் புழுதியாலும் மூடப்பட்டுவிட்டது. அவரது மகனுக்காக அவர் கட்டிய நகரத்தை அவர் புறக்கணிக்க வேண்டியிருந்தது. இப்பொழுது அவர் மகன் அவரையே புறக்கணித்து விட்டான்.

சக்ரவர்த்தி மெதுவாகத் தலையை உயர்த்தினார். சமீப காலமாக அவர் அடிக்கடி சோர்வடைந்து போகிறார். எந்தக் காரியமும் அவரை அலுப்படையச் செய்கிறது. அரண்மனை வைத்தியர்கள் அவர் உடல் நலத்தில் எந்தக் குறையும் இல்லை என்று கூறினாலும், அவர்கள் கண்களில் உண்மை தெரிகிறது. வயது முதிர்ந்து விட்டது. பூரணமாக நன்கு வாழ்ந்த வாழ்க்கையின் முடிவு தெரிகிறது. அக்பர் பெரு மூச்செறிந்தார். நடந்த நிகழ்ச்சியை மறந்துவிட்டு அவர் மகனுடன் சமாதானமாகப் போக வேண்டும். ஸலீம்தான் அரியணைக்கு அடுத்த இயல்பான வாரிசு, ஒருவேளை அவரது வாழ்க்கையில் மிகுதியிருக்கும் சில காலத்திற்குள் அவனை யாவரும் மதிக்கும் ஒரு சக்ரவர்த்தியாக ஆக்குவதற்கான நல்ல குணங்களை அவனுக்கு புகட்ட முடியலாம்.

அக்பர் எழுந்திருந்து அந்தப்புரத்தை நோக்கி நடந்தார். முதலில் தன் பாதுஷா பேகமின் அரண்மனைக்கு சென்றார். அவள் அவரை எதிர்நோக்கிக் காத்திருந்தாள். அவர் தன் அரண்மனையை விட்டுப் புறப்படுக்கையிலேயே அவரது பணியாட்கள் ஓடிச்சென்று ருக்கையாவிடம் அவரது

வருகையைப் பற்றி அறிவித்திருந்தனர். அவரது அன்புக்குரி மற்றொரு மனைவி ஸலீமா சுல்தான் பேகத்துடன் ருக்கை இருப்பதை அவர் கண்டார். ஸலீமாவும், அக்பரும் ஒன்றா வளர்ந்தவர்கள், நெருங்கிய உறவினர்கள், அக்பர் அவ மணந்து கொள்ளும் வரை உற்ற நண்பர்கள் போல் பழ வர்கள். அக்பர் பதிமூன்று பயதில் அரியணைக்கு வ பொழுது, அரசாட்சி செய்தவற்கான வயதாக வில்லை லால் அவருக்குத் துணையாக ஆட்சி செலுத்திய பைரா கான் என்பவருடன் முதலில் அவளுக்குத் திருமணம் யிருந்தது. பைராம்கான் இறந்தபின், அவர்களது சிறுவ நட்பைத் தொடருவதற்காகவும், அவளுக்குப் புகலி கொடுப்பதற்காகவும் அக்பர் ஸலீமா பேகமை மண கொண்டார்.

ருக்கையா ஸலீமாவுடன் இருக்கையில், வேறு எ இடத்தில் இருப்பதை விடவும், அரச தர்பாரில் இருப்பதை கூட மேலாக, இயல்பான சரளமான மனநிலையி அக்பரால் இருக்க முடிகிறது. அவர்கள் இருவருமே இவருக்கு பெரிய ஆறுதல். வழக்கம் போல், இப்பொழுதும் அவ தானாகவே முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேச தயாராகும் வரையில் அவர்கள் சாதாரண அந்தப்புர விஷயங்கள் பற்றிப் பேசினர். மனம் விட்டுப் பேச தயாரானவுடன், அவர் மனவருத்தம் உடைந்தவார்த்தைகளா வெளியில் கொட்டியது, பாஸலின் மரணம் குறித்து ஏற்பட துயரம். அதற்கு ஸலீம் காரணமாக இருப்பதனால் ஏற்பட் மனவலி. ஆனால், அவனுடன் சமரசமாகப் போக எண் வது பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை. அக்பரைத் த வாழ்நாள் முழுவதும் அறிந்த ஸலீமா, மறுநாள் அலஹாபா திற்குக் கிளம்பிச் சென்றாள். அக்பர் தன் மகனை மறுபடி சந்திக்க விருப்பப்படுகிறார் என்று அவளுக்கும் தெரியு ருக்கையாவிற்கும் தெரியும். எப்பொழுதும் செய்வது போ அவர்கள் இருவருக்குமிடையே பேசாமலே ஏற்பட்ட ஏ ஒரு ஒப்பந்தம் போல், அந்த இரண்டு பெண்களும் சக் வர்த்தியின் இன்றைய நிலைமையைச் சரி செய்ய வேண் அதற்காகச் செயல்பட்டனர்.

டக்கள் சபையில், எல்லா உறுப்பினர்களுக்கும், அதிகாரி களுக்கும் முன்னிலையில் ஸலீமும் அக்பரும் சந்தித் தனர். அவர்கள் இருவரும் நேருக்கு நேர் சந்தித்து மூன்று டங்களாகிறது. இருந்தாலும் சக்ரவர்த்தி எல்லோர் முன்னிலையில் அவர்கள் சந்திப்பு ஏற்படவேண்டும் என வலியுறுத்தினார். அரச சபை மேன் மக்களாலும், அதிகாரி களாலும், மற்றும் குடிமக்களாலும் நிரம்பி இருந்தது. சாம் ராஜ்ஜியத்தின் வெகு தூரத்து மூலையில் கூடத் தந்தைக்கும் மகனுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் இந்தச் சச்சரவு பற்றி வழிப்போக்கர் மூலமும், செய்தி எடுத்துச் செல்பவர்கள் மூலமும் செய்தி பரவி இருந்தது. இவர்கள் சந்திப்பு எப்படி முடியும் என்பதை அறிவதில் பலருக்குச் சொந்த அக்கறை இருந்தது. சாம்ராஜ்ஜியத்தின் தலைவிதி இந்தத் தருணத் தான் அடங்கியிருந்தது.

அரியணைக்குப் பின், அந்தப்புரத்தின் சாளரங்களில் பெண்கள் குழுமி இருந்தனர். முதன்முறையாக அவர்களும் இ பதைக் கவனத்துடன் பார்ப்பதற்காக மௌனமாக அமர்ந்திருந்தனர். முன் வரிசையில் திரைச்சீலையின் மிக அருகில் ருக்கையா சுல்தான் பேகம் அமர்ந்திருந்தாள். அவளுக்கு வலதுபுறத்தில் ஸலீமா, அவள்தான் ஸலீமை தன் தந்தையிடம் அழைத்து வந்தவள். அவள் இளவரச டன் என்ன பேசினாள், அவர்கள் பேச்சு வார்த்தை எப்படி நடந்தது, எப்படி ஸலீமைத் தந்தையைச் சந்திக்கச் சம்மதிக்க வைத்தாள் — அதுவும் தன்னுடன் பெரிய ராணுவப் படையை உடன் அழைத்து வராமல் — என்ப தெல்லாம் ஒருவருக்கும் தெரியாது. ஸலீம் ஆக்ரா வந்து சேர்ந்தபின், தன் பாட்டி மரியம் மக்கானியைச் சந்தித்து ஆசியை செலுத்த அந்தப்புரத்திற்கு வந்தபொழுது, அதனுள்ள பெண்கள் அனைவரும் அவரை பார்த்திருக் கின்றனர். ஆனால், அரசரின் அந்தபுரத்தில் பழகிய, ஆனால் அந்தப்புரத்தை சேர்ந்திராத ஒரே ஒரு பெண் மட்டும் தான் பல வருடங்களாக அவரைப் பார்க்கவில்லை.

மெஹ்ருன்னிஸா, ருக்கையாவிற்குப் பின்னால், கிழே நன்கு பார்ப்பதற்கு வசதியாகத் திரைச்சீலைக்கு அருகில் மௌனமாக நின்று கொண்டிருந்தாள். இளவரசர் சபைக்கு வருவதற்கு இன்னும் சில நிமிடங்கள் இருந்தன. ஆனாலும் இந்தக் கணத்திற்காக மூச்சை நிறுத்திப் பிடித்திருப்பதுபோல் அவள் உணர்ந்தாள். சாளரத்தின் சலவைகல் தரையை நோட்டமிட்டவாறு, இளவரசர் மாறி இருப்பாரா என்று யோசித்துப் பார்த்தாள். இத்தனை வருடங்கள் அவருக்கு நல்ல முறையாகக் கழிந்ததா? அவர் வயது கூடிய வராகத் தோற்றமளிப்பாரா? அவசியமில்லாத இலக்குகளை மனதில் கொண்டு சாம்ராஜ்ஜியம் முழுவதும் சுற்றி அலைந்ததில் அவர் களைத்திருப்பாரா?

இவை எல்லாம் முட்டாள்தனம், புத்தியில்லாமல் செய்த செயல்கள், மஹபத், கோக்கா, ஷரீப் போன்றவர்களின் தூண்டுதலால்தான் இப்படித் தரம் கெட்டு நடப்பது எல்லாம். இப்பொழுதாவது அவர் தனக்குரிய இடத்தில்தன் தந்தைக்கு அருகில் வந்திருக்கிறார். அல்லாவின் கருணையால் அவர் அவ்வாறே இருக்கவேண்டும் அப்பொழுதாகிலும் அவள் அவரை அவ்வப்பொழுது பார்க்கமுடியும். அவரைப் பார்க்க வேண்டும் என்ற அவளுடைய இத்தனை வருட ஆவலுக்கு அவ்வாறு சிறிதளவு பார்க்க முடிந்தாலே போதும். ஸலீமின் வருகையை அறிவிக்கத் தாரை, தப்பட்டைகள் முழங்கத்தொடங்க, அவள் தலைநிமிர்ந்தாள். அவள்தான் அறிவில்லாதவள், இத்தனை வருடங்களாக ஒருவனுக்கு மனைவியாக இருந்து கொண்டு இன்னும் மற்றொருவனை மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறாள்... ஒருவேளை அலிகுலிக்கும் அவளுக்கும் ஒரு குழந்தை பிறந்திருந்தால், நிலைமை வேறு விதமாக இருந்திருக்கலாம். தன் வயிற்றில் ஒரு கையை வைத்தபடி, அந்தக் குளிர்காலப் பகல் வேளையில் லாகூரில் அவள் வீட்டின் பின் கொட்டகையில் நடந்ததை நினைத்துப் பார்த்தாள். யாஸ்மின் பிழைத்து விட்டாள். ஆனால், அவள் குழந்தையைத் தன்னுடன் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால், மெஹ்ருன்னிஸா அந்தக் குழந்தையை எடுத்துக் கொள்ளவில்லை. அவள்

முகுக ஒரு குழந்தைக்காக ஆசைப்பட்டாள் — அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்காக ஆசைப்பட்டாள், மற்றொரு பெண்ணின் கருப்பையிலிருந்து வந்ததையல்ல குழந்தையை ஸ்மினிடம் கொடுத்து அவளை அனுப்பி விட்டாள். தன் விற்றைத் தொட்டவாறு மெஹ்ருன்னிஸா தலைகுனிந்து ர்த்தாள். அவளுக்குக் குழந்தை பிறக்கும் பாக்கிய ண்டா?

அதே சமயத்தில், ஸலீமின் வருகையை அவை றிவிப்பாளர், மீர் தோஷக் (Mir Tozak) அறிவிக்க, அவள் ிர்ந்து நோக்கினாள்.

சில ஆதரவாளர்களே தொடர்ந்து வர, ஸலீம் மெதுவாக டந்து மக்கள் சபையில் நுழைந்தார். மஹபத் கானும் க்காவும் அவர்கூட வந்தவர்களுடன் இல்லாதது வெளிப் டையாகவே தெரிந்தது. அக்பர் சிம்மாசனத்திலிருந்து ழுந்து சில படிகள் இறங்கிச் சபையின் நடுவிற்கு செல்வதை ெஹ்ருன்னிஸா பார்த்தாள். சக்ரவர்த்தியின் கண்களில் நீர் றைந்தது. அவர் கைகளை விரிக்க, அவரைக் கோனிஷ் றையில் வணங்கி நிமிர்ந்த ஸலீம், அவர் அணைப்பில் ழுந்தார். அந்த இரு மனிதர்களும் தழுவிக் கொண்டிருப்பதை சபையிலுள்ளோர் மௌனமாகப் பார்த்துக் கொண்டி ந்தனர்.

நடுக்கிட்டவாறு அக்பரின் அணைப்பிலிந்து ஸலீம் பின் ங்கினார். அவர்கள் சந்தித்து மூன்று வருடங்களா ன்றன. அவர் தந்தை வயது முதிர்ந்தவர் போல் தோற்ற ளித்தார். அவனை அணைத்த தோள்கள் எலும்புகள் தியுமாறு மெலிந்து இருக்கத் தலைமுடி முற்றிலும் ளுத்திருந்தது. நெற்றியில் கவலைக் கோடுகள் தெரிந்தன.

"தந்தையே, என்னுடைய நானூறு யானைகள் கொண்ட டையைத் தங்களிடம் சமர்ப்பிக்கிறேன்."

"அரச சபையில் நீ இல்லாததை நாங்கள் வெகுவாக உணர்ந்தோம்." நடுவாக்கியத்தில் சக்ரவர்த்தியின் குரல் டைந்தது.

அக்பர் சிறிய சைகை செய்ய, கௌரவிப்பதற்காக போர்த்தும் மேல் அங்கியையும், விலையுயர்ந்த கற்கள் பதி வாள்களையும் பணியாட்கள் எடுத்து வந்தனர்.

"இன்னும் அருகில் வா, ஸலீம்."

தனது கற்களால் அழகுசெய்யப்பட்ட தலைப்பாகையை கழற்றி, அக்பர், ஸலீமின் தலையில் சூட்டினார். சட்டென்று சபையில் மெல்லிய சப்தம் எழுந்து அடங்கியது. ஸலீ ஆச்சரியத்துடன் கைகளை உயர்த்தித் தன் தலையிலிருக்கு முன்னால் பரிச்சியமில்லாத அந்தப் பொருளைத் தொ அந்தப் பேரரசர்கள் அணியும் தலைப்பாகையில் இரு விலை மதிப்பில்லா கற்களை விரல்களால் தடவினா அதன் கனம் எவ்வளவு இன்பமாக இருக்கிறது!

"என்னை மிகவும் கௌரவித்திருக்கிறீர்கள், தந்தைே சக்ரவர்த்திக்கு மட்டும் கேட்கும்படி ஸலீம் மெதுவா கூறினார்.

அக்பர் அவனை வெகு நேரம் உற்றுப்பார்த்தார். ஸலீ சிறிதும் தயங்காமல் அவர் பார்வையை நேருக்கு நே சந்தித்தார். அவர் தன் தந்தையை மறுபடியும் தொ ஆசைப்பட்டார், அவரை மறுபடியும் தழுவிக்கொள்ள கடந்த சில வருடங்களாக அவர் செய்த முட்டாள்தனமா செய்கைகளுக்கு மன்னிப்பு கேட்க விரும்பினார். ஆனால் அவர் பார்வையில் மன்னிப்புத் தெரியவில்லை. அவர் செய்கைகளை ஒப்புக்கொள்ளாத மனநிலையும், துக்கமும் தான் தெரிந்தன.

"இந்தச் சாம்ராஜ்ஜியத்திற்கு ஒரு வாரிசு வேண்டும் உன்னையன்றி வேறு ஒருவருமில்லை."

"அந்தக் காரணத்திற்காகத்தான் நீங்கள் என்னை ஆக்ரா வரச் சொன்னீர்களா, மாட்சிமை பொருந்தியவரே?" கோபம் தலைதூக்க ஸலீம் வினவினார்.

"யாம் உன்னை வரச்சொல்லவில்லை" அக்பர் பதிலளித்தார்.

"இல்லை" தன் தலைப்பாகை மீது கைவைத்து ஸலீம் சரியாகத் தலையில் அமருமாறு சரி செய்துகொண்டு, என்னை வரச்சொல்லவில்லை. எனக்குத் தெரியும். பாழுது உங்கள் முன்னிலையிலிருந்து செல்வதற்கு கொடுக்கமுடியுமா, மாட்சிமை பொருந்தியவரே?"

அக்பர் தலையசைத்தார். ஸலீம் தலைப்பாகையைக் மரியாதையுடன் அக்பர் கைகளில் வைத்தார். கைக் குனிந்து வணங்கி விட்டுப் பின் புறமாகவே முன் வரிசையிலிருந்த அரச சபை உறுப்பினர்களைக் து, இரண்டாவது வரிசையிலிருந்த மேன்மக்களைக் து, மூன்றாவது வரிசையிலிருந்த குடிமக்களைக் கடந்து யாக வெளிமுற்றத்திலிருந்த யானைப் படையைக் து, அந்த மக்கள் சபையை விட்டு வெளியேறினார். ருந்த எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டி னர். ஆனால், அவர் தன் மனதிலிருந்த உணர்ச்சிகளைக் கூட வெளிகாட்டவில்லை.

ஸலீம் வெளியேறும் வரை சபை நிசப்தமாக இருந்தது. இரண்டு ஆண்களுக்கும் இடையில் நிகழ்ந்த பேச்சு தைகளைக் கேட்க இயலாத அந்தப்புரத்துப் பெண்கள் னவே சளசளவென்று பேசத்தொடங்கினர். அதே ல் அரச சபை உறுப்பினர்களும்தான்.

பேரரசருக்குரிய தலைப்பாகையைத் தன் மகனின் யில் அணிவிப்பதின் மூலம் சக்ரவர்த்தி தனக்கு அடுத்த ஸலீம்தான் என்பதை ஒரு சந்தேகமுமில்லாமல் னப்படுத்தியுள்ளார்.

முகம் சிவக்க, மெஹ்ருன்னிஸா திரைத்தட்டியின் னிருந்து விலகினாள். ஸலீம் மாறவேயில்லை, வெளிப் வைக்குமட்டுமாவது மாறியதாகத் தோன்றவில்லை. க்ரவர்த்தியும் ஸலீமும் சென்றபிறகு தர்பாரில் உள்ளோர் லந்து செல்வதை அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். லீம் இனிமேல், ஆக்ராவில், அவர் தந்தைக்கு அருகில் ப்பார். சாம்ராஜ்ஜியத்தில் இப்பொழுது சிறிது அமைதி ாகும். அந்த வழியே சென்று கொண்டிருந்த ஒரு

பெண், ஏதோ ஒரு பெயரைப் பற்றி திடீரென்று சொல்
மெஹ்ருன்னிஸா சட்டென்று தலையைத் திருப்பி அ
திசையில் பார்த்தாள். சட்டென்று உடலில் குளிர் பாய்ந்த
போல் உணர்ந்தாள். ஸலீமைப்பார்க்கவேண்டும் என
அவளது ஆவலில், அவள் கூட மறந்துவிட்டாள். ஆனா
கேள்விப்படும் விஷயம் ஒன்றும் நல்ல மாதிரியில்லை. அ
ஸலீமும் அறிந்திருக்க வேண்டும். ஸலீமின் மகன் குஸ்ரு
பற்றிய நினைவேயில்லை.

"மேவாரில் நடக்கும் முற்றுகையைக் கண்காணி
நான் அங்கு திரும்பிச் செல்லவேண்டும் என
சக்ரவர்த்தி விரும்புகிறார்." இளவரசர் ஸலீம் கோபத்துட
தன் மாளிகை அறையில் நடந்து கொண்டிருந்தார்.

தாங்கள் செய்து கொண்டிருக்கும் வேலையிலிருந்
மஹபத் கான், கோக்கா, அப்துல்லா மூவரும் அதிர்ச்சியுட
கலக்கத்துடனும் நிமிர்ந்தனர். அலஹாபாத்தில் கவர்னரா
நியமிக்கப்பட்ட முகமத் ஷாரீப் அங்கேயே தங்கிவிட்டான்

"எப்பொழுது?" தான் படித்துக் கொண்டிருந்த
அறிக்கையைக் கீழே வைத்தவாறு மஹபத் கேட்டான்.

"கூடிய சீக்கிரத்திலேயே" ஒரு கோப்பை மதுவிற்காக
சைகை செய்தார் ஸலீம்:

"ஆனால் ஏன், மாட்சிமை பொருந்தியவரே? இராணுவத்
தலைமை அதிகாரி கான்—ஐ—கானனும் இளவரசர் தனிப்
லும் தக்காணத்தில் இருக்கிறார்கள். அவர்கள் சுலபமாக
மேவார் சென்று முற்றுகையைத் தலைமை தாங்கமுடியும்."

ஸலீம் மதுவை ஒரே மூச்சில் குடித்து விட்டு மேலும்
கோப்பையை நிரப்புவதற்காக நீட்டினார். "தனியாள் ஒ
மட்டமான தலைவன் என்று உனக்குத் தெரியும். அவன்
அதிகமாக மது அருந்திக் கொண்டு, அவன் நேரத்தை
எல்லாம் அந்தப்புரத்தில் கழிக்கிறான் என்று தெரியும். நான்
அங்கு போய்ப் படைகளுக்கு நம்பிக்கை ஊட்டி, வீரர்களை
உற்சாகப்படுத்தவேண்டும். இவை எல்லாம் சக்ரவர்த்தியின்
வார்த்தைகள். என்னுடையது அல்ல."

"மாட்சிமை பொருந்தியவரே!" அப்துல்லா அவசரமாகப்
பேசத் தொடங்கினான். "இப்பொழுது இந்த மிக முக்கியமான
தருணத்தில் நீங்கள் ஆக்ராவை விட்டுச் செல்லக்கூடாது. நான்
சொல்லப்போகிறதைக் குறித்து நீங்கள் என்னை மன்னிக்க
வேண்டும். சக்ரவர்த்தி உடல்நலம் குன்றி இருக்கிறார்...
அவருக்கு வயதாகி விட்டது. ஆகையால்..." அப்துல்லா
வார்த்தையை முடிக்காமல் விட்டான்.

அவன் சொல்லவிருந்ததை ஸலீம் அறிவார். அக்பரின்
மரணம் சீக்கிரம். நிகழக் கூடியது. ஸலீம் இப்பொழுது
ஆக்ராவை விட்டு சென்றால், ஒரு வேளை அக்பர் இறந்து
விட்டால், அவர் வெகு தூரத்தில் இருப்பதால், சிம்மா
னத்தைக் கைப்பற்றுவது கடினம். பக்கத்திலிருந்த தேக்கு
மேஜையில் விரல்களால் தாளமிட்டார். அதனால்
என்ன? சக்ரவர்த்தி அவரைத் தன் வாரிசாக அறிவித்துள்ளார்.
அவருக்கு மேவார் போக விருப்பம் இல்லையெனினும்,
அப்படி அங்கு போவது, ஏதாவது உருப்படியாகச் செய்ததாக
இருக்கும்.

ஆக்ரா திரும்பி வந்தபின் அவர் எதிர்பார்த்தது போல்
நிலைமை சீராக இல்லை. ஸலீமும் அக்பரும் அவர்கள்
சச்சரவிற்கு முன்பு இருந்ததைவிட அதிகநேரம் சேர்ந்து
கழித்தனர். ஆனாலும், நிலைமை பழையமாதிரி இல்லை.
இடையில் பல விஷயங்கள் நடந்து விட்டன, பொக்கிஷச்
சாலையைக் கைப்பற்ற முனைந்தது, பாஸலின் மரணம்
என்று அரசரின் அந்தப்புரத்தில் இருக்கையில் மட்டும்
அவர்களிடையே உறவு சுமுகமாக இருந்தது. அதற்குக்
காரணம் அரசரின் மனைவிகள் அவர்கள் இடையே இருந்த
இறுக்கத்தைக் குறைக்கப் பலவிதத்திலும் உதவினர்.

இளவரசரைச் சுற்றியிருந்த மூன்று மனிதர்களும்
அவரைக் கவனத்துடன் பார்த்தனர். அரச சபையில்
அவருடைய நிலைமையை அவர் அறியவில்லையா? அவர்
துப்பாக்கியைக் கைப்பற்றி அரியணையில் அமரத் துடித்துச்
செய்த நடவடிக்கைகள் எல்லாம், அரச சபையின் சக்தி
வாய்ந்த உறுப்பினர்களின் விரோதத்தை அவருக்கு ஏற்படுத்தி

விட்டது. அரியணை தனக்குத்தான் என்ற நம்பிக்கையில் ஸலீம் அந்த அரசவை உறுப்பினர்களின் விசுவாசத்தைப் பெறும் முயற்சி எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை. இப்பொழுது சக்ரவர்த்தியுடன் அவருக்கிருக்கும் உறவு மெல்லிய நூலிழை போல் இருக்கையில், அந்த உயர்குடி உறுப்பினர்கள் அவருக்கு எதிராக இணைந்து செயல்பட தொடங்கி உள்ளனர்.

"இப்பொழுது ஆக்ராவை விட்டுச் செல்வது புத்திசாலித்தனமான காரியம் இல்லை என்பதை நானும் உணர்கிறேன்" ஸலீம் தொடர்ந்தார். "ஆனால் என் தந்தை உத்திரவிட்ட படியால் நான் அதற்குப் பணிந்தே ஆகவேண்டும். மேலும் அரியணை எனக்கு கிடைப்பது பற்றி ஒரு பயமுமில்லை. சக்ரவர்த்தியே எல்லோர் முன்னிலையில் என்னை அவருக்கு வாரிசாக அறிமுகப்படுத்தி இருக்கிறார். தனியால் பற்றி ஒரு அச்சமுமில்லை. வேறு யாரிருக்கிறார்கள்?"

"இளவரசன் குஸ்ரு, மாட்சிமை பொருந்தியவரே!" குதுப்புதின் கோக்கா முதன்முறையாகப் பேசினான்.

ஸலீம் திடுக்கிட்டு அவனை நோக்கினார்.

"குஸ்ரு? என் சொந்த மகன்?"

"ஆமாம், மாட்சிமை பொருந்தியவரே, ராஜா மான் சிங்கும் மிர்ஜா அஸிஸ் கோக்காவும் அவனுக்கு ஆதரவு கொடுக்க ஒரு கூட்டத்தைச் சேகரித்து வருவதாகக் கேள்விப் பட்டேன்."

ராஜா மான்சிங், ஸலீமின் முதல் மனைவி மான் பாயின் சகோதரன், குஸ்ருவிற்கு மாமா, ஆப்கானியர்களின் எதிர்ப்பை அடக்கி விட்டு அவர் இன்னும் வங்காளத்தில் தான் இருக்கிறார். அவ்வளவு தொலைவில் இருந்தாலும் அரச சபையில் அவருக்கு நெருங்கிய நண்பர்கள் உண்டு.

மிர்ஜா அஸிஸ் கோக்கா அக்பரின் உடன்பிறவா சகோதரர் போன்றவர். சமீபத்தில் அவர் குஸ்ருவின் மாமனாரும் ஆகிவிட்டார். கோக்காவின் தாயார்தான்

அக்பருக்கும் பாலூட்டிய செவிலித்தாய். அஸிஸ் கோக்கா மான்சிங்கும்—குஸ்ருவின் மாமனாரும், மாமாவும்—இளைஞன் வயது குஸ்ருவை முகலாய சாம்ராஜ்ஜியத்தின் சிம்மாசனத்தில் அமரச் செய்வதில் நிச்சயம் ஆர்வம் காட்டுவார்கள். குஸ்ரு அவர்கள் கண்காணிப்பில்தான் இருப்பான்.

"குஸ்ருவை அரியணையில் அமரச் செய்வது பற்றிச் சக்ரவர்த்தி நினைத்துப் பார்க்கக் கூட மாட்டார். இயல்பாக வரவேண்டிய வாரிசு முறையை அது மீறுவதாகும். மேலும் என் மகன் என்னை எதிர்க்க எப்படித் துணிவான்?" ஸலீம் உரக்கக் கூறினார். தான் சொன்ன வார்த்தைகளின் உள் அர்த்தத்தைச் சட்டென்று உணர்ந்து தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். குஸ்ரு அப்படிச் செய்தாலும் அது அவன் தகப்பனர் செய்ததை உதாரணமாக எடுத்துக் கொண்டு செய்வதுபோல் தானே? ஆனால், இது அவ்வளவு சாதாரண விஷயம் இல்லை. குஸ்ருவின் குழந்தைப் பருவத்தில் ஸலீம் அவனை அதிகம் பார்த்ததில்லை. சில விசேஷ நிகழ்ச்சிகளில் ஸலீம் முன்னிலையில் அழைத்து வரப்பட்டு உடனேயே அவன் தாதிகளிடமும் பணியாட்களிடமும் சென்று விடுவான். அவனைப் பற்றி அதிகம் அறிந்து கொள்ளாத காரணத்தினாலேயே ஸலீம் தன் மகனிடம் அதிக அன்பு செலுத்தவில்லை.

"எதற்கும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது, மாட்சிமை பொருந்தியவரே!" மஹபத்கான் கூறினான். பல தினங்களாக மிர்ஜா அஸிஸ்கோக்கா பேரரையின் மேல் நிலை உறுப்பினர்களைச் சந்தித்து வருகிறார். நிச்சயம் அவர் களது ஆதரவை நாடித்தான் இருக்கும். நிலைமை இவ்வாறு இருக்கையில் நீங்கள் மேவார் செல்லாமல் இருப்பதுதான் நல்லது."

"அரசக் கிரீடம் என் தலைக்கு வருவதற்கு முன்பே குஸ்ரு எனக்கு எதிராக நடவடிக்கை எடுப்பான் என்று என்னால் நம்பமுடியவில்லை. ஆனால், நான் என்ன செய்ய முடியும்? சக்ரவர்த்தியின் ஆணையை என்னால் மீற

முடியாது" ஸலீம் கூறினார். இருந்தாலும் இந்தப் புதிய அபாயம் தோன்றுகையில் அவரால் எப்படிச் செல்ல முடியும்?

"ஒரு வேளை நீங்கள் மேவார் செல்வதுபோல் நடிக்கலாம். தலைநகரை விட்டுச் சிறிது தூரம் சென்றவுடன் தம் பயணத்தை தாமதிக்கலாம்..." கண்கள் பளபளக்க மஹபத் கூறினான். "ஏதாவது காரணம் கண்டுபிடிக்கலாம், மாட்சிமை பொருந்திய இளவரசே!"

ஸலீம் அந்த மூன்று நபர்களையும் பார்த்தார். அவர்கள் சொல்வதுதான் சரி, தலைநகரை விட்டு அவர் தற்சமயம் செல்லக் கூடாது.

தன் இராணுவப் படைகளுடன் இளவரசர் பயணத்தைத் துவக்கி, ஆக்ராவிலிருந்து ஒரு நாள் பயண தூரத்திலுள்ள பதேபூர் சிக்ரி வந்தடைந்தார். அவர் பிறந்ததைக் கொண்டாடுவதற்காக அவர் தந்தை நிர்மாணித்த அந்த நகரத்தில் முகலாய சாம்ராஜ்ஜியத்தின் தலைநகரமாக விளங்கப்போகும் என்று அவர் தந்தை ஆவலுடன் நினைத்துக் கொண்டிருந்த அந்த நகரத்தில், அவர் தன் படைகளுடன் முகாமிட்டுத் தங்கினார். பதேபூர் சிக்ரி வந்ததில் அவருக்கு ஒரு ஆறுதல் இருந்தது. அங்கிருக்கும் மாளிகைகளில்தான் அவர் வளர்ந்தார்; அங்குதான் மஹபத், கோக்கா மற்றும் ஷரீபுடன் கண்ண கட்டு விளையாட்டு விளையாடியிருக்கிறார். இது அவரது குழந்தைப் பருவ வீடு. இந்தப் பெரிய சாம்ராஜ்ஜியம் இடையில் இல்லாத பொழுது, அவருக்கும் சக்ரவர்த்திக்கும் இடையே இருந்த சந்தோஷமான நாட்களை மறுபடியும் அடைய முடியாது என்பதை எப்படி அவர் இப்பொழுது உணர்ந்தாரோ, அவ்வாறே இனிமேல் அவருக்கும் அக்பருக்கும் இடையே சுமூகமான உறவு ஏற்பட வாய்ப்பில்லை என்பதையும் அவர் உணர்ந்தார். அந்தப் பரஸ்பர நம்பிக்கையைத் திரும்பவும் பெறமுடியாது. உடன் இருக்கும் தோழர்களின் தூண்டுதலால் அவர் அக்பருக்குத் தொடர்ந்து செய்திகள் அனுப்பி வந்தார்: படைகள் முழுமையாகத் தயாரான நிலையில் இல்லை... காலாட்படை

[illegible]க்குத் துணையாக வேண்டிய அளவு குதிரைப்படைகள் [illegible]லை... யானைப்படையிலுள்ள யானைகள் உடல் நல[illegible]மல் இருக்கின்றன... என்று பல செய்திகள்... மேவார் [illegible]ச் செல்வதற்கு முன்னால் இன்னும் அதிகமான படை[illegible]கள் தேவை என்று கோரிக்கை அனுப்பினார்.

ஒரு மாதத்திற்குப் பிறகு, ஸலீமின் இந்தக் காலம் [illegible]த்தும் போக்கினால் வெறுத்துப் போய், அக்பர் உடனே [illegible]ராபாத் திரும்பிச் செல்லும்படி அவருக்குச் சுருக்கமான [illegible]ஒன்று அனுப்பினார். அங்கிருந்துகொண்டு [illegible]னத்தைப் பெருக்கி, அவருக்கு திருப்தி தரும் வகையில் [illegible]டையைத் தயார் நிலைக்குக் கொண்டுவரச் சொல்லி [illegible]க்பர் ஆணையிட்டார். ஸலீம் அதற்கு உடன்பட்டு [illegible]ராபாத் திரும்பினார்.

அக்பருக்கு ஸலீமிடம் ஏற்பட்ட அதிருப்தியை உணர்ந்து கொண்டு மிர்ஜா கோக்காவும் ராஜா [illegible]ங்கும் குஸ்ருவை அரியணையின் மற்றொரு வாரிசாக [illegible]தெடுப்பதற்கான முயற்சியை மேலும் அதிகரித்தனர். [illegible]ல் அவர்களுக்கு ஒரு சாதகமான விஷயமும் இருந்தது. [illegible]ரு ஒரு வசீகரமான நல்ல நடத்தையுள்ள அழகிய [illegible]ளைஞன். ஜனங்களால் நேசிக்கப்படுகிறவன். அவன் [illegible]பனாரை விட மக்களிடையே அதிகமாகப் பிரபலமான [illegible]ன். சக்ரவர்த்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ததாலும் [illegible]ல் பாஸலின் மரணத்திற்குத் துணை போனதாலும் [illegible]ளவரசர் ஸலீம் மக்களின் வெறுப்பிற்கு ஆளாகியிருந்தார்.

ஸலீம் செய்து கொண்டிருப்பதுபோல், இப்படி அடுத்த [illegible]லைமுறையும் தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் [illegible]தொடங்கியது. இப்படித் தந்தையும் மகனும் ஒருவர் [illegible]மற்றொருவர் செய்கைகளைக் கண்காணித்துக் கொண்டி[illegible]க்கையில் அரியணையின் மற்றொரு வாரிசான இளவரசர் [illegible]லமானார்.

அக்பரின் மற்றொரு மகனான இளவரசர் தனியால், [illegible]க்காணத்தில் இராணுவத் தலைமை அதிகாரி அப்துல்

ரஹீமின் துணையுடன் அங்கு நடக்கும் யுத்தத்தைக் கண காணித்து வந்தான். தனியால், பகல் நேரங்களிலும் இர களிலும் மது மயக்கத்தில் மூழ்கித் தன் மனைவிகளுட அடிமைப் பெண்களுடனும் பெரும் பொழுதைக் கழித்தான் இராணுவத் தளபதிக்குத் தனியாலைக் கண்டித்துத் திருத்த சொல்லி அக்பர் ஒரு கடுமையான உத்தரவை அனுப்பினார் சக்ரவர்த்தியின் கோபத்திற்குப் பயந்து, இளவரசர் தனிய லுக்கு மது, ஓபியம் இவற்றைக் கொடுப்பதைத் தடைசெய் நல்ல புஷ்டியான ஆகாரம் கொடுத்து, மயக்கம் தரு பொருள்களிலிருந்து ஒதுக்கி வைக்கும்படி, அப்துர் ரஹீ கட்டளையிட்டார்.

தனியால் மிகவும் அதிகமாக விரும்பும் இரண்டு விஷயங்கள், மது மற்றும் வேட்டையாடுதல். தனக்கு மிக பிடித்தமான ஒரு கைத்துப்பாக்கிக்கு அவன் 'யாகா ஜனாஸா' அதாவது, 'சவப்பெட்டியைப் போல்' என பெயரிட்டிருந்தான். ஏனெனில் அந்தத் துப்பாக்கியால் சுடப்பட்டால் நிச்சயம் சவப்பெட்டிக்குள் தான் செல்ல வேண்டியதாகும். ஆனால், முடிவில் அந்தத் துப்பாக்கியே பர்ஹாம்பூர் அரண்மனையிலிருந்து கால் முன்னே இருக்கும் படி அவன் எடுத்துச் செல்லப்படுவதற்குக் காரணமாயிற்று மது அருந்தமுடியாமல் மிகவும் துடித்துப்போன தனியால் தன் பணியாள் ஒருவனை அழைத்து எப்படியாவது மது எடுத்து வரச்சொல்லிக் கட்டளையிட்டான். அவனும் இளவரசரை திருப்தி செய்யும் நோக்கத்துடன் நன்கு சுத்தம் செய்யப்பட்ட திரவத்தை அந்தத் துப்பாக்கிக் குழலில் நிரப்பி மறைத்து எடுத்து வந்தான். அதைக் குடித்தவுடன் துப்பாக்கியில் மிச்சமிருந்த வெடிமருந்துப்பொடியும், குழலில் இருந்த துருவும் கலந்த அந்த மதுவினால் அவன் உடல் நலம் பெரிதும் பாதிக்கப்பட்டது. நாற்பது நாட்கள் உடல் நலம் குன்றி, மிகவும் கஷ்டப்பட்டு முடிவில் அவன் இறந்து போனான்.

தனியால் மரணமடைந்து விட்டதால் தான், அரியணை யைக் கைபற்றுவதற்குக் குஸ்ரு பெரிய தடையாக இருக்கக்

கூடும் என்பதை ஸலீம் உணர்ந்தார். சில நாட்களுக்கு முன் அவர் தோழர்கள் ஒரு அனுமானமாகக் கூறிய விஷயம், அனுமானமாக இருந்தாலும் அவர் அதை மதித்து நடந்து கொண்ட விஷயம், இப்பொழுது உண்மையாக ஆகிவிடும் போலிருந்தது. குஸ்ருவின் நிலை மேலும் மேலும் வலுவடைந்து வந்தது. ஸலீம் அலஹாபாத்தில் இருக்கையில், நாளுக்கு நாள் கூடிவந்து வரும் சக்ரவர்த்தியின் அருகிலேயே அரசசபையில் குஸ்ருவும் அவன் ஆதரவாளர்களும் உள்ளனர்.

இதுவரை நடுநிலைமை வகித்து வந்தவர்கள், மேலும் பல அரசசபை மேன்குடி உறுப்பினர்கள் என்று பலரும் குஸ்ருவின் பக்கம் அவர்களது ஆதரவை வெளிப்படையாகவே காண்பிக்க ஆரம்பித்தனர். சக்ரவர்த்தி சீக்கிரம் இறந்து விடுவார் என்று நிச்சியமாகத் தெரிந்தது. அடுத்து அரியணைக்கு வருபவர் அவாகளது ஆதரவிற்குப் பலவிதங் களிலும் ஈடு செய்வார் என்பதும் தெரிந்ததே! நடுநிலைமை வகிப்பது தவறான மனிதனுக்குத் துணை போவது போல் அபாயகரமானதல்ல என்றாலும், கைமாறு எதுவும் அதிகமாகக் கிடைக்காது. ஆக்ராவில் ஆங்காங்கே இரகசியக் கூட்டங்கள் நடைபெற்றன. எந்த இளவரசர் வெற்றி பெறுவார்... இளவரசர்களுக்கு ஆதரவு அளிப்பதில் உள்ள லாப, நஷ்டங்கள் என ஆலோசனை செய்யப்பட்டது. அதன் முடிவில் அவரவர்கள் தேர்ந்தெடுத்த இளவரசருக்கு ஆதரவு அளிக்க முன் வந்தனர்.

மத சார்புள்ள இரண்டு கூட்டங்கள் இளவரசர் ஸலீமை அலஹாபாத்தில் சந்தித்தனர். பிற்போக்குக் கொள்கைகள் கொண்ட சில நாக்ஷ்பந்தி (Naqshbandis) இனத்தைச் சேர்ந்த 'சூபி' (Sufi) எனப்படும் கூட்டத்தினரான சில முகமதியர்கள், அக்பரின் முற்போக்குக் கொள்கைகளை ஆதரளிப்பவர்கள் அல்ல. அரியணை ஏறியபின் ஸலீம் பழைமையான வழி வழியாக வந்த முகலாய மதக்கொள்கைகளைப் பரப்பு வாராகில் அவருக்கு ஆதரவு கொடுப்பதாகக் கூறி அக்பரின் 'மீர் பக்ஷி' அதாவது செலவினங்களைக் கவனிக்கும் தலைமை அதிகாரி, ஷேக் பரீத் புகாரி (Shaikh Farid Bukhari) என்பவரை ஸலீமுடன் பேச அனுப்பி வைத்தனர். அவர்களது ஆதரவு

மிகவும் முக்கியமானதாகையால் ஸலீமும் உடனே அவர்களது கோரிக்கைக்குச் சம்மதம் தெரிவித்தார். ஸலீம் சிஸ்தியின் தலைமையிலான மற்றொரு 'சுபி' கூட்டத்தைச் சேர்ந்தவர்களின், ஆதரவு அவருக்கு ஏற்கெனவே உண்டு.

இரண்டாவது வலிமையுள்ள மதச்சார்பான கூட்டம் போர்த்துகீசிய யூதர்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள். பல காலமாகவே போர்த்துகீசியர்கள் இந்தியாவில் வசித்து வருகின்றனர். வடஇந்தியாவில் பல இடங்களில் அவர்களைச் சார்ந்தவர்கள் பரவி இருந்தனர். அவர்களது ஆதரவு மிகவும் மதிப்புள்ளது. ஏனெனில் அரபிக் கடலில் இருக்கும் பெரிய துறைமுகங்களான கோவா, சூரத் மற்றும் கேம்பே அவர்களது மேற்பார்வையில் இருந்தன. ஐரோப்பாவுடனோ அல்லது மத்தியக் கிழக்கு நாடுகளுடனோ செய்யும் வர்த்தகம் அவர்களது உதவியுடன்தான் செய்ய வேண்டியிருந்தது. தரை மார்க்கமாக வர்த்தகப் பரிவர்த்தனைகள் நடந்தாலும், கடல் மார்க்கமாக வர்த்தகம் செய்வதில் அதிக வருமானம் வந்தது. யூதர்கள் மதகுருக்கள் முடிந்த வரையில் நடுநிலைமையிலேயே இருந்தாலும், ஸலீமைவிட குஸ்ருதான் அவர்களது இனத்திற்குத் துணையாக இருப்பான் என்று தோன்றினாலும் முடிவில் ஸலீம்தான் வெற்றி பெறுவார் என்பதை உணர்ந்து அவருக்கு ஆதரவு அளிக்க முன்வந்தனர்.

ஒரு பக்கம் குஸ்ரு தன் தகப்பனாரிடமிருந்து அரியணையை அபகரிக்கச் சூழ்ச்சி செய்து வருகையில், அலஹாபாத்தில் ஸலீம் ஒரு போலித்தனமான அரசாட்சி செய்து கொண்டு சுகமாக இருந்தார். தன் கணவருக்கும் மகனுக்கும் இடையே இருக்கும் பிளவைக் கண்டு குஸ்ருவின் தாயார், இளவரசி மான்பாய் பெரிதும் வருந்தினாள். குஸ்ருவைக் கண்டித்து, அவன் கடமையை சுட்டிக்காட்டித் தந்தைக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அவனது அரியணை மீதான ஆசையை விட்டு விடச் சொல்லி மன்றாடி, அவனுக்குப் பல கடிதங்கள் அவள் எழுதினாள். ஆனால், அவள் பேச்சை அவன் காது கொடுத்துக்கூடக் கேட்கவில்லை. அரியணை மீதான மோகம் அவ்வளவு

[illegible]மையானது. அவன் தந்தையின் ஆட்சிக்காலம் முடியும் [illegible] காத்திருக்க வேண்டுமானால், அவன் அரியணை [illegible]தற்குக் குறைந்தது முப்பது ஆண்டுகளாவது ஆகும். [illegible]யில் மான்பாய் விரக்தி அடைந்து, அதிகமாக ஓபியம் [illegible], ஸலீமையும் அவனைச் சார்ந்தவர்களையும் துக்கத்தி[illegible] மரணமடைந்தாள்.

அவரது மருமகளின் மரணச் செய்தியைக் கேள்விப்[illegible]தும் சக்ரவர்த்தி ஸலீமிற்கு அநுதாபச் செய்தி அனுப்பி[illegible]. ஆனாலும் இருவரும் சந்தித்துக் கொள்ளவில்லை. [illegible]ருக்குச் சென்று அங்கு நடக்கும் போரை ஸலீம் [illegible]கணிக்க வேண்டும் என்று சக்ரவர்த்தி இன்னும் [illegible]த்தினர். ஆனால் ஸலிம் பிடிவாதமாக மறுத்து வந்தார். [illegible]கையும் மகனும் இந்த விஷயத்தில் எதிராகவே இருந்தனர். [illegible]னில், ஸலீம் அரியணை ஏறுவதற்கு குஸ்ரு ஒரு [illegible]யாக இருப்பான் என்று அக்பர் எண்ணவேயில்லை.

[illegible]டியில் ஒரு புத்தகத்தைத் திறந்து வைத்தவாறு, மெஹ்ருன்னிஸா எந்த இலக்குமில்லாமல் ஜன்னல் [illegible]யே வெளியே வெறித்துக் கொண்டிருந்தாள். வெளியே [illegible]ரிய ஒளி யமுனா நதியின் நீரை வெள்ளி போல் [illegible]ளக்கச் செய்து கொண்டிருந்தது. அவர்கள் வீட்டின் [illegible]ற்றை ஒட்டிப் படர்ந்திருந்த போகன்வில்லா கொடியின் [illegible]ப்புப் போன்ற ஆரஞ்சு நிறப் பூக்களைச் சுற்றித் தேனீக்[illegible] மந்தமாகச் சுற்றிக் கொண்டிருந்தன. ஆக்ரா நகரமே [illegible]பத்தினால் தூங்கியவாறு இருந்த போதிலும் மெஹ்[illegible]ன்னிஸாவின் மனம் துடிப்புடன் பல விஷயங்களை [illegible]க் கொண்டிருந்தது.

ஸலீமின் நடவடிக்கைகளை அவள் கவனமாகத் [illegible]தொடர்ந்து கண்காணித்து வந்தாள். அவர் எடுக்கும் [illegible]வொரு நடவடிக்கையும், முதலில் அவர் தந்தையின், பின் [illegible]சபை உறுப்பினர்களின், இப்பொழுது பொது மக்களின் [illegible]ராதத்தை அதிகரித்துக் கொண்டிருந்தது. ஜனங்களின் [illegible]ரவில்லாமல் ஒரு அரசாங்கம் செயல்பட முடியாது. [illegible]னால், ஸலீம் அதை உணரவில்லை. அவரிடம் மிகவும்

அன்பு செலுத்தி அவருக்கு ஆதரவாக இருந்து [illegible] அந்தப்புரத்து பெண்களின் விரோதத்தையும் அதிகரித்துக் கொண்டிருந்தார். சக்ரவர்த்தி உடல்நலம் வெகுவாகக் [illegible] இறக்கும் தருவாயில் இருப்பது கண்டு, அந்தப் பெண்கள் பெரிதும் வருந்தினர். அக்பர் இறந்து கொண்டிருக்கிறார் மெதுவாக ஆனால் நிச்சயமாக... அவர் மரணம் ஸலீமின் செய்கைகளால் துரிதப்படுத்தப்பட்டது.

மெஹ்ருன்னிஸா தீவிரமாகச் சிந்தித்தாள். மஹபத் கோக்கா மற்றும் ஷரீப் மூவரும் ஸலீமை ஆபத்தில் சிக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர். இவை எல்லாம் அவர்கள் சாம்ராஜ்ஜியத்தை ஆளவேண்டும் என்ற பேராசையால் வந்தது. அதற்காகக் காத்திருக்கக்கூட அவர்கள் தயாரில்லை. ஸலீம் அரியணை ஏறினால் ஆட்சி செய்வது அவராக இருக்காது. அவர் உடன் இருக்கும் இந்த மூவரும்தான் என்பதில் அவளுக்குச் சந்தேகமேயில்லை.

அவருடன் அவளுக்குத் திருமணம் ஆகியிருந்தால் இல்லை, அவள் நினைவை அவ்வாறு எடுத்துச்செல்லக் கூடாது. இருந்த போதிலும் அந்த எண்ணம் மறுபடியும் மறுபடியும் எழுந்தது. அவளால் மாத்திரம் அவருக்குச் சரியான வழிகாட்டமுடிந்தால், காத்திருந்து சரியான நேரத்தில் முடிவுகளை எடுக்க வேண்டும் என்று அவருக்கு உணர்த்தியிருப்பாள். எப்படியும் அரியணை அவருக்குதான் சந்தேகமேயில்லாமல். அவர்தான் சாம்ராஜ்ஜியத்தின் நேர் வாரிசு. ஆனால், இப்பொழுது குஸ்ருவைச் சக்ரவர்த்தியாக்க நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. அந்த அனுபவம் இல்லாத சிறுவன்—அவனால் எப்படி அரசாள முடியும்? நிச்சயம் அவனால் முடியாது. ஒரு பிரதிநிதியாட்சி வரும். அதனால் ஏற்படும் அமைதியின்மை, சாம்ராஜ்ஜியமே உடையக்கூடும்.

திடீரென்று எழுந்த சப்தம் அவள் கவனத்தைக் கவர்ந்தது. அலிகுலி அவசரமாக அறைக்குள் நுழைவதை மெஹ்ருன்னிஸா பார்த்தாள். ஆனால் வழக்கம்போல் அமர்ந்திருந்தாள். அவள் எண்ணங்களை அவள் முகம் காட்டிக் கொடுக்கவில்லை.

"தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும், என் [illegible]வே?" அமைதியாக மெஹ்ருன்னிஸா வினவினாள்.

அலிகுலி அவள் அருகில் மெத்தையில் விழுந்தான். அவன் முகம் ஆவலினால் எழுந்த மன எழுச்சியில் [illegible]ளுத்திருந்தது. அவன் தன் மனைவியைத் தீவிரமாகப் [illegible]ர்த்தான். "நான் ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறேன்... [illegible] செய்தி."

அவன் தொடர்ந்து பேசுவதற்காக அவள் காத்திருக்[illegible]தாள்.

"மிர்ஜா கோக்காவும் ராஜா மான்சிங்கும் அடுத்த [illegible]ரியணை வாரிசாக குஸ்ருவிற்கு ஆதரவு சேர்த்து [illegible]றார்கள்."

"எனக்குத் தெரியும்."

"நல்லது. நான் அவர்களுடன் சேருவதென்று முடிவு [illegible]ய்துவிட்டேன்."

மெஹ்ருன்னிஸா அவனைத் தீவிரமாகப் பார்த்தாள். "இளவரசர் ஸலீமிற்கு எதிரான கூட்டத்துடன் சேருவதற்கு..?"

"ஆமாம். இளவரசர் விவேகம் அற்றவர். சரியாகச் [illegible]ந்திக்காதவர். குஸ்ரு அவரைவிடமேலான சக்ரவர்த்தியாக [illegible]ருப்பார். மேலும்," அலிகுலி பல்லைக் காட்டியவாறு [illegible]ரித்தான். "அவன் ஒரு குழந்தை. நாம் சாம்ராஜ்ஜியத்தை [illegible]ளலாம்." அவன் கைகளைத் தேய்த்து விட்டுக்கொண்டான் "எவ்வளவு அதிகாரம் இருக்கும் என்று யோசித்துப்பார். [illegible]ராணுவத்தை நான் தலைமை தாங்குவேன், முழு காலாட் [illegible]டையும், குதிரைப் படையும் என் அதிகாரத்தின் கீழ்...." தனக்குக் கிடைக்கப்போகும் பதவியை எண்ணி அந்த [illegible]கத்தை அனுபவித்தவாறு அவன் குரல் மெல்லத் [illegible]தொடர்ந்தது.

"என் பிரபுவே..." எப்படித் தொடங்குவது என்று [illegible]மெஹ்ருன்னிஸா சிறிது தயங்கி விட்டு, "நீங்கள் கூறியது [illegible]போல் குஸ்ரு ஒரு குழந்தைதான், ஒரு வேளை," அந்தக்

கடைசி வார்த்தையைச் சிறிது அழுத்தமாக உச்சரித்தாள். "ஒருவேளை அவனைச் சக்ரவர்த்தியாக்கினால் சாம்ராஜ்ஜியத்தில் ஜனங்களிடையே அமைதியின்மை தோன்றும். சட்ட முறைப்படி அரியணைக்கு வரவேண்டிய வாரிசைத் தாண்டிச் செல்வது இயல்பல்ல. குஸ்ருவின் நேரம் இதுவல்ல. மேலும், இளவரசர் ஸலீம் சிம்மாசனத்திற்காகப் பதினைந்து வருடங்களாகக் காத்துக்கொண்டிருக்கிறார். அவரது உரிமையை அவ்வளவு சுலபமாக விட்டுக்கொடுத்து விடுவார் என்று நினைக்கிறீர்களா? கடைசியாக முடிவெடுக்க வேண்டியது சக்ரவர்த்தி அக்பர். அவர் ஸலீமை ஒதுக்கிவிடமாட்டார். அவர் மகன் உயிரோடிருக்கையில் பேரனுக்கு சாம்ராஜ்ஜியத்தைக் கொடுப்பது சட்டத்திற்கும் வாரிசு உரிமை வழக்கத்திற்கும் புறம்பானது."

"ஆனால், சக்ரவர்த்தி இறந்து விட்டால்...? பிறகு என்ன?"

"இறப்பதற்கு முன், சக்ரவர்த்தி இளவரசர் ஸலீமைத் தேர்ந்தெடுத்து விட்டே செல்வார். மாண்பு மிக்க பேரரசர் இந்த சாம்ராஜ்ஜியத்தில் அவருக்குள்ள பொறுப்புகளையும் கடமைகளையும் நன்கு அறிவார். அவர் முடிவை குஸ்ரு எதிர்த்தானாகில் அநாவசியமாக இரத்தம் சிந்தும் ஜனங்கள் காரணமின்றிச் சண்டையிட்டு மரணமடைவார்கள். ஏனெனில், அவர்கள் இருவரில் ஸலீம்தான் பலம் பொருந்தியவர்." மெஹ்ருன்னிஸா பதிலளித்தாள்.

"ராஜா மான்சிங் குஸ்ருவின் பக்கம் இருக்கிறார். சாம்ராஜ்ஜியத்திலேயே மிகத் திறமையான மிகுந்த அனுபவமுள்ள போர்வீரர் அவர் என்பதை மறக்காதே. ஸலீமிற்கும் குஸ்ருவிற்கும் இடையே யுத்தம் மூண்டால் ஸலீமிற்குத்தான் கடைசியில் தோல்வி கிட்டும்."

"ஆனால், ஜனங்களின் விருப்பம் என்பது ஒன்று இருக்கிறதல்லவா? அரச சபையிலுள்ள மற்றப் பிரபுக்கள் எப்படி ஒப்புவர்? சகாடை துருக்கியர்கள் (Chagatai Turks) பல நூற்றாண்டுகளாகப் பின்பற்றி வந்த வாரிசு முறைச் சட்டத்தை மீறுவதை அவர்கள் அனுமதிப்பார்களா?"

"ஹும்..." அலிகுலி சிறிது நிதானித்தான். மற்ற அரசசபை உண்மைகளைப்பற்றி அவன் நினைத்துப் பார்க்கவில்லை. அவளுடைமைதான். மிர்ஜா கோக்காவும் ராஜா மான்சிங்கும் அரச சபையில் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் தாம். ஆனால், இன்னும் பல சக்தி வாய்ந்த உறுப்பினர்களின் ஆதரவும் அவசியம். அலிகுலி யோசித்தான். மற்றவர்களின் மனைவிகள் போல் ஏன் அவன் மனைவி இல்லை? தங்கள் கணவர்கள் எடுக்கும் முடிவை அவர்கள் கேள்வி ஏதும் கேட்காமல் ஆதரிக்கின்றனர். ஏன் மெஹ்ருன்னிஸா அப்படி இல்லை.?

"இப்பொழுது கூட மிர்ஜா கோக்கா அரச சபையின் மற்ற உறுப்பினர்களின் ஆதரவு கேட்டுப் பேசி வருகிறார். அவர்கள் நிச்சயம் எங்கள் பக்கம் அனுசரித்துப் போவார்கள்" அவன் இறுமாப்புடன் கூறினான்.

"குஸ்ரு நிச்சியம் தோல்வி அடைவான்" அலிகுலியின் வளர்ந்து வரும் புத்தியைக் கண்டு கோபத்தில் உரக்க கத்தவேண்டும் என்ற தன் ஆவலைக் கட்டுப்படுத்தியவாறு மெஹ்ருன்னிஸா கூறினாள். அலிகுலி வெறும் போர்வீரனாக மாத்திரம் இல்லாமல் ஒரு இராஜ தந்திரியாக இருந்தால் இந்த நிலமையின் இயலாமையைப் புரிந்து கொண்டிருப்பான். யுத்த களத்தில் தலைசிறந்த வீரனாக இருக்கும் ஒருவன் எப்படி மற்ற விஷயங்களில் முட்டாளாக இருக்கிறான்? இளவரசர் ஸலீமைக் கொலை செய்யாமல் குஸ்ரு அரியணை ஏற முடியாது. அப்படிச் செய்தாலும் அவனால் அதை தக்க வைத்துக் கொள்ள முடியாது. "இந்த சமயத்தில் நாம் நடுநிலைமை வகிப்பதே சரி. நிலைமை எப்படி முன்னேறுகிறதென்று நாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டும், என் பிரபுவே,"

"இல்லை!" அலிகுலி இரைந்தான். "நான் முடிவெடுத்து விட்டேன். என் ஆதரவு இளவரசர் குஸ்ருவிற்குத் தான். இத்துடன் இந்தப் பேச்சு முடிவடைகிறது."

வெளியேறுகையில் அவன் மறுபடியும் திரும்பினான். "உன்னிடம் அறிவுரை கேட்பதற்காக நான் வரவில்லை, மெஹ்ருன்னிஸா. நான் செய்யப்போவதை உன்னிடம்

சொல்வதற்காக மட்டும்தான் வந்தேன். அது கூட அவசியம் இல்லை என்று தோன்றுகிறது." அவள் வாயைத் திறக்கவிடாமல் அவன் கையை உயர்த்தினான். "மௌனமாக நான் சொல்வதைக் கேள். உன் ஈடுபாட்டை வீட்டைப் பராமரிப்பதிலும் நீ பெறப்போகும் குழந்தைகளைக் கவனிப்பதிலும் வைத்துக் கொள். இது ஆண்களின் வேலை. ஒரு பெண் செய்ய வேண்டிய காரியத்தை உன்னால் செய்ய முடியவில்லை என்பதால் இந்த விஷயங்களில் நீ தலையிடலாம் என்று எண்ணாதே."

"இப்படி என்னிடம் பேசாதீர்கள்" அவன் வார்த்தைகள் அவள் இதயத்தை துளைத்தது.

"என் விருப்பம் போல் உன்னிடம் பேசுவேன். நான் உன் கணவன். உன் தகப்பனர் ஒரு சக்தி வாய்ந்த அரசபை உறுப்பினர் என்று எனக்குத் தெரியும். சக்ரவர்த்தி அவரிடம் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார் என்றும் தெரியும். ஆனால், நீ என் கூரையின் கீழ் வசிக்கிறாய். நீ என் மனைவி. உன் தகப்பனரின் மகளாக இனிமேல் இல்லை. புரிகிறதா?"

அவள் அவனைக் கோபமாக முறைத்தாள். இதற்கு முன் இருந்ததைவிட அதிகமாக இப்பொழுது அவன்மேல் வெறுப்பு ஏற்பட்டது. கணவனிடம் அடங்கி நடக்கவேண்டும் எனச் சிறுவயதில் கூறப்பட்ட பாடங்கள் மறந்து போயின. அலிகுலி குனிந்து அவள் கையிலிருந்த புத்தகத்தை அகற்றி விட்டு அவள் உள்ளங்கைகளை ஒன்று மாற்றி ஒன்று முத்தமிட்டான். "நான் தொடுகையில் நீ உடல் கூசி ஒதுங்காமல் இருப்பதைப் பார்க்க நன்றாக இருக்கிறது."

அவன் வேகமாக அறையைவிட்டு வெளியேறினான்.

அவன் சென்றவுடன் தன் கைகளை முன்னால் நீட்டிப் பார்த்தவாறு மெஹ்ருன்னிஸா தரை விரிப்பில் மெதுவாக வீழ்ந்தாள். அவன் தொட்ட நினைவுகளை அழிக்க விரும்பியவள் போல், கைகளின் மேல் துப்பி, எச்சிலைக் கோபமாகத் தேய்த்துக் கொண்டாள். தலைமுடி அவள் முகத்தை மறைக்க... நொறுங்கிப்போய்த் தரையில் வீழ்ந்து கிடந்தாள்

அடக்கமுடியாமல் கண்ணீர் வழிந்து அவள் மூச்சைத் திணறச் செய்தது. அளவிடமுடியாதபடி அவளைச் சோர்வுறச் செய்தது. ஒருமணி நேரம் கழிந்தபின்னும் அவள் விரிப்பில் வீழ்ந்து கிடந்தாள். விரிப்பின் வேலைப்பாடுகள் அவள் ஈரமான கன்னத்தில் பதிந்திருந்தன. இந்தத் திருமணப் பந்தத்திலிருந்து வெளியேற முடியாது. இந்த வாழ்க்கையிலிருந்து தப்பிக்க முடியாது. இப்படியே தொடர வேண்டியது தான். குடும்பத்தில் நடக்கும் விசேஷ நாட்களில் முகத்தில் ஒரு போலிப் புன்னகையைச் சுமந்தபடி அவள் இப்படியே இன்னொரு அடியாக செல்ல வேண்டியதுதான்.

மெஹ்ருன்னிஸா திரும்பிக் கூரையைப் பார்த்தவாறு மல்லாந்து படுத்தாள். தன் பாவாடையின் மேல் கை வைத்து வயிற்றை மெதுவாகத் தொட்டாள். பின் கையை உள்ளே விட்டு வயிற்றை தடவிக் கொண்டாள். ஐந்து வாரங்கள் சென்று விட்டன. தினமும் இரத்தப் போக்கு வருகிறதா என்று அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். ஐந்து வாரங்கள்... அவள் அலிகுலியிடம் இன்னும் கூறவில்லை.

கைகளை வயிற்றில் வைத்தவாறே, தான் பிணைக்கப்பட்ட மனிதனைப் பற்றிச் சிந்தித்தாள். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, இளவரசர் ஸலீம் மேவாரை விட்டுக் கிளம்பிப் போக்கிஷச்சாலையைக் கைப்பற்ற முயன்ற பொழுது அவர் தந்தையிடமிருந்து தன் படைகளுடன் அலஹாபாத்திற்குச் செல்லுகையில் அலிகுலி அவரை விட்டு விலகி வந்து விட்டான். அது ஒரு புத்திசாலித்தனமான நடவடிக்கை. அவளது உள் மனதில் இளவரசருடைய பலவிதத் தவறான செயல்களுக்கும் மீறி அவரிடம் ஒரு விசுவாசம் இருந்த போதிலும், அவருக்காகச் சக்ரவர்த்தியை எதிர்ப்பது சரியான செயல் அல்ல. இப்பொழுதும் சக்ரவர்த்தியை எதிர்ப்பது சரியான செயல் அல்ல. ஏனெனில், இதற்குமுன் ஸலீம் பல தவறுகளைச் செய்திருந்தாலும் அக்பர் குஸ்ருவை விட ஸலீமையே ஆதரிக்கிறார் என்ற விஷயம் அந்தப்புரத்துப் பெண்களிடம் பேசும் பொழுதும், அவர்கள் அடிக்கடி சொன்ன விஷயங்கள் மூலமும் மெஹ்ருன்னிஸா அறிவாள்.

சக்ரவர்த்தியைப் பொறுத்தவரையில் குஸ்ரு ஒரு பொருட்டே இல்லை. ஒரு குழந்தை, ஒரு இடைஞ்சலே அன்றி அதற்கு சுறுத்தல் இல்லை. தற்போது இளைய இளவரசர் சக்ரவர்த்தியுடன் அரச சபையில் அமர்ந்திருந்தாலும் ஸலீமை ஒதுக்கி குஸ்ருவை அரியணை ஏற்ற அக்பர் எண்ணியதே இல்லை. அதனால், அவர் அவனைப் பொருட்படுத்தியதே இல்லை. ஆனாலும், ஸலீம் இப்பொழுதும் ஆக்ராவில் இருப்பது மிக அவசியம் என்று மெஹ்ருன்னிஸா நினைத்தாள். இந்த சமயத்தில் தலைநகரை விட்டுத் தள்ளியிருப்பது முட்டாள் தனம்.

திடீரென்று வயிற்றை பிரட்டி மயக்கம் வருவது போல் உணர்ந்து மெஹ்ருன்னிஸா தரையிலிருந்து எழுந்தாள். வெளிமுற்றத்திற்கு வேகமாக ஓடிக் காலையில் உண்ட சப்பாத்தி மற்றும் வாத்து முட்டைக் கறியை வாந்தி எடுத்தாள். அவள் கைகளால் வாயைத் துடைத்துக் கொள்கையில் அந்த துர்நாற்றத்தால் வயிறு கலங்கியது. அவளைக் கடந்து செல்லும் பணியாட்கள் அவள் நடுங்கி வாறு தூணில் சாய்திருப்பதைக் காணக்கூடும் என்பதை கூடச் சட்டை செய்யாமல் அவள் வெகுநேரம் முற்றத்திலேயே இருந்தாள். தயவு செய்து... அல்லா! தயவு செய்து இந்தக் கரு உயிருடன் இருக்கட்டும். ஒரு பெண் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்ற எனக்கு அருள் செய்! என்னை ஒரு முழுப் பெண்ணாக ஆக்கு! ஏனெனில் அவளுக்குக் குழந்தை பிறக்காத வரையில் அவளை ஒரு முழுமையான பெண்ணாக யாரும் கருதமாட்டார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

மெஹ்ருன்னிஸாவின் மௌனமான வேண்டுகோளை நிறைவேற்றுவது போல் இரண்டு வாரங்கள் கழித்து இளவரசர் ஸலீம் அலஹாபாத்திலிருந்து ஆக்ரா வந்தடைந்தார். மக்கள் சபையில் அக்பர் மறுபடியும் அவரைச் சந்தித்தார். தன் தலையிலிருந்து பேரரசருக்குரிய தலைப் பாகையை எடுத்து அக்பர் அந்த அவையோர் முன்னிலையில் ஸலீமின் தலையில் சூட்டினார். அது பார்ப்பவர்களுக்கு

[illegible]யமாக ராஜா மான்சிங்கிற்கும், மிர்ஜா கோக்காவிற்கும் [illegible]வாக அலிகுலி உள்பட குஸ்ருவின் ஆதரவாளர்கள் [illegible]வருக்கும் ஒரு எச்சரிக்கை போல் இருந்தது. அக்பர் [illegible]ன்நலம் மிகவும் குன்றியிருந்தார். அதில் சந்தேகமே [illegible]ல்லை—ஆனால் எல்லோர் முன்னிலையிலும் ஸலீமை [illegible]ழ்த்துவதற்காகவே தன் படுக்கையிலிருந்து அவர் எழுந்து [illegible]ருந்தார்.

இப்படி வெளிப்படையாக அவர் காட்டிய அன்பு [illegible]ருவை ஆதரிக்கும் கூட்டத்தினருக்குக் கலக்கத்தைக் [illegible]டுத்தது.

அத்தியாயம் பத்து

இது அக்பரை மேலும் சங்கடப்படுத்தியது. ஆனால், அவர் ஆவல் தீவிரமாகியது. அந்தச் சமயத்தில் குஸ்ரு அங்கே வந்து சக்ர வர்த்தியின் முன்னிலையில் அவன் தந்தையைப் பற்றி அளவுக்கு அதிகமாகவே கண்டனம் செய்தான். அக்பர் தனிமையை நாடினார். அடுத்த நாள் காலை அலியை கூப்பிட்டனுப்பினார். குஸ்ருவின் நடத்தையால் வந்த மனவலிதான் தன் உடல் நலம் குன்றியதற்கு காரணம் என்று அவனிடம் கூறினார்.

- H. BLOCHMANN and
H.S. JARRETT, trans., Ain-I-Akbari

1605ஆம் ஆண்டு... தாக்கும் சூரியனின் உஷ்ணத்துடன் கூடிய தினங்களாக ஆக்ராவில் கோடைக் காலம் துவங்கியது. பல மாதங்கள் சிந்து கங்கைச் சமவெளிகள் அபரிமிதமான வெப்பத்தில் வெந்து கொண்டிருந்தன. நதிகள் வரண்டு நூலிழைபோல் ஓடிக்கொண்டிருக்க... இரு புறமும் மணலும் கூழாங்கற்களும் கலந்த கரைகள் விரிந்து கிடந்தன. மீனவர்கள் வயிற்றுப் பிழைப்பிற்குத் தடுமாறிக் கொண்டிருக்கக் குடியானவர்கள் மேகமில்லாத ஆகாயத்தை வெறித்தவாறு, வரண்டு கிடந்த நிலங்களில் நாற்றுகள் மஞ்சளாகி வாடுவதைக் கண்டு மனம் நொந்தனர். அகலமாக வழவழவென்று கண்ணாடி போல் நகரத்தில் பாயும் யமுனா நதிகூட, மழையில்லாத காரணத்தால், கலங்கிச் சேராக மாறி இருந்தது. கோடை மழையும் வழக்கம்போல் தாமதமாக வரும் போலிருந்தாலும், இந்த வருடம் அது வரவே வராதோ என்பது போலும் தோன்றியது.

ஆக்ராவில் அரச மாளிகைகளில், இயல்பாக இருப்பது போன்ற தோற்றத்துடன், வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது. ஆனாலும் நிலையில் இல்லாமல் இருந்த கடந்த இரண்டு மாதங்களுக்கு முன், இளவரசர் ஸலீம் ஆக்ராவிற்கு வந்தபின் நிலவிய அசாதாரண அமைதி சாம்ராஜ்ஜியத்தில் நிலவியது. மக்கள் சபையில் தினமும் நடக்கும் தர்பாரில் அரிதாகவே கலந்து கொண்ட அக்பர், அதிகநேரம் படுக்கையிலேயே கழித்தார். அப்படியே அவர் வந்தாலும் அவரது வளைந்த முதுகும், முகம் வெளுத்து ஆரோக்கியம் குன்றிய உடலும் அவரது உறுப்பினர்களையும் பொது மக்களையும் திடுக்கிட வைத்தது. அவர் வாழ்க்கையின் முடிவு நெருங்கிவிட்டது. அக்பருக்கும் இது தெளிவாகத் தெரிந்தது. ஆகையால் தர்பாரில் தன் அரியணைக்கு அருகில், அவரது வலது புறத்தில், பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட ஆசனத்தில் ஸலீமை அமரச் செய்து, அதன் மூலம் சாம்ராஜ்ஜியத்தில் ஸலீமிற்கு இருக்கும் உரிமையை யாவரும் அறியச் செய்தார். சிறிது தூரத்தில் தொலைவில் கோபத்தில் கொதித்துக் கொண்டு நிற்கும் குஸ்ரு.

அந்த வெப்பத்துடன் கூடிய கோடை நாட்கள் மெது வாகக் கழிந்தது. அந்தப்புரத்துச் சுவர்களுக்குள் வம்புப் பேச்சுகள் ஒவ்வொரு மூலையிலும் கேட்டது. பணிப் பெண்கள், அடிமைப் பெண்கள், காவலர்கள், அலிகள், உறவினர்கள், ஒன்றுவிட்ட சகோதரிகள், மகள்கள், மனைவி கள், வைப்பாட்டிகள் என எல்லாப் பெண்களுக்கிடையிலும்... ஒருவருமே சுற்றி வளைத்துப் பேசுவதற்கு முயலவில்லை. ஆனால், அவர்கள் எல்லோருடைய வாழ்க்கையும் அரியணையில் யார் அமருவார் என்பதில் தான் இருந்தது. அது ஸலீமாக இருந்தால் அவர் மனைவிகள் அந்தப்புரத்தில் ஆட்சி செலுத்துவார்கள். அது குஸ்ருவாகில் மிர்ஜா அஸிஸ் கோக்காவின் மகளான அவன் மனைவி. அந்த நினைப்பே சிறிது சஞ்சலம் ஏற்படுத்தக் கூடியதுதான். நிச்சயம் குஸ்ரு வின் நேரம் இதுவல்ல. இவர்கள் யாவருக்கும் இடையில் ருக்கையா ஸுல்தான் பேகம் அமர்ந்திருந்தாள். அக்பரின் முக்கிய மனைவி — பாதுஷா பேகமாக இருந்த அவள்தான் தன் அதிகாரத்தை இழக்க நேரிடும். கணவனை இழப்பது மாத்திரமல்லாமல் 'பெரிய இராணி' என்ற மரியாதையுடன்

ஒதுக்கப்படுவாள். சிறுசிறு வசதிகளை அவள் தொடர்ந்து அனுபவிக்கலாம், அவள் சொந்த மாளிகை, அவள் பணியாட்கள், அவளுக்கென்று தனி வருமானம் என்பது போல். ஆனால், முன்போல் அதிகம் இருக்காது. பெரிய இராணி என்ற அந்தப் பதவி ஒரு போலிக் கௌரவம். அதிகாரம் செலுத்த இயலாத வாழ்க்கை. அத்துடன் நாளாக ஆக அவள் மரியாதையும் குறைந்து விடும்.

இவை எல்லாம் ஸலீமின் முக்கிய மனைவி இளவரசி ஜகத்கோஸினிக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

பேரரசின் அந்தப்புரத்தில் அவளுடைய முக்கிய இடம் ஜகத்கோஸினிக்குச் செல்வதை பாதுஷா பேகம் எவ்வளவு வெறுக்கிறாள் என்பது மெஹ்ருன்னிஸாவிற்கு மாத்திரமே தெரியும். தன் கணவரின் உடல்நலம் பற்றியும், அந்தப்புரத்தில் அவள் முக்கியத்துவம் பற்றியும், மேலும் தாத்தாவின் படுக்கை அருகில் அமர்ந்து பேசிக்கொண்டும் அவருக்காக படித்துக் கொண்டும் சில சமயங்கள் அவர் உறங்கும்பொழுது அவர் கையைப் பிடித்தவாறு அமர்ந்திருக்கும் குர்ரம் பற்றியும் எண்ணி, அவள் வருந்துவதை மெஹ்ருன்னிஸா கவனித்து வருகிறாள். இளம் வயதினனான குர்ரம் தன் பெற்றோர்களை விட அவன் அதிகம் அறிந்த தாத்தாவிடம் மென்மையாக நடந்துகொள்வது பார்ப்பதற்கு மனதை உருக்குவதாக இருந்தது. ஸலீம் மேவார் படையெடுப்பில் ஈடுபட்டிருக்கையிலும், பின்னர் அலஹாபாத்தில் சிறிது காலம் தங்கி இருக்கையிலும், குர்ரம், ருக்கையாவுடன் தொடர்ந்து அந்தப்புரத்தில்தான் இருந்து வந்தான்.

நிலைமை இவ்வாறு இருக்கையில், பேரரசின் அந்தப்புரத்திற்குத் தினமும் சென்றாலும் மெஹ்ருன்னிஸா எதிலும் தலையிடாமல் ஒதுங்கியே இருந்தாள். ஸலீமை அவள் மிகவும் அரிதாகவே பார்க்க முடிந்தது. ஏனெனில், தினமும் தர்பாருக்கு வருவதைத் தவிர அவர் அந்தப்புரத்திற்கு அதிகம் வருவதில்லை. எல்லோரும் — சக்ரவர்த்திகூட ஏதாவது நடப்பதற்காகக் காத்திருப்பது போல் தோன்றியது. பதபதக்கும் ஒரு கோடைதினத்தில், தகிக்கும் நெருப்பு போல் தன்

கிரணங்களை ஆக்ரா நகரத்தின் மேல் வீசிய சூரியன் மேற்குத் திசையில் இறங்கத் தொடங்கும் சமயத்தில், அந்த [illegible] ஒன்றும் நிகழ்ந்தது.

ஸலீமிற்குக் குஸ்ருவிற்கும் இடையே தொடர்ந்து [illegible]கும் மௌனப் போராட்டத்தினால் சலித்துப் போன அக்பர், சிவப்பு மாளிகையின் பெரிய முற்றத்தில் ஒரு [illegible]னைச் சண்டை நடத்தக் கட்டளையிட்டார். கோட்டை [illegible] வடக்கு மூலையில், புல்பூண்டுகூட இல்லாத வரண்ட [illegible]னினாலான பெரிய சமமான மைதானமாக அந்த [illegible]மும் இருந்தது. இரண்டு இளவரசர்களின் ஆதரவாளர்களும் [illegible]து மக்களும் பகட்டாக ஆடைகளும் நகைகளும் [illegible]ந்து பிற்பகல் மூன்று மணி அளவில் அந்த முற்றத்தில் [illegible]முமிருந்தனர். இராணுவ வீரர்கள், பொது மக்கள் மற்றும் [illegible]புக்கள் மூன்று பக்கத்தில் கூடியிருக்க நான்காவது மூலை [illegible] குளிர்ச்சியான நீண்ட சலவைக்கல் மேடை அமைக்கப் [illegible]டிருந்தது. அந்த மேடையின் தூண்களும் தரையும் [illegible]ரிதும் விலை மதிப்புள்ள தூய பவளம் நீலம் போன்ற [illegible]கள் பதிக்கப்பட்டு அழகிய வேலைப்பாடுடன் கூடியதாக [illegible]ந்தன. அந்த அலங்கார மேடையின் சமமான கூரையி [illegible]ந்து மழைநீர் வடிவதற்காக நான்கு புறமும் குழாய்கள் [illegible]ருத்தப்பட்டிருந்தன. கூரையின் மேலிருந்த எட்டு [illegible]க்கள் கொண்ட நான்கு கோபுரங்களின் மேல் பதிக்கப் [illegible]டிருந்த தாமிரத் தகடுகள் அஸ்தமனச் சூரியனின் [illegible]ற்கதிர்களால் இளம் சிவப்பு நிறத்தில் ஒளி வீசிக் [illegible]ண்டிருந்தன. சக்ரவர்த்தியின் பளிங்குக் கல்லினாலான [illegible]மாசனம், நீரையும், வெய்யிலையும் தவிர்க்கும்படி அந்தக் [illegible]கோபுரங்களின் அடியில் அமைக்கப் பட்டிருந்தது. அந்த [illegible]லங்கார மேடையின் ஒரு புறத்தில், பெண்களின்விரலை [illegible] மெல்லியதான சலவைக் கல்லினாலான கட்டமிடப் [illegible] ஜன்னல் அமைக்கப் பட்டிருந்தது. அந்தக் பெரிய [illegible]ழு கட்டமிடப்பட்ட சலவைகல் திரை, ஒரே கல்லினால் [illegible]யப்பட்டதாக இருந்தது. அந்தத் திரையின் பின்புறம் [illegible]த்தை துணியினால் மூட வேண்டிய அவசியம் இல்லாமல்,

சௌகரியமாக, பேரரசின் அந்தப்புரத்துப் பெண்கள் நிகழ்ச்சியைப் பார்க்க கூடியிருந்தனர்.

தன் கைகளை முன்னால் கட்டியவாறு ருக்கையா சுல்தான் பேகத்திற்குச் சிறிது பின்னால் மெஹ்ருன்னிஸா நின்றிருந்தாள். கண்கள் எல்லாவற்றையும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்க ஹுக்காவைக் கையில் வைத்துக் கொண்டு மெதுவாகப் புகையை இழுத்து அனுபவித்தபடி தன் மெத்தையில் நன்கு சாய்ந்து, வழக்கம்போல் அவளது கர்வமான தோற்றத்துடன் ருக்கையா அமர்ந்திருந்தாள். அவளது வலப்புறத்தில் இளவரசி ஜகத் கோஸினி. ருக்கையா அந்த மேடைக்கு வருகையில் அந்த இரு பெண்களும் ஒருவரை ஒருவர் சரியான முறையில் எதிர்கொள்ளவில்லை. மற்றப்பெண்களுடன் ஜகத்கோஸினியும் எழுந்து கோணிய முறையில் மரியாதை செலுத்தினாலும், அவளது ஒவ்வொரு அசைவிலும் தயக்கம் தெரிந்தது. கூடிய சீக்கிரம், ஒருநாள் ருக்கையா, அவளுக்கு இவ்வாறு மரியாதை செலுத்த வேண்டிவரும் என்பதை அவள் தெரிவிப்பது போல் தோன்றியது. மெஹ்ருன்னிஸா — ஜகத்கோஸினி கண்டு கொள்ளவே இல்லை.

சக்ரவர்த்தினி முன்பக்கம் குனிந்து பின்னால் தட்டி வழியாக அக்பரைப் பார்த்தாள். அவளுடன் கூட மெஹ்ருன்னிஸாவும் குனிந்து பார்த்தாள். முதன் முறையாகச் சக்ரவர்த்தி இரவில் நன்கு தூங்கி ஓய்வெடுத்து வந்தவர் போல் தோன்றினார். தன் பக்கத்தில் அமர்ந்திருக்கும் பன்னிரண்டு வயது சிறுவனைப் பார்த்து அவர் புன்னகைத்த பொழுது அவர் முகம் பழைய மாதிரி ஒளிவிட்டது. தன் முன்னிருக்கும் ருக்கையா அது கண்டு சிறிது நிம்மதி அடைவதை மெஹ்ருன்னிஸா உணர்ந்தாள். தாத்தா தன்னைப் பார்த்துப் புன்னகைப்பதைக் கண்டு குர்ரம் அவர் கையைப் பற்றி அதில் முத்தமிட்டான். தடுமாறியவாறு குர்ரமின் தலையில் அக்பர் தடவிக் கொடுத்த பொழுது அவர் கண்களில் நீர் நிறைந்தது. இளவரசன் சக்ரவர்த்தி பக்கம் குனிந்தவாறு இருந்தான். திடீரென்று காற்று வீசப் பேரரசர்

தாங்கியிருக்கும் மேடையில் புழுதி பறந்து வந்தது. குர்ரம் கண்களில் புழுதி படிய அவன் தும்முவதற்காக வேறு பக்கம் திரும்பினான்.

தட்டியின் பின்புறம் ருக்கையா, ஜகத்கோஸினி இருவரின் கைகளும் தங்கள் சோலிக்குள் வைத்திருந்த பட்டு கைக்குட்டைகளை எடுக்க விரைந்தன.

"அம்மா!" விரலால் மூக்கை மூடியவாறு. பின் பக்கம் திரும்பிக் குர்ரம் அழைத்தான்.

"இதோ மகனே." ருக்கையா ஒரு அடிமைப்பெண்ணை அழைக்க, அவள் தட்டியின் இடைவெளி வழியாகக் கைக்குட்டையை இளவரசனிடம் கொடுத்தாள்.

குர்ரம் மூக்கை நன்கு சுத்தம் செய்து கொண்டு அத்தப்பட்டுக் கைக்குட்டையைத் தன் அங்கியில் வைத்தபடி "நன்றி, அம்மா." என்றான்.

முகத்தைச் சுளுத்தவாறு ஜகத்கோஸினி தன் கைக்குட்டையை மெதுவாக சோலிக்குள் வைப்பதை மெஹ்ருன்னிஸா பார்த்தாள். இளவரசி ஜகத்கோஸினி மற்றவர்கள் கவனத்தை கவராமல் இருக்க முயற்சித்தாலும் குர்ரம் தும்மியதைக் கண்டு தன்னையறியாமல் அவள் கை செய்ததை அந்தப் புறத்துப் பெண்கள் எல்லோருமே பார்த்தனர். சிறிதும் அசைவாமல், வெறுப்புடன், ஜகத்கோஸினி உறைந்தது போல் அமர்ந்திருந்தாள். கடந்த சில வருடங்களாக அக்பரும், ஜோதாவும் சிறிது சமரசமாகியது போல் தோன்றி மறுபடியும் அவர்களுக்கு இடையே வேறுபாடுகள் தோன்றிய போதிலும் சக்ரவர்த்தி நல்லெண்ணத்துடன் இளவரசி ஜகத்கோஸினி யுடன் குர்ரம் அதிகநேரம் தங்கியிருக்க அனுப்புமாறு ருக்கையாவை பணித்திருந்தார். விருப்பமில்லாமல் அவளும் அதற்கு சம்மதித்திருந்தாள். சிறு வயது முதல் தன் குழந்தை போல் வளர்த்து வந்த அந்தச் சிறுவனிடம் அவள் இன்னும் அதிக உரிமை கொண்டாடினாள். ஜகத்கோஸினிதான் தன்னைப் பெற்றெடுத்த தாயார் என்று அவன் அறிந்திருந்தாலும், குர்ரம் பொறுத்தவரையில் ருக்கையாதான் "அம்மா"

அவன் மரியாதை தெரிந்தவனாகையால் இளவரசி [illegible] கோஸினியிடம் அன்புடனும் மரியாதையுடனுமே நடந்து கொண்டான். ஆனால், அவன் ருக்கையாவிடம் [illegible] அன்பு வைத்திருப்பதை ஜகத்கோஸினி நாளடைவில் வருத்தத்துடன் உணர்ந்தாள்.

இளவரசர் ஸலீமின் வருகையைத் தெரிவிக்கும் வகையில், அவரது தனிப்பட்ட இசையில் வாத்ய கோஷங்கள் எழ, மெஹ்ருன்னிஸா முற்றத்தின் பக்கம் பார்வையைத் திருப்பினாள். அவர் வெள்ளைக் குதிரையில் சவாரி செய்தவாறு பேரரசின் அரியணைப் பக்கம் சென்றார். சக்ரவர்த்திக்கு எதிரே வந்தவுடன் குதிரையில் அமர்ந்தவாறு அவரை வணங்கினார். திரையின் பின்னால் அமர்ந்திருந்த பெண்கள் அனைவரும் கழுத்தை வளைத்து இளவரசரைப் பார்க்க முயன்றனர்.

"ஸலீமின் யானையின் பெயர் என்ன?" ருக்கையா உரத்த குரலில் கேட்டாள்.

"கிரன்பர், மாண்பு மிக்கவரே!" மெஹ்ருன்னிஸாவும் இளவரசி ஜகத்கோஸினியும் ஒரே சமயத்தில் பேசினர். இளவரசியின் கண்கள் சில நொடிகளுக்கு மெஹ்ருன்னிஸாவை நோக்கின. ருக்கையா அதிகாரத் தோரணையுடன் புருவங்களை நெரித்துத் தன்னைப்பார்ப்பதைக் கண்டு இளவரசி முகம் சிவந்து வேறுபக்கம் திரும்பினாள்.

"ஆ. கிரன்பர்" ருக்கையா கூறினாள்." இந்த யானையைச் சில வாரங்களுக்கு முன் யானை லாயத்தில் பார்த்தது நினைவிருக்கிறது. இது மிகவும் பெரியதும், வலிமை மிக்கதுமாகும். தினமும் பத்து கிலோ கரும்பை அது சாப்பிடும் என்று ஸலீம் கூறுவான். அதுதான் நிச்சயம் சண்டையில் வெற்றி அடையும். இதுவரை அது தோற்றதே இல்லை, தெரியுமே?"

"ஆமாம், மேன்மைக்குரியவரே! ஆனால், இளவரசன் குஸ்ருவின் யானை அபூர்வாவும் ஒருமுறை கூடத் தோற்றதில்லை"

"இல்லை, இல்லை" பிடிவாதத்துடன் தலையை வேகமாக அசைத்தவாறு ருக்கையா கூறினாள். "கிரன்பர் தான் வெற்றி பெறவேண்டும். அபூர்வா இன்று தோற்றுப் போய் விடும்."

ஏதோ யோசித்தவாறு ருக்கையாவின் பின்பக்கம் பார்த்தவாறு மெஹ்ருன்னிஸா இருந்தாள். ஏதோ ஒரு முடிவெடுத்தினால், அரச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் அனைவரும் அந்தப்புரத்துப் பெண்கள் அனைவரும் இந்தச் சண்டையின் முடிவு அரியணையின் அடுத்த வாரிசு யார் என்பதை நிச்சயிக்கும் என்று எதிர்பார்த்தனர். ஸலீம் வெற்றியடைய வேண்டும் என்று ருக்கையாவும் விரும்பினாள். அதுதான் அக்பர் விரும்புவதும் — ஆகையால், ஸலீம் அரியணை ஏறினால் அரசின் அந்தப்புரத்தில் அவளுடைய அந்தஸ்தை ஜகத்கோஸினி எடுத்துக்கொண்டு விடுவாள் என்பது தெரிந்திருந்தாலும், ருக்கையாவும் அதையே விரும்பினாள். கடந்த இரண்டு மாதங்கள் மிக மெதுவாகச் சென்றதுடனேயே கழிந்தன. எல்லோருமே ஏதோ ஒன்றிற்காகக் காத்திருந்தனர். அக்பரின் மரணத்திற்காகக் காத்திருந்தனர். அதே சமயம் யார் அரியணைக்கு வந்தாலும் நிலைமை பயங்கரமானதாக இருக்கும் என்பதால் அக்பர் அவரிடம் இருக்கவேண்டும் என்றும் காத்திருந்தனர்.

மெஹ்ருன்னிஸா பின்னால் தட்டி வழியாக வெளியே பார்க்கையில், அங்கு நிலவும் வெப்பம் தாங்க முடியாததாக இருப்பதை உணர்ந்தாள். வெளியில் நல்ல வெளிச்சமாக இருந்தது. ஆனால், உள்ளே அவள் நிற்கும் இடத்தில் சிறிது குளிர்ச்சியாகவும், ஆனால், சிறிது இருட்டாகவும் புழுக்கமாகவும் இருந்தது. திடீரென்று பின்முதுகில் வலி எடுக்க அவள் ஒரு கையை அங்கு வைத்துத் தடவிக்கொண்டாள். மறுபடியும் கூடாது — இன்னும் நாட்கள் ஆகவில்லை யாகையால் அவள் ருக்கையாவிடம் இதுபற்றி கூறவில்லை. அமர்ந்து கொள்ள வேண்டி அவள் உடல் கெஞ்சினாலும், அவள் உட்கார்ந்து கொள்ள உத்தரவு கேட்கவில்லை. அவள் முதுகெலும்பின் அடிப்புறத்தில் குத்துவது போல் வலி

மீண்டும் வந்தது. மூச்சுத்திணறுவது போன்ற உணர்வுடன் மற்றவர்கள் கவனத்தைக் கவராமல் சாதாரணமாக இருப்பதுபோல் தோன்றும்படிப் பக்கத்திலிருந்த தூணில் சாய்ந்து கொண்டாள். ஏனெனில், மற்ற எந்தப் பெண்ணாவது அவளை அப்பொழுது பார்த்தால், அவள் நிலைமையைப் புரிந்து கொண்டு விடுவாள்.

மெஹ்ருன்னிஸா மூச்சைப்பிடித்துக்கொண்டு மறுபடியும் வலி வருவதற்காகக் காத்திருந்தாள். ஆனால், வலி வரவில்லை. ருக்கையா திரும்பிப்பார்த்து அவள் ஏன் அலட்சியமாக நின்று கொண்டிருக்கிறாள் என்று கேட்பதற்கு முன் சுதாரித்துக் கொண்டு மெஹ்ருன்னிஸா நிமிர்ந்து நின்று கொண்டாள். ஆனால், இளவரசி ஜகத்கோஸினி இரண்டு மூன்று முறை அவள் பக்கம் திரும்பிப் பார்த்து விட்டுப் பிறகு இளவரசன் குஸ்ருவின் வரவை அறிவிக்கும் வகையில் மேளங்கள் ஒலிப்பதைக் கேட்டுத் தலையைத் திருப்பிக் கொள்வதை மெஹ்ருன்னிஸா கவனிக்கவில்லை. அந்தச் சிறிது நேரப் பார்வையிலேயே, மெஹ்ருன்னிஸாவின் வயிறு சிறிது பெருத்திருப்பதையும் அவள் முகம் களையிழந்து அவள் நிற்கமுடியாமல் தடுமாறுவதையும் ஜகத்கோஸினி பார்த்து விட்டாள்.

"மற்றொன்று, நல்லது" அவள் அருகில் இருந்த அடிமைகளுக்குக் கூடக் கேட்காதவாறு மெதுவாக ஜகத்கோஸினி முணுமுணுத்தாள். பின்னல் தட்டி வழியாக இளவரசனைத் திரும்பிப் பார்த்தாள்.

இளவரசன் குஸ்ரு சக்ரவர்த்தி அருகில் சென்று குதிரையிலிருந்து இறங்கி, வணங்கினான். அக்பர் மிகச் சிறிய அளவில் தலையசைக்க, முகம் சிவக்க, மனதில் தீர்மானத்துடன் அவன் திரும்பினான். பின்னர் ஸலீம் பக்கம் சென்று விறைப்பாக வணங்கி விட்டுக் குதிரையில் ஏறி எதிர்ப்பக்கம் சென்றான்.

யானைப் பாகர்களால் நடத்தி அழைத்து வரப்பட்ட இரண்டு யானைகளைக் கண்டவுடன் கூட்டத்தில் பெரிய சப்தம் எழுந்தது. இளவரசர் ஸலீம் அபூர்வாவை ஒருமுறை

[illegible]த்துவிட்டுக் கலக்கத்துடன் தன்னருகில் இருந்த மஹபத்தினைப் பார்ப்பதை மெஹ்ருன்னிஸா கண்டாள். [illegible]த்திலிருந்த கலக்கக் கோடுகளைத் துடைத்து எறியுமாறு [illegible]டம் கூறவேண்டுமென அவள் விரும்பினாள். அபூர்வா [illegible]ரியதாக முரட்டுத்தனமானதாகத் தோன்றியது. ஆனால், [illegible]ப்பர் அதற்கும் மேலே கடினமானதாகத் தோன்றியது. [illegible] ஒரு விறுவிறுப்பான சண்டையாக இருக்கும். சிகப்பும் [illegible]நிறமுமான உடையணிந்த அந்தச் சண்டையின் நடுவர், [illegible]ரின் மேடை நோக்கிச் செல்கையில் கூட்டம் மெதுவாக [illegible]மனியாயிற்று.

"மாண்பு மிக்கவரே, உங்கள் உத்தரவிற்காகக் காத்திருக்கின்றோம்."

அக்பர் குர்ரம் பக்கம் திரும்பினர். "நீ உத்தரவுச் சைகை [illegible]டுக்க விரும்புகிறாயா, குர்ரம்?"

"ஆமாம், தாத்தா அவர்களே!" குர்ரம் ஆவலுடன் [illegible]னான். பின் நடுவரை நோக்கித் திரும்பி, "உதவிக்காக [illegible]த்திருக்கும் மாற்று யானை எங்கே?"

"அது அழைத்து வரப்படுகிறது, மேன்மைக்குரியவரே!" [illegible]வர் பதிலளித்தார். அதே சமயத்தில் சக்ரவர்த்தியின் [illegible]னை ரன்தம்ஹான் அழைத்து வரப்பட்டது. சண்டைக்[illegible]ன விதிமுறைகள் எடுத்துக் கூறப்பட்டன. சக்ரவர்த்தியின் [illegible]ப்பத்திற்கு உகந்ததுபோல் விதிமுறைகள் கூறப்படும். [illegible]ச் சண்டையில் வெகு சுலபமாக ஒரு யானை வெற்றி [illegible]பற்றுவிட்டால், தோல்வியடையும் நிலையில் உள்ள [illegible]னைக்கு உதவுவதற்கு அந்த மூன்றாவது யானை [illegible]றுப்பப்படும். ரன்தம்ஹான் உதவிக்காகவந்த யானை. அபூர்வா அல்லது கிரன்பர் போல் பிரம்மாண்டமானதாக [illegible]லையானாலும் மிகவும் திறமை வாய்ந்தது என்பதை [illegible]தன் உடம்பிலுள்ள பல சண்டைகளில் பெற்ற காயங்களே [illegible]தியப்படுத்தும்.

"சண்டை தொடங்கட்டும்.!" குர்ரம் உரத்த குரலில் [illegible]னான். கூட்டத்தினர் சந்தோஷத்தில் கூச்சலிட்டனர்.

ஸலீமும் குஸ்ரூவும் தங்கள் குதிரைகளைச் செலுத்தியவாறு நெருங்கி வந்தனர். கிரன்பரும் அபூர்வாவும் அந்தப் பெரிய மைதானத்திற்கு நடுவில் அழைத்து வரப்பட்டன. அன்று காலையே கட்டப்பட்ட சிறிய மணல் சுவருக்கு எதிரில் நேருக்கு நேர் நிறுத்திவைப்பட்டன.

தாரை தப்பட்டைகள் ஒலிக்கச் சண்டைக்காகப் பயிற்சி அளிக்கப்பட்ட யானைப் பாகர்கள், யானைகளை முன்னேற்றிச் செல்லத் தூண்டினர். அந்த இரண்டு மிருகங்களும் இடையிலிருந்த மண் சுவரை இடித்துத் தள்ளிப் பெரிய சத்தத்துடன் மோதிக்கொண்டன. அவைகள் பின் வாங்கி, மறுபடியும் பாகர்களால் தூண்டப்பட்டு மறுபடியும் மோதிக்கொண்டன. சீக்கிரமே, தன் மேல் ஏற்பட்ட காயங்களால் பலவீனமாகி அபூர்வா தடுமாறியது. உடனே அக்பரின் யானை சண்டைக்கு ஈடுபடுத்தப்பட்டது.

ஸலீமைச் சேர்ந்த பிரபுக்கள், ரன்தம்ஹான் சண்டைக்குள் சேர்ந்து கொள்வது கண்டு கோபத்தில் குதித்தனர். "அபூர்வாவிற்கு உதவி கூடாது" என்று கோஷமிட்டவாறு தங்கள் கைகளில் கிடத்த குச்சி, கற்கள் முதலியவற்றை அந்த யானையின் மீது வீசி அதைச் சண்டையில் சேராதபடித் தடுக்க முயன்றனர். ரன்தம்ஹானின் பாகனை ஒரு கல் காயப்படுத்த, அவன் தலையிலிருந்து இரத்தம் வழியத் தொடங்கியது.

அந்த முற்றத்தில், ரன்தம்ஹானைப் பார்த்துக் கூச்சலிட்ட மக்களால் பெரும் கலவரம் ஏற்பட்டது. தன் யானையைச் சுற்றியுள்ள ஜனங்களிடமிருந்து பிரிந்து, குஸ்ரு கோபமாக அக்பரின் அரியணைக்கருகே சென்றான்.

"மாட்சிமை பொருந்தியவரே, தயவு செய்து இளவரசரைச் சார்ந்தவர்களிடம் இந்தச் சண்டையில் தலையிடாமல் இருக்க உத்திரவிடுங்கள். ரன்தம்ஹானின் உதவி கிடைப்பதற்கு அபூர்வாவிற்கு உரிமை உண்டு!" கோபத்துடன் முகம் சிவக்க அவன் கத்தினான்.

அக்பர், இளவரசன் குர்ரம் பக்கம் திரும்பினார். "அவன் [illegible] இருப்பவர்களைக் கட்டுப்படுத்துமாறு உன் தந்தை [illegible] போய்ச் சொல். இல்லாவிடில் இந்தச் சண்டையை [illegible] விட்டு யானைகளை எடுத்துக்கொள்வோம்."

"உடனே செய்கிறேன், மாட்சிமைக்குரியவரே!" என்று [illegible]படிக் குர்ரம் மேடையிலிருந்து குதித்து நடுமுற்றத்தை [illegible] ஓடினான்.

"வந்தனம், மாட்சிமைக்குரியவரே!" குஸ்ரு குதிரையை [illegible]ப் போகத் தொடங்கினான்.

"ஒரு நிமிடம், குஸ்ரு" அக்பர் அவனை அழைத்தார் இளவரசன் அவரை நோக்கித் திரும்பியவுடன், அவனை அருகில் வருமாறு பணித்தார்.

"அரச சபையில் உன் இடத்தை நினைவில் வைத்துக் கொள் குஸ்ரு. நீ ஓர் இளவரசன். இப்படி என் முன் வந்து, உன் தந்தையைப் பற்றிப் புகார் செய்வது சரியான நடத்தை இல்லை. பெரியவர்களிடம் செலுத்த வேண்டிய உன் மரியாதை எங்கே?"

குஸ்ருவின் முகம் வெளுத்தது. "நான் மன்னிப்பு கோருகிறேன், மாண்புமிக்கவரே!"

"நல்லது, இப்பொழுது போய் விடு. நீ மரியாதையுடன் நடந்து கொள்ளக் கற்றுக் கொள்ளும் வரை எம் முன் வராதே," சொல்லியவாறு சக்ரவர்த்தி அவனைத் தவிர்த்து தூர எதிரே நோக்கினார்.

சக்ரவர்த்திக்கும் தனக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையை யாராவது கவனிக்கிறார்களா என்று குஸ்ரு சுற்றிலும் திரும்பிப் பார்ப்பதையும், பின் நிமிர்ந்து அந்தப் புரத்துப் பெண்கள் பக்கம் திரும்பியவுடன் அவன் அதிர்ந்து போனதையும் மெஹ்ருன்னிஸா பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப்புரத்துப் பெண்களுக்குத் தெரிந்து விட்டால், அந்த நகரம் முழுவதுமே—இல்லை, இந்த சாம்ராஜ்ஜியம் முழுவதுமே—அடுத்த நாளுக்குள் தெரிந்து கொண்டுவிடும்.

குஸ்ரு முரட்டுத்தனத்துடன் தன் குதிரையைத் திருப்பித் தன் கூட்டத்தினர் இருந்த திக்கை நோக்கி செலுத்தினான்.

சக்ரவர்த்தியின் ஆணைப்படிக் குர்ரம் தன் தந்தையின் அருகே சென்றடைகையில், ஸலீம் தன் உடன் இருந்தவர்களை அடக்க முயற்சித்துக் கொண்டிருந்தார். அதற்குள் அந்த முற்றம் முழுவதும் "அபூர்வாவிற்கு உதவி கூடாது". என்ற கோஷம் ஒலிக்கத் தொடங்கியது. பொதுமக்களும் இந்த அமர்க்களத்தில் கலந்து கொண்டு சத்தமிட்டுக் கொண்டும், சண்டையிட்டுக் கொண்டும், மொத்தமாக உற்சாகத்தில் ஆரவாரித்துக் கொண்டிருந்தனர். யானைச் சண்டையை ஒருவரும் பார்க்கவே இல்லை.

ஆக்கோஷம் மிகுந்து கிரன்பர் முதலில் குஸ்ருவின் யானை அபூர்வாவைத் துரத்தி அடித்து விட்டுத் தன் கவனத்தைப் பேரரசின் யானையான ரன்தம்ஹான் பக்கம் திருப்பியது. ஸலீமின் யானைக்குச் சிறிதும் ஈடில்லாத ரன்தம்ஹான் யமுனைக்கரையை நோக்கி ஓடியது. பாகர்களால் இப்பொழுது அடக்க முடியாத கிரண்பர் மேலும் அதை துரத்தி ஓட, ரன்தம்ஹான் யமுனை நதியில் குதித்தது. முடிவாக ஒரு மணிநேரம் கழித்து ஆக்ரோஷமாக இருந்த கிரண்பரை ஒருவிதமாக அடக்கி, இரண்டு யானைகளுக்கும் இடையே படகுகளைச் செலுத்தி அவைகளைப் பிரிக்க வேண்டியதாயிற்று.

இதற்கு வெகுநேரம் முன்பே, தன் மகனுக்கும் பேரனுக்கும் இடையே வெளிப்படையாகத் தெரியும், வெறுப்பைக் கண்டு மனம் நொந்து, சக்ரவர்த்தி எழுந்து தன் அரண்மனைக்குச் சென்றுவிட்டதை மெஹ்ருன்னிஸா கவனித்தாள்.

அக்பர் அங்கிருந்து சென்றவுடனேயே, அந்தப்புரத்துப் பகுதியிலிருந்த பெண்கள் வெளியேறத் தொடங்கினர். அவசரத்தில் ஒரு பெண் மெஹ்ருன்னிஸாவைத் தள்ளி விட்டாள். மெஹ்ருன்னிஸா சிறிது தடுமாறிய பின் சுதாரித்துக் கொண்டு, அந்தப்பெண் மன்னிப்பு கோருகையில் புன்னகைத்தவாறு இருந்தாள். திடீரென்று அவளுக்கு மறுபடியும் வலி வந்தது. வலியைப் பொறுத்துக் கொண்டு,

[illegible]ந்து நடந்தவாறு, ஒரு மாதிரியாக அவள் அரண்மனையை [illegible]க்கி நடந்தாள். மறுபடியும் இரத்தக் கசிவு வருமோ எனப் [illegible]த்தவாறு காத்திருந்தாள்.

ஸலீமிற்கும் குஸ்ருவுக்கும் இடையில் இருக்கும் [illegible]கைமையை உணர்ந்து மனம் கலங்கிய சக்ரவர்த்திக்கு [illegible]ன்றிரவு உடல்நலம் மேலும் கூனித்து, ஜுரம் கண்டது. [illegible]த்தப் பகையை நீடித்து வளரவிட்டால், அவர் நாற்பத்து [illegible]து வருடங்களாக உழைத்து, அமைத்த அவரது அன்புக் [illegible]ய சாம்ராஜ்ஜியத்தில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட வாய்ப் [illegible]ளது. குஸ்ரு அரியணை ஏறுவது என்பது சிந்திக்கவே [illegible]லாத ஒன்று. அவன் வயதில் மிகவும் சிறியவன். அவன் [illegible]யரில் பிரதிநிதி ஆட்சி நடப்பதில் பல பயங்கர விளைவு [illegible]ள் ஏற்படக்கூடும். ஸலீம்தான் அரியணைக்கு அடுத்த [illegible]றையான வாரிசு. மேலும் அரியணை வாரிசு முறையில் [illegible]ற்றம் ஏற்படுத்திச் சச்சரவுகள் நடப்பதில் அக்பருக்கு [illegible]ருப்பமில்லை.

ஆனால், அக்பரின் எண்ணங்களை உடனே செயல் [illegible]த்த இயலாது. அவர் உடல் நிலை மேலும் மோசமாகி, அவர் ஜன்னி கண்டு அடிக்கடி நினைவிழந்தவாறு இருந்தார். அரண்மனை வைத்தியர்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை. முடிவு வெகு தூரத்தில் இல்லை என்பது எல்லோருக்கும் வெகு தெளிவாகத் தெரிந்தது.

சில தினங்கள் கழிந்தன. பேரரசரின் கோட்டையிலிருந்து [illegible]ரிது தூரத்தில் அமைந்திருந்த தன் அரண்மனையில் [illegible]ளவரசர் ஸலீம் குஸ்ருவை எதிர்த்து தான் பெற்ற [illegible]வெற்றியின் மகிழ்ச்சியில் திளைத்திருந்தார். இது அல்லாவின் [illegible]அருள் என்று எண்ணினார். அவர்தான் முகலாய தேசத்தின் [illegible]அடுத்த சக்ரவர்த்தி. ஒரு அழகிய கீதம் போல் அந்த [illegible]வார்த்தைகள் அவர் மனதில் ஒலித்தது. ஆனால், அவரது [illegible]அந்த மகிழ்ச்சியிலும் சிறிது துக்கம் கலந்து இருந்தது. [illegible]சக்ரவர்த்தி இப்பொழுது மரணப் படுக்கையில் இருந்தார். [illegible]ஸலீம் அவரை அடிக்கடி சென்று பார்த்து வந்தார். முதலில் [illegible]க்கையாவும் மற்ற ராணிகளும் ஸலீம் வரவில் சிறிது

தயக்கம் காட்டினர். ஸலீமின் வருகையால் அக்பரின் [illegible] மேலும் மோசமடைகிறதா என்று ஊன்றி கவனித்தனர். சிறிது சிறிதாக அவர்கள் சந்தேகம் தணிந்தது. ஸலீம் [illegible] மணி நேரம் தன் தந்தை அருகே அமர்ந்து, [illegible] விரும்புகையில் அவருக்குப் படித்துக் கொண்டும், [illegible] தனது மயக்கமான உறக்கத்திலிருந்து விழிக்கையில் [illegible] அருகேயே இருந்தவாறும், பின் அவர் போகச் [illegible] பின்தான், இரவு வெகு நேரம் கழித்து தன் மாளிகைக்குத் திரும்பிச் சென்றார். ஒரு நாள் பிற்பகல் அக்பர் ஸலீமிடம் "குஸ்ருவைப் பற்றி நீ கவலைப்படாதே" என்று கூறினார். "நிச்சியமாக இல்லை, மாண்பு மிக்கவரே!" என ஸலீம் அவருக்கு உறுதியளித்தார். யானைச் சண்டையினால் [illegible] விஷயங்கள் தெளிவாயின. அரசக் கிரீடம் தனக்குதான் என்பதில் ஸலீமிற்குத் தற்பொழுது சந்தேகமேயில்லை. குஸ்ரு இப்பொழுது என்ன செய்துவிட முடியும்?

ஆனால், தன் மகனையும் அவன் ஆதரவாளர்களையும் ஸலீம் குறைவாக மதிப்பிட்டு விட்டார். இளவரசர் சக்ரவர்த்தி அருகில் நாட்களைக் கழிக்கையில் குஸ்ருவின் ஆதரவாளர்கள் வேறு திட்டங்களைச் செயல்படுத்த முனைந்திருந்தனர்.

சாம்ராஜ்ஜியத்தின் மிக முக்கிய அதிகாரியான 'கான் அசம்' (Khan Azam) என்ற பதவியிலுள்ள மிர்ஜா அலி கோக்காவை, அக்பரின் உடல்நலம் குன்றியது குறித்து பிரதிநிதியாட்சி நடத்த நியமிக்கப்பட்டிருந்தது. அவர் தன் மருமகன் குஸ்ருவின் இடத்தை மேலும் வலுப்படுத்த வேண்டி, இரகசியமாக அக்பருக்கு விசுவாசமான ஊழியர்களை விலக்கி விட்டுத் தன்னைச் சார்ந்தவர்களை அந்த இடங்களில் நியமித்து விட்டார். இருந்தாலும் குஸ்ருவின் நிலை முற்றிலும் பாதுகாப்பானதாக இல்லை.

"இவை எல்லாம் போதுமா?" கவலைக் கோடுகள் நெற்றியில் பளிச்சிடக் குஸ்ரு தன் மாமனாரை வினவினான். "என் தகப்பனரிடம் மிகப் பெரிய இராணுவப்படை உள்ளது. அவர் நிச்சயம் நம்முடன் மோதுவார்."

"வேறு ஒரு காரியம் வேண்டுமானால் நாம் செய்யலாம்." மிர்ஜா கோக்கா மெதுவாகக் கூறினார். "இளவரசர் அடுத்த முறை சக்ரவர்த்தியைச் சந்திக்கச் செல்லும் பொழுது அவரை வளைத்துக் கைது செய்து விடலாம். பின் இளவரசர் ஸலீமின் இராணுவப் படையிடமிருந்து நமக்கு அபாயம் ஏதும் இல்லை."

குஸ்ரு சந்தோஷத்துடன் கையைத் தட்டினான். "இது மிகவும் சிறந்த திட்டம், மிர்ஜா கோக்கா. ஆனால்" முகத்தில் சிறிது மகிழ்ச்சி குறைய, "என் தந்தை கொலை செய்யப் படுவதில் எனக்கு விருப்பமில்லை. அவருக்கு ஒன்றும் ஆகாதல்லவா?"

"இல்லை, மாட்சிமை பொருந்தியவரே" கோக்கா உறுதியுடன் கூறினார். "நீங்கள் சக்ரவர்த்தியாக முடிதரிக்கும் வரை அவரை நாம் கைது செய்து வைத்திருப்போம்."

"நல்லது," குஸ்ரு தலையசைத்தான்.

மிர்ஜா கோக்கா யோசித்தவாறே அவனைப் பார்த்தார். தந்தை உயிருடன் இருக்கையிலேயே அரசக் கிரீடம் தனக்கு கிடைக்கும் என்று இளவரசன் உண்மையிலேயே நம்பு கிறானா? எப்படியும் ஸலீம் கைதியாக இருக்கையிலேயே ஒரு விபத்து ஏற்பட அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். பின் அரசக் கிரீடம் எப்பொழுதுமே அவர்களுக்குதான்.

அடுத்த நாள் படகிலிருந்து இறங்கிச் சக்ரவர்த்தியைப் பார்க்கக் கோட்டையை நோக்கி ஸலீம் செல்லுகை யில் ஒரு இளைஞன் கோட்டையிலிருந்து ஓடி வந்தான்.

"மாட்சிமை பொருந்தியவரே, மாட்சிமை பொருந்தி யவரே! தயவுசெய்து திரும்பிச் செல்லுங்கள். இங்கு அபாயம் காத்திருக்கிறது."

மஹபத்கான் உடனே ஸலீமைப் படகிற்குள் இழுத்துத் தன் உடலால் அவரை மறைத்தபடி அந்த இளைஞனைக் கேட்டான். "என்ன அபாயம்? உடனே சொல்."

"மிர்ஜா கோக்கா உங்களைக் கைது செய்து கோட்டை[illegible] அடைத்து வைக்கத் திட்டமிட்டிருக்கிறார், மாட்சிமை பொருந்திய இளவரசரே!" முச்சுத் திணறியபடி அவன் பதிலளித்தான். "சக்ரவர்த்தியின் ஊழியர்களை அவர் வெளி யேற்றிவிட்டார். இப்பொழுது இளவரசன் குஸ்ருவின் ஆதரவாளர்கள்தான் கோட்டையில் நிரம்பி உள்ளனர்."

அவன் பேசி முடிக்கும் தருணத்தில் ஒரு அம்பு பாய்ந்து வந்து மஹபத் கான் காதை தாண்டிச்சென்றது. இரத்தம் சொட்டும் மேல் கையைப்பிடித்தவாறு அந்த மனிதன் தரையில் சாய்ந்தான்.

மஹபத் கான் ஸலீமை கீழே தள்ளித் தன் உடலால் அவரை நன்கு மறைத்துக் கொண்டான். படகோட்டிகளைப் பார்த்து அவன் கூச்சலிட, அவர்கள் வேகமாகக் 'கரை'யிலிருந்து படகை நீரில் செலுத்தினர். இளவரசர் ஸலீம் மஹபத் கானை அகற்றி விட்டுப் படகின் விளிம்பிலிருந்து தூரத்தில் நோக்கினார். கோட்டையின் மதிற்சுவரின் மேல் அம்பு எய்தவனை நன்றாக பார்க்கமுடிந்தது. இவர்களுக்குத் தகவல் சொன்ன அந்த இளஞனைக் குறிபார்த்து அம்பு எய்வதற்குத் தயாராக அவன் நிற்பதை காணமுடிந்தது. மஹபத்கான் மறுபடியும் அவரைப் படகின் தரையில் தள்ளி, வேகமாகப் படகைச் செலுத்தச் செய்து, அவர்கள் ஸலீமின் மாளிகையை அடைந்தனர். அங்கு காவலர்களை அழைத்துப் பாதுகாப்புடன் ஸலீமை உள்ளே அழைத்துச் சென்றனர்.

தொண்டை வரண்டு போகக் கால்கள் தள்ளாட ஸலீம் தன் அறையை அடைந்தார். அவருடைய மகனே, அவரைக் கொலை செய்ய முயற்சி செய்திருக்கிறான். எப்படி குஸ்ருவால் இவ்வளவு கீழ்த்தரமாக நடக்க முடிந்தது? இப்படிச் சூழ்ச்சி செய்து அரசக் கிரீடம் பெறுவது சரியான செயலா? சில நிமிடங்களுக்குக் குற்ற உணர்வு அவரைத் தாக்கியது. அவர், ஸலீம், ஒரு சமயம் அரியணையைக் கைப் பற்றுவதில் வெகு தீவிரமாக இருந்தார். பார்க்கப் போனால் இப்பொழுதும் அதை அடையத் துடிக்கிறார். அது இப்பொழுது அவருக்கு முறைப்படிக் கிடைக்கப் போகிறது. ஆனால், குஸ்ருவின் நடத்தை எல்லை மீறி விட்டது. தன்

[illegible]ரையே வெட்டவெளியில், பகல் நேரத்தில் கொலை [illegible] முயற்சிப்பது—ஸலீம் இறந்துபோனால் குஸ்ரு எப்படி [illegible] நிகழ்ச்சியை இந்த சாம்ராஜ்ஜியத்திலுள்ளோருக்கு [illegible]யப்படுத்த முடியும்?

"எனக்கு மது எடுத்துவா" அருகிலிருந்த பணியாளிடம் [illegible] கர்ஜித்தார்.

பணியாள் வேகமாக அங்கிருந்து அகன்றான்.

ஸலீம் நிமிர்ந்து எதிரில் நிற்கும் ஜகத்கோஸினியைப் [illegible]த்தார். அவள் தன் கணவருக்கு வணக்கம் தெரிவித்தாள். "[illegible] சீக்கிரம் திரும்பி வீட்டீர்கள், மாண்பு மிக்கவரே! சக்ரவர்த்தி நலமென நம்புகிறேன்."

"என்னைக் கைது செய்யச் சூழ்ச்சி நடந்தது. அதிஷ்ட [illegible]மாக உயிருடன் தப்பி வந்தேன்." ஸலீம் கூறினார்.

இளவரசியின் முகத்தில் கலவரம் தோன்றியது. "யார் [illegible]தார்கள்? உங்களைக் கொல்லச் சூழ்ச்சி செய்ய [illegible]குத் தைரியம் வந்தது?"

"குஸ்ரு." சோர்வுடன் மெத்தையில் சாய்ந்தவாறு ஸலீம் [illegible]ளித்தார்.

ஒரு வெள்ளித் தட்டில் மது நிரம்பிய குடுவையையும் [illegible]ப்பைகளையும் எடுத்துக்கொண்டு பணியாள் உள்ளே [illegible]த்தான். ஸலீம் மதுவைக் குடித்து முடிக்கும் வரை ஜகத் [illegible]னி காத்திருந்தாள். அவள் மனம் அமைதியில்லாமல் [illegible]ந்தது. சொந்தத் தந்தையையே கைது செய்ய குஸ்ரு [illegible]த்தபொழுது, அவன் குர்ரம்—ஐ எது வேண்டுமானாலும் [illegible]வான். அவன் மகன் குர்ரம் ஆக்ரா கோட்டையில் [illegible] இன்னும் இருக்கிறான். பாட்ஷா பேகம் ருக்கையா [illegible]பொழுதும் அவளைக் கண்காணித்து வருவாள். அது [illegible] கோஸினிக்கு நன்றாகவே தெரியும். ஆனால், தற்சமயம் [illegible]க்ரவர்த்தியின் உடல்நிலை இவ்வளவு மோசமாக [illegible]க்கையில் சக்ரவர்த்தினியின் கவனம் முழுவதும் அவரைச் [illegible]றியே இருக்கும்.

"மாட்சிமை பொருந்தியவரே! குர்ரம் சக்ரவர்த்தியுடன் இருக்கிறான்." அவள் தயங்கியவாறு தொடர்ந்தாள். "அவன் அங்கு பாதுகாப்பாக இருப்பான் என்று நீங்கள் நம்புகிறீர்களா?"

"குஸ்ரு தன் சொந்தத் தம்பியை ஒன்றும் செய்து மாட்டான்." ஸலீம் பதிலளித்தார்.

இளவரசி மெதுவாக மறுப்பது போல் தலையை அசைத்தாள். குஸ்ரு அரியணையை அடைவதற்கு ஸலீம் ஒரு அச்சுறுத்தல் என்று அவன் எண்ணினால், குர்ரம் கூட அப்படித்தான். அவனும் ஒரு இளவரசன் தான். குஸ்ருவிற்கு இருக்கும் உரிமைபோல் அதற்கு ஈடான உரிமை, அரியணை பெறுவதில், குர்ரமிற்கும் உண்டு.

"இருந்தாலும்..." அவள் தொடர்ந்தாள். "அவன் நம்முடன் இருந்தால் எனக்கு நிம்மதியாக இருக்கும்."

"அவனை அழைத்து வர ஏற்பாடுசெய்." ஸலீம் கூறினார். "என்னைச் சிறிது தனியாக இருக்க விடு. எனக்கு யோசிக்க வேண்டும்."

"அப்படியே, மாட்சிமைபொருந்தியவரே!" இளவரசி தன் அறைக்குச் சென்று தன் மகனுக்குச் செய்தி அனுப்புவதற்காகக் கடிதம் எழுதத் தொடங்கினாள்.

குர்ரம் தன் தாயின் அழைப்பைக் கண்டிப்பாக மறுத்து விட்டான். தன் தாத்தாவின் கடைசி நாட்களில் அவருடன் இருப்பதையே விரும்பினான். ஜகத்கோஸினியின் எந்தவித காரணங்களும் அவன் மனதை மாற்ற முடியவில்லை. அவனிடமிருந்து வந்த பதிலைக் கண்டதும் ஜகத்கோஸினியின் மனம் கடினமாயிற்று. இது வழக்கம் போல் ருக்கையாவின் செயலாகத்தான் இருக்கும். சக்ரவர்த்தி முறைப்படி அவளையே அவள் மகனை வளர்க்க அனுமதித்து இருந்தால் அவன் இப்பொழுது அவள் கட்டளைக்கு கட்டுப்பட்டிருப்பான். நிச்சயம் ஒருநாள் சக்ரவர்த்தினிக்கு அவள் பதிலடி கொடுப்பாள். அந்த நாள் வரும், என்ன ஆனாலும் சரி.

இதற்கிடையில், மிர்ஜா அஸிஸ் கோக்கா சும்மாயிருக்க வில்லை. ஸலீம் நதிக் கரையிலிருந்து தப்பித்துத் திரும்பிச் சென்று விட்டபின் அவருக்குச் செய்தியறிவித்த பணி யாளனைக் கொன்று விட்டார். இளவரசர் ஸலீமை இனிமேல் எதுவும் செய்ய முடியாதென்பதை உணர்ந்து ராஜா மான்சிங்கை கூப்பிட்டனுப்பினர். அவர்களது ஒரு முயற்சி தோல்வி அடைந்துவிட்டது. மற்றொரு சந்தர்ப்பம் கிடைக்கா தென்பதை இருவருமே உணர்ந்தனர். வேறு ஏதாவது செய்ய வேண்டும். மற்ற அரச சபைப் பிரபுக்களை கூட்டி இருவரும் ஆலோசனை செய்தனர். அவர்களிடம் குஸ்ருவை அடுத்த அரியணை வாரிசாக நியமிக்க எடுத்துக் கூறி அவர்கள் ஆதரவை வேண்டினர். இது ஒரு துணிச்சலான நடவடிக்கை. இது ஒன்றுதான் இப்பொழுது செய்யமுடியும். எல்லா சந்தேகங்களுமே இப்பொழுது வெட்ட வெளிச்சத்திற்கு வந்து விட்டது.

இவ்வாறு, ஆலோசனைக் கூட்டம் நடந்து கொண்டி ருக்கையில், ஆக்ரா கோட்டையிலிருந்து ஒரு உளவாளி, மான்சிடம் வந்து, கோட்டையின் மதிற்சுவர்களில் பீரங்கிகள் ஸலீமின் மாளிகையை நோக்கிப் பொருத்தப்பட்டு, எந்த நேரமும் சுடுவதற்குத் தயாரான நிலையில் இருப்பதாகக் கூறினான். தன்னைக் கொல்ல வந்த நிகழ்ச்சி இன்னும் புதுமையாக மனதில் இருக்கவே ஸலீம் மிகவும் கலவர மடைந்தார். சிறிதும் யோசிக்காமல், அவசரத்தில் தன் தேவைகளைச் சேகரித்துக் கொண்டு, குதிரைகளைத் தயார்ப்படுத்தி, உடனே அலஹாபாத் செல்ல ஆயத்தம் செய்யுமாறு கட்டளையிட்டார். கோக்கா, அப்துல்லா, ஜஹாங்கீர் மூவரும் மிகுந்த சிரமத்துடன் பலவாறு பேசித்துரைத்து ஆக்ராவிலேயே தங்கும்படி வேண்டினர். இந்த சமயத்தில் ஆக்ராவை விட்டுச் செல்வது தவறு. எந்த நேரமும் அக்பர் மரணமடையக் கூடும். ஸலீம் அந்த சமயத்தில் பக்கத்தில் இல்லையெனில், குஸ்ருவை உடனேயே அரியணையில் அமர்த்தி விடுவார்கள். முடிவாக அவர்கள் மனதில் இருந்த உண்மையை ஸலீம் உணர்ந்தார். தாற்காலிக மாக அவர் தன் உயிருக்காகப் பயந்து போயிருந்தார். இது

வரை அவர் தன் வாழ்க்கையில் செய்திருந்த எந்தக் காரியத்திலும் சிறிதும் பயம் ஏற்பட்டதில்லை. இப்பொழுது [illegible] என்றால் என்ன என்பதை உணர்ந்தார். அதுவும் குஸ்ருவின் செய்கைகளினால் மிகவும் மனம் வருந்தியபடி! அவர் உயிருக்கே ஆபத்து ஏற்பட இருந்த நிகழ்ச்சி, குஸ்ரு அரியணையை அடைவதில் எவ்வளவு தீவிரமாக இருக்கிறான் என்பதை அவருக்கு நிதானமாகப் புரிய வைத்தது.

ஸலீம் ஆக்ராவிலேயே இருக்கச் சம்மதித்தார். ஆனால் மஹபத், அப்துல்லா மற்றும் கோக்காவின் வற்புறுத்தலின்பேரில் தனக்கு ஆதரவு கொடுக்க வேண்டி, அந்த ஆலோசனை கூட்டத்திற்கு வந்திருந்த பிரபுக்களைச் சந்தித்துப் பேசத் தீர்மானித்தார். சார்பாக யாரையும் அனுப்புவதற்கு அவர் மறுத்து விட்டார். அவரால் முடிந்தவரை எல்லாம் செய்தாகி விட்டது. அடுத்த சக்ரவர்த்தியாக வேண்டுமானால் அது அல்லாவின் கையில்தான் உள்ளது.

இதற்கிடையில், குஸ்ருவிற்குப் பாதகமாகவே அந்த ஆலோசனை கூட்டம் நடந்து கொண்டிருந்தது. சில பிரபுக்கள் எந்தப் பக்கமும் முடிவு செய்யாமலிருக்கையில் ஒரு பகுதியைச் சேர்ந்த பிரபுக்கள் இதற்கு தீவிரமாக எதிர்ப்பை தெரிவித்தனர். முதுமை வாய்ந்த முகலாயக் குடும்பத்தைச் சேர்ந்த, பேரரசின் குடும்பத்துடன் நெருக்கமான தொடர்புள்ள பார்ஹா ஸய்யிது (Barha Sayyids) என்ற கூட்டத்தைச் சேர்ந்த பிரபுக்கள் குஸ்ரு அரியணை ஏறுவதைப் பலமாக எதிர்த்தனர். ஸலீம்தான் முறைப்படி அரியணைக்கு வர வேண்டிய வாரிசு, குஸ்ருவை ஆதரிப்பது சகாடை (Chagtai Sucuession) வாரிசுரிமைச் சட்டத்துக்கு எதிரானது என்று அவர்கள் வாதிட்டனர். மங்கோலியர் செங்கிஸ்கான் (Genghis Khan) வழியில் வந்த தலைமுறைப்படித் தான், சகாடை துருக்கியர்கள் வழி நடந்து வந்தனர். தற்பொழுது இருக்கும் பேரரசின் குடும்பமும் தைமூர் (TIMUR THE LAME) வம்சாவளி வழி வந்தவர்கள் மட்டுமல்லாமல் செங்கிஸ்கான் தலைமுறைப்படியும் வந்தவர்கள்தாம்.

இப்படிப்பட்ட கடினமான எதிர்ப்பு எழுந்ததில் அந்த ஆலோசனைக் கூட்டம் முறிந்தது. பார்ஹா ஸய்யித் குடும்பம்

மிகவும் சக்திவாய்ந்த முக்கியமான கூட்டத்தினர். அவர்களை எதிர்ப்பது ஆபத்தானது. ஆகையால், மற்றப் பிரபுக்கள் குஸ்ருவிற்கு ஆதரவு அளிக்க மறுத்து விட்டனர். அந்தக் கூட்டத்தின் தலைவரான ஸய்யத் கான் பர்ஹா, அந்த ஆலோசனைக் கூட்டத்தின் முடிவைப்பற்றி ஸலீமிடம் தெரிவிக்கச் சென்றார்.

மிர்ஜா கோக்கா தன்னுடைய நிச்சயமற்ற நிலமையை உணர்ந்து, ஸலீமிடம் மன்னிப்பு கோரவேண்டி அவர் அரண்மனைக்கு விரைந்தார். தன் பக்கம் வெற்றி ஏற்பட்டது கண்டு உகிழ்ந்து ஸலீம் அவரை மன்னித்து விட்டார். குஸ்ருவின் மாமனார் கோக்கா இவ்வாறு அவனை விட்டு விலகி விட்டாலும், அவன் மாமா ராஜா மான்சிங் தன் எண்ணத்தில் தளரவில்லை. அவர் குஸ்ருவை ஆக்ரா கோட்டையிலிருந்து அகற்றி, மறைத்து விட்டுத் தானும் ஒளிந்து கொண்டு விட்டார். ராஜா மான்சிங்கிற்குச் சொந்தமாக வங்காளத்தில் உள்ள இடத்திற்கு அவனை இரகசியமாகப் படகின் மூலம் அழைத்துச் செல்வது அவரது திட்டம்.

இரவு இரவில் அந்த செய்தி வந்தது. தகிக்கும் கோடைக் காலத்தின் தீவிரத்தை உடைத்துக் கொண்டு சாம்பல் நிற மேகங்கள் அடிவானத்தில் பரவியன. சுகமான குளிர்ச்சியான காற்று செங்கற்கள் பதித்த அந்த தெருக்களில் மெதுவாக வீசத்தொடங்க, மாலை நேரத்தில் வீடுகளில் முன்னல்கள் திறந்து விடப்பட்டிருந்தன. சோம்பலுடன் படுத்துக் கிடந்த தெருநாய்கள் அந்தப் புதிய சுகமான காற்றைத் தலை நிமிர்த்தி விழுங்கின. தோட்டங்களில் புல் தரைகள் பசுமையாகப் பளிச்சிடப் பூக்கள் மலர்ந்து காணப்பட்டன. இந்த பூமியே புன்னகை பூப்பது போல் இருந்தது. முடிவாகப் பல மாதங்களாக இருந்த தீவிர வெப்பத்திற்குப் பின் மழைக் காலம் தொடங்கியது. இரவு நெருங்க உஷ்ணத்தினால் மங்கலாக அசையாமல் நின்ற சந்திரன் மேகங்களால் மூடிக் காணப்பட்டது. இரவில் படுத்துறங்குவதற்காகக் கயிற்று கட்டில்கள் வராந்தாக்களிலும்

வெளி மாடிகளிலும் போடப் பட்டிருந்தன. அந்த நகரமே உயிரூட்டும் குளிர்ந்த மழையை எதிர்பார்த்தவாறு உறங்கிக் கொண்டிருந்தது.

கனவுகளில் கூட வெயிலின் தீவிரம் குறைந்து மழை தரும் நிம்மதி மிதந்து வரும் அந்த இரவில், அந்த அமைதியான தெருவில், ஒரு தனி மனிதன் ஸலீமின் மாளிகையை நோக்கிக் குதிரையில் விரைவாகச் சென்று கொண்டிருந்தான். ஒரு மணி நேரம் கழித்துப் பேரரசின் மாளிகையின் பெரிய நடுமுற்றத்திற்கு ஸலீம் குதிரையில் சென்றடைந்தார். குதிரையை இழுத்து நிறுத்திக் கீழே குதித்துக் கடிவாளத்தை அருகிலிருந்த பணியாளிடம் வீசினார். வராந்தாக்கள் வழியாகச் சக்ரவர்த்தியின் அறைக்கு விரைந்து செல்கையில் வழியில் அடிமைகளும் பணியாட்களும் வழக்கத்தை விட அதிகமாகக் குனிந்து வணக்கம் தெரிவிப்பது போல் ஸலீமிற்குத் தோன்றியது. இதயம் படபடக்க, ஸலீம் அக்பரின் அறையில் நுழைந்து, அறையின் நடுவில் படுக்கையில் அசையாமல் படுத்திருக்கும் உருவத்தைப் வெறித்துப் பார்த்தவாறு கதவருகிலேயே நின்று விட்டார்.

சக்ரவர்த்தியின் படுக்கைக்கு அருகில் இரண்டு எண்ணெய் விளக்குகள் நடு இரவின் மெல்லிய காற்றில் அசைந்தவாறு ஒளிவிட்டன. கதவுகளும், ஜன்னல்களும் நன்கு திறந்து விடப்பட்டிருக்க மெல்லிய மஸ்லின் படுதாக்கள் உட்புறமாக அசைந்து ஆடிக்கொண்டிருந்தன. பின்னால் நிழலாக மனிதர்கள்—நிறைய மனிதர்கள்; ஸலீம் அவர்களை ஓரக் கண்ணால் பார்த்தார். வளையல்களின் மெல்லிய சப்தம் அறையின் ஒரு ஓரத்திற்கு அவர் கவனத்தை திருப்ப, உருண்டை வடிவமான ருக்கையாவின் முகத்தை அவரால் உணர முடிந்தது. அவளுக்கருகில் படுக்கையில் தலையணிகளில் தலை குனிந்தவாறு மெதுவாக விம்மிக் கொண்டிருக்கும் அக்பரின் இன்னொரு மனைவி, ஸலீமா சுல்தான் பேகம்.

அதே சமயத்தில் சக்ரவர்த்தி அசைந்தார்.

"இளவரசர் வந்து விட்டாரா?"

தந்தையின் நடுங்கும் குரலைக் கேட்டு ஸலீமின் மனம் [illegible]. அவர் படுக்கையருகே சென்று அக்பரின் [illegible] பற்றி மெதுவாக முத்தமிட்டார்.

"நான் இங்கு இருக்கிறேன், தந்தையே!"

"ஷைக்கு பாபா" கண்களில் நீர் நிறைய அக்பர் [illegible]. அவர் கைகள் நடுங்கியவாறு ஸலீமின் தலையை [illegible] அவர் தலைமுடியைக் கோதி விட்டது.

தன் கண்ணீரைக் கஷ்டப்பட்டு அடக்கியவாறு ஸலீம் [illegible] உற்றுப்பார்த்தார். ஸலீம் குழந்தையாக இருக்கை [illegible] அவர் ஸலீமை 'ஷைக்கு பாபா' என்றே எப்பொழுதும் [illegible]. அவர் தந்தை செல்லமாக — ஏன் இந்தப் [illegible]கூட — அவரை அழைத்துப் பேசி பல வருடங் [illegible] மேலாகிவிட்டன.

"இளைப்பாறுங்கள், தந்தையே" ஸலீம் மெதுவாகக் [illegible]. "நீங்கள் உறங்கும் வரை உங்கள் அருகிலேயே [illegible]கிறேன்."

அக்பர் புன்னகைத்தார். "கடைசி முறையாக உறங்கும் [illegible] எனக்கு வந்துவிட்டது. ஆனால், அதற்கு முன் நான் [illegible] வேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது..." அவர் [illegible]ட்கள் இருந்த பக்கம் திரும்பினார்.

இரண்டு அலிகள் சக்ரவர்த்தி அணியும் மேல் அங்கியை [illegible] அரச வாளையும் எடுத்துக்கொண்டு முன் வந்தனர். அக்பர் சைகை செய்தவுடன் இளவரசருக்கு அங்கி [illegible]க்கப்பட்டு, பத்—உல்—முல்க் (Fath-UL-Mulk) என்ற [illegible] அரசவாள் அவரது இடையில் கட்டிவிடப்பட்டது. [illegible] சக்ரவர்த்தி தன் படுக்கையில் ஓய்வாகச் சாய்ந்தார்.

ஸலீம் மண்டியிட்டு அமர்ந்து, அவர் கைகளில் [illegible]தைப் பதித்து விம்மத் தொடங்கினார்.

"அழாதே, பாபா" சிரமத்துடன் அக்பர் பேசினார். பிறகு, [illegible] மூச்சுவிட்டு ஆசுவாசப்படுத்திக் கொண்டு [illegible]ர்ந்தார். "இந்தப் பெரிய சாம்ராஜ்ஜியத்தின் மக்களைப்

பாதுகாக்க வேண்டிய பொறுப்பையும் பொக்கிஷச் சாலை
லுள்ள சொத்துக்களையும் இவைகளைப் பராமரிக்கவேண்டி
பொறுப்பையும் யாம் உம்மிடம் ஒப்படைக்கிறோம்.
சக்ரவர்த்தியின் குரல் மெலிந்து கொண்டே போயிற்று. அவர்
வார்த்தைகளைக் கேட்க ஸலீம் மேலும் குனிந்தார்.
"உன்னுடைய தாய்மார்களை நன்கு கவனித்துக் கொள்.
அந்தப்புரத்துப் பெண்கள் இப்பொழுது உன் பொறுப்பில்
அவர்களை நன்கு கவனித்துக்கொள்" அழுது கொண்டிருக்கும்
பணியாட்கள் பக்கம் அக்பர் கையை காண்பித்தார்.
"பணியாட்களை நன்கு கவனித்துக்கொள். அவர்கள் எமக்கு
நன்கு சேவை செய்திருக்கிறார்கள். உன் கடமைகளைச்
சரிவரச்செய்" சக்ரவர்த்தி தொடர்ந்து இருமத் தொடங்கினார்.

"நான் நிச்சயம் செய்கிறேன், தந்தையே!" முகத்தில்
கண்ணீர் வழிய ஸலீம் கூறினார். "நீங்கள் கூறியதை எல்லாம்
சரிவரச் செய்வேன்."

முகத்தில் அமைதி தோன்றச் சக்ரவர்த்தி தன் படுக்கை
யில் படுத்திருக்க, ஸலீம் அவர் கைகளில் தன் நெற்றியைப்
பதித்தவாறு அமர்ந்திருக்க இப்படியே சில நிமிடங்கள்
கழிந்தன. பின் இளவரசர் எழுந்திருந்து தன் தந்தையின்
படுக்கையைச் சுற்றி மூன்று முறை வலம் வந்தார். அவர்
களிடையே இவ்வளவு வேறுபாடுகள் இருந்த போதிலும்,
அவர் தந்தை அவரை நேசித்த அளவு வேறு எவரும் அன்பு
காட்டியதில்லை. பல வருடங்கள் இருவரும் சச்சரவிட்டுப்
பிரிந்து இருந்ததை நினைக்கையில் ஸலீமின் மனதில் வலி
ஏற்பட்டது.

அந்தக் குளிர்ச்சியான இரவு முழுவதும் ஸலீம் அக்பரின்
படுக்கை அருகில் அவர் கைகளைப் பிடித்தவாறு அமர்ந்தி
ருந்தார். மழைக்கால மேகங்கள் கடைசியாக உடைந்து மழை
பெய்யத் தொடங்கிக் கிழக்கு அடிவானத்தில் கதிரவன்
உதிக்கத் தோன்றும் நேரத்தில், தன் தந்தையின் மூச்சு சிறிது
சிறிதாக அடங்குவதையும், அவர் கைகள் தன் கைகளுக்குள்
சில்லிட்டுப் போவதையும் உணர்ந்தார்.

அடுத்த நாள் அக்பரின் இறுதிச் சடங்குகள் நடைபெறுவதை ஸலீம் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் உடல் இருமுறை குளிப்பாட்டப்பட்டது. முதலில் தண்ணீராலும், பின் கற்பூரம் கலந்த நீராலும். பின் வெண்மையான உத்தமான துணியினால் மூடப்பட்டது. பின் இன்னும் மூன்று வெள்ளைத் துணிகளால் சுற்றப்பட்டுச் சக்ரவர்த்தியின் உடல் சந்தன மரத்தாலான பெட்டியில் வைக்கப்பட்டது. ஆக்ராவிற்கு ஆறு மைல் தூரத்தில் சிகந்திரா என்னும் இடத்தில் சக்ரவர்த்தி தனக்காக ஒரு கல்லறையை நிர்மாணிக்கத் தொடங்கியிருந்தார். இங்கு அவர் இறுதிவரை உறக்கம் கொள்வார். அந்தக் கல்லறையின் முதற்பகுதிதான் கட்டி முடிக்கப்பட்டிருந்தது. அது ஒரு சதுரமான வடிவத்தில் நான்கிலும் வளைவுகளுடன் கூடிய வராந்தாக்களுடன் இருந்தது. நடுவில் அமைக்கப்படும் வளைவு முப்பது அடி உயரம் இருந்தது.

சக்ரவர்த்தியின் உடல் அவர் சமாதிக்கு எடுத்துச் செல்லும் காலை வேளையில் மழை பெய்தவாறு இருந்தது. வழி எல்லாம் சகதியாக இருந்தது. மற்றவர்களுடன் கூட ஸலீமும் வெறும் காலுடன், தலையை மூடாமல், அக்பரது உடல் செல்லும் சவ ஊர்தியுடன் கூட நடந்து சென்றார். கடைசி சில மைல்கள் தூரம், அக்பரின் உடலை மற்றவர் களுடன் கூட ஸலீமும் தன் தோள்களில் சுமந்து சென்று, பின் அந்த உடலைச் சமாதியின் பீடத்தில் வைப்பதை பார்த்துக் கொண்டிருந்தார். பின் ஸலீம் முழங்காலிட்டுக் குனிந்து அமர்ந்து, அந்தக் கல்லறையின் குளிர்ந்த சலவைக்கல் தரையை முத்தமிட்டார். இறுதிச் சடங்கிற்கு வந்திருந்த மற்றவர்கள் சென்று விட்டபின், ஸலீம் கண்களில் கண்ணீர் மழை நீருடன் கலந்து வழிய, வெளியே மழையில் நின்றிருந்தார். அந்தக் கல்லறை முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்ட பின், அவர் தந்தையின் பெருமைக்கு ஒரு சான்றாகத் திகழும். பல வருடங்களுக்குப் பிறகும், இந்தியா வின் மக்கள் அங்கு வந்து அந்தப் பெருமை வாய்ந்த சக்ர வர்த்திக்கு மரியாதை செலுத்துவார்கள். அவர் ஸலீம், அவருடைய அன்பான இந்த சாம்ராஜ்ஜியத்தைத் தன்னால்

முடிந்தவரை நன்கு பராமரிப்பார். இனி வரும் தலைமுறை யினர் அக்பர் தனக்குப் பிறகு அரசாளத் தேர்ந்தெடுத்த வாரிசு மிகவும் சரியான ஒன்று என்றே மதிப்பிடுவர்.

முகலாயச் சக்ரவர்த்திக்காக ஒரு வாரம் துக்கம் அனுசரிக்க வேண்டும் என உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. முடிவாக, பதினைந்து வருடங்களாக இந்தியாவில் சிம்மாதனத்திற்காக ஏங்கி வந்த ஸலீம், ஆக்ரா கோட்டையில் சக்ரவர்த்தியாக மூடி சூடப்பட்டார்.

அவர் தனக்கு நருதின் முகமத் ஜஹாங்கிர் பாடிஷா காஜி என்ற பட்டப்பெயரைத் தேர்ந்தெடுத்தார்.

பிற்காலம் அவரை சக்ரவர்த்தி ஜஹாங்கிர் என்று அறியும்.



அத்தியாயம் பதினொன்று

அல்லாவின் அளவில்லாத கருணையால் ஒரு வியாழக்கிழமை அதிகாலை, ஜீமதா-எஸ்-ஸான் (Jumada-S-Sani) 20th, A.H.1014 (October) 24th, 1605) அன்று நான் ஆக்ரா தலைநகரில் என்னுடைய முப்பத்து எட்டாவது வயதில் முகலாய அரியணையில் அமர்ந்தேன்.

- **A.ROGERS** trans., and H. BEVERIDGE.ed.,
The Tuzuk -I-Jahangiri

இளம் காலைக் கதிரவன் வீட்டுக் கூரைகளின் மேல் படர்ந்து தெருக்களைச் சூரிய வெளிச்சத்தில் ஒளிர வைத்தான். இராணுவ வீரர்களின் வரிசைகளைத் தாண்டி மக்கள் நடக்கையில், வெள்ளைத் தலைப்பாகைகள் ஒளிர்ந்தன. பட்டுப்பாவாடைகள் சலசலத்தன. ஆபரணங்கள் மினுமினுத்தன. காலையிலிருந்தே — சிலர், முதல்நாள் மாலையிலிருந்தே தெருக்களில் காத்துக் கொண்டிருந்தனர். இரவில் மழை மறுபடியும் பெய்தது. காத்திருந்த ஜனங்கள் சணல் துணி கூரைக்கடியிலும், குடைகளிலும் புகுந்து கொண்டனர். பல தலைமுறை மக்களுக்கு இந்த நாள், சக்ரவர்த்தி பொது இடத்தில் முதல் முறையாகத் தோன்றும் இந்த நிகழ்ச்சி, அவர்கள் வாழ்வில் ஒரு முறையே வரும். அந்த நேரத்திற்காக என்ன நேர்ந்தாலும் அவர்கள் காத்திருக்கத் தயாராக இருந்தனர். கடைசியாக, அவர்கள் பொறுமைக்கும் பலன் கிடைத்தது. சக்ரவர்த்தி படைகள் சூழ அந்தத் தெருமுனையில் நின்றனர்.

"பாதுஷாவிற்கு வணக்கம்" கூட்டம் சத்தமிட்டது. "சக்ரவர்த்திக்கு ஜே."

சக்ரவர்த்தி ஜஹாங்கிர் புன்னகைத்தார். கரு நீலப் பட்டில் விலை மதிப்புள்ள சிவப்புக் கற்கள் பதித்த சேணத்

துடன், வெள்ளித் தகட்டினாலான கடிவாளங்களும் வெள்ளைச் சிறகுகளாலான தலையங்காரமும் செய்யப்பட்ட அழகிய கம்பீரமான குதிரையின் மேல் இரண்டு புதல்வர்கள் — இளவரசன் குர்ரம், மற்றும் இளவரசன் பர்வின் தொடர்ந்து வரப் பின்னால் அவருடைய முக்கிய மந்திரிகளாலான கோக்கா, அப்துல்லா, மஹபத் கான் மற்றும் ஷாரீப் தொடர்ந்தனர்.

ஜஹாங்கீர் அவ்வாறு பவனி வருகையில் பக்கத்திலிருந்த வீடுகளின் மேல் மாடத்திலிருந்து மல்லிகை, சாமந்திப்பூக்கள் வீசப்பட்டன. அவற்றின் இதழ்கள் காலைக்காற்றில் கலந்து அவரைச் சுற்றி நறுமணத்தைப் பரப்பியன. ஜஹாங்கீர் தன் சேணத்தில் இணைத்திருந்த பையில் கையை விட்டுக் கை நிறைய வெள்ளிக்காசுகளை எடுத்துச் சுற்றிலும் வீசினார். ஜனங்கள் மகிழ்ச்சியுடன் கூச்சலிட்டவாறு, அவர்களை ஒழுங்கு படுத்த வந்த இராணுவ வீரர்களை தள்ளி விட்டவாறு, அந்தக் காசுகளைப் பொறுக்க விரைந்தனர்.

இவை எல்லாம் அவருக்காகவே... ஜஹாங்கீர் வெற்றிக் களிப்பில் மிதந்தார். ஜனங்கள் அவரை மிகவும் நேசிக்கின்றனர். அவர் அவர்களுடைய சக்ரவர்த்தி.

சூரியக் கிரணங்கள் அவர்களது சக்ரவர்த்தியின் மேல் பட்டுத் தெறித்து ஒளிரத் திடீரென்று ஒரு ஆச்சரியத்துடன் கூடிய அமைதி மக்களிடையே பரவியது. கெம்பு கற்களாலான பொத்தான்கள் வைத்துத் தைத்த கனத்த பட்டினாலான நீண்ட மேல் அங்கியும், இறுக்கமான பட்டுக் காலுடையும், விலைமதிப்புள்ள கற்கள் பதித்த காலணியும் அவர் அணிந்திருந்தார். தங்கத்தினாலான இடுப்புப் பட்டை அவர் இடையைச் சுற்றியிருக்க, அதிலிருந்து பச்சைக் கற்கள், முத்துக்கள் பதித்த இடைவாள் தொங்கியது. பச்சை, சிகப்பு, கெம்பு, மற்றும் வைரக் கற்கள் அவரது கைகளிலிருந்து ஒளி வீசின. பால் போல் வெண்மையான முத்துக்கள் வைத்துத் தைக்கப் பட்ட அரசருக்குரிய தலைப்பாகை அவர் தலையை அலங்கரித்தது. ஒரு பெரிய புறாவின் முட்டை அளவிற்கான வைரம் வைத்துப் பொருத்தப்பட்ட வான்கோழியின் சிறகுகள்

தலைப்பாகை மேல் ஒளிர் விட்டன. இதுவே கம்பீரத்தின் உச்சம். இவர்தான் அந்தக் காலக்கட்டத்தில் இருந்த, மிகவும் பண பலமுள்ள ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்தின் சக்ரவர்த்தி. ஜனங்கள் கூட்டம் அவரைப் பிரம்மிப்புடன் நோக்கியது.

ஜஹாங்கீர் சந்தோஷத்தில் பூரித்தார். அவர் தந்தை இறந்த பிறகு இதுதான் அவர் முதன் முறையாகப் பொது மக்களைச் சந்திக்கும் நிகழ்ச்சி! அவருடைய பட்டம் சூட்டும் விழா, சிறிய அளவில், அவசரமாக செய்யப்பட்டது. முதலாவது காரணம், அவர் இன்னும் துக்கம் அனுஷ்டித்துக் கொண்டிருந்தார். இரண்டாவதாக ராஜா மான்சிங்குடன் ஒளிந்துகொண்டிருக்கும் குஸ்ருவிடமிருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்.

ஆனால், இப்பொழுது முடிவாக அவர் முகலாய இந்தியாவின் சக்ரவர்த்தி. சக்ரவர்த்தி, பரிவாரங்கள் புடை சூழ ஆக்ரா தெருக்களில் மெதுவாக பவனி வந்து, ஒவ்வொரு வாயிலும் ஒன்றுக்கொன்று 90^0 கோணத்தில் எதிரிகளைக் குழப்பும் வகையில் அமைக்கப்பட்டு, மூன்று பெரிய திறப்பு வாயில்கள் உள்ள அமர்சிங் என்ற கோட்டை வாயில் வழியாக, ஆக்ராக் கோட்டைக்குள் நுழைந்தார். மணற்கற்களாலான சுவர்கள் இருபுறமும் அமைந்த கடைசி வாயிலைக் கடந்து அந்தப் பரிவாரம் திவான்—ஈ—ஆம் என்ற பொது மக்கள் சபையின் முற்றத்தை வந்தடைந்தது. சக்ரவர்த்தி கடிவாளத்தை இழுத்துக் குதிரையை நிறுத்தி, நிதானித்து, மேலிருந்த சாளரத்தை நோக்கினார். வண்ண வண்ண உடைகள் அணிந்த, முகத்திரையிட்ட பெண்களால் அது நிரம்பி இருந்தது. கற்கள் பதித்த தலைப்பாகை அணிந்து மற்றவர்களிடமிருந்து பிரிந்து, முன் வரிசையில், தனியாக ஒரு பெண் நின்றிருந்தாள். ஒரு மெல்லிய காற்று, முகத்திரையை அவள் முகத்துடன் ஒட்டச் செய்ய, அவள் முகம் பெருமையுடன் புன்னகையில் மலர்வதை ஜஹாங்கீர் கண்டார். ஜகத் கோஸினி நன்கு குனிந்து அவரை வணங்கி நிமிர்கையில் குதிரையில் அமர்ந்தவாறு தன் தலைமை சக்ரவர்த்தினியைப் பார்த்து ஜஹாங்கீர் வணங்கினார்.

ருக்கையா சாளரத்தில் இல்லை. சக்ரவர்த்தி அ
மரணம் குறித்து அவள் இன்னும் துக்கம் அனுஷ்
வந்ததால் அவள் தன் பகுதியிலேயே இருந்து வி
ருக்கையா அங்கு இல்லையாகையால் மெஹ்ருன்னி
அங்கு இல்லை.

அந்தப் பெரிய முற்றத்தின் இரு கோடியிலிருந்
ஜஹாங்கீரும் ஜகத்கோஸினியும் ஒருவரை ஒருவர் பார்த்
கொண்டிருந்தனர். பேரரசின் வாத்யகோஷ்டி ஒலி
தொடங்கியது. தோலினாலான மத்தளங்கள் கம்பீர
சத்தம் எழுப்பின. இசைக் கலைஞர்களின் வாத்தியங்
நுனியில் கட்டப்பட்டிருந்த பட்டுக் குஞ்சலங்கள் கா
அசைந்தாடின. பெரிய பித்தளைத் தட்டுகள் இணை
ஏற்படுத்தும் ஒலி, இசையுடன் கூடி வந்தது. ஒளிவீசும்
பதித்த தலைப்பாகைகளிலும் தங்க ஜரிகைகளால் பூ
செய்யப்பட்ட அங்கிகள் மற்றும் இடுப்பு பட்டைகள்
சூரிய ஒளி பட்டுத் தெறித்து, நடனமாடிற்று. கூடியி
பிரபுக்கள் முஷ்டியை உயர்த்திச் "சக்ரவர்த்தி ஜஹாங்
வாழ்க" என்று கோஷமிட, அந்தச் சப்தம் சுற்றிலும்
சுவர்களில் பட்டு எதிரொலித்தது. தொடர்ந்து "சக்ரவர்த்
ஜகத்கோஸினி வாழ்க" என்று சாளரத்திலிருந்த பெண்க
மிருந்து கோஷம் எழுந்தது. அவர்கள் இருவரும் தங்
வலது கையை நெற்றியில் வைத்துப் பலமுறை குனி
வணக்கம் தெரிவித்தனர். ஜஹாங்கீர் ஜகத்கோஸினி
நோக்கி புன்னகைத்து விட்டுக் குதிரையிலிருந்து இறங்
பிரபுக்கள் இடையே தன் சிம்மாதனத்தை நோக்கி நடந்தார்

அக்ராக் கோட்டையில் பொதுமக்கள் சபையில் அ
கூடியிருந்தது. அந்த முற்றத்தின் ஒரு கோ
யில் பளிங்குக் கற்களினாலான தூண்களுடன் சுற்றிலு
வராந்தாக்கள் அமைக்கப்பட்டு ஐந்தடி உயரத்தில் கட்ட
பட்டிருந்த ஒரு பெரிய மேடையில் சக்ரவாத்தியின் சிம்ம
சனம் இருந்தது. அந்த மேடையின் முன்புறத்தில் இருபக்கமு
இரண்டு பெரிய மரயானைகள் அலங்கரித்தன. அதன் மே
அடிமைகள் பெரிய சாமரங்கள் ஏந்தியபடி நின்றிருந்தனர்

சனத்தைச் சுற்றிப் பிரபுக்கள் மூன்று பகுதிகளாக,
வாரு பகுதியும் அவரவர்களது தகுதிக்கும் பதவிக்கும்
தூரத்தில், பிரிந்து, அமர்ந்திருந்தனர்.

"மிர்ஜா கியாஸ் பெக்கை அழைக்கவும்." அறிவிப்பாளர்
தோஷக்கின் குரல் அந்த அமைதியான முற்றத்தில்
த்தது.

கியாஸ் பெக் முன் வந்து 'தஸ்லீம்' முறைப்படி வணங்கி
ர். இதற்குச் சில தினங்களுக்கு முன் மெஹ்ருன்னிஸா
தந்தை வீட்டிற்குச் சென்றிருந்தாள். உணவு உண்டபின்
தையும் மகளும் தோட்டத்தில் நட்புடன் அமைதியாக
ர்ந்திருந்தனர். அவள் முகத்தில் கண்கள் அடிக்கடி
ன்னகையால் விரிவதை கியாஸ் உற்று நோக்கினார்.
வரின் இந்த புதல்வி மிகவும் அழகானவள். அவரது மற்றக்
குழந்தைகளைவிட மிகவும் அதிக அழகானவள். மென்மை
னவள். அன்பானவள் — அவர் ஒத்துக்கொள்ளத் தயங்கிய
உண்மை. ஆனால், அவ்வப்போது அவள் முகத்தில்
தான்றும் வருத்தத்தை அவரால் துடைக்க முடிந்தால்
வளுக்குக் குழந்தை இல்லை என்பதாலா? கியாஸ் ஆணாக
ருப்பதால், பெண்கள் பகுதியில் நடக்கும் பேச்சு வார்த்தை
களில் கவனம் செலுத்துவதில்லையானாலும், மெஹ்ருன்
ஸாவிற்கு இன்னும் குழந்தை பிறக்காமலிருப்பது அவரை
கவும் வருத்தியது. முக்கியமாக அது அவளுக்கு மிக
னவருத்தம் ஏற்படுத்தும் என்பதால்.

"என்னிடம் சொல்," குனிந்து அவள் நெற்றியில்
த்தமிட்டவாறு கியாஸ் கூறினார்.

"கோனிஷ் முறைப்படி முறையாக வணக்கம் செலுத்த
வேண்டியதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் தந்தையே,"
அவள் பதிலளித்தாள். "எனக்குத் தெரியும்" அவர் தடுத்துப்
பேச வந்ததைக் கை அசைத்து மறுத்தவாறு "நீங்கள் கோனிஷ்
முறைப்படிச் சக்ரவர்த்தி அக்பருக்கே வணக்கம் செலுத்தி
யிருக்கிறீர்கள் என்று எனக்குத்தெரியும். ஆனால், இப்பொழுது
புதிய நேரம். புதிய நேரத்துடன் புதிய பட்டங்கள், புதிய

வெகுமதிகள் உடன் வரும். ஓ அப்பா! இது உங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியான நேரம்."

"நாம் நம்பிக்கையுடன் இருக்கலாம்." கியாஸ் புன்னகையுடன் முணுமுணுத்தார்.

பின்னர் அலிகுலியை நினைத்து அவர்கள் இருவரும் சிறிது வருந்தினர். மெஹ்ருன்னிஸாவின் கணவன் அலிகுலி வெளிப்படையாகவே இளவரசன் குஸ்ருவை ஆதரித்தான். ஆனால், குஸ்ரு தற்சமயம் மரியாதை இழந்து, ஒளிந்து வாழ்கிறான். அலிகுலியின் முட்டாள்தனமான செயல் கியாஸை ஒன்றும் சங்கடப்படுத்த முடியாதெனினும் அவரது மனைவியான மெஹ்ருன்னிஸாவிற்கு அதனால் கஷ்டங்கள் நேரிடலாம். நாளாக ஆகத்தான் இதன் விளைவு தெரிய வரும்.

மேலே பொருத்தப்பட்ட நீண்ட சதுர வடிவமான விசிறிகள் கீழிருந்து ஒரு கயிற்றால் இழுக்கப்பட, முன்னும் பின்னும் வேகமாக ஆடின. 'திவான்—ஈ—ஆம்'ல் சக்ரவர்த்தி ஜஹாங்கீர் முன்னிலையில் தஸ்லீம் முறைப்படி வணக்கம் செலுத்திவிட்டு நிமிர்கையில் கியாஸ் பெக், பின்முதுகில் விசிறிகளின் குளிர்ந்த காற்றுப் படுவதை உணர்ந்தார். பல வருடங்களுக்கு முன்பு ஸலீமிற்கும் அவர் மகள் மெஹ்ருன்னிஸாவிற்கும் இடையில் ஏற்பட்ட அன்புப் பரிவர்த்தனை அவர் நினைவிற்கு வந்தது. அதன் விளைவு நல்ல விதமாக இருந்திருந்தால் அவர் மகள் இன்று சக்ரவர்த்தினியாக ஆகியிருப்பாள். கியாஸ் பெக் சக்ரவர்த்தி பேச்சைத் தொடங்குவதற்காக காத்திருந்தார்.

தன் கம்பீரமான சிம்மாசனத்திலிருந்து ஜஹாங்கீர் இவரை நோக்கினார். "மிர்ஜா பெக், நீங்கள் இந்த சாம்ராஜ்ஜியத்திற்கும் என் மதிப்பிற்குரிய தந்தைக்கும் செய்த சேவைகளைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்."

"என் கடமையைத் தான் நான் செய்தேன், மாட்சிமை பொருந்தியவரே!"

"அதை நீ மிகவும் நன்றாகத் தான் செய்திருக்கிறாய், மிர்ஜா பெக்." ஜஹாங்கீர் கூறினார். "இன்றிலிருந்து நீயும் உன் கானுடன் இந்த சாம்ராஜ்ஜியத்திற்குப் பொருளாளராக திவானாக நியமிக்கப்படுகிறாய்."

கியாஸ் பெக் தன் கால்கள் தொய்ந்து போவதை உணர்ந்தார். ஒரு புதிய பதவி கிடைக்கும் என்று அவர் எதிர்பார்த்ததுதான். ஆனால் திவான் பதவி? அல்லா தான் சமயம் அவரிடம் கருணை காட்டுகிறார். இருபத்து எட்டு வருடங்களுக்கு முன்பு முகலாய சாம்ராஜ்ஜியத்தின் ஒரு எல்லையிலுள்ள காந்தஹார் என்னும் நகரத்தில் ஒரு தெரு ஓரத்தில் இடைபட்டையில் நான்கே தங்கக்காசுகளைச் செருகி வைத்துக் கொண்டு தன் குடும்பத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என்று கவலையுடன் நின்று கொண்டிருந்தது அவரது நினைவிற்கு வந்தது. இப்பொழுது அவர் அந்த சாம்ராஜ்ஜியத்தின் பொக்கிஷதாரி, "வந்தனம், மாண்புமிக்கவரே, இது எனக்கு ஒரு பெரிய கௌரவமாகும்."

ஜஹாங்கீர் தலையசைத்தார். "இனிமேல் நீ இதிமாத்த தௌல்லா (Itimadaddaula) என அழைக்கப்படுவாய்"

"அரசாங்கத்தின் தூண்" அந்த நிமிடத்தின் மகிழ்ச்சியில் திளைத்து, அவர் தலைவணங்கினார். இப்படிப்பட்ட பெரிய கௌரவம் கிடைத்த மகிழ்ச்சியில், தர்பாரில் இனி தொடர்ந்து நடக்கும் நிகழ்ச்சியில் கவனம் செலுத்துவது கடினமானது. மௌனமாக அவர் சக்ரவர்த்தியை மறுபடியும் குனிந்து வணங்கிவிட்டுப் பின்புறமாக நகர்ந்து தன் இருக்கையை அடைந்தார்.

ஜஹாங்கீர் அறிவிப்பாளர் மீர் தோசக் பக்கம் திரும்பி தலையசைத்தார்.

"முகமத் ஷரீப்பை கூப்பிடவும்."

முகமத் ஷரீப் முன்னால் வந்தான். தன் தந்தையின் அருகில் இருக்கவேண்டி ஜஹாங்கீர் ஆக்ரா திரும்பி வருகையில் ஷரீபை அலஹாபாதின் கவர்னராகப் பொறுப்பேற்கப் பணித்திருந்தார். இப்பொழுது ஷரீப் சாம்ராஜ்ஜியத்தில் ஒரு

முக்கிய மந்திரியாக நியமிக்கப்பட்டு கிராண்ட் வைஸியர் (Grand vizier) அதாவது பிரபுக்களின் தலைவன் என்ற பதவியும், மற்றும் அமிர் —உல்—அம்ரா (Amir-Ul-Umra) என்ற பட்டமும் கொடுக்கப்பட்டார்.

ஜஹாங்கீரின் உத்திரவின்படி அபுல் பாஸலைக் கொலை செய்த எதிர்ப்பு கூட்டத்தின் தலைவன் பீர் சிங் தியோ (Bir singh deo) தான் மறைந்து இருந்த இடத்திலிருந்து இப்பொழுது வெளியே வந்துவிட்டான். அவனுக்கு ராஜா என்ற பட்டமும், மூவாயிரம் குதிரைகள் கொண்ட மான்யமும் வழங்கப்பட்டது. சக்ரவர்த்தி அவனைக்கூட மறக்கவில்லை. அபுல் பாஸலின் மரணம் அவரது தந்தைக்கு மிக்க வருத்தத்தை கொடுத்தாலும் ஜஹாங்கீரின் திட்டங்களுக்கு அவசியமானதாக இருந்தது. யாரை உயிருடன் விட்டு வைப்பது, யாரைக் கொல்வது போன்ற முடிவுகளை எடுப்பதும் இராஜாங்க ரீதியான விஷயங்களில் ஒன்றாகும்.

முடிவாகச் சக்ரவர்த்திக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவர்களைத் தண்டிக்கும் நேரம் வந்தது.

"அலிகுலியை கூப்பிடவும்." மீர்தோஷக்கின் குரல் உரக்க ஒலிக்க, அந்த சபையில் சட்டென்று ஒரு அமைதி நிலவியது.

ஜனங்கள் நகர்ந்து மெஹ்ருன்னிஸாவின் கணவன் அலிகுலி முன்னால் வருவதற்கு வழி விட்டனர். அகங்காரத்துடன் அலிகுலி முன்னால் வந்து வணக்கம் செய்தான்.

ஜஹாங்கீர் யோசித்தவாறு அவனைப் பார்த்தார். இவனை என்ன செய்வது? ஆக்ராவில் இருக்கையில் அவரை விட்டு விலகிக் குஸ்ருவின் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டான். விசுவாசம் இல்லாமல் நடந்து கொண்டதற்காக அவனுக்கு மரண தண்டனை விதிக்கலாமா? அது மெஹ்ருன்னிஸாவிற்கு ஒரு விடுதலையாக இருக்கும். தன்னிச்சையில்லாமல் அந்த எண்ணம் அவருக்கு எங்கிருந்தோ வந்தது. இப்பொழுது அவர் சக்ரவர்த்தியாகையால், அவளைத் தன்னுடையவளாக ஆக்கிக் கொள்ளமுடியும். அக்பர் அணிந்திருந்து, பின் அவருக்குப் பரிசாக அளித்த, தன்

கரல்களில் அணிந்திருக்கும் கெம்பு வைரக்கற்கள் பதித்த மோதிரத்தை ஏதோ யோசனையுடன் ஜஹாங்கீர் உற்றுப் பார்த்தார். சக்ரவர்த்தினி ருக்கையாவின் மாளிகையின் வெளிமுற்றத்தில் அந்த நிகழ்ச்சி நடந்து பல வருடங்களாகி விட்டன. அவர்கள் இருவரும் அப்பொழுது இளம் வயதினர், குழந்தை போலவே. அது மெஹ்ருன்னிஸாவின் நினைவில் இருப்பது கடினம்தான். இடையில் அதிக வருடங்கள் ஓடி விட்டன. அவர் நிமிர்ந்து பார்த்தார். அவை முழுவதும் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தது. மேவார் அக்கருகிலிருந்த காட்டில் அவர் உயிரைக் காப்பாற்றியதற்காகப் புலியைக் கொன்றவன்" என்ற பட்டத்தை அலிகுலிக்கு கொடுத்திருந்தார். இது அவருக்கு அவனிடம் உள்ள பெரும் கடன் சுமையாகும்.

"உன் குற்றங்களை மன்னித்துவிடத் தீர்மானித்துவிட்டேன். அலிகுலி" ஜஹாங்கீர் கூறினார். "என் சாம்ராஜ்ஜியத்திலிருந்த எதிர்ப்புச் சக்திகள் சிலவற்றில் நீ தடுமாறி விட்டாய். ஆனால், யுத்த களங்களில் நீ செய்த வீரச் செயல்களும், எனக்குச் செய்த சேவைகளும் உன் நல்ல தன்மைக்கு முத்துக்காட்டு. வங்காளத்திலுள்ள பரத்வான் (Bardwan) மாவட்டத்தின் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். நாளைக்கே அங்கு செல்வதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கு."

ஆச்சரியத்துடன் அவையில் இருந்தவர்கள் சலசலவென்று பேசத் தொடங்கினர். சக்ரவர்த்தி அலிகுலியை முற்றிலும் மன்னித்து விட்டார். ஜஹாங்கீர் திருப்தியுடன் தலையசைத்துக் கொண்டார். அவர் செய்தது சரிதான். அக்பர் நிச்சயம் அவர் முடிவை ஆமோதித்திருப்பார்.

"அமைதி! அமைதி!" மீர் தோஷக் கூவினார். ஒரு பணியாள் மீர் தோஷக்கிடம் செல்வதைப் பார்த்துப் பிரபுக்கள் அமைதியாயினர். அவர்கள் சிறிய குரலில் பேசியபின் மீர் தோஷக் ஜஹாங்கீரிடம் சென்றான்.

"மாண்பு மிக்கவரே! இளவரசன் குஸ்ரு தங்கள் சந்திதானத்திற்கு வர அனுமதி கோருகிறார்."

அவன் வார்த்தைகளைக் கேட்டு அவையிலுள்ளோர் அனைவரும் ஆச்சரியத்தில் திகைத்தனர். புதிய சக்ரவர்த்தியின் முதல் பொதுமக்கள் கூட்டம் எதிர்பாராததாகவும் பரபரப்பானதாகவும் தோன்றுகிறது. இரவில் உணவு உண்ணும்பொழுது பேசுவதற்குப் பிரபுக்களுக்கு நிறைய விஷயங்கள் இருக்கும். நாளைக்கு சாம்ராஜ்ஜியம் முழுவதும் இந்தச் செய்திகள் பரவி விடும்.

ஜனங்களின் உணர்ச்சியின் எதிரொலிப்பைக் கண்டு ஜஹாங்கீர் தனக்குள் முறுவலித்துக் கொண்டார். தான் சிலருக்கு மட்டுமே குஸ்ரு கைது செய்யப்பட்டுப் பாதுகாப்பில் இருப்பது பற்றி தெரியும். அவர் நிகழ்ச்சி இப்படி அமைய வேண்டுமென திட்டமிட்டிருந்தார்.

"அவனை இங்கே வரவழையுங்கள்"

ராஜா மான்சிங்கும் குஸ்ருவும் மக்கள் சபையில் நுழைந்தனர். முகம் சிவக்க, ராஜாவின் பின் தயங்கியபடி தன் தந்தையின் கண்களைச் சந்திக்க விருப்பமில்லாமல் குஸ்ரு வந்தான். மாமனும் மருமகனும் சட்டென்று குனிந்து தங்கள் புதிய சக்ரவர்த்திக்கு வணக்கம் தெரிவித்தனர்.

"இங்கே வா, குஸ்ரு" ஜஹாங்கீர் உத்திரவிட்டார். விருப்பமில்லாமல் குஸ்ரு மெதுவாகத் தன் தந்தையை நெருங்கினான். ஜஹாங்கீர் தன் சிம்மாசனத்திலிருந்து எழுந்து கீழே இறங்கி வந்து, அந்தச் சபையில் எல்லோரும் பார்க்கும்படித் தன் மகனை அணைத்துக் கொண்டார். பிரபுக்கள் தங்கள் மகிழ்ச்சி கலந்த சம்மதத்தை முணு முணுத்தவாறு வெளிப்படுத்தினர். சக்ரவர்த்தி குஸ்ருவின் தோளை இன்னும் பிடித்தவாறே பின் வாங்கினார். அவரது இந்த மகனை என்ன செய்யலாம்? அரசக் கிரீடம் இப்பொழுது அவர் தலையில் உறுதியாக அமர்ந்து விட்ட நிலையில், குஸ்ருவிடமிருந்து வெளிப்படையாக அச்சுறுத்தல் ஏதும் எழாது. ஆனால், இதை முழுமையாக நம்ப முடியுமா? அவர் தன் மகனை ஏறிட்டு நோக்கினார். ஒருக் கணத்திற்குக் குஸ்ரு மனதில் வன்மத்துடன் ஒருதரம் தன் தந்தையின்

கண்களைச் சந்தித்தான். உடனே தலையை குனிந்து கொண்டான்.

ஜஹாங்கீர் திடுக்கிட்டு, பின்வாங்கித் தன் மகனின் தோள்களை விட்டு விட்டுத் தன் சிம்மாசனத்திற்குச் சென்றார். தன் குரலை எந்த உணர்ச்சியும் காட்டாதவாறு மாற்றிக் கொண்டு கூறினார். "நீ என்னை ஏமாற்றி விட்டாய். இந்த சாம்ராஜ்ஜியம் ஒரு மகன் தன் தந்தைக்குச் செய்த துரோகத்தைப் பார்த்து விட்டது. உன் நடத்தை உன்னையே அவமானத்திற்குள்ளாக்கி விட்டது. இப்பொழுது மன்னிப்புக் கேட்டு இங்கு வந்திருக்கிறாய். நான் உன்னை மன்னிக்கிறேன். என்ன இருந்தாலும் நீ என் மகன். உன் துரோகத்திற்கும் மேல நான் உன்னிடம் வைத்துள்ள அன்பையும் பரிவையும் இந்த மக்கள் சபை உறுப்பினர்கள் அறிந்து கொள்ளட்டும்."

பிரபுக்கள் ஆமோதித்தவாறு தலையசைத்தனர். அரசாங்கத்தில் பணம் பட்டுவாடா செய்யும் மீர் பக்ஷியை நோக்கி ஜஹாங்கீர் திரும்பி, "இளவரசர் குஸ்ருவிற்கு ஒரு லட்சம் ரூபாயும் வசிப்பதற்கு ஒரு வீடும் கொடுக்க ஏற்பாடு செய்யவும்."

குஸ்ரு மண்டியிட்டுக் குனிந்து முணுமுணுத்தான். "வந்தனம், மாண்புமிக்கவரே! உங்கள் கருணைக்கு அளவே யில்லை. என்னுடைய தவறான நடத்தைக்கு நான் மிகவும் வருந்துகிறேன். உங்களுக்கு வருத்தம் ஏற்பட வைத்ததற்கு மன்னிப்பு வேண்டுகிறேன்."

ஜஹாங்கீர் ராஜா மான்சிங் பக்கம் திரும்பினார். அந்த வயது முதிர்ந்த அதிகாரி, கர்வத்துடன் நிமிர்ந்து நின்றவாறு தனது அடர்த்தியான நரைத்த புருவத்திற்கடியிலிருந்து சக்ரவர்த்தியை நோக்கினார்.

முதலில் குஸ்ருவை இரகசியமாக அழைத்துக் கொண்டு வங்காளத்திற்குச் சென்று விடவேண்டும் என்று மான்சிங் திட்டமிட்டார். ஆனால், ஜஹாங்கீர் சக்ரவர்த்தியாக முடி சூட்டிக் கொண்டபிறகு, அந்தத் திட்டம் தோல்வியடையும் என்பதை உணர்ந்தார். அவர்கள் போகவேண்டிய பாதை

யெல்லாம் அடைக்கப்பட்டு விட்டதை அவர்கள் உணர்ந்தனர். யமுனை நதிக்கரைகளிலும் வங்காளத்திற்குச் செல்லும் வழிகளிலும் காவலர்கள் நிறுத்தி வைக்கப்பட்டு, மான்சிங்கும் குஸ்ருவும் மரியாதையுடன் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் கைது செய்யப்படவில்லை. ஆனால் மான் சிங் நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டு ஜஹாங்கீரிடம் மன்னிப்புக் கேட்க குஸ்ருவை ஆக்ரா அழைத்து வந்தார்.

குஸ்ருவை வெளிப்படையாகச் சபையில் அவமானப் படுத்தியது போல், ராஜா மான்சிங்கை அவமானப் படுத்த முடியாது என்பதை ஜஹாங்கீர் அறிவார். அவருடன் சமாதானமாகப் போவதே நல்லது என்று உணர்ந்தார். தீவிரமான எதிர்ப்புக் கோஷ்டிகள் உள்ளதும் ஆப்கானியக் கலகக்காரர்கள் பிடியில் இன்னும் உள்ள வங்காளத்தைக் கண்காணிக்க ராஜா மான்சிங் அவசியம் தேவை என்பதை அறிந்தார். அங்கு வானிலை குளிர்ச்சியாகவும் ஈரமிக்க ஆரோக்கிய மில்லாதவாறு இருப்பதன் காரணமாக அங்கிருந்த மக்கள் மத்தியில் திருப்தியான வாழ்க்கை சூழல் இல்லை. அதனால் வங்காளத்தில் கவர்னராக இருப்பவர் திறமைமிக்க அதிகாரியாகவும், சிறந்த போர் வீரராகவும் இருக்க வேண்டியது அவசியம். மான்சிங்கிடம் அந்தக் குணங்கள் உள்ளன. அலிகுலிகூட அத்தகையவன்தான். அவர்கள் இருவரும் இணைந்து குஸ்ருவிற்கு ஆதரவாகச் சூழ்ச்சி செய்த போதிலும் ஜஹாங்கீரின் கண்காணிப்பில் குஸ்ரு ஆக்ராவில் இருக்கையில், அவர்களால் அவனுக்குச் சாதகமாக எதுவும் பெரிதாகச் செய்ய முடியாது.

"ராஜா மான்சிங், குஸ்ருவுடன் உங்களுடைய நெருங்கிய உறவு காரணமாக அவனுடைய புரட்சியில் உங்களுக்கு இருந்த பங்கை மன்னிக்கிறேன். என் மன்னிப்பின் அடையாளமாக உங்கள் மான்யம் இரண்டாயிரம் குதிரைகளாக அதிகரிக்கப்பட்டு, நீங்கள் தொடர்ந்து வங்காளத்தின் கவர்னராக இருக்க உத்திரவிடுகிறேன்." என்று ஜஹாங்கீர் கூறி முடிக்கையில் மீர் தோஷக் ராஜமரியாதை தெரிவிக்கும் வகையில் "சார்காப்" (Charqab) ஒரு கையில்லாத பனியன்

போன்றது — என்ற அங்கியையும் கற்கள் பதித்த இடைவாள் இரண்டையும் ராஜா மான்சிங்கிற்குப் பரிசாக அளிக்க எடுத்து வந்தான்.

"வந்தனம், மாண்பு மிக்கவரே!" மான்சிங் குனிந்து வணக்கம் செலுத்தி விட்டுப் பின்புறமாக நடந்து தன் இடத்தை அடைந்தார்.

அரச சபை கலைந்தது.

அரசருக்கான கம்பீரமான விசாலமான படுக்கையில், தங்க நிறமான உத்திரத்தைப் பார்த்தவாறு ஜஹாங்கீர் படுத்திருந்தார். முதல் நாள் அவர் செய்ய வேண்டிய கடமைகள் முடிந்தன.

சக்ரவர்த்தி! அந்த வார்த்தை எவ்வளவு இயல்பாகத் தன்னுடன் இணைந்து விட்டதை நினைத்துப் பார்த்து அவர் உதடுகள் சிலிர்த்தார். குஸ்ரு அவர் கண்காணிப்பில் இருக்கையில், இப்பொழுது அவர் எந்த எதிர்ப்பும் இல்லாத சக்ரவர்த்தி. அவர் அப்படியே தொடர்ந்து இருப்பார். இந்தப் பதவி அவருக்கு மிருந்த மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் அதே சமயம் சிறிது தயக்கமாகவும் இருந்தது. தன் கடமைகளை அவர் நிச்சயம் சரிவரச் செய்வார். அவர் தன் அந்தப்புரத்திற்கு வந்தவுடன் அவரது முக்கியத் தலைமை அதிகாரி முகமத் ஷரீபை வரச்சொல்லி உத்திரவு அனுப்பினார்.

"முகமது, குஸ்ருவின் மாளிகை இருபத்துநான்கு மணி நேரமும் காவலர்களால் கண்காணிக்கப்படவேண்டும். என் அனுமதியில்லாமல் யாரும் அவனைச் சந்திக்கக் கூடாது. மேலும், அவனைக் கண்காணிக்க ஒற்றர்களை நியமிக்கவும். அரியணை மேலுள்ள ஆசையை அவன் இன்னும்விட வில்லை. அரச சபையில் அவன் முகத்தில் என்னால் தெளிவாக அதைப் பார்க்க முடிந்தது. வெளி உலகத்துடன் எந்தத் தொடர்பும் ஏற்படாதபடி கண்காணித்து வரவும்."

"இவை எல்லாம் கட்டாயம் செய்யப்படும், மாட்சிமை பொருந்தியவரே!" முகமத் ஷரீப் முகத்தில் வஞ்சனையுடன்

கூடிய சிரிப்பு வெடித்தது. அவனது கொடூரமான கண்கள் ஒளிவிட்டன. குஸ்ருவின் இந்தப் புரட்சிக்கு முன்பிருந்த ஷரீபிற்கும் குஸ்ருவிற்கும் இடையே நல்ல உறவு இருந்ததில்லை. இப்பொழுது இளவரசரைக் கண்காணிக்கும் வேலையை எடுத்துக்கொள்வதில் ஷரீபிற்கு மிக்க மகிழ்ச்சி. அவனைவிட நல்ல அதிகாரியை ஜஹாங்கீர் தேர்ந்தெடுத்திருக்க முடியாது.

பணியாட்களையும், மனைவிகளையும் அனுப்பி விட்ட பிறகு, இரவின் தனிமையில், இப்பொழுது ஜஹாங்கீர் தன்னுடைய பட்டப்பெயரை உரக்க சொல்லிப் பார்த்தார். "நூருதின் முகமத் ஜஹாங்கீர் பாதுஷா காஜி" நூருதின் என்றால் நம்பிக்கையின் ஒளி! பாதுஷா — சக்ரவர்த்தி அல்லது தைமூர் வம்சத்தின் தலைவர் என்பதைக் குறிக்கும். ஜஹாங்கீர் என்பது 'உலகை வென்றவர்' என்று அர்த்தமாகும்.

ஜஹாங்கீர் புன்னகைத்தார். அவர் உலகத்திற்கே சக்ரவர்த்தி. அவர் மக்களுக்கு ஒரு சூரியன் போன்றவர். உழவர்கள் எப்படிச் சூரிய ஒளியை நம்பி இருக்கிறார்களோ அவ்வாறே மக்கள் அவரது செழிப்பை எதிர்பார்த்து வாழ்கின்றனர். அவர் தைமூர் வம்சத்தின் தலைவர் — ஒரு தனிபெரும் சாம்ராஜ்ஜியத்தின் சின்னம்.

அன்று நடந்த நிகழ்ச்சிகள் திருப்திகரமாக இருந்தது என்பதை ஜஹாங்கீர் நினைத்துப் பார்த்தார். அவர் ஆதரவாளர்கள் எல்லோரும் மக்கள் சபை முன்னால் கௌரவிக்கப்பட்டனர். அவரை எதிர்த்தவர்கள் தண்டிக்கப்பட்டனர். எல்லோரும், ஒருவனைத் தவிர! மிர்ஜா அஸிஸ் கோக்கா, குஸ்ருவின் மாமனார். ஜஹாங்கீர் நாக்கால் சூள் கொட்டினார். குஸ்ரு — எப்பொழுதும் குஸ்ரு. மிர்ஜா கோக்காவைப் பற்றி ஏதாவது செய்யவேண்டும். அவர் குஸ்ரு இருக்கும் இடத்திற்கருகில் ஆக்ராவில் இருக்கக்கூடாது. நிச்சியம் சீக்கிரமே மிர்ஜா கோக்கா பற்றி முடிவெடுக்கப்படும்.

"மிர்ஜா அஸிஸ் கோக்கா, சக்ரவர்த்தி உங்களை வரச் சொல்லி ஆணையிட்டுள்ளார்."

'நிவான்—ஈ—காஸ்' பிரபுக்கள் சபையின் ஒரு கோடியில் உள்ள நன்கு எண்ணெய்யிடப்பட்ட தாழ்ப்பாள்களுடன் கூடிய பெரிய கதவுகள் சத்தமில்லாமல் திறக்கப்பட்டன.

பிரபுக்கள் நகர்ந்து, குஸ்ருவின் மாமனார், மிர்ஜா கோக்கா, கன்னங்கள் சிவக்க, தலைகுனிந்து உள்ளே நுழைய வழி விட்டனர்.

அவர்களது பதவியின் தகுதிக்கு ஏற்றவாறு அரச சபையில் சக்ரவர்த்திக்கு அருகில் நின்றிருந்த மஹபத் கானும் முகமத் ஷரீபும் ஒருவரை ஒருவர் பார்த்து விஷமத்தனமாகப் புன்னகைத்துக் கொண்டனர். அரியணைக்குப் பின்னால், ஜன்னல் போல் வேலைப் பாடமைந்த பளிங்குக் கல் திரைக்குப் பின் மற்றவர்களால் பார்க்க முடியாதபடி அந்தப்புரப் பெண்கள் குழுமி இருந்தனர். அக்பரின் உடன்பிறவாச் சகோதரர் மிர்ஜா கோக்கா, அரண்மனை அந்தப்புரத்திலேயே வளர்ந்தவர். அங்குள்ள பெண்களைக் கவர்ந்தவர். அவரது வழக்கு விசாரணையைப் பார்க்க எல்லாப் பெண்களுமே வந்திருந்தனர்.

மிர்ஜா கோக்காவின் காலடி சப்தம் அந்த அமைதியான சபையில் எதிரொலித்தது. அவர் அரியணை அருகில் வந்தவுடன் கோனிஷ் முறைப்படிச் சக்ரவர்த்தியை வணங்கி விட்டுத் தரையை நோக்கியவாறு குனிந்து நின்று ஜஹாங்கீர் பேசத் தொடங்குவதற்காகக் காத்திருந்தார்.

வெறுப்பில் முகம் சுளித்த ஜஹாங்கீர் அவரைப் பார்த்தார். குஸ்ருவின் புரட்சியில் மிர்ஜா கோக்கா நீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டவர். ஆனால், ராஜா மான்சிங் போல் சிறந்த போர்வீரர் அல்ல. ஆகையால், அவரால் அரியணைக்கு எந்த உபயோகமும் இல்லை.

"மிர்ஜா கோக்கா, உங்கள் நடத்தையால், எனக்கு மிகுந்த வெறுப்பை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்."

"நான் யாசிக்க, மாண்பு மிக்க தங்களது மன்னிப்பு எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது." மிர்ஜா கோக்கா கைகளைச் சிறிது உயர்த்திக் கூறினார்.

"இருந்தாலும் உன் தலைவிதியை நிச்சயிக்க உன்னை இந்தச் சபைக்கு வரவழைக்கப்பட்டிருக்கிறது". ஜஹாங்கீர் கூர்மையுடன் கூறினார்.

முகலாய இந்தியாவில், ஏகோபித்த முடிவான அதிகாரம் சக்ரவர்த்தியிடம் தான் உள்ளது. அங்கு கூடியிருந்த அனைவரும் அந்த வயதான அதிகாரியை மறுபடியும் விசாரணைக்கு அழைக்க ஜஹாங்கீர் ஒரு காரணம் தேடுகிறார் என்பதை புரிந்து கொண்டனர். எதற்கு மற்ற விசாரணை என்பதையும் அனைவரும் அறிவர்.

ஜஹாங்கீர் மஹபத்கான் பக்கம் திரும்பினார். "மஹபத், தன் சக்ரவர்த்திக்கு எதிராக மிர்ஜா கோக்கா செய்த குற்றத்திற்கு என்ன தண்டனை அளித்தால் சரியானதாக இருக்கும்?"

"ஒன்றே ஒன்றுதான் சரியானது, மாட்சிமை பொருந்தியவரே! அது மரணம்தான்" மஹபத் பதிலளித்தான். "மிர்ஜா கோக்கா மிகப் பெரிய குற்றம் செய்திருக்கிறார். அவர் குற்றத்திற்கு ஏற்ற தண்டனை அளிக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால் உங்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய நினைத்திருப்பவர்கள் அவ்வாறு செய்யாமலிருப்பதே நல்லது என்பதை உணர்வார்கள்."

"நீ சொல்வது தான் சரி. மிர்ஜா கோக்கா," மிர்ஜா ஜஹாங்கீரை ஏறிட்டுப் பார்த்தார். "உன் தலைவிதியை நிச்சயித்து விட்டேன். அரியணைக்கு நீ தொடர்ந்து துரோகம் செய்து வந்திருக்கிறாய். உன் உரிமைகளையும் அதிகாரத்தையும் அதிகப்படுத்திக்கொள்வதற்காக, அரசாட்சி செய்யத் தெரியாத, ஒன்றுமறியாத சிறுவனை சிம்மாசனத்தில் அமர்ந்த நீ முயற்சித்திருக்கிறாய். இதையும் விடப் பெரிய பாவத்தை நீ செய்திருக்கிறாய். என் மகன் குஸ்ருவிற்கும் எனக்கும்

[illegible]யில் இருக்கும் உறவில் நீ தலையிட்டுக் கெடுத்திருக்[illegible]

[illegible]ாட்சிமை பொருந்தியவரே!"

ஒரு ஆச்சரிய ஒலி சபையில் எழுந்தது. சக்ரவர்த்தி [illegible]கையில் இடையே பேச யாருக்குத் தைரியம் உண்டு? [illegible]வர்த்தி பேசுகையில் எல்லோரும் மௌனமாக இருக்க [illegible]ண்டும் என்பது மிக முக்கியமான வழிமுறைகளில் ஒன்று. [illegible]ரில் கேள்வி கேட்கப்பட்டாலொழிய எவரும் அரிய [illegible]னையை நோக்கிக் கண்களை உயர்த்தக் கூடாது என்பது [illegible]யான நடைமுறையாகும். அவர் பேச்சு இடையில் [illegible]டுப்படுத்தப்பட்டது குறித்து சக்ரவர்த்திக்குக்கூட [illegible]ச்சரியம் அளித்தது. அவர் பாதி வார்த்தையில், தான் [illegible]வதை நிறுத்தினார். அந்தப்புரத்துச் சாளரத்தை நோக்கி [illegible]பத்கான் மௌனமாகக் கையைக் காட்டினான்.

"என்ன விஷயம்?" வலுக்கட்டாயமாகத் தன் குரலைத் [illegible]வித்தவாறு ஜஹாங்கீர் வினவினார்.

"மாட்சிமை பொருந்தியவரே! அந்தப்புரத்துப் பெண்கள் [illegible]னைவரும் மிர்ஜா கோக்காவிற்குப் பரிந்து பேச வந்தி[illegible]க்கிறார்கள். நீங்கள் இங்கு வருவது நல்லது. இல்லாவிடில் [illegible]ங்கள் அனைவரும் அங்கு வருகிறோம்." ஒரு குரல் [illegible]வித்தது.

அந்தக் குரல் அக்பரின் விதவையும் ஜஹாங்கீரின் [illegible]றொரு மாற்றாந்தாயுமான ஸலீமா சுல்தான் பேகத்தி[illegible]டையது. ருக்கையாவிற்கு அடுத்தபடியாக மறைந்த அக்பரின் மனதில் ஒரு தனியிடத்தில் இருந்தவர். ஆகையால், அவள் உணர்ச்சி வசப்பட்டுச் சட்டென்று பேசுவதை அக்பர் எப்பொழுதும் தடுத்ததில்லை. இப்பொழுது இவளைக் [illegible]டுப்படுத்தவும் முடியாது. ஜஹாங்கீர் சிறிது யோசித்தார். அந்தப்புரச் சாளரத்திற்கு அவர் செல்ல வேண்டும். இல்லாவிடில் தான் கூறியபடி ஸலீமா நிச்சயம் கீழே வந்துவிடுவாள். பிறகு, முகலாய அரசில் முதன்முறையாக அரசைச் சேர்ந்த அந்தப்புரத்துப் பெண்மணியை மற்றவர்கள் நேரில் பார்க்கும்

படி நேரிடும். மேலும், ஸலீமா துணிச்சலுடன் திரையை முகத்தை மூடாமல் கூட இறங்கி வரக்கூடும். வேறு எதைவிட அந்த எண்ணம் சக்ரவர்த்தியைச் சட்டென்று சிம்மாசனத்திலிருந்து எழ வைத்தது.

ஜஹாங்கீர் எழுந்திருக்கையில் மிர்ஜா கோக்கா நிம்மதியுடன் பெருமூச்சு விட்டவாறு நிமிர்ந்து மேலே சாளரத்தை நோக்கினார். ஒரு பெண்மணி அவரைப் பார்த்துக் கை அசைப்பதைப் பார்க்க முடிந்தது. அவர் நன்றியுடன் பலவீனமாகப் புன்னகைத்தார்.

அந்தப்புரத்துச் சாளரத்திற்குள் ஜஹாங்கீர் நுழைந்தார். அவர் அமர்கையில் பெண்கள் அனைவரும் எழுந்து வணக்கம் செலுத்தினர்.

"மாண்பு மிக்கவரே, மிர்ஜா கோக்காவிற்கு நீங்கள் மரண தண்டனை கொடுக்கக்கூடாது" ஸலீமா சுல்தான் பேசும் ஆரம்பித்தாள்.

"எனக்கு விருப்பமானதை நான் செய்ய முடியும்," ஜஹாங்கீர் கரகரத்த குரலில் கூறத் தொடங்கி பின் "அன்புள்ள தாயாரே!" என்று சேர்த்துக் கொண்டார்.

ஸலீமா அவரைப் பார்த்துப் புன்னகைத்தாள். "மாண்பு மிக்கவரே, மிர்ஜா கோக்கா உங்களுக்குப் பெரிய தகப்பன் முறை ஆகும். உங்கள் இருவரிடையே ஒரே இரத்தம் இல்லை எனினும் மறைந்த சக்ரவர்த்தி அவரை ஒரு சகோதரனுக்கு மேலாகவே நேசித்தார். இருவரும் ஒரே தாயிடம் பால் குடித்து வளர்ந்தவர்கள். அவருடைய தாயார் இறந்தபொழுது அவளுக்கு மரியாதை செய்ய சக்ரவர்த்தியே அவள் சவப் பெட்டியைத் தோளில் சுமந்து சென்றார். மறைந்த சக்ரவர்த்தி அக்பர், மிர்ஜா கோக்காவை நீங்கள் நல்ல முறையில் நடத்தவேண்டும் என்றே விருப்பப்படுவார்."

ஜஹாங்கீரின் முகம் வெளுத்தது. அவர் தந்தையைப் போன்ற நல்ல சக்ரவர்த்தியாக அவரால் இருக்க முடியாது. அவர் ஆட்சியைத் தொடங்குகையில் சமீபத்திலே மறைந்த சக்ரவர்த்தி அக்பருடன் அவரை ஒப்பிட்டு பேசுவது இயல்பு

தன் கல்லறையில் இருந்து கொண்டே அவர் விட்டுச் சென்ற அவரது மனைவிகள் மூலமாக அக்பர் ஜஹாங்கீரின் செயல்களில் பங்கு கொள்கிறார். தந்தை போலவே ஜஹாங்கீரும் நடக்க வேண்டும் என்றும் அவரைப் போலவே ஆட்சியும் பிறப்பிக்க வேண்டும் என்றும் இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், இவர் அவர் தந்தை அல்ல... ஜஹாங்கீர் தலைகுனிந்து யோசித்தார். மிர்ஜா கோக்கா மன்னிக்கப்படவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இந்த டிப்ளமாட்டிக் ராஜ்ஜியத்தில் குஸ்ருவிற்கு எவ்வளவு குறைந்த ஆதரவாளர்கள் இருக்கிறார்களோ அவ்வளவு நல்லது. ஆனால், ஸலீமா தன்னிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறாள்...

பெரிய இராணியை மீண்டும் பார்க்காமலேயே அவர் அங்கிருந்து அவையை நோக்கிச் சென்றார்.

"மிர்ஜா கோக்கா, அந்தப்புரத்துப் பெண்கள் உனக்கு ஆதரவாக வேண்டுகின்றனர். அவர்கள் சொல்லும் காரணங்கள் எனக்கு முழுவதும் சரியாகப் படவில்லையானாலும் அவர்கள் உன்னிடம் கருணையும் அன்பும் வைத்திருப்பது தெரிகிறது. அவர்கள் வேண்டுகோளுக்காகவும்," ஜஹாங்கீர் மீண்டும் சாளரத்தை நோக்கினார். "உன்னிடம் அன்பும் பாசத்தையும் வைத்திருந்த என் வணக்கத்திற்குரிய தந்தை அக்பர் நினைவிற்காகவும் உனக்கு நான் உயிர்ப் பிச்சை கொடுக்கிறேன்."

மிர்ஜா கோக்கா மண்டியிட்டு விழுந்தார். "மாண்பு மிக்க அரசர் நீங்கள் மிகவும் கருணை உள்ளவர்."

"உனக்குச் சொந்தமான எல்லாவித நிலபுலன்களும் உன் அதிகாரமும், மரியாதையும், உன்னிடமிருந்து அகற்றப்படுகிறது. ஆக்ரா நகரம் நீ இங்கிருப்பதை விரும்பவில்லை. மிர்ஜா கோக்கா, நீ லாகூருக்குச் சென்றுவிட வேண்டும். உன் பட்டத்தை மாத்திரம் நீ வைத்துக்கொள்ள அனுமதிக்கிறேன்."

"வந்தனம் மாண்புமிக்கவரே!" மிர்ஜா கோக்கா மறுபடி வணங்கினார். ஜஹாங்கீர் சிந்தித்தவாறு அவரைப்

பார்த்தபடி இருந்தார். இந்த மனிதனை இனி ஒரு பொழுதும் நம்ப முடியாது.

ஜஹாங்கீர் பிரபுக்கள் சபையைவிட்டு அகலப் பிரபுக்கள் அனைவரும் கலைந்தனர். உணர்ச்சி மிகுதியுடன் தங்களுக்குள் பேசிக்கொண்டு சாளரத்திலிருந்து பெண்கள் கலைத்வாறு தங்கள் மாளிகைகளுக்குச் சென்றனர். ஒரு பெண்மணி மாத்திரம் எல்லோரும் திரும்பிச் செல்லும்வரை காத்திருந்தாள். அவள் முகம் திரையால் மூடப்பட்டிருந்தது. ஸலீம் ஸுல்தான் பேகம் வேண்டுகோளுக்கிரங்கி, ஜஹாங்கீர் அந்தப்புர சாளரத்திற்கு வந்த பொழுது அவள் தன் முகத்திரையை மேலும் தலைமேல் இழுத்து முகத்தை நன்கு மூடிக் கொண்டாள். மெஹ்ருன்னிஸா மெதுவாக எழுந்து உடல் அசதியுடன் ஜஹாங்கீர் அமர்ந்திருந்த இருக்கைப்பக்கம் சென்றாள். அவர் சாய்ந்திருந்த தலையணியை மெதுவாகத் தடவினாள். சட்டென்று திரும்பிச் சாளரத்திலிருந்து வெளியேறினாள்.

வெள்ளி போல் தகதகக்கும் நீரின் வளைந்த பாதைகளில் யமுனையின் கரையை ஒட்டி அந்தப் பயணிகளின் கூட்டம் சென்று கொண்டிருந்தது. தனக்கு மிகவும் பிடித்தமான அரபுக்குதிரை மேல் எல்லோருக்கும் முன்னால் அலிகுலி பயணித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பின், வீட்டிற்குத் தேவையான பொருட்களைச் சுமந்தவாறு இருபது குதிரைகளும் ஒட்டகங்களும் வந்து கொண்டிருந்தன. ஒருவரோடொருவர் இணைந்து ஒரே விதமான காலடி ஓசையுடன் ஒரே சீராக நான்கு வலிமை மிக்க ஆண்கள் பின்னால் சுமந்து கொண்டு வரும் பல்லக்கை அவன் திரும்பிப் பார்த்தான். அப்பொழுதுதான் அவர்கள் தூக்கி வரும் சுமையினால் ஏற்படும் களைப்பு அவர்களுக்குத் தெரியாது. பல்லக்கில் தொங்கிக் கொண்டிருந்த படுதாக்கள் காற்றில் அசைந்தாட, ஒரு மென்மையான கரம் நீண்டு அதை இழுத்து மூடியது.

திரையை இழுத்து மூடிவிட்டு, மெஹ்ருன்னிஸா இறைகள் அடைக்கப்பட்ட மிருதுவான தலையணைமீது சாய்ந்து

கொண்டு அதனால் தன் அடிமூக்கில் ஏற்படும் சுகத்தை அனுபவித்தவாறு அமர்ந்து கொண்டாள். வங்காளத்திலுள்ள பர்த்வான் நகரத்திற்குச் செல்லும் அவர்களது நீண்ட பயணம் இது— அவள் ஒரு குழந்தையைச் சுமந்து கொண்டிருப்பதால் இந்தப் பயணம் இன்னும் நீண்டதாகத் தோன்றியது. திருமணமாகிப் பல வருடங்களுக்குப் பிறகு, பலமுறை கரு கலைந்து போனபிறகு, தற்சமயம் அவள் மறுபடியும் குழந்தையைச் சுமக்கிறாள். அவள் எண்ணத்தை ஆமோதிப்பதுபோல் குழந்தை வயிற்றுக்குள் உதைக்க, அவள் அன்புடன் அந்த இடத்தைத் தன் கையால் தொட்டுப் பார்த்தாள்.

கடைசியாக, ஒரு குழந்தை, இவ்வளவு காலம் காத்திருந்த பிறகு. சக்ரவர்த்தியின் முதல் பொது மக்கள் கூட்டத்திற்கு முன், அவள் தன் தந்தையைச் சந்திக்கச் சென்றிருக்கையிலேயே தான் நான்கு மாதக் கருவைச் சுமப்பதை அவள் அறிவாள். ஆனால், அவரிடம் சொல்ல விருப்பப்படவில்லை. அதற்குள் இல்லை, அவளுக்கு நிச்சயம் கரு நிலைக்கும் என்ற உறுதி வரும்வரை. அவள் தாயார் ஒரு பெண்ணாக, ஒரு தாயாக இருப்பதால் அவளைப் பார்த்தவுடன் உணர்ந்து கொண்டுவிட்டாள். ஆனால், பிறரிடம் சொல்லச் சொல்லி அவளை வற்புறுத்தவில்லை. மெஹ்ருன்னிஸா இதற்காக அவள் தாயாருக்கு நன்றி செலுத்தினாள். பல கரு கலைந்த பிறகு, இந்தக் குழந்தை உயிருடன் பிறந்தால், அது அவளுக்கே முழுவதும் ஆகும். முதல் சில மாதங்களுக்கு அவள் யாரிடமும் சொல்லவில்லை. பணிப்பெண்கள் சந்தேகப்படாமல் இருக்க, மாதவிலக்கு வருவது போல் நடந்து கொண்டாள். இந்த முறையும் ஆரம்பக் கட்டத்தில் அடிக்கடி வலி வந்து கொண்டிருந்தது. கூடவே வாந்தியும் தலைசுற்றலும் இருந்தது. அவள் தாயார் இது நல்ல அறிகுறிதான் என்று சொன்னாள். மெஹ்ருன்னிஸா அரை மயக்கத்தில், பகல், இரவு பாராமல் தூங்கிக் கொண்டிருந்தாள். ஏனெனில், விழித்திருக்கும் நேரம் எனை நடந்துவிடுமோ என்ற பயம் அவளை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. ஆனால், அல்லாவின் கருணையால் இந்தக் குழந்தை அவள் வயிற்றில் தங்கி உள்ளது. பிறகுதான் அவள் அலிகுலியிடம் கூறினாள்.

"ஒரு மகள்தான்." அலிகுலி கூறினான்.

"இருக்கலாம்." அவ்வாறே இருக்கவேண்டும் என பிரார்த்தித்தபடி மெஹ்ருன்னிஸா கூறினாள்.

பல்லக்கிலிருந்து அவள் தன் கணவனை எட்டிப் பார்த்தாள். குதிரை மேல் அவன் இராணுவ வீரன் போல் நிமிர்ந்து அமர்ந்து சென்று கொண்டிருந்தான். பல வருடங்களாக இருந்த இராணுவ பயிற்சியினால் அவன் உடல் நன்கு ஆரோக்கியமாக... திடகாத்திரமாக, அவர்களுக்குத் திருமணம் நடந்தபோது இருந்ததைப்போல் இப்பொழுதும் இருந்தது. ஆனால், குழந்தையைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பை நினைத்துப் பார்க்கையில், அவர்களிடையே உள்ள வயது வித்யாசம் நன்கு தெரிந்தது. மெஹ்ருன்னிஸாவிற்கு இருபத்து எட்டு வயது, அலிகுலிக்கு நாற்பத்து ஐந்து வயது வித்தியாசம் அவர்களைப் பிரித்ததை விட அவர்கள் மனமும் பிரிந்தே இருந்தது.

அவள் பட்டு மெத்தையில் சாய்ந்து அமர்ந்திருக்கையில், சக்ரவர்த்தியின் முதல் மக்கள் சபை கூட்டத்திலிருந்து அலிகுலி திரும்பி வந்தபின் அவர்கள் வீட்டில் நடந்தது நினைவிற்கு வந்தது.

தன் அறையில் கையில் ஒரு பட்டுத்துணியைப் பிடித்தவாறு மெஹ்ருன்னிஸா காத்துக்கொண்டிருந்தாள். அவள் பூ வேலை செய்ய ஆரம்பித்திருந்த போதிலும், பல மணி நேரமாக ஒரு தையல் கூடப் போடவில்லை. பிறகு வெளி முற்றத்தில் காலடி ஓசைகள் கேட்டன. மெஹ்ருன்னிஸா தன் முகத்திரையை இழுத்துத் தன் தலையை நன்கு மூடிக் கொண்டு சாளரத்தை நோக்கி ஓடினாள். அலிகுலி குதிரையிலிருந்து இறங்கி உள்ளே வருவதைக் கண்டாள். அவன் நிம்மதியடைந்தவனாகச் சந்தோஷமாகவும், அதே சமயத்தில் முழுவதும் திருப்தி அடையாதவன்போலும் தோன்றினான்.

ஒரு மணி நேரம் கழிந்தது. அலிகுலி அவளை அழைக்கவில்லை. தன்னுடைய அறைக்கு வரும்படி மெஹ்ருன்னிஸா அவனுக்கு வேண்டுகோள் விடுத்தாள். அவன் ஒரு கையில் வாளுடனும் மற்றொரு கையில் மதுபுட்டியுடனும் வந்தான்.

"என்ன விஷயம்?"

"என் பிரபுவே! பொதுமக்கள் சபையில் என்ன நடந்தது?"

"அதற்காகவா என்னைக் கூப்பிட்டனுப்பினாய்?" அலிகுலி முறைத்தான்.

அவள் தலையசைத்தாள்.

"பர்த்வானின் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் வங்காளத்திற்கு உடனே கிளம்ப வேண்டும்." அவன் பல்லைக் காட்டியவாறு தொடர்ந்தான். "கவலைப்படாதே என்று முன்பே உன்னிடம் சொன்னேனே! சக்ரவர்த்திக்கு என்னிடம் உள்ள கடனை அவர் நன்கு உணர்வார். அவர் உயிரைப் புலியிடமிருந்து காப்பாற்றியிருக்கிறேன்."

மெஹ்ருன்னிஸா புருவத்தை உயர்த்தி அவனைப் பார்த்தாள். அவனைத் தண்டிக்காதது மட்டுமன்றி அவனுடைய தகுதியை உயர்த்தி மேலும் வசதிகள் கொடுத்திருக்கிறார். ஏன்?

"ஏதோ அதிசயம் போல் ஏன் பார்க்கிறாய்?" அலிகுலி கூறினான். "சக்ரவர்த்தியால் கூட எனக்குத் தீங்கிழைக்க முடியாது."

அவன் சாய்மான இருக்கையில் சென்று தொப்பென்று உட்கார்ந்தான். மதுப்புட்டியிலிருந்து ஒரு மடக்கு குடித்து விட்டு அதையே வெறித்துப் பார்த்தான். "இது நன்றாக இல்லை. காஷ்மீரிலிருந்து மது வரவழைக்கவேண்டும்."

"சக்ரவர்த்தி வேறு ஏதாவது கூறினாரா?"

"கடமையைப் பற்றியும் விசுவாசமாக இருப்பது பற்றியும் எனக்கு உபதேசம் செய்தார்." அலிகுலி மறுபடியும் இளித்தான். "ஆனால், அவர் ஒன்றும் செய்ய மாட்டார் என்று எனக்குத் தெரியும். அவர் உயிருக்காக எனக்கு கடமைப்பட்டிருகிறார். நான் அவரை காப்பாற்றவில்லையாகில் அவர் இன்று உயிருடன் இருந்திருக்கமாட்டார். மேலும், அவன் முகம் இறுகியது. "குஸ்ரு சக்ரவர்த்தியாகி இருப்பான்."

அவன் மதுப்புட்டியைச் சுவற்றை நோக்கி விட்டெறிய அது தூள் தூளாவதைக் கண்டு மெஹ்ருன்னிஸா திடுக்கிட்டு முகம் சுளித்தாள். ஆழ்ந்த சிவப்பு நிற மது தரை விரிப்புகளில் கலந்து பரவியது.

"குஸ்ரு சக்ரவர்த்தி ஆகி இருப்பான். நானும் பெருமை இழந்து இவ்வாறு பர்த்வானுக்கு வெளியேற்றப்பட்டிருக்க மாட்டேன்." அலிகுலி ஆவேசமாகக் கத்தினான். "பர்த்வான்! என்ன, மதிப்பே இல்லாத ஒரு பதவி? பயிர் விளைச்சல் பற்றியும் நிலங்களைப் பராமரிப்பது பற்றியும் எனக்கு என்ன தெரியும்?" அவன் மார்பு புடைக்க நிமிர்ந்து நின்றான். "நான் ஒரு இராணுவ வீரன். நிறையப் போர்களில் பங்கேற்றிருக்கிறேன். எங்கு சென்றாலும் ஜனங்கள் என்னைப் புகழ்கின்றனர். புதுச் சக்ரவர்த்தி என்ன செய்திருக்கிறார்? என்னை ஒரு மூலைக்கு, பர்தவானுக்கு ஒதுக்கி விட்டிருக்கிறார்."

மெஹ்ருன்னிஸா மெல்லியதாகப் புன்னகைத்தவாறு ஆத்திரத்தில் புகைந்து கொண்டிருக்கும் தன் கணவனிடமிருந்து முகத்தை திருப்பிக் கொண்டாள். ஜஹாங்கீரைப் பற்றி அவள் கணித்தது தவறாகவில்லை. இது இராஜதந்திரத்தின் உச்சம். போர்களத்தில் அவன் செய்யும் சாகசங்களுக்கு அலிகுலி பெயர் போனவன். அவனுக்கு மரண தண்டனை விதிப்பதனால் பயன் ஒன்றும் இல்லை. வங்காளம் முழுவதிலும் அமைதியில்லாத நிலைமை உள்ளது. அங்கு நடக்கும் கலவரங்களை அடக்குவதற்கு ஒரு இராணுவ வீரனைத் தவிர வேறு யார் பொருத்தமாக இருக்க முடியும்? ஒரே போட்டில் அலிகுலியை வெகுதூரம் அகற்றியாகிவிட்டது. மற்றவர்களுக்குப் புரியாத வண்ணம் அங்கு நடக்கும் கலவரங்களை அடக்க ஒரு வீரனை அனுப்பியாகி விட்டது. இளவரசன் குஸ்ருவை மறுபடியும் ஆதரிக்க அலிகுலி நடவடிக்கைகள் எடுப்பான் என்ற பயம் இப்பொழுது இல்லை. முக்கியமாகக் குஸ்ரு சக்ரவர்த்தியின் பாதுகாப்பில் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கையில்! தான் பேரரசராக இருப்பதற்குத் தகுதியானவர்தான் என்று ஜஹாங்கீர் நிரூபித்துவிட்டார். அக்பர் இவரைப் பற்றி பெருமையாகவே நினைப்பார்.

அந்தச் சமயத்தில்தான், தான் குழந்தையைச் சுமக்கும் செய்தியை அவள் அவனுக்குக் கூறினாள். இந்த மகிழ்ச்சி தரமான செய்தி அவனுக்கு ஒரு நல்ல மாற்றமாக இருக்கும், தான் இவ்வளவு தொலைவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட மகிழ்ச்சியால் ஆத்திரத்தில் கொதித்துக்கொண்டிருக்கும் அவனுக்கு இந்தச் செய்தி மகிழ்ச்சி தரக்கூடும் என்று எண்ணி, அவனைச் சமாதானப்படுத்தும் என்று எண்ணி அவனிடம் கூறினாள். இப்பொழுது மகன்தான் பிறக்கவேண்டும் என்ற அவனது அதீத விருப்பத்தை நினைத்து அவள் மனம் கலவரமடைந்தது. அவளுக்கு ஆண்குழந்தை பிறக்காவிட்டால் என்ன ஆகும்?

தற்சமயம் அவர்கள் பர்த்வானுக்குப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். அலிகுலி கூட ஜஹாங்கீரின் உத்தரவை எதிர்க்கப் பயந்தான். ராஜாமான்சிங் வங்காளத்தில் இராஜபிரதிநிதியாகப் பதவி ஏற்கிறார். அவருடன் சேர்ந்து வேறு ஏதாவது திட்டம் வகுக்கலாம் என்று அவன் தன் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

அவர்கள் கிளம்புவதற்கு முன் பெரிய ராணி ருக்கையாவைச் சந்திக்க மெஹ்ருன்னிஸா அந்தப்புரத்திற்குச் சென்றிருந்தாள். மிர்ஜா அஸிஸ் கோக்காவின் வழக்கு விசாரணையைப் பார்க்க, ருக்கையா அவளையும் பிரபுக்கள் சபைக்கு அழைத்துச் சென்றிருந்தாள். ருக்கையா அவளை உடன்வர உத்தரவிட்டதாலும் கடைசி முறையாக ஜஹாங்கீரைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற ஆவலாலும், அவள் உடன் சென்றாள். அவரை இவ்வளவு அருகில் பார்ப்போம் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. ஒருவேளை, கடைசி முறையாக இருக்க, விதி ஏற்பாடு செய்ததோ? ஜஹாங்கீர் ஒரு பொழுதும் அலிகுலியை மறுபடியும் ஆக்ராவில் — அரசசபைக்கு ஒரு உறுப்பினராக வரவழைக்கமாட்டார் என்பது மெஹ்ருன்னிஸாவிற்கு நன்கு தெரியும். அவள் அடிமுதுகில் சிறிது வலி ஏற்பட அவள் அங்கு தடவிக்கொடுத்துக் கொண்டாள். பின் சாய்ந்து அமர்ந்து கண்களை மூடிக் கொண்டாள். ஜஹாங்கீர் இல்லாவிடினும் இப்பொழுது அவளுக்கு ஒரு குழந்தை உள்ளது.

மாலை மங்கும் வேளையில் அவர்கள், பர்த்வானில் அவர்கள் வீட்டை அடைந்தனர். மெஹ்ருன்னிஸா பல்லக்கை விட்டு இறங்குகையில், முன் போலில்லாமல் ஒரு குத்துவலி வந்தது. அவள் முழங்கால்கள் தொய்ந்து விழ, அவள் உடலிலிருந்து ஈரக்கசிவு சொட்டத் துவங்கியது. இதயம் துடிக்க, வெளிமுற்றத்தில் பணியாட்களுக்கு முன் தான் நின்றிருப்பதையும் பொருட்படுத்தாமல் தன் இரண்டு கால்களுக்கிடையே அவள் பட்டுப் பாவாடைக்குள் ஒரு கையை வைத்துக்கொண்டாள். இன்னும் நாட்களாகவில்லை, மிகச் சீக்கிரம்தான். எட்டரை மாதங்கள்தான் ஆகி இருந்தது. இந்தக் குழந்தையையும் அவள் உடல்வெளியே தள்ளப் போகிறதா? கைகளில் ஈரம் மாத்திரம் இருப்பதைக் கண்டாள். பல்லக்கின் மேல் சாய்ந்தவாறு மண்தரையில் விழுந்தாள். இரத்தம் இல்லை. வந்தனம் அல்லாவே, இரத்தம் இல்லை.

அடிமைப்பெண்கள் அவளைத் தூக்கி எடுத்துப் பின்புறத்திலிருக்கும் அவள் அறைக்குக் கொண்டு சென்று படுக்க வைத்தனர். தாங்க முடியாத வலியின் நடுவில், அலிகுலி பயத்துடன் கதவருகே நின்றிருப்பதையும் மருத்துவச்சியை அழைக்கச் சொல்லிக் கட்டளையிட்டவாறு திரும்பிச் செல்வதையும் மெஹ்ருன்னிஸா பார்த்தாள். அவர்கள் பர்த்வானுக்குப் புதிதாக அப்பொழுதுதான் வந்திருப்பதால், இரவு நேரத்தில் மருத்துவச்சியை வரவழைப்பது சுலபமாக இல்லை.

பயணத்திற்கு உடுத்தியிருந்த உடைகளுடனேயே, பல மாக வியர்த்து விடப் பிரசவ வலி மேலும் மேலும் அதிகரிக்கச் சுற்றிலும் நடப்பதை உணராதபடி, மெஹ்ருன்னிஸா படுக்கையில் கிடந்தாள். தாயார் எப்படி ஏழு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்? கணவரைத் தீவிரமாகக் காதலிப்பவளாக இருந்தால் இது சுலபமாக இருக்குமா?

ஒருவழியாக மருத்துவச்சி அங்கு வந்து சேர்க்கையில் குரல் எழும்பக்கூடாது என்பதற்காக உதட்டைக் கடித்துக் கொண்டிருந்ததில் உதடுகள் புண்ணாகி இரத்தம் கசிய, வலியால் துடித்தவாறு, முனகிக் கொண்டு மெஹ்ருன்னிஸா

படுத்திருப்பதை அவள் பார்த்தாள். இரவு நீண்டு கொண்டே போயிற்று. வலி அதிகமாக, நினைவிற்கும் மயக்க நிலைக்கு இடையில் அறையில் பல புதியவர்கள் நின்றிருப்பதைக் கண்டாள். புதிய பணிப்பெண்கள், மருத்துவச்சியும் பரிச்சயமானவளில்லை. இது பெண்கள் செய்ய வேண்டியதாகையால், அலிகுலியும் அந்த அறைக்கு வரமாட்டான்.

"அம்மா..." மெஹ்ருன்னிஸா அடிக்கடி மெல்லிய குரலில் முனகினாள். தாயின் குளிர்ந்த கரங்கள் அவள் நெற்றியை தடவிவிட, அவளுள் எழுந்திருக்கும் பயத்தைப் பற்றித் தாயாரிடம் கூற, அவள் ஏங்கினாள். இன்னும் முழுப் பிரசவ காலம் ஆகவில்லை. குழந்தை இறந்தே பிறந்தால் என்ன ஆகும்?

மருத்துவச்சி அவள் தோள்களைத் தட்டிக் கொடுத்தாள். "எல்லாம் நல்லபடியாகவே நடக்கும், ஸாஹிபா" அவள் அன்பானவளாகவே தெரிகிறாள் என்று நினைத்தவாறு அவள் அமைதியான முகத்தைப் பார்த்துக் கொண்டே அவள் கைகளை மெஹ்ருன்னிஸா இறுக பற்றிக்கொண்டாள். ஆனால், அவள் இவள் தாயாரில்லையே.

பணிப்பெண்கள் படுதாக்களை இழுத்து நன்றாக மூடிவிட்டதால் அறைக்குள் உஷ்ணத்தினாலும், மற்றவர்கள் வியர்வையாலும் மூச்சு முட்டும் போலிலிருந்தது. விளக்குகள் சன்னமாக ஒளிர்ந்தன.

"திரைகளை விலக்கி விடுங்கள்" மெஹ்ருன்னிஸா மூச்சுத் திணறியவாறு கூறினாள். "என்னால் மூச்சுவிட முடியவில்லை."

ஒரு அடிமைபெண் திரையைச் சிறிது விலக்கிவிட இரவின் குளிர்ந்த காற்று உள்ளே பரவியது. அதைத் தொடர்ந்து அவள் பிரசவ வலியும் சிறிது குறைந்தது போல் தோன்றிற்று. பதினான்கு மணி நேரம் கழித்து, அப்பொழுதே ஜனித்த குழந்தையின் அழுகை அந்த அறையை நிரப்ப முற்றிலும் களைத்துப்போய் மெஹ்ருன்னிஸா படுக்கையில் சாய்ந்தாள்.

"பெண்குழந்தை" படுக்கையில் கிடக்கும் மெஹ்ருன்னி ஸாவை வருத்தத்துடன் பார்த்தவாறு மருத்துவச்சி மெல்லிய குரலில் கூறினாள். திருமணமாகி இத்தனை வருடங்களுக்குப் பிறகு இவள் இப்படி ஒரு ஒல்லியான பெண் குழந்தையைப் பெற்றிருக்கிறாள். என்ன துரதிஷ்டம்!

மெஹ்ருன்னிஸா உடனே தன் கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கி, ஆவலுடன் மார்புடன் அணைத்துக் கொண்டாள். அலிகுலிக்கு ஏமாற்றமாக இருக்கும். அந்த வலிமை மிக்க இராணுவ வீரனுக்கு, ஒரு மகன், பெரிய தைரியமான ஆண்மகனாகி, அவன் தந்தையின் அடிச் சுவட்டைப் பின்பற்றித் தீரச்செயல்கள் புரிய அல்லது கெட்ட செயல்கள் புரிய ஒரு ஆண்குழந்தை பிறக்கவில்லை. அவள் சுருக்கத்துடன் கூடிய ரோஜாநிற முகத்தைப் பார்த்தாள், அவள் வயிற்றில் உதைத்த சிறிய கால்களைக் கண்டாள், அவள் உடலிலிருந்து உயிர்சத்தை எடுத்துக் கொடுத்த தொப்புள் கொடி இருந்த இடத்தைப் பார்த்தாள். இந்தக் குழந்தை முற்றிலும் அவளுடையதே! வேறு எவரிடமும் தோன்றாத ஆழ்ந்த நெருக்கமான உணர்வு அந்தக் குழந்தையிடம் ஏற்பட்டது. அலிகுலிக்கு இந்தக் குழந்தை வேண்டாமென்றாலும் அவளுக்கு இந்தக் குழந்தை நிச்சயம் வேண்டும். அதன் கை கால் விரல்களைப் பிரித்துப்பார்த்தாள். பத்து கை விரல்கள், பத்து கால் விரல்கள். அழகிய சிறிய மூக்கு, கருப்பையிலிருந்து பிரிந்து வந்ததில், மேல் தோல் உரிந்து. வந்து கொண்டிருக்கும் நெற்றியில் வளைந்த அழகிய புருவங்கள், அடர்த்தியான தலைமுடி சுருண்டவாறு கன்னத்தில் படிந்திருந்தது. என்னுடைய பேராசைக்கு மன்னித்து விடு, அல்லாவே! மெஹ்ருன்னிஸா மெதுவாக பிரார்த்தித்தாள். வந்தனம், அல்லாவே, என்னை முழுமையான பெண்ணாக ஆக்கியதற்கு வந்தனம்!

மருத்துவச்சியிடமிருந்தும் அடிமைப் பெண்களிடமிருந்தும் வந்த பரிதாபமான பார்வைகளைப் பொருட்படுத்தாமல், தன் மகளைக் கையில் ஏந்தியிருக்கையில் அவள் மனதில் அன்பு சுரந்தது. விஷயம் தெரிந்தவுடன் அடுத்த அறையிலிருந்த அலிகுலி இரைந்தான். "பெண். ஒரு பெண்

குழந்தை தான்!" ஆனால் மெஹ்ருன்னிஸா அவன் சொன்னதை காது கொடுத்து கேட்கவில்லை.

குழந்தை தன் சிறிய வாயைத் திறந்து கொட்டாவிவிட்டபின், அவள் மார்பகத்தில் வாயைப் பதிக்கையில் அவளுக்கு என்ன பெயர் வைப்பது என்று மெஹ்ருன்னிஸா தீர்மானித்துவிட்டாள்.

லாட்லி.

அன்புக்குகந்தவள்!

லாட்லியைப் பார்க்க அலிகுலி உடனே வரவில்லை. குழந்தையைத் தானே முழுமையாக அனுபவிக்கவேண்டும் என்ற தன்னலத்தினால் அவன் வராததை மெஹ்ருன்னிஸா பொருட்படுத்தவேயில்லை. தன் தோளில் குழந்தையை அணைத்தவாறு பயணத்தினாலும் பிரசவத்தினாலும் ஏற்பட்ட களைப்பில் மெஹ்ருன்னிஸா அடுத்த பன்னிரண்டு மணி நேரம் நன்கு உறங்கினாள்.

பத்து நாட்கள் கழித்து, இன்னும் இரண்டு இளவரசர்கள் பிறந்த செய்தி அலிகுலிக்கும் மெஹ்ருன்னிஸாவிற்கும் எட்டியது. ஒரு மாத இடைவெளியில் சக்ரவர்த்தியின் இரண்டு வைப்பாட்டிகளுக்கு ஷார்யார் (Shahryar) மற்றும் ஜஹன்தர் (Jahandar) என்று பெயரிடப்பட்ட இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்திருந்தன. அவர்கள் தாயார் யாராக இருந்தாலும் அந்த இளவரசர்களும் அரியணைக்கு வாரிசாகமுடியும். முகலாயர்களின் வாரிசு முறைசட்டம் மனைவிகள், வைப்பாட்டிகளுக்கு பிறந்த குழந்தைகளின் இடையே வித்யாசம் பார்ப்பதில்லை. சக்ரவர்த்தி ஜஹாங்கீருக்கு இப்பொழுது ஐந்து மகன்கள். குஸ்ரு, பர்விஸ், குர்ரம், ஷார்யார் மற்றும் ஜஹன்தர்.

புருவத்தை நெறித்தவாறு தூரத்தில் வெறித்துப் பார்த்தபடி ஜஹாங்கீர், அவர் மாளிகையின் வெளிமுற்றத்தில் அமர்ந்திருந்தார். அவர் அருகே சில காகிதங்கள், மசிக்கூடு, மற்றும் எழுத்தாணி முதலிய இருந்தன.

ஆக்ராவின் மனோகரமான மாதங்களில் ஒன்றான டிசம்பர் மாதத்தில் ஒருநாள் பிற்பகல் நேரம். பழம் கொடுக்கும் காலம் முடிந்து விட்டிருந்த கொய்யா மற்றும் மாமரங்களின் நிழல் முற்றத்தில் விழுந்திருந்தது. சக்ரவர்த்தி அமர்ந்திருந்த இடத்திற்கு மேல் இருந்த வராந்தாவில் இசைக் கலைஞர்கள் மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தனர்.

யோசித்த வண்ணம் ஜஹாங்கீர் நெற்றியைத் தடவிக் கொண்டார். நியாயமான கருணை உள்ளம் படைத்த அரசர் எனப் போற்றப்படவேண்டும் என்று அவர் விரும்பினர். அவர் தந்தையின் காலடிகளைப் பின்பற்றுவது மிகக் கடினமாக இருந்தது. எல்லோரும் அவரைப் "பெருமை மிக்க அக்பர்" (Akbar The Great) என்றே அழைத்தனர். சக்ரவர்த்தியாகிவிட்ட அந்த முதல்கட்ட மகிழ்ச்சி நிலை சிறிது சிறிதாக அடங்கி அவரது கடமைகளின் முக்கியத்துவம் ஜஹாங்கீரைத் தாக்கியது. ஆயிரக் கணக்கான பொதுமக்கள் அவரை நம்பி இருக்கின்றனர். ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்தை அக்பர் அவரிடம் விட்டுச் சென்றிருக்கிறார். அதை ஆட்சி செய்யும் பொறுப்பு சாமான்யமானதல்ல. மஹபத், ஷரீப், கோக்கா மற்றும் அப்துல்லா முதலியவர்கள் பலவிதப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருப்பது உண்மைதான். ஆனால், இந்த சாம்ராஜ்ஜியத்தை ஒருங்கிணைத்துக் காத்து, அதன் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அவரிடம் தான் உள்ளது.

ஆனால், அவர் பிறப்பின் லட்சியம் இதுவே! முராத் அல்லது தனியால் உயிருடன் இருந்திருந்தால் இப்படிப்பட்ட பொறுப்புகளை அவர்களால் சரிவரச் செய்திருக்க முடியாது. அவர் தந்தையின் அப்பழுக்கற்ற ஆட்சியை அவரால் தொடர்ந்து தர முடியும் என்று ஜனங்களுக்கு உணர்த்துவார். ஜனங்களும் அக்பரை நேசித்தது போலவே அவரையும் நேசிப்பார்கள். பிற்காலத்தில் அவர் "அடில் பாதுஷா" நியாயமான சக்ரவர்த்தி, எனப் போற்றப்படுவார்.

அவரது அரசாட்சியின் தன்மையை எதிரிகள் திரித்துப் பேசாமலிருக்க, அவர் தினமும் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு

[illegible] சொந்தக் குறிப்பு எழுதிவைப்பார். அதற்கு 'ஜஹாங்கீர் நாமா' என்று பெயரிடப்படும். அந்தக் குறிப்பு அவர் சிம்மாசனம் ஏறி முடிசூட்டிக்கொண்ட விழாவிலிருந்து தொடங்கும். அவருடைய தாத்தாவைப் போலவே வருங்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்காக, அவர் ஆட்சி விவரங்களை அவரது கைப்படவே எழுதி வைப்பார். ஆனால், அதைத் தொடங்கும் முறை...

எழுத்தாணியை மசிக்கூண்டில் தோய்த்து அவர் எழுதத் தொடங்கினார். "தஸ்துரு—இல்—அமல்." நன்னடத்தையின் வழிமுறைகள். அவ்வப்போது சிந்திப்பதற்காகச் சிறிது நேரம் நிறுத்திவிட்டுப் பக்கங்களை நிரப்ப ஆரம்பித்தார். இளைப்பாறும் விடுதிகள், பயணிகள் வசதிக்காகப் பாதை ஓரங்களில் தங்கும் விடுதிகள் கட்டப்படவேண்டும். பயணிகளின் உடைமைகள், வியாபாரிகளின் வியாபாரப் பொருட்கள் எல்லாம் அவர்களது அனுமதி இல்லாமல் சோதனை யிடப் படக் கூடாது. பெரிய நகரங்களில் மருத்துவமனைகள் அமைக்கப்படவேண்டும். அனுபவம் மிகுந்த மருத்துவர்கள் அதில் நியமிக்கப்படவேண்டும்.

அவர் சிறிது தயங்கி, அருகிலுள்ள மதுக்கோப்பையைக் கண்ணோட்டம் பார்த்தார்— பின் தொடர்ந்து எழுதினார்: சாம்ராஜ்ஜியத்தில் மயக்கம் தரும் எந்தவித பானமும் அருந்த அனுமதிக்கக்கூடாது. இது வேடிக்கையானது அவருக்கே தெரியும். ஆனால், இந்த விதிமுறைகள் அவரது சாம்ராஜ்ஜிய மக்களுக்காக, அவருக்கல்ல!

அவர் உடம்பு சிலிர்த்தது. அவர் சரித்திரம் படைக்கப் போகிறார். இவை ஜஹாங்கீரின் பன்னிரண்டு பிரகடனங்களாக அறியப்படும். அவர் பேரரசர் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், ஒருநாள் அரியணை ஏறுவார் என்ற நம்பிக்கை இருந்தாலும், அவர் கனவுகள் நனவாகப் பல காலம் பிடித்தது. ஏன் நனவாக ஆகாமல்கூட இருந்திருக்கலாம். இது அவருக்கு கிடைத்த பெரிய அதிஷ்டம் ஜஹாங்கீர் சிந்தித்தார். முராதும் தனியாலும் மரணமடைந்துவிட்டதால் அரியணைக்குப் போட்டியாக வாரிசு இல்லை. அதிஷ்டம்

— பலமான எதிர்ப்பு வருவதற்கு முன்னால் குஸ்ரு அடக்கப்பட்டு விட்டதும் அதிஷ்டம் தான் — அவர் செய்த பல துரோகச் செயல்களையும் மீறி அக்பர் கடைசியில் அவனை மன்னித்துவிட்டதும் அதிஷ்டம்தான்.

ஜஹாங்கீர் ஆழ்ந்த மூச்சு விட்டுவிட்டு, மீண்டும் எழுதத் தொடங்கினார். வாரிசில்லாமல் இறந்தவர்களின் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து பற்றிய சட்டத்தையும் திருத்தி அமைத்தார். இதுவரை அந்த சட்டத்தில் இருந்தபடி ஒருவன் இறந்தபின் அவனது சொத்து அவன் வாரிசுதாரர்களுக்குச் செல்லாமல் அரசாங்கத்திற்கு சேர்ந்து விடும். சக்ரவர்த்திதான் அந்தச் சொத்து யாருக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று முடிவெடுப்பார். ஆனால், ஜஹாங்கீர் அதைத் திருத்தித் தன் 'தஸ்துரு—இல்—அமல்—லில் மாற்றம் செய்தார். ஒரு மனிதனின் சொத்து அவன் இறந்தபின் சட்டத்திற்குட்பட்ட அவனது வாரிசுதாரர்களுக்கே கொடுக்கப்படவேண்டும் என்று எழுதி வைத்தார்.

அந்த பன்னிரண்டு பிரகடனங்களும் சாம்ராஜ்ஜியம் முழுவதும் அறிவிக்கப்பட்டன. ஜனங்கள் சக்ரவர்த்தியினுடைய அன்பையும் நியாய உணர்ச்சியையும் பாராட்டிப் பேசினர். மக்களின் மகிழ்ச்சியின் எதிரொலிப்பு அரண்மனைக்குள்ளும் எட்டியது. ஜனங்களின் புகழ்ச்சியினால் மகிழ்ந்த ஜஹாங்கீர் 'நியாயச் சங்கிலி' ஒன்று நிர்மாணிக்க ஏற்பாடு செய்தார். அந்தச் சங்கிலி தங்கத்தினாலான எட்டு அடிநீளமுள்ள சங்கிலி. அந்தச் சங்கிலியின் ஒரு பக்கம் ஆக்ரா கோட்டையின் மதிற்சுவர் மேலும், மற்றொருபுறம் யமுனை நதிக்கரையில் ஒரு தூணிலும் கட்டப்பட்டிருந்தது. இடையில் அறுபது பித்தளை மணிகள் கட்டப்பட்டிருந்தன. இது பொது மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டது. எந்த ஒரு தனி மனிதனும் தனக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று எண்ணினால், இந்தச் சங்கிலியை ஆட்டினால், அதன் ஒலி சக்ரவர்த்தியின் கவனத்திற்கு நேராக வரும்.

பிறகு, அவர்தன் ஆட்சியின் முத்திரை ஒன்று தயாரிக்கச் சட்டத்தை சீரமைத்தார். புதிய காசுகள் தயாரிக்கும் உரிமை

ஒரு நல்ல நாளில் தங்கக் காசுகளும் வெள்ளி நாணயங்களும் அவர் பெயரில் தயாரிக்க உத்திரவிட்டார். சில தினங்கள் கழித்துக் கருப்பு, வெல்வெட் துணியில், பளபளக்கும் காசுகள் மாதிரிக்காக அவைக்கு எடுத்து வரப்பட்டு, அவருக்குக் காண்பிக்கப்பட்டன. அவைகளைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர் இரத்த நாளங்களில் பரபரப்பு ஏற்பட்டது. இதோ, பிற்காலச் சந்ததியினர் அறியவேண்டி, அவரது ஆட்சியின் மறக்கமுடியாத மற்றொரு சின்னம். அவர் மறைந்து விடுவார். அவரது எலும்புகளும் தசைகளும் மண்ணோடு மண்ணாகி விடும்; ஆனால், நூறு வருடங்கள் கழித்து யாராவது ஒருவர் கையில் அவர் ஆட்சியை பறை சாற்றியவாறு, இந்த காசுகள் மிளிரும். அரசர் என்பதற்கு இதுவே அர்த்தமாகும். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வர, ஒருவிதப் பக்தியுடன் அந்தக் காசுகளை அவர் தட்டில் திரும்ப வைத்தார்.

இவ்விதமாகத் தனது புதிய கீர்த்தியையும், தனக்கிருக்கும் அதிகாரத்தையும், ஜஹாங்கீர் மகிழ்ச்சிகரமாக அனுபவித்து வந்தார். முக்கியத் தலைமை அதிகாரியான முகமத் ஷரீப், அரசாங்க வேலைகளில் பெரும்பாலும் மூழ்கியிருக்க, இளவரசர் குஸ்ருவின் பாதுகாப்பில் முழு கவனம் செலுத்த முடியாமல் போனது.

ஒரு பெரிய தவறு, அவனும் சக்ரவர்த்தியும் சீக்கிரமே உணர்ந்து கொண்டனர்.

அத்தியாயம் பன்னிரண்டு



தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, அதிருப்தி அடைந்த சில பிரபுக்கள் குஸ்ருவின் பக்கம் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். அவனை வைத்து சாம்ராஜ்ஜியத்தில் புரட்சி செய்யத் திட்டமிட்டனர்... அவனது பழைய முயற்சிகளைப் புகழ்ந்து பேசி, அவன் ஆசையை வளர்த்தனர். தற்போது கிடைக்கக் கூடிய வெற்றியைப்பற்றிக் கூறி, மேலும் தூண்டி விட்டனர்.

- ALEXANDER DOW,
The History Of Hindustan

"சீக்கிரம் நேரம் நெருங்கிவிடும்."

கலிபா (Khalifa) தன் கணவனை நிமிர்ந்து பார்த்து வெட்கத்துடன் புன்னகைத்தாள். "ஆமாம், என் பிரபுவே!" அவள் குரல் மெல்லியதாக இசைபோல் ஒலித்தது. "ஆண் மகன் வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு ஆரோக்கியமான ஆண் குழந்தை!"

இளவரசன் குஸ்ரு முகத்தைச் சுளித்தான். "ஆண் குழந்தை பிறப்பதால் என்ன பயன்? அவனுக்கு விட்டுச் செல்வதற்கு என்னிடம் அரியணை ஒன்றும் இல்லை. என் தகப்பனார் அவ்வாறு செய்து விட்டார்." வெறுப்புடன் தன் அறையைச் சுற்றிக் காண்பித்தான்.

குஸ்ருவும் கலீபாவும் இளவரசரின் மாளிகையில் இருந்தனர். முதலில் பார்க்கையில் எல்லா வசதிகளுடன் கூடிய ஒரு இளவரசருக்குரிய மாளிகையாகத்தான் தோன்றியது. ஆனால், முதல் பார்வையில் மட்டும்தான். அதிருப்தியுடன் தலை குனிந்து அமர்ந்தவாறு குஸ்ரு எண்ணினான். ஜன்னல்களில் இளம் மஞ்சள் நிறத்தில் திரைச் சீலைகள்

தொங்கின. தரையில் பருமனான, சிவப்பு, பச்சை நிற கட்டங்கள் போல் வேலைப்பாடு செய்த பாரசீகக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. சங்குகள் பதித்து வேலைபாடு செய்த சந்தன மர மேஜைகளில், மண் பொம்மைகள் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தன. தங்கக் கிண்ணங்களில் மஞ்சள் நிற ரோஜாப்பூக்கள் காட்சியளித்தன. ஆனால் பெரிய வெளிக் கதவுகளுக்கு அப்பால், இரண்டு மிகப் பலம் பொருந்திய காவலாட்கள் நின்றிருந்தனர். காற்றினால் திரைச் சீலைகள் படபடக்கையில் வெளிமுற்றத்தில் தெரியும் சிறுப்பு இரும்புக் கம்பிகள் அந்த அழகிய அறையைப் பார்த்துச் சிரிப்பது போல் தோன்றியது.

"அரியணை தங்களுக்குச் சொந்தமாகும் நாள் நிச்சயம் வரும். சிலகாலம் பொறுத்திருக்க வேண்டும், என் பிரபுவே!"

அவனது இளமையான முகம் கோபத்தில் கோணலாக மாற, குஸ்ரு அவள் பக்கம் திரும்பினான். அக்பர் விரும்பியதால் மட்டுமே அவன் கலீபாவை மணந்து கொண்டான். ஆனால், திருமண தினத்தன்று, தான் முதன்முதலில் பார்த்த அந்த கூச்ச சுபாவமுள்ள இளம் பெண் மேல், அவன் அந்நாள் காதல் கொண்டான். அவள் அவனிடம் காட்டும் முழுமையான அன்பு கலந்த பக்தி, அவன் கைதியாக இருக்கையில் கூட அவனுடன் அவன் மாளிகையில் இருக்க முன் வந்தது, அவன் மனதை வென்று விட்டது. "எனக்கு அரியணை இப்பொழுதே வேண்டும். நான்தான் அதற்கு உரிமையானவன். என் தகப்பனாருக்கு ஆட்சி செய்ய அதிகாரம் இல்லை. சக்ரவர்த்தி அக்பர்கூட அதைத்தான் விரும்பினார்."

"மெதுவாக, என் பிரபுவே" கலீபா வெளிக்கதவுப் பக்கம் கண்களை ஓட்டினாள். "நீங்கள் கோபத்துடன் பேசுவதைச் சக்ரவர்த்தி அறியக்கூடும்."

"எனக்குக் கவலை இல்லை." சிறிது மெல்லிய குரலில் குஸ்ரு முணுமுணுத்தான். "எத்தனை நாட்கள் என்னை இப்படி அவர் அடைத்து வைக்கப் போகிறார்? ஏற்கெனவே ஏழு மாதங்களாகிவிட்டன."

"ஒரு வேளை நம் குழந்தை பிறந்த பிறகு, என் தலைவரே அவரது முதல் பேரக்குழந்தையைப் பார்க்கையில் சக்ரவர்த்தி மிகவும் மகிழ்ச்சி அடைவார்."

"அவ்வளவு நாள் நான் காத்திருக்க மாட்டேன். என் மகன் இதைப்போல் சுதந்திரமில்லாத கைதியான சூழ்நிலையில் பிறப்பதை நான் விரும்பவில்லை." குஸ்ரு சாய்மான இருக்கையிலிருந்து குதித்துக் கைகளைப் பின்புறம் கட்டிவாறு அந்த அறையில் முன்னும் பின்னும் நடந்தான். கோபத்தில் அவன் மேனி நடுங்கியது. இந்த சாம்ராஜ்ஜியம் அவனுடையது. அவனுக்குச் சொந்தமான இந்த நாட்டை ஆள அவன் தந்தைக்கு எந்த உரிமையும் இல்லை. ஆனால் அதற்கும் மேலாகப் பொதுமக்கள் சபையில், கட்டுக்கடங்காமல் அடம் செய்யும் குழந்தையைக் கண்டிப்பது போல் எல்லோர் முன்னிலையிலும் அவனைக் கண்டித்துள்ளார்.

ஜன்னலுக்கருகில் நின்று குஸ்ரு வெளியே நோக்கினான். விதவிதமாக பட்டும், மஸ்லின் உடைகளும் அணிந்து அந்தப் புரத்துப் பெண்கள் வெளி முற்றத்தில் சொகுசாக அமர்ந்திருக்க, அவர்களைச் சுற்றிப் பணியாட்கள் பழரசக் கோப்பைகளுடன் நடமாடிக் கொண்டிருந்தனர். கலீபா விரும்பியிருந்தால், அவள் கூட அவ்வாறு வெளியில் சுதந்திரமாக இருந்திருக்க முடியும். ஜஹாங்கீர் அந்தச் சுதந்திரத்தை அவளுக்கு அளித்திருந்தார். ஆனால் தன் கணவனுடனேயே இருப்பதையே அவள் விரும்பினாள்.

ஒரு உள் கதவு ஒன்று சத்தமில்லாமல் திறக்க, ஒரு மனிதன் அறைக்குள் வந்தான்.

"மாண்பிற்குரியவரே!" அவன் மெதுவாக முணு முணுப்பில் கூறினான்.

குஸ்ரு வேகமாகத் திரும்பினான். சட்டென்று கலீபா தலையிலிருந்து முகத்திரையை இழுத்து முகத்தை மூடிக் கொண்டாள்.

தலைமை அதிகாரி 'கான்—ஈ—கானன்' அப்துர் ரஹீம் அறைக்குள் வந்து இளவரசனை வணங்கினான். அரியணை

[illegible] கைப்பற்றக் குஸ்ரு தீவிரமாகச் சூழ்ச்சி செய்கையில், [illegible]னுக்கு ஆதரவாக இருந்தவர்களில் இவனும் ஒரு முக்கிய [illegible]னவன். அக்பருடைய இராணுவத்தில் தலைமை அதிகாரி [illegible]க இருந்த இவருக்கு மிகுந்த அதிகாரம் இருந்தது. அதை [illegible]த்துக் கொண்டு குஸ்ருவின் சூழ்ச்சிகளுக்கு உதவி செய்தி [illegible]கிறான். மற்ற குஸ்ருவின் ஆதரவாளர்களைப்போல், [illegible]வனும் வயது மிகுந்த அனுபவசாலியும், புத்திசாலியும், [illegible]திலும் அவருக்குத் துணை இருக்கும் நண்பர்களை உடைய [illegible]தாங்கீரை விட, வயது குறைந்த அனுபவம் ஏதும் இல்லாத [illegible]சர் கீழ் இருப்பதையே விரும்பினான். அவனைப் [illegible]ர்த்துத்தான் அலிகுலியும் இளவரசன் குஸ்ருவிற்கு [illegible]தரவளிக்க முடிவு செய்திருந்தான். இராணுவத்தைச் [illegible]ர்ந்தவர்களிலேயே கான்—ஈ—கானனைத் தான் மெஹ்ர் [illegible]னிஸாவின் கணவன் நன்கு அறிவான். பல வருடங்களுக்கு [illegible] அந்தப் பாரசீகத்தைச் சேர்ந்த வீரன், இந்த [illegible]ம்ராஜ்ஜியத்தில் காலடி வைக்கையில், அப்துர்ரஹீமினுடைய [illegible]டையில் தான் சாதாரணப் போர் வீரனாகச் சேர்ந்தான். [illegible] அவர் மூலமாகவே சக்ரவர்த்தி அக்பருக்கு அறிமுகப் [illegible]த்தப்பட்டான்.

"மன்னிக்க வேண்டும் இளவரசே! சக்ரவர்த்தி அறியாத [illegible]று உங்களை நான் இங்கு சந்திக்க வருவதை, உங்களுக்கு [illegible]விக்க இயலவில்லை."

"அதனால் பரவாயில்லை. என்ன செய்தி கொண்டு [illegible]திருக்கிறாய்?" குஸ்ரு ஆவலுடன் வினவினான்.

"சக்ரவர்த்தியின் பிடியிலிருந்து உங்களைத் தப்பிவிக்கத் [illegible]டங்களைச் செய்தாகிவிட்டது. ஹுசேன் பெக் மற்றும் [illegible]தர் ஹாசன் இருவரும் தங்களுக்கு ஆதரவு அளிக்க முன் [illegible]துள்ளனர்."

"மிக மிக நல்லது" குஸ்ரு புன்னகைத்தான். அவனது [illegible]டுப்பு மறைந்து, பிரபுக்களையும் பொதுமக்களையும் [illegible]கவும் கவர்ந்த அவனது இளவயதிற்கே உரிய ஆர்வம் [illegible]ரிசித்தது. "என்ன திட்டம்?"

"இன்னும் மூன்று தினங்களில் சக்ரவர்த்தி வேட்டைக்குச் செல்வதாக இருக்கிறார். வழக்கம் போல் உங்களைக் கோட்டையில் பூட்டிவைத்து விட்டுச் செல்வார்."

குஸ்ரு தலையசைத்தான். ஒரே ஒரு சிறிய கண்ணாடி ஜன்னல் வழியாகச் சிறிதே வெளிச்சம் வரக்கூடியதும், வெறுமையானதும், கற்களாலானதுமான அந்தச் சிறையை அவன் வெறுத்தான். ஜஹாங்கீர் தொடர்ந்து சில நாட்களுக்கு வேட்டையாடச் செல்கையில் குஸ்ரு தன் நாட்களை அந்தச் சிறையில் கழிக்க வேண்டியிருக்கும். அவனுக்குத் தோட்டத்தில் உலாவச் செல்ல கூட அனுமதி கிடையாது.

"சக்ரவர்த்தியின் வேட்டை முடிந்து இரவு வெகு நேரம் கழித்துதான் எல்லோரும் திரும்புவார்கள். இதற்கிடையில் ஆக்ராவிலிருந்து தப்பிச் செல்வதற்கு நமக்கு நிறைய அவகாசம் கிடைக்கும். அரசர் அதிகாலையில் கிளம்பியவுடன் நீங்களும் தப்பிச் செல்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்." அப்துர் ரஹீம் கூறினான்.

"ஆனால், நான் எப்படி வெளியில் வருவேன்? என்னை எவரும் சந்திப்பதற்குச் சக்ரவர்த்தி அனுமதிப்பதில்லை. என்னாலும், சிறையை விட்டு வெளியே செல்லமுடியாது." குஸ்ரு பதிலுரைத்தான்.

"உங்களைச் சிறைக்கு அழைத்துச் செல்லும் முன் நீங்கள் தப்பிக்க வேண்டும்.. அதற்கடுத்த நாள் உங்கள் தாத்தாவின் பிறந்த தினம், மாட்சிமைக்குரியவரே! சிகந்தராவிலுள்ள சக்ரவர்த்தி அக்பரின் கல்லறைக்குச் சென்று மரியாதை செலுத்த அனுமதி வேண்டிக் கேளுங்கள். வழியில் பெரிய இராணுவப் படையுடன் நான் காத்திருக்கிறேன். உங்களுடன் கூட வரும் பாதுகாவலர்களிடமிருந்து உங்களை மீட்டுத் தப்பிக்கத் துணைசெய்கிறேன்."

குஸ்ரு மெதுவாகத் தலையசைத்தான். "அவ்வளவு சுலபமாக என்னுடன் வரும் காவலர்களிடமிருந்து தப்பிக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை."

தலைமை அதிகாரி மர்மப் புன்னகையுடன் இளரவசரனை உற்றுப் பார்த்தான். "நீங்கள் முயற்சி செய்து தான் ஆகவேண்டும். இதுதான் நல்ல சந்தர்ப்பம். சக்ரவர்த்தி வெகு தூரத்தில் இருப்பார். அவருக்கு விஷயம் தெரிந்து நடவடிக்கை எடுப்பதற்குள் பல மணிநேரம் ஆகிவிடும். காவலர்கள் ஏற்கெனவே அவர்கள் பொறுப்பைச் செய்வதில் அக்கறை காட்டுவதில்லை. ஒருவரும் அறியாமல் நான் இப்பொழுது உங்களை சந்திக்க வரமுடிந்தது."

"இளவரசியைப் பற்றி என்ன செய்யலாம்." குஸ்ரு லீலாவைப் பார்த்தவாறு வினவினான்.

முகத்திரையின் பின் அவள் தலையசைத்தாள். "நீங்கள் மாத்திரம்தான் போக வேண்டும், என் பிரபுவே! அப்பொழுது தான் நீங்கள் வேகமாகப் பயணம் செய்ய முடியும். சக்ரவர்த்தி எனக்கு ஒரு தீங்கும் விளைவிக்க மாட்டார். முக்கியமாக..." அவள் தன் வயிற்றை தடவியவாறு கூறினாள்.

குஸ்ரு ஆமோதித்தவாறு தலையசைத்தான். பின் சிறிது தயக்கத்துடன் அப்துர் ரஹீமைப் பார்த்து "நாம் போய்ச் சேர்ந்தவுடன் இளவரசியை என்னிடம் அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள்... நாம் எங்கு போகிறோம்.?"

"லாகூருக்கு"

"லாகூர்?" குஸ்ரு ஆச்சரியத்துடன் கேட்டான். "ஏன் வங்காளத்திற்குப் போகக் கூடாது? என் மாமா ராஜா மான்சிங் நமக்கு உதவி செய்வார்."

"இல்லை, மாண்புமிக்கவரே!" அப்துர் ரஹீம் உறுதியாகக் கூறினான். "உங்கள் மாமாவும் மிர்ஜா அஸிஸ் கோக்காவும் சக்ரவர்த்தியின் கோபத்திலிருந்து மிகுந்த சிரமத்துடன் உயிர் தப்பியிருக்கிறார்கள். இப்பொழுதும் அவர்களைச் சுற்றி ஒற்றர்கள் வேவு பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நாம் வங்காளத்திற்குச் செல்ல முயற்சி செய்தால் சக்ரவர்த்திக்கு உடனேயே தெரிந்து விடும். நம்மை வழியிலேயே மடக்கிப் பிடித்து விடுவார்கள். நாம் லாகூருக்குப் போய் அங்குள்ள கோட்டையைக் கைப்பற்றி விட்டால், அங்கிருந்து நம்

எதிர்ப்பைத் தொடரமுடியும். லாகூர் நம் பக்கம் வந்து விட்டால், ராஜா மான் சிங்கையும் மிர்ஜா கோக்காவையும் நம் பக்கம் வரவழைத்து விடலாம். மேலும்.." அப்துர் ரஹீம் தயங்கினான்.

"மேலும் என்ன?"

"நாம் லாகூரை வெற்றி கொள்ள முடியாவிட்டால் மேலும் வடக்கே தப்பித்துச் சென்று அங்கு சரணடையலாம். நீங்கள் கேட்டால் பாரசீகத்தின் அரசர் உதவி செய்ய மறுக்கமாட்டார். வங்காளத்தில் நாம் தோல்வி அடைந்து விட்டால், நமக்கு வேறு எங்கும் தப்பித்துச் செல்ல இடமில்லை."

"நீ சொல்வது சரிதான்" அப்துர் ரஹீமின் வாதங்களில் உண்மையை உணர்ந்து கொண்டு குஸ்ரு கூறினான். "எல்லாவித ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்குங்கள்."

கான்—ஈ—கானன், இளவரசனுக்கு வணக்கம் செலுத்தி விட்டுப் பின் கதவு வழியாக நழுவிச் சென்றான்.

குஸ்ரு கலீபா பக்கம் திரும்பினான். "நான் இல்லாமல் உன்னால் சமாளிக்க முடியுமா, என் அன்பே?"

"எனக்கு ஒன்றும் ஆகாது. நீங்கள் அல்லாவின் துணையுடன் செல்லுங்கள். உங்கள் பாதுகாப்பிற்கு நான் பிரார்த்தனை செய்வேன்."

ஜன்னல் வழியாகக் குஸ்ரு எட்டிப் பார்க்கையில் அதிகாலைக் கிழக்கு வானம் சூரிய ஒளியில் வெளிர் சிவப்பு நிறத்தில் காட்சியளித்தது. தூரத்தில் சக்ரவர்த்தியின் குழுவினர் வேட்டைக்குச் செல்வதின் அடையாளமாக மண்புழுதி எழும்பிக் கொண்டிருந்தது. இருட்டு இன்னும் முற்றிலும் அகலாமல் இருக்கையிலேயே அவர்கள் கிளம்பி விட்டனர். ஏப்ரல் மாதம்தான். ஆனாலும், கோடைக்காலம் தொடங்க இருப்பதால் சீக்கிரமே பகல் நேரத்தில் வெப்பம் அதிகமாக ஆகிவிடுவதால் அதிகாலை நேரமோ அல்லது மாலை மங்கிய பின்னரோதான் பயணங்கள் மேற்கொள்ள முடிகிறது.

ஆவலில் இதயம் படபடவென்று துடிக்கக் குஸ்ரு தன்னலிலிருந்து திரும்பினான். இப்பொழுது செயல்பட வேண்டிய நேரம். அவனைச் சிறைக்கு அழைத்துச் செல்லக் காவலர்கள் சீக்கிரமே வந்து விடுவார்கள். காலியாக இருந்த அந்த அறையை அவன் சுற்றிலும் பார்த்தான். கலீபா எப்பொழுதும் அவன் சிறைக்குச் செல்கையில் அரண்மனை அந்தப் புரத்திற்குச் சென்று விடுவாள். இன்றும் முதல்நாள் இரவே பெண்கள் பகுதிக்குச் சென்று விட்டாள். தன் அறையின் கதவருகே சென்று அவன் தட்டினான்.

தூக்க கலக்கத்துடன் ஒரு காவலாளி மெதுவாகக் கதவைத் திறந்தான். "மாண்பு மிக்கவரே, என்னவேண்டும்?"

"என் தாத்தாவிற்கு மரியாதை செலுத்த நான் சிகந்தராவிற்குச் செல்லவேண்டும்." குஸ்ரு அதிகாரத்துடன் கூறினான். "என் குதிரையை தயார் செய்யச் சொல்."

"ஆனால்... மாண்பு மிக்கவரே...! சக்ரவர்த்தி இந்தப் பயணத்திற்கு அனுமதி கொடுக்கவில்லை..." காவலாளி திக்கியவாறு கூறினான். "நான் போய் மற்றக் காவலாளிகளிடம் விசாரித்து விட்டு..."

"போதும்" மிகுந்த கோபம் அடைந்தவன் போல் குஸ்ரு கத்தினான். "ஒரு சாதாரணக் காவலாளியிடமிருந்து பதிலைக் கேட்க நான் தயாரில்லை. நான் பிரார்த்தனை செய்யச் செல்வதை நீ தடுத்தால் சக்ரவர்த்தி உன் தலையைச் சீவி விடுவார். நீ என்னை மறுத்துப் பேசியது பற்றி சக்ரவர்த்தியிடம் புகார் செய்வேன்."

"ஆனால்... மாட்சிமை பொருந்தியவரே...! இது முடியாது" அவன் மறுபடியும் கூறினான். "இவ்வாறு நீங்கள் செல்வதை நான் அனுமதிக்க முடியாது."

குஸ்ரு விரலால் கழுத்தை வெட்டுவது போல் சைகை செய்தவாறு சாந்தமான குரலில் கூறினான். "உன் உயிர் உனக்கு தேவையில்லை போல் தோன்றுகிறது. அப்படித் தானே?"

"உங்கள் விருப்பத்திற்கு அடிபணிகிறேன்." பயந்தவாறு காவலாளி கூறினான். "என்னை மன்னியுங்கள்".

குஸ்ரு அலட்சியமாகக் கை அசைத்தபடி, "பரவாயில்லை, இப்பொழுது போய் என் கட்டளைப்படி செய்."

கதவை நன்கு தாளிட்டுவிட்டு, அந்தக் காவலாளி நகர்ந்ததும், நெற்றியில் வியர்வை துளிர்க்கக் குஸ்ரு தரையில் அமர்ந்தான். இது மிகவும் அதிகமோ? அவன் அதிகம் நாடகமாடி விட்டானோ? அந்தக் காவலாளி இவனை நம்பி விட்டானா அல்லது அவனை மேலும் கேள்விகள் கேட்கத் தலைமை அதிகாரியுடன் திரும்பி வருவானா? அவன் உடல் வியர்த்தது. அம்மாதிரி ஏதும் நடக்கக் கூடாது, தயவு செய் அல்லாவே! தரையில் உட்கார்ந்தவாறே குஸ்ரு பிரார்த்தித் தான். தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டால் மிகுந்த கோபத்துடன் முகமத் ஷரீப் இங்கு வருவானாகில், உடனே குஸ்ருவைச் சிறைக்கு அனுப்பி விடுவான். கதவைத் தட்டும் சப்தம் மெல்லியதாக கேட்க, குஸ்ரு திடுக்கிட்டு எழுந்து, என்ன நடக்குமோ, என்று பயந்து நடுங்கியவாறு நின்றான். பயத்துடன் அந்தக் காவலாளி கதவருகே நின்றி ருந்தான்.

"குதிரைகள் தயார் செய்யப்பட்டுவிட்டன, மாட்சிமை பொருந்தியவரே!"

குஸ்ரு குதிரையை நோக்கி ஒடிக்கொண்டிருக்கையில் அரண்மனை உறக்கம் நீங்கி மெதுவாக விழிக்க ஆரம்பித்தது. தலைமை அதிகாரியால் நியமிக்கப்பட்டப் பாதுகாவலர்கள் ஆங்காங்கே நின்றிருந்தனர். குஸ்ரு அவர்களை ஒருமுறை நோட்டம் விட்டபடி, அவர்களுக்கெல்லாம் இன்னும் ஒரு மணி நேரமே உயிரிருக்கும் என்பதை அவர்கள் அறிவார்களா என்று எண்ணிக் கொண்டான்.

ஆக்ராவிலிருந்து ஆறு மைல் தூரத்தில் அக்பரின் சமாதி உள்ள சிகந்திரா என்னும் இடம் இருந்தது. வழியில் குஸ்ரு வுடன் வந்த காவலாளிகள் அப்துர் ரஹீமின் ஆட்களால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். தெரு ஓரத்திலேயே அவர்கள் உடலை வீசி விட்டு, முன்னூற்றி ஐம்பது குதிரை

வீரர்களுடன் குஸ்ரு சிகந்தராவை அடைந்தான். அங்கு அவன் ஹுஸேன் பெக் மற்றும் மிர்ஜா ஹாசனைச் சந்தித்தான். அவர்கள் தடுத்தும் கேளாமல், குஸ்ரு அக்பரின் கல்லறையில் மண்டியிட்டு அமர்ந்து தன் எண்ணம் நிறைவேற வேண்டிப் பிரார்த்தித்த பிறகு, குதிரையில் ஏறி, மற்றவர்களுடன் கூட லாகூரை நோக்கி விரைந்தான்.

தேர்களைப் பிடித்துவிடுங்கள்."

அடிமைப் பெண்ணின் கரங்கள் மேலே ஏறி அவரது தொள் தசைகளை லாவகமாக பிடித்து விட, ஜஹாங்கீர் அந்தச் சுகத்தை அனுபவித்தவாறு இளைப்பாறினார்.

சக்ரவர்த்தி கையை நீட்டி மதுக்கோப்பையை எடுத்து, ருசித்தவாறு ஒரு மடக்கு மதுவை அருந்தினார். பின் கோப்பையைக் கீழே வைத்து விட்டுக் கண்களை மூடிக் கொண்டார். வேட்டை நன்கு முடிந்திருந்தது. அவரது இரண்டு குண்டுகள்தான் சரியாகச் செல்லவில்லை. மற்றவை எல்லாம் சரியாக இலக்கை நோக்கிப் பாய்ந்திருந்தன. சக்ரவர்த்தியாக இருப்பதில் இன்னும் ஒரு லாபம். இந்தப் பரந்த சாம்ராஜ்ஜியம் முழுவதும் அவருடையது. அதில் இவ்வாறு வேட்டைக்குச் செல்வது, மேலும் அதிக மகிழ்ச்சி யைக் கொடுத்தது.

அருகில், ஒரு பெரிய பித்தளைத் தொட்டி, அந்த அரசர் தங்கும் விடுதிக்கு வரவழைக்கப்பட்டிருந்தது. தாமிரம் மற்றும் வெள்ளி ஜாடிகளில் சூடான நீர் எடுத்து வந்து அலிகள் அந்தத் தொட்டியில் நிரப்பிக் கொண்டிருந்தனர். 'மஸாஜ்' செய்வது முடிந்ததும் அந்த வாசனை திரவியமிடப் பட்ட மிதச் சூடான நீரில் சிறிது நேரம் அமிழ்ந்து இருந்து விட்டுப் பின் மாலையில் நடக்கவிருக்கும் கேளிக்கைகளைக் காண ஜஹாங்கீர் தயாராகி விடுவார்.

தயங்கியபடி வந்த கனைக்கும், சப்தம் அவர் கவனத்தைக் கவர்ந்தது. அவர் அலட்சியமாகக் கண்களைத் திறக்க நூராஷியார் கான் கதவருகில் நிற்பதைக் கண்டார். அந்த

அலி அவருக்கு நன்கு பணிபுரிந்து வருகிறான் என்பதை ஜஹாங்கீர் எண்ணிப் பார்த்தார். அவரது அந்தப்புரத்தில் அவனுக்கு அதிகச் செல்வாக்கு உண்டு என்பது அவருக்குத் தெரியும். மேலும் அவரது முக்கிய இராணி—பாதுஷாபேகம் ஜகத்கோஸினியிடம் அவன் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொள்வதும் தெரியும். இளவரசராக இருக்கையிலும் சரி, தற்பொழுது சக்ரவர்த்தி ஆன பிறகும் சரி, அவர் அந்தப் புரத்து விஷயங்களில் தலையிடுவதில்லையானலும், அங்கு நடக்கும் எல்லா விஷயங்களுமே அவருக்குத் தெரியும்.

"என்ன விஷயம் ஹோஷியார்?"

"மன்னிக்க வேண்டும், மாட்சிமை பொருந்தியவரே! முக்கியத் தலைமை அதிகாரி வெளியே காத்திருக்கிறார். தங்களைச் சந்திக்கவேண்டுகிறார்." அந்த அலி பதிலளித்தான்.

"ஒரு மணிநேரம் காத்திருக்கச் சொல். கேளிக்கைகள் நடக்கையில் என்னுடன் பேசலாம்."

"மிகவும் முக்கியமான விஷயம், மாண்பு மிக்கவரே! தலைமை அதிகாரி காத்திருக்க அவகாசமில்லை என்று கூறுகிறார்."

தக்காணத்திலிருந்துதான் ஏதாவது செய்தி வந்திருக்கக் கூடும். அக்பரால் முடிக்க முடியாமல் போன யுத்தத்தை மறுபடியும் ஜஹாங்கீர் தொடங்கி, நிச்சயம் அங்கு வெற்றி அடைய வேண்டும் எனத் தீவிரமாக இறங்கியிருக்கிறார். யுத்தகளத்திலிருந்து அதற்குள் நல்ல செய்தி வரக்கூடுமா? அவர் தந்தையால் பல வருடங்களாக வெற்றி பெற முடியாமல் போன யுத்தத்தில் இவ்வளவு சீக்கிரத்தில் வெற்றி கிட்டும் நிலமையை நினைத்து, இதயம் மகிழ்ச்சியில் துடிக்க, ஜஹாங்கீர் எழுந்தார். தன்னுடைய சிவப்புப் பட்டு அங்கியை எடுத்து அணிந்தவாறு வேகமாகத் தன் அறையை விட்டு வெளியேறி, வெளிகூடத்திற்கு வந்தார். அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் மாத்திரமே அந்தப்புரத்துடன் கூடிய அரச மாளிகைகுள் அனுமதிக்கப்படுவார்கள். ஆகையால், தன்னை சந்திக்க வருபவர்களைச் சக்ரவர்த்தி வெளிக்கூடத்திலேயே சென்று பார்ப்பார்.

சக்ரவர்த்தி கூடத்தினுள் நுழைகையில் முகமத் ஷரீப் தூணுக்கும் நெருக்குமாக நடந்து கொண்டிருந்தான். அவரைப் பார்த்தவுடன் மண்டியிட்டு கோனிஷ் முறைப்படி அவருக்கு வணக்கம் செலுத்தினான்.

"உங்கள் ஸ்நானத்தை நான் தடைசெய்து விட்டதை அறிவேன். அதற்காக மன்னிப்பு கோருகிறேன்."

"என்ன விஷயம்? தக்காணத்தில் நமக்கு வெற்றி கிட்டியுள்ளதா?" சக்ரவர்த்தி ஆவலுடன் வினவினார்.

முகமத் ஷரீப் கண்களைத் தாழ்த்திக் கொண்டான். "இல்லை மாட்சிமை பொருந்தியவரே! நான் ஒரு கெட்ட செய்தி எடுத்து வந்திருக்கிறேன்.." அவன் தயங்கினான். "அஸ்ரு தப்பித்து விட்டான்."

"தப்பித்து விட்டான்?" திடீரென்று ஒரு பயம் ஜஹாங்கீரின் இதயத்தை தாக்கியது. "எப்படி? அவனைச் சுற்றி இருபத்துநான்கு மணி நேரமும் காவல் வைக்கச் சொல்லி உனக்கு உத்தரவு பிறப்பித்திருந்தேனே?"

"ஆமாம், மாட்சிமை பொருந்தியவரே!" முகமது மெதுவாகக் கூறினான். "ஆனால், அவன் தப்பிவிட்டான். இன்று காலை நீங்கள் வேட்டைக்குக் கிளம்பிச் சென்றபின், சக்ரவர்த்தி அக்பரின் சமாதிக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று கூறித் தன் குதிரைகளைத் தயார் செய்ய உத்திரவிட்டிருக்கிறான். அங்கு இராணுவத் தலைமைத் தளபதி அப்துர்ரஹீம், ஹுசேன்பெக் மற்றும் மிர்ஜாஹாசன் அவனை சந்தித்திருக்கிறார்கள். கடைசியாகக் கேள்விப் பட்டதில், நானூறு குதிரைகள் கொண்ட படையுடன் அவன் இருக்கிறான்."

"எனக்கு முன்பே இதைப்பற்றி ஏன் தெரிவிக்கவில்லை?" ஜஹாங்கீர் கர்ஜித்தார்.

"சில நிமிடங்களுக்கு முன்புதான் எனக்கே தெரியவந்தது. விளக்கை ஏற்றுபவன், சிறைக்கு விளக்கு ஏற்றச் செல்கையில்

அது காலியாக இருப்பதைக் கண்டான்." ஷரீப் தலை வணங்கியவாறு கூறினான்.

"இவை எல்லாம் உன்னுடைய குற்றம்." ஜஹாங்கீர் இரைந்தார். குஸ்ரு தப்பி விட்டான். எப்பொழுது? எங்கே? சில காலமாகத்தான் அவர் சக்ரவர்த்தியாக இருக்கிறார். அதையும் சீக்கிரமே இழக்க நேரிடுமா?

"ஆமாம், மாட்சிமை பொருந்தியவரே, நீங்கள்கொடுக்கும் எந்தத் தண்டனையையும் நான் ஏற்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள். இளவரசனைத் துரத்திச் சென்று பிடித்து வருவதற்கு எனக்கு அனுமதி கொடுங்கள்."

தன் சிறுவயது தோழனும், தன்னுடனேயே இருந்து வனுமாகிய அவனைப் பார்க்கையில் ஜஹாங்கீரின் கோபப் பார்வை சிறிது தளர்ந்தது. மனதிற்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டார். கலவரப்பட இது சமயமில்லை. சரியாகச் செயல்படவேண்டும். அவர்தான் உத்தரவிட வேண்டும். "நல்லது குஸ்ருவைத் திரும்பக் கைது செய்வதன் மூலம், நீ செய்த தவறை நீயே சரி செய்யலாம். வங்காளத்திற்குச் செல்ல உடனே ஏற்பாடு செய். குஸ்ரு நிச்சயம் தன் மாமா ராஜா மான்சிங் இருக்கும் இடத்திற்குதான் போய்க் கொண்டிருப்பான்."

"நான் உடனே கிளம்புகிறேன். மாண்புக்குரியவரே!" ஷரீப் வணங்கி விட்டுக் கதவை நோக்கிப்பின் வாங்கினான்.

"நில்" ஷரீப் திரும்பிச் செல்கையில், குரலை உயர்த்தி ஜஹாங்கீர் கட்டளையிட்டார். "முதலில் ஒற்றர்களை அனுப்பிக் குஸ்ரு எந்த வழியாகச் சென்றான் என்று பார்த்து வரச்சொல். அவன் ஒருவேளை ராஜா மான்சிங் இருக்கும் இடத்திற்கு போகாமலும் இருக்கலாம். ஒற்றர்கள் குஸ்ருவைப் பற்றித் தகவல் தெரிவித்தவுடன், நாளை நீ கிளம்பிச் செல். அவன் போகும் இடம் தெரிந்தவுடன் அவனை விடாமல் தொடர்ந்து செல். அவனை உயிருடனோ அல்லது பிணமாகவோ என்னிடம் கொண்டு வா. என் மகனிடமிருந்து

எந்த வித எதிர்ப்பையும் இனி நான் பொறுக்கமாட்டேன், புரிந்ததா?"

"அப்படியே, மாட்சிமை பொருந்தியவரே!" ஷரீப் புன்னகைத்தான். குஸ்ருவின் தலையைக் கொய்து தங்கத் தட்டில் வைத்துச் சக்ரவர்த்தி முன்னிலையில் எடுத்து வருவதை விட, வேறு எதுவும் அவனுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுக்காது. "நான் போகலாமா?"

ஜஹாங்கீர் வேறு நினைவுடன் தலையசைத்தார். ஷரீப் மறுபடியும் அறையிலிருந்து பின்வாங்கிச் செல்வதைப் பார்த்தார். திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. குஸ்ரு அவர் படைகளுக்கு அடிபணிய மறுத்தால் என்னவாகும்? அவன் தன் வீரர்களுடன் சேர்ந்து எதிர்த்துப் போரிட்டால்? தற்பொழுது சாம்ராஜ்ஜியத்தின் முக்கியத் தலைமை தளபதியான கான்—ஈ—கானன் அவன் பக்கம். அவர் இராணுவத்தின் தலைவர். மிகவும் அனுபவம் மிக்க இராணுவ வீரர். பல போர்களில் பங்கெடுத்துக் கொண்டவர். சண்டை மூண்டால் முகமத் ஷரீப் கொலை செய்யப்பட்டு விட்டால் என்ன ஆகும்?

"முகமது" இரண்டாவது முறையாக ஷரீபை நிறுத்தி ஜஹாங்கீர் கூப்பிட்டார். "உனக்குப் பதிலாக ஷேக் பரீத் புகாரி (Shaikh Farid Bukhari)யை அனுப்பு. இதிமாம் கான் (Ihtimam Khan)ஐ உடன் அவனுக்குத் துணையாக ஆலோசனை கூற அனுப்பிவை. நீ இங்கு அவையில் இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். நீ இங்கு இருப்பது மிக அவசியம்."

ஷரீப் தயங்கிப் பின் வாங்கினான். குஸ்ருவைத் தொடர்ந்து செல்ல அவனுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. "ஆனால், மாண்புக்குரியவரே!" அவன் தொடங்கினான்.

"நான் முடிவெடுத்து விட்டேன். முகமது" சக்ரவர்த்தி அழுத்தமாகக் கூறினார். பிறகு குரலைச் சிறிது இளக்கிக் தொடர்ந்தார். "எனக்கு நீ எவ்வளவு முக்கியம் என்பதை நீ அறிய வேண்டும். குஸ்ரு செல்லும் இடம் பற்றித் தகவல் தெரிந்தவுடன் நாம் இருவரும் சேர்ந்தே செல்வோம்."

"உங்கள் விருப்பம் போலவே ஆகட்டும், மாட்சிமை பொருந்தியவரே!" ஜஹாங்கீர் ஒரு முடிவு எடுத்தவுடன் அவருடன் வாதாடுவதில் உபயோகமில்லை. வணங்கி சக்ரவர்த்தியை வணங்கி விட்டு, அரச மாளிகையின் வெளி கூடத்திலிருந்து வெளியே சென்றான்.

ஜஹாங்கீர் தன் ஸ்நானத்தைத் தொடர உள்ளேசென்றார். அடிமைப் பெண்கள் அவர் தோள்களை வாசனை பொருட்கள் போட்டுத் தேய்த்து விட்டுக் கொண்டிருக்கையில் அவர் யோசித்தவாறு மிதச் சூடான நீரில் படுத்திருந்தார். ஜஹாங்கீர் துரோகம் செய்கையில் அக்பர்கூட இப்படித்தான் வருந்தினாரா? இருவரும் சமரசமானபின், ஜஹாங்கீர் ஒரு முறை ஆக்ராவில் அக்பர் அருகே அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அக்பர் அவர் படிப்பதைத் தடுத்து, அந்தப் பக்கத்தில் ஒரு விரலை வைத்தபடி கேட்டார். "சொல், ஸலீம், அரசக் கிரீடம் அவ்வளவு முக்கியமானதா?" திடீரென்று அந்த கேள்வி வந்தவுடன் ஜஹாங்கீரால் அவரை வெறித்துப் பார்க்கத்தான் முடிந்தது. அரசக் கிரீடம் உங்கள் தலையில் ஏற்கெனவே உள்ளது. நாற்பத்து ஒன்பது வருடங்களாக அந்தச் சுமையை நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று அவரிடம் சொல்லமுடியாமல் ஜஹாங்கீர் மனதிற்குள்ளேயே நினைத்துக் கொண்டார். அரியணையை அடைய ஏங்கித் தவிப்பதில் உள்ள வேதனை பற்றி அவருக்கு என்ன தெரியும்? சிறிதுநேரம் அவர்களிடையே மௌனம் நிலவிய பிறகு அக்பர் புத்தகத்தின் பக்கத்தை தொட்டு, "இங்கிருந்து மறுபடியும் படி" என்றார்.

தொட்டியிலுள்ள நீரை உற்றுப்பார்த்தவாறே, ஜஹாங்கீர் சிந்தித்தார். சக்ரவர்த்தியாக இருப்பது எப்படிப்பட்டது என்பது பற்றியும், அதே சமயம் சக்ரவர்த்தியாக ஆகத் துடிக்கும் ஒரு மகன் இருப்பது எப்படிப்பட்டது என்பது பற்றியும் அவர் இப்பொழுது நன்கு அறிவார். சிறிது காலமாகத்தான் அவர் சக்ரவர்த்தியாக இருந்து கொண்டிருக்கிறார்.

அரசக் கிரீடம் அவருடைய உரிமை. அதைகாப்பாற்றுவதில் அவர் உறுதியாக இருந்தார்.

குஸ்ரு எங்கு சென்றிருக்கிறான் என்று அறிய எல்லாக் திசைகளிலும் ஒற்றர்கள் அனுப்பப்பட்டனர். நடு இரவிற்குள் ஒரு லாகூரை நோக்கி சென்று கொண்டிருக்கிறான் என்ற செய்தி வந்தது. ஷேக் பரீத் புகாரி அவனைத் துரத்திக் கைது செய்ய விரைந்தான். மாலையில் நடந்த கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்தியால் மனம் செலுத்த முடியவில்லை. பாதியில் எழுந்து தன் அறைக்குச் சென்று படுக்கையில் விழுந்தார். ஜஹாங்கீர் உறங்கிக் கொண்டிருக்கையில் அடிமைகளும் மற்றவர்களும் அவர் உடைமைகளைச் சேகரித்து எடுத்து வைத்தனர். ஆக்ராவிலிருந்த சாம்ராஜ்யத்தின் பெரிய இராணுவப் படை உடனே போருக்குச் செல்ல ஆயத்தமாகும்படி கட்டளையிடப்பட்டது.

அடுத்த நாள் காலை, சூரியோதய நேரத்தில், இராணுவத்திற்குத் தலைமை தாங்கி ஜஹாங்கீர் ஆக்ராவிலிருந்து சென்றார். குஸ்ரு தப்பித்துவிட்டான் என்ற செய்தி வந்த இரண்டு மணி நேரத்திற்குள் சக்ரவர்த்தி தன் படையுடன் அக்கத் நவறு செய்யும் தன் மகனைத் துரத்திப் பிடிக்கப் புறப்பட்டார்.

அத்தியாயம் பதின்மூன்று

தெருவின் இரு பக்கமும் நிரம்பிக் கிடக்கும் இறந்த பிரபுக்களின் உடல்களைத் தாண்டி அவர்கள் பயணித்தனர். அவர்களது பெயரை குஸ்ருவிற்கு எடுத்துக்கூறவேண்டி மஹபத்கான் இளவரசன் அருகில் அவன் பின்னால் அமர்ந்திருந்தான். காற்றினால் தொங்கிக் கொண்டிருக்கும் மனித உடல்கள் ஆடிக்கொண்டிருக்கையில், அவன் குஸ்ருவிடம் கூறினான். "கல்தான், பாருங்கள், எப்படி உங்கள் வீரர்கள் மரங்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருக் கிறார்கள் என்பதை..."

- **B. NARAIN**, trans, and S. SHARMA, ed.,
A Dutch Chronicle of Mughal India

ரப்பதத்துடன் கூடிய வெப்பமான இரவு வங்காளத் தைச் சூழ்ந்தது. மக்களின் நெஞ்சங்களை அடைப்பது போல், ஐந்து நாட்களாகத் தொடர்ந்து கொட்டிய மழை ஓய்ந்திருந்தது. பர்த்வானில் வீடுகள் பாசிபடிந்து, ஈரம் காயாத துணிகளுடன் காணப்பட்டன. கூட்டம் கூட்டமாக கொசுக்கள் மக்களின் காதருகில் ரீங்காரம் செய்தவாறு இரத்தத்தை உறிஞ்ச வந்து கொண்டிருந்தன. எத்தனை வேப்பிலை போட்டு எரித்தாலும் கொசுத் தொல்லையிலிருந்து மீள முடியவில்லை. வீடுகளில் கட்டில்களிலும் படுக்கைகளிலும் மெல்லிய கொசுவலைகள் கட்டப்பட்டுப் பேய் போல் காட்சியளித்தன. மெஹ்ருன்னிஸா படுக்கையில் படுத்தவாறு கூரையில் கட்டப்பட்டிருக்கும் நீண்ட சதுரவடிவ விசிறிகள் அசைந்து கொண்டிருப்பதை வெறித்துப் பார்த்தவாறு இருந்தாள். சிறிது வேகம் குறைந்து வெளியே கதவருகிலிருந்து வரும் கயிறு தளர்ந்து போக, விசிறி முற்றிலும் நின்றுவிட்டதே வியர்வை துளிர்க்கத் தொடங்குவதை உணர்ந்துச் சிறிது

நேரம் காத்திருந்துவிட்டு அவள் மெதுவாக அழைத்தாள். "ஹூரம்."

அவள் அறைக்கு வெளியே படுத்திருந்த அடிமைப் பையன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு, அரைத்தூக்கத்துடன் தன் காலை அசைக்கத் தொடங்க, அவன் கால் விரலில் கட்டப்பட்டிருந்த கயிறு மூலம், அந்த விசிறி மறுபடியும் அசைந்தாடத் தொடங்கியது.

அவள் கைகளில் தலையை வைத்து உறங்கிக் கொண்டிருக்கும்தன் குழந்தை லாட்லியைத் திரும்பிப் பார்த்துப் பின் மெஹ்ருன்னிஸா அவள் தலையைத் தூக்கி மெதுவாக அவளைப் படுக்கையில் படுக்கவைத்தாள். குழந்தையின் தலையிலும் மெஹ்ருன்னிஸாவின் தோள்களிலும் வியர்வை பளபளத்தது. தன் கையைத் துடைத்து விட்டுப் பின் குழந்தையின் தலைமுடியை ஊதிக் காய வைத்தாள். லாட்லி பெருமூச்சு விட்டுக் கை கால்களை அகட்டித் திரும்பிப் படுத்துக்கொண்டாள்.தன் முழங்கையை ஊன்றிச் சிறிது எழும்பி நின்று மெஹ்ருன்னிஸா தன் மகளைப்பார்த்து சிரித்தாள். வங்காளத்தின் வெப்பம் அவளைப் பாதித்ததாகத் தெரியவில்லை. லாட்லி சுகமாகக் கோடைக்கால ஜல தோஷத்தினால் மூக்கு அடைந்து போக, வாயைத் திறந்த வாறு, சத்தமிட்டு மூச்சு விட்டவாறு உறங்கிக் கொண்டிருந்தாள்.

மெஹ்ருன்னிஸா மென்மையாக அவளைத் தொட்டாள். லாட்லியின் கால்களையும், துடைகளையும், கைகளில் விழும் சிறிய குழிகளை, மடிப்புகளையும், அவள் முகவாயின் பிரதுவான தோலையும், அவள் தடவிக்கொடுத்தாள். லாட்லி பிறந்த புதிதில் அவள் தூங்கும் அழகைப் பார்த்துக் கொண்டிருப்பதற்காகவே, மெஹ்ருன்னிஸா இரவுகளில் கண்விழித்தவாறு படுத்திருப்பாள். அந்த ஆவல் சீக்கிரமே போய்விடும் என்று அவள் நினைத்தாள். ஆனால், ஆறு மாதங்கள் கழித்தும், அதே போல் இரவில் லாட்லி தூங்கு கையில் அவளைப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற ஆர்வம் இன்னும் இருந்தது. அவள் குழந்தையைப்

பார்க்கையில் உணரும் பேரானந்தம் குறையவே குறையாத என்று தோன்றியது. அல்லாவே! வந்தனம். குனிந்து லாட்லியின் மூக்கில் முத்தமிட்டாள். தூங்கிய வாறே லாட்லி தன் விரல்களைத் தாயின் தலையில் வைத்து, மெஹ்ருன்னிஸாவின் கருத்த தலைமுடியைத் தன் விரல்களில் சுற்றிக்கொண்டாள். மெஹ்ருன்னிஸா புன்னகைத்தவாறு அதை விலக்கி விட்டாள்.

மேலே இருந்த விசிறி கீரிச்சிட்டு விட்டு மறுபடியும் நின்றது. நிஜாம் மறுபடியும் தூங்கி இருப்பான் என்று மெஹ்ருன்னிஸா எண்ணினாள். விசிறி மறுபடியும் வேகமாக அசைய, சுற்றிலுமுள்ள குளிர்ந்த காற்று படுக்கையைச் சுற்றி வருவதை அவள் ஏறிட்டுப்பார்த்தாள். இந்தப்பையன் எல்லாம் செய்கிறான்? அவள் சிரமத்துடன் எழுந்திருக்கத் தொடங்குகையில் கதவருகில் ஒரு உருவம் தெரிந்தது. காலடிகள் அந்த மௌனமான இரவில், ஏகமாக சப்தமிட, அலிகுலி சிறிது தயங்கி விட்டுப் பின் வேகமாக உள்ளே வந்தான்.

மெஹ்ருன்னிஸா உதட்டில் விரலை வைத்தவாறு தூங்கும் லாட்லியை சுட்டிக் காட்டினாள்.

அலிகுலி நின்று அவளை அருகில் வரும்படி சைகை செய்தான். மெஹ்ருன்னிஸா படுக்கையிலிருந்து எழுந்து கொசுவலையைச் சிறிதே தூக்கி, அதன் வழியே வெளியே வந்தாள். கொசுவலையை மறுபடியும் மெத்தைக்கு அடியே நன்கு செருகிவிட்டுத் தன் கணவன் அருகே சென்றாள். இரு வரும் ஜன்னல் அருகே வெளியே தோட்டத்தைப் பார்த்த வாறு நின்றனர். சந்திரன் இறங்கத் தொடங்கி இருந்தாலும் எல்லாம் பளிச்சென்று தெரியும் அளவிற்கு வெள்ளிக் கதிர்களைப் பாய்ச்சிக் கொண்டிருந்தான். அலிகுலி தன் மேல் அங்கியிலிருந்து ஒரு கடிதத்தை வெளியில் எடுத்தான்.

"தந்தையிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதா?" மெஹ்ருன்னிஸா ஆவலுடன் கையை நீட்டினாள்.

"இல்லை. ராஜ சபையிலிருந்து... இளவரசன் குஸ்ரு தப்பி விட்டான்."

சந்திர ஒளி அவள் கண்களை மேலும் கருமை நிறமாக்க, மெஹ்ருன்னிஸா அவனை வெறித்துப் பார்த்தாள்.

"நான் சொல்வது காதில் விழுந்ததா? குஸ்ரு லாகூருக்குத் தப்பி ஓடிவிட்டான்."

"லாகூருக்கா...?"

"இங்கு வரவில்லை. இங்குதான் அவன் மாமா மான்சிங் இருக்கிறார். முட்டாள் பையன்!"

"ஆனால், சக்ரவர்த்தி முதலில் அவனை இங்குதான் தேடுவார்" தன்னையறியாமல் மெஹ்ருன்னிஸா உடனே கூறினாள். "அவன் எதிர்த் திசையில் சென்றது சரியான காரணம் என்று தான் தோன்றுகிறது. அவன் எப்படித் தப்பினான்? அவனைச் சுற்றிப் பலத்த பாதுகாப்பு இருந்த தென்று நினைத்தேன்."

அலிகுலி இளித்தான். "சக்ரவர்த்தி இளவரசனின் முக்கால்வாசி ஆதரவாளர்களை அப்புறப்படுத்தி விட்டார். ஆனால் கான்—ஈ—கானனை அவர் மறந்து விட்டார். மிர்ஜா அப்துர் ரஹீம் எப்படியோ இளவரசன் தப்பிக்க ஏற்பாடு செய்துவிட்டார். அவர்கள் இப்பொழுது லாகூர் சென்று கொண்டிருக்கிறார்கள்." அலிகுலி உரக்கப் பேசினான்.

"மெதுவாக, என் பிரபுவே." மெஹ்ருன்னிஸா கூறினாள். வெளியே கதவருகில் நிஜாம் இருந்தான். மற்ற வேலையாட்களைப் போலவே அவனுக்கும் யானைக்காது. அவனை நம்ப முடியாது. மனதில் பல எண்ணங்கள் ஓட அவள் கணவரிடமிருந்து வேறுபக்கம் திரும்பினாள். குஸ்ரு அப்துர் ரஹீமுடன் சேர்ந்து தப்பி விட்டான். இராணுவ தலைமை தளபதியான அவருக்குப் படைகளின் பக்க பலம் அதிகம் உண்டு. மேலும், சக்தி வாய்ந்த ஆதரவாளர்களும் உண்டு. அவர் இந்தக் கலகத்தில் வெற்றி பெற்று விடுவாரா? சமீபத்திலே தான் தலைக்கு வந்த மணிமுடியை ஜஹாங்கீர் இவ்வளவு சிக்கிரம் இழக்க நேரிடுமா? இந்தச் செய்தியால் அவர் எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறார்?

"சக்ரவர்த்தி என்ன செய்திருக்கிறார், என்பிரபுவே?"

"இராணுவப் படைகளுடன் அவர் ஆக்ராவிலிருந்து லாகூருக்குச் சென்று கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களால் இளவரசனைப் பிடிக்க முடியாது. குஸ்ரு சில படையுடன் வேகமாகச் சென்று கொண்டிக்கிறான். தற்சமயம் லாகூரில் தலைமை அதிகாரி எவரும் இல்லை. வெகு சுலபமாக நகரத்தைக் கைப்பற்றமுடியும். அதைக் கைப்பற்றி விட்டால் வடமேற்குப் பகுதி முழுவதும் நம் கைவசம் வந்துவிடும். பிறகு" அலிகுலி சிரித்தான். குரலைத் தாழ்த்திப் பேச வேண்டிய அவசியம் பற்றிக் கவலைப் படாமல், அவன் தொடர்ந்தான். "பிறகு சாம்ராஜ்ஜியம் முழுவதும் எங்கள் வசம்."

மெஹ்ருன்னிஸாவின் இதயம் படபடத்தது. அவன் கூறுவது உண்மைதான். லாகூரின் தலைமை அதிகாரியைச் சமீபத்தில்தான் அகற்றி விட்டுச் சக்ரவர்த்தி தன் சபையிலிருந்து மற்றொரு அதிகாரியை அந்த இடத்திற்குப் போக பணித்துள்ளார். அவர் இன்னும் அங்கு போய்ச் சேரவில்லை. மேலதிகாரி இல்லாத ஒரு நகரம் எப்படி இராணுவ தளபதி தலைமையில் வரும் படைகளை எதிர்த்துப் போரிட்டுத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்? சக்ரவர்த்தி தான் முடி சூட்டிக் கொண்ட பிறகு, குஸ்ருவின் கலகத்திற்குத் துணை போன கான்—ஈ—கானனையும் அகற்றியிருக்க வேண்டும். அவரை மன்னித்து மறுபடியும் இராணுவத் தளபதியாக நியமித்திருக்கக் கூடாது. திடீரென்று அலிகுலி கூறிய மற்றொரு வார்த்தை அவளுக்கு நினைவு வந்தது.

"நம்முடையது? நம்முடையதாகும் என்றா சொன்னீர்கள்?"

மங்கிய நிலவின் ஒளியில் மறுபடியும் அந்தக் கடிதத்தைப் பார்த்தவாறு அலிகுலி தலையாட்டினான். "நான் இன்றிரவு கிளம்புகிறேன். என் உடைமைகளைச் சேகரித்து வை. இளவரசன் படைகளுடன் நான் உடனே சேர்ந்து கொள்ள வேண்டும்."

"ராஜா மான் என்ன சொல்கிறார்?" மெஹ்ருன்னிஸா வினவினாள். கான்-ஈ-கானனிடமிருந்து உங்களுக்குச் செய்தி வந்ததா?"

"இல்லை. அதனால் பரவாயில்லை. ராஜா மான்சிங் தன் மருமகனைத் தான் ஆதரிப்பார். மேலும், என்னுடைய சேவை கான்—ஈ—கானனுக்கு அவசியம் தற்சமயம் தேவைப் படும்."

மெஹ்ருன்னிஸா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். இவ்வளவு தூரம் பயணித்துக் குஸ்ருவையும் அவன் படை களையும் தேடிச் சாம்ராஜ்ஜியத்தின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குப் போக முடியும் என்று நினைக்கும் இவன் ஒரு முட்டாள். இந்தப் பயணம் எவ்வளவு நாட்கள் நீடிக்கும்? ஆறு மாதங்கள்? எட்டு மாதங்கள்? அதற்குள் பல விஷயங்கள் மாறிந்து விடும். சக்ரவர்த்தி குஸ்ருவைக் கைது செய்து விட்டாராகில் அலிகுலியின் உயிர் அவன் உடலில் இருக்காது. இரண்டாவது முறையாகச் சக்ரவர்த்திக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். அலிகுலி இதைப் பற்றி எல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை. குறைந்த பட்சம் அரச சபையிலிருந்து இவ்வளவு தூரமுள்ள வங்காளத்திற்குத் தான் ஏன் அனுப்பப்பட்டோம் என்பது பற்றியாவது சிந்தித்திருக்க வேண்டும். முக்கியமாக, குஸ்ருவிற்குத் துணை போகமலிருப்பதற்காக என்பதை உணர்ந்திருக்க வேண்டும். இவன் எடுத்திருக்கும் முடிவு தவறானது என்பதை இவனுக்கு எப்படி அவள் புரிய வைப்பாள்?

"சிறிது பொறுத்திருங்கள் என் தலைவரே! அந்த இருவருக்குள் யாராவது ஒருவரிடமிருந்து உங்களுக்கு தகவராகச் செய்திவரும் வரை பொறுத்திருப்பது நல்லது. மேலும், செய்தி வரும்வரை பொறுத்திருப்போம்."

"பொறுத்திரு, பொறுத்திரு... அதைதான் நான் செய்து கொண்டிருக்கிறேன்." அலிகுலி கத்தினான். அவன் குரல் அந்த அறையில் பலமாக ஒலித்தது. லாட்லி பெரிய அழுகை யுடன் விழித்துக் கொண்டாள்.

கட்டிலுக்கு ஓடிச்சென்று, கொசுவலையை அகற்றி மெஹ்ருன்னிஸா குழந்தையைக் கையிலெடுத்தாள். "ஜோ, ஜோ... என் கண்ணே..." குழந்தையைத் தட்டி மறுபடியும்

தூங்க வைக்க முயன்றாள். ஆனால், தன் தந்தையின் உரத்த குரலை கேட்டு, அவள் நன்கு விழித்து கொண்டு விட்டாள். அவனைப் பார்த்து குழந்தை சிரித்தாள்.

அலிகுலி திரும்பிக் கதவை நோக்கி நகர்ந்தான். "நான் போய்த்தான் ஆகவேண்டும். உடனே, குஸ்ருவின் பல... களுடன் சேர்ந்து கொள்ளவேண்டும் இங்கு நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்?"

அவன் போவதைப் பார்த்து லாட்லி மறுபடியும் அழ ஆரம்பித்தாள்.

"அவள் அழுகையை நிறுத்து" அலிகுலி கூறினான். "என் துணிகளை எடுத்து வை. நான் சீக்கிரம் கிளம்புகிறேன்."

கோபத்துடன் மெஹ்ருன்னிஸா அவனை முறைத்துப் பார்த்தாள். அவன் போக முடியாது. போகக்கூடாது, அவன் கிளம்பிச் சென்று விட்டால் இவர்கள் நிலமை என்னவாகும்? "சிந்தித்துப் பாருங்கள், என் பிரபுவே! ஒருமுறை உங்களை மன்னித்துச் சக்ரவர்த்தி இங்கு அனுப்பி உள்ளார். இளவரசனை அவர் கைது செய்து விட்டால், அவனுக்குத் துணைபோக இருந்த உங்கள் உயிரையும் எடுக்கத் தயங்க மாட்டார். ராஜா மான்சிங் அல்லது கான்-ஈ-கானனிடமிருந்து ஏதாவது செய்தி வரும்வரை பொறுத்திருங்கள். நீங்கள் செய்ய இருக்கும் காரியம் எங்கள் எல்லோரையும் பாதிக்கும் லாட்லி, நான் மற்றும் என் தந்தை கூட."

கோபத்தில் நெற்றி சுருங்க அலிகுலி அவளைக் கதவருகிலிருந்து முறைத்துப் பார்த்தான். அவன் கோபத்தின் உச்சத்தில் கை உயர்த்தி அவளை அடித்து விடுவான் போல் தோன்றியது. ஆனால், அவள் சிறிதும் பயப்படாமல் உரக்க அழும் குழந்தையை கையில் ஏந்தியபடி, அவன் எதிரே நின்றாள். அலிகுலி திரும்பித் தரையே அதிர்வது போல் நடந்து, அந்த அறையை விட்டு வெளியேறிச் சென்றான். வெளியே போகையில், கதவருகே குனிந்து ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்த நிஜாமை அப்படியே தூக்கி வராந்தாவின் கல்தரையில் வழுக்கிச் செல்லுமாறு உதைத்து விட்டுச் சென்றான்.

"எவ்வளவு நாட்களாக நாம் இங்கு இருக்கின்றோம்."

"எட்டு, மாண்பு மிக்கவரே!" ஹுஸேன் பெக் பதிலளித்தான்.

லாகூர் கோட்டையின் மதிற்சுவர்களைத் தொட்டவாறு அடர்ந்திருக்கும் மலைக்குன்றுகளை இளவரசன் குஸ்ரு நோக்கினான். அவர்கள் லாகூருக்கு வந்து சேர்கையில், அந்தக் கோட்டை, முற்றுகையைச் சமாளிக்க நன்கு தடுக்கப் பட்டு மிகுந்த பாதுகாப்பில் இருப்பதைக் கண்டனர். லாகூர் மக்களைப் போல், அதைச் சுற்றியுள்ள இடமும் இவர்களை விரும்பி உபசரிக்கும் விதத்தில் இல்லை. தரைகள் காய்ந்து வரண்டு கிடந்தன. மரங்களும் புதர்களும் போதிய தண்ணீர் இல்லாமையால் குட்டையாக வளர்ந்திருந்தன. அந்தக் காய்ந்த நிலப்பரப்பில் ஒரே ஆறுதலாக இருந்தவை அங்காங்கே காணப்படும் சாம்பல் நிற மலைக்குன்றுகளும், பழுப்பு நிறப் பாறைகளும்தான். நடுப்பகலில் சூரிய வெப்பம் தகித்தது, இரவு நேரங்களில் ஒரேயடியாக உறைந்து போகும் அளவிற்குக் குளிர்ந்து போனது. நடக்கும் யுத்தம், அந்தக் கடினமான சீதோஷ்ண நிலை, மற்றும் போர்வீரர்களிடையே இருந்த ஒற்றுமையின்மை இவைகளால் குஸ்ருவின் இராணுவ வீரர்கள் பலவிதமாகப் பாதிக்கப் பட்டிருந்தனர்.

"கோட்டைக்கு உள்ளோர் அதிகம் தாக்குப் பிடிக்க முடியாது" குரலில் நம்பிக்கையுடன் குஸ்ரு கூறினான். ஆனால், அவன் மனதிற்குள் கடந்த சில வாரங்களாக இருந்த பயம், அவனை மரத்துப் போகச் செய்திருந்தது.

"நிச்சியம் முடியாது, மாண்புக்குரியவரே! அவர்கள் அத்யாவசியமான தேவைக்கு வேண்டிய பொருட்கள் குறைந்திருக்கும். ஒன்று மாத்திரம்" ஹுஸேன் தயங்கினான்.

"சக்ரவர்த்தியின் பெரிய படைகள் வந்து சேருவதற்கு முன், நாம் கோட்டையைக் கைப்பற்ற வேண்டும் என்று எனக்கும் தெரியும்". சோர்வுடன் தோள்கள் தளர்ந்தவாறு குஸ்ரு கூறினான். இப்ரஹீம்கானுக்கு நாம் வருவது எப்படி தெரியும்?"

"மதிப்பிற்குரிய சக்ரவர்த்தி அவனுக்குச் செய்தி அனுப்பி விட்டார். நாம் ஆக்ராவை விட்டுக் கிளம்பும் சமயத்திலேயே லாகூரின் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்க ஆக்ராவி லிருந்து இப்ரஹீம் கான் புறப்பட்டுவிட்டார். அவர் நமக்கு முன் லாகூரை வேகமாக வந்தடைந்து கோட்டையை பலப் படுத்திவிட்டார்." குஸ்ருவின் சோகத்திலாழ்ந்த முகத்தை ஹுஸேன் பெக் உன்னிப்பாகப் பார்த்தான். "ஆனால், நம் பக்கம் ஒரு நன்மை இருக்கிறது, மாட்சிமை பொருந்திய இளவரசே! இப்ரஹீம் கானின் படைகள் வேலைக்காரர் களாலும், தொழிலாளிகளாலும் நிறைந்தது. தேர்ச்சி பெற்ற போர் வீரர்களைச் சேகரிக்க அவருக்கு அவகாசம் இல்லை. மேலும், எட்டு நாட்கள் நாம் கோட்டையை வளைத்துச் சூழ்ந்திருக்கிறோம். உணவுப் பொருட்கள் உள்ளே செல்ல நாம் விடவில்லை... சீக்கிரம் அவர்கள் சரணடைந்து விடுவார்கள்."

"அப்படித்தான் நானும் நம்புகிறேன்." தன் மண் படிந்த கைகளால் தலைமயிரைக் கோதி விட்டவாறு குஸ்ரு கூறினான். சூரியனின் கடும் ஒளியிலிருந்து தன் கைகளால் கண்களை மறைத்தவாறு கீழே நோக்கினான். தினமும் குஸ்ருவின் போர்வீரர்கள் கோட்டைச் சுவர்களை வெடி வைத்துத் தகர்த்தனர். ஆனால், இப்ரஹீமின் ஆட்கள் இரவோடிரவாக அயராது உழைத்துச் சிதைந்த கோட்டை மதிற்சுவர்களை சரி செய்தனர். வேலையாட்களும் தொழிலாளிகளுமாக இருந்த போதிலும், அதிசயிக்கத்தக்க அளவிற்கு அவர்கள் மன உறுதியுடனும், விசுவாசத்துடனும் செயல்பட்டனர். ஆனால், குஸ்ருவினால் தன் போர்வீரர் களிடம் அப்படிப்பட்ட உணர்ச்சியை வரவழைக்க முடிய வில்லை. அவர்கள் லாகூர் வந்து சேர்ந்து எட்டு நீண்ட நாட்கள் ஆன போதிலும், கோட்டையைக் கைப்பற்ற முடிய வில்லை.

அவன் திரும்பிக் கூடாரத்தை நோக்கிச் செல்லுகையில் வழக்கமான பயம் திரும்பவும் அவனைத் தாக்கியது. சக்ரவர்த்தியின் படைகள் வருவதற்கு முன் அவர்களால் கோட்டையைப் பிடிக்க முடியுமா? அப்படி முடியாவிட்டால், குஸ்ருவிற்கு ஒளிந்து கொள்ள இடமோ, அல்லது சக்ரவர்த்தி யின் படையை எதிர்த்துப் போரிட வேண்டிய திறமையோ இல்லை.

வழியில் கிடந்த ஒரு சிறு கல்லை உதைத்து, அது மண்புழுதியில் உருண்டோடுவதை இளவரசன் குஸ்ரு பார்த்தவாறு இருந்தான். சரியாகத் திட்டமிடாமல் அவன் அவசரப்பட்டு விட்டானா? அதைப்பற்றி வருத்தப்படவும் இப்பொழுது காலம் கடந்தாகிவிட்டது. இந்த முறை ஜஹாங்கீர் அவனை மன்னிக்கவே மாட்டார். அவன் தலைக்கு ஒரு விலை வைத்தாகி விட்டது.

கழுத்துப் பிடிப்பினால் வந்த வலியைக் குறைக்க குஸ்ரு தலையை இருபுறமும் ஆட்டிக் கொண்டான். ஓய்வு—கடந்த எட்டு நாட்களாக அது என்ன வென்றே அறிய முடியாத ஓய்வு! அது ஒன்றுதான் இந்த வலியைக் குறைக்க முடியும். இனி அவன் வாழ்க்கை முழுவதிலும் அவன் தந்தையிட மிருந்து ஓடிக் கொண்டேயிருக்க வேண்டும். அவரிடம் சரணடைந்தால் மரணம் நிச்சயம். இருந்தாலும், இன்னும் கொஞ்சம் நம்பிக்கை இருக்கிறது. அவனுடைய படையில் காலாட்படை, குதிரைப்படை, இரண்டும் சேர்ந்து — பன்னி ரண்டாயிரம் வீரர்கள் உள்ளனர். அவர்கள் லாகூருக்கு வரும் வழியில் ஆங்காங்கே இருந்த நகரங்களிலிருந்து சக்ரவர்த்திக்கு எதிரான கருத்து கொண்டவர்கள், அவரிடம் அதிருப்தி அடைந்தவர்கள் எல்லாம் இவன் படையில் சேர்ந்து கொண்டனர். வரும் வழியில் இவன் படைவீரர்கள் கடந்து கொண்ட விதத்தை நினைத்து குஸ்ரு சிலிர்த்தான். அவர்கள் கிராமங்களைக் கொள்ளை அடித்தனர். பெண்களைக் கற்பழித்தனர். அவர்கள் சென்ற இடமெல்லாம் மக்கள் கஷ்டமும், துக்கமும் அநுபவித்தனர். குஸ்ருவினால் அவன் வீரர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"மாட்சிமை பொருந்தியவரே!"

அவன் திரும்பி, ஒரு செய்தி கொண்டு வருபவனை அழைத்துக்கொண்டு ஹுஸேன் பெக் வருவதைப் பார்த்தான்.

"மாட்சிமை பொருந்தியவரே! ஷேக் பரீத் புகாரியின் தலைமையினாலான சாம்ராஜ்ஜியத்தின் இராணுவப் படைகள், இங்கிருந்து ஒருநாள் பிரயாண தூரத்தில் உள்ளன."

முகத்திலிருந்து இரத்தம் சுண்ட குஸ்ருவின் முகம் வெளுத்தது. "அவர்கள் வெகு விரைவாகவே வந்திருக்கின்றனர். வேறு என்ன?"

"மிர்ஜா ஹாசன் இறந்துவிட்டான்."

"எப்படி அவன் மரணமடைந்தான்?"

"சிகந்தராவில் அவர் படைகளைத் திரட்டிக் கொண்டிருக்கும் பொழுது சக்ரவர்த்தியின் ஆட்கள் அவரைக் கைப்பற்றி விட்டனர்." செய்தி கொண்டு வந்த மனிதன் தன் வியர்த்திருந்த முகத்தைத் துடைத்துக் கொண்டான். "யானைகள் மிதித்து அவனைக் கொல்லும்படிச் சக்ரவர்த்தி ஆணை பிறப்பித்து விட்டார்."

தன் உதட்டைக் கடித்துத் திடீரென்று பொங்கி வரும் கண்ணீரை அடக்கக் குஸ்ரு முயற்சித்தான். அவனது மற்றொரு ஆதரவாளனான அவன் இறந்துவிட்டான் மனதைத் திடப்படுத்திக் கொண்டு ஹுஸேன் பெக் பக்கம் திரும்பினான். "இன்றிரவு திடீரென்று நாம் ஷேக் புகாரியின் படைகளைத் தாக்கவேண்டும். அவர்கள் எங்கு முகாமிட்டிருக்கின்றனர்?"

"சுல்தான்பூருக்கு அருகில், மாட்சிமைபொருந்தியவரே."

"மாண்புமிக்கவரே...!" செய்தி கொண்டு வந்த மனிதன் சிறிது தயங்கிவிட்டுத் தொடர்ந்தான். "ஒரு பெரிய படைக்குத் தலைமை தாங்கிச் சக்ரவர்த்தியே தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார். அவர் ஷேக் புகாரியின் பின் ஒருநாள் தூரப் பயணத்தில்தான் உள்ளார்."

அவன் தந்தை அவனைத் தொடர்ந்தே வந்து கொண்டிருக்கிறார். நேரத்தை வீண்டிக்கக்கூடாது. குஸ்ருவின் மனம் இரும்பு போல் கடினமானது. அவசியமாகில் அவன்

போரிட்டு மடிந்து போவானே தவிர, ஒருக்காலும் சரணடைய மாட்டான்.

"இருபுறத்திலிருந்தும் தாக்கப்படுவதை நம்மால் சமாளிக்க முடியாது. பத்தாயிரம் போர் வீரர்களைத் தயார் செய். நானே தலைமை தாங்கி ஷேக் புகாரியை எதிர்த்துப் போரிடச் செல்கிறேன். மற்றப் போர்வீரர்கள் கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டிருப்பதைத் தொடர்ந்து செய்யட்டும். துறைந்தபட்சம் ஒரு பக்கத்திலிருந்து வரும் படைகளை நம்மால் முறியடிக்க முடியும்." பேசப்பேச குஸ்ருவின் குரலில் ஒரு வலிமை தெரிந்தது.

அவனைச் சுற்றி ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கையில், அவன் போர்வீரர்கள் அவனைப் பார்க்கும்படியாகவும், வழிநடத்திச் செல்ல அவன் தயாராக இருப்பதை அறியும் படியாகவும் அங்கேயே ஒரு பாறையின் மீது அமர்ந்திருந்தான். அரசக்கிரீடம் அவன் தலையில் அமருவதற்கு இத்தகைய போராட்டங்கள் அவசியம் என எண்ணிப் பார்த்தான். ஜஹாங்கீர் அவனிடம் மிகுந்த கோபத்துடன் இருப்பது பற்றியும், அந்தப்புரத்துப் பெண்கள் அவனது பொறுப்பற்ற தன்மையை வெறுப்பது பற்றியும், ஒரு சமயம் அவனுக்கு ஆதரவாக இருந்த அரச சபைப் பிரபுக்கள் இப்பொழுது அவன் செய்கைகளுக்கு கண்டனம் தெரிவிப்பது பற்றியும் அவன் அறிவான். இவ்வாறு பலதரப்பட்ட எதிர்ப்புகளைச் சந்திக்கையில், பயத்தையும் தனிமையையும் அவன் உணர்ந்தான். அவன் தந்தை கடந்த பதினைந்து வருடங்களாகச் செய்ததைத் தான் அவனும் இப்பொழுது செய்கிறான். அரியணை மேலுள்ள தாபம். பின் ஏன் இவ்வளவு கடும் எதிர்ப்பு?"

அன்று இரவு பியாஸ் நதிக் கரையில், ஷேக் புகாரியின் இருபதாயிரம் வீரர்கள் கொண்ட படை ஸுல்தான்பூரில் முகாமிட்டிருக்கையில் எதிர்பாராதபடி அவர்கள் தாக்கப் பட்டனர். இருந்தாலும் அவர்கள் தீவிரமாகப் போரிட்டனர். குஸ்ருவின் ஆட்களின் எண்ணிக்கை அவர்களை விடப் பலமடங்கு அதிகமானாலும், அவன் படைவீரர்களின்

ஒழுக்கமின்மை, சரியான பயிற்சி இல்லாதது போன்ற நீட்டிக்க வைத்தது. போர் இரவு முழுவதும் நடந்து மறுநாளும் தொடர்ந்தது.

இமய மலை அடிவாரங்களில் பயிரிடப்படும் நறுமணம் மிக்க அரிசியின் வாசமும், இஞ்சியுடன் கூடிய கோழி கறியின் மணமும் அந்தப் பேரரசின் கூடாரத்தில் தவழ்ந்து வந்தது. ஜஹாங்கீர் கைகளை நன்கு சுத்தம் செய்து கொண்டு தரை விரிப்பில் கால்களை மடக்கி அமர்ந்து கொண்டார். அடிமைகள் அவர் முன் வெள்ளித்தட்டை கொண்டு வைக்கையில் அவர் வாயில் உமிழ்நீர் சுரக்கக் கூடாரத்தில் தவழும் அந்த நறுமணத்தை அனுபவித்தார். அந்தத் தட்டில் வெளிச்சுற்றில் மூன்று வெள்ளிக் கிண்ணங்களில் ஆவி பறக்கும் கோழி, ஆட்டிறைச்சி, மீன் முதலியவற்றின் கறியும், நடுவில் பூப்போல் மிருதுவான அவருக்குப் பிடித்தமாதிரி சமைக்கப்பட்ட சாதமும் வைக்கப்பட்டிருந்தது. சாதத்தின் பக்கத்தில் வெள்ளரிக்காய், தக்காளியிட்டுச் சிறிது புளித்த தயிரில் தயாரிக்கப்பட்ட பச்சடி இருந்தது. ஒருபுறத்தில் சிவந்த மிளகாய்ப் பொடியிலும் எண்ணெயிலும் ஊறிய மாங்காய் ஊறுகாய்த் துண்டங்கள். தட்டின் மற்றொரு புறத்தில் முறுமுறுப்பாகப் பொரித்த இரண்டு அரிசி அப்பளத்தை வைத்து விட்டு, அந்த அடிமை குனிந்து வணங்கி விட்டுப் பின்புறமாக நகர்ந்து கூடாரத்தை விட்டு வெளியேறினான்.

சக்ரவர்த்தி தட்டை நோக்கி குனிகையில், முன் அறிவிப்பில்லாமல் மஹபத்கான் கூடாரத்தின் படுதாவை விலக்கி உள்ளே வந்தான். "மாட்சிமை பொருந்தியவரே! குஸ்ருவின் படைகளும் ஷேக் புகாரியின் படைகளும் போரிட்டுக் கொண்டிருக்கின்றனர். ஷேக்கின் படைவீரர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது."

ஜஹாங்கீர் முகத்தைச் சுளித்தார். முதல் நாள் மாலைக்குப் பின் இதுவரை அவர் உணவு உட்கொள்ளவில்லை. அவர் மிகவும் பசியாக இருந்தார். ஆனால், இப்பொழுது

[illegible]கையில் இறங்க வேண்டிய நேரம். அவர் ஒரு கவளம் சாதம் எடுத்து வெங்காயம் தக்காளி கலந்த கோழிக்கறியில் தோய்த்து, நல்லது நடக்க வேண்டி எண்ணியவாறு வாயிலிட்டுக் கொண்டு வேகமாக எழுந்தார்.

"ஹோஷியார் என் கவசங்களை எடுத்துவா" கைகளை [illegible] பட்டுத் துணியில் துடைத்தவாறு அவர் உத்தரவிட்டார்.

ஹோஷியார் உத்தரவை நிறைவேற்ற ஓடினான்.

"நாம் உடனே சுல்தான்பூர் செல்லவேண்டும். மாண்பு மிக்கவரே!" தன் கவசங்களை அணிந்தவாறு முகமது ஷரீப் கூடாரத்திற்குள் ஓடி வந்தான். "நேரம் கடத்தக் கூடாது."

"என் குதிரை தயாராக உள்ளதா?"

"வெளியே காத்திருக்கிறது, மாட்சிமை பொருந்தியவரே!"

தன் கவசங்களை மறந்தவாறு ஜஹாங்கீர் வெளியே ஓடினார். மஹபத்கான் ஒரு ஈட்டியை அவர் பக்கம் எறிந்தான். ஒரு ஈட்டியும் குத்துவாளுமே எடுத்துக்கொண்டு அவர் தன் குதிரை மீது தாவி ஏறித் தன்படைகளை பியாஸ் நதிப் பக்கம் முன் நடத்திச் சென்றார். எதைப்பற்றியும் எண்ணிப் பார்க்கவோ அல்லது இப்படிப் பாதுகாப்புக் கவசம் அணியாமல் போவது குறித்துக் கவலைப்படவோ நேரம் இல்லை. நாற்பதாவது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் ஜஹாங்கீர் தன் வீரத்தைக் காண்பிக்க வேண்டிய தருணமிது. இந்த அவசரம், ஆபத்தான சூழ்நிலையில் ஏற்படும் ஒரு கிளர்ச்சி. இவை எல்லாம் ஜஹாங்கீரின் வாழ்க்கையில் சில காலமாக இல்லாமல் இருந்தது. மஹபத், ஷரீப் மற்றும் படைவீரர்கள் அவரைத் தொடருவதை ஒரு முறை பார்த்து விட்டு, அவர் குதிரையை உதைத்துப் படைகளுக்குத் தலைமை தாங்கி, சுல்தான்பூரை நோக்கி விரைந்தார்.

இதற்கிடையில் ஷேக் புகாரியும் அவர் படைகளும் தோல்வியைச் சந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். போர் தோல்வியைத் தழுவும் வேளையில் சாரணனாக அவசியம் ஏற்பட்டால், உதவி செய்யவேண்டி ஜஹாங்கீரினால்

நியமிக்கப்பட்ட அவரது மற்றொரு தளபதி இஹ்திமாம் கான் (Ihtimam khan) தன் படைகளுடன் ஜஹாங்கீரின் போர்க் கொடியையும், த்வஜஸ்தம்பத்தையும் சுமந்தவாறு அந்தப் போர்களத்திற்கு வந்து சேர்ந்தான். பேரரசரின் போர்க் கொடியைப் பார்த்தவுடன் சக்ரவர்த்தியே தலைமை தாங்கி அங்கு வந்து சேர்ந்து விட்டதாகக் கலகக்காரர்களிடையே ஒரு வதந்தி எழும்பியது. கான்-ஈ-கானன் அப்துர் ரஹீம் பெரும் அச்சமடைந்து குஸ்ருவின் போர்க்கொடியைக் கீழே தவற விட்டான். குஸ்ருவின் படைவீரர்கள் சக்ரவர்த்தியின் போர்ச்சின்னம் மாத்திரம் தெரிய, குஸ்ருவின் போர்கொடி அங்கு தெரியாதது கண்டு, குஸ்ரு கொல்லப்பட்டான் என்று நினைத்தனர். இதனால் ஏற்பட்ட கலவரத்தில் ஷேக் புகாரி மற்றும் அவனுக்குத் துணை வந்த இஹ்திமாம் கான் படைகள் முன்னேறி எதிரிகளை வளைத்துக் கொண்டனர். சிலர் மடிந்தனர். பலர் போர்களத்திலிருந்து திரும்பி ஓடினர்.

குஸ்ரு, அப்துர் ரஹீம், ஹுஸேன்பெக் மூவரும், காபூலுக்குச் சென்று, அங்கிருந்து உஸ்பெகிஸ்தான் போய், அடைக்கலம் கோர வேண்டி, ஒரு சிறு படையுடன் போர் களத்திலிருந்து வேகமாகத் தப்பி ஓடினர்.

பியாஸ் நதியைக் கடந்து சக்ரவர்த்தி தன் படைகளுடன் போர்க்களத்தை வந்தடைந்து பார்க்கையில், குஸ்ருவின் படை தோல்வியுற்று, அவர் மகனும் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டதை அறிந்தார். கலகக்காரர்களைச் சிறைப் பிடிக்க ஷேக் புகாரியை உத்தரவிட்டுவிட்டு, லாகூரின் வெளியே இருந்த மிர்ஜா காம்ரான் என்பவரின் வீட்டில் தங்கி குஸ்ரு கைப்பற்றப்பட்ட செய்தியை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

குஸ்ருவும் அவன் ஆதரவாளர்களும் மிகவும் விரைவாகக் காபூலை நோக்கிப் பயணித்தனர். போர் நடந்த இரண்டு தினங்கள் கழித்து அவர்கள் சினாப் (Chenab) நதிக் கரையை அடைந்தனர். இரவு வெகு நேரம் ஆகிவிட்டதால் எல்லாப் படகுகளும் படகுத்துறையில் கட்டப்பட்டுப்

படகோட்டிகள் சென்று விட்டனர். மீன்பிடித்து விட்டு வந்ததில் நேரமாகிவிட்டதால் ஒரு படகோட்டி மாத்திரம் இன்னும் அங்கேயே இருந்தான். அவன் குஸ்ருவிடம் அழைத்துச் செல்லப் பட்டான்.

"எங்களை அக்கரைக்கு அழைத்துச் செல்ல உன் படகைத் தயார் செய்" குஸ்ரு உத்தரவிட்டான்.

"மாட்சிமை பொருந்தியவரே!" அவன் தயக்கமாறியவாறு கூறினான். "சக்ரவர்த்தியின் அனுமதி இல்லாமல் ஒருவரும் நதியைக் கடக்கக் கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கிறார். உங்களை அக்கரைக்கு அழைத்துச் செல்லும் முன் சக்ரவர்த்தியின் அனுமதிச் சின்னம் தங்களிடமுள்ளதா என்று நான் அறிந்து கொள்ளவேண்டும்."

"எங்களை அக்கரைக்கு அழைத்துச் செல்லுமாறு நான் உத்தரவிடுகிறேன்." குஸ்ரு கோபத்துடன் பொதாக இரைந் தான். இவ்வளவு தூரம் வந்தபின் ஒரு சாதாரண மனிதனால் அவர்கள் பிரயாணம் தடைப் படக்கூடாது. இன்றிரவிற்குள் அவர்கள் நிச்சயம் நதியைக் கடந்தாக வேண்டும். காலை வரை காத்திருந்தால் நேரம் கடந்து விடும்.

"என்னால் முடியாது, மாண்புமிக்கவரே! என்னை மன்னியுங்கள்."

அதே சமயம், ஒரு பெண்மணியும் இரண்டு குழந்தை களும் அங்கு அழைத்து வரப்பட்டனர். படகோட்டி அவர்களைப் பார்த்தவுடன் திடுக்கிட்டான்.

"இவர்கள் உன் குடும்பத்தினரா?"

"ஆம், மாண்பு மிக்கவரே!"

"நல்லது..." குஸ்ரு அவர்களைப் பார்த்தவாறு ஒரு கத்தியை வெளியிலெடுத்து அதன் கூர்மையான பகுதியில் தன் விரலைத் தடவ, இரண்டு சொட்டு ரத்தம் அவன் விரலில் தெரிந்தது. "அவர்கள் இறந்து போவதைப் பார்க்க விரும்புகிறாயா?"

படகோட்டி, கண்களில் கண்ணிருடன் குஸ்ருவின் கால்களில் விழுந்தான். "தயவு செய்யுங்கள், மாட்சிமை

பொருந்தியவரே!" அவன் வேண்டினான். "அவர்களை விட்டு விடுங்கள். நான் உங்களை அக்கரைக்கு அழைத்துச் செல்கிறேன். தயவுசெய்து அவர்களை விட்டு விடுங்கள்."

"அப்படியானால் சரி" தன் விரலை அங்கியில் துடைத்தவாறு குஸ்ரு மிடுக்காகப் பதிலளித்தான். "போ, போய்ப் படகைத் தயார் செய். அப்துர் ரஹீம், இவன் குடும்பத்தினரை விட்டு விடு. நாம் நதியைக் கடந்தபின் நம் வீரர்களுக்கு நம்மைத் தொடரச்சொல்லிக் கட்டளையிட்டு விடு."

படகு தயார் செய்யப்படுகையில், கால்களை மண்ணில் புதைத்தவாறு குஸ்ரு சீனப் நதிக்கரையில் அமர்ந்திருந்தான். விரலில் ஏற்பட்ட குத்தும் வலியினால் அவன் உடல் நடுங்கிற்று. இவ்வளவு கொடூரமானவனாக அவன் எப்படி ஆனான்? பயம், மன அழுத்தம், தூக்கமின்மை இவைகள் அவனே அறிந்து கொள்ள முடியாதபடி அவனைக் கொடியவனாக மாற்றி விட்டது. கலீபா அவனைப் பற்றி என்ன நினைப்பாள்? தன் மனைவியின் நினைவு வந்தவுடன் கைகளில் தலையைக் கவிழ்த்துக் கொண்டு அவன் விம்மினான். அவளை மறுபடியும் அவனால் பார்க்க முடியுமா? அவர்கள் குழந்தை —பெரிய விம்மல் அவனிடமிருந்து வெடித்து எழுந்தது.

அவன் கைகளைக் கட்டியபடி அவ்வாறு அமர்ந்திருக்கையில் படகு தயாரான நிலையில் உள்ளது பற்றி அவனிடம் கூற அப்துர் ரஹீம் அங்கு வந்தான். குஸ்ரு, அப்துர் ரஹீம் மற்றும் ஹாசன் பெக் மூவரும் அதில் ஏறிக் கொள்ளப் படகு அக்கரையை நோக்கி நகரத் தொடங்கியது. சீனாப் நதி வெகு வேகமாகப் பாய்வதால், அதைக் கடப்பது அவ்வளவு சுலபமல்ல. நடுநடுவே மணல் திட்டுகள் இருக்குமாகையால், ஒரு கைதேர்ந்த படகோட்டியால் தான் அதைக் கடக்க முடியும். படகோட்டி மிக சமார்த்தியசாலி. அவன் தன் குடும்பத்தினரைக் காப்பாற்றி விட்டான். ஆனால், சக்ரவர்த்தியின் கட்டளையை மீறும் எண்ணம் அவனுக்கு இல்லை. அவன் படகை ஒரு மணல் திட்டுக்கருகே செலுத்தவே படகு மணலில் சிக்கிக் கொண்டது. அடுத்த அரைமணிநேரம் படகை விடுவிக்க முயல்வது போல் பாவனை செய்தான். குஸ்ருவின் கவனம் சிறிது திரும்புகையில் அவன் சட்டென்று நீரில் குதித்து, குஸ்ருவையும் மற்றவர்களையும் நதியின் நடுவில் தத்தளிக்க விட்டு விட்டு வேகமாக நீந்திக் கரையை அடைந்தான்.

குஸ்ரு, படகோட்டியை நோக்கிப் பெரிதாக சப்தமிட்டும், கண்ணீர் பாயும் சப்தத்தில் அது கேட்கவே இல்லை. கோபத்தில் அவன் படகை உதைக்க, அது தடுமாறிக் கவிழ்ந்து விடும் போலாயிற்று. போர்களத்தில் துணிச்சலாகச் சண்டையிடக் கூடிய அவர்களுக்குத் தண்ணீரின் வேகத்தை எதிர்க்கத் தைரியமில்லை.

இரவு நேரம் அவ்வாறே கழிய, மூவரும் அவர்களது படை வீரர்கள் வந்து உதவும் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று. அவர்களைச் சுற்றி அழகாக நதி பாய்ந்து கொண்டிருக்க அசதி மிகுதியால் அவர்கள் உறக்கத்திலாழ்ந்தனர்.

பொழுது விடிந்தது. கண்களைக் கசக்கியவாறு குஸ்ரு எழுந்து உட்கார்ந்தான். கண்களைத் திறந்து பார்க்கையில், பாயத்தயாரான நிலையில் உள்ள சிங்கத்தின் படமிட்ட தங்கத்தினாலான கொடி, அவன் மூளையில் முதலில் பதியவில்லை. அது சக்ரவர்த்தியின் த்வஜஸ்தம்பம் என்ற உணர்ந்தவுடன் அவன் தூக்கம் முற்றிலும் கலைந்தது. நதியின் இருகரைகளிலும் சக்ரவர்த்தியின் படை இளவரசனைச் சூழ்ந்திருந்தது. அவன் படகில் தூங்கிக் கொண்டிருக்கையில், நதிக்கரையிலிருந்த குஸ்ருவின் படையைச் சக்ரவர்த்தியின் இராணுவப் படை வெகு சுலபமாகத் தோற்கடித்து விட்டது. இப்பொழுது பொழுது விடிவதற்காக நதிக்கரையில் காத்துக் கொண்டிருந்தனர். சில படைவீரர்கள் குஸ்ருவின் படகுக்கு வந்து அவனைக் கைது செய்தனர்.

சக்ரவர்த்தி குனிந்து அங்கிருந்த அழகிய மஞ்சள் ரோஜாவை முகர்ந்து பார்த்தார். பிறகு நிமிர்ந்து கேட்டார். "அவர்கள் எப்பொழுது இங்கு வந்தடைவார்கள்."

"சீக்கிரமாகவே, மாட்சிமை பொருந்தியவரே!" ஒரு பணியாள் பதிலளித்தான்.

அவர் தலையசைத்து விட்டுத், தொடர்ந்து அந்தப் பூங்காவில் நடக்கலானார். அவர் பின்னே சிறிது தூரத்தில் பணியாட்கள் தொடர்ந்து வந்தனர். மிர்ஜா காம்ரான் மிக நன்றாகவே பராமரித்து உள்ளார். சிலாகித்தவாறு அவர் தொடர்ந்து நடந்தார். வரண்ட சீதோஷ்ணமானாலும் பூங்கா மிகவும் பசுமையாகவே இருந்தது. பூக்கள் அழகாக மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்தன. பசும் புல்தரைகளிலுள்ள வடிகால்களில் நீர் பாயும் சப்தம் சலசலவென்று ஒலித்தது. புல்வெளிகளில் நிழல் பரப்பி இருக்கும் பெரிய செண்பக மரங்களில் பறவைகள் சந்தோஷத்துடன் சப்தித்துக் கொண்டிருந்தன. எங்கும் அமைதியாக இருந்தது. குஸ்ரு கைதான விவரம் அறிந்தபின் மேலும் அமைதி அதிகமானது போல் தோன்றியது.

பூங்காவின் வெளிக் கதவுகள் திறக்கக் காலடிகளின் ஓசை அந்த அமைதியை கலைத்தது. ஜஹாங்கீர் திரும்பிப் பார்த்துக் காத்திருந்தார். படைவீரர்கள் குஸ்ரு, அப்துர் ரஹீம், ஹாசன் பெக் மூவரையும் சக்ரவர்த்தி முன் அழைத்து வந்தனர். மூவரும் கால்களிலும் கைகளிலும், மற்றும் ஒருவரோடொருவரும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தனர். குஸ்ரு தன் தோழர்களுக்கிடையே தடுமாறியவாறு வந்தான். சக்ரவர்த்தி முன்வந்ததும், மூவரும் ஒரே சமயத்தில் குனிந்து வணங்கினர்.

"மாட்சிமை பொருந்தியவரே, இளவரசன் குஸ்ரு, ஹாசன்பெக் மற்றுக் கான்-ஈ-கானன் மூவரையும் தங்கள் முன் அழைத்து வந்திருக்கிறேன்." மஹபத் கான் கூறினான்.

சக்ரவர்த்தி கடுமையாகக் குஸ்ருவை நோக்கினார். தன் தந்தையின் துளைக்கும் பார்வையால் நிலை குலைந்து போய்க் குஸ்ரு அழத் தொடங்கினான். தன் அழுக்கடைந்த கைகளால் முகத்தைத் துடைத்துக் கொள்ள முயல, அவன் முகம் புழுதியால் மேலும் அழுக்கானது. அருவருப்பினால் ஜஹாங்கீரின் உதடு சுளித்தது. குஸ்ரு ஏன் இவ்வளவு கஷ்டம் கொடுக்கிறான்?

"உன்னைப் பற்றி நீ என்ன சொல்ல நினைக்கிறாய்?" ஜஹாங்கீர் கோபமாக வினவினார்.

குஸ்ரு மேலும் பெரும் குரலெடுத்து அழத்தொடங்கினான். கடந்த சில நாட்களில் நடந்தவை அவனுக்குத் தாங்க முடியாததாகி விட்டது. சண்டை முடிந்து விட்டது. அவன் இனி எந்த முடிவும் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்ற நினைவே அவனுக்கு நிம்மதியைக் கொடுத்தது. குஸ்ரு பத்தொன்பது வயதே ஆனவன்தான். கடந்த சில காலமாகப் பிராசை பிடித்த சிலர் அரியணை பற்றியும் அதனால் கிடைக்கும் அதிகாரம் பற்றியும் பலவிதமாகக் கூறி அவன் மனதைக் கலக்கியிருந்தனர். அவன் தன் இளம் பிராயத்தை மும் நன்கு அனுபவிக்கவில்லை. இப்பொழுது தந்தை எதிரே கற்றவாளியாக அழுது கொண்டு நிற்கையில் அவனது வரும் காலம் பற்றியும் எந்தவித உத்தரவாதம் இல்லாதது போல் தோன்றுகிறது.

"மாட்சிமை பொருந்தியவரே, என்னை மன்னியுங்கள்...!" ஹாசேன் பெக் சொல்ல ஆரம்பித்தான். "நான் என்ன செய்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை." அவன் அப்துர் ரஹீம் பக்கம் கையைக் காட்டினான். "இளவரசருக்கு உதவி செய்ததால், நிறையப் பொருள் தருவதாக கான்-ஈ-கானன் ஆசை காட்டினார். இல்லாவிடில் என் சக்ரவர்த்தியை எதிர்க்க நான் ஒரு பொழுதும் துணிந்திருக்க மாட்டேன். தயவு செய்து என்னை மன்னித்தருளுங்கள், மாண்பு மிக்கவரே! இனி நான் உங்களது மிகவும் விசுவாசமுள்ள ஊழியனாக இருப்பேன்."

"போதும்!" ஜஹாங்கீர் ஒரு கையை உயர்த்தினார். "நீ ஒரு கோழை, மற்றும் விசுவாசம் இல்லாத வேலையாள். உன் செய்கைகள் உன் குணத்தைத் தெரியப்படுத்துகின்றன. உனக்குக் கொடுக்கப்படும் தண்டனை உன் குற்றத்திற்கு ஏற்றதாக இருக்கும்."

ஜஹாங்கீர் மஹபத்கான் பக்கம் திரும்பினார். "இளவரசன் குஸ்ருவைக் காராக்ருஹத்தில் அடையுங்கள். அவன் கை கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கட்டும். மற்ற

இருவரையும் எருது மற்றும் கழுதைத் தோல் போர்த்தி கழுதைகள் மேல் பின்புறமாக வைத்துக் கட்டி, லாகூர் தெருக்களில் ஊர்வலமாக அழைத்துச் செல்லுங்கள். ஜனங்கள் அவர்கள் அவமதிப்பைப் பார்க்கட்டும்."

உடன் பிணைத்திருந்த மற்ற இருவரையும் இழுத்தவாறு ஹுஸேன் பெக் மண்டியிட்டவாறு கீழே விழுந்தான். ஜஹாங்கீர் வெறுப்புடன் திரும்பி நடந்தார். ஹுஸேன் பெக்கின் அழுகைச் சப்தம் அந்தப் பூங்காவில் எதிரொலித்தது. மூவரும் அங்கிருந்து இழுத்துச் செல்லப்பட்டனர்.

சக்ரவர்த்தியின் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டன. ஒரு எருதும் கழுதையும் கொல்லப்பட்டு அதன் தோல்களை உரித்து, இன்னும் இரத்தம் சொட்டிக் கொண்டிருக்கையில் அதை ஹுஸேன் பெக் மற்றும் அப்துர் ரஹீம் மேல் போர்த்தி, லாகூர் தெருக்களில் கழுதைகளின் மேல் அவர்கள் இழுத்து வரப்பட்டனர். சூரிய உஷ்ணத்தினால் அந்த இரத்தம் உறைந்து அவர்கள் உடலில் நன்கு ஒட்டிக்கொண்டு மேலும் அதிகமான வலியையும் அசௌகரியத்தையும் அவர்களுக்குக் கொடுத்தது.

பன்னிரண்டு மணி நேரம் கழித்து, நீரில்லாமல் அவன் உடல் சுருங்கி, மூச்சுத் திணறி, ஹுஸேன் பெக் அந்த கழுதையின் மேலேயே இறந்து போனான். அவன் தலை வெட்டப்பட்டுப் புல்லால் பதம் செய்யப்பட்டு, ஆக்ராவிற்கு அனுப்பப்பட்டது. கலகக்காரர்களுக்கு ஒரு பாடமாக அங்கு கோட்டையின் மேல் மதிற்சுவரில் தொங்கவிடப்பட்டது.

எப்படியோ கான்—ஈ—கானன் சமாளித்துவிட்டான். திவான் பைராம்கானின் மகனான அவன் லாகூரில் பிறந்து வளர்ந்தவனாகையால், லாகூர் மக்கள் அவனிடம் அன்பு காட்டினர். சக்ரவர்த்தியின் கட்டளைக்கு எதிராக, அவன் தெருக்களில் வலம் வருகையில் அவன் மேலிருந்த தோல் காயாமல் இருப்பதற்காகச் சிலர் அவன் மேலே நீரை ஊற்றியும், குடிக்கப் பானம் கொடுத்தும், பழங்கள் கொடுத்தும் உதவி செய்தனர். இரண்டு நாட்கள் கழித்து அவனை விடுவிக்கச் சக்ரவர்த்தி உத்தரவிட்டார்.

கலக்காரர்களை அடக்கிய பின்னர், முகலாய சாம்ராஜ்ஜியத்தின் புதிய சக்ரவர்த்தி என்ற முறையில், முறைப்படி லாகூர் நகரத்திற்குள் செல்ல வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஜஹாங்கீர் உத்திரவிட்டார். அதுவே அவர் முதன்முறையாக லாகூருக்கு வருகை தருவதாகையால், ஜனங்கள் அவரைச் சந்திக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய சில நாட்கள் ஆனது. அதுவரை ஜஹாங்கீர் மிர்ஜா காம்ரான் வீட்டில் தங்கியிருந்தவாறு அங்கேயே அரச சபையைச் சேர்ந்த சில பிரபுக்களைச் சந்தித்தும், அழகிய பூந்தோட்டங்களில் உலவி வந்தும், தன்னை எதிர்த்து கலகம் செய்தவர்களுக்கு எவ்வித தண்டனைகள் வழங்கவேண்டும் என்று ஆலோசித்தும் தன் பொழுதைக் கழித்தார். ஹுஸேன் பெக் மற்றும் அப்துர் ரஹீமிற்குத்தான் அளித்த தண்டனையைப் பற்றி அவர் சிறிதும் மனம் வருந்தவில்லை. அவர் சக்ரவர்த்தி ஆன புதிதில் ஒரு முறை அப்துர் ரஹீமை மன்னித்து விட்டிருந்தார். ஆனால், இந்த முறை மன்னிக்கத் தயாராக இல்லை. அவன் ஒருவேளை இறந்திருந்தால், அதுவே அவர் மற்றவர்களுக்குச் சுருக்கமாகவும், சுலபமாகவும், புகட்டிய பாடமாக இருந்திருக்கும். அவன் உயிர் பிழைத்தது அவனது நல்ல காலமே ஆகும். அதனாலேயே அவனுக்கு மக்கள் மத்தியில் பொதுமன்னிப்பு வழங்கி விட்டார். ஒரு முறை இப்படி மக்களின் மத்தியில் அவமானப் படுத்தப்பட்ட பிறகு கான்-ஈ-கானன் மறுபடியும் அவருக்கு எதிராக எழும்பத் துணியமாட்டான். அரசக் கிரீடம் இப்பொழுது ஸ்திரமாக அவர் வசம் உள்ளது. எந்தக் காரணம் கொண்டும் தான் சாகும் வரை அதை இழக்க அவர் தயாரில்லை. உடனே, குஸ்ருவிற்கு ஆதரவு அளித்த மற்றப் போர்வீரர்கள் பற்றிய எண்ணம் கிளம்பியது. தன் பட்டு மெத்தையில் ஒருநாள் இரவு படுத்திருக்கையில் அவருக்கு ஒரு திட்டம் உதித்தது. மறுநாள் காலை எழுந்தவுடனே மஹபத் கானை அழைக்க உத்திரவிட்டார்.

"மஹபத், குஸ்ருவை ஆதரித்த போர்வீரர்கள் எவ்வளவு பேர் கைதாகி உள்ளனர்?"

"சுமார் ஆறாயிரம் வீரர்கள், மாண்புமிக்கவரே!"

"இவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்குவது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் குற்றத்திற்கு ஏற்ற தண்டனை கொடுக்கவேண்டும். அவர்களது தலைவரும் சக்ரவர்த்தியுமான என்னையே எதிர்க்கத் துணிந்திருக்கின்றனர். அவர்களுக்குரிய தண்டனை மரணம்தான்."

மஹபத் கான் தலை வணங்கினான். "உங்கள் கட்டளை நிறைவேற்றப்படும், மாட்சிமை பொருந்தியவரே!"

"ஆமாம்." ஜஹாங்கீர் தொடர்ந்தார். "ஆனால், அவர்கள் மரணம் அடையும் விதம், இதே போன்ற குற்றத்தைச் செய்ய எண்ணும் மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். அவர்கள் உடல் எல்லோரும் பார்க்கும்படித் தொங்கவிடப்பட வேண்டும். இதைப் பார்த்துத் தன்னை ஆதரித்தவர்களின் நிலமையை குஸ்ரு உணரவேண்டும்."

மஹபத் கான் காத்திருந்தான். ஜஹாங்கீர் மனதில் மற்றொரு திட்டம் இருப்பதும் அவனால் உணர முடிந்தது. குஸ்ருவின் ஆதரவாளர்களுக்கு மட்டுமல்லாமல், குஸ்ருவுக்கும் கூட ஒரு பயங்கரமான திட்டம் அவர் மனதில் இருப்பது தெரிந்தது. சக்ரவர்த்தி மறுபடியும் விரிவாகப் பேசத் தொடங்கியதும், மஹபத் கான் முகத்தில் சிறு கோடாக ஒரு புன்னகை எழுந்தது. அவன் எதிர்பார்த்ததை விட இது இன்னும் மோசமானதாக இருந்தது. குஸ்ருவிற்குக் கொடுக்கப் போகும் தண்டனை, குஸ்ருவிற்கு மாத்திரமல்லாமல் வருங்காச் சந்ததியினருக்கும் மறக்க முடியாத ஒன்றாக இருக்கும்.

தொடர்ந்து அடுத்த சில தினங்கள் மிர்ஜா காம்ரானின் தோட்டங்களில் பலமான காரியங்கள் செய்யப்பட்டன. பல மரங்கள் வெட்டப்பட்டு, அதன் அடிமரங்கள் கூரான முனையுடன் கூடிய கம்பங்களாகத் தயாரிக்கப்பட்டன.

கடைசியாக, ஜஹாங்கீர் லாகூர் நகரத்திற்குள் செல்லும் நாளும் வந்தது. லாகூர் முகலாய சாம்ராஜ்ஜியத்தில் ஒரு முக்கிய நகரமாகும். அரசாங்க வேலைகளுக்காகிலும் சரி, எல்லைப் பாதுகாப்பில் இராணுவ ஆயத்தங்களுக்கும் சரி, அது ஒரு முக்கிய நகரமாக விளங்கியது. தக்ஷிணப் பீடபூமிகளிலிருந்து எழும்பும் போர் எதிர்ப்புகள் இல்லை எனில், ஆக்ராவைவிட மிதமான சீதோஷ்ணநிலை கொண்ட லாகூரிலேயே வசிப்பதற்கு ஜஹாங்கீர் விரும்புவார். விதியும், குஸ்ருவும், அவசரமாக அவரை லாகூருக்கு வரவழைத்து விட்டன. ஆனாலும், அவர் ஒரு சக்ரவர்த்தி என்ற முறைப்படிச் சகல மரியாதைகளுடன் லாகூர் நகரத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அவர் மெதுவாகக் காலையில் எழுந்து, சிறிது சிறிதாக வளர்ந்து வரும் மகிழ்ச்சி தரும் உத்வேகத்துடன், நிதானமாகக் குளித்து உடையணிந்து கொண்டார். அவர் ஊர்வலமாக லாகூருக்குள் செல்வதே ஒரு பெரிய விசேஷமாகும். ஏனெனில், குஸ்ருவின் தண்டனை அங்கேதான் அறிவிக்கப்படும். உலகம் முழுவதும் அதுபற்றிச் சீக்கிரம் அறிந்து கொள்ளும். வருங்காலச் சந்ததியினர் பல வருடங்கள் அது பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். குஸ்ருவை அவர் முன் அழைத்து வருவதற்காக அவர் காம்ரான் வீட்டிற்கு வெளியே காத்திருந்தார்.

"கடந்த சில தினங்களில் நீ செய்த காரியங்களை நான் மன்னிக்க விரும்புகிறேன். என் மன்னிப்பிற்கு அடையாளமாக என்னுடன் கூட யானை மேல் அம்பாரியில் நீ பிரயாணம் செய்யலாம்."

குஸ்ரு மண்டியிட்டு வணங்கினான். "வந்தனம், மாட்சிமை பொருந்தியவரே!"

அவனது சங்கிலிகள் விடுவிக்கப்பட்டு, இளவரசன், அம்பாரிமீது ஏற்றி அழைத்துச் செல்லப்பட்டான். ஜஹாங்கீர் முதலில் ஏறி அமர்ந்தபின், குஸ்ரு ஏறினான். மஹபத் கானும் உடன் ஏறித் தன்பக்கத்தில் அமருவதை குஸ்ரு ஆச்சரியத்துடன் பார்த்தான்.

யானைப்பாகனின் உந்துதலில் அரசரின் யானை மெதுவாக எழுந்திருக்க, அவர்கள் யாவரும் மிர்ஜா காம்ரான் வீட்டிலிருந்து கிளம்பித் தாரை தப்பட்டைகள் முழங்க,

ஊர்வலமாகச் செல்லத் தொடங்கினர். யானை தெருக் கோடியில் சென்று திரும்பியவுடன், குஸ்ரு அச்சத்துடன் மூச்சை உள்ளிழுப்பதை ஜஹாங்கீர் கண்டார்.

மிர்ஜா காம்ரான் வீட்டிலிருந்து லாகூர் கோட்டைக் கதவுகள் வரை, வழியில் தெருவின் இருபுறமும் வரிசையாகக் கம்பங்கள் நடப்பட்டிருந்தன. ஒவ்வொரு கம்பத்திலும் ஒரு மனிதன் அதன் கூரான முனையில் துளைத்து கட்டப் பட்டிருந்தான். சிலர் இன்னும் உயிருடன் வலியினால் துடித்துக் கொண்டிருந்தனர். சில உடல்கள் வழியிலிருந்த மரங்களின் கிளைகளில தொங்கிக் கொண்டிருந்தன. மரங்களில் தொங்க விடப்பட்டவர்கள் உயிருடன் கம்பத்தில் சொருகப்பட்டுத் துடித்துக் கொண்டிருக்கும் அவர்கள் தோழர்களைவிடக் குறைந்த கஷ்டம் அனுபவித்து மரண மடைந்திருந்தனர். இவர்கள் யாவருமே அவ்வழியே வரும் அவர்களது முந்தைய தலைவரை வரவேற்பது போல காட்சியளித்தனர். அரசரின் ஊர்வலம் கடந்து செல்கையில் இன்னும் உயிருடன் துடிப்பவர்கள் இளவரசனை நோக்கி உரக்க கூக்குரலிட்டனர்.

குஸ்ரு தன் நடுங்கும் கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். அந்த மனிதர்களை அவன் அடையாளம் கண்டுகொண்டான். அவனுக்கு ஆதரவளித்த போர்வீரர்கள் இவ்வாறான பயங்கர மரணத்திற்கு அவன்தான் காரணம். அவனால்தான், அவர்கள் எல்லோரும் இவ்விதம் அவமானப் படுத்தப்பட்டுக் கொடூரமான மரணத்தை அடைந்திருக்கின்றனர்.

கடுமையான முகத்துடன் சக்ரவர்த்தி குஸ்ருவை பார்த்தவாறு இருந்தார். பின் குஸ்ருவின் முகத்திலிருந்து அவன் கைகளை விலக்கினார்.

"பார்" அவர் குரூரமாகக் கூறினார். "உனக்கு உதவி செய்த வீரர்களின் விதியைப் பார். அவர்கள் இவ்வாறு மரணமடைவதற்கு நீதான் காரணம்."

முகம் வெளுக்கக் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓட குஸ்ரு சுற்றுமுற்றும் பார்த்தான்.

மஹபத் கான் இளவரசன் பக்கம் குனிந்தான்.

"மாண்பு மிக்கவரே, இந்த மனிதர்களை அறிமுகப்படுத்த எனக்கு அனுமதி அளியுங்கள்... இவன்..."

மஹபத்கான் அவ்வாறு ஒவ்வொரு மனிதனையும் அறிமுகப்படுத்துகையில் குஸ்ரு முகத்தில் திகில் படர பார்த்தவாறு இருந்தான். அவர்கள் லாகூர்க் கோட்டையை நெருங்குகையில் காற்று பலமாக வீசத்தொடங்கியது. மரங்களில் தொங்கும் உடல்கள் காற்றில் வேகமாக ஆடி அடி மரத்தில் முட்டிக் கொள்வதை மஹபத்கான் குஸ்ருவிற்குக் காண்பித்தான்.

"இளவரசே! உமது தைரியமான வீரர்கள் மரங்களுடன் சண்டையிடுவதைப் பாருங்கள்." ஒவ்வொரு வார்த்தையிலும் வன்மம் சொட்டக் கூறினான்.

இளவரசன் கண்களை இறுக மூடிக்கொள்ள, அவன் அவ்வாறே இருக்க இந்த முறை ஜஹாங்கீர் விட்டு விட்டார். குஸ்ரு மறுபடியும் கலகம் செய்யத் துணிய மாட்டான். அவனுக்குப் பாடம் புகட்டியாகிவிட்டது. முடிவாக ஊர்வலம் லாகூரை நெருங்க, முகத்தில் புன்னகையுடன் ஜஹாங்கீர் கோட்டைக்குள் பிரவேசித்தார். அவர் ஜனங்கள் மத்தியில் தன்னை ஒரு கருணை மிக்க சக்ரவர்த்தியாகக் காட்டியபடி வெள்ளிக் காசுகளை வாரி வீசினார்.

தன் வாழ்க்கையில் எதுவுமே இனி பழைய மாதிரி அமையாது என்பதை உணர்ந்த குஸ்ரு, வெளுத்த முகத்துடனும், நடுக்கத்துடனும், வெறித்த பார்வையுடனும் அவர் பக்கத்தில் அமர்ந்திருந்தான்.

வங்காளத்தில் கோடைக் கால மழை துவங்கி, மரங்களும் புதர்களும், பச்சை பசேலென்று ஈரமாகக் காட்சியளித்தன. பகல், இரவு முழுவதும் மழை பெய்தவாறு இருந்தது. வீடுகள் எப்பொழுதும் ஈரத்துடனும், எங்கும் பாசி படர்ந்தும், ஒரே இரவிற்குள் கொண்டை ஊசிகள் துருப் பிடித்துப் போயும், மரச் சாமான்களில் கரையான் படிந்தும்

காணப்பட்டன. அதிஷ்டமில்லாத மனிதர்கள் மீது கொக்கள் விடாது படையெடுத்தன.

மெஹ்ருன்னிஸா பெருமூச்சுடன் ஜன்னலிலிருந்து திரும்பினாள். கங்கைச் சமவெளிப் பிரதேசங்கள் போல் பர்த்வான் இல்லை. இங்கு நிலபுலன்களுக்குப் புத்துணர்ச்சியை மழை கொண்டு வருவதில்லை. மாராகப் புழு பூச்சிகள், மண் புழுக்கள், மற்றும் பலவித புழு இனங்களின் பெருக்கம் அதிகரித்தது. மரங்கள், புதர்கள் வளர்ச்சியும் கட்டுக் கடங்காமல் இருந்தது. அவை தாறுமாறாக வளர்ந்து கற்களிடையேயும் சுவர்களிலும் ஊடுருவிப் படர்ந்து ஜனங்களுக்குக் கஷ்டம் விளைவித்தன.

மெஹ்ருன்னிஸாவும் அலிகுலியும் வங்காளம் வந்து ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. சக்ரவர்த்தி அவர்களை நினைவில் வைத்துக் கொண்டிருப்பதோ அல்லது திரும்பவும் அரச சபைக்கு வரச்சொல்லி உத்திரவு பிறப்பிப்பதற்கான அறிகுறியோ சிறிதும் இல்லை. சாம்ராஜ்ஜியத்தின் ஒரு மூலையில் இருந்த போதிலும் குஸ்ருவிற்கும் அவனது ஆதரவாளர்களுக்கும் அளிக்கப்பட்ட தண்டனைகள் பற்றிய விவரம் மெஹ்ருன்னிஸாவிற்குத் தெரிய வந்தது. அது மிகவும் கொடூரமான தண்டனைதான். ஆனால், மெஹ்ருன்னிஸா அதை ஆமோதித்தாள். அரியணையை விட முக்கியமானது வேறு ஒன்றுமில்லை. இப்படிப்பட்ட தண்டனைகள் மூலம் மறுபடியும் தவறுகள் செய்வதற்குக் குஸ்ருவிற்கு அச்சம் ஏற்படுமேயானால் இத்தகைய தண்டனை அவசியமே. மறுபடியும் கலகம் செய்யச் சீக்கிரத்தில் குஸ்ரு துணியமாட்டான்.

அலிகுலி இன்னும் அங்குதான் இருந்தான். இளவரசனைத் தொடர்ந்து அவன் லாகூருக்குப் போயிருப்பானாகில் சக்ரவர்த்தியின் கோபத்திலிருந்து தப்பியிருக்க மாட்டான். மெஹ்ருன்னிஸா கூறிய சரியான சில காரணங்கள் அவனது பரபரப்பான மூளையை சிறிது அமைதி அடையச் செய்தன. குஸ்ரு கைதான விவரம் வெகு சீக்கிரத்திலேயே அவர்களுக்குத் தெரியவந்தது. கோபத்தில் அந்தச் செய்தி வந்த

கடிதத்தை அவன் மெஹ்ருன்னிஸா மீது விட்டெறிந்தான். அவள் அதை எடுத்துப் படித்து விட்டு தன் பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டாள்.

ஜன்னலின் சட்டத்தில் கைகளைப் பதித்தவாறு அவள் அதில் சாய்ந்து கொண்டாள். பக்கத்திலேயே இருந்து அரச சபையில் நடக்கும் விஷயங்களைக் கேட்டும், பார்த்தும் தெரிந்து கொள்ள முடியாமல், செய்திகள் கொண்டு வரும் ஆட்கள் மூலம் அறிந்து கொள்வது அலுப்பாக இருந்தது. குஸ்ரு அரியணையைக் கைப்பற்ற முதன்முறை முயற்சிக்கையில் அவள் கணவன் குஸ்ருவிற்கு ஆதரவு அளித்திருக்காவிட்டால் இந்த நிலை அவர்களுக்கு வந்திருக்காது. அவர்கள் இப்பொழுதும் தலைநகரில், அரச சபை கூடும் இடத்திற்கருகிலேயே இருந்திருப்பார்கள். இந்த முறையும் குஸ்ருவிற்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்று அவள் கணவன் நினைத்திருந்தது அவளுக்கு மட்டுமே தெரியும். இவர்கள் பேசியதை ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்த அடிமைப்பையன் நிஜாமை வேலையிலிருந்து நீக்கிவிட்டுப் பணம் கொடுத்து, அவன் கிராமத்திற்கே அனுப்பியாகி விட்டது. அவன் பர்த்வானிலேயே இருப்பது நல்லதல்ல என்று மெஹ்ருன்னிஸா நினைத்தாள். இங்கிருந்தால், அவன் நிச்சயம் அலிகுலி பேசிய விஷயங்கள் பற்றி வெளியே சொல்வதற்கு அதிக வாய்ப்புண்டு.

தந்தத்தினால் அழகிய வேலைப்பாடுகள் செய்த மரப் பெட்டியில் அவள் பத்திரப்படுத்தி வைத்திருந்த கடிதங்களுக்கு அடியில் இருந்த அரசாங்க முத்திரையிட்ட கடிதத்தை அவள் மெதுவாக வெளியே எடுத்தாள். அதில் துருக்கியில் எழுதியிருந்த எழுத்துக்களை விரல்களால் தடவிப் பார்த்தாள். எழுத்து மை மங்கிப் போயிருந்தது. பல வருடங்களுக்கு முன்பு அலிகுலிக்குப் 'புலியைக் கொன்றவன்' என்ற பட்டம் அளித்து இளவரசர் ஸலீம் வழங்கிய முத்திரைக் கடிதம் அது. மெஹ்ருன்னிஸாவின் கண்கள் அடியில் இருந்த விசித்திரமான வார்த்தைகளை நோக்கியது 'நீ எப்பொழுதும் அமைதியுடன் இருக்கவேண்டும்.' அவள் அந்த வார்த்தை

களை மெதுவாக ஒவ்வொன்றாகத் தடவிப் பார்த்தாள். இளவரசரே அதை எழுதி யிருப்பாரா? இல்லை... அவர் எழுதியதாக இருக்க முடியாது. கடிதம் எழுதிய பணியாள் தான். இதையும் சேர்த்திருக்கவேண்டும். இருந்தாலும் அரசாங்க முத்திரையிட்ட கடிதத்தில் இப்படிப் பட்ட வார்த்தை இடம் பெறுவது விசித்திரம்தான். அவள் அந்தக் கடிதத்தைப் பெட்டியின் அடியில் மறுபடியும் வைத்து, மேலே தன் துணிகளால் மறைத்தாள். அந்தக் கடிதங்கள் மறுபடியும், நீலம், சிவப்பு, மஞ்சள், பட்டுத் துணிகளிடையே மறைந்து போயின.

அவள் திடீரென்று அமைதி இழந்தது போல் உணர்ந்தாள். இப்பொழுது லாகூருக்குச் செல்ல—அது எத்தனை சிறிய காலத்திற்காகிலும் சரி, சக்ரவர்த்தியின் அரச சபை கூடும், அதிகாரம் மிகுந்ததும் முக்கிய முடிவுகள் எடுக்கப்படுவதுமான லாகூர் நகரத்திற்குச் செல்ல என்ன விலை கொடுப்பதற்கும் அவள் தயாராக இருந்தாள்.

ஆனால், அது நிறைவேறமுடியாததொன்று. கைகளைத் தட்டித் துடைத்தவாறு மெஹ்ருன்னிஸா சிந்தித்தாள். அலிகுலி இன்னும் அவமதிப்புடன்தான் இருக்கிறான். அவன் எங்கு செல்கிறனோ, அவன் மனைவியாக இருப்பதால் அவளும் அங்குதான் செல்லவேண்டும். ஒரே ஒரு திருப்தி என்னவெனில், தன் பல வேலைக்களுக்கிடையிலும், அவள் தந்தை தவறாமல் அவளுக்கு நீண்ட கடிதம் எழுதி வருகிறார். அரசர் சபையில் நடக்கும் விஷயங்கள் பற்றியும், அவள் வீட்டில் நடப்பவை பற்றியும், அவ்வப்போது பெரிய இராணி பற்றியும், அரசரின் அந்தப்புரத்தில் நடப்பவை பற்றியும் அவர் விரிவாக எழுதுகிறார். லாகூர் செல்வதையும் விட அதிகம் அவள் விரும்புவது, நட்சத்திரங்கள் மினுமினுக்கும் கோடைகால வானத்தின் கீழ் அவள் தந்தையுடன் முற்றத்தில் அமர்ந்து, அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பது தான். அவர் இன்னும் பார்க்காத அவர் பேத்தி லாட்லியுடன் அவர் அருகே அமர்ந்திருப்பது தான். அவரிடமிருந்து வரும் கடிதங்கள் மாத்திரம் போதாது.

மறுபடியும் வெளிப்புறம் திரும்பிக் கனத்தமழை பெய்திருந்த வெளிதோட்டங்களையும் காற்றின் வேகத்தில் தரையைத் தொட்டுக் கொண்டு நிற்கும் இலைகளுடன் கூடிய மரங்களையும், இலைகள் உதிர்ந்து பச்சை பசேல் என்று காட்சிதரும் புல்வெளிகளையும் மெஹ்ருன்னிஸா பார்த்தாள். அவள் உடலில் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. வங்காளத்தை விட்டுச் செல்லவே முடியாதோ என்றும் தோன்றியது.

ஆனால், அவள் அப்படி இங்கே நின்று கொண்டிருக்கையில் ஆயிரம் மைங்களுக்கு அப்பால், லாகூரில், சக்ரவர்த்தி ஜஹாங்கீர் தன் அறையில் ஆழ்ந்து யோசித்தவாறு நடந்து கொண்டிருந்தார். குஸ்ருவைப் பற்றிய விவகாரங்கள் முடிந்து விட்டன. இனிமேல் மனதிற்கு இதம் வரும், மகிழ்ச்சி தரும் விஷயங்கள் பற்றி நினைத்துப் பார்க்க நேரம் வந்துவிட்டது.

அத்தியாயம் பதினான்கு

தந்தையிடம் அவனுக்கிருந்த மரியாதையும், பயமும் காரணமாக, மெஹ்ருன்னிஸ்ஸாவின் மேல் அவனுக்கிருந்த கட்டுக்கடங்காத காதலை ஸலீம் கட்டுப்படுத்தி வைத்திருந்தான். இந்தியாவின் அரியணை மேல் அமர்ந்தபின் அந்தக் காதல் பலமடங்காகப் பெருக்கெடுத்தது. இப்பொழுது எல்லோருக்கும் தலைவன். அவன் குடிமக்கள் எவருமே அவன் கட்டளைகளையோ, விருப்பங்களையே மறுக்க முடியாது.

- **ALEXANDER DOW,** The History of Hindustan

தளிதாக மூச்சுவிட ஏதுவாகத் தன் மேல் அங்கியைத் தளர்த்திவிட்டுப் பட்டுத் தலையணிகள் மேல் சாய்ந்த வாறு ஜஹாங்கீர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். இதற்கு முன் எப்பொழுது இவ்வளவு சாப்பிட்டோம் என்றோ, கடந்த சில மாதங்களில் எப்பொழுது இவ்வாறு உணவை ருசித்து, உண்டோம் என்றோ அவருக்கு நினைவில்லை. பதமாகக் கரி அடிப்பில் சுட்டு எடுக்கப்பட்ட, எலுமிச்சைச் சாறு, பூண்டு மற்றும் மசாலாவில் ஊறிய ஆட்டிறைச்சித் துண்டங்கள், அவர் மகிழ்ச்சியுடன் வயிற்றைத் தடவிக் கொடுத்தவாறு பக்கத்திலிருந்த மதுக்கோப்பையைக் கையிலெடுத்தார்.

தன் கோப்பையின் விளிம்பிற்கு மேலாகத் தன்னைச் சுற்றி அமர்ந்திருக்கும் அந்தப்புரத்துப் பெண்களை ஜஹாங்கீர் பார்த்தார். பலவித வண்ணங்களில் உடைகள் அணிந்து, அவர்கள் ஜஹாங்கீர் அவர்களைக் கண்டு புன்னகை புரிந்தனர். இதில் யார் தன் படுக்கைக்கு இன்று வருகை தரக் கூடும்? அவர் திருப்தியுடன் யோசித்துப் பார்த்தார். இவர்கள் அனைவரும் லாகூரில் அவருக்கருகில் இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. குஸ்ருவைத் தொடர்ந்து, மிகவும் அவசரமாக அவர் ஆக்ராவை விட்டு கிளம்பிவிட்டதால்,

அவர் அந்தப்புரத்துப் பெண்கள் அவருடன் வரமுடியவில்லை. சில மாதங்கள் போல் ஆனபின், அவர்களைத் தகுந்த துணையுடன் அழைத்து வரச் சொல்லி, அவர் இளவரசன் குஸ்ருவிற்கு உத்திரவிட்டிருந்தார்.

ஆக்ராவிலிருந்து அரச சபையைச் சார்ந்த அனைவரும் லாகூருக்கு வந்து சேர்ந்தபின், வழக்கம்போல், அரச சபை தர்பார்கள், மற்ற அரசாங்கக் காரியங்கள் நடக்கத் தொடங்கின. குஸ்ருவின் கலகம் நடந்த சமயத்தில், சாம்ராஜ்ஜியத்திற்குப் பலவிதங்களிலும் உதவியவர்களுக்கு ஜஹாங்கீர் தகுந்த பரிசுகளையும் பட்டங்களையும் வழங்கினார். மஹபத்கான், முகமத் ஷரீப் இருவருக்கும் இன்னும் அதிக மான்யமும், பொருள் வசதியும் தரப்பட்டன.

சில மாதங்கள் கழித்துப் பீஹாரில், ரோதாஸ் (Rohtas) என்ற பகுதியில் கலவரம் வெடிப்பதாக ஜஹாங்கீருக்குச் செய்தி வந்தது. அந்தக் கலவரத்தை அடக்க ராஜா மான்சிங் தலைமையில் ஒரு இராணுவப் படையை அனுப்ப அவர் தீர்மானித்தார். ராஜா மான்சிங்கை வங்காளத்தின் கவர்னர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யச் சொல்லி உத்தரவிட்டு விட்டு, அவருக்குப் பதில் குத்புதீன்கான் கோக்காவை வங்காளத்தின் கவர்னராக ஜஹாங்கீர் நியமித்தார். ஆனால் அவருக்குக் கோக்காவை அங்கு அனுப்புவதில் விருப்ப மில்லை. ஆனால், அவரது உடன் பிறவாச் சகோதரன் கோக்கா வங்காளத்திற்குக் கவர்னராகச் செல்ல விருப்பம் தெரிவித்ததால், ஜஹாங்கீரும் அதற்கு உடன்பட்டார்.

சக்கரவர்த்தி தன் மதுக்கோப்பையைக் கீழே வைத்து விட்டுப் பெண்களை அழைத்தார். புதிதாக அவரது அந்தப் புரத்திற்கு வந்திருந்த ஒரு பதினைந்து வயது பெண் எழுந்திருந்து வேகமாக அவரிடம் சென்றாள்.

"என் படுக்கை அறைக்கு என்னை அழைத்துச் செல்."

"அப்படியே, மாட்சிமை பொருந்தியவரே!" அவளுடைய மயக்கும் குரல் சக்ரவர்த்திக்குக் கிளர்ச்சியை உண்டாக்கி யது.

அவருடன் இரவைக் கழிப்பதற்காக அவர் தேர்ந்தெடுத்த இளம்பெண்ணின் தோள் மீது சாய்ந்தவாறு, அவர்களது தலைவனும் எஜமானனுமான சக்ரவர்த்தி தன் படுக்கை அறையை நோக்கிச் செல்வதைப் பார்த்தவாறு மற்றப் பெண்கள் மௌனமாக அமர்ந்திருந்தனர்.

அரசாங்கப் பணிகள் எவ்வளவு களைப்பை அடையச் செய்கின்றன என்று யோசித்தவாறு ஜஹாங்கீர் மீர் தோஷக்கின் இசை கலந்த குரலை அரைகுறையாக கேட்டுக் கொண்டிருந்தார். சக்ரவர்த்தி அப்பொழுது திவான்—ஆம்—மக்கள் சபையில், அவை கூட்டி இருந்தார். ஜனங்களின் விருப்பங்களைக் கேட்டறிவது, அவசியமானவர்களுக்குத் தகுந்த சன்மானங்கள் கொடுப்பது, மற்றும் வருடத்திற்கான அரசாங்க வரவு செலவுகளைப் பற்றிப் பரிசீலிப்பது எனக் காரியங்கள் நடந்தன. மக்கள் சபையைத் தாண்டியிருந்த பெரிய முற்றத்தில் சூரிய ஒளி தகதகத்துக் கொண்டிருந்தது. அவர் இந்தச் சமயத்தில் அந்தப்புரத் தோட்டத்தில் பெண்களுடன் பேசிக் கொண்டும், புதிதாக அமைக்கப்பட்டிருந்த நீச்சல் குளத்தில் அவர்கள் விளையாடுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டும் இருக்க வேண்டும்...

"மாட்சிமை பொருந்தியவரே!"

திடீரென்று ஏற்பட்ட அமைதி, அவரது எண்ணங்களை கலைக்க, ஜஹாங்கீர் நிமிர்ந்தார். சிறிது எரிச்சலுடன் மீர் தோஷக்கைப் பார்த்தார். "என்ன விஷயம்?"

"சாம்ராஜ்ஜியத்தின் திவான் — பொக்கிஷதார் —மிர்ஜா கியாஸ் பெக் தங்களைச் சந்திக்க விரும்புகிறார், மாண்புமிக்கவரே!" அறிவிப்பாளர் கூறினார்.

ஜஹாங்கீர் தலையசைத்தார். "அவரைக் கூப்பிடுங்கள்."

மெஹ்ருன்னிஸாவின் தந்தை சபைக்கு முன் வந்து 'கோனிஷ்' முறைப்படி வணங்கினார்.

"மாட்சிமை பொருந்தியவரே! காந்தஹாருக்கு வந்திருக்கும் ஆபத்து பற்றிச் செய்தி வந்துள்ளது. பாரசீகத்தைச்சேர்ந்த ஷா அப்பாஸ் அவர்களின் உத்திரவின்படி ஹிரத் (Herat) சிஸ்டன் (Sistan) மற்றும் பாரா (Farah) முதலிய நகரங்களின் கவர்னர்கள் காந்தஹாரை முற்றுகையிட்டுள்ளனர். காந்தஹாரின் கவர்னர் பெக் கான் (Beg Khan) அரசரின் இராணுவத்தின் உதவி கோரி வேண்டுகோள் அனுப்பி உள்ளார்."

ஜஹாங்கீர் கோபத்தில் முகத்தைச் சுளித்தார். "இது எப்படிச் சாத்தியமாகும்? ஷா அப்பாஸ் எனக்கு ஒரு சகோதரர் போன்றவர். ஒரு சகோதரன் தன் சகோதரனுடைய நகரத்தின் மேல் படையெடுப்பானா?"

"மாட்சிமை பொருந்தியவரே, உடனே நாம் ஒரு இராணுவப் படையை அனுப்புவது அத்தியாவசியமாகும். காந்தஹார் நம் சாம்ராஜ்ஜியத்தின் பொருள் பரிவர்த்தனைக்கு முக்கியமான ஒரு நகரமாகும். இந்தியாவிற்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் வர்த்தகம் நடக்க இணைக்கும் ஒரு பாலம் போலவும், நம் நாட்டிற்கு ஒரு முக்கிய எல்லைப் பகுதியாகவும் உள்ளது. அதைப் பாரசீகம் கைபற்றுமேயானால், காபூலுக்கும் நமது மற்ற வடமேற்குப் பகுதியிலுள்ள நகரங்களுக்கும் மிக்க ஆபத்தாக முடியும்."

கியாஸ் பெக் கூறும் காரணங்களின் முக்கியத்துவத்தை ஜஹாங்கீர் உணர்ந்தாலும், ஷா அப்பாஸ் காந்தஹார் மேல் படையெடுக்கத் தூண்டியிருப்பார் என்பதை அவரால் நம்ப முடியவில்லை. ஏன், ஒரு வருடத்திற்கு முன்பு கூடக் கடிதங்கள் பரிமாறிக் கொண்டிருக்கின்றனர். ஜஹாங்கீர் அரியணை ஏறியதை வாழ்த்தி ஷா அப்பாஸ் செய்தியும் அனுப்பி உள்ளார்.

"அப்படியே ஆகட்டும்," முடிவாக அவர் கூறினார். "அரசரின் போர்க்கொடியைத் தாங்கி ஒரு இராணுவப் பகுதியை காந்தஹாருக்கு அனுப்பவும். ஆனால், விஷயம் சமரசம் ஆகும் வரை நம் படைகள் மூர்க்கத்தனமாக நடந்துகொள்ளாதபடி கவனித்துக்கொள்ளவும். காந்தஹாரின் மேல் ஏற்பட்ட முற்றுகை பற்றி ஷா அப்பாஸிற்கு தெரியப்படுத்தவும். அவரது கவர்னர்கள்மீது அவர் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்."

கியாஸ் பெக் வணங்கி விட்டு, பின்நகர்ந்து சென்றார். சக்ரவர்த்தியின் குரல் அவரைத் தடுத்து நிறுத்தியது. "மிர்ஸா பெக், நீ சாம்ராஜ்ஜியத்திற்குச் செய்யும் இந்தச் சேவைக்கு உனக்குச் சன்மானங்கள் வழங்கப்படும்."

"எனக்கு சன்மானம் அவசியமில்லை, மாண்புமிக்கவரே!" கியாஸ் கூறினார். "இருப்பினும், உங்களுக்கு மிக்க வந்தனம்."

ஜஹாங்கீர் முகமத் ஷரீப் பக்கம் திரும்பினார். "அவர்கள் அரசரின் உத்தரவில்லாமல் எப்படி இந்தக்கவர்னர்கள் நம் நகரத்தின் மேல் படையெடுக்கத் துணிந்தனர்?"

"மாட்சிமை பொருந்தியவரே! இப்பொழுது நீங்கள் ஏற்றிருப்பது புதிய ஆட்சி. உங்கள் மதிப்பிற்குரிய தந்தையிடமிருந்து உங்களுக்கு ஆட்சி கைமாறி வந்த தருணத்தில் ஏற்பட்ட சில கலவரங்களினால், இடையில் காந்தஹாரை அவர்கள் கைப்பற்ற முடியும் என்று நினைத்திருக்கிறார்கள். அல்லாவின் அருளால் தற்சமயம் தாங்கள் லாகூரில் இருப்பதால், உடனே, தாங்களே நேராக அவர்கள் மீது நடத்தும் போரைக் கண்காணிக்கலாம்."

ஜஹாங்கீர் அதை ஆமோதித்தார். "உண்மைதான். காந்தஹார் மீதான படையெடுப்பு முடியும் வரை நாம் மறுபடியும் ஆக்ராவிற்குச் செல்லும் பயணம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அந்தப்புரத்திற்குத் தெரிவிக்கவும்."

தர்பார் முடிந்த பின் ஜஹாங்கீர் தன் அரண்மனைக்குத் திரும்பி வந்து, கோதுமைத் தானியங்கள் அடங்கிய பையை எடுத்துக்கொண்டு, தனது பிரத்யேகமான முற்றத்திற்குச் சென்றார். அவர் கையிலிருக்கும் பொன்னிறத் தானியங்களைக் கொத்துவதற்காகத் தங்கள் பொந்துகளிலிருந்து புறாக்கள் ஆவலுடன் பறந்து வந்தன. பின்னர், அவர் தயங்கியவாறு வந்த ஒரு இருமல் சப்தத்தைக் கேட்டுப் பயந்தவாறு, அவை கீச்சிட்டுக் கொண்டு பறந்து போயின. ஹோஷியார் கான் அவர் அருகில் நின்றிருந்தான். அவன் மௌனமாக, மூடி முத்திரையிடப்பட்டிருந்த ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்தான். ஜஹாங்கீர் அதை வாங்கிக்

கொண்டு அவன் விலகிச் செல்லும் வரை காத்திருந்தார். பிறகு, அவர் முத்திரையை உடைத்துவிட்டுக் கடிதத்தைப் பிரித்தார். அது வங்காளத்திலிருந்து வந்திருந்தது. ஜஹாங்கீர் அதை வேகமாகப் படித்துவிட்டுத் தன் பக்கத்தில் வைத்தார். முற்றத்திலுள்ள பளிங்குக் கற்களாலான தரையில் பட்டு தெறிக்கும் சூரிய ஒளியில் கண்களை இடுக்கியவாறு பக்கத்திலுள்ள வேப்பமரத்தில் சாய்ந்து கொண்டார். வங்காளத்தில் உள்ள ஒற்றர்கள் அவர்கள் வேலையை மிக நன்றாகவே செய்து முடித்திருக்கின்றனர்.

"தேகம் ஸாஹிபா, செய்தி கொண்டு வரும் ஒடுனர்கள், லாகூரிலிருந்து ஒரு கடிதம் கொண்டு வந்திருக்கின்றனர்" அடிமைப் பெண் ஒரு வெள்ளித் தட்டில் இருந்த கடிதத்தை மெஹருன்னிஸாவிடம் நீட்டினாள்.

அவள் பேசி முடிக்கும் முன்பே மெஹ்ருன்னிஸா கையை நீட்டினாள். "இங்கே கொண்டு வா."

கடைசியாக, லாகூரிலிருந்து கடிதம் வந்துள்ளது.

அவள் தந்தையிடமிருந்து கடைசியாகக் கடிதம் வந்து மூன்று மாதங்களாகி விட்டன. கியாஸ் தவறாமல் எப்பொழுதும் கடிதம் எழுதுவாரானாலும் காந்தஹாரில் நடப்பவைகளையும் மேற்பார்வை செய்ய வேண்டியிருப்பதால், அவருக்கு ஓய்ச்சலில்லாமல் வேலைகள் இருந்தன. கடிதத்தைப் பிரிக்கும் பொழுது வரும் சப்தத்தை ரசித்தவாறு, அதைப் படிப்பதற்குச் சௌகரியமாக மெஹ்ருன்னிஸா அமர்ந்து கொண்டாள். வழக்கம் போல் அவர் கடிதத்தின் ஆரம்பத்தில் 'நலம்' என்று தொடங்கியிருந்தார். ஒரு பார்வையிலேயே அவர்கள் எல்லோரும் நலமாக இருப்பதை அவள் அறியும் பொருட்டு அவ்வாறு தொடங்கியிருந்தார். அவருக்குப்பதிலளிக்கையில் பலமுறை, அவளுக்கிருந்த அவலில் கடிதத்தின் ஆரம்பத்தில் அந்த வார்த்தையை எழுத அவள் மறந்து விடுவாள். அவர் தன் பதிலில் எப்பொழுதும் அதைப் பற்றி அவளைக் கண்டித்து விட்டுதான் தொடங்குவார். அதுபோலவே இந்தக் கடிதமும் தொடங்கியது.

"அன்புள்ள நிஸா," அவர் எழுதியிருந்தார். "உன் கடிதம் என் எதிரில் உள்ளது. நீங்கள் அங்கு வங்காளத்தில் நலமாக இருக்கும் செய்தியை முதலில் குறிப்பிட மறுபடியும் மறந்து விட்டாய். உன் முழுக் கடிதத்தையும் படித்தபின்தான் நீங்கள் நலமென நான் அறிந்தேன். என் தந்தை கூறும் சில விஷயங்களை நான் கேட்பதில்லை என்று அவர் அடிக்கடி கூறுவார். நீயும் என்னைப் போலவே, நான் கூறும் விஷயத்தைப் பிடிவாதமாகக் கடைபிடிக்காமல் இருக்கிறாய் என்று எண்ணுகிறேன். எப்படியாகிலும் சரி. உன் கடிதங்களைப் பார்க்கையில் நீ என்னருகிலேயே இருப்பது போல் உணர்கிறேன். இன்னும் ஒரு மாதத்தில், நீயும் இந்த என் கடிதத்தைக் கைகளில் பிடித்துப் படித்துக் கொண்டிருப்பாய் என்றும் நினைக்கிறேன்."

"லாட்லி எப்படியிருக்கிறாள்? வளர்ந்திருக்கிறாளா? பேச ஆரம்பித்துவிட்டாளா? நீ அருகில் இல்லாத போதும் நீ அனுப்பிய அவள் சித்திரத்தைப் பார்த்து சிறிது ஆறுதல் அடைகிறேன். அவள் யார் சாயலில் இருக்கிறாள் என்று சொல்லமுடியவில்லை. உன்னை மாதிரியா? அம்மா மாதிரி? அல்லது என்னைப் போல்? எங்களைப் பற்றி அவளிடம் பேசிக் கொண்டிரு. அவள் அருகில் நாங்கள் இல்லாமல் போனாலும், உன் வார்த்தைகள் மூலம் அவள் எங்களை அறியட்டும்."

ஒரு சிறிய கரம் மெஹ்ருன்னிஸாவின் பாவாடையை பிடித்திழுக்க, அவள் குனிந்து பார்த்து முறுவலித்தாள். கால்களைக் கட்டிப் பிடித்தவாறு லாட்லி தரையில் அமர்ந்திருந்தாள். அவள் குறுகுறுப்பான கண்களுடன் தன் தாயாரைப் பார்த்துக் கடிதத்தை 'கொடு' என்பது போல் கையை நீட்டினாள்.

"இது வேண்டாம், கண்ணே" கடிதத்தை உயர்த்திப் பிடித்தவாறு மெஹ்ருன்னிஸா கூறினாள். "நீ கிழித்துவிடுவாய். கிராமத்திற்குப் போவதற்கு முன் நிஜாம் செய்து கொடுத்த வண்டியை வைத்து விளையாடு."

லாட்லி தலை ஆட்டி மறுத்தாள். "எனக்குக்கொடு." மெஹ்ருன்னிஸா மறுபடியும் கடிதத்தைத் தூக்கிப் பிடிக்கையில் அவள் முகம் சுருங்கி அழத் தொடங்கினாள்.

"இங்கே வா," கடிதத்தை அவள் கைக்கு எட்டாதவாறு வைத்துவிட்டு, மெஹ்ருன்னிஸா கையை நீட்டினாள். அவளை மடியில் எடுத்து வைத்துக் கொண்டு மறுபடியும் மெத்தையில் அமர்ந்தாள். லாட்லி கோபம் குறைந்து, தாயாரின் மடியில் அமர்ந்தவாறு தன் விரலை வாயிலிட்டுச் சப்பத் தொடங்கினாள். மெஹ்ருன்னிஸா குழந்தையின் முன்னுச்சியைக் கோதிவிட்டாள். தாய் தந்தையரை விட்டுப் பிரிந்திருக்கும் இந்த வருடங்களில் இந்தக் குழந்தைதான் அவளுக்கு மிகவும் ஆறுதலளித்தது.

"இது உன் தாத்தாவிடமிருந்து வந்திருக்கிறது, லாட்லி. அவர் மிகப் பெரிய மனிதர். மிக முக்கியமான மனிதர். இந்த சாம்ராஜ்ஜியத்தின் பொக்கிஷதார்."

கியாஸ் கூறுவதற்கு முன்பே, லாட்லியிடம் அவளது தாத்தா, பாட்டி பற்றி மெஹ்ருன்னிஸா கூறி வந்தாள். மேலும் முகலாய அரச சபை பற்றியும், அந்தப்புரத்துப் பெண்களின் பெருமை பற்றியும், மதுவைப் போல் பெருக்கெடுத்தோடும் செல்வம் பற்றியும், தண்ணீரைப் போல் பெருக்கெடுத்தோடும் மது வகைகள் பற்றியும் கூட. எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் பெண் தெரிந்து கொள்ள வேண்டுமென்றெண்ணி, அவள் சக்ரவர்த்தி ஜஹாங்கீர் பற்றியும் கூடச் சொல்லியிருக்கிறாள். ஒருநாள் நிச்சயம் லாட்லியைப் பேரவைக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள அந்தப்புரத்துப் பெண்களையும் பெரிய இராணி ருக்கையா பேகமையும் அவசியம் காட்ட வேண்டும் என்று அவள் நினைத்தாள்.

அவள் தன் மகளைப் பார்த்துப் பேச ஆரம்பித்தாள். அவள் அடிக்கடி சொன்ன கதைதான் என்றாலும், குழந்தையின் கண்கள் ஆச்சர்யத்துடன் விரிந்தன. அவள் இன்னும் பேச ஆரம்பிக்கவில்லையானாலும் தான் சொல்வதை உன்னிப்பாகக் கேட்கிறாள்; அதைப் புரிந்தும் கொள்கிறாள் என்று மெஹ்ருன்னிஸாவிற்குத் தோன்றியது. இருபது நிமிடங்

களுக்குப் பிறகு லாட்லி தன் தாயின் மடியிலேயே தூங்கிப் போனாள். மெஹ்ருன்னிஸா அவளை மெதுவாகப் படுக்கையில் படுக்க வைத்து, ஒரு குளிர்ச்சியான பருத்திப் போர்வையால் போர்த்திவிட்டாள். அவள் திரும்பவும் தன் இருக்கைக்குச் சென்று ஆவலுடன் கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

"மிர்ஜா மசூத் மறுபடியும் லாகூருக்கு வந்து சில மாதங்கள் எங்களுடன் தங்கியிருந்தார். கடந்த சில வருடங்களாக அவர் வயது முதிர்ந்தவராகக் காணப்படுகிறார். அவரது கூட்டத்தின் பயணங்களை அவர் மூத்த மகன் தலைமை தாங்கி அழைத்துச் செல்கிறான். வழக்கம் போல் அவருடைய அன்புக்குரிய வளர்ப்பு மகளான உன்னைப் பற்றி விசாரித்தார். என்னை வற்புறுத்தி, உன் கடிதங்களை எல்லாம் படிக்கச் சொல்லி கேட்டார். இனிமேல் நாம் பாரசீகம் போனால்தான் அவரைப் பார்க்க முடியும் என்று தோன்றுகிறது. இந்த வயதிற்கு மேல் பிரயாணம் செய்வது மிகக் கடினமானதாக இருக்கிறதென்று அவன் நினைக்கிறார். மிர்ஜா மசூதிற்கு நான் பட்டிருக்கும் கடனை ஒருபொழுதும் நான் மறக்கமாட்டேன். அன்புள்ள நிஸா, அவர் உன்னை எனக்குத் திருப்பிக் கொடுத்தார். அதற்காக அவரிடம் என் உயிருள்ளவரை நன்றியுடன் இருப்பேன்.

முகமது ஒரு வழியாக ஒரு நிலையான வாழ்க்கைக்கு வந்துவிட்டான். திருமணமும் குழந்தையும் உன் பெரிய சகோதரனைச் சிறிது அடக்கி வைக்கும் என்று நான் எதிர் பார்த்தேன். ஆனால், அப்படியில்லை. அவனிடம் ஏதோ ஒரு முரட்டுத்தனம் இருக்கிறது. அதை என்னால் அடக்க முடியவில்லை. உனக்குத் தெரியுமா? இளவரசன் குஸ்ரு சிறையிலிருந்து தப்பி லாகூருக்கு ஓடுகையில் முகமதுவும் அவனுடன் போக விருப்பப்பட்டான். இப்பொழுதும் நான் கண்டிக்காவிட்டால், இளவரசனுக்கு ஆதரவாகவே பேசிக் கொண்டிருக்கிறான். சக்ரவர்த்தி ஜஹாங்கீர் நம் குடும்பத்திற்கு இவ்வளவு தூரம் நன்மைகள் செய்திருக்கையில், இவன் இவ்வாறு நடந்து கொள்கிறான். மாண்புமிக்க பேரரசின்

ஆதரவில்லையானில் நாம் இப்படிப்பட்ட நல்ல நிலைமையை அடைந்திருக்க முடியாது. சக்ரவர்த்தியின் மன்னிக்கும் நல்ல குணத்தினால் தான் உன் கணவன்கூட இத்தனை சுதந்திரத்தையும் செல்வங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறான். லாகூர் நிகழ்ச்சியில் அவன் பங்கேற்க முடியாதபடி நீங்கள் அவ்வளவு தொலைவில் வங்காளத்தில் இருப்பதற்கு அல்லாவிற்கு நன்றி செலுத்த வேண்டும்."

ஒரு வரண்ட புன்னகை மெஹ்ருன்னிஸாவின் முகத்தில் தோன்றியது. அப்பாவிற்கு மாத்திரம் தெரிந்திருந்தால் — ஆனால், அவள் ஒருவரிடமும் சொல்லவில்லை, முக்கியமாக அவள் தந்தையிடம்! அவள் தந்தையின் கண்ணோட்டத்தில் அவள் கணவன் மேலும் தாழ்ந்து போவதை அவள் விரும்பவில்லை. பிறகு, அவள் சிறிது முகத்தைச் சுளுக்கியவாறு முகமதுவைப் பற்றி எழுதியிருந்த பகுதியை மறுபடியும் படித்தாள். இது என்ன முட்டாள் தனமான நடத்தை? அவளுக்கும் முகமதுவிற்கும் இடையே நெருங்கிய உறவு இல்லைதான். அபுல்தான் அவளுடைய அன்புக்குரிய சகோதரன். முகமது எப்பொழுதுமே அமைதியில்லாதவன். தன்னிடம் இல்லாதவற்றிற்காக ஏங்குபவன். இப்பொழுது அவன் இளவரசன் குஸ்ருவை ஆதரிக்க விரும்புகிறான். அவன் எதுவும் முட்டாள்தனமாகச் செய்துவிடாமல் தந்தையார் தடுக்க முடிந்தது அல்லாவின் கருணைதான்.

"ஆனால், அந்த விஷயம் போதும். இதோ ஒரு நல்ல செய்தி. சக்ரவர்த்தி தன் குடும்பத்தையும் நம் குடும்பத்தையும் இணைக்கும்படியான ஒரு பெரிய கௌரவத்தை நமக்குக் கொடுக்க இருக்கிறார். அர்ஜுமன்ட் பானுவை (Arjumand Banu) இளவரசர் குர்ரமிற்குத் திருமணம் செய்து வைக்க மாட்சிமை பொருந்திய பேரரசர் கேட்டிருக்கிறார்கள். இந்தத் திருமணம் நம் குடும்பத்திற்கு மிகப் பெரிய கௌரவத்தைக் கொடுக்கும். பேரரசரின் குடும்பத்துடன் உறவு வைத்துக் கொள்வது என்பது எவ்வளவு பெரிய அதிஷ்டம்! இந்தியாவிற்கு வந்தபின் இவ்வளவு பெரிய பாக்கியம் கிட்டுமென யார் தான் எண்ணிப் பார்த்திருப்பார்கள்?

நிச்சயதார்த்த விழா இன்னும் சில மாதங்களில் நிகழ விருக்கிறது. நீயும் வந்து இந்த விழாவில் கலந்து கொண்டால் எனக்கும் உன் தாயாருக்கும் மிக்க மகிழ்ச்சியாக இருக்கும். வா, அன்புள்ள நிஸா, லாட்லியையும் அழைத்துவா. உன்னைப் பார்த்துப் பல நாட்களாகிவிட்டன. நீ இங்கு வருவதற்கு இது ஒரு முக்கியக் காரணமாகும். உன் கணவன் உன்னைத் தடுக்கமாட்டான். இந்த விஷயம் குறித்து அவனுக்கும் ஒரு கடிதம் இத்துடன் அனுப்பியுள்ளேன். இந்தச் சமயத்தில் உன் கணவனும் இங்கு அவைக்கு வந்து சக்ரவர்த்திக்கு மரியாதை செலுத்த முடியாமலிருப்பது மிக்க துரதிஷ்டமே! அல்லாவின் கருணையால் கூடிய சீக்கிரம் இந்த முரண்பாடு நீங்கி விடும். அதுவரை, எப்படியும் இந்த விழாவில் கலந்து கொள்ள நீ மட்டுமாவது கட்டாயம் வர வேண்டும்."

அளவற்ற மகிழ்ச்சியால் முகம் மலர, மெஹ்ருன்னிஸா கடிதத்தைக் கீழே வைத்தாள். சிறிது நேரம் முன்புதான் முகலாயப் பேரரசின் பேரவையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். இப்பொழுது அலிகுலி உத்தரவு கொடுத்தால் அவள் அந்தப் பேரவையைச் சார்ந்த வாழ்க்கையைப் பார்க்கக் கூடிய வாய்ப்பு வந்துள்ளது. அவள் தலைகுனிந்து மௌனமாகப் பிரார்த்தித்தாள். 'தயவுசெய்து, தயவு செய்து அவரை சரி என்று சொல்ல வையுங்கள்.' கடிதத்தை மறுபடியும் பார்த்தாள். அர்ஜுமன்ட் பானுவிற்கு இளவரசர் குர்ரம் உடன் நிச்சியதார்த்தம். பெரிய இராணி ருக்கையா வளர்த்து வந்த அந்தச் சிறிய பையன், சக்ரவர்த்தியின் மூன்றாவது மகன், அவனுடன் அவள் சகோதரன் மகள் அர்ஜுமன்ட் பானுவிற்கு நிச்சியதார்த்தம். அர்ஜுமன்ட் அவள் சகோதரன் அபுலுடைய மிகவும் பிரியமான குழந்தை. விலை மதிப்பில்லாத பவழம் போன்றவள். அபுல் ஒருமுறை மெஹ்ருன்னிஸாவிடம் கூறியுள்ளான். "நீ குழந்தை பெற்றுக் கொள்ளும்போது, நிஸா, ஒரு பெண் குழந்தையே பெற்றுக்கொள். அவள் உனக்கு அளவிட முடியாத ஆனந்தத்தைக் கொடுப்பாள், என் அர்ஜுமன்ட் போலவே." முழங்கால்களை மார்பு வரை மடக்கிப் படுத்துக் கொண்டிருக்கும் லாட்லியை மெஹ்ருன்

நிஸா திரும்பிப் பார்த்தாள். அபுல் கூறியது சரிதான். இந்தத் திருமணத்தைப் பற்றி அவன் என்ன நினைக்கிறான்? ஆனந்தத்தின் உச்சத்தில் இருப்பான். அவள் தந்தையால், அவர்கள் குடும்பத்திற்கே முதன் முறையாகக் கிடைத்த மிக மிகப் பெரிய கௌரவம். சின்ன அர்ஜுமன்ட் — பதினைந்து வயது கூட இன்னும் ஆகவில்லை, — அவள் இப்பொழுது ஒரு இளவரசி.

ஒரு சமயத்தில் தானே ஒரு இளவரசி ஆக வேண்டும் என்று மெஹ்ருன்னிஸா நினைத்ததுண்டு. இப்பொழுது அந்தப்பெருமை அர்ஜுமன்ட்டிற்குக் கிடைக்கப் போகிறது.

அலிகுலி வேண்டாவெறுப்பாகத் தன் மனைவிக்கும் குழந்தைக்கும் லாகூர் செல்ல அனுமதி கொடுத்தான். கியாஸ் பெக்கிடமிருந்து வரும் ஒரு வேண்டுகோள், ஒரு உத்திரவு போல்தான். அவர் வார்த்தையை மீற முடியாத அளவிற்கு, அவன் மாமனர் அரச சபையில் ஒரு சக்தி வாய்ந்த உறுப்பினர்.

மிகுந்த சந்தோஷத்துடன் அவர்கள் இருவரும் லாகூருக்குக் கிளம்பிச் செல்வதை அலிகுலி விசனத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான். அவர்கள் இல்லாததை அவன் பொருட்படுத்தமாட்டான். அதேசமயம் அவர்கள் போவதையும் அவன் விரும்பவில்லை. அவன் சந்தோஷமாக இல்லாத நேரத்தில் அவர்கள் மாத்திரம் ஏன் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்? அந்தப் போர் வீரனுக்கு இப்பொழுது வாழ்க்கை திருப்திகரமானதாக இல்லை. நிலங்களைப் பராமரிக்கும் வேலைக்கு அவன் தகுந்தவன் அல்ல. அவனுடன் ஸ்நேக பாவத்துடன் இருக்கும் ஒரே ஒருவர் — ராஜா மான்சிங் — பீஹாருக்கு அனுப்பப்பட்டு விட்டார். புதிதாக வந்திருக்கும் கவர்னர் —குத்புதீன் கான் கோக்கா— சக்ரவர்த்தியின் தீவிர ஆதரவாளர். இவனுடன் சினேகத்துடன் நடந்துகொள்ள விரும்புவதில்லை. அவன் மனைவியும் குழந்தையும் லாகூருக்குத் தங்கள் நீண்ட பயணத்தைத் தொடங்கும் அந்த வேளையில், வேறு சிலர்தன் வார்த்தைக்குச் செவி சாய்ப்பார்கள் என்று எண்ணியவாறு இருந்தான். அப்படிப்பட்ட வேறுசிலர் நிச்சயம் இருப்பார்கள்.

"அவர்கள் வந்து சேர்ந்து விட்டார்கள்!"

அந்தச் சத்தத்தைக் கேட்டு, கியாஸ் பெக் வேகமாக கல் படிகளில் இறங்கி வெளி முற்றத்தை அடைந்தார். பல்லக்கு தூக்கிகள் அதை இறக்கி வைக்கும் வரை பொறுமையில்லாமல் காத்திருந்தார். மேலும் தாமதிக்க விரும்பாமல் அருகில் சென்று பல்லக்கில் இருந்தவர்கள் இறங்கி வெளியே வர உதவி செய்யச் சென்றார்.

அவர் மகளின் குளிர்ந்த கரங்கள் பல்லக்கின் படுதாக்களிடையே அவரை நோக்கி நீண்டது. அவள் எழுந்து நின்றவுடனேயே அவளை அணைத்துக் கொண்டார். பின் அவள் கைகளைப் பிடித்தவாறு சிறிது பின்னால் நகர்ந்து அவளைப் பார்த்தார்.

அவள் தன் முகத்திரையைத் தூக்கிவிட்டு அவரைப் பார்த்துப் புன்னகைத்தபடி நின்றாள். தாய்மை அவள் முகத்திற்கு முழுமையைக் கொடுத்திருந்தாலும், அவள் உடல் மிருதுவாகவும், கண்கள் அழகிய ஆகாய நீல நிறமாகவும், வளைத்துப் பின்னால் கட்டப்பட்டிருந்த அவள் கூந்தல், நடு இரவு வானம்போல் கருப்பாகவும்இருந்தது. அவள் மெலிந்த தேகத்துடன் சிறு பெண் போல் தளதளப்புடனும் இருந்தாள். அவர் குனிந்து அவள் முன்னுச்சியில் முத்தமிட்டார். அவருடைய இந்தக் குழந்தையைப் பார்த்துப் பல நாட்கள் ஆகிவிட்டன. "உன் திருமண தினத்தன்று இருந்தது போலவே இப்பொழுது இருக்கிறாய், மெஹ்ருன்னிஸா."

கன்னங்களில் இளம்சிவப்பு நிறம் படர, கண்கள் ஆவலில் ஒளிர, அவள் வெட்கத்துடன் புன்னகைத்தாள். "நன்றி, தந்தையே! நான் இங்கு வந்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்." அவள் அவரை மறுபடியும் அணைத்துக் கொண்டு, குரலில் சிறிது கவலையுடன் வினவினாள். "ஆனால், நீங்கள் வயது முதிர்ந்து காணப்படுகிறீர்கள். உங்களை நன்கு கவனித்துக் கொள்கிறீர்கள் அல்லவா?"

"வயதானவன்போல்? நான்?" விளையாட்டான கோபத்துடன் கியாஸ் கேட்டார். பின் நன்றாக நரைக்கத் தொடங்கியிருக்கும் தன் தலைமுடியைக் கையால் தடவியவாறு மேலும் கூறினார். "இதைப் பார்த்துவிட்டுக் கேட்கிறாயா? இவை எல்லாம் என் விவேகத்திற்கான அறிகுறிகள், வயதான தற்காக அல்ல. சாம்ராஜ்ஜியத்தின் திவானாக இருப்பவர் அதற்கான கம்பீரமான தோற்றத்துடன் இருக்க வேண்டும்."

அவர் சுற்றிலும் பார்த்தார். "என் பேத்தி எங்கே?"

"இங்கே இருக்கிறேன்." ஒரு சிறிய குரல் கேட்டது. தன் சிறிய கொழுத்த கால்களால் முடிந்தவரை வேகமாக அவரை நோக்கி ஓடி, லாட்லி அவர் கைகளில் பாய்ந்தாள். அவள் அணைப்பில் ஏற்பட்ட சுகத்தினால் முகம் பளபளக்க அவர் அவளை இறுகப் பற்றிக்கொண்டார். அவருடைய இந்த பேத்தியை அவர் பார்த்ததேயில்லை. இருந்தாலும், அவள் இயற்கையாகவே அவரிடம் ஓடி வந்தாள்.

"நான் யாரென்று உனக்குத் தெரியுமா?" சிறிது பின் நகர்ந்து அவளைப் பார்த்தபடியே வினவினார். அவள் ஒரு சிறிய குழந்தை —அவள் தாயாரைப் போலவே அச்சாக சிறிய அளவில் —அவளது அடர்ந்த கூந்தல் இறுக்கமாக இரண்டு பின்னல்களாகப் பின்னப்பட்டு, 'அவருடைய' புருவங்கள் அகலமான நெற்றியில் படர்ந்திருக்க, உறுதியான சிறிய முகவாய் அவரே நோக்கி முன்னே நீண்டு தெரிய, அவள் நின்றிருந்தாள்.

"தெரியும். நீங்கள் தாத்தா. நீங்கள் ஒரு பெரிய மனிதர் என்று அம்மா கூறியிருக்கிறாள்." வார்த்தைகள் வேகமாக சிதற, லாட்லி தன்னம்பிக்கையுடன் கூறினாள்.

கியாஸ் பெக் சந்தோஷத்துடன் பெரிதாகச் சிரித்தவாறு கண்கள் மலரத் தன் மகள் பக்கம் திரும்பினார். "இப்பொழுதே இவ்வளவு பேசுகிறாள், முழு வாக்கியங்களாக, உன்னைப் போலவே! எப்பொழுதும் வார்த்தைகளைச் சொல்வதில் ஒரு அவசரம். அப்புறம்" — தன் தோள்களைக் கையால் அணைத்திருந்த லாட்லி பக்கம் திரும்பி, "வேறு என்ன உன் தாயார் சொல்லியிருக்கிறாள்?"

"சக்ரவர்த்தி ஜஹாங்கீர் மிகவும் வசீகரமானவர்."

"லாட்லி!" வேகமாக மெஹ்ருன்னிஸா கூறினாள். "பேசியது போதும். இப்பொழுது உள்ளே போ."

"அவள் இருக்கட்டும்." கியாஸ் தன் மகள் பக்கம் திரும்பினார். மெஹ்ருன்னிஸா தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். யோசித்தவாறு அவர் அவளைப் பார்த்தார். வேறு விதமாக எல்லாம் நடந்திருக்குமானால், இப்பொழுது அவள் ஒரு சக்ரவர்த்தினியாக இருந்திருப்பாள்... அவர் கவனத்தை ஈர்ப்பதற்காக அவர் தாடியைப் பிடித்து இழுத்து லாட்லி அவர் எண்ணங்களைக் கலைத்தாள். அவள் பக்கம் அவர் திரும்பினர்.

"பாட்டி எங்கே?" ஆவல் மிகுந்த குரலில் லாட்லி கேட்டாள்.

"உள்ளே, உனக்காக காத்திருக்கிறாள்." கியாஸ் லாட்லியைத் தூக்கிக் கொண்டவாறு, மெஹ்ருன்னிஸாவின் தோள்களைக் கையால் அணைத்துக் கொள்ள, அவர்கள் உள்ளே சென்றனர்.

அடுத்த சில தினங்கள், நிச்சியதார்த்த விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் கியாஸ் பெக்கின் வீடு அமர்க்களப்பட்டது. சக்ரவர்த்தியே விருந்தாளியாக வருகை தருவார். கையில் துடப்பங்கள், துணிகளுடன் கூட்டமாகப் பல பணியாட்கள் வீட்டிற்குள் வந்தனர். ஒவ்வொரு மூலை முடுக்கும் சுத்தம் செய்யப்பட்டது. சுவர்கள் புதிதாக வெள்ளை அடிக்கப்பட்டன. விரிப்புகள் எடுத்து நன்கு சுத்தம் செய்யப்பட்டுத் தரைகள் நன்கு தேய்த்து விடப் பட்டன. ஜன்னல்கள், கதவுகள் சுத்தம் செய்யப்பட்டன. பித்தளை, வெள்ளி சாமான்கள் பளபள வென்று தேய்த்து வைக்கப்பட்டன. மாப்பிள்ளைக்கும், சக்ரவர்த்திக்கும் பரிசுப் பொருட்கள் தயார் செய்யப்பட்டன. வீடு முழுவதும் சுகந்தம் வீசும் வாசனைப் பொருள்கள் வைக்கப்பட்டன. சமையல் அறையில் பல சமையல்காரங்கள் இரவு, பகல் பாராது விருந்து தயாரிப்பதில் ஈடுபட்டனர். இரும்பு அடுப்புகளில், தித்திப்புப் பண்டங்களும், உப்புப் பண்டங்களும் நாக்கில்

நூலம் சுரக்கும் வகையில் தயாரிக்கப்பட்டன. புதிதாக மலர்ந்தபூக்கள் அறைகளுக்கு மேலும் அழகூட்டின.

கடைசியாக அந்த சுபதினம் வந்தது.

முன் முற்றத்தில் நுழைவாயில் அருகில், முக்கிய உபசரிப்பாளராக கியாஸ் பெக் முதலில் நிற்க, அவர் பின்னே வீட்டின் மற்ற ஆண்மக்கள் எல்லாம் வரிசையாக நின்றிருந்தனர். மாடியிலுள்ள சாளரங்களில், முகத்தைத் திரையால் மூடியவாறு பெண்கள் குழுமி இருந்தனர். காலையிலிருந்தே அரசரின் அரண்மனையிலிருந்து மந்திரிகள், பிரபுக்கள், பாதுகாவலர்கள், பணியாட்கள் எனப் பலர் வந்து, எல்லா ஏற்பாடுகளும் சரிவர இருக்கின்றனவா, பாதுகாப்பு பலமாக இருக்கிறதா எனச் சரிபார்த்துப் பலவித உத்தரவுகள் பிறப்பித்தவண்ணம் இருக்கக் களைப்பு மிகுதியால் மெஹ்ருன்னிஸாவின் தாயார் மயக்கமடையும் நிலைமைக்கு தள்ளப்பட்டாள். இவ்வளவிற்கும் அந்த விழா இன்னும் ஆரம்பிக்கவே இல்லை.

இப்பொழுது, கடைசியில், அரண்மனைப் பணியாட்கள் வீட்டிற்குள் ஓடி வந்தனர். "சக்ரவர்த்தி வந்து கொண்டிருக் கிறார். தயாராக இருங்கள்."

அவள் தந்தை தன் மேல் அங்கியைச் சரி செய்து கொண்டு, இடைவாள் சரியாக இடுப்புப் பட்டியில் பொருத்தப்பட்டிருக்கிறதா என்று சரி பார்ப்பதை மெஹ் ருன்னிஸா கவனித்தாள். அவர் முகம் எவ்வித உணர்ச்சியும் காட்டாமல், மரியாதை தெரியும் பாவத்துடன் இருந்தாலும் உள்ளூர அவர் சிறிது நடுக்கத்துடன் இருப்பதை மெஹ்ருன்னிஸா அறிவாள். அவருக்கு இது மிகவும் முக்கியமான நாள். இந்த சாம்ராஜ்ஜியத்திற்கு உண்மையாக அவர் உழைத்ததின் பலனாகத்தான் இன்று அர்ஜுமண்ட் டிற்கு இளவரசர் குர்ரமுடன் நிச்சியம் நடக்கவிருக்கிறது. கியாஸிற்கு அடுத்து, மனதில் பெருமிதத்துடன் அபுல் நின்றிருந்தான். அபுலும், சிறிது வயது கூடியவனாகத் தெரிகிறான் என்று மெஹ்ருன்னிஸா நினைத்தாள். கடந்த சில வருடங்களாக அவளது அன்பான சகோதரனை அவள்

பார்க்கவில்லை. அவன் தலைமுடி ஆங்காங்கே நரைக்கத் தொடங்கியிருந்தது. ஆனால், பல விஷயங்களிலும் அவன் அவளது பழைய அபுல்தான். அவளை அவ்வப்போது சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது, உரக்கக் குரல் எடுத்துக் கத்தும் வரை லாட்லியைக் கிசுகிசு மூட்டுவது, அவளை தோளில் சுமந்துகொண்டு தோட்டத்தில் சுற்றி வருவது எல்லாமே பழைய அபுல் மாதிரியேதான். கடந்த சில நாட்களாக அபுலுக்கும் மெஹ்ருன்னிஸாவிற்கும் தனியே பேச நேரம் கிடைக்கவில்லை. ஆனால், குரலில் ஆச்சரியம் தெரிய அவன் சொன்ன ஒரு வார்த்தையால் அவன் இந்த நிச்சியதார்த்தம் பற்றி எப்படி மனக் கிளர்ச்சியுடன் இருக்கிறான் என்பதை அவளால் அறிய முடிந்தது. "அர்ஜுமண்ட் ஒரு இளவரசியாக ஆகப் போகிறாள், நிஸா, நினைத்துப்பார் என் பிரியமான குழந்தை அர்ஜு, ஒரு இளவரசி." பிறகு அங்கிருந்து நகர்ந்து செல்கையில் தலையை ஆட்டியபடி கூறிக் கொண்டு சென்றான். "அவள் இளவரசர் குர்ரமை மணந்து கொண்டபின் அவளை நான் எவ்வாறு அழைப்பேன்?"

ஆனால் மிக மகிழ்ச்சியாக இருக்கிறான். மெஹ்ருன்னிஸாவிற்குத் தெரியும். எல்லோருமே மிக மகிழ்ச்சியாக இருக்கின்றனர், சந்தோஷம் மிகுந்த ஒரு மயக்கம், அவர்கள் குடும்பத்திற்குக் கிடைத்த இந்த கௌரவத்தினால் ஏற்பட்ட அளவற்ற மகிழ்ச்சி.

சில நிமிடங்களுக்குப் பிறகு வெளிமுற்றத்தில் சக்ரவர்த்தியின் இசைக் கலைஞர்கள் ஒலிக்கும் இசையின் ஒலி கேட்டது.

இரண்டு ஜ்வலிக்கும் உருவங்கள் அந்த முற்றத்தில் முன்னால் வருகையில், ஆச்சரிய மிகுதியில் மூச்சை இழுப்பது போன்ற ஒரு ஒலி அங்கிருந்தோரிடமிருந்து எழுந்தது. சக்ரவர்த்தியைப் பேரரசருக்குரிய கம்பீரமான உடைகளுடன் பார்த்திருந்த கியாஸ் பெக் கூட ஒரு நிமிடம் மூச்சு விட மறந்தார்.

பிரபுக்கள், அரச சபை மேன்மக்கள் எனப் பலர் புடை சூழ ஜஹாங்கீரும், குர்ரமும் எல்லோருக்கும் முன்னால் குதிரைகள் மீது வந்து கொண்டிருந்தனர். வைரம், பவளம், பச்சை நிறக் கற்களின் ஒளி அவர்கள் உடைகளிலிருந்தும், அணிந்திருக்கும் நகைகளிலிருந்தும் சூரிய ஒளிபட்டு நாலா புறமும் தெறித்தது. எல்லோரும் நன்கு குனிந்து 'தஸ்லீம்' முறைப்படி வணக்கம் செலுத்தினர்.

கியாஸ் நிமிர்ந்ததும், சக்ரவர்த்தி குதிரையிலிருந்து இறங்குவதற்கு உதவுவதற்காக விரைந்தார்.

இதயம் படபடக்க, ஜஹாங்கீரை முதன் முறையாகப் பார்ப்பதற்காக, மெஹ்ருன்னிஸா சாளரத்திலிருந்து எம்பிப் பார்த்தாள்.

லாட்லி அவள் பாவாடையை இழுத்தாள். "அம்மா, நான் சக்ரவர்த்தியைப் பார்க்க வேண்டும்."

மெஹ்ருன்னிஸா அவளைத் தூக்கிக் கொண்டாள்.

வழக்கமாகச் செய்யப்படும் உபசரிப்புகள் முடியும்வரை அவர்கள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சக்ரவர்த்தியும் இளவரசன் குர்ரமும் குதிரைகளிலிருந்து இறங்கினர். கியாஸ் தனது வரவேற்பு உரையை ஆரம்பித்தார்.

இதற்கு முன் தினம் இரவு மெஹ்ருன்னிஸா விழித்துக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தாள். ஜஹாங்கீர் மாறி யிருப்பாரா? இந்தப் புதிய சக்ரவர்த்தி பதவி அவருக்கு மேலும் கம்பீரத்தைக் கொடுத்திருக்குமா? நிச்சயம் கம்பீரத்தை கொடுத்திருக்கிறது என்று அவள் இப்பொழுது நினைத்தாள். அவர் அமைதியுடன் கூடியவராக, மேலும் தெளிவுடனும், தன்னம்பிக்கையுடனும் இருப்பது போல் தோன்றினார். அவர் தலையில் கிரீடம் மிகவும் பொருத்தமாக இருந்தது.

ஆவல் மிகுதியால், சாளரத்தின் மரச் சட்டங்களின் மேல் அவள் அதிகமாகக் குனியத் தொடங்க, அவள் கீழே

தள்ளப்படும் நிலைக்கு போவது போலாயிற்று. சட்டென்று அவள் சமாளித்துக் கொண்டு, லாட்லியை இறுகப் பிடித்த வாறு ஜஹாங்கீரின் தோற்றத்தை முழுவதிலும் ரசித்தவாறு அவரைத் தாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆங்காங்கே அவரது தலைப்பாகையின் அடியில் தோன்றிய நரை முடிகள், சூரிய ஒளியில் மின்னும் அவர் உடை, அவள் தகப்பனார் கூறிய எதையோ ரசித்தவாறு சந்தோஷத்துடன் சிரித்த மெல்லிய சிரிப்பு, இவற்றை எல்லாம் ரசித்தாள். அவர் தலையைத் தூக்கி மேலே சாளரத்தை நோக்கினால், அவரது முகத்தை இன்னும் நன்றாகவே பார்க்கலாமே என்றெண்ணியவாறு, மூச்சுவிட மறந்தவளாய் ஆவலுடன் நின்றாள்.

"அம்மா" அவள் முகத்தில் கையை வைத்துத் தன் பக்கம் திருப்பியவாறு லாட்லி அழைத்தாள். "அதுதான் இளவரசர் குர்ரமா? எவ்வளவு அழகாக இருக்கிறார்?"

இவை அவளுக்கு பழக்கமான வார்த்தைகள். பல வருடங்களுக்கு முன்பு, ஜஹாங்கீர் இளவரசன் ஸலீமாக இருந்த பொழுது, ஒருமுறை அவளும் அவ்வாறே அவர் மிகவும் அழகானவர் என்று நினைத்தாள். மகிழ்ச்சி கலந்த ஆச்சரியத்துடன் அவள் பார்வை குர்ரம் பக்கம் திரும்பியது. அவன் எவ்வளவு அழகிய இளைஞனாக வளர்ந்துவிட்டான்; அர்ஜுமன்ட் அதிஷ்டசாலிதான். அவன் ஒரு புறம் சற்றுத் தள்ளி நின்று சுற்றும் முற்றும் பார்த்தவாறு இருந்தான். சுருட்டை முடியுடன் கூடிய குழந்தையைத் தான் பேணிப் பாதுகாத்து வந்ததை நினைத்து அவள் தன்னுள் புன்னகைத்துக் கொண்டாள். அன்றைய நிகழ்ச்சிகளில் தான் முக்கியமானவனாக இருப்பதில் சிறிது கூச்சத்துடனும் தடுமாற்றத்துடனும் குர்ரம் காணப்பட்டான். இயற்கைதான். அவனுக்குப் பதினைந்து வயதிற்கு மேல் இருக்காது. கால்களை மாற்றி மாற்றி வைத்தவாறு, முகத்தைத் துடைத்து விட்டு கொண்டவாறு, பல்லக்குகள் உள் முற்றத்திற்கு எடுத்துச் சொல்லப்படுவதைப் பார்த்தவாறு அவன் நின்றி ருந்தான்.

அரசரின் அந்தப்புரத்துப் பெண்கள் ஒவ்வொருவராக இறங்க, எல்லோருக்கும் முன்னால் முகத்தை முற்றிலும் மூடியபடி ஒரு பெண் வந்தாள். அவள் சக்ரவர்த்தினி ஜகத் கோஸினியாகத்தான் இருக்க வேண்டும் என்று மெஹ்ருன்னிஸா எண்ணினாள். நிச்சியமாக அவள்தான் என்று உடனே தெரிந்தது. அவள் குர்ரம் அருகில் செல்ல, கியாஸ் குனிந்து அவளுக்கு வணங்குவதைக் கண்டு, மெல்ல தலை யசைத்தாள்.

குர்கையா பேகம் இங்கு இல்லாமலிருப்பது வருத்தத்தைக் கொடுத்தது. அரசரின் அந்தப்புரத்துப் பெண்கள் லாகூருக்கு வருகையில் அவள் ஆக்ராவிலேயே இருக்க முடிவு செய்தி ருந்தாள். பழைய சக்ரவர்த்தினியைப் பார்ப்பதற்கு மெஹ்ருன் னிஸா மிகவும் ஆசைப்பட்டாள். தற்பொழுது ஜஹாங்கீர் சக்ரவர்த்தியாக இருப்பதால், அந்தப்புரத்தில் யார் தலைமை பொறுப்பில் இருப்பார்கள் என்று அவள் யோசித்தாள். முப்பது ஆண்டுகளுக்கு மேல், அந்தப்புரத்தில் தலைமை ராணியாக ஏகோபித்த ஆட்சி செய்தபின் இப்பொழுது ஜகத்கோஸினிக்கும், ஜஹாங்கீரின் மற்ற மனைவிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து நடந்து கொள்ள வேண்டியிருப்பதில் குர்கையாவிற்கு மனவருத்தம் இருக்கத்தான் செய்யும்.

முறைப்படி வரவேற்பு நடந்து முடிந்ததும், ஜஹாங்கீர், இளவரசர் குர்ரம் மற்றும் அந்தப்புரத்துப் பெண்கள் வீட்டிற்குள் நுழைந்தனர். மெஹ்ருன்னிஸாவும் லாட்லியைக் கீழே இறக்கி விட்டுவிட்டு, அந்தப்புரத்துப் பெண்களை வரவேற்று உபசரிக்க திரும்பினாள்.

நிச்சியதார்த்த விழா விமரிசையாக நடந்தது. கியாஸ் பெக்கின் வீட்டுப் பெண்களும், சக்ரவர்த்தியின் மனைவி களும் ஒரு பட்டுத் திரைக்குப் பின்னால் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். எல்லோருக்கும் முன்னால், தங்க ஜரிகையால் வேலைப்பாடு செய்யப்பட்ட பட்டுத்துணியிலான திரையால் முகத்தை மூடிக் கொண்டு, அர்ஜுமன்ட் அமர்ந்திருந்தாள். குர்ரம் ஒரிருமுறை அவளைத்

திரும்பிப் பார்த்ததை மெஹ்ருன்னிஸா கவனித்தாள். ஒவ்வொரு முறையும் அவன் அவ்வாறு பார்க்கையில், பெண்கள் பக்கத்திலிருந்து கலகலவென்று சிரிப்பு எழ, அவன் அவசரமாகத் திரும்பிக் கொண்டான். மெஹ்ருன்னிஸா குனிந்து அர்ஜுமன்ட்டை அணைத்துக்கொண்டாள். "அவன் மிகவும் அழகாக இருக்கிறான். என் கண்ணே." அவள் தன் மருமகள் காதில் முணுமுணுக்க, வெட்கத்துடன் கூடிய ஒரு தலையசைப்பு அவளுக்குப் பதிலுக்குக் கிடைத்தது. வந்திருந்த ஆண்கள் அனைவரும் அறையின் நடுவில் அமர்ந்திருக்க, மசூதியின் தலைமையாளர் — குவாஜீ (Qazi) ஒரு புறமும், ஜஹாங்கீரும், கியாஸ் பெக்கும் மற்றொரு புறமும் அமர்ந்திருந்தனர். அபுல்ஹாசனின் மகளும், கியாஸ் பெக்கின் பேத்தியுமான அர்ஜுமன்ட் பானு பேகத்தைச் சக்ரவர்த்தி ஜஹாங்கீரின் மகன் குர்ரத்திற்குத் திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதாக குவாஜி முறைப்படிப் பதிவு செய்தார். கியாஸ்பெக் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டு, சக்ரவர்த்தியை வணங்கியவாறு, தன்னிடமிருந்த வாத்துச் சிறகிலான எழுத்தாணியை அவரிடம் கொடுத்தார். குர்ரமிற்கு மிகவும் மகிழ்ச்சி தரக் கூடிய பெரிய ஆச்சரியம் காத்திருக்கிறது என்று மெஹ்ருன்னிஸா எண்ணினாள். அவள் குடும்பத்திலுள்ளோர்களிலேயே அர்ஜுமன்ட் மிகவும் அழகானவள். குர்ரம் அவளைப் பார்த்தால், மகிழ்ச்சியின் உச்சத்திற்கே போய்விடுவான் என்பதில் சந்தேகமேயில்லை.

விழா முடிவுற்றபின், அந்த அறை சுத்தம் செய்யப்பட்டது. பணியாட்கள் உணவுப் பொருட்களை எடுத்து வந்தனர். ஆட்டிறைச்சி மற்றும் கோழியுடன் தயாரித்த கறி வகைகள், தாமிரத் தட்டுகளில், நதியிலிருந்து புதிதாக கொண்டு வந்து, பூண்டு, எலுமிச்சைச் சாறு சேர்த்துக் கரி அடுப்பில் வறுத்தெடுத்த மீன் வகைகள், குங்குமம்பூ மற்றும் மஞ்சள் பொடியிட்டு, மேலே நெய்யில் வறுத்த முந்திரி, திராட்சை மற்றும் அக்ரோட் தூவிய மணம் கமழும் புலவுச் சாதம், வெள்ளி கூஜாக்களில் இஞ்சி மற்றும் வெட்டிவேர் இட்டுத் தயாரித்த பானங்கள், என உணவுப் பொருள்கள் வரிசையாக வந்து கொண்டிருந்தன. அறையின் ஒரு ஓரத்தில் ஆண்களும், மற்றொரு புறத்தில் பெண்களும் அமர்ந்திருந்தனர். இடையில் நீண்ட மஸ்லின் படுதாக்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

படுதாவின் பின்னாலிருந்து மெஹ்ருன்னிஸா ஜஹாங்கீரை நோக்கினாள். விஷயங்கள் வேறு மாதிரியாக இருந்திருந்தால் இந்த மனிதன் அவளுக்குக் கணவனாக ஆகியிருப்பான் — இன்று அவள் மகன் அடுத்த சக்ரவர்த்தியாக ஆகவாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

அவள் திரும்பி ஜகத்கோஸினியைப் பார்த்தாள். சக்ரவர்த்தினி அறையின் ஒரு கோடியில் அமர்ந்திருக்கப் பல பெண்கள் அவளைச் சுற்றி வளைய வந்து கொண்டிருந்தனர். அரசரின் அந்தப்புரத்தில் யார் ஆதிக்கம் செலுத்துகிறாள் என்பதில் இப்பொழுது சந்தேகமேயில்லை. ஒரு மதமதப்பு அவள் குரலில் தெரிந்தது ஒரு கர்வமான பார்வை அவள் முகத்தில் ஏதாவது ஒரு விஷயம் அவளுக்குப் பிடிக்கவில்லையானால், அகந்தையுடன் அலட்சியத்துடன் புருவங்களை உயர்த்தி அதைத் தெரியப்படுத்தினாள் — ருக்கையா செய்தது போலவே

மெஹ்ருன்னிஸா முகத்தில் மெதுவாகப் புன்னகை பரவியது. இந்த மாதிரி இயற்கையாக இல்லாமல் நடந்து கொள்வது அவளை வயது கூடியவளாகத் தோற்றமளிக்க வைத்தது. ருக்கையா விஷயத்தில் இது சரிதான் ஏனெனில், ருக்கையா மிகவும் அழகானவள் அல்ல. ஆகையால், அவள் தன் மற்ற திறமைகளைப் பயன்படுத்தி, அக்பர் மனதில் இடம்பிடித்து, அந்தப்புரத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தாள். ஆனால் ஜகத்கோஸினி இயற்கையாகவே மிகவும் அழகான பெண். இப்பொழுது அவள் அதிகம் சிரிப்பதில்லை. முகத்தைக் கம்பீரமாக வைத்துக் கொண்டு, கலகலப்பாக இல்லாமல் எல்லோரையும் அதிகாரம் செய்து கொண்டு ஆணவத்துடன் வளைய வருகிறாள். ஜஹாங்கீர் இதை எல்லாம் எப்படி எடுத்துக்கொள்கிறார்? சாதாரணமாக எப்பொழுதும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, மமதையுடன் இருப்பவர்களிடம் அவருக்கு ஈர்ப்பு உண்டாவதில்லை. அவள் மனோபாவம் சரியாக இருக்குமானால், நல்ல விதமாக சினேக பாவத்துடனும், மென்மையாகவும், நளினமாகவும். கலகலப்

பாகப் பழகும் குணத்துடனும் இருக்கும் பெண்களைத்தான் அவருக்குப் பிடிக்கும்.

"இந்த 'பர்பி' நன்றாகவே இல்லை."

தன் எண்ணங்களிலிருந்து விடுபட்டு, மெஹ்ருன்னிஸா தலை தூக்கி, நிமிர்ந்து தேங்காய் துருவலில் தயாரித்த ஒரு வகை இனிப்பு பண்டம் இருந்த தட்டை ஜகத்கோஸினி தள்ளிவிடுவதைப் பார்த்தாள்.

"மன்னிக்க வேண்டும், மாட்சிமை பொருந்திய அரசி புதிய இனிப்புப் பண்டங்களை வரவழைக்கிறேன்" அஸ்மத் அவசரமாகக் கூறியவாறு ஒரு பணிப்பெண்ணுக்குச் சைகை செய்தாள்.

"வேண்டாம். எனக்கு மேலும் சாப்பிட விருப்பமில்லை. ஒரு கோப்பை மது எடுத்து வா" ஜகத்கோஸினி அதிகார மாகக் கூறினாள்.

அஸ்மத் வணங்கினாள். "இப்பொழுதே தருவிக்கிறேன், மாட்சிமை பொருந்தியவரே"

மெஹ்ருன்னிஸா முகம் சுளித்தாள். ஜகத்கோஸினி வீட்டிற்குள் நுழைந்ததிலிருந்து எதைப் பற்றியாவது அதிருப்தி யுடன் புகார் செய்து கொண்டேயிருந்தாள். உணவு சரியாக சமைக்கப்படவில்லை, அல்லது பணிப் பெண்கள் மந்தமாக நடந்து கொள்கிறார்கள், அல்லது வேறு ஏதாவது ஒன்று. மெஹ்ருன்னிஸாவின் தாயார் அங்கும் இங்கும் சென்று, சக்ரவர்த்தினிக்காக நன்கு தயாரித்த புலவு சாதம், கறிவகைகள், இனிப்புப் பண்டங்கள் எனத் தானே எடுத்து வந்தாள். அஸ்மத்திற்கு உட்கார்ந்து தன் உணவை உண்ணக் கூடப் போதிய நேரம் கிடைக்கவில்லை. அவள் களைத்துச் சோர்ந்து போனவளாகத் தோன்றினாள். எப்பொழுதும் அழகாக இருக்கும் அவள் கொண்டை கலைந்து தலைமுடி வெளியே வந்திருந்தது. தலையிலிருந்து அவள் முகத்திரை அவிழ்ந்திருந்தது. இந்த விழாவிற்கான விருந்து தயாரிப்பதற்கு அவள் தாயார் எவ்வளவு அக்கறையுடன் செய்திருக்கிறாள் என்று மெஹ்ருன்னிஸாவிற்குத் தெரியும். கடந்த சில நாட்களில்

அவள் தாயாரை அதிகம் தனியாகச் சந்திக்க முடியவில்லை. எப்பொழுதும் அஸ்மத், வீட்டைச் சுத்தம் செய்வதைக் கண்காணிப்பதும், உணவு பொருட்கள் தயாரிக்கப்படுகையில் மேற்பார்வை பார்ப்பதுமாக ஓய்ச்சலில்லாமல் வேலை செய்து கொண்டிருந்தாள்.

இப்பொழுது ஏதோ ஒரு பணிப்பெண்ணை நடத்துவது போல் அவளைச் சக்ரவர்த்தினி அதிகாரம் செய்து கொண்டிருக்கிறாள். மெஹ்ருன்னிஸா தன் இருக்கையிலிருந்து எழுந்திருந்து தாயாரிடம் சென்று கூறினாள். "நான் போய் சக்ரவர்த்தினிக்கு மதுபானம் எடுத்து வருகிறேன். நீ அமர்ந்து கொள்." அவள் கட்டாயத்துடன் அஸ்மத்தை இழுத்து ஒரு மெத்தையில் அமரச் செய்தாள்.

"என் மதுவை கொண்டு வாருங்கள்" ஜகத்கோஸினி மறுபடியும் கூறினாள்.

"இதோ வந்துவிட்டது, மாட்சிமை பொருந்திய அரசி" மெஹ்ருன்னிஸா பதிலளித்தாள். "என் தாயார் களைத்திருக்கிறார்கள். நான் உங்களை நன்றாக உபசரிக்கிறேன்."

"நீ யார்?"

"மெஹ்ருன்னிஸா, அலிகுலியின் மனைவி" அவள் திரும்பி மதுவைக் கோப்பையில் ஊற்றத் தொடங்கினாள்.

அவளது கோப்பையை ஜகத்கோஸினியிடம் கொடுக்கையில் சக்ரவர்த்தினி வினவினாள். "உன்னை இதற்குமுன் எங்கே பார்த்திருக்கிறேன்?"

அவள் தெரியாதது போல் நடிக்கிறாள் என்று மெஹ்ருன்னிஸாவிற்கு புரிந்தது. இந்த சந்தர்ப்பத்தை நழுவவிட அவளுக்கு விருப்பமில்லை. "குர்ரம்" அவள் இளவரசன் பெயரைச் சொன்னால் போதும், ஜகத்கோஸினிக்கு எல்லாம் நினைவிற்கு வந்து விடும். அவள் சொல்ல வாயைத் திறந்து விட்டு, உடனே நிறுத்திக் கொண்டாள். வேண்டுமென்றே சிறிது நேரம் அவர்களிடையே மௌனம் நிலவ விட்டுவிட்டு, சக்ரவர்த்தினி புருவங்களை நெருக்கிப் பார்க்கத் துவங்குகையில், மெஹ்ருன்னிஸா தோளை அலட்சியமாக ஆட்டியவாறு

கூறினாள். "எனக்குத் தெரியாது, மாட்சிமை பொருந்தியவரே!"

தான் தோற்றுப் போனதை உணர்ந்த சக்ரவர்த்தினி தலையை சிறிது அசைத்துவிட்டு, மறுபடியும் திரும்பி யோசிக்க ஆரம்பித்தாள். உடனே அவள்குரல் உச்சமாக வார்த்தைகளைக் கடிப்பதுபோல் வந்தது. "இப்பொழுது எனக்கு நினைவிற்கு வந்துவிட்டது. "நீ அந்த அவமதிப்படைந்த பாரசிகப் போர் வீரனின் மனைவி அல்லவா?"

தொண்டை வரை வந்த வெறுப்பான வார்த்தைகளை விழுங்கியபடி மெஹ்ருன்னிஸா அவளை முறைத்துப் பார்த்தாள்.

"எங்கே, சொல்" விரலைச் சொடுக்கி மற்ற பெண்களை கூப்பிட்டவாறு ஜகத்கோஸினி தொடர்ந்தாள். "கடைசியாக உன்னைப் பற்றி விசாரித்த பொழுது உனக்குக் குழந்தை பிறக்கவில்லை என்று கேள்விப்பட்டேன். உனக்குத் திருமணமாகி எத்தனை வருடங்கள் ஆகிறது?"

மெஹ்ருன்னிஸா அவள் கேள்வியை லட்சியம் செய்யாமல், மிகக் கனிந்த குரலில் வினவினாள். "நீங்கள் என்னைப் பற்றி விசாரித்தீர்களா, மாட்சிமை பொருந்திய அரசி? ஒரு சாதாரண போர் வீரனின் மனைவி பற்றி, ஏன்?"

"நான்... சக்ரவர்த்தினி... எங்கள் குடிமக்கள் பற்றி எல்லா விஷயமும் நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம். எல்லோர் பற்றியும், அரியணைக்கு எதிராகக் கலகம் செய்த உன் கணவனைப் போன்றவர்கள் பற்றியும் கூட. இப்பொழுது என் கேள்விக்கு பதில் சொல். உனக்கு திருமணம் ஆகி எவ்வளவு காலம் ஆகிறது?"

"பதின்மூன்று வருஷங்கள், மாட்சிமை பொருந்தியவரே!"

"இன்னும் குழந்தையில்லை? ஏற்கெனவே இன்னும் செய்துகொள்ளவில்லையானால், அவன் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய இன்னொரு பெண்ணை உன் கணவன் திருமணம் செய்து கொள்ள வேண்டும்..."

"எனக்குக் குழந்தை இருக்கிறது, மாண்புமிக்கவரே," மெஹ்ருன்னிஸா சிறிது சூடாகப் பதிலளித்து விட்டு பின்னால் திரும்பினாள். அங்கு சுற்றிலுமிருந்த பெண்களை இடித்தவாறு நகர்ந்து, அருகே இருந்த லாட்லியைத் தூக்கிக் கொண்டாள்.

பளிச்சென்று சாம்பல் நிறக் கண்களுடனும், பின்னிவிடப் பட்ட அடர்ந்த கருத்த தலைமுடியுடனும், வெளிர் சிவப்பு நிறக் கன்னங்களுடனும், பாவாடையும் சோலியும் சேராமல் இடையில் தெரியும் மென்மையான இடையுடன் கூடிய அந்த அழகிய குழந்தையைச் சக்ரவர்த்தினி பார்த்தாள்.

"அழகிய குழந்தை" அவள் முணுமுணுத்தாள். பின் தன் கையிலிருந்த இரண்டு வளையல்களைக் கழற்றி, லாட்லியிடம் நீட்டினாள். "இந்தா, இதை எடுத்துக்கொள்."

இவை எல்லாம் தன் தாயாருக்குப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்ட லாட்லி முகத்தைச் சுளுக்கித், தலையை வேகமாக ஆட்டிக் கூறினாள். "எனக்கு வேண்டாம். நீயே வைத்துக் கொள்."

லாட்லியின் தலைக்கு மேல் மெஹ்ருன்னிஸாவைப் பார்க்கையில் ஜகத்கோஸினியின் கண்கள் பளபளத்தது. "ஒருபெண் குழந்தைதான் உன் கணவருக்குக் கொடுத்திருக்கிறாயா? அதுவும் இவ்வளவு கர்வம் பிடித்தது. அவளுக்குப் பவ்யமாக நடந்து கொள்ள நீ சொல்லிக் கொடுக்கவேண்டும். அரச குடும்பத்தினர் கொடுக்கும் வெகுமதியைச் சாதாரண குடும்பத்தினர் ஒரு பொழுதும் நிராகரிக்கக் கூடாது."

"ஆனால், எங்கள் குடும்பம் உங்கள் குடும்பத்துடன் உறவு கொள்ளப் போகிறதே, மாட்சிமை பொருந்தியவரே! "நிச்சயம் நாங்கள் சாதாரணக் குடும்பத்தினர் இல்லை அல்லவா?"

"என் தயையால் தான் உன் குடும்பம் எங்கள் குடும்பத்துடன் இணையப் போகிறது மெஹ்ருன்னிஸா. அதை

மறந்துவிடாதே." ஜகத்கோஸினி வெடுக்கென்று கூறினாள். மறுபடியும் லாட்லியிடம் வளையல்களை நீட்டினாள். "எடுத்துக்கொள், குழந்தாய். நான் உத்தரவிடுகிறேன்."

மெஹ்ருன்னிஸா லாட்லி மேல் சாய்ந்து, அந்த வளையல்களைப் பெற்றுக் கொண்டாள். "வந்தனம், மாண்புமிக்கவரே!" அவள் வணங்கிவிட்டுச், சக்ரவர்த்தினியைச் சுற்றியிருந்த கூட்டத்தினரிடமிருந்து விலகி, நிமிர்ந்த தலையுடன் அங்கிருந்து அகன்றாள். அறையை விட்டு வெளியேறிய பின், லாட்லியை மற்ற குழதைகளுடன் விளையாட அனுப்பிவிட்டுப் பிறகு, முற்றத்திற்கு ஓடினாள். அங்கு சுடும் வெய்யிலில் கிணற்றில் குனிந்து, வளையில்களை அதில் விட்டெறிந்தாள். அவை சூரிய ஒளியில் மினுமினுத்தவாறு தண்ணீரில்போய் விழுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஜகத்கோஸினி அவளிடம் எதிர்பார்க்கும் பணிவிற்கான வெகுமதிதான் அது. லாட்லி ஒரு பொழுதும் அந்த வளையல்களை அணியமாட்டாள். அவளோ, மெஹ்ருன்னிஸாவோ எவரிடமிருந்தும் தர்மத்தை எதிர்பார்க்கவில்லை. கோபத்தினால் உடல் நடுங்க அவள் கிணற்றின் சுவற்றில் சாய்ந்தவாறு தரையில் உட்கார்ந்தாள். அவள் சொல்ல நினைத்த வார்த்தைகள் அவளுக்கே ஆபத்தை விளைவித்திருக்கக்கூடும். அர்ஜுமன்டின் நிச்சயதார்த்தத்தை முறியடித்திருக்கக்கூடும். ஜஹாங்கீர் இந்தத் திருமணத்தை நிச்சயித்திருந்தாலும், ஜகத்கோஸினி ஒரு வார்த்தை சொன்னால் நிச்சயதார்த்தம் முறிந்திருக்கும். அவள் எவ்வளவு முட்டாள்தனமாக நடக்க இருந்தாள். அவள் தந்தை, தாயார் மற்றும் அப்லுக்குப் பெருத்த அவமானம் ஏற்பட்டிருக்கும்... அர்ஜுமன்ட்டைப் பொறுத்த வரையில் அவளுக்கு வேறு திருமணமே நடக்காது. அரசகுடும்பத்தினரே ஒதுக்கிய பின் வேறு எவரும் பெண் கேட்டு வரமாட்டார்கள்.

மூடப்படாத அவள் தலை வெய்யிலினால்சுட ஆரம்பிக்கும் வரை அவள் அவ்வாறே உட்கார்ந்திருந்தாள். பிறகு வீட்டிற்குள் சென்று தன் தாயாருக்கு உதவத் தொடங்கினாள்.

உச்சி வெய்யில் கண்களைக் குருடாக்குவதுபோல் தகிக்கத் தொடங்கிய வேளையில், மற்றப் பணியாட்களும், உதவியாளர்களும், கியாஸின் பெரிய தோட்டத்தில், நிழலில் ஓய்வு எடுத்துக் கொள்ளவும், நண்பர்களுடன் பேசி மகிழவும், சென்றனர்.

அறை இருள் சூழ்ந்து குளிர்ச்சியாக இருந்தது. ஜன்னல்கள் வெட்டிவேர் தட்டிகளால் மூடப்பட்டு, வெளியே பணியாட்கள் அதன்மேல் தண்ணீர் தெளித்த வண்ணம் இருந்தனர். வெட்டிவேர்ப் புதர்கள் நதிக்கரையின் பக்கம் அதிகம் விளைகின்றன. அங்கு அதன் மணம் காற்றில் பரவி இருக்கும். அவைகளை வெட்டி எடுத்துத், தட்டிகளாகப் பின்னி, மேலே தண்ணீர் தெளித்தால் அவைகளிலிருந்து நறுமணம் எழும்பிச் சுற்றிலும் மறுபடியும் படரும். கங்கைச் சமவெளியின் உச்சி வெய்யிலில் வீசும் சூடான காற்று, இந்த வெட்டி வேர்த் தட்டிகளின் இடையே பாய்ந்து வரும் போது மந்திரம் போட்டது போல் குளிர்ச்சியான, நறுமணம் வீசும் காற்றாக மாறிவிடும். அந்த அறையில், களைத்துப் போன பெண்கள், நகரக் கூட மனமில்லாமல், ஆங்காங்கே மெத்தைகளில் படுத்திருந்தனர். இந்த நடுப்பகல் நேரத்தில் உடல் அயர்ச்சி அடைந்து, எந்த வேலையும் செய்ய மனம் வராது. குளி மிகுந்த உணவும் சேர்ந்து எல்லோரையும் சுகமான நித்திரையில் ஆழவைத்தது.

அறையின் குளிர்ச்சியான சுவற்றில் சாய்ந்தவாறு கண்களை மூடி மெஹ்ருன்னிஸா அமர்ந்திருந்தாள். லாட்லி அவள் மடியில் தலைவைத்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் அமைதியில்லாமல் நெளிய, மெஹ்ருன்னிஸா அவளைத் தட்டிக் கொடுத்துத் திரும்பவும் தூங்கச் செய்தாள்.

ஹுக்காவிலிருந்து வரும் மெல்லிய சலசலவென்ற சப்தமும், இளம் வயதுப் பெண்கள் மெல்லிய குரலில் பேசும் சப்தமும் தவிர, அந்த அறையில் ஒரு அமைதி நிலவி இருந்தது. ஹுக்காக்களிலிருந்து வரும் புகை அங்கு வைக்கப் பட்டிருந்த சந்தனமண அகர்பத்திகளின் வாசத்துடன் கலந்து பரவியது.

மெஹ்ருன்னிஸா சுவற்றில் மேலும் சாய்ந்து சௌகரிய
மாக அமர்ந்து கொண்டு சுற்றிலும் பார்த்தாள். வெல்வெ
தலையணையில் தலை வைத்தவாறு ஜகத்கோஸினி மெத்தை
யில் தூங்கிக் கொண்டிருந்தாள். கைகளை மார்பில் கட்டி
வாறு அசையாமல் படுத்திருந்தாள். அமைதியாகத் தூங்கு
யில் அவள் முகம் மென்மையாகி, இயற்கை நிலையில் வய
குறைந்தவளாகத் தோன்றினாள். இப்படி அவளை
பார்க்கையில், சக்ரவர்த்தினி ருக்கையாவின் தோட்டத்தில்
முதன் முறையாக அவளைப் பார்க்கையில் அவள் இளை
யாக இருந்த மாதிரியே தோன்றினாள். ருக்கையாவிற்குத்
தான் நன்றி கூற வேண்டும் என்று மெஹ்ருன்னிஸா
நினைத்துக்கொண்டாள். அவள் தோட்டத்தில் தான்
ஜஹாங்கீரை இளவரசராக மெஹ்ருன்னிஸா முதல் முறை
யாகச் சந்தித்தாள். ஆனால், அவள் நடுங்கினாள்
ருக்கையாவின் தூண்டுதல் இல்லாவிடில் அவள் அலிகுலியை
மணக்க நேரிட்டிருக்காது.

அந்தச் சமயத்தில் கதவின் முன் கட்டப்பட்டிருந்த
வெட்டி வேர்த் தட்டி விலக்கப்பட, பளீரென்று சூரிய ஒளி
அறையின் உள் பாய்ந்தது. மெஹ்ருன்னிஸா திரும்பியவாறு
கண்களை மறைத்துக் கொண்டாள். ஒரு மனித உருவம்
கதவருகே தெரிந்தது. முகம் சரியாகத் தெரியவில்லை
யானாலும் அவருடைய தலைப்பாகையை வைத்தே அவரை
யாரென்று மெஹ்ருன்னிஸா அறிந்து கொண்டாள். அந்தப்
பெரிய வான்கோழியின் இறகு, அவருக்கு மிகவும் பிடித்த
அலங்காரப் பொருள் அது அவர் தலைப்பாகையில்
இருந்தது. இதயம் படபடக்க மெஹ்ருன்னிஸா உறைந்து
போனாள். தன்னையறியாமல் அவள் கை லாட்லியைத்
தடவிக் கொடுத்தது.

"மாட்சிமை பொருந்தியவரே, எங்களுடன் பொழுதைக்
கழிக்க வந்திருக்கிறீர்கள்." சில பெண்கள் உரக்கக் கூறினர்.
சில விநாடிக்குள் அறையில் கலகலப்பு ஏற்பட, எல்லாப்
பெண்களும் எழுந்து சக்ரவர்த்திக்கு வணக்கம் தெரிவித்தனர்.
தலைமுடி கலையாமல் இருக்கிறதா, முகத்தின் அலங்காரம்
சரியாக இருக்கிறதா என அவர்கள் இரகசியமாகத் தங்கள்

கட்டை விரலிலிருந்த மோதிரத்திலுள்ள கண்ணாடியில்
பார்த்துக் கொண்டனர். சில பெண்கள் அவர் அருகில் ஓடிச்
சென்று, அவர் கைகளைப் பிடித்தவாறு, தங்கள் இருக்கைக்கு
அருகில் வருமாறு அழைத்தனர்.

ஜஹாங்கீர் அவர்களைப் பார்த்துச் சிரித்தவாறு ஒரு
வைப்பாட்டியைத் தேர்ந்தெடுத்தார். அவள் அவரைத் தன்
இருக்கைக்கருகே அழைத்துச் செல்ல எத்தனிக்கையில், ஜகத்
கோஸினி கூறினாள். "இங்கே வாருங்கள், மாட்சிமை
பொருந்தியவரே!"

ஜஹாங்கீர் அவளைப் பார்த்துவிட்டுப், பிறகு அந்தப்
பெண்ணின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு,
குனிந்து அவள் காதில் ஏதோ முணுமுணுத்தார். அவள்
செல்லத்துடன் கோபித்தவாறு அகன்றாள். ஜஹாங்கீர்
தோள்களைக் குலுக்கியவாறு, தன் சக்ரவர்த்தினி அருகே
சென்று அமர்ந்தார்.

"அன்பே, என் வாழ்த்துக்கள். வெகு அழகான மருமகளை
அடையப் போகிறாய்" அவர் கூறினார்.

"நன்றி, மாட்சிமை பொருந்தியவரே! மிர்ஜா பெக்
குடும்பத்துடன் உறவு வைத்துக் கொள்வதற்கு நாம் கொடுத்து
வைத்திருக்க வேண்டும்" ஜகத்கோஸினி பதிலளித்தாள்.

தன் காதுகளை நம்பமுடியாமல் மெஹ்ருன்னிஸா
புருவங்களை உயர்த்தினாள். இரண்டு மணி நேரத்திற்கு
முன்பிருந்த அதே சிடுசிடுப்பான சக்ரவர்த்தினியா இது?
ஜகத்கோஸினியின் தோற்றம் மாறிவிட்டது. அவள் சிறு
பெண் போல் கொஞ்சுவதும் சீண்டுவதுமாக இருந்தாள்.
ஆனால், ஜஹாங்கீர் அவளைக் கண்டுகொண்ட மாதிரி
தெரியவில்லை. தன் இருக்கையில் உல்லாசமாகச் சாய்ந்து
அமர்ந்திருக்கும் அவரது கண்கள் அவர் விட்டுவிட்டு வந்த
வைப்பாட்டியின் மேலேயே அலைபாய்ந்தன. இருந்தாலும்
அவர் தன் ராணியின் அருகிலேயே அமர்ந்திருந்தார்.
அவளது மகனின் நிச்சயதார்த்த தினத்தன்று அவளைக்
கௌரவிக்க விரும்பினார்.

"அஸ்மத், சக்ரவர்த்திக்கு மதுபானம் எடுத்துவா" ஜகத் கோஸினி அதட்டலுடன் தன் கணவரைப் பார்த்தவாறு கூறினாள். "அஸ்மத்!"

"நான் செய்கிறேன், மாண்புமிக்க அரசி!" கோபத்தில் கன்னங்கள் சிவக்கத், தானிருந்த மூலையிலிருந்து எழுந்தவாறு மெஹ்ருன்னிஸா கூறினாள். சிறிது நேரத்திற்கு முன்புதான் அஸ்மத் சமையில் அறைபக்கம் சென்றிருந்தாள். அவள் தாயாரை இப்படி நடத்துவதற்கு என்ன தைரியம் இந்த ராணிக்கு?

"பின் எதற்காக காத்திருக்கிறாய்?" இன்னும் அதட்டலான குரலில் மெஹ்ருன்னிஸா பக்கம் மார்க்காமலேயே ஜகத்கோஸினி கூறினாள். பின் திடீரென்று மெஹ்ருன்னிஸா பக்கம் திரும்பி அவசரமாகச் சொன்னாள். "ஒரு பணிப் பெண்ணைச் செய்யச் சொல். நீ வேண்டாம்."

"ஆனால், மாட்சிமை பொருந்தியவரே! இங்கு பணிப் பெண்கள் இல்லை. நான்தான் இருக்கிறேன்" மெஹ்ருன்னிஸா பதிலளித்தாள். லாட்லியின் தலையை மெதுவாகத் தலையணையில் வைத்துவிட்டு, எழுந்திருந்து, ஜகத் கோஸினியின் அருகில் மது வைத்திருந்த தட்டின் பக்கம் சென்றாள். ஜகத் கோஸினி தலையை வேகமாக அசைத்து, அவளை வெளியே போகச் சொல்வது போல் கதவை நோக்கி சைகை செய்தாள்.

அதைச் சட்டை செய்யாமல், மதுவைக் கோப்பையில் ஊற்றி, மெஹ்ருன்னிஸா ஜஹாங்கீரிடம் நீட்டினாள்.

ஜஹாங்கீர் கோப்பையைப் பெற்றுக் கொள்கையில் அவள் இதயம் படபடத்தது. ஆனால், அவர் அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை. சில வினாடிகளுக்கு அவர்கள் விரல்கள் தொட்டுக் கொண்டன. 'என்னைப் பார்' அவர் கவனம் இன்னும் அந்த வைப்பாட்டியின் பக்கம் இருந்ததால், அவர் அவளைப் பார்க்கவில்லை. மனதை உறுதிப்படுத்திக் கொண்டு, மெஹ்ருன்னிஸா கோப்பையைச் சட்டென்று விட்டுவிட்டுப் பின் வாங்கினாள். ஜஹாங்கீர் கோப்பையை இன்னும் முழுவதும் பிடித்துக் கொள்ளவில்லையாதலால், அது பெரிய சத்தத்துடன் கீழே விழுந்து, அதிலிருந்த

மதுபானம், சக்ரவர்த்தினியின் பாவாடையிலும் அருகிலிருந்த மெத்தையிலும் தெறித்தது. இதற்கு வெகுநேரம் முன்னமேயே மெஹ்ருன்னிஸா அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.

"முட்டாள் பெண்! மதுவை எப்படிக் கொடுப்பதென்று உனக்குத் தெரியாதா?" தன் பாவாடையை உதறியவாறு ஜகத்கோஸினி மெஹ்ருன்னிஸாவை கோபத்துடன் வெறித்துப் பார்த்தாள். மெஹ்ருன்னிஸாவும் திரும்பி அவளை வெறித்துப் பார்த்தாள். அதே சமயம், ஜஹாங்கீர் தன்னைச் சட்டென்று திரும்பி பார்த்துவிட்டுப், பிறகு நன்கு திரும்பி ஆவலுடன் பார்ப்பதையும் மெஹ்ருன்னிஸா ஓரக் கண்ணால் கவனித்தாள்.

"மன்னிக்க வேண்டும், மாண்புமிக்கவரே! இன்னொரு முறை இப்படி நடக்காது." முகத்தைச் சாது போல், வெகுளித் தனமாக வைத்துக்கொண்டு மெஹ்ருன்னிஸா பதிலளித்தாள்.

"இனிமேல் இப்படி நடக்காமல் இருப்பதே நல்லது, போய் சில துவாலைகள் எடுத்துவா."

"இரு!" சக்ரவர்த்தியின் குரல் அந்த அறையில் பெரிதாக ஒலித்தது. தடுமாறியவாறு அவர் எழுந்திருந்து, "நீ யார்?"

ஒரு தேர்ந்த நடிகை போல், அவள் அவரைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தாள். வங்காளத்தில் அலிகுலி அவளை அலசியப்படுத்துவான். மற்றவர்களோ அவளை வெறித்துப் பார்ப்பார்கள். ஆனால், இங்கே, இவ்வளவு அழகிய பெண்களுக்கிடையே, ஒரு குழந்தைக்குத் தாயான வளும், மற்ற ஆண்களின் கண்ணுக்கு வயதானவள் போல் தோன்றும் அவள், ஒரு சாம்ராஜ்ஜியத்திற்கே அதிபதியான வரின் கவனத்தை ஈர்க்கமுடிந்தது. இது தனிப்பட்ட மகிழ்ச்சியைக் கொடுத்தது. "மிர்ஜா கியாஸ் பெக்கின் மகள், மாட்சிமை பொருந்தியவரே."

தாகத்தினால் தவிக்கும் மனிதன் போல், கண்களால் அவளைப் பருகியவாறு, ஜஹாங்கீர் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அவள் இங்கே, இதோ, அவர் எதிரே இருக்கிறாள். கடந்த வருடங்கள் உருகி ஓடி,

மறுபடியும் அவர்களை அந்த முற்றத்தின் வராந்தாவிற்கு எடுத்துச் சென்றது போல் தோன்றியது. அவள் யாரென்று அவர் உடனே புரிந்து கொண்டு விட்டார். ஆனால், ஏதாவது பேச வேண்டும் என்ற சூழ்நிலையில் அந்தக் கேள்விதான் வாயில் வந்தது.

அவர் நீண்ட மூச்சுவிட்டார். நீண்ட தீர்க்கமான நாசி, ரோஜா மொட்டுப் போன்ற உதடுகள், மெல்லிய உருவம், அரண்மனை ஓவியர்கள் அவள் உருவத்தை வரையத் துடிப்பார்கள். அவள் மார்பகங்கள், பட்டுச் சோலியின் உள்ளே மிதந்தன. அவள் வெட்கத்துடன் முறுவலிக்க அதுவே அவளுக்கு மேலும் அழகூட்டியது. வைரம், சிகப்புக் கற்கள் பதித்த மோதிரங்கள் அணிந்த விரல்களைத் தொங்க விட்டவாறு அவள் அசையாமல் நின்றிருந்தாள்.

மெஹ்ருன்னிஸா மெதுவாகக் கண்களை உயர்த்தி ஜஹாங்கீரின் முகத்தைப் பார்க்க, அவள் பார்த்தது அவளுக்கே பெரிய அதிர்ச்சியை கொடுத்தது. ஜகத் கோஸினியை சீண்டிப் பார்க்க வேண்டும் என அவள் ஆரம்பித்தது பெரியதாக வெடித்து விடும் போல் தோன்றிற்று. அவளைச் சுற்றியிருந்தவர்களை அவள் மறந்தாள். அவரைத் தொடவேண்டும். அவர் கைகளைப் பற்றிக் கொண்டு அவர் ஸ்பரிசத்தை உணரவேண்டும் என்று அவளுள் ஆவல் எழுந்தது. தூரத்தில் வைத்தே பார்க்க முடிந்த இந்த மனிதருடன் அவளால், கூட இருக்க முடியுமானால் தன் பிரச்னைகளைத் தானே தீர்த்துக் கொள்ள வேண்டிய நிலைமை இல்லாமல், பாதுகாப்பாக, சௌக்கியமாக இருக்க முடியும் என்பது போல் உணர்ந்தாள். அவர் நிச்சயம் அப்படிப்பட்ட சுகத்தை அவளுக்கு அளிப்பார். இத்தனை நாட்கள் வாழ்ந்த வாழ்க்கையே சட்டென்று அவளுக்கு அலுப்பாகத் தெரிந்தது. முதலில் அவரை விரும்பியது, பின் கல்யாணமான பிறகு குழந்தைக்காக ஏங்கியது, கடைசியில் பல வருடங்கள் கழித்து அவள் ஏங்கித் தவித்தவைகளில் ஒன்று மட்டும்தான் நிறைவேறியது என்பது போன்ற இந்த வாழ்க்கை அவளுக்கு அலுப்பைத் தந்தது.

"மாட்சிமை பொருந்தியவரே, என் உடை மது தெறித்து மிகவும் ஈரமாக உள்ளது. அவளை அனுப்பித் துவாலைகள் எடுத்து வரச் செசல்லுங்கள்." ஜகத்கோஸினி முறை விட்டவாறு, ஜஹாங்கீர் கவனத்தைத் திருப்பி, அவரை மத்தையில் அமர வைக்க முயன்றாள்.

"வேறு யாரையாவது அனுப்பு, என் அன்பே" அவள் கைகளைத் தடுத்தவாறு ஜஹாங்கீர் கூறினார். "நான் அவளுடன் பேச விரும்புகிறேன்." அவர் மெஹ்ருன்னிஸா பக்கம் திரும்பி மிருதுவான குரலில் கேட்டார். "உன் பெயர் என்ன?" ஆனால், அவர் அவள் பெயரை அறிவார். அதை பலமுறை தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார். அவள் வாயால் கூறுவதைக் கேட்க ஆசைப் பட்டார்.

"மெஹ்ருன்னிஸா."

"பெண்களில் சூரியன்." வார்த்தைகளைச் சுவைத்தவாறு ஜஹாங்கீர் கூறினார். அவளை முழுமையாகப் பார்த்து ரசித்தவாறு, "ஆமாம், நீ சூரியன் போல்தான்."

அவர் பார்வையில் மெஹ்ருன்னிஸா நெளிந்தாள். அவர் தன்னை முழுவதும் — அவள் உடைகள், அவள் உணர்வுகள் — எல்லாவற்றையும் உரித்துவிட்டு அவளுடைய உள்ளார்ந்த இரகசியங்களைக் காண்பது போல் உணர்ந்தாள். அவர் அவளுக்குள் இருக்கும் காதலை காண்பாரா? பதின்மூன்று ஆண்டுகளாக அவள் ஏங்கித் தவித்த தவிப்பை உணர்வாரா? அவர் தன்னை மறக்கவில்லை என்பதை அவள் அறிந்து கொண்டாள். அந்த எண்ணமே அவள் நாடி நரம்புகளில் ஆடான உணர்வை கொடுத்தது. அவள் அவரை நினைவில் வைத்திருப்பது சுலபம் தான். தன் எட்டு வயதிலிருந்தே அவள் அவரை விரும்பினாள். ஆனால், அவர் இன்னும் அவளை நினைவில் வைத்திருப்பது, அவர் அறிந்திருந்த போதிலும் அவள் பெயரைக் கூறச் சொல்லிக் கேட்பது.... இருந்தாலும் அவர் சக்ரவர்த்தியானவுடன் அவளை அடைய ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. இதன் அர்த்தம் என்ன? அவர் உணர்வுகளைத் தூண்டக் கூடிய சக்திதனக்கு இன்னும்

உள்ளதென்று அவளுக்கு எப்படித் தெரியும்? இப்பொழுது அவர் என்ன செய்வார்? அவர் ஆசைகளுக்குத் தடைபோட இப்பொழுது அவர் தந்தைகூட இல்லை.

"மாட்சிமை பொருந்தியவரே! மெஹ்ருன்னிஸாவிற்குச் சமையல் அறையில் வேலை உள்ளது. சமையல்காரர்களுக்கு உத்தரவுகள் கொடுக்க வேண்டும்." அஸ்மத்தின் குரல் அங்கு நிலவிய அமைதியை கலைத்தது.

அவர்கள் யாவரும் திரும்பி, அவர்கள் அருகில் அவள் மரியாதையுடன் அதே சமயத்தில் உன்னிப்பாக, எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டனர்.

திடீரென்று அங்கிருந்து செல்வதில் மெஹ்ருன்னிஸாவிற்கு விருப்பம் இல்லை. என்ன நடக்கிறதென்று கடைசிவரை இருந்து பார்க்கவேண்டும் போல் தோன்றியது. அவரால் அவளுக்கு எது வேண்டுமானாலும் கொடுக்க முடியும். பின் ஏன் அவள் அவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடாது? அவள் மனதில் திடமுடன் நிமிர்ந்து நின்றாள். அஸ்மத் அவள் எண்ணத்தைப் புரிந்து கொண்டு விட்டதால், மீண்டும் மெதுவாகக் கூறினாள். "தயவு செய்து, மாட்சிமை பொருந்தியவரே! அவளை அனுப்பி வையுங்கள்."

"வேறு யாரையாவது அனுப்பு, அஸ்மத்." ஜஹாங்கீர் கூறினார்.

"மன்னிக்க வேண்டும் மாட்சிமை பொருந்தியவரே! ஆனால்" — மெஹ்ருன்னிஸாவின் தாயார் தயங்கியவாறு தொடர்ந்தாள். "என் மகள் திருமணமானவள் — மேலும்."

ஜஹாங்கீர் திரும்பி அஸ்மததைப் பார்த்தார். அவள் வார்த்தைகள் அவருக்கு புரிந்து போயிற்று. அவர் மெதுவாகத் தலையசைத்தவாறு, "நான் அறிவேன். உனக்கு உத்தரவு அளிக்கிறேன், நீ போகலாம், மெஹ்ருன்னிஸா."

மெஹ்ருன்னிஸா வணங்கிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள். அவள் மனம் ஒரு நிலையிலில்லை. அங்கிருந்து போகவும் விருப்பமில்லை. ஜஹாங்கீர் மற்றும் ஜகத்கோஸினியின் பார்வைகள் தன்னைத் தொடர்வதை அவள் உணர்ந்தாள்.

அவள் திரும்பிப் பார்த்தாள், அவள் உடல் சிலிர்த்தது. சக்ரவர்த்தி காமத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருக்க, சக்ரவர்த்தினியின் பார்வையில் தீவிரமான வெறுப்பு தெரிந்தது.

அவள் கதவருகில் சிறிது தயங்க, அஸ்மத் பேகம் அவள் முதுகில் அழுத்தமாகக் கையை வைத்துத் தள்ளியவாறு அவளை வெளியே அழைத்து வந்தாள்.

அன்றிரவு கண் விழித்தவாறு மெஹ்ருன்னிஸா தன் படுக்கையில் படுத்திருந்தாள். அஸ்மத் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் ஏதோ காரணம் சொல்லி அவளைச் சமையலறைக்கு அனுப்பிவிட்டாள். சில மணி நேரம் கழித்து எல்லோருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. அதற்குப்பின் அரச குடும்பத்தினர் அரண்மனைக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். அவள் குடும்பத்தினரும் சீக்கிரமாகவே அவரவர்கள் அறைக்கு ஓய்வு எடுத்துக்கொள்ளச் சென்றனர். அவள் தாயாருடன் மறுபடியும் பேச வேறு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

ஆனால், மெஹ்ருன்னிஸாவிற்குத் தூக்கம் வரவில்லை. அவள் ஜஹாங்கீரின் கவனத்தை கவர்வதற்காகச் செய்தவை சரியா? இப்பொழுது நினைத்துப் பார்க்கையில் அவை சுழந்தைத்தனமாகத் தோன்றியது. இதனால் அவளுக்கு ஏற்படக் கூடிய லாபமோ அல்லது நஷ்டமோ, எதுவாயினும் மிகமிக அதிகமாக இருக்கக் கூடும்.

ஜஹாங்கீர் அவளை மிகவும் கவர்ந்தார். கடுகடுவென்று இருக்கும் பழைய இளவரசன் அல்ல அவர் இப்பொழுது. அந்த இடத்தில் இப்பொழுது மிகவும் சக்தி வாய்ந்த, வசீகரமான, ஆனால் கொடூரமான மனிதன் இருக்கிறான். இது வரை அவர் வாழ்க்கையில் விரும்பியது எல்லாம் அவருக்குக் கிடைத்து வந்திருக்கிறது. முன்பும் அவர் கேட்டது கிடைக்காமல் போகவில்லை. இப்பொழுதும், சக்ரவர்த்தியானதால், அவர் விரும்பியதை ஒருவராலும் மறுக்க முடியாது.

மெஹ்ருன்னிஸா நடுங்கினாள். தோளில் ஒரு சால்வையைப் போர்த்தியவாறு ஜன்னலருகே சென்றாள். காலியான, அமைதியான அந்த முற்றத்தை வெறித்துப் பார்த்தவாறு நின்றாள். இலாயங்களின் வாசலில் கட்டப்பட்டிருந்த விளக்குகளின் ஒளியைத் தவிர மற்ற இடமெல்லாம் இருண்டிருந்தது. சக்ரவர்த்தி இப்பொழுது என்ன செய்வார்? அவரது நியாயமான செய்கைகளும் நேர்மையான கோட்பாடுகளும் பலரும் அறிந்ததே. அவர் நேர்மையை நிலைநாட்ட அறிவித்திருந்த பன்னிரண்டு சாசனங்கள் பற்றி அனைவரும் சிலாகித்துப் பேசுகின்றனர். ஆனால் அவரது கொடூரமான நடவடிக்கைகளும் மிகவும் பிரசித்தம். மனிதர்களுக்கு மிகவும் கொடூரமான தண்டனைகள் கொடுத்தும், கூட்டமாக அவர்களைக் கொலை செய்வதற்கும் தயங்க மாட்டார். ஜஹாங்கீர் மெஹ்ருன்னிஸாவை விரும்பினார். அவர் மெஹ்ருன்னிஸாவை அடைவார். ஆனால் என்ன விலை கொடுத்து? மெஹ்ருன்னிஸா திருமணமானவள். அவள் அலிகுலியின் உடைமை.

அலிகுலியுடன் நடந்த தன் திருமணம் பற்றியோ, அவர்களிடையே உறவு நன்றாக இல்லாதது பற்றியோ, பல வருடங்கள் குழந்தை பிறக்காமலிருந்தது பற்றியோ, அதனால் மற்றவர்களுடைய ஏச்சுப் பேச்சுக்கு ஆளானது பற்றியோ, முடிவில் ஒரு பெண் குழந்தை தான் பிறந்தது என்பது பற்றியோ, நினைத்துப் பார்த்து, மெஹ்ருன்னிஸா தன்னி ரக்கம் கொள்ளாமல் இருக்கவே பெரிதும் முயற்சித்தாள். இப்பொழுது தன்னுள் இரண்டு மனம் இருப்பதை உணர்ந்தாள். ஒன்று, லாட்லிக்கு... லாட்லியின் ஒவ்வொரு மூச்சும் அவளுக்கு விலை மதிப்பில்லாதது. இரண்டாவது, அவள் பல வருடங்களாகக் கனவு கண்டு வந்த ஜஹாங்கிருக்கு. ஒன்று மற்றொன்றை மிஞ்சியதல்ல. இரண்டுமே அவளுக்குச் சமமாக... முக்கியமானதாக உணர்ந்தாள். ஜஹாங்கீரைப் பற்றி நினைக்கக் கூடாதென்று எவ்வளவு தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாலும், இரண்டுமே அவளுக்கு வேண்டும் எனத் தோன்றியது.

அவள் முற்றத்திலிருந்து பார்வையைத் திருப்பி வீட்டின் வெளிப்புறச் சுவர்களைத் தாண்டிப் பார்த்தாள். லாகூர் நகரமே உறங்கிக் கொண்டிருந்தது. இருட்டில் தெரு விளக்குகள் மின்னிக் கொண்டிருந்தன. தூரத்தில் லாகூர்க் கோட்டையின் மதிற்சுவர்கள் தீவட்டிகளின் ஒளியில் குளித்துக் கொண்டிருந்தன.

நிலமை கஷ்டமானது. மிகவும் கஷ்டமானது. மெஹ்ருன்னிஸா பெருமூச்சு விட்டாள். திரும்பி அறைக்குள் வந்து படுக்கையில் விழுந்தாள். அவள் மெத்தையில் சரியாகப்படுக்க எத்தனிக்கையில், லாட்லி தூக்கத்திலேயே நகர்ந்து, ஒரு காலைத் தூக்கித் தன் தாயார் மேல் போட்டாள். பல மணி நேரம் மெஹ்ருன்னிஸா விழித்தவாறு இருந்த பிறகு கண்களை இறுக மூடித் தூங்க முயன்றாள். அவள் சிறிதாவது தூங்கி ஓய்வு எடுக்க வேண்டும். இல்லாவிடில் காலையில் அவள் தாயார் சொல்லப் போவதைக் கேட்க அவள் உடம்பில் தெம்பு இருக்காது.

கியாஸ்பெக் குதிரையைக் காலால் உதைத்து, ஊக்கப் படுத்தி வேகமாகச் செலுத்தினார். சக்ரவர்த்தி ஏதோ முக்கிய காரணத்திற்காகத்தான் அவரை அழைத்திருக்கிறார். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அதே சமயத்தில், சிறிது கவலையாகவும் இருந்தது. முதல் நாள் விழாவில் நடந்தவைகளைப் பற்றி மனதிற்குள் யோசித்துப் பார்த்தார். ஜஹாங்கீரின் விருப்பத்திற்கு மாறாக ஏதாவது நடந்திருக்கிறதா? அவருக்கு அப்படி ஒன்றும் தோன்றவில்லை. எல்லாம் நல்லவிதமாகவே நடந்தது. சக்ரவர்த்தி மிகவும் மகிழ்ச்சியாகவே காணப்பட்டார். அர்ஜுமண்ட்டுக்கும் நிறையப் பரிசுப் பொருட்கள் வழங்கினார்.

இவ்வாறு யோசித்தவாறே, கியாஸ் வரவேற்பு அறையை அடைந்தார். உள்ளே நுழைகையில், சக்ரவர்த்திக்கு இரு புறமும் மஹபத்கானும் முகமது ஷரீபும் நின்று கொண்டிருப்பதைக் கண்டார்.

"வணக்கம், மாட்சிமை பொருந்தியவரே!"

"அல்லாவிற்கு வணக்கம், மிர்ஜா பெக். நேற்று நடந்த நிச்சயதார்த்த விழாவின் ஏற்பாடுகள் என்னை மிகவும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கின. நம் இரு குடும்பங்களுக்கும் இடையே ஏற்படப்போகும் உறவு நம் இருவருக்குமே நல்ல விதமாக அமையும்."

"மாண்புமிக்க தாங்கள் மிகவும் அன்பானவர்" கியாஸ் மறுத்தவாறு கூறினர். "எங்களுக்குத்தான் இது மிகவும் கௌரவம் கொடுக்கும் நிகழ்ச்சி."

"ஆமாம். ஆனால் உன்னை வேறு ஒரு காரணத்திற்காக அழைத்திருக்கிறேன்." ஜஹாங்கீர் கியாஸை உற்றுப் பார்த்தவாறே கூறினார்.

ஆனால், அந்தத் திவானுக்கு ஒரு விஷயமும் தெரியாது. பெண்கள் ஓய்வறையில் நடந்த விஷயங்களை அப்படியே விட்டுவிடுவது நல்லதென்று கருதி அஸ்மத் பேகம் முந்தைய நாள் இரவு அதைப் பற்றி அவரிடம் ஒன்றுமே கூறவில்லை. அவர் சக்கரவர்த்தி தொடர்ந்து பேசுவதற்காகக் காத்திருந்தார்.

"உனக்கு ஒரு திருமணமான மகள் உண்டல்லவா?"

"அல்லாவின் கருணையால் நான்கு திருமணம் ஆன பெண்கள் உள்ளனர், மாட்சிமை பொருந்தியவரே!"

"நான் மெஹ்ருன்னிஸாவைப் பற்றி பேசுகிறேன்" சிறிது பொறுமை இழந்து கைகளை ஆட்டியவாறு தொடர்ந்தார். "அவள் அலிகுலியின் மனைவி."

"ஆமாம், மாட்சிமை பொருந்தியவரே!" ஒரு சின்ன சந்தேகம் தலை தூக்க அவர் ஜஹாங்கீரை ஏறிட்டுப் பார்த்தார்.

"அலிகுலி ஒரு கலகக்காரன். என் தந்தையின் ஆட்சிக் காலத்தில் என்னை எதிர்த்துக் கலகங்கள் செய்த என் மகன் குஸ்ருவுடன் இணைந்து, அவன் அரியணை அடைய உதவி செய்யப் பார்த்தவன். நான் பெரிய மனதுடன் அவன் செய்த தவறுகளையும் அவனது துரோகத்தையும் மன்னித்தேன்."

"நீங்கள் மிகவும் கருணை உள்ளம் கொண்டவர், மாட்சிமை பொருந்திய அரசே! என் மருமகன் தவறுதலாகக் கலகக்காரர்களுடன் சேர்ந்து தங்களுக்கு எதிராக நடந்த சதியில் உடன்பட்டிருக்கிறான். அதற்காக அவன் இப்பொழுது வருந்துவதை நான் அறிவேன்."

"ஆமாம், ஆமாம். ஆனாலும் அவன் செய்த குற்றங்களுக்கு அவன் தண்டனை அநுபவித்தே ஆக வேண்டும். நான் சொல்வது புரிகிறதா?"

"மாட்சிமை பொருந்தியவரே...! நான்... அலிகுலி இப்பொழுது உங்களுக்கு விசுவாசமானவனாக இருக்கிறான்..." கியாஸ் தடுமாறியவாறு கூறினார். ஜஹாங்கீர் என்ன சொல்ல விரும்புகிறார்? வங்காளத்தில் அலிகுலி ஏதாவது தவறாக நடந்து கொண்டுவிட்டானா?

"உன் மகள் மெஹ்ருன்னிஸா மிகவும் அழகாகவும் வசீகரமாகவும் உள்ளவள். நேற்று அவளுடன் எனக்கு ஒரு மகிழ்ச்சி தரும் சந்திப்பு ஏற்பட்டது. அவள் எந்த ஒரு மனிதனின் வீட்டையும் மேன்மைப் படுத்துபவள். பார்க்கப் போனால் அவள் ஒரு பேரரசரின் மனைவியாக இருக்கத் தகுதியானவள்." ஜஹாங்கீர் வெளிப்படையாகக் கூறினார்.

கியாஸிற்குச் சிறிது சிறிதாக விஷயம் விளங்கலாயிற்று. அவரைக் கூப்பிட்டனுப்பியதன் காரணமும் புரிந்தது. ஜஹாங்கீர் தைமூர் வம்சத்தின் சட்டமான துரா—ஈ—சின்கேசி (Tura-I-Chingezi)யை தனக்குச் சாதகமாக உபயோகிக்க விரும்புகிறார். அதாவது, அலிகுலி மெஹ்ருன்னிஸாவை விவாகரத்து செய்யவேண்டும். பிறகு, ஜஹாங்கீர் அவளை மணந்து கொள்ளலாம்.

அந்தப் பொக்கிஷதாரியின் முகத்தில் கலவரரேகை படர்ந்தது. அந்த துரா-ஈ-சின்கேசிச் சட்டம் சாதாரணமாக எல்லோரும் பயன்படுத்துவதுதான். தன் மனைவியை சக்ரவர்த்திக்காக விட்டுக்கொடுப்பதும் எந்த மனிதனுக்கும் கௌரவம்தான். ஆனால், அலிகுலி பிடிவாதக்காரன், அடங்காதவன். அவன் வங்காளத்தில் பர்த்வானுக்கு

அனுப்பி வைக்கப்பட்ட பொழுது கியாஸ் இரகசியமாக நிம்மதி பெருமூச்சுவிட்டார். அவன் சக்ரவர்த்தி அருகில் இருந்தால் நிச்சயம் ஏதாவது சங்கடங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இப்பொழுது அலிகுலி தன் மனைவியை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று ஜஹாங்கீர் விரும்புகிறார். கியாஸ் பலமாக தலையை ஆட்டிக் கொண்டார். முன்னெச்சரிக்கை இல்லாமலே விஷயங்கள் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன. மெஹ்ருன்னிஸா பேரரசரின் மனைவி! இதன் மூலம் அவர்கள் குடும்பத்திற்குப் பேரும், புகழும், நல்ல வசதிகளும் வந்து சேரும். மேலும் யாருக்குத் தெரியும் — ஒருநாள் அடுத்த சக்ரவர்த்திக்கு இவர் தாத்தாவாகக் கூட இருக்கலாம். ஆனால், அலிகுலி... அவன் தவறுகளைச் சரி செய்வதற்கு இனி நேரமில்லை. அந்தப் பொக்கிஷதாரி தலை உயர்த்திச் சக்ரவர்த்தி தன் பதிலுக்காகக் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

"உங்கள் விருப்பம் எனக்கு உத்தரவு, மாட்சிமை பொருந்தியவரே! என் சக்திக்கு உட்பட்டு உங்களின் — என் மகளின் — மகிழ்ச்சிக்கு ஆக வேண்டியதைச் செய்கிறேன்." இதைத் தவிர வேறு ஒன்றும் அவரால் சொல்ல முடியாது.

ஜஹாங்கீர் சந்தோஷத்துடன் தலையசைத்தார். "நீங்கள் போகலாம்."

கியாஸ் திரும்பிச் செல்ல, ஜஹாங்கீர் திருப்தியான மன நிலையில் திளைத்தார். சீக்கிரமே அழகிய மெஹ்ருன்னிஸா அருகில் அவர் படுத்திருப்பார். கண் விழித்தவுடன் அந்த இணக்கமான, துறுதுறுப்பான உடலை அவர் அருகில் காண்பார்... அந்த வசிகரமான விழிகள் அவரை எழுப்பி விடும்.

"மாட்சிமை பொருந்தியவரே!" மஹபத்கானின் குரல் அவர் எண்ணத்தின் ஒட்டத்தைக் கலைத்தது. "என்னை மன்னிக்கவும். ஆனால்—" ஜஹாங்கீர் அவன் பக்கம் திரும்பினார். "அலிகுலியின் மனைவி பொருத்தமானவளா? அவள் பதின்மூன்று ஆண்டுகள் அவனுடன் வாழ்ந்தி

ருக்கிறாள். சந்தேகமில்லாமல் நீங்கள் அவனுக்குத் தண்டனை அளித்ததில் அவளுக்கு ஆத்திரம் ஏற்பட்டிருக்கும்."

"நீ என் நன்மை குறித்துப் பேசுவது எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது, மஹபத். ஆனால், நான் பார்த்த மாதிரி நீ அவளை நேற்று பார்க்க முடிந்திருந்தால் — அழகு, வசிகரம், நளினம், எல்லாம் அவள் உருவில்-ஏன், அவள் பெண்மையின் சாரம்" ஜஹாங்கீர் சட்டென்று பேசுவதை நிறுத்தினார்.

"மாட்சிமை பொருந்தியவரே! தயவு செய்து உங்கள் விருப்பத்தைப் பரிசீலனை செய்து பாருங்கள்."

ஆனால், எவ்வளவு முயன்றும், ஜஹாங்கீரை அவர் எண்ணத்திலிருந்து மாற்ற மஹபத் கானால் முடியவில்லை. பெண்களின் சூரியன், மெஹ்ருன்னிஸா, அவரை கவர்ந்து விட்டாள். அவள் அவரது உடைமை ஆகும் வரை அவர் ஓயமாட்டார்.

நேற்றிரவு அவர்கூடத் தூக்கமில்லாமல் மெஹ்ருன்னிஸாவைப் பற்றி எண்ணியவாறு இருந்தார். கியாஸின் பேத்திக்குத் தன் மகன் குர்ரம்—ஐ திருமணம் செய்ய முடிவு செய்கையில், அவர் அந்தத் திவானைக் கௌரவிப்பதாகவே எண்ணினார். கியாஸ் மெஹ்ருன்னிஸாவின் தந்தை என்பதை அவர் அறிவார். இந்தத் திருமணத்தினால் மெஹ்ருன்னிஸாவும் கௌரவம் அடைவாள் என்று உணர்ந்தார். ஆனால், நிச்சயதார்த்த விழாவில் அவளைச் சந்திக்கக் கூடும் என்ற எண்ணம் எப்படியோ அவருக்குத் தோன்றவேயில்லை. அவள் சாம்ராஜ்ஜியத்தின் கிழக்குக் கோடியில் வங்காளத்தில் இருக்கிறாள். இருந்தாலும், இவ்வளவு தூரம் பயணித்து இந்த விழாவிற்காக லாகூருக்கு வந்திருக்கிறாள். அவளைக் கண்ட மாத்திரத்திலேயே அவருள் ஒரு நெருப்புக் கொழுந்து விட்டெறிய ஆரம்பித்து அவரையே விழுங்கி விடும் போலிருந்தது. இத்தனை ஆண்டுக் காலம், அவள் ஒரு கனவாக, தூரத்திலுள்ள ஒரு நினைவாக இருந்தாள். அவளை அவர் எதிரே கண்டவுடன், தனக்கு ஏன் அவள் மேல் அவ்வளவு தீவிரக் காதல் ஏற்பட்டது என்று அவருக்கு

புரிந்து போயிற்று. இப்பொழுது இதிலிருந்து மீளமுடியாது அலிகுலி களைந்தெறியப்பட வேண்டியவன்.

துரா—ஈ—சின்கேசியைப் பிரயோகப்படுத்துவதில் அவருக்கு ஒருவித வருத்தமும் இல்லை. ஏனெனில், மஹபத்திற்கும் ஷரீபிற்கும் தெரியாமல் — தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று அவர்கள் நினைத்திருந்தாலும் அவர்கள் எல்லாவற்றையும் அறியமாட்டார்கள் — ஒரு மாதம் முன்பு ஜஹாங்கீருக்கு ஒரு கடிதம் வந்தது. நிஜாம் என்ற ஒரு அடிமைப் பையன் சொன்ன விஷயங்களை அவரது ஒற்றர்கள் அவருக்கு தெரியப்படுத்தியிருந்தனர். குஸ்ரு லாகூருக்குத் தப்பித்து ஓடுகையில் அவனுடன் சேர்ந்து கொள்ள அலிகுலி திட்டமிட்டான். அவன் மனைவிதான் அவனைத் தடுத்து நிறுத்தியிருந்தாள்.

அவள் அவருக்காக இதைச் செய்தாளா? இப்பொழுது முழு விருப்பத்துடன் அவரது அந்தப்புரத்திற்கு அவள் வருவாளா? அவருள் சந்தேகம் எழுந்தது. ஆனால், அவள் கட்டாயம் வரவேண்டும். அவர் குனிந்து கண்களை மூடிக் கொண்டார். தயவு செய்து, அல்லாவே, அவள் அவரை காதலிக்காவிடிலும் அவள் வரவேண்டும். அவள் அவருக்கு எவ்வளவு முக்கியமானவள் என்று அவர் அவளுக்கு உணர்த்துவார். பின், அவள் கண்களில் தோன்றிய ஒளி, தயங்கியவாறு அவள் அந்த அறையை விட்டு நகர்ந்து சென்றது எல்லாம் அவர் நினைவிற்கு வந்தது. நிச்சயம் இவையெல்லாம் நம்பிக்கைக்கு அறிகுறிகளே!

"என்ன விஷயம்?" முகத்தைத் திரையால் மூடியிருந்த அந்த உருவம் வினவியது. "என்ன நடந்தது?"

மஹபத்கான் சட்டென்று சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு, மணம் வீசும் மல்லிகைப் புதர் அருகே அந்தப் பெண்ணை அழைத்துச் சென்றான். சிறிது தூரத்தில், அந்த இருளில் மினுமினுத்துக் கொண்டிருக்கும் மண் அகல்களால் கரையிடப்பட்டிருக்கும் கல்நடைப் பாதையில், அந்தப்புரத்து அலிகளின் தலைவன், ஹோஷியார் கான், முன்னும் பின்னும்

நடந்து கொண்டிருந்தான். அடிக்கடி தலையைத் தூக்கி யாராகிலும் அங்கு வருகிறார்களா என்று கண்காணித்துக் கொண்டிருந்தான்.

மஹபத் அந்தப் பெண்மணி பக்கம் திரும்பினான். "மாண்பு மிக்கவரே! என்னால் சாதிக்கமுடியவில்லை. சக்ரவர்த்தி துரா—ஈ—சிங்கேசியைப் பயன்படுத்த விரும்புகிறார். அலிகுலிக்குக் கடிதம் அனுப்பச் சொல்லி கியாஸ் பெக்கிற்கு உத்திரவிட்டுள்ளார்."

ஜகத்கோஸினி நீண்ட மூச்சுவிட்டாள். "சக்ரவர்த்திக்கு அந்த மனிதனின் கபடத் தனத்தைப் பற்றி நினைவுறுத்தினாயா? அவன் இளவரசன் குஸ்குவுடன் சேர்ந்து செய்த சதியைப் பற்றிக் கூறினாயா?"

ஒன்றுமே பிரயோசனமில்லை என்பது போல் மஹபத் கான் கைகளை விரித்தான். "நான் எடுத்துக் கூறினேன், மாண்புமிக்கவரே! ஆனால், அவர் அதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். அவ்வாறு அவரை எதிர்த்துச் சதி செய்ததன் விளைவாகத்தான் அந்தச் சட்டத்தைக் கையிலெடுக்க முடிவு செய்துவிட்டார். சக்ரவர்த்தி அந்தப் பெண்ணிடம் மோகித்துப் போயிருக்கிறார்."

ஜகத்கோஸினி தீவிரமாக யோசித்தாள். சக்ரவர்த்தினியின் முகபாவத்தை மேலும் துல்லியமாகப் பார்க்க முடியாதா என்று எண்ணியவாறு மஹபத் அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அரச சபையிலுள்ள சில சக்தி வாய்ந்த உறுப்பினர்களும், அந்தப்புரத்திலுள்ள சில சக்தி மிக்கப் பெண்களும் இணைந்து செயல்பட்டுத் தான் சாம்ராஜ்ஜியத்தை நடத்திச் செல்ல முடியும் என்பதை மஹபத் அறிவான். ஒரு பக்கம் திரைக்குப் பின்னாலிருந்து இவர்கள் இயங்கச், சக்திவாய்ந்த பிரபுக்கள் அரச சபையில், முழு சபையினர் முன்னிலையில் இயங்குவர். இருவரும் இணைந்து செயல்படுவது மிகவும் சக்தியுடையதாகும். ஜஹாங்கீருக்குத் தன்னை இயக்கும் சக்தி இவைதான் என்று புரியாதபடி இந்த இணைப்பு செயல்படும்.

மற்ற சபை உறுப்பினர்களால் இதை உணர முடிந்தாலும், அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது.

மஹபத் முகத்தைச் சுளித்தான். ஜஹாங்கீர் சக்ரவர்த்தியான பிறகு அவரைக் கட்டுப்படுத்துவது மேலும் மேலும் கடினமாகிக் கொண்டு வருகிறது. தன் தலையில் அரசருக்கே உரிய தலைப்பாகை ஏறியபின், இதுவரை மற்றவர்கள் பேச்சைக் கேட்டு நடந்து வந்த இளவரசர், இப்பொழுது தானே எல்லா முடிவுகளையும் எடுக்கும் அளவிற்கு வந்து விட்டார். அவர் யோசித்துக் கணித்த நன்னடத்தை முறைகள் பற்றிய சாசனத்தை வெளியிட்டார். நியாயம் கோரி வர, "நியாயச் சங்கிலி" அமைத்தார், மேலும், சாம்ராஜ்ஜியத்திலுள்ள எல்லோருடைய தனிப்பட்ட விஷயங்கள் பற்றித் தெரிந்து கொள்ளத் துவங்கிவிட்டார். முன்போல் அவர்களது செல்வாக்கு இப்பொழுது பலிப்பதில்லை. மெஹ்ருன்னிஸாவைத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்திலிருந்து ஜஹாங்கீரை எப்படியாவது தடுக்கச் சொல்லி ஜகத்கோஸினி அவனிடம் கேட்டுக் கொண்டபோது, அவனும் சம்மதித்தான். சக்ரவர்த்தினி அவன் பக்கம் இருந்தால், ஜஹாங்கீரின் பல தன்னிச்சைச் செயல்களை தடுத்து நிறுத்தி, மறுபடியும் அவர்கள் இஷ்டம்போல் சாம்ராஜ்ஜியத்தை இயக்கலாம்.

"இப்பொழுது என்ன செய்யலாம், மஹபத்?" ஜகத் கோஸினி முடிவாகக் கேட்டாள்.

"எல்லாம் முடிந்த விடவில்லை, மாண்பு மிக்கவரே!" தன் ஒல்லியான, வெப்பத்தால் கருத்திருந்த முகத்தில் சுருக்கங்கள் தோன்ற மஹபத் மெதுவாகப் புன்னகைத்தான். "அலிகுலி சக்ரவர்த்தியின் உத்தரவிற்கு அடிபணியவேண்டும். அவன் அப்படி அடிபணிவதற்குச் சாத்தியமே இல்லை."

"நீ அப்படி நினைக்கிறாயா?" குரலில் சிறிது நம்பிக்கையுடன் ஜகத்கோஸினி வினவினாள்.

மஹபத் தலையாட்டினான். "ஆமாம். நான் நம்புகிறேன். அவன் நிச்சயம் கோபம்கொண்டு ஏதாவது சங்கடம் கொடுக்க நினைப்பான். அவனே அப்படி செய்யாவிடினும், நாம் அவனைச் சிறிது தூண்டிவிடலாம், மாண்புமிக்க அரசி!" மஹபத் கூறினான். "அலிகுலி ஒரு போர் வீரன். அவனுக்கு ராஜதந்திரம் தெரியாது. தன் மனைவியைச் சக்ரவர்த்திக்கு விட்டு கொடுப்பதுதான் விவேகம். ஆனால், அவன் நிச்சயம் இந்த முடிவை எதிர்ப்பான். நாம் பொறுத்திருந்து பார்ப்போம்."

ஜகத்கோஸினி உதட்டைக் கடித்துக் கொண்டாள். "நீ அப்படி நம்பினாயாகில் சரிதான், மஹபத்! என் விருப்பங்களை நீ நிறைவேற்றுவாய் என்று நம்புகிறேன்." அவள் அவனைத் தீவிரமாகப் பார்த்தாள்.

"இது நிச்சயம் நடக்கும், மாண்பு மிக்கவரே." மஹபத் வணங்கினான். "நான் இப்பொழுது புறப்பட வேண்டும். நம் இருவரையும் சேர்ந்து ஒருவரும் பார்க்கக் கூடாது." ஆனால், மறுபடியும் அவள் பக்கம் திரும்பினான். "நான் ஒன்று கேட்கலாமா? மெஹ்ருன்னிஸாவிடம் ஏன் இத்தனை அக்கறை? நிச்சயம் அவள் உங்களுக்கு ஒரு சவாலாக இருக்க முடியாது. இதுவும் அனார்கலியுடன் ஏற்பட்டது போல்தான். சக்ரவர்த்தியின் மனம் அடிக்கடி அலைபாயும் என்று நம் எல்லோருக்கும் தெரியுமே..." அவன் வார்த்தையை முடிக்காமலே அவளை ஏறிட்டு நோக்கினான்.

சிறிது நேரம் அனார்கலியைப் பற்றி நினைத்தவாறு இருவரும் மௌனமாக இருந்தனர். "மாதுளை மொட்டு." — அக்பர் தன் ஒரு வைப்பாட்டிக்கு கொடுத்திருந்த பெயர். 1598—ல் லாகூரில் அக்பர் அவை தங்கியிருந்த பொழுது, கண்ணாடி அறையில் (Hall of Mirrors) இளவரசன் ஸலீமும் அனார்கலியும் சரசமாடிக் கொண்டிருந்ததை அக்பர் கண்டார். அக்பருக்கு அனார்கலி முதுகு பிடித்து விட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அவள் இளவரசன் ஸலீமைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருப்பது அவர் முன்னிருந்த கண்ணாடியில் பிரதிபலிப்பதை அக்பர் கண்டார். அக்பர் பெரிதும் கோபம் கொண்டு, உடனே அவளைக் கல்லறையில் உயிருடன் சமாதி கட்டச் சொல்லி உத்திரவிட்டார்.

"இது அதைவிடத் தீவிரமானது" ஜகத்கோஸினி கூறினாள். "இறந்து போன பெண்ணுடன் என்னால் போட்டி யிட முடியும். அவள் இறந்து போனதினால்தான் அவன் மேலுள்ள சக்ரவர்த்தியின் காதல் அதிகமானது. நிழலை நினைத்து அன்பு செலுத்தலாம். அவள் கூடவே இருந்தால் சின்னச் சின்ன விவாதங்கள் வரும், காதலும் குறைந்து விடும்." ஜகத்கோஸினி வரட்சியாகப் புன்னகைத்தாள்.

"அப்படியானால் உங்கள் வாதத்தின் படியே சக்ரவர்த்தி மெஹ்ருன்னிஸாவை விரும்பும் விஷயத்திலும் தலையிட வேண்டாமே! அவர்கள் திருமணம் செய்து கொள்ளட்டும். சில மாதங்களில் அவருக்கே அவள் அலுத்துப் போய் விடுவாள்."

இவனிடம் எவ்வளவு சொல்லலாம் என்று யோசித்தபடி சக்ரவர்த்தினி மஹபத்தைப் பார்த்தாள். இவனிடம் சிறிதாவது தெரிவிக்க வேண்டும். இல்லாவிடில் இவன் உதவ மாட்டான். ஜஹாங்கீரைத் தன்னால் தடுத்து நிறுத்த முடியாதென்று ஜகத்கோஸினிக்குத் தெரியும்! முடிவில் அவள் கூறினாள். "மெஹ்ருன்னிஸா ஒரு விதத்தில்... வித்தி யாசமானவள். அந்தப்புரத்திற்கு அவள் வருவது எனக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கும் — உனக்குக் கூடத்தான்."

மஹபத் மெத்தனமாகச் சிரித்தான். "எனக்கு? அவளால் என்ன செய்யமுடியும், மாண்பு மிக்கவரே? சக்ரவர்த்தி என்னிடம் முழு நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். சிறுவயதிலிருந்தே நாங்கள் ஒன்றாக வளர்ந்தவர்கள். அவருக்கு என்னிடம் இருக்கும் நம்பிக்கையை உடைப்பது எளிதல்ல."

"என்னிடம் சொல்" ஜகத்கோஸினி அவனைப்பார்த்தாள். "இந்தப் பெண்ணிடம் முன்பே ஒருமுறை அடங்கா மோகம் கொண்டிருந்தது சக்ரவர்த்திக்கு நினைவில் இருக்கிறதா?"

மஹபத் யோசனையுடன் தலையசைத்தான். ஜகத் கோஸினியின் குரலில் இருந்த தீவிரம் கடைசியாக அவனுக்கு உரைத்தது. இந்தப் பெண்ணிடம் சக்ரவர்த்தினி பயப்

படுகிறாள். மெஹ்ருன்னிஸாவினால் அவர்கள் எல்லோ ருக்குமே ஆபத்து உண்டென்று நம்புகிறாள். இது எப்படி சாத்தியமாகும் என்று அவனுக்குத் தோன்றினாலும் ஜகத் கோஸினியிடம் அவனுக்குள்ள நம்பிக்கை இப்பொழுது அவள் கூறுவதையும் நம்பவைத்தது.

"நல்லது. அப்படியானால் சக்ரவர்த்திக்கு அதைப் பற்றி நினைவுறுத்தக் கூடாது." ஜகத்கோஸினி கூறினாள். "இப்பொழுது கிளம்பிச் செல், மஹபத். ஹோஷியார் கான் நம்மை நோக்கி வருகிறான். யாரோ தோட்டத்திற்குள் வருவது போல் தோன்றுகிறது."

"பொறுமையுடன் இருங்கள், மாண்பு மிக்கவரே! நமக்கு இன்னும் நேரம் இருக்கிறது. என்ன நடக்கிறதென்று பொறுத்திருந்து பார்ப்போம்." இவ்வாறு கூறிவிட்டு அந்தப் புறத்துத் தோட்டத்திலிருந்து மஹபத் வெளியேறினான்.

பூங்காவின் கோடியிலிருந்த வளைவுகளைக் கடந்து அவன் செல்லும் வரை சக்ரவர்த்தினி பார்த்தபடி இருந்தாள். பின் அங்கிருந்த கல்மேடையில் சாய்ந்தவாறு, விளக்கு வெளிச்சத்தின் நிழலில் அமர்ந்து கொண்டாள். அந்தப்புரத்து பகுதிக்குள், மிகவும் அபாயகரமானது என்று தெரிந்தும், துணிந்து, அவளைச் சந்திக்க மஹபத் வந்திருக்கிறான். எப்படியோ வழியில் உள்ள சிலருக்கு லஞ்சம் கொடுத்து ஹோஷியார் இந்தக் காரியத்தை சாதித்திருக்கிறான்.

அவள் பின்புறம் இருந்த புதர்களில் மலர்ந்திருந்த மலர்களின் நறுமணம் இரவுக் காற்றில் கலந்து பரவி, அவளை மூச்சு திணற வைத்தது. ஜகத்கோஸினி தன் கைகளை வெறித்துப் பார்த்தாள். இது மிகவும் அபாயகர மானது என்று தெரிந்தும் அவளும் துணிச்சலுடன் வந்தி ருக்கிறாள். வெளிமனிதன் ஒருவனுடன் அவளை யாராவது பார்த்து விட்டால், அவள் பாதுஷா பேகமானாலும் சரி, அவன் ஒரு சக்திவாய்ந்த மந்திரியானாலும் சரி, அவர்கள் சந்திக்க வேண்டிய அவசியத்தை வெளியே கூறமுடியாத நிலையில், அது மிகவும் ஆபத்தில் கொண்டுவிடும். இவர்கள் சந்திப்பை பற்றி அறிந்தால், ஜஹாங்கீர் பெரிதும் ஆத்திர

மடைவார். அவள் கைகள் நடுங்க ஆரம்பித்தன. அவன் கைகளைக் கட்டிக் கொண்டாள். முதன் முறையாக அந்தப் புரத்துக்கு வெளியே உள்ளவர்களிடமிருந்து உதவி கோர வேண்டிய நிலை வந்திருக்கிறது — எல்லாம் இந்த மெஹ்ருன்னிஸாவால்தான்.

வெறுப்பு அவளுக்குள் நெருப்புப் போல் கொழுந்துவிட்டு எரிந்தது. அவளுடைய தெளிந்த புத்தி இது ஒரு அர்த்தமில்லாத வெறுப்பு என்று அவளுக்கு உணர்த்தியது. அந்தப் புரத்தில் அமைதியானவளாக, பொறுமையுடனும் விவேகத்துடனும் இருப்பது போல் எப்பொழுதும் நடிக்க வேண்டியிருப்பதால், அவளது வெளிகாட்ட முடியாத ஆத்திரம், வெறுப்பு போன்ற உணர்ச்சிகள் இப்பொழுது மெஹ்ருன்னிஸா பக்கம் திரும்பியுள்ளது. பொறாமை, ஆம், பொறாமையும் தான். இத்தனை வருடங்கள் ஆனபின்பும் மெஹ்ருன்னிஸா மேல் கொண்ட ஆசை குறையாமல், அவள் கணவன் இன்னும் அவளிடம் அளவற்ற மோகம் கொண்டுள்ளதைக் கண்டபின் அவளையே விழுங்கி விடுவதுபோல், ஜகத்கோஸினிக்குப் பொறாமை உணர்ச்சி தோன்றியது. அந்தப் புரத்தில் பல பெண்களுடன் ஜஹாங்கீர் ஆசையோடு பழகினாலும் ஜகத்கோஸினியிடம் ஒரு தனிப்பட்ட அன்பு வைத்திருந்தார். மெஹ்ருன்னிஸாவின் மூலம் அந்த அன்பிற்கும் பங்கம் வந்து விடுமோ என்று ஜகத்கோஸினி அச்சமடைந்தாள். முக்கியமாக, மெஹ்ருன்னிஸா ஒரு இராஜகுமாரி இல்லை. பெரிய கீர்த்தி பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவளும் அல்ல. அவள் தந்தை தற்சமயம் என்ன பதவியிலிருந்தாலும், பாரசீகத்திலிருந்து அடைக்கலம் தேடி வந்தவர். இருந்தாலும் ஜஹாங்கீர் அவளை அடையத்துடிப்பது, அவள் மேல் உள்ள தீவிரமான காதலினால்தான்.

மேலும், மெஹ்ருன்னிஸா ருக்கையாவால் ஆதரிக்கப்பட்டவள். என்ன நடந்தாலும், அந்தப்புரத்தில் அந்த இரண்டு பெண்களின் நிலை தன்னுடையதை விட மேலே உயர்வதற்கு ஒரு பொழுதும் அநுமதிக்கக் கூடாது என்பதில் ஜகத் கோஸினி உறுதியாக இருந்தாள். மெஹ்ருன்னிஸாவினால்

மஹபத் கானுக்கும் ஆபத்து வரலாம் என்று வேண்டுமென்றே அவனிடம் கூறினாள். அப்பொழுதுதான் அவன் அவளுக்கு உதவி செய்வான்.

தூதிரையை மெதுவாகச் செலுத்தியபடிக் கியாஸ்பெக் வீட்டிற்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தார். சக்ரவர்த்தி மறைமுகமாக அவரது விருப்பத்தை உணர்த்தியதைக் குறித்து யோசித்தவாறு சென்றார். அவர் மகள் சக்ரவர்த்தியின் மனைவி! அவர் பேத்திக்கும் இளவரசன் குர்ரமிற்கும் நடந்த நிச்சயதார்த்தம் இந்த விஷயத்துடன் ஒப்பிட்டால், ஒன்றுமே இல்லை.

சட்டென்று அவர் நிதானத்திற்கு வந்தார். இதைப் பற்றி எல்லாம் நினைத்து மகிழ்ச்சியடைவது சரிதான். ஆனால், மறுபடியும் அவர் அலிகுலி பற்றி மறந்துவிட்டார். சண்டை யில்லாமல் மெஹ்ருன்னிஸாவை அவன்விட்டுக் கொடுப் பானா? அவர்கள் இருவரும் ஜோடிப் பொருத்தமில்லாதவர்கள். பல வருடங்களுக்கு முன்பே அவரால் இதை அறிந்துகொள்ள முடிந்தது. ஆனால், மெஹ்ருன்னிஸா இதைப்பற்றி ஒருமுறை கூட அவரிடம் முறையிட்டதில்லை.

அந்தப் பொக்கிஷதாரி வீட்டை அடைந்தவுடன், அவருக்காக ஒரு அரச சபை அதிகாரி காத்திருப்பதை அறிந்தார். அந்த அதிகாரியின் பெயரைக் கேட்டவுடன் மகிழ்ச்சியுடன் வரவேற்பு அறைக்குச் சென்று அவரைச் சந்தித்தார். அவர் கூறியவைகளைக் கேட்டபின் அவர் விருப்பப்படியே காரியங்களை முடித்துக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்தார். அந்த மனிதனும் மகிழ்ச்சியடைந்து. தங்கக் காசுகள் நிறைந்த ஒரு கனமான பையைக் கொடுத்து விட்டு விடை பெற்றுக் கொண்டான். அவன் சென்றவுடன், தன் பெண்ணை வரச் சொல்லிக் கூப்பிட்டனுப்பினார். பின் அந்தப் பையை ஒரு பட்டுத் துணியில் கவிழ்த்து, அந்தத் தங்க காசுகளை ஆசையுடன் தடவிக் கொடுத்தார். அவர் காசுகளை எண்ணிக் கொண்டிருக்கையில், முகத்தில் புன்னகையுடன் மெஹ்ருன்னிஸா உள்ளே வந்தாள்.

மெஹ்ருன்னிஸா திடுக்கிட்டு நின்றுவிட்டுக் கேட்டாள் "இவை எல்லாம் எங்கிருந்து உங்களுக்கு கிடைத்தது?"

"ஓ, நீ வந்து விட்டாயா, வா, வந்து உட்கார், நிஸா" கியாஸ் தங்கக் காசுகளைத் திரும்பவும் பையில் வைத்து அதைப் பத்திரமாகப் பணப்பெட்டியில் வைத்துப் பூட்டினார். சாவியைத் தன் இடுப்புப் பட்டையில் செருகியவாறு திரும்புகையில், தன் பெண்ணின் முகத்தை கவனித்தார்.

"என்ன விஷயம், என் அருமை மகளே?"

"அந்தக் காசுகள் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன, தந்தையே?"

"அரச சபை உறுப்பினர் ஒருவர் தன் மகனுக்கு இராணுவத்தில் ஒரு வேலை வேண்டுமென்று கேட்டார். நானும் இராணுவத் தலைமை அதிகாரியுடன் பேசுவதாக வாக்களித்திருக்கிறேன்."

"அப்படியானால், நீங்கள் லஞ்சம் வாங்கியிருக்கிறீர்கள்!" அவள் குரல் அவரைக் கடிந்து கொள்வது போலும், அதே சமயம், சிறிது பயத்துடனும் ஒலித்தது.

கியாஸ் குறுகிப் போனார். "லஞ்சம் அல்ல மகளே, அது ஒரு அசிங்கமான வார்த்தை! இப்படிச் சொல்லலாம்... அவருக்கு நான் செய்யும் உதவிக்கு ஒரு சன்மானம்."

"லஞ்சம்தான்" அவள் அடித்துக் கூறினாள். "அப்பா, உங்களால் எப்படி முடிந்தது? சக்ரவர்த்திக்குத் தெரிய வந்தால், அது உங்களுக்கு ஆபத்து என்று உங்களுக்குத் தெரியாதா? பாரசீகத்திலிருந்து எந்தக் காரணத்திற்காக ஓடி வந்தீர்கள் என்பது மறந்துவிட்டதா?"

தன்னைக் குற்றம் சாட்டுவது போல் அவள் பார்க்கும் பார்வையிலிருந்து கியாஸ் மறுபக்கம் திரும்பிக் கொண்டார். அவரால் என்ன சொல்ல முடியும்? அவரை இந்த நிலையில் அவள் பார்த்து விட்டதைக் குறித்துச் சிறிது அவமானமாக இருந்தது. ஆனால், அதிகாரம் படைத்த எல்லா அரசசபை உறுப்பினர்களும் இவ்வாறு செய்வது சகஜம்தான் என்பது அவளுக்கும் நிச்சயம் தெரிந்திருக்கும். தன் குழந்தைகளை

எப்பொழுதும் உண்மையாகவே நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லி அவர் வளர்த்திருக்கிறார். ஆனால், இப்பொழுது அவரே இத்தகைய காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார். அதற்கு எந்த சாக்கு வேண்டுமானாலும் சொல்லலாம் — அவர் விரும்பினால் ஆயிரம் காரணங்கள் கூறலாம் — இப்படித்தான் எங்கும் நடக்கிறது. அரச சபையில் வாழ்க்கை இப்படித்தான் கொடுப்பதும் பெறுவதுமாகத்தான் இருக்கிறது. ஒருவன் ஏதாவது சன்மானம் பெற்றுக் கொண்டு, அந்த மனிதனுக்கோ மற்றவர்களுக்கோ உதவுகிறான்.

"பாரசீகத்தில் நடந்தது வேறு மாதிரியானது" கியாஸ் கூறினார்.

"அப்படி ஒன்றுமில்லை. நீங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாததால்தான் அங்கிருந்து ஓடிவர வேண்டி வந்தது. உங்கள் தந்தை இஸ்வாஹானின் "வசீர்" (பிரதிகாரி)யாக இருந்ததைப் பயன்படுத்தி நீங்கள் நடந்து கொள்ளவில்லையெனில் உங்கள் கடன் சுமை அதிகரித்திருக்காது."

கியாஸ் வருத்தத்தினால் தனக்குள் புலம்பிக்கொண்டார். அவர் குடும்பத்தில் எவருக்குமே அவரிடம் இவ்வளவு காரியமாகப் பேசத் துணிச்சல் கிடையாது — அஸ்மத்திற்குக் கூட! ஆனால், மெஹ்ருன்னிஸா அப்படிப் பட்டவள் அல்ல. முதலிலிருந்தே அவர் அவளை வெகுவாக நேசித்தார். மற்றக் குழந்தைகளுக்கு இல்லாத பல உரிமைகளைக் கொடுத்தார். அரச சபையில் சாதாரணமாக நடக்கும் இத்தகைய விஷயம் பற்றி இப்பொழுது அவள் இவரை குற்றம் சாட்டுகிறாள்.

"உனக்கு புரியாது, மகளே" அவள் கைகளைப் பற்றிக் கொண்டு சுற்றுமுற்றும் நோட்டம் விட்டவாறு கூறினார். "இவ்வளவு வசதிகள் நமக்கு எப்படி வந்தது என்று நீ எண்ணுகிறாய்? பொக்கிஷச்சாலைத் தலைமை அதிகாரியாக எனக்கு நல்ல வருமானம் வருகிறது. ஆனால், அந்தப் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள பல கேளிக்கைகளும், விருந்துகளும் கொடுக்க வேண்டிய நிலையில், அதற்கானச்

செலவு செய்ய என் வருமானம் போதாது. இதைப்பற்றி எல்லாம் நீ கவலைப்படாதே! வேறு ஒரு விஷயத்திற்காக உன்னை இங்கு வரச் சொன்னேன்.

தயக்கத்துடன் மெஹ்ருன்னிஸா தலையசைத்தாள். "என்ன விஷயம்?"

"சக்ரவர்த்தியைச் சந்தித்துவிட்டு இப்பொழுதுதான் திரும்பி வந்திருக்கிறேன்."

சிரத்தை இல்லாத பார்வை அவள் முகத்தில் படர்ந்தது. அவள் தந்தை தொடர்ந்து பேசுவதற்காகக் காத்திருந்தாள்.

"நேற்று என்ன நடந்தது? நீ ஏன் என்னிடம் கூறவில்லை?" கியாஸ் வினவினார்.

"சொல்வதற்கு ஒன்றும் இல்லை." மெஹ்ருன்னிஸா மெல்லிய குரலில் கூறினாள். "மேலும் நேற்று இரவு வெகு நேரமாகிவிட்டது. இன்று காலை நீங்கள் சீக்கிரம் கிளம்பி வீட்டீர்கள். அம்மா, ஒரு வேளை சொல்லியிருப்பாள்... நான் உங்களிடம் என்ன சொல்லியிருக்க முடியும், அப்பா?" முடிவில் அவள் சொல்லி நிறுத்தினாள். "நான் சக்ரவர்த்தியைச் சந்தித்தேன். அந்தப்புரப் பகுதியில் அவரைப் பார்த்தேன். அவ்வளவு தான்."

"அது போதும், சக்ரவர்த்தி ஒரு கடினமான திட்டத்தை என்னிடம் கூறியுள்ளார். "துரா—ஈ—சின்கேசியை அமல் படுத்த விரும்புகிறார்."

மெஹ்ருன்னிஸா முகத்தில் இரத்தம் சுண்டியது. "என் கணவர் ஒரு பொழுதும் சம்மதிக்கமாட்டார் அப்பா."

"நீ?" கியாஸ் அவளை நோக்கினார். "நீ என்ன விரும்புகிறாய்?"

மெஹ்ருன்னிஸா யோசனையுடன் தலையை ஆட்டினாள். சிறுவயதிலிருந்தே, அவள் பேசத் தொடங்கிய நாளிலிருந்தே, அவர் கால்களில் சாய்ந்து கொண்டு, அவர் முகத்தைப் பார்த்தவாறு, அவரது இனிமையான குரலைக் கேட்டவாறு, அவருடன் அவள் பல விஷயங்களைப் பற்றிப்

பேசியிருக்கிறாள். ஆனால், ஒரே ஒரு விஷயம் பற்றி அவர்கள் பேசியதே இல்லை. அலிகுலி பற்றியும் அவனுடன் அவள் திருமணம் பற்றியும். தந்தையிடம் அவளால் கூற முடியாத மற்றொரு விருப்பமும் அவளுக்குள் உண்டு. அவள் துஹாங்கிரின் மனைவியாக பெரிதும் விரும்புகிறாள். இப்பொழுது அந்த ஏக்கம் எவ்வளவு உண்மையானது என்று சட்டென்று அவளுக்குப் புரிந்தது. அவர் பேரரசர் என்பதற்காகவோ, பலவித வசதி வாய்ப்புகளுக்காகவோ, அல்லது அவருக்கிருக்கும் அதிகாரத்திற்காகவோ, — மிகச் சிறிதளவு இவை யாவற்றிற்குமேயானாலும் — அவள் அவரை நேசிக்க வில்லை. அவர் புன்னகை, அவர் பேச்சிலுள்ள இனிமை, சாம்ராஜ்ஜியத்தின் மேல் அவருக்குள்ள தீவிரப் பாசம், இவைகள் அவளைக் கவர்ந்தன. தன் விருப்பத்திற்காக எதையும் செய்யக் கூடிய இந்த மனிதனுக்கு அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒருத்தியாகத் தான் இருக்க ஆசைப்பட்டாள். அப்படிப்பட்ட ஆழ்ந்த காதலை அவள் அனுபவிக்க விரும்பினாள். ஆனால், அவள் தந்தையிடம் கூறியதென்னவோ, இதுதான். "உங்கள் விருப்பம் போல் தான் நடந்து கொள்வேன், அப்பா."

கியாஸ் பெருமூச்சு விட்டார். அவளுக்குரிய கடமைக்கு அவள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று அவர் போதித்திருந்த மாதிரியே இப்பொழுது பதில் கூறியிருக்கிறாள். அந்த மறுமொழியைத்தான் அவர் அவளிடமிருந்து எதிர் பார்த்தார். சக்ரவர்த்தி கூறிய திட்டம் எவ்வளவு கவர்ச்சி யானதாகிலும், சட்டத்திற்கு உட்பட்டதாக இருந்தாலும் கியாஸிக்கும், ஏன், மெஹ்ருன்னிஸாவிற்கும் கூடத், தங்கள் இஷ்டம்போல் நடந்து கொள்வதற்கும், நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ப நடப்பதற்கும் உள்ள வித்தியாசம் தெரிந்ததுதான். கியாஸ் லஞ்சம் வாங்கும்பொழுது அவர் மனம் பெரிதும் சங்கடப்படவில்லையானாலும், அவர் மகளிடம் உண்மையையும், விசுவாசத்தையும் அவர் எதிர் பார்த்தார். இது சரியல்லதான் ஆனால், வாழ்க்கையே இப்படிப்பட்டது என்பதையும் அவர் அறிவார். தான் எப்படிப்பட்ட ஒழுக்கமான மனிதனாக இருக்க வேண்டும்

என்று அவர் விரும்பி இருந்தாரோ, அப்படி ஒழுக்கத்துடன் கூடியவளாகத் தன் மகள் இருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார்.

"உன் இடம், உன் கணவனுடன்தான், மெஹ்ருன்னிஸா. நிலைமை வேறு மாதிரியாக இருப்பதில் எனக்கும் விருப்பம் தான். பல வருடங்களுக்கு முன்னால் இது நடந்திருந்தால் வேறு மாதிரியாக இருந்திருக்கும்—"

"வேண்டாம்!" அவர் தோள்களில் ஆதரவாக மெஹ்ருன்னிஸா ஒரு கையை வைத்தாள். "நீங்கள் சங்கடப்படாதீர்கள். நீங்கள் அலிகுலிக்கு என்னைத் தாரை வார்த்துக் கொடுத்தீர்கள். அந்தச் சத்தியத்தை நீங்கள் தொடரவேண்டும். அது சக்ரவர்த்தி அக்பரின் விருப்பம். என் இடம், என் கணவர் பக்கத்தில்தான்! என்னை என்ன செய்ய வேண்டும் என்று அவர்தான் முடிவெடுக்க வேண்டும். இப்பொழுதே பர்த்வானுக்குப் புறப்பட நான் தயாராகிறேன்."

கியாஸ் வருத்தத்துடன் அவளைப் பார்த்தார். அவர் மகளுக்குத் தந்தையின் வீட்டிலிருந்தே அவசரமாகச் செல்ல வேண்டிய நிலமை. ஆனால், அதுதான் சரியானதாகும். ஒரு வேளை பார்க்க முடியாத தூரத்தில் இருந்தால், நாட்கள் செல்லச் செல்லச் சக்ரவர்த்தி மெஹ்ருன்னிஸாவை மறந்து விடலாம். தந்தையும் மகளும் மௌனமாக அமர்ந்திருந்தனர். முகலாய சாம்ராஜ்ஜியத்தின் சக்ரவர்த்தினியாக இருக்கும் பெருமை அவர்கள் கனவில்கூட எண்ண முடியாததுதான். ஆனால், அலிகுலி அதற்குத் தடையாக இருக்கிறான். இருவர் மனதிலும் ஒரே விதமான எண்ணங்கள், ஒரே சமயத்தில் எழுந்தன, ஆனால், இடையே பகிர்ந்து கொள்ள முடியாத எண்ணங்கள். எப்பொழுதும் அவர்களிடையே இருந்த ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் திறமை, இப்பொழுதும் அவர்களை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கச் செய்தது.

கியாஸ் கடிதம் எழுதுவதற்கானப் பொருட்களை எடுத்து வரச் சொல்லிப் பணியாளை உத்தரவிட்டார். இது உடனே செய்யப்படவேண்டும். மெஹ்ருன்னிஸாவைத் தான்

திருமணம் செய்து கொள்ள விரும்புவதை ஜஹாங்கீர் மறைமுகமாகத் தெரிவித்துள்ளார். அது பற்றி அவரது மருமகனுக்குத் தெரியப்படுத்த வேண்டியது கியாஸின் கடமை.

அலிகுலி நிச்சயம் ஜஹாங்கீரின் விருப்பத்தை எதிர்ப்பான். சக்ரவர்த்தி இதை எப்படி எடுத்துக் கொள்வார்? அவர் இன்னும் பிடிவாதக் குணம் உடையவராகத்தான் இருக்கிறார். சக்ரவர்த்தியான பின்பும் அவரது சிறுவயதுக் குணங்கள் மாறவில்லை. ஏற்கெனவே அவரை எதிர்த்துச் சதி செய்த ஒருவன் மறுபடியும் அவர் விருப்பத்திற்கு எதிராகச் செயல்புரியத் துணிந்தால், அவர் என்ன நடவடிக்கை எடுப்பார்?

கியாஸ் பெருமூச்சு விட்டவாறு கடிதம் எழுதத் தொடங்கினார். அவர் நிறுத்தி, நிறுத்தியும் இடையிடையே எப்படி மரியாதையுடனும் இங்கிதமாகவும் எழுதுவது என்று யோசித்தும், ஒருவாறு கடிதத்தை எழுதி முடித்தார். அவர் எப்படி எவ்வளவு இங்கிதமாக எழுதினாலும் நிச்சயம் விபரீத விளைவுகள் வரும் என்று அவருக்குத் தெரியும். அல்லாவின் கருணையிருந்தால், கியாஸின் பல ஆண்டுக்காலச் சேவைகளையும் சாம்ராஜ்ஜியத்தின் மேல் அவர் காட்டும் விசுவாசத்தையும் ஜஹாங்கீர் நினைவு கூர்ந்து, இதற்காக அவர் குடும்பத்தைப் பழி வாங்க மாட்டார்.

அடுத்த நாள் காலை, லாட்லியுடன் பர்த்தவானுக்குச் செல்ல மெஹ்ருன்னிஸா புறப்பட்டாள். அலிகுலிக்கு எழுதிய கடிதத்தையும் எடுத்துச் சென்றாள். அந்த கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறதென்று கியாஸ் அவளிடம் சொல்ல வில்லை. ஆனால், சக்ரவர்த்தியின் விருப்பத்தைத்தான் அவர் அந்த கடிதத்தில் எழுதியிருப்பார் என்று அவளுக்குத் தெரியும்.

இனிமேல் அவள் கணவன்தான் முடிவெடுக்க வேண்டும்.

அத்தியாயம் பதினைந்து

இந்த மனதிற்குத் துக்கம் தரும் விஷயம் பற்றி நான் என்ன எழுத முடியும்? எவ்வளவு துக்கத்திற்கும், வருத்தத்திற்கும் உள்ளானவ னாக நான் ஆனேன்! குத்புதீன் கான் கோக்கா எனக்குப் பிரியமான மகன் போன்ற இடத்தில், ஒரு அன்பு மிக்க சகோதரன் போல், ஒரு மனம் ஒத்த நண்பன் போல் இருந்தான். கடவுளின் தீர்ப்பிற்கு மனிதன் என்ன செய்ய முடியும்?

- **A. ROGERS,** trans, and H. BEVERIDGE, ed.,
The Tuzuk-i-Jahangiri

சபதமிட்டவாறு முனகிக்கொண்டே, பல்லக்கிலிருந்து மெஹ்ருன்னிஸா இறங்கினாள். பல்லக்கின் ஆட்டத்தினால் அவள் உடலின் ஒவ்வொரு தசை நாரும் சோர்ந்து போய், வலித்தது. பர்த்தவானுக்கு வந்துசேர அது ஒருநீண்ட, இரண்டு மாதக் காலப் பயணம் ஆனால், லாகூருக்குச் செல்லுகையில் இதைவிடச் சுலபமாகத் தோன்றியது. ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போகிறோம் என்ற ஆவலினால் போலும். இந்தத் திரும்பி வரும் பயணம் உடல்ரீதியாகவும், மனதளவிலும் மிகவும் களைப்படையச் செய்துவிட்டது. ஆக்ராவை விட்டு வெகுதூரம் செல்லச் செல்ல, இனிமேல் ஜஹாங்கீரைப் பார்க்கவே முடியாதோ என்ற எண்ணம் வலுத்தது.

அவளது மூர்க்கத்தனமான கணவனை எதிர்கொள்வதற்கு மறுபடியும் வங்காளத்திற்கு வருவதில் அவளுக்கு விருப்ப மில்லை. சக்ரவர்த்தியை இவள்தான் கவர முயற்சிக்கிறாள் என அவன் நிச்சயம் பழிகூறுவான். அது உண்மையும் கூடத்தான். அவள் மனம் ஜஹாங்கீரையே நினைத்திருந்தாலும் அவள் அலிகுலியிடம் திரும்பி வந்திருக்கிறாள். இதற்கு மேல் அவள் தந்தை லஞ்சம் வாங்கும் விஷயம். அவள் தந்தையைப்

பற்றி நினைக்கையில் அவள் அடிவயிற்றில் சங்கடம் ஏற்பட்டது. அரச சபை உறுப்பினர்கள் லஞ்சம் வாங்குவதை அவள் அறிந்திருந்தாலும், அவள் தந்தை இதற்கு அப்பாற் பட்டவர் என்று எண்ணியிருந்தாள். அவர் எப்பொழுதும் உண்மையானவராக, அரச சபையில் பொதுவாக இருக்கும் களழல்களால் பாதிக்கப்படாதவராகவே தோன்றியிருக்கிறார். சாம்ராஜ்ஜியத்திலேயே மிகவும் மரியாதைக்குரிய புத்திமான் களில் ஒருவர் அவர். ஆனால், அவரும் இப்படித் தவறு செய்யக் கூடியவர்... அவரும் மனிதன்தான்.

அவள் சிறுவயதாக இருக்கையில், வீட்டிற்கு வரும் பல மனிதர்களுடன் கியாஸ் பேசுவதையோ, பின்பு, பணத்தைப் பெற்றுக் கொள்வதையோ, அல்லது கூடை நிறைய பழங்கள் மற்றும் அரபுக் குதிரைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள் வதையோ அவள் பார்த்திருந்தாலும், அதன் அர்த்தத்தை உணர்ந்ததில்லை. இப்பொழுது அந்த நினைவுகள் திரண்டு வந்தன. தன் பாவாடையைச் சரி செய்தவாறு மெஹ்ருன்னிஸா பெருமூச்சுவிட்டாள். ஒருவேளை, அப்படிச் செய்வதில் தவறொன்றும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அது சரியான செயலும் அல்ல. தன் வீட்டின்முன் முற்றம் மனித நடமாட்டம் ஏதும் இல்லாமல் வெறிச் சென்று இருப்பதைச் சுற்றி பார்த்தாள்.

அடிமைப் பெண்கள் வீட்டிற்குள்ளிருந்து ஓடோடி வந்தனர். "வாருங்கள், ஸாஹிபா."

"உங்கள் எஜமானர் எங்கே?" தூங்கிக் கொண்டிருக்கும் லாட்லியைப் பல்லக்கிலிருந்து எடுத்தவாறு களைப்புடன் கேட்டாள்.

"அவர் வேட்டைக்குச் சென்றிருக்கிறார், அம்மா."

"நான் இன்று வந்து சேர்வேன் என்று நேற்றே தகவல் அனுப்பியிருந்தேன்."

பணியாட்கள் தங்கள் பார்வையைத் தவிர்த்து, சாமான் களை இறக்குவதில் கவனம் செலுத்தினர்.

மெஹ்ருன்னிஸா களைப்புடன் நெற்றியிலிருந்த வியர்வையைத் துடைத்துவிட்டுக் கொண்டாள். இப்படிப்பட்ட மனிதனிடம்தான் அவள் இவ்வளவு அவசரமாகத் திரும்பி வந்திருக்கிறாள். ஐந்து மாதங்கள் கழித்து அவன் திரும்பி வரும் பொழுது வீட்டில் இருந்து கொண்டு, அவனை வரவேற்பதில் அவன் அக்கறை காட்டவில்லை. அதுவும் நல்லதிற்குதான் என்று அவள் நினைத்தாள். அவனை எதிர் கொண்டு வாக்குவாதம் தொடங்கும் முன் அவள் சிறிது இளைப்பாறலாம்.

இரவு வெகுநேரம் ஆகியும் அலிகுலி வேட்டையிலிருந்து திரும்பவில்லை. அடுத்த நாள் காலை, அவன் குளித்து உணவருந்தியபின் தன் மனைவியைச் சந்திக்க அவள் அறைக்குச் சென்றான்.

தன் கையிலிருந்த புத்தகத்திலிருந்து நிமிர்ந்து பார்த்து மெஹ்ருன்னிஸா கூறினாள். "அல்லாவிற்கு வணக்கம்."

அலிகுலி அசுவாரசியமாகப் பதிலளித்தான். "உன் பிரயாணம் நன்றாக இருந்ததா?"

"ஆம்." ஒருவருக்கொருவர் வணக்கம் செலுத்திய பின் அவர்களிடையே பேசுவதற்கு ஒன்றும் இல்லை. சட்டென்று அவள் கைகள் வியர்த்தன. கைகளை அவள் பாவாடையில் துடைத்துவிட்டுக் கொண்டாள். எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?

அவன் குரல் அவள் எண்ணங்களைக் கலைத்தது. "இது என்ன?" மேஜையிலிருந்த கடிதப் பையைச் சுட்டிக் காட்டிய வாறு அலிகுலி கேட்டான்.

"என் தந்தையின் கடிதம். உங்களிடம் கொடுக்கச் சொல்லி அனுப்பியுள்ளார்." அவள் குரல் இறங்கியது.

அலட்சியமாக அலிகுலி கடிதத்தை எடுத்தான்.

"ஏதாவது பிரச்சனையா?"

அவள் மறுப்பது போல் தலையை அசைத்தாள். முன் தினம் இரவு, தன் படுக்கை அறை ஜன்னலருகில் நின்றவாறு,

வெளியே அவள் வீட்டைச் சுற்றி உள்ள குன்றுகளில் நிலவு வெள்ளி முலாம் பூசி அழகு செய்வதை அவள் பார்த்தவாறு இருந்தாள். அவள் தந்தை இந்தக் கடிதம் எழுதி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இது நீண்ட காலம் தான். ஒரு வேளை தனது திவானுக்குக் கூறிய உத்தரவைச் சக்ரவர்த்தி இதற்குள் மறந்திருக்கலாம் என்று மனதில் சிறிது துடிப்புடன் நினைத்துப் பார்த்தாள். நிலமை அமைதியாக இருக்கையில் அதை ஏன் சலசலக்கச் செய்யவேண்டும்? பேசாமல் கடிதத்தைக் கிழித்துப் போட்டுவிட்டு விஷயத்தை அப்படியே விட்டு விடலாமா? அரியணையை அடைவதற்காக ஜஹாங்கிர் துடித்த துடிப்பு அவளுக்குச் சட்டென்று ஞாபகத் திற்கு வந்தது. பதினைந்து நீண்ட வருடங்கள் — சில சமயம் பொறுமை இழந்தும் — பல நேரங்களில் மிகவும் பொறுமை யாகவும், அதற்காகத் துடிப்புடன் காத்திருந்திருக்கிறார். அதே போல் அவளையும் அவ்வளவு சுலபமாக மறக்க மாட்டார் என்பதும் அவளுக்குத் தெரியும். அவள் உடல் சிலிர்த்தது. அவள் கணவன் அந்தக் கடிதத்தைப் படிக்கட்டும்.

"நீங்களே படித்துத் தெரிந்து கொள்வது நல்லது, என் பிரபுவே!"

அலிகுலி பையைத் திறந்து கடிதத்தை வெளியே எடுத்தான். அவன் கைகளில் அந்தக் காகிதம் படபடக்கையில் மெஹ்ருன்னிஸாவின் இதயம் சத்தமாக அடித்துக்கொண்டது. அவனைக் கவனமாகப் பார்த்தாள். அதை அவன் படிக்கையில் அவன் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் இல்லை. மெதுவாக அவன் கழுத்துப்புறம் சிவந்து, அவன் முகம் சிவக்கத் தொடங்கியது.

அவன் கரங்கள் நடுங்க அந்தக் கடிதத்தைக் கீழே விட் டெறிந்தான். "இந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிற தென்று உனக்குத் தெரியுமா?"

மெஹ்ருன்னிஸா உதட்டைக் கடித்துக் கொண்டாள். "என்ன இருக்கலாம் என்று சுமாராகத் தெரியும், என் பிரபுவே!"

"சக்ரவர்த்தி உன்னை எப்படிப் பார்த்தார்? நீ என் மனைவி. நீ உன் முகத்தைக் காட்டாமல் ஜாக்கிரதையாக இருந்திருக்கவேண்டும். மாறாக, அவர் கவனத்தைக் கவருவது போல் இருந்திருக்கக் கூடாது. முதலில் சக்ரவர்த்தி இருக்கும் இடத்தில் நீ எப்படி இருந்தாய்?"

"அர்ஜுமன்டின் நிச்சயதார்த்த விழா சமயத்தில் நானும் அங்கிருக்க வேண்டியதாயிற்று."

"நான் இதற்கு ஒரு பொழுதும் சம்மதிக்கமாட்டேன்." கோபத்தில் அவன் முகம் அலங்கோலமாக மாற, அலிகுலி அவளை முறைத்துப் பார்த்தான். "நீ என் மனைவி. என் மனைவியாகத்தான் இருப்பாய். சக்ரவர்த்தியானாலும் உன்னைவிட்டு விடச் சொல்லி எனக்கு உத்தரவிடமுடியாது சக்ரவர்ததி! ஹூம்!" அவன் வெறுப்புடன் தன் கைகளை விரித்தான். "நான் சரியாகத் திட்டமிட்டிருந்தால், அந்தப் பலஹீனமான குஸ்ரு இன்று சக்ரவர்த்தியாக இருந்திருப்பான். நான் சாம்ராஜ்ஜியத்தின் இராணுவத் தலைமைத் தளபதியாக ஆகியிருப்பேன். மாறாக, இந்த நரகத்தில் உழன்று கொண்டிருக்கிறேன்." அவன் ஆத்திரத்துடன் அவளை வெறித்துப் பார்க்கையில் அவளும் கண் இமைக்காமல் அவனைப் பார்த்தவாறு நின்றிருந்தாள்.

"நல்ல குடும்பப் பெண்களுக்கு ஏற்ற மாதிரி, உன் கண்களை தாழ்த்திக் கொள்." அவன் இரைந்தான். "உன்னை லாகூருக்கு அனுப்புவதில் எனக்கு விருப்பமில்லை. இப்பொழுது என்ன நடந்திருக்கிறது என்று பார், பண்பற்ற வளே! நீ முன்பு சக்ரவர்த்தியுடன் சரசமாடியதெல்லாம் எனக்குத் தெரியும்."

அதிர்ச்சியில் அவள் கண்கள் விரிந்தன. வயிற்றில் யாரோ ஓங்கி குத்துவதுபோல் உணர்ந்தாள். ஆமாம், ஜஹாங்கீர் இளவரசராக இருக்கையில் அவரைச் சிறிது சீண்டியிருக்கிறாள். ஆனால், வெகு சிலரே அதைப் பற்றி அறிவார்கள்.

"ஆமாம், எனக்குத் தெரியாதென்று நீ நினைத்தாய்." வெறுப்புக் கலந்த குரலில் அலிகுலி கூறினான். "உன்னைக்

திருமணம் செய்து கொண்ட நாளிலேயே, இளவரசர் லீமிடமிருந்து உன்னை எடுத்துப் போகிறேன் என்று எனக்குத் தெரியும். அப்பொழுதும் அவர் உனக்காக ஆசைப் பட்டார். ஆனால், நீ என்னிடம் வந்தாய். இப்பொழுதும் உன் மேல் ஆசைப்படுகிறார். ஆனால், இன்னும் நீ எனக்குத் தான் சொந்தம். இராணுவத்தில் பெரிய பதவி அடைய வேண்டுமென்ற என் கனவைக் கெடுத்ததற்கு அவரை நான் மன்னிக்கவே மாட்டேன்."

அவன் செல்வதற்குத் திரும்பினான். மெஹ்ருன்னிஸா தரையைப் பார்த்தபடி நின்றிருந்தாள். அவள் மனம் கலவரத்தில் ஆழ்ந்தது.

கதவருகில் நின்று அலிகுலி ஆத்திரத்துடன் கூறினான். "நீ உன் அறைகளிலேயே இருக்க வேண்டும். என் உத்தர வில்லாமல் வெளியே செல்லக் கூடாது. நான் சில தினங் களுக்கு வெளியே போகப் போகிறேன். நீ இங்கேயே இருக்க வேண்டும்."

மெஹ்ருன்னிஸா முகம் சுளித்தாள். இப்படிப்பட்ட மனிதனைத்தான் அவள் மணந்திருக்கிறாள். அவன் மனைவி யாகச் செயல்படுவது அவள் கடமை. அவன் மூளை கலங்கி விட்டது. சக்ரவர்த்தியை எதிர்த்துச் செயல்பட முடியும் என்று நம்புகிறான்? அவர்கள் குடும்பமே அழிந்துவிடும்.

"என் பிரபுவே!" குரலில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் அவள் கூறினாள். "அவசரத்தில் தவறு ஏதும் செய்து விடாதீர்கள். சாதாரணமாக முடியாது என்று சொல்லி விடுங்கள். அது போதும். அவர் கோபத்தைத் தூண்டுவது நல்லதல்ல."

"உனக்கு இன்னும் உன் பழைய காதலனிடம் பிரியம் இருக்கிறதா?" அலிகுலி பரிகசித்தான். "உன் கணவனிடம் தன்றாகத்தான் பேசுகிறாய்." அவளைப் பார்த்து விஷமத் தனமாகச் சிரித்தபடி, "அவர் இன்னும் எத்தனை நாட்கள் சக்ரவர்த்தியாக இருக்கிறார் என்று பார்ப்போம்."

அவன் திரும்பிச் செல்வதை மெஹ்ருன்னிஸா கவலை யுடன் பார்த்தாள். அவனுடன் பேசுவதில் பலனில்லை

என்பதை அவள் அறிவாள். அலிகுலி யோசிக்காமல், முட்டாள்தனமாக, இன்னொரு முறை கலகம் விளைவிக்க முயற்சிப்பான். அன்று காலையே மிக இரகசியமாக, அலிகுலி குதிரையேறி எங்கோ சென்றான். ராஜாமான்சிங் அப்பொழுது வங்காளத்தில் இல்லை. ஆனால், கலகக்காரர்கள் நிறைந்த அந்தப் பகுதியில் அவன் பேச்சைக் கேட்கவும் ஆட்கள் இருப்பார்கள். தலைநகரிலிருந்து இத்தனை தூரத்தில் இருப்பதாலும், தன்னால் சுதந்திரமாகச் செயல்பட முடியும் என்ற கர்வத்தாலும், எதையும் தன்னால் சாதிக்க முடியும் என அவன் நினைத்தான்.

ஆனால், ஜஹாங்கீர் முட்டாளில்லை. அவரது ஒற்றர்கள் வங்காளத்தில் பரவி இருந்தனர். அவரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத் துணிபவர்களைப் பற்றி அரச சபைக்குச் செய்தி எட்டிவிடும். அங்கிருந்து சக்ரவர்த்தியின் காதுகளுக்கும் தான்.

லாகூர்க் கோட்டையின் வெளியில் இருந்த பெரிய முக்கிய முற்றத்தைப் பார்த்தபடி, ஜஹாங்கீர் தன் அறையின் சாளரத்திலிருந்த ஜன்னலருகே அமர்ந்திருந்தார். அந்த அரண்மனையின் வெளிச்சுவற்றில் நடுமுற்றத்தைப் பார்த்தவாறு கட்டப்பட்டிருந்தது அந்த அழகிய சாளரம். தினமும் மூன்று முறை அந்தச் சாளரத்தில் அமர்ந்து சக்ரவர்த்தி பொது மக்களுக்குத் தரிசனம் தருவார். காலையில், நடுப்பகலில், மாலையில். ஜஹாங்கீர் உடல் நலமில்லாத போதும் கூட இவ்வாறு பொது மக்களுக்குத் தரிசனம் தருவது நடக்கும். அவர் ஆட்சி தொடங்கிய புதிதிலேயே பொது மக்கள் அவர்களது சக்ரவர்த்தியைத் தினமும் காண வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அவர் உடல் நலத்துடன் இருக்கிறார் என்பதை அவர்கள் நேரில் பார்த்து அறிந்து கொள்ளவேண்டும். இது உள்நாட்டுக் கலகம் ஆரம்பிக்காமல் இருக்கத் துணை செய்யும்.

இன்று ஒரு யானைச் சண்டை நடந்து கொண்டிருந்தது. பல வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த யானைச் சண்டை அவர் நினைவிற்கு வந்தது. அதில், அவர் வெற்றி பெற்றார்,

குஸ்ரு தோல்வியடைந்தான். உதட்டைக் கடித்தவாறு தன் எண்ணங்களின் காரணகர்த்தாவைத் திரும்பிப் பார்த்தார்.

இளவரசன் குஸ்ரு, தந்தை அருகில், முகத்தில் கடுகடுப்புடன் அமர்ந்திருந்தான். எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் துடிப்பு அந்தச் சிறுவனிடமிருந்து இன்னும் போகவில்லை போலும் என்று ஜஹாங்கீர் நினைத்தார். அவர் மகனின் நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும். தாராளக் குணமும் நேர்மையும் உடைய அரசர் என்று மக்களிடையே அவரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இருப்பது அவசியமென்பதால், அவர் குஸ்ருவை வெளிப் படையாக மன்னித்துவிட்டார். அதன் காரணமாகப் பொது மக்களுடன் இணைந்து நடக்கும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் அவர் கூட அவனும் இருக்க வேண்டியதை சகித்துக் கொள்ள வேண்டும். அவனைப் பார்ப்பதற்குக் கூட விருப்பமில்லாமல் அவர் தலையைத் திருப்பிக் கொண்டார். இளவரசன் குஸ்ரு அரியணையைக் கைப்பற்றத் தொடர்ந்து செய்த சூழ்ச்சிகளால் அவன் மேல் அவருக்கு முதலில் இருந்த சிறு அன்புகூட முற்றிலும் போய்விட்டது. இப்பொழுது அவன் பக்கத்தில் அமருவதுகூட அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. வெறுப்புணர்ச்சி அவர்களிடையே பரவியிருந்தது.

ஜஹாங்கீர் பெருமூச்சு விட்டார். மஹபத்கானின் ஆலோசனைப்படிக் குஸ்ருவிற்கு மரண தண்டனை கொடுக்க முடிந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவன் மரணம் அவரைப் பாதிக்காது. ஆனால், அந்தப்புரத்துப் பெண்கள் அவரைத் துளைத்தெடுத்து விடுவார்கள். அரண்மனையில் அவருக்கு நிம்மதி இருக்காது. இருந்தாலும், அவரை எதிர்த்து அவன் ஏதாவது பெரிய முறையில் கலகம் விளைவிக்கும் முன் நிச்சயம் அவனைப் பற்றி ஏதாவது செய்ய வேண்டும்.

அந்த இரண்டு யானைகளும் பெரிய சத்தத்துடன் மோதிக் கொண்டன. மக்கள் கூட்டம் கைகளைத் தட்டி ஆரவாரித்தது. ஆனால், சக்ரவர்த்தி அதில் மனம் செலுத்தவில்லை. ஒருவித மனக்கிலேசம் அவரது உணர்ச்சிகளை மரத்துப் போகச் செய்திருந்தது.

அலிகுலி அவரது உத்தரவிற்கு அடி பணிய மறுத்து விட்டான் என்ற செய்தியுடன் கியாஸ் பெக் அன்று காலை அவரைச் சந்திக்க வந்திருந்தார். ஜஹாங்கீர் முகவாயைத் தடவியவாறு, சட்டென்று சிறு கண்ணீர்க் கண்களுக்குள் சுரப்பதை உணர்ந்தார். இந்தக் காத்திருத்தல் அவரை அயரச் செய்தது. தினமும் காலை கண் விழித்தவுடன் அவர் மெஹ்ருன்னிஸாவைப் பற்றிதான் நினைத்தார். கியாஸ் பெக் அவளை வங்காளத்திற்கு திருப்பி அனுப்பி விட்டார். ஏன் அனுப்பினீர்கள் என்று ஜஹாங்கீர் கேட்டதற்குத் தந்தைக் குரிய கடமையைத் தான் தான் செய்ததாகக் கியாஸ் பெக் பதிலளித்தார். ஆகையால், ஜஹாங்கீர் வேறு ஏதும் கூறவில்லை. அவர் பொறுமையுடன் காத்திருப்பார். நாட்கள் செல்லச் செல்ல, மெஹ்ருன்னிஸாவைச் சிறிது நேரமே பார்த்தது, உண்மையான. ஆழ்ந்த காதலாக மாறுமா என்று அவருக்கு உணர்த்தும். தற்சமயம் அவர் அவள் அருகாமைக் காகத் துடித்தார். இப்பொழுது இந்த மாதிரியான பதில் வந்திருக்கிறது. அவர் மிகவும் விரும்பும் ஒரு பெண்ணை அடையக்கூட அவருக்கு அதிகாரம் இல்லாமல் போய் விட்டது. அலிகுலி போன்ற ஒரு சதிகாரன் எப்படிச் சக்ர வர்த்தியின் ஆணையை மறுக்கத் துணிந்தான்? முகலாய இந்தியாவின் பேரரசரான அவரால் ஒன்றும் செய்ய இயல வில்லை. அலிகுலிக்கு நேராகவே அவர் கட்டளையிட்டிருந்தார். அதையும் அவன் அவமதித்து விட்டான். அரசசபை உறுப் பினர்களிடையே ஏற்கெனவே அவர் மெஹ்ருன்னிஸாவை விரும்புவது பற்றி வதந்திகள் உலவுகிறது. அலிகுலி மறுத்து விட்ட விஷயமும் சேர்ந்து, சபையில் எல்லோரும் வம்பு பேசும் விஷயமாக ஆகிவிட்டது. அவளை விட்டு விடச் சொல்லி அவரால் அலிகுலியைக் கட்டாயப்படுத்த முடியாது. வேறு அவர் என்ன செய்ய முடியும்?

குறைந்த பட்சம், காந்தஹாரிலிருந்து கேள்விப்படும் விஷயங்கள் மனதிற்கு நிம்மதியை அளிக்கிறது. முகலாய இராணுவம் கடந்த ஒரு மாதத்தில் வெகுவாக முன்னேறி, காந்தஹாரின் எல்லையை அடைந்துவிட்டது. ஜஹாங்கீரின் கொடிகளையும், ஸ்தம்பங்களையும் கண்ட எதிரிகள் பயந்து பின் வாங்கியிருக்கின்றனர். பாரசீகத்தின் அரசர், ஹுஸேன்

பெக் (Husain Beg) என்ற அதிகாரியை முகலாய அரச சபைக்கு அனுப்பி, அவர் கவர்னர்கள் செய்த கலவரத்திற்கு மன்னிப்பு கோரி, ஜஹாங்கீரின் நட்பையும் வேண்டிச் சமரசம் பேசியிருந்தார். சக்ரவர்த்தியும் அந்த அதிகாரியை தல்ல முறையில் வரவேற்று, இராஜதந்திர முறைப்படிப் பேசி, அவரது மன்னிப்பை ஏற்று, அவரை உபசரித்து அனுப்பினார். ஆனால், அந்த அதிகாரியையோ அல்லது மன்னர் ஷாவையோ சக்ரவர்த்தி முற்றிலும் நம்பவில்லை. காந்த ஹாரில் ஏற்பட்ட கலவரம் கீழ்மட்ட அதிகாரிகள் சேர்ந்து தன்னிச்சையாகச் செய்த வேலையல்ல. ஷாவின் விருப்பப்படி ஜஹாங்கீரின் வெளிநாட்டுக் கொள்கைகளையும் இராணுவத்தின் திறமையையும் பரிசோதித்துப் பார்ப்பதற் காகச் செய்யப்பட்டது என்பதை சக்ரவர்த்தி அறிவார்.

ஜஹாங்கீர் அயர்ச்சியுடன் கண்களை மூடிக்கொண்டார். சக்ரவர்த்தியான பின் எல்லாம் சுலபமாக, சுமுகமாக நடக்கும் என்று அவர் நினைத்திருந்தார். ஆனால், பலவித நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டி வந்தது. அதே சமயத்தில் அந்த நீல நிறக் கண்கள் அவர் நினைவில் சுற்றிச் சுற்றி வந்தன. பல ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த அந்தச் சிறிய சந்திப்பு, அவர் மனதில் புதைந்து கிடந்த ஞாபகங்களை வெளிக் கொண்டு வரப் போதுமானதாக இருந்தது. வெளியே வந்தபின் அந்த நினைவுகள் அவரை அமைதியில்லாமல் ஏங்க வைத்தன. ஆனால், அவள் அவர் கை எட்டும் தூரத்தில் இல்லை.

ஒரு செய்தியாளன் அவர் அருகே வந்து, வணங்கிவிட்டுத் தன் இடுப்புப் பட்டையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினான். ஜஹாங்கீர் அவசரமாக அதைப் பெற்றுக் கொண்டார். அது மிகவும் முக்கியமானதென்று அவருக்குத் தெரியும். இல்லாவிடில் அந்தச் செய்தியாளன் அவர் நிகழ்ச்சி முடிந்தபிறகு அரச சபைக்கு வரும்வரை காத்துக் கொண் டிருந்திருப்பான். அவர் மெதுவாக அந்தக் கடிதத்தைப் படித்தார். அவர் முகம் கடுமையாயிற்று. இதுதான் கடைசி அடி. அவர் எழுந்து அரண்மனைக்குத் திரும்பிச் சென்றார்.

சில நிமிடங்கள் கழித்து மஹபத்கானும் முஹமது ஷரீபும் சாளரத்தை ஏறிட்டு நோக்க, அது காலியாக இருப்பது கண்டு, அவசரமாக எழுந்திருந்து அரண்மனைக்குச் சென்றனர்.

"மாண்பு மிக்கவரே! ஏதும் கெட்ட செய்தியில்லை என்று நம்புகிறேன்." சக்ரவர்த்தியிடம் நெருங்கியபடி மஹபத்கான் வினவினான்.

"ஆமாம், கெட்ட செய்திதான்" ஜஹாங்கீர் பட்டென்று பதிலளித்தார். "அலிகுலி ஏதோ கலகம் செய்யவிருக்கிறான். அவன் இரகசியமாகப் படைகளைத் திரட்டிக் கொண்டிருக்கிறான் என்று வங்காளத்திலிருந்து செய்தி வந்திருக்கிறது. சில படைவீரர்களை அவனை கண்காணிக்க அனுப்பவும்."

"மாட்சிமை பொருந்தியவரே! முதலில் தீர விசாரித்தறிவது நல்லது." சிறிது ஜாக்கிரதையான குரலில் முகமது ஷரீப் கூறினான்.

"ஏன்? அந்த மனிதன் ஒரு கலகக்காரன் என்று முன்பே நிரூபித்திருக்கிறான். அவன் செய்த குற்றங்களுக்கு அவனுக்கு மரண தண்டனை கொடுத்திருக்க வேண்டும். மாறாக நான் அவனை மன்னித்து விட்டு விட்டேன். அவன் இப்பொழுது தப்பிக்க முடியாது." வேகமாக முன்னும் பின்னும் நடந்தவாறு ஜஹாங்கீர் கூறினார்.

"மாட்சிமை பொருந்தியவரே!" ஷரீப் சிறிது தொண்டையைக் கனைத்துவிட்டு, சக்ரவர்த்தி தனக்குச் சில அடிகள் முன்னே நடந்து கொண்டிருப்பதைக் கண்டு, ஓடி அவர் அருகில் நின்றான். "அவன் மனைவி மேல் உங்களுக்குள்ள விருப்பம் — அரச சபை முழுவதும் அறியும். இப்பொழுது திடீரென்று நீங்கள் அவனுக்கு மரண தண்டனை கொடுத்தால் அது சரியான செய்கையாகத் தோன்றாது."

"இதற்கும் மெஹ்ருன்னிஸாவிற்கும் என்ன சம்பந்தம்? அவளை அடைவதற்காக வேண்டி நான் இப்படி மறைமுகமாகச் செயல்படுகிறேன் என்று பொது மக்கள் கருதுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" ஜஹாங்கீர் நின்று தன் மந்திரிகளைப் பார்த்து கேட்டார்.

ஷரீபும் மஹபத்கானும் மௌனமாக இருந்தனர். அப்படித்தான் அவர்களும் நினைத்தார்கள். நாட்டு மக்களும் நினைப்பார்கள். இது ஒரு தர்மசங்கடமான நிலமை. மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டியது. மேலும், சக்ரவர்த்தினி ஜகத்கோஸினிக்கு அவர்கள் அளித்திருந்த உத்திரவாதம் — மஹபத், ஷரீபை மெதுவாகத் தூண்டினான்.

மஹபத்கானின் தூண்டுதலைப் புரிந்து கொண்டு ஷரீப் கூறினான். "மாண்பு மிக்கவரே! உங்கள் முடிவை மறுபடியும் பரிசீலியுங்கள். இது பற்றித் தீர விசாரிப்பது தான் நல்லது. வங்காளத்தின் கவர்னரை அனுப்பி அலிகுலியைச் சந்தித்து விவரம் கேட்கச் சொல்லலாம், அல்லது அலிகுலியை உங்களை வந்து சந்திக்கச் சொல்லி ஆணையிடலாம். அவ்வாறு செய்தால் நீங்கள் பாரபட்சமில்லாமல் நடந்து கொள்வதை அவை உறுப்பினர்கள் உணர்ந்து கொள்வார்கள்."

"ம்..." ஜஹாங்கீர் தன் முகவாயைத் தடவி விட்டுக் கொண்டார். "நீ சொல்வதும் சரிதான். நிச்சயம் இந்த மனிதனுக்கு எதிரானச் சாட்சிகள் நிறையக் கிடைக்கும். என் உடன்பிறவா சகோதரன் குத்புதீன் கான் கோக்காவிற்கு உடனே எழுதுகிறேன்."

அவர்களை வெளியேறச் சொல்லி கட்டளை இடுவது போல், அவர் திரும்பி நடக்கையில், ஜஹாங்கீரின் உதட்டில் ஒரு சிறிய புன்னகை பூத்தது. விதி அலிகுலியின் உயிரை அவர் கையில் போட்டிருக்கிறது. மஹபத்தும் ஷரீபும் அவரைத் தடுத்து நிறுத்துவது போல் தோன்றுகிறது. ஏன்? அவர்களுக்கு அலிகுலி மீது எந்தவிதப் பாசமும் கிடையாது. அவனை மிகவும் வெறுக்கிறார்கள். மெஹ்ருன்னிஸாவைப் பற்றி அவர்கள் எதுவும் அறியமாட்டார்கள். இருந்தாலும் இரண்டாவது முறையாக மஹபத் கான், மெஹ்ருன்னிஸாவைப் பற்றி அவன் அபிப்பிராயத்தைத் தானாகவே வெளிப்படுத்துகிறான். ஏன்?

தன் சக்தி வாய்ந்த இரண்டு மந்திரிகளும் திரும்பிச் செல்வதைச் சக்ரவர்த்தி பார்த்துக் கொண்டிருந்தார். மஹபத்

கானின் வலியுறுத்தும் இந்தச் செய்கை சந்தேகத்தைத் தருகிறது. நாளடைவில்தான், ஏன் என்று தெரியும். இன்னும் பல முக்கியமான விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். மெஹ்ருன்னிஸா எனக்குச் சீக்கிரம் கிடைத்துவிடுவாள் போல் தோன்றுகிறது. இப்பொழுது நம்பிக்கை வந்துள்ளது அலிகுலியிடமிருந்து மெஹ்ருன்னிஸாவைக் கட்டாயப் படுத்திப் பிரித்து அவர் அடைந்தால், அதற்கான சரியான காரணங்களை மக்களுக்குக் கூற முடியாது. ஆனால், அவளை எதிர்த்துக் கலகம் செய்வது — இது வேறு விஷயம். பிற்காலச் சந்ததியினர் கூட அவர் செய்கையில் குற்றம் கண்டு பிடிக்க முடியாது.

வங்காளத்தின் கவர்னர், குத்புதீன் கான் கோக்காவிற்கு அன்று மாலை அவர் கடிதம் எழுதினார். அலிகுலியை வரவழைத்து அவன் செய்கைகளுக்கு விளக்கம் கேட்டறிய வேண்டும். கோக்காவிற்கு அவன் பதிலில் திருப்தி ஏற்படவில்லையானால், அரச சபைக்கு வந்து சக்ரவர்த்தியிடம் நேரில் விளக்கம் அளிக்க அலிகுலியை அனுப்பி வைக்க வேண்டும். எப்படியாகிலும் அவர் அந்த இராணுவ வீரனை நேரில் சந்தித்து முடிவெடுக்க வேண்டும். அலிகுலி அரச சபைக்கு வர மறுத்தானாகில், கோக்கா அவன் செயலில் இராஜ துரோகம் இருப்பதாகக் கருதினாராகில், அவனுக்குச் சரியான தண்டனை வழங்க அவருக்கு முழு சுதந்திரமும் உண்டு என்றும் ஜஹாங்கீர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

சில நாட்கள் கழித்து, வரப்போகும் கோடைக்காலத்தைக் குளிர்ந்த சௌகரியமான இடத்தில் கழிப்பதற்காக, அரச சபையைச் சேர்ந்த அனைவரும் லாகூரிலிருந்து காபூலுக்குக் குடியேறினர்.

வங்காளத்தில், சக்ரவர்த்தியின் கடிதம், குத்புதீன் கான் கோக்காவின் கைக்கு வந்தது. அவர் உடனே தன்னை வந்து சந்திக்கும்படி அலிகுலிக்குச் செய்தியனுப்பினார்.

அலிகுலி அவர் செய்தியை அலட்சியம் செய்தான்.

கோக்கா கோபத்தில் கொதித்தார். அவர் ஜஹாங்கீரின் உத்தரவின்படி நடக்கிறார். அதை அலட்சியம் செய்வது சக்ரவர்த்தியின் ஆணையை அலட்சியம் செய்வது போலாகும். அவர் நன்கு பயிற்சி பெற்ற படைவீரர்களைத் திரட்டிக் கொண்டு பர்த்வான் நோக்கிச் சென்றார்.

நடுப்பகல் சூரியனின் வெப்பம், மக்களை நிழல் தரும் இடங்களை நோக்கி ஓட வைத்தது. சூரியனின் கதிர்கள் பர்த்வானில் வீரியத்துடன் பாய்ந்து கொண்டிருக்க, அலிகுலியின் வீடு நிசப்தமாக, நடமாட்டமே இல்லாமல் இருந்தது. ஜன்னல்கள் திரைகளால் மூடப்பட்டு, வெட்டி வேர் தட்டிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. குதிரைகள் லாயத்தில் அமைதியில்லாமல் நெளிந்து கொண்டிருந்தன. குதிரைக் காப்பாளர்கள் சோர்வுடன் வைக்கோல் போர் மேல் சாய்ந்து அவ்வப்போது பீடியைச் சுவைத்து இழுத்தவாறு, புகை மேலே எழும்புவதைப் பார்த்த வண்ணம் படுத்துக் கொண்டிருந்தனர்.

ஒரு செய்தியாளன் நடு முற்றத்திற்கு வேகமாக ஓடி வந்தான். வியர்வை கழுத்திலும், கைகளுக்கு அடியிலும் பெருகி உடையை நனைக்க, மேல் மூச்சு வாங்கியவாறு கூறினான். "உங்கள் எஜமானனைக் கூப்பிடுங்கள். முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறேன்."

ஒரு குதிரைப் பாகன் சட்டென்று நிமிர்ந்து பார்த்து விட்டு, வீட்டிற்குள் பாய்ந்தான். நடுப்பகல் உறக்கத்திலிருந்து எழுப்பப்பட்ட அலிகுலி, தன் மேல் அங்கியின் பொத்தான்களை சரி செய்தவாறு சில நிமிடங்களில் வெளியே வந்தான். "என்ன விஷயம்?"

"பிரபுவே, வங்காளத்தின் கவர்னர், குத்புதீன் கான் கோக்கா இங்கு வந்து கொண்டிருக்கிறார்."

அலிகுலி யோசனையுடன் முகத்தைச் சுளித்தான். கோக்காவிற்கு இப்பொழுது என்ன வேண்டும்? அவனது நிட்டங்கள் பற்றி ஏதாவது அறிந்து கொண்டிருப்பாரா? அல்லது அவர் கூப்பிட்டனுப்பியபோது அலட்சியம் செய்ததால் அவரே நேரில் பர்த்வான் வருகிறாரா? எப்படியிருந்தா

லும் நிச்சயம் கைகலப்பு ஏற்படக் கூடும். அதற்கு அவன் தயாராக இருக்க முடிவு செய்தான். வேலையாட்கள் மௌனமாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தனர். செய்தி கொண்டு வந்தவன் விடும் மூச்சின் சப்தம் மட்டும் தான் கேட்டது. அலிகுலி அந்த மனிதனைப் பார்த்தான்.

"இவனைச் சமையலறைக்கு அழைத்துச் சென்று குடிக்க ஏதாவது பானம் கொடுங்கள்." அவன் உத்தரவிட்டான். அவனது அலியைக் கூப்பிட்டனுப்பினான். "பகீர், (Bakir) இங்கு சுற்றிலும் இருக்கும் நம் படைத்தலைவர்களுக்கு, கோக்கா இங்கு வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தியைத் தெரியப்படுத்து. அவசியம் ஏற்பட்டால் படைவீரர்கள் யுத்தத்திற்குத் தயாரான நிலையில் இருக்கவேண்டும். அவர்களுக்கு நான் சைகை மூலம் அறிவிப்பேன்... இரு...." அவன் செய்தி கொண்டு வந்தவன் பக்கம் திரும்பினான். "பர்த்வானிலிருந்து எவ்வளவு தூரத்தில் கவர்னர் வந்து கொண்டிருக்கிறார்?"

"ஒருநாள் பயணம், பிரபுவே."

அலிகுலி பகீர் பக்கம் திரும்பினான். "நாளைக்குள் தயாராக இருக்க வேண்டும் என்று கூறு."

பகீர் அவனுக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்ற ஓடினான்.

அலிகுலி வீட்டிற்குள் திரும்பி நடந்தான். அவன் தன் அறைக்குள் நுழைகையில் அவன் மனைவி அவனுக்காகக் காத்திருப்பதைக் கண்டான். முற்றத்தில் ஏற்படும் சத்தம் கேட்டு அவள் ஜன்னலருகில் வந்து நின்று வெளியே அலிகுலிக்கும் பணியாட்களுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகளைக் கேட்டிருந்தாள்.

"என் பிரபுவே, அவசரப்பட்டு ஏதாவது செய்து விடாதீர்கள். கவர்னர் ஏதாவது செய்தியுடன் தங்களைச் சந்திக்க வரலாம்." மெஹ்ருன்னிஸா மன்றாடினாள். அவள் பேச்சை மாத்திரம் அவன் கேட்பானேயானால்... ஆனால், எந்த உபதேசத்தையும் நிதானித்துக் கேட்கும் நிலைக்கு மேல் அலிகுலி போய் விட்டான். அவன் யுத்தத்தின் வாசனையை

முகர்ந்துவிட்டான், அது அவனை இழுத்துத் தன்னுடன் அணைத்துக்கொண்டது.

"உன் அறைக்குச் செல். இது நான் கையாள வேண்டிய விஷயம்" அலிகுலி கண்டிப்புடன் கூறினான்.

"தயவு செய்யுங்கள்..." மெஹ்ருன்னிஸா அவன் தோள்களில் கையை வைத்தாள். "உங்களுக்குள் கருத்து வேற்பாடு இருக்குமானால் கவர்னருடன் பேச்சு வார்த்தை நடத்திப் பாருங்கள். அவர் சக்ரவர்த்தியின் தூதராகத்தான் வருகிறார்."

அவள் கரத்தை அவன் தட்டிவிட்டான். "உனக்கு என்ன கவலை? உனக்கும் உன்னை ஒரு சக்ரவர்த்தினியாக ஆக்கப் போகும் உன்னுடைய சக்ரவர்த்திக்கும் இடையில் நான் நிற்கிறேன்." அவன் கண்கள் அவளை வெறித்தன. மெஹ்ருன்னிஸா தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

"நான் சொல்வது சரிதான் என்று தெரிகிறது." அவன் பரிகாசமாகச் சிரித்தான். "கவலைப்படாதே, என் அருமை மனைவியே. நான் இன்னும் பல வருடங்கள் உயிருடன் இருப்பேன், உன் விருப்பத்திற்கும் மேலாகப் பல வருடங்கள் இருப்பேன்." அவளைக் கதவுப் பக்கம் பிடித்துத் தள்ளினான். "இப்பொழுது திரும்பிச் செல். எனக்கு திட்டமிட வேண்டும்."

மெஹ்ருன்னிஸா மெதுவாக அவன் அறையை விட்டு நகர்ந்தாள். இதன் முடிவு நல்ல விதமாக இருக்காது என்று ஏதோ ஒரு உணர்வு அவளுக்குத் தோன்றியது.

"தாக்குங்கள்!" அவன் உச்சக் குரலில் தன் வாளை உயர்த்தியபடிக் கூச்சலிட்டான். அவன் தலைமையில் படை வீரர்கள் முன்னேறினர்... அலிகுலி கண்களைத் திறந்து மேல் கூரையை வெறித்துப் பார்த்தான். அவன் எங்கிருக்கிறான்? அவன் அறை தெளிவாகத் தெரிய ஆரம்பிக்க, அவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். இது ஒரு கனவு. அவன் திரும்பிப் படுக்க எத்தனிக்கையில், படைவீரர்களின் காலடிச் சப்தம் உண்மையானதுதான் என்று உணர்ந்தான்.

படுக்கையிலிருந்து குதித்து எழுந்து, ஜன்னலருகே சென்றான். கவனத்துடன் இருட்டில் உற்றுப் பார்த்தான்.

ஆனால், எங்கும் நிசப்தமாக இருந்தது. அவன் கீழே குனிந்து பார்க்கையில் யாரோ தீவட்டியைப் பற்ற வைப்பதற்காக நெருப்புக் குச்சியைக் கிழிப்பது தெரிந்தது. என்ன நடக்கிறது இங்கே?

அலிகுலி உடலை ஆட்டித் தூக்கத்திலிருந்து முற்றிலும் விடுபட்டான். தன் வாளை எடுத்துக் கொண்டு கீழே ஓடினான். வெளிக்கதவருகில் பகீர் அவனைச் சந்தித்தான்.

"என்ன நடக்கிறது?" அலிகுலி அதிகாரமாகக் கேட்டான்.

"எனக்குத் தெரியாது, பிரபுவே" பகீர் கதவைத் திறந்தான்.

இரண்டு மனிதர்களும் வெளிமுற்றத்திற்கு ஓடினர். மேலும் தீவட்டிகள் கொளுத்தப்பட்டு, அந்த இடம் வெளிச்சத்தில் மூழ்கியது. குதிரைப் பாகர்களைத் தவிர வேறு ஒருவரும் அங்கு இல்லை. அலிகுலி நிதானமாக மூச்சு விட்டான். இது ஒரு கனவுதான்.

பின்னாலிருந்த நிழலிலிருந்து மூன்று மனிதர்கள் முன் வந்தனர். அலிகுலி தன் வாளை இறுகப் பிடித்துக் கொண்டு பார்க்கையில் எதிரே இருந்தவர்களை அடையாளம் கண்டு கொண்டான். குத்புதீன் கான் கோக்காவும், அவனுடன் இரண்டு காஷ்மீரைச் சேர்ந்த பணியாட்கள், அம்பா கான் மற்றும் ஹைதர் மல்லிக். கோக்கா அலிகுலிக்கு வணக்கம் செலுத்தினார்.

"அல்-ஸலாம்-ஆலேகும், அலிகுலி" கோக்கா கூறினார்.

"ஆலேகும்-அல்-ஸலாம்" வாளை ஏந்தியவாறு அலிகுலி பதிலளித்தான்.

கோக்கா தன் கைகளை விரித்தார். "என்னிடம் ஆயுதம் எதுவும் இல்லை. அமைதியுடன் பேச வந்திருக்கிறேன்."

அலிகுலி தோள்களைத் தளர்த்தி நிதானமடைந்தான். சட்டென்று ஏற்பட்ட ஒரு அசைவு அவன் கவனத்தை ஈர்த்தது. ஒரு குதிரைப் பாகன் மற்றொரு தீவட்டியைக் கொளுத்தி அந்த முற்றத்தின் ஒரு கோடிக்கு எடுத்துச் சென்றான். அங்கு வெளிச்சம் பரவ, அரசாங்க இராணுவ

வீரர்கள் முற்றிலும் ஆயுதம் தரித்து பின்னால் வரிசையாக நின்றிருந்தனர்.

கோபத்தில் முகம் அஷ்டகோணலாக ஆக, மற்றொரு கை முஷ்டியை மடித்துக் கொண்டு, அலிகுலி கோக்கா பக்கம் திரும்பினான். இதுதான் கவர்னரின் அமைதிப் பேச்சுப் பேசும் திட்டமா? அவன் கண்ணெதிரே அந்த முற்றம் முழுவதிலும் வெளிச்சம் பரவத் தொடங்கியது.

கோக்கா முன்னால் வந்தார். "நான் சக்ரவர்த்தியிடமிருந்து வருகிறேன்—"

அலிகுலி காட்டுத்தனமான ஒரு சப்தம் எழுப்பினான். அடங்காத கோபத்தினால், பாதியில் தூக்கம் கலைந்தவிதத்தினால், பல வருடங்களாக அவனுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அநியாயத்தினால் ஏற்பட்ட ஆத்திரத்தினால், எழுந்த கூச்சல் அது. வலியில் துடிக்கும் மிருகம் போல் அவன் கத்திக் கொண்டே கோக்காவின் மேல் பாய்ந்தான். கவர்னர் சுதாரித்துக் கொள்வதற்குள் தன் வாளை அவர் வயிற்றில் பாய்ச்சினான். கோக்கா தடுமாறியவாறு தன் இடையில் இருந்த கத்தியை எடுக்க முயன்றார். அலிகுலி நேராக கோக்காவின் மேல் பாய்ந்து, அவரைக் கண்டபடிக் குத்தினான். கோபத்தில் கொதித்துப் போயிருந்த அவன் மூளையில், ஒவ்வொரு முறையும் அவன் குத்தும் பொழுது கோக்காவின் உடலில் கத்தி பாய்வதை உணர்ந்து, சிறிது உற்சாகம் எழுந்தது.

கோக்காவின் வயிறு கிழிந்து தரையில் இரத்தம் கொட்டியது. அவர் கையால் வயிற்றை அமுக்கியவாறு தரையில் விழுந்தார். அம்பா கான் தன்னை நோக்கி வாளை வீசியபடி வருவதை ஓரக் கண்ணால் அலிகுலி பார்த்தான்.

அவன் அம்பாகான் பக்கம் திரும்பினான். அலிகுலி வாளை உயர்த்தி அழுத்தமாக அவன் தலையில் அடிக்க, அந்த நிமிடமே அம்பா கான் உயிரிழந்து தரையில் வீழ்ந்தான்.

அதே சமயத்தில் ஹைதர் மல்லிக்கும் கோக்காவுடன் வந்த மற்ற படைவீரர்களும் அலிகுலியைச் சூழ்ந்து கொண்ட

னர். அவனைச் சுற்றிலும் எதிரிப் படைவீரர்கள். பிடிபட்ட மிருகம் போல, வாயில் நுரையிட, நாலா பக்கமும் தன் இரத்தம் சொட்டும் வாளை வீசியபடி அலிகுலி தீவிரமாகச் சண்டையிட்டான். அவன் இரண்டு வீரர்களைக்கொன்றான். ஆனால், அவனைச் சுற்றிப் பல இராணுவ வீரர்கள்.

திடீரென்று ஒரு வலியை உணர்ந்து, அவன் குனிந்து பார்க்கையில் அவன் வயிற்றில் ஒரு வாள் சொருகியிருப்பதைக் கண்டான். இரத்தம் கொட்டத் துவங்க அவன் பலஹீனமாக உணர்ந்தான். கையை உயர்த்தி வாளைத் தூக்க முயன்றும், அது முடியவில்லை. வலி மிக அதிகமாக இருந்தது. கோக்கா வின் வீரர்கள் அவனை மேலும் மேலும் தாக்க, அவன் சக்தியிழந்து..... அப்புறம் ஒன்றுமேயில்லை.

ஜன்னலருகே, மெஹ்ருன்னிஸா கைகளால் திரைச் சிலையை விலக்கியபடி உறைந்து போய் நின்றிருந்தாள். இரத்தத்தின் வாடை அவள் முகத்தருகே வீசத், தன்னை யறியாமல் அவளுக்குக் குமட்டிக் கொண்டு வர, உணர்ச்சி ஏதுமில்லாத தன் விரல்களால் வாயை மூடிக் கொண்டாள். கீழே முற்றத்தில் நடந்து கொண்டிருக்கும் படுகொலைகளி லிருந்து பார்வையைத் திருப்ப எப்படி முயன்றாலும், அவள் கண்கள் மறுபடியும் அதையே பார்க்கத் திரும்பின.

அவள் கணவன் இறந்து சில நேரம் ஆன பின்பும், கோக்காவின் படைவீரர்கள் அவன் உடல் மேல் பாய்ந்து, வெறியுடன் அதைக் கண்டதுண்டமாக வெட்டுவதை அதிர்ச்சியுடனும் அச்சத்துடனும் பார்த்தவாறே அவள் நின்றிருந்தாள். அந்த வீரர்கள், பிறகு பகீர் மற்றும் மற்ற பணியாட்கள் பக்கம் திரும்பினர். சில நிமிடங்களில் தரையில் இரத்தம் ஆறாக ஓட, துண்டிக்கப்பட்ட கைகளும், கால்களும் எங்கும் இரைந்து கிடந்தன.

இரத்தத்தின் வாடையால் தூண்டப்பட்டுப் படை வீரர்கள் முரட்டுத்தனமான மிருகங்கள் போல் மாறினர். அவர்கள் வெறி அடங்காமல், வெட்டுவதற்கு வேறு யாராவது தென்படுகிறார்களா என்று சுற்றிலும் பார்த்தனர்.

"அதோ, வீட்டிற்குள்!" ஒரு மனிதன் கத்தினான்.

எல்லோரும் ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு வீட்டின் முன் கதவை நோக்கி ஓடினர். மெஹ்ருன்னிஸாவின் தாயை சட்டென்று காரியத்தில் இறங்கிற்று. தன் மகளின் அறைக்கு ஓடிச் சென்று அவளை உலுக்கி எழுப்பினாள். "எழுந்திரு, நாம் உடனே கிளம்ப வேண்டும்."

லாட்லி மெதுவாகக் கண் விழித்துத் தன் தாயைப் பார்த்தாள். "பொழுது விடிந்து விட்டதா?"

"பேசுவதற்கு நேரம் இல்லை, உடனே கிளம்பு" ஒரு போர்வையை எடுத்துத் தன் மகள் மேல் போர்த்தி, அவளைத் தூக்கிக் கொண்டு, கதவருகே ஓடினாள்.

கீழே படை வீரர்கள் வீட்டிற்குள் புகுந்து விட்டனர். தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டுக் கற்பழிக்கப்பட்ட அடிமைப் பெண்கள் பலமாகக் கூக்குரலிட்டனர். பாத்திரங் கள் வீசி எறியப்பட்டன. திரைச் சீலைகள் கிழித்தெறியப் பட்டன. மரச்சாமான்கள் உடைக்கப்பட்டன.

"அந்த முரட்டு மனிதனுக்கு ஒரு மனைவி உண்டு." யாரோ கூவினான். "அவளைத் தேடுங்கள்."

மெஹ்ருன்னிஸா அந்த வார்த்தையைக் கேட்டு நின்ற இடத்திலேயே உறைந்து போனாள்.

"அம்மா" லாட்லி அழ ஆரம்பித்தாள்.

"நிறுத்து" மெஹ்ருன்னிஸா அவசரமாக அவள் வாயை மூடினாள். "சத்தமிடாதே. அவர்கள் நம்மைக் கண்டுபிடித்து விடுவார்கள்."

படை வீரர்கள் மேலே வந்து கொண்டிருந்தனர். அவர் களது காலடிச் சப்தம் மாடிப்படிகளில் கேட்டது. மெஹ்ருன் னிஸா திரும்பித் தன் அறைக்குள் சென்றாள். ஒரு வேளை தன்னலில் ஏறிக் குதித்து தப்பிக்கப் பார்க்கலாம். அவள் கண் மூடித்தனமாக உள்ளே ஓட ஏதோ ஒன்றின்மீது மோதிக் கொண்டாள். இரண்டு கைகள் அவள் தோள்களை இறுகப் பிடித்தன. சிவந்த கண்களுடன் அந்தப் படைவீரனைக் கண்டவுடன் அவள் இதயம் நின்று விடும் போலாயிற்று.

"தயவு செய்யுங்கள்..." அதற்கு மேல் அவள் குரல் எழும்பவில்லை.

அவன் அடித் தொண்டையில் முணுமுணுத்தான் "நீதான் அலிகுலியின் மனைவியா?"

பயத்தில் தொண்டை காய்ந்து போக, மெஹ்ருன்னிஸாவால் தலையை அசைக்கத்தான் முடிந்தது. அவள் இதயம் ஒருமுறை துடிப்பதை நிறுத்தியது. அவள் வாழ்க்கையிலேயே முதன் முறையாக மூளையையே மரத்துப் போகச் செய்யும் பயத்தை உணர்ந்தாள். அந்த மனிதன் வலது கண்ணருகே வெட்டப்பட்டு, முகத்தில் இரத்தம் வழிந்து கொண்டிருக்க, உடல் முழுவதும் இரத்தக் கறையுடன் இருந்தான்.

"வா" அவன் அவளை முரட்டுத்தனமாக இழுத்தான்.

"மாட்டேன்."

"சத்தம் போடாதே. படைவீரர்கள் கேட்டு விடுவார்கள். வா," அவள் அவனிடமிருந்து விலக முயற்சிக்கையில் அவன் மறுபடியும் கூறினான். "அவர்களிடமிருந்து நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். நீ மறைந்திருக்க வேண்டும். அவர்களுக்கு இரத்தப்பசி. உன்னைக் கொல்லாமல் விடமாட்டார்கள்... ஒரு வேளை அதற்கும்மேல் கெடுதலாக..."

காலடி சப்தம் அருகில் கேட்டது. உடைகள் வைக்கும் ஒரு பெரிய மரப்பெட்டியின் அருகில் மெஹ்ருன்னிஸாவையும் லாட்லியையும் அவன் இழுத்துச் சென்றான். அவர்களை உள்ளே வைத்து பூட்டிவிட்டு அவன் திரும்புகையில், படைவீரர்கள் உள்ளே பாய்ந்தனர்.

"அவள் இங்கே இருக்கிறாளா?"

"இல்லை. அவள் வீட்டை விட்டு வெளியே ஓடிப் போயிருக்க வேண்டும்." அந்த மனிதன் பதிலளித்தான். "அவள் வெகுதூரம் சென்றிருக்க முடியாது. வெளியே போய்ப் பாருங்கள்."

ஆனால், படைவீரர்கள் அவன் சொன்னதைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. அவர்கள் அறையில் அங்கும் இங்கும் ஓடி, அலமாரிகளைத் திறந்து சாமான்களை வாரி வீசித் தங்கள் வாள்களால் உடைகளையும் துணிமணிகளையும் தாறுமாறாகக் கிழித்தெறிந்தனர். ஒருவன் அந்த மரப் பெட்டியை உதைக்க, அந்தச் சப்தம் மெஹ்ருன்னிஸாவிற்கு கேட்டது. அவள் லாட்லியை இறுக அணைத்துக் கொண்டு குறுகி உட்கார்ந்திருந்தாள். பின் திடீரென்று அவர்கள் அனைவரும் அறையை விட்டு வெளியே ஓட, அங்கு ஒரு அமைதி நிலவியது. காலடி சப்தம் குறையக் குறைய, லாட்லியை இறுக அணைத்தவாறு மெஹ்ருன்னிஸா ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். சிறிது நேரம் கழித்து அந்த மனிதன் பெட்டியைத் திறந்தான். "நீ வெளியே வரலாம். அவர்கள் சென்று விட்டார்கள்."

அவர்கள் வெளியே வர அவன் உதவி செய்தான். மெஹ்ருன்னிஸா வெளியே வர எத்தனிக்கையில், லாட்லி முனகுவதைக் கேட்டவுடன் அவள் வாயைத் தான் இன்னும் பொத்திக் கொண்டிருப்பதை அவள் உணர்ந்தான். அவள் கையை எடுத்தவுடன், லாட்லியின் முகத்தில் அவள் கையின் வடு சிவப்பாகப் பதிந்திருப்பதையும், அவள் உதட்டை கடித்ததினால் இரத்தம் வந்து கொண்டிருப்பதையும் பார்த்தாள்.

"நீ யார்? எங்களுக்கு ஏன் உதவி செய்தாய்?" அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளாமல் மெஹ்ருன்னிஸா வினவினாள்.

"என் பெயர் ஹைதர் மல்லிக். குத்புதீன் கான் கோக்காவின் வீட்டில் நான் ஒரு பணியாள். இந்தப் படைவீரர்கள் உங்களுக்கு துன்பம் கொடுப்பது சரியல்ல..." அவன் தயங்கினான். "உங்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்திருந்தால் சக்ரவர்த்தி என்னை மன்னித்திருக்க மாட்டார்."

அதிர்ச்சியில் உடல் குலுங்கியபடி மெஹ்ருன்னிஸா அவனை உற்றுப் பார்த்தாள். அலிகுலி மேல் இவ்வாறு தாக்குதல் செய்வதற்கு ஜஹாங்கீர் தான் காரணமா? குற்றம் ஏதும் செய்யாத மனிதனைத் தாக்கிக் கொல்ல ஒரு சக்ரவர்த்திக்குக் கூட அதிகாரம் கிடையாது. ஆனால், கீழே நடந்த இத்தனை பெரிய அட்டூழியத்திற்கு ஜஹாங்கீர்

பொறுப்பாக இருக்க முடியாது. நிலமை எப்படிக் கடந்தி
கடங்காமல் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகியதை அவள்
தன் கண்களாலேயே பார்த்தாள். கோக்கா அமைதியாக
பேசத் தொடங்கிய பொழுது, எந்தவிதத் தூண்டுதலும்
இல்லாமல் அலிகுலி அவன் வயிற்றில் வாளினால் குத்
னான். மகளை இறுக அணைத்தபடி அவள் நடுங்கினாள்.

"உங்களை நாங்கள் தங்கியிருக்கும் முகாமிற்கு அழைத்துச்
செல்கிறேன்."

மெஹ்ருன்னிஸா தலையசைத்துச் சம்மதம் தெரிவித்தாள்.
அவன்கூட வீட்டை விட்டு வெளியேறி அந்தக் காலியான
முற்றத்தைக் கடந்து சென்றாள். அவன் எங்கு அழைத்துச்
சென்றிருந்தாலும் அவன் கூட அவள் போயிருப்பாள். எந்த
உணர்வும் இல்லாமல் மூளை மரத்துப் போயிருந்தது. பல
நிகழ்ச்சிகள், மிகமிக வேகமாக, அவள் மனதில் பதிவதற்கு
முன்பே நடந்து முடிந்து விட்டன. மல்லிக்கின் நெடிய
உருவத்தைத் தொடர்ந்து, அவள் வெறிச்சோடியிருந்த
பர்த்வானின் தெருக்களில் நடந்தாள். ஏதோ பஞ்சுப் பொதி
யைச் சுமப்பது போல் அவன் லாட்லியைத் தன் கைகளில்
சுமந்து முன்னே சென்று கொண்டிருந்தான். தெருக்களில்
மூடிய கடைகளையும். குளிர்ந்த இரவில் மினுமினுத்துக்
கொண்டிருக்கும் தெரு விளக்குகளையும் மெஹ்ருன்னிஸா
பார்த்துக் கொண்டே சென்றாள். நிழலில் படுத்திருந்த தெரு
நாய்கள் எழுந்து நடமாடுவதைக் கண்டாள். ஆனால், எந்த
சப்தமோ, எந்த காட்சியோ, அவள் மனதில் பதியவில்லை.
உணர்ச்சியே இல்லாமல், மல்லிக்கின் பின்னால், ஒவ்வொரு
அடியாகத் தொடர்ந்து செல்வது மாத்திரமே அவளால்
செய்ய முடிந்தது.

கிழக்கில் கதிரவன் உதிக்கையில், அவள் அகன்று விரிந்த
கண்களில் அதிர்ச்சியுடனும் பயந்துடனும் மல்லிக்கின்
கூடாரத்தில் அமர்ந்திருந்தாள். ஹைதர் மல்லிக் அவளைப்
பிடித்து இழுத்துச் சென்றதில் அவன் பிடித்த இடங்களில்,
சோலியும், முகத்திரையும் இரத்தத்தில் தோய்ந்து காய்ந்து
போயிருந்தன. அதன் வாடை அவளைக் குமட்டியது.
பக்கத்து வீடு ஒன்றில் ஒரு சேவல் கொக்கரிக்க,

மெஹ்ருன்னிஸா பயத்தில் திடுக்கிட்டாள். வெட்டுவதற்குக்
கொண்டு வந்த பலிகடா போல் அலிகுலி இறந்த காட்சியை
நினைத்துப் பார்த்து, அவள் பெரிதாக நடுங்கினாள். அவன்
உடலில் மிஞ்சியது வெகுகுறைவு — அவளுக்குக் கணவனாக
இருந்தவன் என்று காண்பிப்பதற்கு ஒன்றுமே மிஞ்சவில்லை,
லாட்லியைத் தவிர! குழந்தை லாட்லி, அவள் வயதிற்கு
ஏற்பத் தன் தாயின் கைகளைப் பிடித்தவாறு பக்கத்தில்
அழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். கூடாரத்தைச் சுற்றிக்
காவலர்களை நிறுத்தி விட்டு, மல்லிக் வீட்டிற்குத் திரும்பச்
சென்றிருந்தான்.

பலமாகக் காயம் பட்டிருந்த கவர்னருக்கு வைத்தியம்
செய்ய ஒரு மருத்துவர் வரவழைக்கப்பட்டார். அந்த முற்றத்
திலேயே ஒரு கூடாரம் அமைக்கப்பட்டு, அதில் குத்புதீன்
கோக்காவிற்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. வைத்தியர்
சிகிச்சை செய்கையில் மல்லிக் அருகிலிருந்து பார்த்துக்
கொண்டிருந்தான். கோக்கா உயிருடன் இருந்தால்தான்,
அவன் கூடாரத்திலுள்ள பெண்மணிக்கு நல்லது என்று
அவன் நினைத்தான். ஆனால், நடந்தது நடந்து விட்டது.
மல்லிக் கோக்காவின் படுக்கை அருகிலேயே இருந்து
பார்த்துக் கொண்டான். ஆனால், கோக்கா கண் விழிக்கவே
யில்லை. சண்டை நடந்த பன்னிரண்டு மணி நேரத்திற்குள்,
அவர் குடும்பத்தினர் வந்து சேர்வதற்குள், கோக்காவின்
உயிர் பிரிந்தது.

அஸ்மத்தும், கியாஸ் பெக்கும் அவர்களது வீட்டு
முற்றத்தைச் சார்ந்த தோட்டத்தில் இருந்தனர்.
கியாஸ் ஒரு கல் மேடையில் அமர்ந்திருக்க, அஸ்மத் அவர்
அருகே நின்றிருந்தாள். அவர்களைச் சுற்றி இருட்டு படர்ந்து
வெகு நேரம் ஆகியும், கியாஸ் பெக் ஒரு கடிதத்தைக் கையில்
பிடித்தவாறு இருக்க, இருவரும் பலவித எண்ணங்களில்
மூழ்கியிருந்தனர். அன்று பிற்பகலில்தான் அந்தக் கடிதம்
வந்திருந்தது. அதில் இருந்த வாசகங்கள் அவர் மனதில்
ஆழப் பதிந்திருந்தன. ஹைதர் மல்லிக் என்ற ஒருவர் அந்தக்
கடிதத்தை எழுதியிருந்தார். வார்த்தைகள் மனதில் பதியாமல்,
கியாஸ் அந்த வெள்ளைக் காகிதத்தை வெறித்து பார்த்தவாறு

இருந்தார். மெஹ்ருன்னிஸாவும் லாட்லியும் அவர் வசம் இருக்கிறார்கள். அலிகுலி இறந்துவிட்டான். நம்ப முடியாமல் மூன்று மணி நேரத்திற்கு முன் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல், கியாஸ் தலையை வேகமாக ஆட்டினார். அலிகுலி ஏன் கோக்காவைத் தாக்கினான்? அவரை ஏன் கொலை செய்தான்?

அவர் மனைவியின் குரல், அவர் எண்ணத்தைக் கலைத்தது. "மெஹ்ருன்னிஸா பத்திரமாக இருப்பாளா?"

கியாஸ் பெருமூச்சு விட்டார். "எனக்குத் தெரியவில்லை. அவள் தலைவிதி அல்லாவின் கையில் உள்ளது."

கணவன் அருகில் அமர்ந்து அஸ்மத் பேகம் அவர் தோளில் தலையை சாய்த்துக் கொண்டாள். "அவளை இங்கு அழைத்து வரச் செய்யுமாறு நீங்கள் சக்ரவர்த்தியிடம் கேட்க முடியுமா?"

அவள் துயரத்தைத் தன்னால் துடைக்க முடியுமா என்று எண்ணியவாறு கியாஸ் பெக் அவளை அணைத்துக் கொண்டு அவள் நெற்றியில் முத்தமிட்டார். "கோக்காவின் மரணம் குறித்து சக்ரவர்த்தி மிகவும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார். நம் மருமகன்தான் கோக்காவைக் கொலை செய்தான்."

ஏன்? இந்த எண்ணம் அவருள் மறுபடியும் தலை தூக்கியது. ஏன்? அர்ஜுமண்டின் நிச்சயதார்த்த விழாவில் ஜஹாங்கீர் மெஹ்ருன்னிஸாவைச் சந்தித்த நிகழ்ச்சியால், இப்படிப்பட்ட முடிவு ஏற்படும் என்று அவர் ஒரு பொழுதும் கற்பனை செய்ததில்லை.

கண்களில் நீர் பெருக அஸ்மத் கூறினாள். "கோக்காவின் மரணத்திற்கு மெஹ்ருன்னிஸா பொறுப்பல்ல. அவள் நம்மிடம் வந்து சேரவேண்டும். அவள் உயிர் ஆபத்தில் இருக்கிறது."

"எனக்குத் தெரியும்." கியாஸ் கூறினார். "கோக்காவின் குடும்பத்தினர் மெஹ்ருன்னிஸா மீதும் லாட்லி மீதும் பழி வாங்கத் துடிக்கின்றனர் என்பதும் எனக்குத் தெரியும்.

ஆனால், சக்ரவர்த்தி அவளை நம்மிடம் கொண்டு சேர்க்க உத்தரவிடும் வரை..." அவர் தன் இயலாமையைக் குறிக்கும் வகையில் கைகளை விரித்து, "நம்மால் ஒன்றும் செய்ய இயலாது."

அஸ்மத் கைகளில் முகத்தைப் பதித்துக் கொண்டு அழுதாள். தன் கண்ணீரைக் கட்டுப்படுத்தியவாறு கியாஸ் மௌனமாக அவளைப் பார்த்தார். அழுவதினால் என்ன பயன்? சில மணி நேரங்களுக்கு மனதிலிருந்த வலியைச் சிறிது குறைக்கும். ஆனால், கவலை இருந்து கொண்டுதான் இருக்கும். மெஹ்ருன்னிஸா வங்காளத்தில் தனியாக, யாரென்றே இவர்களுக்குத் தெரியாத இந்த ஹைதர் மல்லிக் என்பவரின் பாதுகாப்பில் இருக்கிறாள். அல்லா, தயவு செய்து என் குழந்தைக்குத் துணையாக இரு. அஸ்மத்திடம் கூறியபடித்தன் பெண்ணின் பாதுகாப்பிற்காகப் பிரார்த்தனை செய்வது தவிர வேறு ஒன்றும் இவரால் செய்ய முடியாது.

தன் மனைவியிடமிருந்து அவர் வேறுபக்கம் திரும்பினார். மற்றொரு விஷயமும் அவரைக் கவலை கொள்ள வைத்தது. அலிகுலியின் மரணச் செய்திக்கு ஒப்பிட்டால் இது சிறிய விஷயம்தான். ஆனால், இதுவும் முக்கியமானதே! அலிகுலியின் நடத்தையும், இந்த விஷயமும் சேர்ந்துதான், மெஹ்ருன்னிஸாவை அரசரின் பாதுகாவலர்களுடன் ஆக்ரா அழைத்து வர உதவவேண்டும் என சக்ரவர்த்தியைக் கேட்க அவருக்குத் தைரியம் கொடுக்கவில்லை. ஆனால், இந்த விஷயமும் சீக்கிரத்தில் வெளிச்சத்திற்கு வந்து விடும். பின் சாம்ராஜ்ஜியத்தில் அவர் தகுதி இறங்கி விடும். அல்லாவே! ஒருவன் ஏற்கெனவே கஷ்டத்தில் இருக்கும் பொழுது மேன் மேலும் துன்பங்கள் ஏன் வருகின்றன?

ஆவற்றில் அசைந்தாடும் நிழல்களைப் பார்த்தவாறு சக்ரவர்த்தி தன் தனிஅறையில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றிலும் அரண்மனை முழுவதும் உறங்கிக் கொண்டிருந்தது. அவர் கோக்காவைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். அவர் உடன் பிறவாச் சகோதரன் பற்றி பல ஞாபகங்கள். அவருக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே நடந்த பல

நிகழ்ச்சிகள், அவர் நினைவில் எழுந்தன. கோக்காவின் தாயார் தான் அவருக்குக் குழந்தைப் பருவத்தில் பாலூட்டி தாதியாக இருந்திருக்கிறாள். அவர்கள் இருவருமே அவள் பாலைக் குடித்துப் பசி தீர்ந்து, அவள் மார்பகத்தில் சாய்ந்து உறங்கி இருக்கிறார்கள். குழந்தைப் பருவத்தில் இருவரும் ஒரே படுக்கையில் படுத்துறங்கி, ஒரு அரியணைக்கு வாரிசான இளவரசன், மற்றவன் சாதாரண குடிமகன் என்பதை மறந்து — குழந்தைகளானதால் இந்த வித்தியாசம் ஞாபகத்தில் இருப்பதில்லை— ஒரே பொருளுக்காகச் சண்டையிட்டிருக்கின்றனர். ஜஹாங்கீரின் மற்ற இரு உடன்பிறந்த சகோதரர்கள், இளவரசன் முராத் மற்றும் இளவரசன் தனியால் இருவரும் அரண்மனையில் வேறுபகுதிகளில் வளர்ந்து வந்ததால், குழந்தைப் பருவத்தில் ஜஹாங்கீர் அவர்களை அதிகம் பார்த்ததில்லை. அவர் பெரியவனாகிய பின், அரியணைக்கு அவருக்குப் போட்டியாக இருப்பவர்களாகவே அவர்களை நினைத்திருக்கிறார். ஆனால், கோக்கா — அப்படிப்பட்ட இடையூறுகள் கோக்காவிடமிருந்து இல்லை, அவர் மேல் ஆழ்ந்த ஈடுபாடு, அன்பு மட்டும்தான். இப்பொழுது அவன் இறந்துவிட்டான். தன்னுடைய கடைசி மூச்சிலும் தன் சக்ரவர்த்தியின் பெயரைக் கூறியவாறு, பொறுக்க முடியாத துன்பம் அனுபவித்து, மரணமடைந்தான் என்று வங்காளத்திலிருந்து வந்த செய்தி கூறுகிறது.

கண்ணீர் அவர் பார்வையை மறைக்க, ஜஹாங்கீர் தலையைக் குனிந்து கொண்டார். அவனுக்காக வருந்துவதற்கு கூட இப்பொழுது நேரம் இல்லை. அரசர்களுக்குத் துக்கப்படுவதற்கு கூட நேரம் கிடைப்பதில்லை. அவருக்கு அளவில்லா கோபம் வந்தது. இராணுவ வீரர்கள் அலிகுலியை உயிருடன் பிடித்து வந்து அவரிடம் ஒப்புவித்திருக்க வேண்டும். பிறகு அவர் விரும்பிய தண்டனையை அவனுக்கு அளித்திருக்கலாம். ஆனால், அலிகுலி இறந்துவிட்டான். மெஹ்ருன்னிஸா வங்காளத்தில் இருக்கிறாள்.

அவர் தன் கண்களைக் துடைத்துக் கொண்டார். அவளிடம் அவருக்குள்ள காதல் இத்தனை உயிர்களைப் பலி கொடுக்க ஈடானதா?

இவ்வளவு துயரத்திற்கு நடுவிலும், அவரால் மெஹ்ருன்னிஸாவை நினைத்துக் கவலைப்படாமல் இருக்கமுடியவில்லை. அவள் இப்பொழுது பாதுகாப்புடன் இருக்க வேண்டும். இப்பொழுது அவள் அவரிடம் வரவேண்டும். சில நாட்கள் கழிந்த பின் அவர் அவளை வரவழைப்பார். ஆனால்... பல விஷயங்கள் மாறிவிட்டன. அலிகுலியின் மரணம் பல விஷயங்களை மாற்றிவிட்டது. கோக்கா்வின் வீரர்களால், பார்க்கப் போனால் சக்ரவர்த்தியின் இராணுவத்தைச் சேர்ந்த வீரர்களால் அவன் மரணம் அடைந்திருக்கிறான். அலிகுலியைக் கொலை செய்யச் சொல்லி அவர்தான் உத்திரவிட்டிருக்கிறார் என்று மெஹ்ருன்னிஸா எண்ணுவாளா? அப்படி அவள் நினைத்தால் அதற்காக அவரை மன்னிப்பாளா?



அத்தியாயம் பதினாறு

இதிமத் உத்தின், அமீர் அல் உம்ரா என்ற அமைப்பின் திவான் (தலைமை அதிகாரி) இமிடம் உத்தம்சந்த் என்ற மதநம்பிக்கை யில்லாத ஒருவன் வேலையில் இருந்தான். அவன், இதிமத் உத் தௌலாப் என்பவர் 50,000 ருப்பய்யா மோசடி செய்து விட்டதாக தினாயத்கான் என்பவரிடம் கூறினான். தினாயத்கான் அதைப் பற்றி அரசரிடம் கூற, இதிமத் உத் தௌலாப் இந்தக் கானின் கண்காணிப்பில் வைக்கப்பட்டான்.

- **B. NARAIN**, trans. and S. SHARMA, ed.,
A Dutch Chronicle of Mughal India.

நிசப்தமாக இருந்த அந்த அறையிலிருந்த விளக்கின் அருகில் ஒரு மெல்லிய தென்றல் காற்று தடவியவாறு சென்றது. விளக்கின் ஒளி மினுமினுத்து, அந்த அறையில் நிழலைப் பரவ விட்டது. இறகினாலான எழுத்தாணியைக் கீழே வைத்துவிட்டுத் தன் இருக்கையிலிருந்து ஒரு மனிதன் எழுந்திருந்து ஜன்னலருகே சென்றான். ஜன்னல் கதவுகளை மூடிவிட்டு அதன் விளிம்பில் சாய்ந்து கொண்டு, தன் தலையை ஜன்னலின் கண்ணாடிமேல் வைத்துக் கொண்டான்.

இப்பொழுது அந்த லாந்தர் விளக்கின் மிதச் சூடான இதமான ஒளி, அந்த அறை முழுவதும் பரவியது. அங்கிருந்த சாய்வு மேஜை மேல் எண்களாலும் எழுத்துக்களாலும் நிரப்பப்பட்டிருந்த கணக்குப் புத்தகத்தின் மீது படர்ந்து அதை வெளிச்சமிட்டுக் காட்டியது. கியாஸ் பெக் நீண்ட பெருமூச்சு விட்டவாறு மறுபடியும் தன் இருக்கைக்குச் சென்றார். எழுத்தாணியைக் கையில் பிடித்தவாறு கணக்குப் புத்தகத்திலுள்ள எண்களை மறுபடியும் கூட்டியும், கழித்தும், பார்த்து ஏதாவது தவறு நேர்ந்திருக்குமா என்று ஆராய்ந்தார்.

கதவருகே ஒரு நிழல் தெரிய, அவர் விறைப்பாகி, அசையாது கூர்ந்து கேட்டார். சோர்வடைந்த விழிகளின் மேல், நெற்றியில் கவலைக் கோடுகள் விழ, அஸ்மத் பேகம் அங்கு நின்றிருந்தாள். சிறிது நேரம் நின்றுவிட்டு அவள் திரும்பிச் செல்கையில், அவள் பாவாடையின் நீண்ட மடிப்புகள், கல் தரையில் பட்டு 'சலசல'வென சப்தம் எழுப்பின. கியாஸ் மறுபடியும் புத்தகத்தை நோக்கிக் குனிந்தார். அவரது சோர்வடைந்த விழிகளுக்கு இலக்கங்கள் தெளிவாகத் தெரியவில்லை.

சாய்வு மேஜைக்கருகில், வெள்ளை மற்றும் இளம் மஞ்சள் நிறத்தில் வசந்த காலத்தில் பூக்கும் மல்லிகைப் பூக்களின் சிறு கிளைகள் ஒரு பூச்சாடியில் கொத்தாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் இதமான நறுமணம், அவரைச் சுற்றி அந்த அறையில் படர்ந்தது. இந்த மலர்களைத் தொடுத்துத் தன் தலையில் சூட்டிக் கொள்வதில் மெஹ்ருன்னிஸாவிற்கு மிகுந்த விருப்பம் என்பது அவருக்குச் சட்டென்று நினைவிற்கு வந்தது. அவர் மேஜையில் தலையை கவிழ்த்துக் கொண்டார். ஆறு மாதங்களாகிவிட்டன. ஹைதர் மல்லிக்கிடமிருந்து வந்த மற்றொரு சிறு கடிதத்தைத் தவிர, மெஹ்ருன்னிஸாவிடமிருந்து நேரிடையாக எந்தத் தகவலும் இல்லை. அவளும், லாட்லியும் நலம். ஆனால், அவர்கள் உயிருக்கு இன்னும் ஆபத்துள்ளது என்று ஹைதர் மல்லிக் எழுதியிருந்தான். வங்காளத்திலிருந்து பயணம் மேற்கொள்வது இன்னும் பாதுகாப்பானதல்ல. ஆறு மாதங்கள் காத்திருந்தாகி விட்டது. கியாஸ் தலையை நிமிர்த்தி, மறுபடியும் கணக்குப் புத்தகங்களைப் பார்த்தார். ஆறு மாதக் கால எதிர்பார்ப்பு... இப்பொழுது இந்தச் சுமையும் கூட.

சில மணி நேரம் கழித்து, விளக்கு சிறிது துடித்து விட்டு, மற்றிலும் அணைந்து, அந்த அறையை இருட்டில் மூழ்கடித்தது. வெளியே வானம் சிறிது வெளுத்தது. இரவுப் பாதுகாவலன் நேரத்தைக் கூறிச் சத்தமிட்டான். அவன்

குரலை கேட்பதில் இனம் புரியாத சுகம் இருந்தது. எ
என்ன நடந்தாலும், அவன் குரல் ஒரே மாதிரியா
இயல்பாக ஒலிக்கும். பாதுகாவலன் குச்சியைத் தட்டி
சப்தம் தூரத்தில் அடங்கும் வரை கியாஸ் காத்திருந்தா
இன்னும் சில மணி நேரங்களில் இன்னொரு நாள்... அ
கௌரவத்தை, மதிப்பை எடைபோடும் நாள்...

"இன்ஸா அல்லா, கியாஸ் பெக்."

"இன்ஸ்ஹாப் அல்லா, தினாயத்கான்."

தினாயத்கான் கையை உயர்த்தினான். "சிறிது பொறு
கள், நண்பரே! உம்மிடம் சொல்ல வேண்டிய விஷய
ஒன்றுள்ளது."

அந்தத் திவான் இதயம் குறுகத், தன் நண்பனை
பார்த்தார். அவன் முகம் அழுத்தமாக இருந்தது.

"நேற்றிரவு உத்தம்சந்த் என்னிடம் வந்திருந்தான்
மெதுவாகத் தினாயத் கூறினான். "அவன் சொல்ல வந்த
என்னவென்று உமக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்."

கியாஸ் தலையசைத்தார். உணர்ச்சியற்று, அவர் ஜன்னல்
பக்கம் திரும்பி, வெளியே குனிந்து, குளிர்ந்தகாலைக்
காற்றைச் சுவாசித்தார். இந்த சாம்ராஜ்ஜியத்தில் திவானாக
அவர் இருந்த அந்தப் புகழ்மிக்கப் பதவி முடிவிற்கு வந்து
விட்டதா? எச்சரிக்கை ஏதுமில்லாமல் விஷயங்கள் வேகமாக
நடக்கத் தொடங்கி விட்டன. பேரரசின் கருவூலத்திலிருந்து
பணத்தை மோசடி செய்ய எது அவரைத் தூண்டியது?

அவர் எதிரே அவரை அழைப்பது போல் கிடந்த
அந்தப் பணம் — பேரவையின் எண்ணிலடங்காத கணக்கு
வழக்குகளிடையே கவனிக்க முடியாது என்று அவரை
எண்ண வைத்த அந்த பணம் — அவர் முன்னே இருந்த
அந்த நாள் அவருக்கு நினைவு வந்தது. லாகூர்க் கோட்டையில்
மேலும் ஒரு பகுதி கட்டுவதற்காக ஒரு கட்டிட நிர்மாணிப்
பாளர் ஒரு மதிப்பீடு அனுப்பியிருந்தார். அதற்கான
பணத்தை அரசின் கருவூலத்திலிருந்து திவானுக்கு அனுப்பப்
பட்டிருந்தது. ஆனால், ஏதோ சில காரணங்களால், கட்டிடம்

டும் செலவு ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் குறைந்து
டிருந்தது. கியாஸிற்கு மிகுந்த பணத்தட்டுபாடு ஏற்பட்ட
யத்தில் இந்த நிகழ்ச்சி நடந்தது. அர்ஜ்மன்ட்
சியதார்த்தச் செலவு அளவுக்கு மீறிப் போய்விட்டது.
யாஸ் அந்தப் பணத்தைத் தான் எடுத்துக்கொண்டு, அரசின்
கணக்காளர் அந்தப் பணம் கட்டிடக்காரருக்கு கொடுத்ததாக
ண்ணிக் கொள்ளட்டும் என்று நினைத்துச் சும்மா இருந்து
ட்டார்.

ஒரு மாதம் முன்பு, அந்த கட்டட நிர்மணிப்பாளர் தன்
செலவுக்கான பட்டியலைப் பொக்கிஷக் கணக்கருக்கு
அனுப்பியிருந்தார். இன்று கருவூலத்தின் ஆண்டு வரவு
செலவுக் கணக்கைப் பார்க்கும் நாள். கியாஸ் எவ்வளவோ
முயன்றும், இதுவரை அந்தப் பணத்தைப் பேரரசின் கஜானா
விற்குத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. மேலும்,
பொக்கிஷக் கணக்கையும் இந்த மோசடி வெளியே தெரியாத
படி எழுதவும் முடியவில்லை. ஒரே ஒருவனுக்குத்தான் இது
பற்றித் தெரியும். அவர் கீழ் வேலை செய்யும் அலுவலக
உதவியாளன் உத்தம்சந்த். கட்டட நிர்மாணிப்பாளர். அவர்
செலவுப் பட்டியலை அனுப்பிய தினத்தன்று அவனும்
உடன் இருந்திருந்தான்.

"உம்மால் எப்படி இதைச் செய்ய முடிந்தது?" தினாயத்
கானின் குரல், அவர் எண்ணங்களைக் கலைத்தது.

கியாஸ் அயர்ச்சியுடன் ஜன்னலிலிருந்து திரும்பினார்.
"எனக்கே தெரியாது. ஒருக் கணத்தில் என்னுள் ஏற்பட்ட
பலவீனம்."

"நான் சக்ரவர்த்தியிடம் சொல்ல வேண்டியிருக்கும்.
உமக்குத் தெரியுமல்லவா?" இதைத் தன்னால் தவிர்க்க
முடியாதே என்ற மன அழுத்தத்துடன் தினாயத்கான்
கூறினான்.

அவமானம் அவரைத் தாக்கியது. வெளிப்புற ஆடம்பரங்
களும், வேஷங்களும் தன் தலைக்கு ஏறியதால் அவர் செய்த
இந்தக் காரியத்தை நினைத்து அவர் வெட்கத்தில் கூனிக்
குறுகினார். நல்ல வேளை, இதைப் பார்ப்பதற்கு இப்பொழுது

அவர் தகப்பனார் உயிருடன் இல்லை என்று எண்ணிக் கொண்டார். ஆனால், அவர் மனைவி இருக்கிறாள். குழந்தைகள் இருக்கிறார்கள். அவர் செய்த காரியம் இவர்களையும் பாதிக்கும். அவர் தன் தண்டனையை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதுதான் சரியானது. அவரால் இதைக் கடைப் பிடிக்க முடியாவிட்டால், அவர் இனித் தன் குழந்தைகளுக்கு நல்ல புத்திமதிகள் கூறத் தகுதியற்றவராக ஆகிறார்.

"ஆமாம்" தினாயத்கானை நிமிர்ந்து நோக்கியவாறு கியாஸ் பெக் கூறினார். "அது உன் கடமை ஆகும்."

"என்னை மன்னியுங்கள்..." கியாஸின் தோளில் ஆதர வாகக் கையை வைத்தபடி தினாயத்கான் கூறினான். "உம் முடைய நிலைமையைப் பற்றி முடிந்த மட்டும் எடுத்துக் கூறுகிறேன், கியாஸ். நீங்கள் என்னிடம் அன்புடன் இருந்திருக்கிறீர்கள். பொக்கிஷத்தில் கணக்கர் பதவிக்கு என்னைச் சிபாரிசு செய்திருக்கிறீர்கள். இப்பொழுது நான் உமக்குக் கைமாறு செய்ய விரும்புகிறேன். சக்ரவர்த்தி உம்மை மன்னிப்பாரென்று நம்புகிறேன்."

'நானும் அப்படித்தான் நம்புகிறேன்' சக்ரவர்த்தி நிகழ்ச்சி களைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் மக்கள் சபைக்குத் தன் நண்பனைத் தொடர்ந்து, தலை குனிந்தவாறு கியாஸ் சென்றார்.

அந்தப் புரத்து வரவேற்பு அறையில் பிரவேசிக்கையில், ஜஹாங்கீர் எரிச்சலுடன் புருவத்தை நெருக்கினார். அவர் மிகவும் களைப்பாக இருந்தார். மக்கள் சபை நிகழ்ச்சி கள் முடிவில்லாத ஒன்றாக நீண்டு கொண்டே போயிருந்தது. அவர் முடித்து விட்டு எழுந்திருக்கும் சமயத்தில் தினாயத் கான் அவருடன் பேச வேண்டும் என விண்ணப்பித்துக் கொண்டான். அவன் ஏன் முதலிலேயே வந்திருக்கக் கூடாது?

"என்ன விஷயம்?" தினாயத்கானின் வணக்கத்தைப் பாதியில் தடுத்தபடி ஜஹாங்கீர் வெடுவெடுப்புடன் கேட்டார்.

"மாட்சிமை பொருந்தியவரே! உங்கள் ஓய்வைத் தடை செய்வதற்கு மன்னிக்கவும். சிறிது சங்கடமான விஷய மானதால் பேரவையில் கூற முடியவில்லை."

"மேலே சொல்" ஜஹாங்கீர் மெத்தையில் நன்கு சாய்ந்து அமர்ந்து கொண்டு கேட்கத் தயாரானார். தினாயத்கான் பேசப் பேச, அவரது முகச் சுளிப்பு மேலும் தீவிரமானது. இது மிகவும் அதிகம். கியாஸ்... எப்படி அவருக்கு இவ்வாறு நம்பிக்கைத் துரோகம் செய்யக் முடிந்தது...? முதலில் அலிகுலி அவரது உடன்பிறவாச் சகோதரனைக் கொன்றான். இப்பொழுது அதே குடும்பத்தில் இன்னொருவர் பண மோசடி செய்திருக்கிறார். இத்தனை இருந்தாலும், மெஹ்ருன்னிஸாவின் மேல் அவருக்கு இன்னும் மோகம் இருந்தது. பேரரசின் வீரர்களின் பாதுகாப்பில் வங்காளத்தி லிருந்து மெஹ்ருன்னிஸா ஆக்ரா வர, நேற்றுத்தான் அவர் கட்டளை பிறப்பித்திருந்தார். அவளை அணுகுவதற்கான நேரம் இன்னும் வரவில்லை. அலிகுலியின் மரணத்தையும் இதையும் இணைத்து ஜனங்கள் பேசுவார்கள். அவரால் ஏன் அவளை மறக்க முடியவில்லை? அவளை அடைவதி லிருக்கும் மதிப்பைவிட, அவள் குடும்பத்தினரால் ஏற்படும் இடையூறுகள் தான் அதிகம். சக்ரவர்த்தி மனதிற்குள் புலம்பியவாறு தன் மெத்தையில் சௌகரியமாக அமர்ந்து கொண்டார். தலைநிமிர்ந்து, தினாயத்கான் அவருடைய பதிலுக்காகக் காத்திருப்பதைக் கண்டார்.

"திவானை இரும்புச் சங்கிலியில் கட்டுங்கள்" எரிச்ச லுடன் ஜஹாங்கீர் தன் பணியாட்களிடம் கட்டளை யிட்டார்.

"மாண்புமிக்கவரே! மிர்ஜா கியாஸ் பெக் நல்ல முறையில் உங்களுக்குச் சேவை செய்திருக்கிறார். அவர் ஒரு உண்மையான, நியாயமான அதிகாரியாக இருந்திருக்கிறார்... இப்பொழுது வரை... தயவு கூர்ந்து அவரை மன்னித்தருளுங் கள்."

"இல்லை" ஜஹாங்கீர் கோபத்துடன் கூறினார். "அந்தக் குடும்பத்தினர் செய்யும் தவறுகளுக்கு இனி நான் வளைந்து கொடுக்க மாட்டேன். கியாஸ் பெக் சட்டத்தை மீறி நடந்து

கொண்டிருந்திருக்கிறார். அவருக்குத் தண்டனை கிடைக்க வேண்டும். சாதாரணக் குற்றவாளிக்கு ஈடாகத் தான் அவரையும் நடத்த வேண்டும்."

"மாட்சிமை பொருந்தியவரே! தயவு செய்யுங்கள்..." தினாயத்கான் கெஞ்சினான். "குறைந்தபட்சம், அவருக்கேற்ற தண்டனையை நீங்கள் தீர்மானிக்கும் வரையில், என் பொறுப்பில் அவரை விட்டு வையுங்கள்."

ஜஹாங்கீர் தினாயத்கானைப் பார்த்து முறைத்தார். தாமதிப்பதற்கு என்ன அவசியம்? கியாஸிற்குக் கிடைக்கப் போகும் தண்டனை பற்றித் தினாயத் ஏன் கவலைப் படுகிறான்? தினாயத் அவர்முன் மண்டியிட்டவாறு வணங்கி இருக்க, அங்கு அமைதி தொடர்ந்தது. சக்ரவர்த்தி ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். தன் தவறைச் சரி செய்ய கியாஸிற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கலாம். இதுவரை இந்த சாம்ராஜ்ஜியத்திற்கு அவர் நல்ல முறையில் பணி செய்திருக்கிறார். மேலும், அவரது ஒவ்வொரு சிந்தனையிலும் இருக்கும் வங்காளத்திலுள்ள அழகிய பெண்ணின் தந்தை அவர். திடீரென்று அவருக்கு ஒரு மனவருத்தம் ஏற்பட்டது. மெஹ்ருன்னிஸாவை அடைவதற்கு ஏதாவது ஒரு இடையூறு வந்து கொண்டேயிருக்கிறது. முதலில் அவள் கணவன் ஒரு இடையூறாக இருந்தான். இப்பொழுது அரசின் பொக்கிஷத்தில் மோசடி செய்த குற்றத்திற்காக அவள் தந்தை அவர் முன் நிற்கிறார். ஜஹாங்கீர் பெருச்சுவிட்டார். யாரிடமிருந்தும் உண்மையான விசுவாசத்தை எதிர்பார்க்க முடியாதா?

"சரி" முடிவாகத் தினாயத்கானிடம் ஜஹாங்கீர் கூறினார். "என்ன செய்ய வேண்டும் என்று நான் தீர்மானிக்கும் வரை, அவரை உன் பொறுப்பில் நீ கண்காணிக்க வேண்டும். ஆனால், நினைவில் வைத்துகொள்," எச்சரிப்பதுபோல் அவர் ஒரு விரலை உயர்த்தினார். "உன் பாதுகாப்பிலிருந்து அவர் தப்பிவிட்டால், நீ உன் தலையை இழந்துவிடுவாய்."

"நான் புரிந்து கொண்டேன், மாட்சிமை பொருந்தியவரே!" தினாயத்கான் வணங்கிவிட்டு அவர் முன்னிலையிலிருந்து அகன்றான்.

அன்று மாலை, கியாஸ் பெக் அவர் வீட்டிலேயே சிறை வைக்கப்பட்டார். தற்காலிகமாக அவரது பணிகள் ரத்து செய்யப்பட்டன. இரண்டு லட்சம் ரூபாய் அபராதத் தொகையுடன் அந்தப் பணத்தை பேரரசின் பொக்கிஷத்திற்குச் செலுத்திவிட்டு, அவர் காத்திருந்தார்; சக்ரவர்த்தியின் மனதிலுள்ள அவநம்பிக்கை நாளாக ஆகத்தான் மறையும். அதற்குப் பிறகுதான் சக்ரவர்த்தியின் மனதில் மறுபடியும் நல்ல இடத்தைப் பிடிக்க முடியும் என அவர் நம்பினார்.

ஒரு வழியாக இந்த மோசமான நிலைமையை கடந்தாயிற்று. இதைவிட வேறு என்ன நடக்க முடியும்?

அந்த இளைஞன் திரும்பிக் காவலர்களைப் பார்த்தான். அவர்கள் காது கேட்கும் தூரத்தில் இல்லை. அவன் இளவரசனின் தோளில் கையை வைத்து மெதுவாகக் கூறினான். "மாண்பு மிக்கவரே! என்னிடம் ஒரு திட்டம் உள்ளது."

குஸ்ரு சட்டென்று நின்று தன் சிறைக் காவலனை உற்றுப் பார்த்தான். "எதற்கு?"

"உங்களைச் சிறைவாசத்திலிருந்து வெளியே கொண்டு வருவதற்கு, மாண்புமிக்கவரே." மறுபடியும் ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டு, நரூதின் மெதுவாகக் குஸ்ருவைத் தொடர்ந்து நடக்க சைகை செய்தான்.

லாகூரில் அந்தப் பூங்காவின் நடைபாதையில் இருவரும் தொடர்ந்து நடந்தனர். அது அதிகாலை நேரம். வழக்கம் போல் தன் காலை உடல்பயிற்சிக்காகக் குஸ்ரு வெளியே உலாவ வந்திருந்தான். ஆயுதம் ஏந்திய நான்கு காவலர்கள் தூக்கக் கலக்கத்துடன் அவர்களது அரசகுடும்பக் கைதியின் பின் வந்து கொண்டிருந்தனர்.

கோடைக் காலத்திற்காக, அரசரைச் சார்ந்த பேரவை மக்கள், காபூலுக்குக் குடி பெயர்கையில், அமூர்-உல்-அம்ரா-முகமத் ஷரீப் மற்றும் ஜாவர் பெக் என்ற ஒரு அரசசபை உறுப்பினர் பொறுப்பில் லாகூரிலேயே இளவரசன் குஸ்ரு

விடப்பட்டிருந்தான். இளவரசனைப் பாதுகாக்கும் பொறுப்பை ஜாவர் பெக் மற்றும் அவன் மருமகன் நரூதினிடம் விட்டுவிட்டு, முகமத் ஷரீப் அரசவைப் பணி வாரங்களுடன் தொடர்ந்து காபூலுக்குச் சென்று விட்டான்.

உள்ளுக்குள் எதிர்பார்ப்புடன், மனம் துடிக்க, முகத்தில் எவ்வித உணர்ச்சியும் காட்டாமல், நரூதினைக் குஸ்ரு ஓரக் கண்ணால் பார்த்தான். நரூதினை முதலில் பார்த்தவுடனேயே, எளிதில் இணங்கக் கூடிய இளைஞனாக உணர்ந்து, மிகவும் ஜாக்கிரதையாக அவன் நட்பை குஸ்ரு வளர்த்துக் கொண்டான். அவன் தப்பிச் செல்வதற்கு நரூதின் உதவக் கூடுமா?

அவன் நீண்ட மூச்சு விட்டுத் தன் குரலை சமன்படுத்திக் கொண்டு, இயல்பாகக் கேட்பது போல் வினவினான். "உன்னால் எப்படி முடியும்? என்னைச் சுற்றிப் பலத்த பாதுகாப்பு உள்ளது."

"ஒரே ஒரு வழிதான் இருக்கிறது" மறுபடியும் மெதுவாகத் திரும்பிப் பார்த்து, காவலாளிகள் காது கேட்கும் தூரத்தில் இல்லை என்பதை நரூதின் உறுதி செய்து கொண்டான்.

"சக்ரவர்த்தி என்னை வெளியே போக அனுமதிக்க மாட்டார். நான் தப்பித்துச் சென்றாலும், உடனே பேரரசின் இராணுவம் என்னைத் தேடித் தொடர்ந்து வந்துவிடும்."

"அவரால் ஆணையிட முடியவில்லை என்றால், உங்களைத் தொடரவும் முடியாதே, மாண்பு மிக்கவரே!" நரூதின் மெல்லிய குரலில் கூறினான்.

குழப்பத்துடன் குஸ்ரு அவனை உற்றுப் பார்த்தான். இவன் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறான்?

நரூதின் மெள்ள அவன் பக்கம் சாய்ந்து, குரலைத் தாழ்த்திக் கொண்டு கூறினான். "சக்ரவர்த்திக்கு வேட்டைக்குச் செல்வதில் மிகவும் விருப்பம், மாண்பு மிக்கவரே! அரசக் குடும்பத்தைச் சார்ந்த வேட்டையாடும் இடங்களுக்கு அவர் அடிக்கடி செல்வார். அவ்வாறு ஒரு தடவை செல்கையில் அவருக்குத் திடீரென்று, என்ன சொல்லலாம். ஒரு விபத்து நேர்ந்தால்?"

தன்னையறியாமல் குஸ்ரு வேகமாக நடக்கத் தொடங்கினான். கொலை முயற்சி! திடீரென்று ஏற்பட்ட சிளர்ச்சியில் அவன் முகம் வெளுத்தது. "நம்மால் எப்படிச் செய்ய முடியும்? சக்ரவர்த்தியின் கூடவேயிருக்கும் அவர் மெய்க் காப்பாளர்கள் அவருக்கு மிகவும் விசுவாசமானவர்கள். அவர்களுக்குள் நம்மால் ஊடுருவ முடியாது."

நரூதின் புன்னகைத்தான். "அது ஏற்கெனவே நடந்தாகி விட்டது, மாண்பு மிக்கவரே! சக்ரவர்த்தியின் இரண்டு மெய்காப்பாளர்கள் உங்களுக்காக உயிரைக் கொடுக்கக் கூடத் தயங்க மாட்டார்கள். சக்ரவர்த்தி வேட்டைக்குச் செல்கையில், அவர்களும் அவர் கூடவே செல்வார்கள். சந்தர்ப்பம் கிடைக்கையில், தற்செயலாக நடப்பது போல் அவரைச் சுட்டு விடுவார்கள். உங்கள் மேல் ஒரு சந்தேகமும் வராது. சக்ரவர்த்தி இறந்து விட்டால், அரச சபை உறுப்பினர்கள் உங்கள் பக்கம் திரும்புவார்கள். நீங்கள் தானே அடுத்த நேர் வாரிசு" நரூதின் பேசுவதை நிறுத்திவிட்டு குஸ்ருவைப் பார்த்தான்.

குஸ்ரு திரும்பி அவனை கண் கொட்டாமல் விரைத்துப் பார்த்தான். சக்ரவர்த்தி! அதுதான் அவனுடைய மிகப் பெரிய ஆசை! அது இப்பொழுது சாத்தியம் எனத் தோன்றுகிறது. சட்டென்று ஒரு நினைவு வந்தது. "என் சகோதரர்களை எதிர்க்க எனக்கு ஒரு இராணுவப் படை தேவைப்படும்."

"நான் ஏற்கெனவே படையைத் திரட்டி வருகிறேன், மாண்பு மிக்கவரே!" நரூதின் பதிலளித்தான். பெக்தா தர்க்மான் (Begdah Turkman) முகமத் ஷரீப் மற்றும் இதிபார்கான் (Itibar Khan) மூவரும் தங்கள் படை வீரர்களுடன் அவர்களுக்கு உங்களிடமுள்ள பூரண விசுவாசத்தைத் தெரிவிக்க இன்றிரவு இங்கு வருகின்றனர்."

எதையும் நம்ப முடியாமல் குஸ்ருவின் புருவங்கள் உயர்ந்தன. அமிர்—அல்—அம்ரா என் விஷயத்தில் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறாரா?"

நரூதின் சிரித்தான் — "முக்கியத் தலைமை அமைச்சர் முகமத் ஷரீப் அல்ல. இது திவான் கியாஸ் பெக்கின் மூத்த

மகன் முகமத் ஷரீப், மாண்பு மிக்கவரே! உங்களுக்குத் தெரிந்திருக்கலாம், நாங்கள் இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். என் மாமா ஜாவர் பெக்கும், மிர்ஜா கியாஸ் பெக்கும் ஒன்று விட்ட சகோதரர்கள். அப்படித்தான் நாங்களும் உறவினர்கள் ஆகிறோம்."

ஒரு பாதுகாவலன் அருகில் வர, அவர்கள் அவசரமாகத் திரும்பினர். "திரும்பிச் செல்வதற்கு நேரம் வந்துவிட்டது மாண்புமிக்கவரே!"

அவன் சொல்வதில் கவனம் செலுத்தாமலே குஸ்ரு தலையை ஆட்டினான். சட்டென்று நரூதின் பக்கம் ஒரு பார்வை பார்த்தான்.

"நான் விடைபெறுகிறேன், மாண்புமிக்கவரே!" மரியாதையுடன் குனிந்து வணங்கிவிட்டு நரூதின் அங்கிருந்து அகன்றான்.

குஸ்ரரசரின் கூடாரத்திற்கு வெளியே பணியாட்கள் கரி அடுப்புகளைப் பற்ற வைக்கும் ஓசை கேட்டு, ஜஹாங்கீர் கண் விழித்தார். கைகளைத் தலைக்கு மேல் தூக்கிச் சோம்பல் முறித்தவாறு, மெதுவாக நடந்து கூடாரத்தின் வாசல் அருகே சென்று, திரையைத் தூக்கி வெளியே எட்டிப் பார்த்தார். அந்த முகாமே அடர்ந்த பனியினால் சூழப்பட்டிருந்திருந்தது. சீக்கிரமே பனிமூட்டம் கலைய வேண்டும் என்று புருவத்தை நெறித்தவாறு நினைத்துக் கொண்டார்.

"தாங்கள் ஸ்நானம் செய்வதற்கு எல்லாம் தயாராக உள்ளது, மாட்சிமை பொருந்தியவரே!" ஒரு அடிமைப் பெண் அவர் பின்புறமிருந்து கூறினாள்.

ஜஹாங்கீர் தலையசைத்து விட்டு ஆவி பறக்கும் தண்ணீரால் நிரப்பப்பட்ட பளபளக்கும் தாமிரக் குளியல் தொட்டி அருகில் சென்றார். ஒரு மணி நேரம் கழித்து, குளித்து, உடை அணிந்து கொண்டு, மீண்டும் வெளியே பார்த்தார்.

பனிமூட்டம் குறைந்துவர, கதிரவன் பளிச்சென்று கிழக்கு வானில் தோன்றி, இன்று ஒரு நல்ல பிரகாசமான

நாளாக இருக்கும் என்று பறைசாற்றிக் கொண்டிருந்தான். வேட்டைக்கு ஏற்ற நாள் என்று எண்ணியவாறு ஜஹாங்கீர் காலை உணவு உண்ண அமர்ந்தார். நெய்யில் சுட்ட பொன்னிறச் சப்பாத்திகளும், வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், சீரகம் இட்டுத் தயாரித்த முட்டைகறியும் அவர் எதிரே இருந்தன.

"சக்ரவர்த்தியைத் தரிசிக்க வேண்டும்."

எரிச்சலுடன் ஜஹாங்கீர் தட்டிலிருந்து தலையைத் தூக்கினார். அவர் உணவு அருந்தும் வேளையில்தான் ஏன் யாராவது அவரைத் தொந்திரவு செய்கிறார்கள்? அவர் ஹோஷியார்கான் பக்கம் திரும்பினார். "வெளியே என்ன சப்தம் என்று பார்த்து விட்டு வா. யாரும் என்னைத் தொந்திரவு செய்வதை நான் விரும்பவில்லை."

"அப்படியே ஆகட்டும், மாட்சிமை பொருந்தியவரே!" அந்த அலி வணங்கி விட்டு வெளியே சென்றான். உடனேயே திரும்பி வந்தான். "மாண்பு மிக்கவரே! இளவரசர் குர்ரமின் திவான் — க்வாஜா வைஸ் — (Khwaja Wais) தங்களைச் சந்திக்க விரும்புகிறார். விஷயம் மிகவும் அவசரமானது, உடனே உங்களைப் பார்க்க வேண்டுமென்கிறார்."

ஜஹாங்கீர் முகத்தைச் சுளித்தார். "விஷயம் சிறிது நாமதிக்கலாம். நான் வேட்டையிலிருந்து திரும்பிய பின் இன்று மாலை என்னை வந்து சந்திக்கச் சொல்."

"மாட்சிமை பொருந்தியவரே! உங்களைச் சந்திக்க அனுமதி கோருகிறேன்."

"அது இளவரசன் குர்ரம் அல்லவா?"

ஹோஷியார் கூடாரத்தின் திரையை விலக்கிப் பார்த்து விட்டுத் தலையை அசைத்தான்.

திரையை விலக்கிக் கொண்டு குர்ரம் உள்ளே பிரவேசித்தான். தன் நெற்றியில் கையை வைத்து, இடுப்பு வரை குனிந்து, 'கோனிஷ்' முறைப்படி வணக்கம் செலுத்தினான். பொன் நிறமும் பச்சை நிறமும் கலந்த பாரசீகத் தரை

விரிப்பின் மேல் கால் இடறியவாறு, நிமிர்ந்து, அவன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

"என்ன விஷயம், மகனே? நான் காலை உணவு உண்டு கொண்டிருக்கிறேன்."

"நான் மன்னிப்புக் கோருகிறேன், தந்தையே! விஷயம் தாமதிக்க முடியாது. க்வாஜா வைஸ் தங்களுடன் பேசப் பிரியப்படுகிறார். ஏதோ முக்கியச் செய்தி தங்களிடம் கூற வேண்டுமாம்." அந்தக் கூடாரத்தின் கூரையைத் தொடுமளவிற்கு உயரமாக நின்று கொண்டிருக்கும் அலியைப் பார்த்துக் குர்ரம் சிறிது தயங்கியவாறு, "தனிமையில் பேச வேண்டும்" என்றான்.

"என் அந்தப்புரத்தின் ஒரு நம்பிக்கைக்கு உரிய உறுப்பினன் ஹோஷியார்கான். அவன் முன்னிலையில்பேசலாம்."

தன் வழவழப்பான முகவாயைத் தடவியவாறு குர்ரம் அவசரமாகப் பேசினான். "மாட்சிமை பொருந்தியவரே! உங்களை இன்று கொலை செய்வதற்காக வகுத்திருந்த ஒரு சதி திட்டம் பற்றித் தெரிய வந்துள்ளது."

"என்ன?" தன் உணவை மறந்து, ஜஹாங்கீர் கர்ஜித்தார். "என்னைக் கொலை செய்ய யாருக்குத் துணிச்சல் உண்டு?"

காலை மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு நின்றபடிக் குர்ரம் தயங்கினான். இந்தக் கெட்ட செய்தியை கூறுபவனாக இருப்பதில் அவனுக்கு விருப்பமில்லை. ஆனால், கவாஜா வைஸ்—ஐச் சந்திக்க ஜஹாங்கீர் மறுத்துவிட்டார். அவன் இப்பொழுது கூறப்போவது சக்ரவர்த்திக்கு மேலும் சந்தோஷத்தை தரக்கூடியதல்ல.

அவன் நன்கு ஒருமுறை சுவாசித்துக் கொண்டான். "குஸ்ரு", இரண்டு அஹாதி பணியாட்கள், அவன் பக்கம் சேர்ந்தவர்கள்கூடி, வேட்டையின் போது தற்செயலாக நடப்பது போல் அவர்கள் உங்களை சுட்டுக் கொல்வதாக இருக்கிறார்கள். க்வாஜா வைஸ் இந்தச் சூழ்ச்சி பற்றி அறிந்து கொண்டவுடன், என்னிடம் ஓடி வந்து தெரிவித்தார்.

அவருடன் நீங்கள் நேரிலேயே பேசி விஷயத்தை அறிந்து கொள்ள விரும்புவீர்கள் என்று எண்ணி அவரை இங்கு அனுப்பினேன்."

ஜஹாங்கீர் கொதித்தெழுந்தார். அவர் கோபம் கட்டுக் கடங்காமல் ஆயிற்று. கழுத்து நரம்புகள் புடைத்துக் கொண்டன. குஸ்ரு—மறுபடியும், எப்பொழுதும்— குஸ்ரு, லாகூருக்குச் செல்கையில் நிகழ்ந்தவை அவனுக்கு பாடம் புகட்டவில்லையா? இன்னும் அரச கிரீடம் தனக்குக் கிடைக்கும் என்று நம்புகிறானா? இந்தச் செய்தி மாத்திரம் உண்மையாக இருக்குமானால், அவனுக்கு மரண தண்டனை கூடப் போதுமானதல்ல. ஏன் ஒவ்வொரு தகப்பனாருக்கும் இப்படிப்பட்ட மகன்கள் இருக்கிறார்கள்?

"வைஸ்—ஐ உள்ளே வரச்சொல்."

வெளியில் காத்திருந்த க்வாஜா வைஸ் உடனே உள்ளே வந்து 'கோனிஷ்' முறைப்படி வணக்கம் செய்தான்.

"இதைப்பற்றி நீ எப்படிக் கேள்விப்பட்டாய்?"

"நானூறு போர் வீரர்களைத் தன் படைக்கு இளவரசன் நிரட்டினான், மாட்சிமை பொருந்தியவரே! அவர்கள் எல்லோரும் அவனுக்கு விசுவாசமாக இருப்பதாகச் சத்தியம் செய்திருந்தாலும், அதில் சிலர் நம் ஒற்றர்கள். அவர்களில் ஒருவன் இந்தச் செய்தியை என்னிடம் கூறினான். உங்கள் பாதுகாப்பாளர்கள் இருவர் இன்று உங்களைக் கொல்ல முயற்சிக்கப் போகிறார்கள். உங்கள் உயிருக்கு ஆபத்து, மாட்சிமை பொருந்தியவரே! தயவு செய்து வேட்டைக்குச் செல்லாதீர்கள்."

"அதற்கு ஏதாவது சான்று இருக்கிறதா?"

வைஸ் தன் அங்கிக்குள் கையை விட்டுச் சில கடிதங்களை எடுத்தான். "இவைகள் எல்லாம் இளவரசன் குஸ்ருவிற்கும் அவனது அலி இதிபார் கானுக்கும் இடையே நடந்த கடிதப் பரிவர்த்தனைகள். செய்ய வேண்டிய காரியத்தை இளவரசன் இதில் தெளிவாகக் குறிப்பிட்டி

ருக்கிறான். இந்தக் கொலைத் திட்டத்தில் அவனுக்குப் பங்கு உண்டு என்பதில் சந்தேகமேயில்லை, மாட்டினை பொருந்தியவரே!"

ஒரு பட்டுத் துணியில் தன் கைகளைத் துடைத்துக் கொண்டு, ஜஹாங்கீர் கடிதங்களைப் பெற்றுக் கொண்டார். "நீ எப்படி இந்தக் கடிதங்களைக் கவர்ந்தாய்?"

"அந்த அலியின் பணியாட்களுக்கு லஞ்சம் கொடுத்தேன்."

சக்ரவர்த்தி அந்த கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில் அங்கு அமைதி நிலவியது. அவர் மகனின் கையெழுத்தை அவரால் கண்டுகொள்ள முடிந்தது. அவரைக் கொலை செய்யக் குஸ்ரு திட்டமிட்டிருக்கிறான் என்பதில் சிறிதளவு கூட சந்தேகமே இல்லை. ஜஹாங்கீருக்கு அளவுக்கடங்காத ஆத்திரம் பொங்கியது. குஸ்ருவின் எழுத்தை அந்தக் காகிதங்களில் பார்த்தவுடன், கடமை உணர்ச்சியாலும் பொறுப்புணர்ச்சியாலும் இத்தனை நாட்களாக அவர் அடக்கி வைத்திருந்த வெறுப்பும் விரோத மனப்பான்மையும் மேலே எழுந்தன. அவரது இழிவான மகன் வெறும் அரசக் கிரீடத்திற்கு மாத்திரம் இப்பொழுது ஆசைப்படவில்லை, அவரது மரணத்தையும் விரும்புகிறான். அவர் கைகளிலிருந்து அந்தக் கடிதங்கள் கீழே விழுந்தன. ஏதோ வேண்டாத பொருளால் கைகள் அசுத்தமாகிவிட்டதுபோல், தன்னிச்சையில்லாமல் அவர் கைகளை மேல் அங்கியில் துடைத்துக் கொண்டார். தன் எதிரே நிற்கும் மூன்று மனிதர்களையும் ஏறிட்டுப் பார்த்தார்.

"இந்தச் சதித் திட்டமிட்ட தலைவர்களைக் கைது செய்து என் முன் கொண்டு வாருங்கள்." பின் ஹோஷியார் பக்கம் திரும்பினார். "வேட்டையை ரத்து செய்து விடு."

அந்த நான்கு மனிதர்களும் சிம்மாசனத்திற்கு அருகில் செல்கையில், கியாஸ் பெக் தலைகுனிந்தவாறு நின்றிருந்தார். அவர்கள் தடுமாறியவாறு 'கோனிஷ்' முறைப்படிச் சக்ரவர்த்தியை வணங்கினர். அவர்கள் வணங்குகையில்,

தாது மக்கள் நிரம்பிய, அமைதியான அந்த மக்கள் பையில், அவர்களைப் பிணைத்திருந்த சங்கிலிகள் எழுப்பிய சை பெரிதாகக் கேட்டது.

"நருதின், இதிபார்கான், முகமத் ஷரிப், மற்றும் பெக்தா துர்கமான், நீங்கள் நால்வரும் சக்ரவர்த்தியைக் கொலை செய்யச் சூழ்ச்சி செய்த குற்றத்திற்காக இங்கு வந்திருக்கிறீர்கள்." செய்தி அறிவிப்பாளர் மீர் தோஷக்கின் குரல் கம்பீரமாக ஒலித்தது.

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் கியாஸ் பெக் சட்டென்று ஒருமுறை மூச்சை உள்ளுக்கிழுத்தார். அவர் களில் ஒரு மனிதனை முறைத்துப் பார்த்தார். முகமத் ஷரீப், தன் தந்தையின் கண்களைச் சந்திக்க விருப்பமில்லாமல், பிடிவாதத்துடன் தலைகுனிந்தவாறு நின்றிருந்தான்.

எப்படி அவர் மகன் அவரை இவ்வாறு நம்பிக்கை துரோகம் செய்யலாம்? அடி வயிற்றிலிருந்து வருத்தம் எழக் கியாஸ் நினைத்தார். இத்தனை வருடங்களாக அவருடைய நிழலில் வளர்ந்து, இத்தனை வருடங்களாக அவரால் நன்ன டத்தை கற்பிக்கப்பட்ட பின்பும், அவன் சக்ரவர்த்தியையே கொலை செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளான். அவன் இத்தனை வருட வாழ்க்கையில் முகமது, அவர் சொல்லுக்குக் கீழ் படிந்ததில்லை, எப்பொழுதும் அமைதியற்றவனாகத் தனக்கு எட்டாத பொருளைத் தேடி அலைபவனாகவே இருந்திருக்கிறான். இப்படி ஏதாவது நடக்கும் என்று அவன் அறிந்திருக்கக் கூடும். இளவரசன் குஸ்ரு லாகூருக்குத் தப்பி ஓட முயற்சிக்கையில், முகமது அவனுக்கு ஆதரவளிக்க விரும்பியதைக் கண்டு, கியாஸ் பெக் அவனைக் கண்டித்து விட்டுப், பின் அதைப் பற்றிக் கண்டு கொள்ளவே இல்லை. சக்ரவர்த்தியைக் கொலை செய்யும் அளவிற்குச் சூழ்ச்சியில் இறங்குவான் என்று அவர் எப்படி நினைத்துப் பார்த்திருக்க முடியும்? இது அவனுக்கு அவமானமாகத் தெரியவில்லையா? எது சரி, எது தவறு என்று அறியும் அளவிற்கு அவனுக்கு புத்தி இல்லையா?

சில தினங்களுக்கு முன், கியாஸ் தன் மகன் முகமதைச் சிறையில் சென்று பார்த்தார். அவரே வீட்டுக் கைதியாக இருப்பதால் மிகவும் சிரமப்பட்டு, முகமதைச் சிறையில் சந்திக்க அனுமதி பெற்றார். அவர் இந்த சாம்ராஜ்ஜியத்தின் திவானாக இன்னும் இருப்பதால் அந்தப் பதவிக்குச் சிறு மதிப்பு இன்னும் இருந்தது. அவர்கள் சந்திப்பு அவசர மானதாக, சிறிது நேரத்திற்கே இருந்தது. கியாஸ், முகமதின் சிறைக்கு வெளியே நின்று, உள்ளே மங்கிய ஒளியில் உற்றுப்பார்த்த பின்தான், அவன் ஒரு மூலையில் கூனிக் குறுகி உட்கார்ந்திருப்பது தெரிந்தது. முகமதிடம், அவன் தாயார் எவ்வளவு மனக்கஷ்டத்துடனும் வருத்தத்துடனும் இருக்கிறாள் என்றும், அவன் செய்கை அவர்கள் குடும்பக் கௌரவத்தை எவ்வளவு பாதித்திருக்கிறது என்றும் அவர் எடுத்துக் கூறினார். முகமது அமைதியாக, அலட்சியமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான். அவர் பேசி முடிக்கும்முன், தலையை உயர்த்தி மெதுவாகக் கேட்டான்: "நீங்கள் செய்ததைவிட மேலும் மோசமாகவா செய்திருக் கிறேன், அப்பா?"

அத்துடன் அவர்கள் சந்திப்பு முடிந்துவிட்டது. இப்பொழுது கியாஸ் தன் மகனைப் பார்த்தவாறு நின்றி ருந்தார். யோசித்துப் பார்க்கையில் அவன் கூறியதும் சரிதான் என்று தோன்றியது. அவரே மிகப் பெரிய குற்றத்தைச் செய் திருக்கிறார். அப்படியிருக்கையில் முகமதிடமிருந்து இதற்கு மேல் என்ன எதிர்பார்க்க முடியும்?

"அவர்களைக் கொன்று விடுங்கள்!"

சக்ரவர்த்தி பேசி முடிக்கையில், கியாஸின் மனதில் பெரிய அதிர்ச்சி உண்டாயிற்று. தண்டனை மிகவும் கடுமை யானதாக இருக்கும் என்பதை அவர் அறிவார். ஆனால், அவர் மகன் அவரிடமிருந்து எக்காலத்திற்கும் பிரிக்கப்பட்டு விடுவான் என்பதை அவரால் எண்ணிப் பார்க்கக் கூட முடியவில்லை.

"மாட்சிமை பொருந்தியவரே..." தன் மனக் கலக்கத்தில் அரச சபையில் அனுசரிக்க வேண்டிய விதி முறைகளை மறந்து, அவர் பேசத் தொடங்கினார். அவர்களுடன் பேசப்

பட்டால் ஒழிய, எவருமே சக்ரவர்த்தி முன் தானாகப் பேசத் துணிய மாட்டார்கள்.

"உனக்கு என்ன வேண்டும்?" தன் மந்திரியைக் கோபமாக உற்று நோக்கியவாறு ஜஹாங்கீர் வினவினார்.

கியாஸ் தலையை ஆட்டிக் கொண்டார். அவரால் என்ன சொல்லமுடியும்? தண்டனையின் கடுமையைக் குறைக்கச் சொல்லி வேண்டுவதற்கு அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? முதலில் அலிகுலி கோக்காவைக் கொலை செய்தான். பின் அவரே சாம்ராஜ்ஜியத்தின் கஜானாவிலிருந்து பணத்தைக் கையாடல் செய்திருக்கிறார்— கியாஸின் கண்ணங்கள் சிவந்தன. இப்பொழுது அவர் மகன் சக்ர வர்த்தியைக் கொலை செய்யச் சூழ்ச்சி செய்ததற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறான். அவரால் என்ன கேட்க முடியும்?

"நல்லது...?"

"ஒன்றுமில்லை, மாட்சிமை பொருந்தியவரே!" கியாஸ் முணுமுணுத்தவாறு பின் வாங்கினார்.

ஜஹாங்கீர் அவர் பக்கமிருந்து திரும்பித், தலையசைத்தார்.

பாதுகாவலர்கள் அந்த நால்வர் மேல் பாய்ந்து, அவர்களை இழுத்துக் கொண்டு ஒரு மூலைக்குச் சென்றனர். அவர்கள் தூக்கிய கத்திகள் சூரிய ஒளியில் பளபளக்க, கியாஸ் முகத்தைத் தன் அங்கிக்குள் புதைத்துக் கொண்டார். வாள்கள் உடலில் பாயும் கொடூரமான சத்தத்தை அவர் கேட்டார். இறக்கும் மனிதர்களின் ஓலம் அந்த முற்றம் முழுவதிலும் எதிரொலித்துப் பின் மெல்ல மெல்லக் குறைந்து... பின்முற்றிலும் அடங்கி, அங்கு அமைதி நிலவியது. நீதி வழங்கியாகிவிட்டது. அவையில், கூட்டமாக அத்தனை மனிதர்களுக்கு முன்னிலையிலும், வழங்கப்பட்ட அந்தத் தண்டனை, தேசத் துரோகம் செய்ய நினைப்பவர்களுக்கு ஒரு பாடமாக அமையும்.

மற்றப் பிரபுக்களுக்குப் பின்னால், முகத்தில் கண்ணீர் வழிவதை உணராமல், கியாஸ் பெக் தனியாக நின்று கொண்டிருந்தார். அவர் உலகமே திடீரென்று இருண்டு விட்டது. அவளது பெரிய மகன் இறந்துவிட்டான் என்ற

மெச்சினாள். அவள் இளம்வயதில் கற்றபாடம் இப்பொழுது மறந்து போயிற்று.

ஆகையால், அவள் கூறினாள்; "நீ மிகவும் நல்லவன், மஹபத். உன் விசுவாசத்தை நான் மறக்க மாட்டேன்."

"மாட்சிமை பொருந்தியவரே! இளவரசருக்கு மரண தண்டனை கொடுப்பதே நல்லது. அவர் உயிருடன் இருந்தால் உங்களுக்குத் தொந்திரவு இருந்து கொண்டே யிருக்கும்."

தன் இரண்டு மந்திரிகளையும் பார்த்து ஜஹாங்கீர் மெதுவாகத் தலையசைத்தார். குஸ்ருவிடம் ஒரு தகப்பனாருக் குரிய அன்பு பல நாட்கள் முன்னரே போய்விட்டது. குஸ்ரு விற்கு மரண தண்டனை கொடுப்பதே, இப்படி அடிக்கடி ஏற்படும் தொல்லைகளுக்கு ஒரு முடிவு என்று அவர் நினைத்தாலும், அவ்வாறு அவரால் செய்ய இயலாது.

"குஸ்ருவிற்கு மரண தண்டனை விதித்தால், அந்தப் புரத்துப் பெண்கள் என்னை ஒருபொழுதும் மன்னிக்க மாட்டார்கள்." ஜஹாங்கீர் கூறினார்.

"இல்லாவிடில் வேறு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று யோசிக்கலாமே, மாண்பு மிக்கவரே?" ஷரீபின் கண்கள் ஆவலுடன் பளபளத்தது. "ஒரு வேளை இளவரச ரைக் குருடாக்கி விடலாம். பின் அவரை வைத்து ஆதாயம் தேட நினைப்பவர்களுக்கு ஒரு உபயோகமும் இல்லை."

சக்ரவர்த்தி தலைகுனிந்து, தன் கையிலுள்ள விலை உயர்ந்த பச்சை நிறக் கண்ணாடிக் கோப்பையின் வெளிப் புறத்தைத் திடீரென்று நடுங்கும் தன் விரல்களால் வருடினார். இங்கே, கடைசியாக ஒரு வழி தெரிகிறது. குஸ்ருவினால் ஏற்படும் தொல்லைகளை முற்றிலும் ஒழித்து விடலாம். பின் அவர் தன் ஆட்சியைச் சந்தோஷத்துடன் நடத்த முடியும். அவர் அடிமனதில் சட்டென்று வருத்தம் தோன்றியது. குஸ்ருவின் தாயாரும், அவரது முதல் மனைவியுமான மான் பாய், அவர் பொறுப்பில் குஸ்ருவை விட்டுச் சென்றி ருக்கிறாள். குஸ்ரு செய்த கிளர்ச்சிகளால் மனம் நொந்து அவள் இறந்து விட்டாள். அவனுக்குத் தயைக் காட்ட

வேண்டும் என மன்றாடிக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். ஆனால் இங்கே அவர் மனம் கடினமானது — ஆனால், அவன் தன் தந்தையையே கொலை செய்ய திட்டமிட்டதைப் பார்க்க அவள் உயிருடன் இல்லை.

"சரி, அப்படியே." தன் சந்தேகம் எல்லாம் தீர்ந்து ஜஹாங்கீர் முடிவாகக் கூறினார். "அவனை அழைத்துச் செல்லுங்கள்," அவர் சிறிது தாமதித்து விட்டு தொடர்ந்தார். "சுல்தான்பூருக்கு அழைத்துச் செல்லுங்கள். அங்குதான் அவன் என் இராணுவத்துடன் கடுமையாகப் போரிட்டான். இது அவனுக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். சுல்தான்பூரில் அவன் கண்களைக் குருடாக்குங்கள்." கடைசியாக இந்த விஷயம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. குஸ்ரு இனிமேல் அவருக்கு தொல்லை கொடுக்க மாட்டான்.

"ஷரீப்" ஜஹாங்கீர் தொடர்ந்தார். "நாம் இப்பொழுது ஆக்ராவிற்குத் திரும்பிச் செல்வோம்."

சக்ரவர்த்தியின் உத்திரவுகள் அவர் கூறியபடியே செய்து முடிக்கப்பட்டன.

அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு யானை மீது ஒரு கூண்டில் வைக்கப்பட்டு, குஸ்ரு சுல்தான்பூருக்கு அழைத்துச் செல்லப் பட்டான். துன்பத்தில் உழலும் அந்த இளவரசனைக் காண, கூட்டம் கூட்டமாக ஜனங்கள் திரண்டு வந்தனர். அவர்களது குற்றம் சுமத்தும் பார்வைகளிலிருந்து இளவரசனால் தப்பித்து ஓடிய முடியவில்லை. அவன் சுல்தான்பூரில் சண்டையிட்டுத் தோற்ற இடத்தில், பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகள் அவன் கண்களில் பாய்ச்சப்பட்டன. இளவரசன் சில நாடிகள் துடித்துவிட்டு, நினைவிழந்தான்.

குருடான குஸ்ரு, பின் ஆக்ராவிற்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு, அவன் தந்தை பரிவாரங்களுடன் ஆக்ரா வந்தடைவதற்குக் காத்திருந்தான். வரும் வழியில் ஜனங்களின் இழிச் சொற்களையும் கேலிச் சத்தங்களையும் கேட்காவண்ணம் அந்தக் கூண்டில் படுத்துக் கொண்டு காதுகளைப் பொத்திக் கொண்டிருந்தான்.

குறைந்த பட்சம் அவனைத் துன்பப்படுத்தும் அந்த ஜனங்களை அவனால் பார்க்க முடியாது.

அத்தியாயம் பதினேழு

மெஹர் உல் நிஸா மிகவும் இறுமாப்பு உள்ள பெண். அந்தப்புரத்தில் அவளுக்கான தனிச் சிறப்பை உயர்த்திக் கொள்ளவும், அவளுக்கு அளிக்கப்படும் சிறிய வருமானத்தினால் அடைய முடியாத நல்ல சௌகரியமான வாழ்க்கையை தனக்கும் தன்னைச் சார்ந்த அடிமை பெண்களுக்கும் பெறவும், அவள் அழகிய திரைச்சீலைகள், பூவேலைப்பாடு செய்த துணிகள். பட்டுத் துணிகளில் கண்ணைக் கவரும் சித்திரம் தீட்டுதல் போன்றவைகள் மற்றும் பெண்களுக்கான பலவித ஆபரணங்கள் தயாரித்தல் எனச் செய்ய ஆரம்பித்தாள்.

- **ALEXANDER DOW,** The History of Hindostan

பருவ மழைக் காலத்தின் மிருதுவான, மென்மையான சூரியன், தன் பொன்னிறக் கதிர்களை ஆக்ரா நகரத்தின் மேல் பரப்பியவாறு, மேற்குத் திசையில் இறங்கத் தொடங்கினான். முடிவில் சூரியன் மேற்கு அடிவானத்தில் மறைகையில், மிகச் சிறிது கால அந்தி நேரம், வெறும் சில நிமிடங்களுக்குத் தான், பகலின் வெளிச்சத்தை அள்ளி எடுத்துப் பூமியின் ஓரத்திற்குக் கொண்டு தள்ளிவிடும். பின் கரிய இரவு பாய்ந்து வந்து அந்தப் பேரரசின் அரண்மனைகளைக் கவர்ந்து கொள்ள முயற்சிக்கையில், எண்ணெய் விளக்குகளும், ஒளிக்கூண்டுகளும் அந்த இருட்டை அகற்ற எத்தனிக்கையில், அது விளக்குகளை சுற்றியுள்ள நிழல்களில் தவழ்ந்து வரும்.

சூரியன் மறைவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. அன்றைய தினத்தின் நிகழ்ச்சிகளில் திருப்தியடைந்து, பேரரசின் மாளிகைகள் அமைதியாக இருந்தன. ஒளிக் கூண்டுகள் ஏற்றப்பட்டபின், அந்தப்புரத்துப் பெண்கள் கவர்ச்சியான ஆபரணங்கள் அணிந்து பட்டாம்பூச்சிகள் போல், ரோஜா நீரில் குளித்து, அடர்த்தியான வாசம் மிகுந்த மல்லிகை பூக்கள் தரித்து, மெல்லிய பளபளப்பான மஸ்லின் உடைகள் அணிந்து, மகிழ்ச்சி அளிக்கத் தயாரான நிலைக்கு மாறி விடுவார்கள். பருவ மழை இந்த வருடம் சரியான நேரத்தில் வந்திருந்தது. காய்ந்து வறண்ட பூமி மழைநீரைக் தாகத்துடன் பருகித் திருப்தியடையப் புல்வெளிகள் அடர்த்தியாக பச்சைப் பசேலென்று காட்சியளித்தன. ஆனால், மறையும் சூரியனின் அழகிய பொன்னிறக் கதிர்களைப் பார்த்து ரசிக்க ஒருவரும் அங்கு இல்லை. பேரரசை சார்ந்த தோட்டக்காரர்கள் களை எடுத்து, நீர் பாய்ச்சி, அன்றைய வேலைகளை முடித்துவிட்டுச் சென்று விட்டனர். அந்தப் புரத்துப் பெண்கள், பகலின் கடைசி சில மணி நேரங்களை ஓய்வெடுப்பதிலும், இரவு கேளிக்கைகளுக்குத் தயாராவதிலும் கழித்தனர். பறவைகள் கூட மரப் பொந்துகளில் தஞ்சம் புகுந்து, வரப்போகும் இரவை எதிர்நோக்கியிருந்தன.

அந்தப்புரத்தின் தோட்டத்தில் ஒரே ஒரு உருவம் மாத்திரம் முலாம்பழம் கொடிகள் படர்ந்த நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தது. அவள் பச்சை நிற ஆடையிலிருந்தாள் — தரையில் படர்ந்திருக்கும் கொடிகளின் நிறத்துடன் ஒன்றிப் போகும் புதிய, இளமையான பச்சை நிறம். அந்தக் கொடிகள் தனது பெரிய, அடர்த்தியான, முக்கோண வடிவமுள்ள இலைகளால், தான் சுமந்திருக்கும் பழங்களை மறைத்திருந்தது. தன் பாவாடை அழுக்கடையா வண்ணம், மிருதுவான, வளம் மிக்க அந்த நிலத்தில் ஒரு கோணிப் பையை விரித்து, அதன்மேல் அந்தப் பெண், முழங்காலிட்டு உட்கார்ந்திருந்தாள். நீலக் கோடுகளுடன் பளபளக்கும் நடு இரவு வானம் போல் கருமையான அவளது நீண்ட அடர்ந்த கூந்தல், அவள் முதுகில் சுருட்டி கொண்டையிடப்பட்டிருந்தது. அவள் ஆபரணங்கள் ஒன்றும் அணிந்திருக்கவில்லை. காதணி கூட இல்லை. ஆனால், அவள் அணிந்திருந்த இரண்டு வளையல்கள் மாத்திரம் பழங்களைச் சுற்றி உள்ள பூமியை அவள் வேகமாகக் கொத்தும் பொழுது, சலசலத்தன. அவ்வப்போது மெதுவாக ஒரு மூலாம் பழத்தைத் தூக்கி

அதன் ஒரு பெரிய இலையைக் கீழே பரப்பி, அதன் மேல் பழத்தை வைத்துப் பகல் நேரச் சூர்ய வெப்பத்திலிருந்து அதைக் காப்பதற்காக அவள் அதை மற்றொரு இலையால் மூடிவிடுவாள். கொடிகளின் இலைகளுக்கு இடையே வைத்து அவற்றின் பச்சைக் கதிர்களுக்கிடையே முதிர்ந்து வரும் பழங்கள்தான் மிகவும் ருசியாகவும், தித்திப்பாகவும் இருக்கும் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். அவள் நிமிர்ந்து நெற்றியிலுள்ள வியர்வையை தன் புறங்கைகளால் துடைத்து விட்டுக் கொள்ள, அவள் சிவந்த கன்னத்தில் மண்ணின் கரை படிந்தது.

"அம்மா!"

தன் வேலையிலிருந்து மெஹ்ருன்னிஸா தலை தூக்கிப் பார்த்தாள். தோட்டத்தின் ஒரு மூலையில், செடி, கொடி களுக்கிடையே, கண்களால் தேடியவாறு, அழத் தொடங்கும் நிலையில் லாட்லி நின்று கொண்டிருந்தாள்.

"இங்கே வா, கண்ணே" கையை உயர்த்தி மெஹ் ருன்னிஸா கூப்பிட்டாள். சூரியனின் ஒளிக்கதிர்கள் அவள் வெள்ளி வளையல்களில் பட்டுத் தெறித்தன. சட்டென்று லாட்லி அவளைக் கண்டு கொண்டாள். அவளது சிறிய கால்கள் மண்ணுக்குள் புதையப் பழங்களைத் தாண்டி கடந்தவாறு, அவள் தாயாரை நோக்கி ஓடி வந்தாள்.

"ஜாக்கிரதை" மெஹ்ருன்னிஸா கூவினாள். புன்னகை யால் முகம் பளிச்சிட லாட்லி அதற்குள் பாதிதூரம் வந்து விட்டாள். மெஹ்ருன்னிஸா அருகில் வந்து, அவளைத் தள்ளி விடுவது போல் அவள் மேல் விழுந்து அணைத்துக் கொண்டாள். பிறகு, தாயாரை முத்தமிட்டாள், முதலில் ஒரு கன்னத்தில், பின் மற்றொரு கன்னத்தில்.

"நீ அழுக்காக இருக்கிறாய் அம்மா" அவளது சிறிய மூக்கை சுளித்தவாறு லாட்லி கூறினாள். பின் எழுந்து தன் மேலாடையைத் தட்டிவிட்டுக் கொண்டாள். "இவ்வளவு மண் — நீ ஏன் இப்பொழுது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறாய்? பெரிய இராணியுடன் ஏன் இல்லை?"

கோணியின் மேல் நிமிர்ந்து அமர்ந்து, மெஹ்ருன்னிஸா சிரித்தாள். "பெரிய சக்ரவர்த்தினிக்கு இன்று என் தேவை இல்லை. அதனால், சூரியன் மறைவதற்குள் சிறிது நேரம் தோட்டத்தில் வேலை செய்ய வந்தேன்." உன் வகுப்புகள் எப்படி இருந்தன? நீ ஏதாவது கற்றுக் கொண்டாயா அல்லது மறுபடியும் விஷமம் ஏதாவது செய்தாயா? முல்லா உன்னைப் பற்றி அடிக்கடிப் புகார் சொல்லிக் கொண்டிருக்கிறார்."

"முல்லா எல்லாவற்றைப் பற்றியும் தான் புகார் செய்கிறார், அம்மா." லாட்லி கூறினாள். "அவர் சொல்வதைக் கேட்கச் சலிப்பாக இருக்கிறது. எனக்கு ஒன்றுமே சொல்லிக் கொடுப்பதில்லை. நான் ஒரு பெண். ஆகையால், படிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறுகிறார். உன்னுடன் சிறிது நேரம் நான் உட்கார்ந்து கொள்ளட்டுமா?"

"சரி, கண்ணே" மற்றொரு கோணியை உதறிக் கீழே போட்டவாறு மெஹ்ருன்னிஸா கூறினாள். முல்லா பற்றி அவள் கூறிய வார்த்தைகளை நினைத்துத் தனக்குள் புன்ன கைத்துக் கொண்டாள். பல வருடங்களுக்கு முன்னால், வகுப்பறையில் உட்கார்ந்து கொண்டு, பாடம் படிப்பதில் அலுத்துப் போய், தன் ஆசிரியரைப் பற்றி அவள் தன் தாயார் அஸ்மத்திடம் புகார் செய்திருக்கிறாள். மணல் தரையில் படாமல் தன் மேலாடையை மடித்து, அந்தக் கோணிப் பையின் மீது லாட்லி உட்கார்ந்து கொள்வதை மெஹ்ருன்னிஸா வியப்புடன் பார்த்தாள். லாட்லிக்கு ஆறு வயதுதான் ஆகிறது என்று நம்பவே முடியவில்லை. இப்பொழுதே ஒரு இளம்பெண் போல் நடந்து கொள்கிறாள். கண்ணாடி முன் நின்று கொண்டு தன் தலையில் அணிந்திருக்கும் அழகிய ஊசியைச் சரி செய்து கொள்வதும், தன் தோளில் தொங்கும் துப்பட்டா மேல் துணி — சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதையும் அடிக்கடி மெஹ்ருன்னிஸா கவனித்திருக்கிறாள். அல்லது மெஹ்ருன்னிஸாவின் நகைப் பெட்டியை எடுத்து அதிலிருக்கும் ஆபரணங்களை அணிந்து பார்த்துவிட்டு, மறுபடியும் அவற்றை ஒழுங்காகப் பட்டுத் துணியில் வைத்துவிடுவாள். "அம்மா, இது எனக்கு

எப்பொழுது கிடைக்கும்? இது? இந்த ஆபரணம்?" என்றபடி ஒரு பெரிய வளையலை எடுத்துத் தோள் வரை தள்ளி விட்டவாறு மெஹ்ருன்னிஸாவைக் கேட்பாள்.

தன்னைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்தப் பளபளக்கும் விழிகளைக் கண்டு, மகிழ்ந்து, தன் மணல் படிந்த கையை லாட்லியின் முகவாயில் வைத்து மெஹ்ருன்னிஸா அவளை முத்தமிடுவதற்காக அவள் முகத்தைத் திரும்பினாள்.

"அம்மா, நீ அழுக்காக இருக்கிறாய்!" லாட்லி அவளிடமிருந்து விலகி, தன் முகத்தைத் துடைத்து விட்டுக் கொண்டாள்.

மெஹ்ருன்னிஸா சிரித்தவாறு தலையை ஆட்டினாள். லாட்லியின் வயதில், மரங்களில் ஏறியும், கவண் உபயோகித்துப் பறவைகளை அடித்தும், போட்டியிட்டுக் கொண்டு 'கில்லி' விளையாடுவதிலும் அவள் பொழுதைக் கழித்திருக்கிறாள். ஆனால், அவளுக்கு அபுலும், முகமதும் கூட விளையாட இருந்தனர். ஆனால் லாட்லிக்கு அப்படி ஒருவரும் இல்லை.

கைகளிலும் நக இடுக்குகளிலும் அழுக்காவதைப் பொருட்படுத்தாமல், அவள் மறுபடியும் அந்த வளமான மண்ணைக் கொத்த ஆரம்பித்தாள். இது மாதிரித் தோட்டத்தில் வேலை செய்யும் நேரங்களில் தான், கடந்த நான்கு வருடங்களாக நடந்த நிகழ்ச்சிகள் பற்றி அவள் நினைத்துப் பார்ப்பதில்லை. இப்படி வேலை செய்து உடல் களைத்துப் போவதால் தான், அலிகுலி மரணமடைந்த விதத்தை நினைத்து, அலறிக் கொண்டு, தூக்கத்திலிருந்து எழுந்திருக்காமல், சில மணிநேரமாவது அமைதியாகத் தூங்க முடிகிறது.

சூரியன் மேற்குத் திசையில் மேலும் மறையத் தொடங்கினான். அவர்கள் இருவரும் முலாம் பழக் கொடிகள் அருகில் இன்னும் இருந்தனர். அந்தக் கோணியின் மேல் நிமிர்ந்து அழகாக ஒரு இளவரசி போல் லாட்லி அமர்ந்திருந்தாள். மெஹ்ருன்னிஸா ஒரு பணிப்பெண் போல், ஒரு சாதாரணப்

பச்சை நிற உடை உடுத்தி, முன்னுச்சியில் மயிர்கள் வெளியே வந்து வியர்வை படிந்த முகத்தில் ஒட்டிக் கொண்டிருக்க, முழங்கை வரை கைகளின் மேல் மண் பரவி இருக்கக் கடந்து போன நாட்களைப் பற்றி இனி நினைக்கக் கூடாது என்று அவள் தீவிரமாக இருந்தாலும், ஏதோ சிந்தித்தவாறு முலாம்பழக்கொடிகளைச் சரி செய்து கொண்டிருந்தாள்.

அலிகுலி இறந்தபின், வங்காளத்திலிருந்து ஆக்ராவிற்கு வரச் சொல்லிச் சக்ரவர்த்தி அவளுக்கு ஒரு அரச கட்டளை அனுப்பி இருந்தார். அலிகுலி மரணத்திற்குபின் தொடர்ந்த அடுத்த பயங்கரமான ஆறு மாதங்களுக்குக் கவர்னர் குத்புதீன் கோக்காவின் மெய்காப்பாளர் ஹைதர் மல்லிக் அவளையும் லாட்லியையும் தன் பாதுகாப்பில் வைத்திருந்தான். எப்படியோ அவர்களுக்குத் தீங்கு ஏதும் வராமல் கண்காணித்தான். சக்ரவர்த்தியிடமிருந்து அரசாங்க அழைப்பு ஆணை வந்ததும், அந்த அரசாங்க முத்திரையிட்ட ஆணையைக் காட்டி, கோக்காவின் உறவினர்களிடமிருந்து தப்பித்து, மேலும் அந்த ஆணையைக் காட்டி, வழிப் பயணத்திற்கு வேண்டிய பல்லக்கு, குதிரைகள் மற்றும் உணவுப் பொருட்கள் முதலியவற்றைச் சேகரித்தான்.

திகைத்துப் போய்க் குழம்பிய மனநிலையில் மெஹ்ருன்னிஸா ஆக்ரா வந்து சேர்ந்தாள். அவள் பெற்றோர்கள் அரச சபை உறுப்பினர்களுடன் சக்ரவர்த்தியிருக்கும் காபூலில் இருந்தனர். ஆனால், சீக்கிரமே ஆக்ரா திரும்பச் சக்ரவர்த்தி திட்டமிட்டிருந்தார். அவள் பெற்றோர்களும் சக்ரவர்த்தியின் பரிவாரங்களுடன் வந்து விடுவார்கள். ஆனால், அதுவரை தங்குவதற்கு ஒரு இடம் தேவைப்பட்டது. அவள் வந்து சேர்ந்த சில தினங்களில், தற்சமயம் மனநிறைவு இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் அக்பரின் விதவை, பெரிய இராணி ருக்கையா சுல்தான் பேகம் தனக்கு பணிவிடை செய்ய அந்தப்புரத்திற்கு வருமாறு மெஹ்ருன்னிஸாவிற்கு உத்திரவிட்டாள். அதுவும் நல்லதிற்குதான். தனிமையில் இருந்து தன் மனதில் ஏற்பட்ட காயங்களுக்கு ஆறுதல் தேடவும், பல விஷயங்களைப் பற்றி சிந்தித்துப் பார்க்கவும், மெஹ்ருன்னிஸாவிற்குத் தனக்கான ஒரு இடம் தேவைப்

பட்டது. பல மாளிகைகளையும், அதில் வசிக்கும் கணக்கி
லடங்கா மனிதர்களையும், சுற்றிலும் சுவருடன் கூடிய பல
திறந்த முற்றங்களும், பூங்காக்களும், பலவகைத் தோட்டக்
களும் கொண்ட பேரரசின் அந்தப்புரம், எவராலும் கண்டு
கொள் ளமுடியாதபடி வாழ்வதற்கு ஒரு ஏற்ற இடம்.
மாதங்கள் செல்லச் செல்ல, ருக்கையாவிற்குப் பணிவிடை
செய்த நேரம் போக மிகுதி நேரங்களில், பூவேலை செய்யவும்
சித்திரம் வரையவும் மெஹ்ருன்னிஸா ஆரம்பித்தாள்.
சீக்கிரமே அந்தப்புரத்துப் பெண்களுக்குப் பாவாடை, சோலி,
மேலாடை முதலியன தயாரிக்கத் தொடங்கினாள். இதில்
வந்த வருமானத்தைப் பத்திரமாக ஒரு மரப் பெட்டியில்
சேர்த்து வைத்தாள். எதற்காக இந்தச் சேமிப்பு என அவள்
தற்சமயம் அறியமாட்டாள். ஆனால், இதுவே முதல்
முறையாக அவளுடைய சொந்தப் பணமாகும். தந்தை
யிடமிருந்தோ, அலிகுலியிட மிருந்தோ அல்லது ருக்கையாவிட
மிருந்தோ கிடைத்த பணம் அல்ல.

அரச சபைப் பரிவாரங்கள் ஆக்ராவிற்குத் திரும்பி வந்து
சேர்ந்தனர். ஜஹாங்கீரிடமிருந்து ஏதாவது தகவல் வருமென்று
மெஹ்ருன்னிஸா எதிர்பார்த்தாள். அந்தப்புரம், பெண்கள்
அவரைப் பற்றிப் பேசுவது தவிர வேறு ஒன்றுமில்லாமல்
அமைதியாக இருந்தது. அவர் அவளை மறந்துவிட்டது
போல் தோன்றியது.

இதற்கிடையில், ஜஹாங்கீர் இன்னும் இரண்டு திருமணம்
செய்துகொண்டிருந்தார். குஸ்ருவின் மாமா ராஜா
மான்சிங்கின் பேத்தியை முதலில் மணந்து கொண்டார்.
அவர்களது உறவு முறையே சிக்கலாக ஆயிற்று. ஜஹாங்கீர்
தன் மகன் குஸ்ருவின் மருமகளும், மற்றும் அவர் மனைவி
— குஸ்ருவின் தாயாரின், பேத்தி முறையாகும் பெண்ணை
மணந்து கொண்டிருக்கிறார். இந்தத் திருமணமே ஒருவித
ராஜ தந்திர நோக்குடன் செய்யப்பட்டது. ராஜா மான்சிங்
மறுபடியும் குஸ்ருவை அரியணை ஏற்ற முயற்சி செய்யும்
முன், சிந்திக்க வேண்டி வரும். ஏனெனில், அவரது சொந்தப்
பேத்தியை ஒரு விதவையாக்க நினைக்கமாட்டார் என்று
சக்ரவர்த்திக்குத் தெரியும்.

அவரது அடுத்த திருமணம், ஒரு வருடம் கழித்து நடந்தது. பேரரசின் இராணுவம் ராஜாராம் சந்த பண்டேலாவின் நாட்டின் மீது படையெடுத்து, அதை வென்ற பொழுது, பண்டேலா தன் மகளைச் சக்ரவர்த்திக்குத் திருமணம் செய்விக்க முன் வந்தார். இதன் மூலம் முகலாயச் சக்ரவர்த்தியுடன் நல்ல உறவு வைத்துக் கொள்ள முடியும் என அவர் விரும்பினார். இளவரசியும் ஜஹாங்கீரின் புதிய மனைவியாக அவரது அந்தப்புரத்திற்கு வந்தாள்.

"நாம் உள்ளே போகலாமா, அம்மா?" லாட்லியின் மிருதுவான குரல் அவள் எண்ணங்களைக் கலைத்தது. சூரியன் முற்றிலும் மறைந்து விட்டதையும் அந்திக்காலம் முடிந்துஇருட்டு சூழ்வதையும் மெஹ்ருன்னிஸா உணர்ந்தாள். மண்வெட்டியையும் கோணிப்பைகளையும் ஒரு கூடைக்குள் வைத்து எடுத்துக் கொண்டு, முலாம் பழக் கொடிகளிடையே நடந்து அவர்கள் இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றனர்.

மெஹ்ருன்னிஸா கைகளை நன்கு சுத்தம் செய்து கொண்டு, லாட்லிக்கு உணவு கொடுத்துவிட்டுத் தானும் சிறிது உணவு உண்ட பிறகு, லாட்லியைத் தூங்க வைத்தாள். அவள் தூங்கிக் கொண்டிருக்கையில் அந்தப்புரத்தின் குளியல் அறையில் நீண்ட நேரம் குளித்துவிட்டுத் தன் அறைக்குத் திரும்பினாள். பல நாட்களாக ஒவ்வொரு இரவும் செய்வது போல், கண்ணாடிக்கு எதிரே அமர்ந்து, ஒரு எண்ணெய் விளக்கை ஏற்றினாள்.

மெஹ்ருன்னிஸா மெதுவாகத் தன் முகத்தைத் தொட்டாள். அவள் தோற்றம், மேனியின் நிறம் இன்னும் சிறிதும் களங்கமில்லாமல் அழகாக இருந்தது. கண்களுக்கு அருகே மிக மெல்லிய கோடுகள் தோன்ற ஆரம்பித்திருந்தாலும், மிகவும் பிரகாசமான சூரிய ஒளியில்தான் அது தெரியும்படி இருந்தது. உட்கார்ந்தவாறே தன் மேனியைப் பார்த்தாள். அவள் இடை சிறு பெண்ணின் இடைபோல் நேர்த்தியுடனும் பிடிக்குடனும், அதன் கீழே அவள் இடுப்பு அழகாக வளைந்தும் இருந்தன. ஒரு இளம்பெண் போல் மிகவும் கவர்ச்சியாகவும் விரும்பத்தக்கவளாகவும் இருந்தாள்...

ஆனால், அவன் இளம்பெண்ணும் இல்லை. நான்கு வருடங்களாக விதவையாகவும் இருக்கிறாள். அவளுடைய மொத்த வாழ்க்கையையும் இந்த அந்தப்புரத்துச் சுவர்களுக்குள்ளேயே தனிமையில் கழித்துப் பல காலமாக மறந்து போகப்பட்ட ஒரு வைப்பாட்டி போல், வயது முதிர்ந்தவளாக ஆகவும் நேரிடலாம். ஆனால், அவளுக்கு லாட்லி இருக்கிறாள்.

மெஹ்ருன்னிஸா தன் மகளைப் பார்த்தாள். ஒரு சிறு குழந்தைக்கே உரிய வெகுளித்தனத்துடன், அவளுடைய இந்த இளம் வயதில் அவளைச் சுற்றி நடந்து கொண்டிருக்கும் பலவித நிகழ்ச்சிகளை அறியாதவளாக, எல்லாவற்றையும் மறந்து, சுலபமாகத் தன்னை அறியாமல் வரும் ஆழ்ந்த நித்திரையில் அவள் இருந்தாள். அவளுக்கு அலிகுலி பற்றி அதிகம் நினைவிருக்கவில்லை, அவனைப் பற்றி அதிகம் விசாரிக்கவும் இல்லை. ஆனால், அவள் திருமண வயதிற்கு வந்தவுடன் அவனது அகால மரணம் அவளை வாட்டும். அலிகுலியின் மரணத்தைச் சுற்றியிருந்த நிகழ்ச்சிகளை அந்த சமயத்தில், ஜனங்கள் மறந்து போயிருக்கலாம் அல்லது குறைந்த பட்சம் அதன் முக்கியத்துவம் மக்கள் மனதில் குறைந்து போகலாம்.

மெஹ்ருன்னிஸா எழுந்து ஜன்னலருகே சென்றாள். அவள் ஜன்னல்களைத் திறந்தவுடன், மூச்சு முட்டும் அந்த அறையில் இரவின் குளிர்ந்த காற்று பரவியது. வழக்கம்போல், அவள் சக்ரவர்த்தியைப் பற்றி நினைத்தவாறு ஜன்னலுக்கு வெளியே குனிந்தாள். ஈரப் பூமியின் சுகமான நறுமணம் அவள் நாசியைத் தாக்கியது. ஒரு புத்தி கூர்மையும் நிர்வாகத் திறமையும் உள்ள அரசராக ஜஹாங்கீர் இருக்கிறார் என்று அவள் எண்ணினாள். சக்ரவர்த்தி அக்பர் இப்பொழுது அவரைப் பார்த்தால் நிச்சயம் பெருமிதம் கொள்வார். அவர் குஸ்ருவை நடத்திய விதம் கண்டு அவளும் பெருமைப் பட்டாள்.

பேரரசர் பரிவாரங்களுடன் ஆக்ரா திரும்பிய சில மாதங்கள் கழித்து, ஒருநாள் தர்பார் முடிந்தவுடன் தன் மகனை அவர் சந்தித்தார். குஸ்ருவின் கொடுமையான அலங்கோலமான முகத்தைக் கண்டு அவர் மிகுந்த வருத்தமடைந்தார். நாட்டில் உள்ள மிகத் திறமையான வைத்தியர்களை வரவழைத்துக் குஸ்ருவின் கண் பார்வையைச் சரி செய்யும்படி உத்திரவிட்டார். வைத்தியர்களால் பாதிதான் குணப்படுத்த முடிந்தது. இளவரசனால் ஒரு கண் மூலம் தன்னால் பார்க்க முடிந்தது. ஆனால், மற்றொரு கண் முற்றிலும் குணமாகாமல் பார்வை இழந்துவிட்டது. இருந்தாலும் அவன் மிகவும் கவனமாகக் கண்காணிக்கப் பட்டான். அவரது மற்ற புதல்வர்களுக்கு இருக்கும் அரசாங்க கௌரவம் அனைத்தையும் அவனுக்கும் கிடைக்க ஜஹாங்கீர் உத்திரவிட்டாலும், தன் தந்தையின் சிரத்தில் இருக்கும் மகுடத்தைப் பறிக்க முயன்ற அந்த மகனை மிகுந்த விழிப்புடனே கண்காணிக்கச் செய்தார். குஸ்ரு அவரை எதிர்த்துச் செய்த கிளர்ச்சியை அவரோ அல்லது அந்தப்புரத்துப் பெண்களோ மறக்கவே இல்லை. அரியணை எப்படியும் ஏதாவது ஒரு இளவரசருக்குப் போய்ச் சேரும், ஆனால், ஜஹாங்கீர் இறந்த பிறகுதான்.

மேலும், இதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு, ஜஹாங்கீரின் பெருந்தன்மையான அனுமதிக்குப் பிறகு, போர்த்துகீசிய ஏசுநாதர் இயக்கத்தைச் சேர்ந்த பாதிரிகள், சக்ரவர்த்தியின் மூன்று மருமகன்களையும் ரோமன் கத்தோலிக்கர்களாக மாற்றம் செய்தனர். அந்த நிகழ்ச்சி ஆக்ராவிலுள்ள இயேசு நாதர் தேவாலயத்தில் நடந்தது. அதைத் தொடர்ந்து நிகழ்ந்த கொண்டாட்டங்களைச் சக்ரவர்த்தியே தன் அரண்மனையில் நடத்தினார். அந்த மூன்று சிறுவர்களும் இறந்து விட்ட இளவரசர் தயாலின் புதல்வர்கள். அவர்கள் அரச சபைக்கு வரவழைக்கப்பட்ட பொழுது அவர்களை வளர்த்துவரும் பொறுப்பை ஜஹாங்கீர் அந்தப் பாதிரிகளிடம் ஒப்படைத்திருந்தார். அந்தச் சிறுவர்களை மதமாற்றம் செய்ய அனுமதிக்கும்படிப் பாதிரிகள் சக்ரவர்த்தியை மிகவும் வேண்டிக் கொண்டதனால், அவரும் அதற்குத் தனக்கு உடன்பாடு இல்லை என்பது போல், வெளிக்கு காட்டிக் கொண்டவாறு, மதமாற்றத்திற்கு அனுமதி கொடுத்தார்.

மெஹ்ருன்னிஸா தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள். அது ஒரு மிகவும் புத்திசாலித் தனமான திட்டம். அந்தச் சிறுவர்கள் மதம் மாறிவிட்டால் அவர்களால் அரியணைக்குப்

போட்டியிட முடியாது. ஜஹாங்கீரின் வாரிசுகளுக்கே அரியணை சொந்தமாகும். இந்தியாவின் முகலாயச் சக்கரவர்த்தி ஒருவர் இஸ்லாம் மதத்தைத் தவிர வேறு மதத்தை ஆதரிப்பது நினைத்துப் பார்க்கக் கூடிய நிகழ்ச்சி இல்லைதான். ஆனாலும், அவர் புதல்வர்களுக்கு போட்டியாக வரக் கூடியவர்களை அகற்றுவதற்கு, இது ஒரு சங்கடமில்லாத வழியாகும்.

கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் பல காலமாக இந்தியாவில் இருக்கின்றனர். இப்பொழுது இன்னும் பல வெளிநாட்டுக்காரர்கள் இங்கு குடி பெயர்ந்து வந்து கொண்டிருக்கின்றனர். உலகம் விரிந்து கொண்டிருக்கிறது. ஐரோப்பாவில் உள்ள ஒரு சிறிய தீவானை "இங்கிலாந்து" என்ற நாட்டின் பிரதிநிதிகள் என்று அவர்கள் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். அந்த நாடு வெகுதூரத்தில் உள்ளது. கடல் பயணம் செய்து வர ஆறு மாதங்களாவது ஆகும் என்று கூறப்படுகிறது. இங்கிலாந்தின் அரசர் முதலாம் ஜேம்ஸ் என்பவரின் பிரதிநிதிகளாக முகலாய அரச சபைக்கு வரும் அந்த மனிதர்கள், சாதாரண வியாபாரிகளுக்கும் வணிகர்களுக்கும் சிறிது மேம்பட்டவர்கள். அவர்கள் இராஜதந்திரம் அறியாதவர்கள். இந்தியாவில் தொழில் வணிகம் செய்ய உரிமை கோரி வந்தவர்கள்.

இந்திய வியாபாரிகளை நடத்துவது போல், அவர்களையும் ஜஹாங்கீர் மதிக்கவில்லை — அது சரிதான் என்று மெஹ்ருன்னிஸா நினைத்தாள். இங்கிலாந்து அரச சபையிலிருந்து நன்கு தேர்ந்த பிரபுக்கள் அல்லாது இத்தகைய வியாபாரிகள் சக்ரவர்த்தியை அணுகுவது முகலாய சாம்ராஜ்ஜியத்தின் பெருமைக்கு இழுக்காகும். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள், மீன் பிடிப்பவர்கள் மற்றும் ஆடு மாடு மேய்ப்பவர்கள் அல்லாது வேறு யார்? எப்படி அந்தச் சிறிய தீவு முகலாய சாம்ராஜ்ஜியத்தின் பெருமையுடன் போட்டியிட முடியும்? இந்தியாவிலேயே தேவையான அளவிற்கு எல்லாமே கிடைக்கிறது. வெளியிலிருந்து ஒன்றும் தேவையில்லை. இந்தியாவில் மிக அதிகமாகக் கிடைக்கும்

பிளகு, ஏலம், கிராம்பு போன்ற, உணவில் சேர்க்கும் வாசனைப் பொருட்கள், பருத்தித் துணிகள் மற்றும் வேடியுப்பு முதலியவை வெளிநாட்டவர்களுக்குத் தேவை. அப்படியாகில் ஒரு தேர்ந்த பிரதிநிதியைச் சக்ரவர்த்தியைச் சந்தித்துப் பேச அனுப்புவதற்கு அவர்கள்தான் முயற்சி எடுக்க வேண்டும்.

இந்தியாவின் துறைமுகத்திற்கு வந்த முதல் ஆங்கிலேயக் கப்பலின் தலைவன் வில்லியம் ஹாக்கின்ஸ், ஒரு மிகவும் படித்த, புலமை வாய்ந்த மனிதன். முகலாயச் சபையில் பேசப்படும் துருக்கி மொழியில் புலமை பெற்றவன். முதன் முதலில் அவன் சக்ரவர்த்தியைச் சந்திக்க வந்த பொழுது அந்தபுரத்துச் சாளரத்திலிருந்து ருக்கையாவுடன் மெஹ்ருன்னிஸாவும் அந்த நிகழ்ச்சியைப் பார்த்தது அவளுக்கு இன்னும் நினைவில் இருக்கிறது. துருக்கிய மொழியை நன்றாகப் பேசினாலும் அவனும் ஒரு சாதாரண வணிகன்தான். எப்படியானாலும், ஆங்கிலேயர்களுக்குத் தனிப்பட்ட சலுகைகள் வேண்டுமாகில், அவர்கள் அதற்குத் தகுதி உடையவர்கள் என்பதை சக்ரவர்த்திக்கு அவர்கள் நிரூபித்துக் காட்டவேண்டும். தற்சமயம் போர்த்துகீசியப் பாதிரிகள் முகலாயப் பேரவையில் ஒரு நல்ல வலிமையுள்ள இடத்தில் இருக்கின்றனர். பல வருடங்களாக அவர்கள் இந்தியாவில் இருக்கின்றனர்.

பொறுமையில்லாது அலுத்துக் கொள்ளும் அவளது சிறுவயதுக் குணம் தலை தூக்க, மெஹ்ருன்னிஸா ஜன்னல் சட்டத்தில் விரல்களால் தாளமிட்டாள். இந்தச் சமுதாயம் பெண்கள் மேல் திணித்திருந்த கோட்பாடுகளைப், பேரரசின் அந்தப்புரத்தைச் சார்ந்த பெண்களால் மீறி நடக்க முடியும் என்பதை அவள் சிறுவயதாக இருக்கையிலேயே அறிந்திருந்தாள். இப்பொழுது அவள் அந்தப்புரத்தில் வசிக்கிறாள். ஆனால், இங்கு இருப்பது மாத்திரமே அதற்குப் போதுமான தில்லை என்பதை அவள் அறிவாள். இங்கும் வெகுசில பெண்களுக்கே அந்த உரிமை இருந்தது — சக்ரவர்த்தியின் மனைவிகள், அவரது உறவினப் பெண்கள் மற்றும் அவரது

விருப்பத்திற்குரிய பெண்கள். ஓ! அவள் மாத்திரம் ஆணாகப் பிறந்திருந்தால் பேரவையில் அவளும் ஒரு உறுப்பினராக இருந்திருக்கலாம். ஆங்கிலேயர்களின் வருகை போர்த்துகியர்களுக்கு ஒரு இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. ஜஹாங்கீருக்கு மாத்திரம் ஒரு திறமை வாய்ந்த ஆலோசகர் இருந்தால், இந்த சாம்ராஜ்ஜியத்திற்குச் சாதகமாக எப்படி அந்த இரு நாட்டினரையும் மோதிக்கொள்ள விடலாம் என்று அவருக்கு தெரிய வரும். ஆனால், சக்ரவர்த்தியைத் திருமணம் செய்து கொள்ளும் நம்பிக்கையும் இல்லாமல் அரச சபையில் நடக்கும் ஆர்வம் மிக்க நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு அரசியலில் ஈடுபடவும் முடியாமல், இந்த அந்தப்புரத்தில் வாழ்க்கையை கழிக்க வேண்டி அவளுக்கு விதிக்கப் பட்டிருக்கிறது.

மெஹ்ருன்னிஸா ஜன்னலிலிருந்து திரும்புகையில் கிழக்குத் திசையில் மெல்ல வெளிச்சம் பரவத் தொடங்கியது. அவள்தன் எண்ணங்களில் மூழ்கி இருக்கையில் இரவு கழிந்துவிட்டது. அவள் படுக்கைக்குள் புகுந்து கண்களை இறுக மூடிக்கொண்டாள். சிறிது நேரமாகிலும் அவள் உறங்க வேண்டும். இன்னும் சில மணி நேரங்களில் எழுந்து தன் வேலைகளைத் துவங்க வேண்டியிருக்கும்.

"இதோ வந்து விட்டாள். ஏன் இவ்வளவு நேரம்?" ருக்கையா அதிகாரத்துடன் வினவினாள்.

பெரிய சக்ரவர்த்தினியை மெஹ்ருன்னிஸா வணங்கினாள். "என்னை மன்னிக்கவும், மாண்புமிக்கவரே. நான் அதிக நேரம் தூங்கிவிட்டேன்."

"மறுபடியும்?" ருக்கையா புருவங்களை உயர்த்தினாள். "இரவில் நீ சரியாக தூங்க வேண்டும். இப்பொழுது எனக்கு உடை அணிய உதவி செய். என்னைப் பார்க்க குர்ரம் வந்து கொண்டிருக்கிறான்."

அடுத்த ஒரு மணி நேரம் தன்னால் முடிந்த வரையில் பெரிய இராணியைச் சந்தோஷப்படுத்த மெஹ்ருன்னிஸா

முயற்சி செய்தாள். ஒவ்வொரு உடையாக ருக்கையாவிற்குக் காண்பித்து, பின் வேண்டாம் என ஒதுக்கியாகிவிட்டது. இல்லை, இது வேண்டாம், இரண்டு முறை அணிந்தாகி விட்டது. இரண்டு முறை அணிந்த அதே உடையை மறுபடியும் அவள் அணிவாள் என்று நினைப்பதற்கு அவள் பணிப்பெண்கள் என்ன முட்டாள்களா? ஏன் அது ஏற்கெனவே அகற்றப்படவில்லை? அது வேண்டாம், அது நீல நிறம், இன்று நீல நிற நாளில்லை. அந்த உடை—அந்தப் புரத்து நகைக் கடைக்காரர் அதற்குப் பொருத்தமாக வைரமும் கெம்புகற்களும் பதித்த மாலை கொண்டு வரும் வரையில் அணிய முடியாது, பார்ப்பதற்கு நன்றாக இருக்காது. முடிவாகச் சக்ரவர்த்தினி ஒரு உடையைத் தேர்ந்தெடுத்தாள். சுற்றிலுமுள்ள பணிப்பெண்கள் நிம்மதியான பெருமூச்சு விட்டனர். அவளுக்கு அலங்கரிக்கத் தொடங்கினர். மெஹ்ருன்னிஸா சக்ரவர்த்தினியின் முகத் திரையை அவள் தலையில் பொருத்திக் கொண்டிருக்கும் சமயத்தில் இளவரசன் குர்ரம் உள்ளே வந்தான். எல்லாப் பெண்களும் குனிந்து வணங்கினர்.

குர்ரம் சக்ரவர்த்தினியின் அருகில் சென்று வயதினால் முதிர்ந்து சுருக்கம் விழுந்திருந்த அவள் கன்னங்களில் முத்தமிட்டான்.

"நீ எப்படி இருக்கிறாய், அம்மா?"

"நன்றாக இருக்கிறேன். நீ என்னை அடிக்கடி வந்து சந்தித்தால் இன்னும் நன்றாக இருப்பேன்." சிடுசிடுப்பான குரலில் ருக்கையா பதிலளித்தாள். அவள் இவ்வாறு அடிக்கடி முறை கூறுவதை கேட்டிருந்த குர்ரம் அமைதியாகச் சிரித்துக்கொண்டே அவள் அருகில் அமர்ந்தான். அவன் பாட்டியை எப்படி அவன் சுண்டுவிரலால் ஆட்டிப் படைத்து, அவள் கோபத்தை மறக்கடிக்கச் செய்ய முடியும் என்பதை அவன் அறிவான். அருகிலிருந்த வெள்ளித் தட்டிலிருந்த ஒரு பணியாரத்தை எடுத்து அவளுக்கு ஊட்டிவிட்டு அவன் பட்டு துவாலையில் கைகளைத் துடைத்துக் கொள்வதைப் பார்த்து மெஹ்ருன்னிஸா தனக்குள் சிரித்துக்

கொண்டாள். முதன் முறையாக அவள் இளவரசனைப் பார்க்கும் பொழுது, ருக்கையா இதே அன்புடன் அவனுக்கு ஒரு பணியாரத்தை ஊட்டி விட்டுக் கொண்டிருந்தாள். அவள் தன்னையறியாமலேயே ருக்கையா செய்ததையே இவ்வளவு வருடங்கள் கழித்துத் திருப்பிச் செய்கிறான்.

"இன்ஸ்சாப் அல்லா, மாட்சிமை பொருந்தியவரே!" மெஹ்ருன்னிஸா கூறினாள்.

"இன்ஸ்சாப் அல்லா, மெஹ்ருன்னிஸா" அவளைப் பார்த்து ரசித்தவாறே குர்ரம் கூறினான்.

"குர்ரம்," அவன் கவனம் ஒரு நொடிக்குக் கூடத் தன்னிடமிருந்து திரும்புவதை விரும்பாத ருக்கையா அவன் தோளில் கை வைத்தவாறு கூறினாள். "போனவாரம் உன் நாட்களை எப்படிக் கழித்தாய்?"

இளவரசன் பாட்டியின் பக்கம் திரும்பினான். மெஹ்ருன்னிஸா அவனை உற்று நோக்கினாள். பத்தொன்பது வயதில் அவன் மிக அழகான, கம்பீரமான இளைஞனாக வளர்ந்திருந்தான். அரியணைக்கு அடுத்த வாரிசு அவன்தான் என்று எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அர்ஜுமன்ட் அதிஷ்டசாலிதான் என்று மெஹ்ருன்னிஸா நினைத்தாள். உடனேயே, அர்ஜுமன்ட்— குர்ரம் இவர்களின் முறைப்படி நிச்சயதார்த்தம் நடந்து நான்கு வருடங்களாகி விட்டன. அதாவது, அந்த தினத்தன்று ஜஹாங்கீர் அவளைப் பார்த்தபின் நான்கு வருடங்களாகி விட்டது என்பதை உணர்ந்தாள். அவள் குடும்பம் அடுத்தடுத்ததாகத் தங்கள் கௌரவத்தை இழந்து வந்து கொண்டிருக்கிறது...முதலில் — நினைவுகள் இன்னும் பசுமையாக உள்ளதை நினைத்து அவள் குறுகினாள் — அலிகுலி கோக்காவை கொன்ற சம்பவம் இதற்கு ஆரம்பமாக அமைந்தது. அவர்கள் திருமணம் நடக்குமா என்று அவள் ஆழ்ந்து யோசித்தாள். முறைப்படிப் பார்த்தால் அவள் குடும்பம் மீண்டும் தலைதூக்கிப் பழைய கௌரவத்தையும், தகுதியையும் பெற்று விட்டனர். அவள் தந்தையும் சக்ரவர்த்தியின் நன்மதிப்பை மீண்டும் அடைந்து விட்டார். ஆனால், அந்த நிச்சயதார்த்தம்

பற்றி ஜஹாங்கீர் மறந்து விட்டதாகத் தோன்றுகிறது. அதே போல், குர்ரமும் மறந்து விட்டதாகத் தோன்றுகிறது.

நான் பேசுவதை நிறுத்தாமல், இளவரசன் அவளைப் பார்த்துக் கண்ணசைத்ததைக் கண்டு அவள் முறுவலித்தாள். ருக்கையா அவன் கைகளை இன்னும் பற்றிக் கொண்டு, தன் இருக்கையில் கண்களை மூடியவாறு சாய்ந்திருந்தாள்.

"புது வருடக் கொண்டாட்டங்களில் நீ கலந்து கொள்வாயா?"

மெஹ்ருன்னிஸா இளவரசன் பக்கம் திரும்பினாள். "ஆமாம், மாட்சிமை பொருந்தியவரே!" சீக்கிரமே புது வருடம் துவங்க இருந்தது.

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள், அம்மா?" குர்ரம் ருக்கையாவைக் கேட்டான்.

பெரிய சக்ரவர்த்தினி கையை நீட்டிக் குர்ரமின் தலை மயிரைக் கோதிவிட்டாள். "நானும் அங்கிருப்பேன். மெஹ்ருன்னிஸா எனக்குப் பணிவிடை செய்ய என்கூட இருப்பாள்."

"அவளுக்கென்று சிறிது நேரம் கொடுங்கள், அம்மா. இந்த வருடம் கடைவீதிகள் பிரமாதமாக இருக்கும். என் நேரம் முழுவதும் அங்குதான் நான் கழிக்கப்போகிறேன் — சக்ரவர்த்திக்கு முதலில் என் வணக்கத்தை செலுத்திய பின்னர்" அவன் அவசரமாக தொடர்ந்து கூறி முடித்தான்.

"தினமும் மாண்புமிக்க பேரரசரைச், சந்தித்து வணக்கம் செலுத்துவதற்கு மறந்து விடாதே." ருக்கையா எச்சரித்தாள். "உன்னைத் தினமும் பார்க்காவிடில் அவர் கவலை அடைவார்."

"நிச்சியம் செய்வேன்" குர்ரம் தலையசைத்தான். "என் தாயாரும் இதையேதான் கூறினார்கள். நான் முறையான கோட்பாடுகள் பற்றி அறிவேன், அம்மா. நான் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று நீங்கள் இருவரும் ஏன் வற்புறுத்தி கூறி கொண்டிருக்கிறீர்கள்?"

ஜகத்கோஸினியின் பெயரைக் கேட்டவுடனேயே, பாதிப் பேச்சிலேயே, ருக்கையாவின் முதுகு விறைப்பாகி அவள் நிமிர்ந்து கட்டைபோல் உட்கார்ந்து கொண்டாள். பெரிய சக்ரவர்த்தினி பின்னால் நின்று கொண்டு, மெஹ்ருன்னிஸா குர்ரமின் கவனத்தை திருப்பப் பார்த்தாள். ஆனால், அவன் பேசிக் கொண்டே போனான். திடீரென்று பேச்சை மாற்றி, "மெஹ்ருன்னிஸாவைப் பற்றிக் கூறுங்கள். அவள் கடை வீதிகளில் தனியாகச் சுற்றித்திரிய அவளுக்குச் சிறிது நேரம் கொடுப்பீர்கள் அல்லவா? நீங்கள் உங்களுடனேயே அவளைப் பூட்டி வைத்திருந்தால் அவள் எப்படி ஒரு கணவனைத் தேடிக் கண்டு கொள்ளமுடியும்?"

ஆனால் பெரிய ராணி, எதிரே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பல வருடங்களாக திரண்டு வரும் மனவருத்தமும், வெறுப்பும் கலந்த குரலில் கூறினாள். "நீ என்ன செய்யவேண்டும் என உன் தாயார் கூறினால் அதைத்தான் நீ கேட்டு நடக்கவேண்டும். இப்பொழுது இங்கு எந்த வார்த்தையும் எடுபடாத ஒரு வயதானவளின் பேச்சை நீ ஏன் கேட்க வேண்டும்?"

அக்பர் இறந்தபின், சிறிதும் விருப்பமில்லாமல்தான் தன் பாதுஷா பேகம் என்ற சக்திமிக்கப் பதவியை ருக்கையா ஜகத்கோஸினிக்கு விட்டுக் கொடுத்தாள். அதற்குப் பிறகு இருவரும் சந்திக்கையில் முறைப்படி ஒருவருக்கொருவர் வணக்கம் செலுத்தாமல், ஒருவித நட்பில்லாமல் அமைதியில் எல்லாம் நடந்து கொண்டிருந்தது. இவ்வாறு தன் அதிகாரம் பறிபோனது முறையானதல்ல என்று ருக்கையா எண்ணினாள். ஆனால், இளம் ஜகத்கோஸினியின் மகனைத் தன் அதிகாரத்தால் அவளிடமிருந்து பிரித்து, ருக்கையா தன் வசம் வைத்துக் கொண்டு, எவ்வாறெல்லாம் ஜகத்கோஸினியிடம் கொடூரமாக நடந்துகொண்டாள் என்பது மெஹ்ருன்னிஸாவிற்குத் தெரியும். இப்பொழுது நிலைமை மாறி, ஜகத்கோஸினி பாதுஷா பேகமாக ஆக, இந்த நிலை ருக்கையாவிற்கு வெறுப்பை ஊட்டியது. எல்லா அதிகாரங்களையும் இழந்து ஒரு சாதாரணப் பெண்மணி போல் தான் ஆனது ருக்கையாவிற்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. ஆனால், குர்ரம் இன்னும் ருக்கையாவைத் தான் 'அம்மா' என்று அழைக்கிறான். அந்த வார்த்தைதான் பழைய நாட்களை இருவருக்கும் நினைவு படுத்திக் கொண்டிருக்கும்— அந்த வார்த்தைதான் ருக்கையாவை மகிழ்ச்சியாகவும், ஜகத்கோஸினியை கட்டுக்கடங்காத கோபத்துடனும் வைத்திருக்கும்.

முன்பெல்லாம் ஜஹாங்கீரின் மனைவியை மெஹ்ருன்னிஸாவிற்கு பிடிக்காது. இருந்தாலும் இப்பொழுது ருக்கையாவின் நிலமையைப் பார்த்து வருந்துவது போல், தன் மகனின் இளம் வயதில் அவனை ருக்கையாவிற்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருந்த ஜகத்கோஸினியின் நிலமையை கண்டு மெஹ்ருன்னிஸா வருந்தியிருக்கிறாள். ஆனால், ஜகத்கோஸினியிடம் அவளுக்கிருந்த வெறுப்புக் குறையவில்லை. மெஹ்ருன்னிஸாவை ஜஹாங்கீர் திருமணம் செய்து கொள்ளாமலிருக்க, ஜகத்கோஸினி எவ்வாறெல்லாம் முயற்சி மேற்கொண்டிருக்கிறாள் என்று கடந்த சில வருடங்களில் மெஹ்ருன்னிஸாவிற்குத் தெரிய வந்தது. பேரரசின் அந்தப்புரத்தில் எந்த விஷயமுமே இரகசியமாக இருந்ததில்லை.

பெரிய சக்ரவர்த்தினி ருக்கையாவின் மாளிகையில் மெஹ்ருன்னிஸா தங்கியிருப்பதால்தான், ஜஹாங்கீர் ருக்கையாவைப் பார்ப்பதற்கும் வருவதில்லை என்பதை மெஹ்ருன்னிஸா அறிவாள். முடிந்திருந்தால், ஜகத்கோஸினி அவளை அரண்மனையைவிட்டே அப்புறப்படுத்தியிருப்பாள். ஆனால் ருக்கையா மெஹ்ருன்னிஸாவின் பணிவிடைகளை விரும்புகிறாள். பெரிய ராணியைப் பற்றி நன்கு அறிந்தவளாகையால், ஜகத்கோஸினி மெஹ்ருன்னிஸாவைப் பற்றிய எண்ணத்தை அப்படியே விட்டுவிட்டாள். இல்லாவிடில் பெரிய ராணி இது பற்றி அமர்க்களம் செய்து சக்ரவர்த்தியின் கவனத்தையும் ஈர்ந்து விடுவாள் என்று ஜகத்கோஸினிக்குத் தெரியும். ஜஹாங்கீரின் கவனம் மெஹ்ருன்னிஸா பற்றி திரும்புவதை அவளால் ஒரு பொழுதும் சகித்துக்கொள்ள முடியாது.

குர்ரம் மண்டியிட்டு அமர்ந்து கொண்டு, தன் பாட்டியின் தோள்களைக் கட்டிக் கொண்டு, அவள் கன்னத்தில்

தன் கன்னத்தைப் பதித்தான். "உன் பேச்சை யார் கேட்காம விருப்பார்கள்? நீ எனக்கு எவ்வளவு முக்கியமானவள் என்று உனக்குத் தெரியாதா?"

"நிஜமாகவா?" தன் சிடுசிடுப்பான முகத்தை வேகமாக மாற்றிக் கொண்டு ருக்கையா வினவினாள். அவள் எப்படிப் பட்ட மனநிலையில் இருந்தாலும் தன் சாதுரியத்தினாலும், கவர்ச்சியாலும் குர்ரம் அவளைச் சமாளித்து விடுவான்.

"நிஜமாகத்தான்" அவள் இரு கன்னத்திலும் சத்தமாக முத்தமிட்டவாறு குர்ரம் கூறினான். "இப்பொழுது சொல், கடைவீதிகளில் மெஹ்ருன்னிஸா நாளைக்கு என்ன செய்யப் போகிறாள்?"

ருக்கையா தலையை பின்புறம் சாய்த்துச் சிரித்தாள். "மெஹ்ருன்னிஸாவின் திருமணம் பற்றி திடீரென்று உனக்கென்ன அக்கறை? நீயே ஏன் அவளை மணந்து கொள்ளக் கூடாது?"

"அம்மா" அவள் கூறியதை ஆட்சேபிப்பது போல் குர்ரம் கூறினான். "நான் அப்படிச் செய்ய முடியாதென்று உனக்குத் தெரியும். இருந்தாலும்..." மெஹ்ருன்னிஸா பக்கம் திரும்பி அவளை ஊராய்வது போல் கண்கள் பளிச்சிடப் பார்த்தவாறு கூறினான். "ம்... அவள் மிக அழகாக இருக்கிறாள்."

குர்ரமின் அந்தத் தீர்க்கமான பார்வையின் கீழ் மெஹ்ருன்னிஸா நெளிந்தாள். இது மிக அதிகம். அவள் மருமகளைத்தான் குர்ரம் திருமணம் செய்து கொள்ள நிச்சயித்திருப்பது அவனுக்குத் தெரியாவிட்டாலும் சக்ரவர்த்தினிக்கு நன்றாகவே தெரியும். சில சமயங்களில் ருக்கையாவின் விஷமத்தனம் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கிறது. எப்பொழுது நிறுத்த வேண்டும் என்று அவளுக்குத் தெரிவதில்லை.

"மாண்புமிக்கவரே" மெஹ்ருன்னிஸா ஆட்சேபித்தாள். "இவ்வாறு பேசுவதெல்லாம் சரியான முறையல்ல. தயவு செய்து..."

"சரி" இந்தச் சிறிய விளையாட்டில் அலுத்துப் போய் ருக்கையா ஒரு கையை வீசினாள். "குர்ரம், நீ திரும்பிச் செல். நாளை கேளிக்கை மைதானத்தில் உன்னைச் சந்திக்கிறேன்."

இளவரசன் குர்ரம் அவளை வணங்கிவிட்டு, முகத்தில் பெரிய சிரிப்புடன் அந்த அறையை விட்டு அகன்றான். அந்தச் சங்கடமான சூழ்நிலையினால் கன்னங்கள் சிவக்க மெஹ்ருன்னிஸா அலமாரி அருகே சென்று சக்ரவர்த்தினியின் உடைகளை மடித்து வைக்க ஆரம்பித்தாள்.

"உனக்குத் தெரியுமா? குர்ரம் சொல்வது சரிதான்."

மெஹ்ருன்னிஸா சக்ரவர்த்தினி பக்கம் திரும்பினாள்.

"நான் உன்னை அடிக்கடி வெளியே செல்ல அனுமதித்தால் உன்னைப் பார்த்தபின் யாராவது உன்னை திருமணம் செய்து கொள்ள விரும்புவார்கள்." விஷமத் தனத்துடன் கண்ணைச் சிமிட்டியவாறு சக்ரவர்த்தினி தொடர்ந்தாள். "நீ முகத்தில் திரையில்லாமல் கடைவீதிக்குச் செல்ல வேண்டும். பேரரசைச் சார்ந்த ஆண்கள் மாத்திரம்தான் அங்கு வருவார்கள். யாருக்குத் தெரியும்— சக்ரவர்த்திகூட உன்னைப் பார்க்கலாம்."

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன். மெஹ்ருன்னிஸா தன் இதயத் துடிப்பு நின்று விட்டதுபோல் உணர்ந்தாள். அவள் ருக்கையா பக்கமிருந்து முகத்தை திருப்பிக்கொண்டாள். இத்தனை வருடங்கள் கழித்து ஜஹாங்கீரை நேருக்கு நேர் சந்திக்க இயலும் என்ற எண்ணமே அவள் கண்களில் ஒளியூட்டியது.

ருக்கையா அவளை உற்று நோக்கினாள். அவள் முதுகின் மெல்லிய வளைவு, பின்கழுத்தில் தூக்கி கட்டப்பட்டிருந்த கருத்த அடர்ந்த கூந்தல், பட்டாடைகளை மடித்து வைத்துக் கொண்டிருக்கும் அவளது மெலிந்த விரல்கள் — சக்ரவர்த்தி இளம் வயதில் அவள் மேல் பைத்தியமாக இருந்தது ருக்கையாவிற்கு நினைவிற்கு வந்தது. அந்தப்புரத்தில் எந்தப் பெண்ணுக்கும் இல்லாத ஒரு வசீகரிக்கும் சக்தி மெஹ்ருன்னிஸாவிற்கு ஜஹாங்கீர் மேல் இருந்தது.

ருக்கையாவின் சுறுசுறுப்பான மூளையில் ஒரு எண்ணம் தோன்றலாயிற்று. மெஹ்ருன்னிஸாவின் அழகு இந்த அந்தப்புரச் சுவர்களிடையே வீணாகி விடக் கூடாது. ஒரு சமயத்தில் ஜஹாங்கீர் அவள் மேல் தீவிரமான காதலோடு இருந்தான். ஒருவேளை — இப்பொழுதும் இருக்கலாம். சரியான திசையில் சிறிது தள்ளிவிட்டால்... சக்ரவர்த்தியும் மெஹ்ருன்னிஸாவும் இணைந்தால், அதன் பலனை ருக்கையா அநுபவிக்க முடியும். மிகவும் முக்கியமாகக் கபடத்துடன் ருக்கையா புன்னகைத்துக் கொண்டாள் — அது ஜகத் கோஸினியின் மனநிலையைப் பெரிதும் பாதிக்கும் அல்லவா?

அத்தியாயம் பதினெட்டு

அவளிடம் ஆழ்ந்த காதல் கொண்ட பேரரசர் படானா (பட்னா) (Patana) நகரத்தின் தலைமை அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதினார். அதன்படி, ஷேர் ஆப்கான் ஒரு கடிதத்துடன் அங்கு வருவானாகில், அவன் உடனே கொலை செய்யப்படவேண்டும். அது நடந்தது. ஆனாலும், அந்த அஞ்சா நெஞ்சமுடையப் போர்வீரன் இதை, சிறிதும் எதிர்பார்க்கவில்லையானாலும், தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தான் முடிவில் இறக்கும் முன், ஐந்து வீரர்களைக் கொன்றான்... அவள் ஒரு நேர்மையான, உண்மையான ஒரு பெண்; பேரரசியாக இருக்க உகந்தவள்.

- **WILLIAM IRVINE,** trans., STORIA DO MOGOR
by Niccolao Manucci

"நீ தயாரா? நாம் இப்பொழுது போகலாமா?" ஆவலினால் கண்கள் பளபளக்க, லாட்லி மேடையிலிருந்து குதித்து அறைக்குள் அங்கும் இங்கும் ஓடினாள். "நாம் சக்ரவர்த்தியைப் பார்ப்போமா? ஏன் இன்னும் காத்துக் கொண்டிருக்கிறோம்? எப்பொழுது நாம் போகலாம்?"

பொறுமையில்லாத தன் மகளைக் கண்டு மெஹ்ருன்னிஸா முறுவலித்தாள். "சீக்கிரம் போகலாம், கண்ணே! உன் பாட்டி வரும்வரை காத்திருக்க வேண்டும்."

"அவள் எப்பொழுது வருவாள்? ஏன் இன்னும் வரவில்லை?"

"வந்துவிட்டாள்" கதவருகிலிருந்து ஒரு குரல் கேட்டது. அஸ்மத் பேகம் கைகளை விரித்தாள். லாட்லி பாய்ந்து சென்று அவளைத் தழுவிக் கொண்டாள்.

"நாம் போகலாம், பாட்டி" லாட்லி தன்னை விடுவித்துக் கொண்டு அஸ்மத்தின் பாவாடையைப் பற்றி இழுத்தாள்.

மெஹ்ருன்னிஸா தாயார் அருகில் சென்றாள். கடந்த சில வருடங்களில் ஏற்பட்ட பல சோதனைகளிலும் அஸ்மத் உறுதியாக மனம் தளராமல் இருந்தாள். கியாஸிற்கு ஏற்பட்ட அவமானத்தைத் தைரியத்துடன் எதிர்கொண்டாள். அவளைப் பொறுத்தவரையில், அவள் கணவர் எப்பொழுதும் சரியானதைத் தான் செய்வார். தவறு நேர்ந்த போதிலும் அவள் அவரை முழுமையாக நம்பினாள். அவ்வாறே, கியாஸ் பணத்தை மோசடி செய்த போதிலும் அதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டுமென்று உறுதியாக நம்பினாள். ஆக்ராவிலிருந்து அவர்கள் திரும்பிய பின்னர், மெஹ்ருன்னிஸா அவள் தந்தையைச் சந்திக்கும் பொழுது அவருடன் என்ன பேசுவது எனத் தயங்கினாள். ஆனால், அஸ்மத் அவளைத் தனியாக அழைத்துச் சென்று தெளிவாகக் கூறினாள். "அவர் உன் தந்தை. உனக்கு உயிர் கொடுத்தவர். உனக்கு இப்பொழுது தெரிந்திருக்கும் விஷயங்கள் எல்லாம் அவர் கற்றுக் கொடுத்தவை. உன்னை முழுமையாக உருவாக்கியவர் அவரே, குழந்தாய்! அவர் நிலைமையைச் சரியாக எடை போடாததால், தவறு நேர்ந்து விட்டது. பண விஷயத்தில் உன் தகப்பனார் எவ்வளவு தாராள மனம் உடையவர் என்று உனக்குத் தெரியும். நம்மிடம் சிறிதளவே இருந்தாலும் நம்மை நாடி வரும் ஏழைகள் வெறும் கையுடன் திரும்பிப் போனதில்லை என்றும் உனக்குத் தெரியும். நீ அவரைப் பார்த்துப் பேசு. நீ பேசாமலிருப்பது அவர் மனதை வருத்துகிறது. ஒரு குழந்தை தன் தந்தையை மன்னிப்பது என்ற நிலைமையே கிடையாது. உன் தந்தை தவறு செய்தார் என்று நான் எண்ணவில்லை. நீயும் அவ்வாறே நினைக்க வேண்டும்."

இப்பொழுது தாயைப் பார்த்தவுடன் அன்று நடந்த பேச்சு வார்த்தைகள் மெஹ்ருன்னிஸாவிற்கு நினைவிற்கு வர, அவள் தனக்குள் புன்னகைத்துக்கொண்டாள். அவள் தந்தையுடன் அவள் உறவு எப்பொழுதும் வெளிப்படையானது. அவர்கள் நிறையப் பேசியிருக்கிறார்கள். சிரித்து

மகிழ்ந்திருக்கிறார்கள். சில சமயங்களில் வாக்கு வாதம் கூடச் செய்திருக்கிறார்கள். அஸ்மத் எப்பொழுதும் அமைதியாக யோசித்து முடிவெடுப்பவள். அன்று மெஹ்ருன்னிஸாவிற்குப் புரிய வைத்தது போல், அவளுடைய மென்மையான அணுகு முறையால் எல்லாவற்றையும் நடத்திச் செல்வாள். பிறகு கியாஸை அவர் அறையில் சென்று மெஹ்ருன்னிஸா பார்த்தாள். அவர் கஜானாவின் கணக்குப் புத்தகங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அவள் அறைக்குள்ளே நுழைகையில் தன் ஆயாசம் மிகுந்த கண்களால் ஏறிட்டு நோக்கினார். மெஹ்ருன்னிஸா அவர் அருகில் அமர்ந்து அவர் தோள்களில் சாய்ந்து கொண்டாள். பிறகு அவர்கள் அவ்வாறே அமர்ந்திருந்து, அவர்களது விரிசல்விட்ட உறவைப் புதுப்பிப்பது போல், பல மணிநேரம் பேசிக் கொண்டிருந்தனர். எப்பொழுதும் ஒதுங்கியே இருக்கும் அவள் தாய், இந்த ஒருமுறை தானே முன் வந்து அவளுக்கு அறிவுரை கூறியதில், அவளுக்கும் அவள் தந்தைக்கும் இடையே இருந்த உறவு சீரடைந்தது.

"நீ வரவில்லையா, மகளே?" அஸ்மத் மெஹ்ருன்னிஸாவிடம் கேட்டாள்.

"இப்பொழுது இல்லை, அம்மா. பிறகு வருகிறேன்."

அஸ்மத் தலையசைத்துவிட்டு, லாட்லியை அழைத்துக் கொண்டு சென்றாள். வராந்தாவில் குதித்தவாறு லாட்லி மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருப்பதை மெஹ்ருன்னிஸா வால் கேட்க முடிந்தது.

அவள் சாளரத்தினருகே சென்று வெளியே நோக்கினாள். நீல நிற ஆகாயத்தில், பஞ்சுப் பொதிகள் போன்ற நீரில்லா மேகங்களுடன், உள்ளும், வெளியும் சென்று சூரியன் கண்ணாம்மூச்சி விளையாடிக் கொண்டிருந்தது. நடுப்பகல் நேரம் கடந்துவிட்டதால், சூரியனின் பொற்கதிர்கள் உஷ்ணம் இழந்து இருந்தன. அவள் குனிந்து, மீனாபஜார் முழு மூச்சுடன் இயங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பெரிய முற்றத்தின் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். மகிழ்ச்சியுடன் சிரிக்கும் ஒலிகளுடன் பொன்னிற ஜிலேபிகள்

சூடான எண்ணெயில் பொரித்தெடுக்கப்படும் வாசனையும் கலந்து மேலே எழும்பி வந்தது.

ஆக்ரா கோட்டையின் மசூதிக்கு அருகில், நான்கு பக்கமும் பெரிய சுவர்களால் சூழப்பட்ட அந்தப் பெரிய முற்றத்தில் கடைவீதிகள் அமைக்கப்பட்டிருந்தன. புதிய மலர்களாலும் காகித கொடிகளாலும் பலவிதமாக அலங்கரிக்கப்பட்ட கடைகள், முற்றத்தின் நான்கு புறங்களிலும் வரிசையாக இருந்தன. வியாபாரிகள் விதவிதமான பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்தனர். மலர்கள், அணிகலன்கள், ஆபரணங்கள், பட்டு, ஸாடின் துணி வகைகள், இவற்றுடன் கூடக் காய்கறிகள், பழவகைகள், மசாலாப் பொருட்களும் கூட இருந்தன.

அவர்களுக்காகவே அமைக்கப்பட்டிருந்த அந்தக் கடை வீதிகளில், சாதாரணப் பெண்கள் தங்கள் வீட்டிற்குப் பொருட்களை வாங்குவது போல் பாசாங்கு செய்தவாறு, அந்தப்புரத்துப் பெண்கள், அங்கு ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் வியாபாரம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் வாங்கும் காய்கறிகளும், பழங்களும் அரண்மனைச் சமையல் அறைக்கு அனுப்பப்பட்டு, அன்றிரவு உணவு தயாரிப்பதற்கு உபயோகப்படுத்தப்படும்.

ஒரு கடையில் வரிசையாக வைக்கப்பட்டிருந்த காய்கறிகளை மெஹ்ருன்னிஸா குனிந்து பார்த்தாள். தக்காளி, பச்சை மாங்காய், முட்டைகோஸ், வெண்மையான காலிப்ளவர், நல்ல சிவப்பான கேரட், வெள்ளரிக்காய், வெண்மையான நீண்ட முள்ளங்கி, மெல்லிய புடலங்காய் எனப் பலவகைகள். கடையில் அமர்ந்திருக்கும் பெண்மணி காரட், வெள்ளரிக்காய், முள்ளங்கி இவற்றைச் சீவி மெல்லிய துண்டுகளாக வெட்டி அடுக்குவதை ஒரு அலி கண் காணித்தவாறு இருந்தான். அவள் செய்து முடித்தவுடன், தலையாட்டி அதை ஆமோதித்து விட்டு அங்கிருந்து அகன்றான். அந்தப்புரத்தில் அவ்வளவு சுதந்திரம்தான் என்று மெஹ்ருன்னிஸா எண்ணிக் கொண்டாள். தவறாகப் பயன்படுத்த முடியாதபடிக், காய்கறிகள் கூட வெட்டப்பட்டு விற்கப்படுகின்றன.

சக்ரவர்த்தியின் அந்தப்புரத்தில் மனைவிகளும் வைப்பாட்டிகளும் ஆகச் சேர்த்து முன்னூறு பெண்கள் இருந்தனர். வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை சக்ரவர்த்தி அவர்களிடம் வந்தால் அவர்கள் அதிஷ்டசாலிகள். இதன் மூலம் அவர்களுக்குக் குழந்தை முக்கியமாக ஆண் குழந்தை — பிறந்தால் அவர்கள் பாக்கியம் செய்தவர்கள். இதன் மூலம் அவர்கள் மதிப்புக் கூடும். ஆண் குழந்தை பிறந்தால், அரியணைக்கு வாரிசாக வரக் கூடிய குழந்தையின் தாயார் என்ற முறையில், பெண்கள் நிரம்பியுள்ள அந்த அந்தப் புரத்தில் அவர்கள் கை ஓங்கும். கௌரவம் கிட்டும் மனைவிகளும் வைப்பாட்டிகளும் இந்தச் சந்தர்பத்திற்காகப் போட்டியிடுவார்கள். இருந்தாலும், பல பெண்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் சக்ரவர்த்தியைப் பார்க்காமலே கழித்துவிடுவார்கள். அவர்களுக்கு முப்பது வயதிற்குமேல் ஆகிவிட்டால் சக்ரவர்த்தியோ அல்லது வேறு எந்த ஆணோ அவர்கள் பக்கம் திரும்பமாட்டார்கள்.

பலவிதக் குறைபாடுகள், சாதகமற்ற சூழ்நிலைகள் இருந்தாலும் அந்தப்புரத்து வாழ்க்கை மெஹ்ருன்னிஸாவிற்குப் பிடித்திருந்தது. ஒரு சாதாரணப் பெண்ணை அவள் நல்ல பணவசதி படைத்தவளாகவும், அரியணைக்கு வாரிசாக வரக் கூடிய குழந்தையைப் பெற்றெடுக்கக் கூடியவளாகவும், அதன் மூலம் ஆண்கள் ஆதிக்கத்தில் இயங்கும் இந்த சமுதாயத்தில் ஒரு சக்தி படைத்தவளாகவும் கூட ஆக்க முடியும். ஆனால், அவளுக்கு முப்பத்தி நான்கு வயதாகி விட்டது. எந்த ஒரு ஆணும் அவள் இன்னும் கவர்ச்சியாக இருப்பதாக நினைக்கமாட்டான். அப்படியிருக்கையில் சக்ரவர்த்தி எப்படி இவளை கவனிப்பார்?

ஒரு சிறிய இருமல் சப்தம் அவள் கவனத்தைக் கவர்ந்தது. அவன் சட்டென்று திரும்பினாள். வாசற்படி அருகில் ஒரு அலி நின்றிருந்தான். "மாண்புமிக்க அரசி உங்களை உடனே வரச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்."

"நான் உடனே வருகிறேன்."

சத்தமில்லாமல் வந்தமாதிரியே தலையை அசைத்து விட்டு அந்த அலி மறைந்தான். அந்தப்புரம் எப்பொழுதுமே இப்படித்தான். துருவிப்பார்க்கும் கண்கள் எல்லாவிடத்திலும் முணுமுணுப்பான பேச்சுகள் ஆங்காங்கே. இதிலிருந்து தப்பிப்பதென்பது முடியாத காரியம். முடிந்தவரை இதை அநுசரித்துப் போவதுதான் நல்லது. எப்பொழுதும் மிகவும் விழிப்புடனும் கவனத்துடனும் இருக்க வேண்டும். இதைக் கண்டுகொள்ளாமல் அலட்சியம் செய்வது அபாயகரமானது. அஸ்மதும் கியாஸும் ஆக்ரா திரும்பியபின், லாட்லியுடன் மெஹ்ருன்னிஸாவை அவர்கள் வீட்டிற்கு வந்து விடும்படி மிகவும் வற்புறுத்தினர். அவள் அவர்களுடைய மகள். வேறு எங்கு வசிக்க முடியும்? ஆனால், மெஹ்ருன்னிஸாவிற்கு இந்த சிறிதளவு சுதந்திரம் அவசியமாக இருந்தது. இங்கே அவளுக்குப் பெரிய சக்ரவர்த்தினி ருக்கையாவின் தேவைகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பான வேலை இருந்தது. சிறுவயதில் அஸ்மத் அவளுக்குச் சொல்லிக்கொடுத்த சித்திரம் வரைதல், தையல் வேலை, பூவேலை செய்தல் முதலியவற்றால் அந்தப்புரப் பெண்களுக்கு உடைகள் தயாரிக்க முடிந்தது. இதற்காக அவளுக்கு நல்ல வருமானமும் கிடைத்தது. மொத்தத்தில் கண்ணாடிச் சுவர்களால் ஆன அறைகள் கொண்டது போன்ற இந்த அந்தப்புரத்தில் வசிப்பதிலும் சில சௌகரியங்கள் இருந்தன. இதில் கிடைக்கும் மகிழ்ச்சி, கிளர்ச்சி ஊட்டும் பரபரப்பான நிகழ்ச்சிகள், கூண்டு வாழ்க்கை போன்ற இதிலும் தொடர்ந்து உயிர்வாழ அவசியமான சாதுரியம் முதலியன வேறு எங்கும் கிடைக்காது.

படுக்கை அருகே சென்று மெஹ்ருன்னிஸா தன் முகத் திரையை எடுத்துக் கொண்டாள். அதைத் தன் தலையில் கொண்டை ஊசியால் குத்தி அணிந்து கொண்டு கண்ணாடி முன்நின்று சரி செய்துகொண்டாள். அவளுடைய வெள்ளைச் சோலியும், வெள்ளை பாவாடையும் தங்க நிற ஜரிகை நூல்களினால் பூவேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. கைகளிலும் கழுத்திலும் தங்க நகைகள் அணிந்திருந்தாள். பால் போன்ற வெள்ளை முத்துக்களாலான வங்கிகளை

மேல் கைகயிலும், அழகிய பெரிய முத்து வைத்த காதணி களும் அணிந்திருந்தாள். அவள் மருதாணி பூசிச் சிவந்த கை கால்களுக்கு மாறாக அவள் உடை எடுப்பாகத் தெரிந்தது. மென்மையாக முகப்பூச்சு செய்த முகத்தில், நீலக் கண் விழிகள் ஒளிவீசின.

ஒரு சிறிய புன்னகை அவள் முகத்தில் பரவியது. முப்பது வயதிற்கு மேற்பட்ட எந்தப் பெண்ணும் வெள்ளை உடை அணியத் தயங்குவார்கள். அது தூய்மைக்கும் கன்னித் தன்மைக்கும் அறிகுறி. ஆனால், கண்ணாடியில் தெரியும் அவள் உருவம், அந்த ஆடை அவளுக்கு நன்றாகவே பொருந்துகிறது என்றே பறை சாற்றியது. அவள் நீண்ட மூச்சு எடுத்துக்கொண்டு, பாவாடையை சீர் செய்துவிட்டு, ருக்கையா சுல்தான் பேக்மைத் தேடிச் சென்றாள்.

கடைவீதியின் ஒரு மூலையில் பெரிய சக்ரவர்த்தினி, இளவரசர் குர்ரமுடன் சுற்றிலும் அலிகளும் பணிப்பெண் களும் சூழ்ந்திருக்க அமர்ந்திருந்தாள்.

மெஹ்ருன்னிஸா ருக்கையாவை அணுகினாள். "மாண்பு மிக்க பேரரசி என்னைப் பார்க்க விரும்பினீர்களா?"

"ஆமாம்" அவளுடைய உருண்டை முகத்தில் புன்னகைக் கோடுகள் விழ ருக்கையா கூறினாள். "சக்ரவர்த்தியிடம் சென்று நான் அவரைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்."

"சக்ரவர்த்தியிடமா, மாண்புமிக்கவரே?" அவளுடைய உத்தரவினால் அதிர்ச்சியடைந்து சிறிது தடுமாறியவாறு மெஹ்ருன்னிஸா வினவினாள்.

தீவிரமாக முகத்தை வைத்திருப்பது போல் பாவனை செய்துகொண்டு ருக்கையாவும் இளவரசர் குர்ரமும் அவளை உற்று நோக்கினர். அவர்கள் ஏதோ திட்டம் போட்டு செயல் படுகிறார்கள். ஏதோ சிக்கலில் மாட்டிவிடப் போகிறார்கள். அது என்னவாக இருக்கும்? அவளை அவமானப்படுத்த ஏதாவது திட்டமிட்டிருக்கிறார்களா? நிச்சயம் ருக்கையா அவளுக்கு அப்படிச் செய்யமாட்டாள். ஆனால் ருக்கையா அவள்மேல் அன்பு வைத்திருந்தாலும் அவ்வப்போது

அவளைச் சீண்டி வேடிக்கை பார்க்கக் கூடியவள்தான் என்று மெஹ்ருன்னிஸாவிற்குத் தெரியும். அவள் தயங்கியவாறு பெரிய இராணி அருகில் நின்றிருந்தாள். அவளது ஒரு மனம் — இது ஒரு நல்ல சந்தர்ப்பம், இதில் இழக்க என்ன இருக்கிறது, போய்தான் பார்— என்று கூறியது. அதே சமயம் ஏதோ ஒன்று அவளைத் தடுத்து நிறுத்தியது.

"ம்... நீ இன்னும் போகவில்லையா?" ருக்கையா சட்டென்று கேட்டாள்.

"உங்கள் விருப்பம், மாண்புமிக்கவரே!" மெஹ்ருன்னிஸா வணங்கிவிட்டு, முகத்திரையை இன்னும் இழுத்து மூடிக் கொண்டவாறு திரும்பி நடந்தாள்.

"உன் முகத்திரையை எடுத்துவிடு, மெஹ்ருன்னிஸா! நீ முகத்தை திரையிட்டுக் கொண்டு போனால், சக்ரவர்த்தி தன்னை அவமதிப்பதாக நினைத்துக் கொள்வார். மேலும், இங்கு எல்லோரும் பெண்கள் தானே இருக்கிறார்கள்."

"அப்படியே, மாண்புமிக்கவரே!" மெஹ்ருன்னிஸா மெதுவாக நடந்தாள். முகத்திரை இல்லாமல் அவள் போக வேண்டுமானால் சாதுவான, அடக்கமானவளாகப் போக மாட்டாள். இப்படி ஒரு சந்தர்ப்பம் நேரிடும் என்று தெரிந்திருந்தால், என்ன பேச வேண்டும் என்று முன்கூட்டியே மனதில் திட்டமிட்டிருப்பாள். அவர் அவளை நினைவில் வைத்திருப்பாரா? இத்தனை வருடங்களில் அவளைப் பற்றி எண்ணிப் பார்த்திருப்பாரா? இல்லை, அவர் மறந்து போயிருக்கக் கூடும். அவளைப் பற்றிய நினைவு இருந்திருந்தால் இத்தனை நாட்களில் அதற்கான ஏதாவது ஒரு சைகை, ஒரு அடையாளம் இருந்திருக்கும். மனதில் பலவித எண்ணங்கள் ஓட, மெஹ்ருன்னிஸா கடைவீதியில் நடந்தாள். அவள் பின்னால், இத்தனை நேரம் அமைதியாக நின்றிருந்த பெண்கள் கலீரென்று சிரிக்கத் தொடங்கினர்.

பின்னால் சிறிது தூரத்தில் ருக்கையா சந்தோஷத்துடன் கூறுவது மெஹ்ருன்னிஸாவிற்கு கேட்டது. "என்னுடைய பத்துத் தங்க காசுகளைக் கொடு, குர்ரம்."

"அதற்குள் இல்லை, அம்மா" குர்ரமின் குரல் தொடர்ந்து அவள் காதிற்கு எட்டியது. "சிறிது பொறுத்திருந்து பார்ப்போம்."

ஆ... இது ஒரு சீண்டிப்பார்க்கும் விளையாட்டுதான் என்று மெஹ்ருன்னிஸா புரிந்து கொண்டாள். அவள் மேல் பந்தயம் கட்டியிருக்கிறார்கள். எதற்காக? மெஹ்ருன்னிஸாவின் நடை தளர்ந்தது. பின் அவள் சுதாரித்துக் கொண்டாள். பத்து காசுகள் தான்? நிச்சியம் அவள் மதிப்பு அதற்கு மேல் இருக்கும். பெரிய இராணியிடம் பணம் கொட்டிக் கிடந்தாலும் மற்றவர்களுடன் பந்தயம் போடுவதில் அவளுக்கு அளவற்ற விருப்பம். பந்தயத்தில் அவள் வெற்றி பெற்று விட்டால் பந்தயப் பணத்தை வாங்காமல் விட மாட்டாள். அவள் காரியத்தை முடித்துக் கொண்டு வருவாள் என்று யார் அவள்மேல் பந்தயம் கட்டியிருக்கிறார்கள்?

"மாட்சிமை பொருந்தியவரே!" ஒரு கை சக்ரவர்த்தியை தொட்டது. "எனக்கு ஒரு கெம்புக் கல் மாலை வேண்டும்."

ஜஹாங்கீர் திரும்பி அந்தப் பெண்ணைப் பார்த்தார். அவள் கன்னத்தில் குழிவிழ அவரைப் பார்த்துப் புன்னகைத்தாள். தன்னுடைய மெல்லிய இடையும் அழுத்தமான மார்பகங்களும் தெரியுமாறு தன் கையை உயர்த்தி முன் நெற்றியில் விழுந்த மயிரை மெதுவாக தள்ளிவிட்டுக் கொண்டாள்.

"இப்பொழுதே உனக்கு கிடைக்கும்" அவள் இடுப்பைச் சுற்றிக் கையால் அணைத்து, அவளைத் தன் பக்கம் இழுத்தவாறு ஜஹாங்கீர் பதிலளித்தார். "அந்த மாலை எங்கு கிடைக்கும்?"

அவள் ஒரு நகைகடையைச் சுட்டிக் காட்டினாள். "அங்கே, மாட்சிமை பொருந்தியவரே!"

மற்றப் பெண்கள் நகர்ந்து அவர்களுக்கு இடம் விட்டனர். கடையை நோக்கி நடக்கையில், சக்ரவர்த்தி அவள் மென்மையான முதுகை வருடிக் கொடுக்க அவள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கண்கள் பளபளக்கச் சிரித்தாள்.

ஜஹாங்கீர் திருப்தியுடன் பெருமூச்சு விட்டார். இது வரையில் மிகவும் சந்தோஷமாகப் பொழுதைக் கழித்தாகி விட்டது. அன்று காலையில் அரச சபை உறுப்பினர்கள் மற்றும் பிரபுக்கள் அவருக்கு பரிசுப் பொருட்களை வழங்கினார்கள். எல்லோரும் ஒரு பெரிய நிழல் குடையின் கீழ் வரிசையாக வந்து அவருக்கு மரியாதை செலுத்தினார்கள். மதியம் உணவு அருந்திச் சிறிது ஓய்வு எடுத்த பின் அந்த பெரிய முற்றத்தில் நடக்கும் மீனா பஜாரைப் பார்க்க வந்திருக்கிறார்.

இதுதான், புது வருட கொண்டாட்டங்களின் முக்கிய கட்டமாகும். தன் கணக்கில்லா மனைவிகளையும் வைப்பாட்டிகளையும் இந்தக் கடைகளுக்கு அழைத்து வந்து, கடைக்காரப் பெண்களுடன் பேரம் பேசி, அவர்களுக்குப் பொருட்களை வாங்கிக் கொடுத்து, அதே சமயம் எல்லாப் பெண்களுடன் வெளிப்படையாகவே கொஞ்சி மகிழ்ந்து கொண்டிருந்தார். அலுப்பு ஏற்படுத்தும் நீண்ட அரசாங்க வேலைகளுக்கிடையே இது ஒரு வரவேற்கத்தக்க சந்தோஷமான நிகழ்ச்சி! அவரைச் சந்தோஷப்படுத்த அங்கு எண்ணிலடங்கா அழகிய பெண்கள்.

அரச சபைப் பிரபுக்களின் மனைவிகள் தங்கள் பெண்களை இந்த விழாவிற்கு அழைத்து வருவார்கள். ஒருவேளை சக்ரவர்த்தியின் பார்வையில் அந்தப் பெண்கள் பட்டு, வைப்பாட்டியாகவாவது அவர்கள் அந்தப்புரத்திற்குச் செல்லக் கூடும் எனில், அதுவே பெரிய கௌரவம். மேலும் பிரபுவின் மனைவியே சக்ரவர்த்தியின் கவனத்தைக் கவர முடிந்து, வைப்பாட்டியாக ஆக முடிந்தால் அவளுக்கும் அவள் குடும்பத்தினருக்கும் நிறைய வசதியும், பணமும், பரிசும் கிடைக்கும். ஆகையால், எல்லாப் பெண்களும் மிக அழகாக அலங்கரித்துக் கொண்டு வருவார்கள். ஆடம்பரமான உடை உடுத்து, நகைகள் அணிந்த பெண்களாலும், அவர்களது சந்தோஷமான சிரிப்பாலும், அவர்கள் கால் கொலுசுகளின் சப்தத்திலும், அவர்கள் தடவி இருந்த வாசனைப் பொருட்களின் மணத்திலும் அந்தக் கடைவீதிகள் நிரம்பி வழிந்தன.

அவர்கள் அந்த நகைக் கடையை அடைந்தனர். கடைக்காரப் பெண்மணி தன்னிடமிருந்த பலவித அணிகளைச் சக்ரவர்த்தியின் பார்வைக்கு எடுத்து வைத்தாள். அவருடன் வந்த பெண் மிகுந்த ஆவலுடன், மிகுந்த கவனத்துடன் ஒரு மாலையைத் தேர்ந்தெடுப்பதை ஜஹாங்கீர் வேடிக்கையுடன் பார்த்தார். அவரைச் சார்ந்த பெண்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதைப் பார்ப்பதில் அவருக்கும் விருப்பம். அவருடன் இருக்கும் அந்தப் பெண் முகத்தில் தெரியும் மகிழ்ச்சியே, அன்றிரவு எல்லாவிதத்திலும் அவள் அவரை சந்தோஷப் படுத்துவாள் என்று அவருக்குக் கூறியது. அந்த எண்ணமே அவருக்குக் கிளர்ச்சியை ஊட்டியது.

அவர் திரும்பி ஹோஷியார் கான் பக்கம் பார்க்க, அவன் முன்வந்து அந்தக் கடைக்காரிக்குப் பணம் கொடுத்தான்.

"மிகவும் நன்றி, மாட்சிமை பொருந்தியவரே." சந்தோஷத்துடன் அந்த மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டு அந்தப் பெண் கூறினாள். அவள் கண்கள் மரியாதை கலந்த அன்புடன் பளபளத்தன. ஜஹாங்கீர் அவளைப் பார்த்து புன்னகைத்தார். "மற்ற இடங்களுக்குப் போகலாம், வா" அவள் தோளை அணைத்தவாறு அவள் முகத்தைப் பார்த்து ரசித்தபடி அவர் நடந்தார். அந்தப்புரத்திலேயே மிகவும் அழகான பெண் நிச்சயம் இவள்தான். ஆ! சக்ரவர்த்தியாக இருப்பதும் மிகவும் நன்றாகத்தான் இருக்கிறது.

திடீரென்று அவர் திகைத்துப் போய் நின்றார். சூரியன் ஒரு மேகத்தின் பின் மறைய, அந்தப் பிற்பகலின் மங்கிய ஒளியில், அவளது வெள்ளை முகத்திரை பனிமூட்டம் போல் பறந்து வர, அவரை நோக்கி வந்து கொண்டிருக்கும் பெண், காற்றில் மிதந்து வருபவள் போல் தோன்றினாள்.

சுற்றிலுமிருந்த பெண்கள் சட்டென்று அமைதியாகி மெஹ்ருன்னிஸா அருகில் வருகையில் சக்ரவர்த்தியை உன்னிப்பாகக் கவனித்தனர். தன்னருகில் இருக்கும் இளம் பெண்ணை மறந்தவராக ஜஹாங்கீர் அசையாமல் அவளுக்காகக் காத்திருந்தார்.

அவர் அருகில் வந்ததும், நளினமாக 'கோனிஷ்' முறைப்படி மெஹ்ருன்னிஸா அவரை வணங்கினாள். "இன்ஸாப் அல்லா, மாட்சிமை பொருந்தியவரே! பெரிய சக்ரவர்த்தினி ருக்கையா சுல்தான் பேகம் தங்களை சந்திக்க விரும்புகிறார்."

'மெஹ்ருன்னிஸா'! அவளைக் கண்டவுடன் அவர் பேச்சிழந்து போனார். நான்கு நீண்ட வருடங்கள். ஒவ்வொரு நாளும் அவர் அவளைப் பற்றி நினைத்தார். ஒவ்வொரு நாளும் அவள் அவர் கனவில் வந்தாள். அவள் அந்தப் புரத்தில் தங்கியிருப்பதை அவர் அறிவார். ஆனால், அவளைத் தேடிப் போகவில்லை. இடையில் பல விஷயங்கள் நடந்திருக்கின்றன. மஹபத் கான் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுரை கூறியிருக்கிறான். ஒரு பெண்மணி அவரை இவ்வளவு தூரம் வசீகரப்படுத்துவதை அவர் அனுமதித்தால் வருங்கால மன்னர்கள் அவரைப் பற்றி என்ன கூறுவார்கள்? அவரது ஆலோசகர்கள் கூறுவது சரிதான் என்று அவர் உணர்ந்திருந்ததால், அவர்கள் அறிவுரைப்படி நடந்து கொண்டார். அதே சமயத்தில் மற்ற பல முக்கிய நிகழ்ச்சிகளும் அவர் கவனத்தைக் கவர்ந்தன — படையெடுப்புகள், அரச சபை நிகழ்ச்சிகள், இராஜ ரீதியாக அவர் செய்து கொண்ட திருமணங்கள் என. ஆனால், அவர் அருகே, எதிரில், அவளைக் கண்டவுடன் எல்லாவிதக் காரணங்களும் பறந்து போயின. அவர் தொண்டையை கனைத்துக் கொண்டார்.

"எனக்கு வழிகாட்டி அழைத்துச் செல், மெஹ்ருன்னிஸா. என் தாயாரின் விருப்பத்தை உடனே பூர்த்தி செய்கிறேன்" அவள் முன்னே நடக்க வழி விட்டவாறு அவர் கூறினார். அவளது மெலிந்த இடை, நிமிர்ந்த முதுகு, அவள் நடக்கையில் அழகாக அசையும் அவள் இடுப்பு முதலியவற்றை ரசித்தவாறு அவர் மெதுவாக அவளைத் தொடர்ந்தார். அவளது வழவழப்பான இடையைத் தடவி, அவள் அழகிய முதுகில் கையைப் பதிக்க வேண்டும் என தவிர்க்க முடியாத ஆவல் அவருள்ளே திடீரென்று எழுந்தது. வயது மெஹ்ருன்னிஸாவின் அழகைச் சிறிதும் குறைக்கவில்லை. கடந்த நான்கு வருடங்களில் கிடைத்த ஓய்வு அவள் அழகிற்கு மேலும் மெருகூட்டியிருந்தது. அவளைப் பார்த்தும், தொட்டு அநுபவிக்க முடியாத சூழ்நிலையில் மனம் படபடத்தவாறு அவர் அவளைத் தொடர்ந்தார்.

அந்தக் கடைத் தெருவே அமைதியாயிற்று. பெண்கள் இரகசியமாக ஒருவருக்கொருவர் சீண்டிக் கொண்டனர். சிலர் பொருட்களைப் பேரம் பேசுவதை நிறுத்தி விட்டு வெளிப்படையான ஆவலுடன் மெஹ்ருன்னிஸாவை வெறித்துப் பார்த்தனர். அவள் பெயரைச் சொல்லி அவர்கள் முணுமுணுப்பது மெஹ்ருன்னிஸாவிற்கு கேட்க முடிந்தது. எல்லோருக்குமே அவளைத் தெரியும். அவள் தயாரித்த உடைகள், ஆபரணங்களை அங்கிருக்கும் பல பெண்கள் அணிந்து கொண்டிருக்கின்றனர்.

ருக்கையா அருகே சென்றவுடன், மெஹ்ருன்னிஸா சிறிது தள்ளி நின்றாள்.

ஜஹாங்கீர் தன் தாயார் அருகே வந்து வணங்கினார். "மாண்புமிக்கவரே! இப்படிப்பட்ட அழகிய ஆபரணம் தங்களிடம் இருக்கிறது என்று நீங்கள் எனக்கு சொல்லவே இல்லையே."

"நீ இப்பொழுது தெரிந்து கொண்டு விட்டாய், மகனே" விஷமத்துடன் ஜஹாங்கீரைப் பார்த்து ருக்கையா கூறினாள். "அவள் எனக்கு மிகவும் விலை மதிப்பானவள், ஞாபகம் இருக்கட்டும்."

ஜஹாங்கீர் மெஹ்ருன்னிஸாவை நீண்ட நேரம் உற்றுப் பார்த்தவாறு இருக்கச் சுற்றிலும் பெண்கள் அமைதியாக நின்று கொண்டிருந்தனர். "எனக்கும் கூடத்தான்." அவர் நினைத்துக்கொண்டார். அவளது கவர்ச்சிதான் என்ன? அவளது முகத்தில் தோன்றும் புன்னகை, அவள் கண்களின் சிரிப்பு — அவர்களது முந்தைய சந்திப்புகளில் நிகழ்ந்த எல்லாச் சிறுசிறு விவரமும் அவருக்கு எப்படி நினைவில் இருக்கிறது? மெஹ்ருன்னிஸா ஒரு நீண்ட மூச்சுவிட அவள் கன்னம் சிவப்பதைக் கண்டு அவர் இதயம் படபடத்தது.

அவர் மனதில் முதலில் தோன்றிய எண்ணமே அவள் மறுபடியும் திருமணம் செய்து கொண்டிருக்காமல் இருக்க வேண்டுமே என்பதுதான். இனி அவளை இழக்க முடியாது. இப்பொழுது நிச்சயமாக முடியாது. அவள் அவருக்குத்தான் சொந்தம்.

கடைவீதியிலுள்ள எல்லாக் கண்களும் அவர்களைத் தான் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்த சக்ரவர்த்தி வார்த்தைகளை கவனத்துடன் தேர்ந்தெடுத்து ருக்கையாவிடம் பேசினார். "மாண்புக்குரிய பேரரசி அநுமதித்தால் கடைவீதிகளைச் சுற்றிப் பார்க்க இவளை அழைத்துச் செல்ல விரும்புகிறேன்."

ருக்கையாவின் முகத்தில் பெரியதாகப் புன்னகை தோன்றியது. "அவளை நன்கு கவனித்துக் கொள், மகனே! மிக நன்றாக கவனித்துக் கொள்!"

ஜஹாங்கீர் மெஹ்ருன்னிஸா பக்கம் திரும்பினார். தலையை உயர்த்தி அவரைப் பார்க்காமலே, அவள் மெல்லத் தலையை அசைத்தாள். கையை நீட்டி அவளை பற்றிக் கொள்ள மிகுந்த ஆவலாக இருந்தாலும் ஜஹாங்கீர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார். மாறாக, மெஹ்ருன்னிஸாவைப் பார்த்தவாறே ருக்கையாவிடம் கூறினார். "மாண்பு மிக்க அரசியின் கட்டளைக்கு நான் எப்பொழுதும் உடன்பட்டு நடப்பேன்."

சக்ரவர்த்தி பேசி முடிக்கையில் சலசல வென்று அங்கு சப்தம் எழத் தொடங்கியது. வெகு சீக்கிரத்திலேயே அந்த சப்தம் அதிகரித்து, அந்தக் கடை வீதி முழுவதும் இந்த விஷயம் பரவியது. சிறிது இடைவெளிவிட்டுச் சக்ரவர்த்தியும் மெஹ்ருன்னிஸாவும் நடக்கத் தொடங்கினர்.

அவர்கள் சென்றவுடன் தன் பாட்டியின் விரித்த கையில் குர்ரம் பத்து தங்க காசுகளை வைத்தான்.

வெளிர் நீலக் கற்களும் முத்தும் பதித்த ஒரு மாலையை ஜகத்கோஸினி பார்வையிட்டுக் கொண்டிருக்கும்

பொழுது, அவள் அடிமைப் பெண் குனிந்து அவள் காதில் ஏதோ முணுமுணுத்தாள். ஜகத்கோஸினி நிமிர்ந்து அந்தப் பெண் சுட்டிக் காட்டும் திசையில் பார்த்தாள். ஜஹாங்கீரும் மெஹ்ருன்னிஸாவும் ஒரு துணிக்கடையின் முன் நின்று கொண்டிருந்தனர். கடைகாரப் பெண்மணி, பலவித நிறங்களில் பட்டு மற்றும் ஸாடின் துணிகளை எடுத்துக் காண்பித்துக் கொண்டிருந்தாள்.

முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல், சக்ரவர்த்தினி அசையாமல் நின்றாள். மெஹ்ருன்னிஸாவின் தோள்களைச் சுற்றிச் சக்ரவர்த்தி கையைப் போடுவதையும், உடனே மெஹ்ருன்னிஸா ஏதோ கூறுவதையும் பார்த்தாள். சக்ரவர்த்தி உடனே கையை எடுத்துவிட்டு மெஹ்ருன்னிஸாவைப் பார்த்துச் சிரித்தார்.

ஜகத்கோஸினி தன் கடைப்பக்கம் திரும்பினாள்.

கடைக்காரப் பெண் அவளைப் பார்த்து வினவினாள். "மாண்புமிக்க சக்ரவர்த்தினிக்கு இந்த மாலையை வாங்க விருப்பமா?"

"இல்லை" தன் நினைவில்லாமல் அவள் பதிலளித்தாள்.

அவள் அமைதியாக அங்கே நின்றபடி தீவிரமாக யோசித்தாள். மறுபடியும் மெஹ்ருன்னிஸாவா? அந்தப் பெண் என்னை அமைதியாக இருக்க விட மாட்டாளா?

"ஹோஷியார் கானைக் கூப்பிடு" அவள் அடிமைப் பெண்ணிடம் கூறினாள்.

சில நிமிடங்களில் அந்த உயரமான அலி அவள் முன் வணங்கி நின்றான்.

"இது எப்படி நடந்தது, ஹோஷியார்?" சக்ரவர்த்தினி கடுமையான குரலில் கேட்டாள்.

ஹோஷியார் கான் தோளைக் குலுக்கினான், "மாண்பு மிக்க ருக்கையா சுல்தான் பேகம் மெஹ்ருன்னிஸாவைச் சக்ரவர்த்தியிடம் அனுப்பினார்."

"ஏன்?"

"அப்பொழுதுதான் அவர் அவளைக் கவனிப்பார், மாண்புமிக்கவரே! வேறு எந்தக் காரணமும் எனக்குத் தோன்றவில்லை. சக்ரவர்த்தியின் கவனத்தைக் கவர வேண்டும் என்றே திட்டமிட்டு செய்த செயல்."

"ஏதாவது காரணம் கூறிச் சக்ரவர்த்தியை வேறிடத்திற்குப் போகும்படி செய்; இன்றிரவிற்குள் மெஹ்ருன்னிஸா அந்தப் புரத்தை விட்டு வெளியேற வேண்டும். சக்ரவர்த்தி அவளை மறுபடியும் பார்க்கக் கூடாது."

ஹோஷியார் மறுபடியும் தோள்களைக் குலுக்கினான். "என்னால் ஒன்றும் செய்ய முடியாது. அவரது கவனத்தைத் திருப்பச் சக்ரவர்த்தி அனுமதிக்க மாட்டார்." ஜகத்கோஸினியின் புருவங்கள் ஆத்திரத்தில் நெறிவதைப் பார்த்து அவன் தொடர்ந்தான். "நான் ஏற்கெனவே முயற்சி செய்துவிட்டேன், மாண்புமிக்கவரே! மேலும் பெரிய இராணி ருக்கையா சுல்தான் பேகத்தின் தேவைகளைக் கவனித்துக் கொள்ளும் பெண்களில் மெஹ்ருன்னிஸாவும் ஒருத்தி என்று உங்களுக்கே தெரியும். பெரிய இராணி... யாரும் தனக்கு கட்டளை இடுவதை அனுமதிக்கமாட்டார்."

ஜகத்கோஸினி தலையை அசைத்து விட்டு யோசனையுடன் திரும்பினாள். அவர்களைப் போலவே அவளும் திட்டமிட்டு செயல்படுவாள். ஹோஷியார் இனி அவளுக்கு உதவ முடியாது. மஹபத் கானாலும் முடியாது. கடந்த சில வருடங்களில் அந்தப்புரத்தில் ஜகத்கோஸினியின் ஆதிக்கம் எவ்வளவு அதிகரித்ததோ அதேபோல் அரச சபையில் மஹபத்கானின் சக்தியும் அதிகரித்துள்ளது. தன் விருப்பத்திற்கு முற்றிலும் மாறாக இல்லாதவரையில், மஹபத்கானையும் முகமத் ஷரீபையும் அரச சபைத் தீர்மானங்கள் செய்வதற்கு அனுமதித்து விட்டுத், தான் சந்தோஷமாக இருக்கத் தொடங்கி இருந்தார் ஜஹாங்கீர். பொறுப்பு அதிகரித்த காரணத்தால், மஹபத் கான் சக்ரவர்த்தியைச் சந்திப்பது குறைந்தது. நாளடைவில் அவர்களுக்கு இடையே இருந்த நட்பு முற்றிலும் குறைந்துவிட்டது. மேலும் இப்பொழுது நடப்பது அந்தப் புரத்து விஷயம். மஹபத் கான் ஒன்றும் செய்ய இயலாது.

அவனுடைய சக்தி அந்தப்புரத்திற்கு வெளியே, அரச சபை சேர்ந்த விஷயங்களில்தான்.

ஆகையால், அவள்தான் இந்த விஷயத்தைச் சரியானபடி கையாள வேண்டும் என்று ஜகத்கோஸின் நினைத்துக் கொண்டாள். எந்த இடத்திலாவது, எப்பொழுதாவது ஜஹாங்கீரும் மெஹ்ருன்னிஸாவும் சந்திப்பது தவிர்க்க முடியாதது என்று அவளுக்குத் தெரியும். ஆனால், கடந்த சில வருடங்கள் அவர்கள் சந்திக்காமலே உருண்டோடியது அவளுக்கு நல்லது தான். மெஹ்ருன்னிஸாவின் வயதும் கூடி விட்டது. அவளது வசீகர சக்தியும் குறைந்திருக்கும். வெற்றிப் பெருமிதத்துடன் ஜகத்கோஸினி அவர்களைப் பார்க்கத் திரும்பினாள். சட்டென்று அவள் புன்னகை மறையத் தொடங்கியது.

மெஹ்ருன்னிஸா ஜஹாங்கீரை நிமிர்ந்து பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டிருந்தாள். சூரியனின் மங்கிய ஒளியில், சுற்றிலுமிருக்கும் ஆடம்பரமான உடையணிந்த பெண்கள் மத்தியில் அவள் ஒரு முத்துப் போல் பிரகாசித்தாள். அவளுக்கு வயது கூடிய மாதிரியே தோன்றவில்லை. பார்க்கப் போனால், இப்பொழுது அவள் மேலும் அனுபவம் பெற்றவளாகவும், ஒரு தன்னம்பிக்கையுடன் இருப்பவளாகவும் தோன்றினாள். இந்தப் புதிய வசீகரத்தன்மையைச் சக்ரவர்த்தி உணராமல் இல்லை. கண்களில் கட்டுக்கடங்காத ஆசை தெரிய அவர் அவள் பக்கம் குனிந்து கொண்டிருந்தார். ஜகத்கோஸினியின் அடி மனதில் ஒரு ஆழ்ந்த வலி எழுந்தது. பல வருடங்களுக்கு முன்னால் ஜஹாங்கீர் அவளை அப்படிப் பார்த்ததுண்டு. ஒரு சமயம், குளியல் தொட்டியிருந்து தன் பளபளக்கும் உடலிலிருந்து தண்ணீர் துளிகள் தெறித்து விழக் கணவன் தன் கைப்பிடியில் என்ற மமதையுடன், அவள் அப்படியே எழுந்து வர ஜஹாங்கீர் அவளைக் கண்டு மயங்கி இருக்கிறார். ஆனால், அது பல வருடங்களுக்குமுன். சக்ரவர்த்தினியாக அவள் கடமைகளைச் செய்ய ஆரம்பித்த பின் அவள் வயது கூடியவளாகத் தோன்ற ஆரம்பித்து விட்டாள்.

மெஹ்ருன்னிஸாவின் பார்வை அப்பொழுது ஜகத் கோஸினி மீது விழ, அந்த இரண்டு எதிரிகளும் சில நிமிடங்களுக்கு ஒருவரை ஒருவர் வெறித்துப் பார்த்தனர். மெஹ்ருன்னிஸா தன் அழகிய வளைந்த புருவத்தை உயர்த்தி சக்ரவர்த்தினியைப் பார்த்து விட்டு சக்ரவர்த்தி பக்கம் திரும்பினாள்.

அதீத வெறுப்புடன் ஜகத்கோஸினி உறைந்து போய் நின்றாள். அவளுக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் அந்தப் பெண்ணை அந்தப்புரத்திற்குள் நிச்சயம் வரவிட்டிருக்க மாட்டாள். சக்ரவர்த்தினியின் மனதில் தொடர்ந்து ஒரு சந்தேகம் இருந்து கொண்டிருந்தது. மெஹ்ருன்னிஸாவிடம் அப்படி என்ன இருக்கிறது? அழகு? வசீகரம்? ஆனால், அந்தப்புரத்தில் இவளைவிட அழகானவர்கள், வசிகரமானவர்கள் நூறு பேருக்கு மேல் இருக்கிறார்கள். ஜஹாங்கிரின் மற்ற மனைவிகளைப் பற்றி அவள் கவலைப்பட்டதில்லை. அவர்கள் எல்லோருமே அப்பொழுதுதான் பள்ளிப் படிப்பு முடித்து விட்டு வந்த இளம்பெண்கள். அறிவு முதிர்ச்சி இல்லாதவர்கள். அவர்களது ஒரே விருப்பம் தங்களை அழகு படுத்திக் கொள்வதும், கண்ணாடி முன் நின்று அழகு பார்ப்பதும் தான்.

ஜகத்கோஸினி அந்தப்புரத்திற்குள் வந்த நிமிடத்திலிருந்து அதன் பொறுப்பைத் தன் வசம் எடுத்துக் கொண்டாள். தினமும் பல மணிநேரம் முல்லாக்களுடனும் ஆசிரியர்களுடனும் அமர்ந்து துருக்கி, பாரசீகம் ஆகிய மொழிகள் மற்றும் சரித்திரம், தத்துவஇயல், கவிதை முதலியன கற்றுக் கொண்டாள். இளம் வயதிலேயே அவள் அழகு நிலையானதல்ல என்பதை அறிவாள். சக்ரவர்த்திக்குத் தோழியாக, அவருடன் பகுத்தறிவுடன் பேசக் கூடியவளாக, உடலினால் மாத்திரம் அல்லாது அறிவு பூர்வமாகவும் அவரைக் கவரக் கூடியவளான ஒரு பெண்ணையே சக்ரவர்த்தி விரும்புவார் என அவள் அறிவாள். அப்படிப்பட்ட ஒரு பெண்ணாக ஆகி அவரை வசீகரிப்பதற்கு அவள் மிகுந்த முயற்சி எடுத்திருக்கிறாள். அவள் தான் அந்தப்புரத்தில் முதன்மையானவள், முக்கியமானவள். அவளுக்கு மேல் எவரும் இல்லை.

ஜகத்கோஸினி தலையை ஆட்டித் தன் நினைவுகளைக் கலைத்தாள். அவள் என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாள்? அரியணைக்கு அடுத்த வாரிசாகக் கூடிய ஒரு நல்ல மகனை அவள் சக்ரவர்த்திக்குக் கொடுத்திருக்கிறாள். இருபத்து ஐந்து வருடங்கள் ஜஹாங்கிருடன் வாழ்ந்திருக்கிறாள். அவள் பதவியிலிருந்து யாரால் அவளை நீக்கிவிட முடியும்? மெஹ்ருன்னிஸா அந்தப்புரத்திற்கு வந்தாலும் அரியணைக்கு வாரிசாகக் கூடிய ஒரு மகனைப் பெற்று கொடுப்பதால் நான் தன் தகுதியை நிலைநாட்ட முடியும். துரதிஷ்டவசமாக அது நடப்பது சாத்தியமே! அவள் இன்னும் குழந்தை பெறக் கூடிய வயதுடையவள்தான். அப்படியிருந்தாலும் தன் மற்ற மனைவிகளைச் சக்ரவர்த்தி சில காலத்திற்குப் பின் மறந்து விட்டதுபோல், இவளையும் மறந்து விடுவார். நல்ல தோழமை வேண்டி அவர் மறுபடியும் ஜகத்கோஸினியிடம் தான் வருவார். ஜகத்கோஸினி தன் பணியாட்கள் பக்கம் மறுபடியும் திரும்புகையில், அவள் முகம் எப்பொழுதும் போல் உறுதி படைத்த அமைதியான முகம் போல் தோன்றியது. அவளை உன்னிப்பாகப் பார்ப்பவர்களுக்கே அவளது கண்களில் தெரியும் குரோதத்தை உணரமுடியும்.

அத்தியாயம் பத்தொன்பது

அவர் (ஜஹாங்கீர்) அவளை (நூர்மஹால்) தன் அந்தப்புரத்திற்கு அள்ளி எடுத்துச் சென்று விடுவார்... அங்கு அவளை அவரது மற்ற வைப்பாட்டிகளைப் போல் வைத்திருப்பார். ஆனால்... பேராசையுடன் உறுதியும் படைத்த அந்தப் பெண் மறுத்து விட்டாள்... காதலின் தீவிரம் சக்ரவர்த்தியின் இதயத்தைக் கொடூரமாகத் தாக்கியது. அதனுடன்கூடச் சிலர் சொல்வது போல், சிறிது மந்திர சக்தியும் சேர்ந்து...

- EDWARD GREY, ed.,
The Travels of Pietro Della Valle in India

தாழ்ந்த, விடியற்காலைப் பனி ஆக்ராவைப் பிடிவாதத்துடன் பற்றிக் கொண்டிருந்தது. கருங்கற்கள் பதித்த வீதிகளில், கோட்டையின் மதிற்சுவர்களில், பூங்காக்களில் அது வெண்மையாக, ஈரமாக தவழ்ந்து, படர்ந்து, சிவப்பு கற்களாலான மாளிகைகளில் பரவியது. வெகு சிலரே இந்த அதிகாலை வேளையில் விழித்திருந்தனர். தெரு விளக்கு ஏற்றுபவர்கள் அவற்றை அணைத்து விட்டுச் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். புதிய, நுரை பொங்கும் மெது சூடான பாலைக் கறந்து, பித்தளைக் குவளைகளில் நிரப்புவதற்காக பால்காரர்கள் பசுக்களை வீட்டு வாயில்களுக்கு ஓட்டிச் சென்று கொண்டிருந்தனர். துப்புரவாளர்கள் தண்ணீரால் தெருக்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். அன்றைய விற்பனைக்காகக் கறிகாய்களையும் பழங்களையும் வண்டியில் நிரம்பி வழியுமாறு ஏற்றிக் கொண்டு, கடைக்காரர்கள் கறிகாய்ச் சாவடியிலிருந்து வந்து கொண்டிருந்தனர்.

ஒரு அகலமான மரங்களடர்ந்த பெரிய சாலையின் ஒரு புறத்தில் இருந்த கியாஸ் பெக்கின் வீடும் பனிமூட்டத்தால் சூழ்ந்து காணப்பட்டது. அதில் வசிப்பவர்கள் எல்லாம்

இன்னும் உறங்கிக் கொண்டிருந்ததால் அங்கு அமைதி நிலவியது. குதிரை லாயங்களில் புதிய வைக்கோலைக் கடித்து அசை போட்டவாறு குதிரைகள் நின்று கொண்டிருந்தன. அதற்குப் பின் இருந்த பெரிய முற்றத்தில் கோழிகள் தானியங்களைத் தேடி மண்ணைக் கொத்திக் கொண்டிருந்தன. சமையல்காரனும் அவனுக்கு உதவுபவர்களும் மட்டுமே எழுந்துவிட்டிருந்தனர். பெரிய கரி அடுப்பு பற்ற வைக்கப்பட்டு அதன் வெள்ளைப் புகை முற்றத்தில் பரவியிருந்தது.

மாடியில் ஒரு அறையில், போர்வையை இடுப்பு வரை போர்த்தியவாறு உள்ளங்கையில் தலையை சாய்த்து படுத்து, அவளது கூந்தல் சுற்றிலும் கருமேகம் போல் படர்ந்திருக்க, மெஹ்ருன்னிஸா உறங்கிக் கொண்டிருந்தாள். தன் கடமையைச் சட்டென்று உணர்ந்ததுபோல் எங்கோ ஒரு சேவல் கூவியது. மெஹ்ருன்னிஸாவின் கண்கள் மெதுவாகத் திறக்க அவள் எதிரே இருந்த சுவரை வெறித்துப் பார்த்தாள். அவள் எங்கிருக்கிறாள்? சுவரிலிருந்த சித்திரங்கள் புதியதாகத் தோன்றின. அரசரின் அந்தப்புரத்தில் அவள் இருந்த அறையைவிட இந்த அறை மிகப் பெரியதாகத் தோன்றியது. பிறகுதான் தான் தன் தந்தை வீட்டில் இருப்பதை அவள் உணர்ந்தாள். ருக்கையாவையும், அந்தப்புரத்தில் அவளுக்கிருந்த கடமைகளையும் விட்டுவிட்டு மெஹ்ருன்னிஸா நேற்றிரவு இங்கு வந்திருந்தாள்.

கதவிடுக்குகளின் வழியாகப் பனி அந்த அறைக்குள் நுழைய முயற்சிக்க, அதனால் ஏற்பட்ட சில்லிப்பினால் மெஹ்ருன்னிஸா நடுங்கினாள். கழுத்து வரை போர்வையை இழுத்து, அதன் ஆறுதலளிக்கும் வெதுவெதுப்பில் முடங்கிக் கொண்டாள். கரி அடுப்பில் அணையும் தறுவாயில் இருக்கும் நெருப்புத் துண்டங்களை எழுந்து கிளறிவிடச் சோம்பல் பட்டுக் கொண்டு, அதிகாலைச் சூரியனின் மெலிந்த ஒளிக் கிற்றுகள் ஜன்னல் வழியே அறைக்குள் பாய்வதைத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் அந்த இடத்தை விட்டுப் போகப் போவதாகச் சொன்னவுடன், பெரிய சக்ரவர்த்தினி அதை விரும்பவில்லை. "எத்தனை நாட்களுக்கு?" ருக்கையா கடுமையாகக்கேட்டாள்.

"எனக்குத் தெரியாது, மாண்பு மிக்கவரே! ஆனால், இங்கு இனி நான் தங்கியிருக்க முடியாது. இப்பொழுது நான் என் தந்தையுடன்தான் இருக்க வேண்டும். அவர் வீட்டில் தான் நான் வசிக்கவேண்டும்."

ருக்கையாவின் தீவிரமான பார்வையைத் தவிர்க்க, முகத்தைத் திருப்பியவாறு அவள் பதிலுரைத்தாள். பல்லக்கு வரவழைக்கப்பட்டது. தூங்கும் லாட்லியைக் கையில் எடுத்துக் கொண்டு, ருக்கையாவின் அரண்மனையின் பின்புற வாசல் வழியாக மெஹ்ருன்னிஸா வெளியே வந்தாள். அவள் தாயும் தந்தையும் உறங்கி விட்டிருந்தனர். ஆனால், அவள் வந்தவுடனே எழுந்து வந்தனர். அவர்கள் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. அழுததினால் சிவந்திருந்த அவள் கண்களைப் பற்றியும் ஏதும் பேசவில்லை. அவள் தாயார் ஒரு பணிப் பெண்ணை அழைத்து அவளுக்கு ஒரு அறை தயாரிக்கச் சொல்லிவிட்டுத் தூங்கும் லாட்லியைத் தன் படுக்கைக்கு எடுத்துச் சென்றாள்.

அவள் உறங்கத் தொடங்கும் முன் கியாஸ் பெக் அவள் அறைக்கு வந்தார். "நீ நம் வீட்டிற்கு வந்து விட்டதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி, மகளே" அவள் முன்னுச்சியில் முத்தமிட்டவாறு கூறினார்.

"நான் இங்கிருப்பது உங்களுக்குக் கஷ்டமில்லை என்று எண்ணுகிறேன்."

"குழந்தை விட்டிற்கு வந்தால் அது தந்தைக்குக் கஷ்டமாக இருக்குமா? இப்பொழுது தூங்கு. உன் தாயார் லாட்லியைப் பார்த்துக் கொள்வாள். நாம் பிறகு பேசலாம்."

சக்ரவர்த்தியை மீனா பஜாரில் சந்தித்த ஒரு வாரம் கழித்து, இப்படித்தான் மெஹ்ருன்னிஸா தன் பெற்றோர்களிடம் வந்து சேர்ந்தாள். வீட்டில் சிறிது சிறிதாகச் சத்தம் ஏற்படுவதை அவள் தன் படுக்கையில் படுத்திருந்தவாறு கேட்டாள். குதிரைப் பாகர்களும் எழுந்து விட்டனர். அவள் ஜன்னலின் கீழுள்ள குதிரை லாயங்களில் அவர்கள் குதிரைகளைத் தேய்த்து விடும் சப்தம் கேட்டது.

கடந்த வாரம், அவள் உலகத்தையே தலைகீழாகப் புரட்டிப் போட்டு விட்டது. மீனா பஜார் கொண்டாட்டங்கள் நடந்த அடுத்த நாள் ருக்கையாவின் அரண்மனைக்குப் பலவிதப் பரிசுப் பொருட்களுடன் பணியாட்கள் வந்தனர். தங்கத் தட்டுகளில் ஒளி வீசும் நகைகள், விதவிதமான பட்டு, ஸாடின் துணிகள், உயர்ந்த மது வகைகள், இவைகளுடன்கூட ஜஹாங்கீருடன் அன்று மாலை உணவருந்த ஒரு அழைப்புக் கடிதம். அவள் சாய்விருக்கையில் அமர்ந்து தன் எதிரே பரப்பி இருந்த பரிசுப் பொருட்களைத் திகைத்துப் போய்ப் பார்த்தாள். ஒரு பதிலுரையுடன் அந்தப் பரிசுப் பொருட்களை அவள் திருப்பி அனுப்பி விட்டாள். மாலை உணவு அருந்த வருவது சாத்தியமாகாது; பரிசுகள் மிக அதிகம்; மாட்சிமை பொருந்திய அரசர் புரிந்து கொள்வார் என்று அவள் நம்புகிறாள் என்று பதில் எழுதியிருந்தாள்.

ஒருநாள் கழித்து, ஜஹாங்கீரே அங்கு வந்தார். அவர்கள் இருவரும் அந்தப்புரத்துப் பூங்காவில் உலாவச் சென்றனர். அவர்கள் பேசுவதற்கே சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பூங்காவின் தோட்டக்காரர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். அந்தப்புரத்துப் பெண்களில் பலர் அப்பொழுது தான் பூங்காவில் நடக்கவோ அல்லது மரநிழலில் இளைப்பாறவோ வந்தனர். அலிகளும், பணிப்பெண்களும் வேலை செய்வது போல் பாசாங்கு செய்து கொண்டு அங்கும் இங்கும் சென்றனர். சக்ரவர்த்தி இவையெல்லாம் கவனித்தது போல் தோன்றவில்லை. ஆனால், அந்தச் சூழ்நிலை மெஹ்ருன்னிஸாவிற்குத் தயக்கத்தைக் கொடுத்தது. திடீரென்று, எல்லோர் கண்களுக்கும் ஒரு விருந்தாக, அவர்கள் இரகசியமாகப் பேச முயலும் ஒரு விஷயமாக, அவள் அருகே வருகையில் ஓரக் கண்ணால் பார்த்து ஒருவரோடொருவர் சைகை காட்டிப் பேசும் பொருளாக, மெஹ்ருன்னிஸா ஆகிவிட்டாள். ஆகையால் அவளும் ஜஹாங்கீரும் பூங்காவில் அமைதியாகவே நடந்தனர். முடிவில் அவள் சக்ரவர்த்தியிடம் கூறினாள். "மாட்சிமை பொருந்தியவரே! இன்னும் ஒரு வாரத்திற்கு நாம் சந்திக்காமல் இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது."

"நான் உன்னைச் சந்திக்க விரும்புகிறேன். நாளை மட்டும் அல்ல. எப்பொழுதுமே!"

மெஹ்ருன்னிஸா தலைவணங்கிப், பின்னர் நிமிர்ந்து அவரை நோக்கினாள். "எனக்குச் சிறிது அவகாசம் எடுத்துக் கொள்ள அநுமதியுங்கள், மாட்சிமை பொருந்தியவரே. அவ்வளவு தான்."

"சரி, ஆனால், நீ திரும்பிச் செல்லும் முன் ஒன்று சொல்ல விரும்புகிறேன்." ஜஹாங்கிர் அவள் கையை எடுத்துத் தன் வெதுவெதுப்பான கைகளில் பிடித்துகொண்டு கூறினார். "நான் உன்னை இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன் என்று அறிந்து கொள், மெஹ்ருன்னிஸா. நான்கு வருடங்களுக்கு முன் துரா-ஈ-சின்கேசியைச் செயல்படுத்தி உன்னை அலிகுலியிடமிருந்து விடுவிக்க முயன்றேன். அது தீர யோசிக்காமல் எடுத்த முடிவல்ல. அந்த முடிவை நான் மறக்கவில்லை, அலிகுலி இறந்த பிறகும் மறக்கவில்லை."

அவர் அவளைத் திரும்பிச் செல்ல அநுமதித்த பின் அவரை அங்கேயே விட்டுவிட்டு, அவள் வெகுவிரைவாக, ஓடுவதுபோல், அங்கிருந்து சென்றாள். நேற்றுடன் ஒரு வாரம் முடிந்துவிட்டது. நேற்றிரவு தன் தந்தை வீட்டிற்கு வந்து விட்டாள்.

அந்தப்புரத்தில் இருக்கையில் எதையும் தீரச் சிந்தித்துப் பார்க்க இயலவில்லை. இதற்கு முன் அவள் மற்றவர்கள் கவனத்தை கவர்ந்ததில்லை. பல பெண்களில் ஒருத்தி. கடந்த ஒருவார காலத்தில், அங்கிருக்கும் அலிகள், அடிமைப் பெண்கள், கணக்காளர்கள், சமையல்காரர்கள்கூட அவளைக் கண்டால், நின்று உற்றுப் பார்க்கிறார்கள். ருக்கையாவும் அவளை உன்னிப்பாகக் கண்காணிப்பதை விடவில்லை. ஒவ்வொரு முறையும் அவள் மெஹ்ருன்னிஸாவைப் பார்க்கையில் ஒரு அமுக்கமான வெற்றிப் புன்னகை அவள் முகத்தில் தோன்றுகிறது. அங்கிருக்கும் ஒவ்வொருவருக்கும் சில எதிர்பார்ப்புகள் — அவள் ஜஹாங்கிரை மணந்து கொள்வாள். அப்படி மணந்து கொண்டால், அவர்களுக்கு அதனால் என்ன ஆதாயம் கிடைக்கும் என்பதுபோல். ஆகையால், அவளைச் சுற்றியிருந்தோர் முன்பு இருந்ததைவிட இப்பொழுது அவளிடம் பணிவுடன் நல்ல விதமாக நடந்து கொள்கின்றனர். அதுவே ஒரு உண்மையற்ற நிலைமையாக

அவளுக்குத் தோன்றுகிறது. அவளுக்கு என்ன வேண்டும் என்று இப்பொழுது அவளுக்கே புரியவில்லை.

மெஹ்ருன்னிஸா படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு, போர்வையை எடுத்து முழங்கால்வரைப் போர்த்திக் கொண்டாள். அவளுக்கு என்ன வேண்டும்? ஜஹாங்கிர்? ஆமாம். அது பற்றிச் சந்தேகமே இல்லை. அவள் எட்டு வயதாக இருக்கும் பொழுதே இதை விரும்பினாள். இவ்வளவு வருடங்கள் அலிகுலியின் மனைவியாக இருந்த காலங்களிலும் அந்த எண்ணத்தில் சிறிதும் மாற்றமில்லை. இப்பொழுது அவள் அவரைச் சுலபமாக அடைய முடியும். ஒரு வார்த்தை கூறினால் போதும். கற்பனை செய்யக் கூட முடியாத அளவு வசதியான வாழ்க்கை — அவள் மிகவும் சிறிய அளவில் பார்த்த வசதிகள் — அவளுடையதாகும். பின் ஏன் அவள் தயங்குகிறாள்?

அவள் ஏதோ தந்திரத்தால் ஜஹாங்கீரின் மனதைக் கவர்ந்துவிட்டாள் என்ற பேச்சு ஏற்கெனவே அடிபடுகிறது. அவள் ஒரு சூனியக்காரி. சக்ரவர்த்தி மேல் வசியம் வைத்திருக்கிறாள் என்பது போல். இந்த வதந்திகள் அவளை மேலும் சங்கடப்படுத்தின. ஆனால், இவை எல்லாம் அவள் மேல் பொறாமை கொண்டவர்கள் பேசும் பேச்சுகள். ஜஹாங்கிர் வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலையில், சக்ரவர்த்தியாக இருந்த போதிலும், அவர் அவள் மேல் கொண்டுள்ள காதல், அவள் அவர் மேல் வைத்திருக்கும் காதலைப் போல் ஏன் வலிமை மிக்கதும், தீவிரமானதுமாக இருக்கக் கூடாது என்று அவள் எண்ணினாள்.

ஆனால், அவள் வாழ்க்கை ஒரு வித்தியாசமானதாக ஆகிவிடும். ஜஹாங்கீரை மற்றப் பெண்களுடன் பகிர்ந்து கொள்ளத் தெரிந்து கொள்ளவேண்டும். இவளுக்கு முன் வந்த மனைவிகளுடன் மரியாதையுடன் பழகவேண்டும். அந்தப்புரத்தில் அவள் தகுதியை வளர்த்து, அதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இந்த மூன்றில் முதல் காரணம்தான் அவளைத் தயங்க வைத்தது. ஜஹாங்கீரின் அன்பை மற்ற எவருடனும் பகிர்ந்து கொள்ள அவள் விரும்பவில்லை — அவர் நேரத்தை வேண்டுமானால்

பகிர்ந்து கொள்ளலாம் — ஆனால் அவர் எண்ணங்களை அல்ல. அவர் நினைவுகள் அவளைப் பற்றியே இருக்க வேண்டும். அவரது சிரிப்பு அவளுக்கு அளவில்லா மகிழ்ச்சியைக் கொடுத்தது, அவர் அருகாமையே அவள் இதயத்தை இளக வைத்தது. அவர் மீது அவளுக்கிருந்த அதித அன்பின் சக்தி முன்பைவிட இப்பொழுது அவளை இன்னும் பயமுறுத்தியது. ஏனெனில் இப்பொழுது அவர்கள் இணைவதற்குத் தடைகள் ஏதுமில்லை. அவள் எட்டு வயதில் அவரைத் தேர்ந்தெடுத்தாள், முப்பத்து நான்கு வயதாகும் பொழுதும் அவளுக்கு அவர்தான் வேண்டும், அவளது மீதி வாழ்க்கையிலும் அவர்தான் அவளுக்கு முக்கியமானவர். அவருக்குப் பின் இவள் உயிரோடிருந்தால், அவள் வாழ்க்கையில் எந்த ஆணுக்கும் இடமில்லை. இந்த விஷயத்தில் அவள் உறுதியாக இருந்தாள்.

தன் கூந்தலை விரல்களில் சுற்றி இழுத்தவாறு மெஹ்ருன்னிஸா யோசித்தாள். அவரை மற்றப் பெண்களுடன் பகிர்ந்து கொண்டால், வேறு யாரையாவது பார்த்து அவர் மயங்கி விட்டால், அவள் மேல் உள்ள அவரது காதல் குறைந்து விடுமோ என அஞ்சினாள். அப்படி எண்ணிப் பார்க்கவே அவளால் இயலவில்லை. அவளுடைய முழு சந்தோஷமும் அவருடன் இருப்பதில்தான் என்று அவள் அறிவாள். ஆகையால், இந்த வாய்ப்பைத் துணிந்து ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்.

ஜஹாங்கீரை அவள் திருமணம் செய்து கொள்வதினால், ருக்கையாவிற்கோ அல்லது அவள் தந்தைக்கோ அல்லது வேறு ஒருவருக்கோ நல்லது நடக்கும் என்பதற்காக அவள் இந்தத் திருமணம் செய்து கொள்ளமாட்டாள். அவள் தன் பணத் தேவைக்கு எந்த ஆணையும் எதிர்பார்க்காத நிலையில், அல்லது திருமணம் செய்து கொள்ள வேண்டிய எந்த நிர்பந்தமும் இல்லாத நிலையில், ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்ற எந்த கட்டாயமும் இல்லாத இந்த சூழலில், இத்தனைக் காலத்திற்குப் பின் அவள் திருமணம் செய்து கொள்ள நிச்சயித்தால், அது ஜஹாங்கீர் மேலுள்ள அளவில்லாக் காதலினால்தான்.

ஒரு ஆழ்ந்த புன்னகை அவள் முகத்தில் படர்ந்தது. ஒரு சக்ரவர்த்தியைத் திருமணம் செய்து கொள்வதற்கு இவ்வளவு தூரம் சிந்திக்கும் பெண், இந்த சாம்ராஜ்ஜியத்தில் இவள் ஒருவளாகத்தான் இருக்க முடியும்.

அவள் அறைக்கதவு திறந்தது. கையில் தேனீருடன் கியாஸ் உள்ளே நுழைந்தார்.

"நன்கு தூங்கினாயா, மகளே?"

"ஆமாம், அப்பா" மெஹ்ருன்னிஸா தன் கூந்தலை அள்ளி சுருட்டிக் கொண்டையிட்டுக் கொண்டாள். "அப்பா, நான் ஏன் இங்கு திரும்பி வந்திருக்கிறேன் என்று உங்களுக்குக் கூறவேண்டும். நான்—"

"எனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்" தேநீர்க் கோப்பையை நீட்டியவாறு அவர் மென்மையாகக் கூறினார். "நீ சக்ரவர்த்தியைப் புது வருடக் கேளிக்கை அன்று சந்தையில் சந்தித்தது பற்றி உன் தாயார் கூறினாள். அரச சபைப் பிரமுகர்கள் மூலம் சக்ரவர்த்தி உனக்கு பரிசுப் பொருட்கள் அனுப்பிய விவரமும் தெரியும். நீ ஏன் பரிசுப் பொருட்களைத் திருப்பி அனுப்பிவிட்டாய்?"

அது சரியில்லை என்பது போல் மெஹ்ருன்னிஸா தலையசைத்தாள். "அவைகளை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. சக்ரவர்த்திக்கும் எனக்கும் இடையே எந்தவிதமான தொடர்பும் இல்லை. அடுத்த நாள் அவர் என்னைப் பார்க்க வந்தார், அப்பா. ஆனால், சூழநிலை சரியாக இல்லை. அங்கு பலர் இருந்தனர். நான் என்ன செய்ய வேண்டும், தந்தையே?"

"அதை நீதான் தீர்மானிக்க வேண்டும். கொஞ்சம் பொறுத்துப்பார். என்ன செய்ய வேண்டும் என்று காலம் உனக்கு உணர்த்தும். நீ சரியான முடிவைத்தான் எடுப்பாய் என்று நான் நம்புகிறேன். நீ என்ன முடிவெடுத்தாலும் நன்கு சிந்தித்துச் செயல்படு, நிஸா. ஞாபகம் வைத்துக் கொள். சக்ரவர்த்திக்குக் கோபம் வருமாறு செய்வது சரியல்ல. இதற்கு மேல் நான் ஒன்றும் கூறமாட்டேன். இந்தா..." அவர் தன் மேல் அங்கியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்தார். "விடியற்காலையில் இந்தக் கடிதம் உனக்காக வந்தது."

மெஹ்ருன்னிஸா அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு திருப்பிப் பார்த்தாள். பாயும் புலியின் உருவத்துடன் அதைச் சுற்றிச் சூரிய ஒளி வீசுவது போன்ற சிவப்பான முத்திரை அதன் மேல் இருந்தது. சக்ரவர்த்தி ஜஹாங்கீரின் முத்திரை. அவள் தந்தை திரும்பிச் செல்வதைக் கவனித்தாள். பிறகு தேநீர்க் கோப்பையைக் கையில் ஏந்தியவாறு ஜன்னலருகே சென்று, ஒரு தங்க முலாமிட்ட உரைகளைக் கிழிக்கும்கத்தியை எடுத்து, அந்த அரசாங்க முத்திரையைப் பிரித்தாள்.

பிடிவாதத்துடன் படர்ந்திருக்கும் பனிமூட்டத்தைக் காலை இளம் சூரியன் கஷ்டப்பட்டு துளைத்துக் கொண்டு வெளியே வந்து, ஆக்ராவின் கம்பீரமான அரண்மனைகள் மீது தன் தங்கக் கதிர்களைப் பாய்ச்சினான். தூரத்தில் நகரிலுள்ள மசூதிகளிலிருந்து அன்றைய தினத்தின் முதல் தொழுகைக்கான அறிகுறியாக தொழுகை நேர அறிவிப்பாளர்களின் இனிமையான குரல் எழுந்தது.

ஜஹாங்கீர் தன் சாய்மான இருக்கையிலிருந்து எழுந்திருந்து ஒரு ஜமக்காளத்தைத் தரையில் விரித்தார். மேற்குத் திசையிலிருக்கும் மெக்காவை நோக்கி அந்த ஜமக்காளத்தில் முட்டியிட்டு அமர்ந்து, தன் இரு கைகளையும் உயர்த்தித், தொழுகை அறிவிப்பாளர்களின் பிரார்த்தனைக் குரலைத் தொடர்ந்து பிரார்த்தித்தார். அது முடிந்தவுடன், கைகளால் தன் கண்களையும் முகத்தையும் தொட்டு விட்டு, அமைதியான மனதுடன் தன் குதிகால்களில் அமர்ந்துகொண்டார்.

பிறகு, கடந்த ஒரு வாரமாக நடப்பதுபோல், மெஹ்ருன்னிஸாவைப் பற்றிய எண்ணங்கள் தானாகவே அவர் மனதில் எழுந்தன. இவ்வளவு அழகான, வசீகரமான, அமைதியான, தன் அழகில் பூரண நம்பிக்கையுள்ள பெண்ணை அவர் இதுவரை கண்டதில்லை. எல்லா விதத்திலும் ஒரு முழுமையான பெண். அவர்கள் கடைசி முறையாக சந்தித்தபின் பல ஆண்டுகள் கடந்துவிட்டன. அப்பொழுது அவள் மிகுந்த ஆர்வத்துடனும் விளையாட்டாகவும் உரையாடினாள். ஆனால், அவர்கள் கடைவீதியில் நடக்கையிலும், பின்னர் அந்தப்புரத்துப் பூங்காவில் நடக்கையிலும் அவள் அதிகம் பேசவில்லை. அவள் பேச வேண்டிய அவசியத்தையும் அவர் உணரவில்லை. அவரருகில், பக்கத்தில் அவள் இருக்கிறாள் என்ற உணர்வே அவருக்கு போதுமானதாக இருந்தது. அவர் அவளை நன்கு பார்த்து அநுபவித்தார். அவள் கண் இமை மயிர்கள் அரை வட்டச் சந்திரன் போல் அவள் கன்னங்களைத் தொடுவதைப் பார்த்தார். அவள் அழகிய கழுத்தின் நரம்புகளை ஸ்பரிசிக்க விரும்பினார். அவளது அந்த நீல நிறக் கண்களில் தோன்றும் புன்சிரிப்பிற்காக ஏங்கினார்.

ஜஹாங்கீர் எழுந்து ஜன்னலருகே சென்று, அமைதியாக ஓடிக் கொண்டிருக்கும் யமுனா நதியைப் பார்த்தார். ஜன்னலின் சட்டத்தில் குனிந்து காலைச் சூரியன் பனிமூட்டத்தைத் துரத்துவதைப் பார்த்தார். அவர் கடிதம் அவளுக்கு இப்பொழுது கிடைத்திருக்கும். இப்பொழுது அதை அவள் படித்துக் கொண்டிருப்பாள். அவள் என்ன கூறுவாள்? அவரை மறுபடியும் திருப்பி அனுப்பி விடுவாளா? வலியினால் துடிக்கும் தலையை ஜன்னல் கதவுகளில் சாய்த்துக் கண்களை மூடிக் கொண்டார்.

கடைவீதியிலிருந்து வந்தவுடன் அவர் மஹபத் கானை வரவழைத்து அவளுக்குத் திருமணம் ஆகி விட்டதா என்று கேட்டுவிட்டுத் துடிப்புடன் அவன் பதிலுக்காகக் காத்திருந்தார். ஆகவில்லை. அலிகுலி இறந்து நான்கு வருடங்களாகி விட்டன. அவள் அவரிடம் வந்து விடலாம், அவர் அந்தப் புரத்திற்கு, வெகு சீக்கிரமாகவே. இருந்தாலும், அழுகை வரும் நிலையில் அவரைத் திருப்பி அனுப்பி விட்டாள். அவர் என்ன தவறு செய்தார்? அவர்கள் பூங்காவில் நடந்த சமயம் பற்றி யோசித்துப் பார்த்தார். அவர்கள் எங்கு சென்றாலும் யாராவது எதிரில் வந்தனர். ஜஹாங்கீர் மற்ற மனிதர்களைப் பற்றி பொருட்படுத்தியதில்லை, அது ஒரு அரசரின் வாழ்க்கை. தனிமையாக இருப்பதற்கு நேரம் கிடைப்பதே அரிது. இப்பொழுது கூட அவர் பின்னால் அடிமை பெண்களும் அலிகளும் அவர் அறையை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர் அறைக் கதவிற்கு வெளியே அதிகாரிகள் அவரைச் சந்திப்பதற்காக்க் காத்திருக்கின்றனர். அவர் எங்கு குளிக்கிறார், என்ன உணவு உண்கிறார்,

எப்பொழுது தூங்குகிறார் — எதுவுமே மற்றவர்கள் அறியாததல்ல. எப்படி இருந்தால் என்ன? ஆனால், இப்படி இருப்பதில் அவளுக்கு விருப்பமில்லையோ?

அவர் தன் பின் கழுத்தைச் சோர்வுடன் தடவி விட்டுக் கொண்டார். அவள் இவ்வளவு அருகில் இருந்தும், கைக்கு எட்டாதபடி, இருக்கிறாள், அவளுடன் இணைந்து இருக்க முடியவில்லையே என்று எண்ணிக் கடந்த ஒரு வாரமாக ஒவ்வொரு நாளும் அவளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். நேற்றிரவு அந்தப்புரத்துப் பணிப்பெண்கள் மெஹ்ருன்னிஸா அந்தப்புரத்தை விட்டுச் செல்கிறாள் என்ற செய்தியைத் தெரிவித்தனர். அவர் அவளைப் போக விட்டார். அவரால் வேறு என்ன செய்யமுடியும்? அவர் விரும்பியது எதையும் வேறு எந்தப் பெண்ணும் மறுத்ததில்லை. இந்த நிலை பற்றி பேசவோ, அபிப்பிராயம் கேட்கவோ அவருக்கு ஒருவரும் இல்லை. தன் காதலியை அடைவதற்கான வழிகள் பற்றி ஒரு பேரரசன் யாரிடம் ஆலோசனை கேட்க முடியும்? ஆகையால், அவள் மறுபடியும் மறுத்து விடுவாளோ என்ற தன் பயத்தை வெளிகாட்டாமல். அவர் கவனமாக யோசித்து, வார்த்தைகள் தடுமாற அவளுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

நான்கு தினங்களுக்கு முன், ஒருநாள் மாலை உணவு வேளையில் காய்ந்த திராட்சை மற்றும் முந்திரிபருப்பு வறுத்து தூவி ஆட்டிறச்சி சேர்த்த மணக்கும் புலவு சாதத்தைச் சக்ரவர்த்தினி கையில் எடுத்தாள். அதை ஜஹாங்கீருக்குப் பரிமாறுகையில், "மிர்ஜா குத்புதீன் கோக்காவிற்குத் திராட்சை என்றால் மிகவும் விருப்பம். அவர் சிறுவயதாக இருக்கையில் எப்பொழுதும் திராட்சையை விரும்பிக் கேட்டு வாங்கி சாப்பிடுவார்" என்று அழுத்தமாக வேண்டுமென்றே கூறியவாறு புலவு சாதம் பரிமாறினாள். சில காலமாக கோக்காவைப் பற்றி ஜஹாங்கீர் நினைத்துப் பார்க்கவில்லை. ஜகத்கோஸினியின் வார்த்தைகளைக் கேட்டவுடன் தன் உடன் பிறவா சகோதரன் கோக்காவின் நினைவு அவருக்கு சட்டென்று எழுந்தது. அதிகம் உணவு சாப்பிடுவதால் அவன் உடல் பருத்து, இயற்கையாக மரணம் அடையும் காலத்திற்கு முன்பாகவே அவன் இறக்க நேரிடும் என்று அவர்

கோக்காவை அடிக்கடிப் பரிகாசம் செய்வதுண்டு. ஆனால், அதிகம் சாப்பிட்டதால் அவன் மரணமடையவில்லை. அலிகுலியின் கைகளில் அவன் மரணமடைய நேர்ந்தது. சட்டென்று சந்தேகம் தோன்ற அவர் தன் இரண்டாவது மனைவியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். அவள் முகத்தைத் திருப்பி பணியாளிடம் ஏதோ பேச ஆரம்பித்தாள்.

சமீபத்தில், அவரைத் தான் செய்யும் பூஜைக்கு வருமாறு ஜகத்கோஸினி அழைத்திருந்தாள். அவளுடைய இந்துக் கடவுள்களின் சந்நிதியில் அவர் அமர்ந்தவுடன். அவர் நெற்றியில் சிவந்த திலகம் இட்டாள். "உங்களை எதிரிகளிடமிருந்து காப்பதற்காகக் கிருஷ்ண பகவானைப் பூஜித்துச் செய்யும் பிரார்த்தனை இது. இப்பொழுது உங்கள் நேரம் சரியாக இல்லை. ஏன், ஒருமுறை பொக்கிஷதார் மிர்ஜா பெக்கின் மகன் கூட உங்களைக் கொல்லத் திட்டமிட்டிருந்தான்."

ஜஹாங்கீர் தலையசைத்துவிட்டு, அவள் அரண்மனையிலிருந்து வெளியே செல்கையில் ஆழ்ந்து யோசித்தவாறே வந்தார். சக்ரவர்த்தினி மெஹ்ருன்னிஸாவிற்கு எதிராக எச்சரிக்கை செய்கிறாள். ஏன்? அவளுக்கு இதில் என்ன அக்கறை? அவரது மற்ற மனைவிகளிடமோ, வைப்பாட்டிகளிடமோ அவள் பகைமை கொண்டதில்லை. அவள் ஒரு அரசகுமாரியாகப் பிறந்தவள். அரசாங்க ரீதியில் இந்தத் திருமணங்கள் மிக முக்கியமானவை. ஆனால், சக்ரவர்த்தி மெஹ்ருன்னிஸாவை விரும்புவது அரசாங்க ரீதியாக நடக்கப் போகும் திருமணம் அல்ல. அந்த காரணத்தினால் தானா?

ஆனால், இவையெல்லாம் ஒரு பொருட்டல்ல. அவர் மனதை மாற்ற ஜகத்கோஸினி எடுக்கும் முயற்சிகளை எல்லாம் பொருட்படுத்தாத அளவிற்கு அவர் மனதில் மெஹ்ருன்னிஸா நிறைந்திருந்தாள். இரவு முழுவதும் வெகுநேரம் ஆழ்ந்து யோசித்துவிட்டு அவர் மெஹ்ருன்னிஸாவிற்குக் கடிதம் எழுதியிருந்தார். வழக்கத்திற்கு மாறாக, மெஹ்ருன்னிஸா அவரது அந்தப்புரத்திற்கு வர மாட்டாளோ

என்ற பயமும் இருந்தது. அலிகுலியைக் கொல்வதற்கு அவர் தான் ஆணையிட்டிருப்பார் என்று அவள் நினைக்கிறாளா?

"மாட்சிமை பொருந்தியவரே."

கையில் வெள்ளித் தட்டுடன் ஹோஷியார் தன்னருகே நிற்பதை அவர் பார்த்தார். தட்டின் நடுவே ஒரு கடிதம் மடித்து வைக்கப்பட்டிருந்தது. அவர் அதை எடுத்துக்கொண்டு, பின் ஹோஷியார் அவரை வணங்கிவிட்டு அங்கிருந்து அகலும் வரை காத்திருந்தார். திடீரென்று இதயம் வேகமாக படபடக்கச், சக்ரவர்த்தி அந்தக் கடிதத்தைப் பிரித்தார். அதில் ஒரு வார்த்தைதான் இருந்தது. அவள் கை சற்று நேரத்திற்கு முன் தொட்டிருந்த அந்தக் காகிதத்தைத் தன் உதடுகளில் பதித்தார். "வாருங்கள்."

கியாஸ் பெக்கின் வீட்டில் ஒரு உள் முற்றத்தில் மெஹ்ருன்னிஸா அவருக்காகத் தனியாகக் காத்திருந்தாள். நடுப்பகல் முடிந்து மாலை துவங்கும் நேரம். சூரியன் ஆகாயத்தில் இறங்கத் தொடங்கியிருந்தான். வெளியில் வெப்பமாக இருந்தாலும் கல் தரைகள் குளிர்ச்சியாகவும் வராந்தாக்கள் மேல் கூரையுடனும் அந்த முற்றம் இருந்தது. நடுவில் ஒரு சம்பங்கி மரம் விரிந்து கிளைகளுடன் படர்ந்திருந்தது. அடி மரத்தைச் சுற்றி இருந்த மேடையில் அமர்ந்து மெஹ்ருன்னிஸா மரத்தில் தலை சாய்த்தவாறு இருந்தாள். அவள் மரத்தின் மேலே பார்த்தாள். மரம் நடப்பட்டு ஏழு வருடங்கள் கழித்து முதன் முறையாக அது பூத்திருந்தது. அதன் மலர்கள் கும்பிய வடிவத்தில் இளம் மஞ்சள் நிறத்தில் இருந்தன. அந்த மலர்களின் நறுமணம் முற்றத்தில் இருந்த காற்றில் கலந்து, நிறைச் செய்தது.

சக்ரவர்த்தியின் காலடி ஓசையை எதிர்பார்த்து அவள் அமைதியாகக் கைகளை மடியில் வைத்தவாறு அமர்ந்திருந்தாள். அவளும் சக்ரவர்த்தியும் சந்திக்கையில், சிறிது தூரத்தில் சில பணிப்பெண்கள் இருப்பது அவசியம் என கியாஸ்பெக் கூறியிருந்தார். மெஹ்ருன்னிஸா அதற்கு மறுத்து விட்டாள். சுற்றிலும் ஒருவருமே இல்லாமல் அவள் ஜஹாங்கீரைத் தனிமையில் சந்திக்க வேண்டும். இந்த விஷயத்தில் பல வருடங்கள் கழித்து முதன் முறையாக அவளுக்கும்

அவள் தந்தைக்கும் வாக்குவாதம் வந்தது. அவதூறு எழும் என கியாஸ் கூறினார். ஆனால், மெஹ்ருன்னிஸா அவர் சொல்லைக் கேட்கவில்லை. தன் முடிவிற்கும் விளக்கம் கூறவில்லை. அவள் அடிமனதில் ஏதோ ஒன்று ஜஹாங்கீரைத் தனியே சந்திக்கும்படிக் கூறியது.

வெளிக் கதவு சத்தம் கேட்க, அவள் உதடுகள் உச்சரித்துக் கொண்டிருந்த பிரார்த்தனைச் சொற்கள் மெதுவாக அடங்க, அவள் ஏறிட்டுப் பார்த்தாள். முற்றத்திற்குள் வர இருக்கும் அழகிய சித்திர வேலை செய்த மரக்கதவு திறக்க, ஜஹாங்கீர் உள்ளே பிரவேசித்தார். கதவருகே வெள்ளை சிவப்பு மலர்களைக் கொட்டியிருந்த போகன் வில்லா கொடியின் அருகில் அவர் நின்றார். மெஹ்ருன்னிஸா எழுந்து, தன் தலைமுடியைச் சரி செய்துகொண்டு, தலை குனிந்து "கோனிஷ்" முறைப்படி வணங்கினாள். "வருக, மாட்சிமை பொருந்தியவரே!"

அவள் நிமிர்ந்து அவரைக் கண்ட மகிழ்ச்சியால் திணறியபடி அவரை நேருக்கு நேர் பார்த்தாள். அவள் மனதில் இருந்த மற்ற எண்ணங்கள் எல்லாம் பறந்தோடின.

"நன்றி" ஜஹாங்கீர் கூறினார். அடுத்த வார்த்தைகளில் சிறிது தடுமாறி, "தயவு செய்து... உட்கார்..."

"இந்த மேடை போதும் என்று நம்புகிறேன், மாட்சிமை பொருந்தியவரே!" தன்னைச் சுற்றிக் கையால் காண்பித்துக் கொண்டே மெஹ்ருன்னிஸா கூறினாள்.

அவர் சுற்றிலும் பார்க்கவேயில்லை. அவர் கண்கள் ஆவலுடன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தன. "பரவாயில்லை, உட்கார், மெஹ்ருன்னிஸா!"

திடீரென்று எழுந்த வெட்கத்தினால் தயங்கியவாறு, அவள் மேடையில் அமர்ந்தாள். அவருடன் தனிமையில் இருக்க வேண்டும் என அவள் விரும்பினாள். இப்பொழுது அவர்கள் தனிமையில். ஆனால், மனதிலிருப்பதை எப்படி வார்த்தைகள் மூலம் தெரிவிப்பது என்று அவளுக்குத் தெரியவில்லை. "எனக்காகக் காத்திருப்பதற்கு மிகவும் நன்றி, மாட்சிமை பொருந்தியவரே!"

"நீ விரும்பியிருந்தால் இன்னும் சில காலம் உனக்காகக் காத்திருப்பேன்."

அவர் அவளருகில் அமர்ந்து பூவேலைப்பாடு செய்த தனது பட்டுத் தலைப்பாகையை எடுத்து, அவள் பக்கத்தில் வைத்தார். "நீ என்னை ஏற்றுக் கொள்வாயெனில், ஒரு அரசராக இல்லாமல், உன்னையே கேட்டு வருபவனாக இப்பொழுது உன்னிடம் வந்திருக்கிறேன்."

'நீ ஏற்றுக் கொள்வாயெனில்' — அவள் இதயம் பட படத்தது. இதைவிட வேறொன்றும் தேவையில்லை என்று தோன்றியது. அவரைப் பார்த்தவாறே அவள் அமர்ந்திருந்தாள் — சிறிது நரை தோன்றிய அவர் தலையை, கைமூர் வம்சத்தைச் சேர்ந்தவர் என்று பறைசாற்றும் சிறிது தூக்கிய முகவாயை, முகவாயில் உள்ள சிறிய தாடியை, அவர் தலைப்பாகை வைத்திருந்த இடத்தில் தலைமயிர் சிறிது அமுங்கி, அங்கு நெற்றியில் ஒரு கோடு தெரிந்தது. ருக்கையாவின் தோட்டத்தில் சந்தித்த மெலிந்த, மூர்க்கத்தனமான சிறுவனாக இருந்த நிலையிலிருந்து அவர் மாறியிருந்தார். அமைதியானவராக, அசைவுகளில் நிதானமுள்ளவராக, முதிர்ந்த மனப்பக்குவம் பெற்றவராகத் தோற்றமளித்தார். ஒரு அரசரின் கைகள் போலல்லாமல், ஒரு போர் வீரனின் கைகள்போல் அவர் கைகள் மிகுந்த பலம் பொருந்தியதாக, சிறுசிறு வெள்ளை மயிர்களுடன் காணப்பட்டது. இருந்தாலும், இடையே கடந்து சென்ற ஆண்டுகள் கரைந்து போய், அவர்களிடையே முதன் முதலில் ஏற்பட்ட காதல் போல். அதே அளவு தீவிரத்துடன், அதே அளவு தாபத்துடன். ஆனால், பொறுமையுடன் கூடியதாக அவர்கள் அன்பு இருந்தது.

தன் மேல் அங்கிக்குள் கையைவிட்டுச் சிவப்புத் தோலினால் அட்டையிடப்பட்ட ஒரு மெல்லிய புத்தகத்தை ஜஹாங்கீர் எடுத்தார். மேல் அட்டையில் பாரசீக எழுத்துக்கள் தங்கத்தினால் பொறிக்கப்பட்டிருந்தன. "இது உனக்காக, என்ன கொண்டு வருவதென்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை, 'பிர்தௌஸி' (Firdausi) படித்திருப்பாய் என்று எண்ணினேன்..."

அவள் அவரிடமிருந்து புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு தங்கத்தினால் ஓரம் கட்டிய அதன் பக்கங்களைப் புரட்டினாள். "அரசாங்கத்தின் நூல் நிலயத்திலிருந்து..." அவள் குரல் தாழ்ந்தது.

"என் தந்தையார், சக்ரவர்த்தி அக்பர்—"

"உங்கள் தந்தை யாரென்று எனக்குத் தெரியும், மாட்சிமை பொருந்தியவரே!" அவள் கண்கள் விஷமச் சிரிப்பில் நர்த்தனமாடின.

"அந்த நூல் நிலயத்தில் இந்தப் பதிப்பு இருந்தது. நீ இதைப் படிக்க விருப்பப்படுவாய் என்று எண்ணினேன். புகழ்பெற்ற பாரசீக அரசர் ரஸ்தம் பற்றி இதில் எழுதப் பட்டிருக்கிறது. உன்னுடைய நாட்டைப் பற்றிய சரித்திரம், மெஹ்ருன்னிஸா."

மெஹ்ருன்னிஸா மரியாதையுடன் அந்தப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டினாள். சக்ரவர்த்தியின் நூல் நிலயம், அதன் கணக்கிலடங்காப் புத்தகங்களுக்கும், அவைகள் நல்ல முறையில் உரையிடப்பட்டுப் பாதுகாக்கப்படுவதற்கும், அழகிய கையெழுத்துப் பிரதிகளுக்கும் மிகவும் பிரசித்த மானது. நூல் நிலயத்தின் சில பகுதிகள் அரசரின் அந்தப்புரப் பகுதியிலும், சில வெளியிலும் இருந்தன. மெஹ்ருன்னிஸா அந்தப் புரத்தில் தங்கியிருக்கையில் அந்த நூல் நிலயத்திற்குள் செல்ல அநுமதி கிடைக்கவில்லை. கதைகள் மற்றும் கவிதைகள் பல மொழிகளில் — ஹிந்தி, பாரசீகம், கிரேக்கிய மொழி, காஷ்மிரி, அரபு மொழி — புத்தகங்கள் அங்கிருந்தன. "இது மிகவும் அருமையான புத்தகம். அரசர் ரஸ்தமின் கதை எனக்குத் தெரியும். தாயின் வயிற்றிலிருக்கையில் மிகவும் பெரியதாக வளர்ந்து விட்டதால், அவள் வயிற்றைக் கிழித்து அவரை வெளியே எடுக்க வேண்டியிருந்தது." நூல் நிலயத்தின் ஒரு புத்தகத்தைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் இன்ப அதிர்ச்சியில் . அவள் படபடவென்றுபேசினாள். "கஸ்தூரியும், பாலும், புல்லும் கலந்து தயாரிக்கப்பட்ட ஒரு மருந்தினால் அவர் தாயார் உயிர் பிழைத்து விட்டாள். ஸாம் (Saum) என்பவரின் பேரனும், ஜால் (Zal) என்பவரின்

புத்திரனுமான கௌடா (Kauda) என்பவர் மூலம் அவளுக்குக் கிடைத்த ஒரு வெகுமதி அரசர் ரஸ்தம்."

"ஆனால், அவர் தன் மகனையே ஒருநாள் கொன்று விட்டார்."

"ஆமாம். அவன் அவருடைய மகன் என்று அவருக்குத் தெரியாது. அவன் பிறப்பைப் பற்றி அவர் மனைவி அவரிடமிருந்து மறைத்துவிட்டாள். ஆகையால் போர்களத்தில் அவர்கள் எதிரிகளாகச் சந்தித்தனர்."

"ஆனால், அவர்தான் மாபெரும் வீரர் ரஸ்தமா என்று பலமுறை சோரப் (Sohrab) கேட்டும் அவர் அதை மறுத்து விட்டார்."

பிர்தௌலியின் கவிதையின் கடைசிப் பக்கத்தைப் புரட்டி, அவரிடம் காட்டியபடி மெஹ்ருன்னிஸா அவரிடம் கூறினாள். "பாருங்கள் — அவன் ஏன் ரஸ்தமிடம் தான் அவர் மகன் என்று கூறாமல் இருந்து விட்டான் என்று எண்ணி சோரப் இறந்தவுடன் அவன் தாயார் வருந்துகிறாள். அவர்களிடையே இருந்த உறவை தெளிவுபடுத்தக்கூடிய அவன் கையிலிருந்த காப்பை அவன் ஏன் ரஸ்தமிடம் காட்டவில்லை! பலமுறை அவன் தன் தந்தையைப் போர் முனையில் சந்தித்த பொழுதும், குத்துச் சண்டைகளில் சந்தித்தபொழுதும், ஏன் பிடிவாதமாகத் தான் யார் மகன் என்று கூறவில்லை! என்றெல்லாம் எண்ணி வருந்துகிறாள்..."

சக்ரவர்த்தி அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தவாறு சம்பங்கி மரத்தில் சாய்ந்து கொண்டார். "நீ இந்தக் கவிதையைப் படித்திருக்கிறாய் என்று நினைக்கிறேன். சில சமயங்களில் நம் மனதின் அடித்தளத்தில் இருப்பதை வெளியே கூறுவது சுலபமாக இருக்காது."

அவள் அவரை நோக்கினாள். "நீங்கள் செய்திருக்கிறீர்கள், மாட்சிமை பொருந்தியவரே, நீங்கள் எனக்கு அனுப்பிய கடிதத்தில்!"

கியாஸ் பெக்கின் உட்புற முற்றத்தில், மற்றவர்களின் துருவிப் பார்க்கும் கண்களுக்கு எட்டாதவாறு, அவ்வாறு அவர்கள் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தனர். நாட்கள்

நகர்ந்தன. மெதுவாகக் கழியும் கோடைக்கால நாட்கள் அவர்கள் அன்பில் மூழ்கித் திளைத்தது. எப்பொழுதும் பேசிக் கொண்டுதான் இருந்தனர். மிக அரிதாகவே ஒருவரை ஒருவர் தொட்டுக் கொண்டனர். அவ்வப்போது முத்தத்திற்காக மெஹ்ருன்னிஸா மெல்லக் குனிய, அவர் உதடுகளின் ஸ்பரிசத்தினால் ஏற்பட்ட இன்ப நடுக்கத்துடன், அவர்மேல் அவளுக்கு இருக்கும் சக்தியை எண்ணியும் பரவசமடைவாள். ஒருமுறை தன் தாயாரைத் தேடி லாட்லி முற்றத்திற்கு வந்து விட்டாள். தாயார் வீட்டிற்குள்தான் இருக்கிறாள் என்று அறிந்தவுடன், அவள் ஜஹாங்கீரின் மடியில் ஏறி அமர்ந்து, அவர் மீசையை இழுக்கப் பார்த்தாள்.

"லாட்லி!" மெஹ்ருன்னிஸா அதிர்ச்சியுடன் கூவினாள்.

"அவள் இருக்கட்டும்" சிரித்தவாறு ஜஹாங்கீர் லாட்லியின் கைகளிலிருந்து தப்பிக்கத் தலையை இந்த பக்கமும் அந்தப் பக்கமுமாக திரும்பினார். கடைசியில், அவளைத் தன் மீசையை இழுக்க விட்டு, அங்கு வலி ஏற்படுவது போல் பாவனை செய்தார்.

"ஓ... இது உண்மையானதுதான்" லாட்லி ஏமாற்றத்துடன் கூறினாள். "என் தாத்தாவிடம் போய் சொல்ல வேண்டும். அவர் இது உண்மையான மீசை அல்ல என்று கூறினார்." தன் நீண்ட பின்னல் அசைந்தாட அவள் ஓடிச் சென்றாள்.

"மாட்சிமை பொருந்தியவரே! நான் மன்னிப்புக் கோருகிறேன். என் தந்தை அப்படிக் கூறி—" முகம் சிவக்க மெஹ்ருன்னிஸா கூறி நிறுத்தினாள். லாட்லி அதிகம் பேசுகிறாள். அவள் நாக்கை முன்னமேயே அடக்கி வைக்காதது தன் தவறுதான் என்று அவள் தன்னையே நொந்து கொண்டாள்.

சிரித்தவாறு ஜஹாங்கீர் கூறினார். "எனக்குத் தெரியும், மெஹ்ருன்னிஸா. கியாஸ் பெக் கூறியதை அவள் தவறாகப் புரிந்துகொண்டிருப்பாள். இன்று இரவு அவளைக் கடிந்து கொள்ளாதே. என் புதல்வர்களின் குழந்தைப் பருவம் பற்றி எனக்கு அநுபவம் அதிகம் இல்லை. அவள் உனக்கு கடவுள் கொடுத்த வரம்."

"பல குழந்தைகளை இழந்தபின்," மெஹ்ருன்னிஸா தனக்குள் பேசிக் கொள்வது போல் கூறினாள்.

சிரிப்பதை நிறுத்திவிட்டு . ஜஹாங்கீர் அவளைப் பார்த்தார். "என்ன? எனக்குத் தெரியாதே."

தன் முகத்திரையின் ஒரு முனையை விரல்களில் சுற்றியவாறு அவள் பதிலளித்தாள். "உங்களுக்கு எப்படித் தெரிந்திருக்கும்? அது இரகசியமில்லை. ஆனால், அதைப் பற்றி நான் அதிகம் பேசுவதில்லை. பிறகு லாட்லி பிறந்தாள். அதன்பின் அதைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், சில சமயம் நான் நினைத்துப் பார்ப்பதுண்டு. அவர்கள் எப்படி வளர்ந்திருப்பார்கள், யாராக இருந்திருப்பார்கள். எப்படிப்பட்ட சந்தோஷங்கள், துக்கங்கள் அவர்கள் வாழ்க்கையில் இருந்திருக்கும் என்பது போல்."

"எவ்வளவு?" ஜஹாங்கீர் வினவினார்.

மெஹ்ருன்னிஸா குனிந்து முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டாள். அவள் பேசுகையில் அவள் குரல் அடங்கி ஒலித்தது. "இரண்டு. லாட்லிக்கு முன் இரண்டு. அப்புறம் ஒன்றுமில்லை."

ஜஹாங்கீர் அவள் தோள் மேல் கையைப் போட்டு அணைத்துக் கொண்டு அவள் கைகளில் புதைந்திருக்கும் முகத்தினருகில் குனிந்தார். "எனக்கு எதைப் பற்றியும் கவலையில்லை. நீ ஒருத்திதான் வேண்டும்."

அவர் மென்மையாக அவள் நெற்றியில் முத்தமிட்டார். அவர் வார்த்தைகள் எவ்வளவு உண்மையானது என்று எண்ணியவாறு மெஹ்ருன்னிஸா அவர்மேல் சாய்ந்தாள். மற்ற மனைவிகளிடமிருந்து அவருக்குப் புதல்வர்கள் பிறந்திருக்கிறார்கள். ஆனால், அவளிடமிருந்து அவர் அவள் அன்பை மாத்திரமே எதிர்பார்க்கிறார். அதற்கு ஈடாக தன் முழு அன்பையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார். ஜஹாங்கீர் அவளைத் தன் கைகளில் மென்மையாக ஆட்டிய படித் தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டார். கடைசியாகத் தன் மனதிலிருந்த துக்கத்தை இறக்கி வைக்க முடிந்த ஆறுதலில் மெஹ்ருன்னிஸா மறைந்த தன் குழந்தைகளுக்காக கண்களில் எழும் கண்ணீரை அப்படியே பெருக விட்டாள்.

தன் தாய் தந்தையர் எதிரே அவள் தன் அழுகையை அடக்கிக் கொண்டாள். ஏனெனில், அவர்கள் மிகுந்த மன வருத்தம் அடைவார்கள். அலிகுலி முன்னால் அவளால் அழ முடியவில்லை. அவள் விம்மல்கள் குறைந்தவுடன் ஜஹாங்கீர் அவள் முகவாயைத் தூக்கித் தன் கைகுட்டையை அவள் மூக்கருகே காண்பித்தார்.

"சிந்து" அவர் உத்திரவிட்டார்.

மெஹ்ருன்னிஸா சட்டென்று பின் வாங்கினாள். "மாட்சிமை பொருந்தியவரே...!"

"விவாதம் செய்யாதே, மெஹ்ருன்னிஸா. நீ அடிக்கடி வாக்கு வாதம் செய்கிறாய். உன் சக்ரவர்த்தியின் ஆணைக்கு கட்டுப்படு. இப்பொழுது உன் மூக்கைச் சிந்தி, சுத்தம் செய்து கொள்."

அவர் ஆணைப்படியே செய்துவிட்டுத், தன்னை இத்தனை அன்புடன் நடத்தும் அந்த மனிதரைப் பார்த்துத் தன் கண்ணீருக்கிடையே அவள் புன்னகை செய்தாள். பிறகு அவள் அவரை முத்தமிட்டாள். அவர்கள் உதடுகள் வேட்கையுடன் சந்தித்துக் கொண்டன. அவர் முகம் அவள் கண்ணீரால் ஈரமாகியது.

அடுத்த நாள், சக்ரவர்த்தி மெஹ்ருன்னிஸாவிற்கு மற்றொரு பரிசு கொடுத்தார். பணியாட்களால் அது தங்கத் தட்டில் எடுத்து வரப்படவில்லை. அவரே எடுத்து வந்தார். சூரிய ஒளியில் தகதகக்கும் மரகதக் கற்கள் பதித்த பன்னிரண்டு வளையல்கள்.

"உனக்காக, மெஹ்ருன்னிஸா" வெகு சாதாரணமாகக் கூறியவாறு, ஆவலுடன் அவள் மறுமொழிக்காக அவளைப் பார்த்தார்.

அவள் ஒன்றும் பேசாமல் கைகளை நீட்டினாள். மென்மையாக அவள் கைகளை ஸ்பரிசித்தவாறு ஒவ்வொரு கைக்கும் ஆறு வளையல்களாக, அந்த வளையல்களை அவளுக்கு அவர் அணிவித்தார். வளையல்கள் மெல்லச் சப்திக்க, மெஹ்ருன்னிஸா மெல்லக் கையை உயர்த்தி அவர் தலை மயிரைக் கோதிவிட்டாள்.

"என் அந்தப்புரத்திற்குத் திரும்பிவா, மெஹ்ருன்னிஸா! நீ அங்கிருக்கவேண்டும் என நான் விரும்புகிறேன். நான் உன் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆசைபடுகிறேன். உன்னை நன்கு பராமரிக்க விரும்புகிறேன். என்னிடம் வா என் அன்பே, தயவு செய்து வருகிறேன் என்று சொல்." அவர் புன்னகைத்தவாறு தொடர்ந்தார். "இந்தமாதிரி சந்திப்புகள் எனக்கு அலுப்பை அளிக்கிறது. நான் இன்னும் இளைஞன் அல்ல. நீ என்னுடன் இருக்க வேண்டும்."

அவள் மனம் முழுவதிலுமாக நிரம்பியிருக்க மெஹ்ருன்னிஸா ஜஹாங்கீர் முன் நின்றாள். இந்த வார்த்தைகளைத்தான் அவள் கேட்க விரும்பினாள். அவரை நோக்கி கையை நீட்டத் தொடங்கி, பின் சட்டென கையை பின்னுக்கு இழுத்துக்கொண்டாள். அவர் கூறியதில் அவளைத் திருமணம் செய்து கொள்வது பற்றி எந்த வார்த்தையும் இல்லை. அவள் முகம் அவமானத்தால் சிவந்தது. ஒருவேளை தந்தை கூறியது சரிதான் போலும். அவர்கள் சந்திக்கையில், உடன் கண்காணிக்க யாரும் இருக்க வேண்டாம் என்று அவள்தான் வற்புறுத்தினாள். இப்பொழுது அவர் இவளை ஒரு சாதாரணப் பெண் போல் நடத்துகிறார்.

ஒருநாள், நடுப்பகலில், ருக்கையாவின் தோட்டத்தில் மெஹ்ருன்னிஸா அமர்ந்திருக்கையில், அக்பரின் வைப்பாட்டிகள் கைகால்களில் மருதாணி இட்டு உட்கார்ந்திருந்தது இத்தனை வருடங்கள் கழித்து அவளுக்கு இப்பொழுது நினைவிற்கு வந்தது. அரசரின் அந்தப்புரத்தில் அவர்களுக்கு எந்தவித கௌரவமும் கிடையாது— எந்தவிதமான உரிமையோ, பதவியோ, மரியாதையோ கிடையாது. சக்கரவர்த்தியின் கவனத்தை எப்படிக் கவரலாம் என்று ஒருவரோடொருவர் போட்டியிடுவார்கள். அவர்களுள் ஒருத்தியாக அவள் இல்லாததைக் குறித்து, அந்தச் சமயத்தில் அவள் அல்லாவிற்கு நன்றி செலுத்தினாள். அவள் வயதில் சிறியவளாக இருந்தாலும், கண்களை மறைத்து, காதுகளைச் செவிடாக்கக் கூடிய அளவிற்குக் காதலின் தீவிரத்துடன் ஸலீம் அவளிடம் வரவில்லை எனில், அவளால் அவரை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை அவள் உணர்ந்திருந்தாள். எவ்வளவு காலம் அதற்காக காத்திருப்பான் என்று அவளுக்குத் தெரியாது. ஆனால், அப்படி நடக்கும் வரை

காத்திருப்பாள் என்பது நிச்சயம். அவள் இத்தனை நாட்களாக எதிர்பார்த்திருந்த வார்த்தைகளுடன் அவர் இப்பொழுது வந்திருக்கிறார்— அவரது அளவில்லாக் காதல், தீவிர ஆசை, அவள் தேவை — ஆனால், அந்த வார்த்தைகள் பட்டுத் துணியால் கட்டி வைத்தல்ல, ஒரு காகிதத்தில் சுருட்டி வைத்த மாதிரி. உள்ளுக்குள் கண்ணீர் பொங்கி எழுந்தது. ஆனால், அவள் அதை விரட்டி அடித்தாள். அவள் அழுவதை அவர் மறுபடியும் பார்க்கமாட்டார். இந்த மனிதருக்காக அவள் ஏன் அழவேண்டும்?

மிகவும் கவனத்துடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து அவள் கூறினாள். "மாட்சிமை பொருந்தியவரே! நீங்கள் இப்பொழுது இங்கிருந்து செல்வது நல்லது. உங்கள் ஆசை நாயகியாக இருக்க என்னால் இயலாது. அப்படி இருக்கவும் மாட்டேன்."

ஜஹாங்கீர் சட்டென்று பின் வாங்கினார். அவரது நரைக்கத் தொடங்கியிருந்த தலைமுடி சூரிய ஒளியில் மேலும் வெண்மையாகத் தோன்ற, நெற்றியில் புருவங்கள் கேள்விக்குறிபோல் தோன்ற, முகம் இறுக அவர் கேட்டார். "ஏன்?" அவர் குரலில் துக்கம் மிகுந்த பதற்றம் தெரிந்தது.

மெஹ்ருன்னிஸா செய்வதறியாமல் அவரை உற்று நோக்கினாள். ஏன்? ஏன் என்று அவர் கேட்கிறார். அவர் புரிந்துகொள்ள முடியாதவரா? அவளது உணர்வுகளை அவள் அவருக்குச் சரியாக உணர்த்த வில்லையா? அவளுக்குத் தன் மேலேயே மிகுந்த கோபம் வந்தது. இவர்களது இப்படிப்பட்ட சந்திப்புகளிலிருந்து இதற்கும் மேலாக ஏதாவது நடக்கும் என்று எதிர்பார்த்த தன் முட்டாள்தனத்தை எண்ணிக் கோபம் வந்தது.

அவள் நகர்ந்து கொள்ள முயல்கையில், ஜஹாங்கீர் அவள் கைகளைப் பற்றிக் கொண்டார். "மெஹ்ருன்னிஸா, தயவு செய்து ஏன் என்று சொல். நீயில்லாமல் இருக்க—" அவர் பேசுவதை சிறிது நிறுத்தி, அவள் கைகளைப் பற்றி, குனிந்து பார்த்து, முதலில் ஒரு கையை முத்தமிட்டு பின் மற்றொரு கையையும் முத்தமிட்டார். "இல்லை. இது என்னுடைய தேவைகளைப் பற்றியது மட்டும் அல்ல. அதைப் பற்றி நீ அறிவாய். நீயில்லாமல் என்னால் உயிர்வாழ முடியாது. தினமும் காலையில் நான் கண் விழிக்கையில் நீ

என் பக்கத்திலிருக்க வேண்டும் என்ற என் விருப்பத்தை நீ நன்கு அறிவாய். நீயும் இதைத்தான் விரும்புகிறாய் என்று நம்பினேன். அதைத்தான் நீ வெளிப்படுத்தினாய் என்றும் எண்ணினேன்."

"நான் அதைத்தான் வெளிப்படுத்தினேன், மாட்சிமை பொருந்தியவரே! அது உண்மைதான்." அவள் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து, அவர்களது பிணைத்திருந்த கைகளில் விழுந்தது. கடந்த இரண்டு மாதங்களில் அலிகுலியும் அவளும் பேசியதைவிட மிக அதிகமாகவே அவர்கள் பேசியிருக்கிறார்கள். கவிதைகள் பற்றி, கவிஞர்கள் பற்றி, சாம்ராஜ்ஜியம் மற்றும் அதைச் சார்ந்த விஷயங்கள், அந்தப் புரத்து நடவடிக்கைகள், வேட்டையாடுவதில் சக்ரவர்த்திக்கு இருக்கும் தீவிர ஆர்வம், அவளுக்கு வேட்டையாடச் சொல்லிக் கொடுப்பதாக அவர் கூறிய உத்திரவாதம் எனப் பல விஷயங்கள் பற்றிப் பேசியிருக்கிறார்கள். சேர்ந்து சிரித்திருக்கிறார்கள். ஒருவர் மேல் ஒருவர் சாய்ந்து அமர்ந்து அதில் கிடைக்கும் இன்பத்தை அநுபவித்திருக்கிறார்கள். ஒருவர் மற்றவரிடம் எதையுமே எதிர்பார்க்காமலும் ஒருவர் மற்றவர் விருப்பத்தை பூர்த்தி செய்ய இயலாது என்ற எண்ணத்திற்கே இடமில்லாமலும், மிகுந்த சந்தோஷத்துடன் இருந்திருக்கிறார்கள். இந்தச் சில நாட்களில் பதின்மூன்று ஆண்டுகள் உடன் வாழ்ந்த அவள் கணவனைப் பற்றி அறிந்ததை விட, அதிகமாக அவள் ஜஹாங்கீரைப் பற்றித் தெரிந்து கொண்டாள்.

ஆனால், அவள் ஏன் மறுக்கிறாள் என்று இப்பொழுது அவரிடம் சொல்ல முடியவில்லை — அவரைப் பொறுத்தவரை இது ஒரு சாதாரண வேண்டுகோள் — ஆனால் அவள் என்ன கூறமுடியும்? என்னை உங்கள் மனைவியாக ஏற்றுக் கொள்ளுங்கள், மாட்சிமை பொருந்தியவரே என்று? பிறகு, அவள் கேட்டதனால்தான், அவர் அவளை மணந்து கொண்டாரோ என்று அவள் மிகுதி வாழ்க்கை முழுவதும் சங்கடப்படுவதற்காக?

அவளது பட்டு முகத்திரையின் நுனியினால் ஜஹாங்கீர் அவள் கண்ணீரைத் துடைத்தார். "பின் ஏன்? என்னிடம் சொல்; எனக்குப் புரியவில்லை. சாம்ராஜ்ஜியத்தைப் பற்றியோ, போர்க்களம் பற்றியோ, நான் கைப்பற்றிய நாடுகள் பற்றியோ, ஏன் அந்தப்புர விஷயங்கள் பற்றிக் கூட எனக்குப்

புரிகிறது. ஆனால், நீ ஏன் மாட்டேன் என்று சொல்கிறாய் என்றுதான் புரியவில்லை."

அவள் ஏதும் பதிலளிக்காமல் தலையை ஆட்டினாள்.

அவர் கலங்கிய முகத்துடன் அவளை ஏறிட்டு நோக்கிய வாறு, அவள் கையை எடுத்துத் தன் வாயில் வைத்து முத்தமிட்டவாறு மென்மையாகப் பேசினார். "இது மாத்திரம் எனக்குத் தெரிகிறது. உனக்குக் கிடைக்கக் கூடிய எப்படிப் பட்ட வாழ்க்கையையும்விடப் பல மடங்கு உயர்ந்த வாழ்க்கையை நான் உனக்குத் தருகிறேன். இத்தனை நாட்கள் நீ என்னுடன் கழித்தபின், என் அந்தப்புரத்திற்கு வரவில்லையாகில், உன் கௌரவம் கெட்டுவிடும். ஜனங்கள் பேசுவார்கள், மெஹ்ருன்னிஸா சக்ரவர்த்தியால் ஒதுக்கி வைக்கப்பட்ட வைப்பாட்டிகளுக்குச் சமூகத்தில் நல்ல இடம் இருக்காதென்று எனக்குத் தெரியும்," அவள் அதை மறுப்பதற்காக வாயைத் திறக்கையில் அவர் ஒரு கையை உயர்த்தி அவளைப் பேசாமலிருக்கும்படிச் சைகை செய்து, மேலும் தொடர்ந்தார். "நாம் இருவரும் அந்த விதத்தில்... சேர்ந்திருந்ததில்லை. ஆனால், அது மற்றவர்களுக்குத் தெரியாது. ஜனங்கள் வம்பு பேசுவதை என்னால்கூடத் தடுக்க முடியாது. ஆனால் அந்தப்புரத்தில் நீ என் பாதுகாப்பில் இருப்பாய். எவரும் உன்னைப் பற்றி அவதூறு கூற முடியாது."

அவர் வார்த்தைகளைக் கேட்டுக் கோபம் கொந்தளிக்க அவள் சட்டென்று விலகினாள். "இந்தக் காரணத்திற்காகத் தான் நீங்கள் இந்த உயர்ந்த ஆசைநாயகி என்ற பதவியை எனக்கு அளிக்கிறீர்களா, மாட்சிமை பொருந்தியவரே? என்னைப் பாதுகாப்பதற்காகவா? உங்கள் உதவியோ அல்லது என் தந்தையின் உதவியோ இல்லாமல் இந்த நான்கு வருடங்கள் நான் வாழ்ந்திருக்கிறேன் என்பதை நீங்கள் மறந்துவிட்டீர்கள். சந்தேகமில்லாமல் என் கௌரவம் குறைந்து நான் கீழ்த்தரமான பெண்ணாகத் தோன்றுவேன். ஆனால், உங்கள்அந்தப்புரத்திற்கு உங்கள் வைப்பாட்டியாக நான் வரமாட்டேன் — நிச்சியமாக வரமாட்டேன்."

அடிபட்டவர்போல், அவள் வார்த்தைகள் அவர் இதயத்தைத் துளைக்க, எந்த உணர்ச்சியும் இல்லாமல், ஜஹாங்கீர் அவளை வெறித்துப் பார்த்தார். கடந்த ஒரு மணி நேரத்தில் வயது கூடியவர் போல், அவர் அந்த முற்றத்தை

விட்டுக் கனத்த இதயத்துடன் வெளியேறினார். அவர் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை.

அவர் செல்வதைப் பார்த்தவாறு மெஹ்ருன்னிஸா நின்றிருந்தாள் — அவரைத் திருப்பி கூப்பிட வேண்டும் என்ற ஆவல் — உங்கள் ஆசைநாயகியாக இருக்கிறேன், மாட்சிமை பொருந்தியவரே — அவரைத் திருப்பி அனுப்ப அவளுக்கு மனமில்லை. ஆனால், கோபம், அவமானம், ஆழ்ந்த மனவலி அவளைப் பேசவிடவில்லை; பாதுகாப்பு என்ற சாதாரணக் கைமாறை அவள் அவரிடம் எதிர்பார்க்க வில்லை. அவர் அவள் மேலுள்ள காதலைப் பற்றிப் பேசவில்லை — ஆமாம், பேசினார், வெகு சாதாரணமாக! ஆனால், அவள் கௌரவத்தைக் காப்பதற்கும் சமூகத்தில் அவள் பெயர் கெடாமல் இருக்கவும் தான், இந்தத் தகுதியை அவளுக்குக் கொடுக்க முன் வந்ததாக குறிப்பாகக் கூறினார். கடந்த சில வருடங்கள் அவர் அவளைப் புறக்கணித்த நேரத்தில் எல்லோரும் தாய், தந்தை, ருக்கையா— கூறிய வார்த்தைகளும் இதுதான். ஒரு ஆண் மகன் பாது காப்பில்லாமல், அவளுக்குச் சமூகத்தில் மதிப்பில்லை.

இந்த இழிந்த, பாழடைந்த நிலமை மாறுமா? அவளுடைய வலிமை திரும்ப வருமா? இரு குழந்தைகளை இழந்து, மற்றொரு குழந்தையைக் கைகளில் ஏந்திக்கொள்ள முடியுமா என்ற நிலையில் இருந்த பலம், அவள் தந்தை மோசடிக் குற்றத்தில் சிக்கிய பொழுது, அவள் சகோதரன் சக்ரவர்த்திக்கு எதிராகச் சூழ்ச்சி செய்த பொழுது, அவள் கணவன் சக்ரவர்த்தியின் உற்ற தோழனைக் கொன்ற பொழுது, இவைகளால் பாதிக்கப்பட்ட அவள் பெயரையும் கௌரவத்தையும் காப்பாற்ற எடுத்துக் கொண்ட முயற்சி களின் போது இருந்த பலம், அவளுக்கு இப்பொழுது திரும்ப வருமா?

விம்மல் உடலை உலுக்க, முற்றத்தில் தரையில் வீழ்ந்து அவள் சத்தமிட்டு அழுதாள். அவள் உலகமே தூள் தூளாகி விட்டது. பல வருடங்களாக ஆவலுடன் ஜஹாங்கீருக்காகக் காத்திருந்தபின், அவள் கணவனாக ஆக வேண்டிய அந்த மனிதரைத் தான் திரும்பவும் பார்க்க முடியாது என்பது அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்தது.

அத்தியாயம் இருபது

நூர்மஹலி (பிற்காலத்தில் நூர்ஜஹான் என்ற பெயரில் அறிய பட்ட) காதல் கதை, ஷேர் ஆப்கானுடன் அவள் திருமணம், அவனது மரணம், பின்னர் அவள் முதல் திருமணத்திற்கு முன் பிரு[illegible] அவள் மேல் அளவில்லா மோகம் கொண்ட சக்ரவர்த்தியுடன் அவள் இணைந்தது போன்ற விவரங்கள் மறுபடியும் எடுத்துக் கூற அவசியமில்லை. இந்தச் சமயத்தில் அவள் கணவன் மேல் அவளுக்கிருந்த ஆதிக்கம் அளவில்லாதது. சாம்ராஜ்ஜியம் முழுவதையும் அவளே ஆட்சி செய்தாள் என்றே சொல்லாம்...

- WILLIAM FOSTER, ed.,
The Embassy of Sir Thomas Roe to India.

ஆ...ங்! அடித் தொண்டையிலிருந்து பீறிட்டு எழுந்த அந்த உரத்த சப்தம் அரச மாளிகைகளிலும் ஆக்ரா கோட்டையின் முற்றங்களிலும் பாய்ந்து, அரச குடும்பத் தினரை உறக்கத்திலிருந்து எழுப்பியது. சுவற்றில் மோதி எதிரொலித்து மெதுவாக அடங்கும் அந்தச் சப்தத்தைக்கேட்டு, அந்தப்புரத்துப் பெண்கள் ஒருவரை ஒருவர் பிடித்துக் கொண்டனர். சிலர் குழந்தைகளை வாரி அணைத்துக் கொண்டனர். பிறகு, அந்த ஒலி மறுபடியும் எழுந்தது. ஆ...ங்!

கால்களை அகற்றி வைத்து முன்னும் பின்னும் நடந்து கொண்டிருக்கும் அந்தப் புலி இருக்கும் கூண்டின் முன் சக்ரவர்த்தி ஜஹாங்கீர் அமர்ந்திருந்தார். அதன் தங்கநிறமும் கருப்பும் கலந்த உரோமங்களின் அடியில் தசைநார்கள் புடைத்திருக்க அது அந்தக் கூண்டின் நாற்பது அடி நீளத்தை யும் அவசரமில்லாத அளந்து வைத்த அடிகளில் நடந்து கொண்டிருந்தது. பின் திரும்பி, வால் காற்றில் வீச,

ஜஹாங்கீரைப் பார்த்து பல்லைக் கடித்தவாறு வாயை பெரிதாகத் திறந்தது. ஆ...ங்!

கைகளில் மயிர்ச் கூச்சல் எடுக்க, அவர் உடம்பு நடுங்கியது. புலியின் உறுமல் அவர் எலும்புகளை ஆட்டி எடுப்பது போல் இருந்தது. கூண்டின் அருகே நான்கு அடி தூரத்தில் அவர் உட்கார்ந்திருந்தார். மெல்லிய இரும்புக் கம்பிகள்தான் அவரையும் புலியையும் பிரித்தது. பிராணிகள் உடலுறவு கொள்ளும் காலம் அது. தன் துணையைத் தேடி அந்தப் புலி ஒவ்வொரு இரவும் உறுமிக் கொண்டிருந்தது. புலிகள் ஜஹாங்கீரை மிகவும் கவர்ந்ததால், இரண்டு புலிகளை உயிருடன் பிடித்துவர உத்திரவிட்டிருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு, புலிக்குட்டிகளுடன் ஏற்பட்ட பயங்கரமான அந்த நிகழ்ச்சிக்கு பின், புலிகள் அவர் ஆவலைத் தூண்டிவிட்டிருந்தன. புலிக் கூண்டுகள் தயாரிக்கப்பட்டு ஆக்ரா கோட்டையின் மேற்கு பகுதியிலுள்ள 'தில்லிவாசல்' அருகே அவை எடுத்து வரப்பட்டன. இரண்டு கூண்டுகளும் அருகருகே வைக்கப்பட்டிருந்தன. ஒன்றில் இந்த ஆண்புலி, மற்றொன்றில் இன்னும் இனக் கவர்ச்சியால் தூண்டப்படாத பெண்புலி. அவரைச் சுற்றிலும் எரியும் தீவட்டிகள் அங்கிருந்த மண் தரையை ஒளி மயமாக்கிக் கொண்டிருந்தன. பெரிய துப்பாக்கிகளும், கைத்துப்பாக்கிகளும் ஏந்தி நாற்பது காவலர்கள் சுற்றிலுமிருந்தனர். எந்த ஒரு புலியும் தப்பித்து விட்டால் அது ஆக்ரா கோட்டையையே நாசம் செய்து விடும். ஆக்ரா நகரத்தின் வெளிப் (நாசம்) புறத்தில் இருக்கும் அடர்ந்த காடுகளில் வசிக்கும் இந்த மனிதர்களை உண்ணும் புலிகள் அருகிலிருந்த கிராமத்து மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தன. ஒருமுறை ஒரு புலி மனிதனைக் கொன்று விட்டால், அது மறுபடியும் மற்ற பிராணிகளைக் கொல்லப் போகாது. ஏனெனில், மனிதர்கள் அவைகளுக்குச் சுலபமாகக் கிடைக்கக் கூடியவர்கள். அவர்கள் பலஹீனமானவர்கள், ஆயுதம் ஏதும் அவர்களிடம் இல்லையெனில் திருப்பிச் சண்டையிடக் கூடமாட்டார்கள்.

இன்னொரு உறுமல் சப்தத்திற்காகவும், அதைத் தொடர்ந்து பெண்புலியின் எதிர்ச்செயலுக்காகவும் ஜஹாங்கீர் காத்திருந்தார். கூண்டுக்கருகே, ஒரு மரப் பெட்டியின் மேல் ஒரு கையால் முகவாயைத் தாங்கியவாறு அந்தப் புலியின் கூரிய பார்வையைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். அது முன்னும் பின்னும் நடக்கையில் அவர் பக்கம் கவனம் செலுத்தாவிடினும் அவரிடமிருந்து வரும் மனிதனின் வாசனையை உணர்ந்து அப்பொழுதுதான் உணவு கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மூக்கு அவ்வப்போது துடித்தது.

ஒரு வரண்ட வேடிக்கையான புன்னகை அவர் முகத்தில் தோன்றியது. அவர் முகலாய இந்தியாவின் ஏகோபித்த சக்ரவர்த்தி. மனிதர்களை உண்ணும் புலியையும் அதன் துணையையும் பிடித்துக் கூண்டில் அடைக்க உத்திரவிட முடிகிறது. ஆனால், அவர் விரும்பிய பெண்ணை அவர் வசம் கொண்டு வர முடியவில்லை. மெஹ்ருன்னிஸாவைப் பொறுத்தவரையில் சட்டதிட்டங்கள் ஒன்றும் கிடையாது.

இரண்டு வாரகாலமாக அவர் ஒரு குழம்பிய மனநிலையிலேயே இருந்தார். அவர் மேல் மாடத்திலிருந்து மக்களுக்கு தரிசனம் கொடுப்பதும், மக்கள் சபை தர்பார்களுக்குச் செல்வதும் வழக்கம்போல் செய்தார். எனினும், அங்கு நடக்கும் விஷயங்களில் முழுக் கவனம் செலுத்த இயலவில்லை. அவள் ஏன் மறுத்தாள்? அவர் கூறிய திட்டம்தான் அவளுக்கு மிகுந்த நன்மை பயக்கும் என்று அவள் ஏன் புரிந்து கொள்ளவில்லை?

அவர் சில சமயங்களில் மனத் தெளிவுடன் இருக்கும் பொழுது மெஹ்ருன்னிஸாவிடம் தனக்கு அப்படி என்ன ஈர்ப்பு என்று யோசித்தார். அவர் திட்டத்திலிருந்த நியாயத்தைப் பற்றி மனதிற்குள் அலசிப் பார்த்தார். ஆனால், மெஹ்ருன்னிஸா எந்தவித நியாயத்திற்கும் கட்டுப்பட்டவளாகத் தோன்றவில்லை. அவர் அரியணைக்காக காத்திருந்ததை விட அதிகம் காலம் அவளை விரும்பிக் காத்துக் கொண்டிருக்கிறார். அவள் வெறும் ஒரு அழகிய பெண் என்பது மட்டுமல்ல, அவர் தலையைச் சிறிது அசைத்தாலோ, கை விரல்களைச் சொடுக்கினாலோ, ஒரு நொடியில் அவரால் பல அழகிய பெண்களைக் கொண்டுவரமுடியும். அவளுடைய உறுதியான, சுதந்திர மனதை அவர் நேசித்தார், அவளுடைய

மாறாத தன்னம்பிக்கை, அவள் செயல்களில் அவள் காட்டும் உறுதியும், நம்பிக்கையும் அவரைக் கவர்ந்தன. அவள் சட்ட திட்டங்களில் நம்பிக்கை வைக்கவில்லை. அவைகளை அலட்சியப்படுத்தினாள்.

ஒருநாள், அவர் மெஹ்ருன்னிஸாவுடன் தனித்து இருக்கையில் ஆழ்ந்த யோசனையில் இருந்தார். "என்னிடம் கூறுங்கள்." அவள் தூண்டினாள். "உங்கள் சுமையை நானும் பகிர்ந்து கொள்கிறேன்."

"ஆங்கிலேய அரச தூதர் வில்லியம் ஹாக்கின்ஸ், அரச சபையில் இருப்பதில் போர்த்துகீசிய இயேசு இயக்கத்தைச் சேர்ந்த பாதிரிகளுக்கு விருப்பமில்லை." ஜஹாங்கீர் கூறினார்.

"ஏன்?" மெஹ்ருன்னிஸா வினவினாள். "அவர்கள் மதப் பிரசாரம் செய்ய இங்கு வந்திருக்கின்றனர். ஹாக்கின்ஸ் வாணிபம் செய்ய வேண்டி வந்திருக்கிறார். அவர்களிடையே முரண்பாடு இருக்க முடியாதே!"

"நமது வணிகக் கப்பல்கள் அரபிக் கடலில் பிரயாணம் செய்கையில் அவைகளுக்குப் பாதுகாப்புத் தருவதாக ஹாக்கின்ஸ் கூறுகிறார்."

'ஓ' கண்களில் ஒளி படர மெஹ்ருன்னிஸா கூறினாள். "அது போர்த்துகீசியரின் அதிகாரப் பகுதியில் நுழைவது போலாகும். தற்சமயம் அவர்கள் நம் கப்பல்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்றனர். போர்த்துகீசியர்கள் அளவுக்கு மீறித் திமிருடன் நடந்து கொள்கின்றனர். போட்டி ஏதும் இல்லாமல் அவர்கள் மட்டுமே நம் கப்பல்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பார்களேயானால், இந்த சாம்ராஜ்ஜியமே அவர்கள் இச்சைக்கு உடன்பட்டு நடக்க வேண்டியிருக்கும். நீங்கள் ஹாக்கின்ஸ்ஸை விட்டு விடக் கூடாது. உபயோகித்துக் கொள்ளுங்கள்."

ஜஹாங்கீர் முகவாயைத் தடவிக் கொண்டார். "அது அவ்வளவு சுலபமல்ல, மெஹ்ருன்னிஸா, ஆங்கிலேயப்போர் வீரர்கள் சூரத்தில் தறி கெட்ட முறையில் நடந்து கொண்டதையும், அவர்கள் ஜனங்களை அடித்துக் துன்புறுத்திக்,

கொள்ளை அடித்தது பற்றியும் முகாரப் கான் எழுதித் தெரிவித்துள்ளார். தான் ஆங்கிலேய அரசின் பிரதிநிதி என்று ஹாக்கின்ஸ் கூறினாலும் — விரல் நகங்களில் அழுக்குடனும், சத்தம் போட்டுச் சிரிப்பதும், மரியாதை தெரியாத வரும், நல்ல பழக்கங்களும் இல்லாத ஒரு சாதாரண வணிகர் தான்."

"அப்படியானால் ஏன் இத்தனைக் காலம் அவரை உங்களுடன் வைத்திருக்கிறீர்கள்?"

"அவர் என்னை மகிழ்விக்கிறார். துருக்கிய மொழி நன்றாகப் பேசுகிறார். அவருடன் பேசுகையில், மொழி பெயர்ப்பாளர் அவசியமில்லை. அவர் அவையில் பேசும் போது நீ கேட்டிருக்கிறாயா? தந்திரங்கள் கற்ற ஒரு குரங்கு போல் அவர் நடந்து கொள்கிறார்."

மெஹ்ருன்னிஸா அமோதித்தாள். "அப்படியானால் அவருக்குப் புதிய தந்திரம் சற்றுக் கொடுங்கள், மாட்சிமை பொருந்தியவரே!" ஜஹாங்கீரின் தோள் மேல் அவள் ஒரு கையை வைத்தாள். "என்னிடம் கூறுங்கள். முகாரப் கான் சமீபத்தில் கத்தோலிக்க மதத்திற்கு மாறியவன் அல்லவா?"

"நானும் அது பற்றிய வதந்தியைக் கேள்விப் பட்டேன்" ஜஹாங்கீர் மெதுவாகக் கூறினார். "தன்னை இப்பொழுது 'ஜான்' என்று கூறிக் கொள்கிறானாம். போர்த்துகீசியப் பாதிரிகளின் தூண்டுதலால் அவன் அவ்வாறு நடந்து கொள்கிறான் என்று நீ நினைக்கிறாயா?"

"அவன் உண்மையைத் திரித்துக் கூறுவதாகவும் இருக்கலாம், மாட்சிமை பொருந்தியவரே! வெளிப்படையாக உங்களிடம் பொய் சொல்லும் தைரியம் அவனுக்கு இருக்க முடியாது. ஹாக்கின்ஸ் நம் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்க உறுதி தந்தால், நீங்கள் அந்த விஷயத்தையும் பரிசீலிக்க வேண்டும்."

மெஹ்ருன்னிஸாவுடன் பேசிய பிறகு ஆழ்ந்த யோசனையுடன் ஜஹாங்கீர் அரண்மனைக்கு அன்றிரவு திரும்பிச் சென்றார். அவள் கூறிய விஷயங்கள் அவருக்கு முன்பே தெரியும். அது பற்றி நீண்ட நேரம் சிந்தித்தும் இருக்கிறார்.

அவரை ஆச்சரியப்படுத்திய விஷயம் என்னவெனில் மெஹ்ருன்னிஸா — ஒரு சாதாரணப் பெண் — சாம்ராஜ்ஜியத்தின் அலுவல்கள் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறாள், ஒரு சாம்ராஜ்ஜியத்தின் அரசியலில் இத்தனை ஈடுபாடு கொண்டிருக்கிறாள் என்பதுதான். அவளுடன் இப்படிப் பேச முடிந்தது அவருக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவளுடன் விவாதிப்பதில் ஒரு பாதுகாப்பு இருக்கிறது. அவரது மற்ற மந்திரிகள் போல் அவளுக்கு இதில் சொந்தப் பயன் ஏதுமில்லை, அவர் விருப்பம் தவிர வேறு சொந்த விருப்பமும் இல்லை. ஆகையால், அவர் மனதில் சிந்தித்தது போல், அவள் கூறியது போலவே செய்தார். போர்த்துகீயர்கள் அவரை மகிழ்விக்கவேண்டி மேலும் பரிசுப் பொருட்களும் வெகுமதிகளும் கொண்டு வந்து தருவதைக் கண்டு வேடிக்கையுடன் பார்த்துக்கொண்டிருந்தார்.

கடந்த நான்கு வருடங்களாக அவருக்கு மெஹ்ருன்னிஸாவைப் பற்றிய விவரங்கள் தெரியாது என்று அவள் எண்ணிக் கொண்டிருப்பது தவறு. அவள் பற்றிய எல்லா விவரமும் அவர் அறிவார். அவள் மேல் எப்பொழுதும் ஒரு கண் வைத்திருந்தார். அவள் பர்த்வானிலிருந்து ஆக்ரா வருகையில் அவள் பாதுகாப்பிற்காக ஆயுதம் தாங்கிய போர் வீரர்களை அனுப்பியிருந்தார். ருக்கையாவிடம் அவளை பாதுகாக்கச் சொல்லி கேட்டுக் கொண்டார். பெரிய சக்ரவர்த்தினியும் மெஹ்ருன்னிஸாவிடம் அன்புடையவள். ஆதலால், அதற்குச் சம்மதித்தாள். அந்தப்புரத்தின் சுவர்களுக்குள் அவள் ருக்கையாவின் தேவைகளை கவனிப்பவளாக வேலை செய்தாலும் அவருடைய பாதுகாப்பில்தான் இருந்தாள். ஏனெனில், அரண்மனைகள், பெரிய முற்றங்கள், அழகிய தோட்டங்கள், அதில் வசிக்கும் பலவித மக்கள் என உள்ள அந்தப்புரமும் அவருடைய சொத்துதான், அவர் பாதுகாப்பில் உள்ளதுதான்.

புலி நின்று ஜஹாங்கீரைப் பார்த்தது. மனிதனும் மிருகமும்— வெற்றி கொண்டவரும், வெற்றி கொள்ளப் பட்டதும்— ஒருவரை ஒருவர் வெறித்துப் பார்த்தனர். அதைத் தொடுவதற்காக அவர் ஒரு கையை நீட்டி உடனே பின்னுக்கிழுத்துக் கொண்டார். அது சாதுவான அன்புக்குரிய

பூனை போல் தோன்றியது. அதன் தோற்றம் அவரை ஏமாற்றி விட்டது. உடனே அந்தப் புலி பற்களைக் கடித்தவாறு உறுமிக் கொண்டு மீண்டும் அந்தப் பெண்புலியின் வாசத்தை உணர்ந்தவாறு முன்னும் பின்னும் நடக்கத் தொடங்கியது.

ஜஹாங்கீர் பெருமூச்சு விட்டவாறு தலையை குனிந்து கொண்டார். இரவில் சரியாகத் தூக்கம் வருவதில்லை. சில மணி நேரங்களே அசதியால், அவர் ஓய்வு எடுத்துக் கொள்ள முடிந்தது. அப்பொழுதும் மெஹ்ருன்னிஸா அவர் கனவுகளில் வந்து அவரை ஆட்டிப் படைத்தாள். ஒருவேளை இன்னும் சில காலம்முன்பே அவர் அவளை சந்தித்திருக்க வேண்டும். அலிகுலியின் மரணத்திற்கு அவர்தான் காரணம் என்று அவள் குற்றம் சாட்டுவாளோ என்ற அச்சம் அவரைத் தயங்கவைத்தது. ஒருவேளை அதுதான் அவரது பலவீனமோ?

தன் பெரிய தலையை பின்னுக்குத் தள்ளிப் புலி மறுபடியும் உறுமியது. ஆ...ங்! அந்தச் சப்தம் கூண்டின் இரும்புக் கம்பிகளை ஆட்டுவித்தது. ஜஹாங்கீர் நடுங்கினார். முடிவில் பெண் புலி தன் கூண்டில் படுத்தவாறு மெல்ல, மெதுவாக அந்த உறுமலுக்கு எதிரொலியாக முனக ஆரம்பித்ததை அவர் பார்த்தார்.

காவலர்கள் தரை வரை குனிந்து வணக்கம் செலுத்துவதைக் கவனிக்காமலே சக்ரவர்த்தி எழுந்து தன் அரண்மனையை நோக்கிச் சென்றார். மெஹ்ருன்னிஸாவை இனிமேலும் அவர் இழக்கக் கூடாதென்பதை அவர் உணர்ந்தார். அவர் அரியணையை அடைய மிகவும் தீவிரமாக இருந்தார். அந்தத் தீவிரம் அவரையே பயமுறுத்தியது. அதற்கு மாறான எதுவும் அவரால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. இப்பொழுது மெஹ்ருன்னிஸாவை அடைய அவர் வெகு தீவிரமாக ஆசைப்படுகிறார். அவளில்லாத வாழ்க்கையை அவரால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை.

"சக்ரவர்த்தி வருகிறார்! சக்ரவர்த்தி வருகிறார்!" மிகுந்த கிளர்ச்சியுடன் அவளது சிறிய கைகளை வீசியவாறு லாட்லி அறைக்குள் ஓடி வந்தாள்.

தன் கையிலிருந்த புத்தகத்திலிருந்து தலையை உயர்த்தித் தன் மகளைப் பார்த்து முகத்தில் புன்னகையுடன் மெஹ்ருன்னிஸா கேட்டாள் "அரசரின் அலங்காரப் படை வருவதை நீ பார்த்தாயா?"

"ஆமாம்," மூச்சிறைக்க லாட்லி பதிலளித்தாள். "ஓ, அம்மா, எனக்கு அவர் என்ன கொண்டு வந்திருப்பார் என்று நீ நினைக்கிறாய்?"

"குழந்தாய், நீ இப்படி வெட்கமில்லாமல் பரிசுப் பொருள்கள் எதிர்பார்க்கக் கூடாது. இப்பொழுது போய் உன்முகத்தையும் கைகளையும் சுத்தம் செய்து கொள். சக்ரவர்த்தி முன் நாம் இப்படிச் செல்லக்கூடாது — ஞாபகம் இருக்கட்டும், நான் கற்றுக் கொடுத்தபடி 'கோனிஷ்' முறைப் படி வணங்க வேண்டும்."

லாட்லி சட்டென்று 'கோனிஷ்' செய்து காட்டினாள். "இது சரியா?"

"ஆமாம்" மெஹ்ருன்னிஸா கூறினாள். "இப்பொழுது போ." பிர்தௌஸியின் கவிதைகள் அடங்கிய புத்தகத்தைமூடி வைத்துவிட்டு அவள் எழுந்து முன் முகப்பிற்குச் சென்றாள்.

நடுப்பகல் சூரியன் அந்த அறையின் முன் முகப்புப் பகுதியில் உஷ்ணத்தை வாரியிறைத்துக் கொண்டிருந்தான். மெஹ்ருன்னிஸா ஒரு கையைக் கண்களுக்கு மேல் வைத்து மறைத்துக் கொண்டு நோக்கினாள். பதுங்கும் புலியின் படத் துடன் கூடிய சக்ரவர்த்தியின் கொடியின் சிவப்புப் பட்டுத் துணியில் பட்டுச் சூரிய ஒளி சிதறி விழ வந்து கொண்டி ருக்கும் சக்ரவர்த்தியின் படகைப் பார்த்தாள். அவள் தளர்ந்து போய் முகப்பின் சட்டத்தில் சாய்ந்து கொண்டாள். அவர் ஏன் வருகிறார்?

கடந்த இரு வாரங்கள். மெதுவாக, துக்கத்துடன், ஜஹாங்கீரின் நினைவுகளுடன், அவர்கள் சந்திப்புகள் பற்றிய எண்ணங்களுடன் கழிந்தது. முக்கால்வாசி நேரம் அவள் தனிமையில் இருக்க, அவள் தாயும் தந்தையும் விட்டு விட்டனர். சக்ரவர்த்தி கோபத்துடன் திரும்பச் சென்ற இரண்டு நாட்கள் கழித்து, அவள் தந்தை ஒருமுறை

அவளைப் பார்க்க வந்தார். அவர்களுக்காக, அவர்கள் முன்னிலையில் சாதாரணமாக இருப்பதுபோல் நடிக்க மெஹ்ருன்னிஸா முயன்றாள். தவறு ஏதும் நடக்காதது போல் நடித்துக் கொண்டு சிரித்தவாறு நடமாடுவதற்கோ, சாப்பிடவோ, தூங்கவோ செய்வது மிகவும் கடினமாக இருந்தது. லாட்லியைச் சமாதானப்படுத்துவதுதான் மிகக் கஷ்டமாக இருந்தது. ஒரு பெட்டி நிறையக் கோலி குண்டுகள், ஒரு மரக்குதிரை பொம்மை, விளையாடப் பித்தளைப் பாத்திரம், தட்டுகள் என ஏதாவது ஒரு பரிசுப் பொருளை ஜஹாங்கீர் எப்பொழுதும் அவளுக்காக எடுத்து வருவார். அவர் மறுபடியும் வராத பொழுது லாட்லி அவரைப் பற்றி விசாரிக்க, மெஹ்ருன்னிஸா ஏதோ சொல்லி அவளை சமாதானப்படுத்தினாள். "அவர் ஒரு சக்ரவர்த்தி, கண்ணே! அவர் பெரிய மனிதர். அவருக்குப் பலவித அலுவல்கள் உள்ளன."

வெள்ளிக் கோடிட்டது போல் அந்தப் படகு தண்ணீரைக் கிழித்துக் கொண்டு யமுனை நதியில் முன்னேறி வந்தது. மெஹ்ருன்னிஸாவைப் பார்க்கப் போகும் துடிப்பில் சக்ரவர்த்தி படகின் முன்பக்கம் நின்று கொண்டிருந்தார். அவளைப் பார்த்தவுடன் பதினைந்து வயது குறைந்த ஒரு காதலர் போல் கைகளை வீசினார். மெஹ்ருன்னிஸாவும் கைகளைத் தூக்கினாள். அவரைப் பார்க்கையிலேயே ஏற்பட்ட கிளர்ச்சியில் அவளுக்கு முதுகில் மயிர் கூச்ச லெடுத்தது. அவள் மனதை வேதனைப் படுத்த மறுபடியும் வருகிறாரா? மற்றொரு ஜீரணிக்க முடியாத கோரிக்கை கொடுப்பதற்காக அல்லது அவள் சம்மதிக்காமல் மறுக்கத் தூண்டும் மற்றொரு சந்தர்ப்பம் கொடுப்பதற்காக?

மெஹ்ருன்னிஸா திரும்பி நகர்ந்தாள். அவள் அவரை மறுத்து ஒதுங்கிய பின், அடுத்த நாள் தன் நல்லெண்ணத்தை சக்ரவர்த்தி மறைமுகமாகத் தெரியப் படுத்தியிருந்தாலும், கடந்த இரண்டு வாரங்களாக அவள் எதுபற்றியும் அதிகம் சிந்தித்துப் பார்க்கத் துணியவில்லை.

அவள் தந்தையையும் சகோதரன் அபுல்ஹாசனையும் ஜஹாங்கீர் மக்கள் சபைக்கு அழைத்திருந்தார். அங்கு முழு

சபையின் உறுப்பினர்கள் முன், அவள் தந்தைக்குக் கிடைக்கும் மான்யத்தை ஆயிரத்து எண்ணூறு குதிரைகளாக உயர்த்திக் கௌரவித்தார். அவ்வாறே, அவள் சகோதரனுக்கும் இதிகாத் கான் (Itqad Khan) என்ற பட்டப் பெயரைக் கொடுத்து, அவன் மான்யத்தையும் அதிகரித்திருந்தார்.

அன்று மாலை முதன் முறையாகக் கியாஸ் சக்ரவர்த்தியைப் பற்றி அவளிடம் பேசினார். சக்ரவர்த்தியை அவள் சந்திக்கையில் பெண் துணை இருக்க வேண்டிய அவசியம் பற்றி, அவளுக்கும் அவள் தந்தைக்கும் இடையே எழுந்த விவாதத்திற்குப் பிறகு, அவள் தந்தை அவளிடம் அதிகம் பேசவில்லை. அவளும் ஜஹாங்கீரின் நினைவில் மூழ்கி இருந்ததால் ஒருவரிடமும் — ஏன், தந்தையிடம் கூட அதிகம் பேசவில்லை.

துருக்கிய எழுத்துக்களை அவள் லாட்லிக்குக் கற்பித்துக் கொண்டிருக்கையில், அவர் அவள் அறைக்குள் வந்தார். தன் மகளை முதல் முறையாகப் பார்ப்பது போல் அவர் அவளைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். அவளது நளினமான அசைவுகள், அமைதியான தோற்றம், லாட்லியின் தவறுகளைச் சுட்டிக் காட்டுகையில் எழுந்த அவளது இனிமையான குரல் முதலியவற்றை அவர் கவனித்துப் பார்த்தார். சக்ரவர்த்தி இவளிடம் ஏன் இவ்வாறு காதல் கொண்டுள்ளார் என்பதை அவரால் சுலபமாக புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால், சக்ரவர்த்தியைப் பற்றியப் பெரிய அபிப்பிராயம் ஒன்றும் கியாஸிற்குக் கிடையாது. அவரது காதல் நடவடிக்கைகளில் ஜஹாங்கீர் அடிக்கடி மனதை மாற்றிக்கொள்ளக் கூடியவர். மெஹ்ருன்னிஸாவின் மீது அவருக்கிருந்த ஆசை இத்தனை நாள் நீடித்ததே கியாஸிற்கு அதிசயமாகத் தோன்றியது. அதே சமயம், தன் மகள் மிகவும் அழகானவள், தன் வயதிற்கும் குறைந்த இளமையுடன் இருப்பவள் என்றாலும், சக்ரவர்த்திக்கு அந்தப்புரம் நிறைய அவர் கூப்பிட்ட நொடியில் அவரிடம் ஓடி வரப்பல இளம் பெண்கள் உண்டு என்பதையும் அவர் நிதரிசனமாக அறிவார். கியாஸ் தலையை அசைத்துக் கொண்டார். ஒரு

தகப்பனருக்கு அவர் மகளிடமிருக்கும் அதீத அன்பினால் அவர் அவளிடம் மிகுந்த பாசத்துடன் இருக்கிறார். ஆனால், ஜஹாங்கீரை அப்படி வளைத்துப் போட மெஹ்ருன்னிஸாவிடம் என்ன கவர்ச்சி இருக்கிறது?

அதே சமயம் மெஹ்ருன்னிஸாவும் தன் தந்தை அறைக்குள் வருவதைப் பார்த்தாள். "இப்பொழுது போதும், லாட்லி. உன் பாட்டியிடம் செல். நான் உன் தாத்தாவுடன் பேசவேண்டும்."

லாட்லி புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அந்த அறையை விட்டு வெளியேறினாள். மெஹ்ருன்னிஸா கைகளை மடியில் மடித்து வைத்துக் கொண்டு, தந்தை பேச்சை துவங்குவதற்காகக் காத்திருந்தாள்.

"சக்ரவர்த்தி என் மான்யத்தை அதிகரித்துள்ளார். அபுலையும் கௌரவித்துள்ளார்."

"எனக்குத் தெரியும்" அவள் முகத்தில் வெற்றிப் புன்னகை ஒரு நொடி பரவி, மறைந்தது. இது அவள் குடும்பத்திற்குப் பெரிய கௌரவம். இதற்கு அவளுக்குத் தான் நன்றிகூற வேண்டும். இதுவும் அவர்கள் விவாதமிட்டுப் பிரிந்த பிறகு ஜஹாங்கீர் செய்திருக்கிறார். அதை நினைத்தவுடன் அவள் புன்னகை மறைந்தது. அவர் அவளிடம் வராதபொழுது இந்த மரியாதைகளினால் என்ன பயன்?

"மெஹ்ருன்னிஸா, சக்ரவர்த்தி எதற்காக எங்களை இப்படிக் கௌரவித்தார் என்று உனக்குத்தெரியும். இத்தனைக் காலமாக அவர் விருப்பத்திற்கு நீ மறுப்பு தெரிவிப்பது சரியா? அரசரின் ஆசை நாயகியாக இருப்பதில் ஒன்றும் அவமானமில்லை."

ஆச்சர்யத்துடன் மெஹ்ருன்னிஸா புருவத்தை உயர்த்தினாள். "உங்களுக்கு எப்படித் தெரியும்?"

கியாஸ் புன்னகைத்தார். "அவர் சக்ரவர்த்தி, மகளே! அவர் என்ன செய்கிறார், எங்கே போகிறார், என்ன பேசுகிறார் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரியும். அந்தப் புரத்திலிருந்து இந்தச் செய்தி உன் தாயார் காதுக்கு எட்டியது. நீ அந்தப்புரத்தில் சில காலம் இருந்திருக்கிறாய். அங்கு

எதுவுமே இரகசியமில்லை என்று உனக்குத் தெரியும். ஆனால், நீ செய்வது விவேகமானதா? சக்ரவர்த்தியிடமிருந்து அப்படிப்பட்ட சலுகைகள் கிடைப்பதற்குப் பல பெண்கள் உயிரைக் கூட கொடுப்பார்கள்."

"அதை நான் அறிவேன், தந்தையே." மெஹ்ருன்னிஸா மெதுவாகக் கூறினாள். "ஆனால், நான் சக்ரவர்த்தியைப் பற்றி அறிந்து கொண்ட அளவிற்கு உங்களுக்குத் தெரியாது ஓ," அவர் மறுக்க முயற்சிப்பதைத் தடுத்தவாறு அவள் மேலும் கூறினாள். "அவரை ஒரு அரசராக, ஒரு சக்ரவர்த்தியாக நீங்கள் அறிவீர்கள். ஆனால், அவரை ஒரு மனிதராக நான் அறிவேன். அவருக்கு மிகவும் தேவை —ஒரு வைப்பாட்டி அல்ல— அதைப் போன்ற பெண்கள் பலர் அவருக்குக் கிடைப்பார்கள். அவருக்குத் தேவை— அன்புடன் அவரை வழி நடத்திச் செல்ல, அவருடன் எப்பொழுதும் கூடவே இருக்கக் கூடிய ஒரு பெண். பதினேழு வருடங்களுக்கு முன்பு சக்ரவர்த்தி என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பியது உங்களுக்கு நினைவிருக்கிறதா, அப்பா?"

"அப்பொழுது அது சாத்தியமில்லாததொன்று, நிஸா."

"அப்பொழுது நான் அவரை மணந்துகொள்ள விரும்பினேன். எப்பொழுதுமே அதை நான் விரும்பினேன் — அவர் இளவரசராக இருக்கையில். மேலும்..." அவள் சிறிது தயங்கியவாறு தொடர்ந்தாள். "அவர் சக்ரவர்த்தி ஆன பின்பும்... ஒரு சாதாரண ஆசை நாயகியாக இருப்பதற்காக, அந்த விருப்பத்தை நான் ஏன் இப்பொழுது கைவிட வேண்டும்?"

அவள் கூறிய வார்த்தைகள் கியாஸிற்குப் புரிவதற்கு சிறிது அவகாசம் கொடுக்கும் வகையில், மெஹ்ருன்னிஸா லாட்லியின் புத்தகத்தைத் திறந்து அதன் பக்கங்களைப் புரட்டினாள். அவள் அவருக்கு மனைவியாக நேர்ந்தால், அவள் அவருக்கு எல்லாமாக இருப்பாள் — ஒரு சக்ரவர்த்தினியாக மட்டுமல்லாது, ஒரு ஆசை நாயகியாக, ஒரு தோழியாக, ஒரு நல்ல மனைவியாக...

"எனக்குத் தெரியாது" முகத்தில் வருத்தம் தெரிய கியாஸ் கூறினார். "இளவரசர்தான் உன்மேல் ஆசை கொண்டார் என்று எண்ணியிருந்தேன்... நீ கூட அவரை விரும்பியது எனக்குத் தெரியாது."

"அதனால்தான் அலிகுலியை மணந்து கொள்ள மறுத்தேன். ஆனால், இதெல்லாம் பல வருடங்களுக்கு முன்பு, அதற்குப் பிறகு பல விஷயங்கள் நடந்துவிட்டன."

கியாஸ் அயர்ச்சியுடன் அமர்ந்து கொண்டார். இதை எப்படி அவரால் உணர முடியாமல் போனது? அவருக்கு மாத்திரம் இது தெரிந்திருந்தால், சக்ரவர்த்தி அக்பருடன் பேசத் தைரியம் இருந்திருக்கலாம். அது மறுக்கப்படக்கூடிய விஷயமாக இருந்தாலும், அக்பர் காதுகொடுத்துக் கேட்டிருப்பார். பதினேழு ஆண்டுகளுக்கு முன், அவர் இருந்த நிலையில், தன் மகளின் சந்தோஷத்தை விட அக்பரின் நல்ல அபிப்பிராயத்திலிருந்து இறங்கி விடுவோமோ என்ற பயத்தில், இது பற்றி அக்பரிடம் பேசியிருக்க மாட்டார் என்பதும், கியாஸ் தன்னைப் பற்றி அறிவார். ஆனால், அவரும் ஒரு தவறு செய்யக் கூடிய மனிதர்தான். தன் நடத்தையால் கௌரவத்தை இழந்தவர், இருந்தாலும் அவரைச் சார்ந்திருந்த மனிதர்களால் மன்னிக்கப் பட்டவர் என்று அவர் தன்னைப் பற்றி நினைத்திருந்தார். அவர் பொக்கிஷ சாலையிலிருந்து பணத்தை மோசடி செய்த பொழுது ஜஹாங்கீர் அவரை கண்டித்திருந்தார். அதனால் ஏற்பட்ட அவமரியாதைகளை, அவர் குழந்தைகள் அதிகம் பாராட்டவில்லை. மேலும், அஸ்மத் — அவரை அவள் சந்தேகப்பட்டதே இல்லை. அவருக்குத் தன்னிடம் இருக்கும் நம்பிக்கையைவிட அவளுக்கு அவர்மேல் அதிக நம்பிக்கை இருந்தது. மற்றவர்கள் இவ்வாறு அவரை அநுசரித்து நடந்து கொண்டு வந்த மாதிரி இனிமேல் அவரும், அவரைச் சார்ந்தோர்களுக்கு நல்லதையே செய்வார். இன்றைய மனிதன் கியாஸ் தன் மகளின் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்க மாட்டார்.

"மெஹ்ருன்னிஸா, உன்னிடம் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு. அது உனக்கே தெரியும். உன்னைப் போன்ற சாமர்த்தியசாலியான, அறிவு மிகுந்த குழந்தை வேறு எந்தத் தகப்பனாருக்கும் இருக்க முடியாது" கியாஸ் சிறிது நிறுத்திவிட்டுத் தொடர்ந்தார். "இந்த விஷயம் பற்றி இனி நான் பேசமாட்டேன். உன் விருப்பம்போல் இது நடக்கும்."

"அப்பா..." மெஹ்ருன்னிஸா தயங்கினாள். அவரிடம் மேலும் விவரமாகக் கூறவேண்டும் என்று ஒரு பக்கமும், மேலும் இது பற்றிப் பேசவேண்டாம் என்று மனதின் மற்றொரு பக்கமும் அவளை அலைக்கழித்தது. அவள் ஜஹாங்கீரிடமிருந்து முற்றிலும் விலகி விட்டால் அவள் குடும்பத்திற்கு இதனால் நஷ்டம் ஏற்படக் கூடும். சக்ரவர்த்தி நேரிடையாக அவர்களைப் பழிவாங்க முற்படாவிடினும், அரச சபை வதந்திகள் செய்துவிடும். தன்னிச்சையாகச் செயல்படும் அவர் பெண்ணின் நடத்தையால் இத்தனை வருடங்களாக அவள் தந்தை சேர்த்து வைத்திருந்த எல்லாமே அழிந்துவிடும்.

"இல்லை" கியாஸ் கூறினார். "எனக்குப் புரிகிறது. ஆனால், நீ சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று விரும்பு கிறேன், நிஸா. வேறு எதுவுமே எனக்குப் பொருட்டில்லை. நாம் இந்தியாவை விட்டுச் செல்ல நேரிடுமாயின், வேறு எங்காவது குடி போவோம். ஒருமுறை அப்படிச் செய்திருக் கிறேன் மறுபடியும். அவ்வாறு செய்வது பெரிய கஷ்ட மாகாது."

அவர் பொய் கூறுகிறார் என்பதை உணர்ந்து மெஹ்ருன்னிஸா வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள். அதே சமயம், அவர் அவ்வாறு கூறியதற்கு மனதில் நன்றி செலுத்தினாள்.

பிறகு, மறுபடியும் சக்ரவர்த்தியிடமிருந்து வெறும் அமைதி. முதலில் எழுந்த அந்தச் சிறிய வெற்றிப் பெருமிதம் சீக்கிரமே சந்தேகத்தில் குறைய ஆரம்பித்தது. அவர் ஏன் மேற்கொண்டு எதுவும் செய்யவில்லை? ஏன் அப்பாவையும் அபுலையும் கௌரவித்து விட்டுப் பின் ஒன்றும் கூறாமல் இருக்கிறார்? அது ஒரு வழி அனுப்பும் வெகுமதியா?

மாடி முகப்பிலிருந்து மெஹ்ருன்னிஸா குனிந்து பார்த்தாள். அந்தப் படகு அவள் தந்தையின் வீட்டுக்கு வெளியில் இருந்த துறையில் நிற்க, ஜஹாங்கீர் அதிலிருந்து குதித்து இறங்கினார். அவர் வீட்டிற்குள் நுழைவதைப் பார்த்து, மெஹ்ருன்னிஸா தன் அறைக்குச் சென்று அவருக்காகக் காத்திருந்தாள். சட்டென்று அவளுக்கு மிகவும்

அசதியாக இருந்தது. அவளிடமிருந்து எத்தனை எதிர் பார்ப்புகள்! எச்சரிக்கையாக இருக்கும்படி அவள் தந்தை ஆலோசனை கூறினார். சக்ரவர்த்தி கூறுவதை ஏற்றுக் கொள்ளச் சொன்னார். சில தினங்களுக்கு முன், அபுல் கூட ஏதோ அறிவுரை கூறினான். பெரிய சக்ரவர்த்தினிகூட ஒரு காரசாரமான கடிதம் அனுப்பி இருந்தாள். 'அவள் என்ன தனிச் சிறப்புப் பெற்றவளா? உன் நடத்தையால் மற்றவர் களைச் சோர்வடையச் செய்யாதே, மெஹ்ருன்னிஸா என்பது போல்! அந்தப்புரத்தில் அவள் கை ஓங்க வேண்டும் என ருக்கையா விரும்பினாள். மெஹ்ருன்னிஸா மூலம் அது சுலபமாகும் என அவள் நினைத்தாள். ஜகத்கோஸினியின் அதிகாரம் குறைவதை விட, வேறு ஒன்றும் ருக்கையாவிற்கு அதிக ஆனந்தத்தைக் கொடுக்காது. மெஹ்ருன்னிஸா இந்த நல்ல சந்தர்பங்களை எல்லாம் அலட்சியப்படுத்துவதாக அவளுக்குத் தோன்றியது.

பிறகு, சில தினங்களுக்கு முன்பு, சக்கரவர்த்தினி ஜகத் கோஸினியிடமிருந்து ஒரு கூடை மாங்காய்கள் ஹோஷியார் கான் மூலம் அவளுக்கு வந்தது. அவள் பெருந்தன்மையோடு லாட்லிக்குக் கொடுக்க வந்த வளையல்கள் போல், இதுவும் மெஹ்ருன்னிஸாவை அவமதிப்பதற்காகச் செய்த செயல். நடந்தேறாத கனவிற்காகப் பழுக்காத பழங்கள்!

ஆனாலும், பரவாயில்லை, மெஹ்ருன்னிஸா எண்ணி னாள். யார் எப்படி விரும்பினாலும் இந்த விஷயம் அவள் விருப்பப்படிதான் நடக்கும்... அசதியில் அவள் தோள்கள் தொய்ந்து போகத் தலை சாய்ந்தது. பின்னர், அவள் ஒரு நீண்ட மூச்சு விட்டுத் தன்னைச் சுதாரித்துக் கொண்டாள்.

நாற்பத்தி இரண்டு வயதான சுவடே தெரியாமல் குதி நடைபோட்டபடி ஜஹாங்கீர் அவள் அறைக்குள் நுழைந்தார்.

"இன்ஸாப் அல்லா, மாட்சிமை பொருந்தியவரே!"

ஜஹாங்கீர் ஆவலுடன் அவள் அருகில் வந்து அவள் கைகளைப் பற்றிக் கொண்டார்.

"பெண்களின் சூரியன்" அவள் கைகளை இறுகப் பிடித்தவாறு ஜஹாங்கீர் ஆசையுடன் கூறினார். "உன் பெயர் உனக்கு வெகு பொருத்தமாக உள்ளது. ஆனால், உனக்கு நான் வேறொரு பட்டம் கொடுக்கப் போகிறேன், என் அன்பே!"

மெஹ்ருன்னிஸா கண்களை உயர்த்தி, அவர் கண்களைச் சந்தித்தாள்.

"உன்னை என் ஆசை நாயகியாக இருக்கக் கூறியது தவறு என்று உணர்ந்து கொண்டு விட்டேன்." முகம் சிவக்கச் சக்ரவர்த்தி கூறினார். "நான்..." வார்த்தையைத் தேடித் தயங்கினார். அந்த வார்த்தைகளை அவர் உபயோகித்ததே இல்லை, "நான் மன்னிப்புக் கோருகிறேன்."

அவள் ஒன்றும் பேசாமல் அவரையே பார்த்தவாறு இருந்தாள்.

"அது எவ்வளவு முக்கியமானது என்று நான் அறிய வில்லை. நான் எண்ணிப் பார்க்கவில்லை... நீ என்னுடன் இருப்பதே போதுமானதென்று நினைத்தேன்." ஜஹாங்கீர் முகம் சிறிது வெளுத்தது. "ஆனால், இது முக்கியம்தான். உனக்கு ஒரு தனிப் பதவி இல்லாவிடில் அந்தப்புரத்தில் உனக்குச் சரியான கௌரவம் இருக்காது. என் சக்ரவர்த்தினி யாக வருகிறேன் என்று சொல். சொல்வாயா? தயவு செய்து கூறுவாயா?" அவர் அவளை ஆவலுடன் பார்த்தார்.

கடைசியில், அவள் கூறாமலே அவர் புரிந்து கொண்டார். இந்த ஒரு வார்த்தைக்காகத் தான் அவள் காத்திருந்தாள். இருந்தாலும், அதைக் கேட்டவுடன் சுற்றிலும் எல்லாம் மறைந்து, அவள் இதயம் மார்பில் படபடவென்று மோதிக் கொண்டது. சக்ரவர்த்தி தொடர்ந்து பேசுகையில் அவளால் அதை உணரக் கூட முடியவில்லை.

"என் மனைவியாக இருக்கிறேன் என்று சொல், மெஹ்ருன்னிஸா!"

ஜஹாங்கீரின் கைகளைப் பிடித்தவாறு, அறையின் நடுவில் அசையாமல் மெஹ்ருன்னிஸா நின்றிருந்தாள். அவர் கள் சந்திக்கத் தொடங்கியது முதல், அவரது மனைவியாக

ஆக வேண்டி அவளே, அவரிடம் கேட்பதில்லை என்பதில் அவள் உறுதியாக இருந்தாள். ஏனெனில், அது அவருக்கு ஒரு சாதாரண விஷயம். அவளை விரும்புவது, அவளைக் கேட்பது என்பது அவரிடமிருந்து வர வேண்டும் என்று அவள் எதிர்பார்த்தாள். இப்பொழுது முடிவில் அவரே கேட்டுவிட்டார். அவள் அவரை மறுபடியும் பார்த்தாள். ஜஹாங்கீரின் கண்களில் ஆழ்ந்த, நீடித்த காதலைத் தவிர வேறு எதுவுமில்லை. அவளைத் தன் மனைவியாக இருக்கும் படி, அவர் சாதாரணமாகக் கேட்கவில்லை, அவளுக்கு அவர் தன் உயிரையே கொடுக்கிறார்.

"மாட்சிமை பொருந்திய தங்களின் ஆணைக்கு நான் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும்." மிகவும் மெல்லியதாக ஒலித்த அவள் குரலை, அவர் குனிந்து கேட்க வேண்டியிருந்தது.

பக்கத்திலிருந்த சாய்வு மெத்தையில் ஜஹாங்கீர் அமர்ந்து கொண்டு கைகளை நீட்டினார். "என் அருகில் வா!"

மெஹ்ருன்னிஸா அவர் கையை எடுத்துவிட்டு, அவர் மடியில் அமர்ந்து, தோள்களில் சாய்ந்து கொண்டு, தன் தலையை அவர் தலையுடன் இணைத்து வைத்தவாறு அமர்ந்தாள். அவர் அவள் கைகளைத் தடவிக் கொடுத்தவாறு அவளிடமிருந்து வந்த சுகந்தத்தை அநுபவித்தார். அவள் சூடியிருந்த மல்லிகைப் பூவின் மணம், கற்பூரத் தைலம் மற்றும் வாசனைத் தைலங்கள் தேய்த்து அவள் குளித்தி ருந்ததினால் வந்த நறுமணம், இவற்றில் மெய்மறந்தார். அவள் அவர் கைகளில் நிறைந்திருந்தாள். அவர் உலகத்தை நிரப்பினாள். அவளை ஒரு பொழுதும் விட்டுவிட அவருக்கு மனமில்லை. இணைந்திருக்கையில் தோன்றிய பாதுகாப்பு உணர்ச்சியில் திளைத்து இருவரும், அவ்வாறே சிறிது நேரம் அமர்ந்திருந்தனர்.

"நான் பயந்திருந்தேன்..." ஜஹாங்கீர் சட்டென்று தொடங்கினார்.

"நீங்கள் பயந்தீர்கள்? நான் மறுத்து விடுவேன் என்றா?" அவளுள் சிரிப்பு கொந்தளித்து எழுந்தது. இப்படிப்பட்ட ஆனந்தமும் இருக்கமுடியுமா?

"அலிகுலியைக் கொலை செய்யச் சொல்லி, நான் உத்திர விடவில்லை, மெஹ்ருன்னிஸா. அதை நீ புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், குத்புதீன் கோக்காவிற்கு அப்படிப்பட்ட உத்திரவு நான் கொடுத்ததாக அரசசபை நிகழ்ச்சிக் குறிப்புகள் தெரிவிக்கின்றன, ஆனால்..."

"நான் அங்கிருந்தேன், மாட்சிமை பொருந்தியவரே!" மெஹ்ருன்னிஸா நிதானமாகக் கூறினாள். "அந்தச் சம்பவம் நடக்கையில் நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அலிகுலி தான் முதலில் வாளை எடுத்தான். உங்கள் ஆணைக்குக் கீழ் படியாததற்காக நீங்கள் அலிகுலியைக் கொலைச் செய்யச் சொன்னதாக வதந்திகள் இருந்த போதிலும், நான் அதை நம்பவில்லை." கண்களில் விஷமத்தனம் மிளிர, அவள் மேலும் அவர் அருகே நெருங்கினாள். "நான் மற்றொரு கணவனை அடையப் போகும் நேரத்தில், முதல் கணவனைப் பற்றிப் பேசுவது மங்களகரமானதல்ல."

ஒருவருக்கொருவர் வெகு அருகில், ஒரே காற்றைச் சுவாசித்துக் கொண்டு, உதடுகள் இணையும் வகையில் அருகருகே முகம் பதித்தவாறு, பாதிப் படுத்தும் பாதி உட்கார்ந்தவாறும், அந்தச் சாய்விருக்கையில் அமர்ந்திருந்தனர். ஜஹாங்கீர் சிறிது தயங்குகையில், மெஹ்ருன்னிஸா நிமிர்ந்து தனது குளிர்ந்த கரங்களால், அவர் கழுத்தைச் சுற்றி அணைத்துக் கொண்டாள்.

"அந்தப்புரத்துத் தாழ்வாரத்தில் முத்தமிட்டது நினைவிருக்கிறதா?

"ஒவ்வொரு நொடியும் என் நினைவிலுள்ளது." அவளை மேலும் இறுக அணைத்தவாறு, "அதற்கென்ன?" ஜஹாங்கீர் வினவினார்.

மெஹ்ருன்னிஸா தலையசைத்தாள். "பரவாயில்லை, அது பலவருடங்களுக்கு முன்." அவர் நெற்றியில் குழப்பத்தினால் கோடுகள் விழுவதைக் கண்டு அவள், அவர் உதடுகளைத் தன் உதடுகளால் மூடினாள். அவர்களையே அழிக்கும் அளவிற்கு உஷ்ணம் அவர்களிடையே பரவி, மற்ற எல்லா எண்ணங்களையும் அழித்தது. அவர் மேலங்கியின்

கழுத்துப் பட்டைக்குள் அவள் விரல்களை விட்டுத் தடவிய படி அவர் வாசத்தை, அவர் ருசியை அநுபவித்தாள். அவள் ஜஹாங்கீரை விட மனமில்லாமல்,.அவரை இறுகப் பற்றிக் கொண்டாள்.

மூச்சுமுட்டக் கடைசியில் அவர்கள் பிரிந்தபொழுது ஜஹாங்கீர் கூறினார். "நான் உன் தந்தையிடம் போய்ப் பேசுகிறேன்." அவள் கைகளில் உஷ்ணத்துடன் முத்தமிட்டார். "உன்னை நான் திருமணம் செய்து கொள்ள அவர் சம்மதிப்பார் என்று நினைக்கிறாயா?"

கண்களில் உண்மை ஒளிர அவள் அவரைப் பார்த்துச் சிரித்தாள். "அவர் சம்மதிப்பார் என்று நினைக்கிறேன். இத்தனை நாட்களாக அவர் வேறு எதற்காகவும் காத்திருக்கவில்லை, மாட்சிமை பொருந்தியவரே." அவர் மடியிலிருந்து எழுந்திருந்து, அவர் எழுந்திருப்பதற்காக ஒரு கையை நீட்டினாள்.

வெளியே செல்கையில், ஜஹாங்கீர் ஒருக் கணம் திரும்பினார். "எனக்காகக் காத்திரு, மெஹ்ருன்னிஸா."

அவள் மகிழ்ச்சியுடன் மீண்டும் சிரித்தாள். அவருக்கு நினைவில்லாமலிருக்கலாம். ஆனால், அவள் மறக்கவில்லை. இதே வார்த்தைகளை அந்தப்புரத்துப் பூங்காவில் அவளைக் காத்திருக்க சொல்கையில், ஒருநாள் கூறியிருந்தார். ஆனால், அன்று அவள் அவருக்காகக் காத்திருக்கவில்லை.

"நான் இங்கேயே இருப்பேன், மாட்சிமை பொருந்திய வரே!" அவள் மெதுவாகச் சொன்னாள். "நீங்கள் திரும்பி வரும் வரையில் நான் இங்கேயே இருப்பேன்."

நிதியைப் பார்த்தவாறு அமைந்திருந்த ஜஹாங்கீரின் அரண்மனை அறையின் ஜன்னலில் ஜகத்கோஸினி உட்கார்ந்திருந்தாள். நடு இரவு கடந்தாகிவிட்டது. ஆனால், கியாஸ் பெக்கின் வீட்டிலிருந்து சக்ரவர்த்தி இன்னும் திரும்பி வரவில்லை. சிறு குழந்தை போல் தனக்குள் சிரித்துக்கொண்டு, மிகுந்த மகிழ்ச்சியுடன் சக்ரவர்த்தி இன்று மெஹ்ருன்னிஸாவைப் பார்க்கப் போயிருந்தார். எப்படிக் கெஞ்சிக்

கேட்ட போதிலும், அவர் அந்த இரகசியத்தைச் சொல்ல மறுத்து விட்டார்.

புருவத்தை நெருக்கியபடி ஜகத்கோஸினி ஜன்னலுக்கு வெளியே உற்று நோக்கினாள். யமுனை அமைதியாகப் பாய்ந்து கொண்டிருந்தது. எந்தப் படகும் அதன் அமைதியான ஓட்டத்தைத் தடை செய்யவில்லை. ஜஹாங்கீர் எங்கே இருக்கிறார்? ஏன் இவ்வளவு நேரம் தங்கிவிட்டார்? கியாஸ் பெக் வீட்டிற்கு அவர் அடிக்கடி செல்வது பற்றி அவளுக்குக் கவலையாக இருந்தது. இதற்கு முன் ஒருமுறைகூடத் தன் காரியத்தில் இவ்வளவு முனைப்புடன், தன் செய்கையில் இவ்வளவு உறுதியுடன் ஜஹாங்கீர் இருந்ததில்லை. அவர் நிஜமாகவே அந்தப் பெண்ணிடம் காதல்கொண்டுள்ளாரா?

ஒரு மணி நேரம் கழித்து, கொட்டாவி விட்டவாறு ஜஹாங்கீர் அந்த அறையில் நுழைந்தார். தன் மனைவியைப் பார்த்தவுடன் சட்டென்று நின்றார். "என்னவாயிற்று, என் அன்பே?"

அவர் முகத்தில் தெரியும் மகிழ்ச்சியைக் கண்டவுடன் ஜகத்கோஸினியின் மனம் உடைந்தது. "என் பிரபுவே! நீங்கள் நன்கு உறங்கி விட்டீர்களா என்று பார்க்க வந்தேன்."

"அது உன் அன்பைக் காட்டுகிறது. ஆனால், நான் மெஹ்ருன்னிஸாவைச் சந்திக்கச் சென்றிருந்தேன்."

"நான் அறிவேன், பிரபுவே!" அவள் கூறினாள். "அவளை ஏன் உங்கள் அந்தப்புரத்திற்கு வரவழைக்கக் கூடாது? அப்படிச் செய்வதால், இரவில் இவ்வாறு நீங்கள் சென்று வருவதால் அசதி அடையாமல் இருக்கமுடியும்."

"அவள் சீக்கிரம் இங்கு வந்து விடுவாள்." ஜஹாங்கீர் தன் இடுப்புப் பட்டையை அவிழ்த்து விட்டு மேலங்கியைக் கழற்றத் தொடங்கினர்.

"அந்த நாளுக்காக நாங்கள் எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறோம், மாட்சிமை பொருந்தியவரே! அவள் உங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுப்பாள்." ஜகத் கோஸினி ஜாக்கிரதையுடன் கூறினாள். "அடிமைப் பெண்

களை விட்டு உங்கள் வைப்பாட்டிக்காகத் தனிப் பகுதியைத் தயாரிக்கச் சொல்கிறேன்."

ஜஹாங்கீர் அவள் பக்கம் திரும்பினார். "ஆனால், அவள் என் மனைவியாக இங்கு வருவாள், வைப்பாட்டியாக அல்ல! அரண்மனையில் அவளுக்கு ஏற்ற இடம் தயாரிக்கச் சொல்லி, நானே ஹோஷியார் கானுக்கு உத்திரவிடுகிறேன். அவளுக்காக ஒரு தனி மாளிகையே அமைத்தாலும் அமைப்பேன். என்னால் கொடுக்கக் கூடிய எல்லாவித வசதிகளுக்கும் வெகுமதிகளுக்கும் அவள் தகுதியானவள்."

முகத்தில் இரத்தம் சுண்டி நோய்வாய்ப்பட்டது போல் ஜகத்கோஸினி உணர்ந்தாள். மிகவும் சிரமத்துடன் தன்னைச் சமாளித்துக் கொண்டாள். ஒரு வேளை இன்னும் சக்ரவர்த்தியின் மனதை மாற்ற நேரம் இருக்கலாம். ஆனால், அவள் பேச ஆரம்பிக்கையிலேயே இந்த முயற்சி வினானதே என்று அவளுக்கே தோன்றியது. ஜஹாங்கீர் மனதில் ஒன்றை முடிவு செய்து விட்டாராகில், அது சரியோ தவறோ, ஒரு பொழுதும் இதுவரை அந்த முடிவை மாற்றிக் கொண்டதில்லை. அவள் முயற்சி, ஒரு தென்றல் காற்று மலையை அசைக்க முயல்வது போலாகும். அவள் வார்த்தைகளைத் தேடினாள். அவசரத்தில், அவள் ஏற்கெனவே உபயோகித்துத் தோற்றிருந்த உபாயத்தை மீண்டும் செய்தாள். அவளது அளவு கடந்த துயரம், அந்தப்புரத்தை நடத்திச் செல்வதிலும், சக்ரவர்த்தியைச் சமாளிப்பதிலும் அவள் எச்சரிக்கையுடன் செலுத்தி வந்த கைதேர்ந்த செயல் திறனையே நழுவவிட்டு விட்டது.

"மாட்சிமை பொருந்தியவரே! அவள் யார் மனைவி என்பதை மறந்துவிடாதீர்கள். குத்புதீன் கோக்காவை நாம் இழந்தோம். அவரது மரணம் நம் எல்லோருக்கும் பெரிய இடிபோன்றது. அவரை என் சகோதரனாகவே நான் கருதுகிறேன். அந்த கேடு கெட்ட அலிகுலி கையால் அவர் இறந்தார்."

ஜஹாங்கீர் ஜன்னல் பக்கம் திரும்பித் துல்லியமான இருண்ட இரவை உற்று நோக்கினார். மறுபடியும் அதே மாதிரிப் பேச்சு, கடந்த இரண்டு மாதங்களாக ஜகத்கோஸினி

அவ்வப்போது குறிப்பிட்டுப் பேசிய விஷயம்! அவர்கள் என்ன திட்டமிட்டிருக்கிறார்கள்— மஹபத் கான், ஷரீப் மற்றும் ஜகத்கோஸினி? இவள் மெஹ்ருன்னிஸாவிற்குத் துன்பம் கொடுப்பாளா? தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மெஹ்ருன்னிஸாவிற்குத் தெரியும், அல்லது தெரிந்துகொண்டு விடுவாள் என்பதை அவர் அறிவார். அந்தப்புரத்தினுள் நடக்கும் போட்டி, பொறாமைகளில் அவர் தலையிடுவ தில்லை. இப்பொழுதும் அப்படிச் செய்யமாட்டார். ஆனால், இந்தக் குற்றச் சாட்டு விஷயத்தை இப்படியேவிடக் கூடாது.

"இந்த மாதிரி விஷயங்கள் பற்றி, நீ என்னிடம் பேசுவது முறையாகாது. அந்தப்புரத்திலுள்ள பெண்கள் அனைவரும் மெஹ்ருன்னிஸாவை வரவேற்கத் தயாராக இருக்கவேண்டும்." ஜஹாங்கீர் அமைதியான, கராரான குரலில் கூறினார். "இது புரிந்ததா?"

"அப்படியே ஆகட்டும், மாட்சிமை பொருந்தியவரே!" கனத்த இதயத்துடன் ஜகத்கோஸினி பதிலுரைத்தாள்.

தன் மனைவியின் பக்கமிருந்து வேறு பக்கம் திரும்பிச் சக்ரவர்த்தி கூறினார். "இப்பொழுது நீ போய் ஹோஷியார் கானை என்னிடம் அனுப்பி வை. நான் உடை மாற்றிக் கொண்டு உறங்கத் தயாராக வேண்டும்."

ஜகத்கோஸினி அவரை வணங்கி விட்டுத், தளர்ந்த கால்களால் சிரமத்துடன் அடி எடுத்து வைத்தவாறு, அந்த அறையைவிட்டு அகன்றாள். ஜஹாங்கீரின் மனைவியாக மெஹ்ருன்னிஸா அரண்மனைக்கு வருவாள்— ஆனால், முக்கியத் தலைமைச் சக்ரவர்த்தினியாக அல்ல... அவளால் முடிந்தவரை அவ்வாறு நடக்கவிடமாட்டாள். ஜகத் கோஸினி மனதிற்குள் கருவிக் கொண்டாள். அவள் தன் மாளிகையை அடைவதற்குள், அடுத்து எந்த விதமாகச் செயல்பட வேண்டும் எனத் திட்டமிட ஆரம்பித்து விட்டாள்.

ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியுடன் மெஹ்ருன்னிஸா சுற்றிலும் பார்த்தாள். அவள் அரண்மனையில், ருக்கையா சுல்தான் பேகமின் மாளிகைக்கு மறுபடியும்

வந்துவிட்டாள். திருமண வைபவத்தைத் தான் தலைமை தாங்கி நடத்தவேண்டும் எனப் பெரிய இராணி வற்புறுத்தி யிருந்தாள். அழகிய பாரசீகத் தரை விரிப்பில் மெஹ்ருன்னிஸா அமர்ந்திருந்தாள். அலிகளும் அடிமைகளும், தங்கம், வெள்ளித் தாம்பாளங்களில் பலவிதமான பரிசுப் பொருட் களை எடுத்துக் கொண்டு சாரி சாரியாக அவள் அறைக்குள் வந்தனர்.

பல கஜம் நீளத்தில், ஸாடின், பட்டு, வெல்வெட் துணிகள், பல நிறங்களில் வந்தன. தட்டுத் தட்டாக நகைகள், ஆபரணங்கள், புறாமுட்டை அளவிற்கு முத்துக்கள் பதித்த மாலைகள், கருப்பு வெல்வெட் துணியின் மேல் பளபளத்தன. பெரிய வைரக் கற்கள் பதித்த மாலைகள், காதணிகள், தங்கத்தில் பதித்த கெம்புக் கற்களாலான கை வளையல்கள், வங்கிகள், அடர்ந்த ஊதா நிறம், நீல நிற கற்கள் பதித்த வெள்ளி கோப்பைகள் எனப் பலவிதம். விலை மதிப்பில்லாக் கற்கள் பதித்த தங்கக் குடுவைகள் நிறைய இமயமலை அடிவாரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட மதுபான வகைகள், தங்கம், வெள்ளி மற்றும் கண்ணாடிப் புட்டிகளில் உலகின் பல இடங்களிலிருந்தும் வரவழைக்கப்பட்ட வாசனைத் திரவியங்கள், சங்குகள் பதித்த மரப்பெட்டிகள் நிறையப் பல நிறங்களில் பட்டுத் துணிகள்.

மெஹ்ருன்னிஸா நீண்ட பெருமூச்சு விட்டாள். இத்தனைச் செல்வங்களை அவள் கனவில் கூட நினைத்துப் பார்த்ததில்லை. ஒரு வைர ஒட்டிகையை எடுத்து, அதன் அழகாகச் செதுக்கிய கற்களின் மேல் விரல்களால் தடவிப் பார்த்தாள்.

ஒரு பணியாள் பின்னாலிருந்து இருமும் சப்தம் கேட்க, அவள் நிமிர்ந்தாள். அவன் மெதுவாக ஒரு கடிதச் சுருளை நீட்டினான். அது அரசரிடமிருந்து வந்த ஓலை என்பதைக் குறிக்க, மேலே சக்ரவர்த்தியின் முத்திரை இருந்தது. அவள் இதயம் மார்புக் கூட்டில் அதிர, அவள் முத்திரையை உடைத்துக் கடிதத்தைப் பிரித்தாள். ராம்ஸர், தோல்பூர் மற்றும் சிக்கந்தரா மாவட்டங்களை, அவளுக்கு ஜஹாங்கீர் பரிசாக வழங்கியிருந்தார்.

அரசரின் அந்தப்புரத்தில் இருக்கும் பெண்களுக்கு அவரவர்களது தகுதிற்கேற்ப வருடத்தில் ஒருமுறை அவர்கள் தேவைகளுக்காக வருமானம் கொடுக்கப்படும். அந்த வருமானம் சில சமயங்களில் பாதிப் பணமாகவும், பாதி நிலம், தோட்டம் முதலிய சொத்துக்களாகவும் வழங்கப்படும். அந்த நிலபுலன்களிலிருந்து வரும் வருமானம் அவர்களுக்கே சேரும்.

மெஹ்ருன்னிஸா அரசரின் ஆணையிட்ட கடிதத்தை வெறித்துப் பார்த்தாள். அவள் செல்வந்தர் ஆகிவிட்டாள். அந்த மூன்று மாவட்டங்களில் சிகந்தரா மிகவும் விலை மதிப்புள்ளது. ஆக்ராவிற்கு எதிரே யமுனையின் அக்கரையில் உள்ள சிறிய நகரம் அது. அது இருக்கும் இடம் மிகவும் முக்கியமானது. ஏனெனில், கிழக்கு, வடகிழக்கு இந்தியாவிலிருந்து வரும் பொருட்கள் சிகந்தராவைக் கடந்துதான் ஆக்ரா செல்ல வேண்டும். அங்கு அதிகாரிகளைப் பொறுப்பேற்க வைத்து, ஆக்ராவிற்குச் செல்லும் சாமான்களுக்கு வரி விதித்தால், அவளுக்கு நிறைய வருமானம் கிடைக்கும். வங்காளத்திலிருந்து பஞ்சு, பாட்னாவிலிருந்து பட்டுத் துணிகள் மற்றும் வாசனைத் தைலம், தாமிரக் களிம்பு, இஞ்சி, சோம்பு மற்றும் ஓபியம், மற்ற மருந்து வகைகள் எனப் பலவிதப் பொருட்களும், மற்றும் ஆக்ராவில் வசிப்போரின் தினசரி உபயோகத்திற்கான வெண்ணெய், தானியங்கள், மாவுகள் எனப் பலதரப்பட்ட பொருட்கள் சிகந்தராவைக் கடந்துதான் ஆக்ரா செல்கின்றன. சிகந்தராவிலிருந்து அவளுக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் அவள் தந்தையின் வருமானத்தைவிட மூன்று மடங்கு அதிகமாக இருக்கும்.

அவள் கைகளைக் கட்டிக் கொண்டாள். சக்ரவர்த்தினி என்பதன் அடையாளம் இதுதான் போலும். அவள் ஜஹாங்கீரை மணந்த பிறகு லாட்லியின் திருமணம் பற்றி அவள் கவலைப்பட வேண்டாம். பெரிய பெரிய அதிகாரிகள் சக்ரவர்த்தியின் மனைவியின் பெண்ணை மணக்க முன் வருவார்கள். கோக்காவின் மரணம் பற்றி யாருக்கும் நினைவிருக்காது. அலிகுலி பற்றிய மானக்கேடான விஷயங்கள் சீக்கிரத்தில் மறந்து போய்விடும்.

ஆனால், இந்த எல்லாச் செல்வங்களையும் விட, முக்கியமானது அந்த இரு சொற்கள். 'ஜஹாங்கீரின் மனைவி.'

வெல்வெட் சாய்வு இருக்கையில் அவள் சாய்ந்து கொண்டாள். அரசரின் ஆணையிட்ட கடிதம் அவள் மார்பில் கிடந்தது. இன்னும் பத்து நாட்களில் அவள் சக்ர வர்த்தினி.

நாட்கள் பறந்தோடின. பெரிய பிரமுகர்கள், பிரபுக்கள், தகுந்த பரிசுப் பொருட்களைத் தேடி ஆக்ரா முழுவதும் அலைந்தனர். ஆங்கிலேய வர்த்தகர் வில்லியம் ஹாக்கின்ஸ் அரச சபையின் நடப்பு முறைகள் பற்றி இதற்குள் நன்கு அறிந்து கொண்டிருந்தார். ஜஹாங்கீருக்காகவும் மெஹ்ருன்னிஸாவிற்காகவும் அழகிய நகைகளை வாங்கிவரத் தன் கீழ் அதிகாரியை அனுப்பி வைத்தார். அவரது சகப் போர்த்துகீசிய வர்த்தகர்களுக்கில்லாத ஒரு அனுகூலம் அவருக்கு உண்டு. மணமக்களைத் துருக்கி மொழியில் வாழ்த்தி, இந்தப் பரிசுப் பொருட்களைத் தன் கையால் கொடுப்பார்.

ஆங்கிலேயக் கிழக்கு இந்தியக் கம்பெனியுடன் தனிப்பட்ட முறையில் இயற்றிய ஒப்பந்தம் இன்னும் உறுதிப் படுத்தப்படவில்லை. சக்ரவர்த்தி தன் சமீபத்தியக் காதல் விவகாரத்தில் முனைந்திருந்தார். இன்னும் முன்னுக்கு வராத, விசுவாசமற்ற ஜனங்கள் உள்ள இந்த நாட்டில், மூன்று கஷ்டமான ஆண்டுகளைக் கழித்தபின், இந்தப் புதிய ஒப்பந்தத்தில் சில நன்மைகள் இருக்கக்கூடும் என ஹாக்கின்ஸ் நினைத்தார். சமீப காலமாக அரச சபைக் கூட்டங்களில் தனிப்பட்ட முறையில் ஜஹாங்கீர் அவனிடம் பேசி, நலம் விசாரித்து வந்தார். அவனுக்கு நல்ல ஓய்வு கிடைக்கிறதா? அவன் பணியாட்கள் நல்ல முறையில் நடந்துகொள்கிறார்களா? அரசாங்கத் தோட்டத்திலிருந்து அனுப்பப்பட்ட கொய்யாப் பழங்கள் அவனுக்குப் பிடித்திருக்கிறதா? என்பது போல்! ஆகையால், சக்ரவர்த்திக்கு தகுந்தபடிப் பரிசு வாங்குவதில் ஹாக்கின்ஸ் முனைப்பாக இருந்தான். அவன் கொடுக்கும் பரிசும், திருமணம் ஆன மகிழ்ச்சியும் சேர்ந்து, சக்ரவர்த்தியைச் சந்தோஷப்படுத்திச் சீக்கிரம் அந்த

ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைக்கும் என அவன் நம்பினான்.

இம்மாதிரி எதிர்பார்ப்புடன் இருந்தது ஹாக்கின்ஸ் மாத்திரம் அல்ல. இயேசு சங்கத்தைச் சேர்ந்த போர்த்துகீசிய வணிகர்களும் அவன் செய்கைகளைக் கண்காணித்து அவனுடையதைவிட மேலான பரிசுப் பொருளை வாங்கியிருந்தனர். இத்தனைக் காலம் அவர்கள் சுதந்திரமாக வர்த்தகம் செய்து வந்த நாட்டில், மற்றொரு வெளிநாட்டு வர்த்தகர் போட்டியாக வந்தது குறித்து அவர்கள் கோபமாக இருந்தனர். ஒவ்வொரு அரச சபைப் பிரபுவும் புதுவிதமான பரிசுப் பொருள் வாங்குவதற்குப் போட்டியிட்டனர். அந்தப் பரிசுப்பொருள் ஜஹாங்கிரையோ மெஹ்ருன்னிஸாவையோ கவர்ந்தால், அதற்கு ஈடாகப் பரிசுகளும் கௌரவங்களும் அவர்களுக்கு அரச தம்பதியரிடமிருந்து கிடைக்கும்.

கடைசியில், திருமணத் தினமும் வந்தது.

ஆக்ரா நகரமே விழாக்கோலம் பூண்டது. சாமந்திப் பூக்களாலும் மல்லிகைப் பூக்களாலும் நகரம் முழுவதும் அலங்கரிக்கப்பட்டது. காகிதப் பூக்களால் தோரணங்கள் கட்டப்பட்டன. பொதுமக்கள் அழகிய உடைகள் அணிந்து தங்களது சக்ரவர்த்தியின் இருபதாவது திருமணத்தைக் கொண்டாடத் தெருக்களில் நிறைந்திருந்தனர். இந்தத் திருமணம் புது மாதிரியானதாக இருக்கும் என்று எல்லோருக்கும் தோன்றியது. அரசியல் காரணங்களுக்காக இல்லாமல், அழகிய நீலக் கண்களிலும், மயக்கும் புன்னகையிலும் மனதைப் பறிகொடுத்து, தனது நாற்பத்து இரண்டாவது வயதில், ஜஹாங்கீர் முதல்முறையாக அவரே தன் மனைவியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். மெஹ்ருன்னிஸாவின் அழகைப் பற்றிய வதந்திகள் தொடர்ந்து பரவ ஜனங்கள் அவளை ஒரு பெண் தெய்வமாகவே நினைக்கத் தொடங்கினர்.

நகரத்தைப் போலவே, ஆக்ராக் கோட்டையும் விழாக் கோலம் பூண்டது. தொடர்ந்து பல நாட்கள் வேலை செய்து பணியாட்கள் அந்தப்புரத்து மாளிகையையும் கோட்டையையும் அலங்கரித்தனர். அரண்மனைத் தோட்டக்காரர்கள் செடிகளை ஒழுங்காகக் கத்தரித்து விட்டுப், புல் தரைகளை சமன்படுத்திச் செடிகள் பூ பூத்துக் குலுங்கப் பலவும் செய்தனர். தொட்டியில் வைக்கப்பட்ட பூச்செடிகள் உள்ளிலும் வெளியிலும் அழகு செய்தன. கோட்டை மதிற்சுவர்கள் மேல் அலங்கார வளைவுகளில், மாளிகைகளில், பூச்சரங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. பளபளக்கும் பட்டுத் துணிகள் தோரணமாகத் தொங்கவிடப்பட்டிருந்தன.

பணியாட்கள், அடிமைப்பெண்கள், அலிகள் முதலியோருக்குப் புது உடைகள் வழங்கப்பட்டன. அந்தப்புரத்துப் பெண்கள் போட்டியிட்டவாறு தங்களை அலங்கரித்துக் கொண்டனர். மணிக்கணக்கில் வாசனைக் குளியல்களிலும் அழகு நிலையங்களிலும் அவர்கள் நேரத்தைச் செலவிட்டனர்.

ருக்கையா சுல்தான் பேகமின் மாளிகையில் தங்க விளிம்பிட்ட அழகிய கண்ணாடியில் தெரியும் தன் பிரதிபிம்பத்தைப் பார்த்தவாறு மெஹ்ருன்னிஸா கனவு மயக்கத்தில் இருந்தாள்.

"தயாராவதற்கான நேரம் வந்துவிட்டது."

கண்ணாடியில் ஹோஷியார் கானை மெஹ்ருன்னிஸா பார்த்தாள். "அடிமைப் பெண்களைக் கூப்பிடு."

அவன் தலை அசைத்து விட்டு நகர்ந்தான். இருக்கையில் சாய்ந்து கொண்டு அவன் செல்வதை யோசித்தவாறு மெஹ்ருன்னிஸா பார்த்துக் கொண்டிருந்தாள்.

இது அவளுக்கு ஜகத்கோஸினியிடமிருந்து பெற்ற முதல் வெற்றி! அந்தப்புரத்தில் மிகவும் சக்தி வாய்ந்தவனும் ஜஹாங்கீருடன் முப்பத்தி ஐந்து வருடங்களாக இருக்கும் அந்தப்புரத்தின் தலைமை அலி ஹோஷியார் கான் ஜகத் கோஸினியிடமிருந்து விலக்கப்பட்டு, மெஹ்ருன்னிஸாவிற்குத் தனிப்பட்ட முறையில் பணி செய்யும் அலியாக நியமிக்கப் பட்டான்.

அந்தப்புரத்தில் ஒருத்தியாக இல்லாத போதிலும், அவள் இங்கு சில காலம் தங்கி இருந்தவளாகையால், ஹோஷியார் கான் ஒரு சக்தி மிகுந்த உதவியாளனாக இருப்பான் என்பதை

அறிவாள். அவன் ஜகத்கோஸினியிடம் இருக்கும் வரை, அவளிடமிருந்து அந்தப்புரத்தின் அதிகாரத்தைக் கைப்பற்ற மெஹ்ருன்னிஸாவிற்கு வாய்ப்பில்லை. சக்ரவர்த்தினி பலகாலம் அந்தப்புரத்தில் ஏகோபித்த அதிகாரம் செலுத்தி வந்தவளாகையால், மெஹ்ருன்னிஸா போன்று புதிதாக வந்தவளுக்குத் தன் பதவியை அவள் சுலபத்தில் விட்டுக் கொடுக்க மாட்டாள்.

மெஹ்ருன்னிஸா ஜகத்கோஸினியை வெறுத்தாள். இந்தப் பெண்களின் உலகத்தில் பாதுஷா பேகம் தான் மிகவும் சக்தி வாய்ந்த முதன்மைப் பெண்ணாக இருக்கமுடியும் என்பதையும், அவள் ருக்கையா மூலம் அறிந்திருந்தாள். ஆகையால், ஜஹாங்கிரின் அந்தப்புரத்தில் நுழைந்த வுடன் அவள் செய்ய வேண்டிய முதல் காரியம் அந்தப் பதவியை அடைவதுதான். மிகுந்த விவேகத்துடனும் எச்சரிக்கையுடனும் செயல்படவேண்டும். ஏனெனில், தன்னைச் சார்ந்த பெண்களுக்கிடையே சச்சரவு உண்டாவதை ஜஹாங்கீர் வெறுத்தார். ஏதாவது புகார் கூறிக் கொண்டு எந்த ஒரு பெண்ணாவது அவரை அணுகினால், அவளை உடனேயே அவர் முன்னிலையிலிருந்து பல காலத்திற்கு அகற்றி விடுவார். அந்தப்புரத்தில் இருந்து கொண்டு ஜஹாங்கீரின் பார்வை படாமல் இருப்பது என்பது இறந்து போவதற்கு சமானம் என்று எல்லாப் பெண்களுக்கும் தெரியும். அவர்கள் வாழ்க்கை அவரைச் சுற்றிதான் இருந்தது. அவர்தான் அவர்களுக்குப் பதவியைக்கொடுக்கிறார். அவரே அதைச் சுலபமாக விலக்கியும் விடுவார்.

உதட்டைச் சுளித்தவாறு மெஹ்ருன்னிஸா புன்னகைத்துக் கொண்டாள். அவள் ஒன்றும் முட்டாளல்ல. அறிவுக் கூர்மையுடன் அவள் திறமையை அந்தப்புரத்தில் உபயோகிப்பது எப்படி என்று அவள் நன்கு அறிவாள். முதல் நொடியிலிருந்து அவள் திறமையாகச் செயல்படுவாள். அதற்கு ஆரம்பமாக, ஹோஷியார் கான் அவள் பக்கம் வரவேண்டும். ஜஹாங்கீர் காதில் ஒரு வார்த்தை சொன்னது, அதற்கு போதுமானதாயிற்று. உள்ளுக்குள் ஜகத்கோஸினி குமுறினாலும், வெளிப்படையாக இது பற்றி ஜஹாங்கிரிடம் புகார் செய்ய அவளுக்குத் தைரியம் இல்லை. அதுவும்

நல்லதாயிற்று. ஏனெனில், சக்ரவர்த்தினி இதற்கு மறுப்புத் தெரிவித்தால் அவள் தன் வேண்டுகோளை அந்த நேரத்திற்கு திரும்பப் பெற வேண்டியிருக்கும். ஜஹாங்கீர் அவளை மிக அதிகமாக நேசித்தாலும், அவள் கவனமாகச் செயல்பட வேண்டும். இப்பொழுதிற்கு இந்த ஒரு வெற்றியே இனிமையானதாக இருந்தது.

இதற்கான ஆலோசனை ஒரு வாரம் முன்பு ருக்கையாவிடமிருந்து வந்தது. "ஒரு சாமர்த்தியமில்லாத முட்டாள் உனக்குப் பணிவிடை செய்வது சரியாகாது, மெஹ்ருன்னிஸா. ஹோஷியார் கானைக் கொடுக்கச் சொல்லிக் கேள்." ருக்கையா அவளுக்கு யோசனை கூறினாள்.

"சக்ரவர்த்தினி அதை விரும்பமாட்டாள், மாண்பு மிக்கவரே!" மெஹ்ருன்னிஸா தன்னையறியாமல் சட்டென்று பதிலுரைத்தாள்.

பிறகு, அந்த இரண்டு பெண்களும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டனர். ஜகத்கோஸினிக்கு நிச்சயம் பிடிக்காது. அதனாலேயே ஹோஷியார் கான் மெஹ்ருன்னிஸாவிடம் வந்து சேர்ந்து விட்டான்.

பல பெட்டிகளில் நகைகளையும், திருமண உடையும் மற்றும் விதவிதமான வாசனைத் தைலங்களும் சுமந்து கொண்டு அடிமைப் பெண்கள் அறைக்குள் நுழைந்தனர். ஹோஷியார் அறையில் சுற்றி வந்து அவர்களை அதிகாரம் செய்தபடி நடப்பவைகளை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஹோஷியார் கான் இங்கு நன்கு பொருந்தி விட்டான் என மெஹ்ருன்னிஸா எண்ணினாள். ஏன் கூடாது? அவன் ஒரு கெட்டிக்காரன். மற்ற எந்தப் பெண்ணாலும் அடைய முடியாத அளவு, மெஹ்ருன்னிஸாவிற்கு ஜஹாங்கிரிடம் பிடிப்பு இருப்பதை அவன் சீக்கிரமே புரிந்து கொண்டு விட்டான். அவள் அவனை நம்பலாம். ஆனால், முழுமையாக அல்ல. அவளுக்கு அதிகாரம் இருக்கும் வரையில் பல விஷயங்களில் அவளுக்குத் துணையாக இருப்பான். ஆனால், அவள் தன் அதிகாரத்தை இழக்க தேரிட்டால் உடனே அவன் எதிரியிடம் போய்ச் சேர்ந்து விடுவான். எப்படியா

யினும் அந்தப்புரத்தில் அவள் வலிமை ஓங்கி இருக்கும் வரை ஹோஷியார் கான் அவளுக்காக எதையும் செய்வான். அவள் விருப்பங்களை நிறைவேற்ற உயிரைக் கொடுக்கக் கூடத் தயங்கமாட்டான்.

"நாங்கள் தயாராக இருக்கிறோம்." ஹோஷியார் கான் குரல் மரியாதையுடன் ஒலித்தது.

மெஹ்ருன்னிஸா எழுந்து அசையாமல் நிற்க, அடிமைப் பெண்கள் அவள் ஆடைகளைக் களைந்துவிட்டு புது ஆடையை அணிவிக்கத் தொடங்கினர். ஒரு மணி நேரம் கழித்து, ஒரு முழு நீளக் கண்ணாடி அவள் முன் எடுத்து வரப்பட்டது.

தன் பிரதி பிம்பத்தை மெஹ்ருன்னிஸா உற்றுப் பார்த்தாள்.

தடுமாறும் கரங்களினால் தன் உடையைத் தொட்டாள். மாந்துளிர் வண்ணத்தில் இருக்கும் பட்டுப் பாவாடையிலும் சோலியிலும் நூற்றுக் கணக்கான சிவப்பு கற்கள் ஒளிவீசின. பெரிய கெம்புக் கற்கள் பதித்த காதணி, கெம்புக் கற்கள் பதித்தத் தங்க அட்டிகை, கெம்புக் கல் வளையல்கள் மற்றும் மோதிரமும் அணிந்திருந்தாள். அவள் கண்களின் நீல நிறமும் அவள் அடர்ந்த கூந்தலின் கருமை நிறமும் தான், அவள் உடலில் இருந்த மற்ற நிறங்கள். ஒரு அடிமைப் பெண் பச்சை நிறபட்டுத் தலைப்பாகையை அவள் தலையில் அணிவித்தாள். ஒரு ஒற்றை நாரை இறகு — சக்ரவர்த்தியிடமிருந்து வந்த மற்றொரு பரிசு — அவள் தலைப்பாகையில் இருந்த, எலுமிச்சை அளவுள்ளச் சிவப்புக் கல்லைச் சுற்றி முத்துக்கள் பதித்த தலை அணியிலிருந்து நீட்டிக்கொண்டிருந்தது. தலைப்பாகையின் அடியில், குளத்தின் தெளிந்த நீர் போன்ற தெளிவான பச்சை நிற முகத்திரை அவள் முதுகில் படர்ந்து தரையைத் தொட்டது.

"சக்ரவர்த்தி உங்களுக்காகக் காத்திருக்கிறார், மாண்புமிக்கவரே!" பின்னாலிருந்து ஹோஷியார் கூறினான்.

'மாண்புமிக்கவரே!' மகிழ்ச்சி கலந்த அதிர்ச்சியான உணர்வு அவள் நாடிகளில் எழுந்தது. இன்னும் சில நிமிடங்

களில் அவள் சக்ரவர்த்தினி ஆகிவிடுவாள். அவள் நீண்ட மூச்சு விட்டுத் தன்னைச் சுதாரித்துக் கொண்டு மெதுவாக அறையைவிட்டு வெளியேறிச் சக்ரவர்த்தியின் அரண்மனையை நோக்கிச் சென்றாள்.

சக்ரவர்த்தியின் அரண்மனைக்குப் போகும் வழியில் இருந்த வராந்தாக்களிலும் நடைபாதைகளிலும் அடிமைப் பெண்களும் அலிகளும் வரிசையாக நின்றிருந்தனர். அவர்கள் ஆச்சரியத்தில் மூச்சை இழுக்கும் ஒலி, நடந்து சென்று கொண்டிருக்கையில் மெஹ்ருன்னிஸாவிற்கு கேட்டது. அவள் நெருங்கியவுடன், ஜஹாங்கீரின் அறைக்குள் செல்ல இரண்டு பெரிய கதவுகள் சத்தமில்லாமல் திறந்தன. உள்ளே ஒரு சிலரே இருந்தனர். மெஹ்ருன்னிஸா இதைத்தான் வற்புறுத்தி இருந்தாள். பெரிய ஆடம்பரமான விழாவேண்டும் என விரும்பி ஜஹாங்கீர் முதலில் இதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால், மெஹ்ருன்னிஸா கூடாது என்று மறுத்துவிட்டாள். ஏன் ஏனனில், அவர்கள் வாழ்க்கையின் எஞ்சிய பகுதியை சாம்ராஜ்ஜியத்தில் எல்லோர் முன்னிலையிலும் கழிக்கப் போகிறார்கள். அவர்கள் இருவரும் இணையும் இந்த நேரத்திலாவது தனிமையாக இருக்க அவள் விரும்பினாள். அதனால், திருமண நிகழ்ச்சியும் குறைக்கப்பட்டது. மனதளவில் அவளுக்கு அவருடன் திருமணம் ஆகிவிட்டது. பல காலத்திற்கு முன்பே ஆகிவிட்டது. இப்பொழுது நடப்பது ஒரு விதிமுறைக்காகத்தான்.

அவள் உள்ளே நுழைந்தவுடன் அவரை உடனே பார்த்து விட்டாள். கைகளை நீட்டியவாறு சக்ரவர்த்தி அவளை நோக்கி வர அவள் தன் கைகளை அவர் கைகளின் மேல் வைத்தாள். திருமணத்தின் விதிமுறைக்குக் கட்டுப்பட்டு அவர்கள் கடந்த பத்து நாட்களாகச் சந்திக்கவில்லை. அதைப்பற்றி மெஹ்ருன்னிஸா வருத்தப்படவில்லை. அவர்கள் சீக்கிரமே இணையப் போகிறார்கள் என்ற எண்ணமே போதுமானதாக இருந்தது. தினமும் இரண்டு மூன்று கடிதங்களைப் பரிமாறிக் கொண்டு அவர்கள் இந்த நாட்களைக் கடத்தினர். அவர் அனுப்பிய பரிசுப் பொருட்களைப் பெற்று அவள் மகிழ்ச்சியடைந்ததாகக் கூறினாள். அவர் அவளுக்கு இன்னும் எது தேவையானாலும் உடனே அனுப்பி

வைக்கிறேன் என்றார். அரசாங்க நூல் நிலையத்தின் சாவியை அவர் அவளுக்கு அனுப்பி வைத்தார். அவருக்கு நன்றி கூறும் வகையில் ஒரு புத்தகம் அனுப்ப விரும்பி அவள் அந்த நூல் நிலயத்தில் பல மணிநேரம் சுற்றி தேடினாள். 'ஜாதகா' கதைகளின் பாரசீக மொழி பெயர்ப்பைத் தேர்ந்தெடுத்து அவள் அனுப்பினாள். அன்றிரவு அவர் இரகசியமாக அவளைப் பார்க்க வந்தார். இருவரும் ஒரு பட்டுத் திரையின் இரு பக்கமும் அமர்ந்து கொண்டு ஒழுங்கு முறையை மீறும்பொழுது அளவில்லா மகிழ்ச்சியடையும் குழந்தைகள் போல், அதேசமயம் வழிமுறையை கடைபிடிக்காவிட்டாலும், அதன் உள்நோக்கத்தை மதித்து நடந்து கொண்டனர். அவ்வப்போது அந்தக் கதைகளில் வரும் புலிபோல் உறுமிக் கொண்டும் குரங்கு போல் கிரீச்சிட்டுக் கொண்டும், மாறிமாறி அவர்கள் அந்தப் புத்தகத்தைப் படித்தனர். திரையின் கீழ் வழியாக புத்தகத்தை மாற்றிக் கொள்ளும் பொழுது அவர்கள் விரல்கள் ஸ்பரிசித்தன. இடையே உள்ள திரையைச் சேர்த்து முத்த மிட்டுக் கொண்டனர். அவள் திரும்புகையில், ஹோஷியர் கானைத் தனக்குப் பணியாட்களில் ஒருவனாக கொடுக்க முடியுமா என அவள் கேட்க, ஜஹாங்கீரும் உடனே சம்மதம் தெரிவித்தார். இப்பொழுது அவர்கள் திருமணம் நடந்து கொண்டிருக்கிறது.

"நீ மிகவும் அழகாக இருக்கிறாய், என் அன்பே!" கண்களில் காதல் ஒளிர ஜஹாங்கீர் கூறினார்.

"நன்றி, மாட்சிமை பொருந்தியவரே!" அவர் அருகே சென்று அமர்ந்தவாறு மெஹ்ருன்னிஸா மென்மையாகக் கூறினாள்.

அவள் அந்த அறையைச் சுற்றி நோக்கினாள். முகத்தில் எவ்வித உணர்ச்சியும் தெரியப்படுத்தாமல், கண்களில் மாத்திரம் ஒரு சின்ன சிரிப்புடன் ருக்கையா ஒரு பக்கம் அமர்ந்திருந்தாள். கியாஸ் பெக் சிவந்த முகத்துடன் பெருமை பொங்க இருந்தார். அவள் தாயின் முகத்தில் சிறிது கவலை தெரிந்தது. இரண்டு தினங்களுக்கு முன்னால் அவள் மெஹ்ருன்னிஸாவிடம் இதுதான் அவள் விரும்பியதா எனக்

கேட்டாள். விளக்கிக் கூறுவதில் அலுத்துப்போன மெஹ்ருன்னிஸா தலையை மாத்திரம் ஆட்டி ஆமோதித்தாள். இவர்களைத் தவிர இருந்த மற்றொருவன் அவள் சகோதரன் அபுல். இரண்டு தினங்களுக்கு முன் அவனும் அவளைப் பார்க்க வந்திருந்தான் — ஆனால், வேறு காரணத்திற்காக — அர்ஜுமண்ட் பானு பேகத்திற்கு இளவரசன் குர்ரமுடன் நான்கு வருடங்களுக்கு முன் நிச்சியதார்த்தம் ஆகி இருந்தது — எப்படிப் பார்த்தாலும் இது ஒரு நீண்ட இடைவெளி — அவன் நடவடிக்கை முயற்சி எடுத்து அந்தத் திருமணத்தை சீக்கிரம் முடித்து வைக்க வேண்டும் என அவன் விரும்பினான். மெஹ்ருன்னிஸாவும் அவனைப் பார்த்து உறுதிகூறும் பாவனையில் தலையசைத்தாள். உடனே, அவன் முகத்தில் ஏற்பட்ட நிம்மதியைக் கண்டு தன்னுள் முறுவலித் துக் கொண்டாள்.

அவள் பிறகு ஜஹாங்கீர் பக்கம் திரும்பினாள். அவருடைய பெரிய கரத்திற்குள் அவள் சிறிய கரம் இருக்கையில் அவளுக்குள் ஒரு பாதுகாப்பான உணர்வு எழும்பி நின்றது.

ஜஹாங்கீர், மெஹ்ருன்னிஸா பக்கம் குனிந்தார். "இன்னும் சில நிமிடங்களில் நமக்குத் திருமணம் ஆகி விடும்!"

அந்த வார்த்தைகளைக் கேட்டு அவள் மனம் எகிறிக் குதித்தது. "ஆமாம், மாட்சிமை பொருந்தியவரே!"

அவள் நெற்றி அவர் மேல் கையில் படும்படி அவள் சில நொடிகளுக்கு அவர் தோள் மேல் சாய, அவரும் மெல்லக் கையை உயர்த்தி அதே சில நொடிகளுக்கு அவள் முகத்தை ஸ்பரிசித்தார்.

திருமணம் செய்விக்க வந்த மஸூதியின் தலைவர் அவர்கள் கவனத்தை ஈர்த்தார். அவர் கைகளை உயர்த்தி, ஒரு சிறிய பிரார்த்தனை செய்ய, அங்கிருந்த எல்லோரும் உடன் பிரார்த்தித்தனர். அவர் பின் ஜஹாங்கீரைப் பார்த்து, இவளை மனைவியாக ஏற்க சம்மதமா எனக் கேட்க, பொழுது மெஹ்ருன்னிஸாவின் மனம் படபடத்தது

"ஆமாம், ஆமாம்" பொறுமையிழந்து ஜஹாங்கீர் படபடத்தார். "நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்துங்கள்."

மஸூதியின் தலைவர் பின் மெஹ்ருன்னிஸா பக்கம் திரும்பி, அதே கேள்வியைக் கேட்டார். அவர் பேசும்பொழுது அவர் வாய் அசைவதை மெஹ்ருன்னிஸா பார்த்தாள். ஆனால், அவர் கூறியது எதுவுமே அவள் மனதில் பதிய வில்லை. அவர் கேள்வியை மறுபடியும் கேட்டவுடன் அவள் கைகளைப் பிடித்திருந்த ஜஹாங்கீரின் பிடி இறுகியது நரந்தின் முகமத் ஜஹாங்கீர் பாட்ஷா காஜி என்பவரைத் தன் கணவராக ஏற்கச் சம்மதம் என்று கூறும் ஒரு குரலை, அவள் குரலை — அவள் கேட்டாள்.

பின்னர், மஸூதியின் தலைவர் அவர்கள் திருமணத்தைப் பதிவு செய்து, அந்தப் பக்கத்தில் ஜஹாங்கீரின் அரச முத்திரையைப் பதிக்கும்படி அவரிடம் கூறினர். அவர்கள் இப்பொழுது கணவன், மனைவி, அவள் குடும்பத்தினர் அவளைச் சுற்றி நின்று அவளை வாழ்த்துவதை மெஹ்ருன்னிஸா பிரமிப்புடன் பார்த்தவாறு நின்றிருந்தாள். தூரத்தில் பேரிகைகள் முழங்கித் திருமணம் நடந்து விட்டதை ஜனங்களுக்கு அறிவிப்பதைக் கேட்க முடிந்தது. திடீரென்று எல்லோரும் மௌனமாயினர். மெஹ்ருன்னிஸா தன் மயங்கிய மனநிலையிலிருந்து தெளிவு பெற்றுச் சுற்றிலும் பார்த்தாள். ஜஹாங்கீர் கையை உயர்த்தியவாறு நின்றிருந்தார்.

"நான் ஒரு அறிவிப்பு செய்ய விரும்புகிறேன்." அவளை ஒருமுறை பார்த்தார். "இன்றிலிருந்து என் அன்புக்குரிய சக்ர வர்த்தினிக்கு **'நூர்ஜஹான்'** என்ற பட்டப் பெயர் அளிக்கப் படுகிறது."

மெஹ்ருன்னிஸாவின் இதயம் மார்புக் கூட்டில் அதிர்ந்தது. ஏற்கெனவே, சக்ரவர்த்தி அவளுக்குப் பல வெகுமதிகள் கொடுத்து விட்டார். அவளுக்குக் கொடுத்த பல பரிசுகளில் ஒன்றான கருப்புக் கல்லினாலான குளியல் தொட்டி — அதன் ஒரு பக்கத்தில் பாரசீக மொழியில் தேதி செதுக்கப்பட்டிருந்தது. 25, மே, 1611 — வெளியே, வெளி

முற்றத்தில் இருக்கிறது. இப்பொழுது அவளுக்கு ஒரு அழகிய பட்டப் பெயர் **"உலகத்தின் வெளிச்சம்."**

திடீரென்று அவள் மனதில் ஒரு சங்கடம் எழுந்தது. இதற்கு முன் பெண்களடங்கிய அந்தப்புரத்தில் அவள் ஒரு அடையாளம் தெரியாதவளாக — பல அழகிய பெண்களுக் கிடையில் ஒரு அழகிய பெண்ணாக இருந்தாள். ஆனால், இனி எல்லோராலும் பார்க்கப்படுவாள், பேசப்படுவாள், மரியாதை செலுத்தப்படுவாள். இது ஒரு சாதாரணத் திருமணம் அல்ல. சக்ரவர்த்தியை மணந்து கொள்வதென்பது சாதாரண நிகழ்ச்சி அல்ல! அவள் ஜஹாங்கீருக்கு மாத்திரம் அல்ல, இந்த சாம்ராஜ்ஜியத்திற்கே திருமணம் செய்யப் பட்டவள்.

இந்தப் பதவி, பலவித நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து முடிவெடுக்கும் தகுதியை அவளுக்குக் கொடுத்தது. ஆனால், அது அவ்வளவு சுலபமானதல்ல. பெண்களுக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதில்லை. அவள் வாழ்நாளில் இதுபற்றி அவள் நன்கு அறிவாள். அவள் தந்தை அவளிடம் தன் வேலையைப் பற்றிப் பேசுகையில், அரசசபை நடவடிக்கைகள் பற்றிக் கூறுகையில், அவளை ஒரு பெண் ணாக எண்ணியதில்லை. தனக்குச் சமமாக நடத்தியிருந்தார். அவள் தாயாரை அவர் வெகுவாக நேசித்த போதிலும் அவ்வாறு அவளிடம் பேசியதில்லை. ஜஹாங்கீரும் அவளை அவள் தந்தை போல் நடத்துவாரா? அவள் அதற்குத் தகுதியானவள் என்று நினைப்பாரா?

அரசரின் அந்தப்புரத்தில் முதன்மை ஸ்தானம் பெற அவள் சண்டையிட வேண்டும். பிறகு அரச சபையிலும்கூட! மதநம்பிக்கையில்லாத அந்த வில்லியம் ஹாக்கின்ஸ் கூறுவது சரியானால், ஆங்கிலேய இராணிகள் அவர்கள் கணவருடன் அரச சபையில் வீற்றிருப்பார்கள். ஏன், ஒரு அரசரின் மகள் அவர் வாரிசாக அரியணைக்கு வந்து தனியாகவே ஆட்சியும் செய்திருக்கிறாள்.

அப்படிப்பட்ட வாய்ப்பு அவளுக்கில்லை என்று மெஹ்ருன்னிஸாவிற்குத் தெரியும். சக்ரவர்த்திக்கு அருகில் அமர்ந்து அவளால் ஆட்சி செய்யமுடியாதென்று அவள்

அறிவாள்— அவர் பின்னாலிருந்துதான், முகத்தை திரையால் மறைத்தபடிதான் — முடியும்! பிற்காலத்தில் தன் பெயர் நிலைத்து நிற்க வேண்டும் என ஜஹாங்கீர் விரும்பினார். அது நடக்கும்! ஏனெனில், அவர் பிறந்த நாளிலிருந்து அவர் வாழ்க்கை சரித்திரத்துடன் இணைந்துள்ளது. மெஹ்ருன்னிஸா — ஒரு வேளை, சிலர் ஞாபகம் வைத்திருப்பார்கள். யாராவது — ஒரு நூறு, முன்னூறு, நானூறு வருடங்கள் கழித்து — சக்ரவர்த்தினி நூர்ஜஹான் என்ற அவள் பெயரை உச்சரிப்பார்களா?

ஜஹாங்கீரும் அவளும் சேர்ந்து முகலாய அரசை உலகிலேயே புகழ் வாய்ந்த சாம்ராஜ்ஜியமாகச் செய்வார்கள். அவள் தீவிரமாகக் காதலித்த இந்த மனிதருக்காக அவள் இதைச் செய்ய விரும்பினாள். ஏனெனில், அவரும் இதைத் தான் பெரிதும் விரும்புகிறார். நூர்ஜஹான் — தனது புதிய பட்டப்பெயரில் நன்கு ஐக்கியமாகிவிட்ட உணர்வுடன் — நினைத்துப் பார்த்தாள். அரியணைக்கு பின்னிருந்து இயங்கும் ஒரு வலிமை மிகுந்த சக்தியாக அவள் எண்ணப்பட வேண்டும் என அவள் விரும்பினாள்.

முகத்திரைக்கு பின்னிருந்து இயக்கும் சக்தியாக விளங்க அவள் விரும்பினாள்.



பின்னுரை

உண்மையான சரித்திர நிகழ்ச்சிகளைச் சார்ந்து எழுதப் பட்டதாயினும் 'இருபதாவது இல்லத்தரசி – ஒரு சரித்திரக் காதல் ஒரு கற்பனைக் கதை. சக்ரவர்த்தி ஜஹாங்கீரை மணந்த பொழுது மெஹ்ருன்னிஸாவிற்கு முப்பத்தி நான்கு வயது. அதற்கு அடுத்த பதினைந்து வருடம் அவள் முகலாய சாம்ராஜ்ஜியத்தில் ஆட்சி செலுத்தினாள். பதினேழாம் நூற்றாண்டில் சக்ரவர்த்தி ஜஹாங்கீரின் அரசசபைக்கு வந்த யாத்ரிகர்கள் அவளைப் பற்றிப் பல விஷயங்கள் குறிப்புகளாக எழுதி வைத்துள்ளனர். ஏனெனில், அந்த சமயத்தில் அவள் சக்தி, அவள் அதிகாரம், உச்சத்தில் இருந்தது. ஒருவரும் அவளை நேரிடையாகப் பார்த்ததில்லை. ஆங்கிலேய மற்றும் டச்சுக்காரக் கிழக்கு இந்தியக் கம்பெனியின் மேலதிகாரிகளுக்கு, இந்த யாத்ரிகர்கள் எழுதிய சில குறிப்புகள், சில உண்மைச் சம்பவங்கள், சில வரலாறு சார்ந்த சம்பவங்கள் மற்றும் சில மக்களிடையிலிருந்து அவர்கள் கேட்டறிந்த விஷயங்கள்.

அந்த எல்லாக் குறிப்புகளுமே மெஹ்ருன்னிஸாவின் பிறப்பைச் சுற்றி நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பற்றியும், ஸலீம் அரசனாக ஆவதற்குமுன் அவர்களிடையே இருந்த காதல் பற்றியும், பின்னர் அவள் முதல் கணவனின் மரணத்தில் ஜஹாங்கீருக்கு இருந்த பங்கு பற்றியும் பலவகையில் எழுதப்பட்டிருந்தன. அதே சமயத்தில் வந்த சரித்திர ஆராய்ச்சியாளர்கள் எல்லா விஷயங்களிலும் ஒத்துப் போனதில்லை. ஆனால், சில விஷயங்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டனர். ஜஹாங்கீர் அதற்குப் பிறகு திருமணம் செய்து கொள்ளவில்லை, மெஹ்ருன்னிஸாதான் அவரது – இருபதாவது – கடைசி மனைவி! ஜஹாங்கீர் தன் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளில் அவளைப் பற்றி வெகு சிறிதே குறிப்பிட்டிருந்தாலும் 1627இல் அவர் இறந்து போகும் வரையில், அவள் அவர் வாழ்க்கையில் ஒரு முக்கியமான ஒருத்தியாக இருந்தாள். அவர்களுடைய காதல் சரித்திரம், இந்தியாவில் கவிதை களாகவும், பாட்டுகளாகவும், நடன நிகழ்ச்சிகளாகவும் வந்திருக்கிறது.

(தாமஸ்மூர் என்பவரின் லாலா ரூக் (Lalla Rookh) அவர்கள் கதையை ஒட்டியே எழுதப்பட்டது).

எனக்கு ஆர்வம் எழுந்தது. வரலாறே அவள் பின் நிழல் போல் சுற்றி வந்த, முகத்திரைக்குப் பின் ஒளிந்திருந்த, அந்தப் பெண் யார்? சக்ரவர்த்தியின் மனதில் ஒரு திடமான இடத்தை அவள் எப்படிப் பிடித்தாள்? அவ்வளவு அதிகாரத்தை அவர் அவளுக்கு ஏன் கொடுத்தார்? பெண்களைப் பார்க்கவோ, அவர்களைப் பற்றிக் கேள்விப் படவோ முடியாத ஒரு கால கட்டத்தில் மெஹ்ருன்னிஸா தன் பெயரில் நாணயங்களை வெளியிட்டாள். அரசாங்க முத்திரை இட்ட அறிக்கைகளை அனுப்பினாள். வெளிநாட்டவருடன் வாணிபம் செய்தாள். அவளுக்குச் சொந்தமான பல கப்பல்கள் அரபிக் கடலில் பிரயாணம் செய்தன. கலைகளை ஆதரித்தாள். இன்றைக்கும் நாம் காணக்கூடிய கல்லறைகளையும் அரசாங்கப் பூங்காக்களையும் நிர்மாணித்தாள். சொல்லப் போனால், மரபின் எல்லைக்கு மேலேயே அவள் செயல்பட்டாள். ஒரு எல்லைக்கு மேல் ஆவேசத்துடன் அவளைக் காதலித்த ஒருவன் மூலம், அவள் அடைந்ததுதான் இவை எல்லாமே.

அவளைப் பற்றிய குறிப்புகள் ஏறுமாறாகவே இருக்கின்றன. அவள் தாராள மனபான்மையுடையவள். அவள் கொடுமையானவள். தற்குறியானவள். அவள் ஜஹாங்கீரைத் தீவிரமாகக் காதலித்தாள். அவர் தன்னிச்சையாகச் செயல்பட முடியாதபடி அவள் அவரை மயக்கி இருந்தாள். அவருக்கு மதுவும் ஓபியமும் கொடுத்து அவரைப் போதையில் வைத்திருந்தாள். இருந்தாலும் அவர் நோய்வாய்ப் படுகையில், அவளிடம்தான் நம்பிக்கை வைத்திருந்தார். அரசாங்க வைத்தியர்களை நம்பவில்லை. மெஹ்ருன்னிஸா சக்ரவர்த்தினியாக இருந்த பொழுதும், அவள் இறந்தபின்பும் எழுதப்பட்ட பல குறிப்பு களிலிருந்து பிறந்ததுதான் இந்த இருபதாவது இல்லத்தரசி – ஒரு சரித்திரக் காதல்.

சரித்திரச் சான்றுகளுக்கு உட்பட்டு, அவள் பிறந்ததிலிருந்து ஜஹாங்கீரைத் திருமணம் செய்து கொள்ளும் வரை, அவள் வாழ்க்கையின் கற்பனை வரலாறுதான் இது. அக்பரை எதிர்த்து ஸலீம் சூழ்ச்சிகள் செய்தது, அதேபோல் குஸ்ரு ஸலீமை எதிர்த்து செய்தது, குஸ்ரு லாகூருக்குத் தப்பி ஓடிப் பின் கைதானபின்,

அவன் ஆதரவாளர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை, வடமேற்கு எல்லையில் உஸ்பெக் அரசராலும், பாரசீக ஷாவாலும் ஏற்பட்ட எதிர்ப்புகள், தக்காண யுத்தம் – இளவரசன் குர்ரமுடன் மெஹ்ருன்னி ஸாவின் மருமகளின் நிச்சியதார்த்தம் கூட– சரித்திரச் சான்றுகளுக்கு உட்பட்ட உண்மையான சம்பவங்கள்! ஆக்ராவின் பொக்கிஷத்தைக் கைப்பற்ற முயன்று தோற்ற இளவரசன் ஸலீமை, அலிகுலி விட்டுவிட்டு ஓடியது, பின் அவன் குஸ்ருவிற்கு ஆதரவு அளித்தது, குத்புதீன் கோக்காவை அவன் கொலை செய்தது, பின் தானே அரசர் படையினால் கொலை செய்யப்பட்டது– இவை எல்லாமும் சரித்திரத்தில் குறிப்பிட்ட சம்பவங்களே! கடைத்தெருவில் பேசப்படும் வம்புப் பேச்சுகள், இந்தியாவிற்குப் பதினேழாம் நூற்றாண்டில் வந்த யாத்ரிகர்கள் எழுதி வைத்த குறிப்புகள், மற்றும் மெஹ்ருன்னிஸாவைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள், இத்துடன் கூட என் கற்பனையும் சேர்த்து மிகுதி பகுதி எழுதப்பட்டுள்ளது.

ஆறு முக்கிய முகலாயச் சக்ரவர்த்திகளைப் பற்றி நினைத்துப் பார்க்கையில், பின் கண்டவாறே அவர்கள் குறிப்பிடப்படுவார்கள். பாபர் முகலாய சாம்ராஜ்ஜியத்தை நிர்மாணித்தார், ஹூமாயூன் அதைத் தோற்றுவிட்டு, இந்தியாவை விட்டே துரத்தப்பட்டார், தன் பதிமூன்றாம் வயதில் அரியணை ஏறிய அக்பர் மறுபடியும் சாம்ராஜ்ஜி யத்தை மீட்டு அதை ஒருங்கிணைத்தார். பின் வந்த ஜஹாங்கீர் தன் தந்தை விட்டுச்சென்ற சாம்ராஜ்ஜியத்துடன் மேலும் சில நாடு களைக் கைப்பற்றிச் சேர்த்து, அதை விரிவுபடுத்தினார், அத்துடன் அவர் காதல் விவகாரங்கள் கூட வரலாற்றில் இடம் பெற்றவை; ஷாஜஹான் தாஜ்மஹலைக் கட்டி அதனால் சரித்திரத்தில் ஒரு நீங்காத இடம் பிடித்தார். மூடத்தனமான மத நம்பிக்கை கொண்ட ஔரங்கசீப், அந்தப் பெரிய சாம்ராஜ்ஜியம் அழிவை நோக்கிச் செல்லக் காரணமாக இருந்தார்.

இந்த அரசர்கள் மணந்த பெண்கள் பற்றியும், அவர்கள் தனித் திறமையுடன் இயங்கியது பற்றியும், சில குறிப்புகளே உள்ளன. 'இருபதாவது இல்லத்தரசி ஒரு சரித்திரக் காதல் கதை' அந்த இடைவெளியைப் பூர்த்தி செய்ய எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும்.

ஆனால், ஒரு விஷயத்தில் சந்தேகமே இல்லை. கியாஸ்பெக்கின் குடும்பத்திலிருந்து வந்த பெண்களுக்கு அவர்கள் கணவர் மேலும்,

இந்தியச் சரித்திரத்தின் மேலும் அதிகச் செல்வாக்கு – ஆதிக்கம் இருந்தது. பிற்காலத்தில், சக்ரவர்த்தினி நூர்ஜஹான் என்று புகழ் பெற்ற மெஹ்ருன்னிஸா, ஜஹாங்கீரைத் திருமணம் செய்து கொண்ட நாளிலிலிருந்து, அவர் 1627இல் மரணம் அடையும் வரை, மிகுந்த வலிமை மிக்கவளாக, அதிகாரம் உடையவளாக இருந்தாள். அவள் ஆட்சியில் அவளுக்கு உதவுவதற்கு அவள் மூன்று ஆண்களை தன்னுடன் வைத்திருந்தாள். அவள் தந்தை கியாஸ் பெக், சகோதரன் அபுல் ஹாசன் மற்றும் ஜஹாங்கீரின் மூன்றாவது மகன் இளவரசன் குர்ரம். இதை பற்றிய கதை 'The Feast Of Roses' என்ற என் அடுத்த புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மெஹ்ருன்னிஸா சக்ர வர்த்தினியாக அரசரின் அந்தப்புரத்திற்கு வந்த ஒரு வருடம் கழித்து, இளவரசன் குர்ரம், அவள் மருமகள் (அபுலின் மகள், கியாஸ் பெக்கின் பேத்தி) அர்ஜுமன்ட் பானு பேகத்தை மணந்துகொண்டான். குர்ரம் சக்ரவர்த்தி ஷாஜஹானாக அரியணை ஏறிய சில வருடங்கள் கழித்து, அர்ஜுமன்ட் (மும்தாஜ்மஹல்) அவளது பதினாலாவது குழந்தையைப் பெற்றெடுக்கையில் மரணம் அடைந்தாள். அவள் ஞாபகார்த்தமாக, மெஹ்ருன்னிஸா உயிருடன் இருக்கையில், குர்ரம் தாஜ்மஹாலைக் கட்டினான்.

தாஜ்மஹால் கட்டப்பட்ட காரணத்தால், குர்ரம் தன் மனைவி அர்ஜுமன்ட் மேல் வைத்திருந்த அளவில்லா அன்பைப் பற்றி உலகில் எல்லோரும் அறிவார்கள். ஆனால், ஜஹாங்கீர் மெஹ்ருன்னிஸாவிடம் வைத்திருந்த அன்பு அதற்கு சமமான அல்லது அதற்கும் மேலானது என்றும் கூறலாம். பிற்காலத்தியர் பார்க்கக் கூடிய ஞாபகச் சின்னம் எதையும் அவர் மெஹ்ருன்னிஸாவிற்காக எழுப்பவில்லையானாலும், அவர் வாழ்க்கையின் கடைசி சில வருடங்கள் அவர் முழு அன்பை யும் அவளுக்கு அளித்திருந்தார். அவள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டிய உரிமையும் அளித்திருந்தார். மெஹ்ருன்னிஸாவும் அவரிடம் மாறாத அன்பு வைத்திருந்தாள், அவர் விருப்பங்களுக்கு மதிப்பு கொடுத்து நடந்தாள். முகலாய சாம்ராஜ்ஜியத்தை அவள் ஆண்டதாக வரலாறு கூறுகிறது. ஆனால், அவர் துணையினால்தான் அவள் சக்தி படைத்தவளாக இருந்தாள். அவர் இல்லாமல் அல்ல!

– இந்து சுந்தரேசன்

மே, 2001

பர்ஷியாவிலிருந்து தப்பி அகதிகளாக வந்து பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த முகலாய சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தி அக்பரின் அரச சபையை வந்தடைந்த கியாஸ்பெக்கின் அழகிய மகளான மெஹ்ருன்னிஸா இளம் வயதிலேயே இளவரசன் ஸலீம் மேல் ஆசை கொள்ள, இளவரசருக்கும் மெஹ்ருன்னிஸாவின் மேல் காதல் மலர்கிறது. பல இடையூறுகளுக்குப் பின்னர், மெஹ்ருன்னிஸாவின் முப்பத்தி நாலாவது வயதில், ஸலீம் சக்ரவர்த்தி ஜஹாங்கீராக பதவி ஏற்ற சில வருடங்களுக்குப் பின் அவர்கள் காதல் திருமணமாக மலர்கிறது.

வரலாற்றின் நிகழ்ச்சிகளைத் தீவிரமாக ஆராய்ந்து அதிலிருந்து சிறிதும் பிழறாமல், பதினேழாம் நூற்றாண்டில் நடந்த முகலாய ஆட்சியை வெகு அழகாக கலை நயத்துடனும், வார்த்தைகளின் ஜாலத்துடனும் ஒரு காதல் சரித்திரமாக இந்த நாவலை **இந்து சுந்தரேசன்** 2002 ஆம் வருடம் ஆங்கிலத்தில் "**THE TWENTIETH WIFE**" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். இது உலக அளவில் சுமார் 10 மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. முதல் முறையாக இந்திய மொழிகளில் ஒன்றான தமிழில் இது மொழியாக்கம் செய்யப்பட்டு "**இருபதாவது இல்லத்தரசி**" என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.



இந்தியாவில் பிறந்து வளர்ந்த **இந்து சுந்தரேசன்** மேற்படிப்பிற்காக அமெரிக்கா சென்றவர். திருமணத்திற்குப் பின் அமெரிக்காவின் வடமேற்கில் இருக்கும் எரியாட்டில் நகரத்தில் வசித்து வருகிறார். "THE TWENTIETH WIFE" அவர் வெளியிட்ட முதல் சரித்திர நாவல். இதை தொடர்ந்து மேலும் மூன்று நாவல்களும், ஒரு சிறுகதைத் தொகுப்பும் வெளியிட்டிருக்கிறார். அவர் நாவல்கள் உலக அளவில் பல மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.



சென்னையில் பிறந்து வளர்ந்த **மதுரம் சுந்தரேசன்** இந்துவின் தாயார். விமானப்படை அதிகாரியை மணந்து இந்தியாவில் பல இடங்களில் வசித்தவர். தன் மகள் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டு, பிரசித்தி பெற்ற சரித்திர நாவலை முதல் முயற்சியாக தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவர் சென்னையில் வசிக்கிறார்.

வானதி பதிப்பகம்